



# INDEX

TO

## The First Volume (12 Numbers)

OF

# "VIDYA VIHARINI"


அ

அக்ரி காலேஜும் சோதனை மண்டபமும் ... 34
அசை போடுதல் ... ... ... ... 301
அமெரிக்க ஐக்கிய மாகாணங்களும் கொலைக் கேஸ்களும் ... ... ... ... 378
அருணகிரி ஸ்வாமிகளின் சரித்திர ஆராய்ச்சி ... ... ... ... 91, 128
அவதூதர் ... ... ... ... 380

ஆ

ஆஸ்திரேலியா உருளைக்கிழங்கு ... ... 379

இ

இந்தியத் தென் ஆப்பிரிக்கச் சங்கம், மதராஸ் 122
இந்திய மகம்மதியரைக் குறித்து டைம்ஸ் பத்திரிகை ... .. ... ... 250
இந்தியா எப்படி யுண்டாயிற்று ... ... 218
இந்தியா கவர்ன்மெண்டு விமர்சனம் ... 5
இந்தியாவில் கோ ஆபரேடிவ் பாங்குகள் ... 351
ந்து மகம்மதீய ஒற்றுமை ... ... 206
து ஸ்திரீகளின் தைரியம் ... ... 213
து ஸ்திரீகளுக்கிருக்கும் பதவி ... 299
து ஸ்திரீகளுக்கு விஹார ஸ்தலம் ... 256
பதாம் நூற்றாண்டுத் தமிழகராதி .. 251
ப்பதா இருப்பதா? தேசீய பாஷைகளு
ந ஆவதோர் வாதம் ... ... ... 241

உ

ல் ... ... ... ... 34

எ

... 222, 315, 441
... ... 68, 111
... ... ... 342
... ... ... 9
... ... 134

என்னுடைய ஜன்ம பூமிக்கு நான் எப்படி உபகாரியா யிருப்பது? ... ... ... 314

ஓ

ஓர் ஆக்ஷேபம் ... ... ... ... 44
ஓர் புதிய இந்திய யூனிவர்ஸிட்டி ... ... 207
ஓட்டுவேண்டிய அங்கிலேய ஸ்திரீகள் 167, 343

க

ககோள தத்துவம் ... ... ...144, 283, 393
கடினமாய் வேலை செய்த நமதரசன் ... 483
கபீர்தாஸ ஸ்வாமிகள் ... ... 135, 1[illegible]
கம்பர் ராமாயணம் பாடி அரங்கேற்றிய வரலாற்றின் ஆராய்ச்சி ... ... 170, 214
கம்பளிப் பூச்சிகள் ... ... ... [illegible]
கர்நூல் புரோவின்ஷியல் கான்பரென்ஸ் ... 41[illegible]
கல்கத்தா தேசீய ஆயுர்வேத வித்தியா சாலை 423
கல்லிக்கோட்டை சமீன் ... ... ... 437
கலெக்டர் தர்பார்கள் ... ... ... 83

கா

காங்கேயர் ... ... ... ... 313
காலஞ்சென்ற எட்வர்ட்டு மகா சக்ரவர்த்தியவர்களுக்குச் சரம கவி ... ... 413
காலஞ்சென்ற எட்வர்ட்டு மகா சக்கிரவர்த்தியின் சரித்திரம் ... ... ... 409
காலடி சாரதாம்பிகை மாலை ... ... 475
காலடிப் பிரதிஷ்டையும், யூனைடெட் இந்தியாவும் .. ... ... ... 295
காலடி க்ஷேத்திர வைபவம் ... ... 258

கி

கிராமக் கோர்ட்டுகள் ... ... ... 252
கிராமப் பாங்குகளுக்குள்ள தசை ... 425

165134


கு

குதிரைக் ... ... 53
கும்பகோண ... ... 296

கை

கைக்குவாரும், ராஜப் பிரதிநிதியும் ... 121

கொ

கொல்லம் பிரம்ம ஸ்வரூபணீ கேஸ் ... 345

கோ

கோ ஆபரேடிவ் துண்டு வர்த்தமானம் ... 43
சமாசாரக் குறிப்புகள் 39, 78, 80, 120, 163, 202, 246, 289, 332, 371, 413, 452, 492

ச

சர்க்கார் உத்தியோகஸ்தரும், ராஜத்துரோகமும் 416
சரித்திரப் பயன் ... .. ... ... 138

சா

சாந்தமாய் வாசித்தல் ... ... ... 87

சி

சிறு பிள்ளைகள் செய்த வீரச் செயல்கள் — பெஞ்சமின் பிராங்கலின் ... 405, 487

சூ

சூரிய கிரணத்தை மடக்குதல் ... ... 2ͅ2

சே

சேலம் கோ ஆபரேடிவ் பாங்குகளுக்கு ஆண்டு நிறைவு ... ... ... ... 341

சொ

சொந்த விஷயம் ... ... ... ... 168

சோ

சோதனை யுபகாரச் சம்பளம் ... ... 85

த

தமிழ் இலவச லைப்ரெரி ... ... ... 401

தா

தாயார் துணிவுக்கிலக்கியச் சான்றுகள் ... 213
தாலிகட்டுக் கலியாணம் ... ... ... 467
தான்னிய கோளங்கள் ... ... .. 345

தி

திருக்குறள் விஷய விமர்சனம் ... 266, 367

தீ

தீக்குச்சி செய்தல் ... ... ... 421
தீண்டாதவருக்கு நற்குறி ... 86, 126, 257, 300

து

துரைத்தன விமர்சனம் ... ... ... 125

தூ

தூக்கம் — அதை எப்படி அடைவது ... 323

தெ

தென் ஆப்பிரிக்காவிலுள்ள நம்மவர்களுக்கு நற்குறி ... ... ... ... ... 255
தென்னிந்தியா உபாத்தியாயச் சங்கம் ... 167
தென்னிந்தியாக் கால் நடைகள் ... ... 354
தென்னிந்தியாப் பிராணிவர்க்கம் ... 106, 281

தே

தேசிய ஔஷதங்கள் ... ... 68, 111
தேசிய பாஷைகளில் வசன நடை ... ... 53
தேசிய பாஷைகளும் வித்தியாப்பியாசமும் ... 9

ந

நம்பூதிரிமார் ... ... 303, 380
நமது புதிய மகாராஜச் சக்கிரவர்த்தி யவர்களருளிய திருவாக்கு ... ... ... 374
நமது புதிய ராஜப் பிரதிநிதி யவர்கள் ... 415

நா

நாட்டு வாசமும், நகர வாசமும் ... ... 233
நாம் ஏன் பிழைத்திருக்கிறோம் ... ... 187

நி

நிறப் பதார்த்தங்கள் ... ... 359,415
நிஜாம்பஹதூர் அவர்களுடைய ராச்சிய தருமம் ... ... ... 206

நெ

நெல் — ஒற்றைநாற்று நடவு ... ... 339

ப

பங்காளத்தில் ஜெடில் ... ... ... 492
பட்டும், பட்டுப்பூச்சியும் ... .. 150, 481
பத்திரிகைகளுக்கு நல்லகாலம் ... ...
பரோபகாரம் ... ... ... 113, 3
பறக்கும் யந்திரம் ... ... ... ...
பள்ளிக்கூடச் சம்பள விகிதம் ... ... [illegible]

பா

பாசன வகைகள் ... ... ... ...
பாபா பாரதி அவர்களுக்கு வழியனுப்பு ...
பார்லிமெண்டில் இந்தியன் பட்ஜெட்டு ...
பாவுபீஸ் என்னும் சகோதர துவிதீயை ...
பாஸரோ மண்டபங்கள் ... ...

பி

பிராசீன இந்திய ஸ்வயம்வரம் ...
பிராசீன பாஷைக் கல்வி ... ...
பிரிட்டிஷ் பார்லிமெண்டு ...
பிள்ளைத் தமிழ் .. ...
பிறப்பும், குணமும்





பு

புகழேந்திப் புலவர் நளவெண்பா பாடிய வரலாற்றின் ஆராய்ச்சி ... ... ... 385
புத்த பகவானுடைய எலும்புகள் ... ... 26
புஸ்தக விமர்சனம் 38, 110, 163, 201, 245, 288, 331, 370, 413, 452, 492

பெ

பெண்கல்வி அபிவிருத்தி ... ... ... 209
பெண்களுக்கு ருதுவான பின் விவாகம் ... 375
பெருந்துறை ஐக்கிய நாணய மகாநாடு ... 457
பெருவாழ்வு .. ... ... ... 358

ம

மகம்மதியக் கல்வி யபிவிருத்திச் சங்கம் ... 345
மகம்மதியர்களுடைய சிரத்தை ... .. 168
மகா சாஸனம் (1852 வருஷம்) ... ... 21
மகா சாஸனத் திரயம் ... ... 82
மகா பாரதம் — சரியான பதிப்பு ... ... 210
மகாராஜச் சக்கிரவர்த்தி 7ழாம் எட்வர்ட்டு அவர்களுடைய மரணம் ... .. ... 333
மகாராஜச் சக்கிரவர்த்தி யவர்களுடைய மகா சாஸனம் . ... ... 4³, 55, 97
மதிராசு சட்ட நிருபண சபை 166 205, 249, 337
மதிராசு இந்திய வர்த்தக மகா சங்கம் ... 82
மதிராசு ஏட்டுப்பிரதிப் புஸ்தக சாலை ... 45
மதிராசு கவர்ன்மெண்டு பாதிரியாரும் மதப் படிப்பும் ... ... ... 291
மதிராசு பாலபரிபாலன சங்கம் ... ... 208
மதிராசு ராஜகுமார காலேஜ் ... ... 458
மதுரம் (நாவல்) ... ... 115, 150
மருமக்கதாயத்திற்குப் பரிகாரம் ... ... 378
மற்றொரு பிரம்ம ஸ்வரூபணீ கேஸ் ... 4²4

மு

முருகர் துதி ... ... ... ... 133

மே

மேனாட்டாரும், கீழ் நாட்டாரும் 184, 270, 447

மை

மைசூர் சமஸ்தானத்தில் தேவதாசிகள் விஷயமாய் உத்திரவு ... ... ... 302
மைசூர் யுவ ராஜாவின் திருமணம் ... ... 420

யூ

யூனிவர்ஸிட்டியும், தேசிய பாஷைகளும் ... 88

ர

ரஸப்பிரகரணம் ... ... ... 16, 46

ரா

ராமசந்திரராவ் சாகிப் அவர்கள் ... ... 84
ராமேச சந்திர தத்தர் ... ... 127
ராஜப் பிரதிநிதி யவர்களுடைய விஜயம் ... 166

ரெ

ரெயில் பிரயாணத்தில் ஸ்திரீகளுக்கு நேரிடும் அபாயம் ... ... ... 461

லா

லாகோர் காங்கிரஸ் ... ... ... 167

வ

வரசுல்கம் .. ... ... ... ... 43
வரதக்ஷிணை ... ... ... ... 58
வரன்முறை ... ... ... ... 1

வா

வாகன வகைகள் ... ... ... 7', 32⁶, 471
வாம தேவன் ... ... ... 75, 118, 155

வி

விசுவாமித்திர மகாரிஷி ... ... ... 62
வியவசாயக் கோ ஆபரேஷன் ... ... 208
வியவசாயச் சங்கங்கள் ... ... 419
வியவசாயத் தோட்டம் ... .. ... 363
விறகுவெட்டியும், வித்வசபையும் ... ... 195
விஜயதசமி ... ... ... ... 65

வெ

வெற்றிலை மிருத்தியு. ... ... ... 492

ஸ்

ஸ்திரீகளும் புருஷ வேஷங்களும், .. ... 463

ஸா

ஸாக்ரடீஸ் ... ... .. 140, 181, 397

ஹா

ஹாலி தூமகேது .. ... ... 152, 177

ஜ

ஜப்பானிய ஸ்திரீகள் ... .. ... 431
ஜப்பானிய ஸ்திரீகள் தேசாபிமானம் ... 434
ஜப்பானும், கோமாமிசமும் ... ... 124

ஜா

ஜாலவிளக்குகளும், வித்தியாப்பியாசமும் ... 253

ஜெ

ஜெடில் குத்தல் ... ... ... 228, 376

ஸ்ரீ

ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்வாமிகள் ... 421
ஸ்ரீ நானக தேவர் ... .. ... ... 275
ஸ்ரீமான் எம் கே காந்தி அவர்கள் ... ... 371
ஸ்ரீமான் கிருஷ்ண கோபால குப்தர் ... 254
ஸ்ரீமான் ரூஸ்வெல்ட் துரையும், தேச க்ஷேமமும் ... ... .. ... ... 377
ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகள் ... ... 464

க்ஷ

க்ஷயரோக நிவாரணம் ... ... ... 459

வித்யா விஹாரிணியின்

# சித்திரங்களின் ஜாப்தா


அ

1. அக்ரி காலேஜும், சோதனை மண்டபமும் 34
2. அன்னி பிஸண்டு அம்மாள் ... ... 343

ஆ

3. ஆம்தில் துரையவர்கள், சென்னை கவர்னர் 121
4. ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வி. கிருஷ்ணசுவாமி அய்யரவர்கள் ... 78
5. ஆஸ்க்வித்து துரையவர்கள் - இங்கிலந்தின் பிரதான மந்திரி ... ... 165

எ

6. எகிப்திய அரசன் யுத்தத்திற்குச் செல்லுதல் ... ... 315
7. எகிப்தியர் இழவு கொண்டாடல் ... 315
8. எகிப்திய வைதீகர்கள் ... 315
9. எம். கே. கந்தி அவர்கள் ... 373
10. எயிரோ பிளேன் (இரண்டு படங்கள்) ... 473
11. எழும்பூர் புதிய ரெயில்வே ஸ்டேஷன் ... 455

ஏ

12. ஏழாவது எட்வர்டு சக்கிரவர்த்தியவர்கள் 41

ஒ

13. ஒரு தூமகேது ... ... 180

ஓ

14. ஓங்கோல் தினுசு பசுமாடு ... 354
15. ஓர் ஜப்பானியப் பெண் ... ... 435

க

16. கட்டுமரம் ... ... ... ... 3-6
17. கறையான் — ராணி ... ... 109

கா

18. காலஞ்சென்ற ஸ்ரீமான் ரமேச சந்திர தத்தர் ... ... ... ... 127

கி

19. கிரீஸ் தேசத்துத் தத்துவ ஞானி ... 181

ச

20. சர் சார்லஸ் ஹார்டிங் (நமது புதிய ராஜப் பிரதிநிதியவர்கள்) . ... ... 415
21. சத்திரபதி ஆர்க்காட்டு நவாபு பஹதூர் ... 345

சூ

22. சூரியனைச் சுற்றி பூமி ஓடுதல் ... ... 396

செ

23. செனெட் ஹௌஸ் — சென்னை ... 160

டி

24. "டிரெட் நாட்" என்னும் புதிய கப்பல் 326

தா

25. தாலிகட்டு, பட்டணப் பிரவேசம் ... 470

தி

26. திவான் பஹதூர் ஸ்ரீமான் ரகுநாதராயரவர்கள் ... ... ... ... 166

ந

27. நம்பூதிரி ... ... ... ... 303
28. நமது சக்கிரவர்த்தியும், சக்கிரவர்த்தினியும் 333

நி

29. நிஜாம் பஹதூர் அவர்கள்-ஜி. ஸி. எஸ். ஐ. 205

நெ

30. நெல் ஒற்றைநாற்றுப் பயிர் 200 க்கு மேல் தூறு கட்டியது ... ... ... 341

ப

31. பட்டுப்பூச்சிக் கூண்டு ... ... ... 481
32. பப்பிலி மகாராஜா ... ... ... 459
33. பரோடா மகாராஜா கைக்குவாரவர்கள் தீனதயாளு . . ... ... ... 86
34. பழைய மரக்கலம் ... ... ... 326

பா

35. பாபா பிரேமாநந்த பாரதீஸ்வாமிகள் ... 291





பூ

36. பூமியின் வடிவம் ... ... ... 147

பெ

37. பெஞ்சமின் பிராங்கலின் ... ... 405

ம

38. மஹாபலிபுரம்-கடற்கரையிலுள்ள கோவில் 221
39. மஹாபலிபுரம் கோயில் — பீமரதம் ... 220
40. மகாராணி விக்டோரியா தேவியவர்கள் 1

மி

41. மிஸ்டர் ரூஸ்வெல்ட் துரை ... ... 377

மை

42. மைசூர் தினுசு பசுமாடு ... ... 354
43. மைசூர் யுவராஜாவின் திருமணம் ... 421

ரா

44. ராட்டணதூலி ... ... .. 286
45. ராஜாமணி தன் தந்தை முன் கடிதத்தைப் படித்தல் . ... ... ... 77

லா

46. லார்டு மார்லி ... ... ... ... 82
47. லார்டு மிண்டோ ... ... ... 82

வா

48. வாயுக் கப்பல் ... ... ... ... 473

வெ

49. வெட்டுக்கிளிகள் ... ... ... 108

ஸா

50. ஸாக்ரடீஸ் ... ... ... ... 141

ஹா

51. ஹாலி தூமகேதுவின் கதி ... ... 154

ஜ

52. ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள்
(1) தெய்வாராதனை செய்தல் ... 258
(2) ஜபம் செய்தல் ... ... ... 249

ஜெ

53. ஜெடில் குத்தல் - சோழவந்தான் ... 229

ஸ்ரீ

54. ஸ்ரீ ஆதி சங்கராசாரிய சுவாமிகளது மாதாவின் தகன ஸ்தலம் ... ... 260
55. ஸ்ரீ கபீர்தாஸ் சுவாமிகள் ... ... 135
56. ஸ்ரீ சாரதாம்பிகை ... ... ... 475
57. ஸ்ரீ புத்த விக்கிரகங்கள் - பர்மா - இந்துஸ்தான்-லங்கை ... ... ... 26
58. ஸ்ரீமதி யமுனை ஆரதித்தட்டை ஏந்தியது 31
59. ஸ்ரீமான் பண்டிதர் மதனமோஹன மாளவீயா ... ... ... ... 193
60. ஸ்ரீமான் சரத்குமார மல்லிக் ... ... 423
61. ஸ்ரீ ராஜ ராஜேசுவரி ... ... ... 65
62. ஸ்ரீ விசுவாமித்திர மகரிஷியும், தசரத மகாராஜாவும் ... ... ... 62
63. ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் ... ... 464



மகாராணி விக்டோரியா தேவியவர்கள் (1858.)

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்.

| புஸ்தகம் I.<br>Vol I. | சௌம்ய௵ புரட்டாசி மாதம்<br>September 1909 | சஞ்சிகை 1<br>No. 1 |
|---|---|---|

## வரன்முறை

लक्ष्मीवेंकटरमणौ चेतो भज दीनरक्षणे निपुणौ ।
चिन्तयतां यच्चरणौ नृणां करस्थो भवेच्चतुर्वर्गः ॥

அபிமானிகளே,

இஷ்ட தேவதைகளாகிய லக்ஷ்மீ வெங்கடரமணர்களைத் தம்பதியாகப் பிரார்த்தித்துச் சொல்லுவது யாதெனில்:—

ஐரோப்பாவில், ஹங்கேரிக் குட்பட்ட திரான்ஸில்வானியாவிலுள்ள கடோல்னா நகரத்திலிருந்து, பண்டித ஜி. பாலிண்டு துரையவர்கள், சுமார் பத்தொன்பது வருஷத்திற்குமுன் நமது ராஜதானியில் பவானி ஸ்தலவாசியும் பிரபலத் தமிழ் வித்துவானாகியும் விளங்கிச் சில வருஷங்களுக்குமுன் காலஞ்சென்ற,பிர்ம்மஸ்ரீ பாலபாரதி முத்துசாமி அய்யரவர்களுக்கு இங்கிலீஷில் ஓர்கடிதமெழுதினார். அது பிரகிருதத்திற்கு வெகு நன்றாயமைந்திருப்பது கொண்டு, வேண்டியமட்டிலதை மொழிபெயர்த்து இங்கு எழுதுகிறோம்:—

“ என்னருமை ஐயாவே, பத்திரிகை மூலமாய்த் தங்கள் பெருமையையறிந்து அதற்குக் கிரமப்படியுள்ள மரியாதை வைத்திருப்பதுடன், தமிழ்நாட்டிலுள்ள பெரியோர் வேறியாரையும் பரிசயஞ்செய்துகொள்ள எனக்குப் பாக்கியமில்லாதது நிமித்தம், இச்சந்தர்ப்பத்தில் தங்களை யுபத்திரவிக்கத் துணிந்தேன். ஆனாலது தங்கள் திவ்வியபாஷையின் க்ஷேமத்தைக் கோறியதாதலால் மன்னிப்பீர்களென்று நம்புகிறேன்.

சப்ததத்துவ நிரூபண விஷயமாகப் பலவருஷங்களாய் நான் தமிழ் கற்றுவருகிறேன். தமிழானது சம்ஸ்கிருத விருக்ஷத்திலிருந்து முறிந்து விழுந்ததோர் கிளையன்றென்றும், பங்கா துரானிய பாஷைகளிலொன்றாகவோ, அல்லது அவைகளுக்குத் தாயென்றோ, அல்லது அவைகளிருக்கவேண்டிய முறைமை விளக்கும் அச்சென்றோ, சொல்வதுதான் தகுமென்

றும், வேண்டிய சாக்ஷியங்களுடன் நான் ருசுப்படுத்தப்போகிறேன். ஐயோ, என்ன பாவம்! இவ்வுத்தம பாஷையிலுள்ள மொழியொவ்வொன்றும் பெருங்கதையைத் தன் வயிற்றில் அடக்கியதோர் ரத்தினமாகவும், உங்களவர்கள் அவைகளைக் களைந்து, திசைச்சொற்களையும் வடசொற்களையுங்கொண்டு வந்து பொழிந்து, தமிழை ஆபாசஞ்செய்து விடுகிறார்களே! நீங்கள் இங்கிலீஷ் பாஷையின் வழக்கை அனுசரித்து, வந்த பதங்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு, பாஷையைக் கெடுக்கக்கூடாது. ஏனெனில் தென்னிந்தியாவில் நீங்கள்தான் முக்கியஸ்தர்கள்.

2-வது. தமிழின் ஜீவன் சரித்திரத்தை விவரித்தெழுதிய புஸ்தகமேதாவதுண்டா?

3-வது. தமிழ்ப் புஸ்தகங்களை விற்பனை செய்வோர் ஏதாகிலும் நல்ல புஸ்தக ஜாப்தா தயார் செய்திருக்கிறார்களா? இருப்பது தெரிந்தால் நான் பணங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்குத் தங்கள் விதேயன்,

(ஒப்பம்) ஜி. பாலிண்டு.

குறிப்பு:—தங்கள் தேசத்தில் ஏதாகிலும் சித்திர சகிதமாய்ச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் முதலியன வுண்டா? தமிழர் சுமார் ஒன்றரைக் கோடி பெயருக்கு மேலிருக்கிறார்களே. நாங்கள் அதில் சரிபகுதிகூட இல்லை. என்றாலும், எங்களுக்குள் (மாச வர்த்தமானிகள், வார வர்த்தமானிகள் மட்டுமேயல்லாமல்,) சித்திர சகிதமாகத் தினவர்த்தமானிகள் கூட இருந்து செழிக்கின்றன.''

இக்கடிதத்தை ஷை அய்யரவர்களுக்குப் படித்துக் காட்டியதுமுதல், குறிப்பில் சிறப்பெழுத்திற் காணும் தோஷத்தைப்பரிகரிக்க நம்மால் இயன்றதைச் செய்யவேண்டுமென்று நமக்கு ஆக்கிரகம் வெகுகாலமாக இருந்துகொண்டே வந்திருக்கிறது. ஆகிலும் நாளது வரை அதற்கிடம்பொருளேவல் கைகூடாமலும், முகூர்த்தம் வராமலும் தடைபட்டேவந்திருக்கிறது.

சரிதான், ஆனால் இதுவரையிலில்லாமல் இப்பொழுது இதற்குச் சுபமுகூர்த்தமெப்படி விசேஷித்தேற்பட்டதென்று விவேகிகள் ஆக்ஷேபிக்கலாம். அதற்குச்சமாதானமாகக் கீழே எழுதியிருப்பதைப்பார்த்தறிதல்வேண்டும். பிரகிருதத்தில் நாம் சொல்லிக்கொள்ள வேண்டியிது. மேற்கண்டகடிதத்தை ஹங்கேரி வித்துவானெழுதியபோது சுமார் இருபது வருஷமாகியும், அவர் குறிப்பிடும் தினுசில் தேசிய பாஷைகளில் பத்திரிகையாவது, சஞ்சிகையாவது நாளது வரை பிரபலப்படவில்லையென்பது. ஐரோப்பா, அமெரிக்காமுதலிய நாகரீக முதிர்ந்த நாடுகளில் சித்திர சகிதமான சஞ்சிகைகள் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவுமிருக்க, இந்நாட்டில் மட்டும் நல்லதாகவொன்றுகூட இல்லாமலிருப்பது அழகாகக்காணவில்லை. ஏதோ சுமாராகவிருக்கும் நாலைந்து பத்திரிகைகளை பிழைக்கமாட்டாமல் தத்தளிக்கையில், இதற்குமட்டும் வேறு தசையிருப்பதாக நினைப்பதற்கென்ன நியாயமென்று இஷ்டர் ஆக்ஷேபிக்கலாம். அப்படிக்கேட்பது நியாயந்தான். அதற்குப் பண்டிதரே மேற்குறித்த கடிதத்தில் உத்தரங் கூறியிருப்பதைக் கவனிக்கவேண்டும். குணகடல், குமரி, குடகம், வேங்கடமென்னும் எல்லைகட்டிய பூமி வெகு விஸ்தாரமாயிருப்பதும், அதில் வசிக்கும் தமிழர் கோடிக்கணக்கிலிருப்பதும் வாஸ்தவமாதலால், இனி எக்காலத்திற்குமிது சரியான ஆக்ஷேபமாக மாட்டாது. இவர்களுக்குள் கல்வி யதிகரிக்கு மளவிற்குப் பத்திரிகை முதலியவற்றில் ருசியுமதிகரிக்குமென்றே நாம் நம்புகிறோம்.

தவிரப் பத்திரிகைகள் பிழைக்கமாட்டாமல் தத்தளிப்பதற்குப் பலகாரணங்களுண்டென்று நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். அவைகளிற் சில படிப்பவரைப் பொறுத்தனவும், சில பத்தி



ரிகை நடத்துபவர் குற்றமுமாதலால், குற்றமொருதலைப்பக்ஷம் அன்றென்பது நிச்சயம். ஜீவனத்திற்குத் தத்தளியாமல் பத்திரிகை நடக்கவேண்டுமானால் அதற்குள்ள உபாயமொன்றேதான். விடாமற்போராடி அப்போதைக்கப்போது காணுந்தோஷங்களைப் பரிகரித்துப் புதிதுபுதிதாக ஏதாகிலும் லக்ஷணங்களை யதிகரிக்கச் செய்தால்தான், ஐந்திரண்டு பழுதில்லாமல் மேன்மையுறும். ஆயிரம் உளியாடியன்றோ வோர் லிங்கமாவது!

இப்படி விடாமற் போராடவேண்டிய காரியத்தை யெடுப்பதற்கு யோக்கியதை யதிகம் வேண்டுமென்பது வாஸ்தவம். திரவிய சகாயமும் ஜனசகாயமும் வேண்டியவளவிற் கிருப்பவருக்கே வெகு கஷ்டசாத்தியமான இதை, அவையிரண்டும் விசேஷமாயில்லையென்றே சொல்லவேண்டிய நாமெடுத்தது விசித்திரந்தான். ஆனால் எல்லா யோக்கியதையுமிருப்பவர், நாளதுவரை யொருவரும் சங்கற்பிக்காதது நிமித்தம், நலத்தையெண்ணி ஏதோவொருவாறாக ஆரம்பித்தால், ஈசுவரசகாயமுங் கிடைக்கலாமென்றும், அப்படிக் கிடையாமற் போகுமிடத்துச் செய்தவளவிற்குக்கேடொன்றுமில்லையென்றும் நம்பித் துணிந்தோம்.

சஞ்சிகைகள் மட்டுமல்ல. தேசியபாஷைகளிற் புஸ்தகங்களுமிவ்வாறே கேட்பாரற்று நலிகின்றன. பாடசாலைகளில் கீழ் வகுப்புகளில் இனாம் கொடுக்கவேண்டுகிற ஒவ்வொரு இஷ்டரு மிவ்விஷயத்தில் இன்னது செய்வதென்று தெரியாமல், குழந்தைகளுக்குச் சித்திர சகிதமான இங்கிலீஷ் புஸ்தகங்களை வாங்கிக்கொடுக்கிறார். இதுவரை யிதற்குக் கொஞ்சம் பிரயோஜனமிருந்தது. ஏனெனில் அனேகமாய்ப் புத்திசாலிப் பிள்ளைகளெல்லோரு மொருகாலத்திலிங்கிலீஷ் படிப்பார்களென்று சொல்ல ஆதாரமிருந்தது. இனியதை அவ்வளவு நிஷ்கரிஷையாய்ச் சொல்வதற்காகாதாகையால், தேசியபாஷைகளில் நல்லபுஸ்தகங்களைச் சித்திரசகிதமாய் வெளியிடவேண்டிய முகூர்த்தமும் வந்துவிட்டதென்பதில் ஆக்ஷேபமில்லை. இது விஷயமாய் ஒரு ஆங்கிலேய நண்பர் மேமாதத்திய 'இந்தியன் ரிவியூ' விலெழுதியதை வேண்டியவர்கள் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

இப்படியெல்லா மிருப்பதால்,விளம்பரத்தில் நாம் கூறியபடி, "வித்யா விஹாரிணி"யைக் கூடிய மட்டில் சித்திரசகிதமாகப் பிரசுரித்து வருவதென்றும், அது நன்றாகத் தழைக்குமானால்அதையனுசரித்து வேறு நற்காரியங்களைத் தொடங்க வேண்டுமென்றுஞ் சங்கற்பித்திருக்கிறோம். இவைகள் விசேஷ இடையூறின்றி நடப்பதற்காக வேண்டி, லோககர்த்தாவாகிய ஆதிபகவனைப் பிரார்த்திப்பதன்றி அபிமானிகளையுங் கூடிய சகாயஞ்செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

விளம்பரத்தில் நாம் கூறிய லக்ஷணங்களில், ''வித்யா விஹாரிணி''யைக் கூடியசீக்கிரத்தில் திராவிட பாஷை நான்கிலும் பிரசுரிக்க முயல்வதாகச் சொன்னோம். இப்பிரயத்தனம் நிறைவேறுமாகில் சித்திர விஷயமாக நாம் கூறுங் குறைகளெல்லாமற்றுப் போவதற்கு நல்லமார்க்கமாகும். ஆனாலிது சுலபசாத்தியமல்லவென்று இஷ்டர் சிலரபிப்பிராயப்படுகிறார்கள். அது வாஸ்தவமே. உலகத்தில் நாம் எடுக்கும் காரியமெதுவுஞ் சுலபசாத்திய மல்லவென்றுதான் சொல்லவேண்டும். சில வருஷங்களுக்கு முன் காலஞ்சென்ற ஸ்ரீமான் சேஷாத்திரியாசாரியவர்கள், திராவிடபாஷா சங்கமொன்றேற்படுத்தி இம்மாதிரியொரு சஞ்சிகைநடத்திவரப்பிரயத்தனப்பட்டார்கள். அது ஏதோ காரணம்பற்றிச் சிஷ்டாசாரப்படி முடிந்தது. கனவான்கள் பலர் கூடிச் சாதிக்கமுடியாததை நீரொருவர்மட்டுமே செய்வீராவென்று கேட்பது சகஜம். நாமொருவராகவே இப்பிரயத்தனஞ்செய்ததாக நாம் சொல்ல வரவில்லை. ஆதலால்,இஷ்டர்களுடையவும் ஈசுவரனுடையு

வும் சகாயத்தை முன்னிட்டு எக்காரியத்தையு மாரம்பிப்பதில் தோஷமில்லை யென்று நமது சித்தாந்தம்.

இனி யிச்சஞ்சிகை நடக்கும் முறைகளில், விளம்பரத்திற் காணாதவைக ளிரண்டொன்றை மட்டுஞ்சுருங்கவுரைத்து இப்பிரஸ்தாவத்தை முடித்துவிடுகிறோம்.

முதலாவது சஞ்சிகையின் பெயர். இப்பெயரைக் கேட்கும்போதே ஹங்கேரிப்பண்டிதர் போன்ற பேரியோர் அனேகருக்கு அதிருப்தியுண்டாகுமென்று சொல்லலாம். ஆனாலதற்காக நாம் விசாரப்படுவதிற் பயனில்லை. திராவிட பாஷைகள் நான்கிற்கும் ஒக்குமாறு பெயரிடுவது அவசியமாகிவிட்டதாலும், பெறுவதைவிடப் பெயரிடுவது பெரிய காரியமென்று அனுபவங்கூடிய நண்பருரைப்பதாலும், ஆயிரம் பெயர்களை அனுசிதமாக நீக்கி இப்பெயரைக் கிரகித் திருப்பதாலது தூரதேசத்திலுள்ள இஷ்டருக்கும் அபிமதமாகவிருக்குமென்று நம்புகிறோம். 'வித்யா' என்பதற்குக் 'கலைகள்' என்று சாமான்னியமாயர்த்தமாகும். அதையொரு புற்றரையாக உருவகப்படுத்தி, அதில் யதேச்சையாகத் திரிந்து மேய்ந்து கொழுக்கும் பசுவை 'விஹாரிணி' யெனக்கொண்டு பெயராக்கியதைச் சாதுக்களொப்பி யனுக்கிரகித்தல் வேண்டும். ஆகவே சஞ்சிகையில் விஷய விசேஷங்களைப் படிப்பவருக்கு நிர்ப்பந்தமொன்றும்வைக்காமல், அவரவர்க் கிஷ்டப்பட்டதைமட்டும் படித்துக்கொள்ளலாமென்றும், அதனால் படிப்பவர்க்குக் கிலேச மொன்றுமில்லாமல் சுகமே யதிகரிக்க இடமுண்டென்றும், பெயரிட்ட இஷ்டர்களபிப்பிராயப் படுகிறார்கள்.

மற்றொரு நியாயத்தை யனுசரித்துச் சித்திரத்தில் 'விஹாரிணி'யைக் காமதேனுவாகவும், திராவிட பாஷைகள் நான்கும் அத்தேனுவை வழிபட்டு வரம் வேண்டுவனவாகவும் நிரூபித்திருக்கிறது. ஆனால் இச்சித்திர சம்பிரதாயத்தைப்பற்றி யொரு ஷராத்து அவசியமாகக் காணுகிறது. சித்திரவிஷயமாய் நம்முடையவிளம்பரத்தைப்படித்துப்பார்த்த சிலஇஷ்டர்க ளிந்தமுறையை யாக்ஷேபித்து, 'ஓய், இப்படித்தானா நீர் சித்திர சகிதமாகச் சஞ்சிகை வெளியிடுமழகு? இதுதானா உம்முடைய சாஸ்திரமுஞ் சம்பிரதாயமும்? காமதேனுவுக்கு நீர் செய்திருக்கு மலங்காரங்களையுங் கொடுத்திருக்கும் உருவத்தையுஞ் சாமான்னியமாய்ப் பார்க்கத்தக்கதன்று. கண்ணிரண்டையுங் கீழேயெடுத்து வைத்துவிட்டுத்தான் பார்க்கவேண்டும். குட்டிக்கொள்ளும்போதே கண்ணைப் பார்த்துக் குட்டிக்கொள்ளுகிறீர்!' என்கிறார்கள்.

இந்தச் சம்பிரதாயம் சரிதானாவென்பதற்குச் சமாதானமிப்போது சொல்வதற்கிடமில்லை. சுருதி, யுக்தி, அனுபவம் வேண்டியவர்கள் இச்சிற்ப விஷயத்தில் வல்லவர்களான ஸ்ரீமான் ஹாவெல் துரையவர்களையும், ஸ்ரீமான் பண்டித ஆனந்த குமாரசுவாமியவர்களையுங் கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களிருவருங் கொஞ்சகாலமாக நமது சிற்பத்தைப்புகழ்ந்து அதற்குள்ள மகிமைகளையும் நியாயங்களையும் விஸ்தாரமாக வெடுத்துக்காட்டி வருவதால் நாமும் தைரியமாக அப்படியே செய்யத் துணிந்தோம். ஆனால், அதற்கு என்னநியாயமிருந்தபோதிலும், அதிற்காணும் சில்லரைக் குற்றங்களுக்கு என்னசமாதானமென்று அனேகர் கேட்கலாகும். அதற்கெல்லாம் நாம் சிஷ்டாசாரப்படி யொரேபதில்தான் சொல்லமுடியும். சிற்பிகளின்னும் கஷ்டப்பட்டுழைத்திருந்தால், சித்திரமின்னும் நன்றாயமைந்திருக்குமென்பதில் சிறிதுஞ்சந்தேகமில்லை. நாமுமப்படியே சம்மதிக்கிறோம். சிற்பிகளுமதுசரியென்றே சம்மதிக்கிறார்கள்!

காமதேனுவாகிய 'விஹாரிணி' நமக்குச்செய்யக்கூடிய வுபகாரத்தைப் பரிவட்டத்திற் கூ



னும்ஸ்ரீராமாயணச்சுலோகங் குறிப்பிடுகிறது. அதற்கு, "ஓ காமதேனுவே, யார் யாருக்கு எப்படியிஷ்டமோ, அப்படியே அறுவகைரஸங்களிலும் வேண்டியமட்டில் சீக்கிரம் தயார்செய்து என்னைவேண்டிவிளம்பிவிடு,' என்று பொருள். இப்படி வசிஷ்ட மகாரிஷி சொல்லியது நமக்கும் ஏற்குமெனத்துணிந்து அதை மகுடமாகக்கொண்டிருக்கிறோம்.

இனி மேல்வரும்நெம்பர்களில்முதல் நான்கு பக்கமோ அல்லது சற்றேறக்குறையவோ, "பிரபஞ்சவர்த்தமானம்" காணும். அதையடுத்துவருவது காவியகாண்டம். அது பண்டித ஜனங்களுக்கே விசேஷமா யுத்தேசமாதலால், சில சமயங்களிற் சாமான்னியர்களான அபிமானிகள் அதன் போக்கையறிவது சிரமம். ஆனாலந்த ஒரு காண்டந்தவிர மற்றைய விஷய விசேஷங்களெல்லாம் சகலருக்கும் சமரசமாகவே யேற்படும்.

இந்த முறையைப்பலவிவேகிகளுடன் ஆலோசித்து ஏற்படுத்தினோமாகிலும், ஐந்தாறு மாசகாலமனுபவமாகுங் காலத்தில் எவ்விதமாகவாவது திருத்தியோ மாற்றியோ செய்வதற்கு நாம் தயாராகவிருப்பதுபற்றி, நண்பர்கள் பல திக்கிலுமிருந்து நம்மாலாகவேண்டியதைக் கூசாமலெழுதிக் குற்றங்களைக் களையவுங் குணங்களைக் கூட்டவு மனுகூலஞ் செய்வார்களென்பது நமக்குப் பூரண நம்பிக்கை யென்பதையறிவாராக.

# பிரபஞ்ச வர்த்தமானம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

இந்திய கவர்ன்மெண்டு விமர்சனம்.

வரன்முறையிலும் வேறிடங்களிலும், தேசீயபாஷைகளில் உழைப்பதற்கிது வெகு நல்ல முகூர்த்தமென்று நாம் சொல்லியதற்குள்ள நியாயங்கள் பல. அவற்றில் முக்கியமானது நமது இந்திய துரைத்தனத்திலாகிவரும் விமர்சனமாம். விஷயந்தெரியாதவர்களுக்காக முகவுரை கொஞ்ச மெழுதுவது நலமென்று காணுவதா லப்படியே செய்கிறோம்.

ராஜாங்கமென்பது எவ்விடங்களிலெல்லாம் காணுகிறதோ அவ்விடங்களில் அரசென்றும், அமைச்சென்றும் இரண்டு அங்கங்கள் இருந்துதான் தீரவேண்டும். இந்தியாவில் மைசூர் முதலிய ராச்சியங்களில், மகாராஜாவும், அவருக்குதவியாகத் திவான்ஜீ அவர்களுமிருந்து காரியம் நடந்துவருகிறது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு மப்படியே. சார்வபௌமரான மகாராஜச் சக்கரவர்த்தி யவர்களும், இவருக்குதவியாக, மந்திரி மண்டலமொன்றுமிருந்துதான் துரைத்தனம் நடந்துவருவது. சக்கரவர்த்தியவர்களுக்குப் பிரதிநிதியாக இந்தியாவில் கவர்னர் ஜெனரலவர்களும், அவருக்குதவியாகச் சில உத்தியோகஸ்தர்களுஞ் சேர்ந்து துரைத்தனம் நடத்திவருகிறார்கள். இம்முறை யிங்கே 1858-ம் வருஷத்திலேற்பட்டது.

நாகரிகமென்பது சிறிதாகிலுமுள்ள துரைத்தனம் சீராக நடந்துவருவதற்கு இரண்டு சாதனங்களின்றியமையாதவை முதலாவது, மகா ஜனங்களுடைய க்ஷேமத்தைக் கோரியின்ன சட்டங்களிருக்க வேண்டுமென்பதும், பழைய பதிவுகளின்னவையென்பதும் தெரிந்துகொள்வதற்காக ஏற்படும் சபை. இதில் கல்வி, கேள்வி முதலியவற்றிற் சிறந்

தோரும், நல்ல வம்சம், செல்வம், செல்வாக்கு முதலியன கூடியவர்களுஞ் சேர்ந்து, மகாராஜாவுக்கு ஆகவேண்டிய காரியங்களை யாலோசித்துத் தங்களுக்குத் தோன்றியதைச் சொல்லுவார்கள். இம்மாதிரிச் சபையில் தான் தசரத மகாராஜா ஸ்ரீராமனுக்கு யுவராஜப்பட்டாபிஷேகஞ் செய்வதாக யோசித்தது.

இரண்டாவது இதைவிடச் சிறியதும், இதில் தீர்மானித்தவைகளை நடத்திக் காரிய நிருவாகத்திலேயே கண்ணாயிருப்பது மானதோர் 'மந்திரிமண்டலம்' என்னலாம். மற்றைய பெரியசபை யெப்போதுங்கூடியிருப்பது அசாத்தியமாதலால், ராஜகாரியங்களையச்சபையோர் ஒப்புமாறு, இரவும் பகலும் ஜாக்கிரதையாயிருந்து நடத்துவதற்காகக் காயமா யேற்பட்ட சில மந்திரிகளும், அவர்களுக்கதிபதியா யேற்பட்டவருஞ் சேர்ந்தாவது இச்சபையின் லக்ஷணமாம். சுமந்திரன் முதலிய எட்டு மந்திரிகள் தசரதமகாராஜாவுக்குக்கிங்கரர்களாகி, அவரபிப்பிராயப்படியும் தங்களுடைய யுக்தப்படியும் ராஜகாரியத்தைச் சீராக நடத்திவந்ததை ராமாயணத்திற் காணலாம்.

இம்மாதிரியான ராஜலக்ஷணங்கள் புராதனமாக எங்கு மிருந்திருப்பதால், 1858-௵த்தில் ஆங்கிலேய கவர்ன்மெண்டு இங்கு ஏற்பட்ட காலத்தில், இவ்விரண்டுவகை யங்கங்களுக்குந் தக்க ஏற்பாடுகளுண்டாகிப் பெருஞ்சபைக்குச் சட்ட நிரூபணச்சபையென்றுஞ் சிறு சபைக்கு நிர்வாகசபையென்றும் பெயர் வந்தது. அக்காலத்தில் பெருஞ்சபைக்கு வேண்டியவர்களின்னாரென்று நமது ஜனங்களுக்குத் தெரிந்தெடுத்துச் சொல்லச் சக்தியும் புத்தியுமில்லாததுகொண்டு, கவர்ன்மெண்டாரே ஆங்காங்குள்ள பெரிய மனிதர்களை யிக்காரியத்திலமைத்து வந்தார்கள். அப்படியே நிர்வாகசபையிலும் யோக்கியதையையனுசரித்து, உத்தியோகத்தில்நேராயுழைத்து முன்னுக்குவந்தவர்களையே நியமித்து வந்தார்கள். ஆனாலக்காலத்தில் மகாராணியாகவிருந்த மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மாதேவியவர்கள் இவ்விராஜாங்கத்தை யேற்படுத்துகையில் மகாசாஸனமொன்று தயார்செய்து தமது துரைத்தன தருமத்தை விளக்கினார். அதைப்பற்றிக் கீழே யெழுதுவதைப் பார்க்கவேண்டும். அதில் வேறு அனேக ஆசீர்வாதங்கள் செய்திருப்பதுடன், நமது ஜனங்களில் புத்தி, விவேக மதிகரித்துக் கல்வியிலும் வேறு யோக்கியதைகளிலும் சிறந்து வருவோரைப் பாரபக்ஷமொன்றுமில்லாமல் தமது கைங்கரியங்களிலெல்லாம் அமைத்துக்கொள்வதாகச் சொல்லியிருந்தார். இது சொல்லி யிப்போது ஐம்பது வருஷமாகிறது. இதுவரை யம்மகா வாக்கியத்தை யனுசரித்துச் சிறிது சிறிதாக நமது ஜனங்களுக்குச் சர்க்கார் கைங்கரியத்தில் பதவியுயர்ந்தேதான் வந்துகொண்டிருக்கிறது. என்றாலும் கடைசியாகச் சுமார் மூன்றுமாதத்திற்குமுன் மகாராஜச் சக்ரவர்த்தியவர்கள், மகாராணியின் வாக்கிய பரிபாலனத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமென்றும், அதற்குத் தற்கால மெல்லாவிதமாகவும் அனுகூலமிருப்பது கண்டும், அவ்வாறே கவர்னர் ஜெனரலவருடைய நிர்வாக சபைக்கு ஸ்ரீமான் "சத்தியேந்திரப் பிரஸன்னசிம்மன்' என்னும் பங்காளப் பெரிய மனிதரை நியமித்தருளினார்.

அல்லாமலும் சட்ட நிருபணத்திற்குச் சர்க்கார் நியமனப்படி யேற்பட்டவர்களுடைய மந்திராலோசனை யெப்போதும் க்ஷேமகரமாகவேயிருந்து வரவில்லையாதலாலும், ஜனங்களுக்கும் தங்களுக்கு வேண்டியவர்களை யனுப்பச்சக்தியும் புத்தியு மதிகரித்திருப்பதாகச் சர்க்காருக்கு நம்பிக்கையிருப்பதாலும் இனியவ்வாறே ஜனங்கள் தேர்ந்தெடுத்தனுப்புகிறவர்களுடைய அபிப்பிராயத்தை யனுசரித்து ராஜரீகம் நடத்துவதாகச் சட்டமும் சமீபகாலத்தி லேற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம், தற்காலம் மகா



ராஜச் சக்கரவர்த்தி யவர்களுக்கு இந்தியா ராஜாங்கத்திய முக்கிய மந்திரியாக விளங்கும் விஸ்கௌண்டு மார்லே அவர்கள்தான் சிரத்தையுடன் நடத்துங் காரியஸ்தரா யிருக்கின்றார். அதற்காக அவரை வாழ்த்தவேண்டுவது நமது முதற்கடமை.

இதை யனுசரித்து மதிராசு முதலிய புரோவின்ஷியல் கவர்ன்மெண்டுகளுக்குஞ் சபையோரதிகரித்து வரவேண்டியவர்களாகின்றார்கள். வருபவர்களுக்கோ இனிப்பொறுப்பு அதிகமாயேற்படும். அவர்கள் செய்யும் தீர்மானங்கள் சர்க்காருக்கும், மகாஜனங்களுக்கும், சமபக்ஷமாகவிருக்கவேண்டும். மகா ஜனங்களுக்குள்ளும், ஜாதி, மதம், ஆசாரம் முதலிய விஷயங்களில் பேதமதிகமாக விருப்பதால், அவைகளுக்குச் சிறிதுங் கேடின்றி யெல்லோருக்கும் க்ஷேமமுண்டாகும்படி யவர்கள் நடக்கவேண்டும்.

ஆகையாலிப்படிப் பெரிய விமர்சனங்கள் ராஜாங்கத்தில் நம்மைச் சுற்றிலு நடந்துவருகையில், மகா ஜனங்களிற் சேர்ந்தோராகிய நாம் செய்யவேண்டியதென்ன? ராமனாண்டாலென்ன, ராவணனாண்டாலென்னவென்று கையைக் கட்டிக்கொண்டிருப்பது அழகா? நமக்கு வேறொரு காரியமுமில்லாவிட்டாலும், நமக்குப் பிரதிநிதியாகத் தக்க ஜனங்கள் ஏற்படுகிறார்களா. நமது கஷ்டநிஷ்டூரங்களைக் கிரமமாக வெடுத்துப்பேசிவருகிறார்களா, என்கிற இந்தக்காரியம் ஒன்றையாகிலும் நாம் நடத்திவரவேண்டுமே. அதற்கு இங்கிலீஷ்படித்த நாலைந்துபெயர் மட்டுஞ் சேர்ந்தாற் போதுமா? போதாதாகையாலினி நமக்குள் சாமான்னியக்கல்வி பிரபலிக்கவேண்டுவது வெகு அவசியம். ஆதலாலிதற்கும்இதுபோன்ற வேறு பல நன்மைகளுக்குஞ் சாதனமாகும்படித் தேசீய பாஷைகளிலுழைப்பதும், அப்பாஷைகளுக்கு வார்சுதாரராகிய மகாஜனங்களுக்குள் ராஜாங்கமுறை, ராஜபக்தி, நாட்டுவளப்பத்திற்கு வேண்டிய வேறுவகைச் சாதனங்களிவைகளை யேற்குமாறு பிரபலிக்கச் செய்வதும், நாம் படித்த படிப்புக்குப் பிரதியாகச் செய்யவேண்டிய வேலைகளிலெல்லாம் சிறந்ததென்பது நமது சித்தாந்தம்.

**பத்திரிகைகளுக்கு நல்லகாலம்.**

இரண்டாவது, பத்திரிகைகளுக்கும், அவற்றைப் பிரபலிக்கச்செய்வோருக்குங் காணும் நற்குறிகள். சென்ற மேமாசத்தில் ஒரு பத்திராதிபரின் மகாசபை லண்டன் நகரத்திற் கூடிற்று. அதற்கு மெம்பர்களாக ஆங்கிலேய ராஜ்யத்தி லெல்லாவிடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் போயிருந்தார்கள். இந்தியாவிலிருந்து ஸ்ரீமான் பாபு சுரேந்திரநாத்பானர்ஜியவர்களும் போயிருந்தார்கள். பத்திரிகைகளாலாகவேண்டிய காரியம் தேச க்ஷேமமேயாதலால், அதற்கு வேண்டிய உபகரணங்களென்னவென்று பரியாலோசனை நடந்தது. ஆங்கிலேய ராஜ்ஜியத்தவருக்கு விரோதிகள் யாராயிருந்தாலும் அவர்களுக்கெவ்விதத்திலும் பலத்தில் குறையாமலிருப்பதற்கும், அவ்விராஜ்ஜியத்தின் கண்டங்கள் பூமியெங்கும் சிதறியிருப்பதில், பண்டமாற்று முதலிய விஷயங்களில் பரஸ்பரமுதவவேண்டிய முறைகளையும், இன்னும் இவைபோன்ற பல பெரிய விவகாரங்களையும் செம்மையாக விசாரித்துத் தீர்மானஞ்செய்துகொண்டு இவர்கள் திரும்பிப்போனார்கள். மகாஜனங்களுக்கும் சர்க்காருக்கும் நடுநிலையிலிருந்து சமபக்ஷமாகப் பேசியெல்லோருக்கும் க்ஷேமமுண்டாக்குவதையே தருமமாகக் கொண்டவர்களாதலால், இவர்களுக்குச் சக்கரவர்த்தி முதற் சாமான்னியர்களீறாகச் சகலரும் மரியாதை செய்து வாழ்த்தினார்கள். லார்ட் ரோஸ்பரி, "யாரிருந்தாலும், யார்போனாலும், பத்திரிகைகள்மட்டும் சிரஞ்சீவிகள்" என்றுசொல்லி நமது வர்க்கத்தைவாழ்த்தியதனாலதையும் நாமொரு பெரிய சுபசூசனையாகக் கொள்ளுகிறோம்.

ஏதோ துர்த்தசை விசேஷத்தினுல் சென்ற மூன்று வருஷங்களாக இந்தியாவில் சில ஜனங்கள் சர்க்காருக்கு விரோதமாகப் பேசியும், எழுதியும் வந்து, அதனுல் எல்லாக் கக்ஷிக்கும் உபத்திரவ முண்டாகிவந்ததில், நம்மில் ராஜபக்தியும், விவேகமு முதிர்ந்தவர்களி லனேகர், மறுபடி இப்படியாகாமலிருக்கப் பலவிதமாகவும் பிரயத்தனப்பட்டு வருகிறுர்கள். அவர்களிற் சிலர்இங்கிலீஷ் துரைத்தனத்தைச் சிலாகித்துத் தங்களுக்குத் தோன்றியதை யெழுதியும் பேசியும் வருகிறுர்கள்.

1858 ௵ த்தியமகாசாஸனம்.

ஆனுல் நமது துரைத்தனத்திற்கிருக்கும் பெருமை பிரத்தியக்ஷமாதலால், அதற்கு ஸ்தோத்திரபாட மனுவசியமென்பது நமது கொள்கை. யாராகிலு மத்துரைத்தனத்தால் நமக்காகிய நன்மை யென்னவென்றுல், அதற்குப்பதிலாக நாம் கேட்பது, அதனுல் நமக்காகாத நன்மையென்ன, சொல்லவேண்டு மென்பதே.

ஆகிலு மினிவருஞ் ஜனங்களுக்குச் சங்கதியெப்போது மறவாமலிருப்பதற்காக ஏதாகிலும் பிரயத்தன மிருக்கவேண்டுமென்பது பல புத்திமான்களுடைய கோறிக்கை. அப்படிச் செய்வதானுல், சாக்ஷியங்களிலெல்லாம் உத்தமமாக விளங்குவதை நமது பாலர்களுக்குப் புகட்டுவது நல்லதென்று காணுகிறது. நம்மில் இப்போதிருக்கும் வித்துவான்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாளுலும், மகாராணியின் 1858-௵த்திய மகா சாஸனத்தைவிட நேர்த்தியாகப் பேசவாவது எழுதவாவது முடியாதென்றுஎல்லோரு மொப்புவார்கள்? ஆதலால் அச்சாஸனத்தையு மதுபோன்ற விரண்டொரு பத்திரங்களையும் நமது பாடசாலைகளில் கற்பிப்பதுதான் நாம் செய்யக்கூடிய காரியங்களில் பலவினுஞ் சிறந்ததாகச் சொல்லலாம். இது மகா சாஸனங்களிலெல்லாம் சிகாமணிபோற் சிறந்திருக்க, இதை நம்மி லிங்கிலீஷ்படித்தவரிலேயே யனேகர் பூர்த்தியாகப் படித்தவரல்லர். ஆகவே யிதை யிந்த நெம்பரில், சரித்திரகாண்டத்தில் முதல் விஷயமாக்கி யிருக்கிறேும்.

இங்கிலீஷ் கொஞ்சமேனும் படித்தவருக்கு இச்சாஸனம் போகிற தோரணியும், அர்த்த கௌரவமும், வெகு அபூர்வயென்று விளங்கும். அதிலும் பெரிய வெழுத்தில் அச்சிட்டிருக்கும் வாக்கியங்களைச் சொற்சுவை சிதையாமல் மொழிபெயர்ப்பது அசாத்தியமென்றே சொல்லிவிடலாம். இனிவருங்காலத்திலப் போதைக்கப்போது இத்தேசத்திய மகரீசாஸனங்களிலனேகம் மொழிபெயர்த்து விளக்கவேண்டி வரும். அவைகளிற் சில வாசக விஷயத்திலும், சில அர்த்தவிஷயத்திலும் வெகு சிறந்தனவென்று நமக்குக்காணுவது நியாயந்தான். என்றுலும், சொல்லும் பொருளு மிவ்வாறியைந்து சோபித்த சாஸனங்களனேகமாயில்லை யென்றே சொல்லிவிடலாம்.

இலக்கணமும் நிகண்டும் மட்டும் படித்தவரெழுதியது எதையும் வேண்டுமானுல் மொழிபெயர்ப்பது சுலபம் ஆனுலிம்மாதிரி யெல்லாலக்ஷணமுங்கூடிய மகா ராணியவர்கள் தமது பேருள்ளங் கனியத்திருவாய் மலர்ந்தருளிய பேச்சுகளை அவ்வாறு மொழி பெயர்ப்பது சாத்தியமாகவே காணவில்லை. ஆகிலும் பொருளைப் பிரதானமாக கொண்டு ஏதோ தெரிந்தவரை எழுதியதை யிஷ்டரறிவாராக.

இச்சாஸ்ன ரத்தினம் 1858-ம் ௵த்தில் பிரசுரமான காலத்தில், இதையெல்லாத் தேசீய பாஷைகளிலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மொழிபெயர்த்துத்தானிருக்கவேண்டும். ஆனுலதுகிடைப்பது அபூர்வமாகிவிட்டதால், சாமான்னிய ஜனங்களுக்கு விசேஷ உபத்திரவமில்லாமலும், ருசியுடனும் படித்துக்கொள்ளவேண்டி ஏதோ தெரிந்தமட்டில் ஜாக்கிரதையாகத் தான் மொழி பெயர்த்திருக்கிறேும். ஆகிலும் செம்மையாக மொழிபெயர்க்கத் தெரிந்தவர்களேதாகிலும் குணங்களை விளக்கினுல் வந்தனபூர்வமாகப் பெற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேும்.



இச்சாஸனத்தை இத்தேசத்தில் யாருமறியச் செய்வதில் காலக்கிரமத்தில் பெரும்பயனுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை. ஆங்கிலேய ராஜாங்கத்தினுல் நமக்குக் கிடைத்த அபூர்வ வஸ்துக்களிலெல்லாமிது சிறந்து நிற்கும். இதில் நமக்கென்னவெல்லாம் கிடைப்பதாகக்காணுமோ அவைகளைவிட அதிக ஆசை நமக்கில்லவுமில்லை. வேண்டியதுமில்லை. இதையனுசரித்துத் துரைத்தனம் நடக்குமளவும் அது தர்மதுரைத்தனமாகிப் பழைய நாளில் நடந்ததை நினைத்து நாமின்னும் 'ராமராஜ்ஜியம்' என்று சொல்லிக்கொள்ளுவது போலக் காலக்கிரமத்தில்சொல்லிக்கொள்ள இடமுண்டாகுமென்பதிற் சந்தேகமே சிறிதுமில்லை யென்னலாம். இதைவிட வேறு புகழ் யாருக்கும் வேண்டுவதில்லையல்லவா?

---

## எழுத்து நடை

நடையென்பது நமது அபிப்பிராயங்களுக்கு உடையாகும். நமது சரீரம் எவ்வளவு அழகாய் இருப்பினும் நாம் நல்ல உடையில்லாமல் கந்தல் இழிச்சல்களுடன் வெளிப்படுவோமேயானுல் எவ்விதமாய் ஜனங்களின் மனதைக் கவரமாட்டோமோ அதுபோலவே நாம் எழுதும் விஷயங்கள் எவ்வளவு நியாயமாயும் உண்மையாயும் யிருந்தபோதிலும் நல்லநடையி லெழுதப்பட்டிராவிடின் படிப்பவர்கள் மனதைக் கவரவேமாட்டா. ஒவ்வொன்றையும் நிதானிக்க ஒவ்வொருவனுக்கும் புத்தியில்லாவிடினும் காதுமட்டும் எல்லாருக்கும் உண்டு.



# காவியகாண்டம்

## 1. தேசீய பாஷைகளும், வித்தியாப்பியாசமும்

ராவ் பஹதூர், ஸி. நாகோஜிராயரவர்கள்.

இச்சஞ்சிகை, மகா ஜனங்களுக்குள் சாமான்னிய வித்தைகள் பிரபலிக்கவேண்டுமென்பதை முக்கிய லக்ஷியமாகக்கொண்டு வெளிவருவதால், அக்காரியத்திற்கு முதற்சாதனங்களாகிய தேசீய பாஷைகளையும், அவைகளுடைய யோக்கியதையையும், உள்ளபடிவிவரித்து, மேல்நடக்கவேண்டிய காரியமின்னதென்று நிஷ்கரிஷித்துக்கொள்ளுவதுசரியான ஆரம்பமாம். ஆதலால் எட்யூகேஷன் டிபார்ட்மெண்டிலேயே நாம் சுமார் முப்பத்தைந்து௵கால முழைத்து வந்திருப்பதில், அவ்வனுபவத்தைக் கொண்டு நமக்குத் தோன்றுவதை யெழுதுகிறேும். அதை விவேகிகளுணர்ந்து காலக்கிரமத்தில் வேண்டியதைச் செய்வார்களென்று நம்புகிறேும்.

இப்போது ஆங்கிலேய துரைத்தனம் நமக்குக் கிடைத்துச் சுமார் 100-௵த்திற்கு மேலாகிறது. அவர்களிங்கு வந்தநாள்முதல் தேசீய பாஷைகளைக் குறித்தும், தங்கள் பாஷையிவ்விடத்தில் பிரபலிக்கவேண்டியதைக் குறித்தும் சிந்தனை செய்தேதான் வந்திருக்கிறுர்கள். முதன்முதல் வியாபார விஷயமாகத் துபாசி வேண்டியிருந்தது. பிறகு துரைத்தனம் பிரபலித்தபின், குமாஸ்தாக்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள் முதலியோர் வேண்டியவரானுர்கள். ஆகவே இங்கிலீஷ் பாஷை யிவ்விடம் பிரபலிக்க இடமுண்டாயிற்று. ஆனுலிவைகளைக் குறித்து நாமிவ்விடத்தில் விவரிக்கவேண்டிய தனுவசியம்.

துரைத்தனம் நன்றுக வேரூன்றியபின், சுமார் 1830-ம் ௵த்திற்கப்புறந்தான், ஆங்

கிலேய கவர்ன்மெண்டாருக்குள் இந்திய மகா ஜனங்களுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்க வேண்டுமென்கிற எண்ணம் முற்றி அதற்கென்று தனித்ததோர் டிபார்ட்மெண்டும் உண்டாகியது. ஆனாலதற்கு முன்னேதோ ஒருவாறாக நடந்துவந்திருந்த பிரயத்தனங்களுக்குப் பலனாக அக்காலத்தில் இவ்விஷயத்தில் கக்ஷியிரண்டேற்பட்டிருந்தது. அவைகளுக்கு சம்ஸ்கிருதக் கக்ஷியென்றும், இங்கிலீஷ் கக்ஷியென்றும் பெயர். ஏனெனில் முதற்சொல்லிய கக்ஷிக்காரர் தேசிய பாஷைகளில் வித்தியாப்பியாசஞ் செய்விக்கவேண்டுமென்று சாதித்து வந்தார்கள். அவர்கள் தேசிய பாஷைகளென்றது இந்துஸ்தானத்திய பாஷைகள். இவையெல்லாம் சம்ஸ்கிருதத்தை ஆதாரமாகவுடையன வாதலாலந்தக்கக்ஷிக்கு அப்பெயருண்டாயிற்று.

மற்றைய கக்ஷிக்கு இங்கிலீஷ் கக்ஷியென்று பெயருண்டானதற்குக் காரணமெளிதில் விளங்கும். இவர்களுக்குத் தேசிய பாஷைகளில் விசேஷ பரிசயமொன்று மில்லாவிட்டாலும், இங்கிலீஷ் புஸ்தகங்களில் பத்து அல்லது இருபது படிப்பதுஞ்சரி, ஆசியா கண்டத்திலுள்ள புஸ்தகங்களெல்லாம் படிப்பதுஞ் சரியென்று முரட்டு வாதஞ்செய்து கடைசியில் லார்ட் மெகாலேயினுடைய வாக்குச் சாதுரியத்தினால் தங்கள் கக்ஷிக்கு ஜயமுண்டாக்கிக்கொண்டு, அன்றுமுதல் இந்தியாவிலெங்கும் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களை யேற்படுத்திப் புத்திமான்களான பிள்ளைகளவைகளில் சேர்ந்து படித்து முன்னுக்கு வருதற்கு வேண்டிய வுற்சாகமுமூட்டிப் பணத்தையுந் தாராளமாகச்செலவழித்து வந்தார்கள்.

அக்காலத்திலிவ்விதமாயாரம்பித்த காரியம் முறைப்படி சென்ற எண்பது வருஷங்களாய் நடந்துவந்ததில், சில லக்ஷணங்கள் சிறந்து வந்தது, புத்திமான்கள் கண்ணுக்குச் சுமார் இருப்பத்தைந்து வருஷங்களாகப் புலப்பட்டு வந்திருக்கிறது. மொத்தத்தில் பேசுமிடத்து, இந்த வித்தியாப்பியாசத்தினால் நமது நாட்டுக்குண்டான நன்மைகள் பலவென்றும், அவற்றுட் சிலவேறு மூலமாய் வந்திருப்பது அசாத்தியமென்றும், விவேகிகள் தாராளமாய் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அதற்குச் சந்தேகமேயில்லை. இங்கிலீஷில் காவியாதிகளையும், தத்துவவர்க்கங்களையும், சாஸ்திர கோடிகளையும், வேடிக்கைக் கதைகளையும் படித்துத் தேறியவர்கள் அனேகர். இவர்களிலெத்தனையோ பெயர் ராஜாங்கத்தில் பிரபலமான வுத்தியோகங்களை வகித்துப் பாப புண்ணியத்திற்குப் பயந்து, துரைத்தனத்திற்கும், ஜனங்களுக்கும், ஈசுவரனுக்கும் சம்மதமாகவுழைத்துக் கீர்த்தி பெற்றிருப்பது பிரத்தியக்ஷம். தவிரப்படித்து விவேக முற்றியவர்களிலனேகர், இதர தேசங்கள் நாகரிகத்திற் றேர்ந்து பெருமையடைந்து வருவதையும், நமது தேசத்திற்காணுங்குறைவுகளையுங்கவனித்து, இதற்குக் காரணங்கண்டுபிடிக்க முயன்றதில், அவரவர் கல்விகேள்விக்கு மனோதருமத்திற்கு மேற்குமாறு பலகாரணங்களை முன்னிட்டுச், சிலர் வருணாசிரம முதலிய ஆசாரங்களையும், சிலர் அரிசி, பருப்பு முதலிய ஆகாரவகைகளையும், வேறுசிலர் மதவிஷயங்களையும், மற்றுஞ் சிலர் மகாஜனங்களுக்குள் கல்வி குறைந்திருப்பதையும் வியவகரித்து வந்திருக்கிறார்கள்.

இவைகளில் மற்றைய காரணங்களைக்கொண்டு நமக்குப் பிரகிருதத்திலாக வேண்டியது ஒன்றுமில்லை யாதலால் கடைசியாகச் சொன்ன தோஷத்தை மட்டும் விவரிக்கிறோம். மேற்கூறியபடி, 'இங்கிலீஷ்கார,' ருடையகக்ஷி பலத்து அதற்காகச் சர்க்காரும் பணத்தைச் செலவழித்து வந்தார்களல்லவா? அதில் அப்போதப் போதிருந்த ஆவசியகத்தை யனுசரித்துப் பலவிதப் பரீக்ஷைகளும், கல்வி யுயரவேண்டி யூனிவர்ஸிட்டி முதலிய சாதனங்களு மேற்பட்டுப்படிப்பவர்களுக்கு உற்சாகமுமிருந்ததனால், யேனாட்டுக்கல்வி நம்மில் நன்றாய்ச் சேர்பித்ததென்பது வாஸ்தவமே. அப்படிக் கல்வியதிகரித்ததில் சர்க்கார் காரியமும் வெகு சீராகநடந்ததும் வாஸ்தவந்தான். ஆனாலும் மகாஜனங்களுடைய க்ஷேமத்தைக் கோரி நாம் விசாரிக்குமளவில் இதுவரையுண்டான பிரயோஜனம் வெகு சொற்பமென்று பிரதிவருஷமும் வெளியாகும் ரிபோர்ட்டுகளைப் படிப்பவருக்குக் காணும். மதிராசு கானேஷ்மாரிக் கணக்கெடுத்துப் பார்த்தால் படித்தவர்கள்



நூற்றில் 25 பெயர்கூடவில்லையென்றும், நன்றாய்ப்படித்தவர்களின்னுஞ்சொற்பமென்றும் வியக்தமாகத் தெரிகிறது. இழிகுலத்தாரென்ற பள்ளிப்பறை முதலியோரையும், பெண் குழந்தைகளையும் விசாரிக்கும்போது, அவர்களுக்குள் வித்தையென்பது இல்லையென்றே சொல்லிவிடலாம் போலிருக்கிறது. ஆதலாலிந்தக்குறைவுகளுக்கென்ன பரிகாரமென்று சர்க்காரும், நம்மில் விவேகிகளுஞ் சென்ற இருபத்தைந்து வருஷங்களாக விசேஷித்து யோசித்து வருகிறார்கள். தவிரச் சர்க்காருக்கு இங்கிலீஷ் படித்துத் தேறியவர்க்கெல்லாம் தகுந்த உத்தியோகங்கொடுத்தாதரிப்பதுஅசாத்தியமாகிவிட, அப்படித் தேறி உத்தியோகஞ் சுலபமாய்க் கிட்டாதவர்களும், தேறாமல் அரை குறையாகநின்று விட்டவர்களுங்குறைந்த சம்பளங்களில் அமர்ந்து அதனால் மனதிற்குப் பலவிதத்திலுங் குறைவுண்டாகி வருந்துபவரானார்கள். அந்தத் தோஷத்தையும் பரிகரிக்கவேண்டிச் சர்க்காரார் பல உபாயங்களைச் சிந்தித்து வருகிறார்கள்.

நாளதுவரை இவைகளுக்கெல்லாம் பரிகாரந் தேடியாய்விட்டதென்று சொல்ல இடமில்லை. ஆகிலும் சென்ற எட்டு வருஷங்களாகச் சில காரியங்கள் இதை உத்தேசித்து நடந்து வந்திருக்கின்றன. லார்ட் கர்ஜன் நமக்குக் கவர்னர் ஜனரலாக வந்தது முதல் பிரயத்தனம் பலப்பட்டுக் கடைசியாகச் சில நியமங்களிவ்விஷயத்திலேறப்பட்டன. அவைகளில் பொதுவாயுள்ளன இவை:—

1. இங்கிலீஷில் வித்தியாப்பியாசஞ் செய்து பெரிய பட்டவர்த்தனராகிப் பெரிய உத்தியோகங்களைப் பெற்றோ, வேறு வகையினாலோ, தங்களுக்கும் தேசத்திற்கும் பெருமை சம்பாதிக்க வேண்டுபவர்களுக்கும் இதுவரை நடந்ததுபோலத் தாராளமாய்ப் பணமுதவி, மேல் நடக்கவேண்டிய மகாஜன வித்தியாப்பியாசத்திற்கும் வேண்டியதுபோலச் செலவழிக்கச்சர்க்காருக்குப் பணம் போதாததால், இனிப் பட்டவர்த்தனருக்கு வேண்டிய கல்விக்குத் தேசியர்களான தனவான்களும் தருமிஷ்டர்களும் திரவிய சகாயஞ்செய்து, அத்தரும பரிபாலனஞ்செய்தேதான் அது பிரபலிக்கவேண்டுமென்பது.

2. இம்மாதிரிக் காரியங்களிலிதுவரை செலவாகிவந்த பணத்தைக் கூடியமட்டில் மிகுத்து, வேறு வகையிலும் பணஞ்சேர்த்துக் கூடும் மொத்தத்தைக் கொண்டு, மகாஜனங்களுக்கு வேண்டிய சாமான்னியக் கல்வியும், கேவலம் மோசஸ்திதியிலிருக்கும் பள்ளி, முதலியோருக்கு எழுத்து வாசனையும், இவர்களிலும் மற்றுள்ளவர்களிலும், தொழில் கற்று முன்னுக்கு வரக்கூடியவர்களுக்கு அதற்கேற்ற வுபாயங்களுஞ் செய்து, மொத்தத்தில் கல்வி மூலமாகத் தேசக்ஷேமத்தை யதிகரிக்கச் செய்யவேண்டுமென்பது.

3. இப்படி மகா ஜனங்களெல்லோருக்கும் கற்பிக்கவேண்டிய கல்விக்கு இங்கிலீஷ் பாஷை சாதனமாக முடியாதென்று சென்ற 80 ௵த்திய அனுபவத்தினால் விளங்குவது கொண்டு இனியதைத் தேசீய பாஷைகளைக்கொண்டே சாதிக்க வேண்டுமென்பது.

இவைகளைக் கவனிப்போருக்குக் கல்வி விஷயத்திலிதுவரை சர்க்காருக்கிருந்த நோக்கம் வேறு, இப்போதிருக்கும் நோக்கம் வேறென்பது செம்மையாகக் காணும். முதல் ஐம்பது ௵ வரையிருந்தது. சர்க்கார் கைங்கரியத்திற்கு வேண்டியவர்கள் போதுமட்டு மகப்படுவதற்காகச்செய்த பிரயத்தனம். அதாவது இது முக்கிய லக்ஷயமென்னத் தக்கது. இப்பொழுதும் அந்த லக்ஷயம் முற்றிலும் போய்விட்டதென்று சொல்லவரவில்லை. ஆனால் மேற்குறித்த முறைகளைப் படிப்பவருக்கு இது சர்க்காருடைய முக்கிய லக்ஷயமாகாதென்றும், நோக்கம் வேறாகியிருக்கிறதென்றும் தெரியும்.

சர்க்காருக்குத் தற்காலமேலிட்டிருக்கு மெண்ண மென்னவெனில், முதலாவது, ஜமீன்தார் முதல் தோட்டியீறாக நமது தேசத்திலுள்ள ஆண், பெண், அனைவரும் எழுதப் படிக்கவும், கணக்குவைக்கவுமாவது தெரிந்திருக்க வேண்டும் என்பது. இது வெகு சிலாக்கியமான நோக்கமென்பதிற் றடையில்லை. ஐரோப்பாவிலும், மற்று நாகரீக முதிர்ந்த வேறிராஜ்ஜியங்களிலுங் குருடு, செவிடு, ஊமை முதலியவர் கூடவெழுத படிக்கத் தெரிந்துகொள்ள வுபாயமேற்பட்டிருக்கு மிக்காலத்தில், நமது நாட்டில் மட்டுந் தற்குறிகளிவ்வளவு ஏராளமாயிருப்பது நமக்கு அழகேயல்லவாதலாலிக்காரியஞ் சீக்கிரங் கைகூடுவதற்கு நாமெல்லோருஞ் சர்க்காருக்கு உதவிசெய்து வரத்தான் வேண்டும். இதை ப்ரைமேரி தரபு என்று மொத்தத்தில் சொல்லலாம். இந்தத் தரபுவரை மகா ஜனங்களுக்கு வித்தியாப்பியாசம் தேசீய பாஷைகளில் சிரமமில்லாமல் நடக்கலாம். அதிலும், தமிழ் முதலிய நான்கிலும் நடப்பதற்குத்தடையேயில்லை. வேண்டியதெல்லாம் திரவிய சகாயமும் ஜனக்கட்டுமே. இவையிரண்டும் அதிகரிக்கு மளவிற்கு ப்ரைமேரி வித்தியாப்பியாசம் பிரபலிக்கலாம்.

இரண்டாவது, இப்போது 'எலிமெண்டேரி' யென்று மொத்தமாய்ச் சொல்லும் தரபு. இது ப்ரைமேரி கழிந்தபின்மூன்றுவருஷகாலமாவது படித்தாக வேண்டியது. இதற்குரிய வகுப்புகளில் பாடம் சொல்லுவதில்தான் உபத்திரவமதிகரித்துக் காணுவது. தேசீயபாஷைகளில் தானெல்லா விஷயங்களுங்கற்பித்தாக வேண்டுமெனச் சர்க்காருத்தரவு பிறந்துவிட்டது. ஆனால் சில விஷயங்களில் புதுப்பழக்கமாகவேண்டியிருப்பதுகொண்டு உபாத்தியாயர்கள், மாணாக்கர், இன்ஸ்பெக்டர்கள், எல்லோருஞ்சிரமப்படுகிறார்கள். இதுவரை யெப்படியோ தேசீயபாஷைகளையு மிங்கிலீஷையும் பரஸ்பர முதவியாக்கிக் காரியம் நடந்து வந்தது. தேசீய பாஷைகளிற் புத்தகங்களிருந்து வந்திருப்பது வாஸ்தவமேயானாலு மவைகளுக்கு வாசக விஷயத்திலும், விஷயங்களை விசாரிக்குமிடத்தும், உள்ள யோக்கியதையைப்பற்றி யொன்றுஞ் சொல்லாமலிருப்பதே நல்லது. நல்ல கடிதம், நல்ல அச்சு முதலிய லக்ஷணங்களே நடுத்தரமாயிருக்கச் சித்திர முதலிய அலங்காரங்களைப் பற்றி நாம் பேசவேண்டியதில்லை. ஆதலாலிம்மாதிரி யிருப்பவைகளைக்கொண்டு திடீரென்று பெரிய காரியங்களாக வேண்டுமென்றால் வெகு பிரயாசமல்லவா? மற்ற லக்ஷணங்களை வேண்டுமானால் பணத்தைச் செலவழித்துச்சீக்கிரம்சாதித்து விடலாம். இரண்டு லக்ஷணங்கள் மட்டும் நமக்கு வேண்டியபடி யாடுவது சிரமம். அவையாவன—பாஷையின் சுவபாவ யோக்கியதையும், உபாத்தியாயர்களுக்குள்ள குறைவுகளுமாம். எடுத்த விஷயத்திற்கு, உபாத்தியாயர்களைக் குறித்துப் பேசுவது அனாவசியமாயினும், அவ்விஷயத்தைக் கவனித்து வந்திருப்பவருக்கு எச்சந்தர்ப்பத்திலுமதைப் பேசாமல்விட மனம்வராது.

ஏனெனில், 'லோயர் செகண்டரி' தரபிலுமதற்கு சமீபத்திலுமிருந்து வேலைசெய்து வருமுபாத்தியாயர்கள், அனேகமாய் முதல் தரமான பெயர்களல்லர். புத்திசூக்ஷ்மமும், பிழைக்க யோக்கியதையுமுள்ளவர், இவர்களுக்கு கிடைக்கும் கேவலச் சம்பளங்களை வாங்கி வயிறுவளர்த்துக்கொண்டிருக்கவேமாட்டார். தோட்டி, தலையாரி முதலியோருக்காகிலுஞ் சம்பளம் சுமாராகக் கிடைக்கிறதென்னலாம். ஆகவே நடுத்தரமான பெயர்கள் தானிந்த வேலையிலமர்வது. அவர்களுக்குக் கல்வியு மதற்கேற்படித்தானிருக்கும். இதனாலும், இதிலுமோசமான வேறிரண்டொரு காரணங்களாலும், நமது குழந்தைகளுடைய படிப்பு வெகு நேர்த்தியாகவேயிருக்கிறது. ஆனாலிதுமட்டும் நமது ஜனங்களுக்குக் கண்ணிற் படுவதேயில்லை. பிள்ளைகளையும் பெண்களையும் பெற்று



எவ்வளவோ அருமையாய் வளர்த்து வருவதாக நினைத்துக்கொண்டிருக்கும் விவேகிகளில் எத்தனை பெயர் தங்களருமைக் குழந்தைகள் குதிரைலாயத்திற்குமாகாத மகாமண்டபங்களில் நாள் முழுது மிருந்து வருவதைக் கவனிப்பவர்? ஓ! தாய்மார்களே, தகப்பன்மார்களே! நீங்கள் சிற்றுண்டி யென்றும், பேருண்டியென்றும் தினுசு தினுசாகப்பக்ஷியங்கள் செய்துகொடுத்துக் காப்பு, கொலுசுமுதலிய ஆபரணங்கள் பூட்டிப் பட்டு வஸ்திர முடுத்திப் பட்டுச் சொக்காய் முதலிய அலங்காரங்கள் செய்தனுப்புங் குழந்தைகள், நாய் படுப்பதற்கு மாகாத திண்ணையிலோ, தாழ்வாரத்திலோ, அல்லது மாட்டுக் கொட்டடத்திலோ, தினமுழுதுமிருந்து வருவதுங்கள் கண்ணிற்படவில்லையா? இவர்களுக்கு உபாத்தியாயரென்றிருப்போர்க்குச் சம்பளம் அரைவயிற்றுக்கும் காணாமலிருப்பது தெரியவில்லையா? அல்லது விலைக்கேற்ற சரக்குத்தானுங்களுக் குண்டென்பதை மறந்து விட்டீர்களா? இத்தனைநாள் போனதுபோகட்டும், இனி யாகிலுங் கண்ணை விழித்துக்கொண்டு உபாத்தியாயரென்னுஞ் சரக்கைச்சற்று உயர்ந்த தரத்திலேற்படுத்திப் பள்ளிக்கூடங்களையும் கொஞ்சம் பார்க்கும்படிசெய்துகொள்ளுங்கள். இவ்விஷயத்தில் சர்க்காரார் எத்தனையோ செய்துதான் வருகிறார்கள். என்றாலும் நீங்களிம்மாதிரித் தூங்கும்வரை யார்தானுங்களுக்குதவிசெய்து நல்லவராவது? உங்களுக்கே பிள்ளை பெண்களைப் பெறுவதும், அவர்களுக்குப் பிரதிமைகளுக்குச் செய்யும் அலங்காரஞ் செய்வதும் தவிர வேறு காரியங்களில், அதிலும் அத்தியாவசியமான காரியங்களில், சிரத்தை யிவ்வளவு கேவலமாக விருந்தால் பிறரைநொந்து கொள்வதற்கு உங்களுக்கென்ன நியாயமிருக்கிறது? இது நிற்க.

நாம் முக்கியமாக விசாரிக்க வேண்டி யெடுத்தது வித்தியாப்பியாச விஷயத்தில் தேசீய பாஷைகளுக் கிருக்கும் யோக்கியதை. ஏதோ பேசி வந்ததில் அது கடைசியி லெடுக்கும்படியாய் விட்டது. ஆகிலும் விசேஷ தோஷமில்லை யென்று நம்புகிறோம். ப்ரைமேரி வரை காரியம் சலீசாக நடக்கலாமென்று முன்னமே நாம் ஒப்புக்கொண்டிருப்பதால், அதற்கு மேற்பட்ட தரபுகளில் நடப்பதற்கு ஆக்ஷேபமென்ன வென்று விசாரிக்க வேண்டும். மொத்தத்தி லொரு சங்கதி மட்டும் பிரத்தியக்ஷம். இங்கிலீஷ் படித்துத் தேர்ந்தவர்கள் நம்மிலனேகமா யெல்லோரும் பெரியசபைகளில் பேச வேண்டுமானால் இங்கிலீஷில்பேசுவதைச் சுலபமாக நினைக்கிறார்களே தவிர சுவபாஷையிற் பேசமுயல்வதில்லை. இது அப்பியாசக்குறைவினாலேயே தானென்று சொல்லிவிடலாமென்றால், பாஷைகளிலும் பிரத்தியக்ஷமாகச் சில குறைவுகளிருக்கின்றன. அவைகளில்இரண்டொன்றைமட்டும்காட்டி அதற்குப் பரிகாரமாக நமக்குத்தோன்றுவதையுஞ் சொல்லி முடித்து விடுகிறோம். சஞ்சிகை தமிழாதலில், தமிழை மட்டுமெடுத்துக் கொள்ளுகிறோம்.

தமிழென்று நாம் வழங்குவது வித்தியாப்பியாசத்தின் பொருட்டாதலால், அது சாதாரணமாகவுபயோகப்படவேண்டிய வசன நடையையேயொழிய, சிந்தாமணிமுதலிய பெருங்கிரந்தங்களிலுரையாக வுபயோகப் பட்டிருக்கும் பண்டிதச் செந்தமிழையல்ல. 'லோயர் செகண்டரி' உபாத்தியாயர்களும், இன்ஸ்பெக்டர்களும், நச்சினார்க்கினியருடையவும், பரிமேலழகருடையவும் போக்கை யனுசரித்துப் பேசியெழுத வாரம்பித்தால், பிள்ளைகள் பிழைப்பு விசித்திரமாகிவிடும். ஆதலாலந்த நடை சாத்தியமுமல்ல, வேண்டியதுமல்ல. அது கொண்டு, சாமான்னியமாய் 'நடை பெறும் தமிழ்தான் நாமிப்போது வியவகரிப்பது.

இது ஒருவகைப்பட்டதல்லவென்று சாதாரணமாய்த் தெரியும். தமிழ் ஜில்லாக்களில் திருநெல்வேலி, மதுரை முதலிய விடங்களில் வழங்

கும் தமிழுக்கும், தஞ்சாவூர், தென் ஆற்காடு, முதலிய விடங்களில் வழங்குவதற்கும், கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களிலிருப்பதற்கும், வித்தியாசங்கள் பலவாகக் காணுவதுடன், எல்லாவிடங்களிலும், தமிழ் பேசும் பிராமணருக்குள் வழங்கும் தமிழுக்கும் வேளாளர் முதலிய சுத்தத் தமிழருக்குள் வழங்குவதற்கும் பேதங்களிருக்கின்றன. ஆனால் உபாத்தியாயர்கள் இலக்கண முறையை யனுசரித்தே பள்ளிக்கூடங்களில் பேசி வருவது சம்பிரதாயமாகையாலிதனால் விசேஷ வுபத்திரவமில்லையென்னலாம். இதனாலந்தச் சம்பிரதாயம் நல்லதா, கெட்டதாவென்று நாம் விசாரிக்க வந்ததாக நினைக்கக்கூடாது. அதற்கு இது தருணமல்ல. வழக்கமிருப்பதைமட்டும் நாம் குறிப்பிட்டுப்போகிறோம்

கற்பிக்கும் விஷயங்களில் செய்யுள் முதலிய ‘பாஷைப்பாடங்களைப்’ பொறுத்தமட்டில் தமிழுக்குக் குறைவொன்றுமில்லை, ஔவையொருவர் மட்டுமே தமிழுக்குப் பெருமை வருவிக்கப் போதுமான பெயர். ஆனால் வசன நடைப் புஸ்தகங்கள் இப்போதிருப்பவைகளைப் பார்க்கையில் எவ்வளவும் திருப்திபடுவதற்கில்லை. இங்கிலீஷ் முதலியவைகளிற்காணுவதுபோலச் செவிக்கினிமையாயும், மனதிற்கின்பமாயும், உபயோககரமாயுமுள்ள வசனப் பிரகரணங்களினியமைய வேண்டியவைகளேயொழிய இப்போதிருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. சித்திரங்களிப்போதுதான் கொஞ்சங்கண்டு வருகின்றன. ஆதலால் அவைகளிலனேகம் விசித்திரமாகவிருக்கின்றனவென்பது சகஜம். பாஷைப்பாடங்களை விட்டுத் தத்துவங்கள், சாஸ்திரங்களிவைகளை யோசிக்குமிடத்துத்தான் உபத்திரவம் இன்னும் வெகுவாகிக் காணுவது. இது தேசியபாஷைகளுக்கெல்லாம் பொது லக்ஷணமென்றாலும் ஒரு காரணத்தினால் தமிழுக்கு விசேஷித்திருப்பதாகச் சொல்லவேண்டும். ஏனெனில் இவ்வர்க்கங்களுக்கு முக்கியமாகவேண்டியவைபரிபாஷைகள். இவைகளினிமேலுபயோகத்திற்குவரவேண்டியவை. உதாரணமாக மின்னலுண்டாகும் ‘இருகனல்’ விசேஷத்தையிதுவரைதமிழில் ‘மின்சாரம்’ என்று பெயரிட்டுப் பேசிவருகிறோம். ஆனாலினித்தெலுங்கிலோ அல்லதுவேறொருதிராவிட பாஷையிலோ இதைப் பற்றிய புஸ்தகமொன்று வெளிவருவதாகவைத்துக் கொள்ளுவோம். அதில் சுமார் 100-அல்லது அதிகப்பட்ட பரிபாஷைகள் அனேகமாய் எல்லாம் சம்ஸ்கிருதத் திரிபாகவேயிருப்பதாகவுமிருக்கட்டும். புஸ்தகம் மற்ற விஷயங்களில் நேர்த்தியாக விருந்தால் அதை மலையாளத்திலாவது, கன்னடத்திலாவது மொழி பெயர்ப்பதென்றால், பரிபாஷை நிமித்தம் யாதொரு உபத்திரவமு மிராது. மின்சாரமென்பதற்கு பதிலாக‘வைத்தியுதம்’என்றுதெலுங்கிலெழுதியிருந்தாலதையப்படியே மற்ற பாஷைகளிலெழுதி விடலாம். தமிழில் இது சுலபமல்ல. ஏதோயிரண்டொரு காரியமட்டுமானாலிது பெருங்குறைவாகாது. ஆயிரக்கணக்காகப் பரிபாஷைகள் வேண்டிவந்திருப்பதில் மற்றைய மூன்று பாஷைகளொருவித மாகவும்தமிழ் மட்டும் தனித்தொருவித மாகவும் போவதில் தமிழுக்குத்தான் கஷ்டமேயொழிய மற்றவைகளுக்கல்ல.

சங்கதியிப்படியிருந்தும் ஏதோகாரணத்தினால்தமிழுக்குச் சுவயம் வார்சுதாரராகிய வேளாளர் முதலியோர்இம்மார்க்கத்தில் தமிழைவிர்த்தியடைய விடுவதில்லை. வெகுகாலமாக விந்தக் குறையிருந்து வருகிறது. மற்றையமூன்று பாஷைகளும் ஆதி முதல் சமஸ்கிருதபக்தியுடன், எழுத்துக்களையுமதற்கிணங்கச் செய்து கொண்டதால் அவைகளுக்கு இனியுபத்திரவமேயில்லை. இந்தியாவிலெங்கும் இதேரீதியாக விருக்கிறது. தமிழ்மட்டு மிதுவரை தனித்து நின்றதினால் எழுத்துக்குறையும் அதையனுசரித்து வேறு குறைகளுங் காணுகின்றன. ஆனால் தமிழருடைய பிடிவாதமெவ்வளவாகிலுங், காலக்கிரமத்தில் பேதங்களாகி



யே வந்திருப்பதா லினியுமவ்வாறே யாகுமென்பதில் தடையில்லை. ஜ, ஷ, ஸ, ஹ, முதலியவைகள் சேர்ந்திருப்பதுபோல் இனிவேண்டியவிடத்துக் கொஞ்சங் கொஞ்சமாக அக்ஷரங்களும், பதங்களும், சம்ஸ்கிருதத்திலிருந்து மட்டுமேயல்ல, வேண்டிய விடங்களிலிருந்தெல்லாம் வந்துதான் தீரவேண்டும். அதைவிட்டால், நமது பாதிரி நண்பர் ஸ்ரீமான்-நோல்ஸ்துரை சொல்வதை யனுசரித்து ரோமன் எழுத்துக்களை யுபயோகத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஆனால் நாகரிக மளவற்றுயர்ந்திருக்கும் ஆங்கிலேய நாட்டில் பதங்களுடைய உச்சாரணத்திற்குங், கூடியிருக்குமெழுத்திற்குஞ் சம்பந்த மில்லாமலிருக்கும் சிலபதங்களைத்திருத்தி யெழுதுவோமென்றால் கூடாதென்று முரட்டுத்தனம் பலமாக விருப்பது படித்தவர்க்குத் தெரியுமாதலால், நாகரிகம் வெகு தூரங்குறைந்த தமிழ் நாட்டிலுள்ளவர் பழைய எழுத்துக்களையவ்வளவு சீக்கிரத்தில் விட்டுப் புதிதாக எழுத்துகளெல்லாவற்றையுமெடுத்தாளுவார்களென்று காணவில்லை. அது நடப்பதாக விருந்தாலுமிருக்கட்டும். சமீபித்தகாலத்திலில்லை யென்பது நிச்சயமாதலால், சமீபத்தில் நடக்கக்கூடியது, வேண்டுமளவிற்குக்கிரந்த எழுத்துகளையும் சமஸ்கிருதப் பதங்களையு முபயோகப் படுத்திக் கொள்வதாம்.

இவ்விஷயத்தில் பழைய பிடிவாதம் விட்டு வருவது பலவிதத்திலுங் காணுவதல்லாமல் நவீனமாக வுயிர்ப்பித்த மதுரைச் செந்தமிழ்ச்சங்கத்தாரும், மாணாக்கருக்குக் கொஞ்சம் சம்ஸ்கிருதங் கற்பித்துவருவது வெகு சந்தோஷகரமானது. அப்படியே செய்து வருவதினால் தான் காலக்கிரமத்தில் படிப்புவிஷயத்தில் தேசிய பாஷைகளுக்கு யோக்கியதை யதிகரிக்கும்.

இப்படிச் சொல்வதில் நாம் சம்ஸ்கிருதத்திற்கு வக்கீலாகப்பேசுவதாக யாருக்குங்காணாதென்று நம்புகிறோம். ஏனெனில் அப்பாஷையின் பெருமையை யிந்தியாமட்டுமல்ல, கொண்டாடுகிறது. தமிழுக்குங் காவியாதி சிலவிஷயங்களில் பெருமை யிருந்தாலும் பிரகிருதத்திற்கு அதைப் பேசுவதிற் பயனில்லை. நடக்க வேண்டிய காரிய மிந்தியாவெங்கும் ஒரேவிதமாக நடக்கவேண்டியிருப்பதால், தமிழாகிய நாம் மட்டும் தனித்து நிற்பதாகச் சொல்லிப் பரிபாஷை வேண்டிய விடத்து முன்னொரு காலத்தில் வழங்கிவந்த அரும்பதங்களைத் தேடிக்கொண்டிருப்பதில் விசேஷப் பிரயோஜனமில்லையென்பது நமது கக்ஷி.

‘லோயர் செகண்டரி’ தரபுவரை தேசிய பாஷைகளில் தான் இனி வித்தியாப்பியாசஞ் செய்விக்கவேண்டுமென்று டிபார்ட்மெண்டு உத்தரவாகிவிட்டது. அது சுலபமாகச் செய்யக்கூடிய காரியம். உத்தரவுப்படி நடக்க வேண்டுமானால் தான் சிரமம் அதிகரித்துக் காணுகிறது. உபாத்தியாயர், மாணாக்கர் இருகக்ஷியாருக்கும் தக்க புஸ்தகங்களில்லை. தத்துவவர்க்கங்கள், சாஸ்திரகோடிகள், சரித்திர வகைகள் இன்னுமிவைபோன்ற சரக்குகளெல்லாமினி நிரூபித்தாக வேண்டியவைகள். இப்போது கைக்குவருவன சில நவீன நாடகங்களும், நவீனக் கதைகளுமேயாம். இவைகளும் பாடசாலைகளிலுபயோகப்படக்கூடிய தினுசில் வெகுவாயில்லை.

ஆதலா லிச்சஞ்சிகை யாரம்பித்தவரும் அவர் போன்ற வேறு இஷ்டர்களும் பலமாகப் பிரயத்தனஞ்செய்து அச்சு, கடுதாசி, சித்திர முதலிய லக்ஷணங்களிலொன்றுங் குறைவில்லாமலும், ருசியுண்டாகத்தக்க பர்கத்திலு மேற்கண்ட விஷயங்களை விளக்கிய புஸ்தகங்களுண்டாக்கி வருவார்களாகிலவர்களுக்கு இம்மை மறுமை யிரண்டிலும் பலனுண்டென்று நாம் பூரணமாய் நம்புகிறோம்.

# காவிய விமர்சனம்

## ரஸப்பிரகரணம்

உ. வே. நடாதூர்-வி. தேசிகாசாரியாரவர்கள்,
எம். ஏ., பி. எல்.,

தேசிய பாஷைகளிற் பண்டிதர்களான பெரியோர்களே, இப்பொழுது காவியமுதலியன கற்றுவரும் குமாரர்களே, ரஸமென்னுஞ் சிற்பலக்ஷணத்தைப்பற்றி யேதோ தோன்றுவதைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

பழைய சம்பிரதாயமாகக் குருகுலவாஸஞ் செய்து, பூரண வித்துவான்களிடம் காவிய நாடகத்தைச் சம்ஸ்கிருதத்திலோ, தேசிய பாஷைகளிலோ கற்று, இருவகைப்பலனையும் அடையப் பிரயத்தனப்படுவது இனி நடவாத காரியம். அது நிற்க, மேனாட்டுக் கல்வியுடன் நமது பழையகிரந்தங்களையும் கொஞ்சம்கற்றுப் பரீக்ஷைகளில் தேறிவரும் நமது குமாரர்களுக்கு இதுவரை தேசிய பாஷைகளில் ருசியென்பதே விசேஷமாயில்லை யென்று காணுவதால், அதற்குக் காரணத்தை விசாரித்துப் பரிகாரங் கண்டுப் பிடிக்கவேண்டியது நமது தருமம்.

இப்போது நமதிடையில் தழைத்தோங்கும் இங்கிலீஷ் பாடசாலைகளில், தமிழையாகிலும் சம்ஸ்கிருதத்தையாகிலுமெடுத்து பி. ஏ. வரையிலோ, அதற்கு மதிகமாகவோ, படித்துத் தேறுபவர்களுக்கெல்லாம், எடுத்த பாஷை விஷயத்தில் பக்தியும், அதன் குணதோஷங்களைச் சரியாயறியும் சக்தியும், தாங்கள் படிக்கும் காவியாதிகளில் ஏதாகிலுமோர்விதம் ருசியும், இல்லையென்று வெகு காலமாகப் படிப்பிப்பவர் சொல்லுவது மட்டுமேயல்ல, படிப்பவருமதை யொருபெருமையாகச் சொல்லிக்கொள்ளுவதுண்டு. அனேகமாயெல்லோருக்குமிதையொரு பெருங் கடனாக வைத்துக்கொள்ளுவதும், இதைப் பரீக்ஷகரென்னுங் கடன்காரருக் கிறுத்துவிட்டால், பிறகு புஸ்தகங்களைக் கட்டிப்போட்டுவிட்டுப் பெருமூச்சுவிட்டுச்சனி தொலைந்ததென்று யதேச்சையாகத் திரிவதும் சகஜமாகி வந்திருக்கிறது. இப்படியன்றி யேதாகிலும் பிரசங்க முதலியன ஏற்பட்டு அதில் மாணாக்கராவது, அல்லது பண்டிதராவது காவியாதிகளைப்பற்றிப் பேசினால், தமிழாகிலுஞ்சரி, சம்ஸ்கிருதமாகிலுஞ்சரி, அதற்குப் போக்கொன்றேதான். சந்தியருமைகள், யாப்பு மகிமைகள், அணிவிசித்திரங்கள், யமக முதலிய கழைக்கூத்துகள், இவைகளை வர்ணித்து ஆனந்தமடைவதுதான் சாமான்னியமாகக் காணக்கூடியது. இதில் வேறு பாஷைக்கியான மில்லாதது பற்றித் தாரதம்மியந் தெரிவதற்கில்லாமலிருப்பவர் எதைச் சொன்னாலுந் தோஷமாகமாட்டாது. அவர்களுக்குத்தெரிந்ததுஅம்மட்டே யென்னலாம். இங்கிலீஷ் முதலிய பாஷைகளிற் பயிற்சி செய்து தேறியவர்களும், தேசிய பாஷையைக் கைக்கொள்ளுமிடத்துத் தெரிந்ததை யெல்லா மறந்து வெற்றெறும்பைக் கடித்துக்கடித் தானந்தக் கூத்தாடுவதுதான் வெகு விசித்திரமாகக் காணுகிறது.

இதற்குக் காரணங்கள் பலவென்றாலும் கற்பிக்க ஏற்பட்டிருக்குந் துஷ்டபரம்பரையே முக்கிய காரண மென்னலாம். பிரகிருதத்தில் தமிழைப்பற்றிப் பேசவேண்டியிருப்பதாலதையே கவனிப்போம். சாமான்னியமாய்த் தமிழ் வித்துவான்களென்று வருபவர் கற்று வருவதென்ன ? கம்பராமாயணம் வரை கைக்குக்கிட்டிய இலக்கியங்களும், நன்னூலும், யாப்பருங்கலக்காரிகையோ, அதுபோன்ற வேறேதோ இலக்கணங்களும், அவரவர் மதத்தை யனுசரித்துள்ள நாலைந்து புஸ்தகங்களும் படித்தால் வித்துவானாகிவிட்டான். நிகண்டும், இலக்கணத்திற் கொஞ்சமதிகமும் படித்துவிட்டால் பிரபலவித்துவானாகி விட்டான். இத்துடன் கம்பர் முதலிய புலவர்களைப்பற்றிய வேடிக்கைக் கதைகளையுந் தெரிந்துகொண்டு புறப்பட்டால், பூரண பண்டிதனெனத் தேச



மெங்கும் திரியலாம். இப்போது கொஞ்சநாளாக வித்துவசிரோமணி, மகாமகோபாத்தியாயர், உ. வே. சுவாமிநாத அய்யரவர்கள் எவ்வளவோ சிரமப்பட்டியற்றிய பழங்காவியங்களில் இரண்டொன்றைப் படிக்கக் கிடைப்பதோ பூர்வ புண்ணியத்தாலாகவேண்டும்.

இப்படிப் பெருமை பெற்ற பண்டிதர்கள் பாடஞ் சொல்லக் கிடைத்திருக்கவும், மாணாக்கருக்குப் பாஷைகளிலிருக்கும் ருசி யதிகரிக்கும்படி நமது யூனிவர்ஸிட்டியார் வருஷா வருஷம் நவமணிகளாகப் புஸ்தகங்களைத் தெரிந்தெடுக்கவுமிருக்கையில், காவியபாடத்திற்கென்ன குறையிருக்க முடியும் ? தவிரப் பள்ளிக்கூடங்களில் அமர்ந்துழைக்கும் பண்டிதர்களுக்கோ சம்மானங்கள் வெகு திருப்திகரமாக, மாசம் 1க்கு ரூ. 10 முதல் ரூ. 50 வரை தாராளமாகக் கிடைக்கின்றன. அபூர்வமாகச்சிலசமயங்களில் சிலருக்குக் கில்லத்துகளுங் கிடைத்து வருகின்றன. யூனிவர்ஸிட்டியிலிருந்துகொண்டு புஸ்தகங்களை யேற்படுத்துபவர்களெல்லோரும் பூரண பண்டிதர்கள். அவர்களுக்கு, ஆத்மஸ்துதி, பரநிந்தை, திரவியாபேக்ஷை முதலிய துர்க்குணங்களொன்றுங் கிடையவே கிடையாது. இவ்வள வனுகூலங்களிருக்கையில், நமது மாணாக்கருக்குச் சுவபாஷைகளில் ருசியற்றுப் போவது அக்கிரமம் தான். இதுநிற்க.

நாம் மேலே குறிப்பிட்டபடி இங்கிலீஷும் தேசிய பாஷைகளுமொரே காலத்தில் படித்து வருபவருக்கு ருசியிருவகைப்பட்டு, இங்கிலீஷில் மட்டும், சொற்சுவை, பொருட்சுவை சாமான்னியமா யறிவதல்லாமல், காவியங்களின் தாரதம்மியத்தையும், ரஸபேதங்களையும், வாசகபேதங்களையுமறிந்து ஆனந்திப்பதும், மற்றைய விஷயத்திலோ வெற்றெறும்பு ருசியதிகரிப்பதும் வாஸ்தவம். ஆதலாலிதற்குக்காரணத்தை நன்றாயறிந்து தகுந்த பரிகாரம் தேடுவது அவசியமாகவேண்டிய காரியம். அதைத் துஷ்ட பரம்பரையென்று மேலேசொன்னோம். அதன் தாற்பரியமின்னதென்று சற்று விவரிக்கவேண்டும்.

துஷ்ட பரம்பரையாவது, உத்தம கவிகளுடைய சம்பிரதாயங்களையும், உத்தம காவிய லக்ஷணங்களையும் மறந்து, தப்பான மார்க்கத்திற்போய், அரைகுறையாக நின்றிருப்பதேயாம். அதனால் காவிய விஷயத்தில் பௌருஷங்குறைந்து, சக்கையைச் சாரமாகக்கொள்வது சுவபாவமாக வரவேண்டிய தோஷமாம். ஆகவே உத்தம காவியங்களைநமக்குப் படிக்கச் சமயம் வந்தாலும், அதனால் நாமடையவேண்டிய பலனை யடைவதற்காவதில்லை. உதாரணமாக உத்தமக்கிரந்தங்களாகிய, சிந்தாமணி, சிலப்பதிகார முதலியவற்றைத் தமிழிலும், ரகுவம்சம், சாகுந்தலம் போன்றனவற்றைச் சம்ஸ்கிருதத்திலும் பரீக்ஷைக்குப் படித்தவரிலெத்தனைபெயர் அவற்றின் யோக்கியதையை யறியவேண்டியபடி அறிந்து, பின்னிட்டெப்போதாகிலு மானந்தமனுபவிக்கிறார்கள் ? வெகு அபூர்வமா யிரண்டொருவர்தானென்று தாராளமாய்ச்சொல்லலாம். இதற்கு வெற்றெறும்பு முறையாகப் பாடம்சொல்லுவதே காரணமென்பது தகும். அதாவது, கற்போருங் கற்பிப்போருஞ் சொல்லிலக்கணத்துடன் நின்றுவிடுவதாம். இச்சொல்லிலக்கணத்திலும், அணி முதலியன சம்ஸ்கிருதப் போக்கை யனுசரித்திருப்பதால், அப்பாஷையில் காவிய லக்ஷணங்களைக் கண்டறிந்த பெரியோர்களிவ்

விஷயத்திலென்ன சொல்லுகிறார்களென்று பார்க்கவேண்டும். அவர்களும், யாப்பு, அலங்கார முதலிய சொல்லிலக்கணமுறையுடன் நின்று விடுகிறார்களா, மேலே தாகிலுங் தெரிய வேண்டுமென்கிறார்களா வென்று விசாரிக்கவும் வேண்டும். அப்படிச் செய்வதில் நமக்கேதாகிலும் அபூர்வவிஷயங்களிரண்டொன்றகப்பட்டாலும் அகப்படும்.

முதலாவது காவியமின்னதென்பது, "ரஸத்தைப்பிராணனாக வுடைய வாக்கியம் காவியம்" என்பது அவரது முதற்கொள்கை. 'வாக்கிய' மென்றது, யாப்புவிதிகளுக்குக் கட்டுப்பட்டவைகளை மட்டுமன்று. "நெஞ்சம் புழுங்கினாலெவனுங் கவியாகி விடுகிறான்" என்பது பழைய அனுபவம். உதாரணமாக, ஒருகிராமத்திய தலையாரியொருவன் முன்னொருகாலத்தில், ஜமாபந்தி சமயத்தில் அஜூர் சிரஸ்ததாரிடத்தில் குறைசொல்லிக்கொள்ள வந்தான். அவர் என்னவேண்டுமென்றார். அதற்கவன், "சுவாமி, சர்க்கார்வேலை யெவ்வளவானாலுஞ் செய்கிறேன். தடையில்லை. ஆனால் மணியகாரன் வீட்டிற்குத் தினமும் ஐந்நூறு குடம் ஜலமிழுத்துக் கொட்டவேண்டிய தொருவேலை யிப்பொழுதேற்பட்டிருக்கிறது. அதுதான் ஆவதில்லை. ஐந்நூறு குடமென்றால் வாயும் நோகுமே", யென்றானாம். இதில் யாப்பொன்றுமில்லாவிட்டாலுங் கடைசியிற் காண்பது ரஸங்கூடிய வாக்கியமென்று சித்தாந்தம்.

நல்லது காவியமாயிற்று, ரஸமென்பதென்ன? வாசகமூலியமாய் நல்லறிவுடையோருக்குத்திருப்தியுண்டாக்குவதே ரஸமாம். ஆகவே ரஸமென்பது, இப்படிப்பட்டது, அப்படிப்பட்டதென்று தர்க்கயுக்திகளைக்கொண்டு நிரூபிக்கப்புகுவது பிசகாகும். சோகம், பயம், கருணை முதலிய அனுபவங்கள் மனிதருக்கெல்லாம் உரியனவாதலால் அந்த விஷயங்களைத் தக்கபடி வர்ணித்துக் கேட்போர் மனதிலவைகளுறைக்கும்வண்ணஞ் செய்வதே உத்தம கவிகளின் போக்கென்றறிதல் வேண்டும்.

ஆதலால் நமது குமாரர்கள் வருஷக்கணக்காக வுழைத்து, நிகண்டு, இலக்கண முதலியவற்றையுருவேற்றி, அலங்காரம் முடித்து, அத்துடனின்று விட்டால் அது அரைப்படிப்பென்றோ, அதிலுங் குறைந்ததென்றோ சொல்லவேண்டுமல்லது பாண்டித்தியம் முற்றியதாகச் சொல்வதற்கில்லை. ஏனெனில் யாப்பு, அணி முதலியன, கவிகளுக்கும், காவியங்கற்று வருவோர்க்கு மெவ்வளவு இன்றியமையாதனவாயினும், வாஸ்தவத்தை விசாரிக்குமிடத்து அவையெல்லாம் காவியத்தினுடைய ஸ்தூல சரீரத்தை மட்டும் அலங்கரிக்கும் துணிக்கவசத்திற்குச் சமதையே தவிர, அதிகமாகச் சொல்லிக்கொள்வதற்கில்லை. ஆகவே காவியத்திற்குப் பிராணநாடியாயுள்ளது ரஸப்பிரகரணம் என்பதிற் சந்தேகமில்லை.

"நல்லறிவுடையோருய்த்துணர்ந்து திருப்தியடைவதே ரஸ லக்ஷணம்," என்று நாம் மேற்கூறியதைச் சற்று விஸ்தரிக்கவேண்டும். இதனால் தெருவில் போகிறவனும், பசுவையொத்த புத்தியுள்ளவனும், ஜடஜந்துவும், தலையையசைப்பதில் பிரயோஜனமொன்றுமில்லையென்பது வெளியாகிறது. இதை யுத்தேசித்தே மகாகவி காளிதாஸசுவாமி சொல்லுகிறார். "நாடகவிஷயத்தில் (என்றால், ரஸவிஷயத்தில்,) எழுதுபவருக்கிருக்கும் ஞானம், சபையோராகிற நல்லறிவுடையோர் முற்றுமுணர்ந்து திருப்திப்படும்வரை, இருப்பதாகச் சொல்லுவதற்கிடமில்லை," என்கிறார்.



ஆனால், சிலர் ஆக்ஷேபிக்கலாம். "நல்லறிவுடையோர்" என்றால், ஊருக்கொருவர் தேறுவதுகூட அபூர்வமாதலால், இதெப்படிச் சாத்தியமாகும்? ஊரிலிருப்பவரெல்லாம் பூரணபண்டிதராகவேண்டுமானால், அது எந்த யுகத்திலுமில்லை, என்று. இது வாஸ்தவந்தான். ஆனால் காவிய ரஸமறிவதற்குப் பூரணபாண்டித்தியம் வேண்டுமென்று நாம் சொல்ல வரவில்லை. நல்லறிவு வேண்டுமென்றே நாம் சொல்லியதால், விவேகிகளிவ் விரண்டிற்கும்பேதம் வெகுவாயிருப்பதை யறிவாராக. முக்கிய ரஸங்களையறிந்து ஆனந்திப்பதற்குச் சாமான்னிய புத்தியும், கிருகஸ்த பரம்பரையும் போதுமானது. அது மட்டுமே யல்ல. ரஸமென்பது காவியத்திற்கென்றே யேற்பட்ட லக்ஷணமல்ல. சங்கீதம், சித்திரம், முதலிய சகல சிற்பங்களுக்கு மேற்பட்ட லக்ஷணமாதலால், சில சந்தர்ப்பங்களில், பசு, பக்ஷி முதலிய ஜந்துக்கள் கூட ரஸத்தை யறிந்து ஆனந்த மனுபவிக்கும். சங்கீத விஷயத்தில் நமது பெரியோர் சொல்லியிருப்பது பிரசித்தம். "கானரஸத்தைப் பசுவுமறிகிறது. சிசுவுமறிகிறது, சர்ப்பமு மறிகிறது," என்பது.

ஆனால் காவியரஸத்தை மனிதரொழிய வேறு பிராணிகளறிவதாக அனுபவத்திலில்லை. என்றாலும் நமது பெரியோர் சொல்வதையெல்லாம் உறைக்கச் சொல்லுவது வழக்கமாதலால், கதாஸரித்ஸாகரத்திலிவ்வாறு கதையொன்று காணுகிறது:—முன்னொருகாலத்தில் காஷ்மீர மகாராஜாவொருவர் பூரணவித்துவானென்றும், சம்மானிப்பவரென்றுங் கேட்டுக் குணாட்டியனென்னும் பிரபலகவியவரிடம் சம்மானம் பெறவேண்டுமென்று வெகுசிரமப்பட்டுப் பைசாச பாஷையிலொன்பது லக்ஷம் கிரந்தம் செய்துகொண்டுபோய்ப் பேட்டிசெய்துகொண்டார். மகாராஜா அவர் வேண்டியதைக் கேட்டுப் 'பைசாசபாஷையிலென்ன ருசியிருப்பதற்காகும்? உமது கிரந்தத்தைக் கேட்கவே வேண்டியதில்லை, நீர் போய்விடும்,' என்றாராம். இப்படிச்சொல்லவே யவரும் திரும்பிப்போய்க்கொண்டே மனங்கசந்து பலவிதமாகவு மெண்ணி, "அடடா, நமது கதியிவ்வாறாயிற்றே. கேவலம் பாமர ராஜாக்கள் நம்மை யவமானஞ்செய்தால் அதை நாம் லக்ஷியஞ்செய்ய வேண்டியதில்லை. இப்படிப்பட்ட அபூர்வவித்துவானாகிய மகாராஜா எப்பொழுது நமது கிரந்தத்தைக் கேட்காமலே யிகழ்ந்து விட்டாரோ, அதற்கு வாஸ்தவத்தில் யோக்கியதை யில்லாமலேதானிருக்கவேண்டும்," என்று சொல்லிக்கொண்டு இனி இதனால் நமக்காக வேண்டியதொன்றுமில்லை. இதைநாசமாக்கிவிடுவதே நலமென்று ஊருக்கடுத்த காட்டிற்போய்க் குழியொன்றுவெட்டித் தீவளர்த்தினார். பிறகு கிரந்தங்களை யதன்முன் வைத்துத் தானுமுட்கார்ந்து ஏடுகளைக் கிழிக்க ஆரம்பித்தார். மறுபடி யோசனை செய்து, ஒவ்வொன்றாக எடுத்து உரக்கப்படித்துவிட்டுப் பிறகு தீயிற் போட்டுக்கொண்டிருந்தார். அக்கிரந்தங்களின் மாதுரியத்தையும் ரஸவிசேஷத்தையு முணர்ந்து, சுற்றிலுமுள்ள பக்ஷி மிருகாதிகள் ஆனந்தித்துப் பரவசராகி, ஆகாராதிகளை மறந்து நிற்க விப்படிச் சிலநாளாகநடக்கு மதிசயத்தைமகாராஜாவறிந்தாச்சரியப்பட்டுத் தானும்வந்து மறைவில்நின்று, கொஞ்சம் கேட்டு ஆனந்த பரவசராகி, வித்து

வானே யபசாரக்ஷமை கேட்டுக்கொண்டு, மீதியிருந்த லக்ஷம் கிரந்தங்களைக் கேட்டுவாங்கிக்கொண்டு வித்துவானுக்கும்தக்க மரியாதை செய்தாரென்பது புராணக்கதை.

இதிலிருந்து நாமறியவேண்டுவது இது. சாமான்னிய ரஸங்களாகிய, கருணை, வீரம் முதலியவைகளை உத்தம கவிகள் புஷ்டிகரித்தால், பசு, பக்ஷிகளுக்குச் சமதையான கேவல ஜனங்களும் அதில் ருசியநிகரித்துத் திர்ப்தியடைவார்களென்பது. எவ்வளவிற்குப்பதப்பிரயோகமும், சக்கர முதலிய பந்தங்களும், அலங்காரக் கழைக்கூத்துகளும், பிரபலிக்கின்றனவோ அவ்வளவிற்கு ரஸம்குறையும். குறையவே காவியமும் யோக்கியதை குறைந்துவிடும். இதற்கு உதாரணம் வேண்டுமோ? ஆதி கவியாகிய பகவான் ஸ்ரீ வால்மீகியைச் சாக்ஷியாக்குகிறோம். ஸ்ரீ ராம சரிதத்தை மூலத்தில் வாசித்தவரை விசாரிப்போம். எச்சந்தர்ப்பத்திலெந்த ரஸம் வேண்டுமோ அதைச் சகல அங்கங்களுடனும், ஒரு லக்ஷணங்குறையாமலமைத்திருப்பதை யாருங்காணக் கூடுமல்லவா? இதை விஸ்தரித்தால் பெருகும். ஆதலாலதை வேறு சந்தர்ப்பத்திற்கு வைத்துக்கொள்ளுவோம். இப்பிரகிருதத்தில் நாம் சொல்ல வந்தது, இப்படிச் சகல லக்ஷணங்களுமமைந்த கிரந்தத்தைக் கிரமப்படி யறிந்து ஆனந்திப்பதற்குப் பூரண பாண்டித்தியம் வேண்டியதில்லை யென்பதே. மந்தரை கலைக்கக் கைகேசி பிசாசாகிக் கூத்தாடுவதும், சீதையை ராவணனபகரித்துப் போவதும், வாலிவதையில் நடந்த கோணல்களை, அவனும் தாரையுந் தூஷித்துக் காட்டுவதும், இந்திரஜித்துவின் மரண சந்தர்ப்பமுமிவை போன்ற சந்தர்ப்பங்களில், மூலத்தை வாசிப்பவருக்கும் கேட்போருக்கும், ரோஷம், துக்கம், ஆனந்தம், அசூயை முதலிய மனவிகாரங்கள் தாமாகவேயுண்டாகி அவ்வனுபவங்களைக் கிரமப்படி அவர்களடைவது, குழந்தைக்குங் கிழவனுக்குஞ் சமமாகவுள்ள அவஸ்தை. ஆதலாற்றான், பிற்பட்டுவந்த பண்டிதரத்னங்களுடைய யமக, சக்கரபந்த முதலிய அற்புதங்களெல்லா மெங்கேயோ குப்பைபோய்ச் சேர்ந்துவிட, ஸ்ரீராமாயணமட்டும் இந்தியாவிலேயிதுவரை பிரபலித்து வந்ததல்லாமல், ஐரோப்பா, அமெரிக்கா முதலியவிடங்களிலும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குச்சுகம் கொடுத்து வருகிறது.

இதை நம்மில் விஷயம் தெரியாத சிலர் வால்மீகி பகவானுக்குப் பிதாமகன் வரங்கொடுத்து வாழ்த்தியதால் வந்த பலனென்பதுண்டு. ஓ, விவேகிகளே, ராம கதையைப் பலபெயர் எக்காலத்திலும் பாடிவந்தது சகஜம். ஆனால் வால்மீகியின் கிரந்தமட்டும் இன்னும் மகிமை குன்றாமலிருப்பதற்கு வாஸ்தவத்தில் காரணமென்ன? வரமா? வரத்தினாலிவ்விஷயங்களிலென்னகிடைக்கும்? ராமாயணத்தில் வால்மீகியானவர், இருக்கவேண்டியபடி ரஸங்களையமைத்துப் பதப்பிரயோக முதலிய செப்பிடுவித்தைகளை யொழித்திராவிட்டால், பிதாமகனல்ல, பிறபிதாமகன் வரமளித்திருந்தாலும், நாளதுவரை யதற்கு யோக்கியதையிருந்து வராதென்பதை நிச்சயமாய்க் கொள்ளுங்கள். அப்படியே தான் வரம்பெற்றதாகச் சொல்லும் மற்ற கவிகள் விஷயத்திலும். காவியத்திலுள்ள யோக்கியதையை யனுசரித்தேதான் அதற்குச் சிரஜீவித்துவம் கிடைப்பது.



ஆகையால் வால்மீகியும், அவரைப்போன்ற உத்தம கவிகளும், எந்த நாட்டாராயினும், எந்தப் பாஷையிலெழுதியவராயினும், போகும் போக்கு ஒரேவகைப்பட்டதென்பதையிஷ்டராறிதல் வேண்டும். கழைக்கூத்திலிவருக்குப்பிரியமேயில்லை. தாற்பரியமும், ரஸமுமிவருக்குமுக்கியமேயன்றிச் சிலேடையும், யமகமுமன்று. இவர் வாக்கில், "யாகாகாயா யாகாயா," என்றும், "விக்கா வுக்கா வித்தாவிப் போய்," என்றும் வாக்குச்சாமான்னியமாய் உதிக்காது. "மடியை மடியா வொழுகல், குடியைக் குடியாக வேண்டுபவர்," என்பதுபோலத் தானுதிக்கும். இவ்விரண்டு கக்ஷிக்குமுள்ள தாரதம்மியத்தை நல்லறிவுடையோர் உய்த்துணர்வாராக.

இப்படிச் சொல்லியதனால், பெரிய விருத்தங்களையும், அவைகளை யனுசரித்துள்ள வேறுசில லக்ஷணங்களையும், நாம் கண்டித்ததாகத் தாற்பரியங்கொள்ளக்கூடாது. விருத்தம் எதுவாயிருந்தாலும், விஷயம் எதுவாயிருந்தாலும், உத்தமகவிகள் போக்குக்கும், அதம கவிகள் போக்குக்கும் வெகு பேதமிருப்பதையே விளக்கவந்தது. முரட்டுக் கவிகள் வாயைத் திறந்தால் முரட்டுப்போக்கு ஒன்றொழிய வேறொன்றுங் காணாது நிச்சயம்.

ஆகையால் நமது குமார நண்பரை நாம் கேட்டுக்கொள்வது ஒன்றேதான். நிகண்டும், இலக்கணமும், தண்டியலங்காரமும் படித்தானவுடன், பாண்டித்தியம் பூரணமாகிவிட்டதாக நீங்கள் நினைக்கவேகூடாது. ரஸப்பிரகரணத்தையுங் கொஞ்சம் படித்துச் சிந்தித்து, அவ்விஷயமாகவுங் கொஞ்சமுழைத்து ருசியை வர்த்தித்துச் சுகப்படுங்கள். இதையுத்தேசித்தே இச்சஞ்சிகையிற் கூடும்போதெல்லாம் சிறிது சிறிதாகச் சம்ஸ்கிருதத்தில் விசேஷமாகக் கீர்த்திபெற்றிருக்குமிரண்டொரு மகான்களுடைய கிரந்தங்களை ஆதாரமாகக்கொண்டு ஏதோ தெரிந்தவரையெழுதி வருவதாயுத்தேசமிருக்கிறது. லக்ஷணங்களை மட்டும் நாம் சொல்லிவிட்டால் போதாதது வாஸ்தவம். ஆனாலவற்றிற்குத் தமிழிலிருந்து உதாரணம் வரவழைப்பது நமக்குச் சாத்தியப்பட்டதன்று. தொல்காப்பிய முதலிய பழையகிரந்தங்களைக் கற்று மேன்மையடைந்திருக்கும் தமிழ் வித்துவான்களில் யாரேனும் பெரிய மனதுடன் அக்காரியத்தைச் செய்யக் குதூகலப்படுவாரென்று நம்பி நாமிதைச் செய்யத் துணிந்தோம்.

ரஸமென்பதை மேலே நாம் விளக்கியதைக் கவனிப்பவருக்கு, அது மானுஷியமான அனுபவத்தை யாதாரமாகக்கொண்டு உண்டாகிய சாஸ்திரமென்பது வியக்தமாகக் காணும். ஆதலாலிச் சாஸ்திரம் விவேகிகளெல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்கது மேனாட்டுக் கவிகளுக்கும், லக்ஷண வித்துவான்களுக்கும், 'ரஸப்பிரகரணம்' என்றுதனித்ததோர் ஸ்மிருதியின்னுமேற்படவில்லை. ஷேக்ஸ்பியர் நாடகங்களையும், மற்றகவிகளனேகருடைய கிருதி லக்ஷணங்களையும் பற்றி யெழுதிய புஸ்தகங்கள்மட்டும் ஆயிரக்கணக்காய் இருக்கின்றனவேயொழியப் பரீக்ஷைக்காகப் படிக்கு மாணாக்கர்களுக்கு ருசியுண்டுபண்ணக் கூடியதும், ஏதாகிலும் ஒரு கிரமத்தை யனுசரித்துப் போவதும், வெகு அபூர்வம். மாணாக்கரெல்லோரும், இது வாஸ்தவந்தானென்று ஒப்புக்கொள்ளக்கூடிய முதற்பிரமாணங்களே யின்னுந் தர்க்கத்திலிருக்கின்றன. ஆதலாலவரவர் மனோதருமம் போன

மூதியிருப்பதில், படிப்பவருக்கு, அதிலும் இந்நாட்டு வித்தியார்த்திகளுக்கு, இதனாலுண்டாகும் சிரமம் இவ்வளவென்றில்லை; என்றாலும் மொத்தத்தில், இங்கிலீஷ் காவியபாடம் சொல்லுபவர் நமது பண்டிதரை விட மேற்பட்டவராதலால், நமது குமாரர்களுக்கு இங்கிலீஷ் காவிய நாடகாதிகளில் ருசியும், பக்தியுமதிகமாயிருப்பது அதிசயமல்ல. ஏனெனில், நமது பண்டிதர்கள் சாமான்னியமாயென்ன செய்கிறார்கள்? கிரந்தத்தை முதன் முதலெடுக்குங்கால் கிரந்த கர்த்தாவைப் பற்றியாவது அல்லது காலதேச வர்த்தமானத்தைப் பற்றியாவது பேச்சில்லை. அதுதான் எல்லோருக்கும் துர்லபமென்று வைத்துக்கொள்ளுவோம், இத்தன்மையது இக்காவியம், இன்ன விஷயம், இன்னரஸம், முதலிய பகுப்புகளில்லாமலேன் போகவேண்டும்? அவதாரிகையென்றில்லாமல், புஸ்தகத்தையெடுத்ததும் முதற்பாட்டைப்படிப்பதும், ப. உரை, பொ. உரை, க.உரைகளை முறையே சொல்லிவிட்டுச், சொல்லிலக்கண விசேஷங்களையும், சில சமயங்களிலணிவகுப்பையுங் குறிப்பிட்டு, மேலே போய்விடுவதும் வெகுநாளைய மாமூலாகிவிட்டது. பாட்டையொருமுறையிவ்வாறு 'முடித்து' விட்டால், மறுபடியதைக்கொண்டு கற்பவருக்குங்கற்பிப்போருக்குமாகவேண்டிய தொன்றுமில்லை.

இங்கிலீஷ் பண்டிதரோ இவைகளையெல்லாஞ் சொல்லுவதன்றி முதன் முதலவதாரிகையும், பிறகு கிரந்தம் முடிந்தபின் அதற்குள்ள பொது லக்ஷணங்களையும், சிறப்புலக்ஷணங்களையும் விளக்கி, உதாரணங்களுடன் ரஸவிசேஷங்களையும் போதித்து விடுவதால், நல்ல பண்டிதரிடம் படித்தவருக்குப் பின்னெக்காலத்திலும் அந்த வாசனையிருந்து கொண்டே வருகிறது. இதில் அதிசயமொன்றுமில்லையல்லவா?

சம்ஸ்கிருதத்திலும் இக்குறைவுகளிருந்தே தான் வருகின்றன. சாகுந்தலத்தையாவது, ரகுவம்சத்தையாவது பாடஞ்சொல்லுபவரெத்தனை பெயர், ரஸங்களை விளக்கிக் காட்டுகிறார்கள்? அதனால் பின்னர் எக்காலத்திலும் நினைத்து ஆனந்தப்படவேண்டிய சுலோகங்களும், பிரகிருதங்களும் ருசியென்பதே காணாமல் சப்பையாய்ப் போவதில் என்ன ஆச்சரியம்?

இனி ரஸங்களுடைய பெயரையும் வரன்முறையையுஞ் சுருங்க வுரைத்து இந்த அவதாரிகையை முடித்துவிடுவது யுக்தமாகக் காணுகிறது. ஏனெனிலிப்போதே இது வெகுதூரம் வளர்ந்துவிட்டதாகச்சொல்லவேண்டும்.

மனோவிகாரங்களை யாதாரமாகக் கொண்டிருப்பதில் ரஸத்தை நமது பெரியோர் சில கூறுகளாகப் பிரித்து, அனுபவத்தை யனுசரித்து அவைகளுக்குப் பெயரும் முத்திரையுமிட்டிருக்கிறார்கள். அவைகள் எட்டென்று சிலரும், ஒன்பதென்று சிலரும், பத்தென்று சிலரும், சொல்லி வாதிப்பதுண்டு. ஆனால் சாமான்னியமாய் நாடகத்திற்கு எட்டும், காவியத்திற்கு ஒன்பதும், எல்லோருமொப்புக்கொள்ளத்தக்கது. அவைகளுக்கு முறையே சிங்காரம், வீரம், கருணை, அற்புதம், பயானகம், ஹாஸ்யம், வீபத்ஸம், ரௌத்திரம், எனப் பெயர். இரண்டொன்று தவிர மற்ற பதங்களெல்லாம் சாமான்னியமாய்த் தெரிந்தவைகளேயாம். ஒன்பதாவதான 'சாந்திரஸம்' நாடகத்தில் பிரயோகப்படவேண்டுமானால் அதற்குச் சபிகர்கள் ஜிதேந்திரியரான நாரதாதி முனிவர்களேயாதலால், அதைமட்டும் அவ்விஷயத்திற்கு ஒதுக்கியிருப்பது சிஷ்டாசாரம்.

[இன்னும்வரும்]



## சாரித்திரகாண்டம்

### 1858-ம் ௵த்திய மஹாசாஸனம்

ஸ்ரீ பகவத் பிரசாதபலத்தினால் கிரேட் பிரிடன், ஐர்லாந்து ஆகிய விரண்டுமடங்கிய ஐக்கிய ராச்சியத்திற்கும், அந்தத் துரைத்தனத்திற்குட்பட்டு, ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆகிய வெல்லாக் கண்டங்களிலுமுள்ள காலனிகள், டிபெண்டன்ஸிகள், முதலியவற்றிற்கும் ராணியாகித் தருமபரிபாலனஞ் செய்துவரும் விக்டோரியா (தேவியவர்களிதனாலறிவிப்ப தென்னவென்றால்,)

இதுவரை கனம் ஈஸ்டு இந்தியாகம்பெனியார் நமக்காகத் துரைத்தனம் செய்து, இந்தியாவில் நமதாளுகைக் குட்பட்டுள்ள ராஷ்டிரங்களைப் பாலித்து வந்ததில், இப்போது அனேக பலத்த காரணங்களை முன்னிட்டு, நமது பார்லிமெண்டில் கூடியிருக்கும் வைதிகலௌகிகப்பட்டவர்த்தனருடையவும், மகாஜனங்களுடையவும், பரியாலோசனையை யனுசரித்து, மேற்படியாரனுமதியின்பேரில், இனியவைகளை நாமே ரூபரூபிலாண்டு வருவதாகத் தீர்மானித்திருப்பதால்,

அதுகொண்டு,நாமிதனால்(இந்தியாவிலுள்ள) சகல ஜனங்களையும் பகிரங்கமாயெச்சரித்துக் கூறுவதியாதெனில், மேற்கூறிய இந்த ராச்சியபாரத்தை நாமின்றுமுதல் மேற்படி பார்லிமெண்டாருக்கு அபிமதமாகி, மேற்படியார் சம்மதங்கொடுத்ததை யனுசரித்து, மேற்குறித்தபடி ரூபரூபில் வகித்துக்கொண்டிருக்கிறோம். ஆதலால் மேற்கூறிய ராஷ்டிரங்களில்,நமதாளுகைக் குட்பட்ட பிரஜைகள் யாவரும் நம்மிடத்தில் பக்திவைத்து, நமது துரைத்தனத்திற்குட்பட்டு நடக்கும்படிக்கும், அப்படியே நமக்குப் பின்னிந்த ராச்சியபாரத்தை வகிக்கும் நமது புத்திரர் பௌத்திரர் முதலியோரிடத்தும் ராஜபக்திவைத்து நாணயமாய் நடந்து வரும்படிக்கும், மேற்படி ராஷ்டிரங்களில் (துரைத்தனம் நடந்துவரவேண்டி) நமக்குப் பிரதிநிதியாய் அப்போதைக்கப்போது அதிகாரம் வகிக்கும்படி நாம் நியமித்தருளும் ராச்சியதுரந்தரரான உத்தியோகஸ்தருக்குக் கீழ்ப்படிந்து நடந்துவரும்படிக்கும், இதனாற் கற்பனை செய்தருளியிருக்கிறோம்.

பிரகிருதத்தில் நமக்கு வெகு விசுவாசபாத்திரமாயும், சோதரீய சினேகமுமுள்ள, விகௌண்டு கானிங்கு பட்டவர்த்தனராகிய ஸ்ரீமான்-சார்லஸ் ஜான் இ . த் கல் ராஜபக்தியும், ஆளுந்திறமும், விவேக முதலிய நற்குணங்களு மெல்லாமிருப்பது நமக்குறுதியாய்த் தெரியுமானது பற்றி, அவரிடத்தில் விசேஷ நம்பிக்கை வைத்து, மேற்படி விகௌண்டு கானிங்கு ஆகிய அவரை மேற்படி ராஷ்டிரங்களை ஆண்டுவருவதற்காக முதல் ராஜப்பிரதிநிதியாகவும், கவர்னர் ஜெனரலாகவும் நியமித்து நமக்குப் பிரதியாகத் துரைத்தனம் நடத்திவரும்படியிதனால் கற்பனைசெய்தருளியிருக்கிறோம். ஆகவே, இராஜாங்கவிஷயமாய் நடக்கவேண்டிய சகல காரியங்களிலும், நம்முடைய சமஸ்தான முக்கிய செக்ரெடேரிகளிலொருவர் மூலமாயப்போதைக்கப்போது அவருக்குக் கிடைக்கு முத்தரவுகளுக்கும், நிபந்தனைகளுக்கு முடன்பட்டுச் சாமான்னியமாய் (மேற்படி ராஷ்டிரங்களி)லாகவேண்டிய சகல்காரியங்களையும் நமது பெயரால்,நமக்காக நடத்திவருவதற் கவருக்கிதனாலதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(தவிர) மேல் நடக்கும் நடவடிக்கைகளில், நமது திருவுள்ளத்தை யனுசரித்தும், இனி மேல்ஜாரிக்குவரும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தும், நடப்பதாகவொப்புக்கொள்ளவேண்டிய நிபந்தனையொன்றுக் குடன்படுத்தி, நானது தேதியில் கனம் ஈஸ்டு இந்தியா கம்பெனியாருடைய கைங்கரியத்திலமர்ந்துழைத்து வரும் சிவில், மிலிடேரி இருவகை யுத்தியோகஸ்

ரையும், இதனுலவர்கள் பார்த்து வருமலுவல்க
ளிலேயே நாம் காயமாக்கியிருக்கிறேம்.

இந்தியாவில் நாளதுவரை அரசாட்சி செலு
த்திவரும் மகுடவர்த்தனர்களுக்கு நாமிதனுல்
தெரிவிப்பதியாதெனில்,கனம் ஈஸ்டு இந்தியாக
ம்பேனியாராலாவது அல்லது மேற்படியாரிடம
திகாரம்பெற்று அவ்வதிகாரத்தரபில் (வேறு
ஜனங்களாலாவது)மேற்சோல்லிய மகுட வர்த்த
னருடன் நடந்தேறி யிருக்கும் சகல உடன்படி
க்கைகளையும், ஒப்பந்தங்களையும், நாமிதனுல் அங்கீ
கரித்து, அவைகளையெல்லாம் (நம்மைப்போறுத்த
மட்டில்) வெகு ஜாக்கிரதையாய்ப் பரிபாலனஞ்
செய்வதாகச் சங்கற்பித்திருக்கிறேம். ஆதலால்
அம்மகுடவர்த்தனர்களும் தங்களைப் போறுத்தம
ட்டில் அவ்வாறே வாக்கிய பரிபாலனஞ்செய்ய
வுள்ளவர்களேன்பதை யறிதல் வேண்டும்.

இப்போது நமதாளுகைக் குட்பட்ட ராஷ்
டிரங்களுக்குப் (பிறருடைய சொத்துக்களை)
யபகரித்துப் பெருக்க வேண்டுமென்னுமாசை
நமக்குச் சிறிதுமில்லை யாதலால், ஒரு பக்ஷம்,
நமது ராஷ்டிரங்களில் பிரவேசித்துத் துராகி
ருதஞ்செய்ய, அல்லது, நமதுரிமைகளுக்குக்
கேடு விளைவிக்க, யாரேனும் வருவாராகிலவர்
களுடைய அதருமத்திற்குப் பதில் செய்தே
தான் தீருவோமாக, மற்றைய பக்ஷத்தில், நா
மோ,அன்னியருடைய ராச்சியம்,உரிமையிவை
கள் விஷயத்தில் நமதுத்தியோகஸ்தர் மூலமா
ய்ச் சிறிதாகிலும் அக்கிரமம் நடக்கவொட்
டோமென்பதைச் (சம்பந்தப்பட்டோ ரெல்
லோரு) மறிதல் வேண்டும்.

(மேலும்) பட்டவர்த்தனர் மகுடவர்த்தன
ராகிய (இந்தியப்) பிரபுக்களேல்லா ருடையவும்
பதவிகள், உரிமைகள், மரியாதைகள் ஆகிய
விவைகளை நம்முடையவைபோலவே பாவித்துக்
கௌரவப்படுத்தி வருவோம். தவிர இப்பிரபுக்
களும், நமது ராஷ்டிரத்தில் நமதாளுகைக் குட்
பட்டுள்ள பிரஜைகள் சகலரும், தேசத்தில் கல
கமுதலியனவில்லாமல், அவரவர் தத்தங்காரி
யங்களி லமர்ந்து, துரைத்தனமும் கிரமமாய்
நடந்தேறிவரும் சௌமியதசையில் மட்டுமே
யடையக்கூடிய மங்களங்களைப் பெற்று, மேலு
மேலு மபிவிருத்தியடைந்து ஆனந்தானுபவிக
ளாயிருக்க வேண்டுமென்பது நம்முடைய அபீ
ஷ்ட மெனக்காண்க.

நமதாளுகைக்குட்பட்டு (பூமண்டலமெங்குங்
காணும்)இதர ராஷ்டிரங்களிலுள்ள நமது பிரஜை
களுடைய க்ஷேமநிமித்தம் எவ்வெவ்விதமாக
வெல்லாம் நடத்திவர வேண்டிப் போறுப்புக்
கோண்டிருக்கிறேமோ, அவ்வாறே தாரதம்மி
யஞ் சிறிதுமின்றி இந்தியாவிலுள்ள நமது பிரஜை
களுடைய க்ஷேமநிமித்தமாயும் நடத்திவரக் கட்
டுப்பட்டிருக்கிறேம். இவ்விஷயத்தில் மேற்படி
யிருகக்ஷியாருக்கும் பாரபக்ஷ மென்பதே யில்லா
மல் நடப்பதை நாம் விரதமாகக் கோண்டிருப்ப
தால், அந்தத் தருமத்தைச் சருவேசுவரனருளை
முன்னிட்டு, நியாயத்திற்குட்பட்டும், மனச்
சாக்ஷிக்கு விரோதமின்றியும் பரிபாலனஞ்
செய்து நிறைவேற்றுவதாகத் தீர்மானஞ் செய்
திருக்கிறேம்.

கிறிஸ்துமதச் சித்தாந்தத்தை நமக்குச் சந்
தேகஞ் சிறிதுமின்றி, மதவிஷயத்தில் பிரமா
ணமாகக்கொண்டு, தம்மிடத்தில் பக்தியுடனி
ருக்கும்படிக்கும், அப்பக்திவிஷயத்தில் புத்தி
யைச்செலுத்திச் சுகமடையும்படிக்கும், பிர
சாதித்தருளிய ஸ்ரீ பகவானிடத்தில் கிருதக்ஞ
தையுட னிருப்பதை நாம் பகிரங்கமா யொப்
புக்கொள்ளுகிறேம். என்றாலும், நமது மதத்
தைப் பிரஜைகளில் யாராவது அனுசரித்தே தீர
வேண்டுமேன்று நிர்ப்பந்திக்க ஆசையுமில்லை;
அப்படிச்சேய்வதற் கதிகாரமும் நாம் வகித்துக்
கோள்வதில்லை. இம்முரட்டுத்தனத்திற்கும்
நம்முடைய மனோதருமத்திற்கும் வெகுதூரம்.
ஆகவே, நாமிதனுல் சகலருக்கும் இவ்விஷயமா
யறிக்கையிடுவதி யாதெனில், மதபேதத்தையா
வது, ஆசார பேதத்தையாவது காரணமா



கக்கொண்டு, நமது பிரஜைகள் யார் விஷ
யத்திலும் பாரபக்ஷமான நடவடிக்கை
காண்க்கூடாதென்றும், யாருக்கும் நன்மை
யோ, தீமையோ, பயமோ, சம்பவிக்கக்கூடா
தென்றும், நம்முடைய அபீஷ்டமும் சங்கற்
பமுமென்றறிய வேண்டுவதாம். நாம் தரும பரி
பாலனஞ்சேய்து வருவதில், மகா ஜனங்களுள்
யாவருக்கும் பாரபக்ஷஞ் சிறிதேனுங் காணுமல்,
சமஸ்தமான ஜனங்களுமோருமுகமாய் க்ஷேமமே
யடையவேண்டுமேன்பது நமது முக்கிய கோறிக்
கை. ஆதலால் நம்மிடத்திலதிகாரம் பெற்றுக்
கைங்கரியஞ் செய்துவரு முத்தியோகஸ்தர்க
ளெல்லோருக்கு மிதைப் பொறுத்தமட்டில்
விசேஷ ஜாக்கிரதையுடன் நடந்துவரும்படிக்
கும், பிரஜைகளுடைய மதசித்தாந்தங்கள், மதா
சாரங்களாகிய இவ்விஷயங்களில் தாங்கள்
யாது காரணங்கோண்டும் பிரவேசிக்கவே கூடா
தேன்றும், அப்படி யாராகிலுஞ் செய்வார்களாகி
ல் நமது கடுங்கோபத்திற்கு இலக்காவார்களெ
ன்றும், இதனுல் கண்டிப்பாயுத்தரவளித்தி
ருப்பதை யவரறிவாராக.

தவிர நமது பிரஜைகளில் யாரையும் ஜாதி,
மதம் ஆகிய இக்காரணங்கோண்டு உயர்த்தவா
வது தாழ்த்தவாவது செய்யாமல், வித்தை, சக்தி,
நாணயம் ஆகிய இக்குணங்களுடன், உத்தியோ
கங்களைப் பெற்று நிர்வகிக்கவேண்டிய யோக்கி
யதையொன்றை மட்டுமே காரணமாகக்கோண்டு,
சாத்தியப்பட்ட மட்டிலவர்களைத் தாராளமாயும்
பாரபக்ஷமில்லாமலும், நமது கைங்கரியத்திலம
ர்த்தி, ராச்சியகாரியங்களைப் பார்த்து முன்னுக்கு
வரும்படி சேய்யவேண்டுமேன்பதும் நமது பெரிய
கோறிக்கை.

இந்தியாவிலுள்ள மகாஜனங்களுக்குத் தங்
கள் மூத்தோர் தேடிக்கொடுக்கப் பெற்றிருக்
கும் பூஸ்திதி விஷயத்திலெவ்வளவருமை யிரு
க்கிறதென்று நமக்குச் செம்மையாய்த் தெரி
யும். அது மெத்தவும் சிலாகிக்கத்தக்கதென்றே
நமக்கும் அபிப்பிராயம். ஆதலால் இராஜ காரி
யம் நடந்து வரவேண்டியவளவிற்குக்கிரம
மாய்ச்சர்க்காருக்குள்ள கிஸ்துவகைராக்களைச்
செலுத்தி வரவேண்டியதாகிய ஒரு நிபந்தனை
க்குமட்டும் கட்டுப்படுத்தி, பூஸ்திதியிலவரவர்க
ளுக்குள்ள மற்ற சகல சுவதந்திரங்களையும்
குறைவுபடாமல் பாலித்து வரவேண்டுமென்
றும், இனிப்பூஸ்திதி விஷயமாயேற்படும் சட்
டங்களை நிரூபித்து, ஜாரிக்குக் கொண்டுவருவ
தில், இந்தியாவில் பிராசீனமாக ஏற்பட்டு
ள்ள உரிமைகள், பதிவுகள், ஏற்பாடுகள் முத
லியவைகளுக்குச் சிறிதும் சேதம்வாராமற் பார்
த்துக்கொள்ள வேண்டுமென்பதும், நமது திரு
வுள்ளமாம். * * * *

இப்பத்திரத்திற்கண்ட ஷரத்துகளுக்குடன்
பட்டு அடுத்துவரும் ஜனவரி௴ 1-தேதிக்குள்
வழிக்கு வருபவர்களெல்லோருக்கும் நாமத
யைகூர்ந்தருளிய விந்நன்மைகள் கிடைக்க வே
ண்டுமென்பதும் நம்முடைய அபீஷ்டம். ஈசுவ
ரகிருபையினுல் இந்தியாவில் கலகமூற்று மடங்
கித் தேசம் பழையபடிக் கல்லியாணக்
கோலங்கோண்டு விளங்குகையில், (நமது
துரைத்தனத்தினுல்) நாட்டுவள மதிகரிக்க முயல
வேண்டுமேன்பதும், மகா ஜனங்களுக் குபகாரமா
கக் (குளம், வாய்க்கால், சத்திரம், சாலை முத
லிய) சிற்பகாரியங்களைச் சேய்ய வாரம்பிக்க
வேண்டு மேன்பதும், நமது பிரஜைகளாகிய
சமஸ்தமான ஜனங்களுக்கும் ஹிதகரமாய்ச்
செங்கோல் சேலுத்தி வரவேண்டு மேன்பதும்,
நமது மனதில் பலத்துப் பதிந்துள்ள கோறி
க்கை. (ஏனேனில்) நமது குடியுயர, நாமு
முயருகிறேம்; அவர் திருப்தராக, நமக்கும் விசார
மற்றுப் போகிறது; அவர் நன்றி மறவாராக, நமக்
கும் (ராச்சிய) பாரம் வகித்ததின் பலன் நிறை
வேறுகிறது. ஆகவே நமது பிரஜைகளுடைய
க்ஷேமத்திற்காக மேற்கொண்ட விம்மனோரதங்
களைக் கிரமமாக நடத்தி முடிக்கவேண்டிய
யோக்கியதையை, நமக்கும், நமதாக்ஞைக்குட்
பட்டுக் கைங்கரியஞ் செய்துவரும் உத்தியோ
கஸ்தரனைவருக்கும், சருவசக்தரான பகவான
னுக்கிரகித்தருள்வாராக.

## 2. ஸ்ரீபுத்த பகவானுடைய எலும்புகள்

எடிட்டர்.

சுமார் 2400 வருஷங்களுக்குமுன் வட இந்தியாவில், நேபாள சீமை யெல்லையில் 'சாக்கியர்' என்று ஒரு கூட்டம் பூஸ்திதிமான்களான பிரபுக்களிருந்தார்கள். பிரபுக்களா யிருப்பவரெல்லாம் நல்ல பரம்பரையா யிருந்தால் அதைப்பற்றிப் பெருமைப்படுவது உலகத்திலெங்கும் சகஜம். இந்தச் சாக்கியருக்குள் ஒருஜதீகமுண்டு—அதாவது,தாங்கள் இக்ஷுவாகு வம்சத்தவரென்பது. இந்த வம்சமோ ஸ்ரீ ராமனுடைய அவதாரத்தினால் வெகு கீர்த்தி பெற்றது. ஆதலாலிதில் சம்பந்தமிருந்ததுகொண்டு சாக்கியருக்கும் சுற்றியிருந்த ஜனங்கள் மரியாதை வைத்து வந்தார்கள்.

இப்பிரபுக்களில் பெரிய தனக்காரராக அக்காலத்தில் சுத்தோதன ரென்றொரு ஸ்ரீமானிருந்தார். அவருக்கு அருமைக்குழந்தையாக ஒரு பிள்ளைபிறந்து அதற்குக் கௌதமன் என்றுபெயரிட்டிருந்தார்கள். காலக்கிரமத்தில் இப்பிள்ளைக்கு விவாகமாகி யொரு குழந்தையும் பிறந்தபிறகு, இருந்தாற்போலிருந்து அவருக்குப் பெண்டு பிள்ளைகளின்பேரிலும், காசு பணத்தின்பேரிலும், அதிகார முதலிய டாம்பிக விஷயங்களிலும் வெறுப்புண்டாகிவிட்டது. உடனே அவர் எல்லோரையும் தொலைத்துவிட்டு வெளியே இறங்கிப் போய்விட்டார்.

இப்படி யெத்தனையோ பெயர் அவருக்கு முன்னும் பின்னும் காஷாயத்தைத் தரித்துச் சந்நியாசிகளாயிருக்கிறார்கள். சிலர் இந்து சம்பிரதாயப்படி நாற்பது,ஐம்பது வயதானபிறகு குடும்பரக்ஷணை முதலிய பாரங்களை வேண்டுமென்றொழித்துவிட்டுத் தபசிகளாக விருந்து கட்டையை யொழித்திருக்கிறார்கள். சிலர் வேதாந்த சாஸ்திரங்கற்றுச் சந்நியாசிகளான பிறகு சிஷர்களுக்குப் பாடம் சொல்லிக் காலங் கழிப்பதுண்டு. பாலியத்தில் சந்நியாசியாவது இந்து சாஸ்திரத்தில் சிரேஷ்டமாக வெடுக்கவில்லை. இது சாதாரணம். ஆனால் மகா புருஷர்களுக்கு இந்த நியமமேற்படவில்லை.

வீட்டில் நடந்த வுபசாரங்களொன்றும் ருசிக்காமல் வெளியே யிறங்கின கௌதமனுக்கு இன்னது செய்வதென்று முதலில்நிஷ்கரிஷைப் படவில்லை. அக்காலத்திலனேகர் யோகமென்கிற பெயரையிட்டுப் பலவிதமாகத் தேகத்தை யுபத்திரவித்துக் கொள்வதுண்டு. சிலர் எப்போதும் வெய்யில், மழை, காற்று முதலியவற்றை லக்ஷியஞ்செய்யாமல் மரத்தடிகளிலும், சிலர் எப்போதும் ஜலத்திலும், சிலர் அக்கினிக்குச் சமீபத்திலும், நின்றும், உட்கார்ந்தும், வேறு விதமாக ஆசனங்களிட்டுமிருந்து, நெடுநாளைக்கப்புறம் ஏதோ சித்தியடையலாமென்று உடம்பை இம்சித்து வந்தார்கள். அவர்கள் மத்தியில் இவருஞ் சிறிதுநாளிருந்து அப்படியேசெய்து வந்தார். ஆனால் அது மனதுக்குச் சரிப்படவில்லை. உடம்புமட்டும் எலும்புந்தோலுமாயிற்றே தவிர வேறு உபயோகங் காணவில்லை.

தனிகர்களான சிலர் இம்மையிலும் மறுமையிலு நன்மையடைவோமென்று நம்பி, ஆடுமுதலிய ஜந்துக்களைவதைத்து யாகங்களென்று செய்துவந்தார்கள். ஆனாலப்படிச் செய்வதில்பயனொன்றுமில்லை யென்றும், அவரவர் பாபபுண்ணியங்களை யவரவரே யனுபவித்துத்தீர்க்கவேண்டுமென்றும், ஞானிகளான சிலரிஷிகள் சொல்லி வந்திருந்ததால் கௌதமனுக்கு ஆதிமுதல் அம்மாதிரி செய்வதிலிஷ்டமேயில்லை.

ஆதலாலிப்படிப் பலவிதமாகவுஞ் சிந்தித்தும் அனுஷ்டித்தும் வந்ததில் ஒன்றும் பலனில்லாமற் போகவே, இனியிவைகளொன்றிலும் பிரயோஜனமில்லையென்று நிச்சயித்துக் கடைசியாக வொருநாள் கயைக்கருகில் ஒரு



பர்மா. இந்துஸ்தான். லங்கா.

ஸ்ரீ புத்த விக்கிரகங்கள்.

மரத்தடியிலிருக்கையில் பளிச்சென்று ஒரு சங்கதியவருக்கு வெளியாயிற்று. அன்றுமுதல் அதை யெல்லாருக்கும் விளக்கிச் சிஷ்ய ஜனங்களைச்சேர்த்து நாடெங்கும் போய் உபதேசஞ் செய்து எல்லோருக்கும் சுகமடைய வழி காட்டுங்களென்று அனுப்பினார்.

அந்தச் சங்கதி புதிதன்று. மேலே நாம் சொல்லியபடி யாகாதிகளைத் தூஷித்துப் பேசிய ஞானிகளான ரிஷிகள், உபநிஷத்துகள் என்ற வேத பாகங்களில் இதை வெகு நன்றாய் விளக்கித்தானிருந்தார்கள். என்றாலும் சாமான்னியர்களுக்கு இது தெரியாதாகையாலும், கௌதமன் மூலமாயிது பரவியதாலும், இதற்கு வேறு பெயர் ஏற்பட்டது. இந்தச்சங்கதி மனதிற்குப் பட்டவுடன் கௌதமன் "நான் தத்துவத்தை யறிந்துகொண்டேன்" என்று பொருள்படும் 'புத்தன்' என்றபதத்தைத் தனக்கு உபயோகப்படுத்திக் கொண்டார். ஆகவேயிந்த மதத்திற்குப் 'பௌத்தமதம்' என்றும், இதையனுசரித்தவருக்குப் 'பௌத்தர்' என்றும் பெயராயிற்று.

யாகங்களினாலாவது, போகங்களினாலாவது அடைவதொன்றுமில்லையென்று கௌதமனுக்குப்பட்டவுடன், அவர் இவ்வுலகத்தில் சிலர்கஷ்டப்படுவதற்குஞ் சிலர் சுகப்படுவதற்குங் காரணமென்னவென்று யோசித்தார். கடைசியில் அவரவர் கர்மமேயிதற்குக் காரணமென்றுகண்டது. ஆதலால், "சற்கருமத்தைச் செய்யுங்கள்; அகங்கார முதலிய துர்க்குணங்களை நீக்குங்கள்; இப்பிரபஞ்சத்தில் மனிதனனுபவிப்பதெல்லாம் துக்கமேயொழிய வேறில்லை; கண்ணிற்காணுவதெல்லாம் நாசமாகிப்போவதேயொழிய நித்தியமானதொன்றுமில்லை; யாகங்களென்று பிராணிகளை வதைப்பதில் பாபமே தவிரப் புண்ணியங் கிடையாது; ஆத்துமயக்ஞம் செய்யுங்கள், அதாவது, கோபம் முதலிய துர்க்குணங்களை, நற்புத்தி, நல்வார்த்தை, நன்னடக்கை முதலிய சாதனங்களால் அற்றுப்போகும்படி பாருங்கள்," என்று சொல்லிவந்தார்.

இப்படியவர் சொல்லியது எல்லாருக்கும் சம்மதமாயிருந்ததால் அவர் காலத்திலேயே அனேகமாயிரஞ்சனங்கள் அவரை யனுசரித்துப் பௌத்தரானார்கள். இரண்டொரு ராஜாக்களுமிவரைக் குருவாகக் கொண்டார்கள்.

இதற்குமுன் வேத முதலிய இந்துமத கிரந்தங்களுக்குக் கர்த்தர்களாயிருந்த மகரிஷிகளுக்காவது, அவர்களை யனுசரித்திருந்த மகாராஜாக்கள், பணக்காரரான வேறு ஜனங்களிவர்களொருவருக்கும் ஜீவதசை கழிந்தபிறகு தாங்களிருந்ததற் கடையாளம் ஏதாகிலு மிருக்கவேண்டுமென்று ஆசையிருந்ததுமில்லை. அவர்களிடத்தில் பக்தி வைத்திருந்தவர்களெப்படிச் செய்ய வேண்டுமென்று பிரயத்தனப்படவுமில்லை. ஆரிய ஆசாரத்தைப் பழையபடி யனுஷ்டிப்பவரிக்காலத்திலுமப்படியேதான் நடத்துவது. உத்தரக்கிரியையும், வார்சுதாரராகிய புத்திரபௌத்திராதிகள் நடத்தும் சிராத்தமும் தான் நமக்குள்ளிருக்கும் ஏற்பாடு.

ஆனால் அவ்வாரியருடன் கொஞ்சம் கலந்தவர்களும், கலவாமலே யிருந்தவர்களும், பூர்வீகமாய்த் தங்களுக்கு ளேற்பட்டிருந்தபடி யாரையாகிலும் புதைத்தால் அவ்விடத்தில் மண்ணைக் குவித்து வைப்பதுண்டு. இது காலக்கிரமத்தில் நல்ல கட்டிடங்களாகி, அல்லதுகற்களில் சித்திரவேலைசெய்து, அமைக்கப்பெற்றுப் பிரபலத்திற்கு வந்துகொண்டிருந்தது.

சாக்கியர் முதலியோரினு மிவ்வழக்கங்கள் ஏதோ பலவிதமாக விருந்தன. ஆகவே புத்த பகவான் பிரபலத்திற்கு வந்து அவருக்குச் சிஷர்களெங்கு முண்டாகி நெடுநாளிருந்து கடைசியாகமரணம் சம்பவித்தகாலத்தில், பக்கத்திலிருந்தவர்கள், அவர் வாய் மொழியை

யும், பழையவழக்கங்களையு மனுசரித்து, அவர் சரீரத்தைத் தகனஞ்செய்து, சாம்பல், அஸ்தி, முதலியவற்றைச் சேர்த்து ஓரிடத்தில் புதைத்துப் பெரிய கட்டிடங்கட்டுவதாக ஆலோசித்தார்கள். ஆனால் பக்திமான்களான பௌத்தர்கள் பல விடங்களிலிருந்தும் வந்திருந்ததில், தங்களுடைய பரமகுருவிருந்ததற்கு அடையாளமாக அச்சாம்பல், எலும்பு முதலியன வற்றில் கொஞ்சங் கொடுக்கும்படிக் கெஞ்சியதில், அவைகளை நாலுகூறுகவோ, அதிகமாகவோ செய்து, முக்கிய பக்தர்களெடுத்துப் போனார்களாம்.

பிறகு என்ன நடந்ததோ தெரியாது. சுமார் 400-வருஷங் கழிந்தபின் இந்தியாவில் பௌத்தர்களெங்கேபார்த்தாலு நிறைந்து செழித்து வருகையில், மகதராஜ்ஜியத்திற்குச் சக்கரவர்த்தியாகி விளங்கின அசோகவர்த்தன மகாராஜாவின்காலத்தில் அவருக்கிவ்விஷயத்திலிருந்த பக்தி யதிகமாதலால், தேசமெங்கும் யாத்திரைசெய்து, எங்கெங்கே புத்தபகவானுடைய மகிமை விசேஷித்திருந்ததோ அவ்விடத்திலெல்லாம் அடையாளத்திற்காக ஸ்தம்பங்களும், ஸ்தூபங்களும், விஹாரங்களு மேற்படுத்திவந்தார்.

பிறகு காலக்கிரமத்தில் ஓரிடத்திலிருந்த அடையாளமவ்விடத்திலேயே நில்லாமல் பல காரணங்களால் கிடைமாறிப் போய்விட்டது. சில சமயங்களில் கைபலத்த அரசர்களுடைய பக்தி விசேஷத்தினாலும், சில சமயங்களில் பௌத்த சந்நியாசிகளுடைய புண்ணிய காரியங்களினாலு மோரிடத்திலிருந்த அடையாளமவ்விடத்திலேயே நிலைக்காமலிருந்து வந்தது. ஆனால் இக்காலத்திலெல்லாம் சீனாவிலிருந்து அப்போதப்போது இந்தியாவிற்கு வந்து பௌத்தவேதாந்தம் படித்துவிட்டு க்ஷேத்திரயாத்திரை செய்துபோன சில சந்நியாசிகள் தாங்கள் கண்டதையெழுதி வைத்தார்கள். ஏனெனில் மேற்கண்ட அசோக வர்த்தன சக்கரவர்த்தியும், அவர் போன்ற வேறு பிரபல புருஷரும் பௌத்த மதத்தைச்சீனா,ஜப்பான், பர்மா,லங்கைமுதலிய தூரதேசங்களுக்கும் பரவச் செய்ததில் அந்தந்த தேசத்தில் பக்தியதிகமாயிருந்தவர்களுக்குத் தங்கள்குருவிருந்த புண்ணிய பூமியையும், அடையாளங்களையும் பார்க்கவேண்டிய ஆசை யதிகரித்து வந்தது.

இப்படி வந்தவர்களில் சுமார் 1500வருஷத்திற்கு முன்னொருவரும், அவருக்கப்புறம் சுமார் 300வருஷங் கழிந்த பின்னொருவருமாக இருவர்தான் வெகு விஸ்தாரமாகப் புராணமெழுதியிருப்பவர். இவர்களில் இரண்டாவது வந்தவரான ஹியோன்த்ஸாங் என்பவர் அநேக க்ஷேத்திரங்களைப்பார்த்து வந்ததில் புருஷபுரியென்னும் பிஷாவருக்கருகில் பெரிய மடமொன்றிருந்ததாகவும், அதில்கற்பக்கிரகத்தில் ஒரு மரமண்டபத்தில் பெரும்பெட்டியொன்றில் ஸ்படிக ஸம்புடத்தில் ஸ்ரீபுத்த பகவானுடைய அஸ்திகள் கரிந்து நாலு துண்டங்க ளிருந்ததாகவும் தான் பார்த்ததை யெழுதிவைத்துப் போனார்.

அவர் போன 200-வருஷங்களுக்கப்புறம் மக்மதியர் முதலிய வேறு நாட்டு ஜனங்கள் படையெடுத்துப் பரம்பரையாக ஆண்டுவந்ததில், நடந்த கலகங்களினாலும், பூகம்ப முதலிய காரணங்களினாலும், காலக்கிரமத்தினாலும், இந்த மடங்களிருந்த விடங்காணாமலும், கேட்பாரற்றும் மண் மூடிப்போயின. ஜனங்களும் அதை மறந்தேபோய்விட்டார்கள்.

ஆனால் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாருக்குச் சென்ற சிலவருஷங்களாக இப்புராண விஷயங்களில் பக்தியதிகரித்துப் பழைய நகரங்கள், கோவில்கள், முதலியவைகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுவதற்கும், மதிற்சுவர்கள், பாறைக்கற்கள் முதலியவற்றில் வெட்டியிருக்கும் அக்ஷரங்களிவைகளைக் கெடாமற் பார்த்துக்கொண்டு சங்கதியறிவதற்கும், புதைந்துபோனவற்றை வெட்டியெடுத்துப் பக்குவமாக வைப்பதற்குமென்று ஒரு உத்தியோகஸ்தரையேற்படுத்தியிருக்கிறார்கள்.



இவ்வுத்தியோகஸ்தருக்குக் கீழ்ப்பட்டு வேலைசெய்பவரி லொருவர் கொஞ்சகாலமாகப் புருஷபுரிக்குச் சமீபத்திலிருந்த இரண்டு மண்மேடைகளைப் பரீக்ஷித்து ஷை சீனா சந்நியாசி சொல்லியது வாஸ்தவமாகில், இங்கேதாகிலும் புதையலிருக்கத்தான் வேண்டுமென்று யோசித்துத் தோண்டிப் பார்த்துவந்தார். ஒரு மேடையை வெட்டிச் சோதித்து வெகுதூரம் பார்த்து மொன்றும் அகப்படவில்லை. ஆனால் அவர் தைரியம்விடாமல் மறுபடி யிருந்ததை வெட்டிப்பார்த்து வருகையில் கொஞ்சங்கொஞ்சமாக வொருபெரிய கல்மண்டபங்கண்டது. அதைஜாக்கிரதையாகச் சுத்தமாக்கி யுள்ளே புகுந்து பார்க்கச் சீனா சந்நியாசி சொல்லியபடியே யொவ்வொன்றாகக் கண்டு, கடைசியாகப் பெட்டியில் ஸ்படிக ஸம்புடமும், அதில் கரிந்த எலும்புகள் நாலுதுண்டுங் கிடைத்தன. இது கண்டு இப்போதிரண்டு மாசமாகிறது.

இது சாக்ஷாத் ஸ்ரீ புத்தபகவானுடையதேகத்திலிருந்து அவருடன் வளர்ந்த எலும்புகளிலொன்றோ யிரண்டோ வென்பதில் ஒருவருக்கும் சந்தேகமில்லை. சுமார் 2400 வருஷங்களுக்கு முன் உலகத்தார் சுகப்படவேண்டித் தனக்குள்ள பதவியையுஞ் சுகத்தையுமிழந்து, பலவிதமாகவுங் கஷ்டப்பட்டுக் கடைசிவரைபிக்ஷுவாகக்காலங்கழித்துவந்தவொரு பெரியவருடைய எலும்பென்னும்போதே யதற்கு மகிமையுண்டு. அதுமட்டுமே யல்லாமல் பக்தர்கள் அவருக்குப்பிறகு எத்தனையோகாலம் உபசாரஞ்செய்து காப்பாற்றிவந்து, அதன் பெயரைச்சொல்லி யெத்தனையோ மகிமைகளுண்டாகித் தழைத்துவந்து, பிறகு காலபலத்தினால் மறந்துபோய்,மறுபடி முன்னிருந்த ஸ்திதியிலேயே காணுவதென்றால் அது பெரிய ஆச்சரியமென்பதிற் தடையில்லை. ஆதலாலிப்போது பர்மா, லங்கை, சீனா முதலிய ராஜ்ஜியங்களிலெல்லாம் இச்சங்கதிபரவி, அதை எனக்குத் தனக்கென்று மன்றாடுபவர்களநேகர். ஒரு பர்மா பௌத்தப்பெண்மணிமட்டும் தன் சொந்தத்தில் ஒரு லக்ஷம்செலவு செய்து இதையங்குள்ள கோவில் ஒன்றில் ஸ்தாபனம் செய்யப்பிரயத்தனப் படுகிறாளாம். அவளுடைய பக்தி அப்படியிருக்கிறது.

ஆனால் இந்தியாவிலுள்ள நமக்கு இதைக் கொண்டென்னவென்றிருக்கிறோம். ஸ்ரீ புத்த பகவான் இக்ஷ்வாகு வம்சமாயிருந்தாலும் சரி, எப்படியிருந்தாலும் சரி,அவர் உழைத்தது இந்து தேசத்திற்கானாலும் சரி, வேறெந்த தேசத்திற்கானாலும் சரி, பௌத்தமதமோ இத்தேசத்திலெங்கும் பரவி யொருகாலத்தில் பிரபலித்த தென்றாலும், இப்போதுள்ள சைவ, வைஷ்ணவாதி மதங்கள் பிரபலிக்க வாரம்பித்தது. முதல் மழுங்கிப்போய்விட்டது. ஏதோ நேபாளத்தில் சிலரிருக்கிறார்கள். மற்றவிடங்களில் சைவ வைஷ்ணவ பக்தர்கள் அபகரிக்காமல் மறந்துவிட்ட சில கோயில்களும், விஹாரங்களும், புத்த விக்கிரகங்களுமிருக்கின்றன. சில தவிர வேறு லோகமுதலிய வற்றிலிருந்த பிரதிமைகளெல்லாம் காலக்கிரமத்தில் திருமங்கை மன்னன் போன்ற பக்த சிரோமணிகளால் தவிடு பொடியாகி ரூபமற்றுப் போய்விட்டன.

ஆனால் பௌத்த ஐதீகங்கள்மட்டும் இன்னும் முற்றும் நாம் மறக்கவில்லை. நமது புராணங்களில் அவைகளை ஞாபகத்தில் வைப்பதற்குக் கதைகளிருக்கின்றன. முக்கியமாய்ப் பௌத்தர்களை நாம் திட்டுவதற்குக்காரணம் அவர்கள் நாஸ்திகரென்பதுபற்றி.பௌத்தவித்துவான்கள், தர்க்கயுக்தி, வியாகரணமிவைகளை யாதாரமாகக்கொண்டு நாஸ்திகவாதஞ்செய்து வந்தது வாஸ்தவமே. ஆனாலது எப்போது பிரபலமாயிற்று? புத்தபகவானிருந்த

தனது மதத்தைப் பிரசுரப்படுத்திய காலத்தி லல்லவேயல்ல. அதற்குப் பின்னெத்தனையோ தலைமுறையானபிறகு இப்படியானது வாஸ்தவம். இப்படியாகி நமது கையும் மேலாகி வருகையில் இப்படிப்பட்ட வித்துவான்களை நாம் கழுவேற்றியும், அக்கினியிற் றள்ளியும், சுத்தர்களாகியதும் வாஸ்தவமேயாம்.

இவர்களிருக்கட்டும். ஆதியில் உபதேசஞ் செய்த புத்த பகவானுக்கென்ன மரியாதை செய்திருக்கிறோம்? ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பத்தவதாரங்களி லொன்றாகச் செய்திருக்கிறோம்! ஆனால் அவ்வவதாரத்திற்குங்காரணமாகமட்டும்விசித்திர மொன்றைக் கற்பித்திருக்கிறோம். மற்றைய அவதாரங்களெல்லாம் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லுகிறபடி உலகத்தைத் தரும வழியிலிருக்கச் செய்வதற்காக இதுமட்டுமோ வென்றால், யாரோசில ஜனங்களை யேமாற்றுவதற்காக! ஆனாலிம்மாதிரி விஷயங்களில் யுக்தியையுபயோகித்து ஆக்ஷேபிப்பதில் பிரயோஜனமில்லை.

ஒரு வைஷ்ணவ சிரேஷ்டர்மட்டு மிப்படிப் பாரபக்ஷஞ்செய்யாமல் ஸ்ரீபுத்த பகவானைக் கிரமப்படியுள்ள மகிமையைச்சொல்லி ஸ்தோத்திரஞ் செய்திருக்கிறார். அவர் ஸ்ரீஜய தேவஸ்வாமி. அஷ்டபதியென்று இந்நாட்டில் பாகவதர்கள்சிலாகித்துப்பாடிவருங்கீர்த்தனைகளிலொன்றில் இந்த ஸ்வாமி ஸ்ரீபகவானைப் புத்தாவதாரமாக வணங்கி, "ஓ தயாளுவாகிய பகவானே, நீர்புத்தனாக வவதரித்து வந்ததில், வேதவிதியை யனுசரித்ததென்றாலும், யக்ஞகாரியத்தில் பசுவதை யேற்பட்டிருப்பதை நிந்தித்து. அவைகளுக்கு க்ஷேமத்தை விளைவித்தீரன்றோ, அதற்காக இதோ நான் நமஸ்கரிக்கிறே"னென்கிறார். இதுதான் சரியான ஸ்தோத்திரம்.

இனிமேல் வருஞ்சஞ்சிகைகளில் ஒழியும்போது இவ்விஷயத்தைக் கிரமமாயெடுத்துப் புத்த ஜைன மதங்களாகிய இந்து மதத்தின் கிளைகளையும், இதரமதங்களையும் சாதுக்களொப்பியிருப்பதை யனுசரித்துப் பேசுவோம். தக்க படங்களையுங் கொண்டு விளக்குவோம். இப்போது புருஷபுரியருகில் கிடைத்த புதையல்களால் புத்தலோக மெங்கும் சந்தோஷம் பொங்கியிருப்பதில், நமது ஜனங்களுக்கு வெறும் சங்கதிமட்டுமாவது தெரிந்திருக்கவேண்டுமென்று இதை யெழுதியது. அம்மகானிருந்ததே வாஸ்தவமா அல்லவாவென்றுசந்தேகமுண்டாயிருப்பதாலும், அவரது பிரதிமை யொருவிதமென்றில்லாமல், சித்திரத்தில் காணுமாறு, லங்கையிலொருவிதமும், பர்மாவிலொருவிதமும், நமது நாட்டிலிந்துஸ்தானத்தி லொருவிதமு மிருப்பதாலும், இருந்தது வாஸ்தவமென்பதற்கு உத்தமசாக்ஷியான இதைநாமும் கிரகித்துக்கொள்வோம்.

## நாணயம்

நமது நாணயம் ஒருநாளும் தப்பக்கூடாது. இது நாம் கண் மூடும்வரையில் நமக்கு நோன்பாயிருக்குமேயானால் நமது க்ஷேமம் நாளுக்குநாள் பொங்குமேயல்லாது ஒருபொழுதும் அணுவேனும் குன்றாது. இதற்கு நாம் முற்றிலும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். ஆளுக்குத் தக்கபடி அல்லது சமயத்திற்கு தக்கபடி நாம் நடந்து நியாயமோ அநியாயமோ காரியத்தைமுடித்துக்கொள்ளவேண்டுமென்ற அற்பமான அவாவை நாம் முற்றிலும் விட்டுவிட வேண்டும். ப்படியோ காரியம் நடக்கவேண்டியது; சரியான வழியில் நடந்தாலென்ன, அப்படியன்றி அற்ப வழியில் நடந்தாலென்னவென்று சிலகாரியப் புலிகள் சொல்லுவதுபோல்செல்லுவதைவிட லாபம் வரட்டும் வராமற்போகட்டும் நான் என் நாணயத்தைவிட்டு விலகேன் என்று ஒரே பிடிவாதமாயிருப்பது மிகவும் பெரியகுணம். இப்பிடிவாதம் நம்மிடமிருக்குமாயின் கடைசியாய் நாணயமே முன்னின்று நமது தலையைக் காப்பாற்றுவதை நாமே காண்போம்.



குமாரனைப் பரிகாசம் செய்யும்பொருட்டு ஆரதித்தட்டை யவன் முன் யமுனை ஏந்தினள்.



## விநோத காண்டம்

### பாவுபீஸ், என்னும் சகோதரத்துவிதீயை

ஸ்ரீமதி-மங்களாம்பிகா பாய் அவர்கள்

தீபாவளிகழிந்து வரும் துவிதியை தினம் 'பாவுபீஸ்' என்னும் பண்டிகையை மகாராஷ்டிர ஜாதியார் கொண்டாடுவார்கள். அன்று காலையில் ஸ்திரீகள் எல்லோரும் தத்தம் சகோதரர்களை விருந்துக்கழைத்து, மங்களஸ்நானம் செய்வித்து, வாங்கிபாத், வீங்கிபாத், பகாளபாத், சுகாளபாத், கேசரிலாடு, பேசரிலாடு, சிரோடி, பேணி, முதலிய பக்ஷியங்களை யவரவர்கள் சக்தியானுசாரமோ, வெகுவாய்ச் சக்திமீறியோ செய்து விருந்திடுவார்கள். பிறகு சாயரக்ஷை சகோதரிமார், தம் சகோதரர்களை மணையிலுட்கார வைத்து அங்கவஸ்திராதிகள் கொடுத்து உபசரிப்பார்கள். இம்மாதிரி யுபசாரங்கள் ஒரு தலைப்பக்ஷமல்ல வாதலால், மணையிலுட்காருபவர்களும் கடைசியாக ஆரதியெடுக்கும்போது, ஆரதித்தட்டத்தில் அவரவர்கள் சக்தியானுசாரம் ரூபாய்களோ, பவுனோ போட்டுச் சகோதரிமாருக்குப் பிரதி யுபசாரஞ்செய்வார்கள். ஆதலாலித்தப் பண்டிகைக்குச் 'சகோதரத்துவிதீயை' யென்று பொருள்.

எந்த அருமைப் பிள்ளைகளே, உங்களில் சிலர் பெருஞ் செல்வமுடையவராயும், சிலர் நடுத்தரமாயும், பெரும்பாலார், என்னைப்போல் ஏழையாயுமிருக்கிறீர்கள். தீபாவளி சமீபிக்கிறது. எப்படியோ சிரமப்பட்டு உடற்பிறந்தா ரெல்லாருங் கூடிக் கொண்டாட்டமாக விருக்கப் போகிறீர்கள்.

உங்கள் அருமைச் சகோதரிகளிடமிருந்து சுகந்த தைலங்களைப் பெற்று, அதைத் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்வீர்கள் நல்ல பஞ்சபக்ஷிய பரமான்னத்தைப் புஜித்து ஸந்தோஷமாய்த் தன்னிவிளையாடிக்கொண்டிருப்பீர்கள். இரவில் தீபோற்சவம் செய்து தமது வீடுகளைச் சோபிதமாகவைத்துச் சினிவெடிகளைவிட்டும், சித்திர விசித்திரமான பாணங்களைக் கொளுத்தியும், மனமகிழ்வீர்கள். ஆ ஹா ஹா! உங்கள் பாக்கியத்தை நானென்னவென்று ரைப்பேன்? துக்கமானது உங்களை அணுகத் துணிவதில்லை. உங்களுடைய ஆனந்தத்திற்கு ஒன்றும் குறைவுவருவதில்லை. கடவுளானவர், உங்களைஎப்பொழுதும் இப்படியே ஆனந்தத்துடனிருக்கும்படி அனுக்கிரகிக்கவேண்டும். ஆனால் உங்களைப்போல் சுகம் எல்லோருக்குமே இருக்குமென்று கருதாதீர்கள்.

கும்பகோணமென்னும் பட்டணத்தில் பரசுராம பாவா என்றோர் ஸ்ரீமான்வசித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஐம்பது வயதிருக்கலாம். அவர் முதல் தாரத்தை யிழந்தமையால் வீட்டைப் பார்த்துக்கொள்ள ஸ்திரீ வேண்டுமென்று அதே வருஷத்தில் மறுமணம் புரிந்தார். அவருக்குக் கமலமென்றோர்மகளுண்டு. அவள் பெரியவளாகிப் புக்ககத்திலிருக்கிறாள்.

கொஞ்சகாலத்திற்கெல்லாம், இரண்டாவது பாரியையாகிய அன்னபூரணிபாய்க்கு ஓர் புதல்வன் பிறந்தான். பாவா அவர்களுக்குப் பௌராணிகப்பெயர்களில் வெகு பிரியமிருந்தபடியால், அவனுக்கு சிவகுமாரனென்று பெயர் வைத்தார்கள். அவன் மூன்று வயது பாலகனாயிருக்கும்பொழுது, பரசுராம பாவா தற்செயலாய் மாரடைத்துப் பரலோகப் பிராப்தரானார். வேண்டிய சொத்திருந்தது. ஆனால் அதைப் பார்ப்பவர்கள் ஒருவருமில்லை. ஆதலால் வீடு, நிலமொன்றும் வாங்கவில்லை. இருந்த சொத்தெல்லாம், ஆபரணம், வெள்ளிப்பாத்திரம், விலையுயர்ந்த வஸ்திரங்கள் ரூபமாகவிருந்தது. அன்னபூரணிக்குப் புக்ககத்துப் பந்துக்கள் ஒருவருமில்லை. ஆதலால் இவ்வளவு சொத்து ஒருமிக்க இவள் கையிலகப்பட்டது. அவளுக்கு ஆதிமுதல் பிறந்தகத்து ஜனங்கள்பேரில் பற்றதிகமாதலால், பர்த்தாவிருக்கும்பொழுதே அவர்கள் ஏதேனுமோர் சாக்கிட்டு அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருப்பது உண்டு. ஆனால் அவரிருக்கும்பொழுது இவ்விடத்திலேயே ஸ்திரமாயிருக்கக் கொஞ்சமாவது கூச்சமிருந்துக் கொண்டிருந்தது. அவர் போனதுமுதல் அவர்களுக்குச்சுதந்திரம் அதிகரித்தது.

பதிவியோகத்தைத் (பர்த்தாவின் பிரிவாற்றமாட்டாமல்) தாளமாட்டாமல் அவர்போய் ஒரு மாதத்திற்கெல்லாம் அன்னபூரணியும் தேகவியோகமடைந்தாள். அப்பொழுது அவளுடைய சகோதரர்கள் வந்து சொத்தெல்லாமெடுத்துக்கொண்டு, சிவகுமாரனையும் அழைத்துக்கொண்டு ஊரில் போயிருந்தார்கள். குமாரன் மிகவும் அழகு வாய்ந்தவன். ஏற்கனவே அவன் புத்திசாலியானபடியாலும், கல்வி கற்பதில் வெகு சுருசுருப்புடையவனாயிருந்ததாலும், பதினொரு வயதிற்குள் ஆங்கிலம் மூன்றாவது வகுப்பு முதன்மையில் தேறி நான்காவது வகுப்பில்

படித்துக்கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு வீட்டில் வெகு உபத்திரவம். ஒரு நாளாவது நேரத்தில் போஜனம் கிடைக்காது. "உனக்குத் தினமும் படியளக்க யாராலாகும்? உனக்கு வஸ்திரம் வாங்கித்தரவேண்டுமென்கிற அக்கரை நமக்கென்ன?" என்றிப்படிப்பட்ட பேச்சுகளை அவன் தினமும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியிருந்தது. இத்துன்பமெல்லாம் தன்னால் சகிக்கமுடியாமல் மனங்கசந்து தனக்குக் கிடைத்த உபகாரச்சம்பளமாகிய ஐந்து ரூபாயையும், ஒருவெள்ளிச் சிமிழையுமெடுத்துக்கொண்டு ஒருவரு மறியா வண்ணம் சென்னைக்குச்சென்று, பிக்ஷையெடுத்துக் கல்விகற்கலானான். இப்படிக் கஷ்டமின்னதென்று தெரியவே, குமாரன் வயதில் சிறியவனானாலும், புத்திமானாயும் சுருசுருப்புடையவனாயுமிருந்தான்.

இவ்வளவு இளம் வயதில், வீடு வாயிலைவிட்டுத் தனிமையாய் அயலூர் சென்று, தன் கைகளால் வஸ்திரங்களை துவைத்துக்கொண்டு, பிக்ஷை யெடுக்கத் தலைப்பட்டதைக்கண்டு, ஜனங்களெல்லோரும் வியப்புற்றார்கள். சிலர் அவன்பேரில் தயவுடன், அவன் கஷ்டப்படக்கூடாதென்று, நிரம்பப் பிக்ஷையிடுவார்கள். சிலர் அவனுக்குக்குழம்பு, ரஸம் முதலியவற்றைக் கொடுப்பார்கள். இவ்வாறாக ஏதோ ஒருவிதமாகக் காலம் கழிந்துகொண்டிருந்தது. ஐந்து ரூபாயும் சிமிழும் தான் அவனுடைய சர்வ சொத்தும் ரூபாயைவிட அச்சிமிழை அவன் வெகு ஜாக்கிரதையுடன் பாது காத்துக்கொண்டிருந்தான்.

குமாரன் வகுப்பில் வஸந்தனென்றோர் ஸ்ரீமான் வீட்டுவாலிபன் படித்துக்கொண்டிருந்தான். அவன் சரிவரக் கல்விகற்காவிடினும் தனக்குச் சமானமொருவருமில்லை யென்கிற கர்வம் அவனுக்கு மிகுதியாக விருந்தது. ஆனால் அவனுடைய தாய் சிவகுமாரன்பேரில் தயையுடையவளாய், வஸந்தனுடைய தோழனென்று அவனுக்கு அடிக்கடி பக்ஷணம்கொடுப்பாள். சில சமயங்களில், புஸ்தகங்களும், தரிக்க வஸ்திரமும் வாங்கிக்கொடுப்பாள். குமாரன்பேரில் தனக்கிவ்வளவு பிரியமேன் உற்பவிக்கவேண்டுமென்பது அவளுக்குப் புலப்படவில்லை. கூப்பிட்டாலன்றிக்குமாரன் அவர்வீட்டிற்குப் போகமாட்டான். வஸந்தனுடைய தாய் அவனைக் கூப்பிட்டு, "அப்பா, உன் பெயரென்ன" வென்று கேட்டால், தன் நிஜப்பெயரையொளித்துக் கோவிந்தனென்றுசொல்லிவிட்டுச் சரேலென்று ஓடிப்போய் விடுவான். இவ்வாறாகக் கொஞ்சகாலம் நடந்தது.

குமாரனுடைய வகுப்பில் செல்வச்செருக்குடைய வாலிபர் சிலரிருந்தார்கள். குமாரன் பிக்ஷையெடுக்கிறானென்று அவனை அவர்கள் பரிகசிப்பார்கள். ஆனால் குமாரனுடைய கருத்தெல்லாம் கல்விகற்பதிலேயே யிருந்ததால், யார் என்ன சொன்னபோதிலும், அவன் வருத்தப்படுவதில்லை. பிறகு அவ்வருஷத்திய தீபாவளி வந்தது. எல்லா வாலிபர்களும் தத்தம் வீட்டிற்குச் சென்றார்கள். பாவம்! நமதுகுமாரன் எங்கே போவான்? அவனுக்கு வீடுகிடையாது. ஓர் தமக்கையிருக்கிறாள். அவளைப்பற்றித்தான் மேலே சொல்லியிருக்கிறோம். தகப்பனார் போனநாள்முதல், தமக்கையைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. தனக்குத்தன் இனத்தார் யாவருமில்லையென்று வருத்தமுற்றான். நாளைக்கு 'பாவுபீஸ்' என்கிற பண்டிகை. எல்லா வாலிபர்களும் ஆனந்தமாயிருப்பார்கள். நான் மட்டும், அச்சுபதினத்தில் பிக்ஷையெடுக்கும்படி யாயிற்றல்லவாவென்று சிந்தித்துக் கொண்டிருக்கையில், தானறியாமலே அவன் கண்களிலிருந்து நீர்த்துளிகள் சிந்தியன. அவனுக்குப் பூர்வஞாபகமிருந்தது. ஆனால், அது அவனுக்குக் கனவுபோல் தோன்றியது. தன்மனக்கவலை மறக்கவேண்டு மென்றவன் புஸ்தகமெடுத்துப் படிக்கத்தொடங்கினானேயன்றிப் படிப்போடவில்லை. பின்னும் எதையோ நினைத்துக்கொண்டு அழலானான். பிறகு, நாளையதினம் பட்டினிகிடந்துவிட்டால் பண்டிகையன்று பிக்ஷையெடுக்க வேண்டிய துன்பத்திலிருந்து மீளலாம். என்று நிச்சயித்துக்கொண்டு அழுகையை நிறுத்தினான்.

அதற்குள் வஸந்தன்வந்து,கோவிந்தா! வா,உன்னை என்தாயார் அழைத்துக்கொண்டு வரச்சொன்னாள்" என்று சொன்னான். குமாரன் எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு, பழையதானாலும் சுத்தமான வஸ்திரத்தைத்தரித்து,வஸந்தனுடன்அவன் வீட்டிற்குச் சென்றான். வஸந்தனுடைய தாய் வாயிலில் நின்று, அவனை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாள். "கோவிந்தா! நாளைக்குப் பாவுபீஸ் பண்டிகை. நீ நம் அகத்திற்கு வரவேண்டும், தெரிந்ததா" என்றான். அதற்குள் வீட்டு எஜமானரும் அவருடன் சிலரும் வெளியிலிருந்து வரக்கண்டு அவன் உட்சென்றான். குமாரனும் தன் ஜாகைக்குச்சென்றான் கமலாம்பாள் (வஸந்தன்தாய்) தன்னைப் பண்டிகைக்கு அழைத்திருக்கின்றாளே, நாளைக்குஆரதியிலிடுவதற்குத் தன்னிடத்திலென்னவிருக்கின்றது? என்கிறவிசாரம் அவன் மனதிலுதித்தது. "நமக்குப் பரிசுகிடைத்த புஸ்தகத்தை யிடுவோமா? சீ அப்படிச்செய்தால், எல்லோரும் சிரிப்பார்கள். இருக்கிற பணத்தில் கால் அல்லது அரை, ரூபாயிடுவோமென்றால் மேல்வகுப்புப்புஸ்தகங்கள் வாங்கவேண்டியதாயிருக்கின்றது," என்றிவ்வாறு கொஞ்சநேரம் சிந்தித்தான். பிறகு, தன் தகப்பனாருடைய ஞாபகக்குறியாக வெகு காலமாய்க் காப்பாற்றிக்கொண்டிருக்கிற,வெள்ளிச்சிமிழைத்தற்காலம் ஆரதியில் போட்டு, முன்னுக்கெப்பொழுதாவது தனக்குப் பணம் கிடைத்தால் அப்பொழுது அதன் விலையைக்கொடுத்து அதைவாங்கிக்கொண்டுவிடலாமென்றும், இது பார்ப்பவர்களுக்கும் நன்றாயிருக்கும், சிமிழைப் பத்திரப்படுத்தவேண்டிய கவலையுமொழியுமென்று நினைத்து, அதை ஆரதியிலிடுவதாகத் தீர்மானித்தான். மறுநாள் பொழுது விடிந்தது. குமாரன் அன்றையதினமெல்லாம் வஸந்தன் வீட்டிலேயே இருந்தான். பகல் போஜனமாயிற்று. சாயரக்ஷை கமலம் அவனையருகிலழைத்து, நல்லவஸ்திரங்களைக்கொடுத்துத்தரிக்கச்சொன்னாள். தாக்ஷண்ணியத்தினால் மாட்டேனென்று சொல்ல முடியாமல் அவன் அதைத் தரித்தானேயன்றி அவனுக்கது திருப்திகரமாக இருக்கவேயில்லை. அவனுக்குத் தான் ஏதோ குற்றம் செய்ததாகத் தோன்றலாயிற்று. பிக்ஷையெடுக்கப்பட்டவனுக்கு இன்றைக்கு வந்த ஐசுவரியத்தைப் பாரென்று ஜனங்கள் இகழ்வார்களென்று, அவன் வெளியேபோகக் கூச்சப்பட்டான்.



இரவில் எல்லோரையும் மனையிலுட்காரவைத்து, வஸந்தனுடைய ஸகோதரியாகிய யமுனையும் கமலமுமாக ஆரதி எடுக்கும்பொழுது எல்லோரும் அதில் பணம் போட்டார்கள். தட்டும் நிறைந்தது. குமாரனைப் பரிகாசம் செய்யும்பொருட்டு யமுனை ஆரதித்தட்டை அவன்முன் ஏந்தினாள். குமாரனும் தைரியத்துடன்,சிமிழைஅதில்போட்டுவிட்டுக் கமலத்தைப் பார்த்துச் சிரித்தான். அதைக்கண்டு எல்லோருக்கும் ஆச்சரியமுண்டாகி, ஒருவருக்கொருவர் பற்பலதர்க்கங்களைச் செய்யலானார்கள். சிலர் அவன் வர்த்தனத்தைப்பற்றிச் சமுசயித்தார்கள். பிற்றைச் சிமிழுக்கு, முலாம் பூசியதாயிருக்குமென்று சிலர் நினைத்தார்கள். கமலமதை விளக்கினருகில் கொண்டுபோய்ப்பார்த்து, அதன்பேரில், த. நா. பரசுராமபாவ் என்கிற முத்திரையிடப்பட்டிருப்பதைக்கண்டு, இது உன்னிடம் எப்படி வந்ததென்று குமாரனைக் கேட்க, அவன் "அதெல்லாம் கேட்காதீர்கள். அது என்னுடையதுதான், திருட்டுச் சொத்தல்ல." என்று அலக்ஷியமாய் விடையளித்தான். கமலம் அவனைக் கட்டாயப்படுத்தி கேட்டதன்பேரில், சகல சங்கதிகளையும் அவன் சாங்கோபாங்கமாய்ச்சொல்லக்கேட்டுக்கமலத்திற்குப் பூர்வஞாபகம் வந்துவருத்தமுற்று, குமாரஸ்வாமி! நீ என் ஸகோதரனல்லவா? என் கண்ணே, இதுவரையில் ஏன் என்னிடம் சொல்லாமலிருந்தாய்? அதனாற்றான் உன்னைக்கண்டு என்னுள்ளங் கலங்கியது. நீ போய்விட்டாயென்று கேள்வியுற்றேனே. என்கண்ணே, நீ திரும்பவும் வந்தனையா," என்று சிவகுமாரனை அருகிலழைத்து அன்புடன் உச்சிமுகந்து, முத்தமிட்டாள்.

அவன் கமலத்துக்கு இளையதாயின் மகனாயிருந்தும், அவன்பேரில் அவளுக்குண்டான அன்பைக் கண்டு எல்லோரும் வியப்புற்றார்கள். பரசுராம பாவாவைப்போன்ற பெரிய கிருகஸ்தருடைய வயிற்றில் ஜனித்துப் பிக்ஷையெடுப்பது, அதுவுமென்று பிரத்தியக்ஷத் தமக்கை வீட்டிற்குவந்து, என்று கமலத்தின் பர்த்தாவினுடைய மனதிற்கு மிக்க வியாகூலமுண்டாகி, இனிமேல் சிவகுமாரனைத் தன்வீட்டில் வந்திருக்கச்சொல்லிப் பலவந்தப்படுத்தி அவனுடைய செலவெல்லாம்தானே ஒப்புக்கொண்டார்.

இப்பொழுது சிவகுமாரன் பி. ஏ. பரீக்ஷை முதன்மையில் தேறித் தொழிற்கல்வி கற்கும்பொருட்டு, அத்தம்பியருடைய உத்தரவின்பேரில் அமெரிக்காவிற்குச் சென்றிருக்கிறான். இதைப் படிக்கும், என தருமைச்சகோதர சகோதரிகளே, சிவகுமாரனைப்போல் சற்புத்தியுடையவர்களாகி, அவனுக்கும் கமலத்துக்கும் இப்பாவுபீஸ் என்னும் பண்டிகையெவ்வளவு ஆனந்தப் பிரதமாக விருந்ததோ, அவ்வாறே, வருஷந்தோறும், மேற்கூறிய சுபதினத்தில் உங்களெல்லோருக்கும் பகவத்கிருபையினால் ஆனந்தம் கிடைக்கட்டும். ('ஆனந்த' என்னும் மராட்டிச் சஞ்சிகையிலிருந்து.)

# கலஸவகைக் காண்டம்

## அக்ரிகாலேஜும், சோதனைமண்டபமும்

### உழவு கோல்.

'வேளாண்மைக் கலாசாலை' யென்று நியாயமாய்ப் பெயரிடவேண்டிய இதற்கு, ஸ்தலவாசிகள், அக்ரி கல்சரல் காலேஜ்,' என்றும், 'அக்ரி காலேஜ்' என்று சொற்சுருக்கியும் பெயரிட்டு வருகிறார்கள் வெகு சாய் இதற்கு இப்பெயரே காயமாய்விடும்போ லிருப்பதாலும், அப்படியாவதில் தோஷமொன்றுங் காணவில்லையாதலாலும் நாமுமிதற்கு அப்பெயரே கொடுத்திருக்கிறோம். 'சோதனை மந்திரம்,' என்பது இக்காலேஜ் மகாமண்டபத்தில் பூமி, விதை, முதலியனவற்றைப் பரீக்ஷிப்பதற்காக வேற்பட்டிருப்பதோர் பகுதி. அதில் நடக்குங் காரியங்களையினி யெப்போதாவது விவரித் தெழுதப்படும். வேளாண்மைக்கலையும், அதற்கு அனுகூலமாகவேண்டிய பரீக்ஷையும் சீராக நடப்பதற்காக, மதிராசு கவர்ன்மெண்டார் யோசனைசெய்து. நாளதுவரை எட்டு லக்ஷம் ரூபாய் செலவுசெய்து கட்டிடம் வகைரதயார் செய்திருக்கிறார்கள். இது கஸ்பா கோயமுத்தூருக்கு வடமேற்கிலுள்ள, 'குமாரசுவாமியேரி'க்கு அடுத்துக் காணும். வெகுதூரத்திலிருந்தே காலேஜ் மகாமண்டபத்தைப் பார்க்கலாம். அது இப்படியிருக்குமென்பதை யிஷ்டாறிவதற்காகப் படமொன்றித்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. கட்டிடத்தின் வடகிழக்கிலிருந்து பார்த்தால் படத்திற் காணுவதெல்லாம் தெரியும்.

சிற்பந்தெரிந்தவர்கள், இதை மகம்மதிய சம்பிரதாயமும், இந்து சம்பிரதாயமுங் கலந்துண்டாகியதோர் மிசிரமென்கிறார்கள். சிற்பசாஸ்திரப்படியிதற்கென்ன தோஷமிருந்தபோதிலும், ஆகவேண்டியகாரியங்களுக்குச் சகல சௌகரியங்களு மமைந்திருக்கின்றன. இங்கிலீஷ் எழுத்தாகிய(எச்சு) H.என்பதுபோல இதற்கு வடிவம். ஆகவே யிரண்டுகைகளிலுங் கீழும் மெத்தைமேலுங் கணக்கிட்டால், வேண்டிய அறைகளிருக்கின்றன. கோயமுத்தூரில் சீதோஷ்ணம்சமதாதுவாயிருப்பதுடன், இந்தஅறைகளெல்லாம், பெரிய மைதானத்தில், காற்று,வெளிச்சம் முதலிய அங்கங்களுக்குக் குறைவொன்றுமின்றியமைந்திருப்பதால், இதிலிருந்து வேலைசெய்து வருவது ஒரு பெரும்பாக்கியமென்னவேண்டும்,

இக்கட்டிடத்திற்கு 1906-ம௵ செப்டம்பர்மீ௳தில் முகூர்த்தக்கல் நட்டார்கள். அக்காலத்தில் இப்போதும் நமது கவர்னராகி விளங்கும் ஆனரேபில் ஸர். ஆர்தர் லாலி துரையவர்க ளிவ்விடம் வந்திருந்து அஸ்திவாரக்கல்லை ஸ்தாபித்துக் கட்டிடம் சீக்கிரம் நிறைவேறும்படி யாசீர்வதித்துப் போனார்கள். சென்றமூன்றுவருஷங்களாக ஆயிரக்கணக்கான கூலியாள்கள் இடைவிடாமல் வெகுஜரூராய் வேலைசெய்து வந்தார்கள். அதன் பலனாக மேற்குறித்த மகாமண்டபமும், அதில் உத்தியோகங்களில் அமர்ந்துவேலைசெய்யும் துரைமார்களுக்குப் பங்களாக்களும், இந்திய உத்தியோகஸ்தர்களுக்கு இரண்டு மூன்றுதரபுகளில் வீடுகளும், கூலிக்காரருக்கும், பசு, எருது முதலிய கால் நடைகளுக்கும்,உறைவிடங்களு மேற்பட்டு, இப்போது பார்ப்பதற்கு ஒரு சிறிய ஷஹர்போலிருக்கிறது.

தவிரக்காலேஜில் நடக்கும் கல்விப்பயிற்சியுபயோகப்படுவதற்கும், சோதனை விஷயம், கிரமப்படி நடப்பதற்கும், இந்த ஷஹரைச்சுற்றிச் சுமார் 450-ஏகரா பூமியும் சேர்ந்திருக்கிறது. இதில் 45-ஏகரா நஞ்சையும், மீதியுள்ளது பலதரங்களில் புஞ்சையுமாம். இக்காலேஜில் படிக்கும் மாணாக்கருக்குப் புஸ்தகபாடமட்டுமே யன்று. அனுபவப்பாடம் அதைவிட அவசியமாதலால், அவர்கள் அனுபவ பூர்வகமாய்க் கிருஷி விஷயமெல்லாந் தெரிந்துகொள்ளவேண்டியதுதான் நியாயம். சாதாரணக் கல்விக்கே நம்மவர்கள் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக் குதவாது' என்றும், 'ஏட்டுச் சர்க்கரை தித்திக்காது,' என்றுஞ் சொல்லி யிகழ்வதுண்டு. ஆதலாலிவ்விஷயத்திற்கு ஏட்டுப்படிப்பு சிறிது முதவாதென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிடவேண்டும்.

ஆகவே மாணாக்கரிங்கே கல்வி கற்பது, சம்பிரதாயப்படி 'சித்திரப் பாவையினத்தகவடங்கி' யல்ல. பிரதிதினமும் காலையில் உபாத்திமாருடன் போய், வயல்கள், தோட்டங்களிவைகளைச் சுற்றிப் பார்த்தும், வெய்யில் மழையிலடிபட்டும் வரவேண்டும். வேளாண்மைக்குரிய சகல காரியங்களுந் தாமாகவே செய்து பழக்கப்படவேண்டும். சில ஜாதியார் மேழி பிடிக்கக்கூடாதென்றும், சிலர் களத்தை மிதிக்கக்கூடாதென்றும், இதுவரை யிந்நாட்டில் பல விடங்களில் காணும் பழக்கங்கள் இனிச் சரிப்படாவாதையால், இங்கு வரும் மாணாக்கரிவைகளை மறந்துவி

REGISTERED 18 OCT 1909 MADRAS



அக்ரி காலேஜும் சோதனை மண்டபமும்.

ட்டு, எக்காரியமென்றாலும் பின் வாங்காமல் செய்யத்தயாராயிருக்கவேண்டும். உழவுமுதல் அறுப்புவரை யெல்லாம் அவர் கையாற்செய்து அனுபவம் பெறவேண்டும். ஆதலால்யாராகிலும் இங்குவந்து பார்த்தால்ஜாதிநியமமொன்றுமில்லாமல், சிலர்சாமான்னியக்கலப்பைகொண்டும், சிலர் சீமைக் கலப்பை கொண்டும், உழுவதொரு புறத்திலும், சிலர் மண்வெட்டியேந்தி வரப்புயர்த்துவதும், தண்ணீர் பாய்ச்சுவதும்,மற்றொருபுறத்திலும்,கிணறுகளிலிருந்து தண்ணீரிறைப்பதோரிடத்திலுங் காணலாம். இப்படிச் சகல காரியங்களையுந் தாமேசெய்து பழகி வேறு தேசங்களில் நடப்பதையுங் கற்றறிந்து, தேறிப்போவது மாணாக்கராலாக வேண்டிய முதற்காரியம். பிறகு அவரவரிடம்போய்ச் சேர்ந்தபின், தாங்கள் கற்றதையுங் கேட்டதையும் அந்தந்தப் பிரதேசத்திற்கு எவ்வாறு பிரயோஜனப் படுத்துவதென்று யோசித்தும், தங்கள் சொந்த பூமிகளில் பரீக்ஷித்தும் பார்த்து, ஒவ்வொருவனும் தன்னாலியன்ற மட்டில், “ஒரு புல்லிருந்தவிடத்தில் இரண்டு வளரும்படி,” செய்யவேண்டுமென்பது சர்க்காருக்கு முக்கிய எண்ணமாம்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இம்மாதிரிக் கிருஷி விஷயத்தில் பாடுபட்டு வருவது இவ்விராஜதானியில் சுமார் முப்பது வருஷத்திற்கு மேலாகிறது. இதனால் பழைய காலத்திய ராஜாக்கள் இவ்விஷயத்திலொன்றும் செய்யவில்லையென்று சொல்ல வந்ததல்ல. காவேரி பாயும் நாட்டிலும், அதுபோன்ற வேறு நதிகளுள்ள நாடுகளிலும், அவைகளுக்குத் தக்க விடங்களில் அணைகட்டுவதும், நதிகளில்லாமல் மழையையே எதிர்பார்த்திருக்குமிடங்களில், குளங்கள், ஏரிகள், கிணறுகள், முதலியன நிர்மாணிப்பதும், இந்நாட்டில் வெகுகாலமாக வந்திருக்கும் ராஜதருமங்கள்.

அவ்வாறே மகம்மதிய அரசர் கட்டுமாமர முதலிய விசித்திரங்களையும், ரோஜா முதலிய புஷ்பவர்க்கங்களையும், அபிவிருத்திசெய்தது எல்லோருக்கும் தெரிந்ததே. சில வருஷங்களுக்குமுன் திருவாங்கூரில் இப்போதிருக்கும் மஹாராஜாவுக்கு முன்னிருந்த ‘விசாகம் திருநாள்’ என்னும் மகாராஜா, ‘மரச்சீனி’ யென்ற கிழங்கொன்றை வரவழைத்துத் தானே பயிரிட்டு, அதில் தோஷமொன்றுமில்லை யென்பது ஜனங்களுக்குத் தெரிவதற்காகத் தானே யதைச்சாப்பிட்டுப் பழக்கப்படுத்தினரென்று கேள்வியுண்டு.

ஆனாலிப்படிப் பழையநாளில் நியமமில்லாமல், அவரவர் மனோதருமம்போல நடத்தியதற்கும், இப்போது இக்காலேஜ் மூலமாக நடப்பதற்கும் வித்தியாசம் வெகுவாயுண்டென்று யாருக்குங்காணும். எக்காலத்திலுஞ் சாமான்னியருக்கு வேண்டியதுவயிறுநிறையச் சாப்பாடு. அது அனேகருக்குக் கிட்டுவது எப்போதும் பிரயாசையாகியேவந்திருப்பதும்,தற்காலம் அகவிலையேறிநிற்பதாக எல்லோரும் முறையிடுவதும், புத்திமான்கள் அறிந்தேயிருக்கிறார்கள். ஆதலால் ‘ஒருமணி தான்னியமிருந்தவிடத்தில் இரண்டு மணிகளுண்டாகும்படிச்’ செய்வது இக்காலத்தில் வெகு அவசரம். பூஸ்திதியில்லாமல் கூலி செய்பவருக்கும், ‘உத்தியோகஞ்’ செய்பவருக்கும், அகவிலையுயராமலிருந்தால் தான் க்ஷேமம். அப்படி யுயராமலிருப்பதற்குப் பண்டங்கள் தாராளமாய் விளைந்து வந்தால் அதுதான் முக்கிய சாதனம்.

இம்மாதிரிக் காரியங்களுக்காக வேண்டி மதிராசு கவர்ன்மெண்டார், சுமார் 30வருஷத்திற்கு முன் சைதாப்பேட்டையில் முதன் முதலாரம்பஞ் செய்தார்கள். அவ்விடத்தில் பெரிய மண்டபமொன்று தயார்செய்து, சுமார் 200-ஏகரா பூமியுமதற்கென்று சேர்த்து, யோக்கியதை வாய்ந்த உபாத்தியாயர்களையும் நியமித்துப் படிக்கவரும் மாணாக்கருக்குத் தக்ஷிணையுங்கொடுத்து, உற்சாகப்படுத்தி வந்தார்கள். என்றாலும் பிரயோஜனத்தை யபேக்ஷித்துப் பேசுமிடத்து,மொத்தத்தில் செலவிற்குத்தக்கபலன் கிடைக்கவில்லையென்றே சர்க்காருக்கும், இதர ஜனங்களுக்கும், முப்பதுவருஷம் பார்த்தபின் உறுதியாயிற்று. இதற்கென்ன பரிகாரமென்றுயோசித்திருக்கையில், 1898 வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டுக்கு அதிபதியாக லார்ட்கர்ஜன் வரவே யவர் கிருஷிமுதலிய பன்னிரண்டு ராஜகாரியங்களைத் தன் காலத்திலொருவகையாகச்செய்து முடிப்பதென்று சங்கற்பித்துக்கொண்டார். இந்தியாவில் 100-க்கு 80 பெயருக்கு மேலாகவே பூமியை நம்பி யிருப்பதாலும், அப்பூமியில் 100-க்கு-60 க்குமேல் ‘வானம் பார்த்த, தாதலாலும், இதை முதலிலெடுத்து, எப்படியாவது ஒருமணியிருந்தவிடத்தி லிரண்டு வளரும்படி, செய்வதற்குச்சாதன மேற்படுத்திவிடவேண்டுமென்று அவருக்கு ஆக்கிரகம் பலமாக வுண்டாயிற்று. ஆகவேயவர் முந்தி நடந்த காரியங்களில் தோஷமின்னதென்று விசாரித்தறிந்து கொண்டு அதற்குப் பரிகாரத்துடன், இனியப்படி யாகாமலிருப்பதற்கு

உபாயங்களுங்கூட்டிப் பிரயத்தனம் பலமாகச் செய்து பணத்திற்கும் வகை காட்டியபின் இக்காரியம் மறுபடியுந் தொடங்கிற்று.

சைதாப்பேட்டையில் நடந்த காரியம் வீணானதற்குக்காரணங்கள் பல. ஆயினு முக்கியமாயுள்ள விரண்டொன்றைமட்டும் நாமிங்கே குறித்துவிடுவது யுக்தம். முதலாவது பூமியைப்பொறுத்த தோஷம் கிருஷி விஷயத்திற்குச் சைதாப்பேட்டைபூமி கேவலம் ருத்திரபூமி யென்னவேண்டும். ஏனெனில், அது அனேகமாய் வெறும் மணலும், கீழ்ப்பட்டுள்ளது அதைவிட மோசமானது மாயிருந்ததுபற்றி இதைப்பரீக்ஷை விஷயத்திற் கெடுத்தது பெரியபிசகு. இஷ்டர் சிலர்சொல்வதுண்டு, குதிரை சவாரிசெய்து தேறவேண்டியவர்கள், அராபிக்குதிரையைப் பிடிக்க வேண்டியது அவசியம். ஏனெனில் அவர் அதைச் சுவாதீனமாக்கிக்கொண்டால், மற்றைய குதிரைகள் அவருக்கு லக்ஷியமில்லையென்று, என்றாலுமிந்த நியாயம் சாகுபடி சம்பந்தமான பரீக்ஷைக்கு ஆகாதென்று விவேகிகளுக்கு விளங்கும். ஆதலால், ருத்திரபூமியைச் சாகுபடிக்கெடுத்தது முதல் குற்றமாம்.

இரண்டாவது சொற்ப ஆரம்பம். சில விஷயங்களில் ஆரம்பம் சிறிதாகவே யிருப்பது அழகு. 'சிறுகக்கட்டிப்பெருகவாழ்' என்று வீட்டிற்கும், 'முருக்கிலை தைத்து விற்று மூசற்பட்டாணி விற்றும்,' என்று வியாபாரத்திற்கும் சொல்லியது நியாயந்தான். என்றாலுமிந்தப் பரீக்ஷை காரியத்திற்குச் சைதாப்பேட்டை மணலில் இருநூறு ஏக்ராவை வைத்துக்கொண்டு யாரென்ன செய்யக்கூடும்?

இம்மாதிரித் தோஷங்களை யாலோசித்துச் செம்மையாயறிந்து லார்ட் கர்ஜன் கவர்ன்மெண்டில் இனி நடக்கவேண்டிய காரியங்களுக்காகப் புதிதாகப் பெரிய ஏற்பாடுகள் சில நடந்தன. முதலாவது இந்தியா முழுவதும் நடக்கவேண்டிய காரியங்களைப் பரிசோதித்தறிவதற்காகப் பங்காளத்தில் கண்டகீநதியோரத்தில் 'பூசா' வென்னுமிடத்தில் மகாமகாமண்டபமும், அதற்குவேண்டிய அங்கங்களு மேற்பட்டன. அதையிங்கு விவரிப்பதற்குச் சமயமில்லை. பிறகு முக்கியமாகாணங்களுக்கு ஒவ்வொன்றாகப் புரோவின்சியல் டிபார்ட்மெண்டுகளேற்பட்டன. மதிராசுக்காக வேற்பட்ட காலேஜ் கோயமுத்தூரிலும், பரீக்ஷைக்காக வேற்பட்ட தோட்டங்கள் அவ்விடத்தில் மட்டுமல்லாமல், பல்லாரி ஜில்லாவில் ஹகரி, அனந்தப்பூரில் ஹிந்திப்பூர், கோதாவரியில் சாமல்கோட்டை, கர்நூலில் நந்தியால், மஞ்சக்குப்பத்தில் பாலூர், திருநெல்வேலியில் கோவில்பட்டி, வடமலையாளத்தில் தளிப்பரம்பா, ஆகிய ஸ்தலங்களிலேற்பட்டிருக்கின்றன.

இங்கொன்று மங்கொன்றுமாக இதென்னத்திற்கென்று அனேகர் ஆக்ஷேபிக்கலாம். சைதாப்பேட்டையிற்கண்ட தோஷங்களில் முக்கியதோஷத்தை பரிகரிப்பதற்காகத்தான் அதாவது, இவ்விராஜதானி, சீதோஷ்ண ஸ்திதி, மழைமுதலிய லக்ஷணங்களில் பலவகைப்பட்டிருப்பதில், சிறந்து நிற்கும் லக்ஷணங்களை யபேக்ஷித்து, அதை ஐந்தாறு வட்டங்களாக்கியிருக்கிறது. அதில் ஒவ்வொன்றுக்கும் பரீக்ஷைக்காக ஒரு தோட்டமேற்பட்டிருக்கிறது. உதாரணமாக, தளிப்பரம்பா, மலையாள ராஜ்யத்திய பயிர்களைப் பரீக்ஷிக்க வுதவுகிறது. சாமல்கோட்டை கோதாவரிலங்கைகள் முதலிய கரும்பு விளையுநாட்டிற்குபயோகப்படுகிறது. அப்படியே பருத்திக்காகக் கோயிற்பட்டித் தோட்டமேற்பட்டிருக்கிறது.

இதுதான் நடக்கவேண்டியமுறை. ராஜதானி வெகு விஸ்தாரமாயிருப்பதும், சாகுபடி லக்ஷணங்கள் பலவாயிருப்பதும், சாகுபடிப் பயிர்கள் ஆயிரக்கணக்காயிருப்பதும், பிரத்தியக்ஷமாதலால், பலவிடங்களில் பரீக்ஷைக்காக ஸ்தலமிருக்கவேண்டியதவசியம். சுக்குக்கண்ட விடத்திற் பிரசவம் நடத்திவருவது அசாத்தியமாம்.

இனிக் கோயமுத்தூரிலுள்ள காலேஜ் படிப்பு விஷயமாய்க் கொஞ்சம் விவரித்துவிட்டு இதை முடிக்கிறோம்.

காலேஜில் சேர்ந்திருக்கும் மாணாக்கரனேகமாய்ப் பூஸ்திதியுள்ளவர்கள். இவர்களுக்கு இங்கிலீஷ் நன்றாகத் தெரியுமென்றாலும் உயர்ந்த பரீக்ஷை யனாவசியம். ஒவ்வொரு வருஷமும் வந்து சேருபவர்கள் மூன்று வருஷ காலமிருந்து விட்டுப் போகிறார்கள். இப்போது இரண்டு வருஷமாகப் படிப்பு நடந்து வருகிறது. வகுப்பிற்கிருபது பெயராகச் சுமார் நாற்பது பெயரிருக்கிறார்கள்.

படிப்பு முடிந்தபின் இவர்கள் போய்ச் செய்யவேண்டிய காரியம் அனேகமாய் க்ருஷிகர்ஷையாயுள்ளது. அவரவர் பூமியையவரவர் படித்தபடிப்பையும் யுக்தியையுமுபயோகித்துச் சாகுபடி நன்றாகும்படி வகைதேடுவதாம்.



இதுதான் இப்போதிருக்கும் முறைக்கும் முந்தியிருந்த முறைக்குமுள்ள பேதம். சைதாப்பேட்டையில் படித்தவர்களிலனேகமாய்ப் பெரும்பாலார் பூஸ்திதிக்காரரல்லர். அவர்கள் படிப்பும் நடுத்தரம். படித்துத் தேறியவர்களுக்குச் சர்க்கார் உத்தியோகத்தின் பேரிலேயே கண்ணிருந்தது. இவ்விஷயங்களிலெல்லாம் இப்போது வெகுதூரம் வித்தியாசப்பட்டிருப்பதால், இனிச் சர்க்கா ருத்தேசப்படி நடக்கலாமென்றே காணுகிறது.

ஏனெனில், சர்க்கார் இந்த டிபார்ட்மெண்டிலேற்படுத்தியிருக்கும் நூறு, இருநூறு, உத்தியோகஸ்தராலேயே இவ்விராஜதானியில் வேளாண்மை சீர்ப்படவேண்டுமானால் அது கூடாத காரியம். அதையனுசரித்து இக்காலேஜிலிருந்து படித்துப் போகிறவர்கள், அவரவர் மனோதருமத்திற் கெட்டியபடி விஷயங்களை யறிந்து போய்ப் பின்னிட்டவரவர் சாவகாசம் போல், அனுபவத்திலனேக ரகசியங்களைத் தெரிந்து, பத்திரிகை மூலமாகவோ வேறுவிதமாகவோ அவைகளை வெளியாக்கி உலகத்திற்கு உபகாரமாகிவந்தால், இப்போது இந்த விஷயமாய்ச் செலவாகும் பணத்திற்குப் பிரதி கிடைத்ததாகும். ஆனால் அது காலக்கிரமத்திலாக வேண்டியகாரியம்.

சிறிதாக விரண்டோ ருதாரணங்களிந்த ரகசியத்தைவிளக்கும். இத்தேசத்தில் கரும்பு பயிரிடுவோர், ஒவ்வொரு வருஷமும் கரணை வாங்கி நட்டுவரவேண்டித் தானிருக்கிறது. க்யூபாவிலோ, ஒருமுறைநட்டதை, ஏழுவருஷத்திற்கோ, எட்டு வருஷத்திற்கோ, கட்டை தழைய விடலாமென்றும், அதனால் மகசூல் குறைவதில்லையென்றும் கேள்வி. இதையிம்மாணாக்கரில் யாரேனும் விசாரித்துத் தங்கள் சாவகாசம் போலப் பரீக்ஷித்து இந்தியாவிலுமப்படியாகு முபாயத்தைத் தேடி யடைவாராகில் அதனால் நமது தேசத்தில் கரும்பு சாகுபடிக்கு எவ்வளவு சகாயம், சொல்லவேண்டுமோ?

தவிரக் கவர்ன்மெண்டார் இப்போது செய்திருக்கும் பிரயத்தனம் முந்திச் செய்ததைவிடப் பெரியதென்றாலும், ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்கையில், இன்னும் வெகு சொற்பமென்றே சொல்லவேண்டியிருக்கிறது. வாழையென்னு மொருபயிரையெடுத்துக்கொள்வோம். இதில் சுமார் நூறுவகைக்குமேலிருப்பது நமக்குச் சாதாரணமாகத் தெரியும். இவைகளில் சில இலைக்கும், சில காய்க்கும், சில பழத்திற்கும் விசேஷமாக வெடுத்தது. இவைகளின் குணகுணங்களையும், ஆதாயத்தையு மறியவேண்டுமானால், கோயமுத்தூர்த் தோட்டத்திற் பகுதிக்குமேல்வேண்டும்! ஆதலாலிம்மாதிரிக் காரியங்களினியாக வேண்டியபடி யாவதற்கும் இங்கிருந்து போகும்மாணாக்கர்தான் செய்து நிறைவேற்றவேண்டும். திருச்சிராப்பள்ளிக் குமாரரொருவரிங்கு வந்திருந்து படித்துத் தேறிப் போய்ப் பின் காலக்கிரமத்தில், வாழை விஷயமொன்றைமட்டு மெடுத்துக்கொண்டு இவ்வாறு பரீக்ஷித்துக் கண்டதைப் பிறருக்குந் தெரிவித்தால் எல்லோருஞ் சுகப்படுவார்கள். பழம் மலிந்து விற்றாலெல்லோருஞ் சாப்பிட்டுத் திருப்தியடைவார்களல்லவா?

கிருஷி விஷயமொன்றில் ஐகமத்தியமுண்டு செய்து நமது கிராமவாசிகளுக்கு ருசி காண்பித்தால், பிறகு அதை யனுசரித்தாகவேண்டிய கோஆபரேடிவ், என்னும் அந்நியோந்நிய சகாயமுறையில், பாங்கு முதலியன வேற்படுவதும், குடிகிணர் முதலிய ஆரோக்கியத்திற்குரிய சாதனங்கள் தானாகப்பலப்படுவதும், இட்டேரி முதலியன சீராவதும், காலக்கிரமத்தில் நிச்சயமா யாகவேண்டியவைகள். ஆனாலவைகளைக் குறித்து இங்கு விவரிப்பது அனாவசியம்.

---

### ஜனங்களுடைய குற்றங்களைக் கூறாதே.

சில அற்பர்கள் தம்மிடத்தி லிருக்கும் குற்றங்களைக் கவனியாமல் பிறருடைய குற்றங்களையே சங்கம் முதலான இடங்களில் உரைத்துக் கொண்டிருப்பார்கள் இது பெரிய அவலக்ஷணம். வாலிபர்களாயிருக்கும்பொழுது ஒவ்வொருவரிடமும் இந்தக்குணமிருப்பதுண்டு. பிறரைப் பழிப்பதால் தற்காலத்தில் நமக்கு மனதில் சந்தோஷமிருப்பினும், அது எக்காலத்திலும் ஜனங்கள் நம்மை இகழும்படி செய்துகொள்வதாகும்; நமக்கு ஸ்வாமி கொடுத்திருக்கும் புத்தியைப் பிறரைப் புகழுவதிலே உபயோகிக்க வேண்டுமே யல்லாது அவர்கள் நம்மை வெறுக்கும்படியான வழியில் உபயோகிக்கலாகாது. குமரகுரு ஸ்வாமிகளும் நீதிநெறி விளக்கத்தில் இந்த அர்த்தத்தையே எடுத்துப் பாடி இருக்கிறார்.

'பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவோன் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூக்கிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.'

# புஸ்தக விமர்சனம்.

துரைத்தன விளக்கம்.-இந்தியாவுக்காகத்தமிழில் எழுதியது. ஸ்ரீமான், டி-எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள், எம். ஏ, எல். டி. சாரித்திர பண்டிதர், பிரஸிடென்ஸி காலேஜ். விலை ரூ. 1. கார்டியன் அச்சுக்கூடம், மதிராசு.

இப்புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய ஐயரவர்களுக்கு வந்தனம். 'வித்தியாவிஹாரிணி' யில் இந்த நெம்பரில், ஸ்ரீமான் ராவ்பஹதூர் நாகோஜி ராயரவர்களும், வரன் முறையில் நாமுஞ் சொல்லியிருக்கிறபடித் தேசிய பாஷைகளில் சாமான்னியர் இக்கால தர்மத்தை யனுசரித்துப் படித்துத் தீரவேண்டியவிஷயங்களனேகமாயிருக்கப் புஸ்தகங்கள் மட்டும் வெகு துர்லபமாயிருப்பது பிரத்தியக்ஷம். அதிலும் கடிதம், அச்சு முதலிய லக்ஷணங்கள் சேர்த்தியாயமைந்துள்ளன அபூர்வம். சித்திர விளக்கங்களுடன் கூடியவைகளோ அனேகமாயில்லையென்றே சொல்லிவிடலாம். ஆதலால் இத்தருணத்தில் "துரைத்தனவிளக்கம்" வெளிவந்ததில் நமக்கு இரட்டைச் சந்தோஷம். ஏனெனில், அதை யெழுதியவரை விசாரித்தாலும், சித்திர லக்ஷணங்களைப் பரீக்ஷித்தாலும், அச்சு முதலிய சில்லரைகளைப் பார்த்தாலும், எல்லாம் கிரமமாகவிருக்க வேண்டியபடியே யிருக்கின்றன. சித்திரங்களல்லாமல், இந்தியாவினுடையவும், அதன் ஏகதேசங்களுடையவும் நக்ஷாக்களும், இருப்புப்பாதைகள், ஜனத்தொகை முதலிய விஷயங்களை விளக்க நமூனக்களும், ஜாப்தாக்களும், வேண்டியமட்டில் தாராளமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் நம்முடைய ஆத்மாவுக்கு வெகு திர்ப்திகரமானவை.

புஸ்தகம் நாலு பெரும் பாகங்களாகப்பிரிந்திருக்கிறது. முதலாவதில் துரைத்தனத்தின் பிரபாவங்களும் உரிமைகளும், கடமைகளும் விளங்குகின்றன. இரண்டாவதில் நம்முடைய, (என்றால்) பிரஜைகளுடைய உரிமைகளும், கடமைகளும். மூன்றாவதில், இந்தியா துரைத்தனத்தின் அமைப்பும், நான்காவதில் தேசசரித்திரச் சுருக்கமுமாக, விஷய விசேஷங்கள் தொடர்கின்றன.

இவைகளை யிப்படியமைத்திருப்பதின் யுக்திவாதம் சுலபமாய் விளங்கும். புஸ்தகம், "துரைத்தனம், விளக்கம்" எனப் பெயர்கொண்டிருந்த போதிலும், 'பிரஜை' யில்லாமல், 'துரை' யில்லையாதலால், இரண்டாம் பாகத்தில் 'நமது', (என்றால்) பிரஜைகளுடைய தருமத்தை விவரிக்கவேண்டியாயிற்று. பிரிட்டிஷ் துரைத்தனம் நவீனமானது பற்றியதை மட்டுமெடுத்தாளுவது சரித்திர தருமத்திற்கு விரோதமென்று, அதற்கு முன்னேற்பட்டிருந்த ராஜரீகங்களையும் கொஞ்சம் சொல்ல வேண்டியாயிற்று.

இப்படி முன்பின் சம்பந்தங்களை யோசித்துக் கிரமமாக விஷயங்களையமைத்து, அவ்வவற்றின் தாரதம்மிய ரீதியாகச் சுருக்கியோ விளக்கியோ செய்திருப்பதில், புஸ்தகம் வெகுதூரம் நன்கு மதிக்க வேண்டிய யோக்கியதை நிறைந்ததாகியது. ஆதலாலிதை 'எலிமெண்டரி' முதலிய பாடசாலைகளிலும், கிராமச்சிப்பந்திகள் வகையரா ஜனங்களுக்குள்ளும் பரவும்படி செய்யவேண்டியது எல்லாருக்கும் ஏற்ற தருமம். சுமார் 200 பக்கங்களுக்குள் இவ்வளவு சங்கதிகளை யடக்கி யெழுதியதற்கு ஐயரவர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டுமென்பது, இம்மாதிரிப் பிரயத்தனத்தில் சிறிதேனும் அனுபவமுள்ளவர்களுக்கெல்லாம் தெரியும்.

பள்ளிக்கூடங்களில் இம்மாதிரி யினித் துரைத்தனமுறைகளை ஸ்தூலமாயாவது சொல்லுவிக்க வேண்டுமென்று மதிராசு எட்யூகேஷன் டிபார்ட்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்கேற்ற புஸ்தகம் இனி யிதைவிட அழகாக அமைப்பது அரிது. "நாட்டுக்கு நல்லவர்களாய்" நமது குழந்தைகளாக வேண்டுமானல் அவர்களுக்குச் சிறுவயதிலேயே ஹிதோபதேசஞ் செய்து விடவேண்டுமென்று எல்லோருமொப்புவதாலதற்கு நல்ல சாதனமென விதையாலசிய மில்லாமல் கூறுகிறோம்.



புஸ்தகத்தில் நாம் காணுங்குறைவு ஒன்றேதான். அது கடுகிற் கடலையடைக்கப் பிரயத்தனஞ் செய்யும்போதெல்லா முண்டாவதாதலால் அதற்கு நிவிருத்தியில்லை. எடுத்திருக்கும் விஷயமொவ்வொன்றும் வளர்த்தினலெவ்வளவு வேண்டுமானாலும் வளரும். அப்படிச்செய்தால் பாரதமாகமுடியும். படிப்பவர்சங்கியை குறையும். இம்மாதிரிக் காரியங்களில் எதைத் தொடுவது, எதை விடுவதென்பது வெகுசிரமம். ஆதலால் புஸ்தகம் இவ்வளவு அழகாயமைந்தது வாஸ்தவமாக ஒரு பாக்கிய மென்பதிற்தடையில்லை. நக்ஷா முதலியவைகளில் இங்கிலீஷில் பெயர் முதலியன எழுதியிருப்பதற்கு ஐயரவர்கள் கூறும்நியாயம் நமக்குச் சரியாகக்காணவில்லை. இன்னொரு பதிப்பிலாவது அவைகளை மாற்றித் தேசிய பாஷைகளிலேயே போட்டுவிட வேண்டுமென்பது நமது கோறிக்கை.

இனியிந்தத் தரபுவரை யுபயோகிக்கவேண்டிய வரிசையுபயோகித்து ஐயரவர்களையுற்சாகப்படுத்தினல், மேலுமேலு மிம்மார்க்கத்தி லுழைத்துத்தனக்குத் தெரிந்ததைப் பிறருக்குப் போதிக்க அவர்பின்னடையாரென்பது நமக்குப் பூரணநம்பிக்கை. ஆதலாலிஷ்டர்களிலதக் கவனித்து அவரவர் சக்தியானுசார மிப் புஸ்தகத்தைக் கிராமவாசிகளாகிய நமது மகாஜனங்களுக்கு விசேஷித்தும், மற்றவருக்கெல்லாம் மொத்தத்திலு முபகாரமாக்குவாராக. தவிர நமது ஸ்திரீ ஜனங்களுக்குள்ளும் இச்சங்கதிகள் சாமான்னியமாய்ப்பரவவேண்டுமென்பதும் நமது கோறிக்கை.

---

### நன்னடக்கை அல்லது மரியாதை

நன்னடக்கை யென்பது நற்புத்தி, நற்குணம், தன் சுகத்தைத் துறந்தாயினும் பிறர்க்காகப்பாடுபடுதல், இவைகளடங்கிய ஓர் குணமாகும். இந்தக் குணம் திடீரென்று உண்டாகக்கூடியதல்ல; சிறுவயதிலிருந்தே பழக்கத்தினல் உண்டாகவேண்டும். சிறுவயதிலிருந்தே உண்டானல்தான் இந்தக்குணம் உடன் பிறந்ததாகும். இதனல் விளையும் நன்மைகள் பல.

# சமாசாரக் குறிப்புகள்

'மதிராசு' என்னும் பெயருக்குப் பொருள் விசாரித்ததில், ஒருவர் அது "தாய்" என்று பொருள்படும் பதமொன்றிலிருந்து திரிந்துண்டாகியதாகச் சொல்லுகிறார் பின்னொருவர் அதை "மாற்றார் தாய்," என்று பொருள்படுத்துகிறார். உஷ்ணம், சாக்கடைவைபவம், தெருப்புழுதி, முதலிய சில லக்ஷணங்களை நோக்குமிடத்துப் பின்சொல்லிய பெயரே அதற்குத் தகுமென அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

* * *

நாகப்பூரில் இவ்வருஷ ஆரம்பத்தில் கூடிய விவசாய அபிவிர்த்தி சங்கம் அனேக விஷயங்களைக் கவனித்து ஆராய்ச்சிசெய்ததில்,கடைசியாகத்தீர்மானம் செய்தது இது:-உணவிற்குதவும் தான்னியவகைகள், உடுப்பதற்குதவும் பருத்திவகைராக்கள் இவைகளைப் பயிரிடுவதில், பயிர் வகைகள் மாறி வருவது நலம். ஆனல் அப்படி மாறி வருவதில், உண்பதற்குதவும் பண்டங்கள்மேலுமேலு மதிகரிக்கும்படியாகவும், அதற்கு இரண்டாவதாக மற்றைய பதார்த்தங்கள் செழிக்கும்படியாகவும் பார்க்கவேண்டும். ஆகாரம் முதன்முதல் கிடைக்கவேண்டிய விஷயம். மற்றவையெல்லாம் அதற்குப் பிற்பட்டு விசாரிக்க வேண்டியவை, என்பது. இதை விவேகிகளெல்லோரும் சரியென்று ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், 'பசி வந்திட,' மற்றெல்லா விசாரங்களும் 'பறந்துபோம்' அல்லவா?

* * *

சென்ற எட்டு மாதகாலத்தில், பஞ்சாபில் பிரபவித்து வரும் நமது சுத்த வைதிக மதஸ்தர்களான ஆரியசமாஜ நண்பர்கள் இரண்டு பெரிய காரியங்கள் செய்திருப்பதை இஷ்டர் யாவருமறியவேண்டுகிறோம். இவைபோன்ற காரியங்கள் இன்னுமனேகம் நமக்குத் தாக்கல் இல்லாமல் போகின்றன. ஆகினுமிரண்டு உதாரணங்கள் போதுமெனக்கொண்டு

எழுதுகிறோம். முதலாவது ஐதராபாத்து சமஸ்தானத்தைச் சேர்ந்த ஓரூரில், மாத்துவராகப் பிறந்த பிராம்மணரொருவர், விதவையான சிறு பெண்ணொருவளை மணந்து, பிறகு அவளும் தானும் கிறிஸ்தவராகிக் குழந்தைகள் பிறந்து, நெடுநாளாகிய பின், கிறிஸ்துமதம் சரிப்படாமல் மறுபடி வைதிக மதத்திற்கு வரவேண்டுமென்றதில் பிராயச்சித்தஞ் செய்து சேர்த்துக் கொண்டது. இரண்டாவது, ஆஸ்திரேலியாவில் பிறந்த வெள்ளைக்காரப் பெண் ஒருவள், வைதிக மதம்வேண்டுமென்றதில், அந்த அம்மாளுக்குச் 'சீதாதேவி' யென நாமகரணஞ்செய்து, பந்திபோஜனமும்நடத்திச் சேர்த்தியது. இவ்விரண்டு காரியங்களையும் நமது பிராந்தத்திலுள்ள சுத்த வைதிகர் சிலர் மனனஞ் செய்து, அர்த்தத்தையும் விசாரிப்பாராக.

***

ஸ்ரீபுத்த பகவானுடைய அஸ்திவிஷயமாக நாமெழுதிய பிறகு, நமது நாட்டிலும் ஆங்காங்குள்ள புத்திமான்கள் கூடியாலோசித்து, அவ்வெலும்புகளை வெளியே யனுப்பக்கூடாதென்று தீர்மானித்துக் கவர்ன்மெண்டாருக்கு மனுச்செய்து வருவதாகக் கேள்விப்படுகிறோம். அப்படியே நடப்பதில் தான் நமக்கும் திருப்தியென்பது சொல்லாமலே விளங்கும்.

இலங்கைத்தீவில் இவ்வெலும்புகள் விஷயமாய்ச் சிம்மளப்புத்தர்கள் ஒரு சங்கம்கூடினார்கள். பரமகுருவான ஸ்தாவிரக சுமங்கள சுவாமிகள் அக்கிராசனாதிபதியாகிச் சங்கதியை விசாரித்தார்கள். முக்கியமாக, இப்போது காணு மெலும்புகள் ஸ்ரீபுத்த பகவானுடையவைதான் என்று எப்படி நிஷ்கரிஷையாகும், என்னும் பக்ஷம் விவாதிக்கப்பட்டது. பழைய கிரமப்படி யொருபுத்த சன்னியாசி பகவானுடைய எலும்புகளுக்குச் சாஸ்திரீதியாகவும், ஐதிகப்படியும் இருக்க வேண்டிய லக்ஷணங்களைச்சொன்னார். புத்தமதக்கிரந்தங்களை மூலத்தில் படித்துக் கீர்த்திபெற்று, இன்னும் அதைப் பரிஷ்காரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று போயிருக்கும், பங்காள கனவானாகிய ஸ்ரீமான்-ஸதீச சந்திர வித்யாபூஷணர், அதைச் சாரித்திர சம்பிரதாயமாக விவரித்துத் தக்கசாக்ஷியங்களுடன் விளக்கினார். இனியாகிலும், புத்தர்களும், அவர்களுக்குடற் பிறந்தாரென்னக்கூடிய ஜிலமதஸ்தர்களும், தங்களுடைய சம்பிரதாயங்களைச் சாரித்திரக் கிரமப்படியறிந்து இருவகைப் பயனையுமடைவார்களாக.

***

சடைப்பருத்தியென்பது, இந்நாட்டில் வெகுநாளாகப் பூணூல், கோவில் விளக்குத்திரி, முதலியவைகளுக்கு உபயோகப்பட்டு வருவது நம்மில் அநேகருக்குத்தெரியும். இரண்டொரு வருஷ காலமாக அதைச் சாமான்னியமாய் வஸ்திர வகைக்கும் சிரேஷ்டமெனக்கொள்ளலாமென்று, ஐரோப்பிய மிராசதாரர் ஒருவர் பத்திரிகை வாயிலாகப் பிரசுரப்படுத்தி நியாயமுங் கூறிவருகிறார். ஆனால் அது பிரபலப்படுவதற்கு இரண்டு இடையூறுகளிருக்கின்றனவாம். முதலாவது அதைத்தோட்டசாகுபடியாகச்செய்யவேண்டியது. அதற்குச் சௌகரியமில்லை. இரண்டாவது ஒருமுறை பூச்சி விழுந்தால் மறுபடி விடுவிப்பது அசாத்தியம். இவற்றில் முதற்கூறியது பெரிய ஆக்ஷேபம்.

***

பாம்புகளுக்கு இரைதேடுவதில் அதிகமாக யுக்தியிருப்பதாக வொருவருங் கண்டதில்லை. ஆனால் இந்தியாவிலுள்ள மிருகவர்க்கங்களைப்பற்றியெழுதிய ஒருவர் ஸ்ரீ காசிக்கடுத்திருக்கும் பிரதேசங்களிலுள்ள கோவிற்பசுக்களில் ஒன்றை யொருநாள் காலையில் அது மேய்ந்துகொண்டிருக்கையில் ஒரு பெரும் பாம்புவந்து காலைச்சுற்றிக்கொண்டு முலையையுறிஞ்சிப் பாலைக்குடிக்கக் கண்டதாக எழுதுகிறார்.

REGISTRAR OF BOOKS. REGISTERED 8 NOV 1909 MADRAS.



ஏழாவது எட்வார்ட் மகாராஜ சக்கரவர்த்தியவர்கள்

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

| புஸ்தகம் I.<br>Vol I. | சௌம்ய௵ அற்பிசிமாதம்<br>October 1909 | சஞ்சிகை 2<br>No. 2 |
|---|---|---|

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்,
வழுவல, கால வகையினானே."

ஆதிகால முதல் வெகுநாளாக மனிதரிலனேகருக்கு உயரப்பறக்க வேண்டுமென்னுமாசை யிருந்தேயிருக்கிறது. 'ஓ, கழுகு கருடன் மாதிரி ஆகாயத்தி லுயரப்பறந்து, வாயு வேகமாய்ப் போனாலெத்தனை யின்பமாயிருக்கவேண்டு' மென்று நம்மிலனேகர் தூங்காமற்றூங்கிக் கனவு கண்டுகொண்டு மனங்குறைந்திருக்கிறார்கள். ராமாயணத்தில் புஷ்பகமும், பாரதத்தில் துரியோதனனேறிவந்த சூத்திர அன்னப் பறவையும், சிந்தாமணியில் ராணி விசையையூர்ந்த மயிலும், சித்தர் வாயிற் போட்டுக்கொண்டு செல்லுங் கமனகுளிகையு மெல்லாம் இம்மனோரதத்தையே குறிப்பிடுவதாம். இவைகளிருந்தனவா, இல்லையா வென்பதை நாம் விவகரிப்பது அனாவசியம். நமக்கிப்போது தெரிந்தது, புத்திமான்கள் எத்தனையோ பிரயத்தனஞ்செய்து கடைசியாக நமது காலத்தில், நவீன கலைக்கியானங்களில் வல்ல 'சாஸ்திரிகளாகிய' யந்திர ஜாலிகர்கள், 'எயிரோபிளேன்' என்றும், 'எயர்ஷிப்' (என்றால், 'ஆகாயக்கப்பல்') என்றும் பெயரிட்டுச் சிலயந்திரங்களை யுண்டாக்கி விட்டார்களென்பதே. இவை சில வருஷங்களாகக் கொஞ்சங் கொஞ்சமாகச் சிறந்து, சென்ற ஒரு வருஷத்திற்குள் மணிக்கு நாற்பதுமுதல் எண்பது மைல் ஓட்டத்தில், சுமார் 300-அடி உயரத்திலோ, அதிகமாகவோ ஆகாயத்தில் பறப்பது சாத்தியமாகிவிட்டது. இரண்டொரு மாசத்திற்குமுன், பிரான்சுக் கரையிலிருந்து கடலைக்கடந்து முப்பத்தாறுமைல் தூரத்தை அரைமணி காலத்தில் ஒருவர்பறந்துவந்து சுகமாய்ச்சேர்ந்து, இங்கிலாந்தில் தமது நண்பருடன் போஜனம் செய்தார்.

பறக்கும் யந்திரம்

இனி இது சாத்தியமென்றாகி விட்டபடியால் இச்சந்தர்ப்பத்தில் பழைய காலத்திற்கும், இக்காலத்திற்கும் போக்கு வரவு விஷயத்திலிருக்குந் தாரதம்மியங்களை யறிவது வேடிக்கையாக

வும்,உபயோககரமாகவு மிருக்குமென்று நம்பி, நிலம், நீர், ஆகாயமென்னு மூவகைப்பொருள்களில் முறையே போக்குவரவிற்குரிய சாதனங்களைக் காலக்கிரமத்தை யனுசரித்தொரு நண்பரெழுதிவருவார். அதைச் சித்திரங்களைக் கொண்டு விளக்குவோம்.

நம்மிலனேகரின்றும் புகைவண்டியைக் கண்ணிற்காணாமலும் நீராவிப்புகைக்கப்பலைப்பற்றிக்காதிற்கேளாமலுமிருக்கலாம். ஆனால் சமீபகாலத்தில் புகைக்கப்பல் தலைக்குமேற் பறந்து போவதைப் பார்க்கச் சந்தர்ப்பமேற்படுமாதலாலவைகளைப்பற்றி யொன்றுந் தெரியாமலிருப்பது நல்லதென்றென நினைத்தே யிவ்விஷயத்தில் முயற்சியெனவறிதல் வேண்டும். இந்தரகசியந் தெரிந்த வித்துவானொருவர் இனிப் பத்துவருஷத்திற்குள்ளாக ஆகாயக் கப்பல்கள் யாத்திரைக்குபயோகப்படுமென்றும், தபால் சாமான்னியமாய்ப் போகுமென்றுஞ் சொல்லுகிறார்.

**இதனால் இந்தியர்களுக்கு உபகாரம்**

இந்த யந்திரம் எவ்வளவு சீக்கிரத்திலிந்த நாட்டுக்கு வந்தாலும் நல்லது. ஏனெனில் ஐரோப்பியர்கள் அதை யாத்திரை விஷயத்திற்கே அனுகூலமாக்கிக் கொள்ளவேண்டுமென்று ஆக்கிரகப்படுகிறார்கள். நாமோ அதனால் வேறு உபகாரங்களை யடையவேண்டுகிறோம். ஐரோப்பியருக்கு "நிமிஷங்களே பவுன்கள்" ஆகின்றன. என்றால், முற்காலத்தில் குதிரைகளைக்கொண்டு எட்டு மைல் சராசரி போய்க்கொண்டிருந்தவர்கள், இக்காலம் மணிக்கு நூறுமைல் போகும் ரயில் வண்டிகளைக்கூட வேகம் போதாதென்கிறார்கள். மோட்டார் வண்டிகள் முதலியஸாதனங்கள் தினம் பிரதி வேகம் அதிகரித்து வருகின்றன. கப்பல்களுமப்படியே. ஆதலால் ஐரோப்பியர்களுக்கு வேகத்தை இன்னுமெப்படி அதிகரிக்கச் செய்யலாமென்கிற நோக்கமே முக்கியமாம்.

நமக்கோ அது லக்ஷியமேயில்லை. ரயில் வண்டி ஒரு ஸ்டேஷனுக்கு 2-மணிக்கு வருவதானால், 12-மணிமுதல் ஸ்டேஷனில் வெய்யில் நன்றாக அடிக்குமிடத்தில் வந்து நின்று வண்டிவருவதை எதிர்பார்த்திருக்கிறோம். அது 10-மைல் வீதம் போனாலும் சரி, 20-மைல் போனாலும் சரி, அதைப்பற்றிக் கவனமேயில்லை. இப்புறம் ஏதோ உத்தியோகஸ்தர் சிலரும், வக்கீல்கள் சிலரும், வியாபாரிகளில் சிலரும் கொஞ்சம் கவனிக்கிறார்கள். என்றாலும் மொத்தத்தில் நாம் சொல்லுவது நிசமாதலால், 'வானக்கப்பல்' இங்கு வருவதில், அது வாயுவேகமாகிப்போய் நம்மை யோரிடமிருந்து மற்றோரிடம் சேர்த்து விடுகிறதென்று அதற்காக நம்மில் பெரும்பாலார் பிரமிக்கப்போகிறதில்லை.

ஆனால் நமக்குத் தெரிந்தமட்டில் இருவகை உத்தியோகஸ்தருக்கு அது வெகு உபகாரியாவது நிச்சயம். முதலாவது, தபால் கொண்டோடும் ஜனங்கள். ரயில் முதலிய சௌகரியமில்லாத அனேக இடங்களில் இப்போது தலைமேல் 500 ரூ பாரத்தையோ அல்லது சற்றேறக்குறையவோ வைத்துக்கொண்டு தொங்கோட்டமாக ஓடுபவர்களை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அவர்கள் முழங்கால்சதைகளைக் கவனித்திருக்கிறீர்களா? கத்திவெட்டுகூடக்காயப்படுத்துவது சுலபமல்ல. ஆனால் அந்தச் சதை அப்படியாகவேண்டுமென்பது ஈசுவர சங்கற்பமல்ல. ஆதலாலதைப் பரிகரிக்கவேண்டும். வானக்கப்பல் சாமான்னியமாக உபயோகப்பட்டால் இவர் கஷ்டம் விடியும். ஆனாலிவருக்குக் கதியென்னவென்றால், எத்தனையோ மார்க்கமிருக்கிறது.

இரண்டாவது, பாரஸ்டுரேஞ்சர் முதலிய உத்தியோகஸ்தர்கள். இவர்கள் இப்போது அனேகமாய் விஷச்சுரத்தால் உபத்திரவப்படாமலிருப்பது அபூர்வம். பாரஸ்டுகளில் உட்புகுந்து பரீக்ஷிப்பதில், வியாதிமட்டுமல்லாமல்



துஷ்ட மிருகங்களாலும் உபத்திரவப்படுகிறார்கள். இம்மாதிரிவாகனம் கிடைத்தால், பாரஸ்டுகளிலுள்ள விருக்ஷங்கள், கொடிகள், செடிகள், முதலியனவற்றை இதுவரைபோல் அரைகுறையாயில்லாமல், செம்மையாய்ப் பரீக்ஷித்துவரலாம். பாரஸ்டுகளிலுள்ள நீரைக்குடித்தோ, கொசு முதலிய விஷஜந்துக்களால் கடிபட்டோ அவஸ்தைப்படவேண்டியதில்லை. சர்க்காருக்கும் இப்போது தக்க மனிதரகப்படாமல்படும் உபத்திரவம் நீங்கும்.

**மகா ராஜச் சக்கா வர்த்தி யவர்களுடைய மகா சாசனம்**

சென்ற நெம்பரில் 1858-ம்வருஷத்திய மகாசாஸனத்தைப்பற்றிச் சில ஷராத்துகளும், அந்த மகா ஸாசன மொழிபெயர்ப்பும், வெளிப்படுத்தினோம். அதற்கடுத்து வருவது நமது மகாராஜச் சக்கரவர்த்தி யவர்களுடைய திருவாக்காம், அவர்கள் பட்டத்திற்கு வந்ததும் ஒருமுறையும், பிறகு சில மாசங்கள் கழிந்தபின் டில்லியில் பெரிய தர்பார் ஒன்றுகூட்டி அச்சமயத்தில் ஒருமுறையுமாக,இரண்டுதடவைகளில் தன்னுடைய ராச்சிய தருமத்தை விளக்கியிருக்கிறார். படிப்பவர்களுக்கு, இதற்கும், முந்தி மொழிபெயர்த்த மகாசாஸனத்திற்கும் வித்தியாசம் சொற்சுவை முதலிய லக்ஷணங்களில் வெகுவாயிருப்பதாகக் காணும். ஆனால் தாற்பரியத்தைக் கவனிப்பவருக்குஅப்படிக்காணாதென்றுநம்புகிறோம். சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் வெகு நேர்த்தியாக மகாராணியவர்களே சொல்லியிருக்கிறபடியால், இனியதை மறுபடியும் ஒப்புவிப்பதில் விசேஷப் பிரயோஜனமில்லை யென்பது பற்றிச் சுருக்கமாக ஒரேவாக்கியத்தில், "என் அருமைத்தாயாரான மகாராணியவர்கள் சொல்லியதையும், நடந்ததையும், எனக்கு வேதமாக வைத்துக்கொண்டிருக்கிறேன்," என்று சொல்லி , முடித்திருக்கிறார். ஆராய்ந்தறிதல் வேண்டும்.

**கோ ஆபரேடிவ் துண்டு வர்த்தமானம்**

இந்த விஷயமாய் ரிஜிஸ்திரார், ஸ்ரீமான்-ராம சந்திரராயரவர்கள் சிரமப்பட்டு இயற்றிய முதல்நெம்பர் வெளியாகி யிருப்பதைக்கண்டு சந்தோஷிக்கிறோம். இந்த முறையை விளக்கி அப்போதப்போது 'வித்யாவிஹாரிணியில்' எழுதி வருவதாக உத்தேசமிருப்பதால், விஸ்தரிக்க இது சந்தர்ப்பமல்லவென்று இரண்டொரு சங்கதிமட்டுங் குறிப்பிட்டு விட்டுவிடுகிறோம். சென்ற நாலு வருஷமாக இந்தியா கவர்ன்மெண்டாருடைய பிரேரபணையின் பேரில் இத்தேசமெங்கும் இந்த முறையை யனுசரித்துக் காரியம் நடந்து வருவதில் நம்மவர்கள் அதன் உபயோகத்தையறிந்து குதூகலித்து அங்கங்கே ரிஜிஸ்திராரவர்களுடைய சொற்படி நடந்து சுகப்பட்டுத்தான் வருகிறார்கள். என்றாலும், இதுவரை நடந்தது வெகு சொற்பமேயாதலாலும், இப்போதிருக்கும் சங்கங்களில் ஒன்றில் நடப்பது வேற்றூர்களிலிருப்பவைகளுக்குத் தாக்கல் இல்லாமலிருப்பதாலும், இந்தத் தோஷங்கள் பரிகாரமாக வேண்டிச்சங்கதி விளங்குவதற்காக இப்பிரயத்தினம் நடந்துவருகிறது. இங்கிலீஷில் மட்டும் ஆரம்பமாவதில் பிரயோஜனம் விசேஷமாயில்லையென்று, இரண்டு தேசியபாஷைகளிலும் இத்துண்டு சமாசாரங்கள் வெளியாகின்றன. அவைகளில் சாமான்னியருக்கு உபயோகப்படுபவைகளைக் கூடிய சீக்கிரத்தில் நாம் வேறு சில வர்க்கங்களுடன் 'வித்யா விஹாரிணி' அபிமானிகளுக்காகச் சேகரித்துப் பிரசுரஞ் செய்வதாயிருக்கிறோம்.

**வரசுல்கம்**

'வர சுல்கம்' என்பது 'கன்னியா சுல்கம்' என்னும் பெண்ணை விற்கும் துர்வழக்கத்தின் திரிபாக இக்காலத்தில் பெண்ணைப் பெற்றோருக்கெல்லாம் மிருத்தியுவாகி வாட்டுவது. இதற்குப் பிள்ளைக்கிரயம் என்று தாராளமாகச் சொல்லலாம். பெண்ணைப்பெற்றவர்களுக்கு எக்காலத்திலும்,எத்

தேசத்திலும் உபத்திரவங்கள் பலவிதமாக இருந்து வந்தே யிருக்கின்றன. பெண்ணை விவாகஞ் செய்து கொடுப்பதென்றால், தம்மைவிட உயர்ந்த குலமாகவாவது, தமக்குச் சமதையான குலமாகவாவது பார்த்து வரன் தேடவேண்டும். இது எச்சாதியாரிலும் காணக்கூடிய லக்ஷணம். ராஜ ஸ்தானத்தில் இப்படித்தேடிக்கொடுப்பதற்குக் குடும்பங்கள் யதேஷ்டமாயில்லாதது கொண்டும், உயர்குலத்தாரென்று சொல்லிக்கொள்ளும் சிலர் வரசுல்கம் அதிகமாகவேண்டுவதாலும், பெண்குழந்தைகளைப் பிறந்தவுடன் கழுத்தைப் பிசைந்து அநேகர் கொன்று விடுவதாக வதந்தி.

இப்படியிருப்பதில் இப்போது பலவருஷங்களாய் நமது பிராந்தத்திலும் இந்தத் துர்வழக்கமதிகரித்து வருவதை நம்மில் பலர் அனுபவித்துத் துக்கப்பட்டு வருவதைக் கண்டு விவேகிகள் பரிகாரம் தேடி வருகிறார்கள். ஆகையால் இச்சஞ்சிகையில், ஸ்ரீமதி-மீனாக்ஷியம்மாள் இது விஷயமாய் எழுதியிருப்பதை வெகு சந்தோஷத்துடன் பதிப்பிக்கிறோம். வயது சிறிதானாலும், அந்த அம்மாள் எழுதுவது வெகு அழகாயிருப்பதில், இப்படியே ஆங்காங்குள்ள ஸ்ரீமதிகள் எழுதியும், பேசியும், மனனஞ் செய்தும் வருவாராகில், நம்மிலுள்ள அனேக துராசாரங்கள் காலக்கிரமத்தில் அகன்றுபோம் என்பதில் தடையில்லை. ஐந்தாறு வருஷங்களுக்குமுன், இவ்விஷயமாய் நல்ல வியாசமெழுதுபவருக்கு இனாம் கொடுப்பதாயோர் பெரியவர் விளம்பரம் பிரசுரப்படுத்தினார். ஒரே வாக்கியத்தில் அவருக்கு மறுமொழியெழுதலாமென்று நமக்குக்காணுகிறது. அதாவது, உங்கள் பெண்களுக்கு நல்ல கல்வி பயிற்றுங்கள், என்பதேயாம். அதுமட்டும் நேராக நடந்தால், எல்லா மங்களங்களும் வழியோடுவருகின்றனவென்பதில் தடையில்லை.

**ஓர் ஆக்ஷேபம்.**

இப்படி நமது ஜனங்கள் தமக்குள்ளிருக்கும் பைத்தியகாரப் பேதங்களைத் தொலைக்கப் பிரயத்தனப்படுகையில் இந்தத் தருமகாரியத்திற்கும் விரோதிகளேற்பட்டிருக்கிறார்கள். அவர்களிருவகையார். பழைய ஸ்மிருதியின்பேரிலும் சிஷ்டாசாரத்தின் பேரிலும் பழிபோட்டுத் தங்களுடைய பிடிவாதத்திற்கும், முட்டாள்தனத்திற்கும் அவைகளை யாளாக்குபவரை நாம் என்னவென்று வர்ணிப்பது? இவர்கள்நிற்க, நாகரீகமுதிர்ந்து, மேனாட்டுக் கல்வியிலும் லௌகிகப் பிரவிருத்திகளிலுஞ் சிறந்துநிற்கும் விவேகிகளும் தாங்கள்கற்ற கல்வியைப்பாழாக்கி வேண்டாதவாதத்தில் யுக்தியையும் புத்தியையுஞ் செலுத்தி வருவதைப் பார்க்குமிடத்துத் தான் நமக்கு மனம் பலவிதமாகவும் நொந்து பிரமிக்கும்படி யாகிறது. இவர் கூறும் நியாயங்களில் சாஸ்திரீயம்போலக் காணுபவைகள் சில. அவற்றில் முக்கியமாயுள்ளது, வர்க்க நியாயமென்பது. அதாவது எருது, மாடு, எருமை, ஆடு முதலிய பசுவர்க்கங்களை வளர்ப்பவர், அவைகளில் அங்கலக்ஷணங்களோ, வேறு லக்ஷணங்களோ அதிகரிக்க வேண்டினால், அதற்காகச் சதை சரியாகச் சேர்ப்பதும், அவ்வாறே யொவ்வொரு தலைமுறையிலும் அவலக்ஷணங்கள் குறைந்து சுபலக்ஷணங்கள் வர்த்திக்குமாறு வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துவருவதும் வழக்கம். ஆதலால் மனித ஜாதிகளிலும் இவ்வாறு ஜாக்கிரதையாயிருப்பது நலந்தானென்பது.

இது சரியான நியாயந்தானாவென்று இச்சந்தர்ப்பத்தில் விசாரிக்கப் புகின் பெருகும். ஆதலால் சொல்லக்கூடியதெல்லாம் இதுதான். நியாயம் எப்படியிருந்தாலும், ஒரு நல்ல நியாயத்தை முன்னிட்டு அனேக அக்கிரமங்களேற்படுவது நமது ஆசாரகாண்டத்தில் வெகு சாதாரணமென்பதேயாம். அவைகளில் இது பெரிய அக்கிரமமாகியிருப்பது பிரத்தியக்ஷம். கைப்புண்ணுக்குக் கண்ணாடி யனாவசியம்.



**மதிராசு ஏட்டுப்பிரதிப்புஸ்தக சாலை**

நமது கவர்ன்மெண்டார் இந்நாட்டில் பிராசீனமாயுள்ள கிரந்தங்கள் வீணாகிக் கிடப்பதையும், செதிள் முதலிய பூச்சிகளுக் கிரையாவதையுங் கண்டு, அவைகள் உருப்படியாயிருப்பதற்காக சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒருசாலை யேற்படுத்தி ராஜதானியில் ஆங்காங்குள்ள ஏட்டுப் புஸ்தகங்களைக் கிரயத்திற்கு வாங்கியோ, நகல் செய்தோ, அல்லது தானமாக வாங்கியோ, சேகரித்து வைத்து வேண்டியவர்கள் பார்த்துப்போகச் சௌகரியஞ் செய்திருக்கிறார்கள். இது மெத்தவும் சிலாகிக்கத்தக்கதே. ஆனாலும் இதுவரை நடந்து வந்ததுபோல நடப்பதில் விசேஷப்பிரயோஜனமாக மாட்டாதென்பது நமது அபிப்பிராயம். வேறு அலுவலிலிருக்கும் ஒரு பெரிய உத்தியோகஸ்தருக்கு இதையும் பார்த்துக்கொள்ளும்படிக் கொஞ்சம் சம்பளமேற்படுத்திவிட்டு விடுவதில், அவருக்கு ஒழிவு கிடைக்கும்போதுதான் அவர் இதுவிஷயத்தில் உழைக்கமுடியும். இதனால் காரியம் சாவதானமாக நடப்பதுடன், நடந்ததைப் பரிசீலனை செய்து இங்கிலீஷ் தெரியாவிட்டாலும், வித்தை, புத்தி முதலியவற்றிற் சிறந்திருக்கும் நம்மவர்களுக்குத்தெரியும்படி யேதாகிலும் பிரசங்க முறைகளோ, சஞ்சிகை முறைகளோ ஏற்படுத்த முடியாமலுமிருக்கிறது. ஆதலாலினியாகிலும் இம்மாதிரியிராமல் காரியம் சீராக நடக்கவேண்டிப் புஸ்தகசாலைக்கதிபரான ஸ்ரீமான்-பண்டிதர் எம். ரங்காசாரியாரவர்கள் தமக்கு உதவியாக வொரு உத்தியோகஸ்தர் வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருப்பதாகக் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். அவருக்கிசைந்த உத்தியோகஸ்தர் ஒருவரேற்பட்டாலினி யிந்தத் தோஷங்கள் சீக்கிரங் குறைந்துவிடுமென்பதிற் சந்தேகமேயில்லை.

**லந்தனில் பிராசீன பாஷைக்கல்வி விஷயமாகப் பிரயத்தனம்**

சுமார் 30-வருஷங்களுக்கு மேலாகவே இந்தியாவில் உத்தியோகஞ் செய்வதற்கென்று இங்கிலாந்தில் சிவில் உத்தியோகப் பரீக்ஷைக்காகப் படித்துத் தேறிக் கலெக்டர் முதலிய அலுவல்களில் அமரும்ஐரோப்பியருக்கு ஒரு பெருங்குறைவு இருப்பதாக ஆங்கிலேயரும், நம்மவர்களில் பழைய உத்தியோகஸ்தரும் சொல்லிவருவதைக் கேட்டிருக்கிறோம். அதாவது, இவர்கள் முன்னிருந்தமாதிரித் தேசிய பாஷைகளில் இந்நாட்டுக் குடித்தனக் காரருடன் பேசப் பழகுவதில்லை யென்பதேயாம். இதனாலுண்டாகும் உபத்திரவங்கள் பல. ஏதாகிலும் காரியமாக வேண்டுமானால் துபாஷிகள் வேண்டியிருக்கிறது. இவர்கள் எப்போதும் நேராக நடப்பதில்லை. திருவனந்தபுரம் ஊட்டுப்பிறையில் போடும் சாப்பாடு வெகுவாய்ச் சீர்கெட்டேவந்திருக்கிறது. ஏதோ ஒரு காலத்தில் ஒரு திவான் பந்திவிசாரணைக்காகப் போனதில் சாப்பிடும் பிராம்மணரிலொருவர், “இம்மாதிரிச் சாப்பாடு போடுவதைவிட இதைத்தொலைத்துவிடுவது நலம்” என்று உரத்துக்கூவ, அது திவானுக்குத் தெரியாமல் பக்கத்திலிருந்தவரை அவரென்ன சொல்லுகிறார் என்று கேட்க, அதற்கு அவர் கூசாமல், “இப்படியே இந்தத் தருமம் என்னும் நடந்து வரவேண்டும், என்று வாழ்த்துகிறார்,” என்றாராம்.

இதுபோலவே இந்நாட்டில் பல விபரீதங்கள் நடக்கின்றன. சர்க்கார், குடிகளுடைய நலத்தையெண்ணி யெத்தனையோ காரியங்களை யாரம்பிக்கிறார்கள். அவைகளெல்லாம், நடவடிக்கையில் தவறிப்போகின்றன. சில சமயங்களில் உத்தியோகஸ்தருக்கு ஜனங்களுடைய நடை, உடை, பாவனையும், பேச்சும் தெரியாமல், விபரீத உத்தரவுகளும் அதனால் மனக்

கசப்பும் உண்டாகின்றன. இத்தோஷங்களைப் பரிகரிக்கவேண்டி நமது கவர்ன்மெண்டார் தேசீய பாஷைகளில் பரீக்ஷைகள் இரண்டு மூன்று தரயில் வைத்துத் தேறும் உத்தியோகஸ்தருக்கு ஆயிரக்கணக்காய் இனும் கொடுத்து வருகிறார்கள். என்றாலும் ஏதோ காரணங்களால் அது திருப்தியாயில்லை.

ஆனதுகொண்டு சில மாசங்களுக்குமுன், மதிராசு கண்காக்ஷி சபை சூப்பரிண்டாண்டு ஸ்ரீமான்-தர்ஸ்டன் துரையவர்கள், இந்தியாவிற்குவரும் உத்தியோகஸ்தருக்கு, இந்நாட்டு ஜனங்களுடைய, நடை, உடை, பாவனை, ஆசாரம், மதம், முதலிய சங்கதிகளைத் தெரிவித்துப் பயிற்சி செய்விக்க வேண்டுமென்றார். தற்காலம் லந்தனில் இத்தேசத்தியவும், ஆசியாவிலுள்ள இதரதேசங்களுடையவும், பாஷைகளைக்கற்பிக்க உத்தேசங்கொண்டு ஒரு வித்தியாலய மேற்பட்டு வருகிறது. இதற்குத் திரவிய சகாயம் வேண்டுமென்று காரியஸ்தர்கள் நமது செகர்டெரியவர்களைக் கேட்டதில், இவ்விஷயமாய் முன்னமே சகாயம் செய்திருப்பதால் அதைக்கொண்டே நடத்துவதுதான் நியாயமென்றும், ஆனால் அவர்களெடுத்த காரியத்தில் தனக்குப் பக்தியதிகமென்றும் பதில் சொல்லிமுடித்தார். தேசீயபாஷைகளை யந்தந்தத்தேசங்களிலேயேஜனங்கள் மத்தியிலிருந்துகொண்டு கற்பதுதான் இவ்விஷயத்திற் கெடுத்ததென்று நமக்கும் காணுகிறது. பழைய நாளில், மன்ரோ, தாமஸ், முதலியோர் எப்படிக்சற்றார்களோ அப்படிக் சற்பதற்கு உபாயமுண்டானால் தேடவேண்டும். அதனாலேயேதான் உத்தமபலன் கிடைக்கும்.

# காவிய காண்டம்

## 1. ரஸப்பிரகரணம்

உ. வே. நடாதூர்-வி. தேசிகாசாரியாரவர்கள்
எம்.ஏ., பி.எல்.

(22-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

கிரந்தங்களில் ஒரே ரஸம்தானிருக்கவேண்டுமென்பதில்லை. அது சாத்தியமுமன்று. ஏதேனும் ஒன்று பிரபலித்திருப்பதும், மற்றுள்ளவைகளிற் சில அங்கங்களாகி யிருப்பதும் சகஜமாம். தவிர ஒவ்வொரு ரஸத்தையும் விளக்கவேண்டி வருகையில் அதற்குமட்டுமே அங்கங்களாகிச் சில சில்லரை லக்ஷணங்கள் காணுதல்வேண்டும். காவியம், வர்ணனை மூலமாகச் சித்தியடையவேண்டியதாதலால், அனுபவத்தை யனுசரிதது மனதைப் படிப்படியாக வொரு ரஸத்திலழுத்துவது நியாயம். ஆதலால், காசிக்குப்போனதும் காவடிகொண்டு வந்ததுமாகச் சொல்லுவதில் ரஸம் பிரபலிப்பது அசாத்தியம்.

உதாரணமாக, உத்தரராம சரிதத்திற் பார்ப்போம். அதில் சோக ரஸம் முக்கியம். ஆனாலும், முதலங்கத்தில், எடுத்தவுடன் ஸ்ரீராமன் லக்ஷ்மணனைக் கூவிச் சீதையைக் காட்டுக்குக் கொண்டுபோய்விடு, என்பதில்லை. முதலில், சீதை கடோரகர்ப்பிணியாயிருப்பதால்,லாலனை செய்துவைத்துக் கொண்டிருக்கும்படி யாகத்திற்குப் போயிருக்கும் பெரியோர் சொல்லியனுப்புவதும், அப்படியே ஸ்ரீராமன் தன் சரிதங்களைச் சித்திரங்களாக வெழுதித் தேவிக்குக் காட்டி விநோதமாகக் காலங்கழிப்பதும், இது முதலிய சில்லரைகளை முன்னிட்டுப்பிறகு, வண்ணான் திட்டிய சங்கதியைக் கொண்டுவந்து, மறுபடி வனம்போகிற சங்கதி பிரபலிப்பது, யுக்திக்கும் அனுபவத்திற்கு மொத்திருப்பது. அப்படியே தமிழில் சிலப்பதிகாரத்திலும். கோவலன் மதுரை சேர்ந்து, பிறகு கள்வனுகி வெட்டுண்டு போகவேண்டிய சந்தர்ப்பத்தில்,



சிலம்பை விற்றுவருகிறேனென்று மனைவிக்கு உபசாரஞ்சொல்லிப் போகுங்காலத்தில், தான் பழையநாளிலவள் விஷயத்தி லபசாரப்பட்டதை யெல்லாங்கீழே காணுமாறு வர்ணித்துப்போவது, காவியலக்ஷணந் தெரிந்தவர்களெல்லோரும் சிரஸா வகிக்க வேண்டிய ரத்னமாம். அதாவது :—

"குடிமுதற் சுற்றமுங் குற்றிளை யோரு
மடியோர் பாங்கு மாயமு நீங்கி,
நாணமு மடனு நல்லோ ரேத்தும்,
பேணிய கற்பும் பெருந்துணை யாக,
வென்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே, கொடியே, புனைபூங் கோதாய்,
நாணின் பாவாய், நீணில விளக்கே,
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி,
சிறடிச் சிலம்பினொன் றுகொண்டி யான்போய்,
மாறி வருவன் மயங்கா தொழிகென."

மேல்வரும் பிரமாணத்தை யறிந்த வொவ்வொருவரு மித்தருணத்தில் இம்மொழிகளைக் கேட்டு விம்மி யழாமலிருந்தா லவர்ஹிருதயங் கல்லேயாம்.

ஆதலால் ரஸங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்துப் பெயரிட்டிருந்தாலு மவையொன்றுக்கொன்று சகாயஞ் செய்வதும், ஒரு ரஸத்திற்கே பல சில்லரை லக்ஷணங்கள் வேண்டியிருப்பதும், இப்படி யெல்லா முறைகளும் உத்தமகவிகள் கையில் அபாரமாகச் சோபித்திருப்பதை நாம் செம்மையாயறியவேண்டும். தவிர ரஸமென்பது, சப்த ஸ்பரிச முதலியவற்றிற்கெல்லாம் பொதுவாகி, மேலேநாம்குறித்தபடி காவியத்திற்கு மட்டுமேயல்லாமல், நாடகம், சங்கீதம், சித்திர முதலியவற்றிற்கும் லக்ஷணமாவதால், தின்பண்டங்களி லொருதாரண மிவ்விஷய்த்தை இன்னும் நன்றாய் விளக்கும். காரமிட்டாயென்று ஒருபக்ஷியத்திற்குப் பெயரிடுகிறோம். ஆனாலதை யுண்டாக்கும் விதத்தைக் கவனிக்கையில், பருப்பு வகைகளிலுள்ள ருசியும், உப்பும், மிளகாய்க் காரமும், எண்ணெய் அல்லது நெய்ச் சுவையுஞ் சேர்ந்தே யப்பண்டமாவது பிரத்தியக்ஷம். காவியத்திலு மப்படியே. ஏனெனில் பிரபஞ்ச சரிதம் சத்துவரஜஸ்தமோ குணங்களாகிய மூன்றுஞ் சேர்ந்தன்றோ வுண்டாவது. ஆதலா லொவ்வொரு சரிதமும் பல ரஸங்களை லக்ஷணமாக் வுடையனவென்று காளிதாஸ சுவாமி சொல்லுகிறார். இப்படி முக்குணங்கள் பலவாறாகச் சேர்ந்துண்டாகிற பிரபஞ்ச வியவகாரத்தைக் கண்ணாடிபோல் விளக்குவது காவியத்தினுடைய லக்ஷியம். ஆகவே யதை ரஸ பூர்வகமாயறிந்துதான் ஆனந்த மடையவேண்டும்.

இதிப்படியிருக்க இந்த மகா ரகசியத்தை மறந்து, யமக முதலிய கழைக்கூத்துகளைச் சிலாகித்தும், அதையே நெடுங்காலம்பயின்றும், தேகத்தையுங் கிலேசப்படுத்திக்கொண்டு, காலத்தையும் வீணாக்குவதில் ஒரு பலனுமில்லையென்பது புத்திமான்களுக்கு நன்றாக விளங்கும். காவியத்திற்கு இன்னது லக்ஷியமென்பதை வித்துவான் மம்மட (மன்மத) சுவாமி யிவ்வாறு கூறுகிறார் :—

"காவிய மென்பது, காளிதாஸாதிகள்போலக்கீர்த்தியை வேண்டியும், வேறுசிலர் போலப் பணம் வேண்டியும், பிரபஞ்ச வியவகாரங்களை விளக்கவேண்டியும், அமங்களங்களைப் பரிகரிக்கவேண்டியும், கேட்குங்கால் பிறருக்கு இன்பமுண்டாக்கவேண்டியும், நாயகிபாவமாக மனத்தைக் கவர்ந்து (மருந்துமாகிப் பாலுமாகி,) ஹிதத்தைச் செய்யவேண்டியுமுண்டாவதாம். ஆதலால் அது வேதத்தில் ஆக்ஞாபனஞ்செய்வதுபோல, அதிகார தோரணியுடன், "சத்தியத்தைச் சொல், தருமத்தை யனுஷ்டி," யென்று கேட்போர் மறுமொழிகூற வசமில்லாமல் நடுங்கும்படி, சாஸன ரூபமாகவாவது, முரட்டு வழியிலாகிலும் நம்மைப் பலவந்தப்படுத்தி நன்மை செய்யும் இஷ்டருடைய கடூர ரூப மாகவாவது காணமல், நாயகியானவள்,

நமக்கு மனம்போகும் வழியிலேயே நம்மைப் போகவிட்டு, நம்மையறியாமல் நேர்வழிகொண்டு சேர்ப்பதுபோல, ஆனந்தமும் பிரயோஜனமும் சேர்ந்தமைந்திருப்பதாம். ஆதலாலிதற்கு, உலகத்திற்கேற்பட்ட கால தேசவர்த்தமானங்கள், நிமித்தம், கிரியை, பலன், முதலிய நியமங்க ளில்லவேயில்லை. கேட்போருக்கு இனிமையையே லக்ஷியமாகக் கொண்டு லோகோத்தரமாகப்போவது இதன் போக்காம். கேட்போரும், படிப்போரும், ராமாதிகள் போல நடக்க வேண்டுமென்றும், ராவணாதிகள்போல நடப்பது கூடாதென்றும் சூசனையாக மொத்தத்தில் தாற்பரியம்.

இங்கிலீஷில் ஷேக்ஸ்பியர், ஷெல்லி, முதலிய உத்தமகவிகளு மிப்படியேதான் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் உத்தமகவி லக்ஷண மெக்காலத்திற்கு மெந்நாட்டிற்கு மொருவகைப் பட்டதே யென்னலாம். அதுகொண்டு இச்சாஸ்திரத்திற்கு மகிமை அபாரமாயிருப்பதை யிஷ்டர் கிரகிக்கவேண்டும்.

---

**அன்றுயோசனை ஒன்றேபோதும்**

காலைமுதல் மாலைவரையில் நமக்கு நமது ஜாதி தொழில் குலாசாரங்களை யொட்டி ஏற்பட்டிருக்கும் காரியங்களை அவ்வவைகளுக்குக் குறித்த காலத்தில் முடித்து சந்தோஷமாய் இருப்போமேயானால் அதற்கு மிஞ்சின சுகம் வேறில்லை; தினந்தோறும் நாம் செய்யவேண்டிய காரியம் வெகு அதிகமாகவிருக்கும். மனவருத்தமில்லாமல் சந்தோஷமாகத்தான் அதைச் செய்யவேண்டும். நமது தொழிலை நாம் செய்வதில் நமக்கு எவ்வளவோ துக்கமும் சங்கடமும் ஒவ்வொருவேளை சம்பவிக்கும். அவைகளை நாம் சந்தோஷமாக வகித்துக்கொள்ளவேண்டும். மன்பூர்வமாய் நாம் ஒப்புக்கொள்ளும் ஒவ்வொரு காரியத்தையும் பாபமான எண்ணங்களைத் தவிர்த்து கடவுளுக்குப் பயந்து நாம் அன்றாடம் செய்யவேண்டிய நமது கருமங்களையும் செய்துவருவோமேயானால் ஒருநாளும் நாம் அவமானப்பட்டு வருந்தமாட்டோம். எப்பொழுதும் ஈசுவரன் ஒருவன் நம்மை எல்லாவித சங்கடங்களிலிருந்தும் ரக்ஷிப்பார் என்று அவனுடைய கருணைக்குப் பாத்திரர்களாய் அவன் மேல் எல்லாபாரத்தையும் போட்டுப் பாபத்துக்குப் பயந்து நடக்கவேண்டும்.

## 2. பிள்ளைத் தமிழ்

ஸ்ரீமான்-பண்டித வெங்கடரமண
அய்யரவர்கள் கோயம்புத்தூர் காலேஜ்

தமிழைப் புகழ்பவர்களும், தமிழின் பெருமையை விவரிப்பவர்களும், பலவிதமாக ஆரம்பம் செய்வது சகஜம். அவரவர் மனோதருமத்தை யனுசரித்து அவரவர் ருசி பலப்படும். ஆகவே தமிழில் காவிய விஷயமாக ஏதாகிலும் எழுதவேண்டுமென்று இஷ்டராகிய இப்பத்திராதிபர் பலவந்தப்படுத்தியதில், அவருடைய பலவந்தத்திற்காக என்னசெய்வதென்று யோசிக்குமிடத்து, 'பிள்ளைத் தமிழ்' என்பது தமிழ்க் காவியங்களுக்குமட்டுஞ் சில விஷயங்களில் சிறந்திருப்பதாக எனக்குத் தோன்றுவதால் அதைப்பற்றிக் கொஞ்சம் பிரஸ்தாபித்து விடுவது யுக்தமாகக் காணுகிறது.

காவியத்திற்கு விஷயமாகவுள்ள சகலத்தையும் தமிழாசிரியர் 'பொருள்' என்பர். இப்பொழுது சாமான்னியமாய்ப் 'பொருள்' என்பது தொட்டறியக் கூடியவைகளுக்குமட்டுமே உபயோகப்பட்டு வருகிறது. ஆனால் நாம் இவ்விடத்தில் 'பொருள்' என்பது அறிவிற் கேட்டுவதாகிய யாவற்றையுமெனக் கொள்ளல் வேண்டும். ஆகவே யது இருவகைப்படும். அவை யாவன, கண் முதலிய இந்திரியங்களாலறியக் கூடிய வெளிவிஷயங்களும், மனத்தின் கண்ணே யாராய்ச்சி செய்தறியவேண்டிய உள்ளடங்கிய விஷயங்களுமாம். இவற்றிற்கு முறையே 'புறப்பொருள்' 'அகப்பொருள்' எனப் பெயர் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. தொல்காப்பிய விலக்கணப்படி இவைகள் விசேஷமாகச் சிங்காரம், வீரம், என்னும் இரண்டு ரஸங்களையே முக்கியமாகக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் அதற்கு முற்பட்ட காலத்திய அனுபவத்தில், இவ்விரண்டு ரஸங்களுக்கு உரிய விஷயங்களே பிரபலித்திருந்தனவென்று ஊகிக்க இடமுண்டு.



இதைக் குற்றமாகக்கொள்வது பிசகு. கால தருமத்தை யனுசரித்தே காவிய முதலியவை பிரபலிக்கின்றன. புத்தமதம் வடஇந்தியாவில் பிரபலித்ததற்கு அடையாளமாக 'நாகானந்தம்,' இன்னும் விளங்குகிறது. இந்து மதத்தில் பக்திமார்க்கம் பிரபலித்ததற்கு அடையாளமாகப் புராணங்கள் பிரபலித்து வந்தன. ஐரோப்பா முதலிய வேறு கண்டங்களிலும் இதே யனுபவம் கைகூடிவந்திருக்கிறது. ஆகையால் கால தருமத்தை யனுசரித்தே ரஸங்கள் பிரபலிப்பது சித்தம்.

ஆனால் நாம் இப்போ தெடுத்திருப்பது 'பிள்ளைத்தமிழ்' ஆதலால், அதற்கு வேண்டியதைமட்டும் பேசி நிறுத்தவேண்டியது நமது கடமை. ஆதலால் அதை யின்னதென்று முதலில் சொல்லிவிட்டுப் பிறகு அதற்குள்ள லக்ஷணங்களில் முக்கியமான வற்றையும் அவற்றிற்குள்ள நியாயங்களையும் குறிப்பிடுகிறோம். இவற்றை யுதகரித்து உத்தம கவிகள் செய்திருப்பதைச் சிறிதெடுத்து விளக்கி விட்டுப் பிறகு இம்மாதிரி வேறு பாஷைகளிலிருப்பதையும் சிறிது கவனித்து முடித்துவிடுகிறோம்.

'தமிழ்ப் பேரகராதி'யை யெடுத்துப் "பிள்ளைக்கவி" என்பதைப் பரீக்ஷித்தால், அதில் இவ்வாறு லக்ஷணமதற்குக் காணுகிறது. "பிள்ளைக்கவி—இதனிலக்கணத்தைக் கூறுங்கால், ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத் தமிழ், என விருவகைத்து. இவற்றுள், இரண்டாமாதத்திற் காப்புக் கூறுதலும், ஐந்தாமாதத்திற் செங்கீரை கூறுதலும்............ ஏழாமாதத்திலமுதூட்டலும், எட்டாமாதத்திற்றாலாட்டு கூறுதலும்...........பதினெட்டாமாதத்திற் சந்திரனை யழைத்தலும்," ...... ............இவைபோன்ற பாலிய அவஸ்தைகளைப் பன்னிரண்டாண்டளவும் விஸ்தரித்துக் கூறுவதாகும். சந்திரனை யழைப்பதீறாகவுள்ள லக்ஷணங்கள் இருவகைக்கும் பொதுவாகும். பிறகு ஆண்பாலுக்குச் சிறுபறை கொட்டல், சிறுதேருருட்டல், உடைவாள் தரித்தல், முதலிய அவஸ்தைகளையும், பெண்பாலுக்குப் பாவைக்கு மணம்பேசுதல், நல்ல புருஷனைப்பெறத் தவஞ்செய்தல், அம்மானையாடல், ஊசலாடல், முதலிய அவஸ்தைகளையுஞ் சிறப்பித்துக்கூறுவது சம்பிரதாயமாம்.

தவிர இவ்வவஸ்தைகளைச் செம்மையாய் விளக்குவது கவிகளுடைய மனோதருமத்திற்கியைந்தபடியாயிருப்பினும், விருத்தங்களில் சில நிபந்தனைகளுமுண்டு—சில வெண்பாவிலும், சில அகவற்பாவிலு மிருக்கவேண்டு மென்பதும், ஒவ்வொரு பருவமும் பத்துப் பாசுரங்களில் வர்ணிக்கப்பட வேண்டு மென்பதும் போன்றனவாம்.

இந்த லக்ஷணங்களுடன் இம்மாதிரிக் காவியத்தை யியற்றி யடையவேண்டிய பலனென்னவென்று நமது குமார நண்பர் ஆக்ஷேபிக்கலாம். இப்போது தமிழ் வல்லோரெல்லோரும் சரியென்று ஒப்பியிருக்கும் ஐந்தாறு நூல்களைக் கவனித்தால் இதற்குள்ள நியாயங்களும், அடையக்கூடிய பலனும் வெளியாகுமென்று நம்புகிறோம். அகராதியில் உதாரணமாகக் கூறியிருப்பது, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், ஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், போன்றன ஆண்பாலுக்கும், மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை யம்மை பிள்ளைத்தமிழ், வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ், போன்றன பெண்பாலுக்கும் காணுவன. ஆனால் மத வைராக்கியத்தை யொழித்து நோக்குமிடத்து, இவற்றிற்கெல்லாம் முற்பட்டதும், பிள்ளைத்தமிழின் இலக்கணத்திற்கே ஆதாரமாகக்கூடியதுமான பெரியாழ்வார் திருமொழிப்பாசுரங்களை வெகு சிலாக்கியமானவையாகக்கொள்ளல்வேண்டும்.

இந்நூற்பெயர்களை ஜாக்கிரதையாகக் கவனிக்குமிடத்து, பிள்ளைத் தமிழுக்கு மூலகாரணம் எளிதில் விளங்கும். அவையெல்லாம் வழிபடு தெய்வங்களை ஸ்தோத்திரஞ் செய்வதற்

காக ஏற்பட்டனவாதலால், பக்திரஸத்தை விளக்க வந்தனவாம். அவைகளில் வெகு புராதனமாகியது, நமக்குத் தெரிந்தவரை பெரிய திருமொழியென்று காணுவதால், ஸ்ரீ பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாலிய சேஷ்டைகளை நன்கு விளக்கும், பத்தாவது ஸ்கந்தம் நமது தமிழ் நாட்டில் பிரவசனமாகிய பின்தான் இம்முறையாகப் பக்திசெய்து ஆனந்தமடைய நமது புலவர்கள் பிரவிருத்தி யெடுத்தார்களென்று காணுகிறது.

வழிபடு தெய்வத்தைத் துதிப்பது பலவிதமென்பது பிரத்தியக்ஷம். க்ஷேத்திரபுராணமும் முறையிடுகிறது. அர்ச்சனை முதலிய முறைகளிருக்கின்றன. ஞான மார்க்கமாக வேதாந்த ரகசியங்களை யமைத்துப்பாமாலை சூட்டலாம். இன்னும் வேறெந்த விதமாகிலும் வழிபடலாம். ஆனாலிம் முறைகளிலெல்லாம் கவிதைச் சாதுரியத்திற்கு விசேஷமா யிடமில்லை. பிள்ளைத்தமிழிலோ வென்றால், பக்தி முற்றுமளவிற்குக் கவிதையும் சுவைகூடிப் பரிமளிக்கும். இதுகேவலம் பாசுரங்களில் மட்டுமல்ல. பரமபாகவதர்களான சங்கீத வித்துவான்கள், விதுஷிகள், முதலியோர் வாயைத்திறந்தால், பிள்ளைத்தமிழ்ச் சுவை யில்லாமல் கிருதிகளிழைப்பது அபூர்வம்.

ஆனாலிப்படிச் செய்வதில், இதரதேசிய பாஷைகளிலும், சமஸ்கிருதத்திலும், வழிபடு தெய்வத்தையேனும், பரப்பிர்மத்தையேனும், நாயக நாயகிபாவமாகப் பாடுவதே வெகு சாமான்னியமாம். ஆதலின் அவைகளைத் "கருணைத்தமிழ்" என்னல் தகும். உதாரணமாகப் பங்காளவைஷ்ணவ குருவாகிய ஸ்ரீசைதன்னிய சுவாமிகளுடையவும், அவருக்கு முந்திய ராஜபுத்திரினியாகிய மீராபாய் அம்மையுடையவும் கிருதிகளைக் கவனித்தால், "பரமாத்துமாவாகிய ஸ்ரீகிருஷ்ணனொருவனே புருஷன். மற்றையரெல்லோரும் ஸ்திரீகளே," என்கிற ஒரு ரகசிய மெங்கும் காணக்கூடியது இதையாதாரமாகக்கொண்டு அனேகமாயிரம் கிருதிகளும் பிரபந்தங்களும் அவரவர் மனோதருமத்தை யனுசரித்துப் பலவிதமாக வுண்டாகியிருக்கின்றன. சில சுமாராகவும், அனேக மிக்காலத்திற்குச் சபைகளில் விவரிக்கக் கொஞ்சமனுகூலங் குன்றியுமிருக்கின்றன. ஸ்ரீ ஜயதேவஸ்வாமி கிருதமாகிய அஷ்டபதி முற்றிலுமிவ்வாறே யமைந்ததாகும். ஆனால் அதில் சபைக்குதவாததாக விசேஷமாயில்லை.

பிள்ளைத் தமிழுக்கோவென்றால், இந்த அவகுணங்கள்சிறிதுமில்லை. ஏனெனில் அதற்கு விஷயமாவது பாலிய சேஷ்டைகள். ஆகலால் அவற்றில் சபைக்கு யோக்கியமாகாத விஷயமே கிடையாது. பாகவதத்தை யனுசரித்துண்டாகிய பெரிய திருமொழியிலிருந்து வெகு சிரேஷ்டமான பாசுரங்களை யெடுத்து இதை விளக்கலாம். பிற்பட்டுவந்த மற்றைய கவிகளிலும் கற்பனை யனேக சந்தர்ப்பங்களில் நன்றாய் அமைந்திருக்கின்றன வென்றாலும், இவையெல்லாம் பிள்ளைத் தமிழிலக்கண முற்றிய பிறகு உண்டானவை யாதலால், கைகால்களைப் பலமாகக் கட்டிக்கொண்டு நடப்பவர் படுஞ்சிரமமிவற்றிற்கு வெகு அதிகமாயுண்டு. இலக்கணவிதிகள் சற்றிளகிநிற்கும் வரும்வரை 'யிலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பல்' முறையாகவும், சாத்தியமாகவுஞ் சொல்லலாம். இலக்கண விதிகள் கைகால்களுக்கு விலங்குகளாக வேற்பட்ட பின்னோவென்றால், இலக்கியஞ் சற்றுத் தத்தளிப்பதே யெல்லாத் தேசத்தாருடையவும் அனுபவமாம். ஆகவே பெரிய திருமொழி யாசிரியருக்கு இம்மாதிரி விலங்குகளேற்படாததுடன், அவர் மனோதருமமும், பக்தியும், சக்தியும், அபாரமானதுகொண்டு, அவர் பிள்ளைத்தமிழும் அவ்வளவிற்குச் சோபித்துக்காணுவது அதிசயமன்று. அதிகமாய் வளர்த்துவதற்கு இது சமயமல்லவாதலால், இரண்டொரு பருவங்களைமட்டும் இவ்வாசிரியர்விளக்கியிருக்கும்முறையைக் குறிப்பிட்டு,



மற்றைய பருவங்களை நல்லறிவுடையோர் அந்நூலிற் படித்துணருமாறு விட்டுவிடுவோம். இப்போது பிரசுரமாகி யிருக்கும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரக்கிரமங்களை நோக்குங்கால், பின்னிட்டு வந்திருக்கும் 'பிள்ளைத்தமிழ்' கிரமத்திற்கும், இதற்குமுள்ள பேதங்கள் எளிதில் விளங்கும்.

பக்தி ரஸத்தை நாயகநாயகி பாவமாய்ச் சிறப்பித்தல் சுலபமென்றும், அது சர்வசாதாரணமென்றும் மேலே குறிப்பிட்டோம். பிள்ளைத் தமிழிலோ அந்த ரஸம் தாய் மகவிடத்திற் செய்யும் அன்பை விளக்குவதே. உலகத்தில் பிராணிவர்க்கங்களிலெல்லாம் காணக்கூடியதும் அன்புவர்க்கங்களில் முதலாயதும் இதுவேயாம். ஆனதுகொண்டு இவ்வன்பை யாழ்வார் விளக்கியிருப்பதைச் சற்று கவனிப்போம்.

ஸ்ரீ கிருஷ்ணனாகிய குழந்தையின் அவயவங்களைப்பாதாதிகேச பரியந்தம் யசோதை உற்றுநோக்கி மகிழ்ந்ததாக வருணிக்கும் பாசுரங்களில் எதை யெடுத்தாலும் சுவை நிறைந்திருப்பதைத் தமிழ் சிறிதேனுங் கற்ற யாரும்படித்து ஆனந்திக்கக்கூடும்.

"என் தொண்டைவாய்ச் சிங்கம் வா
வென்றெடுத்துக் கொண்டு,
அந்தொண்டைவா யமுதாதரித்து,
ஆய்ச்சியர்,
தந்தொண்டைவாயால் தருக்கிப்
பருகும் இச்
செந்தொண்டை வாய்வந்து காணீரே,
சேயிழையீர் வந்துகாணீரே."

இந்தப் பாசுரத்தில் ஸ்திரீகள் அழகு வாய்ந்த குழந்தைகளை யெங்கு காணினுமெடுத்து முத்தமிடுவது முதலிய சகஜகுணங்களை நன்கு விளக்கியது காண்க. இதுபோலவே திருத்தாலாட்டில்,

"சங்கின்வலம் புரியும் சேவடி
க்கிண்கிணியும்,
அங்கைச் சரிவளையும் நாணு
மரைத்துடரும்
அங்கண் விசும்பிலமரர்கள் போத்
தந்தார்,
செங்கட் கருமுகிலே தாலேலோ,
தேவகி சிங்கமே தாலேலோ."

நாளதுவரை, குழந்தைகளுக்குத் தமிழ்நாட்டுப் பழையவழக்க மாறாயிருக்கு மிடங்களில், இவ்வாபரணங்களை யெங்குங் காணலாம். அம்புலிப் பருவத்தில், எந்தப்பாசுரம் சிறந்தது, எது தாழ்ந்ததென்று சொல்லுவது சுலபமன்று. ஆயினு மிவ்விரண்டும் போதுமானது:—

"என்சிறு குட்டனெ னக்கோரின்
னமுதெம் பிரான்
தன்சிறுக்கைகளால் காட்டிக்கா
ட்டியழைக்கின்றான்,
அஞ்ச னவண்ண னோடாட
லாடவு றுதியேல்,
மஞ்சில் மறையாதே மாமதீ, மகி
ழ்ந்தோடிவா.
சக்கரக் கையன் தடங்கண்ணால்
மலர விழித்து,
ஒக்கலைமே லிருந்துன்னை யேசுட்டி
க்காட்டுங் காண்
தக்க தறிதியேல், சந்திரா, சலம்
செய்யாதே,
மக்கள் பெறாத மலட னல்லையேல்,
வா, கண்டாய்."

இப்பாசுரங்களில் சுவபாவோக்தி யமைந்திருப்பதின்அழகை விவரிக்கப்புகின் பெருகும். பாவிற்குரிய நிர்ப்பந்தங்கள்எவ்வளவுகுறையக்கூடுமோ அவ்வளவுங் குறைந்து, கேட்போர் யாரும் ஆனந்தித்துக் கூத்தாடக்கூடிய பாடல்களில் இவை முதல்தரமானவை யென்பதில் தடையேயில்லை.

அம்புலிப்பருவம் ‘பிள்ளைக்கவியில்’ வெகு சிறந்ததாக வித்துவான்கள் சம்மதித் திருப்பதற்கு, இம்மாதிரி யழகுவாய்ந்த பாசுரங்களே காரணமாயிருப்பினு மிருக்கலாம். ஆகவே யிப்பாசுரங்களை யெல்லாம் படிப்பவருக்கு, எல்லாச்சுகிர்தமுங் கிடைக்குமென்பது சித்தம்.

இவ்விரண்டோருதாரணங்களைக் கொண்டு மற்றுள்ள பருவங்களிற் காணுமதிசயங்களை நல்லறிவுடையோர் உய்த்துணர்வாராக.

இவ்வாறு பக்திரஸம் பொங்கிச் சந்தி முதலிய தோஷங்களும், அரும்பதங்களும் காணாமல், யாருக்கும் ஆனந்தத்தையே கொடுக்கும்படி யேற்பட்ட இம்முறைக்காவியம், மற்ற காவியங்களைப் போலவே காலக்கிரமத்தில் பக்தி குறைந்து இலக்கண நிர்ப்பந்தங்கள் அதிகரித்து, நிகண்டு பிரபலித்து, முரட்டு மார்க்கங்கள் மலிந்துவிட, அர்த்த கௌரவங்குறைந்து பதப்பிரயோகமுஞ் சந்தவின்பமுமதிகரித்துப்போனது நிச்சயம். ஆகவே பிற்பட்டு வந்தவர்கள் பலவிடங்களில், ‘பிள்ளைவாய்த் தமிழைப்’ ‘பேழ்வாய்த் தமிழ்’ ஆக்கிச் சிறுமிகள் கூடிப் பேசுவதைத் திமிங்கலயோக்கியமான பெரும்பதங்களைக் கொண்டு விளக்கி, யின்னு மனேக விதங்களில் நவம் நவமாக அணிகளைப்பிரபலப்படுத்தி வந்துவிட்டார்கள். ஆதலால் இவ்விஷயத்தில் தமிழ் வித்துவான்களுக்கும் தமிழ் அபிமானிகளுக்கும் இருதிறத்தாருக்கும் பக்திகுறைந்திருப்பது நியாயமேயாம்.

ஒரு தோஷமட்டும் ஆதி முதலேற்பட்டதாகையால், அதைப்பற்றி யிரண்டொரு வார்த்தைகள் சொல்லி யிதை நிறுத்திவிடுகிறோம். வழிபடு தெய்வத்தை யுத்தேசித்தே பிள்ளைக்கவி யேற்பட்டதில்,காவியத்திற்குள்ள பலலக்ஷணங்களில் இரண்டொன்றுதானிதற்குக் கூடியதாயிற்று. காவியத்திற்கு நோக்கம் அகப்பொருள், புறப்பொருள், இரண்டையுங் கண்ணாடிபோல் உள்ளபடி விளக்கவேண்டியதென்று சாதுக்கள் ஒப்பியிருப்பதால், தேவதைகளை வழிபடுவதையே முக்கியமாகக் கொள்ளவே, யவ்வளவிற்குக் காவியத்திற்கும் கவிகளுக்கு மிருக்கவேண்டிய நிரங்கு சத்துவமும் யதேச்சையுங் குறைந்துவிட்டது. ஆதலால், மற்றைய காவிய வகைகளிலிருக்கும் விஸ்தீரணம் இதற்கு இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

இதர பாஷைகளில் ‘பிள்ளைத் தமிழ்’ முறை யபூர்வமென்றோ, இல்லையென்றோ சொன்னோம். ஆனால் ஆங்கிலேய பாஷையில் ஆங்காங்கு சிறிது காணுவது நமக்குத் தெரியவருகிறது. என்றாலும் அதற்கு லக்ஷணமேற்படவுமில்லை. லக்ஷணத்திற்குக் கட்டுப்பட்டுக் கவிகள் எழுதியதாகவுங் காணவில்லை. அதிற் காணும் முறையைக் கவனித்துப் புத்திமான்கள் அதைத்தமிழில் விருத்திக்குக் கொண்டு வருவாராகில், காலக்கிரமத்தில் எந்தப் பாஷையுமிதனால் சிறப்படையலாமென்றும், யாராகினும் மகாபுருஷன் இந்த நவீனமுறையில் பக்தியதிகரித்து, முதல்தரமாகப் பாடி, நல்லறிவுடையோர்க்குத் திருப்தியுண்டு செய்யலாமென்று நம்பி, அதை விளக்கவேண்டி எமது கைக்கெட்டிய சிறு பிரகரணத்தை யேதோ ஒருவாறு மொழிபெயர்த்துப் பின்னெப்பொழுதாவது உதகரிக்கிறோம்.

---

### பரிகாசமான பட்டப்பேர்

உலைவாயை மூடலாம், ஊர்வாயை ஒருபோதும் மூடலாகாது. நம்மிடம் ஏதாவது துற்குணமிருந்தால் அந்தத் துற்குணத்தைக்கொண்டு ஜனங்கள் நமக்குப் பெயரிட்டு விடுவார்கள். “சுடுகாட்டுச் சொக்கன்” “பழையத்துப் பஞ்சை” என்ற பெயர்கள்போன்ற பரிகாசமான பட்டப்பெயருள்ள ஜனங்களை நாம் எத்தனையோ இடங்களில் கண்டும் கேட்டும் இருக்கிறோமல்லவா? நமது பெயருக்கு இவைகள் மிகவும் இழிவானவைகள்; ஆகையால் நாம் நடப்பதில் அப்படிப்பட்ட சுட்டுப்பெயர்கள் வராதபடி நடந்துகொள்ளவேண்டும்.



## 3. தேசீயபாஷைகளில் வசன நடை

### குதிரைக்குறடா

சென்றமாதத்தில், ராவ்பஹதூர், வி, நாகோஜீராயரவர்கள், தேசீயபாஷைகள் விஷயமா யெழுதியதைப் படித்து நமக்கு மெத்தவும் சந்தோஷம். ஆனாலவர் ‘லோயர் செகண்டெரி’ தரபுடன் நிறுத்திவிட்டதால், அதற்கு வெகுமேற்பட்டுள்ள ‘காலேஜ் தரயில்’ தற்காலம் காணும் இரண்டொரு விசித்திரங்களையும் எடுத்துக்காட்டுவது நலமென்று நமக்குக்காணுவதால் அவதாரிகை யில்லாமல் சங்கதியை மட்டும் சுருக்கிச்சொல்லிவிடுகிறோம்.

இப்பொழுது நமது பள்ளிக்கூடங்களில் தேசீயபாஷைகளுக்கு வந்திருக்கும் தசை வெகு குரூரமானதென்றே சொல்லவேண்டும். இதுவரையில் அவைகளுக்கு ஏதோ பதவியொன்றிருந்தது. ஆதிமுதல் பீ. ஏ. வரையிலும் தேசீய பாஷைகளில் பாடப் புஸ்தகங்களும், அவற்றில் பரீக்ஷையும், அப்பரீக்ஷையில் தேறவேண்டிய அகத்தியமுமிருந்து வந்தன. இவைகளிலெல்லாம் பெருங் குறைவுகளிருந்து வந்தனவென்பதில் சந்தேகமேயில்லை. சில சமயங்களில் பாடப்புஸ்தகங்கள் விசித்திரமாயமைவதுண்டு. சாமான்னியமாய்ப் பாடஞ்சொல்லுபவரிடம் காணும் குறைவுகளோ பிரசித்தமாய்த் தெரிந்தவைகள். பரீக்ஷைக் கிரமங்களும் விசித்திரமானவைகளென்பதில் ஆக்ஷேபமில்லை.

ஆனால் தலைவலி வந்தால் அதற்கு ஏதாகிலும் பற்று முதலிய பரிகாரந் தேடுவதுதான் உலகத்தாருடைய வழக்கமேயல்லாது, தலையைக் கீழேயிறக்கிவைப்பதல்ல. என்றாலும் நமது யூனிவர்ஸிட்டியாரும், அவர்களை யடுத்து வாழும் வேறிரண்டொரு கக்ஷியாரும் சமீபத்தில் நடத்திவருங் காரியங்களையாராய்ந்து பார்க்குமிடத்து இம்மாதிரிப் பரிகாரமே தான் அவர்களுடைய நோக்கமெனக் காணுகிறது!

‘மெட்ரிகுலேஷன்’ என்பதற்குப் பதிலாக ‘ஸ்கூல் பைனல்’ என்னும் பரீக்ஷையேற்படப் போகிறது. அதில் இனித்தேறியவர்களென்றும், தேறாதவர்களென்றும், இரண்டுவகுப்பு இதுவரை யிருந்தமாதிரி கண்டிதமாயிருப்பதில்லை. ஆனால் இந்த விமர்சனம் படித்துவரும் விஷயங்களெல்லாவற்றிற்குமே யாதலால், தேசீய பாஷைகளுக்குத் தனிப்பதவி வேண்டுவது அக்கிரமமென்று வைத்துக்கொள்ளலாம்.

காலேஜ் வகுப்பிலோவென்றால் சங்கதியே வேறாகியிருக்கிறது. பழையபடித் தேசீய பாஷைகளில் படிக்கவேண்டிய புஸ்தகங்கள் வருஷாவருஷம் யூனிவர்ஸிட்டிப் பஞ்சாங்கத்தில் பிரசுரமாகித்தான் வருகின்றன. ஆனால் அவைகளைப் படிப்பிப்போரும், படிப்போருமட்டும் எங்கேயோ மாயமாயோடி யொளிந்துவிட்டார்கள்.

இப்படி முழுமோசமாய்ப் போவதுதெரிந்து யூனிவர்ஸிட்டியாருடைய கிரமங்களுக்கு மதிராசு கவர்ன்மெண்டார் ஒரு சிட்டை சேர்த்துவிட்டிருக்கிறார்கள். அதைத்தான் இப்போது நாம் கொஞ்சம் விசாரிக்கவேண்டுவது.

அந்தச் சிட்டையிதுதான். புதிதாக ஏற்பட்டிருக்கும் எப். ஏ. பரீக்ஷைக்குத் தேசீய பாஷைகளைக் கொண்டு பழையபடி யாகவேண்டியவை யொன்றும் இல்லாததால், அந்தப் பரீக்ஷைக்குப் படிக்கும் நமது குமாரர்களுக்கு அது க்ஷேமகரமல்லவென்றும், அதனால்தேசீய பாஷைகளுக்கே மலினம் வந்துவிடுமென்றும் யோசித்துக் கவர்ன்மெண்டார், இக்குமாரர்கள் தேசீய பாஷைகளில் அவரவருக்குரியதில் ‘வசன நடைப்’ பரீக்ஷைகொடுக்கவேண்டுமென்றும், அதில் நூற்றுக்கைம்பது மார்க்கு வாங்கவேண்டுமென்றும், ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இதை யுத்தேசித்துக் கக்ஷியிரண்டு ஏற்பட்டுக் கொஞ்சகாலமாக வாதம் பலப்பட்டு வந்

திருக்கிறது. தினவர்த்தமானிகளாகிய இங்கிலீஷ் பத்திரிகைகளைப்படித்து வருபவருக்கு, இந்தக் கக்ஷிகளில் 'வசன நடைக்' காகப் பேசி வருபவர் அனேகமாய்த் 'தமிழர்' என்று காணுகிறது. இதர பாஷைகள் மூன்றிலும் ஏதோ சங்கதியிருக்கவேண்டும். ஏனெனில் அப்பாஷைக்கு வார்சுதாரர் இம்மாதிரி வியாச்சியத்தில் விசேஷமாகப் பிரவேசிப்பதேயில்லை. ஆதலால் இந்தப்பரீக்ஷைக்கு வசன நடையிருப்பதனால், தமிழுக்குத்தான் விசேஷ உபகாரமிருப்பதாகச் சிலர் நம்புவதுபோலக்காணுகிறது. அது சரிதானா, அல்லவா வென்று நாம் விசாரிக்கப் புகுவதில்லை. காலேஜ் வகுப்புகளில் இந்த வசன நடையைக் கற்பிக்க என்ன சாதனங்களிருக்கின்றன? பரீக்ஷகருக்கு மார்க்குப் போடுவதற்குஎன்னமுறைகளேற்பட்டிருக்கின்றன? இந்த இரண்டைமட்டுஞ் சற்று விசாரித்து விடுவது யுக்தமாகக் காணுகிறது.

வசனநடையை வெகுநாளாக இங்கிலீஷில் கற்பித்து வருபவரனுபவத்தைக் கேட்டால், அவர்சொல்லுவது இந்த ஏற்பாட்டுக்கு அனுகூலமாகவேயில்லை. ஏனெனில், வசனநடை தேர்ந்து வருவது ஒருநாளைய காரியமல்ல. முதல் வகுப்பிலிருந்து சிறிது சிறிதாக வரவேண்டிய விஷயம். கீழ்வகுப்புகளிலோ வசன நடையில் பயிற்சியென்பது காதிற்கேளாத விஷயம். தவிர, இனியாகிலும் பயிற்சிசெய்விப்போமென்றால், அதற்கு முக்கிய சாதனமாயுள்ளது திருஷ்டாந்தம். அதாவது, செம்மையாயெழுதியிருக்கும் பிரகரணங்களை மாணாக்கர் முன்வைத்து,-அதிலுள்ள ரஸங்களையவர்களையேகொண்டு கண்டுபிடிக்கச்செய்து அவ்வாறே தாங்களும் எழுதிப்பயின்று வரும்படி செய்து, துன்மார்க்கங்களைக் கண்டித்து வரவேண்டும். கீழ் வகுப்புகளில் இவ்விஷயங்கள் சிரமமில்லை. ஏனெனில் அங்கே வேண்டுவதெல்லாம், சாமான்னிய இலக்கண வழுவில்லாமல், வாக்கியங்களில் எழுவாய், பயனிலை முதலிய கிரமங்களிருக்கும்படி பார்த்து விடுவதே முக்கிய லக்ஷியமாம். மேலே வருமிடத்து வேறுசில புது லக்ஷணங்கள் வேண்டும். எழுதுவதில் விஷயத்தை யேதோ ஒருவாறாக விளக்கினால் மட்டும் போதாது. காரசாரமாகவு மிருக்கவேண்டும். இதற்குக் காரசாரமாகப் பெரியோரெழுதியிருப்பதைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டுவது அத்தியாவசியம். எதையெடுத்துக்காட்டுவது? இதைபற்றிப் பேசி எழுதிய யாராகிலு மிதைக் கவனித்தார்களில்லை. பரிமேலழகரும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் எழுதிய வசன நடையையிவர்களுக்கும் அச்சாக்கி, இம்மாதிரி எழுதுங்கள், என்னலாமா? அம்மாதிரி நடையைப் பிரபலப்படுத்துவதில் யாருக்கனுகூலம்? தவிரக் கவர்ன்மெண்டார் வசன நடை வேண்டுமென்றது இவ்வகைத்தல்லவென்பது நிச்சயம். இப்பெரியோரை நீக்கித் தற்காலம் பத்திரிகை முதலியனவற்றிற் காணும் நடையைத் திருஷ்டாந்தமாக்கலாமா? அல்லது 'நாவல்கள்' என்று ஈசல் புறப்படுவது போலக் குவியும் புஸ்தகப் போலிகளை யெடுக்கலாமா? அல்லது, இதொன்று முதவாதென்றால், காலேஜ்களில் இனியிதைக் கற்பிக்கவேற்படும் உபாத்தியாயர்கள் சுவயம் கர்த்தர்களாகி, அப்போதைக்கப்போது வேண்டியபடி யெழுதிக் காட்டும் திறம் வாய்ந்தவர்களாயிருப்பது நிச்சயமா? இத்தியாதி பலத்த இடையூறுகளைக் கவனித்தவருமில்லை. அவற்றிற்குப் பரிகாரங் கூறுபவருமில்லை.

சரி, காலேஜ்களில்தான் வசனநடை கற்பிப்பது. இதுவரை 'மொழி பெயர்ப்புப்' போன்ற இரண்டோர் விஷயங்களை யெப்படிக் கற்பித்து வந்தார்களோ, அதே சிஷ்டாசாரப்படி நடந்து வருவதாகவைத்துக்கொள்ளுவோம். அதாவது, மாணாக்கரை அந்தந்தக்காலத்தில் யதேச்சையாகத்திரிய விட்டுவிடுவதேயாம்! அது நிற்



கப் பரீக்ஷையென்று ஒரு பெரியகாண்டமேற்பட்டிருக்கிறதே, அதற்கென்ன தீர்ப்பென்றுதான் நாமறியவேண்டுவது.

வசனநடையென்றால், விஷயம் இவ்வகைத்தென நிச்சயப்படவேண்டும். தத்துவகோடிகளிலும், சாஸ்திரகோடிகளிலும், நடையெழுதுவதென்றால், பரிபாஷை யுபத்திரவம் வெகு பெரியது. மற்றைய காவியாதி விஷயங்களிலோவென்றால், மாதிரிக்காகக் காணக்கூடிய லக்ஷணங்கள் இன்னும் ஏற்படவில்லை. பரீக்ஷகரென்பவர் மனோதருமத்தை யனுசரித்துப் போகவிடுவது வெகு அபாயகரம். ருசிபேதத்தினால் அனேக அனர்த்தங்கள் விளையும். சிலருக்குப்பதப்பிரயோகத்திலேயேருசியதிகம் சிலருக்குக் கழைக்கூத்துகளில் பிரியமதிகம். வேறு சிலருக்குப் பழமொழிகளை மாலையாக்கி யெழுதுவதில் குதூகலம். சிலருக்கு வடசொல்லேற்காது. சிலருக்குத் திசைச்சொல் லுதவாது. இவை நடையைப் பொறுத்த துக்கங்கள். விஷயத்தைப்பற்றிய துக்கங்கள் இன்னும் வலியன. ஆதலா லிவைகளுக்கெல்லாம் பரிகாரந்தேடுவது முதலாக வேண்டிய காரியம். தேடுபவரைமட்டுந்தான் காணோம்.

எப்படியோ முறைக்கு நடக்கட்டுமென்று விட்டு விடலாமென்றால், 'மார்க்குச்' சனியொன்றிருக்கிறது. 100-க்கு 50-வீதம் மார்க்கு வாங்கவேண்டும். இல்லாவிடில் பரீக்ஷை போய்விட்டது. ஆதலாற்றான் பெரும் போடாகப் போடும் நம்மவர் சிலர், இச்சில்லரை விஷயங்களையுங் கவனித்து, முதல் பரீக்ஷை வருமுன்னமே யிவற்றிற்குப் பரிகாரந் தேடுவாரென நம்பி நாமிதை யெழுதலானோம். தூங்குபவர்களுக்குச் சாமான்னியமாய்த் தட்டியெழுப்புதல் போதுமாயினும், சில விஷயங்களில் நம்மவர்களுக்குக் குறடாவினாலும் விழிப்புக்கிடைக்காதது பற்றிப் பெயரைமட்டுமாவது வகித்தால் என்ன கிடைக்கும், பார்ப்போமென்று பரீக்ஷார்த்தம் எடுத்துக்கொண்டதை யிஷ்டர் மன்னித்தல் வேண்டும்.

# சாரித்திரகாண்டம்

## 1. 1901-2-3-ம் ௵த்திய மஹா சாஸனங்கள்

ஸ்ரீ மகாராஜச் சக்கரவர்த்தி யவர்களுடைய மஹா சாஸனங்கள்

1. 1901-ம் ௵ பிப்ரவரி௴ 4-ந் தேதியில் பிரசுரித்தது:—

"இந்தியாவிலுள்ள மகுடவர்த்தனருக்கும் மகா ஜனங்களுக்கும், (இதனால் அறிவிப்பது.)

நமதருமைமாதாவாகிய (மகாராணியவர்கள்) காலஞ்சென்று போனதுகொண்டு, நமக்கும், ராச்சியத்திலுள்ள சகலருக்கும், துக்கமுண்டாகி, நாம் அதில் மூழ்கியிருப்பதில், அது காரணத்தினால், இப்பழைய பரம்பரையான ராஜவம்சத்தில் வெகு காலமாக இடைபறாது வரும் ஆதிபத்தியத்தை இப்போது நாம்வகிக்கும்படியாகி யிருக்கிறது. ஆதலால் இச்சமயத்தில் நாம், இந்தியாவில் மகுடவர்த்தனராகி, அரசாண்டு வரும் பூபதிகளுக்கும், நமதாளுகைக்குட்பட்ட மகா ஜனங்களுக்கும், ஆசிகள் வழங்கியறிவிப்பது, இவர்களனைவரும் க்ஷேமமாயிருக்கவேண்டுமென்பது நமது அந்தரங்கமான ஆசையென்று உறுதியாயறியவேண்டுவதாம்.

இப்போது நாமெல்லோரும் துக்கப்படுவதற்குக் காரணமாகியும், (இதுவரை) குன்றாப் புகழ்பெற்று விளங்கியும், இந்த ராச்சியாதிகாரத்தை நமக்குமுன் வகித்துமிருந்த (மகாராணியவர்கள்) இந்த (இந்தியா) ராச்சியத்தைத் தாமே யாளுவதாக முதன்முதல் அதிகாரம் பெற்றுக்கொண்டபிறகு, இம்மகா மண்டலத்தின் அரசாட்சியில் தமக்கிருந்த சமீபப் பற்றைக் குறிப்பிட்டுச் "சக்கரவர்த்தினி" யென்னும் பட்டத்தையும் வகித்துக்கொண்டார்கள்.

மகாராணியவர்கள் ராச்சியபாரம் வகித்துப் பரிபாலனம் செய்து வருங்காலமுழுதும், இந்தி

யாவின் க்ஷேமலாபத்தைக் குறித்த விஷயங்களிலெல்லாம், அவர்களுக்கு எல்லாவற்றையும் தாமே ரூபரூபிலறிந்து காரியநிர்வாகம் செய்ய வேண்டு மென்னும் ஆக்கிரகம் வலுத்திருந்தது. அது ஒருக்காலும் மாறவேயில்லை. ஆதலால் அம்மகாராணியவர்களுடைய ராச்சியாதிகாரத்தரபிலும், மானுஷியமான மற்றைய விஷயங்களிலும், இந்தியாவின் கோடிக்கணக்கான மகாஜனங்கள், எவ்வளவிற்கு அன்பும், ராஜபக்தியும், வைத்து வந்தார்களென்பது நமக்கு நன்றாய்த் தெரியும்.

இப்பெரும் பக்தியும், பேரன்பும், பல்லாண்டுகூடிப் பெருமை வாய்ந்தமகாராணி யவர்களுடைய அதிகார தசையில், கடைசி வருஷத்தில் வெகு விசேஷமாகப் பிரத்தியக்ஷமாயின. அக்காலத்தில் தென் ஆபிரிக்காவில் நடந்த யுத்தத்தில், இந்தியாவிலுள்ள மகுடவர்த்தனர்கள் ராஜபக்தி கனிந்து பெருகிச் செய்த வுதவிகளும், நமது தேசியச் (சிப்பாய்ச்)சேனையானது, தமது சுவதேசத்தைவிட்டு வெகு தொலையிற் போய் (மானுபாரணர்களாய்த்) தங்கள் சௌரியத்தை விளக்கி வந்திருப்பதும், (பிரத்தியக்ஷமே.)

நாம் (முன் 1875-ம் ௵த்தில்) இந்தியாவிற்கு வந்ததும், அப்புராதன பூமியாகிய மகாமண்டலத்திலுள்ள மகுடவர்த்தனர்கள், மகாஜனங்கள், புராண நகரங்கள், இவைகளை யச்சமயத்தில் ரூபரூபில் பார்த்துப் பரிசயஞ்செய்து கொண்டதும்,(அம்மகாராணிச்சக்கரவர்த்தினி) யவர்களுடையகற்பனையை யனுசரித்தும், திருவுள்ளத்திற் கிணங்கியுமே தானென்று (அவர்களறிதல் வேண்டும்.)

அக்காலத்தில் நமக்கு மனதிலுறைத்துப் பதிந்துள்ள ஞாபகக்குறிகளை நாம் மறப்பதற்காகவே யாகாது. ஆதலால் முதன் மகாராணிச் சக்கரவர்த்தினியவ்ர்களுடைய பேரதிகார தருமத்தையே நமக்கும் வழிபடவேண்டிய விதியாகக் கொண்டு, நமது இந்தியப் பிரஜைகளில் சமஸ்தமான ஜனங்களுடையவும் க்ஷேமத்தைக்கோறி நடந்து, அதனால் அம்மகாராணியவர்களுக்குக் கிடைத்ததுபோல் நமக்கும் இப்பிரஜைகளுடைய பேரன்பும், குன்றாத ராஜபக்தியும், எப்போதும் கிடைப்பதற்கு வேண்டிய யோக்கியதை சித்திப்பதற்குத் தக்கவண்ணம் நடந்துவரப் பிரயத்தனப்படுவோமாக.

| | |
|---|---|
| விண்ட்ஸர் அரண்மனை<br>1901௵ பிப்ரவரி௴<br>4௳ | (ஒப்பம்)<br>எட்வார்ட் மகாராஜச்<br>சக்கரவர்த்தியவர்கள்.” |

2. டில்லி தர்பார் ஆரம்பத்தில் படித்தது:—

“மகாராஜச் சக்கரவர்த்தியாகிய எட்வார்ட் மகாப்பிரபு அவர்கள், (இதனால் அறிக்கையிடுவது.)

கி. பி. 1901-ம் ௵ ஜனவரி௴ 22-ம் தேதியில் அதுவரை நம்மெல்லோருக்கும் அதிபதியாகியும், ஆனந்தப் பிரதாபகியும் விளங்கித் தருமபரிபாலனம் செய்து வந்த (மகாராணியவர்கள்) காலஞ்சென்றுவிட நாம் அதுமுதல் அந்த அதிகாரத்தை ஸ்ரீபகவத் பிரசாதபலத்தினால் வகித்துச் சிம்மாசன மேறி, ஏழாவது எட்வார்டு, கிரேட்பிரிட்டன், ஐர்லாந்து, ஆகிய இரண்டுங்கூடிய ஐக்கிய ராச்சியத்திற்கு மகாராஜா, மததரும ரக்ஷகர், இந்தியாவிற்குச் சக்கரவர்த்தி, யென்னும் இபபட்டங்களைக் கிரமப்படி வகித்திருப்பதனாலும்,

கி. பி. 1901-ம் ௵ ஆகிய நமதரசாக்ஷியின் முதல் வருஷத்தில்,ஜனவரி௴ 26-ம்தேதியிலும், டிம்சபர்௴ 10-ம் தேதியிலும்,ஸ்ரீசருவே சுவரனருளையும், அனுக்கிரகத்தையும் முன்னிட்டு, 1902-ம் ௵ ஜூன்௴ 26-ம்தேதியாகியசுபதினத்தில் நமது மகுடாபிஷேக மகோற்சவத்தை நடத்துவதாக நமக்குச் சந்தோஷமிருப்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துப் பிரகடனமுஞ் செய்திருந்ததினாலும்,

அப்படியே யதை அனுசரித்தும்,ஸ்ரீசருவே சுவரனருளையும், அனுக்கிரகத்தையும் முன்னிட்டு,மேற்சொல்லிய மகோற்சவத்தைச்சென்ற ஆகஸ்டு௴ 9-ம் தேதி கொண்டாடி நிறைவேற்றுவதற்கு நேர்ந்து, அந்தப்படி நாம் நடத்தியிருப்பதாலும்,



அவ்வாறு மேற்கண்ட மகோற்சவம் நடந்தேறிய சங்கதி, இந்தியாவிலுள்ள நமது அருமைப் பிரஜைகளுக்கெல்லாம் பகிரங்கமாய்த்தெரியவேண்டுமென்பது நமக்கு அபிமதமாயும், திருவுள்ளமாயு மிருப்பதுடன், அம்மகோற்சவ சம்பிரமத்தில், நமது கவர்னர்கள், உபகவர்னர்கள்,டிபார்ட்மெண்டு முக்கியஸ்தர்கள்(ஆகியவர்களும்), நமது அதீனராகி யவரவர் ராச்சியத்தைப் பரிபாலித்து வரும், மகுடவர்த்தனர்கள், தலைவர்கள், பிரபுக்கள் (முதலியோரும்), நமது இந்திய மகாமண்டலத்தியபல பிராந்தகளிலுமிருக்கும் மகா ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாயுள்ளவர்களும், (ஆகிய இவர்களனைவரும் வந்திருந்து) அச்சந்தோஷத்தையடையவேண்டுமென்பதும், நமது திருவுள்ளமாதலாலும்,

இச்சந்தர்ப்பத்தில், ராஜமான்னியமான இந்தமகா சாஸன மூலமாய், நாம் சகலரையும் எச்சரித்து, இப்படி நமக்குள்ளிருக்கும் சந்தோஷத்தைப் பகிரங்கமாகப் பிரசாதித்தருளி, நமது பிரதிநிதியும் இந்தியா கவர்னர் ஜெனரலுமாகிச், சகல சற்குணங்களும் பொருந்தி, நமக்கு வெகு சினேக பாத்திரமாயுள்ள, ஜி. என். கர்ஜன் பிரபுவை ஆக்ஞாபித்து, டில்லியில், 1903-ம் ௵ ஜனவரி௴ முதல் தேதியில், மேற்குறித்த மகுடாபிஷேக மகோற்சவம் சம்பூரணமானதை யெல்லோருக்கும் விளம்பரப்படுத்துவதற்காகச் சார்வபௌமமாயொருதர்பார் கூட்டும்படிக் கற்பனை செய்தருளியிருக்கிறோம்.

நமதாளுகையின் இரண்டாம் ஆண்டாகிய 1902-ம் ௵ அக்டோபர்௴ முதல்தேதி நமதாஸ்தானத்தில் பிரசுரிக்கப் பெற்றது.”

3. டில்லிதர்பாரில் மேற்கண்ட மகா சாஸனத்தைப் படித்தபின், வேறு சந்தர்ப்பத்தில் படிக்கப் பெற்றது.)

“மகாராஜச் சக்கரவர்த்தி யவர்கள் தமது இந்தியப் பிரஜைகளுக்குக் கருணைகூர்ந்து அருளிய க்ஷேம பத்திரிகை.

நமது இந்தியப் பிரஜைகள் நமது மகுடாபிஷேக மகோற்சவத்தைக் கொண்டாடிவரும் இச்சுபமுகூர்த்தத்தில், அவர்களுக்குக் குசலப்பிரசின பூர்வமாய் (இப்பத்திரிகையை) அனுப்புவதில் நமக்கு வெகு சந்தோஷமே. லண்டனில் நடந்த மகோற்சவத்தில், இந்திய மகுடவர்த்தனர்கள், மகாஜனப்பிரதிநிதிகள், ஆகிய இவர்களில், சிறிது பெயர்மட்டுமே வந்திருந்து போகும்படி. யானதால், நாம் நமது பிரதிநிதியும் கவர்னர் ஜெனரலுமான (கர்ஜன் பிரபுவை) ஆக்ஞாபித்து, இந்திய மகுட வர்த்தனரெல்லோருக்கும், தலைவருக்கும், மகாஜனங்களுக்கும், நமது ராஜாங்கத்திய உத்தியோகஸ்தருக்கும், இச்சுப விசேஷத்தைத் தக்கபடி கொண்டாடுவதற்குப் பிரகிருதம் ஒன்று ஏற்படவேண்டி, டில்லியில் ஒரு பெரிய தர்பார் கூட்டவேண்டுமென்று கற்பனை யிட்டருளினோம். 1875-ம் ௵த்தில் நாம் இந்தியாவில் வந்து முகாம் செய்து போனதுமுதல், அந்தத் தேசமும், அதிலுள்ள ஜனக்கூட்டமும் நமக்கு வெகு அருமை வாய்ந்தனவாகி விட்டன. நமது வம்சத்தவர்க்கும், நமது அதிகாரத்திற்கும், அவர்கள் மனப்பூர்வமாய்க் காட்டிவரும் பக்தி யெவ்வளவுதூரம் ஆழ்ந்திருப்பதென்று நமக்குச் செம்மையாய் விளங்கியிருக்கிறது. சமீபகாலத்தில் அதற்கு எத்தனையோ சாக்ஷியங்கள் நமதுகாதிற் கெட்டியிருக்கின்றன. நமது மகாராச்சிய மண்டலத்தில் நடந்த யுத்தங்களிலும், அதில் நமக்குக் கிடைத்த ஜயவிபவங்களிலும், நமது இந்திய சைன்னியத்தார் வெகு முக்கியஸ்தராகவிருந்து வந்திருக்கிறார்கள்.

நமது அருமைக் குமாரராகிய பிரின்ஸ் ஆப் வேல்ஸும், அவரது ராணியும், சீக்கிரத்தில் இந்தியாவிற்கு வந்து முகாம் செய்து நம்மைப் போலவே ரூபரூபில் சங்கதியறிவார்களென்று நமக்குப் பூரணநம்பிக்கை. அந்த ராச்சியத்தையவர்கள் ரூபரூபில் பார்க்கவேண்டுமென்பது நமக்கெக்காலத்திலுமிருந்துவரும் கோரிக்கை. அவர்களுக்கும் அங்கே வரவேண்டுமென்னும் ஆக்கிரகம் அவ்வாறே பலமாகவிருக்கிறது. இப்

8

பொழுது இப்பெருந்திருவிழா நடக்குஞ் சந்தர்ப்பத்தில், நம்மால் சாத்தியமட்டும் படுமாகில், நாமேநேரில் இந்தியாவுக்கு வந்திருந்து சந்துஷ்டியடையவேண்டுமென்பது நமது ஆக்கிரகம். ஆயினும், (அது சாத்தியமில்லாததுபற்றி,) நமதருமைச் சகோதரராகிய கன்னாட் பிரபுவை அனுப்பியிருக்கிறோம். அவரையோ இந்தியாவில் எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். நமது மகுடாபிஷேக மகோற்சவத்தைக் கொண்டாட வேண்டிக் கூடிய மகா சங்கத்தில், நமது வம்சத்தவருடையவும் பிரதிநிதியிருக்கவேண்டுமென்பது நமது அபீஷ்டமாம்.

பூஜ்யராகிய நமது மாதாவும், மாஜி மகாராணியும், இந்தியாவின் முதற் சக்கிரவர்த்தினியுமாகிய விக்டோரியா தேவியவர்களுடைய அதிகாரத்தை நாம் வகித்தது முதல், மேற்படி ராணியவர்களிடத்தில், அவர்களது இந்தியப் பிரஜைகள் இவ்வளவு அபூர்வமான விதமாகப் பக்தியும் பிரேமையும் வைத்து வந்ததற்குக் காரணமாகிய, காருண்ணியமும், நீதியும் நிறைந்த பாலன தருமங்களைச் சிறிதும் கோணாமல், கைப்பற்றி வரவேண்டுமென்பதே நமக்கும் அபீஷ்டமாகியிருக்கிறது.

ஆகவே, இந்தியாவிலுள்ள நமது சாமந்தர்களான மகுடவர்த்தனருக்கும், மகாஜனங்களுக்கும், நாமிதனால் உறுதிகூறுவது, அவர்களுடைய உரிமைகள் விஷயத்தில் நமக்கிருக்கும் மரியாதையும், அவர்களுடைய பதவிகளுக்குரிய விருதுகள், பதிவுகள் ஆகியவற்றில் நமக்கிருக்கும் கவனமும், அவர்கள் முன்னுக்கு வர வேண்டிய விஷயத்தில் நமக்கிருக்கும் அக்கறையும், மொத்தத்தில் அவர்களனைவருடையவும் க்ஷேமார்த்தமாக நமக்கிருக்கும் சிரத்தையும், சிறிதேனுங் குன்றாமல், பழையபடி மேற்படி ராணியவர்கள் காலத்திலிருந்தாற்போலவே யினியு மிருக்குமென்பதை யறியவேண்டுவதாம். இவைகளே நமது ராச்சிய பரிபாலனக் கிரமத்திற்கு முதன்மையாயுள்ள லக்ஷியங்களாம். சர்வேசுவரனது அருளை நம்பி இவைகள் மூலமாகத்தான் நமது இந்திய மகா மண்டலத்திய க்ஷேமம் மேலுமேலும் வர்த்திக்குமென்றும், அவ்விராஷ்டிரப் பிரஜைகள் மேலுமேலுந் தழைத்தோங்கிப் பெருகுவார்களென்றும் (நமக்குப் பூரண நம்பிக்கை.)

## 2. வரதக்ஷிணையும், அதைத் தொலைக்கவுபாயமும்

ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாள்.

நமதுலகின்கண்ணுள்ள மானிடப் பிறவிகளனைத்துள் ஜாதி பலவகைப்பட்டிருப்பதுண்மையே. ஆயினும், ஆதியில் நான்முகன் விதித்தது, பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர், என நான்கு ஜாதிதானென்று மனுசாஸ்திரம் கூறுகின்றது. தற்கால நிலைமையை நோக்குங்கால், மேற்கூறிய ஒவ்வொரு ஜாதியும் பற்பல வகுப்புகளாகப் பிரிவுபட்டிருப்பது யாவருமறிந்த விஷயம். இப்பிரிவுகள் யாவற்றையும் இங்கு விஸ்தாரமாய்ப் பிரசுரிப்பது அசாத்தியமாதலின், முதல் வகுப்பாகிய பிராம்மணஜாதியைப்பற்றி மாத்திரம் சற்று விளக்குவோம். கலி தொடங்குமுன், பிரம்ம குலத்திற்குள் பலபிரிவுகளும், அதனுட் காணும் வேற்றுமைகளும், தூஷணைகளுமிருந்ததாகத் தெரியவில்லை. பகவதனுக்கிரகத்தால் இப்பூமண்டலத்தில் சில மகான்கள் அவதரித்து, ஸ்ரீமத்-சங்கராசாரிய சுவாமிகள் விசேஷமாய்ச் சிவமதத்தையும், ஸ்ரீமத்-ராமானுஜாசாரியார் விஷ்ணு அம்சத்தைப்பற்றியும், ஸ்ரீமத் - மத்துவாசாரியார் மத்துவமதத்தைப் பற்றியும், அவரவர்களுக்கேற்ற புத்தி கோசரத்தாலும், கல்விப் பயிற்சியினாலும், ஜனங்களின் தாரணா சக்திக்குத் தக்கபடி, வித்தை, பக்தி, தருமம், ஞானம், முதலிய நற்கொள்கைகளை உலகத்தில் போதித்ததாகத் தெரிகிறது. எற்கெனவே ஜனங்களின் மனது மதசம்பந்தமாய் வேறுபாடடைந்திருந்ததின் காரணம் பற்றி ஒரேமாதிரியாக உபதேசிக்காது, அவரவர் மனதிற்கிசைந்தவாறு சிவனையும், விஷ்ணுவையும், தனித்தனியாய்ச் சிலாகித்துப் பேசினதுண்மையே. ஆனால் "சிவன் வேறு" "விஷ்ணு வேறு" என்ற கொள்கையினாலும், மதபேதத்தையும், மனவேற்றுமையையும், ஜனங்களுக் குண்டாகவேண்டுமென்று கருதியும் இவ்வாறு பேசியிருப்பார்களென்று நினைக்க இடமில்லை.



பரம்பொருள் "ஒன்று" தானென்பது அவர்களறியாத விஷயமல்ல. எந்தவிதமாயாவது, பகவானை யாராதித்து, எப்படியாகிலும், கடவுளிடம் ஜனங்களுக்கு விசேஷப் பற்றுண்டாக்கவேண்டுமென்ற கருத்து ஒன்றைக்கொண்டே அவர்கள் பேசியிருப்பார்கள். இக்காலத்திலேற்பட்டிருக்கும் நூற்றுக் கணக்கான ஜாதிப்பிரிவுகளுக்குக் காரணம் கலிமாகாத்மியமோ, அன்றி, நமக்கு, புத்தி, சக்தி முதலியன குறைவடைந்தது பற்றியோ, தெரியவில்லை. ஒரே வகுப்பினர்க்குள் விஷ்ணு மதம் சிவமதத்தைக் காட்டிலும் சிறந்ததென்றும், சிவமதம் விஷ்ணு மதத்திலும் பதின்மடங்கு சிரேஷ்டமென்றும், வீண்வாதம் செய்யவேண்டுவது அனாவசியம். இதிலும் பிராம்மணர்களுக்குள்ளாகவே பல பிரிவுகளையும், பிரிவுகளுக்குள் பிரிவுகளையுமேற்படுத்திக்கொண்டு வீணாக நாமவஸ்தைப் படுவதற் கவசியமே யில்லை.

பிராம்மணஜாதியார் என்ற ஒரு விஷயத்தை மாத்திரம் நாம் கவனிக்கவேண்டுவது முக்கியமே தவிர, "அவன் சோழதேசத்துக்காரன், நான்மேல்தேசத்துக்காரன், அவன் விஷ்ணுமதத்தான், நான் சிவமதத்தான், அவன் பிரஹசரணம், நான் வடமன்," என்கிற இதுபோன்ற அற்ப வித்தியாசங்களைப் பாராட்டவேண்டியதில்லை. இவ்வித வித்தியாசங்களால் நேரும் கஷ்டங்களையும், அவைகளைத்தடுக்க வல்ல மார்க்கங்களையும் பற்றி நாமினிக் கவனிப்போம்.

இந்நாளில் நடந்தேறிவரும் நம்மவர் விவாகமுறையை யெடுத்துக்கொள்வோம். ஒரு பிரம்மகுலப் பெண்ணுக்கு விவாகம் செய்வதில் எவ்வித இடையூறுகளையெல்லாம் பரிகரிக்க வேண்டி வருகிறதென்பதையும், அது மனதிற்கிசைந்தவாறு முடிவுபெறுவது எவ்வளவு கஷ்டமென்பதையும் யாருமறிந்தேயிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் யாதென்றாராயுமிடத்துப் பிராம்மணர்களுக் குள்ளாகவேபல சிக்கல்கள் ஏற்பட்டு, ஒரு வகுப்பினர், மற்றொரு வகுப்பினருடன் விவாக சம்பந்தம் வைத்துக்கொள்ளக்கூடாத நிபந்தனையேதான். இவ்வித நிபந்தனை, சாஸ்திரத்தையொத்திருப்பதாகக் காணோம். முதலாவது, பிராம்மணஜாதி பலவகைப்பட்டிருப்பதாகவே சாஸ்திர ரீதியாய் நாமறியாமலிருக்குங்கால், ஓரினத்தார் மற்றோரினத்தாருடன் "கொண்டு கொடுத்தல்" கூடாதென ஏற்பாடு செய்து கொள்ளக் காரணமில்லை. பாஷை வித்தியாசப் படுகிற ஒருவருக்கொருவர் சம்பந்தம் தக்கதல்லவென்ற நிபந்தனையை வேண்டுமானால் நாமொருவாறு அங்கீகரித்துக் கொள்ளலாம்.

பாஷை ஒன்றாயிருக்கும் ஒருவருக்கொருவர் விஷயத்திலோ இவ்வாறு விவாக ஒற்றுமையில்லாமலிருப்பது மிக்கபரிதாபம். தமிழ்ப் பாஷையைப் பேசிவரும் பிராம்மணர்களுக்குள், வடமன், பிரஹசரணம், அஷ்டஸஹஸ்ரம், என்று பலவகுப்புகளிருக்கின்றன. இவரனைவர்க்கும் பாஷைமாத்திரம், ஒன்றல்லாது நடை, உடை, ஆசாரம், யாவுமொன்றுதான். ஆயினும், இவர்கள் ஒருவருக்கொருவர் கல்யாணஞ்செய்துகொள்ளக் கூடாதென்கிற நிபந்தனையினும் கொடுமை வேறுளதோ? உதாரணமாக, ஒரு வடமப்பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று வரன் தேடுங்கால், குணம், கல்வி, எழில், செல்வம், யாவும் பொருந்தியிருக்கிறதாவென்று பார்க்கும்போது, வடமப் பிள்ளையல்லாது பிரஹசரணப் பையனுக்கு மேற்சொன்ன லக்ஷணங்கள் யாவும் பொருந்தியிருப்பினும், அவ்விவாகத்தை நடத்தி முடிப்பதற்கு, வகுப்பு, வித்தியாசம் தடையாயிருக்கிறது. இவ்வித்தியாசம் பற்றியே வரதக்ஷிணையுமேற்பட்டுவிட்டது. நல்ல மணமகன் அகப்படவேண்டுமெனில், தக்ஷிணையு மதிகமாய்ச் செலுத்தவேண்டிவரும். அதினும், எவ்வளவுக்

கெவ்வளவு படிப்பும், பணமும், அதிகப்பட்டிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வரதக்ஷிணையும் உயருகிறது. ஏதோ ஏழையென்ற காரணத்தைக் கொண்டு வாங்கினார்களென்ற சமாதானங்கூடக் கிடையாது. பணக்காரர்கள்தான் வரதக்ஷிணைக்கு ஜாஸ்தியாய் ஆசைப்படுகிறார்கள். அருமையாய்ப்பெற்று, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்த பெண்ணைத் தானம் செய்வது போதாது. தக்ஷிணையும் கொடுக்கவேண்டி வருகிறது.

வரதக்ஷிணைக்குச் சில ரேட்டுகளும் மேற்பட்டிருக்கிறதுபோலும். மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணினவனுக்குச் சுமார் ரூ. 1000 முதல், ரூ. 2000 வரையிலும், எப்.ஏ. தேறினவனுக்கு ரூ. 2000 முதல் ரூ. 4000 வரையிலுபரும். பி. ஏ. டிக்ரீ பெற்றவனுக்கு ஐந்தாறு பைகள் சாமான்னியமாய்க் கிடைக்கலாம். வக்கீல் பரீட்சை கொடுத்தவர்களுக்கோ வென்றால், பத்திலொரு லக்ஷமும் கொடுக்கவேண்டி வரும். கேரள தேசத்தில், கேவலம் பரிசாரகத் தொழில் செய்பவன்கூடச் சாதாரணமாய் ரூ. 300, ரூ. 400 சம்பாதித்து விடுகிறான். இந்தலக்ஷணத்தில் பெண் ஏழைவீட்டில் பிறந்ததாயும், அழகில்லாமலுமிருந்துவிட்டால், மேற்குறித்த ரேட்டுகளை இன்னும் உயர்த்தவேண்டி நேரிடும். ஒருக்கால், பிள்ளை பரீட்சையொன்றும் தேறாமல், ஏழையாயுமிருப்பின், ரேட்டுகள் ஒருவாறு குறையும். ஒருவன் ஏழையாயுமிருந்து அவனுக்கு நாலைந்து பெண்ணும் பிறந்துவிட்டால், அவன் உயிருடன் செத்தபிணம் போலாய்விடுகிறான். இவ்வரதக்ஷிணை நிமித்தியமாய், ஸ்திரீக்குத் தான் கர்ப்பமானதாகத் தெரிந்தவுடன், எங்கே பெண்ணாய்ப் பிறந்துவிடுமோவென்று ஏக்கம் உண்டாய்விடுகிறது. அது வாஸ்தவத்தில் பெண்ணாய்ப் பிறந்துவிட்டாலோ, மாதாவானவள் பிரஸவவேதனையிலும் அதிகமாய்ப் பெண்பிறந்ததைக்குறித்து வருத்தப்படுகிறாள். பிறந்தாலும், இறந்துபோகாதாவென்றுகூட நினைக்க இடம்தரும்போலிருக்கிறது. அது அகஸ்மாத்தாய் இறந்துவிடின், அதிகமாய்த் துக்கப்படமாட்டார்கள்போலும். என்னசெய்யலாம், இவ்வரதக்ஷிணையின் மகத்துவம் இப்படியிருக்கிறது. நாலைந்து பெண்ணையுடைய எளியவனுக்குப் பெண்கள் பிறந்த தினம் முதலே வரதக்ஷிணைக்குப் பணம்சேர்க்கவேண்டுமென்றும், கவலை ஏற்படுகிறது. அப்பெண்களுக்குக் கல்யாண வயது வர, வர, முன்னிலும் அதிக சோகமுறுகிறான். தன் வயிற்றிற்கும் குழந்தைகளுக்கும் சரியானபடி போஷித்துக்கொண்டு வர முடிவதில்லை. வரதக்ஷிணைக்குப் பணம் சேர்ப்பதிலேயே கண்ணாயிருக்கிறான். இவ்வாறு கஷ்டப்பட்டுப் பணம் சேர்த்து, அதுவும் போதாமல், கொஞ்ச நஞ்சம் கிடைத்த வீடு, காணி, முதலியதை விற்றும், கடைசியாய்ப் பெரும் கடன் காரனாகவுமாகிறான்.

நம்மவர் விவாகச்செலவைப்பற்றியோ ஒன்றும் சொல்லவேவேண்டாம். ஏதோசாஸ்திரோக்தமாய் எவ்வளவு செய்யவேண்டுமோ அத்துடன் நிற்கிறதில்லை. அவசியமற்ற, விவரமில்லா விதங்களில் திரவியத்தை இறைக்கிறோம். லக்ஷப்பிரபுவல்லாது ஏதோ மரியாதையாய்க் காலக்ஷேபம் செய்துகொண்டு வரும் நம்மவர்கள் இம்மாதிரி வரதக்ஷிணையும் கொடுத்து, ஆடம்பரச் செலவுகளையும் செய்யவல்லவர்களா? பிராம்மணர்கள் பாபராவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமென்பதைத் தாராளமாய்ச்



சொல்லலாம். தவிர, வரதக்ஷிணை உபத்திரவத்தால், கல்யாணப் பெண்ணுக்கும் பிள்ளைக்கும், பரஸ்பரம் சம்மதமாவென்றுகூடக் கவனிப்பதற்கு முடியாமல் போகிறது. எப்படியெனில், ஒருபெண்ணிற்கு ஒரு குறித்த பிள்ளையைத்தான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றெண்ணமிருப்பதாகப் பெற்றோருக்குத் தெரிந்திருந்தாலும், அந்தப்பிள்ளைக்கு வரதக்ஷிணை ஜாஸ்தியாய்க் கொடுக்கவேண்டிவரின், தக்ஷிணைகொஞ்சம் குறைவுபட்ட வேறொரு பிள்ளையை விவாகம் செய்துகொள்ள அம்மகவிற்குச் சம்மதமில்லாவிடினும், அவனையே தேடிக்கொடுக்க வேண்டியாகிறது. கல்யாணத்தில் முக்கியமாய்ப் பெண், பிள்ளைகளிருவருக்கும் மனம் பொருந்தியிருக்கிறதாவென்பதைக் கவனிப்பதவசியம். மாதா பிதாக்கள் பெண் பிள்ளைகளை நல்ல இடத்தில் சேர்க்கவேண்டிய கருத்தையுடையவர்களாயிருந்தபோதிலும், பெண் பிள்ளைகளிருவருடையவும் இஷ்டத்தையும் தெரிந்து செய்வதேயுசிதம்.

பெண்ணின் கதியிவ்வாறிருக்கக், கிஞ்சித்துப்பிள்ளை விஷயத்தையுங் கவனிப்போம். குணம், கல்வி, பொறுமை, வனப்பு, முதலியசர்வபாக்கியத்தையும் வகித்த ஓரேழைப்பெண் ஒருவனுக்குச் சாமான்னியமாய்க் கிட்டுவதாயினும் வரதக்ஷிணையில்லாதேபோனால், அப்பெண்ணை மணந்துகொள்ள அவனுக்கு மனம் வருகிறதில்லை. அப்படியல்லாது, வஞ்சனை, பொறாமை, லோபம், அரூபம், இத்தியாதி லட்சணங்களையுடையதாயும், வித்தையில் மாறைப்பிளப்பினும், மருந்துக்கும் ஓரெழுத்து மகப்படாததாயுமுள்ள ஒரு பெண் நிரம்ப வரதக்ஷிணை, சீர்செலுத்தி, முதலானதுகளுடன், கிட்டுவதாயின் அப்பெண்ணையே வேறு காரியங்களை விசாரியாமல் மணக்கிறான்.

“பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்” என்றபடி இது, நியாயமோ, அநியாயமோ, மனதிற்கேற்றதோ, அல்லவோ, உலகம் மெச்சுமோ, பரிகசிக்குமோ, என்கிற ஒன்றையும் பாராட்டாது, காசிலேயே கண்ணாய்த் தன் மனசாக்ஷிக்கு விரோதமாய்ச் செய்யத் தலைப்படுவதற்கு வரதக்ஷிணையையன்றி, வேறெதைக் காரணமாகக் கூறலாம். நாம் ரவுரவாதி நரகத்திற்காளாவதற்கு இதனினும் கொடிய பாவம் வேறு செய்யவேண்டுவதில்லையல்லவா?

ஜாதியில் பல பிரிவுகளின் காரணம்பற்றி உற்பவித்த வரதக்ஷிணையினாலுண்டாகும் தீமைகள் மேற்சொன்னவை மாத்திரமல்லாமல் இன்னும் பலவிருக்கின்றன. முக்கியமானவை அதிபாலிகா விவாகம், பாலியவிதவை ஆகிய இவைகள். எப்படியெனில், பெண் பெரியதாய்விடின், விவாகம் செய்யவேண்டிய அவசரம் வருகிறது. பிள்ளைகளும் தக்கவயதையடைந்து பரீக்ஷைகளும் தேறியிருந்தால் அவசர நிமித்தியமாய் வரதக்ஷிணை எங்கு அதிகமாய் விடுமோ என்று பயந்து, குழந்தையாகவிருக்கும்பொழுதே விவாகத்தைச் செய்ய மனம் தூண்டுகிறது. சில சந்தர்ப்பங்களில், ஐந்து அல்லது ஆறு வயது முடிவதற்கு முன்னதாகவே பெண்களுக்கு விவாகம் நடந்திருப்பதைக் கேட்டும், பார்த்துமிருக்கிறோம். இதனால் என்ன கெடுதி என்ற கேள்வி பிறக்கலாம்.

அதாவது, பெண்ணிற்கு உலகமே இன்னதென்று தெரியாமலும், இந்தப் புருஷனை மணந்து கொள்வதில் தனக்கு வாழ்நாளில் சுகமோ, கஷ்டமோ என்று பகுத்தறியச் சக்தியற்றிருப்பது ஒன்று. இரண்டாவது, விசேஷமாய் நம்மவர்களில் சென்ற சில வருஷங்களாகப் பாலிய விவாகம் மேன்மேலும் அதிகரித்து வருவதாலன்றோ பாலிய விதவைகளும் ஜாஸ்தியாவதற்குக் காரணமாகிறது.

8 NOV 1909

யோசித்துப் பாருங்கள். பதின் மூன்று வயதில் ஒருபெண் மாங்கல்யத்தை இழக்கவேண்டிய தலைவிதி இருப்பின், அவளுக்குச் சொற்ப காலத்திற்குமுன் விவாகமாயிருந்தால், இக்கஷ்டம் பெரும்பான்மை குறைவுபடும். அப்படியல்லாது, இதேபெண்ணிற்கு ஐந்து அல்லது, ஆறுவயதில் கல்யாணமாயிருந்தால்,நடுவிலுள்ள ஏழெட்டு வருஷகாலம் இதைக்குறித்து வருத்தப்படவேண்டி யிருந்திருக்கும்.

நன்றுயோசிக்குமிடத்து நாமிவ்விதக் கஷ்டங்களையெல்லா மனுபவிக்கக் காரணம் வரதக்ஷிணையென்பதே யென் சிற்றறிவிற்குப் புலப்படுகிறது. வரதக்ஷிணைக்கு மூலாதாரம் சாஸ்திரத்திலில்லாத ஜாதிப்பிரிவுகள்தானென ஒருவாறு மேலே கூறப்பட்டிருக்கிறது. போனதுபோகட்டும், இனியாகிலும், நாமும், நமக்குப்பின்னுற்பவிக்கும், பாலர்கள் பாலிகைகளும், இக்கொடுமைகளுக் காளாகாமல் நீடூழிகாலம் சகல சாம்பிராச்சியத்துடன் தங்கள் மக்கள் சுற்றத்தோர் சகிதமாய் வாழ்ந்துகொண்டிருக்க மார்க்கங்களைத் தேடவேணுமாய் நம் கற்றறிந்த பெரியோர்களை மிக்க பக்தி, சிரத்தையுடன் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

---

## பலத்தவர்

பலத்தவர் யாரென்று அனேகர் கேட்பதுண்டு. பனந்துண்டுபோன்ற கைகால்களை யுடையவரென்று பதில்சொல்லுவது சுலபம். ஆனால் அது சரியான பதில் அல்ல.

ஸ்தாவர வர்க்கங்களாகிய செடி கொடிகளையும், பசு பக்ஷி மிருகாதிகளையும் நன்றாகக் கவனித்துவரும் நவீன பண்டிதர்கள, அவற்றிலெல்லாம் குடும்பதருமமும், ஜாதிதருமமும் வெகுதூரம் முற்றியிருக்கின்றதென்றும், பலத்தவை, பலங்குறைந்தனவற்றிற்குச் சகாயஞ்செய்வது வெகு சாமான்னியமென்றுஞ் சொல்லுகிறார்கள். இப்படியிருப்பது வாஸ்தவமாயில், பகுத்தறிவுகூடி விளங்குகிற மனிதஜாதியில் பரஸ்பர மிருக்கவேண்டிய தருமம் நாம் சொல்லாமலே யேற்படுகிறது.

## 3. ஸ்ரீ விசுவாமித்திர மகாரிஷி

எடிட்டர்

(முதற்பாகம்)

சாரித்திரமுறைக்கும், புராணமுறைக்கும் ஒரு பெரிய பேதமுண்டு. புராணங்களுக்குக் கர்த்தாவா யிருப்பவர், வியாசபகவான்போல முக்காலமுந் தெரிந்தவராதலால், ஏதாவது ஒரு விஷயத்தை யெடுத்தால், ஆதியோடந்தமாகச் சொல்லி முடிப்பது வழக்கம். நளசரித்திரத்தையாவது, பாண்டவர் சரித்திரத்தையாவது சொல்லவேண்டுமானால், சந்திரனுக்குப் புதன் பிறந்தானென்று ஆரம்பித்துக் கடைசியில் சொர்க்காரோகண பருவம்வரை கதை சொல்லி நிறுத்தலாம்.

சாரித்திரமோ, இம்மாதிரி யாரம்பத்திற்கு இடங்கொடுப்பதில்லை. இம்மகா புருஷன் இன்னவிடத்திற் பிறந்தானென்றால், அது உமக்கெப்படித் தெரிந்ததென்று கேட்கிறார்கள். அதற்குப் பிரமாணம் சொல்லவேண்டும். ஆதாரம் தெரியவேண்டும். இப்படியே ஒரு தேசத்திய சரித்திரத்திற்கும்.

ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு ஜாதியாரிலும், நாகரீகமதிகரித்து, எழுத்து வாசனை பிரபலித்து வந்தபிறகுதான் சரித்திரத்திற்குதவும்படியான ரிகார்டுகள் அமைகின்றன. அதற்கு முந்தியகாலத்திற்குக் கர்ணபரம்பரையாக வரும் பாட்டுகள், வேதங்கள், கோயில்கள், கோபுரங்கள் முதலியனவே சாக்ஷியமாக வேண்டிவருகின்றன. இப்படியே இந்தியாவிலும்.

ஆகலால் இந்துதேச சரித்திர மாரம்பிப்பதென்றால்,இம்மாதிரி சாக்ஷியமெங்கே யாரம்பமாகிறதோ, அதன் முதலுள்ளதைத் தான் சொல்லி வருவது சாத்தியம். சிருஷ்டி காலந்துடங்கி யெழுதுவது அசாத்தியம். ஒரு சிறு கதை யிதை நன்கு விளக்கும்.

ஐந்து அல்லது ஆறு வயதுக் குழந்தை யெ



ஸ்ரீ விசுவாமித்திர மகாரிஷியும், தசரத மகாராஜாவும்

ன்றைக் குறும்புக்காகவொருவர், "உன் தாயாரிடம் போய், இப்போது உனக்குத் தங்கையாகப் பிறந்திருக்கும் குழந்தை யெங்கிருந்து வந்ததென்று கேட்டுவா," என்றார். அவன் அப்படியே போய்க் கேட்டதற்கு அவன் தாயார், "அந்தக் குழந்தையை மருத்துவத்திற்கு வந்திருந்த பாட்டியம்மாள் செய்துகொண்டு வந்தாள்," என்று பதில் சொல்ல, அவனும் அந்தப் பதிலை யொப்புவித்தான். பிறகு இரண்டொரு நாள் கழிந்தபின், இவன் தன்னையே வியவரை யிருந்தாற்போலிருந்து, "அந்தப் பாட்டியம்மாளை யார் செய்துவைத்தது?" என்று கேட்க, அவர் ஆச்சரியப்பட்டு "அந்தப் பாட்டியம்மாளை, வேறொருபாட்டியம்மாள் செய்து வைத்தாள்," என்றார். "அப்படியானல், முதன் முதலிருந்த பாட்டியம்மாளை யார் செய்து வைத்தது?" என்னவே யதற்குப் பதில் சொல்லமுடியாமல், "அதுதானப்பா, உலகத்தில் எங்கும் வழக்கிலிருக்கிறது," என்றாராம்.

ஆதலால் சரித்திர முறைப்படி "முதன் முதலிருந்த பாட்டியம்மாளை யார் செய்வித்தது" என்பது தெரியக் கூடாதவிஷயம். இப்பொழுது இரண்டொரு தலைமுறையாக அனேகமாய் நமக்குள் நடந்தவிஷயங்களனைத்தும் தெரியும். பத்துத்தலைமுறைக்கு முன் நடந்தவைகள் அரைகுறையாய்த்தான் தெரியும். அப்படியே மேலே செல்லச்செல்லக் குறைந்துபோய்க் கடைசியில் ஒரு தலைமுறைக்கப்புறம் ஒன்றுந் தெரியாதென்னும்படி வந்துவிடுவது சாதாரணம்.

இந்தியாவில் ஆரியர் என்று பெயர்கொள்ளுமனைவர்க்கும், வேதமே மதமுதலிய முக்கிய விஷயங்களுக்கெல்லாம் பிரமாணமாகிவருவது. ஆதலால் அது நமக்குள் எக்காலத்தில் பிரபலமாகி வந்ததோ, அதுமுதல்தான் நமது மூத்தோர்களைப்பற்றிய சங்கதி யேதாகிலும் தெரியுமென்னலாம். இந்தக்காலம் இத்தனையாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டதென்று நிஷ்கரிஷையாய்ச்சொல்ல இப்பொழுது நமக்குத் தெரியாது. ஆதலால் பழைய சம்பிரதாயப்படிப் பேசிவருகிற வைதிகர்கள், வேதம் அநாதி, என்றால், ஆரம்பங்காணுதது, என்கிறார்கள். புதுச்சம்பிரதாயப்படி பேசுபவர்கள், ஏதோ தங்களுக்குக் கிடைத்திருக்கும் சாக்ஷியங்களைக்கொண்டு, சிலர் 10,000 வருஷங்களுக்கு முற்பட்டதென்றும், சிலர் 6,000 வருஷங்களுக்கு முற்பட்டதென்றும், மற்றுஞ் சிலர் 3,000 வருஷங்களுக்கு முற்பட்டதென்றும் எல்லை குறித்துப் பேசுகிறார்கள்.

காலவிஷயத்தில் நமக்கு நிச்சயம் ஒன்றும் ஏற்படாவிட்டாலும், தேசவிஷயம் நிச்சயமாயிருப்பதில் ஆக்ஷேபமில்லை. வேதங்கள் முதன் முதல் ஸ்வரபூர்வகமாய்க் கோஷித்தது யமுனைக்கும் சிந்துவுக்கும் மத்தியிலுள்ள பிரதேசங்களில் தானென்பது நிச்சயம், ஆனால் அதற்குச்சாக்ஷியம் இப்போது எடுத்துக் காட்டுவது சாத்தியமன்று.

வேதங்கள் ருக்கு, சாமம், யஜுஸ், என்று மூன்றுவகை சாமான்னியமாகவும் அதர்வனம் ஒன்றைக் கூட்டி நான்கென்றும், மகாபாரதம் ஒன்றையுஞ்சேர்க்க ஐந்தென்றும், இவ்வாறுபல விதமாகச் சொல்லிக்கொண்டாலும் அவைகளில் முதன் மூன்றையும் நன்றாகப் பரீக்ஷித்தறிந்த நவீனவித்துவான்கள், அவைகளெல்லாம் 'ருக்கு' என்னும் ஒரு வேதத்தின் திரிபுகளென்றும், வாக்கியங்களெல்லாம் அனேகமாய் அதேவாக்கியங்களென்றும் சொல்லுகிறார்கள். ஆதலால் 'ருக்கு' வேதம் மற்றையவைகளைவிடச் சிரேஷ்டமாகக் கொள்ளப்படுகிறது.

இந்த வேதம் பத்து மண்டலங்களாகப் பிரிந்திருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரிஷியைப் பிராதான்னியமாகக் கொண்டிருப்பதால், அதற்கு அந்த ரிஷியும் அவர் வம்சஸ்தரும் கர்த்தாக்களென்று நாம் ஊகிக்கிறோம். இவர்களிலெல்லாம் இரண்டு மகாரிஷிகள் தாம் பிற்

பட்டகாலத்தில் பிரபலமாகிப் புராணம், இதிகாசம் முதலியவற்றில் பலகதைகளுக்கு ஆதாரமாகி யிருப்பவர்கள். அவர்கள் பெயர் முறையே வசிஷ்டர், விசுவாமித்திரர், என்பவைகளேயாம்.

அனேகமாய் இவ்விரண்டு பெயர்களும் இந்தியர்களெல்லோருக்கும் தெரியும். இவர்களிருவரும் ஏதோ காரணம்பற்றி வாதி பிரதிவாதிகளாகி விட்டதாகவும், சுவர்க்கலோகத்தில் இவர்களுடைய தர்க்கத்தினால் இப்பூலோகத்தில் பலவித அனர்த்தங்களுக்கு இடமுண்டானதாகவும் நம்மில் அனேகர் இன்னும் நம்பியிருக்கிறார்கள். இவ்விஷயமாய் இரண்டுமூன்று முக்கியக்கதைகளை மட்டும் சுருங்க வுரைப்போம்.

அனேகமாகத் திராவிட ஜனங்களுக்குள் வெகு பிரபலமாகியிருப்பது அரிச்சந்திரனும், அவர் மனைவியாகிய சந்திரமதியும். இவ்வரசன் சூரிய வம்சத்திலுதித்து, வாக்குத்தவறுமலிருந்ததற்காக, குலகுருவாகிய வசிஷ்டர் பெருமை பேசிக்கொண்டதும், அதுகாரணம்பற்றி விசுவாமித்திரர் அவரைப் பரீக்ஷித்து, நாடுநகரங்களைப் பிடுங்கிக்கொண்டு, அவரையும் பெண்டு பிள்ளையையும் அடிமையாக்கிப் பிறகு பிள்ளையையும் கொன்று, பலவிதமாக இம்சித்தும், அவ்வரசன் மனந்தளராமல்,

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தன மினிநமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றார்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்,"

என்று முடியும் இக்கதையைக் கேட்டு மனமுருகாத ஆணும் பெண்ணும் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

இரண்டாவது, விசுவாமித்திரர் ராஜரிஷியாகவிருந்து பிரும்மரிஷியான கதை. இது முக்கியமாக ராமாயணத்திலும், பாரதத்திலும் காணுவது. விசுவாமித்திரன் சந்திரவமிச ராஜாவென்றோ, வெறெந்த வமிசமென்றோ தகரார் இருந்தாலும், க்ஷத்திரிய னென்பதில் யாரும் சந்தேகப்படுவதில்லை. அப்படி ராஜவம்சத்தில் பிறந்து பூமியாண்டு வருகையில், வசிஷ்ட மகாரிஷியாசிரமத்திற்குப் போக நேர்ந்ததாகவும், அவர் இவருக்கு விருந்து செய்ததாகவும், அந்த விருந்து சம்பிரமத்தைப் பார்த்து அதிசயித்து அதற்குக் காரணமாகக் கண்ட காமதேனுவை வேண்டியதாகவும், வசிஷ்டர் கொடுக்கமாட்டேனென்றதற்கு, பலவத்காரமாக அத்தேனுவைப் பிடிக்க முயன்றதாகவும், அது சாதியாமற்போகவே, தபோபலம் அதிகரித்துத் தானும் வசிஷ்டருக்குச் சமதையாவேனென்று சபதங் கூறிப்போய் வெகு கோரமாகத் தபசு செய்து கடைசியில்காரிய சித்தியடைந்ததாகவும் கதை.

மூன்றாவது, இப்படிக் கடைசியாய்ச் சொல்லிய தபோமகிமையினாலுண்டாகிய கதைகள். ஒருமுறை அவர் தபசுசெய்து கொண்டிருக்கையில், அம்பரீஷ மகாராஜா 'நரமேதம்' என்னும் மனுஷியயாகம் செய்ய ஆரம்பித்து அதற்கு ஓர் பிராமணப் பிள்ளையைக்கிரயத்துக்கு வாங்கிப்போக, அவன் மகாரிஷியைக்கூவி யென்னைக் காப்பாற்றவேண்டுமெனக் கெஞ்ச, அவரும் அப்படியே செய்தார். மற்றொருமுறை இவருடைய தபோ பலத்தினாலுண்டான உக்கிரத்தைச் சகிக்கமாட்டாமல், அதைக் கெடுப்பதற்காக இந்திரன் ரம்பையையோ, மேனகையையோ, அல்லது இவர் போன்ற வேறியாரையோ ஏவித் தபசைக்கலைத்து விட்டான். இப்படி வேண்டாமல் வந்த சம்பந்தத்தினால், சகுந்தலை முதலிய பெண்மணிகளுண்டாகிப் பின்னிட்டு வந்த பெருங் கதைகளுக்கு நாயகிகளானார்கள்.

பிரும்மரிஷியான பின்னிட்டோ, அதற்கு முந்தியோ, இக்ஷ்வாகு வம்சத்திய அரசனை திரிசங்கு வென்பவருக்குத் தேகாபிமானம் அதிகமாகிச் சுவர்க்கத்திற்கும் இவ்வுடலுடன் போகவேண்டித் தமது குருவாகிய வசிஷ்டரையோ அவர் குமாரரையோ கேட்க, அவர் மாட்டேனென்று விடவும், விசுவாமித்திரர்,

1909 MADRAS



ஸ்ரீ ராஜராஜேசுவரி



நான் செய்விக்கிறேனென்று, மந்திரபலத்தால் திரிசங்குவைச் சுவர்க்கலோக மனுப்பியதாகவும், அவ்விடத்திலுள்ளவர்கள், ரயில்வண்டியில் கூட்டமாயிருக்கும்பொழுது ஏறப்போகிறவர்களை உள்ளிருப்பவர்கள் நெட்டுவது போல வெளியே நெட்டித் தள்ளியதாகவும், அவ்வரசனும் முனிவரனைக் கூவிப் புலம்ப, அதற்காக அவரும் கோபாவேசத்தினால் அவ்வரசனை யவ்விடமே அந்தரிக்ஷத்தில் நிறுத்தி, பிரம்ம சிருஷ்டிக்குப் பதிலாக சூரியமண்டல முதலியவற்றைச் சிருஷ்டிக்க வாரம்பஞ்செய்ததாகவும், பிறகு தேவர்கள் வேண்டுகோளின்படி நிறுத்திவிட்டதாகவும், அப்படிச் சிருஷ்டித்ததற்குச் சாக்ஷியமாகத் தருப்பைப்புல்லில் ஒருதினுசுக்கு, நாளதுவரை “விசுவாமித்திரம்” என்று பெயர் வழங்குவதாகவும் கதை.

முக்கியமாய் வழங்குவன இவ்விரண்டு மூன்று கதைகள். தான், ஆனால் இவைகளைச் சாமான்னியமாய் நாம் கேட்குமுறைக்கு, விசுவாமித்திரருக்காகிலும், வசிஷ்டருக்காகிலும் பெருமை தருவதாகக் காணோம். ஆதலால் ருக்கு வேதத்தில் அனேக முக்கிய மந்திரங்களுக்குக் கர்த்தர்களாகிய இம்மகரிஷிகளுக்குள் விரோதமெப்படியுண்டாயிற்று, என்பதையும், இக்கதைகளுக்கு ஏதாகிலும் காரணமுண்டாவென்பதையும், நாம் விசாரித்து, விசுவாமித்திரருக்குள்ள மரியாதையைச் சமர்ப்பிப்பது நமக்கு முக்கிய தர்மம். அதை நவீனபண்டிதர்களொருவாறு செய்திருப்பதால் அவ்விஷயத்தைமட்டும் அடுத்த முறை சுருக்கிச்சொல்லிவிடுகிறோம். (இன்னும் வரும்)

## பரிஹாஸப் பேச்சுகள்

அடே, அடபயலே, தொங்கிச்சுப்பா என்று இப்படிப் பேரிட்டு அழைப்பதையும் பரிஹாஸங்களையும் நாம் முற்றிலும் விட்டுவிடவேண்டும்; இவைகளை ஒரு கெட்ட சங்கத்தில் நாம் பழக்கிக்கொண்டு மற்றொரு நற்சங்கத்தில் உபயோகிப்போமானால், அது நமது யோக்கியதையையே நன்றாய் வெளிப்படுத்திவிடும்.



## 4. விஜயதசமி

ல. அனந்தய்யர்

பராசக்தி என்னும் தேவி கொலுவிருக்கும் நவராத்திரியின் கடைசிதினமாம் இந்த விஜயதசமி என்பது. ‘நவராத்திரி’ என்றால் ஒன்பது இரவுகள் என்று அர்த்தம். தேவியின் உபாஸனைக்கும் பூஜைக்கும் ராக்காலங்களே விசேஷமாகும். ஆதலின் மேற்சொல்லிய ஒன்பது தினங்களுக்கும் நவராத்திரி எனவும், நவராத்திரி உற்சவம், எனவும் பெயர் வந்தது. பராசக்தியின் மூன்று ஸ்வரூபங்களான துர்க்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆகிய இம்மூன்று சக்திகளுக்கும், சக்தியொன்றுக்கு மும்மூன்று நாள்வீதம், ஒன்பது நாள் பூஜை செய்து பத்தாந் தினத்தில் தேவியின் ஸ்தூலரூபத்தைப் பூஜிப்பது இப்போது வழக்கமாயிருந்து வருகிறது. சக்தி விசேஷத்தை ஆராயப் புகுந்தால் அது அபாரமாய் வளரும். ஆயினும் ‘சக்தி’ என்பதற்குத் ‘தேவி’ என்று அர்த்தங்கொண்டு, அந்தத் தேவியின்(சக்தியின்) சகாயத்தை ஒன்றுக்கில்லாவிடில் மற்றொன்றுக்கு நாம் விரும்புவதனாலேயும், நமக்கு ஏதேனும் ஒருகாரியம் நிறைவேறவேண்டியாயின், அதை நிறைவேற்றச் ‘சக்தி’ யில்லையென்று நாம் முறையிடுவதினாலேயும், அந்த ‘சக்தி’ என்னும் பதத்திற்கு ஏதோ ஒருவிதமான தெய்வத்தன்மை இருக்க வேண்டுமென்பது இனிது புலப்படுகின்றது. ஒன்றை ஸாதிக்கவேண்டுமானால் தேவியின் (சக்தியின்) ஸகாயத்தை நாடுகின்றோம்; தேவியின் தயவைத் தேடுகின்றோம்; தேவியைநாடித் தொழுகின்றோம். தேவியின் பாத கமலங்களிற் பணிந்து பிரார்த்திக்கின்றோம். ஆதலால் தேவி என்கிற ‘சக்தி’க்கு வல்லமை, வீரம், திறமை, ஊக்கம் என்று ஸாமான்னியமாய்ப் பொருள் கூறினும் பொருந்தும் என்பதற்கு ஆக்ஷேபணையில்லை, இவ்விதமாக இயற்

கையாய் அமைந்திருக்கும் தேவியை (சக்தியைப்) பூஜிப்பது அவசியமென்று நம்முன்னோர் ஏற்படுத்தியிருப்பது மிகவும் மேன்மைகொண்டதாகும். பத்துநாள் உற்சவமாகிய நவராத்திரியின் பத்தாம் நாளன்று ஸரஸ்வதி தேவியைப் பூஜிக்கின்றோம். நாமகள் ஜன்மதினமென்று சொல்லப்படுகின்ற மூலம் என்னும் நக்ஷத்திரத்தில் ஸரஸ்வதியை ஆவாஹனஞ்செய்து சிரவண நக்ஷத்திரத்தில் பூர்த்தி செய்கின்றோம். இதன் அர்த்தம் என்ன? எந்த விஷயத்திற்காக ஸரஸ்வதியைத்தேடுகின்றோமோ அந்த விஷயமான வித்தையை அதன் மூலத்திலேயே (ஆரம்பத்திலேயே) அப்பியஸித்து, படிப்படியாய் வருஷந்தவறாமல் புதிய புதிய புஸ்தகங்களைப் படிக்க ஆரம்பிப்பதும், வருஷக்கடைசியில் ஆரம்பித்த வித்தையில் தேர்ந்து, மறுவருஷத்தில் நவீனவித்தையைக் கற்க முன்வருவதும், ஆகிய இவ்விஷயங்களைக் கவனிக்கவே இப்பூஜையை நம் மூதாதைகள் ஏற்படுத்தியிருக்கின்றனர்போலும். இதன்றிச்சக்தியின் வல்லமையைத் துர்க்கை அல்லது காளி ரூபமாகவும் பூஜிக்கின்றோம். வீரசூர பராக்கிரமங்களுக்குத் துர்க்காதேவி அறிகுறியானதன் காரணமாக துர்க்கைக்கு ஸ்தூல அறிகுறியாய் ஆயுதங்களைக்கொண்டு இவ்வுற்சவத்தின் கடைசி தினத்திற் கொண்டாடுவார்கள். இந்த உற்சவத்தை வங்கதேசத்தவர் துர்க்க பூஜையென்று சொல்லுகிறார்கள். இதற்கே ஆயுத பூஜையென்றும் பெயர். இத்தினத்தில் ஜனங்கள் வெகு உற்சாகமாய்த் தம் தேகபலத்தைப் பிரகடிப்பதும், குஸ்திப்பந்தயங்களும், கஸரத்து விளையாட்டுகளும், வைப்பதும் எங்கும் நிரம்பியிருக்கும். ஆகையால் கல்விக்கும் பலத்துக்கும் பக்திக்கும் இன்றியமையாச் சாதனமான நவராத்திரி உற்சவத்தைச் சேர்ந்த விஜயதசமியைக்குறித்துச் சுருக்கமாய்க் குறிப்பிடுவோம்.

மதசம்பிரதாயப் பற்றுள்ளோர் இந்த தினத்தை எப்போதும் மறக்கமாட்டார்கள். இதை ஒரு சுபதினமெனக் கொண்டாடுவார்கள். ஆனால் நமது நாட்டில் பஞ்சாங்கங்களைக் கவனிப்பவர் பலர் ஏற்பட்டிருக்கின்றமையால், திதி வார யோக நக்ஷத்திரங்கள் மாறுபட்டுச் சிலர் விஜயதசமியை வெவ்வேறு தினங்களில் வருகிறதாகக் கூறுகின்றனர். அவர் எங்ஙனமேனும் கூறிக்கொள்க. ஜனங்கள் கொண்டாடுந் தினம் வேறுபட்டாலும், தசமி திதியின் தினம் வேறுபடாதல்லவா? இத் தினத்தை முன்னிட்டு, நம் வித்யாவிஹாரிணி பத்திரிகை தாண்டவமாடும் தமிழ் உலகத்தவர்க்கு உபயோகமாகும்படி அதனைநடத்த இதன் ஆதிகர்த்தர்கள் கங்கணங்கட்டிக் கொண்டிருப்பதனாலே முதன் முதல் விஜயதசமி என்னும் விசேஷ தினத்தின் மகிமையைக் குறித்துப் பேசுவது உசிதமாகுமென்று இதனையீண்டு எழுதத் துணிந்தனம்.

நவராத்திரி உற்சவத்தில் வரும் ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வொரு விசேஷமுண்டு. ஒவ்வொன்றையும் வைதிக தர்ப்பணத்தின் பிரகாரம் எடுத்து எழுதுவதென்றால் முடியாது. இரண்டொரு விசேஷத்தைமட்டும் இப்போது கவனிப்போம். சாதாரணமாய் நவராத்திரியில் வருபவைகளுள் அஷ்டமியைத் துர்க்காஷ்டமி என்றும், நவமியை மஹாநவமியென்றும், தசமியை விஜயதசமி யென்றும் உலகத்தவர் கூறுவதைக்காண்கிறோம். அனேகமாய்த் தென் இந்தியச் சிறுவர்கள் மஹா நவமியன்றுதான் மானம்பூவெனக் கொந்தளித்துப்பாட்டுப்பாடி அலைந்து திரிவார்கள். கஞ்சமலர்க்கண்ணனும், கார்முகில் எழுந்திடில் வண்ணனும் ஸர்வலோக சரண்யனுமான ஸ்ரீ கிருஷ்ணபகவானும் நவராத்திரியில் அனுஷ்டிக்கப்படும் தேவி பூஜையைப் பற்றி வெகுவாய்ச் சொல்லியிருக்கிறாரென்று புராணாதிக் கிரந்தங்களிலிருந்து தெரியவருகிறது. துரியோதனாதியரான கௌரவர்களுக்கும் பாண்டவர்க்கும் குருக்ஷேத்திரத்தில் போர் நடப்பதற்கு முன்பாக அர்ச்சுனனது ரதத்தில் ஸாரத்தியம்செய்துகொண்டிருந்த பகவான் அர்ச்சுனனைப் பார்த்துத் துர்க்கா பூஜைசெய்யும்படி சொன்னார்; அதன்பேரில், அவனும் தேரிலிருந்து கீழிறங்கித் தேவியை (சக்தி) பூஜைசெய்து பிரார்த்தித்து அவ்வம்மனனுக்கிரக பலத்தினால் மஹாபாரதப் போரில் வெற்றியுங் கொண்டனன். இதன்றி, இத்தசமி திதிக்கு விஜயதசமி என்று பெயர் வந்ததற்கு வேறொரு காரணமும் உண்டு.



துரியோதனனோடு சூதாடிச் சகலத்தையும் தோற்றுவிட்ட பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷகாலம் வனவாஸமிருந்து பின்னர் ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸம் இருக்கவேண்டி விராடநகரஞ் சேர்ந்தார்கள். அக்காலத்தில் துரியோதனன் ஊரூராய் உளவாளிகளை அனுப்பிப் பாண்டவர் இருக்குமிடத்தை அறிந்துவரும்படி சொன்னான். இதற்குள் விராட நகரத்தில் பாண்டவர் இருப்பதாய்த் துரியன் சூசனையாய்க் கேள்விப்பட்டு தன் படைவீரர்களை அந்நகரத்தின்மீது போர்க்கோலங்கொண்டு செல்லும்படி ஆக்கியாபித்தான். படையாட்கள், கடல்கரை புரண்டு பொங்கினதுபோலப் புறப்பட்டு வந்து விராடராஜனது பசுக்களைச் சிறைபிடித்துச் சென்றனர். அதுகாறும் அஞ்ஞாத வாஸத்தில் ஒளிந்து வைத்திருந்த காண்டீபத்தை நபும்ஸகியாய்ப் பிருகந்நளை என்ற பெயரோடிருந்த அர்ச்சுனன் சமீ (வன்னி) விருக்ஷத்திலிருந்து நவராத்திரி கழிந்த பத்தாம் நாள் எடுத்து நாணேற்றி எதிரிகளின் படை கலங்கப் பாணப்பிரயோகஞ் செய்து விராடராஜனது பசுக்களை அவர்களிடமிருந்து மீட்டு வெற்றிகொண்டு திரும்பினான். இவ்வாறு அர்ச்சுனன் ஜயவீரங்கொண்டு திரும்பினான் என்பதைக் குறிப்பிடுவதற்கேயோ இந்த விஜயதசமிக் கொண்டாட்டம்? அல்லது 'வெற்றி' என்னும் பதத்திற்கு அர்த்தமுள்ள 'விஜயம்' என்று மறுபெயர் கொண்ட அர்ச்சுனனது பெயரை யொட்டி 'விஜயதசமி' என்று தெரிவிப்பதற்கோ? இதைவிட ஏற்றதும் பொருந்தியதுமான வேறு காரணப் பெயரைக்காணோம். இந்து அரசர்கள் அரசாண்டபோது போர்கொண்டு செல்வதற்கும், பட்டாபிஷேகஞ் செய்வதற்கும், அந்த விஜயதசமியைப் பிரதானமாய் அனுஷ்டித்ததையொப்ப நாமும் காலக்கிரமத்தில் நம்மக்களுக்கு வித்தியாரம்பம் செய்வதற்கும் புதிதாய் சாஸ்திரப் பயிற்சி செய்வதற்கும் உரிய ஸுதினமாக இந்த விஜயதசமியைக் கொண்டாடுவது சான்றாகுமல்லவா? பின்னும் இந்த விஜயதசமியிற் சம்பந்தப்பட்ட சமீ விருக்ஷத்தின் பிரபாவம் அதிகமுண்டு.

'சமீ' என்பது 'ஞானம்' எனும் அக்கினிக்கு அறிகுறியானது. ஒவ்வொரு சிருஷ்டிவர்க்கத்திலும் ஞானாக்கினியை ஸ்தூலவுலகத்திற் குறிப்பிடுவதற்கு ஒவ்வொரு வஸ்துவுண்டு. கந்தமூலவர்க்கத்தில் சமீமரமே அந்த அடையாளமென்று புராணங்களிற்கூறப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ மகாவிஷ்ணு பத்மாவதியை மணந்த காலத்து வந்திருந்த விருந்தினர்கள் தம் தெய்வமாகிய மகா விஷ்ணுவுக்கு அர்ப்பிதஞ் செய்யாது தாம் புசியோம் என்றனர். விவாக காலத்தில் வதூவரர்கள் மாங்கல்யதாரணமாகு முன் அன்னம் புசிக்கலாகாதென்று விதி ஏற்பட்டிருப்பதால், இவ்விடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே மாப்பிள்ளை யானமைப்பற்றி அவர் தம் குலதேவதையான சமீமரத்திற்கு (வன்னிமரத்திற்கு)—வன்னி என்றால் நெருப்பு, அதை இவ்விடத்தில் ஞானநெருப்பென்று கொள்க—நிவேதனம்செய்து விட்டு நீங்கள் புசியுங்கள் என்றார். மஹா விஷ்ணுவே இம்மரத்தைத் தம் குலதேவதை என்றால் அதன் மகிமை இத்தன்மையதென்பது நாம்கூறாமலே விளங்கும். அதர்வவேதத்தைச் சேர்ந்த கோபத ப்ராஹ்மணத்திலும், தைத்ய ப்ராஹ்மணம், தைத்ரீய அரண்யகம், பவிஷ்யபுராணம் ஆகிய இவைகளில் சமீபூஜைக்கு வேண்டிய விவரங்கள் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பெருமை மிகுந்துள்ள விஜயதசமியைச் செந்தமிழ் நாட்டு வியாபாரிகளும், தொழில் ஆரம்பிக்கக் கருதியுள்ள மற்றோரும் அறிந்து சுபகரமான இந்த தினத்திலேயே தாம் செய்யக் கருதிய காரியத்தையெடுக்கமுயலுவாராக. இத்தினத்தில் ஆரம்பிக்கப்படுங் காரியம் வெகு சிலாக்கியமாய் விளங்குவதோடு அதனால் வரக்கூடிய நற்பயன்களும் பலவுண்டு.

## கலைவகைக் காண்டம்

### 1. பாரதவருஷத்திய ஔஷதங்களும், ஔஷதச் சரக்குகளும்

எட்டிக்கோட்டை

ஓ இஷ்டர்களே நாம் சொல்லுவது உங்களுக்கு இரண்டொரு விஷயத்தில் கசப்பாயிருந்தாலு மிருக்கலாம். ஆனால் அதை யனுசரித்து நம்மில் யாராகிலும் நடந்தாலோ, அது நம்மவர்களுக்கு ஆரோக்கியத்தை வெகுவாய் உண்டுபண்ணும்.

இப்போது சிலவருஷங்களாக உங்களைச்சுற்றிலும் நடக்கும் காரியங்களைப் பார்ப்பீர்களாகில் அவைகளுக்கெல்லாம் பொதுலக்ஷணமொன்று காணும். அதெப்படியென்பீர்களா? சொல்லுகிறேன், கேளுங்கள்.

முதலாவது, வித்தியாப்பியாசத்தை யெடுத்துக்கொள்ளுங்கள். முந்தியிருந்த ஐரோப்பிய நண்பர்கள், இங்கிலீஷ்லேயேதான் வித்தை கற்பித்தாக வேண்டுமென்றும், தேசியபாஷைகளெல்லாம் தொலைந்தால் ஒரு நஷ்டமுமில்லையென்றும் சொல்லி வந்தார்கள். தற்காலத்திலோ மகாஜனங்களுக்கு வித்தையென்பது கிடைக்க வேண்டுமானால் இங்கிலீஷை யொழித்துவிட்டுத் தேசியபாஷைகளிலேயே கல்வி கற்பித்தாகவேண்டு மென்கிறார்கள். அதாவது இந்நாட்டில் தோன்றுதோட்டு வந்திருப்பதை ஆதாரமாகக்கொண்டு, மேல் கட்டிடங் கட்டவேண்டுமென்கிறார்கள்.

இரண்டாவது, தொழில்களிலேதாகிலு மெடுத்துக் கொள்ளுவோம். நீராவி யந்திரங்கள் துணி நெய்வதற்கு நாளுக்கு நாளதிகமா யுபயோகப்பட்டு வருவதால், இனிகைத்தறி முதலியவைகளெல்லாம் மூலை சேரவேண்டியதுதானென்று முந்திச் சொல்லி வந்தார்கள். இப்பொழுதோ அதை யாதாரமாகக்கொண்டு, நமது சாலியருக்குப் பரம்பரையாக வந்திருக்கும் சாதுரியத்தையும் விடாமல், எவ்விதமாவது அவர்கள் படும் பாட்டிற்குக் கூலி யதிகமாகவும், பலனதிகமாகவும் கிடைக்கச் செய்யவேண்டுமென்று அதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடி வருகிறார்கள். இதுவும் மேற்குறித்தபடியே இருப்பதை யாதாரமாகக் கோண்டு கட்டிடங் கட்டுவதாம். இப்படியே இன்னும் எத்தனை யுதாரணங்கள் வேண்டுமானாலும் எடுக்கலாம். ஆனாலது அனாவசியம். சொல்லப்போகிற சங்கதிக்கு இது போதுமென்று காணுகிறது.

இந்தச்சங்கதி ஔஷத விஷயம். இவ்விஷயத்திலும் ஆரம்பத்தில் அப்படியேதான் நினைத்திருந்தார்கள். இந்நாட்டில் வைத்தியமென்பது வெகுமுரட்டுத்தனமானதென்றும், "பட்டினியேபரமஔஷதமென்னும்," வாக்கியத்திற்கிணங்க, எல்லா வியாதிகளுக்கும் ஒரே பக்குவமாகப் பட்டினி கிடத்திக் கொன்றுவிடுகிறார்களென்றும், வியாதிகளை யுள்ளபடி கண்டறிவதற்கும், கண்டபின் அதற்கு வேண்டிய சிகிச்சை செய்வதற்கும்,முறைகளோ வெகு சாமான்னியமென்றும், சொல்லிவந்தார்கள். இப்போதும் அரைகுறையாகப் படித்துவிட்டு அகங்காரமேலிட்டிருக்கும் டாக்டர்களனேகமாயப் படித்தான் சொல்லிவருவது. ஆகிலும் இவ்வொரு விஷயத்தில் மட்டும் ஆதிமுதல் ரகசியந் தெரிந்த சிலர் இப்போது நாம் சொல்லுகிறபடி யிந்நாட்டிலுள்ள சாஸ்திர முறைகளை விசாரிக்க வேண்டுமென்றும், பரீக்ஷித்தால் அதனால் இந்நாட்டவருக்கு மட்டுமேயல்லாமல் வேறு நாட்டாருக்கும் பிரயோஜனமிருக்கலாமென்றும் சொல்லியும், பிரயத்தனப்பட்டும், வந்திருக்கிறார்கள். தவிர மேனாட்டு முறையில் தேர்ந்த நம்மவரில் சிலர் நமது பழைய ஆயுர்வேதக்கிரந்தங்களாகிய, 'சரகம்', 'ஸுசுருதம்' முதலிய கிரந்தங்களைப் பரிசோதித்து, அவைகளை யிக்காலத்திற்கேற்க மொழிபெயர்த்து விளக்கி வந்திருப்பதில், அனேக அற்புதங்கள் வெளியாகின்றன. அதுபோலவே, யூனானி, முதலிய சாஸ்திரங்களும் வெளியாகிப் புத்திமான்களொப்பும்படி விளங்கி வருகின்றன.



இப்படிப் பலவிதங்களிலு மிந்நாட்டிலிருப்பதை யாதாரமாகக்கொண்டு மேல் நடவடிக்கை நடத்துவது சரியாகக் காணுவதாலும், பிரயத்தனம் நடந்துவருவதாலும், மகாராஜாக்கள் முதல், நாயாடி யீறாகச் சகல ஜனங்களுக்கும், ஆண், பெண், குழந்தை, விருத்தன் ஆகிய எல்லோருக்கும், எக்காலத்தும் அத்தியாவசியமாகிய ஔஷதங்கள் சுலபமாய்க்கிடைக்க வேண்டிய உபாயமென்ன வென்று நாம் யோசிக்க வேண்டும். அதையிதுவரையேன் புத்திமான்கள் விசேஷமாக யோசிக்கவாவது தக்க பிரயத்தனஞ் செய்யவாவது இல்லை யென்பது தான் நமக்கு வெகு ஆச்சரியம்.

'ஔஷதங்கள்' என்று நாம் மொத்தமாய்ச் சொல்லுவதில் சிலருக்கு இன்ன தென்று விளங்காமலிருக்கலாம். ஆதலால் இவ்விஷயத்தில் நமது கருத்தைச்சற்று விஸ்தரித்தெழுதுகிறோம்.

நமது வைத்தியர்கள் சாமான்னியமாய் உபயோகிக்கும் ஔஷதங்கள் மூன்று வகைப்படும். மாத்திரைகள், பஸ்மங்கள், சிந்தூரங்கள் முதலியன தலைமுறை தலைமுறையாயிருக்கவேண்டியவைகள்; லேகியங்கள், தைலங்கள், சூரணங்கள் முதலியன, சில மாசங்களோ, சிலவருஷங்களோ இருப்பவை; கஷாயங்கள், தழைச்சாறுகள், முதலியன அப்போதைக்கப்போது தயார்செய்யவேண்டியவை.

இப்படியிருப்பதில் பல காரணங்களினால் வைத்தியர்கள் வேறாகவும், ஔஷதஞ்செய்து விற்பவர்கள் வேறாகவும் நமது நாட்டிலாகவேயில்லை. ஒருவிஷயத்தில் இது நல்லதுதான். "வில்வாதி லேகியம்," என்றொருவன் ஒருலேகியத்தைக் காண்பித்தால், அது முறைப்படியாகி யிருக்கிறதாவென்று சாண நம்மால் முடியாதிருப்பதுடன், சாமான்னியமாட் வைத்தியர்களுக்கும் பரீக்ஷைதெரியாது. இப்போது ஒரு பதார்த்தத்தைக் கொடுத்து மதிராசில் கெமிகல் பரீக்ஷகரை இதில் விஷ வஸ்துக்களோ, வேறு ஏதாகிலும் தெரியவேண்டிய வஸ்துக்களோ இருப்பது கண்டறியவேண்டுமென்றால், அவர் அதைப் பரீக்ஷித்துச் சொல்லிவிடுகிறார். அப்படி நம்மவரில் பரீக்ஷைகள் சம்பிரதாயமா யேற்படவில்லை. அல்லது முற்காலத்திலேதாகிலும் ஏற்பட்டிருந்தாலும் நமக்குத் தெரிந்தவரை யிக்காலத்தில் காணோம். ஆதலால் ஔஷதங்களை வைத்தியர்களே செய்வதில் ஒரு அனுகூலமிருப்பது பிரத்தியக்ஷம். கள்ளமொன்றும் விசேஷமாயிருப்பதற்கிடமில்லை. இருந்தால் வைத்தியன் பிழைப்பு நெடுநாளைக்கு நடவாது.

ஆனாலிதில் உபத்திரவமும் பலவிதமாகவிருக்கிறது. ஔஷதம் வேண்டியவர்களுக்கு உடனே கிடைப்பது துர்லபமாகிறது. தயாராவதற்குக் கார்க்கவேண்டியிருப்பதுடன், வேண்டிய பதார்த்தங்கள், தழைகள் முதலியன அகப்படுவதும்துர்லபமாகிவிடுகிறது.தவிரத்தொலைகளிலிருக்கும் வியாதிஸ்தருக்கு மருந்து கொடுப்பது முடியாத காரியமாகிவிடுகிறது. இக்காலத்தில் மேனாட்டு முறையை யனுசரித்துக் கல்கத்தாவில் விசேஷித்தும், மற்றவிடங்களில் சிறிது சிறிதாகவும், ஆயுர்வேத மருந்துக் கடைகள் ஏற்பட்டுப் பத்திரிகை வாயிலாகச் 'சரமகவிகள்' பாடிக்கொண்டு ஏதோ ஒருவிதம் பிரபலித்து வருகின்றன. ஆனால் இவ்வௌஷதங்களில் ஜனங்களுக்குப் பக்தியதிகரிப்பது சிரமம். ஏனெனில் மேனாட்டு ஔஷதங்களுக்கு அங்கங்கே யிருக்கும் பிரபலவைத்திய சங்கங்களும்,வைத்தியர்களும்,யோக்கியதைப் பத்திரங் கொடுத்திருப்பதால் அதில் கள்ளம் ஒன்றுமிராதென்று நம்பி இதரஜனங்களும், இதரவைத்தியர்களும், தாராளமாக வாங்கி யுபயோகிக்கிறார்கள். அப்படியிங்கே யாரைச் சொல்லலாம்?'கேசரஞ்சனத்தைலம்' விற்கும்ஸ்ரீயுக்த நகேந்திரநாத

சேனன் என்பவர் தான் நமது பக்கத்தில் தமக்குப் பலமாக அடித்துவந்திருப்பது. இவரிடத்தில் உள்ள சரக்குகள் ஏதோயோக்கியதையிருக்கலாம். இல்லாவிட்டால், இத்தனை நாளாக அவைகளுக்குப் பிரபல்லியமிருந்து வந்திராது. என்றாலும் இவருக்கு நாம் மேற்குறித்தபடி 'பரீக்ஷை' யோக்கியதை யொருவருங் கொடுத்தவருமில்லை. கொடுக்கத்தக்க யோக்கியதையைத் தம்மிடத்தி லடைந்தவருமில்லை.

ஆனாலிது பெருத்த விஷயம். நமது பழைய முறைகள் அநேகமாய் ரகசியமாயிருப்பதுபற்றியவைகளைப் பகிரங்கப்படுத்தி, ஔஷதங்களைப் பரீக்ஷிப்பதற்கும் சம்பிரதாயங்கள் ஏற்பட்டு, ஆங்கிலேய முறைப்படி வைத்தியர்கள் எழுதிக்கொடுப்பதும், ஔஷதக் கடைக்காரர் மருந்து கொடுப்பதுமாக ஆவதற்கு வெகுகாலஞ் செல்லவேண்டும். மைசூர் முதலிய சமஸ்தானங்களும், பிரிட்டிஷ் ராஜாங்கத்தி னுதவி பெற்று நம்மில் அபிமானிகளனேகரும் சேர்ந்து உழைத்துவந்தால் காலக்கிரமத்தில் ஏதாகிலும் நன்மையடையலாமென்பது நிச்சயம். ஆகவே இப்பொழுது மைலாப்பூரில் ஸ்ரீமான் ஆனரெபில் வி. கிருஷ்ண சுவாமி அய்யரவர்களுடைய "வேங்கடரமண வைத்தியசாலை"யை ஒரு நல்ல ஆரம்பமாகச் சொல்லலாம்.

இந்த ஔஷதங்களைச் செம்மையாய்ச் செய்வதற்கு இடமில்லாம லிருப்பதும், பரீக்ஷையில்லாம லிருப்பதும் ஒரு பெருங் குறையென்பது இப்போது வியக்தமாகும். ஆனால் இதுமட்டுமேயல்ல. பல ஔஷதங்களுக்கு மகிமைகுறைவதற்கு நமது வைத்தியர் காரணம். இக்காலத்தில் எவன் வேண்டுமானாலும் வைத்தியனாகப் புறப்படலாம். பள்ளிக்கூடங்களில்லையாதலால் அனுபவ மூலமாய்த்தான் ஒருவன் தொழில் கற்றுக்கொள்ளவேண்டும். அதற்குத்தக்க குருவில்லாவிட்டால், கற்றுக்குட்டி வைத்தியஞ்செய்து ஆயிரம் பெயரைக்கொன்று அரை வைத்தியனாக வேண்டிய வழியொன்றுதான் சுவாதீனத்தி லிருக்கிறது. இதனால் ஔஷதங்களுக்குள்ள யோக்கியதை தெரியாமல், அதிகமாக உயர்த்தியாவது, தாழ்த்தியாவது பேசிவருவது நமது வைத்தியர்களுக்குச் சகஜமாயேற்பட்ட தோஷம். வைத்தியர்களி லொருவர்க்கொருவர் தாழ்ந்தவரென்றோ, உயர்ந்தவரென்றோ, அறிவதற்கு மேனாட்டு டாக்டர்களிட மிருக்கும் அடையாளங்கள் போல வொன்று மில்லாமலும், அப்படி யேற்படுவதற்கு வகையொன்றில்லாமலுமிருப்பதால், ஒவ்வொருவரும் தமக்குச்சமதையாகத் தன்வந்திரிகூட ஆகமாட்டாரென்று நம்பிப் பேசுவதும் சகஜம். ஆகவே தங்களுடைய ரகசிய ஔஷதங்களின் யோக்கியதையைப்பற்றி இஷ்டம்போலப் பேசிக்கொள்ளுவதும் சாதாரணம். இதற்கு அநேக உதாரணங்கள் இஷ்டருக்குத் தெரிந்திருந்தாலும் கீழே சொல்லுவது கொஞ்சம் விசித்திரமென்றே நம்புகிறோம்.

ஒருகாலத்தில் மகாராஜா வொருவருக்கு வாதமதிகரித்துக் கைகால் பிடிப்பிருந்ததில், அதை நேராக்குபவருக்கு வெகுமானம் பெரிதாகக் கிடைக்குமென்று விளம்பரம் செய்தார். நமது வைத்தியரனேகர் வந்து பிரயத்தனஞ் செய்ததில், பரீக்ஷைவேண்டுமென்றிருந்ததனால், அநேகருக்கு அது செய்வித்து ராஜாவுக்குத் திர்ப்தியுண்டாக்க முடியாமல் போனார்கள். ஒருவர் மட்டும் ஒரு தைலஞ்செய்வித்து அது பக்குவத்திற்கு வருஞ் சமயத்தில் கொப்பரையைச் சுற்றிப் பாத்திரங்களை வைத்துக்கொண்டு ஆள்கள் தயாராயிருக்க கொப்பரைக்குமேல் பல்லக்கு மூங்கில் ——^—— இப்படியிருப்பதைக் கட்டி, வளைவுகொப்பரைக்கு மேலாகத்தொங்கித் தைலத்தின் ஆவிபடும்படி விட்டு, அதை ஜாக்கிரதையாய்ப்பார்த்துக்கொண்டிருக்கும்படிக்கும், அந்தமூங்கில் வளைவு நிமிர்ந்து மூங்கில் நேரான க்ஷணத்தில் தைலத்தைப் பாத்திரங்களில்



எடுத்துவிட வேண்டுமென்றும், அது தான் பரீக்ஷை யென்றும் சொன்னாராம். அப்படியே யாயிற்றென்றும், அதனால் ராஜாவுக்கு நம்பிக்கை யுண்டாகி அவரத்தைலத்தையுபயோகித்தாரென்று கதை. இதனால் சாமான்னியன் தெரிந்துகொள்ளவேண்டியது, மூங்கிலையேகோணல் நேராக்கக்கூடிய தைலம், மனிதனுக் குபயோகமாவதற்குக் கேட்கவும் வேண்டுமா, வென்பது! இதைப்பற்றி நாமின்னும் பேசவேண்டியதென்ன விருக்கிறது? இது வைத்தியமல்ல, இந்திரஜாலமென்று சொல்லிவிட்டு மேலே போகவேண்டியதுதான். இம்மாதிரிச் செப்பிடுவித்தைப் பேச்சுகளைச் சொல்லிக் காலம் கழிப்பதில்தான் நமது ஔஷதங்களுக்கு மகிமை குறைவது.

(இன்னும் வரும்)

---

### கல்விகரையில, கற்பவர் நாட்சில

பரத்துவாஜர் தனது ஆயுடகாலத்தில் முக்கால் வரிசையும் பிரமசரியஞ் செய்தார், என்றால், கல்வி பயின்று வந்தார். அதனால் அவருக்குக் கைகால்கள் மெலிந்துபோய், நகரச் சக்தியற்றவராகப் படுத்திருந்தார். அவரை யிந்திரன் (சருவேசுவரன்) வந்து பார்த்து, "ஓ பரதுவாஜரே, உமக்கு இனியுள்ள கால் வரிசை ஆயுளையும் கொடுப்போமாகில், அதைக் கொண்டென்ன செய்வீர்?" என்று கேட்க, அதற்கு அவர், "பிரமசரியமேதான் செய்வேன்" என்றார். இந்திரன் அவரது மனோநிச்சயத்தை வியந்தாரெனினும், அவரது சக்திக் குறைவையும், கல்வியின் மகத்துவத்தையும் விளக்கவேண்டி, "ஓபரத்துவாஜரே, கண்ணைத்திறந்து சுற்றிலும் பாரும். உமக்கு மூன்று புறத்திலும் அடி முடி காணாத மூன்று மலை வடிவங்கள் காண்கின்றனவன்றோ? அவைதாம் வேதங்கள், என்றால், கல்வியாம். இதோ இவைகளிலிருந்து மூன்று முஷ்டிகள் எடுத்துவைத்திருக்கிறேன். இம்மூன்று முஷ்டிகள்தானிதுவரை நீர் அத்தியயனஞ் செய்துவந்தது. மீதியிருப்பது உமக்குத் தெரியத்தக்கதன்று. ஆதலாலிதையே நன்றாகத் தெரிந்துகொள்ளப் பிரயத்தனப்படும். ஏனெனில் "வேதங்கள் அனந்தமானவை" இதை நீரறிந்து சாத்தியப்பட்டதைச் செய்வதன்றோ விவேகத்திற்கு லக்ஷணமாவது," என்றார் காடகம்.

## 2. வாகனவகைகள்

ஸ்ரீமான்-டி. எஸ். வேங்கிடரமணையர்,
பீ. ஏ. எல். டி.

இருபதாம் நூற்றாண்டாகிய இக்காலத்தில் இதற்குமுன் நமது பெரியோர்கள் காணாத அநேகஅற்புதங்களை நாம் கண்டுவருகிறோமென்றாலும், அவற்றுளெல்லா மிகச் சிறந்தது நாம் ஆகாயத்திற்பறக்கும்படி ஏற்பட்ட இறக்கைகளேயாம். ஆதலால் இதுவரையில் பரிகாசமாய் "நீ என்ன இறக்கை கட்டிக்கொண்டு பறந்துவிடுவாய் போலிருக்கிறது!" என்று சொல்லி வந்தது, இப்பொழுது வாஸ்தவமாகிவிட்டது. ஜர்மனியிலும், பிரான்சிலும், அமெரிக்காவிலும் பலவகைப்பட்ட பறக்கும் யந்திரங்கள் பிரதிதினமும் யோக்கியதை யதிகரித்து வருவதால் இந்த ரகசியந்தெரிந்த ஒருவர் இனிப் பத்துவருஷத்திற்குள் பிரயாணிகளும், தபால்களும், ககனமார்க்கமாகச்சாதாரணமாக எத்தேசத்திலும் போகலாமென்றும், அதுவும் மணிக்கு நூறு மைல் போவது சாத்தியமென்றுஞ் சொல்லுகிறார்.

இந்நாட்டிலோ வெகு காலமாக ஆகாயத்திற் பறக்கவேண்டு மென்னுமாசை எத்தனையோ பேருக்கிருந்து வந்திருக்கிறது. ஹனுமான் சூரியனைப் பிடிக்கப்போனதும், ஜடாயு, ஸம்பாதி யிருவரும் சூரியனுக்குச் சமீபத்திற் போகப் பிரயத்தனப்பட்டதும், சித்தர்கள் கமன குளிகையை வாயிற்போட்டுக்கொண்டு ஆகாயத்திற் சென்றது முதலிய கதைகளெல்லாம் நமக்குப் பறக்கவேண்டுமென்னும் பேரவாவையே குறிப்பிடுகின்றன.

இப்பொழுது மந்திர முதலிய ரகசிய சாதனங்களொன்றும் வேண்டாமல், கடலில் யாத்திரை செய்வது போலவே ஆகாயத்திலும் யாத்திரை போவது சாத்தியமென்று ஏற்பட்டுவிட்டதால், நாம் ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குப் போய்வர ஏற்பட்டிருக்கும் வாகன

வகைகளையெல்லாம் காலக்கிரமப்படி பரிசோதித்து, நமக்கிருக்குஞ் சௌகரியங்களைத் தெரிந்துகொள்வதற்கிதுதான் வெகு நன்றாயேற்ற சமயம்.

மொத்தத்தில் பேசுமிடத்து, நாம் போகக்கூடிய மார்க்கங்கள் மூவகைப்படும். அவையாவன, தரை, நீர், ஆகாயம் என்பவையாம். இம்மூன்று வகுப்பிலும் யாத்திரை போவதற்கு நம்மிலேற்பட்டுள்ள வாகனவகைகள் பலவாகவும், பலவகைப்பட்டனவாகவு மிருப்பது பற்றி, அவற்றை யொவ்வொன்றாயெடுத்து விசாரிப்பதுதான் சுலபம். ஆகவே இச்சந்தர்ப்பத்தில் தரையைப் பொருத்தளவிற்கு நமக்குள்ளிருக்கும் சாதனங்களை விசாரித்து நிறுத்திவிடுகிறோம்.

வாகன வகைகளென்று நாமிதற்குப் பெயரிட்டதைச் சற்று விளக்கி விடுதல் நலம். வாகனமென்பதென்னவென்று ஐஸ்கூல் வகுப்பில் படிக்கும் மாணாக்கனொருவனைக் கேட்டாலும் அவன் சுவாமியை பிரவணை செய்விப்பதற்காக உதவும் ரிஷபம், பெருச்சாளி முதலியவைகளில் ஒன்றென்கிறான். ஆனால் இவ்வகை வாகனங்களைக் குறித்து நாமிப்போதொன்றுஞ் சொல்ல வரவில்லை. மனிதர் ஏறிப்போவதற்கும், சரக்குகளை ஏற்றிப் போவதற்கும் உபயோகப் படுவனவாகிய வண்டி வகைகளையே உத்தேசித்துப் பேசுவது.

இப்பொழுது நம்மிலனேகமாய் எல்லோருக்கும் புகைவண்டி சாமான்னியமாகிவிட்டதால் எக்காலத்திலும் ஜனங்களுக்கு இம்மாதிரிச் சௌகரியங்கள் இருந்தேதான் வந்திருக்கவேண்டுமென்று சிலர் நினைத்தாலும் நினைக்கலாம். அப்படியிருக்கவில்லையென்றும், வெகு காலமாய்ப் பல புத்திமான்கள் பல தேசங்களில் தங்களுடைய புத்தியையும் யுக்தியையு முபயோகித்துத் தான் வண்டிகள் நமக்கிவ்வளவு சௌகரியமா யேற்பட்டிருக்கின்றனவென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம். அவை யெல்லாவற்றையும் விவரிக்கப்புகின் பெருகுமாதலால் முக்கியமாயுள்ள இரண்டொரு சங்கதியைமட்டும் விவரித்து விட்டுவிடுகிறோம்.

வண்டிக்கு முக்கியமாயுள்ள லக்ஷணம் இருசும் சக்கரமுமாம். சக்கரம் எவ்வளவு முக்கியமென்பதை, ‘வண்டி’ என்பதற்குச் ‘சக்கரம்’ என்ற பொருளிருப்பதைக் கொண்டே யறியலாம். இவையிரண்டும் நமக்குச் சர்வசாதாரணமாகி விட்டபடியால் இவைகளைப்பற்றி யறியவேண்டிய தொன்றுமில்லையென அநேகர் நினைக்க இடமுண்டு. ஆனால், இவைகளெக்காலத்திலு மிப்படியே யிருந்தனவல்ல.

ரோட்டு வெகு நன்றாயமைந்திருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். அதில் ஓர் மரக்கட்டையைக் கயிறு கட்டியிழுத்துக் கொண்டு போனால் அதற்கும், சக்கரம் போட்டிருக்கும், சாமான்னிய வண்டியொன்றையிழுத்துப்போவதற்கும், வித்தியாசம் யார் வேண்டுமானாலும் பரீக்ஷித்தறிந்து கொள்ளலாம். யாது காரணங்கொண்டு இவ்வித்தியாசம் ஏற்படுகிறதென்று விசாரிக்குமிடத்து மரக்கட்டையிலொரு பக்கம் பூமியிற்படிந்து பூராவும் உரைந்து வருகிறதென்றும், சக்கரமோ ஏகதேசந்தான் உரைகிறதென்றும் வியக்தமாகக் காணும். இப்படி வஸ்துக்கள் ஒன்றுடனொன்றுரைந்து அதனால் சலனத்திற்குத் தடையுண்டாகுமானால் அதற்குச் “சங்கர்ஷணம்” * என்று பெயரிடலாம். ஆகவே வண்டி விஷயத்தில் ஆதிமுதல் நாளதுவரை ஜனங்கள் சிரமப்பட்டுத் திருத்தி வருவதற்கு இந்தச் சங்கர்ஷணத்தைக் குறைப்பதே முக்கிய லக்ஷியமாம்.

ஏனெனில், கூடு முதலிய மற்றைய அங்கங்களில் நாம் செய்யக்கூடிய திருத்தமெல்லாம் விசேஷித்து அழகிற்காகவே யொழிய உபயோகத்திற்கல்ல. சக்கரவிஷயத்திலோ நாளதுவரை செய்துவந்திருப்பதெல்லாம் உபயோகத்தை யுத்தேசித்தே செய்தது.

* இங்கிலீஷில் Friction என்பது.



அவ்வஸ்துக்களின் இச் ‘சங்கர்ஷணம்’ பலத்திருப்பதற்கு ஒன்றுடனொன்றுரையும் வடிவமும் கனமும், முக்கியகாரணமாம். உதாரணமாக, பந்துபோன்ற இரண்டு மரத்துண்டுகளை ஒன்றோடொன் றுரைத்துப் பாருங்கள். அவைகள் முற்றிலு முரைவது சாத்தியமேயல்ல, ஆதலால் உரைப்பது சுலபம். அதுபோலவே ஒரு மரக்கட்டையைக் கட்டியிழுப்பதற்கும், அதே பருமனும் வடிவமுங்கூடிய ஒரு இருப்புக்கட்டையை இழுப்பதற்கும் வித்தியாசமுண்டாவில்லையாவென்பதைநாம் சொல்லவும் வேண்டுமா?

இது காரணம்பற்றி வண்டி நமக்குச் சௌகரியமாய் ஏற்படுவதற்கு மூன்று விஷயங்கள் சிறிது சிறிதாக நமக்கனுகூலப்பட்டு வரவேண்டியிருந்திருக்கின்றன. முதலாவது, சக்கரத்தினுடைய வடிவமுங் கனமும்; இரண்டாவது சக்கரத்திற்கும் இருசிற்குமுள்ள சம்மந்தம்; மூன்றாவது, சக்கரத்திற்கும் பூமிக்குமுள்ள சம்மந்தம்.

சக்கரத்தினுடைய வடிவத்தையும், கனத்தையும் விசாரிப்போம். சற்று யோசிப்போமாகில் புராதனச் சக்கரமும், நவீனச் சக்கரமும் அனேகமாய் ஒரே இடத்திற்காணலாம். ஒரு தோசைக்கல்லை நமது வீட்டிற் கெதிராக வண்டியிலிருந்து கீழே இறக்கி அதை வீட்டிற்குள் கொண்டு சேர்ப்பிக்க ஒரு ஒட்டனைக் கூப்பிட்டால், அவன் புராதனச் சக்கரம் நிமிஷத்தி லுண்டுசெய்து விடுகிறான். அதாவது மரவுருளைகள் இரண்டையோ மூன்றையோ கீழேவைத்துக் கல்லையவற்றின்மீதேற்றி உருளைகளை மாறிமாறி வைத்து மெல்லமெல்லக் கொண்டு சேர்த்துவிடுகிறான். கல்லை வெறுமனே யிழுத்துப் போவதைவிட இதில் யுக்தி யெத்தனையோ விசேஷித்திருப்பதை யாருங் காணலாம். இம்மாதிரியே பழையகாலத்தில் வெறும் மரவுருளைகளைச் சக்கரமாக உபயோகித்து அதற்குப்பின் இரண்டு உருளைகளுக்கு மத்தியில் ஒரு கோல் சேர்த்துக் கோலும் உருளைகளும் ஒருமிக்கப் புரளும்படி அமைத்து வண்டிகளுக்குபயோகப்படுத்தி வந்தார்கள். பிறகு நமது பெரியோர்கள் வெகுகாலம் இம்முரட்டுச் சக்கரங்களுடன் போராடியபின் சக்கரத்திற்கும் இருசிற்கும் சம்மந்தம் சற்றிளகி இருசு ஸ்திரமாய் நிற்கவும், சக்கரம்மட்டும் உருளவும் வழியாயிற்று. பிறகு கொஞ்சங் கொஞ்சமாகச் சக்கரத்தினது கனம் குறைந்து வருவதற்கு உபாயங்கள் ஏற்பட்டுக் கும்பம், ஆரம், வட்டை, பட்டா முதலிய அங்கங்கள் காலக்கிரமத்திலமைந்தன. இவைகளொன்று மமையாமல் பழையபடியே கனத்திருக்குஞ் சக்கரங்கள் இருசைச்சுற்றி யுருளுவதை யாரேனும் பார்க்கவேண்டுமானால் அடுத்திருக்கும் கிராமக் கோவில் தேரைப்பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

ஒருவகை வண்டியில் மட்டும் நாம் மறுபடி புராதனக்கிரமத்தை யனுசரித்து வருகிறோம். ரயில் வண்டியில் பிரயாணம் போகும்போது அவ்வண்டிச் சக்கரங்கள் எப்படி உருண்டுபோகின்றன வென்று கவனித்துப்பார்த்தால் இந்த ரகசியம் தெரியும். அது என் அப்படியிருக்கவேண்டுமென்பதற்கு நியாயங்கள் பலவாதலின், இவ்விடத்திலவைகளை விவரிக்கச் சமயமில்லை.

சக்கரம் எவ்வளவு கனங் குறைந்திருந்தாலும், அதற்கும் இருசிற்குமுள்ள பாந்தவ்வியம் எவ்வளவு இளகியிருந்தாலும், வண்டிபோகவேண்டிய ரோட்டுகள், நமது நாட்டிற்கானும் இட்டேறிகள் போன்றிருந்தால், பிரயாணம் அனேகமாய் மாதங்காத வழிதான். ஏனெனில், மேடுபள்ளங்களிருந்தாலும் மணல், சேறு முதலிய வுபத்திரவங்களிருந்தாலும் நாம் மேற்கூறிய சங்கர்ஷணத்தின் பலமதிகமாய்விடும். ஆதலால் தொன்றுதொட்டு இதைப்பலக்கவொட்டாமல் அனேக வுபாயங்களைப்

5

புத்திமான்கள் தேடி வந்திருக்கிருர்கள். அவற்றில் பிராசீனமாயுள்ளதும், எங்கும் காணக்கூடுவதும், ரோட்டுகளுக்குக் கல் முதலியவற்றைப் பொடித்துப்போட்டோ அல்லது வேறு விதமாகவோ உபாயஞ்செய்து கெட்டியாக்கிவிட்டுப்பாலமுதலியவை கட்டிச் சமப்படுத்துவதாம். சாமான்னியமாய் எருது, குதிரை முதலியவைபூட்டி இழுக்கும்வண்டி வகைகளெல்லாவற்றிற்கும் நாளதுவரை இம்மாதிரி ரோட்டுகள் தான் ஏற்பட்டிருக்கின்றன. என்ருலும், வண்டிகள் நடுத்தரமான கனமும், பருமனுமிருந்தால்மட்டும், இம்மாதிரி ரோட்டுகளில் போக்குவரவு சாத்தியம் ரெயில்வண்டிகளைப்போல பிரம்மாண்டமான பருமனுங்கனமுமிருக்குமாகில், அவைகளை இப்பசுக்கள் சாமான்னிய ரோட்டுகளி லிழுத்துப் போவது அசாத்தியம். ஏனெனில், மேல் நாம் குறிப்பிட்ட சங்கர்ஷணத்தின் உபத்திரவம், ரோட்டுகளுக்கு மண் முதலியன கொட்டிச் சமப்படுத்துவதினுல் வேண்டுமளவிற்கு நீங்குவதில்லை. ஆகவே, நெடுநாளைய பரீக்ஷைக்கப்புறம் இருப்புப்பாதையென்று நாமிப்போது சொல்லிக்கொள்ளு முபாயம் ஏற்பட்டது. இதை நாம் புகைவண்டி யோடுவதற்காகவே அமைத்திருக்கப்பார்த்திருக்கிருே மானதுபற்றி, புகைவண்டியுண்டாகிய பிறகுதான் இந்த உபாயங் கண்டுபிடித்ததாக நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. குதிரைவண்டிகள் வெகுகாலம் இவ்வுபாயத்தினுல் பெரும்பாரந்தாங்கி சலீசாயோடி யிருக்கின்றன. இரும்பு கெட்டியாயிருப்பது கொண்டும், சக்கரமும் ரயிலும் ஒன்றுடனென்று ரையும்போது இரண்டும் வழுவழுத்திருப்பது கொண்டும், சங்கர்ஷண பலம் எத்தனையோ மடங்கு குறைந்துபோய், அதனுல் வண்டி சலீசாகப் போவதுடன் வேகமாயு மோடுவதற்கிடமுண்டாகிறது. ஆதலால் இப்பொழுது ஒரு மணிக்கு நூறு மைல் வேண்டுமானுலும் போவது சாத்தியமாகி விட்டது.

இப்படி ரெயில் முதலிய உபாயங்களினுல் ரோட்டுகளிலிருக்கு முபத்திரவங்களைப் பரிகரிப்பதென்ருல் அது எல்லாவிடங்களிலும் சாத்தியமல்ல. ஆதலால் சக்கரத்திற்கே வேறு சில யுக்திகள்செய்து, ரயிலில்லாத விடங்களிலும் சங்கர்ஷண வுபத்திரவத்தைக் குறைக்கச் சமீப காலத்தில் வகையேற்பட்டு வருகிறது. அதாவது, இருப்புப் பட்டாவிற்குப் பதிலாக ரப்பர்பட்டா வுபயோகப்பட்டு வருவதாம். இதை நாம் சாதாரணமாய் பைசிகில் என்னும் துவி சக்கரவண்டியிலும், மதிராஸ் முதலிய பெரிய நகரங்களில் மோட்டார் வண்டிகளென்று தலை தெறிக்கவோடும் வண்டிச் சக்கரங்களிலுங் காணலாம்.

இவ்வாறு வண்டிகளையும் ரோட்டுகளையும் பலவிதமாக நாம் நோக்கி வந்தோமென்ருலும், எருது முதலிய மிருகங்களை மட்டுமே வண்டியிழுக்க உபயோகித்து வந்திருப்போமாகில், மணிக்குப் பத்துமயிலுக் கதிகம் போவது அசாத்தியம். ஆதலால் இப்பொழுது நாம் மணி 1-க்கு நூறு மைல் மட்டும் போவதாகப் பேசுவதற்கு வேறிரண்டொரு காரணத்தினுற்ருன் யோக்கியதை வந்திருப்பது. அவையாவன, நீராவி பலமும் மின்சாரமென்னும் வைத்தியுத பலமுமேயாம். இவ்விரண்டு சக்திகளையாதாரமாகக்கொண்டு சாதாரணமாய் ரயில் வண்டிகளும், டிராம் வண்டிகளும், மோட்டார் வண்டிகளும் வாயுவேகமாய்ப் பறக்க இடமுண்டாயிருக்கிறது. முதல்முதல் இங்கிலாந்திலோடின புகைவண்டியை இப்பொழுது நீங்கள் பிரதிதினமும் பார்க்கும் புகை வண்டிகளுடன் ஒத்துப்பாருங்கள்.

இனிவரும் நம்பரில் நீர்மேல் யாத்திரை செய்வதற்குரிய சாதனங்களை யிவ்வாறே விசாரித்து விளக்குவோம்.



# விநோத காண்டம்

## குலதெய்வ வணக்கம்

தஞ்சமென் றடைந்த நன்மா
  தவத்தினர் போற்ற வன்ஞேர்
சஞ்சல மகற்றி யாண்ட
  தசரத ராம னன்பன்
அஞ்சனை தந்த தூதன்
  அருட்டுணைத் தாட்கள் போற்றி
வஞ்சமில் வாம தேவன்
  வளர்கதை வகுத்து ரைப்பாம்.

## அவையடக்கம்

பண்டிதர் பரிவோ டேற்றுப்
  பாலிக்க வென்ற வேள்வி
கொண்டொரு சுகுண சீலன்
  கோதில்லா நீதி பாலன்
விண்டதை விபுத ரேற்ற
  விழைவினுல் வாம தேவன்
கண்டுறு தமிழ்மாக் காதை
  கனிவுடன் பகர்வல் மாதோ.

ஸ்ரீராமஜெயம்
ஸ்ரீ ஆஞ்சனேயோ ரக்ஷது
வாமதேவன்

## அத்தியாயம் 1

பொன்பதியும் புனிதவேலன்பதியும் போதாவெனப் புலவர் போற்றுந் தென்பொதிகாபுரத்தில், வேதியர் திலகங்கள் வாழுகின்ற வீதியில், வெகு விசித்திர முகட்டுடன் விளங்குமோர் கிருகங் காண்கின்ருேம். இந்தக் கிருகத்தினுள் முதற் கட்டில் வெள்ளைச் சிமிட்டிச் சுண்ணும்புத் தளமிட்டுள்ளதோர் திண்ணையில், மிகுந்த வியாகுலத்தால் வாடிய முகத்தினராயோர் விருத்த வேதியர் வீற்றிருக்கின்ருர். இவர் முகத்தை நோக்க உதடுகளிரண்டும் ஏதோ தாமே பேசிக்கொள்ளுவதுபோல வசைந்து கொண்டிருக்கக் காண்கின்ருேம். ஜாதிப்படிக்குச் சுமார் ஆறடி உயரமும் அதற்கேற்ற வுடல் புஷ்டியுமுள்ள இவர் தம் சரீராகிருதி வெகு கம்பீரமாய்த் தோற்றப்படினும், வயதின் முதிர்ச்சியாலும் வேறு பல காரணங்களாலும் சரீரம் மிக மெலிவுற்றுத் தளர்ந்திருக்கின்றது. இவருக்கு வயது சற்றேறக்குறைய அறுபதுக்கு மேலாகவே மதிப்பிடவேண்டும்.

அன்று சூரியோதயமாகிச் சுமார் ஆறுநாழிகைப் பொழுதாகையில் இவர்தம் நெற்றியில் கோபி சந்தனம், கழுத்திலொளிரும் துளபமாலைகள், இடையிற்கட்டியிருக்கும் பழுப்பு வஸ்திரம், கைவிரல்கள் ஏதோ கணக்கிட்டுக் கொண்டிருப்ப திவற்றைநோக்க, இவர் ஏதோ திருநாமங்களை ஜபித்துக்கொண்டிருப்பதாகவே தீர்மானிக்கலாம். இவர் சில காலங்களுக்குமுன் கோண்டூர் ஜில்லா ஜட்ஜியாயிருக்கையில் நாமிவரைப் பார்த்திருப்பதுண்டு. இவர் அப்பொழுதிருந்த நிலையென்ன, இப்பொழுதிப்படி வாடியிருக்கும் வயணமென்ன? ஓ! இப்பொழுது ஞாபகம்வந்தது. இவருக்கும் யாகாணத் துரைத்தனத்தாருக்கும் ஏதோவொரு தாவா விஷயமாய் அபிப்பிராய பேதந் தோன்றி, அதனுல் இவர் வேலையைவிட்டு நீங்கித் தாம் கணக்குப்படி முப்பதுவருஷம் துரைத்தன வுத்தியோகஞ் செய்தாய்விட்டபடியால் தமக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கக் கோரியும், துரைத்தனத்தார் கொடாது மறுத்து விட்டபடியால், இந்தவுத்தரவை மாற்ற மேலதிகாரிகளுக்கு மனுக்கொடுத்து இந்தத் தென்பொதிகாபுரஞ்சேர்ந்த வாசுதேவ அய்யரன்ருே இவர்? நன்று, நன்று.

இவர் தாமுத்தியோகஞ் செய்திருந்த காலத்தில் இவரது கிருகம் அன்னச்சத்திரமாய் விளங்கிய பெருமையென்ன? இவர் எப்பொழுதும் பிரஸன்ன முகத்தோடு வெளித்திண்ணையி லுட்கார்ந்து, தாம் கச்சேரிக்குப் போகுமுன் தம்மிடம்வரும் அதிதிகளை ஸத்கரித்து அன்னமளித் துபசரித்ததென்ன, இப்பொழுது வீட்டினுள்ளடங்கி வாடிய முகத்தோடு தனியிருப்பதென்ன? இது அந்தச் சோமசுந்தரய்யரின் வேலைப்பாடன்ருே? ஒருபாபமு மறியாத இந்தப் புண்ணியவானுக்கு வாக்கு நாணயத்தின்பேரில் ஜட்ஜி யுத்தியோகப் பதவியின் மகிமையால் ரூபாய் ஐந்தாயிரம் கடன் கொடுத்திருந்ததாக வழக்கிட்டுக் கோர்ட்டில் போய் பிரமாணஞ்செய்தபடி, தீர்ப்பான தொகையைக் கோர்ட்டுச் செலவுடன் இவர் கொடுத்ததாலன்ருே இவர் கொஞ்சம் சாமான்னியமாய் திருத்துவைத்திருந்ததும் போயிப்படிப் பரிதபிக்கிருர். இந்த விருத்தர் இப்பொழுதடையும் துக்கம் சோமசுந்தரத்தின் குடும்பத்தை யெளிதில் விடாது.

இப்புண்ணிய சீலர் இங்ஙனம் தம்முதிர்வயதில் சிறுமை யடைந்ததும் நம்புத்திக்கெட்டாத கடவுளின் மாய்கை யன்றோ? இவருக்கிப்பொழுது இவர் வசித்துவரும் வீடு தவிர வேறு பூஸ்திதி, கைப்பணம் முதலிய யாதுமில்லையே. என்றாலும் இவர் செய்த புண்ணியச் செய்கைகள் இக்கலிகாலத்திலும் பயன் கொடுக்கின்றன. இவரின் மனைவி தம் முதுவயதில் அதுவரையிலும் தம் வீட்டுக்காரியாதிகளை வேலைக்காரர்களைக்கொண்டு நடத்திவந்தது போய் இப்பொழுது தான் ஒருவரே எல்லா வேலைகளையுஞ் செய்யவேண்டி யிருத்தலாலும், தம் நிலைமை மாறியதாலுண்டான மனச்சோர்வினால் சரீரத்துக்கேற்ற உணவில்லாக் குறைவாலுமுடல் தளர்ந்து கைகால் தள்ளாடினும், தம் நாயகரின் பணிவிடையிலென்றுங் குன்றா ஊக்கத்தோடேயே யிருக்கின்றனர்.

இவ்வுத்தமப் பெற்றோர்க்கு வறுமை சிறிதுந் தோன்றாவண்ணம், பல் வேறு நகரங்களுக்குச் சென்று அங்கங்குத்தியோகங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்களிற் றமக்கு முற்றிலும் அவசியமான தொகையைமட்டுஞ் செலவிட்டு மீந்ததைத்தம் பெற்றோர்க்கனுப்பி அவர் மகிழ்தலே தம் பிறவியின் பயனென வொழுகும் வாமதேவன், கோவிந்தன், நாராயணன் என மூன்று புதல்வர்களன்றி, நான்காவதாகப் பன்னிரண்டு வயதில் ராஜாமணி யென்ற சிறுவனும் இவரின் மனச் சோர்வையெல்லாம் தன் முகமலர்ச்சியாலும், புன்சிரிப்பாலும், ஒழுக்கவியல்பாலும், ஒருவினாடிகையிற் பறக்கச்செய்யும் வனப்பும், சீலமும் வாய்ந்து இவரோடு இங்கேயே வாழ்கின்றான்.

இவரின் முதல்வனும் வாமதேவனுக்கு வயது இப்பொழுது இருபத்துநான் காகிறது. இவன் வணிஜ நகரில் ஜில்லா கோர்ட்டில் மூன்று வருஷங்களுக்கு முன் மாதம் பதினைந்து ரூபாய்ச் சம்பளத்தி லமர்ந்தவன். தன் ஒழுக்கம் சாமர்த்தியம் முதலிய சிறப்பால் இப்பொழுது முப்பது ரூபாயாகச் சம்பள முயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்தவன் கோவிந்தனும் சென்ற வருஷத்திய பரிட்சையிற் றேறி வாமதேவன் சிபார்சைக் கொண்டு கொடுங்காலூர் கலெக்டராபீசில் மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்தோடு வசித்து வருகின்றான். மூன்றாவது நாராயணனோ, சில மாதங்களுக்கு முன்னரே பிரவேசப் பரிட்சையில் முதல்வனாய்த்தேறி இந்த வணிஜநகர் ஜில்லா கோர்ட்டிலேயே பதினைந்து ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப் பட்டிருக்கிறான்.

இப்படி யிப்பொழுது இந்த மூன்று புதல்வர்களுமாகச் சிறுகச் செலவிட்டு மிகுக்குந் தொகைகளைத் தென்பொதிகாபுரத்துக் கனுப்ப, முதியவரிருவரும் குழந்தை ராஜா மணியும் ஒருவாறு காலந்தள்ளுகின்றனர். குழந்தையும் பள்ளிக்கூடத்தில் வெகு சுறுசுறுப்பாய் தான் படிக்கிறான். இப்படிக் கான நிலைமை நேர்ந்து தம் புதல்வர்கள் பதினைந்தும், முப்பதும் மாதச்சம்பளம் பெற்று அதிலும் அவர் வாயை, வயிற்றைக் கட்டி மிகுத்தனுப்பும் பொருளை வைத்துத் தாம் ஜீவனஞ் செய்துகொண்டிருப்பதை யோர்ந்தே, நம் வாசுதேவய்யர் முகம் வாடி யுடல்தளர்ந்து வீட்டினுள்ளடங்கித் தெய்வமேயென மனதை யங்குசெலுத்தி அவர் நாமங்களை ஜபித்துட்கார்ந் திருக்கின்றனர் போலும்.

இதனிடையில் வீதியில் சென்றிருந்த சிறுவன் ராஜாமணி வெகு வேகமாயோடிவந்து தன் கையிற் கொண்டு வந்த தபாற் கடிதத்தைத் தந்தை முன்வைத்து, "அப்பா, இதென்ன இந்தக்கடிதத்தின் நான்கு கோடிகளிலும் மஞ்சள் அணிந்திருக்கிறதே. சாதாரணமாய் மற்ற கடிதங்களிலிருந்த மாதிரி காண்பதில்லையே" என, முதியவர் "அங்ஙனமாயின் அது மங்கள சூசகமாகும். அதனைப் பிரித்துப் படிப்பாய், கேட்போம்" என்றனர். அகத்து அடுக்களையில் அடுசிற் றயாராக்கிக்கொண்டிருந்த அம்மணி காதுகளிலிது விழவே, உடனே ஓடிவந்து தம் கணவர் முன்னின்று "நேற்று நம் வாமதேவனிடமிருந்து வந்த கடிதத்திலே, மாதவ புரத்துச் சேஷய்யர் நம்ப நாராயணனுக்கு அவருடைய குழந்தையைக் கன்னியாதானஞ் செய்ய வொப்பினதாக எழுதியிருந்ததோயில்லையோ, அதைத்தான் சேஷய்யரும் நமக்கெழுதியிருப்பார். அதைப்பிரித்து வாசியேன், எத்தனை நாழி" என்றாள்.





ராஜாமணி தன் தந்தைமுன் கடிதத்தைப் படித்தல்

குழந்தையும் பிரித்தான் கடிதத்தை, அறிந்தான் விஷயத்தை உடனே "அம்மா இது நீ சொன்னதன்று. குன்னத்தூரிலே எங்கண்ணி புஷ்பவதியானளாம். நாளை மூனும்நாள் புட்டு. நாமெல்லோரும் இஷ்டபந்துக்களோடே அங்கே வரணுமாம். அப்பா! நாம் எப்போபுறப்படுவோம். அண்ணாவுக் கெழுத வேண்டாமோ. எனக்கு நல்ல பட்டுக் கரைச் சோமனையிரண்டு வாங்கித் தந்துடணும். போன தீவாளிக்கே வாங்கித் தரேன் இன்னீளே, இப்போ அசலூருக்குப் போறதுக்கு இந்தக் கம்பிச் சோமனையுடுத்திண்டு வரமாட்டேன்" என்று சொல்லிக் கடிதத்தைத் தன்றந்தை முன்வைத்தான். இதற்குள் முதியவர் கைகளிரண்டையும் சிரசின் மேற்கூப்பி "மங்களானிபவந்து, தீர்க்க சுமங்கலியமாய் வாழட்டும். இனி நாம் வாமதேவனுக்கும் நாராயணனுக்கும் வணிஜ நகரில் சமையல் அல்லல் ஒழிந்தது. குழந்தைகள் கிளப்பில் சாப்பிட்டால் அதிகப் பணஞ் செலவாவதோடு, ஹிதமான ஆகாரம் வாய்க்குவேண்டியபடி கிடையாதே யெனத் தானே சமையல்செய்து சாப்பிட்டுப் பணம் மிகுத்து, நம் வயிற்றுக்கனுப்பிக்கொண்டிருப்பதுபோய், இனிச் சுகமாய்க் குழந்தை மங்களம் அடிசிலாக்க அவருண்டு களிப்பர். இப்படியே வெகுவாய் மெலிந்து வாடுமிக் குடும்பத்தின் அல்லலொழிந்து குழந்தைகள் தழைக்க நம்மங்களம் ருதுவான காலம் நற்சூசகமாகட்டும்" என்றுரைத்தசையாதுட்கார்ந்திரு

ந்தனர். அம்மாளும் "எழுந்து வந்தவுடனேயே மங்கள சூசகமின்னீளோன்றே, அப்படியே உத்தமர் வாக்கு மங்களம் குழந்தை மங்களாம்பிகையையே சூசிப்பிச்சுட்டுது" என்று சொல்லி நெக்கிமுக்கித் தட்டித்தள்ளாடித் தெருவாசலை மெழுகிச் சித்ரக்கோலந் தீட்டி முக்கிய பந்துக்களை மஞ்சள் குங்குமத்துக் கழைக்கவென்று அடுத்தகத்துச் சிறுமியையனுப்பியுட்சென்று சகலமும் ஆயத்தப்படுத்திவைத்து, அவரவர் வரவர அவர்களுக்குச் சந்தனம், குங்குமம், மஞ்சள், புஷ்பம், தாம்பூலம் முதலியவை கொடுத்துபசரித்தனுப்பியபின்னர், தம் கணவர் கருத்துப்படியே தாம் தற்காலத்து நிலைமைக் கொப்பச் சில முக்கிய பந்துக்களைமாத்திரம் சேர்த்துக்கொண்டு மறுநாட் காலையில் குன்னத்தூருக்குப் போவதெனத் தீர்மானித்து அன்று முழுவதும் அதற்கான முஸ்தீபு செய்துகொண்டிருக்கின்றனர்

---

முன்சீபு கோர்ட்டு வெளித்தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவன் கொட்டாவி விட்டது கேட்டு, உள்ளிருந்த முன்சீபு அவனைத் தருவித்துக் கோர்ட்டாரை யவமதித்ததற்காக விசாரணை செய்தாரென்றும், அவன் நமஸ்காரம் செய்து தப்பித்துக்கொண்டானென்றும், சேலம் 'திராவிடாபிமானி' கூறுகிறது. முன்னொருகாலத்தில் பம்பாய் ஐகோர்ட்டில் வெகு சாமர்த்தியமாக வாதஞ்செய்த வக்கீலொருவர், தன் கக்ஷிக்கு விரோதமாகத் தீர்ப்பு சொல்லக்கேட்டு, "ஒரு கூட்டம் கழுதைகளுடன் போராடவேண்டியிருக்கிறது," என்று சொல்லி உட்கார்ந்தாராம். உடனே, ஜட்ஜி அவரைக் கூப்பிட்டு, "ஓய், நீர் இப்பொழுது சொல்லியது கோர்ட்டாருக்குக் கேட்கிறது," என்ன, வக்கீல், "பிரபு, என்மனத்தில் நினைப்பதற்குக்கூடத் தாங்கள் உத்தரவளிக்க வேண்டுமா?" என்று கேட்டார். "இல்லை," என்று ஜட்ஜிசொல்ல, "நானிப்பொழுதென்ன செய்தேன்? சற்று பலமாக நினைத்தேன், அதை மன்னிக்க வேண்டுமென்ன, அந்த ஜட்ஜியும் சிரித்து, "இனி நீர் பிறர்காதில் கேட்கும்படியாக நினைக்காதீர்," என்றாராம். இது ஐகோர்ட்டுத் தீர்ப்பாதலால், யாராகிலும் இஷ்டர்கள் இதைக் கொட்டாவி விட்டவனுக்கும், அவன்போன்ற இதரருக்கும் சொல்லி, யினிக் கோர்ட்டார் காதில் விழும்படி யொன்றுஞ் செய்யாமலிருப்பதுதான் சட்ட முறையென்றறியச் செய்ய வேண்டும்.

# சமாசாரக் குறிப்புகள்

## ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வி. கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள்.



சென்னை ஐகோர்ட்டில் வேலை மிக அதிகரித்துத் தீர்மானம் ஆகவேண்டிய வழக்குகள் முதலிய மிகுதியாயிருப்பதால், பின்னும் ஒருஜட்ஜி நியமனஞ் செய்யவேண்டும் என்று சென்னைக் கவர்ன்மெண்டார் எழுதினவண்ணமே, இந்திய செக்ரடரியாரும் அவ்வாறே ஒருஜட்ஜ் நியமிக்கலாம் எனச் சிலமாதங்களுக்கு முன்னர் உத்தரவனுப்பினார்கள். அங்ஙனம் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட ஸ்தானத்துக்கு ஆனரபில் மிஸ்டர். வி. கிருஷ்ணசுவாமி ஐயரவர்களை மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியார் ஜட்ஜாக நியமித்தனர். உயர்நீதி சாலையென விளங்காநின்ற ஐகோர்ட்டில் வழக்குகள் நடத்திவரும் வக்கீல்களுக்குள் நடுநாயகமாய் விளங்கினவரும், சென்னை ராஜதானிக்குள் நடுநிலைமை முதலிய நற்குணங்களினிமித்தம் நம்மவர்களால் மிகப் பாராட்டப்பட்டவருமான ஐயரவர்களுக்கு இவ்வுன்னதபதவி கிடைத்தது, ஜனங்கள் யாவருக்கும் பெருமகிழ்ச்சிக்கிடமாம் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய பெருமையாளருக்கு



இப்பதவியைக் கவர்ன்மெண்டார் அளித்தது மிக்க நியாயமான செய்கையாம்.

ஸ்ரீமான், கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் செல்வமுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் யாரும் மெச்சும் வண்ணம் டிஸ்டிரிக்ட் முனிசீப் வேலை பார்த்துவந்தவர். இவர் தஞ்சைஜில்லா திருவிடைமருதூர் ஸ்கூலில் கீழ்வகுப்புகளில் கல்விகற்று, தஞ்சை செண்ட்பீடர்ஸ் காலேஜில் மிஸ்டர் மார்ஷ் துரையவர்கள் தலைமை உபாத்தியாயராயிருந்த காலத்தும், கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜில், ராவ்பஹதூர் கோபாலராயரவர்கள் தலைமை உபாத்தியாயராயிருந்த காலத்தும், ஷை கலாசாலைகளிற் கல்விகற்றனர். பின்னர்ச் சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் பீ. ஏ. படிக்கவந்து, ஆங்கிலம், சமஸ்கிருதம், தத்துவ நூல் முதலியவைகளில் மிகுந்த நிபுணராய் விளங்கி, ஸ்காலர்ஷிப், மெடல் முதலிய விருதுகள் பெற்று, வக்கீல் பரீக்ஷையிலுந் தேறி, 1885-ம் வருஷத்தில் ஐகோர்ட் வக்கீலாக நியமிக்கப்பட்டனர். 1892-ம் வருஷத்தில் நீதி சாஸ்திரக் கலாசாலையில் ஒரு உபாத்தியாயராக நியமிக்கப்பட்டுத் தமது வக்கீல் வேலைக்கு அது சிறிது இடையூறாய் இருந்தமையால் அவ்வேலையினின்றும் நீங்கினர். 1895-ம் வருஷத்திலிருந்து வக்கீல் வேலையில் மிக்க வருமானம் உடையவராய்க் கீர்த்தியும் பிரபலமும் பெற்று இன்றளவும் நியாயவாதிகளுள் திலகம்போலத் திகழ்ந்து, முதற்றரவருவாயுள்ளவராய் விளங்காநின்றனர். சென்ற 12-வருஷகாலத்தில் பெருந்தொகையைப்பற்றின பெரு வழக்குகள் எவையெவையோ, அவைகளுட் பெரும்பாலனர் நமது ஐயரவர்களை ஏதேனும் ஒரு சார்பில் வக்கீலாகக் கொண்டனவாம். சிவில் வழக்காயிருந்தபோதிலும், கிரிமினல் வழக்காயிருந்தபோதிலும், இவரால் நடத்தப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும், இவரது அரிய சாமர்த்தியமும், உண்மையாய்ப் பெரு முயற்சியுடன் பாடுபடுந் திறமும் பெரிதும் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

நிற்க, சென்ற சில வருஷங்களாக ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள் பொது ஜன நன்மையை நாடிப், பொது ஜனக் கூட்டங்களுள் தாமும் பிரவேசித்து, ராஜாங்க விஷயங்களிலும், மற்றும் லௌகிக விஷயங்களிலும் தமக்குள்ள அபிப்பிராயத்தையும் நாட்டி, நன்மை அடைவதற்கு நாடவேண்டிய வழி இது, என்றுங் காட்டியுள்ளனர். சென்ற வருடங்களில் நம்மவர்களுட் சிலர் நன்மை தேடும் வழியிதுவென உணராது ராஜாங்கத்தோடு மாறுபட்டு 'புதுக்கட்சியார்' என்னும் பெயரொடு வெளிவந்த சமயத்தில் 'அந்தோ! அவ்வழிச் செல்லாதீர். செல்வீராயின் பேய்த்தேரை நீரெனக் கருதிப் பின் தொடர்ந்து பேதுறும் மானினது கதியை அடைவீர். அதிக ஆசை அதிக நஷ்டமாம் அன்றோ?' என நுண்ணிதினுணர்ந்து எச்சரிக்கை செய்த கண்ணியவானும் இவரே. நியாய வழியிலேயே நந்நாட்டுக்குச் சிறிது சிறிதாக நன்மை தேடுவதே சரியான வழியெனக் கண்டுணர்ந்த மஹாஜன சபையைச் சார்ந்த அறிஞர் சிலருள் இவர் ஒருவர். சட்டநூல் ஏற்படுத்தும் சென்னை ஆலோசனை சபை அங்கத்தினருள்ளும் ஒருவராயிருந்து பல நன்மைகள் செய்திருக்கின்றனர். அவ்வாலோசனை சபையில் இவர் பிரவேசித்துக் கவனியாத விஷயங்கள் வெகு சிலவே. இப்போது வெளிவந்துள்ள 'எஸ்டேட்ஸ் லாண்ட்பில்' என்னும் சட்டம் ஏற்படுத்தப்பட்டபோது அது விஷயமாய் நடந்த ஆலோசனை சபைகளில் இவர் தம் மனதுக்கு எது நியாயம் எனப்பட்டதோ அதையே நாட்டி, நடுநிலைமை குன்றாது வாதித்தனர். சென்னை யூனிவர்ஸிடியைச் சார்ந்த அங்கத்தினருள்ளும் இவர் ஒருவர். அவ்வேலை சம்பந்தமாகவும் இவர் கணக்கிலாப் பிரசங்கங்கள் செய்திருக்கின்றனர். அப்பிரசங்கங்களைக் கவனித்தால் இவரது தெள்ளிய உணர்வும், விரிந்த கல்வியும், நுண்ணிய அறிவும், நன்கு புலப்படும். உறுதி உண்மை, தேசாபிமானம் இவை இவரது குண லக்ஷணங்களாம்.

சென்ற வருஷம் சென்னையில் மஹாஜனக்கூட்டம் கூடினபோது, பற்பலர் பலவாறு ராஜாங்க முறையோடு மாறுபட்ட அபிப்பிராயத்தை நாட்டப்புகுந்த சமயத்தில், மிக்க நிதானத்தோடு அங்ஙனம் மாறுபடாத நியாய வாயிலாகவே நியாயம் பெறவேண்டுமென எனத் தமக்குள்ள அபிப்பிராயத்தையே நிலை நிறுத்தி வெற்றிபெற்ற மேன்மையாளரும் இவரே. தந்நாட்டார் கல்வி விஷயத்திலும், செல்வ விஷயத்திலும், மற்று எல்லா நல் விஷயத்திலும் முன்னுக்கு வர வேண்டும் என்னும் தரும சிந்தையோடு, தமது செல்வத்தையும், திறத்தையும், நாளையும், அன்னோர் பொருட்டே உபயோகப்படுத்தின

உத்தம குணத்தரும் இவரே. மைலாப்பூரிலுள்ள சமஸ்கிருத கலாசாலை சரிவர நடந்து வரவேண்டி நிதிக் குவியல் அளித்தவரும், அத்தலத்தில் ஏழையர் பொருட்டுத் தரும வைத்தியசாலை வைத்தவருமான குணசீலரும் இவரே. சுதேசியக் கைத்தொழில் எவரேனும் செய்யப்புகின், அதற்கு வேண்டிய உதவி புரிவதற்கு முதல்வரும் பெருந்தகையாளரும் இவரே. சென்னை மஹாஜனசபை, இந்தியன் பாங்க், மைலாப்பூர் பண்ட், ஆகிய பொது ஜனச்சாலைகள் தத்தம் வேலையை இடையூறின்றி நடத்தப் பேருதவி புரியும் பெருமையாளரும் இவரே.

பொதுஜன நன்மையை இத்துணைக் கருத்துடன் நாடிவந்த ஐயரவர்களை ஜட்ஜாக நியமனஞ் செய்துவிட்டபடியால், இனி அவர் பொதுஜனக் கூட்டங்களுட்போந்து துரைத்தன விஷயத்தில் தமது நுண்ணிய அறிவின் ஆய்ந்து சொல்லும் புத்திமதிகளைக் கேட்டுப்பலன்பெற நமக்கு மார்க்கம் இல்லாது போயிற்று ; எனினும் இந்த ஜட்ஜி ஹோதாவில் இவர் தாம் பெற்ற பெரும்புகழை இவ்வுன்னத நிலையிலிருந்து இன்னும் பெருக்கி நிலைநிறுத்துவர் என்பதற்கு யாதோர் ஐயமும் இல்லை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று."

* * *

'ஹோஸ்டல்கள்' என்னும் 'வித்தியார்த்தி சத்திரங்கள்,' ஒவ்வொரு காலேஜிலும் இருக்கவேண்டுமென்றும், ஊர் விட்டூர் போய்ப்படிக்கும் குமாரர்களுடைய தேகரக்ஷணைக்காகவும், ஆசாரரக்ஷணைக்காகவும், இவைகள் அத்தியாவசியமென்றும், எல்லோருமொப்புகிறார்கள். ஆனால் இரண்டொருபெரிய ஹோஸ்டல்களின் அனுபவத்தை விசாரிக்கையில், இக்குமாரர்களுக்கும், இவர்களைப் பாலிக்க முயன்றவருக்கும், வேண்டாததுக்கம் வெகுவாய் வந்திருக்கக்காணுகிறது. எங்கேயோ துர்லக்ஷணமிருக்கவேண்டும். கோவொரு புறமுஞ் சூடொரு புறமுமிருப்பது [illegible]மல்லவாதலால், விவேகிகளான பெற்றோர் இதன் [illegible]வத்தையறியவும் பரிகாரந் தேடவும் பிரயத்தனப்படுவாராக.

* * *

நம்பூத்திரிமாரசிய மலையாளத்திய பூர்வீகப்பிராம்மணர்கள் இருதயுக ஆசாரங்களை யின்னும் விடாமற் கைப்பற்றியும், தங்களுக்குள் காலக்கிரமத்தில் வந்திருக்கும் வேறு உபத்திரவங்களைத் திருத்த வகை தெரியாமலும் மயங்கியிருப்பது அவர்களைக் குறித்தேதாகிலும் தெரிந்தவரனைவர்க்கும் தெரியும். ஆனால் ஆலப்புழைக்கருகில் சமீபகாலத்தில் அவர்கள் பிள்ளைகளுக்கென்று ஓர் இங்கிலீஷ் பள்ளிக்கூடமேற்பட்டு வேலை நடந்து வருவதாகக் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். படிப்பு வரட்டும், மற்றைய சகல சுபங்களும் கிரமமாக வருவதில் தடையில்லை.

* * *

மாக்ஷிமை தங்கிய கவர்னரவர்களும், வேறு இரண்டொரு உத்தியோகஸ்தரும், அக்ரி காலேஜிளைப்பாறு மண்டபத்தில் நாலு நாளிருந்தார்கள். கோயமுத்தூரில் பிளேக் மும்முரத்தினால் ஜனங்கள் காலி செய்திருக்கும் தெருக்களைப் பார்த்துப்போனதாகவும், கூடிய சீக்கிரத்தில் அவ்வூர் மறுபடிப் பழைய ஸ்திதிக்குவந்து, ஜனங்களும் தத்தம் காரியங்களைத் தொடங்கி முன்போலச் சுகிகளாயிருப்பதற்கு ஏதாகிலும் வழிதேட வேண்டுமென்று டாக்டர் முதலியோரை யெச்சரித்திருப்பதாகவும், கேள்வி. ஈசுவரானுக்கிரகமும் கூடி யிந்த நல்லெண்ணம் நிறைவேற வேண்டுமென்பதே எல்லோருடையவும் பிரார்த்தனை.

இரண்டுவருஷமாக அக்ரி காலேஜில் உத்தியோகஸ்தராயிருக்கும் கிருகஸ்தர்களுடையவும், கூலிகள் முதலியோருடையவும், ஜீவன விஷயத்தில் சில சில்லரை யுபத்திரவங்களிருந்து வந்தன. அவைகளில் முக்கியமானது, உணவிற்கு வேண்டிய பதார்த்தங்கள் சமீபத்திலகப்படாத துக்கமேயாம். சென்ற நாலைந்து மாதமாக ஊரில் பிளேக்முதலிய உபத்திரவங்களினால் கடைத்தெருவில் போவதற்குக்கூடச் சிலருக்குப்பயமுண்டாகி, இவ்வுபத்திரவங்களுக்குப் பரிகாரந்தேட முயன்றதில், ஊரில் சென்ற நாலுவருஷ காலமாகக் கோ ஆபரேடிவ் முறையில் காரியம் நடத்திவந்த 'ஸ்டோர்ஸ்' என்னும் மளிகையை யிவ்விடத்திலுமோர் கிளையேற்படுத்தி வேலை நடத்திவர ஏற்பாடு செய்து, செப்டம்பர் ௴ 25-ம் தேதி முதல் நடந்து வருகிறது. அதனால் சர்க்கார் தோட்டத்திலும் அதையடுத்திருக்கும் இரண்டொரு சிற்றூர்களிலுமிருக்கும் ஜனங்களுக்குக் கூடிய சீக்கிரத்தில பல விதமாகவும் சகாயமாகக் கூடுமென்பதிற் றடையில்லை.



லார்ட் மிண்டோ
இந்தியாவின் ராஜப் பிரதிநிதியவர்கள்



லார்ட் மார்லி
இந்தியாவின் காரியதரிசியவர்கள்

REGISTRAR OF BOOKS
REGISTERED
21 DEC 1909
MADRAS

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

| | | |
|---|---|---|
| புஸ்தகம் I.<br>Vol I. | சௌம்யஸூ கார்த்திகைமாதம்<br>November 1909 | சஞ்சிகை 3<br>No. 3 |

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்,
வழுவல, கால வகையினனே."

மஹாசாஸனத்திரயம்.

இந்த நெம்பரில் காணும் (சென்ற நவம்பர் மீ' க்திய) மஹாசாஸனத்துடன், நாம் மொழிபெயர்க்க உத்தேசித்த மஹாசாஸனங்கள் மூன்றும் முற்றுப்பெறுகின்றன. இவைகளை யிச்சஞ்சிகை யாரம்பத்திலேயே எடுத்து, விடாமல் மூன்று நெம்பர்களிலும் பிரசுரித்து வந்ததற்குக் காரணம் முதல் நெம்பர் வர்த்தமானத்திலேயே சொன்னோமாதலால், மறுபடி விஸ்தரிப்பது அனாவசியம்.

ஏதேனும் ஒரு லோஹத்துண்டு நம்மிடங் கிடைத்து, இது தங்கமா, பித்தளையாவென்று சந்தேகமுண்டானால், பொற்கொல்லரிடஞ் சென்று உரைகல்லில் தேய்த்துப் பார்க்கிறோம். உடனே யது தவலை மாற்றென்றும், அல்லது அதிகமென்றும் தெரிந்துவிடுகிறது. அது போலவே வேறு விஷயங்களிலும், ராஜநீதி வழுவாமல் நடக்கவேண்டுமானால் அதற்கும் உரைகல்லொன்று வேண்டும். அதன் மூலமாய்ச் சர்க்காராவது, பிரஜைகளாவது செய்யுங் காரியங்களுடைய நியாயாந்நியாயங்கள் வெளிப்படும். பழைய காலத்தில், இக்ஷுவாகு வம்சத்தரசர்களைப் பற்றிப் பேசுங்கால் மகாகவி காளிதாஸ சுவாமி, "அவர்கள் மனுவினால் கிழித்த கோடைவிட்டு எள்ளளவும் விலகவேயில்லை," யென்று வருணித்தார். அதாவது தாங்கள் செய்துவந்த காரியங்களில் சந்தேகமுற்ற போதெல்லாம், அவர்கள் மானவ தரும சாஸ்திரத்தை உரைகல்லாக வைத்து, மாற்று, உரை, கண்டு வந்தார்களென்க.

ஆனால் மனுமுதலிய ஸ்மிருதிகள் காலவகையினாற் போதாமற்போகவே, 1858-ம்ஸூத்தில் பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவிலேற்படுகையில், அதற்கு ஸ்மிருதி யொன்று புதிதாகச் சேர்க்க வேண்டிவந்தது. அதை யனுசரித்துப் பிறகு வேறிரண்டு சாஸனங்கள் பிறந்தன. இம்மூன்றுஞ்சேர்ந்து தற்காலம் துரைத்தனவிஷயத்தில் நமக்கு வேண்டிய

தோர் பெரிய உரைகல்லாயிருப்பது கொண்டுதான் இவைகளை நாம் முதன்முதல் இவ்வாறு பிரபலப்படுத்தினோம்.

‘இம்மஹா சாஸனத்திரயத்தில்,’ முதலாவது 1858-ம் வருஷத்தியது. அதில் நமக்கு வேண்டிய ராஜதருமங்களெல்லாம் கிட்டியிருக்கின்றன. இரண்டாவது நமது மகாராஜச் சக்கரவர்த்தியின் மகுடாபிஷேக சந்தர்ப்பத்தில் கிடைத்தது. அதன் மூலமாய்ச் சக்கரவர்த்தியவர்கள், முந்தி 1858-ம்௵த்திலேற்பட்ட தருமங்களைத் தனக்கும் உரைகல்லாக்கிக் கொள்ளுவதாகவும், அவற்றைவிட்டு எள்ளளவாகிலும் விலகுவதில்லை யென்றும், சுவாமிசாக்ஷியாக உறுதிமொழி கூறியிருக்கிறார்கள். இப்படிச்சொல்லியபிறகும், சமீபகாலத்தில் இச்சாஸனங்கள் விஷயத்தில் ஏதோ பூசிமெழுகிப்பேச்சுவந்ததால், சென்ற நவம்பர் ௴த்தில் சக்கரவர்த்தியவர்கள் முற்கூறியதை மறுபடி வற்புறுத்தியது தவிர, இந்த உரைகல்லைத் தாமட்டுமேயன்று, தமது பிரஜைகளாகிய ஐக்கிய ராஜ்ஜியத்தவர் அனைவரும் ஒப்பியிருப்பதாகவும், அதையனுசரித்துத் தற்காலம் இந்தியர்களுக்கு யோக்கியதையிருக்குமளவிற்குத் துரைத்தனத்தில் நிர்வாகபாத்தியதையை உண்டு செய்வதாகவும், வாக்களித்திருக்கிறார்கள்.

ஆதலால் இம்மஹாசாஸனங்களைத் துரைத்தனத்தார் எவ்வளவிற்குக் கௌரவப் படுத்தி வருகிறார்களோ, அவ்வளவிற்குப் பிரஜைகளாகிய நம்மிலும் எல்லோரும் இவற்றைச் செம்மையாயறிந்து கௌரவப் படுத்துவது இருதிறத்தாருக்கும் க்ஷேமகரமாகும். ‘சந்திரனைத் தா,’ என்பது சிறுபிள்ளைத்தனம். அல்லது கேட்கவேண்டுவ தின்னதென்றும், நமக்கிருக்கும் துக்கங்களை நன்கு விசாரியாமலும், பசுக்களைப்போல ஒரே குரலாக முறையிடுவது அதிலும் மோசம். ஆதலாலிவ்விரண்டு குறைவையும் நீக்கித் துரைத்தனத்தாருக்கும் நமக்கும் சுகதுக்கங்களொன்றேயெனத்தெளிந்து, நமது குறைகளை விவேகபூர்வகமாய்த் தெரிவித்துப் பரிகாரந் தேடிச்சுகமடைய இவ்வுரைகல் நன்குபயோகப்படுமென்றும், இவ்வுத்தேசம் சீக்கிரத்தில் பலனுக்கு வருவதற்கு, இவற்றைக் கொஞ்சம் விசேஷவுரையுடன், நமது பாடசாலைகளில் விடாமல் கற்பித்து வருதல் பலவினும் தகுமென்றும், நம்பி யிதற்காக முயன்றோமென்பதைச் சிஷ்டர் யாவருமறிதல் வேண்டும்.

மதிராசு இந்திய வர்த்தக மகாசங்கம்.

இப்பொருள் கொள்ளும் ‘மதிராசு இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ்’ என்னும் மகாசங்கத்தைச் சென்றமாதத்தில் மதிராசு வர்த்தக மகாஜனங்களும், மற்றுள்ளவர்களுஞ் சேர்ந்துண்டாக்கியதற்காக வெகு சந்தோஷப்படுகிறோம். இதனால் என்ன பிரயோஜனமென்று அனேகர் கேட்கலாகும். இப்படியொருசாதன மில்லாதது கொண்டுதான் நமது நாட்டு வர்த்தகம் அன்னியர் கையிலைக்கியமாகி, நமக்குத் துபாசி வேலையை விட உயர்ந்த பதவிக்கிடமில்லாமல் திண்டாடுவது. அரிசி, பருப்பு, முதலியவற்றைக் கொண்டு பலப்படும் சில்லறைக் கடையையும், பலசரக்கு மளிகையையும், கிடங்குகளையும் தவிர்த்துப் பெரிய வர்த்தக சாதனங்களொன்றும் நாளதுவரை நம்மிலேற்படவில்லை. நமது நாட்டுச்சரக்குகள் வெளியே போவதில் நமக்குக் கிடைக்கவேண்டிய லாபம் சரியாய்க்கிடைக்கிறதா? அயல் நாட்டார் நமக்குவேண்டியவைகளை யெப்படி யறிந்து அப்போதப்போது நமக்கனுப்பும் சரக்குகளைத் திருத்தியோ, மாற்றியோ செய்து வருகிறார்கள்? ‘பாங்கு’ என்னும் லேவாதேவி விஷயத்தில், நாட்டுக்கோட்டையாருடைய தந்திரங்களைத் தவிர்த்து வேறு பெருஞ் சாதனங்களுண்டா, இல்லையா? நமது நாட்டில் செல்லாகிவரும் நாணயங்கள் விஷயத்தில் அப்போதப்போது சில்லறை மாறுதலாகி வருகிறதே, அதன் ரகசியமென்ன? ஒரு



அணா நாணயமும், தங்கப் பவுனும், சமீப காலத்தில் வந்தனவே, அதனால் யாருக்கு லாபம், அல்லது நஷ்டம்? என்பது போன்ற கணக்கற்ற விஷயங்களில் நமக்கும், சர்க்காருக்கும், வேண்டியபடி யுக்தி சொல்லுவதற்குத் தக்க சாதனங்கள் நம்மில் இல்லவேயில்லை யென்னல் தகுமன்றோ. அதனால் இதுவரை பல சந்தர்ப்பங்களில் நமக்கு வேண்டாத காரியங்களாகியிருப்பதுடன், இனியுமிப்படியே யிருந்தால் வரக்கூடிய அனர்த்தங்கள் பலவாகும். ஆதலால் தொழிலிலும், வியாபாரத்திலும் தேர்ந்து கைவலுத்திருக்கும் ஸ்ரீமான்-தியாகராஜ செட்டியார் போன்ற புத்திமான்கள் இவ்வாறு தங்களுக்கும், மகாஜனங்களுக்கும் பெரிய உபகாரஞ் செய்யக்கூடிய சங்கமொன்றை யேற்படுத்தியது வெகுதூரஞ் சிலாகிக்கத் தக்கதேயாம்.

கலெக்டர் தர்பார்கள்.

சென்றமாதத்திய வர்த்தமானத்தில் பிராசீன பாஷைகளையும், அவற்றைப்பேசும் ஜனங்களுடைய நடை, உடை, பாவனைகளையும், இந்தியாவிற்கு உத்தியோக விஷயமாய் வரும் ஐரோப்பியர்களுக்குக் கற்பிக்கவேண்டி, லந்தனில் ஒரு பெரிய பிரயத்தனம் நடந்துவருவதாகச் சொன்னோம். அதன்நோக்க மின்னதென்றும் சொன்னோமல்லவா? அதாவது, பழையகாலத்திலிருந்த துரைகளைப்போலவே யினியும் வருபவர்கள், தேசீயபாஷைகளை நன்குகற்றுத் துபாசியின் சகாயம் வேண்டாது, ஜனங்களுடைய முறைகளைக்கேட்டு நியாயஞ் செய்யவேண்டுவதாம். இதற்கு லந்தனில் பிரயத்தனப்படுவதில் பிரயோஜனம் அதிகமாயுண்டென்று நமக்குக் காணவில்லை. அக்கரையுள்ளவர்கள் இந்தியாவில் உத்தியோகத்திற்குவந்து மூன்றுமுதல் ஐந்து வருஷத்திற்குள் வேண்டியமட்டில் கற்றுக்கொள்ளலாம். கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற அக்கரைமட்டும் லேசமிருந்தால்போதும். அதொன்றுதான் தற்காலம் குறைந்திருப்பது. அதற்கு இருவகைக் காரணங்கூறுவதுண்டு. முதலாவது இப்போது வரும் உத்தியோகஸ்தருக்கு வேண்டிய உதவி செய்வதற்கு, இங்கிலீஷ் தேறக்கற்ற நம்மவர்கள் தயாராயிருக்கிறார்கள். அதனாலிவர்களுக்கு அது வீண்பிரயாசமாகக் காணுகிறது. இரண்டாவது ரயில் முதலிய சௌகரியங்களாலும், வேறு காரணங்களாலும், முன்மாதிரி ஜனங்களுக்குள்ளாகவேயிருந்து பொழுதுபோக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஐரோப்பிய உத்தியோகஸ்தருக்கில்லவேயில்லை.

காரணமெதுவாயிருந்தாலும் தோஷம் வலுத்துவந்து, அதனால் சர்க்காருடைய நல்லெண்ணங்களெல்லாம் வியர்த்தமாவது பிரத்தியக்ஷம். ஆதலால் எதாகிலும் பரிகாரந்தேடவேண்டுவது வெகு துரிதமாக முடியவேண்டிய விஷயம். ஆகவே, இதை நாடிப் பம்பாய் கவர்ன்மெண்டார், சமீபகாலத்தில் “கலெக்டர் தர்பார்,” என்று புதிய ஏற்பாடு ஒன்று செய்திருப்பதாகத் தெரிகிறது. கலெக்டர்கள் சர்க்கியூட் போய்க்கொண்டே யிருப்பதால், அதை யனுசரித்துக் குடிகளை யொருங்கு சேர்த்து, அங்கங்கே தாமதித்துத் தகரார்களைப் பைசல் செய்துவரவேண்டுமென்பது சர்க்கார் எண்ணமென்று தோன்றுகிறது. இந்த எண்ணம் முற்றுப்பெற வேண்டுமானால், அதற்குச் சில லக்ஷணங்கள் இன்றியமையாதவை. (1) கலெக்டர்களுக்குத் தேசீய பாஷைகளில் பரிசயம் வேண்டியமட்டி லிருக்கவேண்டும். (2) கலெக்டர்களை மனதுவந்தபடியும், மாதத்திற்கொரு முறையும் மாற்றிவருவது கூடாது. (3) கலெக்டர்கள் தர்பாரை ஒருமணி, அரைமணி யென்று கடிகார நிபந்தனை வைத்தும், குடிகள் சொல்வதை, நன்றாய்த்தேர்ந்த வக்கீல்கள் சொல்லுவதுபோல ஜோடித்துச் சொல்லவேண்டிப் பயமுறுத்தியும் வருவதுகூடாது. பழையநாளில் மன்றோ துரை சேலத்தில் செட்டில்மெண்டு வேலையிலிருக்கையில், ஒரு மகமதிய

க்குடியானவன் அவ்விஷயமாய்ப் பேசவந்து, அதைவிட்டு மற்றைய விஷயங்களை வேண்டிய மட்டில் பேசி வந்ததாகவும், சுகதுக்கங்களை யெல்லாம் வருணித்துத் தன் மனைவி தனக்கு எருதுபோலுழைத்து வந்து இறந்துபோனதும், தனக்குக் குஞ்சு குழந்தைகளைப் பார்த்து வர ஆளில்லாத உபத்திரவமும், இது போன்றவைகளை யெல்லாம் அவன் சவிஸ்தாரமாய்ச்சொல்லக் கேட்டு வந்ததாகவும், அப்படிக் கேளாமல் போகும் விஷயத்தில் செட்டில்மெண்டு சுலபமாய் முடிவதில்லை யென்றும், ஒரு கடிதத்தில் எழுதியிருக்கிறார். இந்த ரகசியத்தையும் இதுபோன்ற மற்றைய சங்கதிகளையும் கவனிக்கவேண்டும். ஏனெனில் குடிகள் அனேகமாய்ப் பழையபடியே தானிருக்கிறார்கள். உத்தியோகஸ்தரோ, "சுகதுக்கஞ் சுங்கக்காரருடன் சொல்லுவதில் பயனென்ன?" என்பதற்கேற்க நடந்து வருகிறார்கள். அதுதான் பெருத்த தோஷம். அதைத்தான் மாக்ஷிமை தங்கிய பிரின்ஸ் ஆப் வேல்ஸும் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதைத்தான் சீக்கிரம் பரிகரிக்க வேண்டும். "கலெக்டர் தர்பார்கள்" இதற்குக் கொஞ்சமாகிலும் சாதனமாகும் பக்ஷத்தில் அவைகளை யேற்படுத்தியவருக்கு எல்லாச் சுகிர்தமுமுண்டு.

**பரலோகப்பிராப்தரானராம சந்திரராவ் சாப்கி அவர்கள்.**

சென்றமாதம், மதிராசில் வெகு பெரியவராகி வக்கீல்களில் வெகு காலமாக முக்கியஸ்தராயிருந்த இவர் காலஞ்சென்றார். நல்ல ஜாகீர்வம்சத்தில் பிறந்து, புத்தி விசேஷத்தினாலும், நற்குணத்தினாலும், சிறந்து நின்ற இவருக்கு, நமக்குத் தெரிந்தவரை எக்காலத்திலும் ஒரே மரியாதை யிருந்து வந்திருக்கிறது. ஆகவே, சர்க்காரும், நம்மவரும், ஒருமனப்பட்டுச்சம்மானித்து வந்த 'அபூர்வ வஸ்துக்களில்' இவர் ஒருவர். சட்டப்படிப்பு விஷயத்தில் வெகு காலம் இவர் பண்டிதராயிருந்து நடத்திவந்ததில், வித்தியார்த்திகளுக்கெப்போதும், தயை, தாக்ஷிண்ணியம் முதலிய சுபலக்ஷணங்களுடன் நடந்துவந்ததை யாவரும் புகழ்ந்து சொல்லுவார்கள். ராஜபத்தியில் வெகுவாய்ச் சிறந்து, சில்லரைச் சங்கதிகளிற் பிரவேசிக்காமலே கௌரவமாயிருந்ததுகொண்டு, மூன்று வருஷங்களுக்கு முன், பங்காளத்தில் நடந்த ஒரு பெருத்த அனியாயத்தைக் குறித்துப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு முறையிடுவதற்கென்று மதிராசில் கூடிய மகாஜன மண்டலத்திற்கு இவரை அக்கிராசனாதிபதியாக்கியதில், அதே அந்தப் பெருஞ்சபைக்கு ஒரு பூஷணமாகிச் சபையாருடைய நோக்கம் பரிபூரணமாயிற்று. அனேக விஷயங்களில் இனி வருங்காலத்தில் இம்மாதிரிக்குணங்களிற் சிறந்தோர் வேண்டியிருப்பதால், தற்காலமுள்ள குமாரர்களும், இனிவருபவரும், இதைக் கவனித்து, இம்மகான் நமது மத்தியில் நெடுநாள் ஜீவித்து, உழைத்து வந்தது வியர்த்தமாகாமலிருக்க முயல்வாராக.

**பாஸ்டேர் மண்டபங்கள்.**

'மசை நாய்' என்னும் பைத்தியங்கொண்ட நாய்கள் கடித்துக் குழந்தைகளும், பெரியோரும் விஷவேகத்தினால் சுரங்கண்டு, நாய்போல் குலைத்துப் பிராணனை விடுவதும், அதற்கு நம்மவர்களுடைய ஔஷதம் ஒன்றும் பலியாமலிருப்பதும், அனேகமாய் எல்லோருக்குந் தெரிந்திருக்கலாம். இதற்குப் பரிகாரம் கொஞ்ச காலத்திற்குமுன் பிரான்சு தேசத்திலொரு புத்திமான் கண்டுபிடித்ததில், அவருக்குள்ள பெயர் அந்த வைத்தியசாலைக்குமாகியேற்பட்டது. பிறகு இது பிரிட்டிஷ் சீமையிலேற்பட்டது. ஆனால் இது அவ்விடத்திலிருக்கும் வரை, இந்தியாவிலுள்ள ஐரோப்பியப் பட்டாளவீரர்களும், வேறு உத்தியோகஸ்தரும், இவ்வாறு கடியுண்டால், சர்க்கார்செலவில் சீமைக்குப்போய் வைத்தியம் செய்துகொண்டு வரவேண்டியாயிற்று. அப்படியேற்பட்டுக் கொஞ்சகாலமானதும், ஏதோகாரணத்தினால் நமது தேச



த்தில் நாய்களுக்கு 'மசை' எங்கும் அதிகமாகி, இந்தக்கடி வியாதியும் அதிகபலப்பட்டு, வியாதியஸ்தருடைய சங்கியையும் பயங்கரமாகி யதிகரித்து வந்தது! இவர்களையனுப்புவது சாத்தியமில்லாமற்போகவே, சர்க்கார் இந்தியாவிலேயே வைத்தியசாலைவேண்டி, ஹிமாசலப்பிரதேசத்தில் 'கசௌளி' யென்னுமிடத்தில் ஒன்றேற்படுத்தினார்கள். அதுசிலவருஷகாலம் நடந்து வந்ததில் திருப்திகரமாகக் கண்டதால், நமது ராஜதானிக்கும் ஒன்றுகுன்னூரில் (நீலகிரியில்) ஏற்பட்டது. சென்றவருஷத்திய ரிபோர்ட்டு இது வெகு உபகாரமாக இருந்ததாகத்தான் காட்டுகிறது. மேலும் மேலும் உபகாரமாகுமென்பதில் சர்க்காருக்குச் சந்தேகமேயில்லை.

இந்தியாவில் இந்த வைத்தியமுறைக்கு ஆக்ஷேபம் ஒன்றேதான். அதாவது இது நடப்பதற்கு ஜீவஹிம்ஸை வேண்டியிருப்பதேயாம். ஆடு, நாய், முதலிய பிராணிகளைப் பரீக்ஷைக்காக எடுப்பது சாதாரணம். பாம்பின் விஷத்திற்குப் பரிகாரந்தேடுபவர், இவைகளிலொன்றையோ, அதிகமாகவோ பிடித்துக்கடியுண்பித்துப் பிறகு தங்களுடைய பரிகாரமுறையைச் செய்துபார்ப்பது சகஜம். ஆனால் இம்மாதிரிப் பரீக்ஷைக்கும், இந்த வைத்தியத்திற்கும் வித்தியாசமாவது 'சித்திரவதை' யேயாம். பிராணிகளையுயிருடன் சிலிர்க்கச்சிலிர்க்கச் சிறிதுசிறிதாக அறுத்துப்பரீக்ஷித்துவருவதில் ஹிம்சைவாயாற் சொல்லக்கூடாத விதமாயிருப்பதால், இந்தியாவில் மட்டுமேயன்றி உலகத்திலெங்கும் விவேகிகள் இதற்குச் சம்மதப்படுவதில்லை. ஆனால் வைத்தியர் சொல்லுவது. இது—தாரதம்மியம் பார்க்கையில் மனிதருயிரை யபேக்ஷித்து மற்றைய பிராணிகள் தாழ்ந்திருப்பதனாலும், இக்காலத்தில் திராவக மகிமையினால், ஒரு ஜீவனுக்கு உபத்திரவங் காணாமல் தேகத்தில் எந்தப்பாகத்தை வேண்டுமானாலும் சேதிக்கலாமாதலாலும், இது ஒரு பெரிய ஆக்ஷேபமாகமாட்டாதென்பதே.

**பிராசீனக்கல்வியபிவிருத்தி.**

கனம் ஜட்ஜி வி. கிருஷ்ணசுவாமி அய்யரவர்களுடைய விடாமுயற்சியால், சென்ற நாலு வருஷ காலமாக யோசித்துக் கடைசியாகச் சென்ற மாசத்தில் நமது யூனிவர்ஸிட்டியார் அவருடைய இஷ்டத்தை யொருவாறு பூர்த்தி செய்தார்கள். பஞ்சாபில் நடப்பதைப்பார்த்து வந்தது முதல் மேற்படி அய்யரவர்களுக்கு இவ்விஷயத்தில் ஆக்கிரகம் அதிகம். தன்னாலியன்றமட்டில் முயன்று மைலாப்பூரில் சம்ஸ்கிருதப் பாடசாலை யொன்றேற்படுத்தினார். அதில் வித்தியாப்பியாசம் ஒருவாறு நடந்து வருகிறது. ஆனால் தேசீய பாஷைகளை யூனிவர்ஸிட்டியார் கைவிட்டு விடுமளவும் அவைகளுக்கு மகிமை குன்றிப் பேவார்சுகளாகிப் போவது நிச்சயமாதலால், ஐயரவர்கள் வெகு தூரம் உழைத்துக் கடைசியாக அவைகளுக்குப் பதவி யொன்றேற்படுத்தி யிருப்பதற்காக அவருக்கு நாம் வந்தனஞ் செய்கிறோம்.

நமது பண்டிதர்களுக்கு இங்கிலீஷ் தெரியாத தோஷத்தினால், 'பொன்மலருக்கு நாற்றமட்டும்' குன்றியிருப்பது வெகு நாளைய அனுபவம். ஆதலால் இனி வருபவர்களுக்கு மெட்ரிகுலேஷன் தரபுவரை இங்கிலீஷ்படிப்பு நிச்சயமென்றேற்பட்டதில், அந்தத் தோஷம் ஒருவாறு பரிகாரமாகு மென்பதில் ஐயம் சிறிதுமில்லை. ஆனால் இவ்வளவு தூரமுழைத்து யூனிவர்ஸிட்டி ஸம்மானம் பெறும் பண்டிதர்களுக்குப் பிழைப்புமட்டும் விசேஷித்துக் காணாதொன்று தான் இதில் நீங்காமலுள்ள முக்கியக் குறைவென்று நமக்குக் காணுகிறது.

**சோதனையுபகாரச்சம்பளம்.**

பரீக்ஷைகளில் முதல் வகுப்பில் தேர்ந்து சம்மானம் பெறும் புத்திசாலிகளான வித்தியார்த்திகளுக்கு அந்தத்தசையொழிந்தபிறகு, ஜீவதசையிலேதாகிலும் தாங்கள் சிறப்பாகப் படித்ததை யுபயோகித்து நற்காரியஞ்செய்து தங்களுக்கும், உலகத்திற்கும், நன்மை பயக்குமாறு நடக்க இஷ்டப்பட்டாலும், இதுவரைய்

தற்கு யூனிவர்ஸிட்டியாருடைய சகாயம் ஒன்றுமில்லை. ஆதலால் இந்தக் குறைவை நீக்கியினியவ்வாறு முன்னுக்குவர யத்தனிப்பவருக்கு உபகாரமாக யூனிவர்ஸிட்டியார், தற்காலம் எட்டுப் பெயருக்கு மாதம் ரூ. 75 வீதம் உபகாரச் சம்பளம் இரண்டுவருஷத்திற்கு ஏற்படுத்தியிருப்பதாகக் கேட்டு வெகுவாய்ச் சந்தோஷிக்கிறோம். இந்த தேசசரித்திரமென்பது நமக்கு அபிமதமாதலால் அதற்கும் வழிபிறந்திருக்குமென்று நம்புகிறோம். நமது நாட்டில் விவேகிகளான சிறுவர்களுக்கு அவ்விஷயத்திலுழைத்துக் கீர்த்தி சம்பாதிப்பதைவிட வேறு உபயோககரமான காரியம் நமக்குக் காணவில்லை. இம்மாதிரியுபகாரம் இனிமேலுமேலும் நடந்துவருவதற்கு யூனிவர்ஸிட்டியார் பிரயத்தனப்படுவார்களென்றும், அதற்கு வேண்டிய மூலியமவர்களுக்குக் கிட்டுமென்றும் நிச்சயமாய் நம்புகிறோம்.

தீண்டாதவருக்கு நற்குறி.

இப்பூவுலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும், 'உயர்ந்தவர்', 'தாழ்ந்தவர்,' என்கிறபேதமும், 'தனிகர்,' 'ஏழைகள்,' என்கிற பேதமும், ஏதோ பலவாறு இருந்துதானிருக்கின்றன. என்றாலும், ஏதாகிலுமோர் வருக்கத்தில் ஒருவன் பிறந்தால், அப்பிறப்பினால் அவனுக்குண்டான தோஷத்திற்கு ஜீவதசையில் பரிகாரமேயில்லையென்கிற விசித்திரம் இந்தியாவிற்கு மட்டுஞ் சிறந்ததாம். 'மாமூல்' என்பது நமது நாட்டில் தினையளவுங் கோணாமலிருப்பதுபற்றி யிதுவரை நம்மில் இங்கிலீஷ் படித்தவரிலும் அனேகர் இந்த அநியாயத்திற்கு நியாயங் கண்டுபிடித்து வாதாடிவந்தார்கள். என்றாலும் கிறிஸ்தவர்களும், மகம்மதியர்களும், இப்படி நாம் ஒதுக்கியவர்களைச் சேர்த்துக் கல்விபயிற்றிவந்ததால், சுதேச கிறிஸ்தவவருக்கம் பிரதிதினமும் பலத்து, அவர்களுக்குள் ஆணும், பெண்ணும், படித்துப் புத்திசாலிகளாய் நாகரீக முதிர்ந்து வருகிறது பிரத்தியக்ஷம். மகம்மதியர்களில், இப்படி முன்னுக்கு வரச் சௌகரியப்படாவிட்டாலும், பதவியுயர்ந்து, "தீண்டாத" வருக்கத்தாருக்குரிய துக்கங்களில் அனேகம் பரிகாரமாகி வருவதும் பிரத்தியக்ஷமாம்.

இப்படி நடந்துவருவதில் நம்மவர்களே நமக்கு விரோதிகளாவது கொண்டு, அது நம்மில் படித்தவரனேகருக்குச் சம்மதமில்லாமல், அவர்கள் சுமார் முப்பது வருஷங்களாகத் தேசிய ஆசாரங்கள், என்றால், துராசாரங்களைத் திருத்துவதற்குச் சிறிது சிறிதாகப் பிரயத்தனம் செய்து, அவை யேதோ நமக்கு நல்லதசையிருப்பதுபற்றிச் சமீபகாலத்தில் பலத்த பிரயத்தனங்களாகி யுருப்பட்டு வந்திருக்கின்றன. நமது நாட்டில் பிறந்து நமது நாட்டிலேயே யிறக்கும் ஜனங்களில், சுமார் ஐந்தரைக் கோடி பெயருக்கு, அன்ன வஸ்திரங்கள் அரை வரிசைகூடக் காணாமலிருப்பது அநியாயமே. என்றாலும், அது எத்தேசத்திலுமுள்ள லக்ஷணமாதலால் அதை யெடுத்திவ்விடத்தில் விஸ்தரிக்க வேண்டியதில்லை. ஆனாலிவர்களிலனேகர், ராஜபாட்டையில்போவதுகூடாதென்றும், கடைத்தெருவில் போவதும், வியாபாரஞ்செய்வதுங் கூடாதென்றும், அனேகம் தொழில்களுக்கிவர்கள் யோக்கியர்களல்லரென்றுமிருப்பதை யோசிக்குமிடத்து, இவர்களை யிந்த ஸ்திதியில் நிறுத்தியிருக்கும் 'உயர் குலத்தவருக்கு' ஏதோ கிரகசாரம் பலமாகப் பிடித்திருக்கிறதாகத் தாராளமாகச் சொல்லத்தான் வேண்டிவருகிறது.

ஆதலால் இந்தத் துக்கங்களை யேகதேசம் பரிகரிக்கவேண்டிப் பம்பாயில் பிரயத்தனம் பலமாக நடந்துவருவது நமக்கு நல்ல காலமே. சென்ற மாதத்தில் இவ்விஷயமாய்க் கூடிய பெருஞ்சபையில் மகாராஜா கைகோவார் அவர்கள் அக்கிராசனாதிபதியாகி, இவ்விஷயத்திலுள்ள வயிற்றெரிச்சல் தீரப்பேசி, இதர ஜனங்களுக்கு உற்சாகமூட்டியதற்காக அவருக்கு நாம் மனப்பூர்வமாய் வந்தனம் தருகிறோம். இந்த ஐந்தரைக் கோடி ஜன

REGISTERED 21 1908 BOOKS



பரோடா மஹாராஜா கைகொவார் அவர்கள், தீனதயாளு.

ங்களுக்கு எப்போது இந்த விதமான கஷ்டங்கள் ஏகதேசம் விடியுமோ, அப்போது தான் இந்தத் தேசத்திற்கும் ஒரு பெரிய கீழ்வயிற்றுக்கழலை யுடைந்து உபத்திரவ நீங்கும். அதற்குமட்டும் சந்தேகமேயில்லை.

இப்போது நமக்குச் சாமான்னியமாயுத் தேசத்திலிருப்பது, ‘இத்தீண்டா வருக்கத்தவருக்கு’ லௌகிகக் கல்வியும், ஜீவனோபாயமும். இவ்விரண்டும் முதலாக வேண்டியவையென்பதற் கையமில்லை. ஆனால் இவற்றுடன், தெய்வ விஷயமாயும் சிறிது பயிற்சியேற்படுமாகில், சரீர சுத்தியுடன், மனதுஞ் சுத்தி யடைந்து அனேக சுகிர்தங்களுண்டாகும்.

ஏனெனில் ஆதிமுதல் இந்தியாவில் ஜனங்களுக்குள் ஒற்றுமை தெய்வவிஷயமாகவேதான் ஏற்பட்டு வந்திருக்கிறது. ஆகையால் இது சனாதனதருமங்களில் வெகு முக்கியமானது. புதிதுமல்ல. இந்த ரகசியத்தை நன்கு விளக்க வேண்டி, இப்பாரதவருஷத்தில், ஆரியமகாரிஷிகளுக்குள், இவ்விஷயத்தில் சிரேஷ்டரும், முதல்வருமான விசுவாமித்திர மகாரிஷியைக் குறித்து, அவருக்கு வாஸ்தவத்திலுள்ள மகிமையைச் சிறிது விளக்கியிருக்கிறோம்.

இனிவரும் நெம்பர்களில் ஏழைச்சனங்களை யுத்தாரஞ்செய்த பாகவதர்களுக்குள் வெகு சிரேஷ்டான இரண்டொரு பெயர்களையும் அவர் மகிமையையும் விளக்கி விடுவதாயுத்தேசம்.

பம்பாயில் பல விடங்களில் இதற்கென்று சபைகள் கூடிப் பிரசங்க நடந்து வருவதில், நமக்கென்னவென்றே நம்மில் (தமிழ்நாட்டில்) பெரும்பாலார் கையை மடக்கிக்கொண்டிருக்கிறோம். ஆதலால் சேலத்தில் இதற்காக டாக்டர் ஸ்ரீமான்-ராமாராயரவர்களுடைய ஊக்கத்தை முன்னிட்டுச் சென்ற மாசம் சித்திர விசித்திரங்களுடன் ஒரு பெரிய சபை கூடியதைக்கேட்டு விசேஷித்து ஆனந்திக்கிறோம். கோவில் விஷயத்திலும் வேறு அனேக விஷயங்களிலும் இக்காரணங்கொண்டு நடக்கும் அனியாயங்களையும், மகம்மதீயனாகவாவது, கிறிஸ்தவனாகவாவது, ஒரு ‘தீண்டாதவன்’ ஆகிவிடும் பக்ஷத்தில், உடனே யவனுக்குக் கிடைக்கும் பதவியையும், சித்திரத்தில் விளக்கிக்குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தில்லாமலிருக்கும்படி அச்சபையில் காட்டியது வெகுதிறம். அப்படியே தென்னிந்தியாவெங்கும் ஜனங்களுக்குள் உணர்வுண்டாக்கக் காரிய மாரம்பிக்கும் விஷயத்தில் காலக்கிரமத்தில் அனுகூல முண்டாதலால் ஆங்காங்குள்ள புத்திமான்கள் ஏதாகிலும் தங்களாலியன்றதைச் செய்வாரென்றும், அதனாலிம்மை மறுமை யிரண்டிலும் பயனடைவாரென்றும் நம்புகிறோம்.

---

## சாந்தமாய் வாதித்தல்

நாம் முற்றிலும் சரியாய் வாதிப்பதாக நமக்கு நம்பிக்கை இருப்பினும் படபடப்பாகவும் அகங்காரத்துடனும் பேசவே கூடாது. நமது அபிப்பிராயங்களை நிதானமாயும் சாந்தமாயும் வெளியிட வேண்டும். அப்படி வெளியிட்டும் ஜனங்களின் மனதில் ஏறுவிடில் “இன்றையதினம் இவ்வளவு போதும்; இன்னொருதடவை பார்த்துக் கொள்வோம் என்றும் இந்தச் சங்கதி அவ்வளவு ஆவசியகமன்று வேறு விஷயம் வாதிப்போம் என்றும் தொட்ட சம்பாஷணையைத் தந்திரமாய் முடிக்கவேண்டும். சங்கத்தில் வித்தியாசமான ஆசாரங்கள் இருக்கலாம். ஒரு சங்கத்துக்கு ஏற்றவைகள் மற்றொரு சங்கத்துக்கு எருமலே இருக்கும்.

# காவிய காண்டம்

## 1. யூனிவர்ஸிட்டியும், தேசிய பாஷைகளும்

ஸ்ரீமான்-ஏ. ஆர். ராஜராஜவர்மா அவர்கள்,
எம். ஏ., மகாராஜா காலேஜ், அனந்த சயனம்.

[முதல் நெம்பர் வரன்முறையில், நாம் ஹங்கேரிப்பண்டிதர் எழுதிய கடிதத்திலிருந்து மொழி பெயர்த்திருப்பதில், தமிழ்ப் பாஷை விஷயமாயும், அதில் வசன நடை விஷயமாயும் மேற்குறித்த பண்டிதர் எழுதியிருப்பதை விசேஷவுரையில்லாமல் பிரசுரித்ததினிமித்தம், அதை நாமும் ஒப்புக்கொண்டிருப்பதாகச் சில அபிமானிகள் நினைத்துக்கொண்டு, 'வித்யா விஹாரிணி' என்னும் பெயர் விஷயத்திலும், வடமொழி முதலிய மொழிகளிலிருந்து சமயோசிதமாய் நாம் உபயோகிக்கும் பதங்கள் முதலியவற்றின் விஷயத்திலும், வெகுவாய் ஆக்ஷேபித்து எழுதுகிறார்கள். அவற்றிற்குச் சாங்கமாகவும், சவிஸ்தாரமாகவும் பதிலெழுதுவதற்குக் கொஞ்சம் சாவதானித்தாக வேண்டியிருப்பதால், தற்காலம், மகாராஜா காலேஜ் சமஸ்கிருதப் பண்டிதரும், மலையாளத்தில் வித்துவானுமாகிய, மேற்குறித்த ஸ்ரீமான்-ராஜாராஜவர்மா அவர்கள், நமதபிப்பிராயத்தை யொட்டிப் பேசியதோர் உபந்நியாசத்திலிருந்து வேண்டியமட்டில் இங்கு மொழி பெயர்த்தெழுதுகிறோம். மேற்படியார் தமிழ் விஷயமாய் எழுதியதைச் சுத்தத் தமிழாகிய அன்பர் கவனித்தல் வேண்டும். ஹங்கேரி வித்துவானைப்போலவே இவரும் நலத்தை யெண்ணியே பேசியிருப்பது பிரத்தியக்ஷமென்று நம்புகிறோம். எடி].

தற்காலக் கல்வி முறையில் தேசிய பாஷைகளுக்குரிய உரிமைகள் யாவையென விசாரிக்கப் புகுந்து, அது சம்பந்தமாய் ஸ்ரீமான்-வர்மா அவர்கள் சொல்லியது,

மேனாட்டுக் கல்வி யித்தேசத்திற்கு வந்ததினால், தேசிய பாஷைகளுக்கு லாபமேதவிர நஷ்டமில்லை. இப்படித் தங்களை நாடிவந்த சௌகரியத்தை, அத்தேசிய பாஷைகளும் சிரத்தையுடன் உபசரித்து நற்பயனடைந்திருக்கின்றனவென்றே நாம் சொல்லலாம். அவ்வளவிற்கு நாம் இப்பாஷைகள் விஷயத்தில் பெருமைப்படுதலும் தகும். மொத்தத்தில் பேசுமிடத்து வாஸ்தவமிப்படியிருந்தபோதிலும், இப்பாஷைகளில் பரஸ்பர தாரதம்மியம் வெகுவாயிருப்பது பிரத்தியக்ஷம். மாராட்டியும், பங்காளியும், மற்றவைகளைவிட வெகு அதிகமாய்ப் பலனடைந்திருக்கின்றன. ஆதலால் அவ்விரண்டு பாஷைகளிலும் தற்கால முதவக்கூடிய கலைவர்க்கங்களில் வியாப்தியதிகம். அவற்றை யனுசரித்த கிரந்தங்களு மநேகம். ஆகவே யவைகள் இவ்விஷயத்தில் விசேஷித்துப் பெருமைப்படத்தக்க நியாயமிருக்கிறது.

தென்னிந்தியாவிலோ, தேசியபாஷைகள் இவ்வாறு மேனாட்டுக் கல்விரசத்தைத் தாராளமாயுறிஞ்சித் தமக்கும் புஷ்டியைத் தேடிக்கொள்ள இவ்வளவிற்கு ஆக்கிரகப்படவில்லை. இந்துஸ்தானத்திய பாஷைகளை யபேக்ஷித்து இவைகளுடைய கதி வெகுமந்தமென்றே சொல்ல வேண்டும். இப்படி வித்தியாசம் காணுவதற்கும், அதனாலிவைகளுக்கு மகிமை குன்றியிருப்பதற்கும் காரணங்கள் என் சிற்றறிவிற்கெட்டிய மட்டில் இவையெனக் காணுகின்றது. இந்துஸ்தானத்திய பாஷைகளெல்லாம் சம்ஸ்கிருத மாதாவின் பெண்களாம். தமிழ்முதலிய நான்குமோ, திராவிடமாதருஸ்தானத்திலிருந்து பிறந்தவைகள். இந்திய மகாமண்டலத் தேசிய பாஷைகளிலொவ்வொன்றும் காலக்கிரமத்தில் சம்ஸ்கிருதத்திற்குடன்பட்டுப் புதிதாகக் கருத்துகள் அமைய வேண்டியவிடத்தெல்லாம், அப்பாஷையில் அக்ஷயமாயுள்ள பகுதி, விகுதி முதலியவற்றினுதவியால் பதங்களைக்கூட்டி முன்னுக்கு வந்திருக்கின்றன.



இவ்விதிக்கு விலக்கேயில்லை. ஆனால் இவற்றுள் தமிழொன்றுமட்டும், சம்ஸ்கிருத பதங்களையுள்ளபடி யெடுக்கப்பிரியப்படாமலும், தனதுரிமைப் பதங்களைச் சாதிகுணம் கெடாமலிருக்கவும் பிரயத்தனப்பட்டு வந்திருக்கிறது. திராவிட நாட்டிலுள்ள மற்றைய மூன்றுமோ இவ்விஷயத்தில் போட்டிபோட்டுக்கொண்டு சம்ஸ்கிருத பதங்களையும், வழக்கையும் தாராளமாகப் பெற்றுவந்ததில், அவைகளுக்குச் சிறந்துள்ள லக்ஷணங்கள் இப்போதே வெகுவாய் மழுங்கிப் போயின. என்றாலுமிவைகளுக்கு முன்னுக்கு வருவதற்கு வேண்டிய சௌகரியம் இம்மூலமாய் ஏற்பட்டுவிட்டதாலினி யொருகுறைவுமில்லை. தமிழ்மட்டும் முரட்டுத்தனமாய்ச் சமஸ்கிருதத்தினுதவி இவ்வளவு சுலபத்தில் கிடைப்பதாயிருந்தும் வேண்டாமல், எதிர் நீச்சமிட்டுப் பின்றங்கி வந்திருக்கிறது.

மேனாட்டுக் கல்வியினுதவியால் தேசிய பாஷைகள் பிரபலப்படுவதற்குப் பம்பாய், பங்காளம் முதலிய தூரதேசங்கள் போகவேண்டுவதில்லை. நமது மத்தியில் செழிக்கும் மலையாளத்தைக் கவனித்தால் வெளியாகும். இருபத்தைந்து வருஷத்திற்குமுன் யூனிவர்ஸிட்டியார் இதற்கு ஒரு புதிய பதவியுண்டாக்கிய காலத்தில், இதற்கு முறைவாய்ந்த இலக்கணமுமில்லை, இலக்கியமுமில்லை. இப்பொழுதோ காவியமட்டுமே யன்றித் தத்துவவர்க்கங்களிலும் முதல்தரமான பத்தியக்கிரந்தங்களிருக்கின்றன. வசன நடையும் வெகு பிரபலமாகி வருகிறது. புஸ்தகங்கள் எவ்வளவு வேகமாய்ப் புறப்படுகின்றனவென்பதெனக்குத் தெரியும். ஆனால் இப்படி வெளியாவதெல்லாம் குணங்கூடிச் சிறந்துள்ளனவென்பதற்கில்லை. ஆயினும் வருங்காலத்திய நற்பயனை யிவைகள் குறிப்பிடுவனவாம். காலக்கிரமத்தில் தக்க யோக்கியதையுள்ளோர் காரியத்தை மேற்கொண்டு, சக்கையைப் பரிகரித்துச் சாரத்தைமட்டும் கிரகித்துப் பாஷைக்கு யோக்கியதை யுண்டாக்குவார்களென்பதிற் தடையில்லை. தற்காலம் புஸ்தக கருத்தர்களுக்கு நான் சொல்லத் துணிந்தது இது. காவிய ரூபமாக இனிக் கிரந்தங்கள் எழுதுவது வீண். நமக்காக வேண்டியதெல்லாம் இக்காலத்தில் வயிற்று வளர்ப்பதைப் பற்றியாதலால், இனியெல்லோரும் ருசியுடன் படித்து எளிதில் சங்கதியறியக்கூடிய வசனநடையைப் பிரபலப்படுத்துவதே நமது முக்கிய கடனாகும். அதுதான் நமக்கு இப்போது கைகூடியாகவேண்டியகாரியம். அதன் மூலமாய்க் கல்விபரவிப் பின்னிட்டு ஜனங்களுக்கும் வயிற்றுப்பாடு இவ்வளவு பெரியதாகாமல், கொஞ்சம் ஒழிவுகிடைக்கும்போது, குதூகலமுள்ளவர் காவிய விஷயமாய் உழைத்துப் பெருமையடையட்டும். அதுவரை நாம் வசனநடையைப் பிரபலப்படுத்த முயல்வோமாக.

பி. ஏ. முதலிய உத்தம பரீக்ஷைக்குப் போகும் வித்தியார்த்திகள் இங்கிலீஷ் காவியாதிகளுடன், தேசிய காவியங்களையும், சம்ஸ்கிருதக் காவியங்களையும் பயின்று நற்பயனடைவதற்கு யூனிவர்ஸிட்டியார் செய்திருக்கும் சௌகரியங்களை முற்றிலு முபயோகிக்காமலே வந்திருக்கிறார்கள். இம்மாதிரி அவலக்ஷணங்கள் அதிகரிப்பதற்குப் பண்டிதர்களும் தம்மாலியன்ற வுபகாரஞ் செய்து வருகிறார்கள். பொன்பொலியுங் காலேஜுகள் இரண்டொன்று தவிர, மற்றைய சாமான்னியக் காலேஜுகளில், பண்டிதர்களின்றும் பழைய முறையை யனுசரித்தே பாடஞ் சொல்லி வருகிறார்கள். அம்முறைக்கேற்ற பதிவை விட்டு எள்ளளவாகிலும் இப்படியப்படித்திரும்புவதும், விலகுவதும் மகா பாபமென்று இவர்களுக்குச் சித்தாந்தம். காலேஜுகளில் தேசிய பாஷைகளுக்கு மகிமை குன்றி, வித்தியார்த்திகள் அவைகளைத் திரஸ்கரித்து வருவதற்கு, இவை தாம் முக்கிய காரணங்களெனக் காணுகிறது.

பழைய ஏற்பாட்டில் தோஷங்கள் வலுத்

திருந்ததை யாரு மொப்புக்கொண்டபோதிலும், அவற்றைப் பரிகரிக்கவேண்டிச் சமீபகாலத்தில் ஸெனட்டாரும் சர்க்காருமாகச் சேர்ந்து செய்திருப்பதை விசாரிக்குமிடத்துப் பெருமாளென்ற பெயரை மாற்றப்போய் பெரிய பெருமாளான கதைபோலிருக்கிறது!

இந்த அனர்த்தத்திற்கு மூலகாரணம் விசாரிக்கையில், அது தேசீயபாஷைக் கபிமானிகளாகிய நல்லோர்களுக்குள் ஏதோ கக்ஷி யேற்பட்டதினிமித்தமேயென நமக்குக் காணுகிறது. மேலே நாம் கூறியபடி இத்தேசீயபாஷைகளில் தமிழ் மட்டும் தனித்ததோர் போக்கையனுசரித்து, விசித்திரமானதோர் பதவியையடைந்திருக்கிறது. நமது நாட்டு மகாஜனங்கள் தமிழைச் சாமான்னியமாய்த் தென்னிந்தியதேசீய பாஷைகளிலொன்றென்றே, அல்லது அவற்றுள் முக்கியமானதென்றே எண்ணிவருகிறார்கள். அதற்கு வார்சுதாராகிய தமிழரோ, அதை வெகு தூர முயர்த்திப்பேசிவருகிறார்கள். அவருக்குத் தமிழ் திராவிட பாஷைகளுக்கெல்லாம் திலகமென்பது முதற்பிரமாணம். இதற்கு நியாயமில்லையென்று நாம் சொல்ல வரவில்லை. ஆனாலிதனால் தற்காலத்திலுண்டாகிய பலன் மட்டும் விபரீதகரமாகி யிருக்கிறது. ஏனெனில் சமீபத்தில் யூனிவர்ஸிட்டிப் பரீக்ஷைகள் விமர்சனமாகி வந்ததில், இவ்விருக்கக்ஷியாரும் அபிப்பிராய பேதப்பட்டு வாதாடினார்கள். தமிழ்க்கக்ஷியார் பதிவுபோலச் சம்ஸ்கிருத விஷயமாக ஸெனட்டார் செய்திருந்த ஏற்பாடுகளை யாக்ஷேபித்துச் "செல்லாப்பாஷைகளை யுயிர்ப்பிக்கப் பிரயத்தனப்படுவதைவிடச் செல்லும் பாஷைகளைப் புஷ்டிகரிக்க முயல்வது நலம்," என்றார்கள். ஸெனட்டார் இதை யொப்பாமற் போகவே யிவர்கள் கவர்ன்மெண்டாருக்கு மனுசெய்து முறையிட, அவர்களும் இவர் முறையைச் சரியென அங்கீகரித்து, இவருக்கு வயிற்றெரிச்சல்தீரப் பரிகாரஞ்செய்துவிட்டார்கள். அதாவது, வசன நடையைப் பொறுத்த ஏற்பாடாம். இவ்வாறாக ஆட்டுக்கடாச் சண்டையில் நரிசெத்த கதை மறுபடியுண்டாகித் தேசீய பாஷைகளின் பிழைப்பு அம்பலமாகிவிட்டது.

ஆனால் ஸெனட்டார் செய்திருப்பது முழுமோசமாக நமக்குக் காணவில்லை. புதிய ஏற்பாட்டில் தேசீய பாஷைகளுக்குப் பதவி யுயரவேண்டியது தான் சகஜம். ஏனெனில் இவைகளுக்கிதுவரை யிருந்தபடி "ஒத்துப்பாடும்" தசையொழிந்து, "சுவயம்வரக்கலைகளில்" ஒன்றாகி, மேம்பட்ட தசை வந்திருப்பதால், இனி மாணுக்கருக் கிஷ்டமிருந்தால், இவைவேண்டிய மட்டில் பரிமளிக்கலாம். ஆனால் அந்தப் பலன் கிட்டுவதற்கு ஒரேயொரிடறு கட்டையிருக்கிறது. புதுச் சம்பிரதாயத்தில், தமிழரை வெருட்டி யோட்டுவதற்குத் தொன்றுதொட்டேற்பட்ட பூச்சாண்டியொன்று பிரபலித்துக் காணுகிறது—அதாவது, சம்ஸ்கிருதமும், அதுடன் சேர்ந்த விரண்டொரு பாஷைகளுமாம். இவற்றில் ஏதேனுமொன்றை யெடுத்தே தீரவேண்டி யிருப்பதில் தமிழ் வித்தியார்த்திகள் நடுங்குகிறார்கள். ஆனால் தெலுங்கு முதலிய மற்றைய பாஷைகளுக்குரியோர் இதனாலுபத்திரவப்படவேண்டியதில்லை. மெட்ரிகுலேஷனுக்குச் சம்ஸ்கிருதத்தை யிரண்டாவதாக வெடுத்த யாரும், மேற்பரீக்ஷைகளுக்குத் தேசீய பாஷைகளைத் தாராளமாயெடுக்கலாம். அதனால் வித்தியார்த்தியின் சுவ பாஷைகளுக்கு வெகு அநுகூலம். வசன நடையும் ராஜாங்கமாக நடக்கலாம்.

ஆனால் தற்காலம் மெட்ரிகுலேஷன் வித்தியார்த்திகளுடைய நடவடிக்கையைப் பார்க்குமிடத்து நாம் வீண் மனோராஜ்யம் செய்வதாகக் காணுவதால், ஸெனட்டாரும், மற்றுள்ள அபிமானிகளும், தேசீய பாஷைகளுக்கு லோபம் வாராமலிருப்பதற்கு வேண்டிய ஜாக்கிரதை செய்து சமயோசிதமாய் நடத்துவாராக.

(நமது வேண்டுகோளின்படி யனுப்பியதோர் பிரதியிலிருந்து.)



## 2. ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திர ஆராய்ச்சி

ஸ்ரீமான்- வி. எஸ். செங்கல்வராயபிள்ளை எம். ஏ.

கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தையரு ளைடி யிருக்குநா ளெந்நாளோ?
தாயுமானவர்.

*ஸ்வாமிகளின் பிறப் பிடமும், காலமும்.*

செந்தமிழ்ப் பரமாசிரியராகிய ஆறுமுகக் கடவுளே பரம்பொருளெனக் கருதி அவரை அன்பொடு வழிபட்டு, சந்தப் பாக்கள் எண்ணில பாடி, அழியா இன்பம் பெற்ற மஹாநுபாவராகிய ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் நினைக்க முத்தியளிக்குந் திவ்ய க்ஷேத்திரமாகிய திருவண்ணாமலையில் திருவவதாரஞ் செய்தருளினார். இவர் *பிரபுடதேவராஜன் காலத்திருந்தவர். அவ்வரசன் இங்கிலீஷ் வருஷம் 1450-ல் ஆண்டதாகச் சிலா சாசனங்களால் ஏற்படுவதால் இவர் சற்றேறக் குறைய 460-வருஷங்களுக்கு முன் இருந்திருத்தல் வேண்டும்.

*ஆறுமுகக்கடவுள் இவரை ஆட் கொண்டு திருப்புகழ் பாடும்படி அநுக்கிரகித்தது.*

இளமைப் பருவத்திற் சிற்றின்பத்தில் உழன்று, அதனால் வறுமை, பிணி முதலிய அடைந்து மிகத்துன்புறும்போது, முற்பிறப்பிற் செய்த தபோபலத்தால் ஷண்முகக் கடவுள் இவர் மாட்டுத் தண்ணருள் சுரந்து குருவடிவமாய் எதிர் தோன்றித் தமது அருமைத்திருக்கரத்தால் திருநீறிட்டு, இளநகையோடும் குளிர்ந்த அருட்கண்ணால் நோக்கித், தாமரையன்ன திருவடிகளை அவர் தம் சிரசின்மேற் சூட்டி, ஜெபமாலை யொன்றுந் தந்து, பிரபஞ்ச விஷயங்களாற் சஞ்சல முறாவண்ணம் மனம், வாக்கு இவைகளுக்கு எட்டாததாய், மெய்ஞ்ஞானியர்களாலும் உணர்தற்கரிதான 'சும்மா இரு; சொல்லற' என்னும் மௌனோபதேசத்தையும் போதித்தருளித், திருப்புகழ் எனப்பெயரிய சந்தப் பாவைப் பாடுந் திறத்தையும் தந்தருளினார். மேற்கூறப்பட்டன எல்லாம் அவர் தம் திருப்புகழ்ப் பாடல்களினின்றே உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாய்த் தெரிகின்றன.

'வறுமை யாகிய தீயின்மேற் கிடந்து
நெளியு நீள்புழு வாயினேற் கிரங்கி யருள்வாயே.
[வறுமை எனப்பட்ட நெருப்பில் விழுந்து தத்தளிக்கும் புழுவாகிய என்மீது இரங்கி அருள்புரிய வேண்டும்.]

'இரங்கு கலியனை பரிவுறு சடலனை
சவுந்த ரிகமுக சரவண பதமொடு மயிலேறித்-
தழைந்த சிவசுடர் தனையென மனதினி
லழுந்த உரைசெய வருமுக நகையொளி
தழைந்த நயனமு மிருமலர் சரணமு மறவேனே'*

[அசேதனனாகிய என்மீது அருளும் அன்பும் வைத்து, காணும்போதே சிவஞானத்தைத் தரவல்ல திருவருட் பிரபாவத்தோடும் மயில்மீது வந்து கருணைபுரிந்த இறைவனே! உனது திருமுக விலாசத்தையும் திருவடித் தாமரையையும் யான் மறவேன்.]

'இபமுகவ னுக்குகந்த இளையவ மருக்க டம்ப
எனதுதலை யிற்ப தங்கள் அருள்வோனே.' (106)
[யானை முகத்தை உடைய கணேசருக்குப் பின்னுதித்த கந்தசுவாமியே! வாசனை வீசுங் கடப்ப மாலையை அணிந்தவனே! எனது தலையில் திருவடித் தாமரையைச் சூட்டி யருள் புரிந்தவனே!]

'ஜெபமாலை தந்தசற் குருநாதா-
திருவாவினன்குடிப் பெருமானே.' (99)
[ஜெபமாலையைக் கொடுத்த குருநாதமூர்த்தியே! திருவாவினன்குடியில் வீற்றிருக்கும் பெருமானே!]

'பகடி யிடுகினு மமளியில் அவர்தரு மதுராக-
பரவை படியினும் வசமழி யினுமுத
லருணை நகர்மிசை கருணையொ டருளிய
புரம ஒருவச னமுமிரு சரணமு மறவேனே.' ()

* இப்பிரபுட தேவராஜன் கி. பி. 1456ஹு முதல் 1477ஹு வரையில் ஆண்டதாக டாக்டர் பர்னல், சூயல் முதலிய ஆங்கில வித்துவான்கள் எழுதிய நூல்களினின்று ஏற்படுகின்றது. இவன் விஜயநகரத்து ராஜ வம்சத்தைச் சார்ந்தவன்.

* திருப்புகழ் முதற்பாகம் இரண்டாம் பதிப்பின்படி. இவ்வெண்கள் குறிப்பிக்கப்பட்டன.

'அருணை நகர்மிசை கருணையொ டருளிய
மவுன வசனமு மிருபெரு சரணமு மறவேனே.'
'அருணையிற்சித் தித்தெ னக்குத் தெளிவருள்
பெருமாளே.' ()

[யான் பெண்களது கலவி யின்பத்தில் மதிமயங்கிக் கிடக்கும் போதும், நீ திருவண்ணாமலையில் எனக்கு முதல் முதல் செய்த மௌனோபதேசத்தையும், உன் திருவடித் தாமரையையும் என்றும்மறவேன்.]

'சலச மேவிய பாதநி னைத்துமு
னருணை நாடதி லோதுதி ருப்புகழ்
தணிய வோகையி லோத எனக்கருள் புரிவாயே.'

[உனது தாமரை போன்ற பாதங்களைத் துதித்து நான் முன் திருவண்ணாமலையில் ஓதின திருப்புகழை நித்தம் அன்புடன் ஓதுமாறு எனக்கு அருள் புரிதல் வேண்டும்.]

'ஆசா பயோதி யைக்க டக்க விட்டதும்
வாசா மகோச ரத்தி ருத்து வித்ததும்
ஆபா தனேன்மி கப்ர சித்தி பெற்றினி துலகேழும்

யாஞைக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற ஓதி யெத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும் இடராழி-

ஏறாத மாம லத்ர யக்கு ணத்ரய
நானா விகார புற்பு தப்பி றப்பற
ஏதேம மாயெ னக்க நுக்ர கித்தது மறவேனே.

[மூவாசை யெனப்பட்ட முந்நீரைக் (கடலை) கடக்க விட்டதும், பேரின்ப நிலையைக் காட்டுவித்ததும், அடியனாகிய யான் மிகப் பிரசித்தி பெற்று உலகெங்கும் அற்புதம் என வியக்கத்தக்க தேன்போற் சுவைக்கும் திருப்புகழை ஓத ஓதுவித்ததும், மும்மலத்தையும் முக்குணத்தையும், நிலையிலாப் பிறப்பையும் நீக்குவித்தது மான உன் அநுக்கிரகத்தை யான் மறவேன்.]

'சரணக்கழல் காட்டியெ னாணவ
மலமற்றிட வாட்டிய ஆறிரு
சயிலக்குல மீட்டிய தோளொடு முகமாறும்.—
* * * *
கதிபெற்றிட நோக்கிய பார்வையு மறவேனே. ()

[நின்பாத தாமரையைக் காட்டி எனது ஆணவத்தையும், குற்றத்தையும் வாட்டி ஓட்டின உனது பன்னிரு தடந்தோளையும், ஆறுதிருமுகத்தையும், பெருங் கருணைத் திருக்கண்களையும் மறவேன்.]

'தலைகா ளிற்பத மேத்தி யன்புற
வுபதே சப்பொரு ளூட்டி மந்திர
தவஞா னக்கட லாட்டி யென்றனை *
* * * *
கதிர்தோகைப்பரி மேற்கொ ளுஞ்செயல்
மறவேனே.' (735)

[உனது திருவடியை என்தலைமீது அன்று சூட்டி, அன்போடும் தவஞானமாகிய கடலில் என்னை ஆட்டி, மயில்மீது தோன்றிய பெருஞ் செயலை மறவேன்.]

இவ்வாறு மெய்ஞ்ஞானத்தைப் பெற்ற அருணகிரி நாத ஸ்வாமிகள் பின்னர் திருவண்ணாமலையினின்று நீங்கித் தெற்கே உள்ள சிவஸ்தலங்கள் தோறும் குகவள்ளலாரது திருப்புகழைப் பாடிக்கொண்டு போந்து திரிசிராப்

**வயலூரில் அநுக்கிரகம் பெற்ற விஷயம்.**

பள்ளிக்கடுத்த வயலூர் என்னும் க்ஷேத்திரத்தை அடைந்தனர். ஸ்ரீ மணிவாசகப் பெருமானுக்குக் குருமூர்த்தியாய்த் திருப்பெருந்துறையில் தோன்றிய சிவபெருமான் பின்னர்த் திருக்கழுக்குன்றத்தில் அவர்முன் எங்ஙனம் மறுமுறை தோன்றி யருளினரோ, அங்ஙனமே திருவண்ணாமலையில் அருணகிரிநாத ஸவாமிகளுக்கு அநுக்கிரகித்த ஆறுமுகக்கடவுள் பின்னர்த் திருவயலியிலும் அவரைத் தடுத்தாட் கொண்டு, தமது திருவடியை மறுமுறை சூட்டி, 'அன்ப! நமது ஊர்தியாகிய மயிலையும், மாலையாகிய நீபத்தையும், படையாகிய வேலையும், கொடியாகிய கோழியையும், பேரின்ப நிலையாகிய சிற்றடியையும், பன்னிரு தோளையும், * செய்ப்பதியையும் சிறப்பித்து நீ நித்தம் திருப்புகழ் விருப்போடு உரைத்தி' எனக் கட்டளை யிட்டருளினர். இவ்விஷயங்களும் அவர் திருப்புகழைக் கொண்டே அறியப்படுவனவாம் :—

'திகழ்ப்படுசெய்ப் பதிக்குளெனைத்
தடுத்தடிமைப் படுத்தஅருட்
டிருப்பழநிக் கிரிக்குமரப் பெருமாளே.' (124

[வயலூரில் என்னைத் தடுத்தாட்கொண்ட பழநிப் பெருமானே.]

* செய்ப்பதி = வயலூர். செய் = வயல், பதி = ஊர்.



'வயலி நகரியி லருள்பெற மயில்மிசை
யுதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலு
மறவேனே.' (850)

[வயலூரில் யான் அருள்பெறும் வண்ணம், மயில் மீதேறிவந்து உதவின உனது பாதாம்புயத்தை கனவிலும் மறவேன், நனவிலும் மறவேன்.]

'பாதபங்கய முற்றிட வுட்கொண்
டோதுகின்ற திருப்புகழ் நித்தம்
பாடுமன்பது செய்ப்பதி யிற்றந்
தவனீயே.' (611)

[உனது பாத தாமரையை மனதிற்பதித்து, யான் ஓதிவரும் திருப்புகழைத் தினந்தோறும் உன்மீது பாடும் அன்பை வயலூரில் அளித்த பெருமானும் நீயே.]

'பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்—
பக்குவமலர்த்தொடையும் அக்குவடுபட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்—
திக்கதுமதிக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றிய பனிருதோளும்—
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே.'
(விநாயகர் துதி-3)

[உனது மயில் வாகனத்தையும், கடப்ப மாலையையும், கிரௌஞ்ச கிரியைப் பிளந்தெறிந்த கூரிய வேலாயுதத்தையும், சேவலங்கொடியையும், காத்தளிக்கும் சிற்றடிகளையும், பன்னிரு தோளையும், வயலூரையும் சிறப்பித்து விருப்பொடு திருப்புகழை ஓதுமாறு எனக்கு அருள்புரிந்த நின்கருணையை மறவேன்.]

அருணகிரிநாத ஸ்வாமிகளுக்கு வயலூரின் மீதிருந்த காதலுக்கு ஓரளவே கிடையாது. முருகக்கடவுளின் கட்டளைக் கிணங்க வேறு தலங்களின் திருப்புகழ்ப் பாடல்களிலும் 'வயலூரா' என மறவாது துதிப்பார். இத்தலம் திரிசிராப்பள்ளிக்குத் தென்மேற்கு 6-மைல் தூரத்திலிருக்கின்றது. காவிரிநதியின் நீர்வளஞ் செறிந்ததாய், சோலைகளாற் சூழப்பெற்றதாய், என்றுங் குளிர்ந்ததாய், அதிமோகரமாய் விளங்குவது இத்தலம் என்பது இன்றும் பிரத்தியக்ஷமாய்க் காணலாகும். 'மேலைவயலூர்' என இப்போது வழங்கும் பெயர் ஸ்வாமிகள் காலத்தும் வழங்கிவந்தது. அக்நீஸ்வரர் என்னுந் திருநாமத்தோடு சிவபெருமானும் இத்தலத்தில் வீற்றிருக்கின்றார். தமது திருப்புகழில் 'த்ரிசிர கிரியயல் வயலியி லினிதுறை பெருமாளே' என்றும், 'பொழில் செறி வயலூர்' என்றும், 'சோலைபுடை சுற்று வயலூர்' என்றும், 'தட்ப முளதட வயலூர்' என்றும், 'காவிரி வண்டல் மேவும் அதிமோகர வயலூர்' என்றும், 'மேலைவயலை, மேலைவயலி' என்றும் 'மைக்காவில் பரிமள நாவீசு வயலி யக்கீசர் குமர' என்றும் சிறப்பித்திருக்கின்றார்.

**'விராலிமலைக்கு வா' எனப் பணித்தது.**

திருமறைக்காட்டிற் றங்கியிருந்த திருநாவுக்கரசு சுவாமிகளைத் 'திருவாய்மூர் எம்மூர்; ஆண்டுவருதி' எனப் பணித்துச் சிவபெருமான் அவரை அழைத்துச் சென்றதுபோலக் கதிர்வேலண்ணலும் வயலூரிற் றங்கியிருந்த அருணகிரிநாத ஸ்வாமிகளுடைய முன்னர் ஓர் அற்புதகோலத்தோடு தோன்றி, 'நாம் உறைதரு பருப்பதம் திருவிராலிமலை, ஆண்டு வருதி' எனக்கட்டளையிட்டு மறைந்தருளினர். அறுமுகத் தேவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு *விராலிமலைக்குச் சென்று அவரைத் தரிசனஞ் செய்து, 'யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான், யாவர்க்குங் கீழாம் அடியேனை-யாவரும், பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க் கென் னெம்பெருமான், மற்றறியேன் செய்யும் வகை' என வாதவூர்ப் பெருமான் கசிந்துருகித் துதித்தாற்போல, அருணகிரியாரும் "எஃகுடை அண்ணலே! செய்ப்பதித் தேவே! சண்முகத் தெந்தையே! திருவண்ணாமலையில் தடுத்தாட் கொண்டதுமன்றி வயலூரிலும்

* இத்தலம் திரிசிராப்பள்ளிக்கடுத்த தென்குளத்தூர் ரெயில் ஸ்டேஷனுக்கு 7-மைல் தூரத்திலுள்ளது.

உமது அருமைத் திருமேனியைக் காட்டுவித்து விராலிமலைக் கழைத்தீர்! என்னே உமது பேரருட்பிரபாவம்!' எனக் கசிந்துருகித் துதித்து ஆண்டுச் சிலநாள் வதிந்திருந்து, பின்னர்ப் பழநிமலைக்குச் சென்றனர். இதனைத்

'தாமரையின் மட்டு வாசமலரொத்த
  தாளிணை நினைப்பி லடியேனைத்-
தாதவிழ் கடுக்கை நாகமகிழ் கற்ப
  தாருவென மெத்திய 'விராலி
மாமலை யினிற்பம் நீகருதி யுற்று
  வா' என அழைத்தென் மனதாசை-
மாசினைய றுத்து ஞானமு தளித்த
  வாரமினி நித்த மறவேனே.

(வயலூர்த் திருப்புகழ்) (834)

[தாமரை மலர்போன்ற நினது திருவடிகளைச் சிறிதும் சிந்தனைசெய்யாத என்னையும் ஒரு பொருளாக மதித்து என் முன் தோன்றி, கொன்றை, நாகம், மகிழும் ஆதிய விருக்ஷங்கள் விளங்கும் விராலிமலையில் யாம் வீற்றிருக்கின்றோம்; அத்தலத்துக்கு நீ வா என்று என்னை அழைத்து, மூவாசையையும் அறுத்து ஞானமாகிய அமுதத்தை ஊட்டுவித்த அன்பை யான் என்றும் மறவேன்.]

'சத்திவிடு கந்த! திரு
வயலியில் அடிமைய குடிமை யினலற
மயலொடு மலமற அரிய பெரியதி
ருப்புகழ்வி ளம்புவென்மு
னற்புதமெ ழுந்தருள்கு கவிராலி-
மலையுறை குரவ! (319)

[வேலாயுதத்தை ஏந்திய கந்தசுவாமியே! வயலூரில் எளியனுகிய அடியனது துக்கமெல்லாம் நீங்கவும், மயக்கமும், மலமும் அறுபடவும், திருப்புகழ் பாடும் என்முன் அற்புத கோலத்தோடு தோன்றிய விராலிமலைப் பெருமானே!]

எனத் துதித்துள்ளமையா னறிக

**பழநிக்குச் சென்றதும், கலிசைச் சேவகனோடு நட்புற்றதும்.**

ஸ்வாமிகள் பழநிமலையிற் பன்னாள் வதிந்திருத்தல் வேண்டுமென்பது தற்காலம் திருப்புகழ்பெற்றுள்ள தலங்களுள் பழநித்தலமே பதிகத்தொகையில் முதலாதலாற் பெறப்படும். இந்நாள்போலவே அந்நாளிலும் பழநிமலைப் படிகளிலெல்லாம் குரங்குகள் குதித்து விளையாடின என்பது "பரிமளப் பாகலிற் கனிகளைப் பீறிநற் படியினிட் டேகுரக் கினமாடும் பழநி" எனவரும் அவர் திருவாக்கால் அறியக்கிடக்கின்றது.

இத்தலத்தில் இருக்கும்போது ஸ்வாமிகளுக்கு ஓர் அரிய நண்பர் கிடைத்தனர். அவர் இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. அவர் ஊர் கலிசை. அவரைக் கலிசைச்சேவகனென்றும், காவேரி சேவகனென்றும் நமது பாவலர் கூறுவர். இக் கலிசைச் சேவகனர் ஸ்வாமிகளாலேயே பாராட்டப் பட்டிருத்தலின் முருகக்கடவுளிடத்தில் இவருக்கிருந்த பத்தியை அளவிடல் அரிதரிது. செவ்வேளைப் பழநியிலிருந்த திருக்கோலத்தோடுந் தரிசிக்க வேண்டி, கலிசைச் சேவகனர் 'வீரை,' என்னுந் தலத்திற் கோயிலொன்று கட்டுவித்துப் பழநிநாதர் போற் றிருவுருவொன்று அமைத்து அம்மூர்த்தியை வழிபடுவாராயினர்.

சிறுத்தொண்ட நாயனார் பொருட்டு அவர் பெயரையும் அவர் திருப்பணியையும்

'பொடிதருகருஞ் சிறுத்தொண்டர்க்
  கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான்
  கணபதீச் சரத்தானே.'

[சிறுத்தொண்ட நாயனர் பொருட்டுத் திருச்செங்காட்டங் குடி என்னுந் தலத்திற் குடி கொண்டமர்ந்த பெருமானர்.]

'செங்காட்டங் குடிமேய
  சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி
  விளையாடும் பெருமானே.'

[செங்காட்டங்குடி என்னுந் தலத்து வாசஞ்செய்யும் சிறுத்தொண்டரது திருப்பணியை விரும்பி, சுடுகாட்டின் அனலை ஏந்தி விளையாடா நிற்கும் எமது பெருமான்.]

என ஞானசம்பந்த சுவாமிகள் நவின்றருளியவாறு நமது அருணகிரியாரும் அவ்வீரையில் 



வீற்றிருக்கும் பழநிநாதரையும் கலிசைச் சேவகனரது அன்பையும்,

'வீறு கலிசைவரு சேவ கனதிதய
மேவு முதல்வ வயல் வாவி புடைமருவு
வீரை வருபழநி ஞான மலையில்வளர் பெருமாளே.

'வீறு கலிசைவரு சேவ கனதிதய
  மேவு மொருபெருமை யுடையோனே-
வீரை யுறைகுமர தீர தரபழநி
  வேல இமையவர்கள் பெருமாளே'. (109)

'வேலைவிடுகந்த காவிரிவிளங்கு
கார்கலிசைவந்த சேவகன்வணங்க
வீரைநகர் வந்து வாழ்பழநி யண்டர்பெருமாளே.

'மேகநிக ரானகொடை மானுய காதிபதி
வீரிகலி மாருதக ரோபாரி மாமதன
வேள்கலிசை வாழவரு காவேரி சேவகன
  துளமேவும்.—

வீர! அதி சூரர்கிளை வேர்மாள வேபொருத
தீர! கும ராகுவளை சேரோடை சூழ்கழனி [ளே.
வீரைநகர் வாழ்பழநி வேலாயு தாவமரர் பெருமா

'வீறு காவிரியுட் கொண்ட சேகர
னுன சேவகனற் சிந்தை மேவிய
வீரைவாழ் பழநித் துங்க வானவர் பெருமாளே.

'வீரா,புரிவரு கோவே பழநியுள்
  வேலா இமையவர் பெருமாளே. (113)

[மேகம் போன்ற கொடையையும், மதனவேள் போன்ற அழகையுங் கொண்டவனும், பல வளங்களும் பொருந்திய வீரை என்னும் ஸ்தலவாசியுமான கலிசைச் சேவகன்-காவேரி சேவகன் எனப்பட்ட மெய்யன்பனது சிந்தையில் வீற்றிருக்கும் பழநியப்பனே! தேவர் பெருமானே!]

என்னுந் துதிவகையான் மிகப் பாராட்டியுள்ளனர்.

'வெல்யானைக்!

காவேரி ராசன் கனகமணி மாளிகையின்
பாவே ரியல்பனைத்தும் பார்த்ததன்பின்'-எனவருந் திருத்தணிகை யுலாக்கண்ணிகளிற் சொல்லப்பட்டவர் இந்தக் காவேரி சேவகனர் தாமோ என்னும் ஐயமும் நிகழ்கின்றது.

**ஏனையதலங்களைத் தரிசித்தது**

அப்பால் நமதாசிரியர் பழநியினின்றும் புறப்பட்டுக் கீழ்த் திசையிலுள்ள கொடுங்குன்றம் முதலிய தலங்களையும், தென்றிசையிலுள்ள திருச்செந்தூர் முதலிய தலங்களையும், ஈழநாட்டுத் தலங்களையுந் தரிசனஞ்செய்து துதித்து மறுபடியும் வடதிசை நோக்கித் திரும்பிப், பலதளிகளையும் பாடிப் பரவி வடக்கே காஞ்சீபுரம்,திருத்தணிகை,வள்ளிமலை,காளத்தி, ஸ்ரீசைலம், காசி முதலிய தலங்களுக்குந் திருப்புகழ் பாடித் திருவண்ணு மலைக்கு வந்து சேர்ந்தனர்.

**விசேஷ தரிசனம் பெற்ற இடங்கள்.**

முருகக் கடவுள் அருணகிரியார்க்குப் பற்பல அற்புத திருக்கோல தரிசனம் பற்பல தலங்களிற் காட்டியருளினர். வயலூரிற் றோன்றி விராலிமலைக்கு வா என அழைத்தவிஷயம் முன்னரே கூறினேம். சுந்தரமூர்த்தி நாயனருக்குத் திருப்பனையூரில் திருக்கூத்தோடு சிவபிரான் தரிசனந் தந்தவாறு, சிவகுமாரரும் அருணகிரி நாதருக்குக் கொடுங்குன்றம்,* திருத்தணிகை,திருச்செந்தூர் என்னும் ஸதலங்களில் தமது நிர்த்த தரிசனத்தையும், திரு ஏரகத்தில் தமது பாத தரிசனத்தையும் தந்தருளினர். மேற்கோள்:—

"மட்டற்ற இந்திரிய சட்டக் குரம்பையழி
  பொழுதினிலும் அருள்முருக
சுத்தக் கொடுங்கிரியி னிர்த்தச் சரண்களைம
  றந்திடேனே" (371)

[இக் காயமழியும் சமயத்தும் திருவருள் செய்யும் முருகனே! கொடுங்குன்றம் என்னுந் தலத்திற் காட்டிய உனது நடனஞ் செய்யும் பாதங்களை மறவேன்.]

அமண ருடற்கெட வசியி லழுத்திவி
ணமரர் கொடுத்திடு மரிவை குறத்தியொ
டழகு திருத்தணி மலையில் நடித்தருள்
  பெருமாளே. (261)

[திருஞானசம்பந்தமூர்த்தி என்னுந் திருநாமத்தோடு தோன்றிச், சமணரைக் கழுவேற்றிய சாமியே! வள்ளி தெய்வயானையொடு திருத்தணிகை மலையில் நடித்தருளும் பெருமானே!].

* கொடுங்குன்றம் என்பது பிரான்மலை. மதுரை ஜில்லாவில் உள்ளது. தேவாரம் பெற்ற ஸ்தலம்.

“ சதிமுழவு பலவுமிரு பக்கத் திசைப்பமுது
சமையபயி ரவியிதய முட்கிப் ப்ரமிக்கவுயர்
தணிகைமலை தனில்மயிலில் நிர்த்தத்தில் நிற்கவல
பெருமாளே.”(616)

[மேளதாளங்கள் இசைப்ப, பயிரவியும் உள்ளம் ப்ரமிக்க, தணிகைமலையில் மயில்மீது நிர்த்தம் செய்யும் நிமலனே !]

“ செந்திலிலுமென்றன்முன் கொஞ்சிநட னங்கொ
ளுங் கந்தவேளே. (57)

[திருச்செந்தூரில் கொஞ்சிக்கொஞ்சி என்முன் நடனம்செய்த நாதனே !]

“தகையா தெனக்கு னடிகாண வைத்த
தனியேரகத்தில் முருகோனே. (183)

[திருவேரகமெனப்பட்ட சுவாமிமலையில் பாத தரிசனம் தந்த பரமனே !]

அதாஅன்றிச் சிவபெருமான் சிதம்பர க்ஷேத்திரத்தில் நமதன்பர்க்குத் திரு நடன தரிசனங் காட்டியவாறு, முருகபிரானும் வியாக்ரபாதர், பதஞ்சலி ஆகிய இவர்களும் பிரமிக்கும்படி காளி கூட்டம், அலகைகுழாம் முதலியவை தம்மைச்சூழ நிருத்த தரிசனம் காட்டியருளினர்.

“ அகுகுகு குகுவென ஆளி வாய்ப்பல
அலகைக ளடைவுட னொடு மாட்டமும்
அரனவ னுடனெழு காளி கூட்டமு மகலாதே-
அரிதுயில் சயனவி யாள மூர்த்தனு
மணிதிகழ் மிகுபுலி யூர்வி யாக்ரனும்
அரிதென முறைமுறை ஆடல்காட்டிய
பெருமாளே”. (599)

[தந்தையாகிய நடராஜப் பெருமானைச் சூழ்ந்து நிற்கும் பேய்க்கூட்டமும், காளிகூட்டமும் தன்னையும் சூழ்ந்துநிற்கவும், பதஞ்சலி வியாக்ரபாதர் ஆகிய இருவரும் அரிது அரிது என்று கொண்டாடவும் ஆடல்காட்டிய ஆறுமுக வள்ளலே !].

குகப்பெருமானார் பேரருள் புரிந்ததனையை எண்ணி மகிழ்தல்.

ஷண்முகக் கடவுள் பேரருளோடும் தன்னைத் தடுத்தாட் கொண்டதை நினைத்தும், உயரிய சந்தப்பாக்களைப்பாடுந் திறத்தை உவந்தருளினதை நினைத்தும், அடங்காமகிழ்ச்சிகொண்டு, “ சருதித் தமிழ்க்கவிப் பெருமாளே ! மடவார் பால் எனக்கிருந்த இச்சையை யகற்றி நாற்றிசையும் அற்புதம், அற்புதம் என வியக்கத்தக்க சந்தப் பாக்களை அடியேன் உம்மீது ஆசு கவியாகப் பாடுமாறும், அவைகளை ஏனோரும் ஓதி மகிழுமாறும் நீர் பேரருள் புரிந்ததை யான் என்றும் மறவேன், மறவேன் எனக் குதூகலத்துடன் பாடி யாடி மகிழ்வார்.

“ மடவார்பால்
ஏகாப்பழி பூணு மருளற
நீதோற்றி முனூரு மடிமையை
மீடேற்றுத லாலுன் வலிமையை மறவேனே.”

[பெண்கள்மீது போகாப்பழி பூண்ட எனது மோகம் அறுபட்டழிய நீ எதிர்தோன்றி அடிமையைக் கரை ஏற்றின கருணையை மறவேன்.]

குக ! பூர்வ—
பச்சிம தக்ஷிண வுத்தர திக்குள
பத்தர்க ளற்புத மெனவோதும்-
சித்ரக வித்துவ சத்தமி குத்ததி
ருப்புக ழைச்சிறி தடியேனும் ;
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்தவ நுக்ரக மறவேனே. (356)

[நான்கு திக்கினும் உள்ள பக்தர்கள் அற்புதம் அற்புதம் என்று வியக்கத்தக்க விசித்திர சந்தப் பாடல்களாகிய திருப்புகழைச் சிறிது அடியேனும் சொல்லும்படி வைத்து உலகில் பரவச்செய்த அநுக்கிரகத்தை மறவேன்.]

ஈராறு தோளு மாறு மாமுக
மோடாறு நீப வாச மாலையும்
ஏறூன தோகை நீல வாசியு மன்பினாலே-
ஏனோரு மோது மாறு நீதற
நானுசு பாடி யாடி நாடொறும்
ஈடேறு மாறு ஞான போதக
மன்புறுதோ. (1034)

[பன்னிரு தோளையும், ஆறுமுகத்தையும், கடப்ப மாலையையும், நீலநிற மயிலையும் யாவரும் அன்பினால் ஓதுமாறு நான் ஆசுகவியாகப் பாடியாடி உன் திருப்புகழையே நித்தம் பரவச்செய்யுமாறு எனக்கு ஞானத்தை ஊட்டுவிப்பாயாக.

‘வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
யாண்டாண் டாயினு மாகக் காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்தி,’—என



நக்கீரனார் உரைத்தாங்கு, யாண்டாண்டெல்லாம் முருகபெருமானார் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருந்தனரோ ஆண்டாண்டெல்லாம் அருணகிரியாரும் நாடினார், பாடினார்; கோயிலிலிருக்குங் குகனைப் பாடுவார்; கோபுரத்துள்ள குமரனைப் பாடுவார்; வீதியில் இருக்கும் வேலவனைப் பாடுவார்; மார்க்கத் தமர்ந்த மயிலவனைப் பாடுவார்; மடங்களில் இருக்கும் கடம்பனைப் பாடுவார்; இன்னணம் இவர்பாடாத முருகர் முகூர்த்தமே இலவாயின. மேற்கோள்—

இவர் பாடாத முருகர்முகூர்த்தமே இலவென்பது.

“ அருணை யிறையவர் பெரியகோ புரத்தில் வடபா
லமர்ந்த அறுமுகப் பெருமாளே.” (497)

“ புலியூர்பரமாகிய வடக்குக் கோபுர வாசலில்
மேவிய தம்பிரானே. (568)

“ புலியூரினில், மேலைக் கோபுரவாசலில் மேவிய
பெருமாளே. (569)

“ தெற்குக்கோபுர வாசலில் மேவிய ,, (573)

“ நாலுகோபுர வாசல்மேவிய பெருமாளே. (577)

“ அருணைபுரி வீதியி னிற்கும் பெருமாளே. (496)

“ தச்சூர் வடக்காகு மார்க்கத் தமர்ந்த ,, (695)

“ பல குன்றிலு மமர்ந்த பெருமாளே. (214)

“ உலகெங்கு மேவிய தேவா லயந்தொறு
பெருமாளே.” [இனி அச்சிடப்படும் 3-ம் பாகம்.]

அமணர் குலத்தை அழித்தவனும், அருணாசலேசுரரைத் தவறாது பூசை செய்யும் அன்பனுமான சோமநாதன் என்னும் பக்தன் ஒரு திருமடங் கட்டுவித்து அதனில் முருகக் கடவுளின் திருவுருவம் ஸ்தாபித்து வழிபட்டு வந்தான். அம்மூர்த்தியையும் நமது பாவலர்பெருமான் பாடியுள்ளனர்:—

“ அரிவையொரு பாகமான அருணகிரி நாதர் பூஜை
அடைவுதவ றாது பேணும் அறிவாளன்-
அமணர் குல காலனாகும் அரியதவ ராஜ ராஜன்
அவனிபுகழ் சோம நாதன் மடமேவும்-முருக (769)

[பார்வதீ பாகரான அருணாசலேஸ்வரரது பூஜையைத் தவறாது செய்யும் அறிவிற் சிறந்த பெரியவனும், அமணர் குலத்தை யழித்தவனும், தவராஜ ராஜனுமான சோமநாதன் என்பவனது மடத்தில் வீற்றிருக்கும் மயிலவனே !] (இன்னும் வரும்.)

## சாரித்திரகாண்டம்

### 1. மகாராஜச் சக்கரவர்த்தி யவர்களுடைய 1908-ம் ஹூலத்திய மஹாசாஸனம்

இந்தியாவிலுள்ள மகுடவர்த்தனர்களையும், மகாஜனங்களையும் வாழி கூறிப் பிரஸ்தாபஞ் செய்வது.

நமதருமை மாதாவும் இவ்விராச்சிய பாரத்தை எனக்குமுன் வகித்துவந்தவருமான மாக்ஷிமைதங்கிய மகாராணி விக்டோரியா சக்கரவர்த்தினியவர்கள், பலத்த காரணங்கள் பலவற்றை முன்னிட்டுப் பார்லிமெண்டாரின் ஐகமத்தியத்தையும், ஆமோதனத்தையும் அனுசரித்து, அதுவரை கனம் ஈஸ்டு இந்தியா கம்பெனியாரால் ஆளப்பெற்று வந்த இந்த ராச்சியபாரத்தைத் தாமே ரூபரூபில வகித்து இன்று ஐம்பது வருஷம் பூர்த்தியாகிறது. அக்காலத்தில் ஈசுவர சாக்ஷியாக எடுத்துக்கொண்ட இப்பெரும் பாரத்தை நாமும் அதேலக்ஷியத்துடன் தாங்கி நிர்வகித்து வருகிறோமானதுபற்றி, அதற்குச் சாக்ஷியமாக, (இப்பாரத வருஷத்திய) மகுடவர்த்தனருக்கும் மகாஜனங்களுக்கும் இன்று நாம் ஆசிகள் வழங்கி; யோகக்ஷேமவிசாரணை செய்வது நமக்குச் சந்தோஷமாக விருக்கிறது.

உங்களுடைய புராண பூமியின் சரிதம், பல்கோடி நூறாயிர வருஷக்கணக்காகி வந்திருப்பதில், ஐம்பது வருஷமென்று நாம் மேற்கூறியதைக் (வெறும் பொழுதுபோக்காகமட்டும் பேசுமிடத்து) கேவலம் ஒரு க்ஷணமென்னல் தகும். ஆயினும் இன்று முற்றுப்பெறுகிற இவ்வரை நூற்றாண்டை (வேறு காரியங்களை யுத்தேசித்துப் பேசுமிடத்தோ,) உங்கள் தேசசரிதமென்னும் பல்லாண்டலைக்கும் பெருங்கடலின் மத்தியில் ஓங்கி வெகுதூரம் எடுப்பாகக் காணுவதோர் திடர் என்னலுந் தகும்.

ஆங்கிலேய ஐக்கியராச்சியத் துரைத்தனத்திற்கும், இந்தியா கவர்ன்மெண்டுக்கும் நேரிட்டு என்று முடிவிழுந்ததாகச் சாஸனம் பிறந்ததோ, அன்றுமுதல் இந்தியா கவர்ன்மெண்டுக்கு விசேஷித்ததோர் ஒற்றுமையும், தருமமுமேற்பட்டுயர்ந்தது. இத்தருமத்தைக் கைப்பற்றிக் கோல் சிறிதுங்கோணாமல் ஆண்டுவருவது சுலபமன்று. ஆனதுகொண்டு சில சமயங்களில் இம்மகா மண்டலத்தில் குடியுயர்வு தாமதப்பட்டு வந்திருப்பது சாத்தியமே. என்றாலும், பலவாகியும், பலவகைத்தாகி வெகு விசித்திரமா யமைக்கப்பெற்றுமுள்ள, இம்மகா மண்டலத்திய முப்பதுகோடி யளவுபெற்ற ஜன சமூகங்களுக்குள் ஒற்றுமை யுண்டாக்கி, எல்லோருமோர் வருக்கத்தவராகிப் பிரிட்டிஷ் துரைத்தனத்தை யொப்பி நல்வழியில் நடக்கச் செய்யவேண்டுமென்று அன்று மேற்கொண்ட விரதம், நாளதுவரை கோணாமலும், இடையறாமலும் பூர்த்தியாகியே வந்திருக்கிறது. ஆதலால், சென்ற நூற்றாண்டில் நாம் செய்துவந்த காரியங்களையெல்லாம் மறுபடியாராய்ந்து பார்க்கையில், (மொத்தத்தில்) அவையனைத்தும் நடக்கவேண்டிய கிரமப்படியே நடந்து வந்திருப்பதால், அது விஷயத்தில் நமக்கு மாலைக் கண்ணுமில்லை, குறு குறுத்த நெஞ்சமுமில்லை.

எக்காலத்தியவாகிலும், எவ்விடத்தியவாகிலும், மானுஷியமான துரைத்தனங்களை விசாரிக்குமிடத்துத் தோஷஞ் சிறிதுங் காணாதனவாக இருந்தவை இதுவரை யில்லையாதலால், இத்துரைத்தனத்திலுங் குறைவுகளிருந்துதான் வந்திருக்கின்றன. ஆனாலும் அவ்விஷயத்தில் நமது சமஸ்தான விதேயர்களான உத்தியோகஸ்தர், சிறிது மனந்தளராமல், வெகுதூரஞ் சிரமப்பட்டுத் தைரியத்துடனும், ஊக்கத்துடனும் அவைகளுடன் போராடி, (எக்காரியத்திலும்) தீர்க்காலோசனை செய்து, நியாயமான நிர்ணயங்களைக் கைப்பற்றியும், அப்படிக் கைப்பற்றிய முறைகளைச் சளையாமல் நிறைவேற்றியும் வந்திருக்கிறார்கள். ஆகவே, குற்றங்காணும் பொழுதெல்லாம், நமது உத்தியோகஸ்தர்கள் சிறிதும் பின்னிடையாமலும், தங்களுடைய கஷ்டநிஷ்டூரத்தைக் கவனியாமலும்,உழைத்துப்பரிகாரந்தேடி வந்திருக்கிறார்கள். செங்கோல் கோணியதாக ருசுவாகிய போதெல்லாம், வெகு பெயர் சமர்த்தர்கள் பாடுபட்டுக் குணக்கெடுத்திருக்கிறார்கள்.

ராஜாங்கம் எவ்வளவு சீராய் நடந்துவந்த போதிலும், பஞ்சம், கொள்ளைநோய், போன்ற பெருங்கேடுகளைச் சுத்தமாக வரவொட்டாமல் தடுக்க யாராலுமாகாது. என்றாலும், நமது (இந்தியப்) பிரதிநிதிகளும், அவர்களுடைய விதேயர்களான இதர உத்தியோகஸ்தர்களும், துரைத்தனத் தொழிலில் பழகித் தேர்ந்தவரானதுகொண்டு, வெகு சாதுரியமாயும், பூரண ராஜபக்தியுடனும் உழைத்து வந்திருப்பதில், அவ்வளவிற்கு, இத்தியாதி உபத்திரவங்களால் உண்டாகும் துன்பங்கள் வலிகுறைந்து, ஜனங்களுக்கு க்ஷேமமே யதிகரித்திருக்கிறது. ஆதலால், ஈசுவர சங்கற்பத்தினால் வருவனவாகிய இப்பெருவாரிகள் (எப்போதும் வெகு உபத்திரவகாரிகள் தானென்றாலும்,) பழைய காலங்களில் இவ்வளவு நீடித்திருந்த சம்பவங்களை அபேக்ஷித்து, ஒருக்காலும் இவைகளாலுண்டாகும் சேதம் இவ்வளவு மிதமாயிருந்ததில்லை (என்பது நிச்சயம்). இதைமட்டும் நாம் வெகு தாராளமாய்ச் சொல்லலாம்.

தவிர, உங்களுடைய ராஷ்டிரங்களிலாவது அக்கம் பக்கங்களிலாவது, யுத்தங்கள், கலகங்கள் முதலியன உண்டாகவில்லையாதலால், அவைகளாலுண்டாகும் கோரங்களும், நஷ்டங்களும் உங்களை யுபத்திரவிக்கவில்லை. உள்நாட்டுக் குழப்பங்களும் கட்டோடேயில்லையாகவே, இவ்விஷயங்களிலெல்லாம் நீங்கள் சுகிகளாகவே வாழ்ந்து வந்திருக்கிறீர்கள்.

1858-ம் ௵த்திய மஹாசாஸனத்தில் விக்



டோரியா மகாராணியவர்கள் ஒருறுதிமொழி கொடுத்தருளினார்கள். அதாவது, இந்தியாவில் கலகமற்று, எல்லோரும் சன்மார்க்கத்தையனுசரித்து உயரவேண்டுமென்றும், (அதற்கேற்க) மகாஜனங்களுக்கு உபகாரமாகச் சிற்பகாரியங்களைத் தொடங்கவேண்டுமென்றும், அம்மகா மண்டலத்திய சகல வருக்கத்தவருக்கும் க்ஷேமத்தைக் கோரிச் சமரசமாய்த் துரைத்தனத்தை நடத்திவர வேண்டுமென்றும், தமக்கு மனோரதம் பலத்திருந்ததாக உங்களுக்கு வெகு தயையுடன் திருவாக்களித்ததாம். அப்படியே யதை யனுசரித்து, உங்களுடைய தேசத்திய (நிலவளமுதலிய) சகல செல்வமுந் தழைத்தோங்குமாறு நிர்மாணஞ் செய்திருக்கும் சிற்ப விந்தைகள், பரிமாணத்திலாவது, துணிகரத்திலாவது, அம்மாதிரி இதுவரை நடந்திருக்கும் காரியங்களுக்கு எள்ளளவேனுங் குறைந்தனவன்று. ஆகவே மேற்குறித்த மகா வாக்கியத்தைப் பரிபாலிக்க முயன்றதில் (மேற்படி மகாராணியவர்களுடைய விதேயர்கள்,) எவ்வளவு சிரத்தையுடனும், பக்தியுடனும் உழைத்து வந்திருக்கிறார்களென்பது இம்மூலமாய்ப் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடியதேயாம்.

நமது சாமந்தர்களான மகுடவர்த்தனருடைய உரிமைகளும், மரியாதைகளும், கிரமப்படிப் பாலிக்கப்பெற்றும், குணங்குன்றாமல் பதனப்பட்டும்,சிறிதுஞ் சேதமடையாமலுமிருந்து வந்திருக்கின்றன. அவர்களுமப்படியே நமது சமஸ்தான க்ஷேமவிஷயத்தில் பக்தி சிறிதுங் குன்றாமலே நடந்து வந்திருக்கிறார்கள். மதக்கோட்பாடுகளைக் கொண்டாவது, மதாசாரங்களைக் கொண்டாவது, நமது பிரஜைகளில் யாரும் (பாரபக்ஷமென்னும் காரணத்தை முன்னிட்டுப்) பெருமை யடைந்ததுமில்லை. பயமடைந்தது மில்லை. உபத்திரவ மடைந்ததுமில்லை. நமது (தருமாதிகாரத்திலேற்பட்டு ஜாரிக்கு வந்திருக்கும்) சட்டங்கள் எல்லோருக்கும் ஒரேதராசாக விருந்து க்ஷேமந் தந்திருக்கின்றன. அச்சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவந்து நீதிசெலுத்தும்அதிகாரிகளும்,உங்களுடைய(க்ஷேமத்தையே கோரி,)உங்களுக்குள் காணும் ஜாதி மதம் இவைகளுக்குரிய மரியாதையைக் குறைக்காமலும், வேறு தசைகளில் தோன்றுதொட்டு உங்களுக்குள் வேரூன்றி வந்திருக்கும் சிஷ்டாசாரங்கள், மனோதருமங்களிவைகளை அசட்டை செய்யாமலும், (ஜாக்கிரதையாய்) நடந்து வந்திருக்கிறார்கள். தவிர அவற்றுளெல்லாம் சிக்கா யிருந்தவைகளைச் சிக்ககற்றி, ஒழுக்கங்கொடுத்துக் காலவகையினால் பழையனகழிந்து புதியன வேற்கும் உங்களுடைய நூதன உலக யாத்திரைக்கு இயையுமாறு அதிகார தோரணியையும் துரஸ்துசெய்து வைத்திருக்கிறோம்.

நாம் துரைத்தனமேற்றிருப்பதில், தற்காலத்திய மகா ஜனங்களுடைய க்ஷேமத்தை மட்டுமேயல்லாமல், இனி நெடுங்காலம் பரம்பரையாய் வரும் அவர்களின் சந்ததியாருடையவும் க்ஷேமத்தைக் கோரி, அதை நிலைநாட்டுவதையே முக்கிய விரதமாகக் கொண்டிருப்பதால், இந்தியாவில், காரணஞ் சிறிதுமின்றி, லக்ஷியமொன்றுங் காணாமல், (இப்போது கொஞ்ச காலமாகக்) கண்டு வரும் சதியோசனைகளையும், அவற்றாலுண்டாகும் தோஷங்களையும், தாக்ஷண்ணியஞ் சிறிதுமின்றி நிர்மூலமாக்கிப் பறக்கவடிப்பது நமக்கு முதற்கடமையாகிறது. நமது இந்தியப் பிரஜைகள் பெரும்பாலாரும், ராஜபக்தி, விசுவாச முதலிய பெருங்குணங்கள் நிறைந்துள்ளவராதலால், அவர் தன்மைக்கும், இச்சதிகாரருடைய தன்மைக்கும், வெகுதூரமென்பது நமக்குச் செம்மையாய்த்தெரியும். ஆதலால்,இச்சில்லரை உபத்திரவங்களைப் பொருட்டாக்கி, நாம் மேற்கொண்ட மகாவிரதத்தை யொதுக்கிவைப்பதாக உத்தேசஞ் சிறிதும் நமக்கில்லை. அம்மகாவிரதமோ, இந்தியாவில் கலக முதலிய பிணி

களையடக்கி, மகாஜனங்கள் கிருகஸ்தமார்க்கமாய் ஜீவிக்க, அதனால் நாடு செழித்தோங்கும்படித்துரைத்தனத்தையும் பரிஷ்காரப்படுத்தி வரவேண்டுவதாம்.

(ஆதலால் இவ்விரதத்திற்கேற்க) இவ்வைம்பதாம்ஆண்டுநிறைவென்னும்சுபமுகூர்த்தத்தில், (இந்தியப் பிரஜைகள் விஷயத்தில்) நமது பேரருள் கனிந்திருப்பதற்கு அறிகுறியாகவும், தீர்க்ககாலம் பயன்தருவதாகவும், ஏதாகிலும் பெருங்காரியமில்லாமற்போவது நமக்கிஷ்டமில்லை. ஆனதுபற்றி, 1903-ம்௵த்தில் நமது மகுடாபிஷேக மகோற்சவத்தில் நடந்தபடி, இப்போதும் நமதுகோர்ட்டார்களால் கடூர தண்டனை பெற்றுச்சிக்ஷை யனுபவித்து வருந்தும் பெருங்குற்றவாளிகளுக்குத்தண்டனைகளைப் பூராவாக மன்னித்தோ, அல்லது பலவாறாகக் குறைத்து விதித்தோ, தயை கூர்ந்து கற்பனையிட்டருளியிருக்கிறோம். இப்பேருபகாரத்தை யடைந்து (சந்தோஷிக்கும்) மேற்கூறிய தருமத்துரோகிகள், இதற்குரிய நன்றியைத் தக்கபடி மனதிற் பதியக்கொண்டு, இனியப்படித் தரும விரோதஞ் செய்யாமல், கிருகஸ்தமார்க்கமாய்க் காலங்கழித்து வரவேண்டு மென்பது நமக்கு மனப்பூர்வமான கோரிக்கை.

(நமது) ராஜாங்கத்தில் பிரதான பதவிகளை வகிக்க அதிகாரதோரணியும், நிர்வாக சக்தியும் வேண்டியிருந்ததில், இதுவரை அவ்விஷயத்தில் இந்தியரென்றும், ஐரோப்பியரென்றும் ஏற்பட்ட ஜாதிபேதங்கள் காலக்கிரமத்தில் குறைந்துவரவேண்டிய பிரயத்தனங்கள் எப்பொழுதும் நடந்தேதான் வந்திருக்கின்றன. இனியும் இப்படியே நடத்தி வருவதில், இந்தியா மகாஜனங்களுக்குள், புத்திமான்களும், காரியநிர்வாகசாலிகளும், வித்தியாப்பியாசத்தை யின்னும் பலமாகச்செய்து, அனுபவங்களை யின்னு முற்ற வைத்துக்கொண்டு, பொறுப்பாக அலுவல்களை வகிக்கவேண்டிய (வேறு) யோக்கியதைகளையும் தேடி யடைவார்கள். ஆகையால், அவ்வளவிற்கு நம்மனோரதம், இடையறாமலும், தத்தளியாமலும் நடந்தேறிவருமென்னும் நிஷ்கரிஷையும், வரவேண்டுமென்னும் ஆக்கிரமமும் நமக்கு மேலிட்டிருக்கிறது.

இத்துரைத்தனம் ஆரம்பமாகியது முதல், (இந்திய) மகாஜனப் பிரதிநிதிகள் மூலமாய் ராஜகாரியமாக வேண்டியவகைக்குச் சிறிது சிறிதாகப் பிரயத்தனம் நடந்துகொண்டேதான் வந்திருக்கிறது. இப்பொழுது அந்த முறையை அதிகரித்து வியாபிக்கும்படி செய்யத் தருணம் வந்திருப்பதாயும், அதனால் ராஜாங்கத்திற்குக் குறைவு சிறிதுமில்லையென்றும், நமது பிரதிநிதியான கவர்னர் ஜெனரலவர்களும், நமது சமஸ்தானத்திய மற்றைய மந்திரிமார்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உங்களவர்களிலும் அனேக வருக்கத்தார், பிரிட்டிஷ் ராஜரீகத்தில் புஷ்டியடைந்து வந்திருக்கும் (அனேக) துரைத்தன முறைகளைப் பரிவுடன் சுவீகரித்து, அத்துரைத்தனத்திற்கு வழிபட்டிருக்கும் பிரஜைகள் அனைவரும் ஒரே தரத்தவரென்றும் (அவர்களிடையில் தாரதம்மியமாவது, வேற்றுமையாவது காணக்கூடாதென்றும்,) சொல்லிவருவதுடன், (இந்தியா துரைத்தனத்திய) சட்டநிரூபணத்திலும், சர்க்கார் அமுலிலும் தங்களுக்கின்னுமுயர்ந்த பதவிகள் வேண்டு மென்று மன்றாடுகிறார்கள். இப்படியிவர்கள் நாடிக்கேட்கும் உரிமைகளை ஏற்குமளவிற்கு இவர்களுக்குக் கொடுத்துத் திருப்திபடுத்துவதினால், இப்போது (இந்தியாவில்) ஸ்தாபிதமாயிருக்கும்நமது அதிகாரத்திற்கும், பலத்திற்கும் யோக்கியதையுயருமேயொழியக் குறைவொன்றும் காணாது.

நமது துரைத்தனத்தினாலடையக்கூடியலாபநஷ்டங்களையெல்லாம் அடைபவர் நமது குடிகளாகிய மகா ஜனங்களே. நமது துரைத்தனாரீதியைக் குடிகளாகிய மகா ஜனங்களுக்குத் தெரிவித்தும், அம்மகா ஜனங்களுக்குள்ள சுகதுக்கங்களைத் துரைத்தனத்தாராகிய



165134

நமது உத்தியோகஸ்தருக்குத் தெரிவித்தும் வருபவர் (மேனாட்டுக் கல்வியிற்றேறிய புத்திமான்களே.) ஆதலாலிவ்விருதிறத்தாருடனும், நமது உத்தியோகஸ்தர்கள் இதுவரை கூடிப் பழகிவந்ததைவிட இனி அதிகமாகப் பழகி, அடிக்கடியவருடன் கலந்து, ஆலோசித்தேயாகவேண்டிவருவதில், அவ்வளவிற்குத் துரைத்தனம் சோபிக்குமென்பதிற் சந்தேகம் நமக்குச் சிறிதுமில்லை, ஆனது கொண்டு இவ்வுத்தேசங்களை முன்னிட்டுத் தற்காலம் வெகு ஆக்கிரகத்துடன் நமது மந்திரிமார்கள் சில சட்டங்களை நிரூபித்து வருகிறார்கள். ஆனாலவைகளை விளக்க இது தருணமன்று. அவையெல்லாம் சீக்கிரத்தில் உங்களுக்கு வெளியாகும். ஆனபின் அது, நீங்கள் செய்துவரும் உலக யாத்திரையில், உங்கள் காரியமெல்லாம் கைகூடி வெகு நன்மை பயப்பதோர் துறையில் உங்களைக் கொண்டு சேர்க்குமென்று நாம் மனப்பூர்வமாய் நம்பி யிருக்கிறோம்.

நமது இந்தியப் பட்டாளங்களுடைய சௌரியமும், ராஜபக்தியும் நமக்கு வெகு நன்றாய்த் தெரியும். ஆதலால், புது வருஷமாரம்பமாகும்பொழுது, அத்தருணத்தில், அவர்களுக்கிருக்கும் தைரியம், விசேஷமான நாயகபக்தி, எந்த க்ஷணத்திலும் முழுமனத்தோடு யுத்தத்திற்குத் தயாராயிருத்தல், முதலிய உத்தம குணங்களை நாம் அறிந்திருப்பதை நமது பட்டாளத்தாருக்கும் உறைக்கும் வண்ணம் சாக்ஷியப்படுத்திச் சம்மானிக்கும்படிக் கற்பனையிட்டருளியிருக்கிறோம்.

இந்திய (மகாமண்டலம்) க்ஷேமமாயிருக்கவேண்டுமென்பது மகாராணி விக்டோரியா தேவியவர்களுக்கு நெஞ்சிற் பதிந்து பிராணபதமாயிருந்த மனோரதங்களி லொன்றும். 1875-ம்௵த்தில் அவ்விராச்சியமெங்கும் விஜயஞ் செய்து திரும்பியபின், நாமும், நாளதுவரை அவ்விடத்திய யோககேஷமத்தையும், அவ்விடத்தியவரான மகுடவர்த்தனர், மகாஜனங்கள், முதலியோருடைய மங்கள வாழ்வையும், வெகு [illegible]போடும், ஜா[illegible]தையுடனும், விசாரித்[illegible]தப்பிரேமையக்காலத்திலு[illegible]வே குறையாது. நமதருமைக் குமாரராகிய (மாக்ஷிமை தங்கிய) பிரின்ஸ் ஆப் வேல்ஸும், அவர் மனைவியாகிய பெருமாட்டியும், கொஞ்சகாலம் உங்கள் மத்தியில் தாமதித்துத் திரும்பி வந்ததில், உங்கள் ஜனனபூமி விஷயத்தில் அவர்களுக்கும் பிரேமை விசேஷித்துண்டாகி, அவ்விடத்திய உத்தரோத்தர க்ஷேமலாபங்கள், பிரஜைகளாகிய உங்களுக்குண்டாகும் திருப்தி, ஆகிய இவ்விஷயங்களில், (இவை மேலும்மேலும் அதிகரிக்கவேண்டுமென்கிற) அக்கறை வாஸ்தவத்தில் மனப்பூர்வமாயிருக்கிறது.

இவ்வாறு ராஷ்டிரவர்த்தனராகிய நமது குடும்பத்தவரும், வமிசத்தவரும், இந்தியாவிஷயத்தில் மனப்பூர்வமாய் இவ்வளவு பிரேமையுடனிருப்பதும், நலத்தைச் செய்யவேண்டுமென்றும், நலத்தையே கோரியும், இருப்பதும், அவரவர் தங்களைப் பொறுத்தமட்டில் செய்துவரும் காரியமாகமட்டும் பாவிக்கக்கூடாது. ஏனெனில், இவையெல்லாம் யூனைடெட்ராச்சியமாகிய, பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள நமது பிரஜைகள் அனைவர் மனத்திலும் சாமான்னியமாய்ப் பதிந்துள்ளதோர் பேரெண்ணமென்றேசொல்லவேண்டும். அதற்குச் சந்தேகம் சிறிதுமில்லை. மேற்கூறிய நமது பிரஜைகள் சகலருக்கும் (இந்தியாவிஷயத்தில்) எண்ணம் அவ்வாறாகவேதானிருக்கிறது.

இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவரும் பிரஜைகளுக்கும் ஏற்பட்டுள்ள உறவின் முறைபோல், முற்காலத்தில் அனேக சந்தர்ப்பங்களில், அனேகவிடங்களி லிருந்ததாகத் தஸ்தாவேஜு மூலமாய்நமக்குச் செம்மையாய்த்தெரியும். அத்தேசவர்த்தமானங்களை யெல்லாம் எவ்வளவு வேண்டுமானாலும் நாம் பரீக்ஷித்துப் பார்க்கலாம். இந்த ராச்சியபாரம் அவையொன்றிற்கும் பருமனிலாவது, பெருமையிலாவது, சிறிதுங்குறைந்ததன்று. ஆகவே இப்பெருஞ் சுமையை நேராக வகித்து, உத்தேசத்தைப்பூர்த்தி செய்வதற்கு முக்கிய சாதனமாகிய விவேகத்தையும், பரஸ்பர மிருக்கவேண்டிய நல்லெண்ணத்தையும், சருவேசுவரன் இருதிறத்தாருக்கும் அளித்துப் புலமனுக்கிரகித்து ரக்ஷிப்பாராக.

## 2. விசுவாமித்திர மகாரிஷி

(65-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சென்றமாதத்திய சஞ்சிகையில், இம்மகாரிஷிக்கும், வசிஷ்டருக்கும் யாதுகாரணத்தினாலோ விரோத முண்டாகியதென்று மட்டும் சொன்னோம். அதனால் ஆட்டுக்கடாச்சண்டையில் நரிசெத்த கதையாக 'அரிச்சந்திரன்' முதலியோர் வெகு உபத்திரவ மடைந்ததாகவும் கதைகளைச் சுருக்கிச்சொன்னோம்.

ஆனால் படத்திற்காணும் விசுவாமித்திரருடைய கதையைச்சொல்லக் கூடவில்லை. ஆதலாலதையும் சுருக்கிச் சொல்லிவிட்டு, மகாரிஷிகளின் யோக்கியதையை நிதானிப்போம்.

தசரத மகாராஜாவுக்கு வெகுநாள் பிள்ளையில்லாமல் துக்கப்பட்டுக் கடைசியாக யாருடையவோ புண்ணியத்தினால் விருத்தாப்பியதசையில் நாலுமக்கள் பிறந்தார்கள். அவர்களில் ரகுகுலதிலகனான ஸ்ரீராமனும், அவருடைய பிரிய சகோதரனான லக்ஷ்மணனும், வில்வித்தை கற்றுப் பரீக்ஷைகளில் தேறிவருகையில், ஒருநாள் சபையில் திடீரென்று விசுவாமித்திர மகாரிஷி வர, அவரை மகாராஜா உபசாரத்துடன் வரவழைத்து, வேண்டியதைக் கேட்டார். தான் செய்யப்போகிற யாகத்திற்கு இடையூறு வராமல் காப்பதற்கு இவ்விரண்டு குமாரர்களையும் அனுப்பும் படியாக மகாரிஷி கேட்கவே, மகாராஜா பிள்ளைகள் பேரிலிருந்த பிரேமையினால் க்ஷத்திரிய தருமத்தை மறந்து மாட்டேனென்றார். உடனே மகாரிஷி வெகு கோபத்துடன், "ஓ. ராஜனே, உமது சந்தோஷ மிப்படியானால், இதோ வந்த வழி பார்த்துக்கொண்டு போகிறேன். சூரியவமிசத்திற் பிறந்து, சொன்ன வார்த்தையை மறந்த, நீர் பந்துவர்க்கங்களுடன் சௌக்கியமாயிரும்," என்று சொல்லித்திருப்பினார். உடனே வசிஷ்டர் முதலியோர் மத்தியஸ்தம் செய்து ராமலக்ஷ்மணர்களை யனுப்பியதாகவும், அதனால் தாடகைவதம் முதலிய சில்லரைக் காரியங்களும், கடைசியாகச் சீதையம்மாளை விவாகஞ் செய்துகொண்ட மகா காரியமும், ஆயினவென்று புராணகதை.

தசரதனுடைய சபையில் விசுவாமித்திரர் நின்று தனக்கு ராக்ஷசர்களா லுண்டாகும் உபத்திரவங்களை வர்ணிக்கும் பாவனையாகப் படம் அமைந்திருக்கிறது. பங்காள சீமை நடையுடையை யனுசரித்துச் சித்திரம் அமைந்திருப்பதால், அதை அன்பரறிக. அதனால் இனி நாம் விவரிக்கும் பழைய காலத்திலும் மகாரிஷி யிவ்வாறு அங்கி முதலிய வேஷம் பூண்டிருந்தா ரென்று நிச்சயிக்கக்கூடாது. ருக்கு வேத மந்திரங்களை வசிஷ்டர், விசுவாமித்திரர், முதலிய மகாரிஷிகளும், அவர் குடும்பத்தவர்களும், பெருக்கி வருகையில், அம்மகா ரிஷிகள் எவ்விதமாக உடையுடுத்தார்களோ, ஆபரண மணிந்தார்களோ தெரியவே தெரியாது. தாடிமட்டு மிருந்ததாக ஐதீகமுண்டு.

இவ்வாறு ராமாயணத்தில் காணும் கதையை யொட்டி விசுவாமித்திர வமிசக்கதைகள் முந்திச்சொல்லியவை யெல்லாம் அனேகமாய் நமக்குத் தெரிகின்றன. அரிச்சந்திரன் கதை மட்டும் அதற்கு முந்தியே 'பிராம்மணங்கள்' என்னும் வேத பாகங்களில் காணுகிறது.

கதைகளில் நமக்குக் காணுவதையெல்லாம் நிச்சயமென்று நம்பினால் அது வசிஷ்டருக்கும் பெருமை விளைவிப்பதல்ல, விசுவாமித்திரருக்கும் விளைவிப்பதல்லவென்று சொன்னோம். அதற்கு ஆதாரமாக நவீனப் பண்டிதர்கள் சொல்லுவதை யிங்கு சுருக்கிச் சொல்லிவிடுகிறோம். நமக்கும் அதுதான் சரியாகக் காணுகிறதென்று சொல்லாமலே யேற்படும்.

ருக்குவேத மந்திரங்களை ஜாக்கிரதையாகப் படித்து அர்த்தத்தை விசாரிப்பதில், அந்த மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு, யாகாதிகளைச் செய்து பெருமைபெற்ற நமது பெரியோர் 'சப்



தசிந்து' என்று அக்காலத்திலும், 'பஞ்சாப்' என்று இக்காலத்திலும், வழங்கும்பிரதேசத்தில் வாழ்ந்து வந்தார்களென்பது நிஷ்கரிஷைப்படுகிறது. 'துலா புராணத்தைச்' இலாக்கியமாகக்கொள்வோர் காவேரி தீரவாசிகளென்று எப்படி நாம் ஊகிக்கலாமோ அதுபோலவென்றறிக.

இந்த 'சப்தசிந்துப்' பிரதேசத்தில் ஆரியரிருந்தாலும், அவரைச்சுற்றிலும், ஆரியரல்லாத ஜனங்களும், அவர்களையாளும் அரசர்களும் வெகுபெயரிருந்தார்கள். அவர்களுடைய நடையுடையும், தேகலக்ஷணங்களும், தேவதைகளும், வேறாகவிருந்ததில், துவக்கத்தில், ஆரிய தேவதைகளான இந்திரன், அக்கினி, வருணன் முதலியோருக்கு இவர்களுடைய கர்வத்தைப் பங்கப்படுத்தி ஆரியருக்கு நன்மை பயக்கவேண்டியதே முக்கிய காரியமாயிற்று.

ஆதலால் மந்திரங்களில் அநேகம் இக்காரியங்களையே புகழ்ந்துவருகிறது. என்றாலும் வந்த ஆரியர்கள் இவ்விடத்தியவரை விட வெகுதூரம் சங்கியையில் குறைந்தவராதலால், கொஞ்சகாலம் போர்புரிந்து கழிந்தபின், சுற்றியிருப்பவருடன் ஏதோ வொருவிதமாகச் சினேக பாந்தவ்வியங்கொண்டு காலங்கழிக்க வேண்டியாயிற்று. ஆகவே ஆரியர்களுடைய தேவதைகளுக்கும், ஆரிய வித்துவான்களாகிய மகா ரிஷிகளுக்கும் புதிய உத்தியோக மொன்றேற்பட்டது. ஏனெனில், அனாரியர், என்றால், ஆரியரல்லாத மற்றைய ஜனங்களுள், சப்த சிந்துவைச் சுற்றிலும், கங்கை பாயும் வளநாட்டிலுமிருந்தவர்கள், கொஞ்சங் கொஞ்சமாக ஆரிய பக்தி யதிகரித்துத் தாங்களும் அந்தத் தேவதைகளை வழிபட்டு, ஆரியரைப் போல் தாங்களும் பெருமையடைய வேண்டுமென்று ஆக்கிரமுண்டாயிற்று.

ஆகவே அந்த ஜனங்களுடைய வேண்டுகோளின்படி வசிஷ்டவமிசத்தவருக்கும், விசுவாமித்திர வமிசத்தவருக்கும், மற்றுமுள்ள ரிஷிகளுக்கும், 'உள்ளூர்' மரியாதைகளுடன், வெளிநாட்டிலும் மரியாதை கிடைத்து வந்தன. இப்படி மரியாதை யடைவதற்கு, அவர்களுடைய மந்திரங்களும், தந்திரங்களுமே முக்கிய காரணம். நமது நாட்டில், நம்மிலனேகர் கண்காணச்சில கோயில்களில் நடந்திருக்கும் சீர்திருத்தங்கள் இந்த ரகசியத்தை நன்கு விளக்கும். ஓரிடத்தில் 'ரங்கநாதன்' சுவயம்புவாக உண்டாகிறார். யாருக்காகிலும் சுவப்ன முண்டாகிறது. அவர் மூலமாய் ஆலயமும், பூஜையும் ஏற்படுகிறது. சுற்றிலுமுள்ள ஜனங்கள் தங்கள் மனோ தருமத்திற்கு ஏற்றபடி அந்தக் கோவிலுக்குக் காணிக்கை கட்டுகிறார்கள். அல்லது பலிமுதலியன கொடுக்கிறார்கள். கடைசியாக ரதோற்சவம் வந்ததும் ஆயிரக்கணக்கான ஆடும், கோழியும் வதைபடுகின்றன. இதைப் பார்த்துச் சகிக்காதவரனேகர். அவர்களும் இந்தத் தெய்வத்தை நம்பியவராதலால், இந்தத் துராசாரத்தை யெப்படியாவது போக்கடிக்க வேண்டுமென்று பிரயத்தனப்படுகிறார்கள். உடனே யவர்களி லொருவருக்குச் சுவப்னமாகிறது. அடுத்த ரதோற்சவத்தில் யாராகிலும் பலிகொடுத்தால், அவர்களைப் பலிவாங்குவே னென்று பலருக்கு ஆவேச மூலியமாகச் சுவாமியும் சொல்லிவிடுகிறார். பிறகு பயபயமிரண்டுங் கூடியுபயோகித்துப் பலிநின்று விடுகிறது.

இப்படி நமது கண்ணெதிரில் நடக்குமாறுதான் முற்காலத்திலும் நடந்திருக்க வேண்டுமெனல்தகும். அனாரிய தேவதைகளை யுபாசித்து வருவதற்கேற்ற மந்திரதந்திரங்கள், ஆரியதேவதைகளுடைய உபாசனைக் கிரமங்களைவிடப் பலவிதத்திலும் மோசமாயிருந்தன. ஆதலால், தேசீய ராஜாக்கள் எவ்விடத்திலும் மகாரிஷிகளை ஆசார உபசாரங்களுடன் வரவ

ழைத்து, அவர்களிடத்தில் மந்திரோபதேசம்
பெற்று, அம்மார்க்கத்தை யனுசரித்து வாழ
வேண்டுமென்கிற ஆக்கிரகம் அனேரிய அரசர்க
ளுக்குள் அதிகரிக்க, அவ்வளவிற்கு மகாரிஷிக
ளும் பெருமையடைந்தார்கள். இவர்களில்,
வசிஷ்டவமிசத்தவரைச் சிலரும், விசுவாமித்தி
ரர்களைச் சிலரும் புரோகிதர்களாகக் கொண்ட
தில், விசுவாமித்திரருடைய மந்திரமாகிய 'காய
த்திரி, யென்பது உபதேசத்திற்குமுக்கியயோக்
கியமாயிற்று. தவிர யாகஞ்செய்யும்போது,
உபயோகப்பட்டுவந்த 'யக்ஞசூத்திரம்' என்
னும் பூணூலும் 'காயத்திரி' யென்னும் மந்தி
ரத்துடன் சேர்ந்து, இதர ஜனங்களுக்கு ஆரிய
யோக்கியதை கொடுக்க ஏற்பட்ட முக்கிய சா
தனங்களாகிவிட்டன. நாளதுவரை யவைகள்
இந்தியாவெங்கும் பரவித் தாரதம்மிய ரீதியா
கச்சிலருக்கு ஒரு பூணூலும், சிலருக்கு இரண்டு
அல்லது மூன்றும், சிலருக்குப் பத்து காயத்தி
ரியும், வேறு சிலருக்கு முப்பத்திரண்டும்,
வேண்டுமானல் ஆயிரக்கணக்காகவும், ஏற்பட்டு
வந்திருக்கிறது. இதைப் பாத்தியஸ்தரென்று
சொல்லிக்கொள்ளும் பிராம்மணரில் சிலர்தான்
இகழ்ந்துவருகிறார்களல்லது, இதரர்கள் வெகு
ஜாக்கிரதையாய்ப் பாலித்து வருகிறார்கள்.
யோகேந்திரநாத பட்டாசாரியரென்னும் பங்
காளப்பெரியவர், நமது நாட்டில் காணும் ஜாதி
நியமங்களைப்பற்றி யெழுதிய புஸ்தகத்தில், ஆரி
யர் வருமுன் இந்தியாவில் மத விஷயமாக ஐக
மத்தியம் இல்லவே யில்லையென்றும், பிராம்
மண தேவதைகளும், பிராம்மண மந்திரங்க
ளும், பிராம்மண தந்திரங்களும் தான் ஏதோ
ஒருவாறு கூடியமட்டில் இந்த நாளுகோத்திர
ஜனங்களுள் பரஸ்பரவிரோத மில்லாமல் செய்
துவிட்டதென்றும் சொல்லுகிறார். இந்த விஷ
யத்தை விவரிக்க இது தருணமல்ல. ஆனல்
இது வாஸ்தவமாகில், இதற்கு மூலகாரணம்
மகா ரிஷியான விசுவாமித்திரருடைய மந்திர
மும் தந்திரமுமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஏனெ

னில் அம்மகாரிஷி 'பாரதர்கள்' முதலிய சுற்
றியிருந்த அரசரெல்லோருக்கும், காயத்திரி
மந்திரத்தை யுபதேசித்து, வைதிக தேவதை
களை வழிபடும் உபாயமும் சொல்லிவைத்தார்.
இப்படித் தாராளமாய்ச்செய்துவந்ததில் என்ன
குறைவுண்டாயிற்றோ தெரியாது. ஆனல்
இது வசிஷ்ட வமிசத்தவருக்குப் பிடிக்கவில்லை.
ஆகவே யிவர்களுக்குள் மாச்சரிய மதிகரித்து
வந்தது.

இரண்டு வமிசத்தவரும் பிரபல ரிஷிகளாத
லால், மாச்சரிய மதிகரித்து வந்ததில், பலசங்க
டங்களுக்கிடமுண்டாயின. ஆதலால் விசுவா
மித்திரர் மூலியமாய் வசிஷ்டருடைய புத்திர
ர்களுக்கும், வேறு அனேகருக்கும் விநாசமுண்
டானதாக வொருகதையுண்டாயிற்று. வசிஷ்
டர் முதலியோர் விசுவாமித்திரரை க்ஷத்திரிய
ரென்றும், காமக்குரோதாதிகள் முற்றியவரென்
றும், சொல்லித்தூஷித்து வந்த கதையுமிவ்
வாறுண்டாகியதே. என்ன சொன்னபோதி
லும் நடந்ததை மறைக்க வொருவராலுமாகா
தாதலால், திரிசங்கு முதலிய கதைகளில்,
அனேரியர் ஆரியரான கதையும், பிராம்மணப்
பிள்ளையை ரக்ஷித்ததில், யாகாதிவிஷயங்க
ளில் மகாரிஷியின் அபிப்பிராயமுங்காணலா
மென்பது நிச்சயம்.

காயத்திரியென்பது மகா மந்திரமென்பதிற்
சந்தேகமேயில்லை. இந்தியாவில் வேறு குருக்
கள் பிற்காலத்தில் உபதேசித்த மந்திரங்களை
யும், இந்தியாவைவிட்டு இதரதேசங்களில், கிறி
ஸ்தவர் முதலியோர் சொல்லிவரு மந்திரங்களை
யும் விசாரிப்போம். ஒவ்வொரு மதஸ்தருக்
கும், அவரவர் குருவுபதேசம் பெரியதுதான்.
அதை நாம் நிராகரிக்கவில்லை. "அவளவளு
க்கு அவளவள் புருஷனே பெரியோன்," என்
பதிற் தடையேயில்லை. ஆனலும், காயத்திரி
யின் சாமான்னிய அர்த்தத்தை விசாரிக்குமி
டத்து, அதற்கு மேற்பட்டமந்திரம் இதுவரை
யுண்டாகவில்லை யென்பது நிச்சயம். ஆனல்



மற்ற அனேக காரியங்களில் நாம் செய்துவந்
திருப்பதுபோல், இதையும் மறைத்து மறை
த்துவந்து, கடைசியாக இதன் பொருளை நாமு
மறியாமல், பிறரு மறியவொட்டாமல், எழுத்
தைநம்பி யேதேதோ வாய்க்குவந்தபடி பே
சிக்கொண்டு, இந்தத் தசையை யடைந்துவிட்
டோம்.

இக்காலத்தில் நமக்குள் தீண்டாதவரென்
றிருக்கும் ஐந்தரைக்கோடி ஜனங்கள் பழைய
காலத்தில் 'தஸ்யு' க்கள் இருந்த மாதிரியே யிரு
க்கிறார்கள். இவர்களை யினிநாம் எப்படியோ
போகட்டுமென்று விடுவது பிசகு. இத்தனை
நாள் இப்படிவிட்டு வந்துதான் நாமித்தசையை
யடைந்தது. இவர்களை யுத்தாரஞ்செய்யவேண்
டிய பிரயத்தனம் சுமாராக நடந்துவருகிறது.
ஆனலப்படிப் பிரயத்தனப்படுவோர் அவர்களு
க்கு ஜீவனோபாயமட்டுந்தான் வேண்டுமென்று
பாடுபடுகிறார்கள். நமக்கோவென்றால், அத்
துடன் தெய்வவிஷயமுஞ் சிறிது சம்பந்தப்பட
வேண்டுமென்று காணுகிறது. ஏனெனில், இவ்
விஷயத்தில் இவர்களுக்கு இப்போதிருக்கிற
படி யொரே கதிதான் உள்ளது. ஒன்று, இவர்
கள் மகம்மதியராகவாவது, கிறிஸ்தவராகவா
வது போகவேண்டும். இல்லாவிட்டால், பழைய
கறுப்பன் கறுப்பனுகவே யிருக்கவேண்டும்.
இரண்டுபக்ஷமும் நமக்கு விரோதமே.

நாம் மேலே கூறியதில், சனாதனதருமமிப்படி
யிருக்கவில்லையென்று காணுவதால், விசுவாமி
த்திர வமிசத்தரான நம்மவர் இவ்விஷயத்தை
நன்றாயாலோசித்து 'இப்பாவங்களுக்கு' ஜீவ
னோபாயத்துடன், சன்மார்க்கமும், சற்குருபக்தி
யும் உண்டாவதற்கும் உபாயம்தேடவேண்டும்.
காயத்திரியையே பழையபடி யுபதேசிக்கவே
ண்டுமென்று நாம் சொல்லவரவில்லை. அதுசாத்
தியமுமன்று. பிற்பட்டு வந்தவர்களில் அனே
கர் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து
இவ்விஷயத்தில் அனேகவுபாயங்களைச் செய்தி



ருக்கிறார்கள். சீக்கர்களில் 'பஹால்' என்ற
தீக்ஷை வெகுசுலபம். சர்க்கரை கலந்த நீரைக்
கத்தியால் போகவரக்கலக்கி, முகத்திலும், தலை
யிலுமிறைத்துச் சில மந்திரங்களைச் சொல்லி
விட்டால், எவனும் சீக்கனாகலாம். இது போ
லேதாகிலும் யுக்திசெய்து, பெரும்பாலாரைக்
காப்பாற்றவேண்டியது நமது கடமை. லௌகிக
மார்க்கமட்டும் போதாது.

காயத்திரி மூலியமாய் விசுவாமித்திர மகா
ரிஷி ஆரிய மதத்தைப் பிரபலப்படுத்தியது
போலப் பின்னிட்டு வந்தவரனேகர் பக்தி
மார்க்கத்தைப் பிரபலப்படுத்தி வந்திருக்கி
றார்கள். அது இந்துக்களுக்குமட்டுமேயல்லா
மல், இந்து மகம்மதியரிருதிறத்தாருக்கும் சமர
சமாகவும் சிலர் செய்யப் பிரயத்தனப்பட்டிரு
க்கிறார்கள். இவர்களில் முக்கியமானவரிருவர்
—கபீர்தாஸரும், நானகபாவாவும். ஆதலால்
விசுவாமித்திரரை யடுத்து, இவ்விரு பெரியோரு
டையவும் சரிதங்களையும், சித்தாந்தங்களையும்
விளக்குவோம்.

---

'பாடிப்பாடிக் குத்தியபோதிலும் பதர் அரிசி
யாகாது' என்பது நமது முன்னோர்வசனம். ஆனல்
அமெரிக்காவில் பாடிப்பாடிப் பால்கறந்ததால், மாடு
களுக்குப் பால் அதிகமாகவும், அதிக ருசியுள்ளதாக
வும் சுரப்பதாயும், அதனல் ஒரு பால்காரி நன்றாய்ச்
சம்பாதித்துச் சுகப்படுவதாயும் உதயதாரகை மூல
மாய்த் தெரிகிறது. அமெரிக்காவில் எத்தனையோ
அற்புதங்களிருப்பது மெய்தான். ஆனல் பாட்டுப்
பாடி, அம்மூலியமாய்க் கைதிகளுக்கு நற்புத்தியுண்
டாக்குவதும், மாடுகளுக்குப்பால் அதிகமாய்ச் சுரக்
கச் செய்வதும், அமெரிக்கருக்குக்கூட ஆச்சரிய
முண்டாக்கக்கூடிய அற்புதங்களாம். இப்படிச்
சொல்லுவதில், "கான ரசத்தைப் பசுவும் அறிகி
றது, சிசுவும் அறிகிறது, பாம்பும் அறிகிறது"
என்று நம்முன்னோர் சொல்லியதையும், ஸ்ரீ கிருஷ்
ணனுடைய வேணுநாத மகிமையையும் நாம் மறந்த
தாகச் சொல்லுவதற்கில்லை.

# கலஸவகைக் காண்டம்

## 1. தென்னிந்தியப் பிராணிவர்க்கம்· சாமான்னிய விசாரம்

பூச்சிப் புலவர்

இந்தியர்களாகிய நம்மவர்களுக்குச் சில தோஷங்கள் வெகு நாளையவைகள். மூதலாவது, தம்மைச் சுற்றியிருக்கும் மனிதவர்க்கத்தாரைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும்தெரியாது. தெரிய வேண்டுமென்கிற அக்கரையுமில்லை. தெரிந்தவர்களென்று பெயர்போட்டுக் கொண்டிருக்குர் வைதிகர்களைக் கேட்டால், பிரும்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திராதிகளைக்குறித்துக் காரியத்திற்குதவாத பேச்சுத் தவிர வேறு சங்கதி வருவதில்லை. லௌகிகரையோ கேட்க வேண்டியதேயில்லை.

இரண்டாவது, மனிதஜாதி யொழித்து, மற்றைய பசு, பக்ஷி, மிருகாதிகளையும்,கிருமி,கீடாதிகளையும், பற்றிப்பேசப் புகுந்தாலோ இன்னும் மோசந்தான் அவைகளைப்பற்றிக் கவனிப்பவர் நமது ஜனங்களுக்குள் இல்லவேயில்லையென்று சொல்லிவிடலாம். இவ்விஷயத்தில் நமக்குக் கண்ணிருந்தும் பலனில்லை, காதிருந்தும் பயனில்லை. குருடும், செவிடுமாக விருந்தே தலைமுறை தலைமுறையாகக் காலங்கழித்து வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, அப்படி வருவதைப் பெருமையாகவுங் கொண்டிருக்கிறோம்.

ஆகிலும், ஊர்வன, நகர்வனவாகிய பூச்சிவர்க்கத்தை ஒருதரபில்,இந்தியாவில் விசேஷித்துக் கவனித்து வந்தவர் ஜைனரும், அவர்களுக்கிரண்டாவதாகப் புத்தரு மென்னலாம். ஆனல் அது ஜீவஹிம்ஸை செய்யக் கூடாதென்கிற ஒருதருமத்தை முன்னிட்டது. ஆதலால், நாம் உத்தேசித்திருக்கிற காரியத்திற்கு, அதாவது, பிராணி வர்க்கங்களுடைய ரகசியங்களையும், அவைகளால் நமக்குண்டாகும் நன்மை தீமைகளையும், வேண்டியகாலத்தில் தக்க பரிகாரங்களையும், அறிவதற்கு, இதனல் ஒரு பிரயோஜனமுமில்லை.

இக்காலத்தில், ஜைனருடைய ஜீவகாருண்ணியத்தினல், 'பிஞ்சராபோல்' என்னும், 'பிராணிசத்திரம்' என்பது ஒன்றுதான் சிலாகிக்கத்தக்கதாக ஏற்பட்டிருப்பது. எருது, குதிரை முதலிய ஜந்துக்கள் வயதாகி,அல்லது வியாதிபற்றி, காரியத்திற்கு உதவாவிட்டால், அவைகளைச் சுட்டுவிடுவது மேனட்டுச் சம்பிரதாயம். அப்படிப்பட்டவைகளை நிழலில் ஓரிடத்தில் கட்டி, ஜீவதசை முடிவாகிறவரை புல்லுங் தண்ணீருங்கொடுத்து வருவது, இந்து சம்பிரதாயம்,அதிலும் விசேஷித்து,ஜைனசம்பிரதாயம். ஆனல் ஜைனருடைய ஜீவகாருண்ணியம் இக்காலத்தில் சில விஷயங்களில் சிரிப்புக்கிடமாகவும், சில விஷயங்களில் நிந்தனைக்கிடமாகவும், ஆகியிருக்கிறது.

நல்ல ஜைன சந்நியாசிகள் வெளியே போவதைப் பார்த்திருப்பவர் நம்மில் அனேகமாய்க் கொஞ்சம் பெயர்தான். அவர்கள்,கண், மூக்கு, வாய், காது, எல்லாவற்றையும் நன்றாக மூடிக் கொண்டு,கண்மட்டும் தெரியும்படி விட்டுக்கொண்டு,மயிற்றோகையைக் கையில் வைத்துக்கொண்டு, அடியெடுத்து வைக்குமுன் தெருவைத்துடைத்து விட்டுப்போவது சாதாரணம். அப்படிப்போவதற்கு அர்த்தம் விளங்குகிறதல்லவா? காதில் ஏதாகிலும் பூச்சி புகுந்து குடைந்தால், நாம் உபத்திரவம் பொறுக்காமல் அதை விரலால் நசுக்கிக் கொன்றுவிடுகிறோம். இதுபாபம். இப்படியே மற்ற விஷயங்களிலும்.

பம்பாய்ப் பிரதேசத்தில் சில சமயங்களில் ஜைனர்கள் பூச்சிகளுக்கு விருந்திடுவதுண்டென்று கேள்வி. அதாவது, காங்



கள் கட்டிவைத்திருக்கும் 'பூச்சிக்கொட்டத்தில்' இரண்டு மூன்று மனிதரைச் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைக் கொடுத்து, ஒருராத்திரி பூராவும் தூங்கச்செய்வதாம். இவர்கள் குடி வெறியினல், மெய்ம்மறந்து தூங்கிவிட,அக்காலத்தில் கொட்டத்திலுள்ள,கொசு, உண்ணி,முதலிய ஜந்துக்கள், இவர்களை நிர்ப்பயமாகக் கடித்து ரத்தத்தைக் குடித்துத் திருப்தியடைகின்றன. இதற்குப் பிரதியாக, மறுநாட் காலையில் அவர்கள் தக்ஷிணை பெற்றுக் கொண்டு போகிறார்களாம். இது பிராணிகள் விஷயத்திலுள்ள கருணை முற்றியதனல் நமக்குக்கிடைத்த பலன்! தவிர ஜைனர்கள் கிருஷி விஷயத்தில் அதிகமா யிறங்கமாலிருப்பதும் இது காரணம்பற்றியே. உழுவது முதலிய கிருஷிக்காரியங்களில், புழு பூச்சிகளை நாம் வேண்டியமட்டில் கொன்றுவிடுகிறோமானது பற்றி, அதையவர்கள் சிரேஷ்டமாகக் கொள்ளுவதில்லையென்று வதந்தி. ஆனல்பிறர் அக்காரியங்களைச் செய்து பண்டங்களை விற்றால், அதை வாங்கி வியாபாரஞ் செய்வதற்கு அவர்களுக்கு ஆக்ஷேபமொன்றுமில்லை. இம்மாதிரி விசித்திரங்கள் எங்குமே யிருக்கின்றனவென்றாலும், இவ்வளவு விசித்திர மெங்கு மில்லையென்றே சொல்லவேண்டும்.

இவ்வாறு நாம் நம்மைச் சுற்றியிருக்கும் மனிதரையுங் கவனியாமல், மற்ற பிராணிவர்க்கங்களையுங் கவனியாம லிருப்பதற்குத் தக்க பலனில்லாமற் போகவில்லை. மனிதர் விஷயத்திலோ, இந்தியாவிலிருக்கும், ஜாதி, மதம், பாஷை, நடையுடை முதலிய பேதங்களும், பரஸ்பரவைரமும்,சரியான பலன். ஆதலாற்றான் இந்தக் கரும பூமியில் ஐகமத்தியமென்பதைக் கனவிலும் சாத்தியமென்று நினைப்பதற்கில்லையெனச் சிலர் சொல்வதற் கிடமுண்டாகிறது.

மற்றைய பிராணிவர்க்கங்களை நாம் கவனியாமல் விட்டதற்கும் பலன் நமக்கில்லாமற் போகவில்லை. இப்போது சுமார் நாற்பது அல்லது அதிகப்பட்ட வயதுள்ளவர்களெல்லோரும்,1877-8-ம்௵த்திய பஞ்சத்தையும்அதனலுண்டான கஷ்டங்களையும் செம்மையாயறிந்திருப்பார்கள். அக்காலத்தில் மழையில்லாமலோ, காலத்திற் பெய்யாமலோ, விளைச்சல் கெட்டுப்போகக், கொஞ்சநஞ்சம் எங்கேயாவதிருந்ததையும், வெட்டுக்கிளிகள் கூட்டங்கூட்டமாக வந்து, வைநாடுமுதல் மஞ்சக்குப்பம் வரையிலும்,ஐதராபாத்துமுதல் கன்னியாகுமரி வரையிலும், எங்கேபார்த்தாலுஞ் சூரியனை மறைத்துப் பறந்து, புலங்களில்விழுந்து, தானியம், புல் பூண்டு எல்லாவற்றையும் நாசமாக்கிவிட்டதை நினைக்க, இன்னும் நடுக்கமுண்டாகிறது. இதற்குமுன்னு மிப்படியிருந்திருக்கலாமென்றாலும், இவ்வளவு மோசமாகவில்லை. இதற்குப்பின்னும் 1905—6-ம் ௵த்தில் பம்பாய்ப் பிரதேசத்தில் வெட்டுக்கிளியால் பயிருக்கு வெகு சேதமுண்டாகித்தானிருக்கிறது.

சென்ற பன்னிரண்டு ௵ங்களாக மகாமாரியுபத்திரவத்தினல் ஜனங்கள் ஆயிரக்கணக்காய் இறந்துபோவதைக்கண்டு, அதன் ரகசியத்தை டாக்டர்கள் விசாரிக்க, எலிகளாற்தான் இவ்வுபத்திரவம் இவ்வளவு பிரபலமடைகிறதென்று இப்போது நிஷ்கரிஷையாய்த் தெரிகிறது. ஆகவே எலி வேட்டையாடுவதற்காக ஒரு பிரபலச் சைன்னியம் தயாராகி யெங்கும் சம்ஹாரம் நடந்து வருகிறது.



வெட்டுக்கிளி (உருவம் உள்ளபடி)



வெட்டுக்கிளி (இறக்கை விரிந்து)





கறையான்—ராணி



ஈசல்



கறையான்—புற்றுவேலை

மழை பெய்து ஓய்ந்த சமயத்திலும், வேறு சமயங்களிலும் புற்றுகளிலிருந்து ஈசல் கோடி கோடியாய்ப் புறப்பட்டு நம்மைச்சூழ்ந்து உபத்திரவிக்க, அச்சமயத்தில் அதைப் பொறுக்கமாட்டாமல் திட்டிவிட்டு முசுக்குப் போட்டுக்கொண்டோ, வேறு விதத்திலோ அந்த ஈதிபாதையைத் தொலைக்கிறோம். அவ்வாறே கறையானுபத்திரவ மேலிட்டால், அதைத்திட்டியோ, பரிகாரந் தேடியோ, வருகிறோம். பரிகாரந் தோன்றாவிட்டால் பத்திரிகைகளுக்கெழுதி யென்ன செய்கிறதென்று வெகு ஆவலாய்க் கேட்கிறோம். அல்லது நமது விதியை நொந்து கொள்ளுகிறோம்.

அனேகமாய் நமது காதருகில் வந்து, எவ்வளவு வேண்டாமென்று அகற்றினாலும் கேளாமல், காதிற் கினிமையாகப் பாடியும், ஆடியும், கடித்தும் வந்து, நம்மைத் தூங்கவொட்டாமலும், வேலைசெய்யவொட்டாமலும், உபத்திரவப்படுத்துகிற 'கொசு' என்கிற, ஒரு பெரிய ஜந்துவை நாமெல்லோரு மறிவோமல்லவா? ஆனாலிதனா லுபத்திரவப்படுகிறோமேயொழிய, இதன் வரன்முறையை நாம் விசாரித்தோமில்லை. இது எப்படி யதிகரிக்கிறது, எப்படி யுண்டாகிறது, இதை யோட்டும் வகை என்ன, சோற்றுக் கற்றாழையைவிட வேறு பரிகாரமுண்டா, என்னு மிவ்விஷயங்களை நாமெப்போதாகிலுஞ் சிந்தித்து உபாயமேதாகிலுஞ் செய்து பார்த்தோ மென்பதில்லை.

இப்படி நம்மைச் சுற்றிலு மிருந்து, பிரதிக்ஷணமும் விடாமல் உபத்திரவிக்கும் ஜந்துக்களையே நாம் லக்ஷியஞ் செய்வதில்லையென்றால், நம்முடன் அவ்வளவுதூரம் பழகுவதற்கிடமில்லாத மற்றைய ஜந்துக்களைப்பற்றி நமக்கு ஒன்றுந் தெரியாதிருப்பதற்குக் கேட்பானேன்?

பசு, பக்ஷி, முதலியவைகளைக் குறித்து நமக்கொரு சங்கதியும் நிச்சயமாய்த் தெரியாமலிருப்பதற்கு வேறு சாக்ஷியம் வேண்டுவதில்லை. அவைகள் விஷயத்தில் நாமுண்டாக்கியிருக்கும் கதைகளே போதுமானவை. குரங்கு, சர்ப்பம், முதலியவை தெய்வங்களாகிவிட்டன. சிங்கம், புலி முதலியவைகளைக் கொண்டு கதைகளுண்டாக்கியிருக்கிறோம். குளவி பச்சைப்புழுவைக் கொட்டித் தன்னிற மூதுவதாக நிச்சயித்து விட்டிருக்கிறோம். வேறு அனேக வகைப்பூச்சிகளையோ, துற்குறிகளாகக்கொண்டு, ஈசலம்மியதையும், எறும்பு வலமாவதையும் கவனித்து வருகிறோமல்லது; அவைகளைப்பற்றியறிய வேண்டியவைகளை யறிய மனமுமில்லை, சௌகரியமுமேற்படுவதில்லை.

இவ்வாறாக ஸ்தாவரஜங்கம ரூபங்களாய் நம்மைச் சுற்றியிருப்பவைகள் அனைவற்றையும் எப்படியோ போகட்டுமென்று விட்டுத் தலைமுறை தலைமுறையாக நிர்விசாரமாய்க் காலங் கழித்து வந்திருப்பது சில விஷயங்களில் இங்

நாட்டிற்கே சிறந்ததென்னவேண்டும்.

என்றாலும் ஈசுவர சிருஷ்டி விசித்திரங்களைப் பிராணி வர்க்கத்திலும், செடி முதலிய வர்க்கத்திலும் பார்த்து ஆனந்திக்கவேண்டுமென்றால், அதற்கு உஷ்ண ராச்சியங்களிலொன்றாகிய நமது தேசம் எவ்வளவோ நன்றாயமைந்திருப்பதாம். இம்மாதிரியிடங்களில்தான் ஜீவராசிகள் பலவாகியும், ஒவ்வொரு வகையிலும் பல விசித்திர லக்ஷணங் கூடியனவாகியுமிருப்பது. பிரதிநிமிஷத்திலும் நம்மைச்சுற்றியெத்தனையோ லக்ஷம் ஜீவராசிகள் பறந்தும், பாடியும், ஆடியும், பிறந்தும், இறந்தும், போகின்றன. ஆனால் அவைகளைக்கொண்டு நமக்காக வேண்டியது ஒன்றுமில்லை!

வேறு சில விடங்களில் பூச்சிகளால் உபத்திரவமுண்டானால், அவைகளுக்குப் பரிகாரமாகச் சாந்தி செய்வதுண்டு. இது வெகு புராதனக்கிரமம். ஜனமேஜயன் சர்ப்பயாகஞ் செய்ததும், வேறு யாரோ ஒருவர் 'எறும்பு யாகம்' செய்ததும் வெகு நாளைய சங்கதி. இக்காலத்திலும் மலையாளத்தில் ஓர் சத்திரத்தில் எறும்பு உபத்திரவம் பொறுக்கமாட்டாமல், அதற்குப்பரிகாரமாகச் சாந்திசெய்து போஜனமும் தக்ஷிணையும் கொடுத்ததாகச் சமாசாரம். ஆனால் எறும்பின் உபத்திரவமட்டும் குறைந்ததாகக் காணவில்லை. கலிகாலத்திற்கு ஏற்ற பரிகாரம் தேடவேண்டுவதே விவேகிகள் செய்யுங் காரியமென்று நம்போலியர் சிலருக்குக் காணுகிறது. சாந்திக்கும், தக்ஷிணைக்கும் பிரதியாகத் தேங்காய்த் தொட்டியிலிருந்து இறக்கும் தைலத்தைக் கட்டிற்கால் முதலிய விடங்களில் மோதிரமாக இரண்டுமாதங்களுக்கு ஓர்முறை தடைத்துவருவது நலமென்று நம்போலியர் சிலருடைய அநுபவம்.

இப்படியிருப்பதனால், பூச்சிவர்க்கங்களால் நமக்காவது, நமதுடைமைக்காவது எப்பொழுதாகிலும் உபத்திரவம் நேரிட்டால், அதற்குப் பரிகாரம் தேடாமல், அனுவசியமாகப்பயந்து நடுங்குகிறோம். வருங்காற் காப்பதைவிட வருமுன் காப்பது சிரேஷ்டம். வந்தபின் காப்பதைவிட வருங்காற் காப்பது சிரேஷ்டம். சும்மாயிருந்து தவிப்பதைவிட, வந்த பின்னாவது பரிகாரம்தேடுதல் நலம். இப்படிக் கிரமமிருப்பதால், நமக்கும் நமதுணவிற்குதவும் பண்டங்களுக்கும் வைரிகளாகிய பூச்சிகளைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்ளுதல் நலம். பூச்சியென்பதில், பக்ஷிமிருகாதிகள், புழு, கீடம் முதலிய சகலமுமடங்கும். அவைகளுடைய வரன்முறைகளையும், உறை விடங்களையும், அவைக ளதிகரிப்பதற்குக் காரணங்களையும், அவற்றிற்குத் தெரிந்தவரை பரிகாரங்களையும் சுமாராக அறிந்து கொண்டால், மேலுமேலும் யுக்தியை யுபயோகித்து இவ்வறிவை விருத்தி செய்துகொள்ளுவதற்கு அநுகூலமுண்டாகும். இதை யுத்தேசித்துத் தென்னிந்தியாவில் சாமான்னியமாய்க் காணும் பூச்சி வர்க்கங்களையே முக்கியமாகக் கொண்டு இனி ஒழியும்போதெல்லாம் எழுதித் தக்க சித்திரங்களுடன் விளக்கிவருவதாக யோசனை செய்திருக்கிறோம். ஆனால் ஒருவராலேயே பெருங்காரியமாக வேண்டுவது அசாத்தியம். பரீக்ஷைக் கிரமங்களைச் சற்று நாம் விவரித்தபின் ஆங்காங்குள்ளவர்கள் கண்ணைத் திறந்து அவ்வாறே பரீக்ஷை செய்யப் புகுவார்களாகில் காலக்கிரமத்தில் அநேக ரகசியங்கள் வெளியாகும்.

---

## சுதேசமித்திரன்

### பத்திரிகையின் அபிப்பிராயம்

தமிழ்ப் பாஷை விருத்தியடைவதற்கும், தமிழ் மக்கள் நலம் பெறுவதற்கும் இப்பத்திரிகை ஓர் சிறந்த சாதனமாக இருக்கிறது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ் அறிந்தார் ஒவ்வொருவர் கையிலும் இந்தப் பத்திரிகை இருக்கவேண்டுவது மிகவும் அவசியம்.



## 2. பாரதவருஷத்திய ஔஷதங்களும், ஔஷதச் சரக்குகளும்

(71-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

நாம் எடுத்துக்கொண்ட இரண்டு பெரியவிஷயங்களில் தேசிய ஔஷதங்களைக் குறித்துக் கொஞ்சம் சொன்னோம். அது நேராவது நாம் மேற்சொல்லியபடி நீடித்த காலங்கழிந்து ஆகவேண்டியிருப்பதால் அதைவிட்டு ஔஷதச் சரக்குகளைத் தயார்செய்வது, என்றால், நமது வைத்தியர்களுக்கும், அவர்களைவிட நமது மத்தியிலிக்காலத்தில் தழைத்தோங்கும் சர்க்கார் ஆஸ்பத்திரிகள், தர்ம ஆஸ்பத்திரிகள் முதலியவைகளுக்கும், உதவும் படியாக, இத்தேசத்திலுண்டாகும் வேர், தழை முதலியவைகளைத் தயார் செய்வதாம். இது இப்போது வெகு அவசியம். சுலபத்திலும் சாதிக்கக்கூடியது. இப்போது சில வருஷங்களாக அநேக சாமான்களை யிங்கேயே செய்யவேண்டுமென்று பிரயத்தனம் நடந்து வருகிறது. சவர்க்காரம், நெருப்புப்பெட்டி, மெழுகுவர்த்தி, கண்ணாடிச்சாமான், முதலியவைகளுக்காக நமது குமாரர்களிலநேகர் சீமைசீமையாகப் போய்த் தொழில் கற்றுவருகிறார்கள், அவர்களுக்குச்சகாயமும் சுமாராகக் கிடைத்துவருகிறது. ஆதலாலிதுதான் சரியான முகூர்த்தம். யாராகிலும் சிலர் இந்த விஷயத்தையும் யோசித்து இதற்காகச் சில குமாரர்களை யனுப்பித் தொழில் தெரிந்து வரும்படி செய்தால் அவர்களும் பிழைக்கலாம். வேறு அநேகரும் பிழைக்கலாம். ஔஷதம் வேண்டியவருக்கும் விலை சலீசாகலாம். அதெப்படி யென்பதைச் சற்று கவனிப்போம்.

நாம் இப்பிரகரண ஆரம்பத்திற் கூறியபடி நமக்கு வேண்டிய ஆகாரம், உடுப்பு இவைகளுக்கு வேண்டியவைகளை யிங்கேயே செய்வித்துக்கொண்டும், விளைவித்துக்கொண்டும் வருவதற்குப் பல நியாயங்க ளிருக்கின்றனவல்லவா? அவைகளைவிடப் பலத்த நியாயங்கள் ஔஷத விஷயத்திலிருக்கின்றன. முதலாவது, வியாதிவகைகள். இவைகள் பூசாரம், ஜனங்களுடைய ஆகார வியவகார முறை முதலிய பல காரணங்களைப்பற்றி யுண்டாவன. கர்நூல் முதலிய இடங்களில் விஷச்சுரம் அதிகம். மலையாளத்தில் காயல்கள் ஓரமாகவும், மதிராசு முதலிய இடங்களிலும் 'யானைக்கால்' முக்கியம். வைநாடு முதலிய விடங்களில் வயிற்றில் கட்டி பிரபலம். இது போலவே சில ஜாதியாருக்குள் சில வியாதிகள் பிரபலம். இவைகளுக்கெல்லாம் காரணங்கள் சரியாகக் காணக்கூடியவை. மொத்தத்தில் இந்தியாவைப்போன்ற உஷ்ண ராஜ்யங்களில் எத்தனையோ விசித்திரங்களிருப்பதுடன், விசித்திரமான வியாதிகளுமிருக்கின்றன.

ஆனால் கருணாநிதியாகிய பகவானுடைய லீலை யற்புதமாக விருக்கின்றது. பயத்தையவரே யுண்டுசெய்பவரானால், பயநிவாரணத்தையும் அவரேதானுண்டாக்குகிறார். ஆதலாலுஷ்ண ராஜ்யங்களில் வியாதிகள் விசித்திரமானால், பரிகாரங்களும் விசித்திரமே. இதைச் செம்மையாய்க் கவனித்து வந்திருக்கும் பெரியவரொருவர், "வியாதி யெவ்விடத்திற்காணுகிறதோ, அங்கேயே பரிகாரமுமநேகமா யிருக்கிறது," என்கிறார். உதாரணமாக, மேற்சொல்லியபடி. வைநாட்டில் கட்டி யதிகமென்றால் அங்கேதான் அசுவகந்தக் கிழங்கும் வெகு நேர்த்தியாகக் கிடைக்கிறதென்றும், அதை யுபயோகப்படுத்தி வருபவருக்கு அந்த உபத்திரவம் நீங்கிவிடுகிறதாகவும் வதந்தி.

இது ஒரு பெரிய ரகசியம். ஆதலால், செலவு சுருங்குதல் முதலிய வேறு அநேக காரணங்களிருப்பதை நாம் கவனிக்காவிட்டாலும், இந்த ஒரு காரணத்திற்காகவே நமது ஔஷதச் சரக்குகளைப் பரீக்ஷிப்பதற்கும், அவைகளில் நற்காலமுபயோகப்படுபவைகளை யவ்வவ்வுபயோகத்திற்குச் சித்தப்படுத்துவதற்கும், கம்பெனி

கள் ஆகவேண்டும். தக்கபடி யாரம்பித்துத் தொழில் தெரிந்தவர்களைக்கொண்டு காரியம் நடத்தி, அச்சரக்குகளை விலைப்போகும்படி செய்வது இனிப் பிரயாசமன்று. இந்தியா கவர்ன்மெண்டார் சமீபகாலத்தில் தங்களுக்கு வேண்டிய சகல சாமான்களையும் இங்கேகிடைப்பதானால் வாங்குவதற்குச் சித்தமாயிருப்பதாகப் பகிரங்கப்படுத்தி யிருக்கிறார்கள். அவைகளில் ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய சாமான்னியச் சரக்குகள் சுமார் மூன்று கோடி ரூபாய் பெறுமானவை யென்று சொல்லுகிறார்கள். இவைகளனேகமாய், நிலையாவாரை, எட்டிக்கொட்டை, இஞ்சி, இந்திய அபினி, போன்ற இத்தேசத்தில் மலிந்துகிடக்கும் சரக்குகளேயாம். இவைகளைப் பிரான்சு முதலிய தேசங்களுக்கனுப்பி மறுபடித் திராவகமாகவும், சத்தாகவும், சீசாக்களில் வரவழைப்பதில் ஒன்றுக்கு நூறு விலையாகி விடுகிறது.

இதுவரை யிதற்கு என்ன நியாயமிருந்தாலுமினியுமிப்படியே யிருப்பதற்கு நியாயமில்லவேயில்லை. நமது சர்வகலாசாலைகளில் பீ. ஏ. படித்துத் தேறியவர்களி லனேகருக்குப் பதார்த்த குணங் கண்டுபிடிக்க வகைதெரியும். கொஞ்சமதிகமாகத் தெரியவேண்டியதைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். சரக்கு வகைகள், அவைகளைத் தயாராக்கவேண்டிய முறைகள், இவைகளை நம்மில் எல்லா யோக்கியதையும் பெற்று விளங்கும் டாக்டர் ஸ்ரீமான் எம்.ஸி. நஞ்சுண்டராவ் முதலியோர் வேண்டியமட்டில் கற்றிருக்கிறார்கள். தொழிலை யாரம்பிக்க, வேறு சில விஷயங்களில் வேண்டியிருப்பதுபோல, 10-லக்ஷம், 20-லக்ஷம், ஆரம்பத்தில் வேண்டியதுமில்லை. இப்படி யெல்லாச் சௌகரியமும்மிருப்பதில், இனி நெடுநாள் நல்முகூர்த்தம் பார்த்திருப்பது நமக்கு நல்லதன்று.

1860-ம் ௵த்திற்குப் பின் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பலமுறை இவ்விஷயத்தில் பிரயத்தனஞ்செய்து இந்தியாவில் தங்கள் கவர்ன்மெண்டுக்குக் கட்டுப்பட்டு வேலைசெய்யும் டாக்டர்கள் அத்தேசத்திய வைத்திய விசேஷங்களையும், சரக்கு விசேஷங்களையும் தெரியவேண்டுமென்று அதற்காக "வைத்தியரத்னாகர"மொன்று சித்தஞ் செய்து, அதையிங்குள்ள வைத்திய பாடசாலைகளில் பாடஞ்சொல்லவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு வந்திருக்கிறார்கள். என்றாலும் அதுவொன்றும் சரியாகவில்லை. அப்புஸ்தகமே யிப்போது கிடைப்பது அரிதாகிவிட்டது. அதைமட்டும் கிரமமாக ஆரம்பித்து நடத்திவந்திருந்தால் இந்த நாற்பது வருஷத்திற்குள் ஒரு "மிசிரமுறை" யேற்பட்டு, இந்திய வியாதிகளுடன் போராடுவது சுலபமாகி, ஔஷதச்செலவுங் குறைந்துவந்திருக்கும். ஆனால் அம்மாதிரிப்படிப்பு எவ்விடத்திலுமாரம்பிக்கவேயில்லை. அப்புஸ்தகத்தையும், திருத்தி, விளக்கிக் கூட்டிப் புதுப்பித்தவருமில்லை. காபிகள் எங்கெங்கேபோய்ச் சேர்ந்தனவோ அவ்விடத்திலேயே பூச்சிக்கும், தூசிக்கு மிரையாகித் தூங்குகின்றன.

இதுபோதாமல், இப்புத்தகத்திற் கண்டிருக்கும் இந்திய மூலிகைகள், சரக்குகள் வகையராவுக்குத் தேசியபாஷைகள் முக்கியமாயுள்ளவைகளில் வேண்டியபடி ஷரத்துகளெழுதி, அவைகளிருக்குமிடம், குணபாகம் முதலியனவற்றை விளக்கியொரு அனுபந்தமும், தேசிய வைத்தியசிகாமணி ஷெரிப்மோஹிதீன் கான் பஹதூர் அவர்களைக்கொண்டு செய்வித்ததில், அதற்கும் அதேகதியாகி விட்டது.

என்றாலும் மேற்குறித்தபடிச் சர்க்காருக்கும் சிரத்தை யிப்போது அதிகரித்து, ஜனங்களுக்கும் இவ்விஷயங்களில் சிரத்தை யதிகரித்துவருவதால், இனி யிக்காரியத்தை யெவ்வளவு சீக்கிரத்தி லாரம்பித்தாலும் தகும். அது சில ஜனங்களுக்குப் பிழைப்புக் கிடைப்பதுடன் தேசத்திற்கும் ஒரு பெரிய நன்மைக்குக் காரணமாகும். ஆதலால் யோக்கியதை யுள்ளவரில் யாராகிலுஞ் சிலர் இதைச் சீக்கிரம் கைக்கொண்டு சிறுகவாகிலு மோர்விதமாக ஆரம்பஞ்செய்வார்களென்று நமக்கு நம்பிக்கை.



## 3. பரோபகாரம்—புருஷர்களுக்கு ஓர் கடமை

ஸ்ரீமதி சிவகாமியம்மாள்

இந்தப் பூமியில் மனிதர்களாய்ப் பிறந்தவர்களுக்கும் மற்ற ஜீவப் பிராணிகளுக்கும், ஆகாரம், நித்திரை முதலான குணங்கள் சாமான்னியமாய் இருக்கையில், மானிடராய்ப் பிறந்தவர்களுக்குப் பகுத்தறிவு என்னும் ஒரு குணம் விசேஷித்ததாக ஈசுவரனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்திற்காகப் பரம கிருபையுடன் இந்தப் பகுத்தறிவைக் கடவுள் மனிதர்களுக்கு கொடுத்தாரென்பதைத் தத்துவஞானிகள்கூடப் பூராவாக அறிந்ததில்லை. இருந்தாலும் ஒரு விசேஷித்த குணம் கொடுக்கப்பட்டிருப்பதில் இதனால் பிறருக்குத் தீங்கு செய்யாமலிருக்கவும், தன்னால் இயன்றமட்டும் ஏதோ கொஞ்சம் நன்மை செய்யவும், இந்தப் பகுத்தறிவு என்னும் குணத்தை உபயோகப்படுத்தவேண்டியதாக எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

“பிறருக்கு இம்சை செய்யாமலிருப்பதே முதல் தருமம்,” என்ற விதிப்படி ஒருவருக்கும் தீங்கு செய்யாமலிருப்பது நல்ல குணம் தான். ஆனால் அதைப்பார்க்கிலும் உசிதமானது தன்னால் முடிந்தவரை பிறருக்கு உபகாரம் செய்வது. நம்முடைய முன்னோர்கள் இவ்வபிப்பிராயம் கொண்டிருந்தார்களென்பது அநேகம் உதாரணங்களால் தெரியவரும். மற்ற தேசங்களைவிட அதிகமாகவே கோவில்களும், குளங்களும், சத்திரங்களும், இந்தியாவில் புராதனமாக ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் சில ராஜாக்களாலும், தனவான்களாலும், ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அநேக தருமங்கள் ஏழைகளாலும், பரதேசிகளாலும் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆகையால் அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி தன் நயத்தை மட்டுமே கருதாமல், பிறருக்கும் ஒரு விதமான நன்மை செய்யவேண்டுமென்கிற எண்ணம் ஒவ்வொருவரும் உறுதியாய்க் கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன பகுத்தறிவு என்னும் குணம் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், பிறருக்கு நன்மை செய்ய வேண்டுமென்கிற கடமைக்கு இருவகையோரும் கட்டுப்பட்டிருக்கிறார்கள். எல்லாத் தேசங்களிலும், விசேஷமாய் இந்தியாவிலும், ஸ்திரீகள் புருஷர்களுக்கு உட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆகையால் இந்நாட்டில் புருஷர்களுடைய இஷ்டமும், அனுமதியும், உதவியும் இன்றி ஸ்திரீகளால் யாதொரு காரியமும் செய்யமுடியாது.

முன்கூறிய கடமையைச் சரியாய் நிறைவேற்றப் புத்தியை விருத்தியாக்கவேண்டும். இப்போது ஸ்திரீகளைக் காட்டிலும் அதிக படிப்பிருப்பதனால்தான் புருஷர்களுக்குப் புத்தி விசாலமாக இருக்கின்றது. பெண் கல்வி அதிகமாய்ப் பரவாததினாலும், சிறு வயதிலேயே பள்ளிக்கூடம் போவதை நிறுத்திப் புருஷர் வீட்டுக்கு அவர்களை அனுப்பிவிடுவதாலும், பெண்களுக்கு விசேஷமான வித்தை அடைய இடமில்லை. தென் இந்தியாவில் இந்துக்களுக்குள் கோஷா சம்பிரதாயம் இல்லையென்பது மெய்தான். ஆனாலும் ஸ்திரீகள் பெரியவரானபின் வீட்டைவிட்டு வெளியே போய் வித்தை கற்றுக்கொள்வது சுலபமான காரியமல்ல. ஆகையால் இக்காலத்தில் ஸ்திரீகளுக்கு வித்தைகள் கற்பிக்கவேண்டியது அவரவர்கள் புருஷர்களைப் பொறுத்ததாக இருக்கிறது. என்னவிதமாய் ஸ்திரீகளுக்கு வித்தை கற்பித்துக்கொடுத்துப் புத்தியை விருத்தி பண்ணக்கூடும் என்பது படித்தறிந்த கனவான்களுக்குத் தெரியாததன்று. ஆனால் இந்த விஷயமாய் எனக்குத் தெரிந்தமட்டும் பெண்பாலர்களில் ஒருத்தியாகிய என்னுடைய அபிப்பிராயத்தைச் சுருக்கமாக எழுதுகிறேன்,

ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிப்பது அவசியமென்றுகூட நினையாத பரீட்சைகள் தேறின உன்னத பதவியிலுள்ள அநேகம் கனவான்களிருக்கிறார்கள். அவர்களை யுத்தேசித்து இந்த வியாசம் எழுதவில்லை.

ஸ்திரீகளுக்குக் கல்வி அவசியம் என்று மதிக்கும் கனவான்கள் ஏழைகளானாலும் சரி, தனவான்களானாலும் சரி, தங்களுடைய சௌகரியத்திற்கும், இஷ்டத்திற்கும், பொருந்தின வித்தையைக் கற்றுக்கொடுக்க அநேகம் வழிகள் உண்டு.

படித்த கனவான்கள் அவரவர்களுடைய ஜீவனத்தொழிலைச் செய்த காலம்போக மற்ற காலங்களைப் பலவிதமாய்க் கழிக்கிறார்கள். சிலர் இராப்பகலாய்ச் சீட்டாடுகிறார்கள். வேறு சிலர் கிளப்புக்குப்போய் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களில் சத்விஷயமாகவும் பேசுவார்கள். வேறு சிலர் இரவில் வெகு நேரம்வரையில் சதுரங்கம் ஆடுவார்கள். சிலர் தாங்களாகவே நாவல் படித்துக்கொண்டிருப்பார்கள். இவைகளை நல்லது, கெட்டது என்று நான் சொல்ல வரவில்லை. இவ்வளவு நேரங்களில் ஒருமணி நேரமாவது கல்வி கற்பிக்கும் விஷயமாய் அவரவர்கள் சௌகரியத்திற்கேற்றபடி, வீட்டில் செலவழிக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம். இந்த ஒரு மணிநேரமும், எழுதவும், படிக்கவும் மாத்திரம் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதில்லை. உலக விவகாரங்களைப் பற்றியாவது, வேறு நல்ல விஷயங்களைப் பற்றியாவது விவரித்துப் பேசியும், சம்பாஷித்தும், ஸ்திரீகளுடைய புத்தியை விருத்தியாக்கலாம். எந்தெந்த விஷயங்களைக் குறித்து ஸ்திரீகளுடன் சம்பாஷணைசெய்து கற்றுகொடுக்கலாமென்று புருஷர்களுக்குத் தெரிந்த விஷயமே. ஆபீசு விஷயங்களில் மாத்திரம் புருஷர்கள் பெரும்பாலும் மணிக்கணக்கின்படி நடந்து கொள்ளுகிறார்களே ஒழிய, மற்றைய, அதிலும் சொந்த, விஷயங்களில் இதைச் சற்றும்கவனிக்கிறதில்லை.

இவ்விஷயத்தில் $7\frac{1}{2}$ அல்லது 8 என்று குறித்த மணிக்கு என்னவேலையிருந்தாலும் கட்டாயம் வீட்டுக்குத் திரும்பி வந்து விடுகிற கலியாணம் பண்ணிக்கொண்ட ஐரோப்பியனுடைய வழக்கத்தை இந்திய புருஷர்களும் அனுசரித்தால் நல்லது. அப்படிச் சரியாய்க் குறித்தகாலத்தில் தினசரி வீட்டுக்கு வந்தால் தான் வீட்டிலும் கற்றுக்கொடுக்கச் சாவகாசம் ஏற்படும். கற்றுக்கொள்ளுகிறவர்களும் பயபக்தியுடன் படிப்பார்கள்.

சில ஸ்திரீகளுக்குப் படிக்கவும் கற்றுக்கொள்ளவும் இஷ்டமிருக்கிறதில்லையென்று புருஷர்களே சொல்லக் கேட்டிருக்கிறேன். எவ்வளவோ பெரிய காரியங்களைச் செய்யவும், சமயோசிதமாய்ப் பேசியும், நடந்தும், அதிக கஷ்டமான காரியங்களை நிர்வகிக்கவுங் கூடிய புத்திசாலிகளான படித்த புமான்களுக்குக் கபடற்ற புத்தியுடைய ஸ்திரீகளைத் திருத்தி, அவர்களுக்குத் தகுந்தபடி ஏதாவது ஒருவிதமாய் அவர்கள் கற்கும்படி செய்வது ஒரு பெரிய காரியமல்லவென்று நினைக்கிறேன். இவ்விதம் சொல்லுவதாலது தாங்கள் சிரமமெடுத்துக்கொள்ள வேண்டிவரும் என்பலைத உத்தேசித்துச் சுயநலம் கருதி ஸ்திரீகள்மேல் பழி சுமத்துவதாகத் தோன்றுகிறது. ஜனனா மிஷன் உபாத்திச்சியைப் படிப்புச் சொல்லிக் கொடுக்க அமர்த்துவதினால் அதிக பயனில்லை. ஒரு மாதம் உபாத்திச்சியிடம் கற்றுக்கொள்வதைக்காட்டிலும், ஒருமணி நேரம் சகோதரனிடமாவது, புருஷனிடமாவது, கற்றுக்கொள்ளுதல் ஸ்திரீகளுக்கு எவ்வளவோ அதிக நன்மையைக் கொடுக்கும். பெண்களுக்கு எழுதப் படிக்கமாத்திரம் தெரிந்தால் போதாது. புத்திவிசாலமாக வேண்டும். அப்பொழுதுதான் பரோபகாரசிந்தை யுண்டாகும். வேறு சாதியாரைக் கேவலமாய் எண்ணமாட்டோம். பிராம்மண வகுப்பைச் சேர்ந்த புருஷர்கள் ஆபீசுகளிலும், சபைகளிலும் தங்கள் வீடுகளிலும்கூட மற்ற வகுப்பினரைத் தாழ்ந்த ஜாதியாராக மதித்து நடந்து கொள்ளுகிறார்களா? ஈசுவர சிருஷ்டியில் உயர்வும், தாழ்வும், பிறப்பினால் மட்டுமேயில்லை என்ற ஞானம் படிப்பினால்தான் உண்டாகிறது.

வீட்டு வேலைகளும், மற்ற கவலைகளும், ஸ்திரீகளுக்கு அதிகமாயிருப்பதால், அவர்களால் கற்றுக்கொள்ள முடியாதென்றும், கற்றுக்கொடுத்தும் பிரயோஜனமில்லையென்றும், சிலர் சொல்லுவார்கள். தள்ளாத மாமனார் மாமியார், சட்டை சவலைக் குழந்தைகள், இவ்வளவு பேர்களுடைய சௌகரியங்களையும் கவனித்து வேலைக்காரி யில்லாமல் வீட்டு வேலையைச் சீராக நிர்வகித்துக்கொண்டு தினசரி இரண்டு மணி நேரமாவது கற்றுக்கொண்ட மாதர்கள் அனேகரை எனக்குத் தெரியும். இஷ்டம் மாத்திர மிருந்தால் அதைச் சாதிக்கும் வழி தன்னால் ஏற்படும். வேண்டினால் வேரிலும் காய்க்கும், என்பது வெகு நாளைய பழமொழி.

நல்லவித்தையினால் புத்திவிசாலமாகிற தென்பதும், அந்தப் புத்திவிசாலத்தினால் பரோபகாரசிந்தை உண்டாகி நமது தேசத்திலும், இதரதேசங்களிலும், பாடுபட்டு நன்மை செய்தும், செய்துகொண்டு மிருக்கிற ஸ்திரீ ரத்தினங்களுடைய சரிதங்களைக் குறித்துப் பத்திராதிபர்களுடைய அனுமதி இருந்தால் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

---

'பிரிட்டிஷ் ராச்சியத்தில் இந்தியாவுக்குரிய பதவி' என்னும் விஷயத்தை விளக்கி முன் ராஜப்பிரதிநிதியாயிருந்த கர்ஜன் பட்டவர்த்தனர் சென்றமாசம் ஒரு உபந்நியாசம் செய்தார். ஆனால் அதில் இதுவரை யவர் சொல்லாததாகப் புதியது ஒன்றுங்காணோம். இவர் அடிக்கடி பேசுவதற்கும், எழுதுவதற்கும் தக்ககாரணமட்டும் நமக்கு விளங்குவதில்லை.



# விநோத காண்டம்

## 1. மதுரம்—புஸ்தகம் 1.

ஸ்ரீமான் எம். ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்காரவர்கள்

காப்பு

நேரிசை வெண்பா

மதுரமது வார்கமல மானணியம் மாற்குக்
கதிராலங் கஞ்சங் கரனும்—பதியன்பார்
சித்தத்திவ் வாய்மை தெரிவா ரெவரவரே
நித்த மகிழ்வாரிந் நிலத்து.

### அதிகாரம் 1

"வாதாபிகணபதிம்பஜேகம்" (వాతాపిగణపతిం భజేహం) பாடினது எவ்வளவு நன்றாயிருந்தது! பாட்டைப்போலவே வீணை கமகம் வாசிப்பதிலும் தானம் வாசிப்பதிலும் அபார சக்தி. இராக விஸ்தாரம் செய்யும்போது சங்கதிகளும் ஒரிக்கி ஜாதிகளும் விரல்களின் நுனியிலிருந்து ஏதோ மந்திரசக்தியால் ஒழுகிக்கொண்டுபோவது போல் தோன்றவில்லையா? அவளுடைய சாரீரத்திற்கும் வீணா நாதத்திற்கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா? அந்த ஹம்ஸத்தொனி ராகத்தை யிவ்வளவு சம்பிரதாயமாகப் பாடுகிறதை நானிதுவரை கேட்டதில்லை. ஸ்வரம் பாடுகிற பந்தா (வழி) அதி சிலாக்கியமானது. சில இடங்களில் உருக்கமாகப் பாடும்போது எல்லாரும் சித்திரப் பிரதிமைகள் போலிருந்துவிடவில்லையா? இவ்வளவு சாமர்த்தியம் இல்லாவிட்டால் 'வீணைந்நமலம்' என்று பேரேறி யிருப்பாளா? என்று சப் ஜட்ஜி கிருஷ்ணய்யர் சொன்னார்.

"பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய் கமலச் செங்கண், அச்சுதா அமர ரேறே" என்ற திருவாய்மொழிப் பாட்டை இராகமாலிகையாக "நாட்டையில்" ஆரம்பித்து 'ஸ்ரீ' ராகத்தில் முடித்தது எவ்வளவு மனோஹரமாயிருந்தது! அதிலும் "வேண்டேன்" என்ற வார்த்தையை யுருக்கமாய்ப் பாடும்போது எல்லாரும் பக்தி ரஸத்தில் மூழ்கியானந்த பாஷ்பம் சிந்தவில்லையா? என்ன, அப்பா, இப்படிப்பட்ட பாட்டுகளின் அர்த்தம் எவ்வளவு மேன்மையாயிருக்கும்?" என்று கிருஷ்ணய்யர் பெண் மதுரம் சொன்னாள்.

சிரஸ்தாதார் ராமானுஜாச்சாரியார்.—"ஏது? குழந்தைக்குச் சங்கீதத்திலும் தமிழிலும் நல்ல ஞானம்போலிருக்கிறதே. மகா அனுபவசாலிகள் கூட இப்படி ஸாராம்சங்களை யெடுத்துச் சொல்லமாட்டார்களே" என்று சொன்னார்.

கிருஷ்ணய்யர்.—"இவளுக்குச் சங்கீதத்தில் அதிகப் பிரியம். இப்போது வீணையப்பியாசம் பண்ணுகிறாள். தமிழில் ஞானம் உண்டாவதற்காக, நளவெண்பா, குறள் முதலிய நூல்களும் ஸம்ஸ்கிருதத்தில் போஜ சம்புவும் வாசிக்கிறாள்.

இராமா.—"இன்றைக்குப் பாட்டுக் கச்சேரியும், விருந்தும் மிகவும் கோலாகலமாய் நடத்திவிட்டீர்கள்."

கிருஷ்ண.—"என்னவோ நம்மாலான உபசாரம். இந்த ரத்தினஸாமி அய்யரவர்கள் இவ்விடம் தஞ்சாவூர்க்கு இஞ்சியனீராக வந்தது முதல் நமக்கும் அவர்களுக்கும் அத்தியந்த சிநேகம். இப்போது அவர்கள் சேலம் ஜில்லாவுக்கு மாற்றிப் போகிறார்கள். அதினால்தான் விருந்தும் பாட்டுக் கச்சேரியும் நடத்தினது."

இராமா.—"வழியனுப்பு பத்திரிகை வாசித்தாரே அவர் யார்? வாசித்தது மிகவும் சமத்காரமாயிருந்தது."

கிருஷ்ண.—இவர்தான் 'இங்கிலீஷ் கோவிந்தஸாமி ராவு' என்பவர். இங்கிலீஷ் பேசுவதிலும் எழுதுவதிலும் அதிக சமர்த்தராதலால் 'இங்கிலீஷ் கோவிந்தஸாமி ராவு' என்று கியாதி பெற்றவர். இவர் இரத்தினஸாமி அய்யரவர்களுக்குள் ஒரு ஓவர்ஸியர். இவருக்கு இரத்தினஸாமி அய்யரவர்களிடம் அதிக அந்தரங்க விசுவாசம். மேலும் இரத்தினஸ்வாமி அய்யரவர்கள் தன் கீழ் உத்தியோகஸ்தர்களைப் பெருந்தன்மையான அபிமானத்தோடு பக்ஷமாய் நடத்துவார்கள். அம்மா, மதுரம், இப்போது வாசித்த இங்கிலீஷ் பத்திரிகையில் உனக்கிரண்டொருவார்த்தைகளுக்காவது அர்த்தம்தெரிந்ததா?"

மதுரம்.—"என்ன அப்பா அப்படி கேட்டீர்கள், வார்த்தைகள் மாத்திரம் அல்ல, அநேக வாக்கியங்களுக்குக்கூட அர்த்தம் தெரிந்தது. மேலும் நம்முடைய இராயரவாள் வாசிக்கிற மாதிரி இங்கிலீஷ் வாசிக்காதவர்களுக்கும் அர்த்தம் விளங்கும்படி இருக்கிறதல்லவா?"

இராமா.-"குட்டிக்கு இங்கிலீஷிலும் நல்லஞானம் இருக்கிறது. வயதும் பன்னிரண்டு இருக்குமே. கலியாணத்தைப்பற்றி என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? வரன் எங்கே பார்த்திருக்கிறது?"

கிருஷ்ண.—"வரன்களைப் பார்க்கிறதென்றால் சாமான்னியமாயில்லை. வரன்களுக்குக் கிராக்கியான காலம் வந்திருக்கிறது. முற்காலத்தில் பெண்களுக்கு சோபனத்திரவியங்கொடுத்துக் கலியாணம் செய்து வந்தார்கள். தற்காலத்தில் மாப்பிள்ளைகளுக்குத் தாராளமாகப் பணம் கொடுத்துக் கலியாணம்செய்ய வேண்டியதாயிருக்கிறது. இங்கிலீஷ் வாசித்த மாப்பிள்ளையானால் இன்னும் விலையேற்றம்தான். மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேறியிருந்தால் ரூபாய் ஐந்நூறுக்குக் குறையாமலும், எப். ஏ. பரிக்ஷை தேறினால் ரூபாய் ஆயிரத்துக்குக் குறையாமலும், பி. ஏ. தேறியிருந்தால் ரூபாய் இரண்டாயிரத்துக்குக் குறையாமலும் வர சுல்கம் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. அப்படியே கொடுத்து வரனைப் பார்ப்போமென்றாலும் சரியான வரன் கிடைக்கவில்லை. ஏதாவது வாசித்தவனாக இருந்தானே அவலக்ஷண முள்ளவனாகவும், அதிதரித்திரனாகவும் இருக்கிறான். பார்க்கலக்ஷணமாக இருந்தால் ஆஸ்தியும் நாஸ்தி, வித்தையும் பூச்சியம். செல்வாக்கான குலத்தில் பிறந்த ரூபமும் நாகரிகமுமுள்ள பெண்களைத் தரித்திரனும் அவலக்ஷணமுமான வரன்களுக்குக்கொடுப்பதால் பெண்களுக்கு நீடித்த மனக்கிலேசத்தைப் பெற்றோர்களே தேடிவைப்பதாக ஏற்படுகிறது. இளமையும் ரூபமும் கல்வியும் இருந்து தகுந்த சொத்தில்லாவிட்டாலும் பிரயோசனமில்லை. ஏனென்றால் இந்தக்காலத்தில் பி. ஏ. பி. எல். பரிக்ஷைகள் தேறினாலும் மாசம் ரூபாய் முப்பதுகூடக் கிடைக்கிறதில்லை. உயர்ந்த அந்தஸ்துள்ள வீடுகளில் பிறந்த பெண்கள் கஷ்ட ஜீவனம் செய்யும்படி நேரிடுகிறது. சொத்தும் வித்தையுமிருந்து நல்ல ரூபமில்லாவிட்டாலும் சங்கடம்தான். நல்லரூபமும் கல்வியும் நாகரிகமும் உள்ள பெண்கள் குரூபிகளான புருஷர்களிடத்தில் அபிமானிகளாயிருப்பது துர்லபம். மேலும் ரூபமுள்ளவரனைக் கன்னிகையும், வித்தையிற்தேர்ந்தவரனைப் பெண்ணின் பிதாவும், ஐசுவரியமுள்ளவரனைப் பெண்ணின் தாயாரும், நல்ல குலத்தில் பிறந்த வரனைப் பெண்ணின் பந்துக்களும் விரும்புவார்கள் என்ற சாஸ்திரமிருக்கிறதல்லவா! தகுந்த வரனைப் பார்த்துவரும்படி நானும் மனுஷாளைப் பல இடங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். மதுரத்துக்கும் நல்ல அதிர்ஷ்டம் இருந்தால் தானே நல்ல வரன் கிடைப்பான்."



கிருஷ்ணய்யர் இப்படிச்சொல்லவும் மணி பதினொன்றடித்தது. தக்ஷிணத்தில் கவுளி பல பலவென்று சொன்னது. அப்பொழுது இராமானுஜாச்சாரியார் சற்று யோசித்துவிட்டு, இந்தச் சகுனத்தைப் பார்த்தால் மதுரத்துக்குத் தகுந்தவரன் கிடைத்துக் கூடியசீக்கிரத்தில் விவாகம் நடக்கும், என்றார். அந்தச் சமயத்தில் மதுரம் வெட்கத்துடன் முகமலர்ச்சியோடு தலை குனிந்து நின்றாள்.

அந்தத் தருணத்தில் ஒரு பெரியவர் அந்தப் பங்களாவுக்குள் நுழைந்தார். அவருக்குவயது அறுபதுக்கு மேலிருக்கும். சிவந்த நிறமுள்ளவர். வயது அவ்வளவாகியும் அதிகத் தளர்ச்சி யெய்தியதாகக் காணப்படவில்லை. நெற்றியில் விபூதியும் காதில் குண்டலங்களும் அணிந்திருந்தார். இடையில் நீர்க்காவியேறின காஞ்சீபுரம் வேஷ்டி பஞ்சகச்சத்துடன் பிரகாசித்தது. விலையுயர்ந்த வேலைப்பாடுள்ள ஒரு சால்வையை மேல் போர்த்திருந்தார். கையில் ஒரு கடிதமும் வைத்திருந்தார். அவர் வந்தவுடனே கிருஷ்ணய்யர் "மாமா வாருங்கள்" என்றும், இராமானுஜாச்சாரியார் "ஓகோ தீக்ஷிதர்வாளா, வரணும் வரணும்" என்றும், மதுரம் "தாதா வந்தீர்களா, நமஸ்காரம்" என்றும் சொல்லியுபசரித்தார்கள். தீக்ஷிதரும் கிருஷ்ணய்யருக்கு அருகில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

கிருஷ்ணய்யர்.—"ஏது மாமா இராத்திரி இவ்வளவு நேரம்கழித்து வந்தீர்கள்? ஏதாவது விசேஷமுண்டோ? உங்கள் குமாரன் நீலகண்ட சாஸ்திரியின்னவிடத்தில் இருக்கிறாரென்றாவது சமாசாரம் தெரிகிறதோ? அவர் காரியங்களைச் சாதிப்பதில் சமர்த்தர் என்றல்லவா எண்ணியிருந்தேன். இவ்வளவு தாமஸப் பிரகிருதியா? என்ன போய் ஒருமாசத்திற்கு மேலாகிறது. ஒரு கடிதம்கூட வரவில்லையே. கிணற்றில் கல்போட்டால் போலிருக்கிறது. உங்களுக்காவது கடிதம் எழுதியிருக்கிறாரா?"

தீக்ஷிதர்.—"இன்றைக்குத்தான் இந்தக் கடிதம் வந்தது. மைலாப்பூரிலிருந்து எழுதியிருக்கிறான். கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களில் அவ்வளவு சிலாக்கியமான வரன் கிடைக்கவில்லையாம். பட்டணத்தில் உன் மைச்சினி குமாரன் சாமிநாதனைக் கண்டு பேசியதில், அவன் தன்னுடன் வாசிப்பவர்களில் ஒரு தகுந்த பையன் இருக்கிறானென்று சொன்னதாகவும், அந்தப் பையனைப்பற்றி தீர்க்கமாய் விசாரித்துத் தீர்மானித்து அடுத்த கடிதத்தில் எழுதுவதாகவும் கண்டிருக்கிறது. அநேகமாக அனுகூலமாகுமென்று தான் தோன்றுகிறது. குழந்தைக்கு மாங்கிலியஸ்தானமும் குடும்பஸ்தானமும் இருக்கிற பலத்துக்கு சர்வசிலாக்கியமான வரன் கிடைப்பதில் சந்தேகமில்லை. கோசரப் பிரகாரம் பிருகஸ்பதியும் நல்ல ஸ்தானத்துக்கு வந்திருக்கிறார். எல்லாத்துக்கும் அம்பிகை தருமஸம்வர்த்தனி கிருபையிருக்கும்போது நமக்கென்ன விசாரம்?"

கிருஷ்ணய்யர்.—"மாமா ஆசீர்வாத பலத்தால் மதுரத்துக்கு நல்ல அதிர்ஷ்டம் வரவேணும். சுபஸ்ய சீக்கிரம், என்று நாரில் பூத்தொடுத்த மாதிரி வந்தால் தானே மனஸுக்கு உற்சாகமாயிருக்கிறது இனிமேலாவது ஜாக்கிரதையாயிருந்து காரியம் ஸாதித்துக்கொண்டு வரும்படியுங்கள் குமாரனுக்கு எழுதுங்கள்."

தீக்ஷிதர்.—"அப்படியே எழுதுகிறேன். நீலகண்டனுக்குச் சொல்லித் தெரியவேண்டாம். இந்த விவாகவிஷயமான காரியங்களைச் சாதிப்பதில் அவனுடைய சாமர்த்தியம் அபரிமிதம். கூடிய சீக்கிரத்தில் சிலாக்கியமான வரனைத் தீர்மானித்துக்கொண்டே வந்து சேர்வன். எல்லாருடைய மனசுக்கும் திருப்திகரமாகக் குழந்தைக்குக் கலியாணம் நடக்கும்."

இராமானுஜாச்சாரியார் கிருஷ்ணய்யரைப் பார்த்து, "தீக்ஷிதர் வாக்குப்பழுது போகாது. மதுரத்தின் கலியாணம் கோலாகலமாய் நடக்கும். இன்னொரு முறை வீணைக்கமலத்தின் கச்சேரியும், மற்றும் சதிர்முதலிய சகல வைபவங்களும் எங்களுக்கெல்லாம் கிடைக்கும். தடையே இல்லை. வரனைத்தீர்மானித்து வருவதற்கு நீலகண்டசாஸ்திரிகள் ஏற்பட்டிருக்கும்போது சந்தேகமென்ன!" என்று சொல்லிவிட்டு மதுரத்தைப்பார்த்து "மதுரம், என்ன ஒருநாளாவது உன் வீணைகேட்க வேண்டாமா?" என்று சொல்லிவிட்டுத் தன் வண்டியில் ஏறிக்கொண்டு போய்விட்டார்.

தீக்ஷிதரும் அவ்விடத்திலுள்ள ஒருகட்டிலின்மேல் ரத்தின கம்பளம் விரித்துச்சயனித்துக்கொண்டார். மதுரம் அவ்விடத்திலிருந்த ஒரு சோபாவில் படுத்துக்கொண்டு நித்திரை போய்விட்டாள். கிருஷ்ணய்யர் ஏதோ ஒரு ஆழ்ந்த ஆலோசனையுடன் உட்சென்றார். பரிசாரகரும், வேலைக்காரர்களும் அவ்விடத்திலிருந்த வெள்ளிப்பாத்திரங்கள், ரத்தின கம்பளங்கள், லஸ்தர்கள் முதலிய விலையுயர்ந்த சாமான்களை எடுத்து ஒழுங்காய்ப் பதனப்படுத்திக் கொண்டிருந்தார்கள். . . .

(இன்னும் வரும்.)

# வாமதேவன்

## அத்தியாயம் 2

78-ம் பக்கத்தின் தொடர்ச்சி

மறுநாட் காலையில் இரண்டு சவாரி வண்டிகள் தயார்செய்து சுமார் பத்துமணிக்குள் போஜனம் முடித்துப் புறப்பட்டு மாலை ஐந்து மணிக்கெல்லாம் குன்னத்தூர் சென்று சேர்ந்தனர். அங்குச் சம்மந்தி வேதாசலய்யர் தக்க அந்தஸ்தும் செல்வாக்குமுடைய தனிகராதலால், அதற்கேற்றபடிக்கான வுபசார வரிசைகளோடு வரவேற்று, இவர்களுக்கென்றமைத்திருந்த தனி விடுதிக்கிட்டுச் சென்றமர்த்தி, அன்றுமுதல் ஐந்தாறு தினங்களாக வெகுகுதூகலமாய் விருந்துகள் முதலியன நடத்திவந்தார்.

ஆயினும் முன் வேதாசலய்யர் தம்மகள் மங்களாம்பிகையை வாமதேவனுக்குக் கன்னிகாதானஞ் செய்தகாலத்தில் வாசுதேவய்யரவர்கள் கோண்டேர் ஜில்லா ஜட்ஜி யுத்தியோகத்திலிருந்ததுபோ லிப்பொழுது அய்யரவர்களின் மெலிந்த நிலைமையையும் தம் மருமகன் வாமதேவன் வணிஜநகரில் கோர்ட்டு குமஸ்தாவாய்ப் பதினைந்துரூபாய்ச சம்பளத்தில் அமர்ந்ததையும் நினைத்து, அது முதலாகச் சம்பந்திகளிடமிருந்த கௌரவ புத்திகுறைந்து ஒருமாதிரிப்போலி மரியாதை காட்டிவந்தனர். இந்தக் குறித்த சந்தர்ப்பத்தில் அவை பல்வேறு வகைத்தாய் வெளிப்படையாயத் தோன்றியும், நமது வாசுதேவய்யரவர்கள், இதுவே யுலகவியல்பென நன்கறிந்தவராதலால், தம் சிறுமையை யோர்ந்து அடங்கியே ஒழுகி வருகின்றனர்.

சாதாரணமாய்ப் புருஷர்களிம்மாதிரிக்கான விஷயங்களை யத்தனை பொருட்படுத்தாதவராயிருக்கப், பெண்டிரோ அணுவையும் மேருவாக்கிக் குறைகூறுமியல்பினராவர். ஆகவே நமது வாசுதேவய்யரின் மனைவியும் இவருடன் வந்திருந்த மற்றப் பந்துக்களும் அப்போதப்போது வேதாசலய்யர் வீட்டார் தம்மை விருந்துக்கும் மற்று மழைக்குஞ் சமயங்களிலெல்லாம், அசட்டையாய் நடத்துவதாகப் பன்முறை வெளியிட்டுச், சம்பந்திகளுக்குள் இந்த ஐந்தாறு நாட்களில் வெகுவாக மனவூடல்கள் தொடங்கிவிட்டிருந்தன.

இப்படியாக ஒருவாறு இந்தப் பண்டிகைகள் முடிவுற்று, வாசுதேவய்யர் தம் பந்துக்களோடு தென்பொதிகாபுரத்துக்குப் புறப்படவெண்ணிச் சம்பந்தி அய்யர் வீட்டிற்சென்று தாம்பூலமேற்று விடைபெற்றபோது, சம்பந்தி அய்யரிடம் மெதுவாகப் பின்வருமாறுரைத்தனர்:—“நான் கிராமஞ் சென்று குழந்தை வாமதேவனுக்குக் கடிதமெழுதி விடுமுறை பெறச் செய்து, அவன் விடை கிடைத்தவுடன் சுபமாக வோர் சாந்திமுகூர்த்தம் நிச்சயித்துக் கூடிய சீக்கிரத்தில் தமக்கும் வரைந்தனுப்புகிறேன். தமது பந்துக்களை யெல்லாமழைத்துவந்து முகூர்த்தத்தைச் சிறப்பாய் நடத்தித் தரவேண்டும். எப்படியாவது இந்த முகூர்த்தம் நிறைவேறினால் இல்லறவாழ்வை யின்புற நடத்துமியல்பினளான குழந்தை மங்களாம்பிகை மேன்மையாய்க் குடித்தனப்பாங்கை வகித்து நடத்த, வாமதேவனிப்பொழுது தானே சமயற் செய்துண்ணுங் கஷ்டமகலுவதே அவனுக்கிதுவரையிருக்குந் துன்பங்களெல்லாம் நீங்குவதற்கோர் முற்குறியாகும்” எனச்சொல்லி யெழுந்தனர்.

சென்ற நாலைந்து நாட்களாக வேதாசலய்யர் வீட்டார் அங்கு வந்திருந்த சம்பந்திகளைச் சரிவர நடத்தாததுபற்றி அவர் முறையிட்ட செய்திகளை அடிக்கடி வேதாசலய்யரின் மனைவியார் தம் கணவரிடம் ஒன்றுக்குப் பத்தாயேற்றி வந்தவைகளையெல்லாம் மனதில் நினைத்து, முகஞ்சிவக்க, உதடுகள் துடிக்கக், கண்கள் நின்றவிடமில்லாது விழிபிறள, உக்கிராவேசத்தோடு, “நன்றாய்ச்சொன்னீர், உமது மகன் ஊரூராய்த் தேசம்விட்டு நீங்கிக் கூலிவேலைசெய்யப் போகுமிடங்களுக்கெல்லாம் அவனுக்குச்சமையல்செய்துபோடவென்றுதானோ என் குழந்தையை அந்தக் குபேரசம்பத்துப் பயலுடைய கழுத்திற்கட்டினேன். போதாக்குறைக்கு உமது மகன் நாராயணனும் இப்போது அங்கேயே எழுத்துக் கூலியாக வேலைசெய்கிறானாம். சிறுவன் சமையல் செய்து மேனி வாடிவிட்டால் பெண்கொடுப்பவரிசையாரேயென்று தடிக்குழந்தையே சோறாக்கிப் படைத்து மற்றவனைச் சுகவாசியாய் வைத்திருக்கிறானாம். வெகு நேர்த்தி. இனி யென்குழந்தை மங்களாம்பிகை அங்குச்சென்றால், தம்பதிகளிருவருஞ் சேர்ந்து அந்த இத்தனைகொண்ட பயலுக்குபகாரஞ் செய்யவேண்டாமா? உமக்குத்தியோகம்போய், ஆஸ்திகள்போய், வயதுமுதிர்ந்து, வயிற்றுக்குப்போதுமான சோற்றுக்கு வழியின்றி யொடுங்கிக்கிடந்தும், மயதைமாத்திரம் உம்மை விட்டபாடில்லையே. அப்படிக்கான இழிவான வேலைசெய்து உமது வீட்டிலுள்ளவர்களுக்குப் புழுக்கச்சியாயிருக்கவா என் குழந்தையைப் பாழுங்கிணற்றிற் றள்ளினதுபோல உங்கள் வீட்டிற் கொண்டுவந்து கொடுத்தேன்?

(இன்னும் வரும்.)



# புஸ்தக விமர்சனம்

## ஸ்ரீவேங்கடாசலயாத்திரை

கேஸாகபல்லி, செங்கய்யா பீ. ஏ. அவர்களால் எழுதப்பட்டது. விலை அணா-8.

க்ஷேத்திர யாத்திரை செய்பவர்களுக்கு நமது நாட்டில் நாளதுவரை புஸ்தக மூலமாய்ச் சகாயங்கிடையாததுப்பற்றியும், திருப்பதி க்ஷேத்திரத்திற்கு யாத்திரை போகிறவர்கள் லக்ஷக்கணக்காயிருப்பதாலும், மேனாட்டுச் சம்பிரதாயத்தை யனுசரித்து, இச்சிறு புஸ்தகம் மார்க்கதரிசியாக எழுதப்பட்டிருக்கிறது. இது நல்ல தருணம்தான். மெக்காவுக்குப் போகிறவர்களுக்கு உபகாரமாக ஒரு சிறு புஸ்தகம் பம்பாயில் இலவசமாய்க் கிடைப்பதாகக் கேள்வி. க்ஷேத்திர யாத்திரை யெப்போது மிருந்தே நீருமாதலால், இம்மாதிரி மார்க்கதரிசிகளுக்கு உபயோகம் அதிகமேயாகு மென்றெண்ண இடமுண்டு. ஆனால் இப்புஸ்தகத்தில் மேனாட்டு வழக்கப்படி புராணத்தை முற்றுங் கைவிடாது, முக்கியமாயுள்ள ஐதிகங்களைச் சுருக்கிக்காட்டியிருப்பது ஒரு விசேஷம். என்றாலும், 54-வது பக்கத்தில் காணும் கதைபோன்றவைகளை யொழித்து, ஸ்தலத்தில் விஷசுரம் முதலிய உபாதிகள் உண்டாகும் காலம், இடம், முதலியவைகளையுங் குறிப்பிட்டு, வேண்டியமட்டில் நல்ல படங்களையுங் கொண்டு விளக்குவது சாத்தியமாகில், விலை சற்று அதிகமானாலும், வெகு ஜனங்களுக்கு உபகாரமாகுமென்பது நமதபிப்பிராயம். இந்த லக்ஷணங்கள், நவீன நாகரிகமும், கல்வியும் முற்றிய நமது நண்பருக்கும் விதிதமா யிருக்குமென்று நம்புகிறோம்.

2. விவேகபோதினி.—தொ-2 ப-4. ஸௌம்ய வருஷம் அற்பிசிமீ. ஜெனரல் சப்ளை கம்பெனி, மைலாப்பூர்.

இம்மாதாந்தரச் சஞ்சிகையை நமதுபார்வைக்காக அனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். ‘வித்யா விஹாரிணி’ வரன்முறையில் நாம்சொல்லியபடி கடிதம், அச்சு முதலிய லக்ஷணங்கள் நன்குவாய்ந்த சஞ்சிகைகள் நூற்றுக் கணக்காகவிருந்து, செழித்துப், படிப்போர், இயற்றுவோர், இருதிறத்தாருக்கும் நன்மை பயக்கச்செய்வதற்கு இது நல்ல தருணமாதலால், இவ்விஷயத்தில் உழைப்பவருக்குத் தக்கபடி அபிமானிகள் சம்மானம் செய்து ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். விஷயங்களெல்லாம் ரஸமுற்றவைகள். வாசகமும் ருசி கூடியேயிருக்கிறது. சந்தா வெகு சொற்பம். சரக்கின் அருமையை யுத்தேசித்து இன்னும் கூடவேண்டும். ஆதலால் ‘விவேகபோதினி’ சிரஜீவியாக வாழக்கடவதாக.

3. ஆரியமத உபாக்கியானம்.—ஏ. கிருஷ்ணசுவாமி அய்யரவர்கள், ஜெனரல் சப்ளை கம்பெனி, மைலாப்பூர். விலை அணா 2.

இச்சிறு புஸ்தகத்தைப் பார்வைக்கு அனுப்பிய உடைமைகாரருக்கு வந்தனம். சாமான்னிய நீதிகளை விளக்குவதற்கு நன்கமைந்த கதைகளைப் புராணங்கள், இதிகாசங்கள், முதலிய நமது பிராசீனக் கிரந்தங்களிலிருந்து சேர்த்து, வெகு சுருக்கமாகச் சொல்லி, ஒவ்வொரு கதையிலுங்காணும் ‘நீதியைக்’ கடைசியில் சிறப்பெழுத்தில் காட்டியிருப்பது, நல்ல யோசனைதான். ‘உண்மை’யின் பெருமை வேண்டுமானால், சாமான்னியமாய் நமது குழந்தைகள் ‘வாஷிங்க்டன்’ கதையைத்தான் ‘ரெடி’யாய்ச் சொல்லுவார்கள். அவரைத் திரஸ்கரித்துப் பேச நாம் வரவில்லை. ஆயினும், நமது நாட்டு மூத்தோர் சொல்லையும், சரிதையையும் தெரிந்துகொண்டு அவர்கள் விஷயத்தில் பெருமைப் படுவது நமக்கு முதல் தருமமாதலால், குழந்தைகளுக்குதவும்படி யெழுதிய இச்சிறுபுஸ்தகத்தையவர்கள் உபயோகித்துப் பயனடைவார்களென்று நம்புகிறோம். விலை வெகு சரசம்.

---

‘பரகாம்பூரில்’ பலஜாதியாரும் சேர்ந்து ஒரே பந்தியில் விருந்துண்டதாகக் கேட்டோம். பிறகு அதில் சம்பந்தப்பட்ட ‘உயர்குலத்தோரை’ அவருடன் சேர்ந்த மற்ற சனாதன தருமிஷ்டர்கள் புறம்பாக்கப் பிரயத்தனப் படுவதாகவும் கேட்டு விசனிக்கிறோம். மொத்தத்தில் திருஷ்டி தோஷமென்பது தென்னிந்தியாவில் தான் இவ்வளவு பிரபலித்திருப்பது. பந்திபோஜன விஷயத்தில் தகரார் பிராமணருக்குள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மட்டும் ஒருவாறு விசேஷத்திருக்கிறது. இந்தத் துராசாரங்கள் காலக்கிரமத்தில் போய்விடுவது நிச்சயமென்றாலும், நாம் ஒன்றும் செய்யாமலிருப்பது அழகன்று. அப்படிச் செய்வதற்குத் தைரியமற்றவர்கள் மற்றவர்களுக்கு இடறுகட்டையாகவாவது இராமல் தயவுசெய்வது விவேகிகளிடத்தில் முதன் முதற் காணவேண்டிய தரும மென்பதை யவரறிவாராக.

## சமாசாரக் குறிப்புகள்

மைசூர், திருவாங்கூர், முதலிய ராச்சியங்களில் ‘தேவஸ்வம்’ என்றால், கோவில், மடம், முதலியவைகளுக்குரிய சொத்துக்களைப் பரிபாலித்து வரும் ‘தருமகர்த்தர்கள்’ அவைகளைத் ‘தங்களுடைமை போலவே பாவித்து’ வந்ததினிமித்தம் சென்ற எட்டு வருஷத்திற்குள் அந்தந்தச் சர்க்கார் அவைகளைச் சிறிது சிறிதாகச் சுவாதீனஞ் செய்துகொண்டு, வரவு செலவுக் கணக்கு முதலிய திருத்தங்களைச் செய்து வருகிறார்கள். மைசூரில் சென்ற வருஷத்தில் தேவதாசிகளை யொருதகாரு மில்லாமல் போகும்படி செய்து விட்டார்கள். பிரிட்டிஷ்ராஜாங்கத்திலோ, இம்மாதிரி உபத்திரவங்களைப் போககடிக்க வேண்டுமென்று நமது ‘நாயகர்கள்’ கேட்டபோதெல்லாம், 1858-ம் ஆுத்திய மஹாசாஸனத்திற்கு அது விரோத மென்று சொல்லி வந்திருக்கிறார்கள். என்றாலும், கனம், சர். எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஜட்ஜியாயிருந்த காலத்தில் திருப்பதிக் கோயிலுக்கும், அதற்கு வரும் அபாரமான வரும்படிக்கும், ஓர் வழி காட்டிப் புண்ணியங் கட்டிக்கொண்டார். அதை யனுசரித்து ராமேசுவர ‘தேவஸ்வத்திற்கும்’ இப்பொழுது வழிபிறந்திருப்பதாகக்கேட்டுச் சந்தோஷப் படுகிறோம். இப்படியே இன்னும் சில பெரிய தேவாலயங்களுக்கு நல்லகாலம் பிறந்தால், ‘நியாயமும்’ காலக்கிரமத்தில் பிறக்கும் என்பதில் தடையில்லை.

---

“கள்ளன் களவிலும், பாம்பாட்டி பாம்பிலும்,” என்பது வெகு நாளையவசனம். அதை ராஜாங்க விஷயத்திலும் உபயோகிக்கலாம் போலிருக்கிறது. ‘கொரியா ’வில் ஜப்பானியர் தங்கள் அதிகாரத்தைப் பிரதிஷ்டை செய்துகொண்டு, ராச்சியத்தைச் சீர்திருத்த முடன் றதில், சென்ற 30 வருஷங்களுக்கதிகமாகவே ஜப்பான்துரைத்தன முதலியவற்றைச் சீர்திருத்திவந்து, அப்பெருங் காரியத்தில் ‘முதலி’ யாயிருந்த ‘பிரின்ஸ் ஐடோ’ அதற்குப்பலியானார். ஆனால் ‘கொரியர்களுக்கு’ இதனால் ஒரு நன்மையும் கிடைக்கப் போகிறதில்லை ‘ஐடோ’ வுக்கு ஜீவதசையிலிருந்ததைவிட இனிப் பிராபல்லிய மதிகமாகி, அவருடைய அபீஷ்டம் காலக்கிரமத்தில் நிறைவேறுவது நிஜம்.

---

‘வி-டீம’ யென்னும் கிராம முன்சீபு கோர்ட்டுகளைப்பற்றி மதிராசு கவர்ன்மெண்டு தீர்மானம் வெளியாயிருக்கிறது. அனேகம் கலெக்டர்கள் இந்தக் கோர்ட்டுகளைக் குறித்து நல்ல ரிபோர்ட்டுகள் செய்யவில்லை. ஆனால் அதற்குக் காரணமாகத் திவான் பஹதூர் ஸ்ரீமான்-ரகுநாதராயரவர்கள் சொல்லுவதே நமக்கும் சம்மதம். மணியகாரர்கள் 10-அல்லது 12-ரூபாய் மாதச்சம்பளம் வாங்கிக்கொண்டு, தாலூகாச் சேவகன்முதல் சகலருக்கும் நடுங்கிப் பிழைக்கவேண்டியிருந்தால், அவர்களுக்குக் கோர்ட்டு செய்யும் பெருமையும், அந்தக் கோர்ட்டுக்கு நியாயமாயிருக்கவேண்டிய மகிமையும் வெகுவாய்க் குறைந்துதான் வரும்.

---

‘எட்டிக்கொட்டை’யவர்கள் சென்றமாதத்திலும், நடப்பு மாதத்திலும், எழுதியதை ஓர் அம்சத்தில் ஆமோதித்துக் கனம். சர். எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள் சமீப காலத்தில் பகிரங்கமாய்ப் பேசியதற்காக மெத்தவும் சந்தோஷம். வியாதிகள் அனேகமாய்ச் ‘சுதேசி’ யாதலால், ஔஷதங்களும் அப்படியேயிருக்கவேண்டுமென்பதில், நமக்கு ஆக்கிரகம் வெகு அதிகம். ‘கைகண்ட’ ஔஷதங்களை விடாமல், காலதேச வர்த்தமானங்களை யனுசரித்துத் திருத்தியும், புதுப்பித்தும், அவற்றை யனுசரிந்து நூதன முறைகளைத் தேடியும் வருவதுதான் விவேகிகளுக்கு லக்ஷணமென்பது இனி நன்குவிளங்கும்.

---

இவ்வாறு நமது ராஜப்பிரதிநிதியும், செகர்டெரியவர்களும் ஜனங்களுக்குச் சுகமுண்டாகவேண்டிப் பலவிதமாகவுழைத்து வருகையில், இங்கிலாந்தில் பென்ஷன்பெற்றுச் சுகஜீவனம் செய்யும் நமது சிவில் உத்தியோகஸ்தரிலொருவர், இத்தேசத்தவரைக் குரங்குகளுக்கும், குழந்தைகளுக்கும் உருவகப்படுத்திப் பேசியதாகக்கேட்டு விசனிக்கிறோம். ‘நீசஉவமை’ காவியங்களில் சில சந்தர்ப்பங்களில் ஏற்கத்தக்கது. ‘இல்லஞ்சிவாழும் எருது’, என்பது போன்றவையாம். ஆனால், ராஜாங்கத்தில் வெகுநாள் பழகிய இவர் இவ்வாறு சமயந்தப்பிப் பேசியது விசித்திரம். அதற்கு வெகுமதியும் ஏதோகொஞ்சம் கிடைத்திருப்பதால், இனியிவரும், இவரைப்போன்றவரும், பேசுவதிலும், எழுதுவதிலும் கொஞ்சம் லௌகீகத்தையும் கவனிப்பாராக.



சென்னை கவர்னராயிருந்த ஆம்தில் துரை யவர்கள்

தென் ஆப்பிரிக்காவில் நமது ஜனங்கள் படும்கஷ்டத்தை நிவிர்த்திசெய்யும் பொருட்டு இவர்மிகவும் பாடுபட்டுவருகிறார்

# வித்யாவிஹாரிணி


காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள், முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

புஸ்தகம் I. Vol I. | சௌம்யஹு மார்கழிமாதம் December 1909 | சஞ்சிகை 4 No. 4


## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே."

கைக்குவாரும் ராஜப் பிரதிநிதியும்.

இப்பொழுது நமது ராஜப்பிரதிநிதி யவர்கள் இந்தியாவெங்கும் விஜயஞ் செய்துவருவதில் அவர்களுக்கு உதயபுரத்தில் மஹாராணா அவர்கள் விருந்துசெய்யுஞ் சந்தர்ப்பத்தில் பேசியதைச் சென்ற மாசங் குறிப்பிட்டோம். நாளது மாசத்தில் பரோடா சமஸ்தானத்தில் அவருக்கு விருந்து நடந்து அதை யனுசரித்து மகாராஜா கைக்குவார் அவர்கள் பேசியதை அபிமானிகளுக்குச் சுருக்கி உரைக்கிறோம். தமது ராஜாங்கத்தில் குடிகள் க்ஷேமார்த்தமாகத் தான் மூன்று அம்சங்களில் விசேஷ சிரத்தை வைத்திருப்பதாகவும், அவற்றை யனுசரித்தே இந்தியா கவர்ன்மெண்டாரும் சமீபகாலத்தில் விமர்சனம் செய்துவருவதால், அதைத் தனக்கும் பூஷணமாகக் கொள்ளுவதாகவும் மகாராஜா அவர்கள் சொன்னார்கள். அவையாவன. கிராம பரிபாலனங்களைப் பொறுத்தமட்டில், கிராம வாசிகளைக்கொண்டே பஞ்சாயத்து மூலியமாய்த் துரைத்தனம் முக்கால் வரிசையும் நடத்துவதும், பிரைமரி பள்ளிக்கூடங்களில் வித்தியார்த்திகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கவேண்டிய நியமனஞ் செய்திருப்பதும், தவிர லௌகிக வித்தையோடு தருமோபதேசமும் செய்ய ஏற்பாடு செய்திருப்பதும், துரைத்தன நிர்வாக அம்சத்திற்கும் நியாய பரிபாலன அம்சத்திற்கும் அதிகார சம்பந்தமில்லாமற் செய்திருப்பதுமே. இம்மூன்றும் இப்பொழுதுதான் இந்தியா கவர்ன்மெண்டார் கைக்கொண்டு தக்க ஏற்பாடுகள் செய்து வருவதால், மகாராஜா இவர்களுக்கு வழி காட்டியதற்காகப் பிரதிநிதியவர்கள் அவருக்கு வாழி கூறியது நமக்கு வெகு சந்தோஷகரம்.

காகிதம் செய்தல்.

இந்நாளில் ஒவ்வொரு தேசத்திலும் காகிதம் எவ்வளவு செலவாகிறதென்று கணக்குப் பார்த்தால் பிரமிக்கவேண்டியிருக்கும். இந்தியாவிலும்

கல்வி அதிகரிக்குமளவிற்குக் காகிதம் வகைரா அதிகமாகத்தான் செலவழியும். எழுதுவதற்கு வேண்டிய சாதனங்களில் பேனா, பென்சில், மை முதலியன சிறிது சிறிதாக இவ்விடத்திலேயே செய்யப் பிரயத்தனம் நடந்துவருகிறது. என்றாலும், காகிதவிஷயத்தில் மட்டும் வங்காளத்தில் "பாலிமில்ஸ்" "டிடாகர் மில்ஸ்," "பங்கால்பேபர் மில்ஸ்," என்று நடந்துவரும் பிரயத்தனமும், புனாவில் நடந்துவரும் டக்கான் மில்ஸ் பிரயத்தனமும், திருவாங்கூரில் இரண்டொரு முறை வியர்த்தமான பிரயத்தனமும் தான் நமக்குத் தெரிந்தவரை இத்தேசத்தில் காணுவது. ஆதலால், திருவாங்கூரில் சமீபத்தில் சர்க்காருடைய உதவியைக்கொண்டு "லக்ஷ்மிமில்ஸ்" என்பது மறுபடியும் உயிர்ப்பிக்கப் பட்டதாகவும் அதில் வேலை நடந்து வருவதாகவும் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். அவ்வாறே இம்பீரியல் பாரஸ்டு காலேஜிலும் இவ்விஷயத்தில் பரீக்ஷை நடத்துவதற்காக யோசனை யிருப்பது தெரியவருகிறது. இது மெத்தவும் சிலாகிக்கத்தக்கது. ஐரோப்பாவில் கடுதாசி செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் குறைந்து வருவதாகச் சமாசாரம். இந்தியாவிலோ அச்சாதனங்கள் எத்தனையோ இருக்கின்றன வென்பதுதான் நமக்கு நம்பிக்கை. நமது புற்பூண்டுகளில் மூங்கில் முதலிய அனேக வகைகள் காகிதம் செய்வதற்கு வெகு நன்றாய் உபயோகப்படுமாதலால் இவ்விஷயத்தில் பரீக்ஷை நடப்பது வெகு புண்ணியகரமென்றும், அதனால் நமக்குக் காரியம் சீக்கிரத்தில் சித்திக்குமென்றும் நம்புகிறோம். பரீக்ஷைகள் திருப்திகரமாகும் பக்ஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் நெசவு முதலிய தொழில்கள் அபிவிருத்தியாவதற்குச் செய்வதுபோல, இவ்விஷயத்திலும் உதவிபுரிந்து அதை முன்னுக்குக்கொண்டு வருவார்களென்று எதிர்பார்த்திருக்கிறோம்.

**இந்தியத் தென் ஆப்பிரிக்காச் சங்கம், மதிராஸ்.**

தென் ஆப்பிரிக்காவில், வியாபாரமுதலிய விஷயமாய்க் குடியேறியிருக்கும் இந்திய ஜனங்களுக்கு இப்போது நடப்பது வெகு துர்த்தசையென்று நம்மில் அனேகமாய் எல்லோருக்கும் தெரியும். இவர்கள் முதல் முதல் ஆப்பிரிக்காவுக்குத் தாங்களே வேண்டுமென்று போனவர்களல்லர். ஐரோப்பியர்கள் அப்பிரதேசத்திற் குடியேறின காலத்தில் தங்களுக்கு நடக்கவேண்டியிருந்த விவசாய முதலிய பலவேலைகளுக்கும் கூலிக்காரர் வேண்டியிருந்ததினாலும், நம்மவரைப்போல் நாணயமாயும், நயந்தும் வேலைசெய்து கூலிவாங்குபவர்கள் சமீபத்தில் வேறு எத்தேசத்திலும்இல்லையாதலாலும்,அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொண்டார்கள். அவ்வேண்டுகோளுக் கிசைந்து இந்தியாகவர்ன்மெண்டார் இவ்விருதிறத்தாரையும் சில நிபந்தனைகளுக்குட்படுத்தி இவ்விடத்திய ஜனங்களை ஆப்பிரிக்காவிற் போய்க் குடியேறும்படி உற்சாக மூட்டியதில் அனேகர் அவ்விடத்திலே போய்ப்பிழைக்கலானார்கள். பிறகு காலக்கிரமத்தில், கூலிக்காரர்மட்டுமே யில்லாமல் பெருத்த முதலாளிகளும் வேறு பலவகையில் அந்தஸ்துயர்ந்தவர்களும், அவ்விடம் போய்ச் சேர இந்தியர்களுடைய துகை பெருகிற்று. இவர்களுடைய வேலைத்திறத்தையும் நாணயத்தையும் பார்த்து இவர்களுடன் போட்டிகொண்டு வேலைசெய்து முன்னுக்கு வருவது சாத்தியமல்லவென்று அவ்விடமுள்ள ஐரோப்பியக் கூலிக்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் காணவே, நேடால் முதலிய மாகாணங்களில் ஒவ்வொரு துரைத்தனத்தாரும் இந்தியர்களுக்கு விரோதஞ்செய்யலானார்கள். இவர்களில் டிரான்ஸ்வால், ஆரஞ்சு பிரதேசம் ஆகிய இரண்டு நாடுகளிலுமுள்ள போவர் ஜனங்களும் அவர்களுடைய ராஜாங்கத்தாரும் நம்மவர்களை அதிகமாக உபத்திரவித்தார்களென்று அவர்களுடன் இங்கிலீஷ்காரர் போர்



புரிந்து அந்நாடுகளைத் தங்கள் ஆதீனமாக்கிக் கொண்டார்கள். நம்மவர்கள் இனிமேல் தங்களுக்குத் தசைமாறிவிட்டதென்று எண்ணியிருக்க, இப்பொழுது மூன்று வருஷகாலமாக மேற்சொல்லிய இரண்டு நாடுகளில்மட்டுமேயல்லாமல், தென் ஆப்பிரிக்காவில் எல்லாவிடங்களிலும் இந்தியர் விஷயத்தில் ஐரோப்பியருக்கு ஓர் ஐக்கிய மத்தியம்உண்டாகியிருக்கிறது. அதனால் இவர்கள் சங்கியை அதிகரிக்கவொட்டாமலும், ஆஸ்திமுதலியன சேர்த்துக் கொழுக்கவொட்டாமலும், ஒரேஅத்தில் வைத்திருக்க வேண்டுமென்று அதற்குரிய சட்டங்கள் பிறந்திருக்கின்றன. இச்சட்டங்களை ஜாரிக்குக் கொண்டுவரவொட்டாம லிருப்பதற்கு நம்மவர்கள் பிரிட்டிஷ் துரைத்தனத்தாரிடத்தில் எவ்வளவு தூரம் மன்றாடியும், கடைசியில் அவர்கள் தங்களால் ஆகாதென்று சொல்லிவிட்டார்கள். ஆதலால் நயத்திலோ,பயத்திலோ நம்மவர்களாலேயேதான் இவர்களுக்கு மறுபடி சௌக்கியங்கிடைக்கவேண்டியிருப்பதால் அதற்கு இந்தியாவில் பிரயத்தனம் பலமாக நடக்கவேண்டிய அவசரம் வந்திருக்கிறது. தெய்வாதீனம் இவ்விஷயத்தில் நமக்கு இந்தியா கவர்ன்மெண்டாரின் சகாயமிருப்பதுடன் இங்கிலாந்தில் அனேக நண்பர்களும், நமக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். இவர்களில் வெகு முக்கியமானவர் முன் நமது கவர்னராக விளங்கிப்பிறகு சிறிதுகாலம் கவர்னர் ஜெனரலாகியுமிருந்த ஆம்தில் பட்டவர்த்தனராம். சென்ற இரண்டு வருஷகாலமாக இவர் இக்காரியத்தில் சிரத்தைகொண்டு பிரிட்டிஷ் துரைத்தனத்தாரைக் கேள்விகள் கேட்டும், பேசியும் எழுதியும் வந்திருப்பதற்காக நாம் அவருக்கு எத்தனையோ நன்றியுள்ளவராயிருக்கவேண்டும்.

இதுகாரணங்கொண்டு மதிராஸிலும், சென்றமாசத்தில் நாம் மகுடத்தி லெடுத்திருக்கும் பெயர்பூண்ட சங்கம் ஒன்று ஏற்பட்டு, அதற்கு நாயகராக மதிராஸ் சர்க்கார்பிஷப் வோயிட்ஹெட்பட்டவர்த்தனர் ஒப்புக்கொண்டதற்காக இரட்டைச் சந்தோஷப்படுகிறோம். இச்சங்கத்தில் நம்மில் அனேக பிரபல புருஷர்கள் சேர்ந்திருப்பதாலும், இம்மாதிரியான சங்கங்கள் இந்தியா வெங்கும் ஏற்பட்டு இவ்விஷயத்தில் நமது ஜனங்களுக்கு ஆக்கிரகம் அதிகரித்து வருவதாலும், ஐரோப்பிய அனுகூலமுமிருப்பதாலும், ஈசுவரசகாயமுமிருக்குமென்றும், நமது அபீஷ்டம் சீக்கிரம் நிறைவேறுமென்றும் நம்புகிறோம்.

**பாசன வகைகள்.**

இந்தியாவிலுள்ள ஜனங்களுக்குக் கிருஷியே முக்கிய ஜீவனோபாய மென்றும், அக்கிருஷியும் அனேகமாய் "வானம் பார்த்த" தென்றும் நெடுநாளைய அனுபவமாதலால், பிரிட்டிஷ் இந்தியத் துரைத்தனத்தார் 1858-ம் ஞூத்திய மஹா சாஸனத்தில், குளம், கிணறு முதலியன வெட்டுவதையும் ஏரிகள் கட்டுவதையும் வாய்க்கால்கள் வகுப்பதையும் பெரிய தருமமாகக் கொண்டார்கள். ஆனால், முந்தி இப்பாரத வருஷத்தில் ஏற்பட்டிருந்த ஹிந்து மகம்மதீய துரைத்தனத்தார்களுடைய கொள்கைக்கும் இதற்கும் ஓர் விஷயத்தில் வித்தியாசமிருந்தது. நமது தேசத்தில் பழைய காலங்களில் நிர்மாணிக்கப்பெற்று எங்கும் காணும் சிற்றேரிகள், அணைக்கட்டுகள், முதலிய பாசனத்திற்குதவும் சாதனங்களைக் கவனிக்குமிடத்து, அவைகளை இயற்றிய புண்ணியவான்கள் தாங்களதற்காகச் செலவிடும் தொகைக்குச் சரியான வட்டி கட்டுமா, கட்டாதாவென்று யோசித்தவர்களேயல்லர் என்பது நிச்சயம். ராஜகாரியங்களில் வரவு செலவு கணக்கு வைக்காமலும், முன் பின் யோசியாமலும்,காரியங்களைச் செய்வது க்ஷேமகரமென்று நாம் சொல்லவரவில்லை. ஆனால் தீர்க்கமாய் ஆலோசித்துப் பார்க்குமிடத்து, அவர்கள் செய்துவந்தது சாசுவத தருமமென்று இப்பொழுது நன்றாய்த் தெரிகிறது.

ஏனெனில், பிரிட்டிஷ் இந்திய துரைத்தனத்தார் மேற்சொல்லியபடி கிருஷிகர்களுக்கு வேண்டிய தண்ணீர் சேகரித்துக் கொடுப்பதற்குப் பிரயத்தனஞ் செய்வதாகச் சொல்லியதில், சென்ற நூற்றாண்டு முடியும்வரை தாங்கள் தொடங்கிய பாசனக்காரிய மொவ்வொன்றிலும் ஆகும் செலவிற்கு வட்டியென்ன கட்டும், என்பதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு செய்துவந்தார்கள். ரயில் போடுவதில், பிரயாணிகளாலும், சரக்குகளாலும் போட்ட முதலுக்கு வட்டி கட்டுமாவென்று பார்க்கவேண்டுவது எப்படி அவசியமோ, அப்படியே வீணாய்ப்போகும் மழைநீரை மனிதருக்கும் பசுக்களுக்கும், புற்பூண்டுகளுக்கும், உதவும்படி செய்வதில் செலவாகும் தொகைக்கும் வட்டிக்கணக்கை முதலில் பார்த்து, அதற்குத் தக்கபடி இதைத் தொடவேண்டுமென்றும், இதைவிட வேண்டுமென்றும் கிரமமேற்பட்டது. ஆனால், 1897-ம் ௵த்தில் ஐக்கிய மாகாண முதலியவைகளில் க்ஷாம மதிகரித்துப் பொருள் நஷ்டமும், உயிர்ச்சேதமும் பிரபலிக்கவே, நம்மவர்கள் முறையைக் கேட்டும், அதற்கு முன்னுள்ள அனுபவத்தைக் கவனித்தும், இந்தியா கவர்ன்மெண்டார் கமிஷன் ஒன்று ஏற்படுத்தி, நமது நாட்டிலெங்குமுள்ள அனுபோகஸ்தர்களை விசாரித்து, பிறகு பாசன விஷயத்தை இருவகைப்படுத்தியிருக்கிறார்கள். அவையாவன, முற்சொல்லியபடி வட்டிக் கணக்குப் பாசனமும், நமது சனாதன தருமப்படி புண்ணியக் கணக்குப் பாசனமுமேயாம். பிற்சொல்லியதில், வட்டி சரியாகக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், அது விளைச்சலை யதிகரித்து க்ஷாமத்தைப் பரிகரிக்க வெகு சிலாக்கியமான சாதனமென்று நமது முன்னோர்கள் முற்காலத்தில் ஏதோ குருட்டுத்தனமாய்த் தெரிந்துகொண்டிருந்ததை, அனுபவபூர்வகமாய் நமது துரைத்தனத்தாரும் சரியென்று ஒப்புக்கொண்டிருப்பதால், இனி நமக்கு நல்ல காலந்தான். தவிரச் சென்ற வருஷத்திய பாசன ரிபோர்ட்டைக் கவனிக்குமிடத்து வட்டிக்கணக்குப் பாசனவகையில் நூற்றுக்கு $7\frac{1}{2}$ வீதம் வட்டி தேறியிருப்பதால், இனி தற்காலம் நடப்பிலுள்ள மூன்று வட்டி போக, மிகுதியாகுந் தொகையையாவது, வருஷாவருஷம் புண்ணியப் பாசனத்திற்கு உதவி வருவார்களாகில், அது துரைத்தனத்திற்கும், தேசத்திற்கும் சாசுவத க்ஷேமத்தை விளைவிக்குமென்பதிற் தடையில்லை.

ஜப்பானும், கோமாமிசமும்.

பதினைந்து வருஷங்களுக்குமுன் சீனர்களுக்கும் ஜப்பானியருக்கும் நடந்த யுத்தத்தில் ஜப்பானியர் சீனரை முறிய அடித்தவுடன், ஏதோ ஆசியாவிலும் ஓர் அற்புதம் நடந்ததாக நம்மிலனேகர் எண்ணினார்கள். பிறகு, ஐந்து வருஷங்களுக்கு முன் ஜப்பானியர் ருஷியரை முறிய அடித்து ஜெயபேரி முழக்கியதும், ஆச்சரியத்திலும் ஆச்சரியமென்று எல்லாத்தேசத்தவருங் கொண்டாடி, அதுமுதல் ஜப்பானியர் விஷயத்தில் நம்மவர்களுக்குப் பல காரணங்களால் பக்தி அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நமது குமாரர்களி லனேகர் வருஷாவருஷம் அவ்விடத்தில் தொழில் கற்றுவரப் போகிறார்கள். தவிர ஜப்பானியர் விசேஷமாய்ப் பௌத்தராதலால் நமக்கும் அவருக்கும் "ரத்தசம்மந்தம்" இருப்பதாக நாம் பாவித்து வருகிறோம். ஆதலால், அவர்களுடைய உத்தரோத்தரக்ஷேமத்தில் நமக்கும் அக்கறை யிருப்பது சகஜம். அவர்களிடத்திலிருந்து லௌகிக விஷயங்களில் நாம் கற்றுக்கொள்ளவேண்டியவை அநேகம். என்றாலும் நாம் அவர்களுக்குத் தருமோபதேசம் செய்திருப்பதி னிமித்தம் இரண்டொரு விஷயங்களில் அவர்கள் நம்மை அனுசரிப்பது நலமெனக் காணுகிறது. தற்காலம் அவர்கள் கோமாமிச பக்ஷணம் செய்ய ஆரம்பித்துவிட்டார்களென்றும், அதற்காக ஆஸ்திரேலியா முதலிய விடங்களிலிருந்து பசுக்களை "வருத்துவதற்கு" ஏற்பாடு செய்திருப்பதாகவும் கேட்டு மிகவும் விசனிக்கிறோம். ஆதலால், நம்மவரான ஸ்ரீமான்-லப்சங்கர் லக்ஷ்மிதாஸ்ஜீ அவர்கள் ஜப்பானியச் சக்கரவர்த்தி யவர்களுக்குச் சமீபகாலத்தில் செய்துகொண்ட மனுவை நாம் மனப்பூர்வமாய் ஆமோதிக்கிறோம். அம்மனுவில் மேற்படியார் இதனால் விளையக்கூடிய அனர்த்தங்களை விவரித்தெழுதியிருக்கிறார். கோமாமிச பக்ஷணம் செய்வது, சிலவிசித்திர வியாதிகளுக்குக் காரணமாகிறதென்றும், தேகபலத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் அது அவசியமில்லையென்றும், அனாவசியமாகப் பணச்செலவாகிறதென்றும், பௌத்த மதஸ்தர்களாகிய அவர்கள் இந்த அதருமத்திற்கு உடன்படக்கூடாதென்றும், அவர் வற்புறுத்தித் தக்க நியாயங்களைக்கொண்டு விளக்கியிருக்கிறார். ஜப்பானியர்கள் எவ்விஷயத்திலும் சொகுசுக்காகக் காரியஞ்செய்பவரல்லாதலால், மேனாட்டில், இவ்வழக்கமிருக்கிறதென்கிற நியாயத்தையே முன்னிட்டு, இதை நாகரீகக்குறியாக வெண்ணி இவ்வழக்கத்தைப் பிரபலப்படுத்தமாட்டார்களென்று நம்புகிறோம். கொஞ்சகாலத்திற்குமுன் ஜப்பானியப் பிரபுக் குடும்பங்களிலுள்ள ஸ்திரீகள் ஐரோப்பிய வழக்கப்படி உடை உடுக்கப் பிரயத்தனப்பட்டபோது, பிரஸிடென்ட் கிளவிலண்டு என்னும் அமெரிக்கா ராஜ்ஜியாதிபதியின் மனைவியார் ஜப்பானிய மகாராணிக்கு ஓர் கடிதமெழுதி, ஐரோப்பிய வழக்கத்தில் இடுப்பை உடுக்கையாக்கிக்கொள்ளுவதற்கும், பாதத்தைச் சிறிதாக்கிக்கொள்ளுவதற்கும், அவர்களிலேற்பட்டிருக்கும் இம்சைகளை வருணித்து, அவ்வழக்கத்தைக் கைப்பற்றவேண்டாமென்று தன்னாலானமட்டுஞ் சொல்லித் தடுத்தாராம். அது பயன்படாமல் இப்பொழுது அநேக ஜப்பானியா ஸ்திரீகள் சனியனை விலைக்கு வாங்கிக்கொண்டு உபத்திரவப்படுவதாக வதந்தி. ஆதலால், கோமாமிச விஷயத்திலும், ஜப்பானியர்கள் அவசரப்பட்டேதாகிலுஞ் செய்து, பிறகு அதை மாற்றுவதற்காகாமல் எங்கே உபத்திரவப் படுவார்களோ என்று சங்கித்து, அவர்களுடைய க்ஷேமார்த்தமாய் நடக்கு மிப்பிரயத்தனத்தை நாமும் ஆமோதிக்கிறோம்.



துரைத்தன விமர்சனம்.

முதல் நம்பரில் நாம் விவரித்தபடி சட்டநிரூபணச் சபையில் நடக்க வேண்டிப் பிறந்த விமர்சனச்சட்டம் ஜாரிக்குவந்துவிட்டது. அதை யனுசரித்து நமது நாட்டில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க யோக்கியதையுள்ள பெரியமனுஷர்களுடைய ஜாப்தாவும் தயாராகி விட்டது. மதிராஸ் சட்டநிரூபணச் சபையில் நமக்குப் பிரதிநிதிகளாயிருந்து நமக்கு வேண்டியபடி யெல்லாம் உபகாரம் செய்வதற்குச் சில நண்பர்களும் விக்ஞாபன பத்திரிகைகள் வெளியிட்டுத் தங்களுடைய பிரவரங்களைச் சொல்லி வருகிறார்கள். வேறு விதமாயும் தமுக்குகள் அடிபடுகின்றன.

இதெல்லாம் நமக்குச் சந்தோஷமே. ஆனால் இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் கக்ஷி வேறாக்கி, ஒரு நாட்டிலேயே பிறந்து இறக்க வேண்டிய ஜனங்களைக் கூறுகளாக்கி விடுவது ராஜாங்க விஷயத்திற்கு நிரந்தரமாய் க்ஷேமத்தை விளைவிக்கக் கூடுமோ என்பதில் நம்மவர்களான விவேகிகளுக்கு அபிப்பிராயம் பேதப்பட்டிருக்கிறது. உதாரணமாகத் திருவாங்கூர் சமஸ்தானம் திவான்ஜியாயிருந்து பென்ஷன் வாங்கும் திவான் பஹதூர் ஸ்ரீமான்-கிருஷ்ணசுவாமி ராயரவர்கள் இதனால் உத்தரோத்தரம் இருதிறத்தாருக்கும் தீமையுண்டாகலாமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் காரியம் முடிவாய் விட்டபடியால் இனி அதைப்பற்றி வியவகரிக்காமல், மேல் நடக்கவேண்டியதை யோசிப்பது தான் விவேகிகளுக்கு லக்ஷணம். மனுஷ்ய ஆசாரங்களில் யாவும் காலதேச வர்த்தமானங்

களை யனுசரித்து மாறுபவைகளேயாதலால், இந்த முறை அனுபவத்தில் நல்லதல்லவென்று கண்டால், புத்திமான்களான நம்மவர்களும் துரைத்தனத்தாரும் ஏகோபித்து வேண்டிய திருத்தங்களைச் செய்துகொள்வார்களென்பதிற் சந்தேகமில்லை.

மொத்தத்தில் பழைய அனுபவத்தைப் பார்க்குமிடத்து ஒரே தேசத்தில் வாழுங் குடிகளுக்குள் ஒற்றுமை அதிகரிப்பது நல்லதே தவிர, வேற்றுமை அதிகரிக்கக்கூடாதென்பது யாரும் ஒத்துக்கொள்ளவேண்டிய விஷயம். இந்தியாவில் மகம்மதியர்களும், இந்துக்களும் முன்னொரு காலத்தில் மதவிஷயமாக எப்போதும் குழப்பமுண்டாக்கிக்கொண்டேயிருந்தார்கள். பிறகு அதனால் இருதிறத்தாருக்கும் நஷ்டமே தவிர லாபமில்லையென்று கண்டு, இருகக்ஷியிலும் விவேகிகள் உழைத்து இவர்களை மதவிஷயத்திலுங்கூட ஐக்கியமத்தியம் உண்டாக்கவேண்டிய பிரயத்தனம் நடந்துவந்தது. அதை ஆரம்பித்த சூத்திரதாரர்களுடைய மனோரதம்முற்றும் நிறைவேறவில்லையென்றாலும், கலகம் அனேகமாய் அடங்கி, அவரவர் காரியத்தை அவரவர் பார்த்துக்கொண்டு போவதற்கு இம்மகாபுருஷர்கள் முக்கிய காரணர் என்னல் தகும். ராஜாங்க விஷயத்திலும், மற்றுள்ள தொழில் முதலிய பொது விஷயங்களிலும், உழைத்து வருபவர்கள் இந்தப் பெரிய ரகசியத்தைக் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு உபயோகப்படும்பொருட்டு, இச் சூத்திரதாரர்களுக்குள் உத்தமர்களான ஸ்ரீ கபீர்தாஸ ஸ்வாமிகளுடையவும், அவருக்குச் சிஷ்யர்களான வேறிரண்டொரு குருக்களுடையவும், சரித்திரத்தை இச்சஞ்சிகையில் விளக்குவோம். காதிருப்பவர்கள் கேட்டுத் தொன்முறையின் பயனை யடைவாராக.

**தீண்டாதவருக்கு நற்குறி.**

சென்ற மாசத்தில் இப்“பாவங்கள்”விஷயத்தில் பம்பாயிலும், வேறிடங்களிலும், நடந்த பேச்சுகளைப் பற்றிச் சற்று விவரித்தோம். நாம் எழுதியபிறகு மதிராஸிலும், ஓர்பெருஞ்சபை கூடி இவர்களுக்கு நடக்கும் அந்நியாயங்களை வெகு சாதுரியமாக வருணித்துப் பல விவேகிகள் பேசினதாகக் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். ஆனால், நமது ஐரோப்பிய நண்பர் ஒருவர் சொல்லுவதுபோல, நாம் பேச்சுடன் நின்று விடுவது திருப்திகரமாயிருக்கவில்லை. ஆதலால், பிரதிமாசமும் இவ்விஷயத்தில் நடவடிக்கைகள் ஏதாகிலும் நடந்திருக்கும் பக்ஷத்தில் அவைகளை அன்பர் அறிவதற்காக வர்த்தமானக் கொத்தில் சேர்த்து விடுவதாக உத்தேசம். சென்ற ஒரு மாசத்திற்குள்ளாக இரண்டு மூன்று வெகு விசேஷமான சங்கதிகள் இவ்விஷயத்தில் நடந்திருக்கின்றன. (1) பங்காளத்தில் பரிட்பூரில் பாபு ஸ்ரீமான்-அம்பிகாசரண முஜ-ம்தார் அவர்களுடைய லௌகிக சாதுரியத்தினாலும், பேச்சு மகிமையினாலும், “நாம சூத்திரர்களுக்கும்” அதிலுந் தாழ்ந்தவர்களுக்கும், ஓர் நல்வழி பிறந்ததாகவும், பழைய ஆசாரத்தையே குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கும் பண்டிதர்களும் இவ்விழிகுலத்தார் விஷயத்தில் இனி இவ்வளவு நிஷ்கண்டகமா யிருப்பதில்லையென்று பிரதிக்ஞை செய்ததாகவும், அதனால் இதுவரையிலும் அவர்கள் செய்யக்கூடாத அநேக கைங்கரியங்கள் இனி நடப்பதற்கு வகையேற்பட்டிருப்பதாகவுங் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். (2) மலையாளத்தில் சர்க்கார் பாடசாலைகளிலும், இதர பாடசாலைகளிலும், ஈழவர், தீயர் முதலிய வகுப்புப் பிள்ளைகளுக்குச் சேரயோக்கியதை இல்லையென்று இதுவரை ஏற்பட்டிருந்த பதிவு சற்றிளகித் திருவாங்கூரில் சர்க்கார் மூலியமாகவும், வேறிடங்களில் அபிமானிகள் மூலியமாகவும், இவர்கள் இனிப்பள்ளிக்கூடத்திற் சேர்ந்து நால்வரைப்போல் முன்னுக்கு வருவதற்கு யோக்கியதாசித்தி கிடைத்திருக்கிறது. (3) தியாஸபி சபை மெம்பர்கள் ஆங்காங்கு பஞ்சமர்களுக்குப் பள்ளிக்கூடமேற்ப



காலஞ் சென்ற ஸ்ரீமான் ராமேச சந்திர தத்தர்.



டுத்தித் தொழில் கற்பித்து வருவதோ வெகு நாளாய் நடந்துவரும் காரியம்.

**காலஞ் சென்ற ஸ்ரீமான் ராமேச சந்திர தத்தர்.**

சென்ற மாதத்தில் பரோடாவில் இம்மகா புருஷர் தேகவியோகமடைந்ததைக் கேட்டு மெத்தவும் விசனிக்கிறோம். இதனால் நமது தேசத்திற்குண்டான நஷ்டம் இவ்வளவென்றில்லை. இவருடைய ஜீவன சரித்திரத்தையும், இவர் நமது தேச க்ஷேமத்திற்காகப் பட்டிருக்கும் சிரமத்தையும் இங்கு விவரிப்பதற்கில்லை. ஆனால் அது அவசியமுமன்று. ஏனெனில், சேது ஹிமாசலம் இவற்றிற்குட்பட்ட இப்பாரத வருஷத்தில் இவர் பெயர் விளங்காத இடமுமில்லை. இவரைக் கொண்டாடாத ஜனங்களுமில்லை. கலெக்டர்களை யாளுங் கம்மிஷனர் உத்தியோகம் வரை யுயர்ந்து சர்க்காருக்கு நாணயமாய் நடந்து கொண்டது சாமான்னியம் என்றாலும், பின்னிட்டுத் தம்மவர்களான மகா ஜனங்களுடைய க்ஷேம நிமித்தம் இவர் உத்தியோகத்தை யொழித்து விட்டுச் சென்ற பதினைந்து வருஷங்களுக் கதிகமாகவே யுழைத்து வந்ததின் பெருமையைக் கிரமமாக விவரிக்கபுகுந்தால் வெகுதூரம் பெருகிவிடும். நமது நாயகர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விஷயத்தில் தேர்ச்சியடைந்தவர்கள். ஸ்ரீமான்-தத்தரோவெனில் பல பெரியவிஷயங்களில் தேர்ந்து பிரசித்தி பெற்றவர். நமது நாட்டாரை அறியாமையினால் அங்கிலேய ராஜ்ஜியத்தார் இகழாமலிருக்கும்படி, நமது தேசத்திய பிராசீன சரிதத்தை லந்தன் யூனிவர்ஸிடியில் சரித்திரப்பண்டிதராயிருந்தும், வேறு பெரிய இடங்களில் பேசியும் வந்தது ஒரு பேருபகாரம். இந்தியத் துரைத்தனத்தாரை நிலவரி விஷயத்தில் மிதமாயிருக்கும்படிப் பல நியாயங்களைக் கொண்டு வெகுகாலமாக விடாமல் வாதாடி வந்ததில், அவர்கள் அவ்விஷயத்தில் சில்லரைத் தோஷங்களாவது இருக்கின்றன வென்று ஒப்புக்கொண்டதும், இனிஅவ்விஷயமாய் ஏதாகிலும் நமக்கு நற்பயனுண்டாகும் பக்ஷத்தில் அதுவும் இம்மகானுடைய பிடிவாதத்தினாலும், உத்தியோக அனுபவத்துடன் கூடிய நியாய பலத்தினாலும் கைகூடியதென்பதில் ஆக்ஷேபமேயில்லை.

கல்வி முதலிய சத்விஷயங்களுக்குப் பணம் போதாதென்று இந்தியா கவர்ன்மெண்டார் கூறியபோதெல்லாம், இன்னின்ன வகைகளிற் பணம் அனாவசியமாகச் செலவாகிறதென்று எடுத்து விளக்கி, நம்மவர்களை மேலுமேலும் பொறுப்புள்ள உத்தியோகங்களிலமர்த்தினால், வரவுக்கும் செலவுக்கும் சரிக்கட்டலாம், வேண்டிய நற்காரியங்களையும் செய்யலாமென்று வெகுநாளாய் இவர்வாதஞ்செய்து வந்ததின்பலன் இப்போது இரண்டுவருஷ காலமாகத்தான் பிரத்தியக்ஷமாகிவருகிறது. ஸ்ரீ ராமாயணம், மகாபாரத முதலிய காவியங்களின் அருமை அங்கிலேயர் அறிவதற்காக ஆங்கிலபாஷையில் செய்யுள் ரூபமாக எழுதிப் பெருமையடைந்திருக்கிறார். தவிர ராஜாங்க விஷயமாயும், பாரதீய வைசிக தத்துவ விஷயமாயும் எழுதிய புஸ்தகங்களும், பத்திரிகைகளும், செய்த பிரசங்கங்களும் பல. கடைசியாகப் பரோடா மகா ராஜாவின் நிர்ப்பந்தத்தின் பேரில், அவருடையவும் அவரது பிரஜைகளுடையவும் க்ஷேமத்தை யபேக்ஷித்துத்திவான் வேலையை யொப்புக்கொண்டதில், சிரமம் அதிகரித்து வியோகமடைந்தாரென்று நமக்கு நிச்சயம். வயது 61 தான் ஆகிறது. இரண்டு வருஷத்திற்குமுன் நமக்கு இவரைப்பார்க்கும்படியான பாக்கியமிருந்தபோது, இனிப்பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு ஆக்ஷேபமில்லையென்றெண்ணினோம். ஆனால் ஈசுவர சங்கற்பம் வேறாகிவிட்டது. ஆதலால், இவர் பேசியதும், எழுதியதுமான விஷயங்களைத் திரட்டிப் பிரசுரிப்பதற்கு யாராவது முயல்வார்களென்றும், இவருடைய சாந்தமும், விவேகமும், ஆராய்ச்சியின் பெருமையும், காவிய முதல் கணக்கு ஈறாகப் பலவிதக் கலைகளிலும் தேர்ந்த அற்புதமும், தேச க்ஷேமார்த்தம் உழைத்ததும், உயிரிழந்ததுமான தரும குணமும், இனியெக்காலத்தும் நமது குமாரர்களுக்கு நந்தா விளக்காகி யுபயோகமதிகரிக்குமென்றும் நிச்சயமாய் நம்புகிறோம்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திர ஆராய்ச்சி

(97-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி.)

பாவலரேறாகிய நமது அருணகிரி நாதரது கீர்த்தியைப் புகழாத நாவே நந்தமிழ்நாட்டிற் கிடையாது. இலக்கண இலக்கியம் நன்கு கற்றவராகிய வில்லிபுத்தூரருக்கும் நமது சந்தப் பாவலருக்கும் ஒருமுறை தருக்க முண்டாயிற் றென்றும், அப்போது ஆசு கவியாக இயற்றப் பட்ட நூல் தான் கந்தரந்தாதி யென்றும், அந் நூலுக்கு உரை அவ்வில்லிபுத்தூரரே செய்தன ரென்றும், அதில் "திதத்த" என்றுதொடங் கும் செய்யுளுக்கு அவர் உரை கூறமாட்டாது திகைத்துத் தோல்வியுற்றன ரென்றும், அத ற்கு அருணகிரிநாதரே உரையருளிச் செய்தன ரென்றும், பின்பு ஏனைய செய்யுள்களுக்கு வில் லிபுத்தூரரே உரைசெய்து முடித்தனரென்றும் ஆன்றோர் கூறுவர். இத்தருக்கத்தில் தோல்வி யுற்றவர் காதை அறுப்பதாக ஒட்டினதற்கு ஒத்தவாறு வில்லிபுத்தூரரது காதை யறுத்து இழிவு படுத்தாது அதனை யவருக்குத் தமதாக அளித்தருளிய நமது பாவலரது பெருங் கரு ணையை யென்னென்பேம்?

வில்லிபுத்தூரரை வாதில் வென்றது.

"காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகி லாவனே—தேசுபெறு
மூழுக்குக் கூத்த னுவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவையெனக் கூறு."

(தனிப்பாடல்).

[கம்பன் காசு கொடுத்தால் பாடுவான். கூழ் கொடு த்தாலும் பாடுவாள் ஔவை. ஆசுகவி பாடுதலில் வல்லவன் காளமேகன். ஊழையும் வெல்லவல்லன ஒட்டக்கூத்தன் பாடல்கள். உவந்து மகிழப் புகழேந்தியார் பாடல்கள். கருணைத் திறத்தைக் காட்டும், அருணகிரியார் பாடல்கள்.]

'சங்கநூல், திருக்குறள் முதலிய இலக்கியங் களிற் சில கற்றுவாய்ப்பறையாகக் கொன்னே 'நான் புலவரேறு,' 'நான் கவிராஜ சிங்கம்' எனக் கூறித்திரியும் வீண்பெருமையும், அகந் தையும், இறைவனே! எனக்குவேண்டாம்' எனப் பொருள்படும்படி ஆசிரியர் ஓரிடத்திற் கூறுகின்றனர்.

சங்கபாடல்—

பனுவல் கதை காவ்ய மாமெ னெண்கலை
திருவளுவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதி யேயு ணர்ந்துபல் சந்தமாலை-
மடல்பரணி கோவை யார்க லம்பக
முதலுளது கோடி கோள்ப்ர பந்தமும்
வகைவகையி லாசு சேர்பெ ருங்கவி சண்டவாயு;
மதுரகவி ராஜ னேனென் வெண்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசையொடுலாவு மால கந்தைதவிர்ந்திடாதோ!

[சங்கநூல்கள், திருக்குறள் முதலிய நூல்களைப் படித்து, மாலை, மடல், பரணி, கோவை, கலம்பகம் முதலிய பிரபந்தங்களைப் பாடும் மதுர கவிராஜன் நான் என்று வெண்கொடை, கொடி, தாளம், மேளம், தண்டிகை ஆதிய விருதும், வரிசையும் பெற்று, ஆணவமயக்கத்தொடு உலாவும் அகந்தை எனக்கு வேண்டாம்-இறைவனே!]

நமது அருணகிரி நாதர் காலத்தும் அங் கும் இங்கும் சிலநூல் கற்றுச் சில பாடவல்ல வரெல்லாம் கவிராஜன், புலவரேறு என்னும் பட்டப்பெயரைத் தாமே புனைந்து உலகத்த வரை மயக்குவித்தனராதலின், உண்மையா கவே நன்குகற்ற வில்லிபுத்தூரர் அரைகுறையா கப் படித்தவரை வாதுக்கழைத்து, தோல்வி யடைந்தவுடன் அவர் காதைத் தம் கையி லுள்ள துறடுகொண்டு இழுத்து ஒட்ட அறு த்து அவர் கல்விச்செருக்கை அழித்துத் தமது பிரபாவத்தை நாட்டி வந்தனர். கல்வியின் அருமையைத் தெரிவிக்கிற நல்ல வழியாகை யால் இவர் செய்துவந்த வழக்கத்தை எவருந் தடுத்ததில்லை. இதுபோலவே பிள்ளைப் பாண் டியன் என்னும் அரசனும் தன்னிடத்துப் புல வனென வந்து ஒருவன் சொல்லும் கவியில் ஏதேனுங் குற்றம் காணில் அவன் தலையில் நறுக்கென்று குட்டும் வழக்கங்கொண்டிருந் தான். பெரும்புலவராகிய ஒட்டக்கூத்தர் ஒரு வன் செய்யுளில் குற்றங்காணில் தலையையே வெட்டிவிடுவாராம். இவ்விஷயங்கள்,



"குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
யிரண்டொன்றா முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே."

என வருந் தனிப்பாடலால் தெரியவருவன.

"கண்டது கண்டபடி பலபட்டப் பெயர் களைத் தாங்களே வைத்துக்கொண்டு தாந் தோன்றிகளாய்த் திரிபவரெல்லாம் அச்சமுற்று அடங்குவராதலின் வில்லி புத்தூரரது செய்கை லோகோபகாரமான தென்றும், அங்ஙனம் அவர் செய்யாவிடின் கல்வி யபிவிருத்தியாகா தென்றும், கொள்ளப்பட்டன. இக்காலத்தும் பி. ஏ., எம். ஏ., முதலான பட்டங்களை அப் பரீக்ஷை தேறாத பிறர் வைத்துக் கொண்டால் குற்றமாவதுபோலவே அக்காலத்திலும் தகுதி யற்றவர் பட்டப்பெயர்களைச் சூடுவது குற்றமா யிருந்த தென்றும் இதனால் ஏற்படுகின்றது.' நிற்க.

அருணகிரிநாதரோடு வாதுசெய்தவர் மற் றொருவருண்டு. அவர் பெயர் சம்பந்தாண்டான் என்ப. சம் பந்தாண்டானோடு நடந்த வாது வில்லிபுத்தூரரொடு நடந்த வாதுபோலச் சாமா ன்னியமானதன்று. அது திரு வண்ணாமலையிலிருந்த பிரபுட தேவராஜன் சபையில் நடந்தது. யாவரொரு வர் தாம் உபாசிக்கும் மூர்த்தியைச் சபையில் வரவழைக்கின்றனரோ அவரே பெரியர் என்றான் அரசன். யான் உபாசிக்கும் பார் வதிதேவியை வரவழைக்கின்றேன் என்றான் சம்பந்தாண்டான். யான் வழிபடும் ஆறுமுகத் தேவை வரவழைக்கின்றேன் என்றார் நம்புல வர். சம்பந்தாண்டான் மந்திரங்கள் ஓதித் தேவியாரை வரவழைக்க முயன்றபோது, அருணகிரியார் வேண்டுகோளுக்கிணங்கி, முரு கக்கடவுள் தேவியார் மடிமீது இருந்து அவ ரைப் போகாது தடுத்தலுந் தேவியார் வராது போகச் சம்பந்தாண்டான் அபஜயமடைந்தான். சந்தப் புலவர் கந்தக் கடவுளைத் துதித்து வர வழைக்க முயன்றபோது, சம்பந்தாண்டான் அம்மையாரைக்கொண்டு தடுக்க முயலுதலை யறிந்த புலவர், மயில் வாகனத்தை உன்னிப் பரவ, அதன் உதவியால் ஆறுமுகக்கடவுள் அதன் மீது ஆரோகணித்துத் திருக்கைவேல் விளங்க அரச சபையில் வந்து தோன்றினர். இவ்விடயங்களின் உண்மையையுந் திருப்புகழ் வாயிலாகவே தெரிந்துகொள்ளலாம்:—

சம்பந்தாண்டானோடு வாது செய்து ஜயம் பெற்றது. முருகக்கடவுளை ராஜசபையில் வரவழைந்தது.

அதல சேட னாட அகில மேரு மீதாட
மயிலு மாடி நீயாடி வரவேணும்-

* * *

உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே. (976)

[மாலை யணிந்த பிரபுடதேவ மாராஜனது உள்ளத் திருக்கும் தேவர் பெருமானே! பாதலத்துள்ள ஆதி சேஷனும் நெளியவும், மேருமலையும் அசையவும், மயிலசையவும் நீ யிசைந்தசைந்து வரவேணும்].

சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
ளர்ந்தத் திருநட மிடுசர ணழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் வருவாயே.

[உனது நடனபாதங்கள் அழகுடன் விளங்க இச் சபையின்கண் எனதுள முருக வரவேண்டும்].

சயில மெறிந்தகை வேற்கொடு
மயிலினில் வந்தெனை யாட்கொளல்
சகமறி யும்படி காட்டிய குருநாதா. (301)

[கிரௌஞ்சமெறிந்த வேல் திருக்கரத்து விளங்க, மயில் மீது வந்து என்னை ஆட்கொண்ட செயலை ஜகமெல்லாம் அறியக்காட்டிய குருநாத மூர்த் தியே!]

மேற்கூறிய சம்பந்தாண்டான் என்பவனது சூழ்ச்சியால் அருணகிரியார் கற்பக நாட்டுப் பாரிஜாதப் பூக்கொணரும் பொருட்டுத் தமதுடம்பை நீத்துக் கிளிரூபமாய்ச் சென்றனர் என்றும், அவ்வமயத்துச் சம்பந்தாண்டான் 'பாவலர் இறந்தனர், அவர் உடல் திருவருணைக் கோபுரத்தின் கண் உள்ளது' என்று கூற, அரையனும் உண்மை யுணராளுய் அவ்வுடலைத் தகிப்பித்தான் என்றும், பின்னர் இதனையறிந்த பாவலர் கிளி ரூபமாகவே செந்தமிழ்க்கடவுள் மாட்டு அமர்ந்துவிட்டனரென்றும் ஆன்றோர் கூறுவர்.

கிளி உருவ முற்றது.

'இறைவனே! வள்ளிகாதலனே! நீ எனக்கு உபதேசித்த மவுன மந்திரத்தையே நினைந்து சுகபதம் அடைந்து யான் வாழுநாளும் உண்டோ?' என நம் பாவலர் கேட்டுக்கொண்டவாறே சுக (கிளி) பதம் (நிலைமை) அடையப்பெற்றார்.

'பரவ சந்தணிந் துனையு ணர்ந்தொரு
மவுன பஞ்சரம் பயில்தருஞ் சுக
பதமடைந்திருந் தருள்பொருந்துமதொருநாளே'
[உன்னை உணர்ந்து மௌனோபதேசத்தைப் பயிலும் சுகபதத்தில் இருக்கும் நாள் எந்நாளோ!]
துகளில் சாயுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனே. ()
[சாயுச்சிய நிலையையும், சுக சொரூபத்தையும் என்று பெறுவேனோ.]

இவர் அருளிய வேறு நூல்களும் அவைகளின் பெருமை இவ்வளவினதென்பதும்.

ஸ்வாமிகள் கிளி ரூபமாயிருந்தே கந்தரநுபூதி யென்னும் நூலை இயற்றினரென்ப. இவர் இயற்றிய வேறு நூல்கள் கந்தரலங்காரம், திருவகுப்பு என்பன. இவர் அருளிச்செய்த நூல்களின் பெருமையை நம்மால் அளவிட முடியாது. இவரது வாக்கின் பிரபாவத்துக்கு,

'வாக்கிற் கருணகிரி வாதவூ ரார்கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்.'

[வாக்கு வல்லமைக்கு ஸ்ரீ அருணகிரிநாதர். கனிவொடு பாடுதற்கு ஸ்ரீ மணிவாசகப் பெருமான். திடத்தொடுபாடுதற்கு ஸ்ரீசம்பந்தமூர்த்தி சுவாமிகள். ஒரு நோக்கம் (எண்ணம்) நிறைவேறப் பாடுதற்கு நக்கீரனார். நயமாகப் பாடுதற்கு ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள். உறுதியான பற்றோடு பாடுதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள். எனச்சொல்லலாம்.]

என்னும் ஆன்றோர் செய்யுளும், பொருளமைப்பின் சிறப்புக்கு,

"ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்-வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னையாய் முக்கணர்
நாற்றிசைக்குங் கைகாட்டி னன்." [தை

[ஐயனே! அருணகிரிநாதன் என்னும் பெயரொடு விளங்கிய அப்பனே! உன்னைப்போல மெய்யான ஒரு சொல்லை எவரும் என்றும் சொல்லவில்லை. உலகத்திருந்த பெரியவர்களெல்லாம் இன்னது தான் மெய்ப்பொருள் என்று சொல்லமுடியாது கைசோர்ந்தார். எந்தையாகிய சிவபெருமானும் தக்ஷிணாமூர்த்தி சொரூபமாய்ச் சின்முத்திரையாக விரலைச் சுட்டிக்காட்டினரே ஒழிய உன்னைப்போலத் தெளிவுறச் சொல்லவில்லை.]

"அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
றுறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளோர்நாளோ?."

[அறிவை அறிதல்தான் அறிவு என நீ கூறினதின் பொருளை யான் உணரும் நாள் எந்நாளோ?] எனத் தாயுமானவர் சொற்ற பாக்களும் போதிய சான்றாம்

திருப்புகழ் பாடற்றொகை பதினாறாயிர மென்பது.

சுவாமிகள் அருளிய திருப்புகழ்ப் பாசுரங்களின் தொகை பதினாறாயிரமென்பது ஆன்றோர் துணிபு. "எம்மருணகிரிநாத ரோது பதினாறா யிரந்திருப் புகழமுதமே" [திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்-காப்புப்பருவம் (10)] அருணகிரி நாதனறைந்தபதி னாறா யிரகவிதை யென்றலகில் யாரும்-உரைபுகலுந், தெய்வத் திருப்புகழ்.

(திருத்தணிகைஉலா.)

பின் வருஞ் செய்யுள்களாலும் அவர் சரித்திரம் இனிது விளங்கும்;—



மாதரிரு விழியாகும் அம்புக்கு
மதனவேள் வாளிக்கு நடுவாகியே
மாலாகும் அருணகிரி நாதரு
ணைச்சிகரி வடவாச லிற்பயிலநம்
பாதமலர் பாடுநீ யென்னவடி
யேனுமெப் படிபாட வென்றளவிற்
பத்திதரு முத்திநகை யத்தியிறை
யாவெனப் பாடென்று சொல்லியியலாற்
பூதலமு மெங்கிளையு மீடேற
நாவிற் பொறித்தவ ருரைத்தகவிதைப்
புத்தமுது பன்னிரு செவிக்குநிறை
யக்கொண்டு போதமுனனித் தருளிஞற்
சீதள மலர்ச்சரண முதவுகா
ஞா ராளி சிறுதேரு ருட்டியருளே
செயசெயென அமரர்தொழ அசுரர்முடி
சிதறுமுனி சிறுதேருருட்டி யருளே.

[பெண்களது விழிகளாகிய பாணங்களுக்கும், மன்மதனது அம்புகளுக்கும் இலக்காகி மயங்கின்ற அருணகிரிநாதருக்குத் திருவண்ணாமலையில் அநுக்கிரகஞ் செய்யவேண்டி அவர் முன் தோன்றி "நம் பாதமலர் பாடு நீ" என்று நீ சொல்ல, அதற்கு அவர் "எப்படி பாட அடியேன்" எனத் தாழ்ந்து கேட்க "முத்தித் தரு பத்தித்திருநகை யத்திக்கிறை" என அடி எடுத்துக் கொடுத்துப் பாடுஎனத் திருவாய் மலர்ந்தும், பூவுலகு ஈடேற அவரது நாவில் ஷடாக்ஷரத்தைப்பொறித்தும், அவரது அமுதன்ன திருப்புகழ்ப் பாசுரங்களைப் பன்னிரு செவியிலும் எற்றும் அவருக்கு ஞான அமுதளித்த சுப்பிரமணியமூர்த்தியே! நீ இச்சிறு தேரை உருட்டியருளுக. தேவர்களுக்கு வாழ்வும் அசுரர்களுக்குத் தாழ்வும் வரும்படி செய்த வள்ளலே! நீ இச்சிறு தேரை உருட்டி யருளுக.

(திழிவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்—
சிறுதேர்ப்பருவம்—1)

"கைக்கிளியைப் பார்த்துவெகு காதலுட னன்னைமீர்
இக்கிளியைத் தாரு மெனக் கென்றாள்-அக்கிளிதான்
வில்லிபுத்து ரான்செவியின் மேலரிவாள் பூட்டியன்
வல்லபத்தின் வாதுவென்று வந்ததுகாண்-பல்ல [று
[வையுண்
மற்றொருவன் வாதுவென்று வான்பாரி சாதப்பூக்
குற்றமற மண்மேற் கொணர்ந்ததுகாண்--வெற்றிப்
பிரபுடதே வக்குரிசில் பேணி யெதிர்காண
முருகன் மயில்மேல் முடுகி-வரவழைத்து
வந்ததுகாண் செவ்வேள் வரிசையலங் காரமுற்றுந்
தந்ததுகாண் பேரின்பஞ் சார்ந்ததுகாண்-எந்தை
முத்தித் திருவென்னு முன்பதினாறாயிரமாம் [பிரான்
பத்தித் திருப்புகழைப் பாடுங்காண்-சித்தியெட்டுங்
காற்றதுகா ணந்தம்மைக் கண்ணாலும் பாராம
லுற்றதுகாண் சிற்றின்பத் தோருறவு-மற்றதுகாண்
நாமுரைக்கும் வார்த்தைகளை நற்செவிகே ளாதிருக்
[கும்
ஒமுரைக்கும் பூதியுங்கண் டுற்றிருக்கும்-தோமுரை
[க்கும்
மற்றைக் கிளிபோல் வசப்படா தென்றுரைத்துப்
பற்றிக்கொடுபோனார் பாவைதனை.

[பெதும்பைப் பருவத்தளாகிய அப்பெண் இறைவனது கையின்கண் அமர்ந்துள்ள கிளியைப்பார்த்துத் தனது தாயர்களை நோக்கி அன்னைமீர்! இக்கிளியை எனக்குத்தாரும் எனக் கேட்டாள். அதற்கவர் "அம்மம்ம! இக்கிளியின் பிரபாவத்தைச் சொல்லுகின்றேன், கேட்பாயாக. இந்தக்கிளி அன்றொருநாள் வில்லிபுத்தூரார் என்னும் புலவரொடுவாது செய்து வெற்றி பெற்றது. மற்றொருவனொடுவாது வென்று கற்பகநாட்டுப் பாரிஜாதப்பூவை இப்பூவுலகுக் கொண்டுவந்து சேர்த்தது. பிரபுடதேவராஜன் காணுமாறு ஸ்ரீஷண்முகப் பெருமானையே மயில்மீது சபையின்கண் வரும்படி செய்தது. திருவகுப்பு, கந்தரலங்காரம் முதலியநூல்களும் பாடியுள்ளது. பேரின்பங்கண்ட பெருங்கிளி இது. எம் பெருமான்மீது "முத்தித்தரு" முதலான பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாடல்கள் சந்த இன்பம் பொலிந்திலங்கப்பாடியுள்ளது. அட்டசித்தியும் கையாண்டுள்ளது. சிற்றின்ப உறவே அற்றுள்ளது. நம்மைக் கண் எடுத்தும் பாராது. பேரின்ப நிலையிலேயே இறைவனது அநுபூதியைப் பெற்று மகிழ்ந்திருக்கின்றது. ஏனைய கிளிகளைப்போல இது கைவசப்படாது" என்று சொல்லி அப்பெதும்பையை அப்புறங்கொண்டு சென்றார்.]

(தணிகை யுலா பெதும்பைப் பருவம்)

திருப்புகழ் நூலின் நடையழகும் சந்தப் பொலிவும்.

நூற்றுக்கு மேற்பட்ட சந்தவகைகளால் விளங்குந் திருப்புகழின் நடையழகும், சந்தப் பொலிவும், நவரசமும் எடுத்து எழுத ஏடுகொள்ளாது. இத்துணைச் சிறப்புடன் வெகு

எளிதில் பொருளும் அறிந்து கொள்ளும்படி எல்லா இலக்கணங்களுடனும் அவர் வாக்கு அமைந்திருப்பது பற்றியன்றோ சிறப்பாகக் கனிவு, தாக்கு, நோக்கு, நயம், உறுதி என ஒன்றோடு நில்லாது, பொதுவாக "வாக்கிற் கருணகிரி" என்று முதற்படச் சுருங்கவுரைத்து அம்மட்டோடு நின்றனர். ஆயினும் இவர் வாக்கின் நடையழகுக்கு இரண்டொரு உதாரணம் இங்குக் காட்டுவோம். வள்ளிநாயகியாரின் அமளியின்பத்தைப் பெறுவோனே எனக் கூறவேண்டிய இடத்துப் பின்வருமாறு கூறுகின்றனர்.

குயில் மொழிக் கயல்விழித் துகிரிதழச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவிளைப்
புணர்வோனே!

[குயில்போன்ற மொழியையும், கயல் (மீன்) போன்ற கண்களையும், பவளம்போன்ற அதரத்தையும், வில்போன்ற நெற்றியையும், சந்திரன்போன்ற முகத்தையும், புன்னகையையும், மேகம்போன்ற கூந்தலையும், மலைபோன்ற தனங்களையும், கொடி போன்ற இடையையும், பெண்யானைபோன்ற நடையையும் கொண்ட குறமகளாகிய வள்ளியம்மையைப் புணர்வோனே!] இத்துணைப் பொருளையடக்கி இவ்வளவு சுருக்கமாகக்கூறுவது வரகவிகளுக்கே அமையக்கூடிய ஓரிலக்கணம்.

இதுபோலவே "கொச்சை மொழிச்சி கறுத்த விழிச்சி சிறுத்த இடைச்சி பெருத்த தனத்தி குறத்தி தனக்கு மனப்ரியமுற்றிடு குமரேசா" என்ற இடத்துங் காண்க.

இவர்வாக்கில் தமிழ்ச்சொற்கள் எவ்வளவு சாதாரணமாகப் பிரயோகஞ் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவு சாதாரணமாக வடமொழிச்சொற்களும் பிரயோகஞ் செய்யப்பட்டுள்ளன. இதனைத் திருப்புகழில் பல இடங்களில் அங்கும்இங்கும் காணலாம். "நிராமய புராதன" எனத் துவக்கும் விராலிமலைத் திருப்புகழிலும் காணலாகும். இவர்காலம் மகமதியர் அரசாண்டிருந்த காலமாதலின் "சலாம்," "சபாசு" "ராவுத்தன்" முதலிய ஹிந்துஸ்தானி மொழிகளும் இவர் நூலிலேறியுள்ளன. சந்த நூல் எனப்பாடும் வகைக்கே நமது சுவாமிகளது திருப்புகழ் பெரிய இலக்கியமாக அமைந்துள்ளது. இங்ஙனம் பாடும் சந்தப்பாவை வண்ணப்பா எனவுங் கூறுவர். வல்லெழுத்து வந்த இடத்து வல்லெழுத்தே வரவேண்டும், மெல்லெழுத்து வந்த இடத்து மெல்லெழுத்தே வரவேண்டும். நெட்டெழுத்து வந்த இடத்து நெட்டெழுத்தும், குற்றெழுத்து வந்த இடத்துக் குற்றெழுத்தும் வரவேண்டும். இன்னும் உள இலக்கணமெல்லாம் வண்ண இலக்கண நூல்களிற் காணலாகும்.

'அருணகிரி நாதர் பதினாறு யிரமென்
றுரைசெய் திருப்புகழை ஓதீர்—பரகதிக்கஃ
தேணியருட் கடலுக்கேற்ற மனத்தளர்ச்சிக்
காணி பிறவிக் கரம்'

திருப்புகழ் பிரபந்தத்தின் பெருமை

[அருணகிரி நாதர் அருளிய திருப்புகழை ஓதுங்கள். அது பரகதியை அடைதற்கு ஏணி போலவும், அருளாகிய கடலில் திளைத்து விளையாட ஏற்றம் போலவும், மனத்தளர்ச்சியை நீக்க ஆணிபோலவும், பிறவியை அறுத்தெறிய அரம் போலவும் உதவும்].

என்னுந் தனிப்பாடலே இந்நூலின் பெருமையை நன்கு விளக்கும். இத்துணைப் பெருமைவாய்ந்த இந்நூலை அச்சிட்டு வெளியிட வேண்டும், அதை அன்பர்கள் பாராயணஞ் செய்து நற்கதியை யடையவேண்டும் என்னுங் கருத்தே கருத்தாகக் கொண்டு திருப்புகழ் ஓலைப்புத்தகங்கள் உள்ள இடமெல்லாந் தேடித் தேடி, பாடல்கள் சேகரஞ்செய்து ஓர் ஆயிரத்து இருநூறு பாடல்களை இரண்டு பாகமாக அச்சிட்டு உலகுக்கு அளித்தவராகிய எனது அருமைத் தந்தையாகிய சுப்பிரமணிய பிள்ளை சில மாதங்களுக்கு முன்புதான் (17-4-1909) காலஞ் சென்றனர். அதுவும் நந்தம் பாவமே!

சுவாமிகள் அருளிய ஏனைய பாசுரங்கள் செல்லேறிச் சிதைவுபடுமுன் அச்சுக்கு வருமாறு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் திருவருள் கூடுவதாக!



உ

வேலுமயிலுந்துணை

## 2. முருகர் துதி

ஸ்ரீமான்-திருவெண்காடு சுவேதாரண்ணிய
சாஸ்திரியார் பி. ஏ., எல் டி.

அருள்வாய்ந்த திருநோக்கின்
ஆநந்த மயிலூரும்
இறையாறு முகத்தோயை
ஈராறு கரத்தோயை
யுவந்தேத்த வுறுஞ்செல்வ

மூழ்புன்கண் அஃதின்றூ
மெய்யாமை திரிபையம்
ஏழார்ந்த பரியென்றாழ்
ஐயார்ந்த விரிசோதி
ஒளிகாண விருண்மாய்ந்தாங்

கோங்காரத் தோங்குண்மை
ஔதார்ய சீலாவென்
றஃகாவுள் ளன்போடு
கறைக்கண்டன் கட்டோன்றுங்
காங்கேய அங்கேயும்

கிளர்நாண லனல்காத்தோய்
கீழான வாராமே
குறைதீர்க்குங் குமராகேள்
கூழானே மலியுள்ளம்
கெடனன்றோ வுயர்கந்த

கேட்டார்க்குக் கழல்காட்டிக்
கைவல்ய வழிகாட்டிக்
கொண்டாளுங் குறிஞ்சிக்கோ
கோவாய்ந்த நலஞ்சான்ற
கௌடங்கொள் வைதர்ப்பங்

கஃறைய விழுநீரின்
சனம்வெம்மை பரன்மைந்த
சந்தங்கொள் தமிழ்கூடற்
சார்பாற்றென் பரங்குன்றிற்
சிறப்பீயும் விழுச்செல்வ

சீர்மிக்க குகைவாழுஞ்
சுடரொத்த கிளர்மேனி
சூரன்றன் றலைகொய்த
செவ்வேணல் அயில் வேல
சேவன்மன் சேநாநீ

சையந்தோ றையாவின்
சொல்லார்ந்த மறைகொண்டு
சோபான முறைகாட்டிச்
சௌந்தர்ய பரங்காணும்
ஞயஞ்செய்யுங் குகனேநல்

ஞானத்தின் பயனெய்த
ஞிமிறுற்ற புழுவேபோன்
ஞெண்டார்ந்த கடற்செந்தில்
ஞேபத்தி ஞண்டாய்மன்
தக்கோர்சொல் முடிபோராத்

தாழ்புன்மைத் தமியேனைத்
திருநோக்குக் குரியேனாத்
தீங்கன்ன லமுதுண்ணத்
துறந்தார்தம் முள்ளத்துத்
தூயோய்நின் கழல்போற்றித்

தெருண்டார்க்குப் பேரின்பம்
தேடார்க்கி யாதுண்டாம்
தைமாசி பனிமாதம்
தொகுவெம்மை யருங்கோடை
தோன்றாது தவநோலத்

தௌவைவயென் னிருண்மாயை
நவைநீங்க நலனோர்ந்து
நாள்கொண்ட நறுமுல்லை
நிறைகொண்ட மலர்க்கொன்றை
நீர்கொண்ட செங்கமலம்

நுனிகொண்ட அறுகர்க்கம்
நூறான அடிசெல்லும்
நெறித்தும்பை மிகத்தூவி
நேராக நன்னெஞ்சி
னைந்துற்ற மெய்யன்பர்

நொச்சிப்புல் லூமத்தை
நோற்பார்க்குக் காப்போய்கேள்

ஔவாகும் பிறப்புக்கால்
பழனஞ்சேர் பழனிக்கண்
பாட்டோவாப் பெருங்கோயிற்
பிறங்கல்வாழ் பெருமானைப்
பீடார்ந்த மறைகொண்டு
புளகிப்ப வுளஞ் சோர்ந்து
பூப்பாதம் மிகப்போற்றிப்
பெம்மானை வாயாரப்
பேசாத வாநந்தம்
பைங்கானன் முதிர்சோலைப்
பொன்மேனிப் பெருவாழ்வைப்
போற்றாத நாவென்னே
பௌமன்னுள் பரிவாலே
மஃறோ வஃதேயாம்
மறைமூன்றி னடுவாரும்
மாதேவன் மகிழ்மைந்த
மிசையூணின் மயமாக
மீக்கூறு மிக்காயம்
முறையாலே நெறியெய்த
மூவாத பேரின்பம்
மெய்ச்சான்ற நலனெய்தி
மேலோய்நின் கழலேத்த
மைக்கண்ட னருட்செல்வ
மொழியோர்ந்து வழிநின்று
மோதங்கொள் சிறப்பார
மௌனத்துப் பயில்நல்லோர்
மஃகானீ றெழுத்தோர
யமபாச மிலைநன்றாய்
யாராலே நசிகேதன்
யுகநாலை யெளிதாக
யூகிததோர் பொருள்பெற்றான்
யோகர்க்குண் மணியாகி
யௌவனத் தின்புற்றான்
வள்ளிக்கு மணவாள
வான்றெய்வ யானைக்கோ
விறல்கொண்டு திறனுற்ற
வீரர்க்கு வீரா்கேள்
வெறும்புன்மை நாயேனை
வேதத்தின் ஒளிர்செல்வ
வைவேல இனிதாள்வாய்
வௌவாயுண் முருகோனே.

### 3. என்னிழல்

ஸ்ரீமான்-பண்டித வெங்கிடரமணையர்
கோயமுத்தூர் காலேஜ்

[ஐப்பசி மாதத்திய விஹாரிணியில் "பிள்ளைத்தமிழ்" எழுதிய இப்பண்டிதர் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து இச்சிறு கவிதையை நமக்கனுப்பியதில் நாம் அதை வெகு சந்தோஷத்துடன் பிரசுரிக்கிறோம். நடை விஷயத்தில் ஏதாகிலுமபிப்பிராய பேதமிருந்தாலும் பிள்ளைத்தமிழுக்குரிய சாத்து இதில் வெகு எடுப்பாகக் காணுகிறதென்பது கவிதையின் சாரமறிந்த யாருக்கும் புலப்படும்.]

பத்திராதிபர்.

எனக்கொரு சிறு கிழலிருக்கிறது—அது
எங்கிலும் என்னொடு தொடர்கிறது—அதில்
என்ன பிரயோஜனமோ அறியேன்; எனை
அடிமுடி முழுது மொத்திருக்கிறது;
என்னது மெத்தையில் நான் குதிக்கையிலிது
எனக்கு முன்தானுங் குதிக்கிறதே!

இளையவர் விளையாட்டி வனறியான்; எனை
எவ்விதத்திலும் பித்துச்செய்யுகிறான்; இவன்
இத்தனை பயங்கொளியென்ப திடைவிடா
தெனை யொட்டியிருப்பதில் நீயறிவாய்; [யை
எனையிவன் பிடித்திருப்பது போலென் தாதி
எப்போதுந் தொடர வெட்கப்படுவேன்.

எல்லாக் குழந்தையும் மெதுவாய் வளர்ந்திடும்,
இவன் வளருவதி லோராச்சரியம்;
என்னெனில் ரப்பர் பந்தொத்தெழுகிறான்,
எவரு மறியாவிதம் சுருங்குகிறான்.

ஒருநாள் சூரியனுதிக்குமுன் நேரத்தில்
ஓசைப்படா தெழுந்தோடிச் சென்றே,
மருமலர் தனிலொளிர் பனிபார்க்கையில் கிழல்
மடியொடு படுக்கையி லுறங்கிக்கொண்டே அது,
வரவிலை தூங்குமூஞ்சி யெழவில்லையே!



ஸ்ரீ கபீர்தாஸ் சுவாமிகள்



# சாரித்திரகாண்டம்

## 1. ஸ்ரீ கபீர்தாஸ சுவாமிகள்

*"நன்றாய்ப் புஷ்பித்திருக்கும் மரத்திலிருந்து வாசனை யெப்படி வெகுதூரம் வீசுகிறதோ, அதுபோல புண்ணிய கருமத்தின் வாசனையும் வெகுதூரம் வீசுகிறது"*—நாராயண உபநிஷத்.

சென்ற மாதத்தில் ஸ்ரீ விசுவாமித்திர மகாரிஷி இப்பாரத வருஷத்திற்கு மதவிஷயத்தில் உண்டாக்கிய ஒற்றுமையையும், செய்த பேருதவியையும் விவரித்தோம். ஆனால் வைதிக முறைப்படி முதலில் பிரபலித்திருந்த யாகாதி கருமங்களும், பின்னேற்பட்ட ஞானமார்க்கமும் சாமான்னியர்களுக் கேற்றதாயிருக்கவில்லை. கரும மார்க்கம் பணக்காரர்களுக்கும், ஞானமார்க்கம் சூட்சும புத்தியுள்ளவர்களுக்குமே ஏற்றனவாயிருந்தபடியால், இந்துஸ்தானத்தில் ஏழைகளாகிய பெரும்பாலர்க்கு இம்மார்க்கங்கள் உதவவேயில்லை. இதை மூலகாரணமாகக்கொண்டு காலக்கிரமத்தில் பக்தி மார்க்கம் ஏற்பட்டது. இதற்கு ஸ்ரீ ராமாயணமும், பாகவதமும் ஆதாரங்களாகி, ஸ்ரீ ராமனும், ஸ்ரீ கிருஷ்ணனும் உபாசனைக்கு முக்கிய மூர்த்திகளானார்கள்.

ஏதோ ஒருவிதமாக இந்த மார்க்கம் இந்துஸ்தானத்திலும், திராவிட நாட்டிலும் சிற்சில விடங்களில் பிரபலப்பட்டு வந்துகொண்டிருக்கையில், பத்தாவது நூற்றாண்டு, என்றால், சுமார் ஆயிரம் வருஷத்திற்குமுன் இந்தியாவுக்கு மகம்மதியர் வரத்தொடங்கினார்கள். வந்து முந்நூறு வருஷங்களுக்குள் இவர்களுடைய துரைத்தனமும் மதமும் இந்தியாவிலெங்கும் பெருகி இந்திய மகமதீயர் கோடிக்கணக்காகப் பிரபலித்தார்கள்.

இதற்கு நம்மவர் ஒரேகாரணந்தான் சொல்லுவது. அதாவது, மகம்மதீயர் சென்றவிடமெல்லாம் கத்தியுங் கையுமாகப்போய், எதிர்ப்பட்டவரை யெல்லாம், 'குரானை யொப்புக் கொள்ளுகிறீர்களா ?. கத்திக் கிரையாகிறீர்களா ?' என்று பலவந்தமாய்த் தங்கள் மதத்தைப் பரவச் செய்ததாக நம்புவது. இது பலவினும் மோசமான தப்பெண்ணம். வாஸ்தவமென்னவெனில், தற்காலத்தில் நடப்பதுபோலவே, முற்காலத்திலும் நமது தேசத்தில் 'இழிகுலத்தோர்' என்று நாம் ஒதுக்கிவைத்திருக்கும் ஜனங்களுக்கு, மகம்மதீயரும் அந்த மதமும் வெகு உபகாரிகளாகி, நமது தேசத்தவர் தாமாகவே வெகு சந்தோஷத்துடன் அம்மதத்தைக் கைப்பற்றினார்கள். அப்படிச் செய்த்தில் அனேகருக்கு இவ்வுலகிலும் பதவியுயர்ந்தது. மறுவுலகிலும் நல்ல பதவி கிடைப்பதாக உறுதிமொழி கிடைத்தது. இது நிற்க.

மகம்மதீயர் பக்தி மார்க்கத்தையே கைப்பற்றியவர். ஆதலால் அவர்கள் இங்கு வந்ததும் இம்மார்க்கத்திற்கு முந்தியிருந்ததைவிடப் பிராபல்லியம் அதிகமாயிற்று. நாம் மேற்சொல்லியபடி இந்துக்களிலும், மகம்மதீயராகிப்போன நம்மவர்களிலும், பெரும்பாலார் "இழிகுலத்தவர்" ஆதலாலும், பக்தி மார்க்கத்திற்கு க்ஷேத்திர யாத்திரை, தீர்த்தயாத்திரை, பிரமோற்சவம் முதலிய லக்ஷணங்கள் இந்துக்களுக்கும், அவைபோன்ற வேறு ஆசாரங்கள் மகம்மதீயருக்குமிருந்ததனாலும், இச்சந்தர்ப்பங்களில் முரடான இருதிறத்தாருக்கும் விரோதமும், கலகமும் அதிகரித்து வந்தது.

சுமார் இருநூறு வருஷங்களுக்கதிகமாகவே இக்கலகங்களால் இருதிறத்தாரும் கஷ்டப்பட்டு, உயிரையும் பொருளையும் இழந்து உபத்திரவமடைந்தபின், இருதிறத்தாரிலும் விவேகிகள் இந்த விரோதத்திற்குக் காரணத்தை ஆலோசிக்கலானார்கள். ஆகவே ஈசுவரனொருவனென்றும், தெய்வ விஷயமாய்ச் சண்டை செய்தல் அக்கிரமமென்றும் பட்டது. இந்த ரகசியத்தைச் சுமார் 1400ஆம் முதல் 1600ஆம்

வரை இந்துக்களிலும், மகம்மதியர்களிலும் அனேக பாகவத சிரோமணிகள் ஜனங்களுக்குச் சங்கீர்த்தன மூலமாக வுபதேசித்துவந்தார்கள்.

இவர்களுக்குள் நடுநாயகமாக விளங்குபவர் ஸ்ரீ கபீர்தாஸ சுவாமியாம். தமிழ் நாட்டில் இவரைப்பற்றிப் பேசுபவர்கள், அனேகமாய் 'ஹரிகதை' செய்யும் சிலபாகவதர்களே. ஹரிகதை செய்பவர்களுக்குச் சாரித்திர ஞானம் விசேஷமாயில்லை யாதலால், சுவாமிகளைப்பற்றிச் சொல்ல வேண்டிய சங்கதிகளை விட்டு, ஏதோபொழுது போக்காக வேண்டாப்பேச்சுகளைப் பேசுவது சகஜமாகிவிட்டது.

கபீர்சுவாமி சுமார் ஐந்நூறு வருஷத்திற்கு முன், கி. பி. 1440௵ ஸ்ரீகாசி நாட்டில் பேல்ஹாரா வென்னுமிடத்திற் பிறந்தார். இப்படிக் குறித்த காலமும் தேசமும், பத்திரங்கள் மூலமாய் ஏற்படா விட்டாலும், சுவாமிகளுடைய சிஷ்யர்களுக்குள் இது பரம்பரையாக வழங்கி வருவதால், அதை நாமும் கிரகித்துக் கொள்ளுகிறோம். சுவாமிகள் பிறந்தாரென்றுமட்டும் சொல்லவேண்டுமே யொழிய, இன்னார் தகப்பனார், இன்னார் தாயார், இன்ன குலம், இன்ன கோத்திரமென்பதொன்றும் நமக்குத் தெரியாது.

எந்த நாட்டிலும் இம்மாதிரி அவதார புருஷர்களுக்கு ஜனனமரண விஷயங்களிலும், ஜீவதசையில் நடக்கும் வேறு அநேக காரியங்களிலும் அதிசயமாக ஏதாகிலும் மகிமைகள் சொல்லிக்கொள்வது சகஜம். ஆதலால், கபீர் சுவாமிகள் விஷயத்திலும் இவ்வாறு கதைகள் பிறந்திருப்பது விசித்திரமன்று. சுவாமிகளுக்குத் தாயாராகிய ஒரு பிராம்மணப்பெண், விதவையாகிய பிறகு, தன் தகப்பனாருடன் ஸ்ரீராமானந்த சுவாமிகளைச் சேவிக்கப் போனதாகவும், சுவாமிகள் அந்த அம்மாளைப் புத்திரவதியாகும்படி ஆசீர்வதித்ததாகவும் பிறகு சங்கதி தெரிந்து விசாரப்பட்டுத் தான் சொல்லியது பிசகாததலால், குழந்தை பிறந்துதான் தீரவேண்டுமென்றும், ஆனால் அது மற்ற குழந்தைகளைப்போலல்லாமல், தன் மாதாவின் கையிலிருந்து பிறக்குமென்றும் சொன்னதாகவும், அப்படியே கைத்தலத்திற் பிறந்ததனால் குழந்தைக்குக் 'கரவீரன்,' என்னும் 'கபீர்' என்ற திரிபுப்பெயர் கிடைத்ததாகவும் புராணம் ஏற்பட்டிருக்கிறது.

குழந்தை பிறந்ததும் தேவதுந்துபிகள் முழங்கின. வேறு நற்குறிகளனேகம் உண்டாயின. என்றாலும் குழந்தையின் தாய்க்குமட்டும் ஏதோ காரணத்தினால் விசாரமுண்டாகி அதை யாருங்காணாமல் தாமரையிலைமேல் விட்டுவிடச் சற்றுநேரங் கழித்து அவ்வழியிற் போய்க்கொண்டிருந்த மகம்மதியச்சாலியனாகிய 'நீரூ'வும் அவர்மனைவி 'நீமா'வும் கண்டெடுத்துப் போய் வெகுஆதரவுடன் வளர்த்தார்கள். ஆகவே சுவாமிகளைப் பிறப்பில் மகம்மதியராகவும், தொழில் நெசவென்றும் சாமான்யமாய்ச் சொல்லுவது. இவர் பெரிய பாகவத சிரோமணியாகிச் சிஷ்யர்கள் எங்குமுண்டாகி விளங்குகையில் இவர் வாக்கிலிருந்து வந்த சுலோகங்களில் சாதாரணமாக நெசவுத் தொழிலிலிருந்து உவமைக்காக வந்திருக்கும் சங்கதிகளையும், ஒரு சந்தர்ப்பத்தில் இவரே, "நான் ஜன்மாந்தரத்தில் பிராம்மணன், ஸ்ரீ ராமனிடத்தில் பக்தி குறைந்ததால், இப்படி மகம்மதிய நெசவுக்காரனாக வுதித்தேன்," என்று சொல்லியிருப்பதையுங் கவனித்தால், இது நிஜமாயிருந்தாலும் இருக்கலாமென்று காணுகிறது.

ஆனால் இதைப்பற்றி வாதாடுவது வீண் அவதார புருஷர்களுக்குப் பிறப்பினாலுள்ள மகிமை மகிமையேயல்ல. நதிமூலமும், ரிஷிமூலமுங்கண்டு நமக்காக வேண்டியதொன்றுமில்லை. கபீர் சுவாமிகளுடைய சிஷ்யர்கள் இந்துக்கள், மகம்மதியர் இருதிறத்தாருமே. ஆனால்



அவர்கள் சுவாமிகளுடைய உட்கருத்தை யாராய்வதற்கு யோக்கியதை யில்லாததால் இம்மாதிரிச் சில்லரை விஷயங்களை வியவகரித்து வந்திருக்கிறார்கள். நமக்கோ அதைப்பற்றி ஒரு விசாரமுமில்லை. கபீர்சுவாமி இந்துவானாலும்,மகம்மதியரானாலும், அவர் உயர் குலத்தோராயினும், இழிகுலத்தோராயினும், பெரிய பாகவதரென்பது பிரத்தியக்ஷம். அவரது உபதேசம் எக்காலத்திலும் சிரமேற்கொள்ளவேண்டுவது. ஆதலால் பிறப்பையும் வளர்ப்பையும் நாம் விசாரித்தடையவேண்டிய பலனொன்றுமில்லை.

குழந்தைக்குப் பெயரிடவேண்டிய காலம் வந்ததும், நீரூவும் அவர் மனைவி நீமாவும் ஒரு காஜியை வரவழைத்துக் குரான் என்னும் வேத புஸ்தகத்தை வழக்கப்படி கயிறு போட்டுத் திறந்துபார்க்க, அதில் காஜி கண்ணுக்குச் சர்வேசுவரனுக்கு அவ்வேதத்தில் காணும் பெயர்களிலொன்றாகிய 'கபீர்' என்னும் பெயர் கண்டது. உடனே அவர் சிந்தாக்கிராந்தராகி நகத்தைக் கடித்தார். "இந்தச் சாலியப் பயலுக்கு இத்தனை வரிசையான பெயரா? நாய்க்கு முத்துமாலையென்று பெயரிடுபவர் யார்"? என்று அவர் மறுபடியும் புஸ்தகத்தை யிருமுறை பரீக்ஷித்துப் பார்த்தார். அந்தப் பெயரே தான் கிடைத்தது. ஆதலால் இந்தக் குழந்தை யேதோ விபரீதத்திற்காகப் பிறந்ததென்று எண்ணி நீரூவை நோக்கி, "நீர் இக்குழந்தையைக் கொன்றுவிடும்," என்று சொல்லிவிட்டுக் காஜி வீடுபோய்ச் சேர்ந்தார்.

அவரை யனுப்பிவிட்டு நீரூ வந்து குழந்தையை யெடுத்து உள்ளறைக்குட் சென்று காஜி யபிப்பிராயப்படி அதைக் கொல்லுவதற்காகப் போகவே அது வாயைத் திறந்து, "நான் அநாதி. மாயை எல்லோரையும் மயக்கியிருக்கிறது. என்னை யறிந்தவரில்லை. நான் பெண் வயிற்றில் ஜனிக்கவேயில்லை. நான் பூமியுமல்ல, ஆகாசமுமல்ல, நான் ஞானமயன். எனக்குத்தோல்,எலும்பு,ரத்தம் முதலியன இல்லை. பிறருக்குச் சப்தத்தை (உண்மையை) வெளியிட வந்திருக்கிறேன். இதுதான் கபீர் சொல்லுவது," என்று கூறிற்றாம். உடனே நீரூவுக்குப் பயமுண்டாகி அக்காரியத்தைவிட்டுப் பழையபடி யிருந்தார்.

இந்தக்கதையைக் கேட்பவர்களுக்கு ஸ்ரீகிருஷ்ணன் தேவகி வயிற்றில் பிறந்ததும், கம்ஸன் அவரைக் கொல்லப் பிரயத்தனப்பட்டதும், அது வியர்த்தமாகியதும், ஞாபகத்திற்கு வரும். இம்மாதிரிக் கதைகளெல்லாம் ஒரேபோக்காகத்தான் போவது. இப்படி நடந்தது வாஸ்தவமானால், நீரூவுக்கு ஏதோ நல்ல காலத்தினால் கொல்லப் போகுந்தருணத்தில் மனமிறங்கிப் பின் வாங்கி விட்டாரென்பதில் தோஷஞ் சிறிதுமில்லை.

வாலிபராகி விளையாடுவதில் கபீர் சுவாமி தனது கூட்டாளிகளான மகம்மதியர், பிராம்மணப்பிள்ளைகளிருதிறதாருக்கும் விரோதியானார். ஏனெனில் எப்பொழுதாவது 'ராம், ராம்' என்றால்,மகம்மதியச்சிறுவர் இவரைப்பாஷண்டியென்று வெறுப்பார்கள். நெற்றியில் ரத்தசந்தனம் தரித்துப் பூணூலுடன் வந்தால் பிராம்மணப்பிள்ளைகள் திட்டுவார்கள். அதற்கு உத்தரமாக அவர், "ஓ பிராம்மணர்களே! என்னுடைய நாவில் விஷ்ணு கூத்தாடுகிறார். கண்களில் நாராயணனிருக்கிறார். இருதயத்தில் கோவிந்தனிருக்கிறார். சாலியனாதலால் நான் பூணூல் தரித்திருக்கிறேன். நீங்கள் காயத்திரியை மொணங்குகிறீர்கள். கோவிந்தனே என்னிருதயத்தில் குடிகொண்டிருக்கிறார். நான் ஆடும், நீங்கள் இடையருமாக, நீங்கள் உங்கள் தருமத்தை யனுசரித்து ஆடுகளை ரக்ஷிப்பதற்கு மாறாக, இவ்வுலகத்திய பிரபுக்களை வழிபடுகிறீர்கள். நானோ ஹரியை வழிபடுகிறேன்" என்று பதிலுரைப்பார்,

கொஞ்சகாலமாக இவர் மதவிஷயமாய்ப் பேசிவருவதைக் கேட்டயாரும், உமக்கு உபதேசம் செய்தவர் யாரென்று கேட்க அதற்குப்பதில் சொல்லமுடியாமல், சற்குருவைத்தேடியிருக்கையில், அந்தப் பிராந்தத்தில் பாகவதராகியும், குணசீலராகியுமிருந்த ஸ்ரீ ராமானந்த சுவாமிகளுடைய பிரபாவத்தைக் கேட்டு மகிழ்ந்து, அவரிடம் உபதேசம் பெறலாமென்றிருந்தார். ஆனால் அவர் மகம்மதீயனுக்கு, அதிலும் சாலியனுக்கு, உபதேசஞ் செய்யமாட்டாரென்று பயந்து, ஒருநாள் விடியற்காலத்தில் கங்கைப்படியில் அவர் இறங்குமிடத்தில் படுத்திருக்க, அவரும் இருட்டில் கண்தெரியாமல் இவர் முதுகிற் கால்வைத்து, உடனே தெரிந்துகொண்டு "ராம், ராம்" என்றாராம். கபீரும் எழுந்து சுவாமிகளைத் தொழுது தாங்கள் எனக்கு ராம மந்திர முபதேசித்ததால் என்னைச் சிஷ்யகோடிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றார். அவரும் அப்படியேயென்று சொல்லிவிட, அதையறிந்து அவர் சிஷ்யஜனங்களிலனேகர் அவரிடம் வந்து மகம்மதீயச் சாலியனைத் தாங்கள் சிஷ்யனாக்கிக் கொண்டது வாஸ்தவமா, என்று கேட்டார்கள். அவர் நடந்ததைச்சொல்லி, யாராகிலும் குணவந்தர்களாயும், பக்தர்களாயுமிருந்தால் அவர்களெல்லோரும் சருவேசுவரனது அருளுக்கு யோக்கியர்களென்றாராம். இக்காலத்தில் எத்தனைபெயர் மடாதிபதிகள் இவ்வாறு துணிந்து சொல்பவர்கள்? உபதேசமான பிறகு வெகுகாலம் கபீர் சுவாமிகள் தன் நெசவுத் தொழிலையும் பார்த்துக்கொண்டு சுவாமிகளிடத்தில் வாதம்செய்யவரும் பண்டிதர்களுக்கெல்லாம் பிரதிவாதி பயங்கரராகிப் பாகவதர்களுக்கு ஆராதனம் செய்துகொண்டு காலங்கழித்து வந்தார்.

(இன்னும் வரும்)

## 2. சரித்திரப்பயன்

ஸ்ரீமான்-எஸ். பட்டாபிராமய்யர் அவர்கள்

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் (குறள்.)

இக்காலத்தில் நமது தேசமாகிய இப்பரத கண்டம் க்ஷீணதசை யடைந்திருக்கிறதென்பது யாரும் அறிந்த விஷயம். இக்கஷ்டதசையிலிருந்து சீக்கிரம் விமோசனம் வேண்டுமென்பது ஒவ்வொரு பாரதவாசியின் விருப்பமாகுமென்தற்கு ஐயமில்லை. இத்துன்ப நிவர்த்தியடையும் மார்க்கமெதென்று ஆராய்வது நமது கடமை. அவ்வாறு ஆராய்ந்து நாம் தெளிவதென்னவெனின், இப்பொழுது மிக உன்னத தசையடைந்து உலகமெங்கும் வியாபிக்கும் ஐரோப்பிய கண்டத்தாரும், மிக்க செல்வம் நிறைந்த அமெரிக்கா கண்டத்து ஐக்கிய மாகாணத்தாரும், பராக்கிரமசாலிகளான ஜப்பானியரும், வெகுவாய்ப் பயின்று விசேஷத் தேர்ச்சிபெற்று, அதிகமாய்க் கொண்டாடிவரும் தங்கள் தங்கள் சுவதேச ராஜராஜாங்க சரித்திரங்களை நாம் படிக்காததனால் உண்டாகும் சிரத்தைக் குறைவேயாம். அஃதெங்ஙனமெனின், ஸ்வதேச சரித்திர ஞானமில்லாததினால் நமது ஹிருதயங்களில் தேசபக்தி விளைவதில்லையென்றும், நாம் வாழும் இப்பூர்வீக நாட்டை ரக்ஷிப்பதில் ஊக்கமற்றவர்களாகிறோமென்றும், அதனால் விளையும் துன்பங்கள் எண்ணிறந்தவை யென்பதும் இக்காலத்திய நம்மிந்திய தேசபக்த சிரேஷ்டர்களின் அபிப்பிராயம்.

சரித்திர மென்பதற்குப் பொருள் நல்ல பெயர் என்று ஒருவாறு கொள்ளலாம். எப்படி ஒரு புருஷனுக்கு நன்னடக்கையால் நல்ல பெயருண்டாகிறதோ, அப்படியே ஒவ்வொரு ஜாதியார், நாட்டார்களின் நடக்கையால் அவரவர்களின் குண விசேஷங்களறியப்படும். இவ்வறிவால் உண்டாகும் நன்மைகள் பல. தம் முன்னோர்களின் சரித்திரப் பெருமையே தாம் பெருமையடைவதற்குத் தூண்டுகோல். அவரது மகிமையான குணங்களின் சிந்தனையே ஊக்கத்துக்குக் காரணம். ஊக்கத்தாலுண்டாகும் முயற்சியே போன பாக்கியங்களை அழைப்பிக்கும் ஓர் மந்திரக் கோலம்.



இவ்வர்த்தத்தை விளக்குவதற்கு நமது நாட்டில் பல சிறந்த சாக்ஷியங்களுண்டு. ராஜபுத்திரரென்று இந்துஸ்தானத்திலிருக்கும் ஜனங்களையும் அவர்களுடைய தலைவர்களையும் கொண்டு தைரியம், சௌரியம் முதலிய குணங்களால் கிடைக்கக்கூடிய எவ்விதப் பயனையும் வேண்டியவர்கள் பெறலாம். ஏனெனில், அவர்களுக்குக் குலப்பெருமையும் குடும்பப் பெருமையும் இன்னுங் குறையவில்லை. ஏதாகிலும் காரியமாக வேண்டியிருந்தால், உதயபுரம் மகாராணாவைப் பார்த்து, "ஐயா, நீர் சூரிய வம்ச ராஜனல்லவா; இக்காரியம் உம்மாலேயேதான் ஆகவேண்டும்," என்றால் புலிப்பாலை வேண்டுமானாலும் கொண்டுவந்து கொடுக்கத் தயாராயிருப்பார். இதை யுத்தேசித்தேதான் இந்திய சரித்திரத்தில் வல்லோராகிய ஸ்ரீமான்-ஹண்டர் துரையவர்கள், "எந்த ஜாதியாருக்குப் பூர்வீக மகிமையில்லையோ, அவர்களுக்கு வருங்காலத்திலும் பெருமையில்லை", என்கிறார்.

பூர்வ ராஜ்யவிஷயத்தைப்பற்றி உண்மையாயும் பூரணமாயும் அறிவதற் குபயோகமான கதைத் தொடர்ச்சியே சரித்திர சாஸ்திரீய நிபுணர்களால் சரித்திரமென்று வழங்கி வருகிறது. அப்பேர்ப்பட்ட சரித்திரங்கள் எல்லாக் கலைகளிலும் வல்ல நமது முன்னோர்களுக்குள் ஏது காரணத்தாலோ பிரபலிக்கவில்லை. அது நமது துர்ப்பாக்கியமே!

நாம் பிள்ளைகளுக்குப் போதிக்குமவைகளில், விக்கிரமார்க்கன், போஜராஜன் இவர் போன்றவர்களின் கதைகளும், ராயர் அப்பாஜி வேடிக்கைக் கதைகளுமே சரித்திர சம்பந்தப்பட்டுள்ள காலில்லாக் கதைகளாம். இதிஹாஸ புராணங்களில் சொல்லப்பட்டவைகளோவெனில், பாரமார்த்திக, தெய்வ, வைதிக சாரித்திர விஷயங்களுக்கமையுமே யல்லாது, லௌகிக வியாவகாரிகப் பிரமாணங்களுக்கொப்பாது. அவை தரும, கரும, நீதி, பக்தி, வைராக்கிய, யோக, ஞான, வேதாந்த விஷயங்களை வெகுவாய் விஸ்தரிக்கின்றன. அவை, ராஜாங்க உற்பத்திக் கிரம நாசங்களையும், பிரஜா க்ஷேமதுக்கங்களையும், சில ரகசியார்த்தமான நீதிக்கதைகளாலும், சுருக்கமான நியாயங்களாலும், சுட்டிக் காட்டினவே யொழிய, விஸ்தாரமான உதாரணங்களால் தெளிவிக்கவில்லை. இதிஹாஸ புராண முனிகளுக்குப் பின்னிட்ட மகா புருஷர்கள், எவ்வாறு மற்ற கலைகளில் வேறு விஸ்தாரமான சுத்தக் கிரந்தங்கள் செய்தனரோ, அப்படியே நாமும் நம்மாலியன்றமட்டும் சுத்தச் சரித்திர கிரந்தங்களை காலதேசவர்த்தமான நடவடிக்கைகளையனுசரித்துச் சிறுகச் சிறுகச் செய்யத்தொடங்க வேண்டுவது நமது கடமையென்பது திண்ணம். சுத்த சரித்திரக் கிரந்தப் பயிற்சியில்லாமல் ராஜரீகமுறைகளைத் தீர அறிவது முடியாது. ராஜரீக முறைகளின் அறிவினால்தான் சில தற்கால தோஷ பரிஹாரங்கள் சாத்தியமாகும்.

தவிர, காலக்கிரமத்தில் நமது தேசத்தாரும் மற்ற செல்வத்துடன் வாழும் மேனாட்டார்களின் பரிகாசத்துக் கிடமான முக்கிய குறை நீங்கி அவர்களுக்குச் சமதையாவோம். அன்றேல், தற்கால உலக நிலைமையையும், இக்காலத்துப் பிரபலமாயுள்ள நாட்டாரின் சரித்திர நடவடிக்கைகளையும், ஆலோசிக்குமிடத்து இந்தியர்களாகிய நாம் வெகுநாள் வாழ்வதே அரிதாகுமென்பது சரித்திர சாஸ்திரீயப் பிரமாணக்கொள்கை.

அப்படியே ஸ்ரீகிருஷ்ணபகவானும் கீதையில் சொல்லுகிறார். "மனிதன் தான் பெருமையடைவதற்கும், சிறுமை யடைவதற்கும் தானே காரணமாகிறான். தனக்கு "நெருங்கிய பந்துவும் தானே, நீங்கா வைரியுந்தானே." இதன் தாத்பரியத்தை நம்மில் விவேகிகளெல்லோரும் செம்மையாய் மனனஞ்செய்து தமது க்ஷேமத்தையும் தேச க்ஷேமத்தையும் அதிகரிக்க முயல்வாராக.

## 3. பூமண்டலத்திய தருமாத்மாக்கள்—அவதாரிகை

ஸ்ரீமான்-டீ. எஸ். சுப்பிரமணிய அய்யர்,
எம். ஏ. எல்.டி.

இவ்வுலகில் எக்காரியத்திலும் எவ்விடத்திலும் சத்தியமே முடிவில் நிலைபெறுமென்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை. ஆயினும், சத்தியம் வெற்றியடைவதற்குமுன் அதற்கு அநேக ஆபத்துகளும், தொந்திரைகளும் சில காலங்களில் உண்டாகின்றன. "நிர்வாண தேசத்தில் உடையுடையோன் பைத்தியக்காரன்" என்றபடி, அநேகமாய் எல்லாரும் ஒருவிதமான எண்ணங்களையும் கொள்கைகளையும் மேற்கொண்டிருக்கும் காலத்தில், அவைகளுக்கு மாறாக எவனொருவன் ஒரு சத்தியமான வழியைத் தெரிந்தெடுத்துத் தைரியமாய்க் காட்டுகிறானோ, அவனுக்குப் பெரும்பாலும் முதலில் தொந்திரைகளே உண்டாகின்றன. தத்துவத்தைக் கண்டுபிடிப்பவனுக்கு மரியாதை செய்வதற்கு மாறாக, அவனை அவனுடைய இனத்தாரே பீடிக்க ஆரம்பிக்கிறார்கள். ஏனெனில், இயற்கையில் மனிதர்களுக்குப் பழைய வழக்கத்தை மாற்றுவதே மனதுக்குச் சரியாய்த் தோற்றுவதில்லை. ஏனெனில்,நம்மில் பெரும்பாலார் பழைய முறைகளிலும் நோக்கங்களிலுமே பூர்ண பக்தியும் நம்பிக்கையுமுடையவர்கள். இக்காரணம்பற்றியே புதிதான நோக்கமுடையோர்களை மனிதர்களுக்கும் பிரபஞ்ச க்ஷேமத்திற்கும் விரோதிகளென்று நினைத்து அவர்களைத் தொலைத்துவிட முயல்கிறார்கள். இவ்விதமாய்ச் சத்தியத்திற்கும் தருமத்திற்குமாக வேண்டி உயிரிழந்தவர்கள் இவ்வுலகில் பலர். சத்தியத்தைக் காப்பது வெகு கஷ்டமானது என்பதை வெளிப்படுத்த இத்தேசத்தில் வழங்கிவரும் அரிச்சந்திரன் சரித்திரத்தைவிட வேறு உருக்கமான கதை வேண்டியதில்லை. ஆயினும், இக்கதைகளெல்லாம் புராணங்களைச் சேர்ந்தவைகள். புராணங்களையோ இக்காலத்தில் விவேகிகள் சில விஷயங்களில் சாக்ஷியமாக எடுத்துக்கொள்வதில்லை. ஆதலால் சாரித்திர சாக்ஷியமாகவே விஷயங்களை வற்புறுத்தவேண்டி வருகிறது. ஆகையால் பல தேசங்களிலும் பல காலங்களிலும் மதம்,ஆசாரம், நாகரிகம் முதலிய விஷயங்களில் சத்தியத்தைக் கைக்கொண்டு அப்படிக் கைக்கொண்ட தருமத்தை நிலை நிறுத்தும்பொருட்டு உயிரையிழந்த மகா புருஷர்களின் சரித்திரத்தைத்தொடர்ச்சியாய் எழுதமுயல்வோம். ஐரோப்பிய தேசங்களெல்லாவற்றிலும், க்ரீஸ் தேசம் ஆதிகாலத்தில் புகழ்பெற்றதானபடியால், அத்தேசிய ஞானி ஒருவரைப்பற்றி இங்கு முதன் முதல் விவரித்தல் பொருந்தும்.

### ஸாக்ரடீஸ்

2000-வருஷங்களுக்கு முந்தி கிரீஸ் தேசத்தில் பெருமைபெற்று விளங்கிய மகான்களில் ஸாக்ரடீஸ் என்பவர் முக்கியஸ்தர். அக்காலத்தில் எல்லோரும் ராஜாங்க முறைகளில் தலையிட்டுத் தங்கள் நகரைச் சரிவர நடத்தித் துரைத்தன வழியிலேயே கௌரவம் சம்பாதிப்பது வழக்கம். வயல்களில் செய்யவேண்டிய உழவு முதலான வேலைகளும், கைத்தொழில், வியாபார முதலியவைகளும், அடிமைகளாற் செய்யப்பட்டுவந்தன. பணக்காரர்கள் கிராமங்களில் வாசஞ்செய்யாமல் ராஜதானியாகிய ஆதென்ஸுக்கு வந்துவிடுவார்கள். அங்கே அவர்கள் சாமான்னியர்களுடன் கலக்காமல், அவர்களை மிக்க அவமதிப்புடன் நடத்துவார்கள். ஆனால் ஸாக்ரடீஸ் அதிகமாய் ராஜாங்க விஷயங்களில் புகாமல், அத்தேசத்தவர்களின் மனதை நல்வழியில் திருப்புவதிலும், புத்தியைக் கூர்மையாக்குவதிலுமே நோக்க முடையவராய்த் தன் எண்ணத்தை அனுசரித்துச் சிறுவர்களையும் பெரியோர்களையும் கூட்டி அவர்களுக்குத் தருமோபதேசம் செய்வதையே தொழிலாகக்கொண்டார்.



2. இவர் கி. மு. 470 வருஷத்தில் பிறந்தார் என்று தோற்றுகிறது. இவர் தகப்ப



னார் ஒரு எளிய கல்தச்சு வேலைக்காரர். தாயார் மருத்துவச்சியாம். ஆதலால் பின்னிட்டு இவர் சிறுவர்களுக்குத் தருமோபதேசம் செய்து வருகையில், ஒரு சந்தர்ப்பத்தில் தானுந்தன் தாயாருடைய தொழிலையே மேற்கொண்டிருப்பதாகச் சொன்னார். அது சத்தியம். மருத்துவச்சிக்கு வயிற்றிலுள்ள குழந்தை வெளியே வருவதற்குச் சௌகரியஞ்செய்வதே தொழிலல்லது, குழந்தையைச் செய்து வைப்பதல்ல. அதுபோலத் தானும் சிறுவர்களுக்கு ஈசுவரன்கொடுத்த புத்தியை வெளிவருவதற்குள்ள சௌகரியங்களைச் செய்வதொழிய,இல்லாத புத்தியை யுண்டுசெய்ய வரவில்லை யென்பது அவர் தாற்பரியம். இந்த ரகசியம் உபாத்தியாயர் ஒவ்வொருவரு மறியவேண்டுவதாம். வேறு அநேக மகாத்துமாக்களைப்போல் இவரும் ஜீவதசை முழுதும் ஏழையாயிருந்தவர்தான் என்பது நிச்சயம்.

இவர் நண்டுபோல் புடைத்துள்ள கண்களும், சப்பை மூக்கும், விசாலமான நாசித்துவாரங்களும், தடித்துப் பருத்த உதடுகளுங்கூட்டிப் பார்வைக்குக் குரூபியாகத் தோன்றினாலும்,மிகுந்த புத்தியுடையவர் என்பதற்கு லக்ஷணமாக இவர் நெற்றிமட்டும் அகன்று விசாலமாகக்காணும். சரீரமோ,குறுக்கே வளர்ந்து புடைத்திருந்தது. இவர் சிறுவர்கள் தேகப்பயிற்சி செய்தல், ஸ்நானம் பண்ணுதல், சம்பாஷித்தல் ஆகிய இவைகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த கொடிக் கூடங்களுக்குப் பாலியம் முதல் அடிக்கடி சென்று, தானும் அவைகளில் விசேஷமாகக் காலத்தைச் செலவழிப்பார். எவ்விடம் சென்றாலும், எல்லோருடனும் பிரியமாகவும், தாராளமாயும் பேசுவது வழக்கமாகிவிட்டது. குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் ஆகிய எல்லோருக்கும் இவரோடு பேசுவதிலும், இவர் பேச்சைக் கேட்பதிலும் ஆசை வெகுஅதிகம். இவர் ஒருவருக்குந் தீங்கு கனவிலும் நினையார். தன் வழியில் முள்ளைப் போடுபவருக்கு புஷ்பத்தைப் பரப்புவார். எவ்வகை ஆபத்திலும் நிதானம் தவரமாட்டார். எதையிழக்கும்படியாயிருந்தாலும், நியாயத்தையே நாடுவார். தன்னடக்கத்தையே மேன்மையாகக்கொண்டுள்ளார். பொறுமையே மனிதவுருவம் எடுத்துக்கொண்டதென்று எல்லோரும் வருணிப்பார்கள். இதற்குப் பரம்பரையாய் வரும் உதாரணமொன்றை யிவ்விடத்தில் கூறுதல் தகும். அதாவது, இவருக்கு வாழ்க்கைப்பட்ட புண்ணியவதியான ஸ்ரீமதி "ஜாந்திப்பி" என்ற அம்மாளைக் குறித்த இரண்டொரு கதைகளேயாம். ஒருமுறையிவள் இவரை வாயில் வந்தபடியெல்லாம் நொறுக்கியும், இவர் அசையாமலும், பதில் பேசாமலும், கோபக்குறியென்பது சிறிதுமில்லாமலும் புன்சிரிப்புடனிருந்ததைக் கண்டு சகியாமல், அவள் ஒரு குடத்தில் தண்ணீரை யெடுத்துவந்து இவர் தலைமேல் அபிஷேகம் செய்ய, அதைப் பார்த்திருந்த

இஷ்டர்களிற் சிலர் இவரைக் கடிந்துகொண்டார்கள். அதற்கு இவர் "மேகம் கர்ஜித்தால் கொஞ்சமாவது மழை பெய்யாமலிருப்பது லக்ஷணமல்ல" என்று மட்டும் பதில் சொன்னாராம். வேறொரு சமயத்தில் இதுபோல் கலகம் நடந்ததற்கு அவரை யிஷ்டர்கள் "இக்கழுதையையேன் கட்டிக்கொண்டழ வேண்டும்"? என்று கேட்டார்கள். அதற்கு அவர், "குதிரைச்சவாரி செய்ய இஷ்டமுள்ளவர் அராமிக்குதிரைகளையே தேடுவது தருமம். ஏனெனில், அதையடக்கி யாண்டால் மற்றவையைக்கொண்டு லக்ஷியமில்லை" என்றாராம். ஆகாரவியவகாரங்களிலெல்லாம் மிதமாகவேயிருந்து பழகியதினால் இவர் தனக்குள்ள சொற்பப்பணத்தைக்கொண்டே அதிருப்தி யென்பது சிறிதுமில்லாமலிருந்தார். ஒரு சமயத்தில் மாசிடோனியா மகாராஜா இவருடைய குணத்தையும், விவேகத்தையும் அறிந்து தனது சமஸ்தானத்தில் இவரிருக்கவேண்டுமென்றும், இவருக்கு வேண்டியமட்டில் தனதானிய சம்பத்துகளைக் கொடுப்பதாகவும் சொல்லி வருந்தியழைத்ததற்கு, இவர் ஆதேன்ஸில் கோதுமைமாவு எப்போதும் மலிவாகவே விற்பதாகவும், குடிக்கத் தண்ணீர் காசு கொடாமலே கிடைப்பதாகவும், இவ்விரண்டையுந் தவிர்த்துத் தனக்கு வேறு பொருள்கள் வேண்டியதாகக் காணவில்லை யென்றும் மறுமொழி சொல்லியனுப்பிவிட்டாராம். தவிர இந்திரியங்களை யடக்குமளவிற்கு நமக்கும் மானிடத்தன்மை யொழிந்து தெய்விகம் அதிகரிக்கிறதென்றும், யாவனொருவனுக்கு இவ்வுலகத்திய பந்தம் எல்லாம் விட்டுப்போகிறதோ அவன் ஜீவன் முக்தனாகிவிடுகிறானென்றும் இவர் சித்தாந்தம்.

3. இவருடைய குணாதிசயங்கள் எல்லோரும் வியக்கத்தக்கனவாகவே யிருந்தன. இவர் உலகத்தில் சுவபாகமாக நடக்கும் சகல காரியங்களுக்கும் காரணங்கண்டு பிடிப்பதையே விரதமாகக்கொண்டு, அது விஷயமாய் யோசித்தும், தர்க்கித்தும் வந்தார். மனிதன் மிகுதியாகப் பயிலும் தீயொழுக்கங்களெல்லாம் தெரியாத்தனத்தினாலேயே உண்டாவனவென்பது இவர் முக்கிய கொள்கை. ஆகையால், எல்லோரும் புத்தியை நல்வழிபற்றி நடக்கச் செய்துகொண்டால், ஆசாரம் திருந்துவதில் கஷ்டமில்லையென்று கண்டுகொண்டு, பாலர்களின் மனதை மூடிக்கொண்டிருக்கிற அஞ்ஞானமென்ற இருளுக்கு ஒரு சூரியனாக விளங்கி, அநேகம் தீயர்கள் நற்கதி அடைவதற்குரிய மார்க்கத்தைக் காண்பிப்பதையே தனக்கு ஜீவதசையில் ஆக வேண்டிய காரியமாகத் தீர்மானித்துக் கொண்டார். இவ்விரதமென்னும் அபாயகரமானதும், கஷ்டத்தால் நிரம்பியதுமான கடலைக்கடந்து மோக்ஷம் என்று சொல்லப்படும் அக்கரையைக்கண்டுபிடிக்க, கல்வியென்ற மரக்கலமும், வாதாடுவதில் திறமை யென்றுள்ள அனுகூலமான காற்றும், அவசியமென்றே அவருக்குப்புலப்பட்டது. இக்கல்வியை அவர் புத்தகங்களில் போய்த் தேடவில்லை. பேச்சுச் சாதுரியமடைய வேண்டித் தர்க்கம் படிக்கவுமில்லை. இவர் மாதிரியான பிரதிவாதிகளுக்குத் தர்க்கயுக்தி படித்து வருவதுமில்லை. ஆனால் தினந்தோறும் தன்னையும் மற்ற உலகத்தினரெல்லோரையும் வருத்துகின்ற விஷயங்களை ஆராய்ந்து, அவற்றிலிருந்து புத்திமான்கள் தப்பித்துக்கொள்வதையும், புத்தியீனர்கள் அவற்றிலகப்பட்டுக் கொள்வதையும் ஆலோசித்து, நல்ல வழியை அறிந்துகொள்வார். பலருடனும் சம்பாஷிப்பதினால் புத்தி கூர்மையைக்கொண்டு பேச்சுச் சாதுரியத்தைச் சுலபமாகத் தன் வசமாக்கிக்கொண்டார். இதில் இவரடைந்த சாமர்த்தியத்தை இவரைப்பற்றி எழுதியுள்ள புத்தகங்களில்காணலாம். இடமின்



மைபற்றி இவ்விடத்தில் அதை விவரித்துக் கூறல் அசாத்தியமாயிற்று.

4. மேற்சொல்லிய தீர்மானமே அவருடைய பரோபகார சிந்தையையும், தேசாபிமானத்தையும் நன்றாக எடுத்துக் காட்டுகிறதல்லவா? பிறருடைய சுகதுக்கங்களையெல்லாம் தன்னுடையதாகவே பாவித்து எல்லோருக்கும் உபகாரஞ் செய்வதிலேயே நோக்கமுடையவர். இதர ஜனங்கள் ஏதாவது தவறுதல் செய்துவிட்டால் இவர் அதைக் குறித்துப் பரிதபிப்பார். இப்படியிவர் இருந்ததற்குக் காரணமொன்றுண்டு. ஆனாலது, தான் எல்லோரையும் விட மேன்மையானவரென்ற கர்வத்தினாலுண்டாகியதல்ல. ஏனெனில், ஒருக்கால் இவரை யுலகிலுள்ளோரனைவரையும் விட ஞானத்திற் சிறந்தவரென்று ஒரு தெய்வம் ஆவேசமாக வந்து கூறியதாம். அது இவருக்குத் தெரிந்ததும், "ஓகோ, இதென்ன அற்புதம். எனக்குள்ள முட்டாள்தனம் எனக்கு நன்றாகத் தெரிந்திருக்கத் தெய்வமிவ்வாறு சொல்லியதற்குக் கருத்தென்னவென்று தெரிதல்வேண்டும்," என்று அன்றுமுதல் தனக்கு எதிர்ப்பட்டு வந்தவரை யெல்லாம் பல விஷயங்களில் ஆக்ஷேபித்து வாதம் செய்ததில், முட்டாள்தனத்தில் அவர்களும் தானும் சமதையாகவே யிருக்கத் தனக்கும் மற்றுள்ளோருக்கும் பேதமாவது, மற்றையோருக்கு வித்தியாகர்வ மதிகமும், தனக்கு அதுமட்டுங் குறைச்சலுமாக விருந்ததினால், அதைத்தான் தெய்வமப்படிச் சொல்லியிருக்க வேண்டுமென்று அவர் தீர்மானித்தாராம். ஆகையால் பிறர் மூடத்தனத்தாலும் அறியாமையாலும் செய்யும் குற்றங்களைக்குறித்து இவர் துக்கிப்பார். ஆனால், தன் புத்திமதியைக்கேளாமல், பெரிய தவறுகளை யாராவது செய்துவிட்டால், அவர்களை நாராசம்போன்ற வார்த்தைகளால் திட்டாமல், அவர்களை யவர் வழியிலேயேவிட்டு, வாதத்தில் சிக்கிக்கொள்ளச் செய்து தன் வழி திருப்புவார். யாவனாவது தேசாபிமானமில்லாதவனாயிருந்தால் அவனை மனிதர்களோடு கணக்கிடுவதைவிடத் தன் காடென்றும் பிறர்காடென்றுமறியாத புலி முதலிய விலங்குகளுக்கு ஒப்பிடுதல் தகுமென்பது அவர்கொள்கை. ஆகவே, ஸாக்ரடீஸ் மிகுந்த தேசாபிமானமுள்ளவர். தேசாபிமானியென்று நடிக்கும் சிலரைப்போல் கூட்டங்களிலும், ராஜ சபைகளிலும் உரக்கப் பேசிவிட்டுக் காரியமாகவேண்டிய காலத்தில் வீட்டிலுறங்குபவர் அன்று. தேசத்தின் நன்மையும், தேசத்திலுள்ளாரின் பெருமையும், தருமமார்க்கமாய் ஓங்கிவளர வேண்டுமென்பதே இவர் உட்கருத்து. இவர் இவ்வாறாக நினைத்து, இதற்குத் தக்கபடி ஒவ்வொரு விஷயத்திலும் நன்றாக ஆலோசித்து, நன்மை விளைவித்துத் தேசத்தை விருத்திசெய்வதிலும், சிறுவர்களுக்கு ஞான அமுதைப்புகட்டி வந்தார்.

(இன்னும் வரும்).

---

ஸ்ரீமான்-பாலச்சந்த்ர தயாராம் என்னும் சிந்து, நாட்டுப் பெரியமனிதர் சமீபத்தில் செய்த உபந்நியாசத்தில், அவ்விடத்திய ஸ்திரீகள் தரிக்கும் ஆபரணங்கள் வெகு உபத்திரவகரமானவை யென்றும், அவைகளைச் சீக்கிரம் மாற்றவேண்டும் என்றும் சொன்னாராம். அந்த விஷயத்தில் ஸ்திரீகளெங்கும் ஒரே விதமாகத் தானிருப்பதாகக் காணுகிறது. நாகரிகத்தில் தேர்ந்தவர்களென்று பெருமைப்படும் ஐரோப்பிய ஸ்திரீகள் உடைவிஷயத்தில் திமிங்கல எலும்புத்துண்டுகளை வைத்து கட்டிக்கொண்டு, இடுப்பை உடுக்கைப்போல் செய்துகொள்ளவும், பாதத்தைச் சிறிதாக்கவும், இதுபோல் வேறு இம்சைகளைச் செய்துகொள்ளவும் பின் வாங்குவதில்லை. நமது தமிழ் நாட்டில், தென்கோடியில் காதுகளைத் தோள்வரை யிழுத்துவிடுவது சித்திரத்திலும், பிரத்தியக்ஷத்திலுங் காணக்கூடிய லக்ஷணம். இப்படி, வேண்டாத உபத்திரவங்கள் தொலைவதற்குக் கல்வியும், அதனாலுண்டாகும் ஐகமத்தியமுமே சாதனமாகும். ஆதலால் கல்வியதிகரிக்கும்படி பிரயத்னம் எங்கும் நடக்கவேண்டும்.

# கலைவகைக் காண்டம்

## 1. ககோளதத்துவம்—பாலபாடம்

ஸ்ரீமதி-ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள்

**All Rights Reserved**

சிலவருஷங்களுக்கு முன், பள்ளிக்கூடத்தில்படிக்கும் பையனொருவனைப் பூமி உருண்டையா, தட்டையா என்று கேட்டதற்கு அவன், "அது பள்ளிக்கூடத்திற்கு வந்தால் உருண்டையாய் விடுகிறது, வீட்டிலிருந்தால் தட்டையாயிருக்கிறது!" என்றானாம்.

இதைக்கேட்டு நாம் சிரிப்பதற்கிடமில்லை. ஏனெனில், நம்மில் அநேகமாய் எல்லோரும் இந்த ஸ்திதியில் தானிருக்கிறோம். இந்தியாவில் ஒருகாலத்தில் 'ஆரியபட்டர்' முதலிய பெரியககோளதத்துவ ஞானிகளிருந்தது மெய்தான். ஆனால், நம்மில் பெரும்பாலார்க்குப் புராணங்களில் நம்பிக்கை யதிகமாதலால், அதில் காணுவதுதான் சத்தியம். உதாரணமாக இவ்விஷயத்தில் நாம் வாசஞ்செய்யும் இந்தப்பூமியானது ஆதிசேஷன் என்னும் ஆயிரம் தலைகளுள்ள ஒருபாம்பின் தலைமேல் தாங்கப் படுகிறது, என்று ஒரு புராணத்தில் எழுதியிருக்கிறது. ஆனால் அந்த ஆதிசேஷன் எதன்மேல் தன்தேகத்தை ஊன்றிக்கொண்டிருக்கிறானென்றால், அதற்குப்பதில் இல்லை. இது போன்ற அநேக விஷயங்கள் நமது புராணங்களில் மட்டுமேயல்லாமல், கிறிஸ்தவர் முதலியோருடைய வேதங்களிலும், அந்தந்த ஜனங்களுடைய மனோதருமத்தை யனுசரித்து எழுதப்பட்டு இருக்கின்றன. ஆனால் உண்மையை விசாரிக்குமிடத்து இக்கதைகளால் நமக்குயாதொரு பிரயோஜனமுமில்லை.

ஏனெனில் கணிதரீதியாக இப்பூமியானது சுமார் 24860-மைல் சுற்றளவுள்ள ஒருபெரிய பந்து போன்றிருக்கிறதென்பது நிச்சயம். தவிர அது விளக்கை விட்டிற்பூச்சி சுற்றிச் சுற்றிவருவதுபோல் சூரியனைச் சுற்றிச் சுற்றிவருகிறது. அப்படிச் சூரியனை ஒருதரம் சுற்றுவதற்கு வருஷம் ஒன்று ஆகிறது. சூரியனைச்சுற்றும் பொழுதே 24-மணிக்கு ஒருதரம் பம்பரம்போலச் சுழன்றும் வருகிறது. இதெப்படியென்றால், உங்களில் பம்பரம் நன்றாய் ஆடத் தெரிந்தவனிடத்தில் ஒரு பம்பரத்தையும் சாட்டையையுங் கொடுங்கள். அவன் அதை ஆடியவுடன் அது கரகரவென்று சுற்றிக்கொண்டே ஒரு பெரிய மண்டலமிட்டு வருவது எப்படியோ, அதுபோல வென்றறிய வேண்டும்.

ஒரு புகைக்கூண்டானது ஆகாசத்தில் ஓர் ஆதாரவுமின்றி யெப்படி நிற்கக்கூடுமோ அதுபோல அளவென்பதே காணக்கூடாத ஆகாசவெளியில் சூரியன் என்னும் பெருஞ்சோதி மிதக்க, அதைச்சுற்றி இந்தப் பூமியும் வளைய வளைய வந்து கொண்டிருக்கின்றது. இது பிரதக்ஷிணமா, அப்பிரதக்ஷிணமா என்று விசாரிப்பது வீண். ஏனெனில் முறுக்கு என்னும் தின்பண்டத்தை ஒருபுறம் பார்த்தால் சுற்று பிரதக்ஷிணமாகவும், மற்றொருபுறம் அப்பிரதக்ஷிணமாகவும் காணும். தவிர விளக்கைச் சுற்றிவரும் பூச்சியை மேலிருந்து பார்த்தால் ஒருவிதமாகவும் கீழிருந்து பார்த்தால் அதற்குமாறாகவும் காணுவது பிரத்தியக்ஷம். ஆதலால் நாம் எந்தப்புறத்திலிருந்து பார்க்கிறோமோ அதை யனுசரித்துத்தான் பிரதக்ஷிணமும் ஏற்படும்.

இப்படியே சாமான்னியமாய்ப் பேசும் போது சுவர்க்க முதலிய புண்ணியவுலகங்கள் மேலேயிருப்பதாகக்கையைக் காட்டியும், பாதாள முதலியவை கீழேயிருப்பதாகவும் சொல்லி வருகிறோம். ஆனால் நாம் மேற்சொல்லியபடி 24-மணிக்குள் பூமி தன்னையொருமுறை சுற்றிக்கொள்ளுவதால் எத்தனை மணிக்குப் புண்ணியலோகங்கள் மேலே காணுமென்று தெரிந்தால் ஒழிய, நாம் கையைக்காட்டுவதற்கு அர்த்தமில்லை. ஏனெனில், பகல் பன்னிரண்டுமணிக்கு நமது தலைக்குமேல் காணும் உலகங்கள் இரவில் அதே சமயத்தில் நமக்குக் கீழே போய்விடுகின்றன.



ஒரு விளக்கை அநேகம் பூச்சிகள் சுற்றுவதுபோல் சூரியனைப் பூமியல்லாது புதன், சுக்கிரன், குரு, சனி முதலிய கிரகங்களும் சுற்றுகின்றன. ஆகவே பூமியும் ஓர் கிரகம் என்பதிற் சந்தேகமில்லை.

இக்கிரகங்களில் பலவற்றிற்குக் குஞ்சுகள் உண்டு அவைகள் தத்தம் தாய்மார்களைச் சுற்றிச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன. தாய்மார்கள் எங்கே போனாலும் விடாமல் சுற்றி வருகின்றன. இவ்வகைப்பட்ட குஞ்சு ஒன்று நமது பூமியை 30-நாளில் சுற்றிவந்து அப்பூமியோடு ஒருவருஷத்தில் சூரியனையும் சுற்றிவருகிறது. இதற்குச் சந்திரன் என்று நாம் பெயரிட்டிருக்கிறோம். இவ்வாறு பெரிய கிரகங்களைச் சுற்றிவரும் குஞ்சுகளுக்கு உபக்கிரகங்கள் அல்லது பரிவாரங்கள் என்று பெயரிடலாம். புதன், சுக்கிரன் ஆகிய இரண்டொழிய மற்றைய கிரகங்களுக்கெல்லாம் பரிவாரங்கள் உண்டு.

நடுவில் சூரியனும் பூமியுள்பட அதைச்சுற்றிவரும் எல்லாக் கிரகங்களும் அவைகளுடைய பரிவாரங்களும் சேர்ந்து சூரியமண்டலம் என்னப்படும்.

மேகம் முதலிய மறைவில்லாமல் ஆகாசம் நிர்மலமாயிருக்கும் பொழுது, இரவில் நாம் வானத்தை நிமிர்ந்து நோக்கினால் எங்கே பார்த்தாலும் கணக்கற்றஜோதிகள் சிறிதும் பெரிதுமாய் அடர்ந்து கிடக்கின்றன. இவைகளிலொவ்வொன்றும் ஓர் சூரியமண்டலமென்று நம்ப இடமுண்டு. இவைகளுக்கு நாம் நக்ஷத்திரங்களெனப் பெயரிட்டிருக்கிறோம். இவைகளில் சில பெரிதும், சில சிறிதுமாகக் காணுகின்றன. என்றாலும் நமக்குக் கண்ணிற் காணுவதை நம்பி இதுதான் சிறிது, அதுதான் பெரிதென்று நிச்சயிக்கமுடியாது. சில நக்ஷத்திரங்கள் சிறியவைகளாய்த் தோன்றுவதால் மட்டுமே அவைகள் சூரியனைவிடவாவது மற்றைய நக்ஷத்திரங்களை விடவாவது, சிறியவை என்று நிச்சயமாக்குதல் சரியன்று. ஏனெனில் ஒரே வஸ்துவானது எட்டிப் போகப்போகச் சிறிதாகக் காணுவதால், நக்ஷத்திரங்களின் பருமனை நிச்சயமாயறிவதற்கு அவைகள் இருக்கும் தூரமும் நமக்குத் தெரியவேண்டும். ஆனால் இது வெகு கடினம். ஏனெனில் நமக்கு வெகு சமீபத்திலிருக்கும் நக்ஷத்திரமொன்றை எடுத்துக்கொண்டால் அது சூரியனைவிட ஐந்துலக்ஷம் மடங்கு அதிகமான தூரத்தில் இருக்கிறது, சூரியனோ பூமியிலிருந்து 93-கோடி மைல் தூரத்தில் இருப்பதால், நாம் சொல்லும் நக்ஷத்திரமென்னும் மற்றொரு சூரியன் எவ்வளவு தூரத்தில் இருக்கவேண்டுமென்பதை மனதினால் கூட ஆராய்வது அரிது. நமக்கு அயலிலிருக்கும் நக்ஷத்திரத்திற்கே இந்த லக்ஷணமானால், இன்னும் தூரத்திலிருப்பவைகளைப் பகுத்தறிய யாரால் முடியும்?

ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும் சுற்றி அநேகம் கிரகங்கள் உலாவி வருவது சாத்தியம். அவ்விஷயத்தில் அவைஎல்லாம் நமது சூரியனைப்போலவே இருந்தாலும் இருக்கக்கூடும். ஆனால் அவைகளில் ஒன்றிற்கொன்றுள்ள சம்பந்தத்தை நாம் உபயோகிக்கும் இங்கிலீஷ் மைல்களைக்கொண்டு கணக்கிடப் புகுந்தால் வெகு சீக்கிரத்தில் தலைசுற்றும். மொத்தத்தில் நம்மைச்சுற்றிக் காணும் பிரம்மாண்ட மண்டலத்தில் எத்தனையோ அளவற்ற அண்டங்கள் உருண்டுகொண்டிருக்கின்றனவென்பது பிரத்தியக்ஷம். இதைச்சுட்டியே நமது ஞானிகளும்,

"அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே" என்றும்,

"அந்தரத் தகிலகோடி
தாழாமணிலே நிற்கவில்லையோ" என்றும்,

பாடியிருக்கிறார்கள். இதில் ஆக்ஷேபமேயில்லை

1. அத்தியாயம்

பூமியின்வடிவம்



பூமியானது நமது கண்களுக்கு ஒரு பெரியவட்டமான சமநிலம்போல் தோன்றினாலும் உண்மையில் கிச்சிலிப்பழம்போன்ற ஒரு பெரிய உருண்டையாயிருக்கிறது.

இதற்குச் சாக்ஷியம்:—

இரண்டாம் படம்

1. நாம் சமுத்திரக் கரையிற்போய் நின்றுகொண்டு துறைமுகமாய் வரும் ஒரு கப்பலைக் கவனித்துக்கொண்டிருந்தால், முதன் முதல் நாம்காணுவது அதன் பாய்மரத்தின் உச்சிதான்.



பிறகு கொஞ்சங்கொஞ்சமாய் அந்த நுனியிலிருந்து கப்பலின் மற்றைய பாகங்கள் தெரிந்து, கடைசியாய் அதன் அடிப்புறம் தெரிகிறது. சமுத்திர ஜலம் சமமாயிருந்தால் கப்பலின் அதிக பருமனான கீழ்பாகமல்லவா முதலில் தெரியவேணும். அதேமாதிரியாக ஒருகப்பல் கரையோரமிருந்து, வெளியிற் போகும்பொழுதும் அடியிலிருந்து மறைய ஆரம்பித்துப் பாய்மரநுனி கடைசியில் மறையும். மற்றோர் சாமான்னிய உதாரணம் இதை யின்னும் நன்றாய் விளக்கும்.



ஒருதட்டில் இரண்டு ஈக்கள் உட்கார்ந்து ஒன்றையொன்று பார்த்தவண்ணம் பின்னுக்கு நகருவதாய் நினைத்துக்கொள்வோம்.

ஒன்றின் கண்ணுக்கு மற்றொன்று சிறியதாக ஆகிக்கொண்டிருக்குமே தவிர, ஈயின் ஒருபாகமோ அல்லது முழுவதுமோ மறைந்துவிடாது. ஒருதட்டின் மேலில்லாமல் இரண்டு ஈக்களும் ஒருபந்தின்மேல் முதலில் சமீபத்திலிருந்து பிறகு இரண்டுமோ அல்லது ஒன்று மாத்திரமோ பின்னுக்கு நகருவதானால், முதலில் இறக்கைகள் மறைந்து கடைசியில் முகம்மறையுமல்லவா? இரண்டிற்கும் நடுவில் பந்தின்மேடல்லவோ ஒருமண்டபம்போல் வளைகிறது.

மூன்றும் படம்

இரண்டு மைல் அகலமுள்ள ஒரு ஏரியில் நீர் மட்டத்திற்குமேல் ஒரே அளவாய் நீட்டிக்கொண்டிருக்க, ஒன்றுக் கொன்று ஒரு மைல் தூரத்தில், மூன்று கொம்புகள்நட்டு, ஒரு கொம்பின் தலையிலிருந்து மூன்றுவது கொம்பின் தலையைப் பார்த்தால், நடுக்கொம்பு 8-



அங்குலம் நீண்டிருப்பதைப்பார்க்கலாம். நீர் மட்டம் ஒன்றாயிருந்தால் மூன்று கொம்புகளின் தலைகளும் ஒரே மட்டத்திலல்லவாயிருக்கவேணும்? இரண்டுமைலல்லாமல் ஒருமைலேயானால் நடுக்கொம்பு இரண்டு அங்குலமும், நான்கு மைலானால் 32-அங்குலமும் நீண்டிருக்கும்.

ஆறு மைல் அகலமுள்ள ஓர் நீர்ப்பரப்பின் அக்கரையில், நீர் மட்டத்திற்குச் சரியாய்க் காலையூன்றி 6-அடி உயரம் நிற்கும் ஒரு மனிதனை, இக்கரையில் ஒருவன் நீர்மட்டத்திற்கு 6 அடிக்குமேல் கண்ணைவைத்து ஒரு தூரதிருஷ்டி கண்ணாடியைக்கொண்டு பார்த்தாலும் காணமுடியாது. நடுவில் எடுப்பாகக் காணும் ஜலம் மறைத்துவிடும்.

இப்பரீட்சைகளை ஜலமில்லாத தரையிலேயே செய்தும் பார்க்கலாம். ஆனால் அதற்கு அந்தத் தரையிலுள்ள மேடுபள்ளங்கள் இடையூறாகின்றன. என்றாலும் இந்த மேடுபள்ளங்களினால் பூமியின் உருட்சி வடிவத்திற்கு ஒரு லோபமுமில்லை. நமக்குத் தெரிந்தவரை 5-மைலுக்கு அதிகரித்த உயரமுள்ள மலையுமில்லை. 5-மைலுக்கு அதிகரித்த ஆழமுள்ள சமுத்திரமுமில்லை. ஆகவே இவ்விரண்டும் சேர்ந்து பத்து மைல் வித்தியாசந்தான் ஏற்படக்கூடும். ஆனால் பூமியின் இருசு 8000-மைல் இருப்பதால், இந்த விஷமங்கள் பூமியை முற்றும் பார்ப்பவருக்கு எடுப்பாகக்காணவே காணாது. ஒருகிச்சிலிப் பழத்தின் தோலைத் தொலையிலிருந்து பார்க்க வெகு நயமாகக் காணுகிறது. பக்கத்தில் வைத்துப் பார்க்க மேடு பள்ளம் காணுகிறது. என்றாலும் அந்தப் பழத்தின் உருண்டை வடிவத்தை இது எப்படிக் கெடுக்கவில்லையோ, அப்படியே, பூமியின் வடிவத்தை இந்த விஷமங்கள் கெடுக்காது. பூமியின் சுற்றளவல்லாது, நாம் மேற்குறித்த இருசு, என்றால், அதன் நடுவின் வழியாய்ப் போகக்கூடிய ஒரு துவாரத்தின் நீளம் 8000-மைல் என்றே மல்லவா? இந்த 8000 மைலுக்கு 10 மைல் எவ்வளவு தூரம். 8-அடி குறுக்களவுள்ள ஒரு பந்தின் மேல் $\frac{1}{8}$-அங்குலம் மேடு பள்ளம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, வடிவம் உருண்டைதானென்று சொல்லி விடலாம்.

நான்காம் படம்

2. நடுச்சமுத்திரத்தில் 6-அடி உயரம் நீர்மட்டத்திற்கு மேல் நிற்கும் மனிதன் சுற்றி 3-மைல் தூரம் வெறுங் கண்ணாலோ தூர திருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டோ பார்க்கலாம். அதாவது அந்த 3-மைலுக்குள்ளிருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் செம்மை



யாயும் புலப்படும். 24-அடி உயரத்தில் நின்று பார்த்தானானால் 6-மைல் தூரம் தெரியும். ஒரு கப்பலின் பாய் மரம் 54-அடி உயரமானால், அதன் நுனியிலிருந்து பார்ப்பவனுக்கு எப்புறத்திலும் 9-மைல் தூரம் தெரியுமாகையால், கரைக்கு வெகு தூரத்திலிருந்தே ஜனங்கள் கரைகிட்டுவதை அறிந்துகொள்ள முடியும். ஆகலால் எதிர்ப்படும் கரையில் சாதாரணமாய் 96-அடியுள்ள ஒரு தீபஸ்தம்பத்தை 54-அடி உயரத்திலிருந்து பார்க்கும் மாலுமி $(12+9)=21$-மைல் தூரத்திலேயே கண்டுவிடுவான்,

பூமி உருண்டை வடிவாயிருந்தாலொழிய, மேலே போகப்போக அதன் விஸ்தீரணம் இப்படியதிகரித்துக் கண்ணுக்குத் தெரியமாட்டாது. மேலும், மேலேபோகப்போகத்தெரிகிற பூமியும், ஆகாசமும் வட்டமாகவே யிருந்து கொண்டிருப்பதும், பூமியின் எந்த விடத்திலும் அப்படியே யிருப்பதும் கவனிக்கத்தக்கது.

3. புதுச்சேரி, துறை முகத்திலிருந்து ஒருவன் கப்பலேறி நேர் கிழக்காய்ப் பிரயாணம் செய்தால், முதலாவது அண்டமான் தீவுகள் தென்படும். அவைகளைத் தாண்டிக் கிழக்கு முகமாகவே போனால் சிற்சில சிறு தீவுகளைக் கடந்து, தென் பர்மாவின் பாகமாகிய டன்னாஸீம் என்னும் தேசத்தில் கரையேறுவான். பிறகு ஸீயாம் குடாக்கடலைக் கப்பலேறித் தாண்டி, ஆனாம் தேசத்தைக் கரைமார்க்கமாய்க் கடந்து, சைனாக் கடலில் புகுந்து பிலிப்பைன் தீவுகளைக் கடந்து, பசிபிக்மகாசமுத்திரம் அடைந்து, அதையும் தாண்டினால்தென் அமெரிக்காவின் வடக்கெல்லையில் கரைகாணுவான். தரையைத் தாண்டி மறுபடியும் கிழக்கு நோக்கியேபோனால் அட்லாண்டிக் மகா சமுத்திரம். அதையும் கடந்தால், ஆப்பிரிகா தேசத்தின் மேற்குக் கரையில் இறங்குவான். இன்னும் கிழக்கு முகமாகவே ஆப்பிரிகாகண்டம் முழுவதும் தாண்டினால், ஏடன் குடாக்கடல் வரும். அதையும் தாண்ட இந்தியாவின் மேற்கு சமுத்திரமாகிய அரபிக்கடலில் புகுவான். கிழக்குத் தப்பாமல் வந்தால் புதுச்சேரிக்கு நேர் மேற்கிலுள்ள கன்னனூரில் குதித்து, ஓட்டமாய்ப் புதுச்சேரிக்குத்திரும்பி வந்து விடுவான். இந்தப்பரீக்ஷையை யார்வேண்டுமானாலும் செய்து பார்க்கலாம். இந்த விதமாய் வேறு மார்க்கங்களில் பூமியைச்சுற்றி அநேகர் வந்திருக்கிறார்கள். நேர் கிழக்காய்ப்போன ஒருவன் புறப்பட்டவிடத்திற்கே மறுபடியும் வருவதென்றால், கீழ்மேற்றிசைகளில் பூமி உருண்டையாகத் தானே இருக்கவேண்டும்?

4. சந்திரக் கிரகணமென்பது, சந்திரனுக்கும் சூரியனுக்கும் நடுவே பூமிவரும்பொழுது



பூமியின் நிழலானது சந்திரன்மேல் விழுவதினால் உண்டாகிறது. இந்த விஷயம் பின்னிட்டு விவரமாய்ச் சொல்லப்படும். அப்படி விழும் நிழலானது எப்போதும் ஒருபந்தின் சாயல்போல் வட்டமாய் இருப்பதானால் பூமியுருண்டையாயிருக்க வேணுமென்பதற்கு மற்றோர் பலத்த ஆதாரம் ஏற்படுகிறது.

5. பூமி சமனாகவிருந்தால் எல்லாவூர்களிலும் சூரியவுதயம் முதலானவைகள், ஒரேகாலத்தில் உண்டாகவேணும். அப்படிக்கில்லாமல், நம்மூரில் சூரியோதயமாகும்போது அமெரிக்காவில் சூரியாஸ்தமனமாகிறது. ஆபிரிக்காவில் நடுநிசியாயிருக்கிறது. இதனுண்மை தந்தி மூலமாய்த்தெரிந்து கொள்ளுவது வெகு சுலபம். சீமையில் நடுமத்தியானமாயிருக்கும்பொழுது, கல்கத்தாவில் சாயங்காலம் 6-மணி, பம்பாயில் 5-மணி. ஒருபந்தை விளக்குக்கு நேர் பிடித்துச் சுழட்டிப் பார்த்தால் இதன் நியாயம் விளங்கும். இதனாலும் பூமியின் வடிவம் பந்துபோலென்றேற்படுகிறது.

6. சூரியாஸ்தமனமாகிக் கொஞ்சநாழிகைவரையில் மேற்கிலுள்ள மேகங்களின்மேல், சூரியகாந்தியைச் செவ்வானம் போல் காண்கிறோம். நமக்கு அஸ்தமனமாய்விட்ட சூரியன் நம்மிலும் அதிக உயரத்திலிருக்கும் மேகங்களுக்கு அஸ்தமனமாகவில்லை. இதேமாதிரி சூரியோதயத்திற்கு முந்தியே சூரியவெளிச்சத்தைக் கீழ்த்திசைமேகங்களிற் காண்கிறோம். ஒரு பள்ளத்திலிருந்து கிளம்புவது போலவும், மறுபடி ஒரு பள்ளத்தில்போய் மறைவது போலவும் இந்தத் தோற்றம் பூமியின் வடிவத்தினாலேற்படுகிறது.

7. வடக்குநோக்கி ஒருவன் பிரயாணமாய்ப்போய்க்கொண்டேயிருந்தால் துருவ நக்ஷத்திரம் உயருவதையும், புதிய புதிய நக்ஷத்திரங்கள் தெரிய ஆரம்பிப்பதையும், தெற்கில் தெரிந்துகொண்டிருந்த அனேக நக்ஷத்திரங்கள் வானத்திற்குக் கீழ்மறைவதையும் காணலாம். இதனால் மேற்கண்டபடி கீழ் மேற்றிசைகளில் மட்டுமே யல்லாமல் பூமியானது தெற்கு வடக்கிலும் பந்துபோல் வடிவுகொண்டிருப்பது தெளிவாகிறது.

8. எல்லா நக்ஷத்திரங்களும், சூரியனும் சந்திரனும், சூரியனைச்சுற்றிவரும் மற்றகிரகங்களும், எல்லாம் பந்துபோல் உருட்சியாய் இருப்பதனால், பூமியும் அப்படியே தானிருக்க வேணும் என்றும் ஊகிக்கலாம். ஆனால் நாம் பூமியின்மேல் நேராய் நிற்க, நமக்கு நேர் கீழே அமெரிக்காவிலிருக்கும் மனிதர்கள் பூமியில் கால்களை யூன்றித்தலைகீழாக வல்லவோ தொங்கிக் கொண்டிருக்க வேணுமென்று ஒரு சந்தேகம் உண்டாகலாம். இதே சந்தேகம் அந்த அமெரிக்காவில் உள்ளவர்களுக்கும் உண்டு. அதாவது, நாம் நேராய் நிற்கிறோம், இந்தியாவிலுள்ளவர்கள் தான் தலை கீழாய்த் தொங்குகிறார்கள், என்பது. பூமியில் எந்த விடத்திலும் ஒரு கல்லை மேலெறிந்தால் அது திரும்பிப் பூமியிலேயே வந்து விழுகிறது. பூமியிலுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் தன்னிடம் கவர்ந்துகொள்ளும் ஒரு சக்தி அந்தப் பூமிக்கு இருக்கிறது. இது விஷயம் பின்னால் இன்னும் விவரமாய்த் தெளிவாகும்.

(இன்னும் வரும்)

---

கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜியாயிருந்து பென்ஷனை வாங்கி இப்பொழுது இங்கிலாந்திலிருக்கும் ஸ்ரீமான்-அமீர் ஆலி என்னும் மகம்மதிய பெரிய மனிதரை ப்ரிவி கௌன்சில் ஜட்ஜியாக்கியிருப்பதாகக் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். அந்தஸ்தானத்தில் இப்பொழுதுதான் முதன் முதல் ஓர் இந்தியர் உட்கார்ந்து அமுல் நடத்துகிறார். ஆதலால் இது இந்தியர்களெல்லோரும் பூஷணமாகக் கொண்டாடத்தக்கது.

## 2. பட்டும், பட்டுப்பூச்சியும்

ஸ்ரீமான்-எம். என். வைத்தியநாத சாஸ்திரியார் அவர்கள்

பட்டு ஒரு புழுவிலிருந்து உற்பத்தியாகிறது. இச்சென்னை இராஜதானியில் கோயமுத்தூர் ஜில்லாவின் ஒரு தாலூகாவாகிய கொள்ளேகாலத்திலும், மைசூர் இராஜ்ஜியங்களிலும் தவிர வேறு இடங்களில் இது அதிகமாய் உற்பத்தியாகிறதாகத் தெரியவில்லை. பட்டுப்பூச்சி மனித சகாயமின்றித் தானே ஜீவிக்கமுடியாது. ஆங்கிலேய பாஷையில் "மல்பெரி" என்றும், இத்தேசங்களில் திப்பிலி நாவல் என்றும், வழங்கும் ஒரு செடி அல்லது மரத்தின் இலையைத் தின்று இது ஜீவிக்கிறது. இத்தேசங்களில் மரமாகவிடாமல் செடியையே தழையை உருவி இப்புழுக்களுக்கு ஆகாரமாகப் போடுவதால், 'செடி அல்லது மரம்' என்று சொல்லத் துணிந்தோம். இம்மரத்தின் பழம் பார்வைக்கு அரிசித் திப்பிலி போலவும், உருசியும், வர்ணமும் நாவல் பழத்திற்கு ஒப்பாயுமிருப்பதால், இச்செடி 'திப்பிலி நாவல்' என்று பெயர்பூண்டது சரியே. ஆனால் ஆமணக்குக் கொட்டை இலையைத் தின்று ஜீவித்து உற்பத்தி செய்கிற 'ஈரி' (Eri)ப்பட்டு என்று ஒருவகை இருக்கிறதாகவும், அதின் பட்டு முற்கூறிய பட்டைப்போல் அவ்வளவு உயர்ந்ததல்லவென்றும் தெரிகிறது.

இந்தப் பூச்சிப் பட்டை எப்படி உண்டாக்குகிறதென்றும், பூச்சி எப்படி உற்பத்தியாகி ஜீவிக்கிறதென்றும், விசாரிப்போம். இப்பூச்சியின் முட்டைகள் வெண் மஞ்சள் நிறமுள்ள கடுகு போன்றவைகள். முட்டையிட்ட எட்டு ஒன்பது தினங்களுக்கப்பால் அவைகள் கறுத்து அவைகளிலிருந்து மயிர் இழை கனமுள்ளவும், சுமார் வீசம் அங்குலம் நீளமுள்ளவுமான புழுக்கள் வெளிப்படுகின்றன. உடனே தினம் எட்டுப்பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் திப்பிலி நாவலின் இளம் இலைகளைச் சிறிய துண்டுகளாக்கி, இப்புழுக்களை ஒரு இடமகன்ற தட்டத்தில் போட்டு அவைகள் மேல் தூவுகிறார்கள். அப்புழுக்கள் அவ்விலைகளின் மேல் வந்து தொத்திக்கொண்டு நறுக்கப்பட்ட ஓரங்களின் வழியாய் அவ்விலைகளின் சாரத்தை உறிஞ்சிச் சாப்பிடுகின்றன. 5, 6 தினங்கள் ஆனவுடன் அவைகளுக்கு ஒருநாள் பூராவும் 'சுரம்' வந்துவிடுகிறதென்பார்கள். இது முதல் சுரமாம். அப்பொழுது அவைகள் "லங்கணம் பரமௌஷதம்" என்பதை நம்பி, ஆகாரம் தின்னாமல் இலைகளின் அடியில் போய்த் தங்களை மறைத்துக்கொள்ளுகின்றன. பிறகு மறுநாள் மேலே வருகின்றன. அப்பொழுது முன்போலவே இலைகளை நறுக்கி மேலே தூவவேண்டும். அவைகளைத் தின்றுகொண்டிருந்த பிறகு 4, 5-தினங்களுக்கெல்லாம் மறுபடிச் சுரம் வந்துவிடுகிறது. வியாதியிலும் வைத்தியத்திலும் அநுபவம் வந்துவிட்டதால், அதை நம்பி அந்த நாளும் ஆகாரம் இன்றி, அவைகள் மறைந்து கிடக்கும். மறுநாள் வெளிப்படும். பிறகு முன்போல் இலைகளைப் போடவேண்டும். புழுக்கள் பெருக்கப் பெருக்க 8, 10-தரம் ஆகாரம் போடுவதை விட்டு, 3, 4-தரம் போட்டால் போதும். இலைகளும் முற்றியிருக்கலாம். அது நிற்க, மேற்படி புழுக்களுக்கு 4-முறை சுரம் வந்து தப்பித்துக்கொள்ளுகிறது. சுரம் வராவிட்டாலும், சுரம் வந்தவுடன் புழுக்கள் ஒரேவகையாய்த் தங்களை மறைத்துக்கொள்ளாவிட்டாலும், பட்டுக் கெட்டதென்பது நிச்சயம்.

ஒவ்வொரு சுரத்திற்குப் பிறகும் ஒவ்வொரு தினத்திற்குப் பிறகும் வளர்பிறைச் சந்திரன்போல் விர்த்தியாகி நாலாம் சுரம் கழிந்து, 10-தினங்களுக்குப் பிறகு அவைகள் பழுக்கிறதென்பார்கள். அதுதான் நூல் நூற்கும் சமயம். அக்காலத்தில் அவைகள் வெண் பொன்போன்ற பள பளப்பாய் இருக்கும். சுமார் சுண்டுவிரல் கனமும் இரண்டு அங்குல நீளமுமிருக்கும். அப்புழுக்களைச் சிறிய அறைகள் அடங்கிய ஒரு பெரிய தட்டத்தில் அறைக்கொன்றாய் விதை விதைப்பதுபோலப் போடுகிறார்கள். உடனே அது அன்று சாயந்திரத்திற்குள் தன்னைப் பட்டு நூலினால் சுற்றிக்கொண்டு தான் உள்ளே இருந்துகொள்ளுகிறது. இக்கூண்டை ஒரு பெரிய பேரீச்சம் காய்க்கு ஒப்பிடலாம். இக்கூட்டுக்குள் 10-தினம் இருந்து, பிறகு தான் கட்டிய கூட்டில் ஒரு துவாரம் செய்துகொண்டு அதிலிருந்து இறக்கையுடன் வெளிப்பட்டு, ஆகாரம், நித்திரை, பயம், மூன்றையும் மறந்து நான்காவதான போக இச்சையில் மட்டுமே கவலையுற்று, ஒன்றையொன்று சேர்ந்து, ஆனந்தப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், சேர்ந்த 12-மணி நேரத்திற்கெல்லாம் அன்னம்போட்டு இரக்ஷித்த பிரபு, இராமாயணத்தில் சுக்ரீவனை, லட்சுமணன் பிரித்ததுபோலப் பிரித்து ஆண்பூச்சிகளை எடுத்து வைத்துக்கொண்டு, பெண்பூச்சிகளை ஒரு தட்டத்தில்விட உடனே ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்காக முட்டைகள் வைக்கின்றன. பிறகு மறு காலையில் சேரவிடுகிறார்கள். மறுநாள் சாயந்தரம் பிரித்துவிட்டால் மறுநாள் இராத்திரியில் அதேமாதிரி முட்டைவைக்கின்றன. மூன்றாந்தரம் சேர்ப்பிக்கிறதுமுண்டு. ஆனால் மூன்றாந்தரம் உண்டாவது நல்லதல்லவென்கிறார்கள். மூன்றுநாளைக்குப் பிறகு அவைகள் பரலோகப் பிராப்தியடைகின்றன. மருந்தும் விருந்தும் மூன்றுநாள் தானே. அவப்பொழுதிலும் தவப்பொழுது, என்பதுபோல் பட்டுப்பூச்சியிலும் வேதாந்தமாம். நாலுநாள் சுரத்தில் படுத்திருப்பதை தரும அர்த்த காம மோக்ஷமாகிற நான்கு புருஷார்த்தங்களையடைய நான்குதரம் உபவாசநிஷ்டையில் இருப்பதாயும், 10 நாள் தான் கட்டிய கூண்டினுள்ளிருப்பதை மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் தினம் ஒன்றாகத் தியானித்துக்கொண்டு சமாதியிலிருப்பதாகச் சொல்லவும் வேதாந்திகள் துணிவார்கள்.

கூண்டைச் சொன்னால் போதுமா? நாம் பட்டுவஸ்திரம் கட்டி மினுக்கும்படியான பட்டு நூல் கூண்டிலிருந்து எப்படி எடுக்கப்படுகிறது? துவாரம்போட்டு வெளிப்பட்டு வந்த பிறகு அந்தக் கூட்டிலிருந்து பட்டு இழை எடுக்க இந்நாட்டாருக்குத் தெரியாது. அது வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகின்றது. சீர்திருத்தம் ஜாஸ்தியாய்த் தெரிந்தவர்கள் சில துவாரங்களுள்ள தட்டங்களில் பட்டுக் கூண்டுகளைப் போட்டு அதின்மேல் நீராவிபோகும்படி செய்து, உள்ளிருக்கும் பூச்சியைக் கொன்று துவாரம்செய்து வெளிவர இடமில்லாமல் செய்கிறார்கள். துவாரம் செய்திருந்தால், நூல் இழை அறுந்துதானே போகும். சீர்திருத்தம் தெரியாத நம்போன்ற 'அன்றுகாச்சிகள்' அதைக் கொதிக்கிற தண்ணீரில்போட்டு வேகவைத்துப் பூச்சிகளைக் கொன்று, தண்ணீர் கொதிக்கும்போதே அதிலிருந்து ராட்டணங்களில் நூலைச் சுற்றுகிறார்கள். ஆமணக்கு இலையை ஆகாரமாக்கித் தின்று உற்பத்திசெய்யும் ஈரிப்பட்டு எடுக்கப் பூச்சியைக் கொல்லவேண்டியதில்லை. தன்னை அவைகள் சுற்றிக்கொள்வதில்லை. நாம் போடும் குச்சிகளில் அவைகளே நூலைச் சுற்றிக்கொடுத்துவிடுகின்றன.

இந்தப் பட்டு நிரம்ப மட்டம் என்று ஏற்கனவே சொன்னோம்.

இனிப் பட்டின் உபயோகங்களைக் கூறுவோம். பூச்சி வெளிப்பட்ட பட்டுக் கூண்டைச் சுட்டுச் சாம்பலாக்கி அத்துடன் தேன் கலந்து நாக்கில் தடவ, வாந்தியை உடனே நிறுத்துகிறது. இளமைப் பட்டிலிருந்து அநேக அவுஷதங்கள் செய்வதுண்டு. இப்பூச்சிகள் தின்று கழித்த மலத்துடன் சேர்ந்த இலைகளை எருதுகளுக்குப் போட அவ்வெருதுகள் அவைகளைத் தின்று பருத்துக் கட்டுள்ளவைகளாகி, மிகப்

பலத்தை யடைகின்றன. இது எருதுகளுக்குத் தாது புஷ்டி லேகியம் என்று சொல்லலாம். பட்டு வஸ்திரங்களின் மகிமை எல்லாருக்கும் தெரிந்ததாதலால் நாம் அதிகமாய் அதை விவரிக்கவேண்டியதில்லை. விசேஷமாய் மனிதர்கள் நெய்த பட்டைத்தான் ஜனங்கள் சாதாரணமாய்ப் பார்த்திருக்கக்கூடும். பூச்சிகளே நெய்கிறதுமுண்டு. அது நெசவு இல்லாமல் அடித்துச் செய்த வஸ்திரம்போல இருக்கும். வெகு கெட்டியாகவும் செய்யலாம். எப்படியென்றால், அவைகள் நூற்கும் சமயத்தில் நாம் எம்மாதிரித் தட்டங்களில் போடுகிறோமோ, அம்மாதிரி நூற்கின்றன. சில பூச்சிகளை 2-முழம் அகலம் 4-முழம் நீளமுள்ள ஒரு தட்டத்தில் போட்டால் அத்தட்டத்தின்மேல் ஒரு இலையைப்போல செய்துதான் உள்ளே மறைந்துகொள்ளுகிறது. நாம் அதை உரித்தால் கிழியாமல் ஒருவஸ்திரம் போல் வரும். இதைத் தேவதாருகமென்றும் பூஜைக்குச் சிறந்ததென்றும் சொல்லுகிறார்கள்.

---

'நச்சினார்க்கினியர்' போரால் பரிசு அளித்து அப்பெரிய தமிழாசிரியருடைய மகிமையை விளக்கி மதுரையில் ஓர் உற்சவம் நடந்ததாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். அம்மகா புருஷனுடைய ல்வியையும், மனோதருமத்தையும் நன்கறிதல் தமிழபிமானிகளுக்கு வெகுதூரம் நன்மை தருமென்பதில் தடையில்லை. முக்கியமாகத் 'தமிழபிமானம்' என்பது இக்காலத்தில் 'வடமொழி விரோதம்' என்று பொருள் படுவதாகக் காணுவதால் இந்தத் துரபிமானங் குறைவதற்கு இதுவே வழியாகும். 'கம்மியருமூர்வர்' என்று சிந்தாமணியிற்காணும் மூலத்திற்குச் சாமான்னியமாய்ப் பொருள் கூறில் குபாற்கொல்லர் முதலியோருக்கு மனநோகுமென்று, 'கர்மியர்' என்றால், 'கைப்பாடுபட்டுச் சாப்பிடும் அற்றைக் கூலிக்காரர்' என்று பொருள்கொண்ட புண்ணியவானுடைய மனோதருமம் அவரை 'உச்சி மேற்' கொள்வதாக நடிக்கும் எல்லோருக்கும் உரைக்கவேண்டுவது நமக்கு முக்கியமாயுள்ள ஆக்கிரகம்.

## 2. ஹாலி தூமகேது *

ஸ்ரீமான்-டி. எஸ். வெங்கிடராமையர், பி. எ., எல். டி.

அடுத்துவருகிற 1910-ம் ஹு ஏப்ரல்மீ ஒரு வெகு பெரியதூமகேதுவை நாம் காணலாமென்று கணிதர்கள் சொல்லத் தெரியவருகிறது. தூமகேது வென்பதென்ன? வரப்போகிற தூமகேதுவின் பூர்வவிருத்தாந்தம் யாது? இந்தத் தூமகேதுவுக்கும் நாம் சாமான்னியமாய்ச் சூரியமண்டலத்தைச் சுற்றிக்காணும் பிரகஸ்பதி முதலிய கிரகங்களுக்கும் என்ன பாந்தவ்யம்? இவற்றையும் இதுபோன்ற சில முக்கிய விஷயங்களையும் சற்று விசாரித்து இந்தத் தூமகேதுவைப்பற்றித் தெரிந்த சங்கதிகளையும் சுருங்க உரைப்போமாக.

ஆகாயத்தில் சாதாரணமாய் நாம் காணக்கூடியவைகள் சூரிய சந்திரர்களும், குரு, சுக்கிரன், சனி முதலிய கிரகங்களும் சூரிய மண்டலத்திற் கப்புறப்பட்டுள்ள நக்ஷத்திரங்களுமேயாம். இவைகளன்றி, சில சமயங்களில் எரிநக்ஷத்திரங்களென்று சில சிறு வஸ்துக்கள் வானத்தில் திடீரென்று தோன்றி ஆகாசபாணம்போல் ஒரு நிமிஷம் நெருப்புப் பொறிகளை யிறைத்துப்பறந்து சடுதியில் மறைந்து போவதுண்டு. அதை நாம் சாதாரணமாய்க் காண்கிறோம். ஆனால் தூமகேது வென்னும் வால் நக்ஷத்திரங்களைமட்டும் நம்மில் அனேகர் பார்த்தேயிருக்க மாட்டார்கள்.

ஏனெனில், தூமகேதுக்கள் கண்ணாடி மூலியமாய்ப் பார்க்குமிடத்து பிரதிதினமும் இரண்டொன்றைச் சுலபமாய்ப் பார்க்கலாமாயினும் வெறுங்கண்ணுக்குக் காணுவது அபூர்வம். ஆதலால் வாஸ்தவத்தை விசாரிக்குமிடத்து இவைகள் அபூர்வ வஸ்துக்களல்ல. சமுத்திரங்களில் மச்சகோடிகள் எவ்வளவிருக்கின்றனவோ, அவைகளிலுமதிகமாகவே தூமகேதுகளும் ஆகாசத்திலிருக்கின்றனவென்று விஷயந் தெரிந்த பெரியவரொருவர் சொல்லுகிறார். இதை யார் வேண்டுமானாலும் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு பரீக்ஷித்தறிந்துகொள்ளலாம். எந்த நியாயத்தினால் சமுத்திரத்திலுள்ள மச்சகோடிகளை நாம் தினந்தோறும் பார்ப்பது சாத்தியமாகிறதில்லையோ அதே நியாயத்தினால் தூமகேதுக்களையும் நாம் வெகு அபூர்வமாகத்தான் தரிசிக்கிறோம். இவைகளைக் காண்பது திடீரென்று கண்டபின் இவைகளின் பருமன் நாளுக்கு நாள் அதிகரிப்பதினாலும், இவைகளின் வால்கள் ஆகாசத்தில் பிரம்மாண்டமாய் நீண்டு இடமும் ரூபமும் தினந்தோறும் மாறி வருவதினாலும், வெகு காலமாக எல்லா நாட்டிலும் இவைகளால் ஜனங்களுக்குப் பயமுண்டாகி வந்திருக்கின்றது. இவைகளைக் காணும்போதெல்லாம் ஜனங்கள் ஏதோ விபரீதம் நேரிடப்போகிறதென்றும், ராஜாக்களுக்கும் ராஜ்ஜியங்களுக்கும் ஆபத்து விளையப்போகிறதென்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். இப்படிச் சொல்லுவதில் அதிசயமொன்றுமில்லை. எல்லா உற்பாதங்களுக்கும் இதுவேதான் பலனாக மனிதர் சொல்லுவது. எறும்பு வலமாவது முதல் பூகம்பம்வரை எல்லாத் தோற்றங்களையும் துர்க்குறிகளாகவே நாம் எண்ணி வந்திருக்கிறோம். உதாரணமாக ஸ்ரீ ராமாயணத்தில் தசரதனுக்கு அனேகந் துர்க்குறிகள் காணுவதில் மின்னலில்லாமல் இடிவிழுவதுபோன்றக் கோளச் சேஷ்டைகளே பயத்திற்கு முக்கியகாரணமாகின்றன. இப்படிப் போலவே இதர தேசங்களிலும்.

ஆனால் பயத்திற்கு மூலகாரணம் அறியாமையாதலால் தூமகேதுக்களின் தன்மையின்னதென்று அறிந்தவர்களான இக்காலத்திய ககோள வித்வான்கள் நாமிப்படிப் பயப்படுவதற்குக் காரணமேயில்லையென்று வற்புறுத்தி வருகிறார்கள். இவைகளுக்குத் தெரிந்தமட்டில் சாமான்னிய ஜனங்களும் காலக்கிரமத்தில் தூமகேதுக்களின் ரகசியங்களை யறிவார்களாகில் அவர்களுக்கும் பயம் நீங்கி அவற்றை வானத்திற் காணுந்தோறும், அவைகளினழகையும், விசித்திர கதியையும் கண்டு ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையுமடைவார்களென்பது நிச்சயம்.

ஆகாசமண்டலத்தில் தூமகேதுக்கள் எண்ணிறந்தனவாய்ச் சஞ்சரிக்கின்றன வென்று மேலே சொன்னோம். அவைகளுடைய சஞ்சாரங்களை நன்றாயறிய வேண்டுமானால் பிரம்மாண்ட மண்டலத்திலிருந்து நமது கதையை ஆரம்பிக்கவேண்டும். அப்படிச் செய்வது பாரதமாய்ப் பெருகி விடுமாதலால், பிரகிருதத்திற்கு வேண்டிய இரண்டொரு விஷயங்களைமட்டும் குறிப்பிடுவோம்.

சூரியமண்டலமும், நக்ஷத்திர மண்டலமும் கூடி நமக்கு நாலு புறத்திலும் வியாபித்துக் காணுவதைத்தான் நாம் பிரம்மாண்ட மண்டலமென்கிறோம். அதில் நக்ஷத்திரங்களை நீக்கி சூரியனையும் அதைச் சுற்றிப்போகும் பிரகஸ்பதி முதலிய கிரகங்களையும் நாம் சூரிய மண்டல மென்கிறோம்.

கிரகங்கள் ஒன்பதென்று நம்மில் அனேகர் நினைத்துவருவது பிரத்தியக்ஷமாய்த் தெரியலாம். கண்ணாடியைக்கொண்டு பார்த்தால் லக்ஷக்கணக்கான சிறு கிரகங்கள் சூரியனைச் சுற்றி பம்பரம்போற் சுழன்றோடுகின்றன வென்பதைச் சுலபமாய்க் காணலாம். மேற்கூறியபடி சூரியமண்டலத்திற்குப்புறப்பட்டுச் சிறிதும் பெரிதுமாகக்காணும் நக்ஷத்திரங்களோவ்வொன்றும் இவ்வாறே தனித் தனியோர் சூரியமண்டலமாக விருக்கிறதென்பது இக்

---

* இந்த தூமகேதுவை இந்தியா, சீனா முதலிய இடங்களில் அனேகர் பார்த்திருந்தாலும், இதனுடைய கதியை நிச்சயமாய்க் கணக்கிட்டறிந்து இதன் வரலாற்றை முதன் முதல் பிரசுரித்தவர் பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த ஹாலி (Halley) என்னும் பெரியவராதலால், தூமகேதுவுக்கும் அந்தப்பெயர் சேர்த்திருப்பதையறிக. இது போலவே 'எங்கி' 'பீலா' என்னும் பெயர்கள், அவரவர் பரிசயஞ் செய்துகொண்ட தூமகேதுக்களுக்குக் கூட்டியிருப்பதை வியாசத்திற் காண்க.

காலத்தில் சித்தாந்தம். இவைகளிலொன்றுக்கொன்றுள்ள தூரத்தை நாம் மனதினுல் தெரிவது கஷ்டம். மைல் கணக்கில் எத்தனையோ கோடியென்று சொல்லவேண்டும். அந்தக் கணக்கினுல் சாமான்னியருக்கு விசேஷப் பிரயோஜனமில்லை.

நக்ஷத்திர மண்டலத்திற்கும் சூரியமண்டலத்திற்கும் இடையிலுள்ள வெகு விஸ்தாரமான வெளியில் அநேக சில்லரை உருப்படிகள் பந்து முதலிய பலவித உருவங்கொண்டு கற்களைப் போல கண்ணுக்குக் காணுவனவாயும், வாயு வேகமாகக் கண்ணுக்குக் காணுமலும், சஞ்சரிக்கின்றன. இவை அனேகமாய்க் கூட்டமாய்ச் சேர்ந்து "ராமபாணம்" போல் ஒரே நேராய்ப் போய்க்கொண்டிருக்கின்றன. சில சமயங்களில் இவ்வுருப்படிக் கூட்டங்கள் சூரியனைப் போன்ற பெரிய கோளத்திற்குச் சமீபத்தில் வருகின்றன. உடனே அக்கோளம் அவைகளைத் தன்னை நோக்கி இழுக்கின்றது. அதினுலிவைகள் கதிமாறி சில சமயங்களில் அக்கோளத்திலே விழுந்து ஐக்கியமாகியும், சில சமயங்களில் தப்பித்துக்கொண் டோடியும், அல்லது சில சமயங்களில் அக்கோளத்திற்குச் சிறைப்பட்டு அதைச் சுற்றிவரும் மற்ற கிரகங்களைப்போலத் தாமும் சுற்றிவந்து தூமகேதுக்களாகி விடுகின்றன.

இவ்வாறே, சூரியனுடையவும் அதைச் சுற்றிவரும் பிரகஸ்பதி முதலிய பெருங்கிரகங்களுடையவும் ஆகர்ஷண சக்தியினுல் அனேகம் உருப்படிக்கூட்டங்கள் சூரிய மண்டலத்திற்குச் சேர்ந்து நாம் காணும் தூமகேதுக்களாகியிருக்கின்றன. ஹாலி தூமகேதுவும் ஒருகாலத்தில் நெப்தியூன் என்னும் 'பெருங்கிரகத்தின் ஆகர்ஷணத்தினுல் கதிமாறி நமது மண்டலத்திற்கு ஓரங்கமாக ஏற்பட்டிருக்கவேண்டுமென்று சாஸ்திரிகள் ஊகிக்கிருர்கள். ஆனுல் இது எவ்வளவு யுகங்களுக்குமுன் நடந்ததோ தெரியாது.




விவரம்:—மத்தியில் சூரியன்

முதல் வட்டம் பூமியின் கதி (மார்க்கம்)
2-வது ,, செவ்வாயின் கதி
3-வது ,, பிரகஸ்பதியின் கதி
4-வது ,, சனியின் கதி
5-வது ,, யுரேனஸின் கதி
6-வது ,, நெப்தியூனின் கதி
7-வது ,, எங்கி தூமகேதுவின் கதி
8-வது ,, பீலா தூமகேதுவின் கதி
9-வது ,, ஹாலி தூமகேதுவின் கதி

இப்பொழுது படத்தை ஜாக்கிரதையாய்ப் பார்ப்போம். மத்தியில் சூரியனும் அதைச் சுற்றிச்செல்லும் நாலைந்து முக்கிய கிரகங்களுடைய கதிகளும், சுலபமாய் விளங்கும். அவைகளுக்கு விபரீதமாய் வக்கிர கதிகளிற் செல்லும் மூன்று தூமகேதுக்களின் சஞ்சாரங்களும் காணுகின்றன. இவற்றிற்கு முறையே எங்கி, பீலா, ஹாலி என்றிக்காலத்தில் பெயர் வழங்குகின்றது. கிரக கதிகளெல்லாம் அனேகமாய்ச் சுத்த வட்டமாகவும், தூமகேதுக்களின் கதிகள் மாத்திரம் கோழி முட்டை போல நீண்ட வட்டமாகவும் காணுகின்றன



இம்மூன்று தூமகேதுக்களும் கிரகங்களைப் போலவே சூரியனைச் சுற்றி வருவதில் 'எங்கி' $3\frac{1}{3}$-வருஷங்களி லொருமுறையும், 'பீலா' $6\frac{1}{2}$. வருஷங்களுக் கொருமுறையும், வருகின்றன 'ஹாலி' யோ, அவ்வாறொருமுறை சுற்றிவருவதற்கு76-வருஷங்களாகிறதாக நிச்சயித்திருக்கிறது. இதை முதலில் 1682-ம் வருஷத்தில் மேற்சொல்லிய ஹாலி என்பவர் பார்த்து இதன் கதியை நிஷ்கரிஷித்துப் பிரசுரப்படுத்தினுர். அதற்குமுன் அனேகர் தூமகேதுக்களைப்பார்த்து எழுதியிருந்த ரிகார்டுகளில் கண்டகுறிகளையும், நியூடன் என்னும் பெரியகோளசாஸ்திரி செய்த கணிதயுக்தியையுங் கொண்டுதான் பார்த்த தூமகேது மறுபடி 1758-59 வருஷத்தில் நிச்சயமாய் வரப்போகிறதென்று எழுதிவைத்தார். அந்தச்சாசன மின்னுமிருக்கிறது. அப்படியே தூமகேதுவும் வந்ததென்பதற்குத் தடையில்லை. ஆனுல் ஜோதிஷட்ரிடும் 1742-ம் வஷருத்திலிறந்து போய்விட்டதால் தான் கூறியது சத்தியமாய் நிறைவேறின சந்தோஷம் அவருக்கில்லாமற் போயிற்று. 76 வருஷத்திற் கொருமுறை வருவதில்நம்மிலனேகர் அதின் தரிசனம் ஒருமுறைதான் காணலாம். போனுல் வராதாகையால் நாளை ஏப்பிரல் மே மாதங்களில் களோக காட்சியில் பிரியமுள்ளவர்களெல்லோரும் இவ்வபூர்வ தூமகேதுவைத்தரிசித்துப்பலனடைய வேண்டு மாய்க் கோருகிறோம்.

---

### சுதேசமித்திரன் எழுதுகின்றது

"தமிழ்ப் பாஷை விருத்தியடைவதற்கும், தமிழ் மக்கள் நலம் பெறுவதற்கும் இப்பத்திரிகை (வித்யா விஹாரிணி) ஓர் சிறந்த சாதனமாக இருக்கிறது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ் அறிந்தார் ஒவ்வொருவர் கையிலும் இந்தப் பத்திரிகை இருக்க வேண்டுவது மிகவும் அவசியம்.

## விநோத காண்டம்

### I. வாமதேவன்

(118-ம் பக்கத்தின்தொடர்ச்சி)

என்புத்திகெட்டியபடிப் பேசத்தொடங்கினீர், உண்மையிலேயே நீர் இப்பொழுது சொல்லியபடி முகூர்த்தத்துக்குச் சம்மதிக்கிறேன். நான் நினைத்தால் ஒருநாழிகைக்குள்ளாக வெகு கோலாகலமாக முஸ்தீப்டசெய்வேன். உமது நிலைமையோ, நீர் பல பந்துக்களோடு ஐம்பது, அறுபது வண்டிகளில் வந்திறங்கினுலும் வரவேற்க நான் தயாராயிருந்தும், சிறிதும் லச்சையின்றி யிரண்டுவண்டிகளில் நாலைந்து ஜனங்களோடு வந்து சேர்ந்ததற்கே போதுமான வழிச்செலவுக்கு யோக்கியதை யில்லாதிருக்கிறீர். இதற்கு எங்கு கடன்வாங்கினீரோ, என்ன கஷ்டப்பட்டீரோ, எவரிடமெல்லாம் பல்லைக்காட்டி யாசித்தீரோ, என் சம்பந்தியென்று சொல்லித்தான் இந்தத் தொகையையும் நீர் பெற்றிருப்பீர். இந்தச் சம்பத்தில் உமது வீட்டில் சாந்திமுகூர்த்தம். அதற்கு என் பந்துக்கள் பலரை நான் அழைத்துவருவதென்றே வைத்துக்கொள்ளுவோம். நீர் உமது வீட்டைவிற்றுத்தானே செலவிடவேண்டும். அப்படிச் செய்தால் முகூர்த்தம் எந்தவீட்டில் நடத்துவீர். வாடகை வீட்டிலோ, அல்லது உமது வீட்டையே விலைக்கு வாங்கினவன் தயவாலிந்த முகூர்த்தத்தை யங்கு நடத்த இசைகிருனென்று வைத்துக் கொள்ளுவோம். அப்படியானுல் முகூர்த்தம் நடந்தபிறகு நாங்கள் இவ்விடத்துக்குப் புறப்படும்போது நீரும் உம்மனைவி மக்களோடு அவ்விடம்விட்டு நீங்கி உயர்ந்த சம்பளத்தோடுத்தியோகஞ் செய்துவரும் வாமதேவன் காட்டை நோக்கிப் புறப்படுவீர்கள். அங்கு அவனுக்குக் கிடைக்கும் பதினைந்து காசுச் சம்பளத்தில் உங்கள் அருமைக்குடும்பத்தாரும் பலவகைப் பலகாரதினுசுகளோடு சுகமாயுண்டியருந்தி வளர்ந்துவரும் என் குழந்தையும் சாப்பாடு தள்ளவேண்டும். நல்லயோசனைசெய்தீர். அந்த அறுவருப்பான சோற்றைத்தின்று நீங்கள் வழக்கம்போற் சுகமாய் வாழ வென்கண்மணி மங்களம் ஊழியஞ் செய்யவேண்டியதும், நியாயந்தானே. நீர் போய் வாரும். உமது அருமைத் திருமகனுர் என் மகளைப்போன்ற மனைவியை வைத்தாளத் திறமையடைந்தபோது சாந்தியைப்பற்றி யோசித்

துக்கொள்ளலாம். போதும், ஆரடாவண்டிக்காரர்
கள், வண்டிகளை யோட்டுங்களேண்டா,''எனச்சொ
ல்லி வீட்டினுட் சென்றனர்.

இத்தனை பேச்சுகளையு மிரண்டு நிமிஷங்களுக்குள்
அதிர் வேட்டு வெடித்து, நெருப்புப் பொறிகள்
சிதறுவதுபோல வாறி யிறைத்த மானுடமிருகத்தை
நோக்கித், தன் வினையின் பயனைப் பகுத்தறிய
வியலா முழுமதிக்காக இரங்கி, ''ஐயா! எங்களை
மாத்திரமன்றித் தங்கள் மருமகனையு மிங்ஙன
மிகழ்ந்து பேசவேண்டுமோப்போலத்தங்களுக்கு நாங்
கள் அத்தனை கொடுமைகள் என்னசெய்தோம்?
நல்லவுயர்பதவியிலிருந்து ஏழையானது என் ஜன்மா
ந்திரபாபத்தின் பயனேயாயினும், அதற்காகத் தங்
கள் மருமகனையு மிகழ்ந்து பேசவானேன. உங்கள்
மருமகன் குழந்தை மேன்மையான பட்டப்பரிட்சை
தேறியிருக்கிறான். சில நாட்களுக்குள் இன்னும்
மேலான வுயர்பதவியையு மடைவான். சென்றவரு
ஷத்திய ஆபீசு பரிட்சையில் தேறியதால் அவனுக்
கிப்பொழுது சம்பளம் ரூபாய் முப்பது கிடைக்கி
றது. வேறொரு போட்டிப் பரிட்சைக்கும் பணம் கட்
டிப் பரீட்சையிலும் நன்றாய் விடைகளெழுதியிருக்கி
றானும். தெய்வகிருபையாலிந்தப் பரீட்சையில் தேறி
விட்டால் மேலான வதிகாரமும் உயர்ந்த சம்பளமும்
பெறுவான். இளையவன் கோவிந்தனுக்குக் கொடுங்
காலூரில் சம்பள மிருபத்தைந்து ரூபாய்க் குயர்த்தப்
பட்டிருப்பதாக அவன் வரைந்து விடுத்த கடிதம்
நேற்றுமாலை யெனக்கிவ்விடத்தில் கிடைத்திருக்கி
றது. மற்றக்குழந்தை நாராயணனோ வெகு ஜாக்
கிரதையாய் வாமதேவன் மேற்பார்வையில் கச்சேரி
வேலைகளை யெல்லாங் கற்றுவிட்டான். இன்னு முயர்
ந்த சம்பளத்தில்கூடியசீக்கிரத்திலுயர்த்தப்படுவான்.
அப்போது அவனுக்கும் கோவிந்தனுக்கும் கிடைக்
கும் சம்பளங்களைக்கொண்டு நாங்கள் தம்பதிகளும்
குழந்தை ராஜாமணியும் காலக்ஷேபத்தை நடத்திக்
கொள்ளுகிறோம். அப்படியானால் இப்பொழுது வாம
தேவனுக்குக் கிடைத்துவரும் முப்பது ரூபாய் சம்ப
ளத்தில் அவனும் மிகச்சுகவாசியாகிய குழந்தை மங்
களமும் கஷ்டமின்றி யுண்ணலாமல்லவா? நானுமி
ங்கு ஐந்தாறுதினங்கள் தங்கியதில், எங்கள்மருமக
னின்ஒழுக்கங்களைக் கவனித்தேன். அவன் தன் கணவ
னோடு வாழ்ந்து அவனுக்கிணங்க எவ்வாற்றானு முற்
றமனைவியா யிருப்பாளென்றே நான் எண்ணுகி
றேன். தாங்களிப்பொழுது கோபாவேசத்தோடு
எங்களையும் அவள் கணவனையு மிகழ்ந்துபேசிய
தைக் கேட்டிருந்தாலுங்களுக்கே புத்தி கூறுவாளெ
ன்று நான் நிச்சயமாகச் சொல்லலாம். அத்தனை
அன்பாக அவளிந்தச் சில நாட்களில் எங்கள்பா
லொழுகிவந்தனள். எனக்கும் ஒருவேளை பகவத்
கிருபையால் பென்ஷனுத்தரவு சீக்கிரம் கிடைக்கு
மென ஏகாதிபத்திய ஆபீசி லுத்தியோகத்திலிருக்கு
மெனது நண்பர் ஒருவர் வரைந்திருக்கின்றார். கோ
விந்தன் சம்பளம் உயர்வும், என் பென்ஷன் விஷய
மும், குழந்தை மங்களம் ருதுவான முகூர்த்தப்பய
னுக வெங்களுக்குச் சித்தியாயிருக்க, அவள் வெகு
செல்வமா யில்லறவாழ்வு நடத்துவாளென்ற குறிக
ளே தோன்றுகின்றன. அப்படிக்கிருக்க அந்தக் குழந்
தை மனதுக்கு மொவ்வாதபடி யேனிப்படிக் கொ
டிய பேச்சுகள்பேசுகிறீர்கள்?'' என்றனர் வாசுதே
வய்யர்.

வீட்டினுட்சென்ற வேதாசலய்யர் இத்தனை பேச்
சையுங் கேட்டு மறுபடியும் ஓடோடியே தெருவா
சல்வந்து ஆக்குரோஷம் பொங்க ''ஓய்! படுபாவிப்
பிராம்மணா! அந்தக்குழந்தை மனதிலும் விஷத்தை
யூட்டிவிட்டீரா? இதென்ன அக்கிரம மாயாவித்த
னமாயிருக்கிறதே. என்னென்னமோ பழையபுராண
ங்களையெல்லாஞ் சொல்லி, சீதை ராமனோடு காட்
டுக்குப் போனதும், பாஞ்சாலி பாண்டவரோடு வன
ஞ்சென்றலைந்ததும், சந்திரமதி கணவரோடு நாடு
நீங்கினதுமாகப் பல பொய்களைப் புகட்டித், தரித்
திரப் பஞ்சமான அந்த வாமதேவப் பயலோடு என்
குழந்தையுங் கஷ்டமடையவன்றோ உபதேசித்து
விட்டாற்போலிருக்கிறது? என் குழந்தையின்
கதி யிங்ஙனமாயிற்றே? ஆரடியங்கே. குழந்தை
யையிந்தப் பாதகர்களிடம் வண்டி அடிக்கடி யனுப்
பிக் கெடுத்துவிட்டீர்கள். ஜாலக்காரபிராம்மணனுச்
சுதே யிந்தக்கிழம். குழந்தை யினியாகிலும் இவ
ரை யடுக்கவிடாதீர்கள். ஐயா நீர்வெகு யோ
க்கியர். ஒரு நாழிகைக்கு முந்தியே புறப்படும்.
இனி யிங்கொரு விநாடிகை யிருந்தீரானாலுமக்கு
மானந்தக்காது. மரியாதையா யிந்தமட்டோடே
போய்விடும். சொன்னேன். சொன்னேன். மூக்கா
லுஞ் சொன்னேன்'' என்றுகடுகடுத்துரைக்க, முதிய
வர் வெகுவமைதியாய், ''ஐயா, அந்தக்குழந்தை என்
வாமதேவனை அக்கினி சாட்சியாய் மாலையிட்ட அன்
றே அவன் பாக்கியவதியென்று சொல்லவேண்டும்
அதற்கேற்க அவளின்குணங்கள் களங்கமற்றிருக்கின்



றன. அவள்மனதிற் படிந்துள்ள நன்மைகளோ அழி
ர்ததுல்லியமானவை. அவள்மனதை விஷமூட்டுவிக்க
யாவராலும் முடியாது. மற்றுமது விமிர்சையைப்
பேசவென்றாலோ, இரண்டுவண்டிகளில் நாங்களைந்
தாறு ஜனங்கள் வந்தவர்களையே குற்றங்குறையின்
றியுபசரிக்க வியலாதலைந்துபோன நீர், ஐம்பதறுபது
வண்டி ஜனங்களை நானழைத்து வந்திருந்தா
லெங்ஙனம் வகிப்பீர்? இதையறிந்தே நான்
ஜாக்கிரதை கொண்டேன். என் மகன் தரித்
திரனென்றீர். அற்பச் சம்பளக்காரனென்று பரி
காசஞ் செய்தீர். ஆயின் உமக்கிருக்கும் அளவி
றந்த ஆஸ்தியிலிருந்து ஒரு பாகத்தை யுமது மகளுக்
கென்று கொடுத்துத் தனிகளுக்கிவிடலாமே. அந்தச்
சொத்திலிருந்து ஒரு காசளவேனும் நாங்கள் விரும்
புவதில்லையென உமக்குறுதிமொழி கொடுக்கிறேன்.
உமது குழந்தை மிக மேன்மையாய்க் கணவனோடு
வாழ்ந்து காலா காலத்தில் பெற்றுப் பெருக
நாங்கள் கண்டும் கேட்டுஞ் சுகிப்போம். அதை
நீருமடைய இயலாதபடி யிப்பொழுதே வினையை
விதைக்கத் தொடங்கியிருக்கிறீர். இங்கு நின்று
நானும்மோடு ஏசிக்கொண்டிருத்தல் தகாது, எல்லா
மீசுவர கிருபைபோல் நடக்கட்டும்'' என்று சொல்
லித் தம் ஜனங்களோடு வண்டிகளேறித் தம் கிரா
மம் நோக்கிப் புறப்பட்டுப் போயினர் நம் வாசுதேவ
ய்யரும்.

இவர் இங்ஙனம் வண்டியிலேறிச்சென்று விட்ட
படியால் இவரைத் தெருவில் பகிரங்கமாயோடிச்
சென்று வழிமறித்துப் பேசுவது தனக்கு அந்த
ஸ்துக் குறைவென்றெண்ணிய வேதாசலய்யர்,
அடங்காக் கோபத்தோடு வீட்டினுட் சென்றதும்,
சென்ற சின்னாட்களாக இரவுகளில் மனையில் வைத்
துப் பாடுகிறதென்ற வழக்கத்துக்குட்பட்டு வெகு
நேரம் வரையில் நித்திரையின்றியும், நாடோறும்
காலை வேளைகளில் ஆற்று நீரில் குளித்து வழக்கத்
துக்கு விரோதமாய் அகாலத்தில் விருந்துண்டிகளை
யுண்டதனால் சரீரத்திற் சற்றுச் சுகக்கேடுண்
ருந்தியும், அதனாற் சரீரத்திற் சற்றுச் சுகக்கேடுண்
டாகி அன்று காலையில் ஜலதோஷம், தலைவலி, சரீ
ரமெல்லாம் ஒருவித நோவுடன் சிறு ஜ்வரக்கோளுங்
கொண்டு வாடிய முகத்துடன், தன் மாமி மாமனை
வீட்டினகத்தேயே நமஸ்கரித்து அவர் ஆசிர்வதிக்க,
தன் சுகக்கேட்டை அவர் அறியாவண்ணமுடனே
தன் அறையிற்சென்று படுத்திருந்த குழந்தைமங்கள
த்தண்டையோடிச்சென்று, ''குழந்தாய்! மங்களம்!
உன் விதியிப்படியோ ஆயிற்று. நான் படுபாவித் தக
ப்பன் இந்தச் சண்டாளப்பாபிப் பிராம்மணனுடைய
மகனுக்குக் கொடுத்து அந்த முழுமூட மருமகனும்
இந்தக் கிழங்களின் பேச்சைக் கேட்டு மண்ணாந்தை
யாய்ப் புத்தி கெட்டுப்போக உன் வாழ்நாளை யெல்
லாம் கெடுத்தேனே. அம்மா! என் கண்மணி! நீயி
னியிந்தத் துரோகிகளின் வீட்டுக்குப் போனால்,
இப்பொழுதே யித்தனை கோபத்தோடு போயிருக்கு
மிந்தக் கிழங்களிரண்டும், உன் புருஷனுக்கு ஒன்று
க்கு நூறாய்க் கண்கட்டிச் சொல்லி அந்த முட்டாள்
பயலைக்கொண்டு உனக்கேதாவது விஷமூட்டுவித்
துக் கொலைசெய்துவிடுவார்கள். நானோ இனி இந்
தப் பிச்சைக்காரப் பயல்கள்முகத்தை விழித்துப் பா
ர்க்கமாட்டேன். அப்படி நானும் உன்னைக் காணாதி
ருக்க, உன் கணவனுன்னைப் பலவிதத் துன்பங்க
ளுக்கு முட்படுத்த, அவற்றை யறிந்தும் அகற்றும்
வகையில்லாது போகுமன்றோ. அம்மா நீயினி அங்
கு போகவேண்டாம். என் குழந்தை ராஜாவோடு
நீயுமிரண்டாவது ஆண் குழந்தையாக நினைத்து அவ
னைப்போலவே யுனக்கு மிந்தக் குடும்ப சொத்திற்
பாதி கொடுத்து விடுகிறேன். நீ சுகமாயுண்டுடுத்தி
வாழலாம். இது உன் தலைவிதியென் றிருப்பதே
நன்று'' எனக் கூறி அடுத்துட்கார்ந்தழத்
தொடங்கினர், இவரின் மனைவி மற்றொரு பக்
கமாய் மகளை யணைத்துக் கட்டிக்கொண் டோல
மிட ஆரம்பித்தாள். இதன் காரணங்க ளொன்றையு
மறியாத குழந்தை மங்களம், இங்ஙனம் தன் கண
வன் வீட்டாரை வாய்க்கு வந்தபடி தாறுமாறாய்த்
தூஷித்துப் பேசித்தன்பாலோடிவந்து ஏதேதோ
பிதற்றியழும் பிதா ஒரு பக்கமும், தன்னைக் கட்டி
யிறுகவணைத்துக் கதறுந் தாயொரு பக்கமும் நெருக்
கக்கண்டு, பிரமித்து, யாதுந் தோன்றாளாகி, மதி
மயங்கி மூர்ச்சையாயினள் சிறிதுநேரத்துக்கு முன்
மங்களம் தன் கணவருக்கு இவ்விடத்திய செய்திகளை
விவரித்துத் தன் மாமன் மாமி அன்று தென்பொதி
காபுரத்துக்கு புறப்பட்டுப் போவதையும் குறிப்பிட்டு
வரைந்த கடிதத்தை மங்களத்தின் தாய் தந்தையறி
ந்தால் பிரமாதம் விளையுமென முன் சம்பவங்களா
லறிந்திருந்த பொன்னத்தை, அக்கணமே கையி
லெடுத்துப் பின் வழியே தபாலாபீசுக்குச் சென்று
தபாற்பெட்டியி லிட்டுத் திரும்பிக்குழந்தை மங்களத்

துக்கு ஏதாவது கஷாயம் வைத்துக் கொடுத்துச் சிகிச்சை செய்யவென்று அவள் தன்னறையிற் புகவும், அங்கு இந்த அலங்கோலத்தைக் கண்டாள் கண்டும் தன் அண்ணன் வேதாசலய்யரும் அவர் மனைவியும் குழந்தையை அடித்து இப்படி அழுங் காரணமறியாது அடித்துச்சென்ற குழந்தை கைகால்கள் அசையாமலும், வேறு ஜீவசேஷ்டையொன்றுந் தோன்றாமலுங் கிடக்கக்கண்டு மனம் திடுக்கிட்டு மங்களத்தின் பாற்றான்கொண்ட அன்புப் பெருக்கால் தன் அண்ணன் அண்ணி கோபித்திடுவரோவென்பதையுமோராது குழந்தையினுயிரை பெரிதெனக்கருதி, "அண்ணா! அண்ணி! குழந்தையைக் கொன்றுவிட்டீர்களே, ஐயோ குழந்தையின் சுவாஸம் அடங்கிவிட்டதே. ஒதுங்குங்கள், ஒதுங்குங்கள்" என்று கூவி அவ்விருவரையுங் கைப்பிடியாய்ப் பிடித்தகற்றி, ஓடிச்சென்றொரு செப்பில் நீர்கொணர்ந்து நாலைந்துளை நீர் முகத்தில் வாறியிறைத்து, முந்தானையால் முகத்தையுங் கண்களையுந் துடைத்து, அடுத்திருந்ததோர் கைவிசிறியை யெடுத்துக் காத்திடுகின்றாள். குழந்தையோ கைகாலிறக்கமன்றிக் கண்ணைத் திரும்பிப்பாராது கிடந்தபடியே கிடக்கின்றாள். இதனைக்கண்டு அய்யரும் அவர் மனைவியும் இன்னும் அவ்வீட்டிலுள்ள மற்ற ஜனங்கள், அங்கு வந்து கூடியவர்களுமாய் விஷயத்தை முற்றிலு மறிந்து வைத்தியரை யழைத்துவர ஆள்விடுத்தனர். இச்செய்தியை அறிந்த அண்டை அயல்வீட்டு ஜனங்களும் மங்களத்தின்பாற்சிறந்த வன்புள்ளோராதலால் வீட்டினுட்சென்று செய்தியைச் விஸ்தாரமா யறிந்து "ஐயோ, குழந்தை பத்துநாளாய் வேளைக்குச் சோறும் ராத்தூக்கமு மில்லாது களைத்துஞ் சளைத்து மிருந்தது. போதாக்குறைக்கு இந்த இரண்டு தடிகளும் மேலேவிழுந் தமுக்கிவிட்டதுகள். முகத்திலே ஜீவகளைகூட மாறிவிட்டதே. இனிப்பிழையாது. ஆனாலும் பெரிய வைத்தியர்வந்தால் ஒருவேளை அவரின் கைவாசிக்குப்பிழைக்கும் தலைவிதியெப்படி யிருக்கிறதோ. ஐயோ, இந்தக் குழந்தை ருதுவான வேளையிப்படியாயிருந்தது. அந்தப் பரமசாது வாசுதேவய்யருக்கு ஏற்கெனவே வந்திருக்கும் கஷ்டங்கள் போதாதா. இதுவுமா வரவேணும். நேற்றைக்குக்கூட இந்தக் குழந்தையைத் தங்கள் விடுதிக்கழைத்து வரச்சொல்லி யிவள் ஸ்ரீ பாகவதத்தில் பிரக்லாதஸ்துதி, துருவஸ்துதி முதலிய சுலோகங்கள் சொல்லுவதைக் கேட்டுப் பரமானந்தத்தோடு இவளைத் தீர்க்க சுமங்கலிமாய்ப் பலமக்கட் பேறுபெற்று வாழ்வா யென்றனரே. இன்றைக்கு இந்தப் பெண்ணுக்கு இப்படி நேருமென்பதை யறியவில்லை, பாவம். அவர்கள் புறப்பட்டுச்சென்று இன்னுமிரண்டு நாழிகைகூட ஆகவில்லையே இந்தப் பெண்ணினிப்போதைய நிலைமையை அறிந்தால் அவர்கள் ஒருவேளை திரும்பி வந்து விடவுங்கூடும். ஆனால் இந்த பிராமணன் இன்று அவர்களை யிகழ்ந்து பேசியபிறகு அவர்கள் எனிங்கு வருவார்கள். இந்தச் செய்திகளையெல்லாம் கச்சேரிக்குப் போயிருக்கும் ராஜாவாவதறிந்து அவன் வந்தால் வேண்டியதைச் செய்வான். எல்லாவற்றிற்கும் நான் போயென் தமையனை யனுப்பி ராஜாவுக்குச் சங்கதி விவரத்தை தெரிவிக்கிறேன்" என்போருமாய் அங்குக் கூடி நிற்குமவரை நோக்கிடினும் முகத்தில் துக்கக் குறிகளே காண்கின்றன

---

சமீபத்தில் பரோடா மந்திரியாக ரோமேஸ் சந்திரதத் ஒரு கூட்டம்கூடி பொதுப்பாஷையாக ஹிந்திபாஷையைப் பாரதவருஷ முற்றிலும் பரப்புவிக்க வேண்டுமென்று தீர்மானித்தனர். தக்ஷிண இந்தியாவிற்குமட்டும் இப்பாஷாப்பியாசம் ஆரம்பத்தில் அதிக சிரமம் தரும். மற்ற இதர இடங்களில் இப்பாஷையின் பதங்கள் மற்ற பாஷைகளுடன் கலந்தே காணப்படுகிறது. இது சமஸ்கிருதத்தினின்றும் பிறந்தது. ஆங்கிலம் எவ்விதமாக நம் நாட்டிற் பரவிற்றென்பதை நாம் நன்றாக ஆராய்வோமானால் ஹிந்தி பாஷையை அனுஷ்டானத்துக்குக் காலக்கிரமத்தில் கொண்டு வந்துவிடலாமென்று தாராளமாய்ச் சொல்லலாம்.

* * *

கோயம்புத்தூரில் இதுவரை கம்மிட்டியாரால் நடத்தப்பட்டுவந்த இரண்டாவது வகுப்புக்காலேஜ் இனி கவர்ன்மெண்ட் உடைமையாகப் போகிறதென்றும், அதே தரமில் நடந்து வருமென்றும் கேள்விப்படுகிறோம். இவ்வூருக்கு அக்ரி காலேஜ், பாரஸ்டுகாலேஜ் முதலிய பெருங்கலாசாலைகள் வந்துகொண்டிருப்பதால், இனிச் சாமான்னியக் கல்வியிலும் இரண்டாவது வகுப்புக் காலேஜுக்குக் காலக்கிரமத்தில்முதல் வகுப்பாகி உயர்வதற்குச் சௌகரிய மேற்படுமென்று நம்புகிறோம்.



## 2. மதுரம்

(117-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### 2-வது அதிகாரம்

சூரியாஸ்தமனஸமயம். அந்தச் சமயத்தில் சென்னை நகரின்கண்ணுள்ள உயர்ந்த கட்டிடங்களும், கோவில்களும், மசூதிகளும், கோபுரங்களும், ஸ்தூபிகளும் தங்கமலாம் பூசப்பட்டனபோற்றோன்றின. நல்லோர்கள் சிநேகம் அபிவிர்த்தி யடைவது போல் சாயங்கால மஞ்சள் வெயிலில் நிழல்கள் கிழ்த்திக்கை நோக்கி நீண்டு சென்றன. ஐரோப்பிய துரைகளும், துரைசாணிகளும், மற்றமுள்ள கனவான்களும் வெளியிற் சென்றுலாத்தி வருவதற்காக ஒற்றைக்குதிரை சாரட்டுகளிலும் இரட்டைக்குதிரை சாரட்டுகளிலும், காலினாற்றள்ளிச்செல்லும் பைஸிகள் என்ற துவிசக்கர வண்டிகளிலும் ஏறிச் சென்றார்கள். உள்ளூர் வாசிகள் நாட்டுப்புரங்களிலிருந்து அந்நகரத்திற்கு வந்திருக்கும் தங்கள் உறவினரையும், நண்பர்களையும் அழைத்துக்கொண்டு, அவ்விடத்திய பல விநோத காட்சிகளைக் காண்பிப்பதற்காகப் போயினர். அந்திக் கடைகளிலும் பூக்கடைகளிலும் திரள் திரளாக நின்றுகொண்டு ஜனங்கள் சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்தார்கள். பல கலாசாலைகளிலுமிருந்து மாணாக்கர்கள் தங்கள் தங்கள் விடுதிகளை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் பந்தடி மைதானங்களிற் போய் பந்தடிக்கத் தொடங்கினர். வேறு சிலர் பந்தடித்தலத்தைச் சூழப்போட்டிருக்கும் ஆசனங்களிலுட்கார்ந்து பந்தடிப்பவர்களின் கை சாதுரியத்தைப் பற்றி மெச்சிக்கொண்டும், சமாசாரப்பத்திரிகைகளை வாசித்து அவற்றிலுள்ள விஷயங்களைப்பற்றியொருவரோடொருவரை யாடித் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டுக்கொண்டும் பொழுதுபோக்கினர். ஹைகோர்ட்டிலிருந்து ஜட்ஜிகள் வெளியேறிப்போனவுடனே பற்பல ஜில்லாக்களினின்று வியாஜ்ஜியங்களினிமித்தம் அவ்விடத்திற்கு வந்திருக்கும் கட்சிக்காரர்களில் அனுகூலமடைந்தவர்கள் மிகுந்தக்களிப்புடனும் அபஜயப் பட்டவர்கள் மனோவியாகுலத்துடனும் போனார்கள். அபஜயப்பட்ட கட்சிக்காரருடைய கேஸுகளை நடத்திவந்த ஹைகோர்ட் வக்கீல்களும் பாரீஸ்டர்களும் தங்கள் கட்சிக்காரர்களைப் பார்த்து "பயப்படவேண்டாம் தகுந்த ஏற்பாடு செய்து சீமையப்பீலில் அனுகூலமாக்கிக்கொள்வோம்" என்று தைரியம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். கடற்கரையில் வெண்மணற்குன்றுகள் பொன்மணற் குன்றுகள் போல் ஜொலித்தன. நுரைகக்கமோதுகின்ற அலைகளில் சாயங்கால ரவிகிரணங்கள் பாய அலைகள் உருக்கிவிட்ட பொன்னீர் போலிலங்கின. பிரதிதினம் பார்த்துக்கொண்டே பழகியிருந்தாலும் அரசனைக் காணுந்தோறும் ஓர் வகையச்சமும் அபரிமிதமான கௌரவமும் மனதிலுதிப்பதுபோல கடலிலேயே சதா பழகிக்கொண்டிருக்கும் செம்படவர்க்கும் கூடக் கடலைப் பார்க்குந்தோறும் அச்சமும் கௌரவமான எண்ணமு முண்டாகுமாயின் மற்றவர்க்குக் கடலைக் கண்டவுடன் உண்டாகும் உள்ள நெகிழ்ச்சியைப் பற்றிக் கூறுவானேன். செம்படவர் கட்டு மரங்களிலும் தோணிகளிலும் சென்று மீன்களை ராசி ராசியாகப் பிடித்துக் கொண்டுவந்து கரையில் ஆவலோடு நின்றுகொண்டிருக்கும் தங்கள் மனைவிமாரிடம் கொடுக்க அவர்கள் வாங்கிக் கூடைகளில் நிரப்பினர். கடற்கரையிலுள்ள மணற்குன்றுகளில் வாலிபர் கூட்டம் கூட்டமாய் நின்று மற்போர் புரிவோரும் சொற்போர் புரிவோருமாயிருந்தனர். சில வாலிபர் வேடிக்கைக்காக பங்காளக் குச்சு நாய்களுக்குக் கோலைக்காட்டியதைக் கடலில் பலகஜ தூரத்திற்கப்பால் எறிய உடனே அந்தநாய்கள் கோல் வீழ்ந்த இடத்திற்குப் பாய்ந்துசென்று கோலைவாயிற் கவ்விக்கொண்டு மலைபோற் புரண்டுவரும் அலைகளில் உருண்டும் புரண்டும் முக்குளித்தும் கரைவந்து சேர எல்லாரும் கைகொட்டி யாரவாரித்தார்கள். கடல் வாராவதியின்மேல் திரள்திரளாய் ஜனங்கள் நின்றுகொண்டு அப்போதுதான் துறைமுகம் வந்துசேர்ந்த கப்பலினின்றிழியுமவர்களில் தூர தேசங்களினின்று வருவார்கள் என்று தாம் எதிர்பார்த்திருந்த தம் நண்பர்களையும் உறவினரையும் கண்டுபிடிப்பதற்காக ஆவலோடு இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். துறைமுகத்தில் வந்திருக்கும் போர்க்கப்பலைப் பார்த்து வருவதற்குத் தோணிகளிலேறி ஆயிரக் கணக்கான ஜனங்கள் போய்க்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் நூதன கண்டத்தில் பிரகாசிக்க வேண்டுமென்ற இராகந்தான் உடலில் இராகமாகப் பரவியதோ என்னும்படி தரணியில் உடலம் சிவந்தது. அத்தருணத்தில் நாகரீகத்தில் சிறந்த கொஞ்ச வயதுள்ள யௌவன புருஷ

ரும் புவதிகளும் அவ்விடத்திற் கொஞ்சம் வந்து கூடியிருந்தனர். அவர்கள் ஒருவரோடொருவராடும் தீஞ்சொற்கள் சமுத்திர கோஷத்தால் செவிப்புலனுக் கெட்டாவிடினும் உதடுகளின் அசைவையாவலுடன் கண்ணுற்று இன்னது புகன்றனர் என்றூகித்து மகிழ்ந்தனர். உலகிலுதித்த மாந்தர்கள் மகிழ்ச்சி சிலகாலம் விர்த்தியடைந்தும் சிலகாலம் க்ஷீணித்தும் வருவதுபோல, லைட் ஹவுஸ் என்ற தீபஸ்தம்பத்தில் ஏற்றப்பட்ட விளக்கானது இயந்திரத்தால் சுழன்றுவருகையில் பிரகாசம் அதிகரித்தும் குறைந்தும் தோன்றியது. எவ்வகைத் துயர்க்கடலுளாழ்ந்தவரும் கடலைக்காணின் தந்துயரம் சில நிமிஷம் வரை மறந்து ஆனந்தக்கடலில் மூழ்குவரேல் கடலின் மகிமை யாவர் உரைக்கவல்லார். அந்த அந்திநேரத்தின் வருணனைமுற்ற வுரைப்பது நம்மாலாகும் காரியமன்றாகையால் நமக்கு வேண்டிய சில விஷயங்களைப்பற்றி மட்டும் இவ்விடத்திற் கூறுவோம்.



சேனெட்ஹௌஸ், சென்னை.

அந்த மாலைப்பொழுதில் செனட்ஹௌஸ் என்ற சர்வகலாசாலைச் சங்கக்கட்டிடத்திற்கெதிரில் கடற்கரை வழியே செல்லும் ரஸ்தாவில் இரண்டு வாலிபர் மெதுவாக உலாவிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனுக்கு வயது இருபத்தொன்று. சிவந்த நிறமுள்ளவன். கண்டவர்மனங்கவரும்படியான கூர்மையான அழகிய கண்களையுடையவன். பவளத்துண்டுகளினிடை முல்லையரும்புகளைப் பதித்தாற்போன்ற பல்வரிசை, அவன் முகத்தின் வசீகரசக்தியைப் பெருக்கியது. முழங்கால்வரை நீண்ட அவன் கரங்கள் அவன் ஆணிற்சிறந்தோன் என்பதற்குச் சாக்ஷியாயின. காதிலணிந்த கமலக் கடுக்கன் அறுகம்புன்னுனி நீர்போல் நாலுவருணங்களுள்ள காந்திகளைக் கொப்புளித்துக்கொண்டு நக்ஷத்திரத்திற்போல் ஜொலித்தன. வெண்பனிக்கட்டி போனிறமுடைய அரைக்கைச் சட்டை யணிந்திருந்தான். உயர்ந்த வேலைப்பாடுள்ள தங்கக் கடிகாரச் சங்கிலி யவன் மார்பிற்புரண்டு கொண்டிருந்தது. அந்தச் சங்கிலியின் நுனியில் தொங்கக்கட்டித்துவளும் சுவர்ணமயமான மீன் அவனால் வெல்லப்பட்ட மன்மதன் ஸமர்ப்பித்த கொடிபோலிருந்தது. நீண்ட தன் கேசத்தை நுனியில் முடிச்சிட்டுத் தொங்கப்போட்



டிருந்தான். தலையில் சிவப்புப்பட்டு நூலாற் பின்னிய குல்லாயிருந்தது. அரையில் குதிகால்வரை விட்டுக்கட்டிய பட்டுக்கரைவேஷ்டியும் மேலேசரிகைச்சிட்டா போட்ட வீரவசல்லூர் அங்கவஸ்திரமும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. தந்தப்பிடியமைத்த கரியபளபளப்பான தடியைக் கைவிரல்களால் சிற்சில வேளைகளில் சுழற்றிக்கொண்டே போனான். மந்தகாச பூர்வகமாகப்பேசும் அவன் மதுரவசனங்களை அதிகக் கவனத்துடன் கேட்டுக்கொண்டும் இடையிடையே மறுமொழி பகர்ந்தும் சென்ற மற்றவனோ இவனைப்பார்க்கிலும் வயதிலும் வடிவிலும் சிறியவன். பொதுநிறமான தேகமுள்ளவன். குறுகக்கத்திரித்த அவன் குடுமியைக்கண்டவர்கள் அவன் நவீன நாகரீகத்தை யனுசரித்தவன் என்று எண்ணுவார்கள். கறுப்புப்புள்ளிபோட்ட வெள்ளைப்புட்சட்டையும் ஊதா நிறமுள்ள உயர்ந்தபட்டுக் கோட்டும் (மேல்சட்டையும்) அணிந்திருந்தான். அவன்கையில் ஒரு புஸ்தகமிருந்தது. நடக்கும்போதுகூட அவன் வாசித்துக்கொண்டு போவதை நீங்கள் கண்டால் அவன் வாசிப்பில் அதிக அக்கறையுள்ளவன் என்று எண்ணுவீர்கள். பாடங்களை இலகுவில் கிரகிக்க முடியாதவனோ என்னவோ என்று எண்ணிலும் எண்ணலாம். யார் என்ன நினைத்தால் என்ன. அவன் வாசித்துக்கொண்டே தான் நடந்து போனான். அவன் பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

சங்கரய்யர், இது என்ன சங்கடம். நாளைக்கு வரும் தமிழ்ப்பரிக்ஷைக்கு வாசித்து வாசித்துப் பார்க்கிறேன், பாடங்கள் முடிகிற வகையாய் இல்லை. இந்த அழகர் கலம்பகத்தில் மறம் என்றும் குறம் என்றும் சம்பிரதம் என்றும் சுரம் போக்கு என்றும் துறைகளமைத்துப் பாடியிருப்பது மிக மனோகரமாயிருப்பினும், உரை யெழுதுவோர் பதசாரம் முதலியவற்றை நன்கு விரித்தெழுதாததால் விஷயங்கள் மனதில் தங்குவது கஷ்டமாயிருக்கிறது. நன்னூல் பெயரைக் கேட்டாலும் ஓட்டம்தான் நமக்கு. இன்னிசையளபெடையாம்சொல்லிசையளபெடையாம், ஆகு பெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் பேதமாம் இவற்றையெல்லாம் கேட்க நெஞ்சம் திடுக்கிடுகின்றது. மேலும் மேற்கதுவாய் மோனை, அடி முரண்டொடை, கழிநெடிலடி முதலிய பதங்களைக் கேட்டால் எனக்கு கிரேக்கபாஷையாயிருக்கிறது. இன்றைக்கு யாப்பிலக்கணம் ஆரம்பித்துவிடப் போகிறார். இன்றைக்கு யாப்பிலக்கணம் ஆரம்பித்துவிடப்போகிறார். என்று பல நாளும் திகில்பட்டுத் திகில்பட்டு ''ரகாராதீனி நாமானி'' என்று சொல்லி ''மாரீசன் ராமனிடம் உண்டான பயத்தால் இராகம், இராஜீவம் முதலிய பெயர்களையும் கேட்க அஞ்சியதுபோல், யாப்பினிடம் உண்டான என் பயம் யானை, யாகம் முதலியவற்றையுங் கேட்க வொட்டவில்லை. பாடங்களைப் படிக்காமல் அலக்ஷியமாய் இருந்துவிடுவோம் என்றாலோ பரிக்ஷையில் மார்க்குக் குறைந்துபோம். நாவலர்க்குக் கோபம் கோடையிடிபோல் வந்துவிடும். என்னமோ என் தலைவிதி தமிழ் எடுத்துக்கொண்டேன். உங்களுடைய பாடு விசாரமில்லை. சமஸ்கிருதத்திலோ பாடங்களும் சொற்பம். உங்களுடைய சாஸ்திரிகளோ மகா சாந்த சுபாவமுடையவர்'' என்று சொன்னான்.

சங்கரன்.—என்னசாமி நாதா இப்படிச் சொல்லுகின்றாய். தமிழ் மிக்க இனிய பாஷையென்றும், தமிழ் என்பதற்கே இனிமையென்று பொருளென்றும், ஸமஸ்கிருதத்திலிருப்பதுபோலவே தமிழிலும் சிறந்த உத்கிரந்தங்களிருக்கின்றன வென்றும், தமிழாய்ந்து ஆனந்திக்க அவகாசம் இல்லாதார் ஜன்மம் வீண் என்றும் உன்னுடன் வாசிக்கும் அனவரதம் சொல்லுவானே. அது என்ன ஒரே பாஷையானது உனக்கு வெறுப்பாகவும் அவனுக்கு விருப்பாகவும் இருப்பதற்குக் காரணம் யாது.

சாமி. உங்களுக்குத்தான் ஆள் அகப்பட்டானே திருநெல்வேலிப் பேர்வழி. திருப்பாற்கடல் ஆழத்தை மந்தரமலையறிந்திருப்பதுபோல தமிழின் ஆழமெல்லாம் அவன் அறிவான். அவனுக்குத் தெரியாத நூல்கள் தமிழிலிருக்கின்றனவோ என்னவோ சந்தேகந்தான். மெட்ரிகுலேஷன் வகுப்பில் வாசிக்கும்போது ''குத்துவாதை மிக நலியக்கும்பகர்ணன் துவலபத்தில்'' என்ற அடிக்கு 'குத்துதலாலுண்டாகிய வேதனை' யென்று உபாத்தியாயர் அர்த்தம் சொல்லத் தொடங்கவே அனவரதம் சிரித்தான். உடனே எல்லாரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். உபாத்தியாயர் ''என்ன அனவரதம்'' இதற்கு வேறுவிதமாகப் பொருள் விசாரித்திருக்கிறாயா என்று கேட்க அவன் ''க்ஷுத்பாதா'' என்றது தமிழில் 'குத்துவாதை' என வந்ததென்றும். அதற்குப் 'பசிவேதனை' எனப்பொருள் என்றும்

ஞான் பொருள் விசாரித்திருக்கிறேன். அது சரியான அர்த்தம்தானே" என்றான். அந்தக் காலத்திலேயே அவன் தமிழையவ்வளவு நுட்பமாக ஆராய்ந்திருந்தால் இப்போது பி. ஏ. வகுப்பில் வாசிக்கிற அவன் சாமர்த்தியத்தைப்பற்றிக் கேட்பானேன். நமக்குப் பேசுவது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதாய் இருக்கிறது அவனுக்குக் கவிபாடுவது. சென்ற செவ்வாய்க் கிழமை நானும் அவனும் இராகவாச்சாரியும் பிளாக் டவுனுக்குப்போய்விட்டிவ்வழியே வருகையில் சந்திரன் உதயமாய்க் கொண்டிருந்தது. அப்போது இராகவாச்சாரி "அடடா என்ன ஆனந்தமப்பா இந்தச் சந்திரோதயம்" இந்தச் சந்திரோதயத்தைப் பற்றி நம்முடைய அனவரதம் ஒரு வெண்பா சொன்னால் எவ்வளவு மனோகரமாயிருக்கும் என்று சொன்னான். அப்பால் நாலடி நாம் செல்லு முன் அனவரதம் சந்திரோதய வெண்பா சொல்லுகிறேன் கேட்கின்றீர்களா என்றான். நாங்கள் பிரமித்துப்போய் வெண்பா சொல்லென்ற வாய்மூடுமுன் வெண்பாவா 'இம்மென்னும் முன்னமெழுநூறு மெண்ணூறும்'' என்றது இந்த அனவரதத்துக்குத்தான் தகுமப்பா நாவலர் புலவர்க்கு வெண்பாப்புலி யென்று சொல்லிப் பயமுறுத்துவது பொய்யாக்கிவிட்டாயே. எங்கே வெண்பா சொல் கேட்போம் என்றோம். உடனே அவன்,

" செங்குமுதம் விள்ளும்
சிறார்குழவோ துள்ளுமதன்
கொங்குலவுமைங்கணை கைக் கொள்ளுமால்—
விருப்புடன் விண்ணேறி [திங்கள்
விளையாடக் கீழ்பால்
பொருப்பி லுதித்திடு மிப்போது"

என்று பாட்டைச்சொல்லி முடிக்கவே இராகவாச்சாரிக்கும் எனக்கு முண்டான ஆச்சரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அளவில்லை. இராகவாச்சாரி குதித்தான், கூத்தாடினான். அனவரதத்தைக் கட்டிக்கொண்டான். அவனிருகன்னங்களையும் தன் கரங்களால் தடவி தன் கன்னத்தில் ஒறித்துக்கொண்டு என்னடா பாவி எங்கள் மனதையுருக்கிவிட்டாய். இப்படித்தான் வாய்க்குமா வெண்பா. சரஸ்வதிக்கு இவ்வளவு பக்ஷபாதமா. எங்கே இன்னொருமுறை அந்த வெண்பாவைச்சொல். விள்ளும், துள்ளும், கொள்ளும் பிராஸங்கள் வேறேயா. அந்த மூன்றாவது விஷயம் சொல்லியிருக்கிறாயே. 'மதன் கொங்குலவு மைங்கணை கைக்கொள்ளும்' என்று அதுதான் நம்முடைய வயதிற்கும் மனதின் பரிபக்குவத்திற்கும் ஏற்றது என்று சொன்னான். இப்போதும் இராகவாச்சாரி அனவரதத்தைக் கண்டுவிட்டால் "கொங்குலவுமைங்கணை" என்று சொல்வான். அப்படிப்பட்ட அனவரதத்தோடு என்னை ஒப்பிடுகிறதா. எனக்காவது நன்னூலில் வரும் ஆகுபெயர், அன்மொழித்தொகை முதலிய பெயர்களாவது தெரியும். அனேக மாணாக்கர் அப்பெயர்கூடக் கேட்டறியார்கள். நாவலர் நன்னூல் நடத்த வந்துட்கார்ந்தால் ஐயோ கஷ்டகாலம் இப்படி அர்த்தமில்லாத பெயர்களைச் சொல்லி இவர் நம்மைக் கழுத்தறுக்கவேணுமா என்பார்கள்.

சங்கரன்.—எங்கள் திருநெல்வேலி ஜில்லா தமிழ் பாஷைக்குப் பேர் பெற்றதென்று விளங்குகிறதா. தமிழ் மணக்கும் தென்றல் எங்கட்கு எப்போதும் கிடைக்கும். எங்களூரிலிருந்து அகஸ்தியகூடம் சுமார் முப்பது மைல்தானிருக்கும். எங்கள் ஜில்லாவில் பிறந்த அனவரதம் தமிழில் பாண்டித்திய முள்ளவனாயிருப்பது ஆச்சரியமில்லை. ஆனால் இராகவாச்சாரிக்குத் தமிழினருமை இவ்வளவு அறியக்கூடிய சக்தி யெவ்வாறுண்டாயிற்று.

சாமி. இராகவாச்சாரிக்கே கொஞ்சம் தமிழில் விசேஷ பரிசயமுண்டு. மேலும் அவனுடைய பிதா தமிழிலும் சங்கீதத்திலும் சிறந்த ஞானமுள்ளவர். உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர். இராகவாச்சாரியின் தங்கையொரு சிறு பெண் மைசூரில் இருக்கிறாளாம். அவ்விடத்தில் வீணையும் சமஸ்கிருதமும் கற்றுவருவதாகக் கேள்வி.

சங்கரன்.—வாஸ்தவமாயிருக்கலாம். நான் மூந்தாநாள் இராகவாச்சாரியின் ஜாகைக்குப் போயிருந்தபோது ஒரு வேடிக்கைப் பாட்டுக்கச்சேரி நடந்தது. அப்போது ஒரு சிறு பெண்வீணை வாசித்தாள் மிகவும் நன்றாகவாசித்தாள். குரலா குயில் தோற்றுப்போகும் சமஸ்கிருதத்தில் சில கீர்த்தனங்களும், கன்னடத்திலும் தெலுங்கிலும் சிலஜாவளிகளும் அக்ஷரசுத்தமாயும் உருக்கமாகவும் பாடினாள். சிறு பெண்ணாக இருந்தாலும் ஜாவளிகளின் தாத்பரியாஸத்தைத் தெரிந்து பாடுவதாகவே தோன்றியது. பார்வைக்கு சுந்தரமாயிருக்கிறாள். நாகரீகத்திற்கும் குறைவில்லை. மைசூர் முதலிய சுதேச இராஜ்யங்களிலிருக்கும் பெண்களே சமஸ்கிருதம் ஆங்கிலம் முதலிய பாஷைகளிலும், சங்கீதத்திலும், வீணை முதலிய வாத்தியங்களிலும் தேர்ச்சியுள்ளவர்கள் என்று நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோமல்லவா

சாமி! அது என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள். நம்முடைய நாடுகளிலும் தமிழ் தெலுங்கு முதலிய பாஷைகளிலும் வீணை முதலிய வாத்தியங்களிலும் தேர்ச்சியடைந்த பெண்கள் எத்தனையோபேர் இருக்கவில்லையா. என் பெரிய தாயாருக்கு மதுரம் என்று ஒரு பெண் இருக்கிறாள். வயதுபத்து அல்லது பதினொன்று தானிருக்கும். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் வீணை வாசித்தால் கேட்கக் கேட்கத் தெவிட்டாது. பியானகூட இப்பொழுது பழகுவதாகப்பிரஸ்தாபம். தகப்பனார் சப்ஜட்ஜியாக இருப்பதால் செல்வத்துக்குக் குறைவில்லை. அதிலும் இவள் ஒரே பெண். வடிவிலும்நாகரீகத்திலும்நானிதுவரைபார்த்த பெண்களைப் பார்க்கிலும் உயர்ந்தவள்தான். ஆனால் நீங்கள் சொல்லும் இராகவாச்சாரியின் தங்கையை நான் பார்க்கவில்லையாகையால் அவளைப்பார்க்கிலும் மதுரம் உயர்ந்தவள் என்று இப்போது என்னால் சொல்லமுடியாது.

(இன்னும் வரும்.)

---

## "சுளிக்கச் சொல்லேல்"

இதன் பொருள். சுளிக்க—(கேட்பவர்) கோபிக்கும்படியாக, சொல்லேல் (நீ ஒன்றையும்) பேசாதே என்பதாம், எனவே சுளிக்கச் சொல்லலால் தீமை விளையுமென்பது பெறப்படுகின்றது நாவினால் விளையும் நன்மையையும் அதனால் விளையுந் தீமையும் மனுஷனுடைய வேறு எந்த அவயவத்தினாலும் விளையாது. ஆதலால் "ஞயம்படவுரை" என ஆன்றோர் சொற்றவாறு எவரோடாயினும் நன்மையான வார்த்தைகளைப் பேசல்வேண்டும். கொடுஞ்சொல்லால் இகழப்பெற்றவன் அச்சொல்லை நினைக்குந்தோறும் அது அவனுடைய மனத்தை அம்புபோல் ஊடறுக்குமே. இதை நோக்கியே கம்பரும் "வில்லம்பு சொல்லம்பு மேதினியிலிரண்டுண்டு" எனக் கூறினர். வன்சொல்லின் கொடுமை நோக்கியே திருவள்ளுவரும்

" தீயினாற்சுட்ட புண்ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு" என்று கூறி யருளினர்.

மணலில் மறைந்துகிடக்குந் தேரை கத்த, அச்சத்தின் வழியேசென்று பாம்பு அதனை ஆராய்ந்து அகழ்ந்து பிடித்து உண்ணுகிற்கும். இதனாற்றேரை தன் வாயாற்றானே தனக்குத் தீமையைத் தேடிக்கொள்ளும் அதுபோலவே அறிவிலார் தம்பேச்சால் தமக்குத்தாமே துன்பத்தை வருவிக்கின்றனர்.



# புஸ்தக விமர்சனம்

1. தாவரநூல்.—(இரண்டாம் பதிப்பு) க. அரங்காசாரியார், எம். ஏ., எல் டி; அக்ரி காலேஜ், கோயமுத்தூர். விலை ரூ 1—8

இப்புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய உடமைக்காரருக்கு வந்தனம். முதற்பதிப்புப் பிரசுரமாகி இரண்டு வருஷங்களாவதற்குமுன், இரண்டாம்பதிப்பு வந்ததே புஸ்தகத்தின் யோக்கியதைக்குத் தக்க சாக்ஷியமாம். இரண்டாம் பதிப்பில் ஔஷதிகளின் குடும்பங்களைக் குறித்து இரண்டு அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நூலாசிரியர் முகவுரையிற் சொல்லுமாறு கிராமாந்தரங்களில் பள்ளிப்பிள்ளைகளும், விவசாயத்தில் சிரத்தையுள்ளவர்களும், பூதக்கண்ணாடி முதலிய சாமான்னிய சாதனங்களைக் கொண்டு, ஔஷதிவர்க்கங்களிற் காணும் மகிமைகளை யறிவதற்கு இப்புஸ்தகம் உத்தமமான மார்க்கதரிசியென்று நாம் மனப்பூர்வமாய் நம்புகிறோம். தமிழ்நாட்டிலுள்ளோர் அனைவருக்கும் இப்புஸ்தகத்தைப் படித்து நற்பயனடையும்படி வற்புறுத்துகிறோம். சித்திரங்கள் வெகு சிரமப்பட்டு அமைக்கப்பெற்றனவைகள். எழுதியவர் விஷயஞானத்தில் நிறைகுடமாதலால் நம்போலியருடைய ஸ்தோத்திரங்கள் அவர் விஷயத்தில் அனாவசியம். திராவிட பாஷைகளில் மீதியிருக்கும் மூன்றிலும் இப்புஸ்தகம் சீக்கிரத்தில் வெளியாகுமென்றும், இதை யனுசரித்து நடக்கவேண்டிய மற்றுள்ள வேலைகளைக் காலக்கிரமத்தில் ஸ்ரீமான் அரங்காசாரியவர்கள் செய்து தமக்கும் இதரர்களுக்கும் சாபல்லியத்தைச் செய்துகொள்வார்களென்றும், அதற்கு வேண்டிய சௌகரியங்களைப் பகவான் அனுக்கிரகிப்பாரென்றும் பிரார்த்திக்கிறோம்.

2.—ராஜமய்யர் சரித்திரம்.—ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர் அவர்கள் பி. ஏ. எல். டி., ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர். விலை அணு 8.

இச்சிறு புஸ்தகம் கமலாம்பாள் முதலிய அருமைத் தமிழ்ப் புஸ்தகங்களுக்குக் கருத்தாவாகியும், சுகுணசீலருமாயிருந்த ஸ்ரீமான்-ராஜமய்யரவர்களுடைய மனோதருமத்தை விளக்கி, சித்திரப் படங்களுடன் நல்ல காகிதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அவர் பிறந்து வளர்ந்த கதை சொல்லுவதில், ஸ்ரீமான்-கஸ்தூரிரங்க அய்யரவர்கள் மேனாட்டுச் சம்பிரதாயத்தை யனுசரித்து எழுதியிருப்பது ஒரு விசேஷம். நமது நாட்டுச் சிறுவர்கள் இம்மாதிரியுள்ள ஜீவனசரிதங்களைப் படித்து, சுகுணங்களை விருத்திசெய்துகொள்வதற்கு இம்மாதிரி 'உபதேசமாலை' நன்றாயமைந்த சாதனமென்பது நமது நம்பிக்கை.

3. திருக்குறள் வசனம்.—பு. து. இரத்தினம் பிள்ளையவர்கள். விலை நூ 1

இப்புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய நடேசன் கம்பெனியாருக்கு வந்தனம். திருக்குறள் தமிழ்ப் பண்டிதர்களுக்கு மட்டுமேயல்லாமல், பாமரர்களுக்கும் சாமான்னியமாய்த் தமிழ் படித்தவர்களுக்கும் வேண்டிய உடமையாதலால், இவர்களுக்குபயோகமாகும்படி வசன நடையில் பொழிப்புரையாக ஸ்ரீமான்-இரத்தினம் பிள்ளையவர்கள் எழுதிப் பிரசுரம் செய்தது மெத்தவும் சிலாகிக்கத்தக்கதேயாம். முகவுரையில், மேற்படியார் சொல்லியிருக்கிறபடி இன்னொரு பதிப்பில் மூலத்தையும் சேர்த்துவிடுவாரென்று நம்புகிறோம். தவிர, பகவத்கீதை முதலிய நூல்களுக்கு மேனாட்டு முறைப்படி நடைபெறும் விஷய விவரணமொன்றுங் கூட்டிவிடுவாராகில், படிப்பவர்களுக்குச் சௌகரியமதிகரிக்குமென்று நம்புகிறோம்.

4. "சந்திரகாந்தா" ஓர் துப்பு அறியும்.—ஜெ. ஆர். ரங்கராஜு அவர்கள் இனிய தமிழ் நாவல். விலை அணு 12.

ஸ்ரீமான்-ரங்கராஜு அவர்கள் 'இராஜாம்பாள்' என்னும் நாவல் எழுதிக் கைபழகியவராதலால், தமிழ் வசனநடை படிப்பதற்குச் சுலபமாயும், இனிமையாயுமிருக்கிறதென்பதில் ஆக்ஷேபமில்லை. கடிதம், அச்சு, சித்திரப் படங்கள் முதலியவைகளும் வேண்டியபடியேயிருக்கின்றன. விஷயங்கள் மொத்தத்தில் நம்மவர்களில் சிறுவர்களும், ஸ்திரீகளும் படித்து ஆனந்திக்கக் கூடியவைகளே. ஆனால் ராஜு அவர்கள் இனி வேறு நாவல்கள் எழுதுவதாயிருந்தாலும், இதை இரண்டாம் பதிப்புச் செய்வதாயிருந்தாலும், உபயோகமாகும்படி ஒரு சில்லரை விஷயம்மட்டும் நாம் அவரைக் கேட்டுக்கொள்ள வேண்டுகிறோம். பண்டார சன்னதிகள் விஷயமாய் எவ்வளவு கடூரமாய் எழுதியபோதிலும் நமக்குச் சம்மதமே யென்றாலும், இருட்டறை யோகாப்பியாச தரிசனத்திற்குத தீபாராதனம் செய்து சித்திரப்படத்துடன் விளக்குதல், சாமான்னியமாய்ச் சிறுவர்களுக்கு, அதிலும் ஸ்திரீகளுக்குப், படிப்பதற்கு ஆக்ஷேபகரமாதலால், அம்மாதிரி விஷயங்களை மட்டும் நீக்கியோ, அல்லது பூசி மெழுகியோ, விட்டுவிடுதல் நலமென்பதேயாம்.

## பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரப் பத்திரிகைகள்:—பிழைக்கும் வழி விவேகபோதினி, சக்கரவர்த்தினி, வித்திபானு, பிரபஞ்சம். ஹிதகாரிணி.

மாதம் இருமுறை பதிப்புகள்:—இந்து சாதனம், உதயதாரகை.

வாரப் பதிப்புகள்:—திராவிட தீபம், நீலலோசினி, தேசாபிமானி, லோகானுகூலன், இந்தியா, சூரியோதயம், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா சந்திரிகை, பாண்டியன், நாகர்கோயில் டைம்ஸ்.

வாரம் இருமுறைப் பதிப்புகள் :— மைசூர் டைம்ஸ்.

## சமாசாரக் குறிப்புகள்

கோயமுத்தூரில் முனிசிபல் செக்ரிடேரிக்கு கவர்ன்மெண்டார் செலவு கொடுத்தனுப்பியதாகவும், டிகலெக்டர் தரபில் சேர்மன் ஒருவர் ஏற்படுவதாகவும் தெரிகிறது. செக்ரிடேரி என்னும் பதவியை உண்டாக்கிய காலத்தில் நம்மவர்கள் அது விடியாத கலகங்களுக்கு இடங்கொடுக்குமென்று வாதஞ்செய்தார்கள். அதைக் கேளாமல் சட்டம் பிறந்ததில் கோயமுத்தூர் முனிசிபாலிட்டி சென்ற சுமார் பன்னிரண்டு வருஷகாலமாய் அனுபவித்த துக்கங்கள் பல. இனியாகிலும், அதற்குச் சுகமுண்டாகவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

* * *

'உத்தம வஸ்துக்கள் கெட்டால் அதமமாகிப் போகின்றன' என்பது லத்தீன் பாஷையில் ஒரு பழமொழி. ஆங்கிலேய ஸ்திரீகள் 'வோட்டை' வேண்டிப் போராடுவதில் அனேகர் பெண்தன்மையைவிட்டுத் தாடகைகளாகி விட்டதாகச சமாசாரம். இவர்களிலொருத்தி பிரிட்டிஷ் பிரதான மந்திரிகளிலொருவராகிய ஸ்ரீமான்-சர்ச்சில் துரையை நாய்க் குறடாகொண்டு அடித்ததாகவும், அவரைப் பிடிக்கப்போக அவருடன் தொந்த யுத்தம் செய்ததாகவும், கடைசியில் அவர் குறடாவைப் பிடுங்கிக்கொண்டு, இந்த யுத்தத்தில்தான் ஜெயித்ததற்கு அறிகுறியாக அக்குறடாவைத் தன் மனைவியிடங் கொடுத்து வைக்கும்படிச் சொன்னதாகவும் சமாசாரம் அழுவதா, சிரிப்பதா, தெரியவில்லை.

* * *

தேசீய வியாதிகளையும், வைத்திய முறைகளையும் இதுவரையில் இருந்தமாதிரி கைவிட்டிருப்பது பைத்தியக்காரத்தனமென்றும், உஷ்ண ராஜ்ஜியங்களில் ராஜ்ஜியம் வேண்டுமென்று ஆசைப்படுபவர்களுக்கு, அவ்விடத்திலுள்ள வியாதிகள், அவற்றிற்குப் பரிகாரங்கள் இவைகளைத் தேடியறிவதைவிட முக்கியகடமை வேறில்லையென்றும், டாக்டர் ஆஸ்லர் சென்ற மாசத்தில் பேசினார். 'எட்டிக் கொட்டை' யவர்கள் விஹாரிணியில் இரண்டுமாதங்களாகச சொல்லிவருவதும் இதுவேதான்.

* * *

'கோ ஆபரேடிவ்' என்னும் கிராமப் பாங்குகள் பஞ்சாபில் வெகு துருசாய் வேலை நடத்தி வருவதாகவும், அதனால் சவுகார்கள் தங்கள் தொழிலையிழந்து, இனி ஏழைகளை திட்டாண்டிகளாக்க வகையில்லாத மூட்டை கட்டுகிறார்களென்றும், கேட்டுச் சந்தோஷிக்கிறோம். நமது ராஜதானியிலும், இம்மாதிரிப் பாங்குகள் ஏற்பட்டுக் கிராஸாமார்க்கமாய் ஜீவிக்கும் நமது குடித்தனக்காரர்களுக்கு எப்பொழுது நற்காலம் பிறக்குமோவென்று ஆவலுடன் பார்த்திருக்கிறோம்.



ஆஸ்க்வித் துரையவர்கள்—இங்கிலாந்தின் பிரதான மந்திரி

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

புஸ்தகம் I. Vol I. | சௌம்ய௵ தைமாதம் January 1910 | சஞ்சிகை 5 No. 5

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே."

**பிரிட்டிஷ் பார்லிமெண்டு.**

பிரிட்டிஷ் துரைத்தனத்தை நடத்திவரும் மந்திரிமார்கள் பார்லிமெண்டிலுள்ள கக்ஷிகளிரண்டில் ஏதோ ஒன்றுக்கு 'நாயகர்கள்' என்பது நம்மவர்களுக்குத் தெரியும். சென்ற நான்கு வருஷங்களாக லிபரல் கக்ஷியார் துரைத்தனத்தை நடத்திவந்ததில் காரியங்கள் சீராகத்தான் நடந்து வந்திருக்கின்றன. என்றாலும், நாளது வருஷத்திய "பட்ஜெட்டு" (என்றால், வரவுசெலவுக் கணக்கு) விஷயத்தில் சென்ற பலமாதங்களாய்த் துரைத்தனக் கக்ஷிக்கும் எதிர்க்கக்ஷிக்கும் வழக்கு அதிகரித்து, இது விஷயத்தில் மகா ஜனங்களுடைய அபிப்பிராயந் தெரியவேண்டி, பார்லிமெண்டு மெம்பர்களை மறுபடி நியமனம் செய்வதற்காகப் பிரயத்தனம் நடந்துவருகிறது. இதில் நமக்கு என்ன ஆகவேண்டுமென்று இருப்பதற்கில்லை. லிபரல் கக்ஷியாரே மறுபடி அதிகாரத்தை வகித்தால்தான் நமக்கு க்ஷேமம். ஏனெனில், இந்தியா கவர்ன்மெண்டில் இப்போது நடந்துவரும் திருத்தங்களுக்கெல்லாம் காரணராகிய விகௌண்டு மார்லியும், அவருக்கு உதவியாய் உழைத்து வந்திருக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களும் இந்தக் கக்ஷியையே சேர்ந்தவர்களாம். இவர்கள் ஆரம்பித்த காரியம் முடிவு பெறுவதற்கு முன் எதிர்க்கக்ஷி பலத்தால், அதனால் நமக்கு நன்மை யதிகரிப்பதற்கில்லை.

இவ்விரு திறத்தாருக்கும் வரவு செலவு விஷயமாய் வழக்கு எப்படி ஏற்படலாமென்று நம்மிலனேகருக்குச் சந்தேகமுண்டாகலாம். ஒரே ஒரு விஷயத்தில்தான் தகரார் பலத்துவிட்டது. துரைத்தனத்திற்குக் கப்பற்படை வகையிலும், தள்ளாதவர்களைக் காப்பாற்றும் வகையிலும், இன்னுஞ்சில சில்லரை வகைகளிலும் செலவு அதிகரித்துவிட்டது. இதற்கு வரவு வேண்டுமென்று தேடிப்பார்த்ததில், இந்தியாவிலிருப்பது போலவே நிலவரிவசூல் செய்வது நியாயமென்றும், அவசியமென்றும், பிரதான மந்திரிகளுக்குக் கண்டதால், அவை

யும் வாவிற்சேர்த்து பார்லிமெண்டாரைக் கணக்கு ஒப்புக்கொள்ளும்படி கேட்டார்கள். ஆங்கிலேய ராஜ்ஜியத்தில் சாகுபடி பூமிகள் அனேகமாய்ப் பிரபுக்கள் கையிலிருப்பதால், இக்கந்தாயத்தை அவர்கள்தான் செலுத்த வேண்டிவருகிறது. கந்தாயம் கொடுப்பதென்றால் யாருக்கும் மனம் வருகிறதில்லை. அதைத் தப்பித்துக்கொள்ள வேண்டியே இந்தக்கலகம் ஆரம்பமாகி இருக்கிறது. வாஸ்தவமிப்படியிருக்க, இருதிறத்தாரும் தத்தம் கக்ஷி ஜெயமடையவேண்டித் தற்காலம் பேசுவதையும் எழுதுவதையும் பார்த்தால், சிரிப்பு, துக்கம் இரண்டிற்கும் இடமுண்டாகிறது. தடித்த பொய்களை இருதிறத்தாரும் கூசாமல் பேசி வருகிறார்கள். முடிவு எப்படியாகுமோ தெரியவில்லை.

ராஜப் பிரதிநிதி யவர்களுடைய விஜயம்.

சென்றமாதம் ராஜப்பிரதிநிதியாகிய மின்டோ பட்டவர்த்தனர் மதிராஸுக்கு விஜயம்செய்ததில், நம்மவர்கள் அவருக்கு முகமன் கூறித்தங்கள் குறைகளையுஞ் சொல்லிக்கொண்டார்கள். அதற்கெல்லாம் அவர் சரியான பதில் சொல்லி வந்ததில், துரைத்தன விமர்சனவிஷயமாய் மொழிந்தது நாமனைவரும் சம்மதிக்க வேண்டியதே. அவர் கூறியது இது. விமர்சனச் சட்டத்தை யனுசரித்துத் தற்காலம் நடந்துவரும் நடவடிக்கைகளில் அனேகங்குறைகள் இருப்பது சகஜம். என்றாலும், இப்படிக்குறைவுகள் காணுவது அதிசயமல்ல. இப்பெரிய ராஜ்ஜியத்தில் உள்ள சகல ஜனங்களுக்கும் சம்மதமாக நடப்பது யாருக்கும் சுலபமன்று. ஆனால், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஏதேனுமோர் விஷயம் குறைவென்று நிஷ்கரிஷையாய்த் தெரிந்துவிட்டால், அதை அவர்கள் உடனே பரிகரிக்கத் தயாரா யிருப்பதுகொண்டு, ஜனங்களில் விவேகிகளெல்லோரும் கவர்ன்மெண்டாருக்கு அனுகூலமாக நடந்து எடுத்தகாரியம் கைகூடும்படி செய்யவேண்டுமென்பதே. இதற்கு யாரும் ஆக்ஷேபணை சொல்வதற்கில்லை. நாம் கேட்டுக் கொள்வதெல்லாம் ராஜாங்கவிஷயத்தில் விவேகிகளாகிய நம்மவர் ஒருமனப்பட்டுச் சொல்வதற்குக் கவர்ன்மெண்டாரும் கொஞ்சம் மரியாதை வைக்கவேண்டு மென்பதேயாம். சென்ற பத்துவருஷங்களாக நடந்த பெரிய நடவடிக்கைகளில் காணும் பலதோஷங்களும், அதனால் நம்மவர்களுக்குண்டான அதிருப்தியும், இந்தச் சில்லரை விஷயத்தைச் சர்க்கார் கவனியாததனால் வந்தன வென்றே நம்மில் அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மதிராஸ் சட்ட நிருபண சபை.

இச்சபைக்கு மெம்பர்களாகவேண்டிச் சர்க்கார் நியமனங்களும், மகா ஜனங்களுடைய நியமனங்களும், நமது ராஜதானி யெங்கும் துருசாய் நடந்துவருகின்றன. நாளது வரையில் நியமனமானவர்களைக் கவனிக்குமிடத்து பொத்தத்தில் அதிருப்திபடுவதற்கு நியாயம் காணவில்லை. அனேகமாய் ஏற்பட்ட பெயர்களெல்லாம், முந்தியே பொது நன்மைக்காக உழைத்து ஜனங்களாலும் சர்க்காராலும் நன்குமதிக்கப் பெற்றவர்களேயாம். முக்கியமாக வயது, ஞானம், சீலம் ஆகிய மூன்று விஷயங்களிலும் நிகரற்றவராகி விளங்கும் திவான் பஹதூர் ஸ்ரீமான்-ரகுநாதராயரவர்கள் இச்சபைக்கு மெம்பராக ஏற்பட்டிருப்பது நாம் எல்லோரும் கொண்டாடத்தக்கதே.

சபைக்கு மெம்பராகவேண்டி சிரமப்பட்டவர்களெல்லாம் மனதிற் பதியவைத்துக்கொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. இப்புதுச் சபை பழைய சபையைப்போன்றதன்று. தேசக்ஷேம விஷயமாய் நிர்வகிக்கவேண்டிய பாரம் வெகுவாயதிகரித்துவிட்டதால், அவரவர் தத்தம் சக்தியையும், அனுபவத்தையுங்கொண்டு ஏற்ற உதவிசெய்து, சர்க்காருக்கும், மகா ஜனங்களுக்கும் நாணயமாக நடந்துகொள்வார்களென்று நாம் மனப்பூர்வமாக நம்புகிறோம்.



திவான் பஹதூர் ஸ்ரீமான் ரகுநாதராயரவர்கள்

முதல் ஐந்து வருஷங்களுக்குள் நம்மவர்கள் நடந்து கொள்வதை யநுசரித்துத்தான் நமக்கு மேலு மேலும் நன்மையோ தீமையோ விளையுமாதலால், அதைக் கவனித்து மெம்பர்கள் நடப்பாராக.

ஓட்டுவேண்டும் அங்கிலேயஸ்திரீகள்.

இவர்கள் தங்களுடைய மனோரதம் நிறைவேறுவதற்காகக் கொஞ்சகாலமாய்ச் செய்துவரும் விசித்திர காரியங்களில் இரண்டொன்றை முந்தி நாம் குறிப்பிட்டிருக்கிறோம். கலகம் பிறந்தால் நியாயம் பிறக்குமென்பது இவர்கள் மதம். ஆகவே, பிரதான மந்திரிகள் பிரசங்கம் செய்யுமிடத்திலும், பார்லிமெண்டிலும், வேறிடங்களிலும், சமயம் வாய்த்த பொழுதெல்லாம் இவர்கள் கல்லெறிந்தும், உரக்கக் கூவியும், வேறுவிதமாய் இடையூறுகள் விளைவித்தும் வருகிறார்கள். அவற்றையெல்லாம் சகஜமென்று வைத்துக்கொண்டாலும், இம்மாதிரிக் குற்றத்திற்காகத் தண்டனையடைந்து ஜெயிலில் அடைப்பட்டபிறகு, இவர்களில் சிலர் செய்த காரியம் இதுவரையில் நாம் கேட்டேயிராத விநோதம் விளைவிப்பதாம். ஏனெனில், இந்த ஸ்திரீகளுடைய மற்றைய உபாயங்களெல்லாம் சரிவராமற்போய் இவர்கள் கைதிகளானதும், ஜெயிலிலிருந்து விடுதலை பெறுவதற்காக யுக்தி செய்து, சாப்பிடுவதில்லையென்று தீர்மானித்துக்கொண்டார்கள். பட்டினியிருந்து பிராணனை விட்டால் அது ஜெயிலதிகாரிகளை உபத்திரவிக்குமாதலால், அவர்கள் வைத்தியர்களுதவியைக்கொண்டு, இந்தப் பிடிவாதக் காரிகளில் சிலரைக் கைகால்களைப் பிடித்துக் கிடத்தி ரப்பர்க் குழாய்கள் மூலமாய், வாய் வழியாகவும், மூக்கின் வழியாகவும், பால் போன்ற ஆகாரத்தையுட் செலுத்தி வந்ததாகவும், அதற்காக அவர்கள் பிராது செய்ததில், ஜெயிலதிகாரிகள் அக்கிரமஞ் செய்ததாகத் தீர்மானங்கிடைத்ததாகவும், அதனால் இந்த ஸ்திரீகள் விடுதலைபெற்றுப் பழையபடி கலகம் ஆரம்பித்திருப்பதாகவும் வதந்தி.

தென்னிந்திய உபாத்தியாயச் சங்கம்.

‘அழுத பிள்ளைக்குப்பால்,’ என்பது பழைய அநுபவ மாதலால், மற்றவர்களைப் போலவே, நமது நாட்டு உபாத்தியாயர்களும் தமது குறைகளைத் தீர்த்துக் கொள்ளச் சங்கமொன்று சென்றவருஷம் ஏற்படுத்தியதில், டிசம்பர்மீ 21—22 தேதிகளில், திருச்சிராப்பள்ளியில் இரண்டாமுறை ஒரு மகாநாடு கூடினார்கள். ராஜதானியில் எல்லாவிடங்களிலுமிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பண்டித ஸ்ரீமான்-எம்.ரங்காசாரியாரவர்கள் பிரஸிடெண்டாயிருந்து காரியத்தைச் சீராகநடத்தினார்கள் .இரண்டு விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்கப்பெற்றன. முதலாவது, சர்க்கார்உத்தியோகஸ்தர்களுக்குப் பென்ஷன் இருப்பதுபோல், பள்ளிக்கூடங்களில் உழைத்துவரும் உபாத்திமார்களுக்கும், ‘ஆபத்துதனம்’ ஏற்படவேண்டுமென்றும், அதற்குச் சர்க்கார் செய்துவரும் பிரயத்தனம் சீக்கிரம் நிறைவேற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இரண்டாவது, மெட்ரிகியுலேஷன் பரீக்ஷையில் தேறமாட்டாதவர்களை விசேஷமாய் உத்தேசித்து, அவர்களுக்கு அநுகூலமாக ‘ஸ்கூல் பைனல்’ என்ற பெயருடன் வித்தியாப்பியாசத்தைச் சீர்திருத்த ஏற்பட்டிருக்கும் உபாயத்தைப்பற்றியது. இவ்விரண்டையுங்குறித்து இச்சங்கத்தார் ஒப்புக்கொண்ட தீர்மானங்கள் சர்க்காருக்கும் சம்மதமாகுமென்று நம்புகிறோம்.

லாஹோர் காங்கிரஸ்

சென்ற வருஷம் மதிராஸில் ஆகிய தீர்மானத்தை யநுசரித்து நாளது வருஷம் லாஹோரில் இம்மகாசபை கூடிக் காரியங்கள் கிரமமாய் நடந்ததற்காகச் சந்தோஷப்படுகிறோம். இரண்டு மூன்று வருஷங்களாக இம்மகாசபையில் முன்னிருந்த ஐகமத்தியம் குறைந்து வருவதாகவும், அதனால் நமது முக்கிய நாயகர்க

ளிற் சிலர் பழையபடி சிரத்தையுடன் உழைப்பதற்கு இஷ்டமில்லாமல் விலகியிருப்பதாகவும், நம்மில் அனேகருக்குக் காணுகிறது. லாஹோர் காங்கிரஸுக்கு ஸ்ரீமான்-ஸர் பெரோஸ்ஷா மேடா அவர்களை அக்கிராசனாதிபதியாக இருக்கும்படி மகா ஜனங்களெல்லோரும் ஒரே மனதாய்க் கேட்டு அவரும் ஒப்புக்கொண்டு, பிறகு திடீரென்று கடிதமெழுதித் தன்னாலாகாதென்று சொல்லி விட்டதைப் பார்க்குமிடத்து நாம் மேற்சொல்லியதற்கு இதுவும் ஒரு சாக்ஷியமாகக் காணுகிறது. லாஹோர் நண்பர்கள் இத்தருணத்தில் சஞ்சலப்படாமல், உடனே ஸ்ரீமான்-மதனமோஹன மாளவீயரை மேடாவுக்குப் பிரதியாக நியமனஞ் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து, காங்கிரஸ் காரியத்தை நிறைவேற்றியதற்காக நாம் அவர்களுக்கு நன்றியறிவுள்ளவர்களாயிருக்கிறோம். ஸ்ரீமான்-மாளவீயரும் தனக்குப் பல அவசரகாரியங்களிருந்தும் அதைப் பாராட்டாமல் இஷ்டர்களுடைய வேண்டுகோளுக்கிசைந்து, ஒருவாரத்திற்குள் தாம் சொல்லவேண்டிய விஷயங்களை ஜோடித்து எல்லோரும் மெச்சும்படி பேசி மற்றபடி நடக்கவேண்டிய அமுல்களையும் கிரமமாய் நடத்தியதற்காக அவருக்கும் நாம் மனப்பூர்வமாக வந்தனஞ் செய்கிறோம்.

**மகம்மதியர்களுடைய சிரத்தை.**

வித்யாவிஹாரிணி விஷயத்தில் சில மகம்மதிய நண்பர்களுக்கும் அபிமானம் இருப்பதாகத் தெரிந்து மெத்தவும் சந்தோஷப்படுகிறோம். மஹம்மது நபீ விஷயத்திலும், அவருடைய மதவிஷயத்திலும் நம்மவர்களுக்கு ஒன்றுந் தெரியாதென்றே சொல்லிவிடலாம். இதனாலேயே பரஸ்பர சிநேகம் நிகரிப்பதற்கு இடமில்லாமலிருக்கிறது. அப்படியே இந்துக்களுடைய மதம் ஆசாரம் முதலியவைகளை மகம்மதியர்களும், அறியவேண்டியதவசியம். ஆதலால் இனி மாதந் தவறாமல் மகம்மதிய மதம், ஆசாரம், சரித்திரம் இவற்றைக் குறித்து நன்றாய்த் தெரிந்தவர்களைக்கொண்டு வியாசங்கள் எழுதிவருவதாக உத்தேசித்திருக்கிறோம். மார்கழியீ விஹாரிணியிலும் இந்த நம்பரிலும் ஸ்ரீ கபீர்தாஸ சுவாமிகள் இந்து மகம்மதியர் இருவருக்கும் சம்மதமாகும்படி செய்த உபதேசங்களிற் சிலவற்றை விளக்கியிருக்கிறோமல்லவா? அதே மார்க்கத்தை யனுசரித்து ஒருவருக்கும் விரோதமின்றி, எல்லோருக்கும் சமரசமாய் எழுதிவர வேண்டுமென்பது நமது கோரிக்கை. மகம்மதிய இஷ்டர்களும் இந்துஸ்தானி தெரியாத தங்கள் மதஸ்தர்களுக்கு உபயோகமாகும்படி தங்கள் மத சரித்திரத்தையும் ஆசாரங்களையும் விளக்கி எழுதி நம்மைக் கௌரவப்படுத்துவார்களென்று கோரியிருக்கிறோம்.

**சொந்தவிஷயம்.**

நான்கு மாதங்களாக "விஹாரிணி"யைப் பிரசுரஞ்செய்து பெரியோர்களுடைய அபிப்பிராயந் தெரியவேண்டிப் பல திக்குகளிலும் அனுப்பி வந்ததில், அனேகர் உற்சாகமூட்டியும், சிலர் அதிற் காணுங் குறைவுகளைச் சுட்டிக் காட்டியும் வந்திருப்பதால், குறைவுகளைப் பரிகரிக்க முயன்று இந்த நம்பர் முதல் இரண்டொரு மாறுதல்களைச் செய்திருக்கிறோம்:—முதலாவது, பொருளடக்கத்திற்காணும் மாறுதலாம். "விஹாரிணி"யின் விஷயங்களை நான்கு காண்டங்களாகப் பிரித்து அதை யனுசரித்து விஷயங்களை ஜோடித்து வருவது படிப்பவர்களுக்கு அனுகூலமாயிருக்குமென்று நாம் எண்ணியதில், இஷ்டர்களிலனேகர் அது சுகமில்லையென்றும், எல்லா வகைகளிலும் காணும் விஷயங்களை விரவியமைப்பது நலமென்றும், சொல்லியதால், எமதபிப்பிராய மெப்படியிருந்த போதிலும் இஷ்டர்கள் சொல்லியதை அசட்டை செய்யாமல், இந்த நம்பர் முதல் "பொருள்களை" அவர்களிஷ்டம்போல் அடுக்கி வைத்திருக்கிறோம்.




ஸ்ரீமான் பண்டிதர் மதன மோஹன் மாளவியா

இரண்டாவது, நாம் வடமொழிப் பதங்களை அபரிமிதமாக உபயோகப்படுத்தி, அதனால் படிப்பவர்களுக்கு அனாவசியமாய்க் கஷ்டம் உண்டாக்குவதாக நமது இஷ்டராகிய சுதேசமித்திரனும் வேறு இரண்டொரு நண்பர்களும் அபிப்பிராயப் படுகிறார்கள். நமக்கோ வடமொழிப்பதங்களை உபயோகித்தே தான் தீருவதென்கிற பிடிவாதமில்லை. வடமொழியானாலும், தென்மொழியானாலும், சுதேசியானாலும், விதேசியானாலும், இவ்விஷயங்களில் நமக்குள்ள நோக்கமெல்லாம் ஒன்றேதான். அதாவது, சொல்லவந்ததை நடைபெறும் வாசகங்களைக் கொண்டு நன்கு விளக்கிப் படிப்பவர்களுக்குச் சுகத்தையும் அறிவையும் புகட்டவேண்டுவதேயாம்.

ஆனால், தமிழிலும், தமிழரிலும், நாமிக்காலத்திலறியவேண்டிய கலைகள் புதிதாகவந்து அண்டுபவைகளாதலால் அவற்றையனுசரித்துப்பதங்களும் ஆங்காங்கு பலதிக்குகளிலிருந்து வந்து தான் தீரவேண்டும். இதற்குச் சுதேசமித்திரனே முதற் சாக்ஷி. இப்படியிருக்க, நாம் "படாடோபத்திற்காகப்" பதங்களைப் பிரயோகிப்பதாக நம்மைக் கடிந்து கொள்வதை யோசிக்குமிடத்தும், நான்கு மாதத்திற்குள் நமதுவசன நடை "மித்திர"னிஷ்டம்போல் ஆகாததற்காக நம்மிடத்தில் ஆயாசப்படுவதைக் கவனிக்குமிடத்தும், நமக்குச் சற்றுவிசாரமுண்டாகிறது. 'மித்திரன்' பழம்புண்ணாளியாதலால், புதியதாகக் கைபழகுபவர்களுடைய கஷ்டநிஷ்டூரங்களை நன்றாய்த் தெரிந்தவர். ஆதலால், அவரைப்பரியாரியாக நாம் கொண்டிருப்பதில், இனியவர் ஒருகையாலடித்தாலும், மற்றொருகையால் ஆதரிப்பாரென்று நம்புகிறோம். மொத்தத்தில் பேசுமிடத்து, இதுவரையில் நம்மைக் கடிந்துகொண்டவர்களெல்லோரும் "பதங்கள்" விஷயமாய்க் குறைகூறுவதன்றி 'வாசக' விஷயமாய் நமக்குத்தெளிவிப்பதொன்றுங் காணவில்லை. தமிழிலும், மற்றதேசிய பாஷைகளிலும் நமக்குக் காணுங் குறைவோ வாசகத்தைப் பொறுத்ததேயன்றிப் பதங்களைப்பொறுத்ததல்ல. இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் வசனநடை படிப்பவருக்கு எவ்வெவ்விதங்களில் ருசியும் சுகமும் கிடைக்கின்றனவோ, அதில் நூற்றிலொருபங்குகூடத் தற்காலம் நடைபெறும் தேசியபத்திரிகை வகைகளில் உண்டாவதில்லையென்பது பிரத்தியக்ஷம். ஆதலால், அம்மாதிரி வசனநடை உண்டாகவேண்டி "விஹாரிணி" பிறந்திருப்பதினிமித்தம், அந்த உத்தேசம் நிறைவேறவேண்டி, அபிமானிகளெல்லோரும் ஏற்ற உதவி செய்வார்களென்று நம்புகிறோம். அதுவோ வெகு பெரிய காரியம். ஆதலால் காலக்கிரமத்திற்றானாகவேண்டும். ஆயிரக்கணக்காகப் புத்திமான்கள் உழைக்கவும் வேண்டும். இப்படியிருப்பது கொண்டு "விஷயதானஞ்" செய்பவர்களும், யுக்தி சொல்லுபவர்களும், அவரவர் மனோதர்மத்தையும் ருசிபேதத்தையும் அனுசரித்து எழுதிவந்து "விஹாரிணி" மேற்கொண்டிருக்கும் காரியத்தை முடிவுபெறச் செய்வாரென்று எதிர்பார்த்திருக்கிறோம். அதற்கு இதுவரை நடந்துவருவதுபோல் "பதங்கள்" விஷயமாய்க் கலகஞ் செய்வதுமட்டும் போதாது. நடைபெறுந்தமிழில், மணற் சோறாக்குவதைவிட்டுக் காரசாரமாய் எழுதுவதற்குப் பிரயத்தனப்படுவதே நன்னெறியென விவேகிகள் ஒப்பியிருப்பதை இஷ்டர்களறிதல் வேண்டும்.

## கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றிய வரலாற்றின் ஆராய்ச்சி

ஸ்ரீமான்-ஸி. கே. நாராயணசாமி முதலியார்

இது விஷயமாக ஓர் வியாச மெழுதிப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்த வேண்டுமெனப் பலகால் முயற்சித்தும் பயன் பெறுமல் இது சமயம் அவகாசந்தந்த திருவருட் செயலுக்கு வந்தித்து இவ்வியாசத்தைத் தொடங்குகிறேன்.

"கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றியது' என்னும் விஷயமானது சென்னைத் துரைத்தனக் கல்விச் சாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்த அஷ்டாவதானம் ஸ்ரீமான்-வீராசாமி செட்டியாரென்பவரால் 1889௵ பதிப்பித்த "விநோதரஸமஞ்சரி" என்னும் புத்தகத்திலும், சென்னை யூனிவர்ஸிடி டெக்ஸ்டு கமிட்டி மெம்பராகிய ஸ்ரீமான்-வை. மு. சடகோபராமானுஜ ஐயங்காரவர்களால் வெளியிட்டு வந்த "மெட்ரிகுலேஷன் தமிழ் நோட்ஸு"களிலும்," திருநெல்வேலி தண்டபாணி சுவாமிகளால் பாடப்பட்டு அச்சிட்டுள்ள "புலவர் புராணத்திலும்," யாழ்ப்பாணம் உதயதாரகைப் பத்திராதிபரால் தொகுக்கப்பட்டுள்ள "பாவலர் சரித்திர தீபகத்திலும்," காணப்படுகிறது. மேற்கூறிய நான்கு புத்தகங்களிலும் விவரிக்கப்படும் இராமாயணம் பாடியரங்கேற்றிய வரலாறு இரண்டொன்றில் மட்டும் சிறிது வேறுபட்டிருந்தாலும், பெரும்பாலும் தம்முள் ஒத்துவருவதைக் காணலாம். இங்ஙனம் காணப்படும் விஷயங்கள் இராமாயண காவியத்தின் கருத்துக்கு முற்றிலும் வேறுபட்டு, முன்னுக்குப் பின் முரணாய் அறிஞர்கள் அவாவுடன் ஏற்று மகிழ்தற் கிடமின்றி அருவெறுக்கத்தக்க விதமாய் அமைந்து கிடக்கின்றதென்பது அதனைச் சற்று ஊன்றி விசாரித்தறிவார்க்குத் தெற்றென விளங்காமற் போகாது. இத்தகைய ஆபாசம் நிறைந்த பொய்க்கதைகளை உண்மையென நம்பி அறிஞர்கள், உயர்தரப் பாடசாலைகளில் மாணாக்கர்கட்கு எங்ஙனம் பாடமாக வைக்கின்றனரோ வென்பதை நாமறியக்கூடவில்லை. ஒருக்கால் அவற்றின் உண்மை நிலை இதுவெனக் கண்டறிய அவகாசம் கிடையாதொழிந்த காரணத்தால் அதனைக் கொள்ள நேர்ந்ததோ? அல்லது இவ்வரலாற்றை ஆதியில் வெளியிட முன் தோன்றிய பண்டிதர்கள் செவ்வனே ஆராய்ந்து வெளியிட்டிருக்கக்கூடும் என்ற நம்பிக்கையாலோ? மற்றெக் காரணமோ நாமறியோம். எங்ஙனமாயினுமாகுக. நாம் கம்பரிராமாயணம் பாடிய வரலாற்றின் உண்மையிதுவெனக்கண்டறியும் நோக்கங்கொண்டுள்ளதால் அவற்றின் விஷயத்தைமட்டும், ஈண்டாராய்தல் தொடங்குவாம்.

"விநோதரஸமஞ்சரி"யில், "கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றியது" என்னும் தலைப்பிற் காணப்படும் விஷயத்தை அதிலுள்ளபடி இங்கு விரித்துப் பின் அவற்றிற்காணும் குற்றங்களை ஒவ்வொன்றாய் விளக்கிக் காட்டுவோமாக.

கம்பர் இராமாயணம்பாடிய வரலாறு வருமாறு:—

திருவெண்ணை நல்லூர்ச் "சடையபிள்ளை" யென்பவர் கம்பரை நோக்கி வடமொழிக்கணுள்ள இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்க்குமாறு பலமுறை கூறியும், அதிலவருக்குழைப்பும் அக்கரையும் பிறவாது, அநேக நாளாய்க் காலஹரணம் பண்ணிக்கொண்டு வந்தாரென்றும், அதை அப்பிள்ளை "குலோத்துங்கசோழ"னுக்கறிவிக்க, அவரக்காரியத்தி லிருவரைவிடுக்கின் ஒருவருக்கொருவர் துரிதத்தில் முடிக்க வேண்டுமென்னு மெண்ணத்தால் விரைவிலது நிறைவேறு மென்னுங் கருத்தைக்கொண்டு "ஒட்டக்கூத்தரை"யுங், கம்பரையு மழைப்பித்து, இருவரையு மதனைத் தனித்தனி பாடவாக்யாபித்தன ரென்றும், இவருள் ஒட்டக்கூத்தர், அவ்விராமாயணத்திற்குரிய ஏழு



காண்டங்களுள் ஐந்து காண்டங்களைப் பாடி முடித்து, ஆறுவது காண்டத்தினைத் தொடங்கிக் "கடல்காண் படலம்" பாடும் வரையிற் கம்பர் காப்புச்செய்யுளும் பாடாதிருந்தனரென்றும், இப்படி யவரிருப்பதை யுணர்ந்த சடையபிள்ளை அரசனுக்குணர்த்த, அரசனவரை யழைப்பித்துக் கேட்டபோது கடல்காண் படலத்துக் கப்பால் "சேதுபந்தனப் படலம்" வரையிற் பாடி யிருக்கின்றேனெனப் பொய் பேசி, அப்படலத்தை மாத்திரம் எழுபது செய்யுட்களாற் பாடி முடித்துக்கொண்டு வந்து பிரசங்கித்தனரென்றும், அவற்றுளோர் செய்யுளில் "துமி" என்னும் பதத்தைப்பற்றிக் கூத்தராக்ஷேபிக்க, அதற்குக் கம்பர் கலைமகளைத் தியானிக்க, அவரவர்பொருட்டு இடையர் சேரியில் இடைச்சியாக வந்து மோர்கடைய, அங்கு அரசனையுங் கூத்தரையும் அவரழைத்துப்போய்த் "துமி" என்னும் பதத்தைப்பற்றியுண்டான ஆக்ஷேபணையை யொழித்தனரென்றும், அதன் பின்னேறக்குறைய ஆறுமாதத்தில் கூத்தர் மற்றிரண்டு காண்டங்களையும் பாடி முடித்துங் கலைவாணியருள் பெற்ற கம்பர் கவிக்குமுன் நமது கவி மகிமைப்படவில்லை யென்று வெறுப்புண்டாகித் தாம் பாடிய . அக்காவியத்தைச் சஞ்சிகை சஞ்சிகையாக வுருவிக் கிழித்துக்கொண்டிருந்தனரென்றும், அக்காலங்ஙனம் தற்செயலாகச் செல்லலுற்ற கம்பரதைக்கண்டு "ஏன்வருந்திப் பாடியதைக் கிழித்தெறிகின்றீர்?" எனக் கேட்டதற்கு, "வரகவியே கவி, மற்றைக்கவி என்னகவி?" என்று கூறிக் குறையுங் கிழித்தற்கெத்தனிக்க, அப்போதவர் கையிலிருந்த ஏட்டையவர் வாங்கிப்பார்த்து "உத்தரகாண்ட"மாயிருக்கக்கண்டு, நாம்ஆறுகாண்ட மாத்திரம் பாடி, ஏழாவதற்கிதனை வைத்துக்கொண்டால் வருத்தமின்றிப் போகுமென்னும் கருத்தையுன்னி அதனை மாத்திரந்தருமாறு கேட்டனரென்றும், அவரப்படியே செய்யுமென்று தர, ஓர் நல்லநாட்கொண்டு இராமாயணம் பாடத் தொடங்கிப் பதினைந்து பகலில் நித்தமெழுநூறாகப் பதிணாயிரம் பாடலில்முடித்து, அதனை அரங்கேற்றுதற்குத், தகுந்தவிடம் "திருவரங்க"மேதக்கதெனக்கொண்டு அங்குசெல்லத் திருவரங்கத்து அந்தணர் சிலர், தில்லை மூவாயிரவரிடத்துச் சாற்றுக்கவி வாங்கிவந்தால், இங்கு அரங்கேற்றலாகு மென்றுகூற, கம்பர் திருவரங்கத்து அந்தணருத்திரவின்படியே தான்பாடிய அக்காவியத்திற்குக் கையொப்பம் வாங்குமாறு அம்மூவாயிரவரு மொருங்கு சேருந்தருணம் நோக்கியிருந்தன ரெனவும், அது விரைவிற் கிட்டாததால் அவர் வருந்தித் துயிலுறுங்கால், அவரது சொப்பனத்தில் தில்லை கோவிந்தராஜ ரெழுந்தருளி, அவர்க ளொருங்குசேருமற்றந்தெரிவித்தன ரெனவும், அஃதுணர்ந்தவர் செல்லுங்கால், மூவாயிரவரும் விடநாகந் தீண்டியிறந்த தம்மகவுக்காக ஒன்று சேர்ந்திருந்தார்க ளெனவும், அதுகண்ட கம்பர்தனது வரவின்காரணத்தை யவர்கட்குத் தெரிவித்துப் பின்னர் தானவர் வேண்டுகோளால் இறந்துள்ள மகவை,

"ஆளியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட." (1)

"மங்கை யொருபங்கன் மணிமார்பி லாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே--திங்களையுஞ்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
யேறிய வாறே யிறங்கு"*

"பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—யீரமதிச்
செஞ்சடையான் பூணுந்திருவா பரணமே
நஞ்சுடையாய் தூர நட."

என இம்மூன்று வெண்பாக்கள்பாடி யுயிர்ப்பித்தாரெனவும், அதுகண்ட "தில்லை மூவாயிர

* 'மங்கையொருபாகர் மார்பிலணியாரமே யெனவும்' யேறியபண்பே யிறங்கு. எனவும், பாடம் தமிழ் நாவலர் சரிதையில் முதல், இரண்டு பாடல்களே காணப்படுகிறது.

வர்" கம்பரை யுள்ளபடி தம்மினுஞ் சிறந்த மகாத்துமாவென மதித்து, பயந்து, உடனேயவரை உபசரித்துத் தலையில் நெருப்பு விழப்பட்டவர்களைப்போலப் பரபரப்பாக வந்து அவரிடத்திருந்த காவியத்தை வாங்கிப் பார்வையிட்டு இவருக்கொப்பான வித்வானும்,இவ்விராமாயணத்திற்கொப்பான காவியமு முண்டோவென ஸ்ரீ சிவபெருமானையுமவர் செய்தருளிய சிவாகமங்களையுமேயன்றி ஏனைய தேவர்களையும் ஆகமங்களையுஞ் சொப்பனத்திலுஞ் சிறிது மதியாதவர்களான தாமனைவரு மிகவியந்து மதித்துத் தங்களுக்குள்ளே பிரமாணந்தமடைந்தவர்களாயினும், "குணத்தை மாற்றக் குருவில்லை" என்பதற் கேற்பத் தங்கள் குணம் போகாமல் ஏதேதோ சிலவவரைக் கேட்க, அதற்கெல்லாமவர் தக்கவிடையளித்தபின் சரியென்றொப்புக்கொண்டு கையொப்பஞ் செய்தனரெனவும், பின் கம்பர் இராமாயணம் அரங்கேற்றத் தொடங்கிமுடித்து அசனுதியோரால் தக்கபடி புகழ்ந்து சம்மானிக்கப்பட்டனரென்பதுமே.

இனி, இவற்றினின்றும் சில உண்மை விஷயங்களை ஆராய்வாம்.

மகாகவியாகிய கம்பரைத் திருவெண்ணைநல்லூர்ச் சடைய பிள்ளையாவது, சோழராசனாவது, இராமாயண காவியத்தைப் பாடும்படி கூறியதற்கு மேற்கோளாக விநோதரஸ மஞ்சரி முதலிய நூற்களில் ஓராதாரமேனுங் காணப்படவில்லை. அருட்கவியாகிய கம்பர் தமக்குள் முதிர்ந்த ஸ்ரீ ராமபக்தியின் காரண விசேஷத்தால் ஒருவருஞ் சொல்லாமல் தாமே பாடத்தொடங்கியதாக இதிகாசமாகிய இராமாயண காவியத்தில் சில மேற்கோள்களிருக்கின்றன. இங்ஙனமிருக்கச் சோழனும், சடையபிள்ளையும் இராமாயணம் பாடச்சொன்னதாகக் கதை கூறுவது யாங்ஙனம்? அன்றியும், இராமாயணச் செய்யுட்களொவ்வொன்றும் சுவை நிரம்பியதாய், அர்த்த புஷ்டியுடையதாய், கற்பனை நிறைந்ததாய் ஓசையின்பம் பயப்பதாய், விழுமியபொருள் தருவதாய்ப் படிப்பதற்கினிமை யுண்டாக்குவதாய் விளங்குகின்றனவே. அவைகளைப் பாடலாக நாளொன்றுக்கு எழுநூறு விழுக்காடு பாடி முடித்தனரென அத்தனை லேசாகக் கூறுவது சுத்த அசம்பாவிதமேயாம். இது "பிள்ளைபெற்றலின் அருமையறியாத மலடியின் கூற்றையொக்கும்." இராமாயண காவியத்தில் ஊடாடிப் பழகிய நல்லறிஞர்கள் ஒருக்காலும் இவ்வழியில் பிரவேசிக்க முயலார்களென்பது திண்ணம். இராமாயணத்தின் பாயிரத்தாலேயே கம்பர், ஒருவர் வேண்டப்படாமலே தாமே பாடத்தொடங்கியதாக வெள்ளிடைமலைபோல் விளங்கிக் கிடக்க, அதனை ஓர்ந்தறியாது விளக்கைப் பிடித்துக் கிணற்றில் வீழ்வார்போல் வீழ்ந்து அபசாரப்பட்டனர். இதனையெல்லாங் கூர்ந்து யோசிக்குமளவில், வேணுமென்றே ஒருவர் கம்பரைத் தாழ்க்கத் தலைப்பட்டதாகக் கருதவேண்டியதாகின்றது. இனியேனும் அத்தகையர் இதுபோன்ற பார காவியங்களில் "கலப்பாலில் துளி விஷங்கலந்ததுபோல்" பொய்க் கதைகளையும், கற்பனைகளையும் புகுத்தாது நன்னெறிகளிலொழுகி நலம் பெறுவாராகவும். இதனைக் கண்ணுறும் அறிஞர்களும், இனி இத்தகைய ஆபாச வரலாறுகளில் கவனஞ்செலுத்தாமலும், தமது பிள்ளைகட்கும் அதனைப் போதிக்க முற்படாமலுமிருப்பார்களென்றே நம்புகிறேன்.

(இன்னும் வரும்.)

---



## ஸ்ரீ கபீர்தாஸ சுவாமிகள்

(138-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாமான்னியமாய் அப்போதப்போது பைராகிகளோடு சேர்ந்துகொண்டு ஆங்காங்கு போய்க் கொண்டிருப்பது இவர் வழக்கம். சுமார் முப்பது வயதிருக்கையில் ஒருமுறை கங்கைக்கடுத்த ஆசிரமமொன்றில் இவர் இவ்வாறு போய்ப்பார்க்கையில் அங்கே இருபது வயதுள்ள பெண்ணொருத்தியைக் கண்டு, அவள் வேண்டுகோளின்படி சென்று பாலைப் பிக்ஷையாக வாங்கிக்கொண்டார். பிறகு தன்னுடன் வந்த மற்றவர்களெல்லாம் அவரவர் பங்கைக் குடித்துவிடத் தான்மட்டும் சும்மா வைத்துக் கொண்டிருந்தார். அருகிலிருந்தவர் இதற்குக் காரணம் கேட்க, சுவாமிகள், "இதோ இன்னும் ஒரு சாது வந்துகொண்டிருக்கிறார். அவருக்காக வைத்துக்கொண்டிருக்கிறேன்." என்றார். அப்படியே சற்று நேரத்திற்கெல்லாம் அவர் வந்ததாகவும் அவருக்குக் கொடுத்து உபசரித்ததாகவும் கதை.

இந்த மகிமையைக் கண்டு அந்தப் பெண் இவரைச் சேவித்து, "ஓ சுவாமி என் தகப்பனார் இந்த ஆசிரமத்திலிருந்த வனகண்ட பைராகியொருவர். அவரை என் வரன்முறை யென்னவென்று கேட்டபோதெல்லாம், அவர், "எனக்குத் தெரியாது. கங்கையில் ஒருநாள் நான் ஸ்நானம் செய்யப்போகையில் ஒரு கூடையில் கம்பளி சுற்றி யொரு குழந்தை மிதந்து வந்தது. அதை யெடுத்துப் பார்க்கையில் குழந்தையுயிருடனிருந்ததால் கொண்டுவந்து வளர்த்தேன். அதுதான் நீ" என்று சொல்லிவந்தார். அவர் போகும்பொழுது, எனக்கென்ன கதியென்று கேட்டேன். "இங்கேயேயிருந்துகொண்டு, வரும் சாதுக்களுக்கு உபசாரஞ்செய்து கொண்டிரு. தக்க குரு வொருவர் வருவார். அவரை வழிபட்டு நற்கதியடையலாம்," என்றார். அன்றுமுதல் அப்படியே செய்து வருகிறேன். இன்றைக்குத் தங்களைக் கண்டதும் தகப்பனார் சொல்லிப்போன சாது தாங்களென்றே யெனக்குத்தோன்றுகிறது. ஆகையால் ஏழையை யடிமையாக்கிக்கொண்டு ரக்ஷித்தருளவேண்டும்," என்றாள். கபீரும் அப்படியே யென்று அவளை யழைத்து வந்து வீடு சேர்த்தார். நீமா இவர்களுக்குள்ளிருக்கும் நடவடிக்கையைச் சிறிது நாள் பார்த்துவிட்டு, "புருஷன் பெண்சாதியாயிருக்க இஷ்டமில்லாவிட்டால் இந்தக் கல்வியாணமென்னத்திற்கு?" என்று கடிந்துகொண்டதாக ஒரு வதந்தி. அவ்விருவரும் சாமான்னிய தம்பதிகளாகவே யிருந்து 'கமால்' 'கமாலி' யென்று பிள்ளையையும், பெண்ணையும் பெற்றதாக மற்றொரு புராணம். இவ்விரண்டு குழந்தைகளும், மரித்துப்போன குழந்தைகளென்றும், சுவாமிகள் தன் மகிமையாலவர்களுக்குயிர்கொடுத்து மனைவியிடமொப்புவித்து வளர்த்து வரும்படி சொன்னாரென்று மற்றுமொரு புராணம். கடைசியிற் சொல்லியது வாஸ்தவமாகில், கபீர், அவர் பத்தினி, அவர் பிள்ளைகள் அனைவரும் திக்கற்றவர்கள் என்றேற்படும். அது மிகவும் அதிசயந்தான்! சுவாமிகள், தன் மனைவியை முதலில் கண்டதும், அவள் உமது பெயரென்ன வென்றதற்கு, "கபீர்" என்றார். ஜாதியென்னவென்றதற்கு 'கபீர்' என்றார். தொழிலென்ன வென்றதற்கும், "கபீர்" என்றாரென்று ஒரு கதையுண்டு. அதற்கு வெகு விசித்திரமாய் அர்த்தம் இப்பொழுது விளங்குகிற தல்லவா? அதாவது, நாமெல்லோரும் 'தேவதத்தர்கள்' என்றால், ஈசுவரப்பிரசாதங்கள், என்பதாம்.

கமாலி யென்னும் பெண் பதினாறு வயதாகியிருக்கையில், வீட்டுக்கு வெளியில் கொஞ்ச தூரத்திலிருந்த கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தாள். வழியில் போகும் ஹிந்துப் பண்டித ரொருவர் தாகத்திற்குத் தண்ணீர் வேண்ட இவளும் கொடுத்தாள். குடித்

தானபின் பண்டிதர் அவளை வரன்முறை விசாரித்தார். அவள் துலுக்கச்சி யென்றும், சாவிச்சி யென்றும் அறிந்தவுடன், அவருக்கு வெகு கோபம்வந்து, "முந்தியே யேன் சொல்லவில்லை? அனியாயமாய் என் ஜாதியைக்கெடுத்துவிட்டாயே, இனிப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டுமே" யென்று அவளைக் கடிந்துகொண்டார். கபீருக்கு இது தெரிந்து உடனே வந்து, "ஓ பண்டிதரே, தண்ணீர் குடிக்குமுன், அசுத்த மின்னதென்று நிச்சயித்துக்கொள்ளும். தண்ணீரில் மீன் முதலிய பிராணிகளுடைய எலும்பு, தசை முதலான துர்வஸ்துக்களும், சருகுமுதலிய ஓஷதிக் குப்பைகளு மிருக்கின்றன. தவிர இறந்துபோன மனுஷ்ய கோடிகளுடைய எலும்பு முதலியன மண்ணோடுமண்ணாகி யிருக்கின்றன. இந்த மண்ணை யெடுத்துத்தான் கலங்கள் செய்வது. சாப்பிடும்பொழுது நீர் அங்கி முதலியவைகளை யெடுத்து வைத்துவிட்டு 'மடியாகவும்,' சுசியாகவு மிருப்பதற்காகத் தோவத்தியை யுடுக்கிறீர். அது, எம்போலிய சாலியர்நெய்து கொடுத்தது. சாணிக்குவியலில் உட்காரும் ஈ உமது அன்னத்தின்பேரிலும் வந்துட்காருகிறது. இதையெல்லாம் தடுக்க உம்மால் முடியுமா? கூடாதாகையால், முட்டாள் தனத்தை விட்டு, வேதங்களைப் புத்தி பூர்வகமாய்ப் படித்து, ஸ்ரீராமனைத் தஞ்சமென்றடைந்து நற்கதி பெறுவீராக," என்றாராம். இந்த வாக்கியத்தைக் கேட்டதும் பண்டிதர் வெட்கிக் கபீரை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அந்தப் பெண்ணையே கலியாணமுஞ் செய்துகொண்டு சுகமாயிருந்தார்.

கபீர் பேசுவதில் ஒளிமறை வொன்றுமில்லாமலும், பூசிமெழுகாமலும் பேசி, எதிரி மனதில் நன்றாயுறைக்கும்படி சொல்லிவந்ததால், அவர்மேல் ஹிந்து மகம்மதியரிருதிறத்தாரும் கக்ஷிகட்டலானார்கள். காலக்கிரமத்தில் இக் கக்ஷி வலுத்து வந்தது. என்றாலும் அவருக்குச் சிஷ்ய கோடிகளும் அதிகரித்து வந்ததால் இவ்விரோதத்தைக் கொண்டு அவருக்கு அபாயம் ஒன்றும் நேரிடவில்லை.

கடைசியாகச் சிக்கந்தர் லோதி யென்னும் அக்காலத்திய டில்லிப்பாதுஷா அவர்கள் தமது ராஜ்ஜியத்திலெங்கும் விஜயம் செய்து வருகையில் கபீர்சுவாமிகளிருந்த விடத்திற் கருகிலுள்ள ஜவன்பூர் என்னும் யவனபுரியில் முகாம் செய்தார். அவ்விடம் வந்ததும், சுவாமிகளுக்கு விரோதிகளான மகம்மதியருக்கு நாயகராயிருந்த ஷேக்தக்கி என்னும் பெரியவர் சக்கரவர்த்தியைப் பேட்டி செய்து, கபீர் மகம்மதியராயிருந்தும் அம்மதசித்தாந்தத்திற்கு விரோதமாய்த் தெய்வத்தன்மையைத் தானே வகித்துப் பேசுகிறார், என்று பிராதுசெய்து, அதற்காக அவரை மரண தண்டனை செய்யவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டார்.

ஸிகந்தர் லோதி மதவிஷயத்தில் பிடிவாதம் அதிகம் கொண்டவர். இதற்கு முந்தியொரு முறை ஒரு ஹிந்துப் பண்டிதர் தெய்வ விஷயம் குரானில் மட்டுமேயல்லாமல் வேறு வேதங்களிலு மிருக்கலாமென்று சொன்னதற்காக, அவரை அவர் கொன்றுவிடும்படி யுத்தரவளித்தது கபீருக்கும் தெரியும். இப்பிராது வந்ததும் பாதுஷா கபீருக்கு வாரண்டு அனுப்பிப்பிடித்துவரச் சொன்னார். அவர் வந்து நின்றுகொண்டு, பாதுஷாவை வணங்காமலும் ஒன்றும் பேசாமலுமிருக்க, அவ்விடம் இவருக்குப் பிரதிவாதியாகி நின்ற ஷேக்குக்கும் இவருக்கும் தர்க்கம் நடந்து அதில் ஷேக் தோல்வியடைந்தார். பிராம்மணர்களும் இவரைத் தருமம் தப்பிநடப்பவரென்றும், ஜாதிகெட்ட ஜனங்களுடன் சேர்ந்து எல்லோரையும் திட்டுபவரென்றும் சொன்னார்கள். கபீர் இவர்களுக்கெல்லாம் பழையபடி காரசாரமாகப் பதில் சொல்ல, அதைச்சக்கரவர்த்தி கேட்டுக் கோபித்து இவருக்கு மரண தண்டனை விதித்தார்.



உடனே ஒரு படகு தயாராகிவிட்டது. அதில் கபீர் சுவாமியைக் கைகால்களுக்கு விலங்கிட்டு இறக்கிக் கற்களை நிறைத்து நதியில் தள்ளிவிட்டார்கள். படகு முழுகிற்று. என்றாலும், ஒரு நிமிஷத்தில் சுவாமிகள் விலங்கை முறித்துக்கொண்டு பழையபடி வந்து நிற்க, மறுபடியும் சேவகர்கள் அவரைக்கட்டித் தீயிற்போட்டார்கள். அனல் குளிர்ந்திருந்தது. பிறகு மலைமேலிருந்து உருட்டிவிட்டார்கள். ஒரு காயமும் படாமல் அவர் பஞ்சுபோல வந்து கீழே நின்றார். இந்த மகிமைகளைக் காணவே சேவகர்கள் பயந்து பாதுஷாவுக்குச் சொல்ல, அவரும் வந்து சுவாமிகளை நமஸ்கரித்துத் தான் செய்த அபராதத்தை மன்னிக்கவேண்டுமென்றார். சுவாமிகளோ "ராம பக்தர்களுக்குத் தாங்கள் நடக்கும் வழியில் யார் முள்ளையிறைக்கிறார்களோ, அவர்களுக்கும் அதற்குப் பிரதியாகப் பூவைப் பரப்புவதும் முதல் தருமம்," என்றாராம். பிறகு எல்லோரும் அவரவர் காரியங்களைப் பார்த்துக்கொண்டு அவரவரிடம் சென்றார்கள்.

இந்தக் கதையைப் படிப்பவருக்கு இரணியாக்ஷன் பிரகலாதனுக்குச் செய்த தண்டனைகளும், அதனுடைய முடிவும் நினைவிற்கு வரும். ஆதலாலிதுவும் பழங் கதைதம்யதான். மொத்தத்தில் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது, கபீர் சுவாமிகளுக்கு ஜனங்களில் விரோதிகளனேகரானார்களென்பதும், அவர்களுடைய சதியினால் சுவாமிகளைப் பாதுஷா விசாரணை செய்யவேண்டி வந்தாலும், அவருடைய குணத்தையும், பேச்சையுங் கேட்டு, அவர் மதத்துரோகியுமல்ல, ராஜத்துரோகியுமல்லவென்று கண்டு அவருக்குத் தீங்கொன்றும் விளைவிக்காமல் விட்டு விட்டாரென்பதுமே.

கடைசிவரையிற் கபீர்சுவாமிகள் உபதேசித்துவந்தது, இந்து மகம்மதியர் இரு திறத்தாரையும், தத்தமதாசாரங்களிற் காணும் அனுசாரங்களையும், தோஷங்களையும் பரிகரித்துவிட்டு, ராமனைத் தஞ்சமாக அடையவேண்டுமென்பதே. ஸ்ரீ காசியிலும், மாணிக்க புரத்திலும், தக்காணத்தில் அனேக இடங்களிலும், இதே யுபதேசங்களைச் செய்துவந்தார். ஆணித்தரமாகவே பேசியும் வந்தார். இந்துக்களைப் பார்த்து, 'ஓ முட்டாள்களே, நட்ட கல்லைச் சுற்றி வந்து, மொணமொணவென்கிறீர்களே, கோயிலிலா பகவானிருக்கிறார்? உங்கள் இருதயத்தில் இல்லையா?" என்பார். மகம்மதியரைப் பார்த்து, "ஓ பக்தர்களே, உங்கள் பக்தியெல்லாம் புதைப்பட்டவர் கோரியைப் பளபளவென்று வைத்துக்கொண்டிருப்பதிலேயே முடிந்து விடுகிறதே. ஜனனமரண மற்ற சருவேசுவரனை மறந்து விட்டீர்களே," என்பார்.

இவ்வாறு எல்லோருக்கும் நன்மையையே விளைவித்துவந்த சுவாமிகள் தீர்க்க ஜீவியாக வாழ்ந்து, கடைசியில் கோரக்புர ஜில்லாவில் மாகர் என்னும் ஊரில் இறந்ததாக எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இது ஆயிரத்து ஐந்நூற்றுப்பதினெட்டாம் வருஷத்தில், என்றால், மொகலாயர் இந்தியாவுக்கு வருவதற்கு எட்டு வருஷத்திற்கு முன், நடந்தது. கைகால்களில் வலிகுறைந்து பழையபடி சுவாமிகளுக்கு வாத்தியமெடுத்து வாசித்துக்கொண்டு நாமசங்கீர்த்தனம் செய்ய முடியாமற்போன போதிலும், பக்திமட்டும் கடைசிவரை குறையவேயில்லை. இவ்வுலகத்தில் தனக்கு ஆப்தர்களாயிருந்த நல்லோர் ஒவ்வொருவராகப் போய்விட, அவ்வளவிற்குப் பக்திமட்டும் குறைவதற்கு மாறாக அதிகரித்தது ஆதலால் எங்கே பார்த்தாலும் ஸ்ரீராமனைக அவருக்குக்கண்டு களித்தாரென்பது இப்பாடல்களால் வெளியாகிறது:—"ஓ எனதரசே, நான் உமது பைராகி. எனக்கு மரணம் சமீபிக்கிறதே யென்று விசனம் சிறிதுமில்லை. உமது சமீபம் வந்து விடுவது நிச்சயமாதலால், நான் அவ்விஷயத்தில் வெகுதூரம் ஆனந்திக்

கிறேன். மனதும், பிராணவாயுவும், எனக்குக் கமண்டலமாகி விட்டன. பிடில் எப்போதும் சுருதி கலையாமலிருக்கிறது. தந்தியினி அறுபடாது. பிடில் தானே நாதஞ்செய்கிறது. ஓ, கலியாணப் பெண்ணே, நல்ல பாட்டாகப் பாடு என்பர்த்தாவாகிய ராமராஜாஎன் வீட்டிற்கு இதோ வந்திருக்கிறார்" என்று அவர் பாடினார். ஹிந்திபாஷையில் இதைப்பாடக் கேட்பவருக்கு இது எவ்வளவு இனிமையைக் கொடுக்கும்!

சுவாமிகளுடன் எவ்வளவுகாலம் பழகியும், அவர் மனோரதத்தை யவர் சிஷ்யர்கள் முற்று மறியவேயில்லை. ஏனெனில், மரணகாலத்தில் சிலர், அவர் ஸ்ரீ காசியிலேயே போய் மரிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்வதால்தான் அவர் தேக வியோகமானவுடன் ஸ்ரீராமனுடைய சந்நிதி சேருவாரென்றும், அவ்விடத்தைவிட்டு, வியாஸகாசி முதலிய இடங்களில் ஜீவனை விடுபவர் கழுதையாகப் பிறக்கிறாரென்றும் ஒரு முட்டாள் ஐதீகமிருந்ததை நினைத்துக்கொண்டும், அவரை ஸ்ரீகாசிக்குக் கொண்டுபோகப் பிரயத்தனப்பட்டார்கள். சுவாமிகள் இதைக்கேட்டு அவர்களைக் கடிந்துகொண்டு "ஸ்ரீராமனுக்கென்ன, கைகுறுகிற்று? காசியிலிருந்தால்மட்டும் அவருக்குக் கையெட்டும், விலகினால் எட்டாதா? படுமுட்டாள்களாயிருக்கிறீர்களே. நிச்சயமாய் நம்புங்கள். எவ்விடத்தி லிறந்தாலும் ஸ்ரீராமனுக்குத் தமது பக்தரை வரவழைத்துக்கொள்ளுந் திராணியுண்டு," என்றாராம்.

சுவாமிகளுக்குத் தேகவியோகமானவுடன், மகம்மதியப்பதிவுபோல அவர் சரீரத்தைப் பெட்டியிலிட்டுப் பனுத்துப்போர்வை, புஷ்பம் முதலியவை சேகரித்துத் தூயினார்கள். அதுவரை தகரார் ஒன்றுமில்லை. அப்படியானபின், மகம்மதிய சிஷ்யர்கள் தங்கள் சம்பிரதாயப்படிப் புதைத்துத்தான் விடுவோமென்றும், இந்துக்கள் எரித்துத்தான் தீருவோமென்றும். கலகஞ் செய்தார்கள். கலகம் முற்றும்போல் கண்டதும், சுவாமிகள் அவர்களுக்குத் தோன்றி, பனுத்தைத் திறந்து பார்க்கும்படி யேவ, அவர்கள் அப்படியே பார்த்ததில், பெட்டியில் சவத்திற்குப் பதிலாகப் புஷ்பமட்டு மிருந்ததாகவும், அதை இருகூறாக்கி, இருதிறத்தாரு மெடுத்துப்போய், அவரவரிஷ்டப்படி சம்ஸ்காரம் செய்தார்களென்றும் ஓர் கதை சாதாரணமாக வழங்குவது.

இதன் அந்தரங்கம் நமக்கு இவ்வளவு காலத்திற்கப்புறம் விளங்குவது சிரமம். ஆனால் இரண்டு விஷயம் பிரத்தியக்ஷம். மாகாரில் நாளதுவரை யிவருடைய கோரியிருக்கிறது. அது மகம்மதியர் சுவாதீனம். ஆனால் இந்துக்களும் அங்குசென்று அவ்விடத்திய சம்பிரதாயப்படி வழிபடுவது சாதாரணம். தமிழ் நாட்டிலும் நாகூர் மீராவுக்கு இவ்விதமாக இருதிறத்தாரும் உபசாரம் செய்வதுபோல வென்றறிக.

இரண்டாவது, இந்தக் கலகம் வாஸ்தவமாக நடந்ததானால், கபீர் சுவாமிகளுடைய சிஷ்யர்களுக்குக் குரு உபதேசம் பூராவாகப் பலிக்கவில்லையென்பது. தனது ஜீவதசை முழுவதும், "இல்லாத விஷயங்களில் கலகம் செய்ய வேண்டாம். அவரவரிஷ்டம்போலச் செய்யுங்கள். எல்லோரும் குருடராயிருப்பதில், ஒருவர் பார்ப்பதாகச் சொல்லுவதை மற்றவர் இகழ்வது பிசகு. வாஸ்தவத்தில் ஸ்ரீராமன் ஜகத்துக்கெல்லாம் கர்த்தர். அவரே நமக்குச் சரணம் புகத்தக்கவர். அவரை நம்பி, அவர் நாமசங்கீர்த்தனம் செய்து, எல்லோரும் விரோதத்தைவிட்டுப் பரஸ்பரம் அனுகூலமாயிருந்து, இருவகையிலும் நன்மையடையுங்கள்," என்று சொல்லிவந்த குருவின் விஷயத்திலேயே யிப்படிப் பைத்தியக்காரவேஷம் போட்டார்களென்றால், மனிதருடைய விவேகத்தை நாம் என்னென்று வருணிப்பது? ஏதோ அந்த மட்டில் அடித்துக் கொள்ளாமல் நின்றதற்காக நாம் சந்தோஷப் படவேண்டும்.



சுவாமிகளுடைய சந்ததியில் பெண்ணைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். பிள்ளையாகிய 'கமால்' என்பவரைப் பற்றிப் பேசுவதற்கு மனம் கூசுகிறது. கபீர் சுவாமிகள் போன்ற புண்ணியாத்மாவுக்கு ஒரு மூடன் குமாரனாக வந்தது ஜன்மாந்தர பாபமென்னல்தான் தகும். ஏனெனில் இவன், தன் தகப்பனார் இந்து மகம்மதிய இருதிறத்தாருடையவும் ஆசாரங்களைக் கைக்கொண்டதில், அவருடன் போராடிச் சாத்தியப்படாமல் போகவே, இவருக்கு ஜன்மவைரியாகிய ஷேக்தக்கியிடம் சென்று, தன் தகப்பனார் மகம்மதிய சம்பிரதாயத்தைக் கைவிட்டுத் துன்மார்க்கத்தைக் கைப்பற்றியபடியால், அவரைப் புறம்பாக்க வேண்டுமென்றும், அவருக்கும் தனக்கும் குரானில் சொல்லுகிறபடி, "யார் பெற்றோருடைய உத்தரவுமீறி நடக்காமலிருக்கிறார்களோ, அவர்கள்பேரில் பகவானுடைய ரஹமத்து இருக்கிறது," என்கிற பாந்தவ்யம் நீங்கிவிட வேண்டுமென்றும், கேட்டதில், அவரும் அப்படியே செய்யென்று விட்டாராம். அதைக்கேட்டதும் சுவாமிகள் விசாரப்பட்டு, "கமால் பிறந்ததும், கபீர் வமிசம் அற்றுப்போய்விட்டது" என்று துக்கித்தாராம். ஆதலால் சுவாமிகள் வமிசமென்று சொல்லிக்கொள்ள இக்காலத்தில் ஒருவருமில்லை.

(இன்னும் வரும்.)

## ஹாலி தூமகேது

ஸ்ரீமான்-டி. எஸ். வெங்கிடரமணையர், பி.ஏ., எல்.டி.

(155-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஹாலி தூமகேது சூரியனைச் சுற்றி வருவதிற் சில விசேஷங்களுண்டு. அவை யென்னவெனில்; முதலாவது, ஏறக்குறைய சக்கரம் போன்ற வட்டகதியில் சூரியனைச் சுற்றிக் கிரகங்கள் வருவதுபோல இது எப்போதும் ஒரே வேகத்துடன் போகிறதில்லை. பொதுவாய்த் தூமகேதுக்களெல்லாம் அவைகள் செல்லும் கதிகளில், சூரியனுக்குச் சமீபித்து வரவே, சூரியனுடைய ஆகர்ஷணத்தினால் வேகமதிகரித்துச் சூரியன் முகமாயோடியும் கடைசியாய்ச் சூரியனைச் சுற்றித் திரும்புங்கால் விநாடி ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அதிக வேகத்துடன் ஓடியும் போகின்றன. பிறகு சூரியனைவிட்டுப் பிரிந்துபோகையில், சூரிய ஆகர்ஷணத்தை யெதிர்த்துச் செல்லு நிமித்தம், நாளுக்குநாள் விசை குறைந்து வருகின்றன. கடைசியில், நாம் பூமியிலிருந்து ஆகாசத்தில் உயர எறியுமொரு கல்லானது பூமிக்கே திரும்பி வருவதுபோல, சூரியன் முகமாய் விழ ஆரம்பித்து, அவ்வாறு விழும்வேகமதிகரித்துக்கொண்டே போய்ச் சூரியனைச் சமீபித்து மறுபடியு மதைச்சுற்றி யோடி விடுகின்றன. ஆகையால், ஹாலி தூமகேதுவும் இவ்வாறே எழுபத்தாறு வருஷங்களுக்கொரு முறை சூரியனைச்சுற்றி யோடிக்கொண்டிருக்கின்றது.

இரண்டாவது, சூரியமண்டலத்தைச் சேர்ந்த கிரகங்களொவ்வொன்றும், என்கி, பீலா முதலிய சில தூமகேதுக்களும், சூரியனுக்கு மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்ப் பிரதக்ஷிணமாக வந்துகொண்டிருக்க, ஹாலி தூமகேது மாத்திரம் சூரியனைச்சுற்றிக்கிழக்கிலிருந்துமேற்கு

முகமாய் அப்பிரதக்ஷிணமாய்ச் செல்லுகிறது. இது ஓர் ஆச்சரியந்தான்.

மூன்றாவது, இத்தூமகேது சூரியனுக்குச் சமீபமாய் அதிவேகத்துடன் செல்லுங்கால், சூரியனுக்குச் சற்றேறக்குறைய இரண்டு, மூன்று கோடி மைல் தூரத்திற்குள்ளாக வருவதாகவும், பிறகு சூரியனை விட்டுப் பிரிந்து முப்பத்தெட்டு வருஷங்கள் சென்றபின், தன் சலனத்தை முற்றும் மிழந்து மறுபடி தன் பழைய கதியை யனுசரிக்குங்கால், அக்கதியாரம்பமாகு மிடமானது சூரியனிடத்திலிருந்து சுமார் 350 கோடி மைல் தூரத்திலென்றுந் தெரியவருகிறது.

சென்ற 1835-ம் ௵த்தில் இந்தத் தூமகேது விஜயஞ்செய்தபிறகு, நாளதுவரை செய்யலான யாத்திரையைச் சற்றுக் கவனிப்போம். 1835-ம் ௵த்தில் சூரியனைச் சுற்றிவந்து அதை விட்டுப் பிரிந்துபோக ஆரம்பித்தபின் ஒரே வருஷகாலத்தில் பிரகஸ்பதியின் கதியைத் தாண்டி, 1839-ம் ௵த்தில் சனியின் கதியைக் கடந்து, அவ்வாறே 1844-ம் ௵த்தில் உரேனஸின் கதியையும், 1856-ம் ௵த்திற்குள்ளாக நெப்தியூனின் கதியையுங் கடந்து, பிறகு பதினாறு வருஷகாலம் சூரியனைவிட்டுப் பிரிந்துகொண்டே போய்விட்டது. (இக்கதிகளை யெல்லாம் சென்ற மாசத்திய விஹாரிணியிலுள்ள படத்தைப்பார்த்து அறிக). மறுபடி 1873-ம் ௵த்தில் தன் வேகத்தை முற்றிலுமிழந்து ஆகாயத்திற்றங்கி, முன்போலவே சூரியன் முகமாய் விழ ஆரம்பித்திருக்க வேண்டும். 1889-ம் ௵த்தில் மறுபடியும் நெப்தியூனின் கதியையும், 1902-ம் ௵த்தில் சனியின் கதியையும், சென்ற எப்பிரல்மீ"தில் பிரகஸ்பதியின் கதியையுங் கடந்து, இப்பொழுது வாயுவேகமாய்ச் சூரியனை யடுத்து வந்துகொண்டிருப்பதினால், நமக்கு இந்தத் தூமகேதுவின் தரிசனகாலஞ் சமீபித்து விட்டதென்றறிக.

தூமகேதுக்களடிக்கடி ரூபம் மாறிக்கொண்டே வருகின்றனவென்று மேலே சொன்னோம். அதின் தாற்பரியத்தை விளக்குவதற்காக ஹாலி தூமகேதுவையே திருஷ்டாந்தமாக எடுத்துப் பேசுவோம். இது சூரியனுக்குச் சமீபித்து வருகையில், தூரதிருஷ்டிக் கண்ணாடிகொண்டு பார்க்கக்கூடிய தூரத்திலிருக்கும் பொழுது, இதற்குவால் ஒன்றுமில்லாமல் ஒருவாறு உருண்டை வடிவமாகத்தான் தோன்றும். ஹம்போல்ட் என்னும் ஒரு ஜர்மனிக் கணியார், 1835 ௵த்தில் இந்தத் தூமகேதுவைப் பாரீஸ் நகரத்து "நக்ஷத்திரப் பங்களா"வில் பார்த்தபொழுது, அது நாளுக்குநாள் ரூபம் மாறி, அதிலிருந்து சூரியன் முகமாயும், அதற்கெதிர் முகமாயும், ஒருவிதமான காந்தி வீச ஆரம்பித்ததைத் தான் கண்டதாக எழுதுகிறார். மற்றொருவர் இந்தத் தூமகேதுவிலிருந்து சூரியன் முகமாய் விசிறியைப்போல ஒரு காந்தி பாவியதாகவும், பிறகு அது காற்றினாலடிபட்ட புகையைப்போலப் பாவி முன்னும் பின்னுமாக அசைந்து, தூமகேதுவுக்கு வலப்புறமும் இடப்புறமும் வெகுதூரம் வியாபித்ததாகவும் சொல்லுகிறார். யோசித்துப் பார்க்குங்கால், இவ்விருவரும் அனேகமாய் ஒரே காக்ஷியைத் தானிவ்வாறு விவரித்திருக்கிறார்களென்பதிற் சந்தேகமில்லை. இது மாத்திரமேயல்ல. தூமகேது சூரியனுக்குச்சமீபத்தில் வரவே, வேகம் மகத்தாயதிகரித்து இதற்குவாலொன்று புதிதாய்த்தோன்ற ஆரம்பிக்கிறது. பிறகு ஒருமாதத்திற்குள் இவ்வால் நீண்டு அற்புதமாய்க் காணுவதையும், ஆகாயத்தில் ஜகஜ்ஜோதியான ஒரு பெரிய துடைப்பத்தைத் தொங்கவிட்டாற்போல இருப்பதையுங் காணலாம்.

தூமகேதுக்கள் பஞ்சபூதங்களில் இன்னின்னவை சேர்ந்துண்டாயிருக்கலாமென்று முன்னமே பொதுவாய்க் குறிப்பிட்டோம். மேற்சொல்லியவாறு சூரியனைச் சமீபித்து வருகையில், இந்த ஹாலி தூமகேதுவுக்குப் புதிதாய்



அவ்வளவு அற்புதமான வாலொன்றுண்டாவதற்குக் காரணமென்ன? இதன் தலையில் நக்ஷத்திரம்போல்விளங்கும் தீபமொன்று காண்பதென்ன? இந்தத் தீபத்தைச் சுற்றிலும் பிரகாசங் கொஞ்சங்குறைந்து, அனேகமாய்த் தலைமுதல் வாலின் நுனிவரையிலும் ஒரே மாதிரியாய், சற்று மங்கலாயிருப்பினும், பார்ப்போர் மனதை முற்றிலுங் கவரக்கூடியதுமான ஒரு ஒளியுடன் பிரகாசிப்ப தென்னிமித்தம்? இக்கேள்விகளுக்குக் கூடியவரையிலும் சுருக்கமாக விடைகூறுவோம்.

மேலே நாம் சொல்லியபடித் தூமகேதுக்கள் நாம் வசிக்கும் பூமியையும் மற்றகிரகங்களையும் போலக் கெட்டியாய்த் திரண்டு உருண்டு பிண்டமாகவில்லையாதலால், அவைகள் சூரியன் முகமாய் விழுந்துகொண்டிருக்கையில், அவைகளின் உடம்பில் கனமான பாகங்கள் வேகமதிகரிப்பதினால் ஒன்றோடொன்று மோதி விசைகுறைந்து போகவே, வேகமாய்ப்போகும் மற்ற பாகங்களுக்குப் பின்தங்கி விடுகின்றன. இவ்வாறு பின்தங்கிய பாகங்களே வால்போற் காண்கின்றனவென்று சொல்லலாம். வஸ்துக்கள் ஒன்றோடொன்று மோதி அடிபடுவதினால், 'வைத்தியுதம்' என்னும் மின்சாரம் உற்பத்தியாகி, வஸ்துக்களைப் பின்னால் சிதறிப் போகச் செய்வதினாலும், வால் மேலும்மேலும் நீண்டு வருவதற்குக் காரணமாகின்றது.

இதுவே நியாயம்பற்றித் தூமகேதுவின் கனமான பாகங்கள் ஒன்றோடொன்று அடிபட்டு உஷ்ணமு மொளியு முண்டாகுவதால், வேகமிகுதியாகியுள்ள அதன் தலையில் காணும் சுவாலைக்குக் காரணமாகிறது. இவ்விளக்கின் தாபத்தினால், கெட்டிப் பொருள்களெல்லாம் வாயுவாக மாறி அடர்ந்து அக்கினிமயமா யிருக்கிறதாகவுந் தெரியவருகிறது.

தூமகேது அனேக லக்ஷ மைல் வியாபித்துள்ளதாயினும், அது இறுதுமாகில் காத்திரம் வெகு குறைவானதேயாம். ஹாலி தூமகேது, சந்திரனைவிடச் சிறியதும், ஆகவே நாம் வசிக்கும் பூமியைவிட எவ்வளவோ மடங்கு சிறியதுமாக இருப்பதாய்ச் சொல்லிவிடலாம். அப்படியாயின் இவ்வளவு சிறிய வஸ்துவானது வெகு விசேஷமாய்ப் பிரகாசிப்பதற்குக் காரணமும் விநோதமாகத் தானிருக்கவேண்டும்.

தூமகேது சந்திரனிலுஞ் சிறிய உருப்பெற்றதாயினும், அனேக லக்ஷ மைல் நீளமான வால் வீச்சுடன் ஆகாயத்தில்பறந்து செல்லுவதினால், அதன் சத்துவமானது ஒரே கெட்டிப் பொருளாயிருக்க முடியாதென்றும், தனித்தனியாகச் சிதறி ஒன்றுக்கொன்று பற்பல தூரங்களில் ஓடிச்செல்லும் கற்களாகத் தானிருக்கவேண்டுமென்றும் ஊகிக்கலாம். "ஸ்பெக்டராஸ்கோப்" என்னும் ஒரு கண்ணாடிக் கருவியினால் தூமகேதுவிலிருந்து வரும் ஒளியைப் பரீக்ஷித்துப் பார்த்ததில், அதன் தலையில் ஒளிப்பது சுவயம்ஜோதியென்றும், வாலினுடைய பிரகாசம் கற்கும்பலின்மேல் விழும் சூரிய கிரணத்தின் பிரதியொளியென்றும் சொல்லிவிடலாம். வால் பிரகாசிப்பது சந்திரன் பிரகாசிப்பதுபோலென்றால் சாதாரணமாய்த் தெரியுமல்லவா?

ஹாலி ஆனவர் இந்தத் தூமகேதுவின் போக்குவரவைப் பதினேழாம் நூற்றாண்டில் நிர்ணயித்ததுமுதல் நாளதுவரை இது பத்துத் தடவைகளுக்குக் குறைவில்லாமல் விஜயஞ்செய்திருந்தபோதிலும், தூமகேதுக்களின் தன்மையைக் குறித்து நமக்குத் தற்காலத்திற்றெரியுஞ் சங்கதிகள் சொற்பமே. தெரியாத ரகசியங்கள் இன்னும் பலவுண்டு. பெரிய தூம கேதுவென்று சொல்லக்கூடிய ஒன்று கடைசியாய்த் தோன்றியகாலம் வரையிலும், இவைகளைப் பரீக்ஷித்துப் பார்ப்பதற்கு வேண்டிய சாதனங்கள் அனேகமாயிருக்கவில்லை. ஆனால் இப்பொழுது இவ்வித ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு வெகு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடிகளும், ஸ்பெக்டராஸ்கோப் என்னும் ஒரு கருவியும், 'பொடகிராப்

என்னும் படம் பிடிக்கும் சாதனமுமிருப்பதோடுகூட, தூமகேது ஆகாயத்தில் ஒரு சிறு வஸ்துவாகக்காண ஆரம்பிக்குமுதல் சூரியனைச் சமீபித்துவந்து நாளுக்குநாள் ரூபம் மாறி அதன் அற்புதக் காக்ஷிகளைக்காட்டி, மறுபடியும் ஆகிருதி சிறுத்துப் பழையரூபந்தரித்து மறைந்துபோகும் வரையிலும், பலமாசகாலமாய்ப் பகலிலு மிரவிலும் இடைவிடாது அதையுற்றுப்பார்த்தவண்ணமாய் ரிகார்டுகளை யேற்படுத்திப் பிறகு அந்த ரிகார்டுகளினால் வெளியாகும் விஷயங்களைச் சாவதானமாய் ஆலோசித்தறிந்து கொள்வதும் சாத்தியமாகிவிட்டது,



தூமகேது

ஆதலால், 1910ஹு ஏப்ரல் மாசத்தில் யாரும் நன்றாய்க் காணக்கூடிய இத்தூமகேதுவை அதற்கு முன்னூறு மாதமும் பின்னூறு மாதமுமாக உற்றுப்பார்த்துப் பொதுவாய்த் தூமகேதுக்களின் தன்மையைப் பலவிதத்திலும் பூர்ணமா யறிந்து விடலாமென்று, ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா இக்கண்டங்களில் உழைத்துவரும் ககோளதத்துவ வித்துவான்களிற்பலர் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். ஆகவே, இதற்குமுந்தி நம்முன்னோர் தற்காலத்திய சாதனங்கள் ஒன்றும் இல்லாமலே, தங்கள் புத்தி நுட்பத்தினால் தூமகேதுக்களின் சுபாவத்தைக் குறித்துத் தெரிந்துகொள்ளஎவ்வளவு சாத்தியமாயிற்றோ, அதைவிட அரிதான அனேக அற்புதங்களை இப்பொழுது விஜயஞ் செய்துகொண்டிருக்கிற ஹாலி தூமகேது தோன்றி மறுபடியும் கிரககோடிகளின் மத்தியில் காணமற் போய்விடுவதற்குள்ளாக ஆராய்ந்தறியப் போகிறார்களென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால், இவ்விஷயத்தில் சிரத்தையுள்ளவர்கள் இன்னும் ஒருவருஷத்திற்கப்புறம் நமக்கு தூமகேதுக்களைக் குறித்து அதிகமாய் என்னென்ன நூதன சமாசாரங்கள் வெளியாயிற்றென்று நவீனத்திலேற்படும் ரிகார்டுகளினாலும், படிப்பினாலுங், கேள்வியினாலும், சாத்தியமானவரையிலும் அறிந்துகொள்ளலாம்.

---

### உலகஞானம் எவ்வாறு உண்டாகும்

உலக ஞானம் என்பது உலகத்தில் பழகியே வரவேண்டுமெல்லாமல், உள்ளே உட்கார்ந்தபடி ஒருநாளும் வரமாட்டாது. புஸ்தகங்களைப் படிப்பதுமட்டும் போதாது; படித்தறிந்தவைகளைப் பரிசோதிக்கப் பிரஜைகளுடன் பழகியும் பார்க்கவேண்டும். இவ்விதமான பழக்கம் "இணக்கமறிந்திணங்கு" என்றபடி வெகு ஜாக்கிரதையாக நடந்தவர்தாலொழிய நமக்கு எளிதில் வரமாட்டாது. சாஸ்திரங்கள் படிப்பதில் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமோ, அவ்வளவு ஜாக்கிரதையாய் மனிதர்களுடன் பழகுவதிலும், நாம் இருக்கவேண்டும். இல்லாவிடின், நாம் நாளுக்குநாள் வயதில் உயர்வோமாகிலும், அறிவில் விருத்தி யடையாமலே இருந்து விடுவோம். வெகு ஜனங்கள் தாடி நரைத்திருப்பார்கள்; ஞானமென்பதில் பத்து வயது பாலகனுக்குக்கூட நிகரில்லாதவர்களாயிருப்பார்கள். உலக ஞானம் ஊர்சுற்றித்திரியும் சோம்பேறிகளுடைய சகவாசத்தால் உண்டாகவே மாட்டாது. ஆனால் அவர்களையும் நீ அறிந்திருக்கவேண்டியது அவசியமே. நீ நல்ல சகவாசமே எப்பொழுதும் செய்துகொண்டு இருக்கவேண்டும். நீ பழகும் ஒவ்வொருவருடைய குணாதிசயங்களையும் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். அன்றியும் அவர்களுடைய நற்குணம், துர்க்குணம், தற்புகழ்ச்சி, வீண்பேச்சு முதலியவைகளையும் உற்றுப்பார்க்கவேண்டும். அப்படிச் செய்வதுதான் ஈசுவரன் நமக்குப் புத்தி கொடுத்திருப்பதற்குப் பிரயோஜனம்,



### ஸாக்ரடீஸ்

ஸ்ரீமான்-டீ. எஸ். சுப்பிரமணிய அய்யர்
எம். ஏ., எல். டி.,

(143-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஆனால் ஒரு விஷயத்தில் நிரபராதி யென்றாலும், இவருக்கு விரோதிகளேற்பட்டது சகஜம். ஏனெனில், இவர் சிறுவர்களுக்குத் தருமோபதேசம் செய்வதோடுமட்டுமிருந்தாலும், அவர்களுடைய பெற்றோர்கள் மனம்போல அவர்களை நடக்கவொட்டாமல் செய்தால், அப்பெற்றோர்கள் இவருக்கு விரோதிகளாவது இயற்கையல்லவா? உதாரணமாக, ஒருவன் தோல்வியாபாரம் செய்கிறான். ஆனால் அவன் மகனுக்குக் கணிதத்தில் நல்லபுத்தியிருக்கிறது. தகப்பனுக்கு இவனும் தோல்வியாபாரமே செய்யவேண்டுமென்று ஆவல் ஆனால் இவனை ஸாக்ரடீஸ் பரீக்ஷித்துப்பார்த்து, "நீ உன் தகப்பன் பேச்சைக்கேளாதே; கணிதம் கற்று முன்னுக்கு வரவேண்டும்," என்றால், அத்தகப்பன் இவருக்கு விரோதியாவது ஆச்சரியமா? ஸாக்ரடீஸைக் கேட்டால், அவர், "ஐயா, இது வெகு விசித்திரம். உன் மகனுக்குக் காய்ச்சல் வந்தால், வைத்தியன் சொல்லுகிறபடி நீ கேட்க வேண்டுமா, அல்லது உன்னிஷ்டம்போல் நடப்பது நலமா? இப்படி ஒவ்வொரு காரியத்திலும் விஷயந் தெரிந்தவர்களைக் கேட்டு நடப்பது உலக வழக்கமாயிருக்க, வெகு பெரிய விஷயங்களாகிய வித்தை, ஜீவனோபாயம், இவைகளில் விஷயந்தெரிந்த என் போலியர் நல்லது சொல்வதைக் கோணலாகப் பாவித்து வீண் கோபஞ் செய்கிறீர். நான் உன்பிள்ளைக்கு மித்திரனே யொழியச் சத்துருவன்று" என்பார். விவேகிகளான பெற்றோர் இதைச் சரியென்று ஒப்புக்கொண்டாலும், நம்மில் பெரும்பாலார் எக்காலத்திலும் முட்டாள்களாதலால், அனேகருக்கு ஸாக்ரடீஸின் பேரில் வயிற்றெரிச்சலுண்டாயிற்று ஆச்சரியமல்ல. இது நிற்க, வாலிபர்களை யிவ்வாறு தன் வசப்படுத்தியதல்லாமல், வயது முதிர்ந்து, இவ்வுலக அனுபவங்கூடிக்கீர்த்தி பெற்றவர்களையும், இவர் அடிக்கடி வழிமறித்து, அவர்களுக்குத் தாங்கள் கற்றிருப்பதாகக் கர்வமடைந்திருக்கும் விஷயங்களில் அரிச்சுவடி கூடத் தெரியாதென்று சுற்றியிருப்பவர்கள் கண்டு நகைக்குமாறு எதிர்வாதமென்னும் வலையில் அவர்களைச் சிக்கவைத்துத் திண்டாடவிட்டால், அவர்களில் எத்தனைபெயர் இவர் நோக்கத்தையறிந்து அதற்குள்ள மரியாதை வைப்பார்கள்? ஆகவே யிவர் 79வயது வரையிருந்தது அதிசயமே தவிர,



கிரீஸ்தேசத்து தத்துவஞானி

கடைசியில் தண்டனையடையநேர்ந்தது அதிசயமல்ல.

தர்க்க மாரம்பித்துக் கொஞ்சகாலங்கழிந்ததும், சொல்லுவதற்கெல்லாம் எதிர்க்கக்ஷி பேசுவதே யிவருக்குச் சுபாவமாயிற்று. கிராமங்களில் வசிப்பது நலமென்று யாராவது சொன்னால், வயல்களிலிருந்தும், மரங்களிலிருந்தும் தான் கற்றுக்கொள்வது ஒன்றுமில்லையென்று சொல்வார். ஜனங்கள் அடர்ந்துள்ள தெருவிலிருந்து கற்றுக்கொள்வது அநேகம் என்று சொல்லிப் பட்டணங்களி லிருப்பதிலேயே அவருக்கு மிக்கப்பிரியம். தெரு

வில் போகிறவன் சித்திர வேலைக்காரனோ, கூலிவேலைக்காரனோ, யாராயிருந்தாலும் சரி, அவனுக்குத் தக்கபடி பேசி, அவனிடமிருந்து ஏதாவது தெரிந்து கொண்டோ, அல்லது, அவனுக்கு ஏதாகிலும் ரகசியம் விளக்கியோ உபகாரம் செய்வார். கவிகளுடன் கவித்துவத்தைப்பற்றிப் பேசுவார். ராஜதந்திர மறிந்தவருக்குத் துரைத்தன முறையைப் பற்றியும் விவரித்துக் கூறுவார். தன் தேக சௌக்கியத்திற்கு வேண்டிய அனுகூலங்களையெல்லாம் வெறுத்துப் பிறகு காலக்கிரமத்தில் அவைகளை அநேகமாய் விலக்கியதால், இவருக்குப் பிறர் கையை யெதிர்பார்க்க அவசியமில்லாமல், தான் மேற்கொண்ட காரியத்தைத் தடையில்லாமற் செய்து வந்தார்.

அவர் தன்னண்டை கற்றுக்கொள்வதற்கு அநேகமாகச் சிறுபிள்ளைகளையே சேர்த்தார். அவர்களிலும் புத்தியுடையவரிடத்தில் அவருக்கு வெகு பிரியம். ஏனெனில், சூக்ஷ்ம புத்தியுள்ள சிறுவர்கள் அதிகமாக மாமூலைக் கவனிக்கமாட்டார்கள். அவர்கள் மனதைச் சீக்கிரத்தில் திருப்பலாம். அவர்களுக்கு நல்ல விஷயங்களில் உற்சாகம் அதிகம். ஆகையால் அவர்களே இவரிடம் படிப்பதற்குத் தக்கவர்கள். எல்லோருடனும் சாமான்னியமாய்ப் பேசுவதுதான் இவர் கற்பிக்கும் முறை. மடைதிறந்தாற்போலச் சரமாரியாய்ப் பொழிவதல்ல.

இப்படிப் பேசுவதற்கு ஒரு விசேஷ காரணமுண்டென்று தோற்றுகிறது. இவர் மிக்க தெய்வபக்தி யுள்ளவர். தெய்வத்தை வணங்குவதில் ஒருபொழுதும் தவறுவதில்லை. ஆனால் இவர் தனக்கு ஏதோ ஒரு தேவதை கைவசமென்று சொல்லிக்கொள்வார். தான் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் தன்னிடம் கனவிலும், மற்ற சமயங்களிலும், அத்தெய்வம் கூறுவதுண்டென்று சொல்லுவார்.

மற்றெல்லோரையும் விட தானே மிகவும் புத்திமானென்று ஆவேசம் சொல்லியதென்பதை மேலே குறிப்பிட்டிருக்கிறோமல்லவா? இப்படியவர் எல்லாருடனும் பேசிவந்ததற்கு இதுவே காரணம். வாதம்செய்வதில் வித்தியாசங்கள் வெளிப்படுகின்றன. இப்படித் தாரதம்மியம் பார்த்து வந்ததில், கடைசியாய் அவருக்கு ஆவேசம் சொன்னது சரியென்று தோன்றிற்று. ஏனென்றால், நாம் மேற்கூறியபடி எல்லோரும் அஞ்ஞானம்நிறைந்தவராயிருந்தும் மற்றவர் தங்களைப் பெரிய ஞானிகளென்று எண்ணியிருக்கத் தான்மட்டுமே தன் அறியாமையை நன்கு அறிந்தவரென்று இவருக்குப் புலப்பட்டது. ஆனால் இவ்விஷயத்தில் இவரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பாவித்தார்கள். சிலர் இவர் உபதேசத்தை அலக்ஷியம் செய்வார்கள். வேறு சிலர் இவர் நிந்தாஸ்துதியைக் குறித்து கோபங்கொள்வார்கள். சிலர் நியாயஸ்தலங்களிலும், கூட்டங்களிலும் இவர் வாதத்தில் ஜயமடைவதைப் பற்றிப் பொறாமைப் படுவார்கள். ஆனால், விவேகிகளோ இவரைச் சிநேகிதரென்றும், உபதேசியென்றும், நாயகரென்றும், கருதித் தங்களுக்குரிய தருமங்களை நன்றாகக் கற்றுக்கொள்வார்கள். இன்னும் சிலர் இவருடைய கொள்கைகளை நன்றாகத் தெரிந்துகொண்டு, தமது சந்ததியார் உத்தரோத்தரம் அறியும்படியாக எழுதியிருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் 'ப்ளேடோ'வும், அவருடைய சிஷ்யரான 'அரிஸ்டாடில்' என்ற இருவருமே. ஆனாலும், மொத்தத்தில் இவர் யதார்த்தவாதி யாதலால் வெகு ஜனங்களுக்கு விரோதியாய் விட்டார். அதற்குக் காரணங்கள் சில உள்ளன. கனவுப்பைத்தியங் கொண்டவரென்று அவமதித்துவெறுத்தவர் சிலர். வாதாடித்தோல்வியடைந்தவர்கள் சிலர்; இவருடைய பரிகாசத்தினாலும் வஞ்சப் புகழ்ச்சியினாலும் கோபமடைந்தவர்கள் அநேகர். சாமான்னிய



ஜனங்களின் அனுபவத்திற்கு விரோதமாகத் தனக்குமட்டும் ஏதோ தெய்வங் கைவசமாயிருப்பதாகச் சொல்லியதில், தமக்கில்லையென்ற வயிற்றெரிச்சலினால் விரோதிகளானவர் பெரும்பாலார்.

ஆகையால், இப்படிப் பல ஜனங்களுக்கும் வயிற்றெரிச்சலுண்டாக்கி ஸாக்ரடீஸ்சுமார் 80 வருஷம்வரை காலங்கழித்து, இவருடைய முக்கிய சித்தாந்தங்களெல்லாம் பிரபலமான பிறகு, கடைசியாக இவருடைய விரோதிகள் ஒருமுகமாய்த்திரண்டு, இவர் மேல் சிலகுற்றங்களை ஏற்படுத்தினார்கள். அவைகளாவன. 1. மகாஜனங்கள் ஒப்புக்கொள்ளும் பழைய தெய்வங்களை நம்பாமல் ஏதோ புதிய தெய்வத்தை வழிபடுவது. 2. அதேனியச் சிறுவர்களுடைய புத்தியைக் கலைப்பது. எப்படி யிவர் சிறுவர்களைக் கெடுத்தார் என்பதை நாம் மேலே விவரித்திருக்கிறோம். இவர் சிஷ்யர்களிற் சிலர் ராஜத்துரோகிகளாகித் தங்கள் துரைத்தனத்தை அன்னியர் கையிலொப்பித்து, அவர்களுக்குத் தாசர்களாய்ப் பணிவிடை செய்தார்களென்று சிலர் புகார் சொன்னார்கள். அல்லாமலும், சிறுவர் தங்கள் தாய் தந்தையர்களுக்குக் கீழ்ப்படியாமல் தான்சொன்னபடியே கேட்கும்படியாகக் கற்றுக்கொடுப்பதாகவும், பதிவுக்கு விரோதமாகக்கூறியுள்ள கவிகளை மெச்சிப் பேசுவதாகவும், இன்னும் இம்மாதிரியாகப் பலபதர்ப் பேச்சுக்களைப் பிதற்றினார்கள். தவிர, இவர் எல்லா ஜனங்களோடுங் கலந்து அவர்களுக்குத் தன்னிடத்தில் பக்தியும், விசுவாசமும், மரியாதையும் உண்டாகும்படி செய்துவிட்டபடியால், இவர் தேசத்துக்கு விரோதமாய் ஏதாவது செய்துவிடுவாரோ என்ற பயம் சில மூடருக்கு இருந்து போராடியு மிருக்கலாம். கேசு விசாரணைக்கு வந்ததும், அந்நாட்டுச் சம்பிரதாயப்படி ஜனங்களில் திருவுள்ளச்சீட்டு நியமன முறையில், ஐந்நூறு ஜட்ஜிகள் உட்கார்ந்து இவரைச்சமாதானங் கேட்க, இவர் தனக்குக் கனவில் தோன்றுந் தெய்வம் மகா ஜனங்கள் ஒப்புக்கொண்டதே தவிர வேறல்ல வென்றும், தான் ராஜாங்கத்துக்கு எப்பொழுதும் கீழ்ப்படிந்து நடந்து வருவதாகவும், தகப்பனைவிடப் பிள்ளையைப் புத்திசாலியாக்குதல் குற்றமன்றென்றும், தான் தேசிய கவிகளைப்பற்றிப் பேசுதல் தன் தேசாபிமானத்தை நன்றாக எடுத்துக்காட்டுகிற தென்றும் கூறினர். ஆனால், ஜட்ஜிகள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அதற்குக் காரணம் கிரீஸ்தேசத்திய அக்காலத்துச் சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும். ஸாக்ரடீஸின் சொந்தப்பட்டணமாகிய ஆதென்ஸ் கி. மு. 404 வருஷம்முதல், பகைவராகிய ஸ்பார்ட்டருக்கு அதீனமாகி, அதன்பிறகு கொடுங்கோன் மன்னரான முப்பது பேரால் அரசாளப்பட்டுக் கஷ்டமடைந்ததெல்லாம், ஸாக்ரடீஸின் சிஷ்யர்களாகிய க்ரைடியஸ், ஆல்ஸிபியாடீஸ், என்பவர்களால்தான் என்று நினைத்து, சிஷ்யருடைய குற்றத்திற்குக் குருவே உத்தரவாதியென்று சொல்லி இவரைத் தண்டித்தார்கள். இவர் தேசாபிமான முள்ளவரானபடியாலும், தருமத்தை யபேக்ஷித்து உயிரைப் பொருட்டாக்கவே யில்லை யாதலாலும், ஊரைவிட்டு ஓடி உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இஷ்டப்படவில்லை. வேண்டுமானால், இவரப்படிச் சுலபமாகத் தப்பித்துக்கொண்டிருக்கலாம். ஆகையால், துஷ்டபுத்திகளான ஜட்ஜிகளில் பெரும்பாலார் இவர்பேரில் குற்றம் ருசுவாகிறதாகத் தீர்மானித்து மரணதண்டனையும் விதித்தார்கள். அதை யனுசரித்து அக்காலத்திய வழக்கப்படி அரளிவேருக்குச் சமதையான "ஹெம்லாக்" என்னும் செடியின் ரஸத்தை யிவருக்குக் குடிப்பாட்டினார்கள். கடைசிவரை யார் பேரிலும் இவருக்குக்கோபமில்லை. யாரையும் அவர் நொந்துகொள்ளவுமில்லை. தான் மேற்கொண்ட விரதம் தனக்குப்பின் நிறைவேறுமென்கிற மனவுறுதி யவருக்கிருந்த

திஞல் அவருக்கு மனம்சிறிதாகிலும் கலங்கவேயில்லை. இஷ்டமித்திரர் மத்தியில் எப்போதும்போலச் சிரித்துத்தமாஷ் பேசிக்கொண்டே விஷத்தைக் குடித்துவிட்டார். இது கி. மு. 399-ம் வருஷத்தில்நடந்தது.

சத்தியத்தைக் கடைசிவரை மனந்தளராமல் பரிபாலித்ததே இந்த மகான் செய்த பெருங்குற்றம். இவருடைய நுண்ணறிவில் தினையளவுங்கூட இவரினத்தார்களுக்கு இல்லாமையால் இவர் செய்த உபகாரத்தையெல்லாம் அபகாரமென்று நினைத்துத் தங்களுடைய அறிவின்மையென்ற துர்த்தேவதைக்கு இவரைப் பலியளித்து விட்டார்கள். ஆயினும், காய்ச்சக்காய்ச்சப் பொன் மேன்மேலும் பிரகாசிப்பதுபோல, சத்தியமென்பது கஷ்டமென்ற உலையில்தான் நன்கு விளங்குகின்றது. ஸாக்ரடீஸ் தம்முடைய கொள்கைகளுக்காக மடிந்தபோதிலும், அவருடைய ஞானமும், புகழும் உலகமுழுதும் பிற்பட்ட எக்காலத்திலும், எத்தேசத்திலும் மேலும் மேலும் பரவி வந்திருக்கின்றன.

இவருடைய முக்கிய சித்தாந்தங்களையும், பேச்சுச் சாதுரியத்தையும், நல்லொழுக்கத்தையும் பின்னொரு சஞ்சிகையில் விளக்குவோம்.

---

### சப்ரேஜிஸ்ட் ஸ்திரீகள்.

ரெடிங் என்னுமிடத்தில் லாய்ட் ஜார்ஜ் என்ற மந்திரி பேசிக்கொண்டிருக்கையில் அவர், நிற்கும் பலகை மேடையின் (Platform) கீழ் இரண்டு சப்ரேஜிஸ்ட்கள் கண்டு பிடிக்கப்பட்டார்கள். வெளியில் வரச் சொன்னதற்கு மறுதளித்தபடியால், அவர்களிருவரையும் வெளியே பிடித்திழுக்கும்படி சேர்ந்ததாம். வெளியில் இழுக்கப்பட்ட பிறகு சபையின் எதிரில் இருந்த ஒரு மனிதன் இவர்களில் ஒரு ஸ்திரீயைத் தலைமீது பலமாக அடித்தானாம். இந்தச் செய்கையை அங்கிருந்தவர்கள் ஒப்பவில்லையெனத் தெரிகிறது.

## மேனாட்டாரும், கீழ்நாட்டாரும்

கே. ஏ. துரைசாமி அய்யர் பி.ஏ., எல்.டி.

சுமார் நூறு வருஷங்களாக ஆங்கிலேயர்கள் நம்நாட்டில் முதற் பதவியடைந்து ராச்சியபாரம் வகித்து வருகிறார்கள். அதனால் நமக்கும் அவருக்கும் பரஸ்பரம் அநேக நன்மைகள் உண்டாயிருக்கின்றன என்பதில் சந்தேகம் ஒருவருக்கும் இராது. இத்தன்மைத்தான சம்பந்தம் தெய்வாதீனம் என்றே சொல்லவேண்டும். "கிழக்கு கிழக்குதான், மேற்கு மேற்குதான். இவையிரண்டும் ஒருநாளும் ஒன்று சேரா," என்று ஒரு ஆங்கிலகவி கூறியுள்ளாராயினும், நம்மதம் அதற்கு மாறிடையாதலில், "இத்தகைய சம்பந்தத்தால் பற்பல நன்மைகள் உண்டாயிருக்கின்றன; இன்னும் உண்டாகப்போகின்றன," என்பது நம்கொள்கை. ஆதலின் அதுமூலமாகப் பெருகிவரும் நன்மையாகிய அருவியினின்றும் நாம் எல்லோரும் விடாய் தீர நுகர்ந்து, நமது ராச்சியம் க்ஷேமத்தையடைய வேண்டும் என்பதில் ஆக்கிரகம் வலுத்திருப்பதுபற்றியே பின்வருவனவற்றை எழுதத் தொடங்கியது.

இப்பொழுது ஆரம்பிப்பதாக உத்தேசித்துள்ள விஷயம் மெத்தவும் பெரியதாதலின் அதைச் சில பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையுங் குறித்துச் சற்றுக்கூறுவோம்.

### ‘சரித்திரக்கூற்று’

உலகத்தின்கண் தற்காலத்தில் எம்மாதிரி அநேக ராச்சியங்கள் நாகரீகத்தையடைந்து உன்னததசையில் அமர்ந்திருக்கின்றனவோ, அது போல் முற்காலங்களிலும் வேறு அநேக ராச்சியங்கள் செழித்து ஓங்கி உயர்ந்திருந்தன. சரித்திரங்களுக்கு எட்டியமட்டில், இம்மாதிரியான ஸ்திதி அவற்றுள் ஒன்றின்கணாயினும் ஸ்திரமாய் இருந்திருக்கவில்லையென்றும், எக்காரணங்களால் அதினின்றும் அவைகளுக்கு வீழ்ச்சியுண்டாயிற்றோ, அக்காரணங்கள் இப்பொழுதாவது பின்னராவது உண்டாகுமேல், அத்தகைய வீழ்ச்சி மற்றவருக்கும் நேரும் என்றும் துணிவதற்கு இடமுண்டு. சில உதாரணங்கள் இதை நன்கு விளக்கும்.

நமது ஹிந்து ராச்சியமானது இமோற்பருவதமுதல் கன்னியாகுமரி வரையில் அளாவி தசரதர் முதலான சூரிய வமிசத்து சக்கிரவர்த்திகளாலும், தருமபுத்திரர் முதலான சந்திர பரம்பரையோராலும், செங்கோல் சற்றேனும் கோணாமல் அரசாக்ஷி செய்யப்பட்டுவந்தது நாம் எல்லோரும் அறிந்த விஷயமே.

அவ்விதமான ஸ்திதி பின்னிட்டு எப்படி நழுவி விட்டதோ, அதுபோலவே இன்னும் மற்றுள்ள ராச்சியங்களும் பலக்குறைவை அடைந்து, இருந்த இடம், பெயர், ஊர், வரலாறு கூட மறந்து போகும்படியாய்விட்டன. அஸ்ஸிரியா என்ன, பாபிலோனியா என்ன, எகிப்து என்ன, இவைகள் சுமார் மூவாயிரம் வருஷங்களுக்குமுன் பிரபலத்தை யடைந்திருக்கவில்லையா? அதன்பின் கிரீக்குத்தேசத்தாருக்கு நற்காலம் வர, அநேக விஷயங்களிலவர்கள் நிபுணராயிருந்து, சுமார் முந்நூறு வருஷகாலம் நிரம்பவும் புஷ்டியடைந்திருந்து, தங்களுடைய நாகரீகம் ஒருக்காலும் நாசத்தையடையாவண்ணம், அவர்களுடைய கலைகளையும், தத்துவ ஞானத்தையும், சிற்பசாமர்த்தியத்தையும் எக்காலத்தோரும் மெச்சிக்கொண்டாடும்படியாகத் தமது தேசசரித்திரத்தில் நிலைநிறுத்தவில்லையா? அவர்களுக்குப் பின்னர் ரோமாபுரியில் இடாலி தேசத்தவர் ஆதிபத்தியத்தையடைந்து, ருஷியா தவிர தற்காலத்தில் ஐரோப்பா கண்டம் என்று வழங்கும் ராச்சியமாத்திரமல்ல, ஆசியா கண்டத்தின் மேற்குபாகம், ஆபிரிக்கா கண்டத்தின் வடபாகம், இவைகளைத் தம் குடைக்கீழ் தாங்கி, அவர்களில் அநேகம் புத்திமான்கள் சட்டங்களை உண்டாக்க அவைகளை அநுசரித்து நடந்து, சுமார் 600, 700 வருஷ நற்பதவியிலிருந்தார்களல்லவா? அவர்களுடைய சட்டமன்றோ இப்பொழுது "ரோமர் சட்டம்" என்று வக்கீல் பரீக்ஷைக்குப் போகிறவர்கள் படிப்பது? அதன்பின் ஐரோப்பாவில் அநேகம் இதர ராச்சியங்கள் அப்போதைக்கப்போது சிறிதுகாலம் பிரபலமடைந்திருந்தன.

கிறிஸ்து பிறந்த ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பாடு மகம்மதியர் அதிகம் பலமுற்றுப் பெரிதான ராச்சியத்தை வகித்து, இந்தியாவிலும் அதற்கு மேற்கேயுள்ள ஆசியா கண்டத்துப் பிரதேசங்களிலும், ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பிரவேசித்து ஒவ்வொரு தேசத்திலும் தங்களுடைய நாகரீகத்தையும் மதத்தையும் ஸ்தாபித்திருந்தார்கள் என்பதற்குச் சாக்ஷியமும் வேண்டுமோ? இக்காலத்திலோ நிரம்பவும் மெலிந்துபோய் சில ராச்சியங்களை மாத்திரம் ஆண்டு வருகிறார்கள். பரிகாசமாய்த் துருக்கிதேசத்துச் சுலுத்தானைக் "கீழ்நாட்டு வியாதிஸ்தன்" என்று வேறுசில அரசர்கள் வெகுகாலம் வழங்கி வந்தார்கள்.

அமெரிக்காவில் ஐரோப்பியர் பிரவேசித்ததற்கு முன்பாக ‘மெக்ஸிகோ,’ ‘பெரு’ என்னும் தேசங்களில் ஜனங்கள் நிரம்பவும் நாகரீகமடைந்து நல்ல ஸ்திதியில் இருந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன.

ஐரோப்பாவில் ஸ்பானிய ராஜாக்கள் ஒரு காலத்தில் நல்ல பதவியில் இருந்து, ‘புதிய உலகம்’ என்று வழங்குவதான அமெரிக்காக்களை ஆண்டு வந்தார்கள். அத்தேசத் தரசனாலனுப்பப்பட்ட ‘கொலம்பஸ்’ அல்லவோ அவற்றைக் கண்டு பிடித்தது?

சுமார் நூறுவருஷத்திற்கு முன்னர்தான் நெப்போலியன் என்னும் ஒரு பிரான்சுச் சக்கிரவர்த்தி ஏறக்குறைய ஐரோப்பா முழுவதையும் கட்டியாள முயன்றார். அவர் எண்ணம் ஏறக்குறைய முற்றுப்பெற்றது என்றே சொல்ல வேண்டும். நெப்போலியன் என்றால் அக்கா

லத்தில் யாவருக்கும் சிம்ம சொப்பனமாயிருந்தது. அழுத பிள்ளையும் வாய் மூடும்.

இவ்விதமாய் அநேக ராச்சியங்களுடைய உயர்வையும் தாழ்வையும் நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம்.

இப்பொழுதோ ஐரோப்பாவில் இங்கிலாந்தும் ஜர்மனியும் முதல்மரியாதைக் காரர்களாய், ஒருவருக் கொருவர் பின்வாங்காதிருக்கும் பொருட்டு, யுத்தக்கப்பல் நிர்மாணத்தில் 'நீ முந்தியோ, நான் முந்தியோ' என்று பந்தயம் போட்டுக் கொண்டாற்போல யத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர ருஷ்யா, பிரான்ஸ், ஆஸ்திரியா இம்மூன்றும் நல்ல ஸ்திதியில் இருக்கின்றன. அமெரிக்காவில் 'ஐக்கியமாகாணங்கள்' நிரம்பவும் உன்னத பதவியில் இருக்கின்றன. "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" யைப்போலன்றி, ஆசியா கண்டத்தாராகிய ஜப்பானியர்களும் கை வெகு வாய்வலுத்தவர்களாகிய ருஷ்யர்களைக் கடலிலும், பூமியிலும் வென்று பிரபலமாகிக்கொண்டு வருகிறார்கள். தங்களுடைய ராச்சிய நிலைமையாலும் கடற்படைச் சாமர்த்தியத்தாலும் அவர்கள் "பஸிபிக் சமுத்திர இங்கிலீஷ்காரர்கள்" என்று பெயர்வாங்கி விட்டார்கள்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்று சொல்வதற்குச் சரியாக நாகரீகங்களும், ராச்சியங்களும் மாறிக்கொண்டே வருகின்றன.

"இந்த விஷயங்களை நாங்கள் அறிந்ததில்லையா? இவைகளைச் சொல்லவா எங்களை இவ்வளவு தூரம் இழுக்கடித்தீர்?" என்று சிலர் கூற இடமுண்டு. அதற்கு நியாயம் ஒருவாறு கூறுமற்போனால் இதுவரை யெழுதியது வீணாய்முடியும். இதுகளால் நாம் அறியவேண்டுவது என்ன? இந்த ராச்சியங்கள் எக்காரணங்களால் உயர்வையும் மற்றெக்காரணங்களால் தாழ்வையுமடைந்தன, என்று நாம் அறிவோமாகில், அத்தகைய தாழ்வு வராமல் காக்க உதவும். தவிர முன் போகிறவன் குழியில் இடறி விழுந்தால் பின்செல்பவனுக்குத் தீவட்டி பிடித்தாற்போலல்லவா?

இது விஷயங்களை யோசிக்குங்கால் தோன்றுவதென்னவென்றால், "தாளாண்மை தாழத் தாழ்ந்தார்" என்று நிச்சயிக்கலாம். "அடி உதவுகிறாப்போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்," 'தடி எடுத்தவன் தண்டக்காரன்' என்னும் நியாயம்தான் வழங்கிவந்ததாக முதலிற்றோன்றும். பலிஷ்டர்களாய் இருந்தவர்கள் பலஹீனர்களை வென்றார்கள் என்று சொல்லலாமாயினும், சற்றே ஆராய்ந்து நோக்குங்கால் ஜயத்திற்குக் காரணம் விடாமுயற்சிதான் என்னும் ரகசியம் வெளியாகிறது. தாம் கைக்கொண்ட காரியத்தில் எக்காலம் வரை தக்க முயற்சியுற்றிருந்தார்களோ, அதுகாறும் ஜயலக்ஷ்மி அவர்கள் பங்கில் இருந்தாள் என்பதற்குச் சந்தேகமில்லை. ராச்சியம் கிடைத்தபின்னும் அநேக காலம்வரை "கருமமே கண்ணாயினா"ராய், மெய்வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும் கண் துஞ்சாமலும் பாடுபட்டார்கள். அதனால் கைமேல் பலன் அவர்களுக்குக் கிடைத்தது. அவருக்குப் பிற்பட்டவரோ, பிதுரார்ச்சிதம் வேண்டியமட்டுமிருந்தபடியால், (இக்காலத்துப் பாட்டிமார்கள் போல் அக்காலத்தும் இருந்திருப்பாரன்றோ!), "அடே குழந்தாய், நீ ஏனடா பாடுபடவேணும், அப்பாவும் பாட்டாவும் தேடி வச்சிருக்கிறதைத் தின்று தெரிச்சுண்டிருந்தாப் போறாதா?" என்று சொல்லும் பாட்டிமார்களுடைய வார்த்தைக் கிணங்கியோ, அல்லது அநாயாசமாகச் சுகமநுபவிப்பதை விட்டு, ஏன் வீண் பாடுபடவேண்டுமென்று நினைத்தோ, அல்லது 'பறையனைப்போல் பாடுபட்டால் துரையனைப்போல் சுகப்படலாம்" என்னும் நியாயத்தை மறந்தோ, தாம்



செய்யவேண்டிய கருமங்களில் அசிரத்தையாய் இருந்துவிட்டாராதலின், காலக்கிரமத்தில் பலம் குறைந்து எதிரிகள் படையெடுத்து வருங்காலத்து அவரை வெல்லச் சக்தியற்று, எளிதில் வெல்லப்பட்டார்கள்.

தவிரவும் "சத்தியமே ஜயிக்கிறது, பொய்யன்று" என்னும் சாசுவதமான தருமத்தை மறந்து, அகம்பாவம் மேலிட்டு, காரியாகாரியங்களைப் பகுத்தறியாமல் அகிருத்தியங்கள் பலவும் செய்யத் துணிந்ததால், பகவான் அவர் பக்கனின்றும் ஜயத்தை நீக்கினார் போலும்.

ஆதலின் இதுகாறும் கூறியதுகொண்டு நாம் அறியவேண்டியது 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' ஆதலால் 'ஊக்கமது கைவிடாம'லும், சத்தியத்தை நம்பியும், அதருமம், அகிருத்தியம் முதலிய விஷப்பூண்டுகள் நந்தவனமாகிய நம்மனத்தில் வேரூன்றாமற்றடுத்து, தெய்வ பக்தியும், விடாமுயற்சியும் செழித்தோங்க நடந்துகொள்வோமேல், நாமும், நம் முறவினர், சுற்றத்தாரும், நமது ராச்சியமும் பகவத் கிருபையால் க்ஷேமத்தை அடையுமென்பது திண்ணம். (இன்னும் வரும்)

---

## சுதேசியமும் நாட்டுக்கோட்டை செட்டியார்களும்

பேசின் ஜில்லா காஞ்சிட்டானில் பண லேவாதேவி செய்யும் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் ஒருங்கே கூடி சுதேசியமல்லாத வஸ்துக்களை உபயோகப்படுத்துகிறதில்லை என்றும் அதற்கு, விரோதமாய் நடப்பவர்கள் ஒப்பந்த நிபந்தனையை நிறைவேற்றக் கட்டுப்பட்டவர்களென்றும், கடையின் ஸ்தானத்திற்கு வரும் ஒவ்வொரு நபர்களும் அதைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்றும், சில நாளைக்கு முன் ஒப்பந்தம் செய்துகொண்டு தவறாமல் நடந்து வருவதாய்த் தெரிகிறது. நிற்க தாராவாடி ஜில்லா மீன்லா, அவுப்போ, ஜீக்கோன் இந்த ஊர்களிலிருக்கும் செட்டியார்களும் ஒப்பந்தமின்றி மன உறுதியோடு பிறதேச உப்பு, சீனி, துணி முதலியவைகளை வர்ச்சனம் செய்து சுதேசியத்தைக் கையாடி வருகிறார்களாம். இச்சாதியார்கள் மனதில் சுதேசியம் புகுந்தது நமது தேச க்ஷேமத்துக்கு அறிகுறியாகும்.

## நாம் ஏன் பிழைத்திருக்கிறோம்?

ஸ்ரீமதி-மங்களாம்பிகா பாய்

(ஓர் ஜப்பானிய உபன்னியாசம்)

ஜப்பான் தேசத்தில் ஒரு ஊரில் சோகீசி என்றொரு பெரிய மூடனிருந்தான். உலகத்தின்கண் எவ்வளவோ மூடர்களிருக்கின்றார்கள். இருந்தபோதிலும், நம்மவனோ வென்றால் மூடச்சிகாமணியேதான். சொன்ன காரியத்தை மறப்பதில் பரம நிபுணன். ஒருநாள் அவனுடைய எஜமானியம்மாள் அவனைக் கூப்பிட்டுச் சொன்னாள். "அடே சோகீசி, இன்றையதினம் நமது மூல புருஷனுடைய திதியானபடியால், புரோகிதர் சீக்கிரம் வருவார். ஆதலால் நமது குலதெய்வங்களுக்கு வழக்கப்படி நைவேத்தியம் செய்யவேண்டும். நீ சீக்கிரம் கடைக்குச்சென்று முள்ளங்கி, உருளைக்கிழங்கு, நாய்க்குடை, தாமரைக்கிழங்கு, வெங்காயம் இவையனைத்தையும் வாங்கிக் கொண்டு வா," என்று சொல்லி ஐந்து அணாவைக் கொடுத்தாள். சோகீசி வெகு சந்தோஷத்துடன் இடுப்பைக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். அவன் நாயோட்டமாய் ஓடிக்கொண்டிருக்கையில் அடுத்த வீட்டுச் சோமட்சூவைக் கண்டான்.

"அடே, சோகீசி! என்ன ரொம்ப அவசரமாய்ப் போகிறாய்போலிருக்கின்றதே? என்ன வேலையின்பேரில் போகிறாய், எங்குபோகிறாய்?" என்று சோமட்சூ கேட்டான்.

"சில சாமான்களை வாங்கிவரும் பொருட்டுக் கடைக்குப் போகிறேன்," என்று சொல்லிச் சோகீசி அவசரமாய்ச் செல்லலானான்.

"என்ன சாமான் வாங்கப்போகிறாய்?"

"என்ன சாமானா? எனக்குத்தெரியாதே," என்று விடை சோகீசி யளித்தான்.

இவ்வாறாகக் கதையாரம்பித்து ஒரு ஜபானிய உபதேசி சொன்னதாவது:—எஜமானியம்மாள்சொன்ன வேலையை மறந்து தெருவில்

நாயோட்டமா யோடுவது முட்டாள்தனமல்லவா? ஆனாலும் சோகீசியைக்கண்டு எல்லோரும் சிரிக்கலாகாது. ஏனென்றால், உலகத்தில் முக்கியகாரியங்களை மறக்கின்ற சோகீசியைப் போன்ற மனிதர்கள் பலருளர். முக்கிய காரியத்தையன்றி மற்ற விஷயங்களிலோ வென்றால் அவர்களறியாத தொன்றில்லை.

சிருஷ்டியிலிருக்கும் ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொரு விசேஷ கருமமிருக்குமென்று சொல்லுவார்கள். உதாரணம்:— பசுவும், குதிரையும், எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறன என்று எவனைக்கேட்டாலும் சொல்லுவான். "எல்லோருக்கும் தெரியுமே, மூட்டைகளைச் சுமக்கவும், ஜனங்களுடைய சிரமத்தைக் குறைக்கவும்," என்று

கோழி எதற்காக ஜீவித்திருக்கின்றது? என்றவனைக்கேட்டால், அவன் "பொழுது தெரிய" வென்று சொல்லுவான். நாய் எதற்காக ஜீவித்திருக்கின்றது? "வாயிலைக்காக்க." பூனை எதற்காக? "எலிகளைப்பிடிக்க." ஒவ்வொன்றைப் பற்றியும் இவ்வாறாகவே கேட்டால் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையளிப்பான். அதிருக்கட்டும் நீ எதற்காகப் பிழைத்திருக்கின்றாய்? என்று கேட்போம்.

அவன் தலையைச் சொறிந்துகொண்டு சற்றுநேரம் யோசித்துச் சொல்லுவான். "நானா? என்னதுக்காகவோ! எனக்குத் தெரியாதே, என்னவோ, சோற்றைத் தின்றுவிட்டுப் பிறருடைய குற்றங்களைக் கண்டுபிடிக்கவென்று தான் நான் நினைத்திருக்கின்றேன்," என்று ஒரு சமயம் சொல்லுவான்.

இவ்வுலகத்தில் மனிதர் மாத்திரம் யாதொரு காரணமுமின்றி ஜன்மமெடுத்திருப்பதாக நினைப்பது சோகீசியினுடைய முட்டாள் தனத்திற்கொத்ததாகும். இவ்வுலகத்தில் சோற்றின் பொருட்டு எடுக்கும் ஜன்மம் மானிட ஜன்மமன்று. ஜகத்தில் மானிட ஜாதிதான் பிரதானமானது. மானிடன் நாயைப்போன்றவனுமன்று. பூனையைப் போன்றவனுமன்று. காரணமின்றிக் காலத்தைக் கழிப்பதும் அவன் இயற்கையன்று.

நிற்க, இனி நாம் நம் சோகீசியை மறுபடியொருமுறை நாடுவோம். நமது சோகீசி கடைத்தெருவை யடைந்தான். ஆனால் அவன் எதற்காகக் கடைத்தெருவிற்கு வந்தோமென்பதை மறந்துவிட்டான். ஆகையால், கையில் பணத்துடன் அவ்விடத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு கடையில் பக்ஷணம் செய்து வைத்திருப்பதைக் கண்டு, உடனே அவற்றை வாங்கித்தின்றான். பிறகு சற்றுநேரம் இங்குமங்கும் திரிந்துகொண்டிருந்து, பிறகோர் சாராயக்கடையில் நுழைந்து சாராயத்தை வாங்கிக் குடித்துவிட்டு, அவ்விடத்தில் கொஞ்சம் பொழுதைக் கழித்தான். கண்டதெல்லாம் வாங்கித்தின்று காசெல்லாம் செலவழிந்த பிறகு, மிக அதிருப்தியுடன் வீட்டைநோக்கிச் செல்லலானான். போகும்பொழுது வழிதோறும், "எஜமானியம்மாள் தனக்கு யதேச்சையாய்ச் செலவழிக்கும்படி காசுகொடுக்கவில்லை. அதனால் விலையுயர்ந்த பக்ஷணங்களை வாங்கித் தின்பதற்கில்லாமற்போயிற்று," என்று முணுமுணுத்துக்கொண்டேபோனான். வீட்டையடைந்ததும் எஜமானி அவனைக் கேட்டதாவது: "இவ்வளவு நேரம் என்ன செய்துக்கொண்டிருந்தாய்? சாமான்களெல்லாம் வாங்கிக்கொண்டு வந்தாயா?" அதைக்கேட்டு நம்ம சோகீசி, தூக்கத்திலிருந்து விழித்தாற்போல் "நானொன்றும் கொண்டுவரவில்லையே," என்றான்.

"கொடுத்த காசை என்ன செய்தாய்?" "காசா? பக்ஷணம் வாங்கிச் செலவழித்தேன். ஆனால், எல்லா பக்ஷணங்களும் வாங்கப்போதவில்லை." இதைக்கேட்டு, எஜமானன், எஜமானி இருவருக்கும் யாதொன்றும் பேசாவெழாமல் கொஞ்சநேரம் திகைத்தாற்போலிருந்து பிறகு கோபத்துடன் அவனை நோக்கிச் சொன்னார்கள்: "என்னடா! முழிக்கிறாய்?



இந்தமாதிரி செலவழிக்கவா நான் உன்கையில் காசைக் கொடுத்தேன்? உருளைக்கிழங்கு முதலியவற்றைக்கொண்டுவரச்சொன்னால், நீ வயிறு நிறையத் தின்றது போதாமல் இன்னும் பணம் போதவில்லை என்கிறாயா?' உன்னைப்போல் மடையன் யாருமில்லை" என்று வைதார்கள்.

மூடனுக்கு மோக்ஷமில்லை. இவ்வளவு வசவைக்கேட்டுச் சோகீசி திகைத்து இவ்வாறு பேசலானான்: "என்ன? உங்களுக்கு உருளைக்கிழங்கும் மற்ற சாமான்களும் தானே வேண்டும்? அப்படியிருக்கும் பக்ஷத்தில் நான் கடைக்குப்போகும் பொழுதேன் சொல்லவில்லை? சாமான் வேண்டியதாயிருந்தால் அப்பொழுதே சொல்லியிருக்கவேண்டும்!"

சோகீசி மூடசிரோமணியென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். இவனைப்போன்ற வேலைக்காரனை வைத்துக் கொள்ளத்தக்க ஒரு எஜமானனும் இவ்வுலகத்திலகப்படமாட்டான். கடைசியாய்ச் சோகீசியை ஒழிக்க யாதொரு வழியும் காணாமல் அவர்கள் இரண்டு அடியடித்து அவனைத் துரத்திவிட்டார்கள். இக்கதையைக்கேட்டுச் சிரிப்பதில் பிரயோஜனமில்லை. இதுகட்டுக்கதையேயன்றி வேறன்று. கன்பியூஷியஸ் ரிஷி சொல்லுகிறார்: "மூடத்தன்மையைக் கண்டதும், எனக்கு ஆத்தும திருஷ்டி யுண்டாகிறது." நாம் யாவரும் யோசிக்கவேண்டியதென்னவென்றால், நாமும் சோகீசியின் இனத்தைச் சார்ந்தவர்களோ, அல்லவோ வென்பதைப்பற்றித்தான். நாம் ஜனிக்கும்பொழுது கடவுளிடத்திலிருந்து இந்த ஐந்து இந்திரியங்களையுடைய சரீரத்தைப்பெற்றிருக்கின்றோம். ஐந்து அணுக்களைவிட மேன்மையான பஞ்ச இந்திரியங்களையுடையவர்களாயிருக்கின்றோம். ஜனிக்கும் பொழுதே நமது இருதயத்தில் பஞ்ச குணங்களையும் என்றால், அன்பு, நியாயம், மரியாதை, ஞானம், சத்தியம், இவ்வைந்தையும் பெற்றிருக்கின்றோம்.

ஆதலால் இதனுடைய உண்மையான அர்த்தமென்னவென்றால், ஐந்துவிதக் காய் கிழங்குகளை விலைக்கு வாங்குவதுபோல நாம் ஐந்து கடமைகளையும் தேகப் பயிற்சினாலடையவேண்டும். தாய்தந்தையர்க்கு உட்படுதல், எஜமானனிடத்தில் விசுவாசம், பதிபத்தினியர் அன்புடனிருத்தல், உடன்பிறந்தவர்களுடன் ஒற்றுமை பாராட்டுதல், சகல ஜனங்களிடத்திலும் நேர்மையுடன் நடந்து கொள்ளுதல்.

நம்முடைய மதமும், கடமைகளும் இவ்வாறிருக்க, நாம் இரவும் பகலும் "இது வேண்டும், அதுவேண்டாம். அதுவேண்டும், இது வேண்டாம்," என்றிவ்வாறாகச் சொல்லிக்கொண்டு, தெருவில் விற்கப்படும் பக்ஷணங்களைவாங்கிச் சாப்பிட்டுக் காலத்தைக் கழிக்கிறோம். இப்படிச் செய்பவர் சோகீசியல்லவா? இப்படிக் காரியமின்றித் திரிந்தலைவதற்காக நாம் ஜன்ம மெடுக்கவில்லை.

(ஜப்பானைக் குறித்து டாக்டர்-ஷேரர் எழுதியதிலிருந்து,)

## ஆழமான சமுத்திரம்

சமுத்திரத்தில் 3000-அடி ஆழத்திற்குக் கீழே சூரியவெளிச்சம் நுழைய முடியாது. அந்த ஆழத்திற்குக் கீழ் வசிக்கும் மீன்களுக்கு சூரிய வெளிச்சத்துக்குப் பதிலாக அவைகளின் அவயவங்களிலேயே ஒரு ஜோதி இருக்கிறது. இந்தச் ஜோதியும் சாதாரணமாய் இருட்டுகாலிற் சமுத்திரத்தில் தூரத்து அலைகளைக் கவனித்துப் பார்த்தால், அலைகளிலிருந்து பளிச்சுப் பளிச்சென்று புறப்படும் வெளிச்சமும் ஒன்றே. மேலே சொல்லிய ஆழத்தில், தண்ணீர் ஓட்டம் கிடையாது; அலையடிப்பதில்லை; காற்றடிப்பதில்லை; சூரியவெப்பமில்லாததால் தாவர வர்க்கம் ஒன்றும் இருக்கமுடியாது. நிலமட்டத்திலுள்ள காற்று ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் 15-ராத்தல் பாரத்தோடு தாக்குகிறது. சமுத்திரத்தில் 15,300-அடிக்குக் கீழே போய்விட்டால் அங்கே ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் 11-கால் ராத்தல் பாரம் வைத்தாற்போலிருக்கும். ஆழத்திலுள்ள ஜலம் மிகவும் குளிர்ச்சியாயிருக்கும்.

# இறப்பதா, இருப்பதா?

## தேசீய பாஷைகளுக்காவதோர் வாதம்

ஸ்ரீமான்-பி. டி. ஸ்ரீனிவாஸ ஐய்யங்கார் அவர்கள், எம். ஏ.

[மேற்காணும் மகுடத்துடன் ஷேயார் எழுதிய இங்கிலீஷ் வியாஸமொன்று நமது கைக்கெட்டியது. நாம் 'விஹாரிணியிலும்,' வேறிடங்களிலும் பேசிவருவதை யனுசரித்துப் பார்க்குமிடத்து, இம்மாதிரி வியவகாரங்களெல்லாம் அப்பாஷைகளிலேயே நடத்துவது யுக்தமாகக் காணுவதால், இச்சஞ்சிகையில் ஐயங்காரவர்கள் 'கூற்றை'ச் சுருக்கி யுரைத்துவிட்டு, அதற்கு விசேஷவுரை வேண்டுமிடத்துச் சேர்த்து அடுத்த சஞ்சிகையில் வெளியிடுகிறோம்.]

ஐயங்கார் சுவாமிகளின் வியாஸத்தை நாம் சிரத்தையாகப் படித்துப் பார்த்தோம். அவருடைய ஞானத்திற்கும், யுக்திக்கும், அனுபவத்திற்கும், ஏற்றபடி அனேக அற்புத விஷயங்கள் அதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியவைகள். அவைகளை அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவோம். தற்காலம் ஒரே ஒரு குறிப்பு மட்டும் ஆரம்பத்தில் அவசியமாகக் காணுவதால் அதை யிங்குச் சொல்லிவிடுகிறோம்.

அதாவது பண்டிதர்களைக் குறித்து ஆங்காங்கு சுவாமிகள் எழுதியிருப்பதும் வியாஸத்தில் சுமார் மூன்றிலொருபங்கு பண்டிதர்களைத் திட்டுவதிலேயே கழிந்திருப்பதாக நமக்குக் காணுகிறது. பழைய வழக்கப்படி படித்துள்ள பண்டிதர்களால் இனி ஆகவேண்டிய காரியத்திற்கு விசேஷ உபகாரமில்லையென்பது நாமெல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டியதுதான். ஆனால் அவர்களுக்குள்ளிருக்கும் அவலக்ஷணங்களுக்கெல்லாம் அவர்களையே ஜவாபுதாரிகளாக்குவது அக்கிரமமென்று நமக்குக் காணுகிறது. பாவம், அவர்கள் என்னசெய்வார்கள். "நண்டைப்பார்த்து, எங்கே, சற்றுப் பறந்து போ," என்றால் அதற்குப் பதில் அது என்ன சொல்லும்? "எனக்கு இறக்கை கொடுங்கள். நான் பறக்கிறேன்," என்றுதானே சொல்லும்? அதுபோலவே இவர்களும் பழைய வழியை அனுசரிப்பது பூராவும் அவர் குற்றமல்லவென்றும், பலதலைமுறைகளாகக் கூடி வந்திருக்கும் பாப மூட்டைகளையெல்லாம் இவர்கள் சுமக்கவேண்டி வந்திருக்கிறதென்றும் சுவாமிகளுக்கே நன்றாய்த் தெரியும். அவர்போன்ற புத்திமான்களுக்குக் கல்வி விஷயத்தில் இருந்த சௌகரியங்கள் பண்டிதர்களுக்கும் கிடைக்குமாகில், அவர்களும் பாஷை விஷயமாக வேறு வழியில் பரிசோதனைகளைச்செய்து உலகத்தவர்க்கும் தமக்கும் நன்மை விளைவித்துக் கொள்ளுவார்கள். கல்வி, கல்வியென்று ஏதோ பிரமையினால் அவர்கள் நிகண்டு, இலக்கண முதலியவற்றை உருவேற்றி வருவதைச் சொல்வதா? கற்றபின் பிழைக்க வழியில்லாமல் அவர்கள் தவிப்பதைச் சொல்வதா? முனிஷி உத்தியோகத்திலிருக்கும் சிலருக்குக் கிடைக்கும் சம்பளவைபவத்தைப் புகழ்வதா? இத்தனை அவாந்தரங்களுக்கிடையில் ஏதோ இந்தமட்டில் எழுத்துகளையும் பழங்காவியங்களையும் மறவாமல் வைத்துக்கொண்டிருப்பதற்காக நாம் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அதைவிட்டு அவர்களைக்கண்டபடி திட்டுவதில் ஒரு பிரயோஜனமுமில்லையல்லவா? "வினை விளைகாலமாதலில்," வெகு நாளையபாவங்கள் கூடித் தற்காலம் இப்பயனைக் கொடுத்திருக்கின்றன. இவைகள் பரிகாரமாகி, தேசியபாஷைகளுக்கும் நற்காலம் வரவேண்டுமானால், ஐயங்கார் சுவாமிகளைப்போன்ற புத்திமான்களும், வித்வான்களும், ஒழிவு கிடைத்தபோது பண்டிதர்களைத் திட்டிவிட்டுப் போவதுமட்டும் போதாது. தங்களுக்கு விஹிதமென்று காணும் இலக்கண நெறிகளைத் தாங்களே இலக்கியப்படுத்திப் பேசியும் எழுதியும் வரவேண்டும். அல்லாமல் அதற்கேற்ற பாடசாலைகளையு மேற்படுத்திப்



பண்டிதர்களுக்குத்தங்கள் மதத்தைப் புகட்டி, மஹாஜனங்களையும் அதையனுசரிக்கும் உபாயம் செய்தால் அவர்களுக்கெல்லாச் சுகிர்தமுமுண்டு. திற்க.

இனி வியாசத்தில் காணும் சாராம்சங்களையும், அவற்றிற்கு ஆதாரமாக சுவாமிகள் எடுத்துக்காட்டும் நியாயங்களையும் சுருங்கவுரைக்கின்றோம்.

மொத்தத்தில் பேசுமிடத்து, காலக்கிரமத்தில் தேர்ந்த பாஷைகள் ஒவ்வொன்றிலும் இருவகை நடை காணும். அவற்றிற்குப் பண்டிதநடை என்றும், பிராகிருதநடை என்றும் சொல்லலாம். தமிழை உதாரணமாகக்கொண்டால், சிந்தாமணி முதலிய இலக்கியங்களும், தொல்காப்பிய முதலிய இலக்கணங்களும், பண்டிதநடையைத் தெளிவிப்பன. சாமான்யமாய்ப் பண்டிதர், பாமரர், முதலிய சகலரும் தமக்குள் பேசிக்கொள்ளுங்கால் உபயோகப் படுவது பிராகிருத நடையாம். "நோக்கானபடியே நேக்கு," என்பதுபோன்ற வாக்கியங்கள் பிராகிருதநடையை விளக்குபவை. "ஊற்றுறழ் கடுப்பிற் கலிமான்றடந்தேர்," போன்றவைப் பண்டித நடைக்குச் சிறப்பாவன. இந்த நடையில் எழுதுவதும், பேசுவதும் யாரேனுஞ் சிலருக்குமட்டும் உபயோகமே தவிர, ஏனையோர்க்குச் சுவபாஷையாகவே காணாது. ஆனால் நமது பண்டிதர்களுக்கு இந்த இரகசியம் தெரிவதில்லை. ஆகவே சுப்பிரமணியக்கடவுள் தமிழை இலக்கண இலக்கியத்துடன் பண்டித நடையாக ஜோடித்துத் தங்கள் கையில் ஒப்புவித்திருப்பதாகச் சொல்லி வருகிறார்கள். அம்மட்டேயல்ல, பிராகிருத நடையை இந்தத் தெய்விக நடையின் திரிபு என்றும், அதையம்மாதிரி போலி நடையாகவொட்டாமல் தடுத்து, எல்லோரும் பண்டித நடையிலேயே பேசி எழுதும்படி செய்வது தமக்கு முக்கிய கடமையென்றும் நம்பி, அதற்காக வெகு பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் இவையிரண்டும் மதியீனம்.

ஏனெனில் நமக்குவேண்டிய உணவு பதார்த்தங்களையும், வீடு முதலியவற்றையும், வாகன வகைகளையும், வஸ்திராதிகளையும், ஆதியில் வெகு சாமான்னியதசையிலிருந்து சிறிது சிறிதாக நாம் நயமாக்கி வந்திருப்பது பிரத்தியக்ஷமல்லவா? மரவுரி, உலர்ந்த சருகு முதலியவற்றைப் போர்த்துக்கொண்டு ஒருகாலத்தில் திண்டாடினோம். பிறகு பருத்தியை நூலாக்கி வஸ்திரமாக நெய்து தரித்தோம். தற்காலத்திலோ பருத்தியிலும், பட்டிலும், சரிகையிலும் அற்புதம், அற்புதமாக உடையாக்குகிறோம். இப்படியே மற்ற விஷயங்களிலுமிருக்க, பாஷையொன்றுக்குமட்டும், வேறு நியாயங் கூறுவது புத்திமான்களுக்கு அழகல்ல. ஆதலால் அதிலும் முதன்முதல் பேசியது பலவகைத்தாக இலக்கணமின்றி யிருந்ததென்றும், பிறகு காலக்கிரமத்தில் புத்திமான்களுடைய முயற்சியால் இலக்கண மேற்பட்டதென்றும், அவ்விலக்கணத்திற்கு ஆதாரமாக முந்தியே இலக்கியங்களேற்பட்டதல்லாமல், இலக்கணமேற்பட்ட பின் அதன் விதிகளை யனுசரித்துக் கைகால்களுக்கு விலங்கிட்டுக்கொண்டு, பின்னிட்டுவந்த கல்விமான்கள் பண்டித நடையைப் பூர்த்தி செய்தார்களென்றும், சொல்லுதல்தான் சரியாக நடந்ததை விவரிப்பதற்கும் உலகத்தில் எந்தப் பாஷையைப் பரீக்ஷித்தாலும் இவ்வுண்மை வெளியாகும். ஆதலால் விவேகிகள் அனைவரும் ஜனங்கள் தங்களுக்கு உலகவியாபாரத்தில் பிரதி நிமிஷமும் உபயோகப்படும் பாஷையைக் 'கொச்சை' யென்றும், ஏதோ சில சந்தர்ப்பங்களில் மட்டும் சிரமப்பட்டு உபயோகித்து, சாமான்னியரொருவருக்கும் அர்த்தம் விளங்காததும், வழக்கத்தில் ஒருக்காலும் பிரயோஜனப்படாததுமான போலிநடையைத் தெய்விகமென்று கொண்டாடுவதும் உலகத்தில் நடக்கும் அற்புதங்களிலெல்லாம் அற்புதமாம்.

நாம் பேசுவதைக் கொச்சையென்று யார் சொல்லுவது?

‘இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்பல்,’ என்று இலக்கண நூலாசிரியரே கூறியிருக்கிறாரல்லவா? அதற்கானும் ‘இலக்கியம்’ என்பதற்குக்கற்றறிமூடருங் கற்றுக்குட்டிகளுமாகிய சிலர் அவரவர் மனோதருமம்போல் திரட்டிவைத்திருக்கும் ஐந்தாறு காவியங்களும், அவற்றுட்காணும் யமகமுதலிய கழைக்கூத்துகளுந்தான்,என யார் பொருள்கொள்வது? ஓ விவேகிகளே, இதெல்லாம் வெறும் பேச்சென்றறிக. “ஒவ்வொரு காலத்திலும் மகாஜனங்களுக்குள் சாமான்னியமாய் நடைபெறும்பேச்சே இலக்கியம்.” ஆதலால், ‘எடுக்கச்சே, போகச்சே, வரச்சே,” என்பனப் போன்றவை பண்டித இலக்கணத்திற்கு ஒவ்வாவிட்டாலும், தற்காலத்தில் எங்கும் வழங்கிவருவது கொண்டு அவற்றைச் சரியென்றே நாம் கொள்ளவேண்டும். “ட்ராம்வண்டிகள் இங்கு நிற்கப்படும்” “நான் ஒரு புஸ்தகத்தை உடைத்தாயிருக்கிறேன்,” என்பனவைகள் இலக்கண சம்மதமாகக் கண்டாலும், அவைகள் மஹாஜனங்களுக்குள் வழங்குவன வல்லவாதலால், தள்ளிவிடவேண்டும்.

பண்டிதருக் கிஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு பாஷைக்கு ஜீவகளையிருப்பதற்கு அடையாளமாவது அதில் விடாமலாகி வரும் மாறுதல்களேயாம். தமிழுக்கு இன்னும் ஜீவனிருப்பதாகச் சொல்வதற் கடையாளம் இது. பண்டிதர்களுடைய பதர்ப்பேச்சுகளைக் கவனியாமல் சாமான்னிய ஜனங்கள் தங்களுடைய அவசரத்துக்கேற்ற பதங்களைப் பலதிக்கிலுமிருந்து சேர்த்துக்கொண்டு, மேற்குறித்தபடி யிலக்கணத்தையும் லக்ஷியஞ் செய்யாமலிருப்பதாம். உதாரணமாக “இரட்டை” யென்று பொருள் கொள்ளும் இங்கிலீஷ் ‘ட்யூப்ளிகேட்’ என்பதை ரயிலில் வேலைசெய்யும் கூலியாட்கள் ‘துப்பட்டிக்காட்டு’ வண்டியென்கிறார்களே தவிர, இரட்டைவண்டி யென்பதில்லை. கோர்ட்டுகளிலும், ஷாப்புகளிலும், வேறு பல விஷயங்களிலும், இவ்வாறு பதங்களும் வாக்கியங்களும் வந்துகொண்டிருக்கின்றன. இதுதான் சரியாக நடக்கவேண்டிய காரியம்.

பண்டிதர்கள் முற்றும் உதவா நடை கரைக்காமலிருக்க வேண்டுமானால், பண்டித நடையும் சாமான்னிய நடையும் பரஸ்பர முதவவேண்டும். சாமான்னிய நடையை மறந்து ஜனங்களுக்கர்த்தமாகாமல் கழைக்கூத்துகள் ஆடுமளவிற்குப் பாஷையின் யோக்கியதை குறையும். போவதற்கொன்றுமில்லாமற்போகப் போகத்தான் பதர்ப்பேச்சு வளரும். ஆகலாற்றான் சென்ற ஆயிரவருஷங்களாகத் தமிழிலாகியிருக்கும் நூல்கள், தமிழ் நாட்டையாவது அந்த நாட்டாருடைய நடையுடை, சுக துக்கங்கள் முதலியனவற்றையாவது விளக்கிக் காட்டும் நன்னூல்களாவதில்லை. அநுபவமென்பதைச் சிறிதும் காணாக்கற்றறிமூடரியற்றிய நூல்களுக்கும் மஹா ஜனங்களுக்கும் சம்பந்தஞ் சிறிதுமின்றிப் போய்விட்டது விசித்திரமன்று. இங்கிலீஷில் ஷேக்ஸ்பியர் நாடக முதலியவற்றினின்றும் சாமான்னிய நடையில் பதங்களும், தொடர்களும், வசனங்களும் ஏராளமாய் விரவிவருவதுபோலச் சிந்தாமணி, கம்பராமாயண முதலிய நூற்களிலிருந்து சாமான்னியர் எத்தனையோ பெயர் பதவாக்கியங்களை விரவி உபயோகித்துப் பேசியோ எழுதியோ வருகிறார்கள்? வெகு அபூர்வமென்றால், குற்றம் யாருடையது?

யோசிக்குமிடத்து நடைபெறும் பாஷையொவ்வொன்றிலும் மூன்றுவித மாறுதல்கள் உண்டாகிக்கொண்டே வருகின்றன. முதலாவது ஒலி விஷயம். ஒலிமாறுவதினால் எழுத்துக்களும் மாறி ‘மரூஉ’ என்று இலக்கணத்தவர் தாஷ்யமாகக்கொள்ளும் வருக்கம் அதிகரிக்கிறது. இம்மரூஉ மொழிகளையும், வழக்குகளையும் தமது கல்விக்கும் பதவிக்கும் ஏலாதனவெனக்கொண்டு பண்டிதர் உயரப் பறந்ததினிமித்தமே யவர் ‘கூற்று’ யாருக்கு முதவாதாகிவிட்டது.



இரண்டாவது திசைச்சொற்களைக் குறித்தது. இங்கிலீஷ் படித்த சிலர் எங்குச் சேர்ந்து பேசியபோதிலும் நாலு வாக்கிய மாகுமுன் இங்கிலீஷ்பதங்களில் அனேகத்தை விரவியே பேசி வருகிறார்கள். இதுதான் புத்திசாலித்தனம். இதுதான் சகஜம். ஏனெனில் இங்கிலீஷ் பதங்களால் அவர் குறிப்பு எவ்வளவு தெளிவாய் விளங்குமோ, அப்படித்தமிழ் முதலியவற்றால் விளங்குவதானால், அவர் அப்படிச் செய்யமுயலாரன்றோ? என்றாலும், அவர்கள் எழுத ஆரம்பித்தால், பழைய பதிவு வந்துவிடுகிறது. பேசுவதுபோலவே இங்கிலீஷ் கலந்தெழுதினால் ஏதாகிலும் பாபம் வந்துவிடுமோவென்று பயந்து கொள்ளுகிறார்போலும்! இங்கிலீஷ் அகராதியைப்பாருங்கள். அதுபூதாகாரமாயிருப்பதற்குக் காரணமென்ன?பலதிக்கிலுமிருந்து சொற்களைவிடாமல் கைவசமாக்கிக் கொள்வதேயல்லவா? திராவிடநாட்டில் சம்ஸ்கிருதப்பதங்களும், இந்துஸ்தானி முதலிய பாஷைகளிலிருந்து வந்தபதங்களும் சாதாரணமாக வழங்கிவருவது பிரத்தியக்ஷம். ‘தயார்,’ ‘பெட்டி,’ ‘பைசா,’ முதலியன. அப்படியிருக்க இங்கிலீஷ் பதங்களுக்கு மட்டும் என்ன யோக்கியதை குறைந்து நாம் அவைகளைப் புறம்பாக்குவது? சம்ஸ்கிருத பதங்கள் நமக்குள் வந்துறைவதற்குள்ள நியாயங்களெல்லாம் இங்கிலீஷ் பதங்களுக்கும் பொருந்தும். ஏனெனில் அவை யிரண்டும் ஒரே வமிசம்; அண்ணன் தம்பி பெற்ற குழந்தைகளேயாம். ஆதலால் சாமான்னியப் பேச்சிலாவது, கலைவகையிலாவது, திராவிடநாட்டில் பதங்களில்லாமலோ, இருப்பவைகளுக்கு நமது குறிப்பை விளக்கத்தக்க சக்தி குறைந்தோ காணுந்தோறும் இங்கிலீஷ் பதங்களைத் தாராளமாய் உபயோகித்து அப்பாஷைகளை முன்னுக்கொண்டு வர யத்தனிப்பதே விவேகிகளுக்கு லக்ஷணம். அதைவிட்டுக் ‘கரி அமிலவாயு,’ ‘சமநேர்கோட்டுருவம்,’ முதலிய விவேகமற்ற உமித்தொடர்களைக் கட்டிக்கொண்டு அழுவது பெரிய முட்டாள்தனம். இங்கிலீஷ்காரர்களுக்குள்ளும் லேசான பதங்களை விட்டுப் “படாடோபத்திற்காக”ப் பெரும் பதங்களைத் தேடும் துர்வழக்கமுண்டு. என்றாலும் இந்தியாவிலுள்ள முழு மோசம் எங்குமில்லை. ஆதலால் இவ்விஷயத்தில் நாம் செய்யவேண்டியது இது. புதிதாக வருங் கலைகளுக்குப் பரிபாஷைகள் வேண்டியிருந்தால் சிறிதுங் கூசாமல், அவைகளையெல்லாம் இங்கிலீஷிலிருந்து உள்ளபடி வரவழைத்துக் கைவசமாக்கிக்கொள்வதுதான். ‘ரயில்,’ ‘இஞ்சின்,’ ‘பைசிக்கில்,’ ‘மோட்டார்,’ என்னும் பதங்களை அப்படியே உபயோகிப்பது நலமா, அல்லது, ‘தூமசகடம்,’ ‘துவிசக்கிரம்’ முதலிய பதங்களைச் சிருஷ்டித்து உபயோகிப்பது நலமா, என்று விவேகிகளைக் கேட்கவேண்டுவதில்லை.

மூன்றாவது இலக்கணமுறையிலுண்டாகும் மாறுதல்களாம். ‘நான் புதைக்கப்பட்டேன்,’ ‘வீடு கட்டப்பட்டது,’ ‘என்னால் வாழப்பட்டது,’ முதலிய வழக்குகள் திராவிட நாட்டிற்கு ஆனவைகளேயல்ல. ஆதலால் இவற்றையொழிக்கவேண்டும். சந்திகளை வேண்டுமட்டுஞ் சேர்த்துப் பெருந்தொடர்களாக்குவது சாமான்னியப் பேச்சில் காணுவதில்லை. ஆதலால் அவைகளையும் தள்ளவேண்டும். வாக்கியங்களை முடிக்காமல் ஒவ்வொரு கதைக்கு ஒரே வாக்கியமாக ஜோடிப்பதில் யாருக்குப் பிரயோஜனமென்பது விளங்குவதில்லை. ஆதலாலித்தியாதி விபரீதங்களை யொழித்து மஹாஜனங்களுக்கு உபயோகமாகும்படி பேசியும் எழுதியும் வரவேண்டுவதே இனி ஆகவேண்டிய காரியம். இது நிறைவேண்டுமானால் விவேகிகள் கவனிக்கவேண்டிய விதிகள் இவை:

1. சாமான்னிய ஜனங்கள் கலந்து பேசும் பொழுது, (பதங்களை அவசரத்தினால் மழுக்

காமல்) நிதானித்துப் பேசும் நடைக்கும், எழுதும் நடைக்கும் இப்பொழுது காணும் பேதங்கள் கூடியமட்டில் இல்லாமலே பார்க்கவேண்டும்.

2. (ஆணையிடுதல், சபதங்கூறுதல் முதலியவற்றிற்காணும் இடக்கர் மொழிகளை நீக்கி,) கல்வி, ஒழுக்கம், குலம் முதலியவற்றிற் பெரியோர் தத்தங் காரியங்களாக வேண்டிய இடத்துப் பேசும் நடை (இலக்கண விதிகளுக்கிணங்காமற் போனாலும்) சரியானதே. அம்மட்டேயல்ல, அந்த நடையில்தான் ஜீவகளையிருப்பது. ஆதலால் காவியாதிகளிலுபயோகப்படவேண்டிய நடையும் அதுவேயாம்.

3. வடமொழிக் கிளைகளிலிருந்து (சம்ஸ்கிருதமாகிலும் சரி, நடைபெறும் பிராகிருதங்களாகிலும் சரி,) முந்தியே திராவிட நாட்டில் குடியேறிக் கலந்திருக்கும் அவசிய பதங்களொழிய, அனுவசியமாய் வந்திருக்கும் பெரும் பதங்களையும் தற்காலம் வந்துகொண்டிருக்கும் அனுமார் வால்போன்ற தொடர்களையும் போக்கடிக்கவேண்டும்.

4. சுலபமானதும், உரைவேண்டாததும், வெறும் யுக்தியினால் ஜோடிக்கப்படாததுமான தேசீயபதங்கள் ஏலாதவிடத்தெல்லாம், அங்கிலேய பரிபாஷைகளைத் தாராளமாக வுபயோகித்துப் பழக்கவேண்டும்.

5. நாம் அங்கிலேயர் பள்ளிக்கூடங்களில் படித்து, அங்கிலேய காவியாதிரஸங்களை நுகர்ந்து, அவற்றிலுள்ள அதிசூட்சுமமான ரஸவிசேஷங்களை இங்கிலீஷ் தெரியாத நம்மவர்களுக்குப் புகட்டவேண்டி வந்திருப்பதில், இங்கிலீஷ்பதங்களே அவற்றை நன்கு விளக்குமாகில் அப்பதங்களையும் தாராளமாய் உபயோகித்து சுவதாக்கிக்கொள்ளவேண்டும்.

6. எழுத்து நடையில், (இலக்கணத்திற் காணவிட்டாலும்) வேரூன்றிய சந்திப்புதுமைகளை யுபயோகித்து வரவேண்டும்.

7. வாசிக்கும்போது நிறுத்த வேண்டிய இடங்களைக் காட்டுங்குறிகளே சுகமாய்ப் படிப்பதற்கு முதற்கருவியாவன. ஆதலால், அவைகளை நேராயுபயோகித்து, படிப்புக்கு மிருத்தியுவாக ஏற்பட்டிருக்கும் சந்திப்பீடையைக் கட்டோடே விட்டுவிடவேண்டும்.

ஆகவே, இவ்விதிகளை யனுசரித்து வந்தால் தேசீயபாஷைகள் இனிப் பல்லாண்டு செழித்து வாழலாம். இவைகளை நிராகரித்துப் பழைய வழியிலேயே போய்க்கொண்டிருந்தால், அவைகள் நாசமாய்த்தான் போகவேண்டும்.

இதுவரை ஐயங்கார் சுவாமிகளுடைய கருத்தைச் சுருக்கி யுரைத்தோம். மற்றது மேலை மாசத்தில் காணும்.

---

## பிணத்தைப் பிழைக்க வைப்பது

சில வருஷங்களுக்கு முன் அமெரிக்காக்கண்டத்தில் ஒரு பெரிய வைத்தியர் ஜலத்தில் மூழ்கி இறந்துபோனவர்களை இறந்துபோன ஒருமணி நேரத்துக்குள் உடம்பு முழுவதையும் உப்பைப் போட்டு மூடிவிட்டால் உயிர் வந்துவிடுமென்று சொன்னார். ஈயையும் இன்னும் சில ஜெந்துக்களையும் அடித்துக் கொன்று மறுபடி உப்பைத் தடவி உயிர்ப்பித்திருக்கிறார்களாம். ஆனால் இந்தமாதிரி செய்து இறந்துபோன மனிதனை உயிர்ப்பித்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது நியூயார்க் பட்டணத்தில் லூசி ரோபினோவிட்ச் என்னும் ஒரு வைத்திய ஸ்திரீ மின்சாரக் கருவியொன்று கண்டுபிடித்திருக்கிறாளாம். இதைக் கொண்டு செத்துப்போனவைகளை உயிர்ப்பிக்கலாமென்று சொல்லுகிறாளாம். போன நவம்பர் மீ 19உ எடிசனுடைய வஸ்து சோதனை சாலையில் பல வைத்தியர்களும் சாஸ்திரிகளும் கூடினார்கள். அப்பொழுது ஒரு முயலை மின்சாரத்தைவிட்டுக் கொன்றார்கள். இந்த முயல் செத்துப்போய்விட்டது என்று அங்கு உள்ளவர்களெல்லாம் சொன்னபின்பு, மேலே சொல்லிய வைத்தியஸ்திரீ தன்னுடைய கருவியை முயலின் ரத்தாசயத்தின் மேலும் முதுகெலும்பின் அடியின்மேலும் வைத்து மின்சாரத்தைச் செலுத்தினாளாம். மூன்று நிமிஷத்தால் அந்தமுயல் மூச்சுவிட ஆரம்பித்ததாம். அரைமணிக்குள் எல்லாரும் கூடிப் பார்த்துக்கொண்டிருந்த அறையில் நடக்கவும் செய்தனளாம். இந்த விதமாகச் செய்தால் இறந்த மனுஷர்களையும் பிழைக்கச் செய்யலாமென்று சொல்லுகிறாளாம்.



# விறகுவெட்டியும் வித்வசபையும்

ஜே. எஸ். மாசிலாமணிப் பண்டிதர்

சிறப்புப்பாயிரம்

(கட்டளைக் கலித்துறை)

வீடக மாப்புவி மேனார் வாழப்பூ மேவியவன்
ஆடக மாப்பதந் தாழ்ந்தன் றருங்கலை யார்ந்தகம்பர்
காடக மாப்பெற வேடன் கவிக்குரை காட்டியதை
நாடக மாத்தமி ழானல மாக நடாத்துவனே.

## அவையடக்கம்

(கொச்சகக் கலிப்பா)

கம்பர்முதல் வல்லோர் கவிபாடல் கண்டுமுன்னான்
கொம்பருது சென்னிக் குன்றவனுந் தன்கவியால்
அம்பரிசு மார்புகழு மாங்கடைய வெண்ணலொக்
இம்பரியா னிர்று வியற்றியது காணீரே. [கும்

(நாடகபாத்திரங்கள்)

குலோத்துங்க சோழராஜன்
சிங்கன் என்ற விறகுவெட்டி
அமிர்தகவிராயர் என்ற இயற்றமிழ்ப் புலவர்
கவிராஜ பாவலர் என்ற இசைத்தமிழ்ப் புலவர்
நடராஜ நாவலர் என்ற நாடகத் தமிழ்ப்புலவர்
கம்பர்
ஒட்டக்கூத்தர்
புகழேந்தி
ஔவையார்
வேறுபல புலவர்கள், மந்திரி, சிங்கன் மனைவி, வேடன், சேவகர் முதலியோர்.

கதைநிகழ்விடம்—உறையூரும் அதன் சுற்றுப்புறமும்.

கதை நிகழ்காலம்—சுமார் 1000-வருஷங்களுக்கு முன்.

### சூத்திரதார்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழிச் செல்வர்காள்! உங்கள் அனைவர்க்கும் எனது வந்தனம்.

நன்கு நடிக்கப் பெறுவது மகாகவியாகிய கம்பரது சரித்திரத்தின் ஒரு பகுதி, சமஸ்கிருத பாஷைக்குக் காளிதாச மகாகவியும், கிரேக்குப் பாஷைக்கு ஹோமர் என்றபாவலரும், ஆங்கில பாஷைக்குஷேக்ஸ்பியர் என்றநாடகாசிரியரும், மில்ட்டன் என்ற காவியாசிரியரும்போல, என்றும் அழியாப் புகழுடம்புபெற்று, தமிழ்பாஷைக்குச் சிரோரத்னம் என்னலாம் படியான ராமாயணத்தின் கிரந்த கர்த்தாவும், கவிச்சக்கிரவர்த்தியென சிறப்புப்பெயரெய்தியவரும், கல்வியிற் பெரியவர் கம்பர் என இலங்கணங்களிலும் உதாரணம் எடுத்தோதப் பெற்றவருமான இம் மகானுபாவ புலவர் சிகாமணி செழித்தோங்கியநாடு வடக்கே சோழதேசம், காலம் சாலிவாகன சகாப்தம் ஒன்பதாம் நூற்றாண்டு, என்றால், இற்றைக்கு ஏறக்குறைய 1000-வருஷங்களுக்கு முன்னாகும்.

இனி, ஈண்டு நடத்தப்பெறும் கதாசாரமாவது சோழராஜதானியாகிய உறையூருக்கருகே ஒருசிறு கிராமவாசியான சிங்கன் என்ற விறகுவெட்டியின் மனைவி, சோழராஜாவின்மேல் கவிபாடிப் பரிசுபெற்றுவந்து சுகமே வாழ்வார் பலபுலவர்களைக் கண்ணுற்று ஏக்கமுற்றவளாக, தன்புருஷனைநோக்கி, நீயும் கவிபாடக்கற்றுக் கொண்டுவந்து, அரசன்மேல் பாட்டுப்பாடிப் பரிசுபெற்றுவந்தால், நமது தரித்திரம் ஒழியும் என்ன, அம்முழுமகனும்,

காரிகை கற்றுக் கவிபா டுவதிலும்
பேரிகை கொட்டிப் பிழைத்தல் நன்றே.

என்பதை அறியாமல், கவிபாடல் சுலபமென நினைத்துக் காட்டுக்குச் சென்றானாக, வழியில் சிறுவர் விளையாடல், காகங்கத்தல், குயில்கூவல், முதலாகத்தான் கண்டன கேட்டன யாவற்றையும் ஒன்றாக அடுக்கிக்கொண்டு, அதையே பாட்டெனநினைத்து காட்டினுட் புக்கானாக, ஆங்கு அவனது நண்பனான ஒருவேடன் அவனைக்கண்டு "எங்குச்செல்கிறாய்" என, சிங்கன், "நான் கவிபாடக் கற்றுக்கொள்ள வந்தேன், நீயும் ஏதாவது சொல்லித்தா" என, அவன் "எனக்கென்ன தெரியும், ஏதோ கன்னுப் பின்னு என்ற படி" என, விறகு வெட்டி

அதையும் பாட்டென நினைத்து முன்னுள்ளதோடு கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்து மனைவியிடம் பாட, அவள் சற்றே புத்திசாலியாகையால், அவசியம் இருக்கவேண்டிய அரசன் பெயர் அதில் இல்லையென்று கண்டு, அதையுஞ் சேர்த்து, அவனை அவ்விடம் நின்றனுப்பினளாக, அவ்விறகுவெட்டிச் சிங்கனும் சற்றேனும் அச்சமில்லாமல், மந்திரி சகிதமாய்க் குலோத்துங்க சோழமகாராஜாவின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய புலவர்களெல்லாம் கூடிய உறையூர் வித்வசபா மண்டபம் புகுந்து தான் பாடியுள்ள கவியை மடமடவென்றுபாட, அரசன் நகைத்தும், மந்திரி திகைத்தும், பாவலர் கோபித்தும் இருப்ப, கம்பர் எழுந்து, "இவர் ஒரு மகா வித்வான், இவரை இகழாதீர், இவரது கவிக்கு அர்த்தம் சொன்மின்" என அவனிலும் இவரே பெரியபைத்தியக்காரர் என்று பாவலர் எல்லாம் பகடிபண்ண, கம்பர் அவன் பாட்டிற்குப் பதவுரை, பொழிப்பு, பதசாரம் இலக்கணக்குறிப்பு, மேற்கோள் முதலிய யாவுங்காட்டிச் சமர்த்தித்தார். அகமகிழ்ந்த அரசன் கம்பரை மெச்சி விறகுவெட்டிக்கும் சகல மரியாதையுஞ் செய்து அனுப்பினான். பின்னர் கம்பர் சகவாசத்தால் அவ்விறகுவெட்டிச் சிங்கனும் தமிழில் மகா பண்டிதனாகி, கவிச்சிங்கப் புலவர் என்னும் சிறப்புப்பெயரோடு இனிது வாழ்ந்திருந்தான் என்பது.

இச்சரிதம் கம்பரது தாற்பரிய மகாஞான சாமர்த்தியத்தைத் தெரிவிப்பதோடு தமிழின் அருமையையும், பண்டை நாட்களில் அது பரிபாலிக்கப்பட்டு வந்த விதத்தையும் ஒருவாறு காட்டும்.

இதனைக்கண்ணுறும் பெரியீர். நீர் பிரித்துப் பாலுண்ணும் அன்னம்போல், இதன்கண் உளதாகக்கூடிய குறைகளைப் பாராட்டாது, குணத்தையே கொள்வீர்களாக. என்னை,

நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவுக்கு முண்டு,

என்பது ஆன்றோர் வாக்காதலின்—வந்தனம்,

## முதலாங்காட்சி

இடம்—விறகுவெட்டியின் வீடு.
காலம்—பிற்பகல்.

[விறகுவெட்டிச் சிங்கனும் அவன் மனைவியும் வெவ்வேறு பக்கங்களினின்று வருகின்றார்கள்.]

சிங்கன் மனைவி.—என்ன இப்போதுதானா வருகிறாய்? [இதுவும் மேலிரண்டு காட்சிகளும் வாசிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும் வண்ணம் கூடியவரை இலக்கண நடையிலே எழுதப்பட்டுளதேனும், நடிக்கப்பெறும்போது, நாட்டுப்புறத்துக்கு ஏற்றபடியே நடிக்கப்படல் வேண்டும்.]

சிங்கன்.—ஆம் ஆம், என்ன பண்ணுகிறது? விறகு விற்கிறதென்றால் என்ன, அத்தனை லேசா, விறகோ விறகு, விறகோ விறகு என்று எத்தனை தரமோ கத்திக்கத்திக் கூவினாலும், ஏனென்று கேட்பார் எவரும் இல்லை. அரைப் பணத்துக்குத் தருகிறையா. அரையரைக் கால் பணம் வைச்சுக்கொள்கிறையா. முக்கால் பணத்துக்கு வருமா என்று கேட்கிறார்கள். கடைசியாய்ப் படாத கஷ்டமெல்லாம் பட்டுக் கெஞ்சாத கெஞ்செல்லாம் கெஞ்சி ஒரு பணத்துக்கு விற்றுவந்தேன்.

மனைவி.—அதென்ன முடிச்சு?

சிங்கன்.—அதுதான் நீ சொன்னாயே, ஒரு துட்டுக்கு உப்புப்புளி வெங்காயம், அரைத் துட்டுக்குச் சருகு போயலை பாக்கு இதுகள் வாங்கிக்கொண்டு, அப்படியே கம்மாளத் தெருவுக்குப் போய், அன்றைக்குச் சண்முகனாசாரியிடம் துவையக் கொடுத்திருந்த கோடாலியையும் வாங்கிக்கொண்டு வருகிறேன். அந்தப் படுபாவி இந்தக் கோடாலியைத் துவைகிறதுக்கு ஒரே சாதனையாய்ச் சாதிச்சு நாலரைத் துட்டு வாங்கியே போட்டான். பாக்கி ஒன்பது சல்லியும் இதோ கொண்டுவந்திருக்கிறேன். அப்பா என்ன வெய்யில்! என்ன கஷ்டம்! இந்தக் கஷ்டப்பட்டும் கையில் காசு நின்ற பாட்டைக் காணோம்.



மனைவி.—என்னாங்காணும் வீட்டுக்காரரே, எத்தனை நாட் சொன்னாலும் கேட்கவேமாட்டேன் என்கிறாயே. இப்படியிருந்தால் நம் தரித்திரம் என்றைக்குத்தான் தொலைகிறது. எப்படித்தான் தொலைகிறது. என்றைக்குத்தான் நாமும் நாலாம் பேரோடு அஞ்சாம்பேராய் முன்னுக்கு வருகிறது. எதிர்த்தவீட்டு இருஞ்சடையனைப் பாரு. அடுத்தவீட்டு ஆதியப்பனைப் பாரு. பக்கத்துத்தெரு பழனியாண்டியைப்பாரு. அவர்கள் சொத்துச்சுதந்தரங்களென்ன, வீடு வாசலென்ன, ஆடுமாடு கன்று காலிகளென்ன, நிலங்கரை காணி பூமி தோட்டம் துரவுகளென்ன, அவர்கள் பெண்டாட்டி பிள்ளைகள் இருக்கிற மாதிரியைப் பாரு. அவர்கள் சேலைத்துணிகளென்ன, நகை நட்டுகளென்ன, அவர்களெல்லாம் இப்படியிருக்க நம்மைப் பாரு. அட, இருக்கத்தான் ஒரு நல்ல வீடு வாசலுண்டா? அல்லது கட்டிக்கொள்ளத்தான் ஒரு நல்ல துணிமணியுண்டா? அல்லது காதிலே கழுத்திலே, ஏதாவது நகை நட்டுப் பொட்டுப் பொருளுண்டா? இந்த மாதிரி எத்தனை நாளைக்குத்தான் காலம் தள்ளுகிறது?

சிங்கன்.—அதற்கு என்னை என்னடி பண்ணச் சொல்லுகிறாய்? அதைச் சொல்லேன்.

மனைவி.—அதுதான் நான் ஆதிமுதல் சொல்லிக்கொண்டே வருகிறேன். எங்கேயாவது போய், எப்படியாவது, கவிபாடக் கற்றுக்கொண்டு வந்து ராஜாமேலே பாட்டுக்கட்டி, அவரிடம்போய் அடிக்கடி இனாம் வாங்கிக்கொண்டு வந்தால் நம் தரித்திரம் தொலைந்து போம். பரமாயி புருஷனைப் பாரு. சும்மா சும்மா ராஜாவிடம் போகிறது. பாட்டுப் பாடுகிறது. பரிசு வாங்குகிறது. இதுதான் வேலை. அவளிருக்கிற மாதிரியையும்பாரு. நாம் இருக்கிற மாதிரியையும் பாரு. சரி. என்பாடு இப்படி இருக்கட்டும். உன் பாட்டைத்தான் பாரேன். கால்வயிறு கஞ்சியைக் கரைச்சுக் குடிச்சுவிட்டு, கால் கடுக்கக் காட்டுக்கு நடந்து கல்லிலும் முள்ளிலும் காட்டிலும் மேட்டிலும் சுற்றித்திரிஞ்சு கை கடுக்கக் கோடாலி பிடிச்சு வெட்டி, தோள் கடுக்கச் சுமந்துகொண்டு வந்து தெருத்தெருவாய் அலைஞ்சு திரிஞ்சு வித்துக்கித்துப் பார்த்தாலும், அரைவயிற்றுக் கஞ்சிகூட ஆகவில்லை. எண்டாப்பா! இத்தனைபாடு. எங்கேயாவது போகிறது. பாட்டுக் கட்டப்படிக்கிறது, ராஜா கிட்டப்போகிறது, பாடுகிறது. கொடுக்குங் கொடையை வாங்கிக்கொண்டு வருகிறது. தீர்ந்தது எல்லாம். இதைச்செய்யென்றால் ஒன்றையுங் காணோம்.

சிங்கன்.—செய்யலாம் செய்யலாம்.

மனைவி.—என்றைக்கு.

சிங்கன்.—என்றைக்காவது ஒரு நாளைக்கு.

மனைவி.—சரித்தான். உனக்கு இதுதான் தெரியும். இப்போப் போகிறேன், அப்போப் போகிறேன், இந்தா போகிறேன், அந்தாபோகிறேன், என்கிறது. நெருக்கிக் கேட்டால் நாளைக்குப்போகிறேன் என்கிறது, நாளைக்கு, நாளைக்கு, நாளைக்கு, அந்த நாளைக்கு; என்றைக்குத்தான் வருமோ? இங்கேபாரு, இதெல்லாம் இனிமுடியாது, நான் ஒரே தீர்மானம் செய்தே போட்டேன். இதோ ஒரு நொடிக்குள்ளே கட்டிச் சோறு கட்டி விடுகிறேன். நீ அவசியம் புறப்பட்டுப் போய்க் கவிபாடக் கற்றுக்கொண்டு வரவேண்டியது.

சிங்கன்.—நிசந்தானா?

மனைவி.—நிசந்தான்.

சிங்கன்.—கட்டாயமா?

மனைவி.—கட்டாயமாய்.

சிங்கன்.—இல்லா விட்டால்?

மனைவி.—இல்லாவிட்டால் வீட்டுக்குள்ளேயேவரக்கூடாது. பார்த்துக்கொள். அடைத்த கதவையும் திறக்கமாட்டேன். போட்ட தாழ்ப்பாளையும் எடுக்கமாட்டேன்.

சிங்கன்.—அப்படியா?

மனைவி.—அப்படித்தான். நீ வேணுமென்றால் பாரேன்.

சிங்கன்.—அப்படியென்ன, பாட்டுப்பாடுகிறது ஒருமலையா? எப்பேர்ப்பட்ட பெரிய மரங்களையெல்லாம் வெட்டிப்போடுகிறேன். எவ்வளவு கனத்த பாரத்தையெல்லாம் தூக்கிவிடுகிறேன். கவிபாடுகிறது ஒருகஷ்டமா? ஏதோ எடுத்தேறிப்போக வேணுமேயென்கிறது தான் கொஞ்சம் மலைச்சேன். சரி, நீ கட்டிச் சோற்றைக்கட்டு, நான் புறப்படுகிறேன்.

மனைவி.—சரி, சரி. இதல்லோ ஆண்பிள்ளைக்கழகு.

## இரண்டாம் காட்சி

இடம்—காடு.

காலம்—மதியம்.

[விறகுவெட்டிச் சிங்கனும் அவன் நண்பனான வேடனொருவனும் சந்திக்கின்றார்கள்.]

ராமன்.—ஏண்டா சிங்கா?

சிங்கன்.—என்னடா ராமா?

ராமன்.—எங்கடாப்பா போகிறை கட்டிச் சோறுங்கையுமாய்? வெகு தூரமோ?

சிங்கன்.—இல்லை. இப்படிக் கொஞ்சம் வந்தேன்.

ராமன்.—ஜோலி?

சிங்கன்.—கவிபாடக் கற்றுக்கொள்ள.

ராமன்.—அடடா கவிபாடக்கற்றுக்கொள்ளவா வந்தை. ரெம்பநேர்த்தி. எது அந்தத் துறையிலே இறங்கிவிட்டாய்?

சிங்கன்.—ஏதோ மனசு அப்படிப்போச்சு. அந்தவழியிலே தானே நாமும் போகணும்.

ராமன்.—அடடா! புத்திசாலி, ஏதாவது கவிகிவி கட்டியிருக்கிறாயா?

சிங்கன்.—ஆகா கட்டியிருக்கிறேன்.

ராமன்.—யார் கற்றுக்கொடுத்தது?

சிங்கன்.—இதென்ன இப்படிக் கேட்கிறாய். அறிவாளிக்குக் குருவென்னத்துக்கு? நானே தான் கட்டினேன். இதெல்லாம் என்ன எனக்கொரு துரும்புதானே.

ராமன்.—உன் சாமர்த்தியம் வருமா. எப்படிக் கட்டினாய், என்றுதான் சொல்லேன்.

சிங்கன்.—வீட்டிலிருந்து காட்டுக்கு வந்தேன். வருகிற வழியில் சின்னப்பிள்ளைகள் பொம்மை வைத்து விளையாடிக்கொண்டு மண்ணுண்ணி மாப்பிள்ளையே என்று சொல்லக் கேட்டு அதை ஞாபகம் பண்ணிக்கொண்டேன். அப்புறம் போனேன். ஒரு ஆலமரத்தடியிலே பிள்ளையார் இருந்தார். உடனே ஆலமர நாயகனே என்றேன். அப்புறம் அந்தப் பிள்ளையார் கோவிலிலே ஒரு பெருச்சாளி ஓடக்கண்டு உங்களப்பன் கோவிற் பெருச்சாளி என்றேன். அப்புறம் காலையிலே காக்காய் காவென்று கத்தக்கேட்டுக் காவிறையே என்றேன். அப்புறம் சோலையிலே குயில் கூவென்று கூவக்கேட்டுக் கூவிறையே என்றேன். தீர்ந்தது பாட்டு.

ராமன்.—அடே இதுவும் நல்ல மாதிரிதான். எங்கே பாட்டை முழுதும் படி பார்ப்போம்.

சிங்கன்.—[நாட்டுப்புற ராகத்தில் பாடுகின்றான்.]

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்கள் அப்பன் கோவிற் பெருச்சாளி
காவிறையே கூவிறையே.

பாட்டு எப்படி இருக்கிறது.

ராமன்.—ரெம்ப நேர்த்தி; ரெம்ப நேர்த்தி.

சிங்கன்.—அடே ராமா நீயுங் கொஞ்சஞ் சொல்லித்தாவேன்.

ராமன்.—எனக்கென்னடா தெரியும் சிங்கா?

சிங்கன்.—ஏதோ தெரிஞ்சதை.

ராமன்.—என்னவோ கன்னைப் பின்னை மன்னுத்தென்னு என்று படியேன்.

சிங்கன்.—அப்படியே படிக்கிறேன். என்ன அதோடு சேர்த்துக்கொள்ள வேண்டியது தானே. என்னடா சொல்கிறை ராமா? இவ்வளவு போதும். இதற்குமேலே பாடினால் பாட்டும் நீளமாய்ப்போகும். கேட்கிறவர்களுக்குப் புளிச்சுப்போகுமல்லோ.

ராமன்.—வாஸ்தவம், வாஸ்தவம், அப்புறம் சிங்கா நீ என்ன இந்தப்புறம் போகிறையோ, நான் அந்தப்புறம் போகிறேன், போய் வரட்டுமா.



சிங்கன்.—நீ அந்தப்புறம் போகிறாயாக்கும். சரி போய்விட்டுவா. எல்லாம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். [வேடன் போய்விடுகின்றான்.] எல்லாம் தொட்டால் தீர்ந்தது.

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்கள் அப்பன் கோவிற் பெருச்சாளி
காவிறையே கூவிறையே
கன்னைப் பின்னை மன்னுத் தென்னு.

## மூன்றாங்காட்சி

இடம்.—விறகுவெட்டியின் வீடு.

காலம்.—காலை.

[விறகுவெட்டியின் மனைவி வருகின்றாள்.]

சிங்-மனைவி.—திங்கள் ஒன்று, செவ்வாய்ரெண்டு, புதன் மூன்று. மூன்று நாளாகியும் போன மனுஷன் வரக்காணோமே. அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையும் போய்விட்டது போலவும், உருட்டிக் கொட்டப் போய் உள்ள தாளமும் போய்விட்டதுபோலவும், ஏதோ வீட்டிலிருந்தாலும் விறகுவெட்டியாவது வயிற்றுப்பாடு சரியாய்போகும். இப்போ அதுவும் போச்சு. பிள்ளை வரத்துக்குப் போய்ப் புருஷனை இழந்தாளென்ற பழமொழி போல, போன மனுஷனுக்குத்தான் என்னமோ ஏதோவென்று மனம் துள்ளித் துடிக்குதே. காடோ செடியோ, மேடோ பள்ளமோ, ஆறோ குளமோ, புலியோ சிங்கமோ, பாம்போ பல்லியோ, பேயோ பிசாசோ, ஐயையோ எத்தனைதான் இழவு காட்டிலே இருக்கிறது. பாவம் சும்மா வீட்டிலிருந்த மனுஷனை நானல்லவோ வலியப் போகச்சொன்னேன். மனமெல்லாம் பதறுதே. [சற்று தூரத்தே வருகின்ற சிங்கனைப் பார்க்கிறாள்] ஓகோ அவருக்கும் வயசு நூறுதான். இன்னும் காணோமே என்று சொல்லி வாய் மூடுவதுக்கு முன்னே வந்துவிட்டார். ஏதோ முகத்தைப் பார்க்கும்போதே பாட்டுக்கட்டிக் கொண்டு வருகிறாற்போல்தான் தெரிகிறது. [சிங்கன் வருகின்றான்]

வா வா வீட்டுக்காரரே! சாமி தயவாலே சேமமாய் வந்தையே. அதுவே போதும். உன்னைப் பார்க்கும்போதே போன காரியமும் பழந்தான்போல இருக்கிறது. எங்கே! பாட்டுக் கட்டிக்கொண்டு வந்தையோ?

சிங்கன்.—இதென்ன நீ கூட இப்படிக் கேட்கிறாய்?

மனைவி.—ஏன், ஏன்?

சிங்கன்.—இதென்ன இதற்கென்று கட்டிச் சோறு கட்டிக்கொண்டு கவிபாடக் கற்றுக் கொள்ளக் காட்டுக்குப் போகிறது. வெறுங் கையை வீசிக்கொண்டு திரும்பி வருகிறதா? என்னை யாரென்று நினைத்தாய்?

மனைவி.—ஏதோ தெரியாமல் கேட்டுவிட்டேன். கோபித்துக்கொள்ளாதே. கட்டின பாட்டும் நல்லதுதான் போல இருக்கிறது. எப்படிக் கற்றுக்கொண்டாய்?

சிங்கன்.—வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

மனைவி.—இல்லை, தெரியாமல்தான் கேட்கிறேன்.

சிங்கன்.—அறிவாளிக்குக் குருவென்னத்துக்கு என்று பழமொழி கேட்டதில்லையோ? நானேதான் பாடினேன். கடைசியிலேமட்டும் நச்சம்பட்டி ராமன் கொஞ்சம் சேர்த்துக் கொடுத்தான்.

மனைவி.—எங்கே, கட்டிய கவியைப்பாடேன் பார்ப்போம்.

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்களப்பன் கோவிற் பெருச்சாளி
காவிறையே கூவிறையே
கன்னைப் பின்னை மன்னுத் தென்னு.

மனைவி.—என்னுங்காணும் வீட்டுக்காரரே, பாட்டு ரெம்ப நேர்த்தியாய்த் தானிருக்கிறது. ஆனால், இதென்ன பரம்பரை ஆண்டியோ பஞ்சத்துக்காண்டியோ, என்று பழமொழி சொன்

ஞற்போல, பேரையுங்காணேம் ஊரையுங் காணேம்.

சிங்கன்.—அதென்ன அப்படிச்சொல்கிறை?

மனைவி.—யார்மேலே பாட்டுப் பாடுகிருயோ அவர்களுடைய ஊரு பேரு, பட்டம் கிட்டம், ஏதாவது வைச்சுப் பாடினல்தானே கேட்கிறவர்களுக்குப் பிரியமாயிருக்கும்.

சிங்கன்.—அதற்கு நீதான் ஒரு யோசனை சொல்லேன்.

மனைவி.—யோசனை யென்ன, ராஜாபேரைச் சேர்த்துக் கொள்ளவேண்டியதுதான்.

சிங்கன்.—எப்படி ?

மனைவி.—எப்படி ! குலோத்துங்க சோழ மகா ராஜாவே என்று தான்.

சிங்கன்.—ஆகா நல்லமாதிரி.

மனைவி.—எங்கே எல்லாவற்றையும் சேர்த்துப் பாடு பார்ப்போம்.

(பாடுகின்றன்)

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமா நாயகனே
உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி
காவி றையே கூவி றையே
கன்னுப் பின்னு மன்னுத் தென்னு
குலோத்துங்க சோழ மகா ராஜாவே
எப்படியிருக்கிறது ?

மனைவி.—ஆகா வெகு நேர்த்தி ; வெகு நேர்த்தி.

சிங்கன்.—அவ்வளவுதானே.

மனைவி.—அவ்வளவுதான், நெடுநெடு என்று ராஜாவிடம் போகவேண்டியது. இதை மடமடவென்று பாடவேண்டியது. கொடுக்கிற கொடையை வாங்கிக்கொண்டு சரசரவென்று வரவேண்டியது.

சிங்கன்.—இவ்வளவுதானே, கொஞ்சங் கஞ்சித்தண்ணீர் ஏதாவது கொடு. குடிச்சுவிட்டுப் போகிறேன்.

மனைவி.—அப்புறம் என்ன, மறந்திட்டு வந்துவிடுவையோ ?

சிங்கன்.—என்ன !

மனைவி.—ராஜா கொடுக்கிறதை வாங்கிக்கொண்டு சும்மா வந்துவிடாதே. நான் சொல்லுகிறபடி செய்யவேணும்.

சிங்கன்.—என்ன செய்யவேணும் ?

மனைவி.—என்ன, இனும் வாங்கினவுடனே நேரே ஜவுளிக் கடைக்குப்போய், நல்ல சேலையாய் இருபுறத்திலும் ஒரு சாண் அகலத்திலே கெண்டைபோட்டு நல்ல மினுக்காயிருக்கிற சேலையிலே எனக்கொரு சேலையெடுத்துக்கொள். உனக்கு நல்லசாயவேஷ்டி சரிகை உருமால், எடுத்துக்கொள். அப்புறம் பூவு சந்தனம், வெற்றிலை பாக்கு, பழம் பலகாரம், இதுகளெல்லாம் ஒரு கூடை நிறைய வாங்கிக்கொண்டு, போனல்போகுதென்று அரைரூபாய்க்கு ஒரு மணிகட்டின குதிரை வண்டி வைச்சுக்கொண்டு, பாக்கிறவர்களெல்லாம் இதென்ன் இதென்னவென்று சொல்லும்படி ஜலஜலஜல ஜலவென்று வீட்டிலே வந்து இறங்கவேண்டியது. அப்படிச் செய்வீராங்காணும் வீட்டுக்காரரே.

சிங்கன்.—தடையென்ன, அப்படியே செய்கிறேன்.

மனைவி.—ஆகா இதுவல்லோ சாமர்த்தியம். சரி, வா, ஏதாவது தண்ணீர் கஞ்சி தருகிறேன். இன்றைக் கோடாகிலும் நமது தரித்திரம் ஒழியட்டும்.

---

பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரப் பத்திரிகைகள்.—பிழைக்கும் வழி, விவேகபோதினி, சக்ரவர்த்தினி, வித்தியாபானு, பிரபஞ்சம், ஹிதகாரிணி, விவேக சிந்தாமணி.

மாதம் இருமுறை பதிப்புகள்.—இந்து சாதனம், உதயதாரகை.

வாரப் பதிப்புகள்.—திராவிட தீபம், நீலலோசினி, தேசாபிமானி, லோகாநுகூலன், இந்தியா, சூரியோதயம், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, சந்திரிகை, பாண்டியன், நகர்கோயில் டைம்ஸ், திராவிடாபிமானி, சிலாங்கூர் வித்யாபாஸ்கரன்.

வாரம் இருமுறைப்பதிப்புகள்.—மைசூர் டைம்ஸ்,



# புஸ்தக விமர்சனம்

**ஸ்ரீ மஹாபாரத வினவிடை**.—இரண்டாம்பாகம் ஏ. எஸ், கஸ்தூரி ரங்கய்யர், பி. ஏ. எல். டி. ஜெனரல் சப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர்.

இப்புத்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். ஸ்ரீமான்-கஸ்தூரி ரங்கய்யவர்கள் ஸ்ரீ மஹாபாரதக் கதையைச் சுமார் 400 பக்கங்களடங்கிய இரண்டு புஸ்தகங்களில் சுருக்கியுரைத்தது வெகு அற்புதமான காரியம். தமிழ் நடை தெளிவாகவும் ருசிகரமாகவும் இருக்கிறது. அச்சு, காகிதம் முதலியவையெல்லாம் வெகு சிலாக்கியமே. ஆனல் ஒரு விஷயத்தில் மட்டும் நமக்கும் அய்யரவர்களுக்கும் அபிப்பிராய பேதம் இருக்கிறது. வினவிடையாகச் சோபிக்கக்கூடிய விஷயங்கள் சில ; கதையாகவே சோபிக்கக்கூடிய விஷயங்கள் சில ; உதாரணமாக ஸ்ரீபகவத்கீதை வினவிடையாகத்தான் சோபிக்கக்கூடியது. ‘ காண்டவ தகனம் ’ கதையாகத்தான் சோபிக்கும். ஆதலால் ஐயரவர்கள் இனி எதாகிலும் புராணங்கள், இதிஹாஸங்கள் இவைகளைப் பாலர்களுக்காக இந்த நடையில் எழுதுவதாயிருந்தால், இங்கிலீஷில் ஏ. ஜே. சர்ச்சு துரை கிரீக்கு புராணங்களை எழுதியிருக்கும் மாதிரி எழுதித் தமக்கும் படிப்போருக்கும் பூரண சுகம் விளைவித்துக் கொள்வாராக.

**ஐவன் ஹோ ஸாரஸங்கிரகம்**.—எஸ். பஞ்சாபகேச சர்மா, பி. ஏ. யும், வி. ராஜகோபால அய்யங்காரும்.

இச்சிறு புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய உடமைக்காரருக்கு வந்தனம். இங்கிலீஷ் வாசிப்பவர்களில் ஸ்காட்டு நாவல்களைப் படித்து ஆனந்தமடையாதவர்கள் கிடையாது. ஆதலால், அந்தக் கதைகளைத் திராவிட ஜனங்களும் படித்துச் சுகப்படவேண்டி நடத்தும் பிரயத்னத்தை நாம் சரியென்றே அங்கீகரிக்கிறோம். ஆனல், ஸ்காட்டு துரை எழுதிய நாவல்களில் பல ஐரோப்பியப் பூர்வ சரித்திரங்களையும், தேசாசாரங்களையும் முக்கியமாகக் கொண்டனவாதலால், ஐரோப்பிய சரித்திரந் தெரியாதவர்களுக்கு, விசேஷ ருசியுண்டாவது சிரமசாத்தியம். அதையாவது ஒருவாறு சரிப்படுத்திக்கொண்டு போகலாமானலும், பழைய பெயர்கள் அனேகம் இங்கிலீஷில் படிப்பவர்களுக்கே சிரமத்தை விளைவிப்பன. “பிரையன் டிப்பாகில் பர்ட்டு” என்பதைத் தேரில்வைத்திழுக்கலாம். ஆதலால், இம்மாதிரி உபத்திரவங்கள் இல்லாமல் கதைகளைச்சொல்ல இஷ்டர்கள் பிரயத்தனப்படுவார்களாகில் அது நமக்கும் சந்தோஷமே. ஐவன் ஹோவைவிட ‘ டாலிஸ்மான் ’ போன்ற ஆசிய சம்பந்தப்பட்ட நாவல்களை அதிகமாகச் சுருக்காமல் தகுந்த சித்திரவிளக்கங்களோடு எழுதியும், இந்தியா சம்பந்தமாய் அப்போதப்போது பிரசுரமாகிவரும் நாவல்களை மொழிபெயர்த்தும் வருவது வெகு உபகாரமாயிருக்குமென்று நம்புகிறோம்.

வாசக விஷயத்தில் நாம், இப்புத்தகத்தை வெகு தூரம் சிலாகிக்கிறோம். அச்சு, கடுதாசி விஷயங்களில் நாம் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. அனேக அத்தியாயங்கள் சாமான்னியமாய் யாரும் படித்து சந்தோஷிக்கத் தக்கதுதான். விலை சரசம்.

***

## பாங்கிப்பூரில் மிஸஸ் அன்னிபெஸண்ட்

சில தினமுன் அன்னி பெஸண்ட் அம்மை பாங்கிப்பூரில் மிஸ்டர் சயித்ஹஸான் இமாமின் அக்கிராசனத்தின் கீழ் மதபேதமும் ஜாதிபேதமும் கூடாவென்றும், சகல ஜனங்களும் ஒரே மதத்தை யனுஷ்டிக்க வேண்டுமென்றும், பிரமஞானம் ஜாதிமதபேதங்களை ஒழிக்கத் தலையெடுத்திருக்கும் சமயம் ஆகுமென்றும், பிரமஞான சமயம் சகல ஜனங்களுக்கும் சகோதர பாவத்தையே கற்பிக்கிறதென்றும், அச்சமயக்கொள்கைகளை வற்புறுத்திப் பேசியது மன்றிப் பிரமஞான சமயத்தார் சுதேசியத்தையும் காங்கிரெஸ் மகாசபையையும் இந்தியதொழில் அபிவிருத்தியையும் முற்படுத்துவதில் முன்னுக்கு வந்து அக்கரை காட்டி யிருக்கிறார்களென்றும் சொன்னதுமன்றிக் காசி ஸெண்டிரல் ஹிந்து காலேஜில் கலியாணமான பிள்ளைகளைச் சேர்ப்பதில்லையென்று ஏற்பாடுடைபெறுவது போல இந்நாட்டில் பள்ளிக்கூடம் வைத்து நடத்தும் பாதிரிமார்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் கலியாணமான பிள்ளைகளைச்சேர்க்கிறதில்லையென வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னர். கடைசியாக இந்தியத் திருத்தங்களை அமுலுக்குக்கொண்டுவந்ததற்காக ராஜப்பிரதிநிதிலார்ட் மிண்டோவுக்கு நன்றி செலுத்திவிட்டுப் பள்ளிக்கூடச்சிறுவர்கள் அராஜக உணர்ச்சிக்கு இடங்கொடுத்தலாகிய தீயவழியிலிருந்து விலகியிருக்கவேண்டுமென்று சொல்லி முடித்தார்.

# சமாசாரக் குறிப்புகள்

வாஸுதேவ பட்டாசாரியரென்னும் பங்காளக் குமாரரை அங்கிலேயத் தருணியொருவள் சுயம்வரமாகக் கல்யாணஞ் செய்து கொண்டதாகவும், பிறகுதன்னுடைய ஸ்திரீ தனத்திலிருந்து பணங்கொடுத்து அமெரிக்காவுக் கனுப்பியதில், தோல் பதமிடும் தொழிற் கற்றுவருவதற்காக அவர் போயிருப்பதாகவும், இந்த விவரங்களையெல்லாம் கண்டு மாமனாருக்கு அந்தப் பெண் ஒரு கடுதாசி யெழுதி அவருக்கு மனவருத்த முண்டாகாம லிருப்பதற்காகக் கல்யாணத்திற்கு முந்தி, தான் ஹிந்துவாகிவிட்டதாகத் தெரிவித்ததாயும், கல்கத்தாரால் ஒரு வதந்தி.

***

பங்காள ஆசார விமர்சன சங்கத்தவர் சோடாநாகப்பூரில் தீண்டாத வர்க்கத்தவரை உத்தாரஞ் செய்வதற்காகச் சில பெயர்களைத் தயார் செய்து அனுப்பியிருக்கிறார்களாம். அதற்குச் சகாயமாக ஸ்ரீமான்-கோகலே அவர்கள் "இந்தியா சேவகர்களில்" ஒருவரை அனுப்பிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம்.

***

அமெரிக்காவில் ஸான் பிரான்ஸிஸ் கோவில் ஒரு இந்துதேவாலயம் நிர்மாணமாகிச் சென்ற 1908-ம் ௵ எப்பிரல் மாசத்தில் ஸ்ரீராம கிருஷ்ண வர்க்கத்தியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கட்டடம் தாஜிமஹால் போன்று, ஹிந்து, மகம்மதீய, கிறிஸ்தவ கோயில்களின் சிற்பலக்ஷணங்களெல்லாம் பொருந்திப் பார்க்க வெகு கீர்த்தியாகவிருக்கிறதென்றும், அதில் தெய்வத்தை வழிபடுபவர்கள் எல்லோரும் அமெரிக்கரென்றும் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

***

மன்னார்குடியில் வெகு காலமாகத் தழைத்து வந்திருக்கும் பிண்டிலே காலேஜில் படிக்கும் பிள்ளைகளில் இரண்டொருவரைப் பெற்றோர்களுக்குத் தாக்கலில்லாமல் கிறிஸ்து மதத்திற்குச் சேர்க்கப் பிரயத்தனம் நடந்ததாகவும், அதனால் ஜனங்களுக்கு ஆக்கிரகம் வந்து, மிஷன் கோவிலுக்கு நெருப்பு வைத்ததாகவும், பிறகு ஜனங்களுக்குள் குழப்பம் அதிகரிப்பது கண்டு, வெகு காலமாக பிரின்சுபாலாயிருக்கும் டேவி துரை தக்க முயற்சியெடுத்துப் பிள்ளைகளை வாப்சு செய்துவிட்டதாகவும் சமாசாரம். நமது ஜனங்களுக்கு மதம் ஆசாரம் முதலிய விஷயங்களில் வாஸ்தவத்தில் பற்றிருக்குமாகில் அங்கிலேய தேசத்தில் பெற்றோர்கள் எவ்வாறு நடக்கிறார்களோ அதையனுசரித்து நடப்பதுதான் உத்தம பக்ஷம் அதாவது, கிறிஸ்தவர்களுக்குள் அனேக சில்லரைக் கக்ஷிகளிருப்பதில் ஒவ்வொரு கக்ஷியாரும் தமக்கென்று பாடசாலைகளேற்படுத்திக்கொண்டு, எந்த நியாயத்தை முன்னிட்டாகிலும், வேறு கக்ஷியவருடைய பாடசாலைகளுக்குத் தம்மக்களையனுப்பாமல் இருப்பதாம். நம்மவர்களுக்கு, அதிலும் பிராம்மணருக்கோ வென்றால், தம் மக்கள் மதப்பற்று, ஆசாரப்பற்றைக் கைவிடார்களென்கிற நம்பிக்கை பூரணமாக விருக்கிறது. இங்கொன்று யாராகிலும் ஓர் பையன் இம்மாதிரிப் போனானென்றால், அப்பொழுது இரண்டு நாளைக்குக் கூத்தாடுவதை விட வேறு உபாயம் தோன்றுவதில்லை. யார்பேரில் தோஷமென்று நாம் சொல்லவும் வேண்டுமா?

***

சென்ற லாஹோர் காங்கிரஸில் நடந்த நடவடிக்கைகளில் நிரம்பவும் வியக்கத் தக்கது தென்னாப்பிரிக்காவில் நம்மவர்கள் படும் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காகப் பணம் சேர்த்ததாம். ஸ்ரீமான்-பாபு ஸுரேந்திரநாத பானர்ஜி யவர்கள் இவ்விஷயமாய்ப் பேசியானதும், காங்கிரஸ் மண்டபத்தில் எங்கே பார்த்தாலும், ஆரவாரமும், நான் முந்தி நீ முந்தியென்கிற போட்டியும் அதிகரித்ததாகவும், அவரவர்கள் கையிலிருந்தது பணமோ, நோட்டோ, நகையோ, பட்டு முதலிய விலைபெற்ற வஸ்திரமோ, இன்னதென்றில்லாமல் பணமாகக்கூடிய ஒவ்வொன்றையும் முன் பின் யோசிக்காமல் உண்டிகைக் கலசத்தில் போட்டுவிட்டார்களென்றும், வெகு சீக்கிரத்தில் ரூ 18000 வசூலாய் விட்டதென்றுங் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். நம்மவர்களுக்கு இவ்விதமாக ஆவேசம் வருவது வெகு அபூர்வமாதலால், இத்தருணத்தில் அவ்வாறு ஆவேசமூட்டிய ஸ்ரீமான்-ஸுரேந்திர நாதருக்கு நாம் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறோம. இம்மாதிரியே அவர் தீர்க்க ஜீவியாயிருந்து சற்காரியங்களில் நமது ஜனங்களுக்கு விடாமல் உற்சாகம் வரச்செய்து வருவாரென்று நம்புகிறோம்.



'ஹிந்து' 14-ம் தேதிய பதிப்பில் திவான்பஹதூர் ஸ்ரீமான்-ரகுநாதராயரவர்கள் எழுதுகிறார்: "நமது கிராமங்கள் பழையபடி செழித்தால்தான் நமக்கு க்ஷேமம். அவைகளுக்குப் பெருமை குறைந்தால், நாம் துரைத்தனத்தை யெவ்வளவு தூரம் திருத்தினாலும் பலனற்றுதான் போகும். பஞ்சாயத்து முதலிய கிராம லக்ஷணங்கள் பெருமை குன்றினால் அதற்குத் தாசில்தாரர்கள்தான் காரணம். இவர்கள் இதுவரை செய்துவந்தபடி குற்றங்கூறுவதொன்றையே விரதமாக வைத்துக்கொண்டால் கிராமங்கள் பாழாகத்தான் போகும். அதையொழித்துக் குணங்கள் செழிக்குமாறு நடந்தால், எல்லோருக்கும் க்ஷேமம். அப்படி நடப்பவர்களுக்கே பதவியுயர்வது நியாயம்." இதற்குச் சந்தேகமேயில்லை. கோ ஆபரேடிவ் ரிஜிஸ்திராரைப் பார்த்து ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் உத்தியோக முறை கற்றுக்கொள்ளவேண்டும்.

## பெண் கல்வி

குவாலியர் ராச்சியத்தில் பெண்களுக்குள் கல்வி அதிகரிப்பதற்காக 'கன்னியா தர்மவர்த்தினி,' 'ஸ்திரீ சிக்ஷகப்பிரசாரிணி,' யென்று இரண்டு சங்கங்கள் உழைத்துவருவதில், சமீபகாலத்தில் அவைகள் மூலமாகவும், சர்க்கார் மூலமாகவும் நடந்துவரும் இரண்டொரு காரியங்களை யெல்லோரும் கவனிக்க வேண்டும். முதலாவது, பள்ளிக்கூடத்தில் உழைத்து வரும் உபாத்திமார் தங்கள் பத்தினிகளுக்குக் கல்விகற்பித்துப் பெண்கள் பாடசாலை யேற்படுத்தி அவைகளில் அவர்களை அமர்த்துவது. அப்படிச்செய்பவருக்குச் சர்க்கார்கிராண்டு ஏராளமாகக் கிடைக்கும். இரண்டாவது, ஏதோ ஒரு தரத்திற்குக் குறையாமல் படிப்பேறிய பெண்குழந்தைகளுக்குக் கல்யாணத்திற்கு 'உதவிதனம்' கொடுப்பது. இது 'குவாலியர்' ஒழிய வேறு எவ்விடத்திலுங் காணாத அதிசயம், நமது தேசிய அரசர், அவர்களுடைய ராணிமார். இவர்களுக்குத்தான் இம்மாதிரியுபாயங்கள் சாத்தியமாகும்.

***

பார்லிமெண்டு எலக்ஷன் விஷயமாய் நாம் எழுதியபின், 'இந்தியன் மிரர்' என்னும் நமது நண்பர் எழுதியிருப்பதைப் பார்த்தோம். இந்தியாவில் எல்லா மதஸ்தரும் ஒருங்கு சேர்ந்து அவரவர் கோவில்களில் சம்பிரதாயப்படி பூஜைகள் செய்து லிபரல் கக்ஷியார் மறுபடி அதிகாரம் வகிக்கவேண்டுமென்று கடவுளை வணங்குவது அவசியமென்றும், அப்படியில்லாமல், எதிர்க்கக்ஷியார் அதிகாரத்திற்கு வந்தால் அதனால் நமக்கு அனர்த்தம் விளையுமென்றும், இந்த இஷ்டருடைய அபிப்பிராயம்.

***

இதுவரை நடந்திருப்பதில் நமக்கு வேண்டியவர்களில் ஸர்ஹென்றி காட்டன் துரை விலகநேரிட்டது நாம் வெகுதூரம் விசாரப்பட வேண்டியதே. எவ்வளவு கஷ்டநிஷ்டூரங்களையும் சகித்து, எதிர்க்கக்ஷியோர் திட்டுவதைச் சிறிதும் மதியாமல், தமது வம்ச தருமத்தை யனுசரித்து இந்தியாவின் க்ஷேமத்தையே நாடி நாளதுவரை இவர் உழைத்து வருவதில், பார்லிமெண்டில் இவர் இல்லாமற்போனது நமக்குக் குறைவுதான். இப்படியானதற்கு இவர் தேகஸ்திதி அனுகூலமில்லாமற்போனதே காரணமென்று காணுகிறது.

## இலவசப் படிப்பு

பிரைமெரி படிப்பை இலவசப் படிப்பாக்கிவிட வேண்டுமென்று எல்லா இடங்களிலும் வெகுகாலமாக முயற்சி செய்யப்படுகிறது. பரோடாவில் முதலில் ஏற்பாடாயிற்று. இப்போது லாகூர் முனிசிப்பாலிட்டியாரும் ஒரு வருஷத்துக்குச் செய்து பார்ப்போமென்று முன் வந்திருக்கிறார்கள்.

## அன்னிபெசண்டின் ஸர்வகலாசாலை

மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்களுக்குத் தாம் ஸ்தாபிக்க விரும்பும் ஸர்வகலாசாலையின் விண்ணப்பம் ஒன்று அனுப்பியிருக்கிறார். அந்த ஸர்வகலாசாலையின் முக்கிய நோக்கம் பின்வருமாறு—மதமும் சன்மார்க்கமும் கற்பித்துக் கொடுப்பது; அறிவின் அளவைக் குறிக்கும் அடையாளமாக மாத்திரமில்லாமல் யோக்யதையுடைய மனிதர்களை யுண்டுபண்ணுவது, இந்தியா தேசத்து தத்துவம், சரித்திரம், பாஷா ஞானம், விவசாயம், கைத்தொழில், பின்னும் தேவையாயிருக்கிற இந்தியத் தொழில்களுக்கு ஆவசியகமான சாஸ்திரஞானம், பின்னும் ஸமூக விருத்திக்கு முக்கியப்பட்ட விஷயங்கள் எல்லாம் கவனிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கமிட்டியில் டிரஸ்டிகளாயிருப்பவர் யாவரும் இந்தியர்கள்தான்.

# VIDYA VIHARINI

## AN ILLUSTRATED TAMIL MONTHLY

Edited by, C. N. KRISHNASAWMY AIYAR, M.A., L.T.,

Devoted to Literary, Scientific and Industrial subjects furnishing plenty of light reading matter in addition to useful notes and jottings of practical value.

**SOME PRESS OPINIONS**

*The United India*:—The Magazine supplies a real want among the Tamil—speaking people. The articles are written in a vigorous style and there is a freshness and up-to-dateness about them. Even those English knowing Tamilians who look down upon Tamil Journals and books as beneath "dignity" may profitably peruse the new monthly.

*The Madras Mail* :—Judging from the Standard which the publishers have set before themselves, the Vidya Viharini is likely to prove a good medium for the Education of the Tamil public.

*The Hindu* :—This is a very useful and neatly got up illustrated Tamil Monthly. The Vidya Viharini, we are sure, will become popular.

**ANNUAL SUBSCRIPTION INCLUSIVE OF POSTAGE Rs. 5 only**

**Ganesh & co., Publishers, Madras.**

# வித்யா விஹாரிணி

## ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 5.

## சில பத்திரிகைகளின் அபிப்பிராயம்

**இந்துசாதனம்.—**

வித்யா விஹாரிணி.—இது கோயம்புத்தூர் ஸ்ரீமத்-கிருஷ்ணசாமி ஐயரவர்களால் சென்னையில் பிரசுரிக்கப்படும் ஓர் சிறந்தமாதாந்தரப்பத்திரிகை. ஒவ்வொரு சஞ்சிகையும் 40-பக்கங்கள் கொண்டன. இதில் சொற்சுவை, பொருட்சுவை பொருந்திய அநேக விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

**சுதேசமித்திரன்.—**

தமிழ்ப் பாஷை விருத்தியடைவதற்கும், தமிழ் மக்கள் நலம் பெறுவதற்கும் இப்பத்திரிகை ஓர்சிறந்த சாதனமாக இருக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. தமிழ் அறிந்தார் ஒவ்வொருவர் கையிலும் இந்தப் பத்திரிகை இருக்கவேண்டுவது மிகவும் அவசியம்.

**லோகோபகாரி.—**

இது ஒரு சிறந்த தமிழ்ப்பத்திரிகையென்பதில் ஐயமில்லை. நம்மவர் ஒவ்வொருவரும் பார்க்கத் தகுந்ததே.

**லோகாநுகூலன்.—**

இதில், அநேகவிஷயங்கள் அடங்கியுள்ளன. விஷயங்களும் மிக்க அரியபெரிய விஷயங்களாகவே யிருக்கின்றன. இம்மாதிரி திருவுருவப் படங்களுடன் தமிழ்ப்பத்திரிகை இக்காலத்திற்றான் நடந்து வருகின்றதெனச் சொல்லலாம்.

**நாகைநீலலோசனி.—**

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி யிதன் முதற்சஞ்சிகையாலேயே உலகத்துக்குப் பெரும்பயன் விளைக்கும் என்பது நன்கு தெரிகிறது.

**திராவிடாபிமானி.—**

இதில் பலவரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. அநேக கல்விமான்களால் எழுதப்பட்டுள்ள அரிய வியாஸங்கள் காணப்படுகின்றன. தமிழ் பாஷை விருத்தியடைவதற்கு இப்பத்திரிகை ஓர் சிறந்த சாதனமாகும்.

**கணேஷ் கம்பெனி, தம்புசெட்டி தெருவு, சென்னை.**



நிஜாம் பஹதூர் அவர்கள், ஜி. ஸி. எஸ். ஐ.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 - APR 1910
MADRAS.

# விக்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| புஸ்தகம் I.<br>Vol I. | சௌம்யஞு மாசிமாதம்<br>February 1910 | சஞ்சிகை 6<br>No. 6 |
|---|---|---|

## பிரபஞ்சவர்த்தமானம்

“பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினனே.”

இந்தியா கவர்ன்மெண்டாருடைய புதிய சட்ட நிரூபண சபை.

‘விஹாரிணி’ முதல் நம்பரில் இந்தியா கவர்ன்மெண்டு விமர்சனத்தைப் பற்றி நாம் கொஞ்சம் விவரித்தெழுதினேமல்லவா? அந்த ஏற்பாட்டை யனுசரித்துப் பிறந்த புதுச்சட்ட நிரூபண சபை, சென்ற ஜனவரி 24- தேதி யன்றைக்குக் கல்கத்தாவில் கூடிற்று. இராஜப் பிரதிநிதியவர்களும், இந்தியா கவர்ன்மெண்டு முக்கிய உத்தியோகஸ்தரும், மதிராசு முதலிய இடங்களிலிருந்து போன பிரதிநிதிகளும் ஆஜரானார்கள். இராஜப்பிரதிநிதியவர்கள் வந்தவர்களுக்கு நல்வரவு கூறி, இந்தியாவில் இங்கிலீஷ் துரைத்தனமேற்பட்டது முதல் நாளதுவரை சட்ட நிரூபண விஷயத்தில் நடந்த விசேஷங்களை யெல்லாம் சுருக்கி யுரைத்தார்கள். பிறகு சென்ற இருபது வருஷகாலமாக ஆசியா கண்டத்தில் ஜப்பான், பர்ஸியா, சீனு முதலிய தேசங்களில் நடந்தும், நடந்து வந்துகொண்டுமிருக்கும் பெருங் காரியங்களை விவரித்து, அதனுல் இந்தியாவிலும் ‘பழையன கழிந்து, புதியன புகுந்து’ வருதல் நியாயமென்று விளக்கிக் காட்டினுர்கள். ஆகவே இதை யனுசரித்துப் பிறந்திருக்கும் புதிய சட்ட நிரூபண சபைகளையும், அவைகளிலாகவேண்டிய காரியங்களையும் மகா ஜனங்கள் செம்மையாயறிந்துகொள்ளவேண்டுமென்றும், மகா ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக வருபவர்கள், இதுவரையிலிருந்ததைவிட அதிக எச்சரிக்கையுடன், சர்க்காருக்கும், தங்களைப் பிரதிநிதிகளாக்கிய மகா ஜனங்களுக்கும், நடுநிலையிலிருந்து, நாணயமாய் உழைத்து, இருதிறத்தாருக்கும் அனுகூலமுண்டாகும்படி பார்க்கவேண்டுமென்றும் வெகு ஆதரவோடு வற்புறுத்தினுர்கள்.

இப்படி நடந்துவரும் சுபமுகூர்த்தத்தில், ‘கலப்பாலில் துளிவிஷம்’ சேர்ந்துவிட்டதால், அதைப் பற்றியும் அவர்கள் பேசாமலிருக்க முடியவில்லை. அது நமக்கெல்லாம் மெத்தவும்

விசாரத்தையுண்டாக்குகிறது. ஏனெனில், அன்றையதினமே, கல்கத்தா ஹைகோர்ட்டில் சர்க்கார் காரியமாக வந்திருந்த மஹம்மதீய போலீஸ்டிப்டி ஸூப்பரிண்டாண்டு, ஷம்ஷியர் ஆலம் என்பவரை ஒரு பங்காளிப் பையன் சுட்டுக் கொன்றுவிட்டான். இவர் அலிப்பூர் வெடிகுண்டு கேஸில், சர்க்கார் பக்ஷமாக ஆதிமுதல் நாணயமாய் உழைத்து வந்தவர். சுட்டுக் கொன்றவனுக்குச் சுமார் 18-வயது. இவன் ஒரு கைத்துப்பாக்கியை வைத்துக்கொண்டு கோர்ட்டுக் கச்சேரியில் இங்குமங்கும் சுற்றிக்கொண்டிருந்து, சமயம் பார்த்து அவரையெதிர்த்துத் திடீரென்று சுட்டு அவரைக் கொன்றுவிட்டான்.

ஆதலால் இராஜப்பிரதிநிதியவர்கள் இதைச் சுட்டிப் பேசி, இனி யிம்மாதிரிக் கொலைகளை வேரறுக்க வேண்டிச் சர்க்கார் நிச்சயித்து விட்டதால், புதிய சட்டநிரூபணச் சபையாரும், நிர்வாக தரபில் உன்னத பதவிகளை வேண்டும் நம்மவர்களும், இவ்விஷயத்தில் நாணயமாய் உழைத்துச் சர்க்காருக்கு உதவி செய்ய வேண்டுமென்றும், இனி யிம்மாதிரிப்பாதகங்கள் நடவாமல் கட்டோடு நிற்கும்படி பார்க்க வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்கள்.

சமீபகாலத்தில் இம்மாதிரிக் கொலைகள் ஐந்தாறுக்குமேல் ஆகிவிட்டதால், நம்மவர் இனியாகிலும் கண்விழித்து, எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஏனெனில் இதைப் பிரபலிக்க விட்டால், யாரும் தப்புவதற்கில்லை. இப்பாதகர்களுக்கும், புலிக்கும் வித்தியாசமில்லை. புலிக்குத் 'தன் காடென்றும், பிறன்காடென்றும்' இல்லாதது போலவே, இவர்களுக்குமென்று அறிதல் வேண்டும். பேசுவதற்கெல்லாம், 'குண்டு வாங்கிக் கொள்,' என்றால் தேசக்ஷேமம் விர்த்தியாகுமல்லவா?

நிஜாம் பஹதூர் அவர்களுடைய ராச்சிய தருமம்.

ஆனால் மேற்சொல்லிய 'துளி விஷக்கலப்பினால்,' இந்தியா கவர்ன்மெண்டார் தாம் செய்வதாக மேற்கொண்ட காரியத்தை நழுவவிடார் என்று நமக்குப் பூரண நம்பிக்கை. இதற்கு அத்தாக்ஷியாகச் சமீபகாலத்தில் மேற்படியாருக்கு ஐதராபாத்து அதிபதியாகிய நிஜாம் பஹதூர் அவர்கள் எழுதியதைச் சந்தோஷத்துடன் மொழிபெயர்த்துச் சேர்க்கிறோம். ராஜத்துரோகம் வலுக்காமலிருக்கும்படி தேசீய ராஜாக்களையும் தங்களுக்கு அனுகூலமாய் நடக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் சிலமாதங்களுக்கு முன் எழுதியதற்குப் பதில் அனேக ராஜாக்கள் அனேக விதமாய் எழுதினார்கள். நிஜாம் பஹதூர் மட்டும் தனித்தொருவிதம் இவ்வாறெழுதுகிறார்.—"நமது பிரஜைகளுக்கு அதிருப்தியென்பதே யில்லை. அவரவர் தத்தம் காரியங்களைப் பார்த்துக்கொண்டு சுகமாய் வாழ்ந்து வருகிறார்கள். இதற்குக்காரணம் நமது புத்தி வைபவமல்ல, நம் முன்னோர்கள் தேடி வைத்த புண்ணியத்தின் பலனும், அவர்கள் துரைத்தனம் நடத்தியது வெகு நல்ல தந்திரம். ஆதலால் நமது ராச்சியத்தில் இந்துவென்றும், மகம்மதியனென்றும் தாரதம்மியம் காணுவதில்லை. எல்லா வருக்கத்தாரும் நம்மிடத்தில் ஒரே ரீதியாய் அதிகாரம் பெற்றுப் பக்ஷபாதமென்பது சிறிதுமின்றி அமுல் நடத்திவருகிறார்கள். இந்தத் தருமம் இந்தச் சமஸ்தானத்திற்குப் பாரம்பரையாய் ஏற்பட்டது. தற்காலம் நமக்குப் பிரதான மந்திரியாகிய மகாராஜா கிருஷ்ணப் பிரஸாத் பஹதூர் ஹிந்துவாம். அவருக்கு முன் அனேகம் ஹிந்துக்கள் இவ்வாறு முதற்பதவி வகித்து வந்திருக்கிறார்கள். இது போலவே மற்றைய வருக்கத்தாரும். ஆதலால் சமஸ்தான உத்தியோகஸ்தர் எல்லா வருக்கத்தவராயுமிருப்பதில் நமது துரைத்தனம் சகல



ஜனங்களுக்கும் சம்மதமாகிப் பலத்து வேரூன்றியிருக்கிறது. நாம் சன்னத்து மகம்மதீயராகியிருந்த போதிலும், இந்த ராச்சிய தந்திரத்தை நாம் கைவிடாததுகொண்டு, நமது துரைத்தனத்திற்கு ஒரு லோபமுமில்லை. ஆதலால் இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய முக்கிய மந்திராலோசனைச் சபைகளில் இந்தியர்களை நியமிக்கத் தீர்மானித்தது வெகு நல்லயோசனை. அதனால் நமக்கு அவ்விஷயத்தில் சந்தோஷம் வெகு அதிகம். மஹா ராணியவர்களுடையவும், அவருக்குப்பின் மஹாராஜச் சக்கிரவர்த்தியவர்களுடையவும், வாக்கியங்களை யனுசரித்தே இக்காரியம் நடப்பது கொண்டு, அதில் வித்தியாசஞ் சிறிதும் நமக்குக் காணவில்லை.

ஒருகை அடித்தால், மற்றது ஆதரிக்க வேண்டுமென்பது நம்முடைய முக்கியசித்தாந்தம். அனுபவத்தினால் இது நம்மனதில் நன்றாக வேரூன்றி வந்திருப்பது. ஆகலால், கொஞ்சகாலமாகக்காணும் கொலை முதலிய கலக காரியங்களை நடத்திவரும் ராஜத்துரோகிகளுக்கு எவ்வளவு கடூரமாக வேண்டுமானாலும் சிக்ஷை விதித்துக் கலகத்தை அடக்கி வேரறுப்பது நமது முதற்கடமை ஆயினும், அத்துடன் நிற்காமல், ராஜபக்தி, வேறு நற்குணங்கள் இவை நிறைந்துள்ள பெரும்பாலாராகிய இந்தியப் பிரஜைகள் விஷயத்தில், ராஜாங்கத்தார் எவ்வளவுதூரம் ஆதரவாயிருந்தாலும் அது இருதிறத்தாருக்கும் நன்மை செய்வதாகும். ராஜாங்கத்தார் இப்பிரஜைகளாகிய மகா ஜனங்களிடத்தில் பூரண விசுவாசம் வைத்து, ஜாதி, மதம், வருணம், முதலிய யாதொரு காரணத்தினாலும் பாரபக்ஷம் காணுமற் பார்த்து வந்தால், அதனால் இருகக்ஷிக்கும் நன்மை பெருகுமென்பதிற் சந்தேகஞ்சிறிதுமில்லை. இந்தப்படி நாம் எண்ணியிருப்பது இந்தியா கவர்ன்மெண்டுக்கும் சம்மதமென்று கேட்க நமக்குண்டாகும் சந்தோஷத்திற்கு அளவில்லை."

இவ்வாறு இம்மகாராஜாவர் எழுதிய வசனங்கள் எல்லோர் மனத்திலும் உறைத்து, இதை யனுசரித்து நடக்கவேண்டுமென்னும் புத்தி எல்லோருக்குமுண்டாகி, ராஜாக்களும் பிரஜைகளும், ஒரு மனப்பட்டுச் சுகமடையும்படி. சருவேசுவரனருள்வாராக.

ஓர் புதிய இந்திய யூனிவர்ஸிட்டி.

சென்ற சஞ்சிகையில் சமாசாரக் குறிப்பில் இவ்விஷயமாய் எழுதியதுபோதாதாகையால், இன்னும் தெரிய வேண்டியவைகளை யிங்கு சுருக்கி யெழுதி விடுகிறோம்.

இந்தியாவில் இங்கிலீஷ் துரைத்தனம் ஏற்பட்டபின் சென்ற 55௵ காலமாக இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் யூனிவர்ஸிட்டிகளும், அவைகள் மூலமாய் நடந்துவரும் பரீக்ஷைகளும், அவற்றில் தேறிய சிலருக்கும், அவர்களால் மற்றவருக்கும், பல விதங்களில் நன்மை தந்து வந்திருக்கின்றனவென்பதில் சமுசயம் சிறிது மில்லை. சர்க்கார் காரியம் வெகு சீராக நடந்துவருகிறது. பெரிய உத்தியோகஸ்தரில் அனேகர் பாபபுண்ணியத்திற்குப் பயந்து நடக்கிறார்கள்.

என்றாலும், இத்தேசத்தில் பூர்வந்தொடங்கி வந்திருக்கும் மதசம்பந்தமாகவும், ஆசார சம்பந்தமாகவும், அவற்றைப் பரிபாலித்து வந்த பெரியோர் சம்பந்தமாகவும், யாதொரு பேச்சும் இப்பாடசாலைகளிலிருந்து வந்ததில்லை. அம்மட்டே யல்லாமல், இவைகளை மாணாக்கர் தூஷித்துக் கைவிட்டுவிடவும் ஏற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இடிந்த கோவிலை மறுபடி கட்டுவது அழகே தவிர, இடித்தெறிந்து நிரவிவிடுவது அழகல்ல. ஆதலால் மறுபடி மதம், ஆசாரம் இவ்விஷயங்களில் மாணாக்கருக்குப் பக்தி யுண்டாகும்படி அவைகளை இக்காலத்திற்கேற்க உபதேசித்து வரவேண்டுமென்கிற எண்ணம் கொஞ்சகாலமாகப் பலத்து வருகிறது. அதற்குச் சாக்ஷியமாக ஸ்ரீ காசியிலும், ! வேறு சில இடங்களிலும், 'சனாதனதரும' பாடசாலைகள்

ஏற்பட்டு, மேனாட்டுப் படிப்புடன் தேசிய பாஷையாகிய சம்ஸ்கிருதத்தையும், வைதிக தருமங்களையும் கூட்டிப்படிப்பு நடந்து வருகிறது. ஆனால் கோடிக்கணக்கான ஜனங்களடங்கிய இப்பாரத வருஷத்தை உத்தாரஞ் செய்வதற்கு இரண்டொரு காலேஜ்களால் முடியாதாகையால் இனி யிம்மாதிரிக்காலேஜ்கள் எங்கும் செழிக்க வேண்டுமென்றும், அவையனைத்தையும் ஒன்று சேர்த்து அமுல் நடத்தி வர ஒரு யூனிவர்ஸிட்டி புதிதாக ஏற்படவேண்டுமென்றும் மாதோ ஸ்ரீ அன்னி பிஜாண்டு அம்மாள் அவர்களுக்கு நிஷ்கரிஷையா யிருக்கிறது. அதை யனுசரித்து வேண்டியபடி நடவடிக்கையும் நடந்துவருகிறது. இந்த யூனிவர்ஸிட்டிக்கு டைரெக்டர்கள் அனேகமாய் எல்லோரும் இந்தியர்களேயாம். இதற்கு அடங்கி வளர்ந்து வரும் ஸ்கூல்கள், காலேஜ்கள், ஆகிய இவைகளில், மதம், ஆசாரம் முதலிய விஷயங்களில் உபதேச மிருந்து தீரவேண்டும். ஆனால் மதங்களும், ஆசாரங்களும் பல வகைப்பட்டிருப்பதால், சிஷ்டாசாரங்களையும், சன்மார்க்கத்தையும், அந்தந்த மதஸ்தர்கள் இஷ்டம்போல் உபதேசித்து வரலாம். முக்கியமாக வேண்டியது பகையின்மை. புத்தமதம், இந்துமதம், அதிலுள்ள பரஸ்பரபேதங்கள், மகம்மதீய மதம், கிறிஸ்து மதம், எல்லாம் இந்தக்கட்டில் அடங்கவேண்டியவைகளே. ஆதலால் இந்தக்காரியம் மாதோ ஸ்ரீ அவர்கள் இஷ்டம் போல நிறைவேறு மென்றும், அது காலக்கிரமத்தில் எல்லோருக்கும் அபிமதமாகி, நமது ஜனங்களுக்குள் தெய்வபக்தியும், சீலமும் பிரபலிக்கு மென்றும் நம்புகிறோம். ஈசுவர கிருபை இம்மாதிரிக்காரியங்களுக்கு இருக்கு மென்பதில் நமக்கு ஐயஞ் சிறிது மில்லை.

**விவசாயக் கோ ஆபரேஷன்.**

பாபட்லா மிஷனைச்சேர்ந்த தாம்ஸன் பாதிரியார் 'மெயிலில்' இவ்வாறு எழுதுகிறார்:—சென்ற கிறிஸ்துமசுப் பண்டிகை தினம் பாபட்லாவில் இவ்விஷயமாய்ச் சங்கம் ஒன்று ஏற்பட்டது. எல்லோரும் அதை ஆசீர்வதிக்கவேண்டும். இச்சங்கம் விவசாய விர்த்திக்கென்றே ஆரம்பித்ததாகிலும், வர்த்தகம், கைத்தொழில், பாங்கு முதலிய விஷயங்களும் காலக்கிரமத்தில் வந்து சேரலாம்.

தற்காலம் இச்சங்கத்திற்கு விவசாயத்தின் பேரிலேயே முக்கிய திருஷ்டி. பாபட்லா சர்க்கார் தருசுகளிலும், புறம்போக்குகளிலும் புற்பூண்டுகள்கூட வளருவதில்லை. ஆனால், ஜனசகாயமும், சர்க்கார் உதவியும், ஈசுவர கிருபையுமிருப்பதாக இப்போது நமக்கு வெளியாவதால், கூடிய சீக்கிரத்தில் இப்பிரதேசமெங்கும் தான்னிய லக்ஷ்மி கூத்தாடுவாள். ஏனெனில் இக்காரியத்தில் ஜாதி, மதம், முதலியவற்றால் இடையூறு உண்டாகாது. வயிறு எல்லோருக்கும் ஒன்றேதான். ஆதலால் எல்லோரும் ஒருமனப்பட்டு உழைக்க நல்ல தருணம் ஏற்பட்டிருக்கிறது. 'கோ ஆபரேஷன்' என்றால், 'அன்னியோன்னிய சகாயம்,' என்று பொருள். இந்த முறையில் விவசாயம் நடந்தால், கலியுகம் சீக்கிரத்தில் மாறிக் கிருதயுக தருமம் இனி யொருமுறை செழிக்கு மென்பதில் தடையேயில்லை.

ஜர்மனி தேசத்தில் 1848-ம் ஹூ முதல் இந்த முறையாக விவசாயந் தொடங்கியதில், நாளது தேதியில் ஜர்மானியக் குடித்தனக்காரர்களுக்கு வயிறு நிறையச் சாப்பாடும், வேண்டுமளவிற்குச் சலீசாகக் கடன்வாங்கி முன்னுக்கு வரப் பாங்குகளும் கிடைத்திருக்கின்றன. அவ்வாறே இந்தியாவிலும் இப்போது நாம் செய்யும் ஆரம்பமானது காலக்கிரமத்தில் இந்தியக் குடியானவர்களுக்கு எல்லா நன்மையையும் கொடுக்கும். ஜனங்களுக்குள் 'சுதேசி' அபிமானம் அதிகரித்து வருகிறது. 'கோ ஆபரேஷன்' இரகசிய மறிவோரெல்லாம் அவ்விஷயத்தில் ஆக்கிரகப்படுகிறார்கள். ஆதலால் இந்தியாவுக்கும் நல்லதசை யிருப்பதாக எனக்கு நம்பிக்கையிருக்கிறது.

ஏழைகளுக்கு வேண்டியது அன்னசத்திரம், ஊட்டுப்பிறை முதலியவைகளல்ல. தத்தமக்கு வேண்டிய உணவு, துணி, வீடு முதலியவற்றைத் தாமே சம்பாதித்துக்கொள்ள ஏற்படும் சாதனங்களேயாம். இவை 'கோ ஆபரேஷன்' முறையாக உழைத்தால் அவர்களுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். ஏழைக்கிரங்குவதில் இந்தத்தருமத்தை நாம் கவனிக்கவேண்டும். அதாவது:—"ஏழைகளில் சிலருக்கு * நாம் எக்காலத்தும் உதவவேண்டும்; ஓரோர் காலத்தில் ஏழைகளெல்லோருக்கும் உதவத்தான் வேண்டும்; ஆனால் ஏழைகளெல்லோருக்கும் எல்லாக் காலத்திலும் உதவுவது அவருக்கும் நல்லதல்ல, நமக்கும் நல்லதல்ல," என்பதேயாம்.

கானடாவில் முன்னொரு காலத்தில் விவசாயமென்றால் ஜனங்களுக்கெல்லாம் வெகு கசப்பாயிருந்தது. 'கோ ஆபரேஷன்' ஏற்பட்ட பின்னேவென்றால், சங்கதியே வேறாகிவிட்டது. இப்போது 'வேளாண்மையும், அதை யனுசரித்த கறவை முதலிய காரியங்களும் வேண்டியப்படியே நடந்து வருகின்றன. நமது ராஜப் பிரதிநிதியவர்கள் கானடாவிலிருந்த காலத்தில் இம்முறை பிரபலிக்க வேண்டிப்பலவிதத்திலும் சகாயம் செய்துவந்தவர்கள். ஆதலால் இந்தியாவிலும் இவர்கள் காலத்தில் இது பிரபலத்திற்கு வருவதில் தடையிராதென்று நம்புகிறேன். பாபட்லாவில் இது முதன் முதலாரம்பிப்பதில் எனக்குப் பெருமை வெகு அதிகம். ஏனெனில் நான் அதை எனக்கு அபிமான பூமியாக ஸ்வீகரித்துக் கொண்டிருக்கிறேன்."

படிப்பவரனைவரும் இதைக் கவனித்து மேல் நடக்கவேண்டியதை யறியவேண்டும்.

* சப்பாணி, குருடு, நொண்டி, சண்டி முதலியோருக்கு.



**பெண்கல்வி அபிவிர்த்தி.**

குவாலியர் சமஸ்தானத்தில் பெண் கல்வி பரவவேண்டி, சர்க்கார்செய்து வரும் உபாயங்களிரண்டைச் சென்ற மாதத்தில் குறிப்பிட்டோம். லாகோர் ஆசார விமர்சன சபையில் இது விஷயமாக இப்படித் தீர்மானிக்கப்பட்டது:—"இந்த ராச்சியத்தில் உபாத்திச்சிமார் வேண்டிய மட்டில் இப்போது அகப்படுவதில்லை. இதனால் பெண் கல்வி அபிவிர்த்தியாவதற்கு இடையூறு நேரிட்டிருக்கிறது. ஆதலால் இப்போது கல்வி கற்றுப் பெருமையடைந்திருக்கும் பெண்மணிகளொவ்வொருவரும், தத்தமக்கியன்றமட்டில் ஒழிவு உண்டாக்கிக்கொண்டு, தத்தம் வீடுகளுக்கு அருகில் பெண்கள் பாடசாலைகளிருந்தால் அவைகளில் உழைத்து வரவேண்டும். இல்லாவிட்டால், அக்கம் பக்கங்களிலிருக்கும் பெண்குழந்தைகளில் ஏழைகளாயிருப்பவரை வரவழைத்துக் கொண்டு தமதகத்தில் சிறிது சிறிதாகக் கல்வி புகட்டி வரவேண்டும். இப்படியேதாகிலும் செய்து வருவதை இப்பெருமாட்டிகள் விரதமாகக் கொள்ளவேண்டுமென்று அவர்களை இச்சங்கத்தார் நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்," என்று.

இதைப்படிக்கும் ஒவ்வொரு பெண்மணியும் இவ்விஷயத்தில் தம் சக்திக்கேற்க ஏதாகிலும் காலதாமச மின்றிச் செய்யப் பிரயத்தனப்படுவா ரென்று நம்புகிறோம். இப்போதிருக்கிற ரீதிக்கு அனேகமாய்ப்படித்த பெண்கள் பட்டணவாசிகளே. அவர்களில் ஏறக்குறைய எல்லோருக்கும் பகற்பொழுதில் இடையுண்டு. அதை ஊர் வம்பு அளப்பதிலும், சச்சரவு செய்வதிலும், கழிப்பதைவிட, அக்கம் பக்கங்களிலுள்ள ஏழைப் பெண்குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து வந்தால், புண்ணியம், புருஷார்த்தம் இரண்டும் கிடைக்கும். நிச்சயம். இதை முக்கியமாகத் தனவான்களான உத்தியோகஸ்தர் வீட்டு ஸ்திரீகளும், பெரியவக்கீல்கள் முதலியோர் வீட்டு ஸ்திரீகளும் கவனிக்கவேண்டும்.

சிறிதுசிறிதாக ‘க்ஷணப்பொழுது, கணமாத்திரம்,’ என்னும் நியாயத்திற்கிணங்கச்செய்துவந்தால், சீக்கிரம் ‘பலதுளி பெருவெள்ளமாம்’ என்பதற்குச் சந்தேகமில்லை. பட்டணங்களிலெல்லாம், ஒவ்வொரு தெருவிலும் இம்மாதிரி சில ‘ஹஜாரப் பள்ளிக்கூடங்கள்’ ஏற்பட்டால், அதிலிருந்து பெருங் காரியங்களாகாமற் போகாது. இதுவரையில் தக்ஷிண தேசத்தில் நமது ஸ்திரீகள் படித்து நாகரிக முதிர்ந்ததற்கு ஒரு அடையாளம்தான் கண்டிருக்கிறோம். மற்றவரைவிட விலையுயர்ந்த ஆடையாபரணங்களைத் தரித்து மினுக்குவதும், சவாரி முதலியன செய்வதும், வீட்டுவேலை பார்ப்பதற்குக்கூட தேக பலமற்று, சாருவகாலமும் வைத்தியம் செய்துகொண்டிருப்பதுமாம். இனியாகிலும் படித்த ஸ்திரீகள் ‘கொள் என்றால் வாயைத்திறப்பது, கடிவாளமென்றால் பல்லைக்கிட்டுவது’ என்று குதிரைக்குச் சொல்லும் நியாயத்தை அநுசரியாமல், தங்களுக்குப் படிப்பு வந்ததற்குப் பலன் தாங்கள்மட்டும் சுகித்திருப்பதன்று, ஏழைகளுக்குக்கூடியமட்டில் வித்தை வருவிப்பதும் தங்கள் காரியமே, என்று கொண்டு நடக்கவேண்டும்.

இப்படியேதாகிலும் சிறிய காரியங்கள் ஆரம்பமானால், ஸ்திரீகளுக்குள் காணும் பரஸ்பர மாச்சரியம் குறைவதற்கும், காலக்கிரமத்தில் ஜாதி, மதம் முதலியவற்றால் அநாவசியமாக நம்மை யுபத்திரவிக்கும் பிணிகள் நீங்குவதற்கும், பொது நன்மைக்காக ஸ்திரீகளுடைய சகாயம் கிடைப்பதற்கும் வழியேற்படும். தற்காலத்தில் ஸ்திரீகளாலாகவேண்டிய அனேக காரியங்களுக்கு மாமூலைவிட்டு நடப்பதற்கில்லாமல் க்ரம விழிப்பது மெய்யே. என்றாலும் இவ் விஷயத்தில் மாமூலை விடுவதற்கு ஆக்ஷேபமொன்றும் காணவில்லை. ஏனெனில் மாமூல் என்பது பதர்ப்பேச்சே தவிர வேறொன்றுமில்லவாதலால், அதையொழித்து ஏதோ சக்திக்கிணங்க நற்காரியஞ் செய்கிறோமென்றால், ஆக்ஷேபிப்பவர் ஒருவருமில்லை. ஆரம்பிக்க முகூர்த்தமும் பார்க்க வேண்டியதில்லை. எல்லா முகூர்த்தங்களும் சுபமுகூர்த்தங்களேயாம். ஆதலால் இனியொரு டிசம்பர்மீ" த்தில் இந்த விஷயத்தைக்குறித்துப் பேசத் தருணம் வருவதற்குள் மதிராசிலும், மற்ற பெரிய பட்டணங்களிலுமாவது, இம்மாதிரிப் பிரயத்தனம் நடந்துவருவதாகக் கேட்க வெகு ஆவலாயிருக்கிறோம்.

**ஸ்ரீமகாபாரதம், சரியான பதிப்பு.**

‘பன்னியுரைத்திடிலோ, பாரதமாம்,’ என்பது நமக்குள் வெகுநாளாய் வழங்கிவரும் பழமொழி. பல திக்கிலிருந்தும், பலகாலத்திலும், வந்துசேர்ந்தகதைகளும், தருமோபதேசங்களும் கூடி, இந்தப்புஸ்தகம் கங்கையைப்போல் பெருகி, நமக்குள் ‘உச்சிமேற் புலவர்கொள்ளும்’படி வெகு நாளாக வேதங்களுக்குச் சமதையாக ஐந்தாம் வேதமென மதிக்கப்பெற்றுள்ளது. இந்தக் கிரந்தத்திற்கு ஸ்ரீவியாசபகவான் கர்த்தாவென்று சாதாரணமாய்ச் சொல்லுவதுண்டு. இது பதினெட்டுப் பருவங்களடங்கியதென்றும், லக்ஷம் சுலோகங்களோ, இரண்டு லக்ஷமோ கொண்டதென்றும் வித்துவான்கள் சொல்லிவருவதும் சாதாரணம்.

ஆனால் இந்துஸ்தானத்தில் காணும் பிரதிகளிலொன்றையெடுத்து, அதை நமது தேசத்திலுள்ள ஓலைப் பிரதிகளிலொன்றுடன் சரிபார்த்தால், இரண்டும் வியாசபகவானுடைய கிருதியென்றாலும், ஒன்றுக்கொன்று அனேக இடங்களில் பேதப்பட்டுக் காணுகிறது. ஒரு புஸ்தகத்தில் அனேக அத்தியாயங்கள் கூடிக் காணுகின்றன. மற்றொன்றில் சுலோகங்கள் கூடியும், திரிந்தும் காணுகின்றன. ‘பருவங்கள் பதினெட்டு,’ என்பதுகூட நிச்சயமில்லை. ஏனெனில், ‘ஹரிவம்சம்’ என்பது பதினெட்டில் சேருகிறதில்லை. இதே இப்படியென்றால் சுலோகங்களுக்குக் கேட்பானேன்?



ஆகையால் இப்படிப் பலவிதத்திலும் குழம்பிப்போய், மலையாளத்தில் ‘அவியல்,’ என்று சொல்லும் கறிவகையைப்போல், எல்லா தினுசுக் காய்கறிகளும் கலந்து வைத்திருக்கும் இந்தக் கிரந்தத்தை ஜாக்கிரதையாய் விமர்சனம் செய்து, ஸ்ரீவியாச கிருதமானது இது என்றும், பிற்பட்டு வந்தது இது என்றுங் கண்டு, நல்ல பிரதியாக இதை அச்சிடுவது பெரிய புண்ணிய காரியம். இத்தனை காலங்கழிந்த பின் இது எப்படிச் சாத்தியம், என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆனால் காவிய விஷயத்திலும், சாரித்திர விஷயத்திலும் உழைத்து வந்திருக்கும் பெரியோர் மேற் கொண்டால், மொத்தத்தில் இது அசாத்தியமாகாது. உதாரணமாக ஒரு சில்லரை விஷயத்தைப்பார்ப்போம். அர்ச்சுனன் தீர்த்த யாத்திரைப் படலத்தில், அவன் மதுரைக்கு வந்ததாகவும், அவ்விடத்தில் போர் நடந்ததாகவும் கதை சொல்லுவதில், இந்தப்போரை வருணிப்பவர்,

வடுகரெல்லாம் நீருஎன்பார்,
வன்றமிழர் தண்ணீரென்பார்,
துலுக்கரெல்லாம் பாணியென்று
புலம்புகிறார் பாளையத்தில்,

என்று எழுதியிருப்பாராகில், இந்தப்பாகம் துலுக்கர்தென்னிந்தியாவுக்குவந்து நெடுநாளாகிய பின்தான் எழுதிச் சேர்த்திருக்கவேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா? இப்படிப் போலவே மற்றவைகளையும் பரிசோதித்துச் சுமாராகக் கால நிர்ணயம் கண்டு, சுலோகங்களையும், அத்தியாயங்களையும், பருவங்களையும் பரிஷ்காரப்படுத்தி வைக்கவேண்டியது, உடைமைக்காரராகிய நமது முதற்கடமை. ஆனால் நாமோ இப்போது பலவிதத்திலும் நொந்து போயிருப்பதில், நற்காரியமொன்றுக்கும் உதவாதவர்களாயிருக்கிறோம்; புஸ்தகங்களை வசம்புப்பொடி போட்டுக் கட்டிவைத்து விட்டோம். ஏதோ சில மூலைக்காடுகளில் புராணிகர் பாரதம் படிக்கிறார். அவரவர் பிரதி அவரவருக்குச் சரியாக இருக்கிறது. ஒரு பதத்திற்கு நூறு அர்த்தமும், ஒரு வாக்கியத்திற்கு ஆயிரம் அர்த்தமும், சொல்லிக்கொண்டோ, அல்லது சொல்வது சாத்தியமென்று பிதற்றிக்கொண்டோ, காலங்கழித்து வருகிறோம்.

ஆகவே இந்நாட்டில் சம்ஸ்கிருதம், தமிழ் முதலிய யாவற்றிலும் ஆகவேண்டிய முக்கிய காரியங்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமே நடக்கவேண்டியவைகளாயின. அவ்விடங்களில்தான் நமது கிரந்தங்கள் பரிமளிப்பது. அவ்விடத்திய வித்துவான்களுடையவும், தனவான்களுடையவும் முயற்சியால்தான் நமது புராதனக் கிரந்தங்கள் ஜீர்ணோத்தாரம் அடைந்து வருகின்றன. சமீபகாலத்தில் ஸ்ரீ மகாபாரதத்தைப் பரிஷ்காரப் படுத்தவேண்டிப் பிரயத்தனம் நடக்கிறது. இந்தத் தேசம் இன்னும் ‘பெருங்காயம் வைத்தபானை’யாயிருப்பதால், இந்தக் காரியத்தில் யாராகிலும் சிலருக்காவது அபிமானமிருக்குமென்றும், அதற்கு வேண்டிய சகாயம் அவர்களால் கிடைக்குமென்றும் நம்புகிறோம்.

**இந்து மகம்மதியருள் ஒற்றுமை.**

சென்ற ஜனவரிமீ" 29 தேதி டில்லியில் இந்தியா மகம்மதீய மகா ஜனசங்கம் வருஷவாரியாகக் கூட்டிற்று. அதில் அக்கிராசனம் வகித்திருந்த ஆகாகான் பஹதூர் அவர்கள் இந்திய ஜனங்களுக்குள் ஒற்றுமை வேண்டியிருப்பதை விவரித்துப் பேசினார். அவர் சொல்லியது:—“சட்ட நிரூபண சபைகளிலும், வேறிடங்களிலும் மகம்மதீயப் பிரதிநிதிகளாய்ப் போகிறவர்கள் கவனிக்க வேண்டியது இது. முதலாவது தாங்கள் இந்தியச் சக்கரவர்த்திக்குட்பட்ட தருமப் பிரஜைகளென்பதும், அதற்குப் பிற்பட்டுத்தான் தாங்கள் மகம்மதீயப் பிரதிநிதிகளென்பதுமே. ஆதலால் இந்திய மகா ஜனங்களுடைய க்ஷேமத்திற்காக எந்தக் காரியமாக வேண்டுமோ அதில் இதர வகுப்பினருடன் கலந்து காரியம்

சீராக நடக்கும்படி பார்க்கவேண்டும். இந்தத் தேசத்தில் வித்தியாப்பியாசம், வியாபாரம், கைத்தொழில், விவசாயம், கனிவருக்கம், கோஆபரேஷன், முதலிய சாதனங்கள் பெருகவேண்டியது நம்மெல்லோருக்கும் அவசியமான காரியம். இவைகளில் இந்து, மகம்மதீயனென்கிற பேதம் ஏற்பட நியாயமேயில்லை. இவைகளைப் பொறுத்தமட்டில் எல்லா வருக்கத்தவரும் சேர்ந்தே உழைக்கவேண்டும். இவைகளொழிந்தபின் மகம்மதீயராகிய நமக்குமட்டும் ஆகவேண்டியவைகளைக் கவனிக்கவேண்டும்."

இப்படி யிவர் சொல்லியதை நாம் மனப்பூர்வமாய் ஆமோதிக்கிறோம். ஏனெனில் ஒரு பெரிய ரகசியத்தை நாம் ஒருவரும் மறக்கக்கூடாது. மகம்மதீயருக்குப் புண்ணியபூமி அரேபியாவே. காலிப் துருக்கியிலிருப்பதாகவும் வைத்துக்கொள்ளலாம். ஆனாலும் இந்திய மகம்மதீயர் அனேகமாய்ப் பிறப்பில் இந்தியர்களாயும், வளர்ப்பிலும் இந்துக்களுடன் சேரவேண்டியவர்களாயும் இருப்பது பிரத்தியக்ஷம். அதாவது, இந்துக்களும் மகம்மதீயர்களும் இந்நாட்டிலேயே பிறந்து இறக்கிறவர்கள். ஆகவே ஒருவர் தாக்ஷண்ணியம் மற்றவருக்கு இருந்தே தீரவேண்டும். இருதிறத்தாரிலும் விவேகிகள் இதையெப்போதும் ஞாபகத்தில் வைத்துப் பேசவும், எழுதவும் வேண்டும்.

இவ்விஷயமாக முன்னொருகாலத்தில் அயோத்தியா நவாப்பாக இருந்த ஷ-ஜாவுத்தௌலா சொன்னதை நாம் மறக்கவே கூடாதாகையால் அதை எத்தனைமுறை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம். 1761-ம் வருஷத்தில் பானிப்பட்டுச் சண்டையில், மராட்டியர்களும், மகம்மதீயர்களும் போராடியதில், மகம்மதீயர் வெற்றியடைந்தார்கள். அந்தக் கக்ஷிக்குச் சேனாதிபதியான ஆமத்ஷா அப்தலியும், அவருடைய சமஸ்தானப் பிரபுக்களும், அவர்களுக்குச் சகாயமாயிருந்த மேற்சொல்லிய அயோத்தியா நவாப்பும், மறுநாட்காலையில் கூடி, தர்பார் செய்து வருகையில், யுத்தத்தில் இறந்துபோன எதிரி முக்கியஸ்தர்களுடைய பிரேதங்களையும், சிறைபிடிபட்டவர்களையும் சேவகர்கள் இவர்கள்முன் கொண்டுவந்தார்கள். அப்பிரேதங்களில், பேஷ்வாவின் மூத்தமகனாகிய விசுவேசராவுடைய வடிவழகைக் கண்டு ஆப்கானியப் பிரபுக்களில் சிலர் அதிசயித்து, "இப்பிரேதத்தை க்ஷேமித்துக் காபூல் கண்காக்ஷி சபையில் வைத்து விடலாம்," என்ன, ஆமத்ஷாவும் அதற்குச் சம்மதிப்பவர் போலிருந்தார். உடனே அயோத்தியா நவாப்பு எழுந்து அவரைச் சலாம்செய்து, "ஐயா, ஒருமனுச் செய்து கொள்ளுகிறேன். இந்தியாவில் யுத்தம் நடக்கும்போதெல்லாம் ஒரு தருமம் வெகு காலமாக நடந்து வருகிறது. அதாவது தோற்றவருக்குள்ள மரியாதையாம். இப்போது தாங்களும் தங்கள் பரிவாரமும் ஏதோ நாலுநாளைக்கு இங்கிருந்து விட்டுப் போகிறவர்கள். நாங்களோ இவ்விடத்திலே பிறந்து இவ்விடத்திலேயே மாண்டு மடிந்து போகவேண்டியவர்கள். இதைத் தாங்கள் கவனிக்கவேண்டும். யுத்தம் என்றால் ஜயாபஜயம் ஒருவர் பங்கல்ல. இன்றைக்குத் தோற்றமராட்டியர்கள் நாளைக்கு மறுபடி நம்முடன் யுத்தத்திற்கு வரலாம். அவர்கள் கையில் நாமும் தோல்வியடையலாம். அப்படி நேரிடும்போது அவர்களுக்கும் இந்த ஞாபகமிருந்தால், நமக்கென்னகதி? சொல்லவேண்டும். தவிர நமக்கு உயிருடனிருப்பவர்களோடு விரோதமும், யுத்தமும் தருமமே தவிரப் பிராணனையிழந்தவருடன் அன்று. ஆதலால் தாங்கள் தயவுசெய்து இந்தப் பிரேதங்களில் பிரதானங்களாகிய பேஷ்வா மகனுடையதையும், சேனாபதியாகிய சதாசிவராவுடையதையும் என்வசம் ஒப்புவிக்கவேண்டும்," என்றுகேட்டு வாங்கிக்கொண்டு, தன் செலவில் அவ்விருவருக்கும் அவர்களுடைய குலமுறையை யனுசரித்துத் தகனம் முதலிய கிரியைகளைச் சம்பிரமமாக நடப்பித்தாராம்.



இந்து மகம்மதீயர்களில் முக்கியஸ்தர்களே, இந்தப் பழங்கதையை ஞாபகத்தில் வைத்து க்ஷேமமடையுங்கள். அதிகம் சொல்வது அனாவசியம்.

*இந்து ஸ்திரீகளின் தைரியம்.*

இக்காலத்தில் முப்பது வயது கூடுமுன் 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்து,' தேகமெலிந்து, தம்மக்கள் ரயிலில் எல்லாச் சௌகரியத்துடனும், பட்டணம் போய்ப் படிப்பதென்றால் நடுங்கும் ஸ்திரீகள் தம் முன்னோர் முன்னொருகாலத்திலிருந்த வரிசையை அப்போதப்போது சிறிது ஞாபகப்படுத்திக் கொள்ளுதல் நலம். சீதையம்மாள், திரௌபதியம்மாள் முதலியோரை நம்பா விட்டாலும், ராஜபுத்திரர், மராட்டியர், சீக்கர் முதலியவர்களில் கீர்த்திபெற்ற பத்மினி முதலிய பெண்மணிகளின் சரித்திரத்தைக் கேட்டிருப்பவர்களுக்கு நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லையல்லவா? ஆனால் இவ்வாறு நாம் கேட்டு வருவதெல்லாம் விசேஷமாக 'வடக்கத்திய' சமாசாரமாதலால், தென்னாட்டில் பழைய காலத்தில் பெண்களிருந்த வரிசையின்னதென்று அனேகருக்குத் தெரியாமலிருக்கலாம். அவ்வகையோருக்கு உபகாரமாக 'உதயதாரகை'யில் ஒரு நண்பர் எழுதியதை யிங்கு வெகு சந்தோஷமாகச் சேர்க்கிறோம். இலங்கை யென்பதை நாம் ராவணாலயமாக வெகு நாளாய் நம்பி வருவதால், இதைப் படிப்பவருக்கு அப்பெண் மக்களில் சிலர், "ராக்ஷசிகள்" என்றே காணலாம். அப்படிக் காணுவதற்குநியாயம் ஒன்றேதான். நாம் அவர்களுடைய குலமக்களாயினும், அவர்களுக்கும் நமக்கும் சில நற்குணங்களில் பேதம் வெகுவாகிவிட்டதென்பதாம். இனியாகிலும் நல்லறிவு அதிகரித்து முன்னுக்கு வர மார்க்கம் ஏற்படவேண்டும்.

---



## தாயர் துணிவுக்கிலக்கிய சான்றுகள்

சமீபகாலத்து நடந்தேறிய ருஷிய ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானிய பெண்கள் காட்டிய தைரியமான செயல்கள் பல உலகமெல்லாம் விதந்து பேசப்பட்டன. தங்கணவர் புதல்வர் முதலியோர் யுத்தகளத்திற் கஞ்சாது செல்லவும், அவ்விடத்துயிர் துரும்பு எனமதித்துப் போர்புரியவும், பல புத்திமதி புகட்டி முன்னேறச் சென்றாரென்றதில் உலகம் எவ்வளவு மதிப்புக்கொடுத்தது. தம் மைந்தரைக் கோழையராக்கும் மாதாமார் இதைக் கவனிக்கத்தக்கது. நம் சாதியின் பூர்வநிலைமையை நன்கறியாத சிலர், எங்குலமகளிர்க்கு அச்சமே எக்காலத்தும் ஆபரணமென்றும், அதுபற்றியே மேலைத்தேசத்துப் பிள்ளைகளிலும் நம் நாட்டுக்குமாரர்கள் முன்னேற்றம் பெறவில்லையென்றும் கூறுவர். ஆனால் பழைய இலக்கியங்களுடன் ஊடாடும்போது நமது முற்கால மாதாமார் எவ்வளவு மனவுறுதியோடு பிள்ளைகட்குத் துணிவுறுத்தினாரென்பது தெரியவரும்.

பொன்முடியார் என்ற பெண்புலவர் கூறிய போதனை பின்னே வருகின்றது:—

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நடக்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கு
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

இதில் "என்றலை" என்பது மாதாவைக் குறிக்கும். "காளை" என்பது மைந்தனைக் கருதும். மற்றையபொருள் வெளிப்படை.

தாயொருத்தி தனது தந்தை தலைவன் என்பார் முன் யுத்தத்திற் பட்டுப்போயும், தனது ஓரேமகனை யுத்தத்திற்கனுப்பினாளென ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்மணி கூறிய கவியின் ஒருபகுதியை இங்குக் காட்டுதும்:—

" * * * * * இன்றும்
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வல்கைக் கொடுத்து வெளிதுவி ரித்து உடீஇ
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்லது இல்லாள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

பூங்கணுத்திரை என்ற வேறொரு பெண்புலவர், இன்னொரு வீரத்தாயின் செயலை விவரித்திருக்கிறார். அது வருமாறு :—

"வானக் கூந்தல் முதியோள் சிறுவன் களிறெறிந்து பட்டனனென்னு முவகை யீன்ற ஞான்றினும் பெரி" தாயவட்குத் தோன்றிற்றென்பது.

ஒரு கிழவி தன் மகன் யுத்தத்து யானையாற் கொல்லப்பட்டானென்றதிற் பெற்றபோதிருந்த மகிழ்வினும் பெருமகிழ்வடைந்தாள் என்பது கருத்து.

தன்மகன் போரிற் புறங்கொடுத்தானென்ற சொற்கேட்ட மாதாவொருத்தி, பெருந்திகிலடைந்து, என்பாலுண்டுவளர்ந்த மகன் புறங்காட்டினனென்பது ஐயம், அதைப் பார்த்து வருவேனென்று யுத்தகளஞ்சென்று தனையன் இரு துண்டாய் மடிந்து கிடப்பதைக்கண்டு உவகையுற்றாளென்பது பின்வரும் நச்சோள்ளையார் என்ற மாதுசிரோமணி கூறிய கவியால் அறியலாம்.

'மீனரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
* * * *
கொண்ட வாளோடு படுபிணம் பெயர்த்துச
செங்களத் துழாவு வோள்சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"

இத்தகைய பல உதாகரணங்கள் நம் இலக்கியங்களில் மலிந்திருக்கக்காணலாம். S. M. K.

## கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றிய வரலாற்றின் ஆராய்ச்சி

ஸ்ரீமான்-ஸி. கே. நாராயணசாமி முதலியார்

(172-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இனி இராமாயணம் பக்தி விசேடத்தாலன்றி ஒன்றிருவர் வேண்டுகோளாற் பாடப்பட்டதல்ல வென்பதற்குப் பிரமாணம் வருமாறு :—

"அரும்பெறன் மணியும் பெரும்பெயரமிழ்தமே நிறையப்பெற்ற பாற்கடல் போலப் பரந்து விளங்குகின்ற இராமாயணமென்னுந் தெய்வவான்பனுவலைக் கம்பர்பாடியதற்குக் காரணம், இவரது ஸ்ரீராமபக்தியேயன்றி வேறில்லையென்பது, இவர்,

"ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிவ்
வேசில் கொற்றத் திராமன் கதையரோ"

எனவும்,

"ஆக்கவன் புகழ்ந்த நாட்டை
யன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்றா
னென்னயான் மொழிய லுற்றேன்"

எனவும், இராமாவதாரத்துரைத்துப் புகுந்தவாற்றால் நன்கறியத்தக்கது. இவர்,

"முத்தமிழ்த்துறை யின்முறை போகிய
உத்தமக் கவிகட் கொன்று ணர்த்துவேன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ"

என்றதும் இக்கருத்தையே வலியுறுத்தும். இவர் வளர்ந்து சிறத்தற்குக் காரணமான சடையவள்ளல் குடிக்கும் இந்த ஸ்ரீராமபக்தி உண்டென்பது, அவ்வள்ளற்குச் "சராமன்" எனப் பெயரிட்டு வழங்கிய வாற்றால் ஊகிக்கப்படும். அக்குடிப்பரிசயம் இவரது பக்திக்கு ஓர்காரணமாயினும் ஆம். அன்றியும், வான்மீக முனிவர் திருவாய்மலர்ந்தருளியஸ்ரீராமாயணத்தின் திட்பநுட்ப ஒட்பங்களே இவர் காலத்து யாண்டும் பரந்து விளங்கி மேம்பட்டன என்பதும், அக்காலத்தறிஞரெல்லாம் ஸ்ரீராம கதையை அமிழ்



தினும் அதிகமாகமதித்து வந்தனரென்பதும்,

"வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்தவும் இதியம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகழ்
தெய்வ மாக்கதை மாட்சி தெரிக்கவே"

"நொய்தி னொய்ய சொன்னூக்க லுற்றேனெனை
வைத வைவின் மராமர மேழ்துளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே" ()

"ஓங்கரும் பாத நான்கும்
வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத்
தேவரும் பருகச் செய்தான்"

* "எரிகட லுலகந் தன்னு
ளின்றமிழ்ப் புலவர்க் கெல்லா
முறைவலுக் குரிய தாக
மொழிந்தனன் மொழிந்த வென்சொற்
சிறமையுஞ் சிலையி ராமன்
கதைவழிச் செறித றன்ற
லறிவுடை மார்தர்க் கெல்லா
மமிழ்தமொத் திருக்கு மன்றே"

என இவர் இராமாவதாரத்து வழங்கிய வாற்றால் உய்த்துணரப்படும். இவ்வாறு அறிஞரெல்லாம் ஒருங்கு பாராட்டும் ஸ்ரீராம கதையின் தெய்வமாட்சி இப்பெரும் புலவரது அறிவுடைய நெஞ்சினையும் நன்கு கவர்ந்ததாதலின், அதனையே தமது "செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூறிய தீஞ்சொல் வல்லிய" தமிழ்ப் பாக்களாற்பாடிப் புகழ்நிறுத்துதற்கு ஆசைப்பட்டனர் எனினும் அமையும்.

இவர் இராமாயணத்தைப் பெரும்பான்மை வெண்ணெய்நல்லூரிலும், சிறுபான்மை ஒற்றியூரிலும் இருந்து பாடினரெனவும், ஒற்றியூரிலிருந்தபோது இந்நூலை இரவிலே பாடினரெனவும், அக்காலத்து மாணக்கர் பலர் பிந்தாமலெழுதுவதற்கு அவ்வூர்க் காளியைத் தீப்பந்தம் பிடிக்கப் பாடினரெனவும்,

'தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே" ()

"ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர்க் காகுத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி" (தமிழ் நாவலர் சரிதை)

என வருவனவற்றால் அறியப்படுகின்றன."

அன்றியும், கம்பர், அரவந்தீண்ட விறந்த தில்லை மூவாயிரவர் மகவை யுயிர்ப்பிக்கப் பாடிய மூன்று வெண்பாக்களும், கம்பர் "ஏரெழுபது" என்னும் நூலை அரங்கேற்றுகையில் திருவெண்ணெ சடையவள்ளலுடனிருந்து கேட்ட புதுவைச் "சேதிராயன்" என்னும் ஓர் உபகாரியை விடந்தீண்ட அவர் பொருட்டுப் பாடியதாகக் கம்பர் பாடிய "திருக்கை வழக்க"க் கலியடிகளிலொன்றில்,

"...................................பாவலர் தா"
மேரெழுப தோதியநாள் சேற்றுங் கயிலைனாரி
காரிவிட நாகங் கருக்குங் கை.

எனவும், இதனுக் கெடுத்துக்காட்டி யாகத் "தொண்டைமண்டல சதக"த்தில்,

"அழுவதுங் கொண்டு புலம்பாது
நஞ்சுண் டதுமறைந்தே
ரெழுபதுங் கொண்டு புகழ்கம்பவாண
னெழுப்பவிசை
முழுவதுங் கொண்டாரு
சொற்பேச ரெய்யின் முழுகிக்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட
தாற்றொண்டை மண்டலமே"

என வருவனவற்றால், கம்பர் எதன்பொருட்டு அம்மூன்று பாடல்களும் பாடியிருப்பாரென்பதை அறிவின்மிக்கார் ஊகித்தறிதல் வேண்டும். தில்லை மூவாயிரவர் விஷயமாக இவர் பாடியதற்குத் தக்க சான்றின்மையாலும், ஏரெழுபது விஷயமாகப் பாடியதற்குத் தக்க சான்றுளதாலும், இவை சுத்த அபத்தமென்பதுணரப்படும்.

மேலே விவரிக்கப்பட்டனவற்றால், கம்பர், இராமாயணம் பக்தி காரணமாகப் பாடினாரென்பதறியப்படுகின்றதன்றி, மற்றொருவர் வேண்டுகோளாற் பாடப்பட்டதல்ல வென்ப

* இச்செய்யுள் பழைய ஏடுகளிலுள்ளது.

* 'செந்தமிழ்' தொகுதி 3. பகுதி 2.

தறியப்படும். அங்ஙனம் ஒருவர் வேண்டுகோளாற் பாடப்பட்டதெனின், "வில்லிப்புத்தூரர்" பாரதத்தில் அவர் குமாரர் "வருந்தருவார்" பாடிய பாயிரத்தில் "வங்கபாகை கோங்கர்குல வரபதியாட்கொண்டான்" என்னும் பிரபுவின் வேண்டுதலின்படி வில்லிப்புத்தூரர் பாரத விருத்தம் பாடினாரென்பதை,

"பிறந்துய்யக் கொண்டவனிப் பேருலகம்
பெருவாழ்வு கூறு நாளி
னிறைந்தபுகழ்ச் சனிநகர்வாழ் வில்லிபுத்தூ
ரனைநோக்கி நீயும் நானும்
பிறந்ததிசைக் கிசைநிரப்பப் பாரதமாம்
பெருங்கதையைப் பெரியோர் தங்கள்
சிறந்தசெவிக் கமுதமெனத் தமிழ்மொழியின்
விருத்தத்தாற் செய்க வென்றான்"

எனக் கூறியதுபோல இவரும் இராமாயண காவியத்தில் எங்கேனும் ஓரிடத்தில் குறித்திருக்க வேண்டுமே? அங்ஙனமேனில்லை? இக்காரணங்களாலேயே விநோதரஸமஞ்சரியிற் கூறப்படுகிற "கம்பர் இராமாயணம் பாடியரங்கேற்றிய வரலாறு" சுத்த கற்பனைக் கிடமாமென்பதை உணர்ந்து கொள்க.

அன்றியும், விநோதரஸமஞ்சரி முதலிய நூற்களிற் கூறப்படுகிற இராமாயணம் பாடிய வரலாற்றின் உண்மைகள் மேலே விவகரிக்கப்பட்டதல்லாமல் பின்னும் ஆழ்ந்து விசாரிக்கப்புகின் பல ஆட்சேபங்களும், கம்பர்மேல் பழிபாவங்களுமேற்படுகின்றன. அருட்கவியாகிய கம்பர்பேரில் அகாரணமாக இங்ஙனம் பழிசுமத்தத் தொடங்கிய தென்னையோ? "குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்ட" கதையொப்ப கம்பர்பால் பெருமை கற்பிக்கத் தொடங்கியோர் இழிவையே தேடிவைத்தனர் என்னலாம். ஆராயாது செய்கருமங்களெல்லாம் முடிவில் இழுக்கையே தருமன்றோ? இது பற்றியே,

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு."

எனப் பெரியாரும் பணித்தனர். [illegible]மாக்களுடைய சரித்திரங்களை உலகத்திற்கு வெளிப்படுத்தும் மேதாவியர் செவ்வனே பரிசீலனை செய்து வெளியிடுவதன்றோ புகழ்ச்சிக்குரியதாகும். அங்ஙனமின்றி உண்மைக்கு விரோதமாய் ஒழுங்கீனமாகவிருந்தால் வெளியிடமுற்பட்டவர்கட்குச் சரித்திர ஞானமே கிடையாதென்றல்லவோ நினைக்க வேண்டியதாகின்றது. நிற்க.

இனிக் கம்பர் விஷயமாக வெழும் ஆட்சேபங்களையும் பழிபாவங்கள் நேருவதையும் முக்கியமான சில விஷயங்களால் விளக்கி எடுத்துக்கொண்ட வியாசத்தை இனிது முடிப்பாம்.

கம்பரானவர் தனக்குத் தந்தை யொப்ப அன்ன வஸ்திராதிகளைத் தந்தாதரித்துக் கல்வி கற்பித்து மணவினையாதிகளை முடித்து ஆபத்துக்கெல்லாம் அருந்துணையாக விருந்து காத்த சடைய பிள்ளையின் விழைவைச் சட்டை செய்யாதவராயிருந்தபோதே,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னு மிலக்கணத்திற்கு இலக்காயினர். இஃதின்னனமாக அச்சடையபிள்ளை சோழராசன் முன்னிலையிற் சொல்லுவித்தும், அதனையுங் கடந்தவராய்ப் பின்னிருவரு நேரிலழைத்துக் கேட்டபோது,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்பதைத் தானோதியிருந்தும் பேசியபொய்,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்றபடி யார்க்கென்ன தீங்கை யொழித்து நன்மையைத் தந்தது? அப்பொய்யில் பிறருக்கொரு நலமில்லாதபோதே தனது சுய நலத்தைக் கருதிக்கூறிய பொய்யாகித் தன்னையே சுடுமென்பதற்கையமென்னை? இதனாலன்றோ தேவர்,

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்."



எனமீண்டும் வற்புறுத்திக் கூறினர். இத்தகைய செய்ந்நன்றி மறக்கும் பொய்யருக்குக் கலைவாணியின் கடாக்ஷ மிருப்பதென்பதியாங்ஙனம்?

அல்லாமல், அரசன் அக்காவியத்தை விரைவிற்பாடி முடிக்கக் கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் நியமித்தானாயின், அதனைப் பப்பாதியாகப் பகிர்ந்து தந்து, "கந்தப் புராணச் சப்த காண்டங்க"ளையுங் "கச்சியப்பசிவாசாரி"யருங் "கோனேரியப்பநாவ"லரும், "காஞ்சிப் புராண வுபயகாண்டங்க"ளையுஞ் "சிவஞான சுவாமி"களுஞ் "கச்சியப்பமுனிவரும்" பகிர்ந்து கொண்டு பாடியதுபோலப் பாடச் செய்தல் விதி. அவ்வாறின்றித் தனித்தனிப்பாடச் செய்தானென்பதற்குக் காரணம் யாது?

கம்பர் தாம் பேசிய பொய்க்கிணங்கப்பாடி வந்த சேதுபந்தனப்படலத்திலோர் பாட்டில் "துனி" என்னும் பதத்திற்கு ஆகுபெயராய்த் "துமி" எனப் பிரயோகித்திருப்பதில் கூத்தனாரையங்கொண் டாக்ஷேபித்தன ரென்றால், இத்தகைய பிரயோகங்கள் பலவிலக்கிய நூல்களில் "எதுகை"யின் கண்ணும், "மோனை"யின் கண்ணும் இன்னும் பல சீரின்கண்ணு மெத்தனையோ கண்டோர் தாமே கையாடியுமிருக்கு மவருக்கு அதிற் சந்தேகம்வந்தது மிகவாச்சரியமே. அன்றியு மித்தகைய விகற்பங்கள் தானோதியுள்ள "சிந்தாமணி" முதலிய காவியங்களிலேயே செப்பரிதா யுள்ளன. இவை சுட்டும் விதியோ எல்லா விலக்கண நூல்களினு மெண்ணிலவாயுள. இத்தகைய வோரற்ப காரியார்த்தமாக "கலைமகளார்" ஓரிடைச்சியாக விடையர் சேரியின்க ணெழுந்தருளி அச்சந்தேகத்தினைத் தீர்த்து, அதனினு மிகவாச்சரியமே. இத்தமிழ் நாட்டின்கண்ணுள்ள இலக்கிய நூல்களில் இத்தகைய பிரயோகங்கட்கெல்லாம் கலைமகளார் வந்துதான் கண்டிறக்கவேண்டும் போலும்.

—கம்பனைத் தேவருளாசற்பாடும் "வரகவி" யெனக்கருதி யஞ்சிக் கூத்தர் தாம்பாடிய இராமாயணத்தைக் கிழித்தெறிந்தன ரென்றால், இப்புவியிலிதுகாறு மெத்தனையோ வரகவிகளிருந்து பாடிய பாக்களைக்கண்டு பயந்து எத்தனைபே ரெத்தனை பிரபந்தங்களைக் கிழித்தெறிந்தார்கள்? இடையில் வெறிபிடிக்கப்பட்ட வித்துவான்களுங்கூடத்தாம் பாடிய பாக்களைக் கிழித்தெறிய மனங்கொள்ளார்களே. அப்படியவருண்மையாகக் கடல்காண் படலம் வரையிற்பாடி யிருந்தும், கம்பரதற்குமேல் சேதுபந்தனப் படலம் வரையிற் பாடி யுள்ளேனெனப் பொய்சொல்லிப் பின்னர் பாடிவந்த அப்படலத்தில் தாம் "துமி" என்பதற்குப் பொருள்தெரியாது மயங்கி, அது முன்னிலையிற் கம்பர் கலைவாணியி னருள்பெற்ற வரகவியெனத்தெரிந்து கொண்டாரேல், அப்போதேயன்றோ தாம் பாடியவரையிற் கிழித்தெறிதல் வேண்டும். அப்பா லாறுமாதம் வரையிற் கஷ்டப்பட்டு முன்பாடிய ஐந்துகாண்டச் செய்யுள்களைக் கொள்ளற்பாலன வாகிய மற்றையிரண்டு காண்டங்களை ஏனவர்வீணே பாடல் வேண்டும்?

கம்பரது கவிக்கெதிரே நமது கவி கவின் செய்யமாட்டாதெனக் கிழித்தெறியத் தலைப்பட்ட கூத்தர் "ஆறு காண்டமே பாடியேழாவதற்கிதனை வைத்துக்கோள்ளுகிறேன்" என அவ்வுத்தரகாண்டத்தைக் கம்பர் கேட்டபோது அப்படியே செய்யுமென்று கூறிக்கொடுத்தாரெனில், தமது கவி அவர்கவிக்குமுன் தாழ்ந்து போமென் றட்கினவர், எப்படி யதிலொருகவி யெனுங் கொடுப்பர்? உடனே கிழித்தெறிந்தனவற்றையும் பொறுக்கிச்சேர்த்து அவர்கண்முன் தானே நெருப்பிலிட்டுத் தீய்த்திடுவரன்றோ? அந்தோ! இவைகளையெல்லாம் அறிவின்மிக்கார் யோசிக்குமிடத்து நம்பத்தகனவாமா?

# இந்தியா எப்படியுண்டாயிற்று?

ஸ்ரீமான்-கோள கோவிதன் எம். ஏ.

புராணக் கதைகளிலும், சாமான்னியப் பேச்சிலும், நாம் வசிக்கும் இப்பூமியைச் சில சமயங்களில் பூராவாயும், வேறு சமயங்களில் அரைகுறையாயும், சமுத்திரம் விழுங்கிவிட்டதாகவும், அதனால் பிரளயமுண்டானதாகவும் கேட்டிருக்கிறோமல்லவா? தவிர, அகஸ்திய முனி வெகு சிறிய உருவம் படைத்தவராதலால், ஒருக்கால் விந்திய பருவதத்தைக் கடக்கமுடியாமல் அதைச் சற்றுத் தாழ்ந்திருக்கும்படிக் கேட்டதாகவும், அப்பருவதமும் அதற்குச் சம்மதித்துத்தாழ, முனிவர் அதைக் கடந்துவந்து நின்று, "ஓ, பருவதமே, தெற்கே ஒரு காரியமாகப் போகிறேன், திரும்பி வருமளவும் நீ இப்படியே இரு," என்று சொல்லிப்போனதாகவும், நாளதுவரை திரும்பிவராததால் விந்தியம் இன்னும் அப்படியே தாழ்ந்திருப்பதாகவும், ஒரு கதை கந்தப் புராணத்தில் படித்திருக்கிறோம். அப்படியே மலையாளத்திய பூமி முன்னொரு காலத்தில் கடலிலமிழ்ந்திருந்ததாகவும், பரசுராமனுக்குத் தன் மதியீனத்தினால் ஒரு சந்தர்ப்பத்தில் இருக்க இடமில்லாமற் போகவே, மேற்குக் கணவாய் மலைமேலேறித் தன் கையிலிருந்த பரசுவை (கோடாலியை) எறிந்து அது போய் விழுந்த எல்லைவரையிலும் சமுத்திரத்தை விலகியிருக்கும்படி உத்தரவளிக்க, அதுவும் அப்படியே இடைந்து சென்று, இக்காலத்திலுள்ள மலையாளிமாருக்கும், பட்டன்மார் முதலியோருக்கும் சுகமாய் வசிக்க இடமுண்டாயிற்றென்று கேரளோற்பத்தி புராணத்திற் காணுகிறது.

இப்படியெல்லாம் ஆங்காங்கு காணுங்கதைகளுக்கு என்ன அர்த்தமென்று நாம் யோசிக்க வேண்டும். தீர்க்கமாய் ஆலோசிக்குமிடத்து இது வாஸ்தவமென்று விளங்கும். அதாவது, எப்படி மனிதராகிய நமக்குச் செல்வமும் தரித்திரமும் மாறி வருகின்றனவோ, எப்படி, "எழுநிலை மாடங் கால் சாய்ந்துக்குக் கழுதை மேய் பாழாயினும், ஆகும்" என்று தெரிகிறதோ, எப்படிச் சேர சோழ பாண்டியராகிய தமிழ்நாட்டு மூவேந்தரும் எவ்வளவோ செழித்தோங்கி, ராஜ்ஜியபாரஞ்செய்து, இக்காலத்தில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விட்டனரோ, எப்படி முற்காலத்திலிருந்த புற்பூண்டுகளிலும், பக்ஷிமிருகாதிகளிலும், அனேகவகைகள் அடியோடு அற்றுப்போய் அவற்றின் எலும்புகள் மட்டும் இங்குமங்குங் காண்கின்றனவோ, அதுபோலவே நாம் வசிக்கும் இப்பூமியும் அடிக்கடி உருமாறுகிற தென்பதேயாம்.

இதற்குச்சாக்ஷியம் வெகு சுலபம். நதிகள் போக்கு மாறியும், சமுத்திர நீர் கரையெறிந்தும், எட்டிப்போயும், ஜனங்களுக்குக் கஷ்டத்தையோ சுகத்தையோ விளைவிப்பது இக்காலத்திலும் பிரத்தியக்ஷமே. சில சமயங்களில், பூகம்பங்களாலும், எரிமலையின் உற்சாகத்தினாலும்; பெரிய அனர்த்தங்கள் விளைந்து, பூமி தேவி தன் பெருவாயைத்திறந்து அகப்பட்டயாவையும் விழுங்கி விடுவதும், அப்போதப்போது நமது காதில் விழுந்து வருகிறது.

இதனால் நாம் வாசஞ்செய்யும் இந்தியாவானது இப்போது படத்திற் காணுவது போலவே எக்காலத்திலுமிருந்ததில்லையென்பதை நிச்சயமாகக் கொள்ளலாம். இப்படி மாறி வருவது நிச்சயமென்றால், அதற்குக் காரணங்களையும், அக்காரணங்களால் அவ்வித மாறுதல்களுண்டாகும் கிரமங்களையும், அறிந்துகொள்வது வெகு அவசியமாயாக வேண்டிய காரியம். பூகம்பத்தினால் நமது வீடு வாசல் முதலியவையெல்லாம் நடுங்கும்போது, ஆதிசேஷனோ, திக்கு யானையோ, சிரமத்தைப் பரிகரித்துக்கொள்ளுவதாகச் சொல்லுவது இனிமேல் நமக்கு அழகல்ல.

நாம் வீடுவாசல்களைக் கட்டி, வயல், வாய்க்கால், தோட்டம், துரவுகளை உரிமையாக்கிக் கொண்டு, "சந்திராதித்தியருள்ளவரை, புத்திர பௌத்திர பாரம்பரியமாய், தானாதி விக்கிரயங்களுக்கு யோக்கியமாய், அனுபவித்து வரும்" இப்பூமியானது ஒரு பெரிய கோளம், என்றால் உருண்டையென்பதும், அதை நாம் பிரதக்ஷிணஞ்செய்து எங்கே பார்த்தாலும், மேற்பரப்பில் நாம் காணுவது நிலம், நீர் என்று இருவகைப்பட்டிருக்கிற தென்றும் எல்லோருமறிவார்கள். ஆனால் சுரங்கமுண்டாக்கிப் பூமிக்குள்ளேயே போய்க் கொண்டிருந்தால் போகப் போக எப்படியிருக்கு மென்பது அனேகருக்குத் தெரியாது. ஆதலாலிது விஷயத்தில் அனுபவமுள்ளவர்கள் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அதாவது, நாம் போகப் போக உஷ்ணமதிகரிக்கிறதென்றும், அப்படி உஷ்ணமதிகரித்துவரவே, சுமார் 50 மைல் தூரம் ராமபாணம்போல உள்ளேயே போய்க்கொண்டிருந்தால், நிலம், நீர் என்னும் உருக்கள் மாறிக்கல்லும் உருகி, எல்லாம் ஒரே குழம்பாகக் கொதித்துக்கொண்டிருக்கிற தென்றும், அப்படிக் கொதித்துக்கொண்டிருக்கும் கற்குழம்பே சில சமயங்களில் எரிமலைவாய் வழியாக நாலு புறத்திலும் வழிந்து பெருங்கேடு விளைவிக்கிற தென்றுஞ் சொல்லுவதை நாம் நம்பவேண்டும். இம்மாதிரி விஷயங்களை விசாரஞ் செய்வது ஓர் புதியதத்துவம். அதற்குப் "பூகோளதத்துவம்" என்றோ "பூகோளரகசியம்" என்றோ பெயரிடலாம்.

இந்தத்தத்துவ மூலியமாய் நாம் பல ரகசியங்களை யறிகிறோம். ஆனால், அவற்றுள் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது இது. பூமியில் எங்கே பார்த்தாலும் மேடும்பள்ளமுமாகவும், கிழவன் முகத்தில்விழும் திரைகளைப்போல் வரிசை வரிசையாகவும் காணும் மலைத் தொடர்ச்சிகளென்னும் பெருந்திரைகள் ஆங்காங்கு காணுவதற்கும், இவை அப்போதப்போது கிடை மாறிப்போவதற்கும், காரணமாவது, நாம் மேற்கூறியபடி நமது காற்கீழ் ஐம்பது மைல் தூரத்தில் சார்வ காலமும் கொதித்துக் கொண்டிருக்கும் குழம்பின் வைபவமேயாம். இக்குழம்பு உள்ளே கொதித்துக்கொண்டும், அத்துடனிருக்கும் ஆவி வெளியே போகவேண்டியுமிருப்பதில், அதுதான் பூமியின் மேல் பரப்பாகிய நமது வாசஸ்தானத்திற் குண்டாகும்சகல அனர்த்தங்களுக்கும்காரணமாகிறது ஆகவே இப்பெருங் குழம்புதான் ஆதிசேஷன் திக்குயானை முதலிய யாவற்றையும் உருக்கிவார்த்ததோர் பெரிய மிருத்தியுவென்னலாம்.

அன்றியும் இதுகாரணம்பற்றியே இப்பூமண்டலம் எவ்விடத்திலும், எக்காலத்திலும், அசைந்துகொண்டேயிருக்கிறது. ஆதலாலிதற்குத் 'தரை'யென்றால், அழிவற்றும், அசைவற்றும், ஸ்தாவரமாயிருப்பதாகப் பெயரிடுவது பிசகு. ஏனெனில், இப்போது சமுத்திர மூடியிருக்கும் அனேக இடங்கள் காலக்கிரமத்தில் திடராகியும், இப்போது தரையாகி மனிதர் வாசஞ்செய்யும் இடங்கள் முன்னொருக்கால் துவாரகாபுரியை விழுங்கியதுபோல் சமுத்திர ராஜன் வந்து தன் அலைகளால் மோதி விழுங்கியும், இருப்பது எக்காலத்திலும் பூமிக்குள்ள இயல்பாம். ஆதலால் ஓரிடத்தில் நயமும், ஓரிடத்தில் நஷ்டமு மாறி மாறியே வருகின்றன. அதாவது, ஓரிடத்தில் மலை முதலியன உற்பத்தியாவதாகவும், மற்றோரிடத்தைச்சமுத்திரம் விழுங்கிவிட்டதாகவும் நாம் சாதாரணயாய்ச் சொல்லிக்கொள்ளுவது ஒருவாறு வாஸ்தவமேயாம்.

இதற்குக் காரணம் இப்போது விளங்கும், நாம் மேற்கூறியபடி நமது கோளத்தின் மத்தியிலுள்ள குழம்பும், ஆவியும், இடைவிடாமல் தம்மிடத்திலுள்ள கனலைச் சுற்றிலுமுள்ள ஆகாசவெளியில் வீசி வருவதில்,அதனால் அவற்றின் உருச்சுருங்கிப் போவதாம். கோளத்தின் உள்ளிருக்கும் பதார்த்தம் சுருங்கவே,அதைச் சுற்றி எல்லாப்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 7- APR 1910

புறத்திலும் காணும் கெட்டித்தரையும் அதற் கேற்கச் சுருங்கி,மேடும்பள்ளமுமாக மாறிமாறி வருகிறது. தேகத்தில் ரத்த புஷ்டி குறைந்தால் முகத்திலும் அங்கங்களிலும் திரைகளுண்டா வது போலவும், அல்லது எலுமிச்சம் பழத்தை வாடவைத்தால், அதிலுள்ள ரசம் வற்ற வற் றச் சுளை சுருங்க, அதை யொட்டி மேற்றோ லும் சுருங்கியே தீரவேண்டியிருப்பது போல வும் என்றறிக.

பழம் சுருங்கியபின் அதன் தோலைப்பார்த் தால், சில இடங்களில் வரப்புபோல் உயர்ந்தும், சில இடங்களில் உழவுத்தாரைபோல் வாய்க் கால் படிந்தும் கிடக்கிறது. இதுபோலவே, இப்பூகோளம் சுருங்குவதில் அதன் கெட்டித் தோலாகிய தரையில் பலவிடங்களில் மலைத் தொடர்களென்னும் வரப்புகளும், பள்ளத்தாக் குகளென்னும் உழவுத்தாரைகளுமாகின்றன.

இம்மாதிரி மாறுதல்கள் இந்தியாவிலேயே தற்காலம் சாதாரணமாய்க் காணலாம். செங் கற்பட்டுக்குக் கிழக்கில் சுமார் 18-மைல் தூரத்திலிருக்கும் "மகாபலிபுரம்" என்று வழங்கும் "மாமல்லபுரம்" இதற்கு நல்ல சாக்ஷி. முன்னொருகாலத்தில் அவ்விடத் தில் யாரோ தனவான்கள் கட்டிய கோயி லைப் பிறகு காலக்கிரமத்தில் சமுத்திரம் விழுங் கிவிட்டது. உடனே அந்தத் தெய்வ விஷ யத்தில் பக்தியுள்ளவர்கள் அந்த இடத்தை விட்டு அரைமைல் தூரம் பின்னிடைந்து முன் போலவே கோயிலை மறுபடி கட்டினார்கள். அக்காலத்தில் சமுத்திரம் இப்புதுக்கோயிலை அடுத்து மோதிக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் இதுவும் ஸ்திரப்படவில்லை. ஏனெ னில், தரை சிறிது சிறிதாக உயர்ந்தது. அவ்வ ளவிற்குச் சமுத்திரம் கோயிலைவிட்டு எட்டிப் போகவேண்டியாயிற்று. ஆகவே முந்தியிருந்த கோயிலும் கிரமமாக ஓங்கிச் "சமுத்திர கிரா ணம்" நீங்கி, இப்பொழுது யாரும் போய் வழி படும் வண்ணம் இருக்கிறது. ஆனால் அவஜஸ் தம்பத்தைமட்டும் இன்னும் சமுத்திரத்தின் அலைகள் மோதிக்கொண்டு பழங் கதையைக் கேட்போருக்கெல்லாம் சொல்லுபவைகள்போ லிருக்கின்றன.

மற்றொரு சாக்ஷியம் வேண்டுவோர் ராமே சுவர யாத்திரை போதல் வேண்டும். அவ் விடத்தில் ராமேசுவரத்தீவில் ஸ்நான கட் டத்தில் ரத்னாகர மென்னும் இந்து மகா சமுத்திரத்தின் நீரும், பங்காளக்குடாவின் நீரும் சங்கமமாகும் புண்ணிய ஸ்தலத்தில் இத ற்குச்சாக்ஷியம் காணலாம். தனவான்களான நாட்டுக்கோட்டைச் செட்டிமார், யாத்திரிகர் களுடைய சௌகரியத்திற்காக முற்காலத்தில் ஸ்நான கட்டமாயிருந்த இடத்திற்கருகில், ஒன்றழிய மற்றொன்றாக மூன்று தரும சத்தி ரங்கள் முறையே கட்டினார்கள். ஆனால் மூன் றும் சமுத்திரத்தின் அலைகள் மோதிப் பாழா கிக் குட்டிச்சுவர்மட்டுமே நின்றிருக்கின்றன. ஆகவே, மேற்கூறிய இரண்டு மகா சமுத்திர ங்களும் கைகலக்க வேண்டியதில், அதற்கு இட றுகட்டையாகக் கிடந்த கோவணம்போன்ற இப்பூமிக்குண்டான மாறுதல்களை நாம் எளிதி லறியலாம். சுமார் ஐம்பது வருஷத்திற்கு முன் இச்சத்திரங்களிலொன்று அக்காலத்திய ஸ்நான கட்டத்திற்கு அடுத்திருந்தது. இப் பொழுதோ வென்றால், ஸ்நானகட்டத்திற்கும் இதற்கும் 15-மைல் தூரமாகிவிட்டது! சுற்றி லும் மணல் நிறைந்த வெறும் பரப்புதவிர வேறொன்றுமில்லை!

இதுபோலவே இந்தியாவின் மேற்கிலுள்ள மலையாளக் கரையிலும், இப்போது காயல்களுக் கும் அரபி சமுத்திரத்திற்கும் இடையில் திடர் கள் அனேக இடங்களில் காணுகின்றன. இவை யெல்லாம் முற்காலத்தில் நீரிலமிழ்ந்தி, அரபிக் கடல் இடையறாது மலையாளக் கரையை மோ திக்கொண்டிருந்திருக்கத்தான் வேண்டும். இத் தியாதி காரணங்களால், தரையென்பது பல



மஹாபலிபுரம்—கோயில் ஷோரம்



மஹாபலிபுரம்—கடற்கரையிலுள்ள கோயில்



முறை ஆங்காங்கு நீரிலமுந்தியும், திடராக உயர்ந்தும் வந்திருக்கிறதேன்பது நிச்சயம்.

ஆனால் சிலர் ஆக்ஷேபிக்கலாம். "தரையென்பது கெட்டியாகவும், சாதாரணமாய் ஸ்தாவரமாயுமிருக்க, அதை ஏன் உயருகிறதென்றும், தாழ்கிறதென்றும் சொல்லவேண்டும்? சமுத்திர நீரோ எப்பொழுதும் அலைத்துக் கொண்டேயிருக்கிறது. ஆனதுபற்றி அந்த நீரைத்தான் பொங்குவதாகவும் இழிவதாகவும் சொல்லுதல் தகுதி." என்று. இந்த ஆக்ஷேபம் சாமன்னிய ஜனங்களுக்கும் சரியென்றே காணும். ஏனெனில் யுகப்பிரளயம் முதலிய பெரிய விநாச காலத்தில் சமுத்திரம் பொங்கிப் பூமியை முற்றும் விழுங்கி விடுவதாகவே புராணக் கதைகளில் எல்லோரும் கேட்டிருக்கிறார்கள்.

ஆனால் நமது தத்துவம் அனுபோகத்தையாதாரமாகக் கொண்டிருப்பதால், அதற்கும் இதற்கும் ஒவ்வாது. ஏனெனில், சமுத்திரம் பொங்கிற்றென்றும், அதனால் ஹிமாசலத்தில் தற்காலத்திய சமுத்திர மட்டத்திற்கு மேல் 5½-மைல் உயரக்கூடிய பெருஞ்சிகரமாகிய கௌரீ சங்கரப் (எவரஸ்டு சிகரம்) பருவதம் முழுகிற்றென்றும் வைத்துக் கொள்ளுவோம். இப்படியாவதில், அப்பருவதத்தின் அருகில்மட்டுமே ஜலம் பொங்குவது சாத்தியமன்று. பூமியில் எங்கே பார்த்தாலும் ஜலம் ஒரே மட்டமாகத்தானிருக்கப் பார்க்குமாதலால், இந்த மகா சமுத்திரம் பொங்கினால் அந்த நீர் நாலா பக்கத்திலும் பெருகி மற்ற சமுத்திரங்களோடு கலந்து ஒரு மட்டமாகித் தீரவேண்டும். ஆதலால் ஹிமாசலத்தை முழுக்கடிக்கவேண்டுமானால், பூமிதேவிக்குப் பாவாடையாகிற சமுத்திரங்களனைத்தும் இப்போதிருப்பதை விட 5½-மைல் உயரமாகிக் கூடவேண்டும். அவ்வளவு ஜலம் எங்கிருந்தோ யுகாந்தத்தில் வந்து, "ஆபத்துக்குச் சிலேஷ்மமுதவுவது போல்," உதவுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். மறுபடி யிவ்வாறு பூகோளத்தில் தரைகாணவேண்டுமானால், இந்தச் சலமெல்லாம் எவ்விதமாக வற்றிப்போவது? சூரியஉஷ்ணத்தினால் ஆவியாகப் போவதென்றால், எப்படி? சமுத்திரத்திலிருந்து ஆவியாகக் கிளம்பும் ஜல அணுக்கள் மறுபடியும் உயரப் போகப் போகக்குளிரினால் இறங்கி மழையாக விழுந்து "ஆகாசத்திலிருந்து விழும் நீரானது மறுபடி சமுத்திரத்தையே போய்ச் சேருகிறது," என்கிற நியாயப்படி யடைவதினால், இந்த மூலமாய் அவ்வளவு நீரும் குறைவது அசாத்தியம். ஆதலால் யுக்திவாத மாகவாவது அல்லது அனுபோகத்தினாலாவது, இதற்குச் சமாதானஞ் சொல்லுவதற் காகாது. புராணக்கதையென்றால் சுலபம். யாரோ ஒரு மகரிஷி, அகஸ்தியரோ, வாமதேவரோ, அத்தனை நீரையும் ஆபோசனஞ் செய்துவிட்டாரென்று முடிக்கலாம். அதை நம்மவர் யார் இக்காலத்தில் ஒப்புவார்கள்? ஆதலால் இந்தக் கக்ஷி கூடாததாக, நாம் முற்சொல்லியபடி, ஸ்தாவரமென்னும் இத்தரையே சமுத்திரமட்டத்தை மீறியுயர்ந்தோ, அல்லது தாழ்ந்தோ, வருகிறதென்றும், அவ்வாறு செய்வதில் புதிதாகத் தரையும், சமுத்திரமுமுண்டாகிறதென்றும் நாம் நிச்சயிக்கிறோம்.

ஒருமுறை யிவ்வாறு தரையில் ஏதோ ஒரு பாகம் நீரிலமிழ்ந்து விடுவதாக வைத்துக் கொள்ளுவோம். இப்படியானதும் அதையடுத்துள்ள பிரதேசங்களிலிருந்து பெருகும் நதிகள், வண்டலையும், அத்துடன் அப்பிரதேசத்திய புற்பூண்டுகளையும், பக்ஷி மிருகாதிகளையும், விடாமல் அடித்துக்கொண்டு போய்ச் சேர்த்துவருகின்றன. இவையெல்லாம் இந்தப் பள்ளத்திலமிழ்ந்து காலக்கிரமத்தில் திடர்களுண்டாகின்றன. அப்படித் திடர்களுண்டாகிச் சமுத்திரத்தின் அலைகளால் இவற்றிற்குச் சலனமில்லாமற் போகுங்கால், நாம் இத்திடர்களைப் பரீக்ஷித்து, வண்டல் ஜின்ன

8

வகை யென்றும், புற்பூண்டு, பசுபக்ஷிமுதலியவை இன்னின்ன இனங்களைச்சேர்ந்தனவென்றும், மற்றும் அனேக விசித்திர விநோதங்களையும் காணலாம். இப்படி யொன்றுமில்லாவிட்டால், அந்தப் பிரதேசம் சமுத்திரமட்டத்திற்குத் தாழவேயில்லை யென்றும், அதாவது அதைச் சமுத்திரம் ஆக்கிரமிக்கவில்லையென்றும், ஊகிக்கலாம்.

ஆதலால், பூமியில் எப்பிரதேசத்திலுமுள்ள பாறைகளையும் அவற்றுளமர்ந்து காணும் பழஞ்செடிவர்க்கம், பழைய மிருகவர்க்கம், இவைகளையும் பரிசோதித்துப்பார்த்து அப்பிரதேசம் சமுத்திரத்தில் எப்பொழுதாவது ஆழ்ந்திருந்ததுண்டு, இல்லை, என்பதை நிஷ்கரிஷை செய்துவிடலாம். இந்தியாவில் இருவகைப் பிரதேசங்களுமுண்டு. இவைகளை ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்து வருவதில், படிப்படியாக இந்தியாவின் உருவம் மாறி வந்திருப்பது தெளிவாகிறது. ஆனால் பரீக்ஷையேதோ இங்குமங்கும் சில இடங்களில்மட்டும் ஆகியிருப்பதாலும், அதுவும் நுனிப்புல் மேய்வதென்னும் நியாயப்படி யிருப்பதாலும், தற்காலம் நாம் சொல்லக்கூடியவைகள் எல்லாம் வாஸ்தவத்தில் அப்படியே தானிருந்திருக்க வேண்டுமென்று பிடிவாதமாகச் சாதிப்பதற்கில்லை. சாக்ஷியங்கள் அவ்வளவுதூரம் உறைப்பானவையல்ல.

என்றாலும் இருப்பவைகளைக்கொண்டு ஒருவாறு முன்னொரு காலத்தில் இந்தப் பரதகண்டம் எப்படி யிருந்ததென்றும், பின்னிட்டுப் படிப்படியாக எவ்வாறு மாறிப்போய்க் கடைசியாய் நாம் இப்போது படத்திற்காணும் உருவம் அதற்குக் கிடைத்ததென்றும் சொல்லலாம். இந்தப்படிப்பு நமக்கு எவ்வெவ்விதத்தில் உபகாரமாகுமென்றும், என்ன பலனைக் கொடுக்குமென்றும் நாம் அடுத்த முறை விசாரிப்போம்.

—

# பிராசீன ஜாதியாரின் நாகரீகம்

## பூர்வவிருத்தாந்தி

### முன்னுரை

உலகம் தோன்றியகால முதற்கொண்டு, இப்பரந்த பூவுலகின்கண், ஆங்காங்கு வசதியாயுள்ள பலவிடங்களில் வாழ்ந்து காலங்கழித்த பிராசீன ஜாதியார் பலராவர். என்றாலும், அநாகரீகமாகிய பெரும் அந்தகாரத்தில் உலகமுழுவதும் மடங்கிக்கிடந்த பண்டைக்காலத்தில், நான்கு ராச்சியங்களே மலைமேலேற்றிய தீபங்களைப்போல விளங்கி நாகரீகத்தால் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவை, நீலநதிப் பிரதேசத்திலிருந்த எகிப்து ராச்சியமும், டைகிரிஸ்-யூபராதிஸ் நதிக்கரைகளிலிருந்த பாபிலோனிய ராச்சியமும், ஹோயான்ஹோ யாங்ஸீகியாங் நதிக்கரைகளிலுள்ள சீனராச்சியமும், கங்கை-ஸிந்து நதிப்பிரதேசத்துள்ள பாரதவருஷமுமாம். இவ்விராச்சியங்கள் இற்றைக்கு எவ்வளவு நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஸ்தாபிக்கப்பட்டனவென்பது ஒருவாற்றாலும் அறுதியிட்டுச் சொல்லமுடியாததாக விருக்கிறது. பொதுப்படக் கூறுமிடத்து, ஒவ்வொரு பிராசீன ஜாதியாரும் தங்களது புராதனத்தை வெளியிடுவதிலேயே கருத்துள்ளவராக விருந்தனரென்பது தெரியவரும். எகிப்தியர்கள் இருபத்தையாயிரம் வருஷங்களுக்கு முன்னேயும், பாபிலோனியர் லக்ஷக்கணக்கான வருஷங்களுக்கு முன்னேயும், சீனர் கோடிக்கணக்கான வருஷங்களுக்கு முன்னேயும் தோன்றியதாக அவரவர்களுடைய சரித்திரங்கள் கூறுகின்றன. இந்தியர்களுடைய நான்கு யுகங்கள் மட்டுமே மற்றையோருடைய காலப்பிரமாணத்துக்கு அதிகமானதாக விருக்குமென்பதை நாம் தனியே சொல்லவேண்டியதில்லை.

சரித்திர சம்மந்தமான விஷயங்கள் ரிகார்டு ஆவதற்கு முன்னமேயே ஒவ்வொரு ஜாதியாரும் நாகரீகத்தை அடைந்திருக்க வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.



முதன் முதலில் மகா ஜனங்களுக்குள் ஒருவிதமான பாஷை யேற்பட்டிருக்கவேண்டும். இது திடீரென்று உண்டாகக்கூடியதன்று. மற்றைய ஜீவப்பிராணிகளைப்போலவே, மானிடர்களும் முதலில் பாஷையற்றவராயும், ஜாடைகளினால் மட்டுமே அபிப்பிராயத்தை வெளிப்படுத்திக் கொண்டவராயும், பலகாலமோ சிலகாலமோ இருந்தபின்னரே தான், பாஷையொன்று ஏற்பட்டிருக்கவேண்டும். இப்படிப் பாஷையில்லாவிடில் நாகரீகமே இராது.

இரண்டாவதாக, பிராசீன மனிதர், உடுத்துக்கொள்வதற்கு உடையையும் தங்கியிருக்க வீட்டையும் பெற்றிருக்கவேண்டும். ஆதியில் மனிதர்கள் உஷ்ணப் பிரதேசங்களிலேயே வாழ்ந்திருக்கவேண்டுமென்றும், குளிரினின்றுந் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளச் சவுகரியமான உடையையும் இடத்தையும் பெற்றபின்னரே குளிர்ப் பிரதேசங்களுக்குச் சென்றிருக்கவேண்டுமென்றும், விற்பன்னர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

நாகரீகத்தில் மூன்றாவது படி, நெருப்பின் உபயோகமாம். நெருப்பின் உபயோகத்தையும் அதை வேண்டும்போது பெறுவதற்கேற்ற வழியையும் கண்டுபிடித்த மகானுபாவன் யாவனோ அறியோம். உஷ்ண தேசங்களினின்றும் குளிர்த் தேசங்களுக்குச் சென்ற மனிதர்களுக்கு உடையும் இடமும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாம் நெருப்பும். நெருப்பில்லாவிடில் மனிதர்கள் சீதளப் பிரதேசத்துக்கும், அப்பால் பனிக்கட்டிகள் பாறைபாறையாய்க் கிடக்கும் துருவவலயத்துக்கும், சென்றிருக்கமாட்டார்கள். முதன் முதலில் உலர்ந்த குச்சிகளை ஒன்றோடொன்று தேய்ப்பதினால் நெருப்புண்டாக்கப்பட்டது. இதற்கு நம்மவர் அரணி கடைவதென்கிறார்கள். இப்போதும் யாகஞ் செய்பவர் இப்படித்தான் நெருப்புண்டாக்குவது. தீப்பெட்டியின் உதவியாலல்ல. இவ்வழக்கம் நாகரீகமடையாது வாழும் காட்டு மிராண்டிகளிடம் இன்னும் நடையாடி வருகிறதென்பது நமக்குத் தெரிந்த விஷயம். இரும்பு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்தான் சிக்கிமுக்கிக் கல்லினுபயோகம் தலையெடுத்திருக்கவேண்டும். பைஸாவுக்கு ஒரு பெட்டி நிறையக் கிடைக்கும் தீக்குச்சிகளோ கிறிஸ்தவாப்தம் பத்தொன்பதாவது நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட அதிசயங்களிற் சேர்ந்தவை.

அப்பால், பிராசீன மனிதனுடைய ஆயுதங்களை நாகரீகத்தின் நான்காவது படியாகச் சொல்லவேண்டும். ஆதியில், தடிமட்டுமே அவனுடைய ஆயுதமாக விருந்திருக்க வேண்டும். வரவர யுக்தியினால், உலோகமுனைபெற்ற ஈட்டிகளும், கோடரிகளும், வேல்களும், வாள்களும், வில்லம்புகளும் தலையெடுத்தன. உடைக்காகத் தோல்களைப் பதமிடும் கருவிகளும், ஓரிடமிருந்து மற்றோரிடத்துக்குத் தண்ணீர் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் போக்குவரவுக்கு ஏற்ற தோணிகளும், சகடங்களும், மட்பாண்டங்களை நிருமிக்கக் குயவன் சக்கரமும் காலக்கிரமத்தில் உண்டானவையேயாம்.

ஐந்தாவது படி, பிராணிகளைப் பழக்குதலாம். ஆதியில் வேட்டையாடுவதில் உதவி செய்வதற்காக நாய் பழக்கப்பட்டிருக்கவேண்டும்; பின்னர் மனிதனுடைய உணவுக்கும் உடைக்குமாகச் சாகபக்ஷணிகளான பிராணிகள் பழக்கப்பட்டன.

ஆறாவது கிருஷித்தொழில். முதலில் வேட்டையாடியே பிழைத்த மனிதன் சாகபக்ஷணிகளான ஜந்துக்களைப் பழக்க வாரம்பித்ததும் மாடு மேய்ப்பவனானான். இதுவே அவன் பயிர்த்தொழிலில் தலைபிடுவதற்கும் காரணமாம். என்றாலும் ஒரு தரம் பயிரிட்டு மாசூலை அறுத்தவிடத்தில் மறுதரம் பயிர் செய்யாமல் நெடுங்காலம் தேசசஞ்சாரம் செய்த பின்னரே நிலையாக வோரிடத்தில் தங்கிப் பயிரிடுதலை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஏழாவது ராஜரீகம். மேற் கூறியவாறு ஓரிடத்தில் நிலையாகத் தங்கிய பிறகு, மற்றைச் சாதியாராலும் வகுப்பாராலும் தீங்கு முதலியன நேரிடாவண்ணம் காத்துக்கொள்வதற்காக ராஜரீகம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் குடும்பத்தின் தலைவனே அதற்குப் போஷகனாகவும் காவற்காரனாகவுமிருந்தான். பின்னர் அநேக குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, பராக்கிரமமும் பலமும் பொருந்திய ஒருவனைத் தலைவனாக்கிக் கொண்டன. இதுவே அரசாதிகாரம் வந்தவாறாகும். பூர்வத்தில் குடியரசு என்பதும், அராஜரீகம் என்பதும் தெரிந்திருந்ததில்லை. அவையிரண்டும், வெகுகாலங்கழித்து ஐரோப்பாவி லுண்டானவைகளாம்.

எட்டாவது கலைஞானம். இதன்கண் சித்திரமெழுதலும், கல்லுருவடிப்பதும், கட்டிடங்கள் கட்டுவதும், இவைபோல்வனவு மடங்கும். இஃது உயிர் வாழ்க்கைக்கு முக்கியமானதன்றாயினும், நாகரீகம் முதிரமுதிரத் தானே தோன்றியதாகும். நாகரீகத்தில் உச்சிப்படி, எழுத்துகளைக் கண்டுபிடித்ததாம். இதைக் காட்டிலும் மேம்பட்டவிஷயம் ஒன்றுமேயில்லையெனத் திட்டமாய்ச் சொல்லலாம். ஆதியில் படங்கள், உருவங்கள் மூலமாகவே எழுத்துக்கள் எழுதப்பட்டன. எகிப்தியர்கள், மேல் ஆசியாவிலிருந்த ஹித்தைத்தியர்கள், சீனர்கள், மெக்ஸிகநாட்டு இந்தியர்கள் இவர்களிடம் ஒவ்வொருவிதமான சித்திரவெழுத்துக்கள் நடையாடிவந்தன. பின்னர் பாபிலோனியர் சப்தத்தைக் குறிக்கும் சொற்களைக் கண்டுபிடித்தனர். அப்பால், நெடுங்காலத்துக்குப் பிறகுதான் இப்போது வழங்கும் நெடுங்கணக்கு கண்டுபிடிக்கப்பட்டது. இப்படிக் கண்டுபிடிக்கப்பட்டு விஷயங்கள் எழுதப்படத் தொடங்கினகாலம் முதற்கொண்டுதான் நாகரீகத்தின் வளர்ச்சி செம்மையாகத் தெரிகின்றது. இவ்வாறு நாகரீகமடைந்த பல ஜாதியாரையும் பற்றிய விவரங்களையும், அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், நாம் தெரிந்து இன்புறுவதற்காகவே பின்வரும் விஷயங்கள் எழுதப்படுகின்றன. முதன்முதலில் “மாயாதேசம்” என்னப்படும் எகிப்துதேசத்தைப்பற்றிப் பேசுவோம்.

## 1. எகிப்தியர்

ஆப்பிரிக்கா கண்டத்தின் வடபாரிசத்தில் செழிப்பைப் பரப்பும் நீலநதி பாயப்பெற்ற எகிப்து தேசம் வெகு புராதனமானது. கிறிஸ்த வாப்தத்துக்கு 5,000 வருஷங்களுக்கு முன்பாகவே அந்நாட்டில் நாகரீகம்முதிர்ந்திருந்த தென்றால் அதன் பழமையைக் கூறவும் வேண்டுமோ? அந்நாட்டிற்கு மேற்கே எளிதில் கடக்க முடியாத “ஸஹாரா” என்னும் பரந்த பாலைவனம் வெகுதூரம் வரையில் வியாபித்து நிற்கின்றது. கிழக்கிலும் ஒரு பாலைவனமுண்டு; ஆயினும் அது சிறியது. அதைத் தாண்டிச் சென்று செங்கடலையடைந்து பார்த்தால் அராபிய பாலைவனம் தோன்றும். எகிப்து தேசத்துக்குத் தெற்கில் நூபியா என்னும் கற்றரைப் பிரதேசம் வெகுதூரம் வரையில் பரவியிருந்தது. வடக்கிலோ மத்தியதரைக் கடலுள்ளது. இவ்வாறு நான்கு பக்கங்களிலும் இயற்கையாகவே அமைந்த அரண்களுக்கு நடுவே வாழ்ந்த பிராசீன எகிப்தியர்கள் அந்நாட்டிலுண்டான தனதான்னியங்களைச் சத்துருக்களின் பீடையின்றி இன்பமாக அனுபவித்தனர். வருஷாவருஷம் ஏராளமான வண்டலுடன் பிரவாகித்து வரும் நீலநதியினால் எகிப்தியருக்கு உணவு தானியங்களை உற்பத்தி செய்வதற்குப் போதுமான சவுகரியம் ஏற்பட்டது. இதனால் அவர்கள் நிலையுள்ளவர்களானார்கள். இதுவே அவர்களுடைய நாகரீகத்துக்கும் முதற்காரணமாக விருந்தது.

இவ்வாறிருந்த எகிப்துதேசம் செல்வ வளத்தினாலும் காலக்கொடுமையினாலும் அரபியர், கிரேக்கர், பின்னர் மகம்மதியர், ஆரியா, இவர்களால் முறையே கைக்கொள்ளப்பட்டதென்றாலும், ஆதிய நாகரீகமாகிய பெருந்தீயில், பின்



வந்தவர்களுடைய நாகரீகம் மறைந்து போயிற்று. வெளிப்பார்வைக்கு எகிப்துதேசம் இப்போது அரபிய ராச்சியமாகத் தோன்றினாலும், ஜனங்களுடைய பழக்க வழக்கங்களைக் கவனித்தால் பண்டைச் சீரும் சிறப்பும் தெளிவாகத் தோன்றும்.

எகிப்து தேசத்தைப்பற்றிய விவரங்கள் எல்லாம் சுமார் நூறு வருஷங்களுக்குள்ளான காலத்தில் தான் தெரியவந்தன. நெப்போலியன் என்னும் மஹாவீரன் எகிப்து நாட்டின் மீது படையெடுத்துப் போனபோது, பிராசீனவிஷயங்களை ஆராய்ச்சி செய்யும் விற்பன்னர்கள் பலர் அவருடன் சென்றனர். அவர்களுக்குக்கிடைத்த அரும் பொருள்களுள் முக்கியமானவற்றில் சில இங்கிலாந்துக்குக்கிடைத்தன.

பின்னர், ஜெர்மானியர், ஆங்கிலேயர், இதாலியர் முதலியோர் பிராசீன ஆராய்ச்சிக்காக எகிப்து தேசம் சென்று செய்த அரும்பெரும் பாட்டினால், நமது அறிவுக்கெட்டிய சரித்திர விஷயங்களும், வெளிவந்த சிலாசாசனங்களும், கோபுரங்களும் அனந்தம். இம்மகோபகாரிகளின் ஆராய்ச்சியினாலேயே பின்னர் எழுதப்படும் விஷயங்களும், விநோதங்களும் வெளிவந்தனவாதலால், நாம் அனைவரும் அவர்களுக்கு நன்கு கடமைப்பட்டவர்களாவோம்.

எகிப்தியரின் ஆதிவரலாற்றைப்பற்றி ஒன்றும் விசதமாகத் தெரிந்தபாடில்லை. அவர்கள் ஆசியாகண்டத்திலிருந்து சென்றவர்கள் என்பர் ஒருசாரார்; எதியோப்பியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பர் மற்றொருசாரார்; பின்னொருசாரார், இவர்கள் இந்தியாவிலிருந்த பூர்வவாசிகளின் சந்ததியா ரென்கின்றனர். இஃதெவ்வாறாயினு மாகுக. ஒன்றுமட்டும் விசதம். கிறிஸ்தவாப்தத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே நீல நதிப்பிரதேசத்தில் எகிப்தியர்கள் மகோன்னதமான நாகரீகத்தையுடையராயிருந்தன ரென்பது மறுக்க வொண்ணாத விஷயம்.

## 1. எகிப்திய சரித்திரப்போக்கு

புராதன காலத்தில் எகிப்திய ராச்சியம் இருபிரிவாக விருந்ததென்றும், நதிமுகப் பிரதேசத்தில் * செம்முடி அரசர்களும், மேல் எகிப்தில் † வெண்முடி அரசர்களும் தனித்தனியே சருவாதிகாரத்தோடு ஆண்டுவந்தன ரென்றும் தெரிகின்றது. கிறிஸ்தவாப்தத்துக்கு 4400 வருஷங்களுக்கு முன் மீனிஸ் என்றோர் அரசன் இவ்விருவம்சங்களையும் ஒன்றாக்கி, ஏகசக்கிராதிபதியாய் ஆளத்தொடங்கினான். அதுமுதல் ராஜபரம்பரை இடையறாது வருகின்றது. அதற்கு முற்பட்டகாலத்தில் அந்நாட்டில் தேவதைகளும் அவதாரபுருஷர்களுமே ஆண்டுவந்தன ரென்று எகிப்தியரின் பண்டை நூல்கள் கூறுகின்றன. இதற்குப் பொருள், அக்காலத்திய சரித்திரத்தைக் குறித்து நமக்கொன்றும் தெரியாதென்பதாம். மீனிஸ் அரசன் முதல் வரும் அரசபரம்பரை, பழைய மெம்பிஸ் ராச்சியமெனவும், மத்திய ராச்சியம் அல்லது பழைய தீபன் ராச்சியமெனவும், புதியதீபன் ராச்சியமெனவும் மூவகைப்படும். ஒவ்வொன்றிலும் பற்பல ராஜவம்சங்கள் ஆண்டுவந்தன அவைகளைப்பற்றிய சரிதங்கள் எல்லாவற்றையும் விஸ்தாரமாக எழுதுவதற்கு இது இடமன்று; ஆதலால் அவர்களுடைய சரித்திரப்போக்கை மட்டும் ஒருவாறு கூறி இவ்விஷயத்தை முடிவு செய்வோம்.

மீனிஸ் அரசனால் ஐக்கியப்படுத்தப்பட்ட எகிப்திய வகுப்பினர் இருவரும், ஒரே நோக்கமுடையவராகி, செல்வாக்கிலும் பலத்திலும் வரவர விருத்தியடைந்தனர். அவர்கள் அக்காலத்தில் அடைந்திருந்த நாகரீகத்துக்கு, அவர்கள் எழுப்பிய ஜயகோபுரங்களே சாக்ஷியாம். சில நூற்றாண்டுகள் சென்ற பின்னர், அவர்களால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை யென்னலாம்படியான சக்தி அவர்களுக்கு வந்துவிட்டது. பழைய மெம்பிஸ் ராச்சியகாலத்தில்,

* (Delta region) † (Upper Egypt)

எகிப்து நாட்டில் நாகரீகம் மகோன்னத நிலையிலிருந்தது; உறுதியான ராச்சியாதிகாரமும், அரிய சாமர்த்தியமும், பலவழியாலும் விருத்தியடைந்து வந்த மார்க்கக் கொள்கையும், முதிர்ச்சியடைந்த கலைஞானமும், முதிரவிருந்த பாஷாஞானமும், அவர்கள் நிருமித்த ஒவ்வொரு கோபுரங்களிலும் விளங்கின. ஆனால் பழைய மெம்பிஸ் ராச்சியம் ஆயிரத்தெழுநூறு வருஷங்களுக்கப்பால் திடீரென்று சீர்குலைந்து போயிற்று. ஐக்கியப்பட்ட ராச்சியம் பற்பல பாகங்களாக மறுபடியும் பிரிந்தது. நாகரீகமும் க்ஷீணிக்கத் தலைப்பட்டது. என்றாலும் கூடிய சீக்கிரத்தில் முன்பதவியை யடைந்து எகிப்து ராச்சியம் ஒரே அரசன் கீழ் மறுபடியும் வந்தது. இதற்கு மத்திய ராச்சியகாலமெனப் பெயர். இப்பொழுதுதான் எகிப்தியர்கள் பிறநாடுகளின்மேற் படையெடுத்துப்போயினர். நூபியாதேசம் எகிப்துக்குக் கீழ்ப்பட்டது; மத்தியதரைக்கடலைச் சார்ந்துள்ள நாடுகளோடு எகிப்தியர் வியாபாரக் கூட்டுறவு செய்து வந்தனர்.

ஆயினும் இவ்வுன்னதபதவி சுமார் இருநூறு வருஷங்களுக்குள் மாறிவிட்டது. ராஜாங்கம் மறுபடியும் க்ஷீணிக்க ஆரம்பித்தது. ஆதலால், இதற்கப்புறம் சில நூற்றாண்டுகள் வரையில் எகிப்து ராச்சியம் இருந்த விடங்கூடத் தெரியாமல் போயிற்று. ஸிரிய-அரபியப்பாலைவனத்திலிருந்து வந்த பெடுயின் ஜாதியாரைச் சேர்ந்த ஹைக்ஸாஸ் என்னும் அந்நிய ஜாதியார் வெகுகாலம் எகிப்தில் அரசு செலுத்தினர். அவர்கள் அரசன் நதிமுகப் பிரதேசத்தில் தலைநகரைக் கட்டிக்கொண்டு ஆண்டனர். எகிப்து நாட்டின் மற்றைய பாகங்களில் எகிப்திய அரசர்கள் ஹைக்ஸாஸ் அரசனுக்குக் கீழ் அமர்ந்து ஆண்டுவந்தனர்.

காலக்கிரமத்தில் அந்நிய அரசனின் சக்தி தளர்வடைய, எகிப்தியக் குறுநிலமன்னர்கள், அச்சந்தர்ப்பத்தில் தங்கள் தங்கள் நாடுகளைப் பெருக்கிக் கொண்டனர். ஆகவே நெடுந்தூரத்துக்கு அப்பாலிருந்த தீப்ஸ் நகரத்தில் சிற்றரசு புரிந்த ஒரு எகிப்தியன் வெகு பலவானாகி, மற்றைக் குறுநிலமன்னர்களை யடக்கினதுமன்றி, சார்வபௌமனாக அரசாண்ட அந்நியஜாதிச் சக்கிரவர்த்தியையும் வென்று விரட்டிவிட்டான். ஆகவே கி. மு. 1600 வாக்கில் எகிப்திய ராச்சியத்தை எகிப்தியரே ஆளத் தொடங்கினார்கள். இவ்வம்சத்துக்குத்தான் புதிய தீபன் ராஜவம்சம் என்று பெயர். இதில் அரசாண்டவர்களுடைய சாகஸச் செயல்கள் அனந்தம். முதலாம் தெகுதைம்ஸ் என்னுமரசனும், அவன் மகனும் ரணரங்கசூரனுமான மூன்றாம் தெகுதைம்ஸ் என்பவனும், ஸிரியாவுக்கு வடக்கே வியாபித்துள்ள பாகங்களையும், ஸௌடானுக்குத் தெற்கிலுள்ள பாகங்களையும் வென்றனர். எகிப்து ராச்சியமும், யூபரதிஸ் நதிக்கரைகளில் கிளம்பிக்கொண்டிருந்த அஸிரிய ராச்சியமும் ஒன்றுடனொன்று நெருங்கின. இதனால், இவர்களுக்குள் விசேஷமான வியாபாரம் நடந்தது.

அதன் பயனாக, எகிப்து நாட்டில் ஏராளமான செல்வம் நுழைந்தது. நுழையவே எகிப்தியர்கள் பெருமித வாழ்க்கையில் இறங்கிவிட்டனர். விலையுயர்ந்த ஆடையாபரணங்கள், பொன் வெள்ளிச் சாமான்கள் முதலிய டம்பப்பொருள்களெல்லாம் எகிப்தியரிடம் வந்தன. ஆசியாகண்டத்தாரின் நடையுடைபாவனைகளும் எகிப்தியருக்குள் பிரபலிக்கத்தொடங்கின. சுருக்கிச் சொல்லுங்கால், எகிப்தியருக்கு அந்நிய ஜாதியாரிடமிருந்த அருவெறுப்பும் துவேஷமும் மாறிவிட்டன. அவர்களுடைய நாகரீகத்தைப் பார்த்து வியப்பதும், அவைகளை அனுசரிப்பதும் நவீன அபிப்பிராயங்களை உட்கொள்ளுவதும் எகிப்துக்கு இயற்கையாகிவிட்டன.

ஆயினும் வெகு காலமாக நடையாடிவந்த பழையகொள்கைகளை மாற்றுவது எளிதாகவிருக்கவில்லை. கி. மு. 1400வாக்கில் நான்காம் அமென்ஹோதெப் என்னுமரசன் ஸிரியா, பாபிலோனியா முதலிய தேசங்களில் இருந்தபடி எகிப்துநாட்டிலும் எல்லோரும் சூரியனையேதெய்வமாகக் கொண்டாடவேண்டுமென்று விதித்தான். ஆனால் பிரஜைகளில் பழையமாதிரியே யிருக்கப் பிரியப்பட்ட பெரும்பாலார், ஸிரியர்கள், எகிப்தியர்கள், எதியோபியர்கள் எல்லோரும் சமமானவர் என்ற எண்ணத்தைப் பொறாதவர்களாய், இக்கொள்கையை அங்கீகரிக்காமல் தள்ளிவிட்டனர். கக்ஷி பிரண்டுபட்டது. ஆதலால் இதுவே எகிப்து நாட்டின் சீரழிவைக் கொண்டுவந்தது. அடுத்த நூற்றாண்டில், வெளிப்பார்வைக்குமட்டும் எகிப்து ராச்சியம் நன்னிலைமையிலிருப்பதாகத் தோன்றினும், அதன் சக்தி முழுமையும் குன்றிப்போயிருந்தது. ராஜகீய விஷயத்தில் தன் முதன்மை ஸ்தானத்தை நிலைநிறுத்திக் கொள்ள எகிப்துக்கு வலிமை இல்லை. ஆகவே எகிப்துக்கு மரணாவஸ்தை தொடங்கிவிட்டதென்று கூறலாம். ராச்சியாதிகாரம் அரசனிடமிருந்து குருக்கள் மாரிடமும், குருக்களிடமிருந்து ஸிரிய சைன்னியத்தின் தளகர்த்தர்களிடமும் போயிற்று. பின்னர், எகிப்து ராச்சியமும் எதியோபியருக்கு வசமாகிப்போயிற்று. பின்னர் எகிப்தைத் தமதாக்கிக்கொள்ளவேண்டி அவர்களுடன் அஸிரியர் போட்டிபோட்டனர். ஐந்நூறு வருஷங்கள் வரையில் இவ்விராச்சியம் இத்துன்பங்களிலேதேனுமொன்றை அனுபவித்தே வந்ததென்பதைக் கேட்க வெகு பரிதாபமாயிருக்கின்றது.

என்றாலும் அதிகமான மாறுதல் ஒன்றும் உண்டாகவில்லை. அஸிரிய ராச்சியம் தலைகவிழ்ந்து போன பிறகு, எகிப்து நாட்டுக்கு அனுகூலமாக மீட்டுமொருமுறை ராஜகீய விஷயங்கள் மாறின. முதலாம் ஸாம்தெக் என்பவனும் அவனது சந்ததியார்களும், செல்வத்தையும், சக்தியையும் மீட்டும் பெற்றனரென்றாலும், இவ்வதிருஷ்டத்துக்குத் தக்கபடி நடந்துகொள்ள எகிப்துக்குச் சாமர்த்தியம் இல்லாமற் போய்விட்டது. பண்டைக்காலத்து நடையுடைபாவனைகளை அனுசரிக்கமுயன்றதே இதற்குக்காரணமாம். கி. மு. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் எகிப்துக்கு மறுபடியும் துர்த்தசை உண்டாயிற்று. பாரஸீக அரசனான கேம்பைஸிஸ் என்பவன் எகிப்து நாட்டை ஜெயித்துப் பாரஸீக ராச்சியத்தோடு சேர்த்துக்கொண்டான். எகிப்தியர் பன்முறை முயன்று பார்த்துக் கடைசியாக கி. மு. 400 வாக்கில் சுயேச்சையை யடைந்தனர். ஆயினும் சில வருஷங்கள் செல்லு முன்னரே, அவ்விராச்சியம் மறுபடியும் பாரஸீகர் வசம்போயிற்று. அது முதல் கொண்டு எகிப்து நாட்டில் அந்நியரே தான் ஆண்டு வருகின்றனர்.

பாரஸீகரிடமிருந்து மகா அலெக்ஸாந்தர் எகிப்தைக் கைப்பற்றிக்கொண்டார். அவர் இறந்ததும், அவ்விராச்சியம் அவரது தளகர்த்தனான டாலமி என்பவனுக்குக் கிடைத்தது. அவனது சந்ததியார் வசம் அந்நாடு கி. மு. 30 வரையில் இருந்து வந்தது. அவ்வருஷத்தில் எகிப்து தேசம் உரோம ஸார்வபௌமத்தின் பாகமாயிற்று. பிற்பாடு வெகு காலத்துக்குப் பிறகு அரபியர்களால் ஜெயிக்கப்பட்டு அவர்கள் வசமே இன்னுமிருந்து வருகின்றது. இப்போது எகிப்து தேசம், துருக்கி சுல்தானுக்கு வருஷமொன்றுக்கு ஆறுலக்ஷத்து எழுபதினாயிரம் பவுன் கப்பங்கட்டிக்கொண்டு 'கெடிவ்' என்ற அரசனால் ஆளப்படுகின்றது. மற்றைய விஷயங்களில் சுயேச்சாதிகாரத்தோடு ஆளப்பட்டாலும், எகிப்திய ராச்சியத்தை ஆங்கிலேயர் தமது குடைக்கீழ் வைத்துப் பாலித்து வருகிறார்கள். வெளிப்பார்வைக்கு எகிப்திய நாடு அரபிய நாடாகத்தோன்றினும், நாகரீகத்தைக் கவனிக்குமிடத்து, எகிப்தியரின் பண்டைச்சீரும் சிறப்பும் நன்றாய் விளங்குவதை இன்னும் காணலாம்.

## ஜேடில் குத்தல்

உலகத்தில் 'தெய்வவணக்கம்' என்பது அனேகமாய் மனித ஜாதிக்கெல்லாம் பொதுவான லக்ஷணம். ஆனால் அப்படி வணங்குவதில் ஏற்பட்டிருக்கும் தாரதம்மியம்தான் நாகரீகமிருப்பதற்கும், இல்லாததற்கும் விசேஷித்துள்ள வித்தியாசமாம்.

உதாரணமாக, நமக்குள் பள்ளர், பறையர் முதலியோருடைய தெய்வங்களுக்குக் கள்ளு, சாராயம், மாமிசம் முதலியவையே நன்று யேற்ற நைவேத்தியங்கள். கிராம தேவதைகளாகிய 'பட்டத்தலைச்சி,' 'செல்லாண்டை,' 'பச்சாயி,' முதலிய தெய்வங்களுக்கும் அவ்வாறே ஆடு, கோழி முதலியவைகளும், பொங்கல் முதலியவுங் கூடித் திருப்தியுண்டாக்குகின்றன. வசூரி, மகாமாரி, காலரா முதலிய நோய்கள் ஜனங்களை உபத்திரவத்தால் இம்மாதிரிப் பலிகள் இன்னும் அதிகமாகின்றன. பவானி தாலூக்காவில் ஒரு கோவிலில் சில சந்தர்ப்பங்களில் மூன்று நாள் இடையறாமல் ரத்தம் தாரையாக ஒரு தெய்வத்தின் தலையில் அபிஷேகமாகி வருவதாகச் சமாசாரம்.

பழையகாலத்தில் நாகரிக முதிர்ந்த கார்த்தசினியர் என்றொரு ஜாதியார் ஆப்பிரிக்கா வடபாகத்தில் பிரபலித்திருந்தார்கள். அவர்களுடைய தெய்வமாகிய 'மோலாக்கு' என்னும் பூதத்திற்கு நரபலி யிடுவது சாதாரணம். வியாதி, நஷ்டம் முதலிய கொடுமைகளினின்றும் தப்பவேண்டியவர்கள் சில சமயங்களில் தம்மக்களையே பலியிடுவதுண்டு. அதிலும் ஒரே பிள்ளையாயும், சுந்தர மூர்த்தியாயுமிருந்தால் அம்மகவைப் பலியேற்க அத்தெய்வத்திற்கு வெகு ஆசையாயிருந்ததாம். கலகம் முதலியவை இல்லாமல் தேசம் க்ஷேமமாயிருக்கையிலேயே இவ்வாறு நடப்பதானால், யுத்தம் முதலிய பயகாலத்தில் நடக்கும் சம்பிரமங்களுக்குக் கேட்பானேன்.

தவிர யுத்தத்தில் ஜெயமடைந்து எதிரிவருக்கத்தில் ஜனங்கள் சிறையாக அகப்பட்டால், அவர்களில் வேண்டிய பெயரை இத்தெய்வத்திற்குப் பலியிடுதல் இவர்களுக்குள் சாதாரணமாயிருந்த பழிவு.

இவ்வாறாக மனிதருக்குள் தங்கள் வஸ்து, வாகனாதிகள், பெண்டுபிள்ளை முதலிய சகலரையும் பலியிட்டுத் தெய்வங்களைத் திருப்திப்படுத்துதல் ஒருமுறை. இதைவிட்டு ஒரு படி அதிகமாகப் போகும்போது, அவரவர் தத்தம் தேகத்தைப் பலவிதமாக உபத்திரவித்துக் கடவுளுக்குத் திருப்தியுண்டாக்குவதும் ஒரு சாமான்னிய முறையாகக் காணும். இந்தியாவில் யோகாப்பியாசம் என்று பெயர் வழங்கும் முறையொன்றுண்டு. இந்தப் பெயரை வைத்து மனிதர்கள் தங்களுடைய தேகங்களுக்குச் செய்துகொள்ளும் உபத்திரவம் இத்தனை வகைத்தென்பதற்கில்லை. சிலர் சீதோஷ்ணாதிகளைக் கவனியாமல் எக்காலத்தும் வஸ்திரமற்று மரத்தடியிலுட்கார்ந்தும், சிலர் ஆகாராதிகளை வேண்டாமல் புல்பூண்டைத் தின்றும், சிலர் ஜலத்திலேயேகிடந்தும், சிலர் அக்கினி மத்தியிலேயே யிருந்தும், சிலர் காலை மடித்தோ வேறு விதமாக ஆசனமிட்டோ கிடந்தும் வந்திருக்கிறார்கள். இன்னும் பலவிதமாக இருந்துகொண்டும் வருகிறார்கள்.

ஐரோப்பாவில் முன்னொருகாலத்தில், சிலர் பாலைவன மத்தியில், ஐயஸ்தம்பங்கள் போன்ற கட்டிடங்களின் உச்சியிலிருந்துகொண்டு நெடுங்காலம் கீழேயிறங்காமல், வெய்யில் மழையைப்பாராட்டாமல், ஏதோ கிடைத்ததைத் தின்றுவிட்டுக் காலங்கழித்ததாக நமக்குத்தெரியும். இவர்களில் இரண்டொருவருக்கு, நெடுநாள் ஸ்நானம் முதலியது இல்லாமல், உடம்பில் அழுக்குப்படிந்து, புழுத்துச்சொரிந்ததாகவும், அப்புழுக்களில் ஏதாகிலும் ஒன்று கீழேவிழுந்தால், அதை அவர் ஜாக்கிரதையாய் மறுபடிஎடுத்துத் தேகத்தில்விட்டு, "ஓ புழுவே, ஈசுவரன் உனக்கு அருளியதைத் தின்று தேக்கிடு" என்று சொல்லிவந்ததாகவும் தெரிகிறது. இன்னொரு காலத்தில் ஐரோப்பாவில் கொள்ளைநோய் வலுத்ததின்பேரில் அதற்குப் பரிகாரமாகப் பாதிரிமார்களில் சிலர் மணிக்குறடாக்களைக் கொண்டு ஒவ்வொருவரும் தாங்களே முதுகில் ரத்தம் பீறிட அடித்துக் கொண்டுநகரத்தெருக்களில் ஊர்கோலம் செய்து வந்தார்களென்றும் நமக்குத் தெரிகிறது.





ஜேடில்குத்தல்—சோழவந்தான்

இம்மாதிரிச் சித்திரவதைகள் தெய்வ விஷயமாய் எந்நாட்டிலு மிருந்தே வந்திருப்பதால், இந்தியாவிலும் இருந்து வந்திருப்பது அதிசயமல்ல. ஆனால் நாகரிக முதிர முதிர இவைகள் நசித்துப்போகின்றனவென்பதற் கையமில்லை. 'சதீ' என்னும் 'உடன்கட்டை' ஒரு காலத்தில் சில இடங்களில் பிரபலித்திருந்ததும், இப்போது அதைக் குற்றமாக்கி யிருப்பதும் நமக்கெல்லோருக்கும் தெரியுமல்லவா?

'குண்டங் குதிப்பது' இன்னும் அனேக இடங்களில் நடந்து வருகிறது. குழிவெட்டி இருபது அடி சுமார் நீளம்காட்டி, அதில் விறகுகளைக்கொளுத்தித் தழலாக்கி, அதை 'டிமிஸ்' செய்து, விசிறிகொண்டு ஒரே தழலாகக் கனல் வீசும்படி செய்து, அதில் இறங்கி ஜனங்கள் சாதாரணமாக நடந்து வருவதும், அதனாலவர்களுக்கு ஒரு கொடுமையும் உண்டாகாமலிருப்பதும், யார்வேண்டுமானாலும் பரீக்ஷித்தறியக் கூடிய விஷயம். தெரியாதவர்கள் இதில் ஏதோ மாயமிருப்பதாகவும், தழைச்சாறு முதலியவற்றைக் குதிப்பவர்கள் பூசிக்கொண்டு போவதாகவும் சொல்லுவதுண்டு. வயிற்றைக் கிழித்துக்காட்டிய போதிலும் கஜகர்ணவித்தையென்பவருக்கு நாம் திருப்தியுண்டாக்கு

வது அசாத்தியம். வேண்டுமானால் அவர்கள் பரீக்ஷித்தறிய இடமிருப்பதால், கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டாமல் அவர்கள் இந்த ரகசியத்தை அறிந்துகொள்வாராக. ஒரு விஷயமட்டும் நிச்சயம். இம்மாதிரிக் குண்டம் குதிப்பதில் நாளதுவரை யாருக்காகிலும் அபாயம் நேரிட்டதாக நமக்குத் தெரியவில்லை. ஆனதுகொண்டே நமது கவர்ன்மெண்டாரும் அதைத்தடுக்கப் பிரயத்தனப்படவில்லை.

ஆனால் தஞ்சாவூரின் தென்புறத்திலும், மதுரை, திருநெல்வேலி, ஜில்லாக்களிலும், காணும் கள்ளர் நாடு என்று சொல்லக்கூடிய பிரதேசத்தில் தெய்வ விஷயமாய் அவர்களுக்குள் ஒரு வழக்கம் சென்ற தலைமுறைவரை சாதாரணமாய் நடந்துவந்தது. அதைக் கொஞ்சகாலமாகச் சர்க்கார் குற்றமாக்கி நிறுத்தி விட்டார்கள். அதைப்பற்றித்தான் நாமிவ்விடம் பேசவந்தது. காரணம் படிக்கப்படிக்க விளங்கும்.

படத்தையுற்றுப் பாருங்கள். மதுரைக்கடுத்த 'சோழவந்தான்' என்னும் ஊர்த்தெருக்களில் ஒன்று காணுகிறது. அதில் 'ஜெடில்' மகோற்சவத்தினிமித்தம் ஆயிரக்கணக்காக ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். மத்தியில் 'சட்டத்தேர்' என்று சொல்லும் சாமான்னிய வண்டி காணுகிறது. அது எட்டுச் சக்கரங்கள் கூடி அந்தச் சமயத்திற்காகவென்று நிர்மாணிக்கப்பட்டது. நடுவில் இரண்டு சட்டங்கள் எடுப்பாகக் காணுகின்றன. அவைகளை ஏணிப்படிபோன்ற மூன்று குறுக்குச் சட்டங்கள் போட்டு இறுக்கியிருக்கிறார்கள். இச்சட்டங்களுள் மேலாகக் காணும் சட்டத்திற்குச் சேர்த்து ஆணி கோர்த்து ஒரு பெரிய மூங்கில் வளை காணுகிறது. கல்யாணப் பந்தற் கால்களுக்குச் செய்கிறமாதிரி இந்த வளைக்கும் வர்ணக்காகிதங்கள் ஒட்டியிருக்கிறது. 'கையேற்றம்,' 'குரங்கேற்றம்,' என்று தென்னிந்தியாவில் எங்கும் காணும் கருவியில், முதுகுமாமென்று சொல்லும் சட்டமானது மத்தியில் ஆணியில் கோர்த்திருக்க, மேலுங்கீழுமாக இழுத்துவிடுவதற்கு எப்படி உதவுகிறதோ, அதுபோலவே இந்தவளையும் உயர்த்தவும், தாழ்த்தவும் சாத்தியமாகிறது. படத்தில் அதை உயர்த்தியிருக்கக்காணுகிறோம். அந்தத் தலைப்பில் ஒருவனையும் அழுத்தியிருக்கிறது. அதற்கு எதிர்த்தலைப்பில் கல்முதலிய பாரங்கூட்டித் தேர்ச்சட்டத்துடன் இறுக்கிக் கட்டியிருக்கிறார்கள். ஆதலால் உயரக்காணும் தலைப்பு, ஒருமனிதனுடைய கனம் பூராவாகச்சேர்த்தும், கீழே யிறங்காமல் அப்படியே நின்றிருக்கிறது. இப்படி நாம் பார்க்கும் கோலத்தில் அந்தத்தேரை நாலுவீதியிலும் கோயிலைச்சுற்றியிழுத்து வந்தபின், மறுபடி மூங்கில் வளையைக் கட்டவிழ்த்துக் கீழே தாழ்த்தி அதில் மேற்சொல்லிய வளையத்திற்குச் சேர்த்துக் கட்டியிருக்கும் மனிதனை விடுவித்து விடுகிறார்கள். இவன் யாரென்றும், ஏனிப்படிச் சித்திரவதைக்குட்படுகிறான் என்றும் நாம் இப்போது விசாரிக்கவேண்டும்.

மேற்கூறியபடி அனேக இடங்களில் அனேக தேவதைகளுக்குப் பிரீத்தியர்த்தமாக அனேக, உபத்திரவங்களை மனிதர்செய்துவந்திருக்கிறார்களல்லவா? ஒரு குடும்பத்தில் பிள்ளையில்லையென்று வைத்துக்கொள்ளுவோம். 'பிள்ளையுண்டானால் திருப்பதிக் கோவிலுக்குவேப்பிலை தின்றுவருகிறேன்,' என வொருவர் ஸ்ரீ வேங்கடேசனைப் பிரார்த்தித்துக் கொள்ளலாம். அல்லது அயோத்தியா மாகாணத்தில் 'மகாவீரன்' என்ற பெயருடன் ஸ்ரீ ஆஞ்சநேய சந்நிதியிருப்பதில், அவரைக் குலதெய்வமாகக் கொள்வோர் வழக்கமாய்ச் செய்கிறபடி, தங்கள் கிராமத்திலிருந்துகோயில்வரை 'அடிதெண்டமிட்டு' உடம்பெல்லாம் ரத்த காயமாகச் சன்னிதியில் வந்து நிற்கலாம்.* அல்லது திருப்பதிக்குப் போகிறவர்கள் செய்கிறமாதிரி 'வாய்ப்பூட்டு' இட்டுக்கொண்டோ, முட்பாதகுறடு போட்டு நடந்துகொண்டோ போகலாம். இல்லையென்றால் மேற்சொல்லியபடிக் குண்டங் குதிக்கலாம்.

* இது எவ்வளவு கேவலமாகப் போகக்கூடுமென்பதற்கு ஒரு கதையுண்டு. சமீபகாலத்தில் 16-வயதுள்ள ஒரு சிறு பிள்ளையாண்டான் இவ்வாறு நமஸ்காரஞ்செய்து கொண்டுவந்து உடம்பெல்லாம் காயமும், புழுதியும், படிந்து கிடக்கச் சன்னிதியில் வந்து நின்றான். சுற்றியிருந்தவர், "ஏனிப்படி வந்தாய்? உனக்கென்ன பிரார்த்தனை?" என, அவன் தலையைக்குனிந்து வெட்கிய முகத்துடன், 'மகாவீரன் எனக்கு நல்ல அழகிய பெண்ணைப் பாரியையாக்க வேண்டும்,' என, எல்லோரும் சிரித்து, 'அவருக்கே பாரியைக்கு வழியில்லையே,' என்றாராம்.



இப்படி யெத்தனையோ லக்ஷம் வகையிருப்பதால், கள்ளருக்குள் இஷ்டதேவதையைத் திருப்தி படுத்துவதற்கு இந்த வழக்கமேற்பட்டதாகச் சாமான்னியமாய்ச் சொல்லலாம். இந்நாட்டு ஜனங்களின் ஜாதி, மதம், முதலியவற்றை விவரித்தெழுதியிருக்கும் ஸ்ரீமான்-தரஸ்டன் துரை இவ்விதமாகத்தான் ஏதோ பிரார்த்தனை செய்துகொள்ளும் கள்ளஜாதிப் புருஷர்கள் ஜெடில் குத்திக்கொண்டு, பிரார்த்தனை செலுத்தி, மனோரதங்களை நிறைவேற்றி வந்ததாக எழுதுகிறார். அவருக்கு இப்படி யார் சொல்லி எழுதிவைத்தார்களோ தெரியவில்லை. ஆனால் வேறிடங்களில் எப்படி யிருந்தபோதிலும், சோழவந்தான் பூசாரிகளைக் கேட்டதில் அவர்கள் அப்படி யொன்றுமில்லை யென்று சாதிக்கிறார்கள்.

ஆகவே இந்த வழக்கம் ஏதோ இஷ்ட தேவதையை யுத்தேசித்து ஏற்பட்டபோதிலும், வருஷாவருஷம் குத்துண்பவர்கள் ஏதாகிலும் மனோரதம் நிறைவேறுவதற்காகப் பிரார்த்தனை செய்துகொண்டு அதைச் செலுத்துவதற்காக வந்தவர்களல்ல. பழைய காலத்தில் சந்திர சூரிய வம்சம் முதலிய க்ஷத்திரிய முதல்வர்களுக்குத் திக்கு விஜயம் என்பது எப்படிக் குலதருமமாயிருந்ததோ, அப்படியே இக்கள்ள நாட்டாருக்கும் இது காலக்கிரமத்தில் குலதருமமாகிவிட்டதாகக் காணுகிறது. ஆகவே வைகைநதி பாயும் வளநாட்டில், சோழவந்தான் வகையரா நாலு கிராமங்களிலுள்ள "காவற்கார" ஜாதியவர்தான் இதற்கு பிராக் பாத்தியம் படைத்தவர். மற்றைய ஜாதியாருக்கு இந்தப்புகழ் சம்பாதிப்பதற்கு யாதொரு உரிமையுங் கிடையாது. பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட யாவனுக்கும் இந்த அதிருஷ்டம் கிடைக்கலாம். ஒருமுறை இவ்வாறு குத்துண்டு ஊர்கோலம் வருவதாகிய பெரும்பதவி ஈசுவர கிருபையினால்தான் கிடைக்குமென்றும், அவ்வாறு லபித்தால் அந்தப் புருஷன் பிறந்த குடும்பத்திற்கும், அவனுக்கும், அவன் சந்ததியாருக்கும், அழியாப் புகழுண்டென்றும், இக்கள்ளர்களுக்குள் நம்பிக்கை. சாமான்னியமாய் இந்த விரதத்தைச் செய்து முடித்தவருக்குத் தங்கள் ஜாதியாரிலும், இதரர்களுக்குள்ளும், செல்வாக்கு அதிகரிப்பதுடன், நல்ல தக்ஷிணையுங் கிடைப்பதுண்டு.

ஒவ்வொரு வருஷமும் வைகாசி மாதத்தில் ரதோற்சவ தினங்களில் மூன்றாம்நாள், 'இக்கள்ள புருஷர்களில்,' 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லோரும், தங்கள் குலதெய்வமாகிய மாரியம்மன் கோவில்பிராகாரத்துள்ளடங்கிய வெளியிடத்தில் வந்து சேருவார்கள். பிறகு ஸ்நானம் முதலிய முதற் சடங்குகள் நடக்கும். அதன் பின் வந்திருப்பவர் பெயர்களை நறுக்குகளில் எழுதிக் கலசத்தில் போட்டுக் குலுக்கிக் கொட்டிவிடுவார்கள். இக்குவியலிலிருந்து ஏதாகிலும் ஒரு நறுக்கை யெடுத்துக் கொடுக்கும்படி ஒரு சிறு குழந்தையைக் கேட்பார்கள். அந்தச் சீட்டில் யார் பெயர் எழுதியிருக்கிறதோ அவனை அதிர்ஷ்டசாலியென்று எல்லோருங் கொண்டாடுவார்கள். அவன் பேரில்தான் இஷ்டதேவதைக்குக் கிருபை பூரணமாய் இருப்பதாக எல்லோரும் பாவிப்பது.

உடனே மேளவாத்தியங்கள் முழங்க இந்தப் பக்தனுக்கு மஞ்சளில் நனைத்த ஜவுளியொன்றை உடுக்கக் கொடுத்து, அந்த ஆளை முதல் பண்டிகை கழியும்வரை அவனைக் கோவில்விட்டுப் புறம்பே போகவொட்டாமல் வைத்திருப்பது வழக்கம். இப்படியேற்பட்ட விரத தினங்கள் கழியுமட்டும் அவனுக்கும், அவன் குடும்பத்தாருக்கும், முக்கியமாக அவன்

பெண்ஜாதிக்கும், யாதொரு சம்பந்தமுமிருக்கக் கூடாது. இருப்பதும் இல்லை. மாரி அம்மனுக்கு நைவேத்தியம் செய்த பிரசாதம் தான் அவனுக்கு ஆகாரம்.

உற்சவமாரம்பமாகிப் பத்தாநாள், குறித்த முகூர்த்தத்தில், இவனை இதற்கென்றேற்பட்டிருக்கும் இடத்திற்குக் கொண்டுபோகிறார்கள். அவ்விடத்தில் 'ஜெடில்' என்னும் இருப்புக் கொக்கிகளை மாட்டுவதற்கு ஏற்பட்டிருக்கும் மிராசு பாத்தியஸ்தன் தயாராக இருக்கிறான். குத்துண்போன் வந்ததும், அவனைப்பிடித்துக் கிழக்கு முகமாக நிறுத்தி நடு முதுகில், இரண்டுதோளெலும்புகளுக்கும் மத்தியில் அறையோ, குத்தோ, கொடுக்கிறான். அதனால் அவ்விடத்தில் சதை பொருமித்தற்காலம் நோய் சற்று மந்தித்துக்காணும். உடனே இப்படிப் பொருமியிருக்கும் சதையில் இரண்டு வலுத்த கொக்கிகளை உட்செலுத்தி மாட்டி யிரண்டையும் சேர்த்துப் பிகிந்து விடுகிறான்.

இந்தக் காரியம் முடிந்ததும் மேளதாளங்களுடன் இந்தப் பக்தனை முந்திக்கூறிய தேர் நிற்குமிடத்திற்குக் கூட்டிப் போகிறார்கள். போனதும் மேற்கூறிய மூங்கில் வளையைத் தாழ்த்தி அதன் மேல்தலைப்பில் உள்ள வளையத்திற்கு இந்தக்கொக்கிகளைச் சேர்த்துக்கட்டி விடுகிறார்கள். உடனே மூங்கில் வளையின் மறு தலைப்பை நாம் மேற்கூறியபடி தாழ்த்துகிறார்கள். ஜெடில் குத்துண்டவனுடன் எதிர்த்தலைப்பு உயர்ந்து விடுகிறது. ஆகவே யிவன் இந்த ஸ்திதியில் கைகால்களை விரித்துக்கொண்டு, ஆகாயத்தில் சுமார் 40 அடியுயரத்தில் வேறு ஆதாரவு மில்லாமல் கொக்கிகள் சதையைப் பிடுங்கி யிழுக்க ஊசலாடுகிறான்.

இச்சமயத்திலும் இவனுக்கு வெய்யிலினாலுபத்திரவம் உண்டாகக்கூடாதது போலும், ஆகவே 'நெஞ்சுநோமென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்' இவன் தலைக்குமேல் குடைபோன்ற மூங்கிற்கூடை கட்டியிருக்கிறது. அதற்குமேல் பட்டுப் போர்த்திருப்பதுபோல் காணுகிறது. அவன் கைகளில் பட்டு வஸ்திரமும், புஷ்பமாலையு மிருக்கின்றன. இந்தச் சம்பிரமங்களுடன் தேரைக் கோயிலைச்சுற்றி யிழுத்துப் போகிறார்கள். போகையில் அந்த ஆட்டத்தினாலும், அதிர்ச்சியினாலும், அவன் கையிலுள்ள புஷ்பமாலையிலிருந்து புஷ்பங்கள் உதிரும். அவைகளைச் சுற்றியிருக்கும் ஜனங்கள் வெகு ஆசையுடன் பொறுக்கி யெடுத்துக் கொள்ளுவார்கள். அவைகளைச் சரகாக்கி வைத்திருந்தால், விசித்திர ரோகங்களுக்கு ஔஷதங்களாகவும், வேறு அனேக மகிமைகளுக்குக் காரணமாகவும், ஆகலாமென்பது இச்சனங்களின் நம்பிக்கை.

இவ்வாறு தேரையிழுத்துவந்து கிடைசேர்த்தியதும், வளையைக் கட்டவிழ்த்துத் தாழ்த்தி விடுகிறார்கள். பக்தன் கீழே இறங்கினவுடன், கொக்கியை வாங்கிக் காயத்தை ஆற்றுவதற்கென்று மிராசுபாத்தியம் வகித்த வைத்தியன் வந்து, தன் மாமூலை நடத்தி, நாலைந்து தினத்திற்குள் காயத்தை ஆற்றிவிடுகிறான்.

இவ்வளவு பயங்கரமானதும், கோரமானதுமான காரியம், வருஷா வருஷம் நடந்து வருவதில், யாராகிலும் கீழே விழுந்து மாரியம்மனுக்குப் பலியாகிவிடலாமேயென்று நாமெண்ண இடமுண்டு. என்றாலும் அப்படி அதிகமாய் ஜனங்கள் விழுந்திறந்ததாகவாவது வேறு விதமாக அபாயமடைந்ததாகவாவது காணவில்லை. இதனால் இந்த ஜாதியாருக்குள் தேகம் எவ்வளவு தூரம் சுவாதீனமென்றும், மனோதைரியம் அபாரமென்றும், மூடபக்தியென்றாலும் தெய்வபக்தி வாஸ்தவமெனறும் நாம், தெரிந்துகொள்ளலாம். ஆனால் அந்தப்பக்தியை முரட்டு வழிகளிலும், ஒருவருக்கும் உபயோகமற்ற முறைகளிலும் காண்பிப்பதைவிட இக்கால தருமத்திற்கேற்குமாறு வேறு வகைகளில் காண்பிப்பது அழகென்றும், இப்போது சர்க்கார் அதைக் குற்றமாக்கி யிருப்பதுபோலவே, இம்மாதிரி வேறு அபாயகரமான காரியங்களையும் தடுப்பது மகா ஜனங்களுக்கு அனுகூலமேதவிர வேறல்லவென்றும், விவேகிகளுக்கெல்லாம் நன்கு விளங்கும்.



## நாட்டுவாசமும் நகரவாசமும்

ஸ்ரீமதி எஸ். பொன்னம்மாள்

நகர வாசத்திற்கும் நாட்டுவாசத்திற்குமுள்ள குணாகுணங்களை யெடுத்து அவ்வவற்றின் பேதாபேதங்களை விசாரித்தெழுதப் புகுந்திடில், அவை ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற அனுகூலங்களும் பிரதிகூலங்களும் பலவகை உண்டென்பதற்குச் சந்தேகமில்லை. நகரவாசமே சௌக்கியமா? நாட்டு வாசமே சௌக்கியமா? வென்றால், அதற்குப் பதில் அவரவர்களுடைய மனோதருமம், புத்தியின் நிலைமை, விருப்பம் முதலியவைகளை யனுசரித்துத் தான் சொல்லுவது சாத்தியம். ஆதலால், ஒருவர் சொல்லுவதை மற்றவர் ஒப்புக்கொள்ளுவது வேறு எந்த விஷயத்தில் சாத்தியமாயினும், இதில் ஆகாது. இவ்விரண்டிலுமுள்ள தாரதம்மியங்களைச் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமக்கு முக்கியமாக வேண்டியது தேக சௌக்கியமன்றோ? அதைக் கவனிக்குமிடத்து, நகர வாசிகளுக்கு அனேக அசௌகரியங்க ளிருப்பது பிரத்தியக்ஷம். முதலாவது, அனேக பட்டணங்களில் குடிக்கத் தண்ணீர் கிடையாது. நல்ல காற்றும் கிடையாது. திருச்சினாப்பள்ளிபோன்ற சில இடங்களில் ஜல சௌக்கியமிருப்பதாக வைத்துக்கொண்டாலும், குடியிருக்கும் வீடுகள் டொம்பர் குடிசைகளைவிட மோசமாயும், வெளியில் கிளம்பினால் நாசி முதலிய துவாரங்கள் அனைத்திலும் தெருப்புழுதி யடைந்தும், அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது. இதனால் தேகசுகங் குறைந்து அவ்வளவிற்கு மனச்சுகமுங்குறைந்து அலுத்துப்போகிறது. அல்லது போக்கிரிகள் மத்தியிலகப்பட்டுப் பலவிதமாய் நஷ்டமுண்டாகிறது. அக்காலத்தில் இவ்விதச் சங்கடங்களுடன் இந்நகரத்தில் வருந்துவதைப் பார்க்கினும் வேறு எங்கேயாவது ஒருவருமற்ற மூலைக்காட்டில் போய் வசிக்க வேண்டுமென்று துணிவுண்டாகிறது. அதற்கு ஆரணியமே தகுந்த ஸ்தலம். அவ்விடத்திற்குச் சீக்கிரம் போய்விட வேண்டுமென்கிற ஆக்கிரகம்உண்டாவதன்றியில் இம்மாதிரியான பாடல்களும் ஞாபகத்திற்கு வருகின்றன.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்கள் கண்ணிற் றெரியாத தூரத்தே
நீங்குவதே நல்ல நெறி.

இவ்வாறு நகரத்தைக் கசந்து நாட்டிலுள்ள ஏகாந்தமான இடங்களையும், காடுமலைகளையும், அருவிகளையும், பசும்புற்றரைகளையும், மனதினினைத்து களிகூரலாம்.

ஆனால், இவ்விஷயத்தில் நாட்டு வாசிகளைக் கேட்டால், அவர்கள் சொல்லுங்கதை வேறு. ஏனெனில், ஒரு நாளைப்போலவே எந்நாளும் உண்டுடுத்து உயிர் வாழ்க்கை ருசியற்றுப் போய், நேரகப் பொழுது போக்கில்லாமல் சோம்பேறிகளாய்த் தெருத்திண்ணைகளில் வம்புகள் பேசிக் காலங்கழிப்பவர் பிழைப்பும் ஒரு பிழைப்பாவென்று அவர்கள் கேட்கிறார்கள். ஆதலால் "கெட்டும் பட்டினஞ் சேர்" என்கிறார்கள். கிராமவாசிகளில் சாமான்னியக் குடியானவர்களோ, விளைச்சல், மழை, வெயில், தண்ணீர், விலைவாசி இவைகளைத்தவிர வேறு பேச்சுகள் அறிவதில்லை. கொஞ்சகாலமாகக் கோர்ட்டுகளுக்குப் போவதும், சிவில் வியாஜ்ஜியம் செய்வதும், அதில் தோற்றவன் அடிதடி செய்து கிரிமினல் வழக்குத் தொடர்வதும், அம்மூலமாக அடிக்கடி நகரங்களுக்குப்போய் அவ்விடத்தில் பெரிய வக்கீல்தாரர்களுடையவும், அவர்களுடைய பெண்டு பிள்ளைகளுடையவும், நாகரீக வைபவங்களை வருணித்துச் சிலருக்குக் காலங் கழிகிறது. பழைய அக்கிரஹாரங்களிலோ, சீட்டாட்டமும் வேறு விதமான விருதாகாலக்ஷேபங்களும், செழித்து சர்வமான்னியங்களெல்லாம் ஒரு தலை முறையில்லாவிட்டால், அடுத்த தலை முறையில் இறக்கை கட்டிக்கொள்ளுகின்றன. ஆதலால், நாட்டுவாசிகள்

நகரமே சிலாக்கியமென்று சொல்லுகிறார்கள். ஏனெனில், அவ்விடத்தில் சோம்பலாயிருக்க ஆஸ்பதமில்லை. எக்காலத்திலும் புலன்களையும் புத்தியையும் ஆசைகளையும் திருப்தி செய்விக்கத் தருணங்கள் வாய்த்துக்கொண்டிருக்கின்றன. பலவித வியாபாரங்களும், ஜனக்கூட்டமும் இருப்பதால், எவ்வகைப்பட்ட மனிதனும் தனது புத்திக்கும் சக்திக்குந் தக்கபடி அலுவல் தேடிக்கொள்ள அனுகூலங்கள் உண்டு. முழுமூடனானாலும் நகரத்திலுள்ள புத்திமான்களுடைய சேர்க்கையினால் நாகரீகமும், கல்வியும் அடையலாம். மேலும், பல தேசத்து ஜனங்கள் வந்து கலப்பதால் நடையுடை பாவனைகளில் தேர்ச்சி யடைவதற்கு இடமுண்டு. ஜனங்கள் இனிதாகப் பொழுது போக்குவதற்கேற்ற விநோத சாலைகளும், காட்சி மண்டபங்களும், நாடக சாலைகளும், பிரசங்க சபைகளும், விளையாட்டுக்கூடங்களும், சித்திர சாலைகளும், நிறைந்திருப்பதினால், கிராமவாசிகள் மாதிரி திண்ணையைக் காத்துக்கொண்டிருக்கவேண்டியதில்லை.

மேலே நாம் சொல்லியபடி இவ்விஷயத்தில் அவரவர் மனோதருமம் முக்கிய காரணம். சாமான்னியமாகச் சிறுவயதில் ஜனங்கள் நகரவாசத்தைத் தேடுவதும், அதிற்கிடைக்கும் சுகங்களை நாடுவதும், வயதாகி முதுமை வருமளவிற்கு, அவைகளில் அசிரத்தை யுண்டாகி, நாட்டுப்புறத்தையும் அரண்ணியத்தையும் தேடுவதும், வெகு நாளைய அனுபவம். ஆதலால், இங்கிலீஷ்கவி யொருவர் இவ்விஷயத்திற் சொல்லியிருப்பது யுக்தியுக்த மென்று நமக்குங் காணுகிறது. அதாவது,

பல்வகைச் சனஞ்செறி பட்டினத் துழல்வதும்,
பட்டினத் துடாப் பாழு றிருத்தலும்,
இரண்டு மதியீன மென்மனோர் புலவர்.

# விறகுவெட்டியும் வித்வசபையும்

ஜே. எஸ். மாசிலாமணிப் பண்டிதர்

(200-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## நாலாங்காட்சி

இடம்—உறையூர் வித்வசபாமண்டபம்.
காலம்—மாலை.

[கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், முதலியவர்களெல்லாம் வந்து ஆசனத் தமருகின்றார்கள். அரசன் மந்திரி சகிதமாய் வருகின்றான். எல்லாரும் எழுந்து நிற்கின்றார்கள். அரசன் அமர, கவிராஜபாவலர் பாடுகின்றார்.]

கவிராஜபாவலர் கலிவிருத்தம்
உலகெலா முவந் தோம்பிடு காவலன்
கலகம் யாவுங் கடிதகற் றுண்மையன்
குலமிக் கோங்குங் குலோத்துங்க சோழனும்
புலவர் தோழன் பொன்னாமுகங் காண்மினே.

மற்றைப்புலவர்.— ஜே! ஜே! ஜே!
குலோத்துங்க சோழநரசிங்க பெருமாற்கு
ஜே! ஜே! ஜே!

மந்திரி.—வானுடைனத்தகு சோணாட்டதிபதி
உத்தரங் கொடுத்த சித்தப் படியே
வந்துளார் இந்த வளர்பெருஞ் சபையில்
கல்விக் கடலைக் கரைகண் டுணர்ந்து
எல்லையில் அறிவும் தெள்ளிய ஞானமும்
அருங்கவிப் புலமையும் பெருங்கவி வாய்மையும்
ஒருங்கே பெற்று ஒப்புயர் வற்றஇவ்
வித்துவக் குழாமெலாம் மெத்தவும் நல்லது

குலோத்.—உத்தம அமைச்சே! இங்கும்இச்சபையில்
புவிச்சக்ர மெல்லாம் புகழுத லுற்றமா
கவிச்சக்ர வர்த்தியாம் கம்பநாட் டாழ்வார்
வந்துளார் கொல்லோ?

கம்பர்.— வந்துளேன் வந்துளேன்
வந்தெழிற் புலிக்கொடி வாய்ந்த மன்னிருப!

குலோத்.—அகமுற மிகவும் மகிழ்ந்தனம், அப்பால்
சகத்தொரு அழகாய் ஜொலிக்குமிச் சபையில்
பட்ட வர்த்தனப் பார்த்திப ரேற்றும்
ஒட்டக் கூத்தர் உவந்துவந் துளரோ?

ஒட்டக்.—உவந்தே வந்துளேன் ஓங்கிய புகழோய்,

குலோத்.—மெத்தவும் உத்தமம்! மேவுமிச் சபையில்
இகல்வேந்த ரெல்லாம் ஏற்றியே துதித்த
புகழேந்திப் புலவர் பொருந்தியிங்குளரோ?



புகழ்.—பொருந்தியே இங்குளேன் அருந்திருவுடையோய்.

குலோத்.—நல்லது! நல்லது! நலங்கொள் இச்சபையில்
சேர சோழ பாண்டிய மென்னக்
கூறும் மூன்று குவலயந் தன்னிலும்
ஒக்கப் புகழ்பெற் றோங்கி யுயர்ந்து
ஞானமே பரிந்தொரு மேனிகொண் டாலென
உலகினி லுதித்த கலைமக ளம்சமாம்
ஒளவையா ரெனும்நம அன்னையிங் குளரோ?

ஔவை.—உளேன் உளேன் ஒளிதிகழ் வேலோய்.

குலோத்.—சாலவு மினிதே, ஞாலமேல் கவிலரும்
நற்றிற முற்ற மந்திரிஇச் சபையில்
இவரை யொழியமற் றெவரேனும் உளரோ?

மந்திரி.—பலர்உளார் பலருளார், பார்த்திப ரேறே!
அதோஓ உள்ளார் அமிர்த கவிராயர்
சிறுங்கலை யாவையும் ஒருங்கே யுணர்ந்தவர்
எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென
வழுத்திய ஐவகை இலக்கண மனைத்தையும்
ஐயந் திரிபற ஆய்ந்தினி துணர்ந்தவர்
அரிசைச் செம்பியனின் று
பேரிசை கேட்டுநின் பேட்டி தன்னைப்
பெறும்படி யிங்கே விரும்பி வந்துளார்..

குலோத்.—வெகுசந் தோஷம் வெகுசந் தோஷம்

அமிர்த.—ஆழியுள் ளளவும் வாழ்கநின் திருமுடி.

மந்திரி.—அப்பால்
வீற்றிருக் கின்றஅவ் வியன்கவிப் புலவர்
நாற்றிசை யெல்லாம் நாடிய புகழினர்
இசைத்தமிழ் முழுதையும் நசையுறக் கற்றவர்
ஒருதலை மன்னிய இருதல மீதினும்
ஓங்குசீர் பெற்றசங் கீதமாற் குறுவதாம்
மூவகை யிசையும் நால்வகைத் தகுதியும்
ஐவகைக் கருவியும் அறுவகைப் பாவும்
எழுவகைச் சாமும் எண்வகைக் கரணமும்
ஒன்பது வகைநவ சந்தி தானமும்
பத்து வகைத்தா ளப்பிர மாணமும்
கல்யாணி கமாசு காம்போதி காப்பி
சங்கரா பரணம் சயிந்தவி சாவேரி
புன்னாக வராளி பூபாளம் லாவணி
ஆனந்த பைரவி அமிர்த கல்யாணி
என்ப தாதிய இன்னிசை இராகமும்
தேறாற் றின்னும் ஓதிய பலவும்
காசறக் கற்றவர், கவிராஜ பாவலர்
எனப்பேர் பெற்றவர் மனவெத் திக்கினும்
ஓங்கு நின்புகழ் ஓதக் கேட்டிவர்
ஈங்கு வந்தனர் எழிலுறு படையோய்.

குலோத்.—நன்று நன்று, சாலவும் நன்றே.

கவிராஜ்.—சந்திர சூரியர் அந்தரத் துறும்வரை
வீங்கும் நின்புகழ் ஓங்கியே வளருக.

மந்திரி.—ஆயிடை
நலமே அமர்ந்துள நடராஜ நாவலர்
முத்தமி ழுலகெலாம் மெச்சிய புகழினர்
இதயமுஞ் செவியும் பதமுற லன்றிக்
கண்ணும் அளவிலாக் காட்சியா னந்தம்
நண்ணிட நடிக்கும் நாடகக் கவிஞர்
அகத்தினு ளமர்ந்து ஐம்பொறி யனைத்தையும்
நினைத்த படியனி நிருத்தமாட் டிடுமுயர்
மனத்தினைப் போல, திரைப்புற மிருந்து
பன்னன் பல்லிடத்துப் படர்ந்தன யாவையும்
கண்ணெதிர் நடத்தல்போல் காட்டுதல் வல்லுனர்
நாடகர் பல்லோர் நண்ணிய தலைவர்
கூடல் மாநகர் குடியிருப் புடையவர்
அகலும் நின்புகழ் புகலக் கேட்டிவர்
இந்நகர் மேவினர் பொன்னித் துறைவ

குலோத்.—சாலவும் இனிதே, சாலவும் இனிதே. [சை

நடராஜ நாவலர்.—ஊழிநீ டூழியாய் வாழ்கநின் பேரி

குலோத்.—ஆறி வமைச்ச! சேருமிச் சபையில்
கூறியவர் தவிர வேறியாரும் உளரோ?

மந்திரி.—உளாஅர் உளாஅர் உயர்புலித் துவச
இலக்கணம் இலக்கியம் எளிதுணர் புலவரும்
உறுபெரு நூலுக் குரைதரு புலவரும்
இயல்இசை நாடகம் என்னுமுத் தமிழையும்
மயலறக் கற்ற மாண்புறு புலவரும்
ஆசு மதுரம் சித்திரம்வித் தாரமாம்
நால்வகைக் கவியையும் நன்குணர் புல்வரும்
அகத்தியந் தொல்காப் பியமா தியவும்
எஞ்சலில் அழகுறு பஞ்சகா வியமும்
எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும்
பதினெண் கீழ்க்கணக் காதிய பலவுமாம்
அரும்பெரு நூலெலாம் ஆய்ந்தமா புலவரும்
இன்னும் பலதிறன் நண்ணிய பலருமாய்
ஓங்குமிச் சபையைத் தாங்க வந்துளார்
ஒப்புயர் வொழிந்த மற்புயச் சூரிய! [ந்தோம்

குலோத்.—மகிழ்ந்தோம் மகிழ்ந்தோம் அகமிக மகிழ்
அருந்தமி ழுணர்ந்த பெருந்தகைப் புலவீர்

அமிழ்தினு மினிய தமிழ்மொழிச் செல்வீர்
ஆகா உம்மைக் காணக் காண
அடங்கொணு மகிழ்ச்சி அகத்திலுறு கின்றது
தாமரை யில்லாத் தடாகம் போலவும்
பூமண மில்லாப் புஷ்பம் போலவும்
சந்திர னில்லா அந்தரம் போலவும்
நதிநன் றில்லா நாடு போலவுமநன்
மடக்கொடி யில்லா மனையைப் போலவும்
கடக்கொணு அறிவுடைக் கவிகள் கூடியஇவ்
வித்துவ சபையொன் றில்லா வியனகர்
என்னும்! என்னும்! நல்லது நல்லது
நாடும்இச் சபையில் கூடிய புலவிர்நாம்
கேட்கும் வினக்கட் கேற்கவிடை கூறீர்.

[விறகுவெட்டிச் சிங்கன் வெகு வேகமாய் ஓடி வருகின்றான். சேவகன் அவனை அதட்டுகின்றான்.]

சேவகன்—அடே! டே! டே! ஆரடா அங்குப் போகிறது.

சிங்கன்.—அட இரையாதே ராஜாவைப் பார்க்கப் போறேன்.

சேவகன்.—அடே நில்லடா அங்கே.

[சேவகன் தடுக்கச் சிங்கன் திமிருகின்றான்]

சிங்கன்.—அட இரையாதே நான் ரெம்ப அவசரமாய் ராஜாவிடம் போறேன்.

[சிங்கன் கடந்துபோய் விடுகின்றான்]

சேவகன்.—வெகு அவசரமாய்ப் போகிறானே. ஏதோ ஒரு விசேஷ சமாசாரங்கொண்டுவருகிறானே என்னமோ தெரியவில்லை.

[விறகுவெட்டிச் சிங்கன் சபைக்குட் பிரவேசித்துக்கம்பனை வணங்குகின்றான்]

சிங்கன்.—சாமி சேவிக்கிறேன்.

கம்பர்.—நீயார், என்ன வேண்டும்?

சிங்கன்.—சாமி, நான் ராஜாமேலே கவிபாடிக்கொண்டு வந்திருக்கிறேன்.

கம்பர்.—ஓகோ இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. நம்மை நாடிய இவனுக்கு நன்மை செய்வதே நல்லது, சரி, உனக்கென்னவேண்டும்? (தனக்குள்.)

சிங்கன்.—சாமி, இங்கே என் கவியைப்பாடி ஏதாவது வெகுமதி வாங்கிக்கொண்டு போக வேண்டும்,

கம்பர்.—அப்படியா? ஆனால், நானல்ல ராஜா அதோ இருக்கின்றார் மகாராஜா, அவரைப் போய் வணங்கும்.

[அரசனுக்கு.]

ஆர்கலி யுலகாள் சீர்மலிச்சோழ! யாரோ ஒரு வித்துவான் தங்கள்மேல் கவிபாடிக்கொண்டு வந்திருக்கின்றாராம். தங்கள் சமுகபேட்டியை விரும்புகின்றார்.

சிங்கன்.—சேவிக்கிறேன், சாமி, சேவிக்கிறேன்.

[பாடுகின்றான்]

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி
காவி றையே கூவி றையே
கன்னப் பின்ன மன்னத் தென்ன
குலோத் துங்க சோழ மகாரா ஜாவே!

குலோத்.—ஓஹோ இதென்ன கொடுமை, கொடுமை? (நகைத்து)

புகழ்.—பயித்திய காரன் பயித்திய காரன்
இறைவ! ஏதோ இந்த வெறிமகன்
புத்தி மாறுட் டத்தால் இத்திறம்
கத்திக் கதறினன்

குலோத்.— இருக்கலாம் இருக்கலாம்.

அமிர்தகவி.—அல்லதிவ் விழிமகன் தெள்ளிய பனை
கள்ளைக் குடித்து மிக்க வெறித்து [யின்
வெறியின் குணத்தால் நெறியற இவ்விதம்
அறைதலுற் றனனே?

குலோத்.— அதுவும் இருக்கலாம்.

ஒட்டக்.—அன்றி, ஆரே உண்மை அறிந்தவர்
வென்றி சேரும்நம்
ஆருயிர் அரசற்குச் சதிசெய நினைத்து
ஆரோ ஏவிய ஆளா யிருக்கலாம்
நாடியிவ் வேடம் நண்ணிய இவனே

குலோத்.—அப்படிக் கூட இருக்க லாமோ?

கவிராஜ.—இப்படி யிருக்கினென்? இல்லா திருக்கி
தரைய னைத்திற் கும்த லைவநின் [னென்?
தரிசனம் இத்தனை சமான மாமோ?
இப்படி யெல்லாம் விட்டால் நினது
ஆருயிர்க் கெத்தனை அபாயமோ நேரும்?

நடராஜ.—ஆமாம் ஆமாம் ஆரின் மாலைய!
இவனையும் இவனை உள்வர விட்ட
காவற் சேவகன் தன்னையும் தகும்படி



உடனே சிக்ஷை புறத்துதல் வேண்டும்.

ஒருபுலவர்.—தடையின்றி யதனைச் செய்வதே தகுதி.

குலோத்.—ஆரடா சேவக.

சேவகன்.—அடியேன் மகாராஜ்.

குலோத்.—எனடா சீச்சீ இந்தக் கட்குடி
காரனே பயித்திய காரனே அல்லது
நஞ்சனெஞ் சத்து வஞ்சகச் சதியனை
உள்ளே இவனைநீ செல்ல விட்டாய்
தகுந்த படியுனைத் தண்டிக்கப் போகிறேன்.

சேவகன்.—மன்னிக்கணும், மன்னிக்கணும், மகாராஜா. அவன் வருகிற அவசரத்தைப் பார்த்துவிட்டு ஏதோ அசலூரிலிருந்து அவசரச் செய்திகொண்டு வருகிறான் என்று நினைத்து உள்ளே விட்டுவிட்டேன். மன்னிக்கணும் மன்னிக்கணும் மகாராஜ்.

குலோத்.—அடே நீ சொல்லுங் காரணம் வெகு நன்றாயிருக்கின்றது. உன்னைக் கட்டாயமாய்த் தண்டிக்கவே போகிறேன். அமைச்சரே என்ன பேசாமலிருக்கின்றீர்?

மந்திரி.—ஏதோ இவ்விஷ யத்தில் கம்பரும்
ஒளவை யாரும் மௌன மாக
இருந்ததை யோசித் திருந்தனன் யானும்
அன்றி விசேஷமற் றெதுவு மின்று
குன்றலில் திறலுறு கோழி வேந்தே.

குலோத்.—ஒளவையார் அவ்விதம் இருப்பது சகஜமே
ஆனால்
கம்பர்மா கவியே உம்மபிப் பிராயம்
ஏதோ வென்றெமக் கோதி நீங்கே.

கம்பர்.—குறுமுனி பயந்த மறுவறு செந்தமிழ்
ஏர்பெற வளர்க்கும் சோழநாட் டதிபதி!
வரும்பொரு ளுணரும் அருந்தகை அமாத்திய!
மோனை முத்தமிழ் முழுதுணர் புலவீர்!
நம்மைப் போல கற்றமி ழாய்ந்தஓர்
வித்வானைப் பார்த்து இத்திறம் உரைப்பது
என்ன விபரீதம் என்ன விபரீதம்!
முழுவதும் உணர்ந்த பழுதறு புலவர்கள்
இவரைப் போலவே
நீறு பூத்த நெருப்பைப் போலவும்
சிப்பியுட் சிக்கிய முத்தைப் போலவும்
குப்பையுட் புதைத்த ரத்தினம் போலவும்
இருப்பர். இவர்களை இகழ்தல் தகாது
ஒட்டக் கூத்தரே! மற்றுள்ள புலவரே!

இவ்வித்வ சிரோமணி செப்பிய இப்பாட்டானது வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்றைவகைப் பாக்களிலாவது துறை, தாழிசை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்களிலாவது ஏதனோடு சம்பந்தப்பட்டது? இதன் தாற்பரியம் யாது? என்று அறிந்து சொல்வதல்லவோ வித்வ சாமர்த்தியம். அதைவிட்டுப் பாட்டைக்கேட்டு நகைப்பதுகன்றோமோ, பாட்டைப் பாடியவரைப் பொருள் சொல்லச் சொன்னால், யாதொரு பிரயாசமுமின்றி, மகா சாதுரியமாக ஒரு நொடிக்குள்ளே சொல்லி விடுவார். ஆயினும் தமிழிலே தொன்று தொட்டு வழங்கி வருகிற ஒரு நியதியின்படி கவிபாடியவரே தாம் பாடிய கவிக்குப் பொருள் சொல்லுகிறது சம்பிரதாயம் அல்லவே. இதுபற்றி அவரை அர்த்தம் சொல்லச் சொல்லுகிறது நியாயமும் அல்ல. மேலும் மகா வித்வான்களாக நாமிருந்துகொண்டு அவரை அர்த்தம் சொல்லச்சொன்னால், நமக்கு என்ன பெருமை யிருக்கின்றது?

ஆகையால்,

புகழேந்திப் புலவரே அமிர்தகவி ராயரே
கற்றமி ழுண்ட ஒட்டக் கூத்தரே
முத்தமிழ் உணர்ந்த வித்வசிரோ மணிகளே
நம்மில்
ஆரால திதற்கு அருத்தம் சொல்லலே
நேர்மையாம் வேறு நிகழ்த்துதற் கில்லை.

நடராஜ.—பாருமேன் பாருமேன் கம்ப ரதுசா
மர்த்தி யத்தை, பைத்தியங் கொண்டவன்
தாறு மாறுக் குழறிய உழறலைப்
பாட்டெனப் பாவித்து அதற்குநல் லுரையும்
காட்ட வேண்டுமாம் நாமே, ஆகா
இவரது ஞானம் இருந்தவா றென்னே!

அமிர்தகவி.—இவரது திறமை எத்துணை ஆகா
யாவனே ஒருவன் இவ்விடம் மேவி
கள்ளைக் குடித்துத் தள்ளிய வெறியால்
அறிவு கலங்கி உழறினல் அதற்குப்
பொருள்சொல்ல வேண்டு மாம்புல வர்கள்
ஆகா வெகுநன் றாயிருக் கின்றது!

ஒட்டக்.—சித்தப் பிரமையால் பித்தங் கொண்டஅப்
பைத்திய காரனோ அல்லதவன் பகர்ந்த
அனைத்தையும் பாட்டென நினைத்த இந்தக்
கம்பர்மா கவியோ இவ்விரு வருக்குள்
யாரோ பெரிய பயித்திய காரன்
என்பது எனக்குச் சந்தேகம்மே.
கவிராஜ.—இத்தனை பாடும் எதற்கு ஏதோ
அர்த்தம் சொல்லுவ தாக விருந்தால்
கம்பரே அஃதைக் கழறலா காதோ? [ண்ட
கம்பர்.—இம்பர்வா ரிதியென இடனெழில் கொ
தமிழ்க்கட லுண்டதை யுமிழ்தரு தாதையீர்
யானும் உங்களுள் ஒருவனே யானே
சொல்வதும் நீங்கள் சொல்வதும் ஒன்றே
ஆயினும் உங்கள் அபீஷ்டப் படியே
மேயவிக் கவிக்கு விளம்புவன் அருத்தம்

இப்பாவலர் பெருமான் பகர்ந்தவிப்பாட்டானது வெண்பா முதலிய ஐவகைப் பாக்களுள்ளே ஆசிரியப்பா வாகும். வெண்பாவுக்குச் சங்கூடாபரணராகமும், கலித்துறைக்குப் பைரவிராகமும், விருத்தத்துக்குக் கல்யாணி, தோடி, நாட்டை முதலிய ராகங்களும், ஏற்பட்டிருக்கிறதுபோல, இவ்வாசிரியப்பாவுக்கு ஏற்பட்ட ராகம் ஆரபி.

[ஆரபி ராகத்தில் பாடுகின்றார்,]

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி
காவிறையே கூவிறையே
கன்னுப் பின்னு மன்னுத் தென்னு
குலோத்துங்க சோழ மகாரா ஜாவே,

இப்பாடல் இடையே சில சீர் குறைந்து வருவதனால் இணைக்குறளாசிரியப்பாவின் பாற்படும், என்னை? "இடைபல குன்றின் இணைக்க்குறள்!" என்பது சூத்திரமாகலின். இதன் பொருள், மண்ணுண்ணி, மண் உண்ணி, மண்-பூமியை, உண்ணி-உண்டவனே, என்றால், பிரிதிவீபதியாகிய மகா விஷ்ணுவே, என்றபடி,

மா பிள்ளையே, மா-லக்ஷ்மியினுடைய, பிள்ளையே-புதல்வனே,

ஆலமர நாயகனே-ஆல், அமர, நாயகனே,-ஆல்-ஆலகாலமென்ற விஷத்தை அமுது செய்தருளிய, அமர நாயகனே-தேவத் தலைவனாகிய நீலகண்டனே,

காவிறையே-கா, இறையே, கா-கற்பகவனத்துக்கு, இறையே-தலைவனே, என்றால் தேவேந்திரனே என்றபடி,

கூவிறையே,-கூ, இறையே, கூ-பூமிக்கு, இறையே-தலைவனே, என்றால், லோகசக்கிராதிபதியே என்றபடி,

கன்னு-கன்னனே,

பின்னு-கன்னனுக்குப் பின்னோனாகிய தருமனே,

மன்னு-என்றும் நிலைபெற்றவனே,

தென்னு-தென்னனாகிய பாண்டியனைப் போன்றவனே, குலோத்துங்க சோழ மகாராஜாவே-குலோத்துங்க சோழ மகாராஜாவே,

உங்கள் அப்பன் கோ-உங்கள் தாதை அரசனாவான்,

விற் பெருச்சாளி-வில், பெருச, ஆளி, வில்-வில்வித்தையில் பெருச-பெரிதாகிய, ஆளி-சிங்கம் போல்வாய். இது பதவுரை, இனி,

திருமாலைப்போல உலகபரிபாலனம் பண்ணுகின்றவனே, மகாலக்ஷ்மி கடாக்ஷம் பெற்றவனே, பரமசிவனைப்போல சரணமடைந்தவருக்குத் துயர் தீர்க்கின்றவனே, தேவேந்திரனைப்போல சகல சம்பிரமானுபவனே, லோகத்துக்கு ஏக சக்கிராதிபதியே, கொடையில் கர்ணனைப் போன்றவனே, நீதியில் தருமனைப் போன்றவனே, தமிழ்ப் புலமையில் பாண்டியனைப்போன்றவனே, அழியாப் புகழுடம்பெய்தியவனே, குலோத்துங்க சோழ மகாராஜனே, உங்கள் தாதை மூதாதை முதலியோரெல்லாம் அரசாளப்பெற்ற பரம்பரைச் சக்கிரவர்த்திகள், நீயோ வில்வித்தையில் புறங்கொடாது ஜெயிக்கும் திறலுடையவன். இது இப்பாட்டினது திரண்ட பொருள். இனி,

உங்களப்பன்-எழுவாய், கோ-பயனிலை, அன்



றியும் நீ தோன்றா எழுவாயும், விற்பெருச்சாளி பயனிலையுமாம். மற்றவை யனைத்தும் விளிவேற்றுமை. இவை அரசனை முன்னிலைப் படுத்தியதினால் ஆடூஉ முன்னிலை. மூன்றும் நான்காம் அடிகள் முற்றெதுகை. இச்செய்யுளில் இடையிடையே உபமாலங்காரம், ரூபகாலங்காரம், சுவபாவாலங்காரம் முதலிய அலங்காரங்களுட் சிலவும், சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல் முதலிய அழகுகளில் பலவும் ஆங்காங்குக் காணப்படுகின்றது. இது இலக்கணக் குறிப்பு. இனி, இப்பாட்டினது தாற்பரியத்துக்கு விசேஷார்த்தம் சொல்லப்புகுந்தால், காலதாமதம் ஏற்படுமாகையால், விரிவஞ்சி, இத்துடன் நிறுத்துகின்றனன்.

குலோத்.—மெச்சினேன் மெச்சினேன் கம்பரே உ
வித்வ சாமர்த்யமேசா மர்த்தியம். [மது
மந்திரி.—பொருந்தும் பொருந்தும் பொருந்தும்
இவர்க்குக்
கவிச்சக்கர வர்த்தியெனும் கவினார் நாமம்
பொருந்தும் பொருந்தும்.
ஒருபுலவர்— பொருகட லுலகில்
கல்வியிற் பெரியவர் கம்பர் என்ற
சொல்லும் உண்மையே.
வேறொருபுலவர்.— தொல்புவி மேலிவர்
சாரதா பீடமெனக் கூறலும் தகுதியே.
கம்பர்.—அரசரே அமைச்சரே அருங்கவிப் புலவரே
இத்தனை துதிக்கும் யானோ பாத்திரன்
இத்தகை எழிற்கவி இயற்றிய பாவலர்
நிற்கிறார் ஆங்கே நிகழ்த்திய புகழெலாம்
அமைவுற மிந்த அரும்புல வோர்க்கே.
குலோத்.—அமர்க அமர்கவிவ் வாசன மீதே
(சிங்கனுக்கு)
இவரையோ அல்லது அவரையோ இவர்களுள்
எவரையோ புகழ்வ தென்றியான் அறியேன்
இவரது நாமதேயம் என்னவோ?
கம்பர்.—உங்கள் பெயரென்ன? (சிங்கனுக்கு)
சிங்கன்.— சிங்கன் சிங்கன்.
கம்பர்.—கவிச்சிங்கப் புலவராம், காவல!
(அரசனுக்கு) ஆகா
குலோத்.—ஒக்கும் ஒக்கும் இவருக் கிப்பெயர்.
கம்பர்.—சீரிய தமிழ்வளர் நேரிய! இவரொரு
வித்வசிரோ ரத்தினம், இவரது கவிக்குப்
பதப்பொரு ளுரைப்பவர் மிகச்சிலர் ஆகையால்
தக்க பரிசும் மிக்சமரி யாதையும்
ஒக்கநாம் கொடுத்து உபசரித் தனுப்பலே
நன்றென எனக்குத் தோன்றுகின்றது. [மை.
ஒருபுலவர்.—கம்பர் சொன்னது நிரம்பவும் உண்
வேறொருபுலவர்.—அத்திறம் செய்தலே மெத்தவும்
நன்று.
குலோத்.—ஆமாம் அவ்வித மேசெய் வோம்நாம்
அருந்திறலமைச்ச இப் பெருந்தகைப் புலவர்க்குப்
பட்டுடை முதலிய பலவும் உடுத்து
ரத்தினக் கடுக்கனும் வஜ்ஜிரப் பதக்கமும்
தங்கதோ டாவும் இங்கித மிட்டுச்
சந்தன புஷ்பதாம் பூலந் தரித்துப்
பரிசாம் ஆயிரம் பொன்னை இப் பாவலர்
சிரசின்மேல் கொட்டி சொர்ணபி ஷேகம்
செவ்வையாய்ச் செய்து இன்னும் இவர்மனம்
வவ்விய பலவும் வகையுட னிவர்க்குக்
கொடுத்து வீட்டுக்கு விடுத்தனுப் புவிப்பாய்.
மந்திரி.—சித்தப் படியே செய்குவன் உத்தம!
[சேவகனொருவன் வருகின்றான்]
சேவகன்.—வந்தனம் வந்தனம் வந்தனம் இறைவ!
மதுரையாம் முதுநகர் வழுதியர் கோமான்
விடுத்த தூதுவர் பலர்இங் கர்மேவி
அடுத்தனர் வந்துநம் அரண்மனை வாசலைப்
பாண்டியர் பெருமான் ஈண்டெனக் கனுப்பிய
யாதோ அவசர தூதொன் றுளதாம்.
குலோத்.—சரிசரி அவர்களவ் விடமே தங்குக
அரைநா ழிகையினுள் வருவேன் அவ்விடம்.
சேவகன்.—வந்தனம் வேந்தே.
[சேவகன் போகின்றான்]
குலோத்.— அந்தமில் திறலமர்
கவிச்சிங் கப்புல வரேஉமது கவிப்பிர
சங்கத்தை வேறொரு சமயம்நாம் கேட்போம்.
வேறுபல வேலைகள் நமக்குள தாகையில்
நமது
வித்துவ சபையும் இத்துடன் கலைந்தது.
திரும்பநாம் சேர்வது வரும்புதன் கிழமை
ஆண்ட தற்கு வேண்டிய விபரம்
அனைத்தையும் நமது அமைச்சர் கூறுவர்

அற்றைநாள் நீவிர் அனைவரும் வம்மின்
நற்றமிழ் கடைந்த சொற்புல வீரே.
[அரசன் மந்திரி சேவகன் இவர்கள் போகின்றார்கள்]

புலவர்கள்.—ஜே! ஜே! ஜே!
குலோத்துங்க சோழ குரிசில் பெருமாற்கு
ஜே! ஜே! ஜே!

## ஐந்தாம் காட்சி

இடம்— உறையூர் அரமனைத்தெரு.
காலம்—சாயரக்ஷை.

[கம்பர் வருகின்றார். பரிசுபெற்று மரியாதைக் கோலத்துடனே வருகின்ற சிங்கனைத் தூரத்தே காண்கின்றார்.]

கம்பர்.—என்ன விந்தை என்ன விந்தை
சற்று நேரத் தின்முன்
வற்றிய வுடலின்மேல் சுற்றிய பீற்றலும்,
விறகும் எருவும் பிறவுஞ் சுமந்து
மொட்டையாம் தலைமேல் கட்டிய கந்தையும்,
தளர்ந்த நடையும், உலர்ந்த வுடலும்,
முடையுறு நாற்றமும், மூத்தவள் முகமுமாய்,
அறஇழி வான துர்க்கோ லம்போய்,
விறகு வெட்டிச் சிங்கன் வியன்பெரு
கவிச்சிங்கப் புலவராய், கண்டவர் திகைக்க,
உறுபுன லாடி, நறுமலர் சூடி,
சந்தனக் குழம்பில் அங்கம் தோய்த்து,
தாம்பூல மாம்பல தகையுறத் தின்று,
பட்டாடை யுடுத்துமே லுத்தரீயம் படியபொற்,
பதக்க மணிந்துநற், பாகையுந் தாங்கி,
பொற்றோ டாவும் நற்கையி லணிந்து,
சிங்க நடையும் சிறந்தநன் னோக்குமாய்,
மறுரூப மாகி வருகிற தோற்றம்
என்ன விந்தை! என்ன விந்தை!
ஆகா

[சிங்கனும் ஒரு அரமனைபோவலைக்காரனும், வருகின்றான்.]

(வாடாசிங்கா)

சிங்கன்.— சாமி

கம்பர்.—ஓகோ மறந்தே போனேன். ராஜ
வித்துவ சபையில் மெச்சிடப் பாடி
பரிசொடு சிறப்புப் பெயர்பெற் றவரை
மரியாதை யாகவே மதித்திடல் வேண்டும்
கவிச்சிங்கப் புலவரே!

சிங்கன்.— சாமி சாமி [ஷ்டமே

கம்பர்.—இவ்வித நல்நிலை அடைந்த துஉமது அதிர்

சிங்கன்.—சாமி! நான் கெட்ட கேட்டுக்கு அதிர்ஷ்டம் ஒன்று. ஏதோ உங்கள் தயவும், கடவுள் கிருபையும் இப்படியானது.

கம்பர்.—இதுயார்? அது என்ன?

சிங்கன்.—சாமி இதுதான் மகாராஜா எனக்குக் கொடுத்த பரிசுகள் பட்டுச்சேலை: கெண்டைவேஷ்டி, சரிகை உருமா, வெத்தலைப்பாக்குச், சந்தனப்பூவு, பழம்பலகாரம், சகலமும் ஒன்று பாக்கியில்லாமல், கூடை நிறையக்கொடுத்து ஒரு ஆளையும் அனுப்பினார் தூக்கிச்சுமக்க, எனது ஜென்மப் பிறப்பிலும் இந்தமாதிரி கண்டதேயில்லை. இதெல்லாம் உங்களுடைய—

கம்பர்.—போதும் போதும், கவிச்சிங்கப்புலவரே, உம்மிடம் சொல்லவேண்டிய விஷயம் ஒன்றிருக்கின்றது. அதற்காய்த்தான் உம்மை அழைத்தேன் இவ்விடம்.

சிங்கன்.—அதென்ன சாமி சொல்லுங்கள் சொல்லுங்கள்.

கம்பர்.—கடவுளுடைய கடாக்ஷத்தாலும், உமது நல்அதிர்ஷ்டத்தாலும், எனது சாமர்த்தியத்தாலும் இன்று நீர் இச்சிறப்புப் பெற்றீர். மகாராஜாவும் உம்மையொரு மகாவித்வானாகவே மதித்திருக்கின்றார். இன்னொரு சமயம் உம்மைத் தமது வித்வசபைக்கழைப்பித்து கவிப்பிரசங்கம் செய்யச் சொல்லப் போவதாகவும் கூறியிருக்கின்றார். அப்படி அரசன் செய்யும் பட்சத்தில் உமது பண்டோளம் வெளிப்பட்டு வருவதுந்தவிர எனது பெருமைக்கும் பங்கமுண்டாம். ஆகையால்—

சிங்கன்.—அதற்கென்ன சாமி செய்யணும்.

கம்பர்.—அது தானே சொல்ல வந்தேன். தினந்தோறும் நீர் என்னிடம் வந்து நிகண்டு இலக்கணம் இலக்கியம் தருக்கம் முதலியவெல்லாம் ஒழுங்காய்க் கற்றுவருவீரானல், வெகு சீக்கிரத்தில் உன்னை மகாவித்வானாக்கி, அரசசபையில் உம்மைக்கொண்டு கவிப்பிரசங்கமும் செய்விப்பேன். உமக்கது பிரியந்தானே.



சிங்கன்.—ஆமாம் சாமி, தடையென்ன.

கம்பர்.—மெத்தவும் நல்லது. சிங்கரே, நாளை தொடுத்தே நீர் நமது கற்றுச் சொல்லிகளோடு ஒருவராய் வித்தியாரம்பம் செய்யவேண்டும். அதோ இருக்கின்றது நமது வீடு. நாளைமுதலே வருவீரோ?

சிங்கன்.—தடையென்னசாமி, நாளையே வருவேன்.

கம்பர்.—சரிசரி, கவிச்சிங்கப்புலவரே, நேரமுமானது பொழுதும்போனது, இருட்டுமுன் வீட்டுக்கு நடப்பது நல்லது.

சிங்கன்.—சாமி நீங்கள் என்றைக்கும் நன்றாயிருக்கணும் நன்றாயிருக்கணும்.

[சிங்கன் கம்பரை வணங்கிப்போய் விடுகின்றான்.]

கம்பர்.—இவ்வித மாகச் செய்தலும் சிற்சில
சமயங்க ளுக்குறும் அமைவே என்னே
குலத்தினும், தொழிலினும், குணவொழுக் கத்தி
இழிந்தவ னாக இருப்பினும், நம்மை [னும்,
நாடிய இவனுக்கு நன்மைசெய் திடவும்,
கூடிய ஒட்டக் கூத்த ராதிய
பாவலர் கர்வத்தைப் பங்கப் படுத்தவும்,
நரபதி தனக்கு நன்கவித் திறமையைக்
காட்டவும், உறுபுகழ் நாட்டவும், கருத்தில்
நினைத்துச் செய்தன அனைத்தும் நன்றே
முடிந்தன. ஆயினும், நடந்தன வெல்லாம்
கூத்தர்முன் நம்மேல் கொண்ட பொறாமையை
காற்றிறம் பெருக்கிடும் நமக்கது என்னும்
பொறாமையாம் பொல்லா சுழித்தலை யுழன்றும்
தராதலத் தமர்ந்த தன்மையா ரெவரே.

வாழ்த்து

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

வாழி சுவேத மன்ன ராட்சி
வாழி எங்கள் தேசமும்
வாழி தூய னடியார் யாரும்
வாழி நல்ல செந்தமிழ்
வாழி கம்பர் மாட்சி சாற்றிக்
காதை மன்று ணடிப்பவர்
வாழி காண்போர் வாழி கேட்போர்
வாழி தானி சேறியே.

முற்றிற்று

## இறப்பதா, இருப்பதா?

### விமர்சனம்-பிரதிவாதி

சென்ற மாதத்தில் ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் தேசிய பாஷைகளை உத்தாரஞ்செய்வதற்காக எழுதிய வியாசத்தைச் சுருக்கி உரைத்தோம். இப்பொழுது அதிற்காணுவதெல்லாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமா? அல்லது ஏதாகிலும் சில அம்சங்களுக்கு எதிர்க்கக்ஷி உண்டாவென்பதை விசாரிக்கவேண்டும். ஆதலால் சுவாமிகள் எடுத்துக்கொண்ட முக்கிய பிரகரணங்களை ஒவ்வொன்றாக விசாரித்துவிட்டு விடுகிறோம். பண்டிதர்களைக் குறித்துச் சுவாமிகள் சொல்லியதை முன்னமே சுருக்கியுரைத்து நமது விசேஷ உரையும் சேர்த்துவிட்டிருக்கிறோமாதலால், இனி அதைக்குறித்து மறுபடி பேசவேண்டியது அனாவசியம். தெலுங்கு முதலிய பாஷைகளைக் குறித்து சுவாமிகள் எழுதியிருப்பதையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

பொதுவாகப் பாஷைகள் மனிதஜாதியாருக்குள் எவ்வாறு உண்டாயிற்றென்றும், எவ்வாறு பெருகிற்றென்றும், அவற்றுட் சில எப்படி நாசமடைந்தனவென்றும், இவ்விஷயத்தை ஆராய்ந்த வித்வான்களெல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். அதாவது சுவாமிகள் கூறியபடி மற்ற வித்தைகளைச் சிறிது சிறிதாக ஆரம்பித்து, புத்திமான்கள் பலர் உழைத்து, எப்படிச் சுவாதீனமாக்கிக் கொண்டார்களோ, அப்படியேதான் இவ்விஷயத்திலுமென்று. இதை ஆக்ஷேபிப்பவர்களுடன் நமக்கு வாதமில்லை. அவர்களுக்குள்ள தெய்வபக்தி நமக்கில்லை. கிறிஸ்தவப் பாதிரியார் ஹீப்ரு பாஷையை இப்போது நாம் படிக்கிறபடி ஆதாமன் வாய் வழியாக ஜீஹோவா பிறப்பித்தார் என்றும்; சம்ஸ்கிருதத்தைக் காளிதாஸன் முதலிய மஹா கவிகள் உபயோகித்திருக்குமாறு தேவலோகத்

தில் யாரோ நிர்மாணித்தாரென்றும், தமிழை ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் அகஸ்தியர் மூலமாய் யமக முதலிய கழைக்கூத்துகளுக் கிணங்க நகாசு செய்து அருளினாரென்றும், பேசுபவர்களுடன் நம்மைப் போலொத்த சாமான்னியர்கள் வாதாடுவது வீண். ஒரு விஷயமட்டும் நாம் சொல்லிவிடவேண்டும். பாஷைகளைக் கடவுள் மேற்சொல்லியவாறு உண்டாக்கினால்தான் அவருடைய சக்திக்கு லோபமொன்றுமில்லை யென்றும், வேறுவிதமாக மனிதனுடைய புத்தியைத் தூண்டிவிட்டு, அம்மூலமாய்ப் பாஷையை அபிவிருத்தியாகும்படி செய்தாரென்றால், அவருடைய சக்திக்கு ஏதோ லோபம் வருமென்றும், நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் நமக்கும் ஒற்றுமையிருப்பது சாத்தியம். ஒரு தருணத்தில் ஒரு அமெரிக்கப் பெண்குழந்தையைச் சுற்றியிருந்தவர், "உன்னை யார் சிருஷ்டித்தார்?" என்று கேட்க, அதற்கு அவள், "கடவுள் என்னை ஒரு சாண் குழந்தையாகச் சிருஷ்டித்தார். பிறகு நானே வளர்ந்து வருகிறேன்," என்று சொன்னதாக நாம் படித்திருக்கிறோம். இக்குழந்தைக்கும் விவேகிகளென்று சொல்லிக்கொள்ளும் சிலருக்கும் ஏதாகிலும் தாரதம்மிய மிருக்கவேண்டுமென்று தான் நாம் நினைக்கிறோம். நிற்க.

ஆதலால் பாஷைகள் ஆரம்பமாகி வளர்ந்து வரும் விஷயத்தில் சுவாமிகள் சொல்லுவதை நாம் தாராளமாய் ஒப்புக்கொள்ளுகிறோம். பிராகிருத நடையிலிருந்து பண்டித நடையுண்டாயிற்றா? அல்லது இதற்கு எதிர்மாறாகப் பாஷைகள் செழித்து வருகின்றனவா? என்னும் வியவஹாரத்திலும் நாம் சுவாமிகள் சொல்லுவதை ஆக்ஷேபிக்கவில்லை. சம்ஸ்கிருதத்தையும், காவியத்தமிழையும்பற்றி அவர் எழுதியிருப்பது மொத்தத்தில் சரியென்றே நமக்குங் காணுகிறது. அதாவது மேற் சொல்லிய நியாயத்தை யனுசரித்துச் சாமான்னியர் பேசும் பாஷையைப் புத்திமான்கள் சிறிது சிறிதாகத் திருத்திக் காவியாதிகளுக் குதவுமாறு அமைத்துக்கொண்டார்களென்பது, யுக்தி அனுபவம் இரண்டிற்குஞ் சரியெனத்தோன்றும். ஆனால், காலக்கிரமத்தில் சம்ஸ்கிருதமும், காவியத்தமிழும் சாமான்னியர்களுக்குக் கட்டோடு உதவாமற்போனது வாஸ்தவமே. இதில் சம்ஸ்கிருதம் இப்படியானதற்குச் சுமாராக நமக்குக்காரணம் விளங்கும். தமிழுக்குமட்டும் இந்தக் கதி என் வந்ததென்று அத்தனை சுலபமாய்ச் சொல்லுவதற்காவதில்லை. ஏனெனில், தமிழோ நாளது வரை நடை பெறும் பாஷை. வெகு காலமாக நடைபெற்றும் வந்திருக்கிறது. சாமான்னிய ஜனங்களுக்குள் நடை பெறும் பாடல்களும், வேண்டுமளவிற்கிருக்கின்றன. சித்தர் பாடல், அல்லியரசாணி முதலிய மாலைகள், தேசிங்குராஜன் கதைபோன்ற வீரர்கதைகள், முதலியவை யெல்லாம் சாமான்னியர்களுடைமையேயன்றிப் பண்டிதர்களுடையதல்ல. பண்டிதர்களுச்சி மேற்கொள்வதோ சில அருங்காவியங்களும், இலக்கணங்களுமே. ஆகிலும் இவைகளைச் சுவாமிகள் சொல்லியவாறு கற்றறிமூடர் செய்த காரியமாகவும், கேவலம் குப்பையென்றும் தள்ளிவிடுவது சரியாகக்காணவில்லை, ஏனெனில், சுவாமிகள் வெகுவாய்ச் சிலாகிக்கும் இங்கிலீஷிலும், மில்டன் ஒருவர் இருக்கிறாரல்லவா? ஷெல்லி யொருவர் இருக்கிறாரல்லவா? இவர்களுடைய கிருதிகளைச் சாமான்னியர் படிப்பதற்காகுமா? அக்கவிகளே சாமான்னிய ஜனங்கள் எங்களுடைய கிருதிகளைப் படிக்கவேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆதலால், மகா ஜனங்களைப் பண்டிதர்கள் கை நழுவவிட்டார்களென்னும் ஆக்கிரகத்தினால் கக்ஷிபேச ஆரம்பித்ததில், சுவாமிகள் ஜனங்களுக்குள் விவேக தாரதம்மியத்தையும், அதையனுசரித்துள்ள ருசி தாரதம்மியத்தையும், ருசி பேதத்தையும், கட்



டோடு மறந்துவிட்டாரென்பது நமது கொள்கை. இது பெரிய பிசகு. ஏனெனில், உலகத்தில் எங்குப் பார்த்தபோதிலும், உச்சிமேற்புலவர்கொள்ளும் காவியரத்தினங்கள் விசேஷமாய்ப் பண்டித ஜனங்களுக்குத்தான் உதவி வந்திருக்கின்றன. எருத்தின்முன் தேங்காய் உடைப்பதில் என்ன பிரயோஜனம்?

ஆனால், காவியமென்று நாம் சொல்ல வந்தது உத்தம காவியங்களை மட்டுமேயன்றி, யமக முதலிய கழைக்கூத்துகள் நிறைந்து அருத்தங் குறைந்து, சப்தம் வலுத்துப் பெருகியிருக்கும் மத்தியமக் கவிச்சிங்கங்களுடைய கிருதிகளையல்ல. தமிழில், சிந்தாமணி முதலிய பழங்காவியங்களும், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல் முதலியவற்றையும் யாரும் உத்தமக் கிரந்தங்களாக ஒப்புக்கொள்ளுவார்கள். இவைகளால் சாமான்னிய ஜனங்களுக்கென்ன பிரயோஜனம் என்றால், இனி ஆகவேண்டிய பிரயோஜனம் வெகுவாயுண்டென்றே நாம் சாதிக்கிறோம். ஒவ்வொருவிஷயத்திலும் உத்தாரஞ் செய்வதாக வருபவர்கள் இருக்கிறதென்னவென்று முதலில் அறியவேண்டும். தமிழை யுத்தாரஞ்செய்ய வருபவர்கள் தமிழிலுள்ள சரக்கைக் கணக்கெடுக்க வேண்டும். அவ்வாறெடுப்பதில், சிந்தாமணி முதலிய கிரந்தங்களைப் படிக்கவேண்டியதனாவசியமாகாது. இவற்றைப் படித்துப்பிறகு தற்காலம் வேண்டியவைகளையுங் கவனித்து முன்பின் ஒட்டி வேலைசெய்வதே விவேகிகளுக்கழகாம். இதைச்சுவாமிகளும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒப்புக்கொண்டே தானிருக்கிறார்கள்.

அப்படியானால் இதுவரைப் பண்டிதர்கள் என் பிராகிருத ஜனங்களுக்கு இவ்வாறு உதவவில்லையென்று சுவாமிகள் வெகுகோபங்கொண்டு கேட்கிறார்கள். அதற்கு ஒரே நியாயந்தான் நாம் சொல்லக்கூடும். ஐரோப்பாவில், சாமான்னியருக்குள் வியாபாரமுதலிய லௌகீகப்பிரவிருத்திகள் அதிகமாகி வர, அதனால் அவர்களுக்கு ஜீவகளை விசேஷித்து, அம்மூலமாய் அவர்கள் பேசும் பாஷையும் செழித்து, சாமான்னியக் காவியாதிகளும் மலிந்தன. திராவிட நாட்டிலோ வென்றால், ராஜவம்சங்கள் தழைப்பதும், தாழ்வதும், "குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந் தோரூர் நண்ணுவதும்," "அறத்திடுபிச்சை கூவியிரப்போர், அரசோடிருந்து அரசாளுவதும்," இச்சம்பிரமங்கள் சக்கிரம்போல் மாறிமாறிக் கணக்குக் கடங்காமல் வந்திருக்கின்றனவென்றாலும், சாமான்னியத் திராவிடர்களுக்கு இதனால் ஒரு சலனமும் இருந்திருக்கவில்லை யென்பது இன்றைக்கும் பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடிய விஷயம். வேண்டுவோர் "ராமனாண்டாலென்ன, ராவணனாண்டாலென்ன?" என்பதுபோன்ற பழமொழிகளையும், கிராமங்களில் எத்தனையோ காலமாக நடந்துவரும் பதிவுகளையுங் கவனிக்க வேண்டும். ஆதலால், ஓ, சுவாமிகளே! இம்மாதிரிப் பிரதேசத்திற்கு, ரெயில், ஆகாயக் கப்பல் முதலிய சாதனங்களைத் தருவித்து, ஜனங்களுக்குள் போக்குவரவும், செல்வமும் தழைக்கும்படி செய்துவிடுங்கள். புதுக்கல்வி தானாக உண்டாகிறது. இப்பொழுதும், சிறிது சிறிதாக உண்டாகிக்கொண்டே வருவதால், பண்டிதர்கள்மேல் தாங்கள் கோபஞ் செய்வதைவிட்டு, காலக்கிரமத்தில் நமது மனோரதம் நிறைவேறத்தான் வேண்டுமென்று நம்பி அதற்கேற்றபடி உழைப்போமாக.

ஒரு விஷயத்தில்மட்டும் சுவாமிகள் முன்பின் விரோதமாக எழுதிவிட்டாரென்று நமக்குப்படுகிறது. 'கரியமிலவாயு,' 'நேர்கோணச் சமநேர் கோட்டுருவம்,' முதலிய பதங்களையும், 'பாராமாத்திரி' முதலிய பரிபாஷை விசித்திரங்களையும், 'என்னால் வாழப்படுகிறது,' 'இந்தக்குகையில் நுழைதலைச் செய்தேன்,' முதலிய வாக்கிய விந்தைகளையும், பண்டிதர்கள் என்ன பாடுபட்டும், திராவிட மகாஜனங்களுக்

குள் செல்லாக்க முடியவில்லையென்றும், தங்களுக்கு வேண்டியபடி ஏதோ ஒரு போக்கில், 'துப்பட்டிக்காட்டு மேயில்,' 'கெரகம்,' முதலிய பதங்களையும், வாக்கியங்களையும், மகாஜனங்கள் அமைத்துக் கொள்ளுகிறார்களென்றும், சுவாமிகளுக்கு நன்றாய்த் தெரியுமாதலால், சம்ஸ்கிருத பதங்களைக் கட்டோடுவிட்டு, இங்கிலீஷ் பதங்களை உள்ளபடியே அமைத்துக் கொள்ள வேண்டுமென்று, வெகு சிரமப்பட்டு நியாயங் கூறி வாதிப்பது யுக்திக்குச் சரியென்று நமக்குப் புலப்படவில்லை. ஏனெனில் பாஷா தத்துவத்தை நன்குணர்ந்த பெரியோரொருவர், "மகா ஜனங்களுக்குள் எது வழங்கிவருகிறதோ அதுதான் பாஷைக்குரியவிதி," என்கிறார். ஆகையால், நாம் எவ்வளவு யுக்தியாக இலக்கணங்களை யமைத்து 'எஸ்பிராண்டோ' என்று சமீபத்திலுண்டாயிருக்கும் பாஷையைப்போல் சுலப நடையிலமைத்துக் கொடுத்தாலும், மகா ஜனங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், அதனால் யாருக்கும் ஒரு பலனுமில்லாமற் போகும்.—புத்தியுக்தியில் வல்லவர்களும், சமர்த்தாகப் பேசி யெழுதக்கூடியவர்களும் காலக்கிரமத்தில் அனேகபாஷைப் புதுமைகளை நடைபெறும்படி செய்யலாமென்றாலும், சில விஷயத்தில் ஏக சக்கிராதிபத்தியம் செய்வதற்கு ஒருவருக்கும் இடமில்லை. ஆதலால், வல்லான் வகுத்ததே வாய்க்காலாவதென்று பாஷைவிஷயத்தில் நியாயம் ஏற்படுவது அசாத்தியம்.

அதெப்படியாவ திருக்கட்டும். சுவாமிகள் சம்ஸ்கிருதத்தை யிகழ்ந்து, இங்லீஷைப் பெருமைப்படுத்துவதற்கென்று வக்கீலாகத்தீக்ஷித்துக்கொண்டு, வெகு ஆக்கிரகத்துடன் வாதம்செய்திருப்பதென்றுதான் நமக்கு இன்னும் ரகசியமாகவேயிருக்கிறது. சமஸ்கிருதபதங்கள் திராவிட நாட்டில்வந்திருப்பதுபோலவே இங்கிலீஷும் வரலாம் என்றுமட்டும் சொல்லியிருப்பாராகில் அது சகஜமாகவே காணும், அதைவிட்டு இங்கிலீஷுக்காகக் கக்ஷி பேசியிருப்பதில், அதற்குக்காரணம் சுவாமிகளுடைய மனோ தருமமட்டுமல்லாது, வேறேதாகிலும் ரகசியம் இருக்கலாமோவென்று நாம் சங்கிக்கிறோம். அப்படியிருந்தால் அது சுவாமிகளுடைய படிப்புக்கும் அனுபவத்திற்கும் ஏற்றதல்லவென்று நாம் சொல்லித்தான் தீர வேண்டும்.

இதிலும், பரிபாஷைகள் விஷயமாகமட்டுமே யென்றால், நமக்கு ஆக்ஷேபம் அதிகமில்லை. ஆனால், காவியாதிகளுக்கும் கூசாமல் இங்கிலீஷ்ப் பதங்களை உபயோகிக்கலாமென்பது போதாமல், உபயோகிக்கவே வேண்டுமென்று வற்புறுத்தும்பொழுது, சுவாமிகள் முன் பின் னெட்டிப் பேசுகிறாரா அல்லது உன்மத்தன் போல் தலைவிரிகோலமாகக் கக்ஷி பேசுகிறாரா, என்று நாம் சந்தேகிக்கவேண்டி வருகிறது. இதை நன்றாயோசிக்குங்கால் காவிய மென்பதற்குச் சுவாமிகள் கொண்டிருக்கும் பொருள் வேறு, சாமான்னிய ஜனங்கள் கொள்ளும் பொருள் வேறென்று காணுகிறது. ஆகவே, சுவாமிகள் இஷ்டப்படி தமிழ்நடை பெறுமாகில், இம்மாதிரி சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த பாடல்கள் மகா ஜனங்களுக்குள் காலக்கிரமத்தில் பிரபலத்திற்கு வரலாமென்று தோன்றுகிறது.—

"வொயிட்ஜொக் கெட்டு மாட்டும்
ஒழுங்கரே கேளீ ரெந்தன்
சயிட்டுக்கு லயிட்டு தானுஞ்
சரிப்பட வில்லை யிப்போ
நயிட்டினில் மூனி ருக்க
நாமனை வருமே சேர்ந்து
கொயிட்டாகப் போவோ மாகில்
குட்டாக விருக்கும் பாரீர்."

இம்மாதிரிப் பாடல்களை நமது பாடசாலைகளிலும், கிராமாந்திரங்களிலும், பிள்ளைகள் கற்று வர வேண்டுமென்றும், 'தீவினை மற' 'தந்தைதாய்ப் பேண்,' 'திரைகடலோடியுந் திரவியந்தேடு,' 'மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்க்கூற்றம்,' முதலியவைகளை இனி அகற்ற வேண்டுமென்றும் ஐயங்கார் சுவாமிகள் அபிப்பிராயப் படுவாரென்றால், அவ்வபிப்பிராயம் அவருடையதாகவே மட்டுந்தான் இருக்க வேண்டும். ஆதலால், காவியாதிகளில் பழையதை யொட்டிப் போவதற்கு, வேறு உபாயங்கள் தேடவேண்டுமென்பது நமது அபிப்பிராயம். சாமான்னிய வசன நடை, புதிதாகவரும் தத்துவங்கள், இவைகள் விஷயத்திலோவென்றால், நமக்கும் சுவாமிகளுக்கும் அபிப்பிராய பேதம் விசேஷமாயில்லை. மொத்தத்தில், அவர் சொல்லுவதை நாமும் ஒத்துக்கொள்ளுகிறோம்.

நெடுங்கணக்கு விஷயத்தில்மட்டும் சுவாமிகள் ஒன்றுமே சொல்லாமல் விட்டுவிட்டார். ஆனால் அதை யோசித்திருப்பாராகில், அவருடைய மனோதருமத்தை யனுசரித்துப் பார்க்குமிடத்து, நமது நண்பராகிய நோல்ஸ் பாதிரியர் சொல்லிவருமாறு ரோமன் நெடுங்கணக்கையே திராவிட பாஷை நான்கிற்கும் உபயோகித்து எழுதி வரலாமென்று சுவாமிகள் சாதித்தாலும் சாதிப்பது சாத்தியமென்றே நமக்குக் காணுகிறது. ஆனால், அப்படியோ, அல்லது வேறு விதமாயோ திருத்தங்கள் செய்துவிட்டால், அதைச் சுவாமிகள்போன்ற சில விவேகிகள் மட்டும் தங்களுக்குள் நடைபெறும்படி செய்து கொள்ளுவது வெகு சுலபம். அப்படிச் செய்வதில் ஒரு சில்லரைத் தோஷமட்டுங் காணும்—அதை மகா ஜனங்கள் ஒரு சமயம் ஒப்புக்கொள்ளுவதில்லை யென்று முரட்டுத்தனமாயிருந்து விட்டாலும் விடலாம். ஏனெனில், மகா ஜனங்கள் எப்பொழுதும் முட்டாள்களே. தவிர அவர்களிலாராவது திருப்பி நம்மைக் கேட்பார்கள். நமக்குதவாதபடி நாம் பேசும்பாஷையை யமகமுதலிய கழைக்கூத்துகளால் கெடுத்து விட்டதற்காக, பண்டிதர்களை வயிறு நிறையத்திட்டியநீர், இப்பொழுது நமக்குதவாத எழுத்துக்களை யமைத்துக்கொண்டு விவேகிகளான நீங்கள் நாலைந்து பேர்மட்டும் அதை யுபயோகித்து வருதல் நியாயமா? என்று. இப்படிக் கேட்பவர் முட்டாளாயினும் அதற்குப் பதிலுரைப்பது கடினமென்றே நமக்குக் காணுகிறது. ஐயங்கார் சுவாமிகளுக்கும் அப்படித்தான் காணுமென்று நம்புகிறோம்.





## புஸ்தக விமர்சனம்

ஜீவவர்க்க போதினி.—முதற்பாகம்.—வி. ஆர். துரைசாமி சாஸ்திரியாரவர்கள், எம். ஏ. எல். டி., மதிராசு கணேஷ் கம்பெனி. விலை அணா 10.

சித்திர விளக்கத்துடன் கூடிய இச்சிறு புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய முதலாளிகளுக்கு வந்தனம். எழுதியவர் இவ்விஷயத்தையே எம். ஏ. வரை கற்றும், தற்காலம் அவ்விஷயத்திலேயே உழைத்தும் வருவதால், அவருக்கு நாம் கொடுக்கவேண்டியதாக யோக்கியதைப் பத்திரமொன்றும் காணவில்லை. 'விஹாரிணியில்' பூச்சிப்புலவர் சொல்லிய தோஷத்தைப் பரிகரித்து, நம்மவர்களுக்குச் சுற்றியிருக்கும் பசு, பக்ஷி, மிருகாதிகளைப் புத்திபூர்வமாய்ப் பரீக்ஷித்தறிவதற்கு இது வெகு நல்ல சாதனமென்று நாம் தாராளமாய்ச் சொல்லலாம். ஸ்ரீமான்-ரங்காசாரியார் 'ஔஷதி' வர்க்கத்தைக் குறித்தெழுதிய புஸ்தகத்திற்கு இதையும், இனிவரும் பாகங்களையும் துணையாக்கிக்கொண்டு, எலிமெண்டரி உபாத்திமார்களும், சாமான்னிய ஜனங்களும், முக்கியமாகப் பெண்களும், இவற்றையும், இவை போல் இனித் தக்க வித்துவான்களால் எழுதப் பெற்றுவரும் மற்ற புஸ்தகங்களையும் வாசித்து நற்பயனடைவாராக. இக்காலத்தில் அனேகம் சரக்குகள் செட்டிமுடக்கினுல் விலையாக வேண்டியவை. ஆனால் இம்மாதிரி சில அபூர்வவஸ்துக்களோ, சரக்கு முடக்கினலேயே முன்னுக்கு வர வேண்டியவையென்று நாம் தடையில்லாமல் சொல்லலாம்.

போய்யா மொழிப்புலவர் சரித்திரம்—தீஞ்சுவைப் பொக்கிஷம், இலக்கம் 1. கோவை, சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள். விலை அணா. 2.

ஸ்ரீமான் முதலியாரவர்கள் சிறிது காலமாகச் செய்துவரும் வேலையை நாம் கவனித்ததில், அவருக்குச் சாரித்திர சம்பிரதாயமாய்த் தமிழையும், தமிழாசிரியரையும், பற்றிய வர்த்தமானங்களை ஆராய்ந்து, எல்லோருமறியும் சாமான்னிய நடையில் எழுதவேண்டுமென்கிற ஆக்கிரகம் வலுத்திருப்பதாகக் காணுகிறது. ஆதலால் இப்புஸ்தகத்தையும் இதுபோன்று இனி வெளியாகக்கூடிய வேறு புஸ்தகங்களையும் நாம் விஷயமறிய விரும்புவோருக்கு மனப்பூர்வமாய்ச் சிபார்சு செய்கிறோம். 'வண்டு மலர்சசேக்கை விரும்பும் செழும் பொழில்வாய்,' நெடுநாளாகத் தமிழபிமானிகள் 'வேம்பை' நாடியிருந்ததுகொண்டு, அவர்களுக்கு நல்லறிவும், உய்த்துணர்வும், பெருகுமாறு எடுத்திருக்கும் இக்காரியத்தை ஸ்ரீமான் முதலியாரவர்கள் சிரஞ்சீவியாகவிருந்து, முடிவுபோகச் செய்வாரென்று நம்புகிறோம்,

## சஞ்சிகை வரவு

**வித்தியாபாநு.**—ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை. சௌமிய வருஷம், மார்கழிமீ-விவேகபாநு அச்சுக்கூடம்-மதுரை.

இதைப் பார்வைக்கு அனுப்பிய புரப்ரைட்டரவர்களுக்கு வந்தனம். சாரித்திர சம்பிரதாயமாகக்காணும் விஷயங்களில், 'அக்பரின் காலக்ஷேபம்,' 'திருவேங்கடவாராய்ச்சியின் வேறுபாடு,' இரண்டும் சிறந்து விளங்குகின்றன, 'அபிதான விளக்கம்' என்பது நல்ல யோசனை. அதை விடாமற் செய்து வந்தால், காலக்கிரமத்தில் இங்கிலீஷுக்கு ஃநுவர் உதவுவது போல் உதவும்படி செய்வது சாத்தியம்.

**விவேக போதினி**—தைமீ.—இதில் 'மகர சங்கராந்தி,' 'தமிழ்வசன நூற்சரிதம்,' 'ராமேச சந்திரதத்தர்,' 'இத்தேசத்தின் பாசன முறைகள்,' ஆகிய பெரிய விஷயங்களும், மற்றும் சில்லரை விஷயங்களும், மாமூல் படியுள்ள குறிப்புகளும் காணுகின்றன. படிப்போருக்கு உபயோகம் அதிகரித்தே வருவது யாருங் காணக்கூடியது.

**'பிழைக்கும் வழி'.**—தைமீ-இந்நெம்பரில் 'பத்திராதிபர் குறிப்புகள்' விசேஷமாகக் கவனிக்கத்தக்கவை. தவிர 'பையன்கள் படிப்பு' 'நெல்சாகுபடி,' 'பசுந்தாள் உரம்,' 'கரும்புக்குத் தண்ணீர்,' 'தோல் வியாபாரம்,' ஆகிய விஷயங்கள், அவற்றை யாராய்ந்து தேறியிருப்பவர்கள் எழுதியிருப்பதால், யாவரும் கவனித்துப் படிக்கவேண்டியவை. 'பத்திரிகை ஆராய்ச்சி'யும், 'பகுதிக் குறிப்புகளும்,' வேண்டிய மட்டில் இருக்கின்றன. இத்துடன் புதுவருஷ மாரம்பமாதலால், 'பிழைக்கும் வழி' யினி மேன்மேலும் வளர்ந்து, நடத்துவோர், படிப்போர் இருதிறத்தாருக்கும் சுகத்தை விளைவிக்க வேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

# சமாசாரக் குறிப்புகள்

பொம்பாய் நகரம் ஜன நெருக்கத்தினால் சுகங் கெட்டு வருவது கொண்டு, நெருக்கத்தைக் குறைக்கப் பிரயத்தனம் நடந்து வருகிறது. அதற்காக முனிஸிபாலிட்டியார் தேர்ந்தெடுத்திருக்கும் நிவேசனத்தைப் பூராவாகவோ, ஏகதேசமோ, வாங்கிக் கோ ஆபரேஷன் முறையில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக, கனம் விட்டல்தாஸ் தாமோதர தாகர்ஸி அவர்களும் மற்றைய சிலரும் முயன்று வருவதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். மதிராஸிலும் இப்பிரயத்தனம் இம்முறையில் நடக்கலாமென்றுதான் நமக்கு வெகு நாளைய அபிப்பிராயம்.

***

சென்ற மாதத்தில் ஸேன் நதிபிரவகித்து அதனால் பாரிஸ் நகரமும், வேறு அனேக இடங்களும் பலத்த நஷ்டமடைந்து போயினவென்று கேட்டு விசனிக்கிறோம். அதனால் அந்நகர ஏழைகளுக்கு நேரிட்ட கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக எங்கும் பிரயத்தனம் நடந்து வருகின்றது. நமது சக்கரவர்த்தியவர்களும் பணம் உபயம் செய்திருக்கிறார்கள்.

***

சமீபத்தில் 'பாரஸ்டு' விஷயமாய் இங்கிலாந்தில் நமது கவர்ன்மெண்டில் பாரஸ்டு இலாகாவில் உத்தியோகமாயிருந்த ஒருவர் பிரசங்கம் செய்தார். அதில் முக்கிய அம்சங்கள், ஒரே ஜாதிமரம் எந்த இடத்திலும் வளராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இலை வகைரா உதிர, உதிர, அவற்றைக் கூட்டியெடுத்துப்போவது கூடாதென்றும், மரங்கள் நன்றாய்ப் பக்குவமாகுமுன் அவற்றை வெட்டுவது பிசகென்றும், மற்ற விஷயங்களிலெப்படியோ அப்படிப் பாரஸ்டு விஷயத்திலும் வரவுக்குமேல் செலவாகக் கூடாதென்றும் சொல்லியவையாம். தேக்கு, சந்தனம் முதலிய முதல்தர மரங்கள் விஷயத்தில் தான் இதை நன்றாகக் கவனிக்கவேண்டுமென்று காணுகிறது.



'பிரமசாரிய உத்தாரணீ' யென்று ஒரு சபை ஸ்ரீ காசியில் ஆகியிருப்பதாகவும், அதற்குப் பிரசாரண கருவியாக 'பிரமசாரி' யென்றொரு பத்திரிகை வெளிவருவதாகவும் வதந்தி. இந்தச் சபையின் நோக்கம் வெகு சிறுவயதிலாகும் பதுமைக் கலியாணத்தை நிறுத்துவதாம். இதில் ஒருவர்தான் ஐந்து வருஷமுள்ள ஒரு மணமகனை, நீயேன் இத்தனை சீக்கிரம் கலியாணஞ் செய்துகொள்ளுகிறாய், என்று கேட்க, அவன், "என்ன முட்டாள்தனம்? எனக்குக் கலியாணம் தேவை. என் தகப்பனுக்குப் பெண்சாதி யிருக்கிறாள் அல்லவா? எனக்கு மட்டும் ஏன் வேண்டாம்? என் பெண்சாதிக்கு வயது மூன்று. பார்க்க வெகு லக்ஷணம். ஆதலால் நாங்களிருவரும் கூடிச் சுகமாக விளையாடப் போகிறோம்," என்று பதிலுரைத்ததாக எழுதுகிறார்.

***

மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் சில வருஷங்களாக 'வெட்டுண்டு' போகிறவர்கள் பெரும்பாலாராவது கொண்டு, அதன் உண்மையறியவேண்டுமென்று சென்றவருஷம் ஒருகமிஷன் ஏற்பட்டது. இந்தக் கமிஷன் ரிபோர்ட்டு என்ன வாயிற்றோ தெரியாது. அதற்குள் நாளது வருஷத்திய 'ஜமாபந்தி' வந்து 'பைசலும்' ஆகிவிட்டது. ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாளாக முடிந்திருக்கிறது. பரீக்ஷைக்குப்போன பிள்ளைகளும், அவர்களைப் பெற்றோரும், அவர்களுக்குக் கல்விபயிற்றிய உபாத்தியாயர்களும், இன்னது செய்வதென்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் இந்த முறை நடந்த பரீக்ஷையில் ஏதோ கிருத்திருமமிருக்கவேண்டுமென்றும், 'வெட்டுண்டவர்களுக்கு' மறுபடி பரீக்ஷையாக வேண்டுமென்றும் மனு செய்யவேண்டுமென்று கூவிவந்ததில் மறுபடி சிலருக்கு அரையோக்கியதை கிடைத்திருக்கிறது.

***

இரண்டு மாசத்திற்கு முன் 'விஹாரிணி'யில் காகிதம் இந்தியாவிலேயே ஆகவேண்டிய அவசரமிருப்பதைக் குறித்துப் பேசினோம். இப்பவும் 'லக்ஷ்மீ' பேப்பர்மில், என்று திருவாங்கூரிலேற்பட்டிருக்கும் கம்பெனியாருடைய கடிதவகைகள் விற்பனைக்கு வந்திருப்பதாகவும்; யோக்கியதை விஷயத்தில் இக்கடிதங்கள் மேனாட்டுக்கடிதவகைகளுக்கு ஒரு விதத்திலும் குறைந்து போகவில்லையென்றும் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

'மன்னார் குடியில்' நடந்த கலகத்தை யொட்டி ஸ்ரீமான் கே. பி. ராமநாத அய்யரவர்கள் ஒரு பிரசங்கம் செய்தார்கள். அவர்களுடைய நோக்கம் தெரியாமல் அப்பிரசங்கத்தில் இரண்டோர் அம்சத்தை ஆக்ஷேபித்துச் சிலர் எழுதிய கடிதத்தைப் படித்து விசாரப்படுகிறோம். முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று. அதைச் சென்ற மீ நாம் சொல்லி யிருக்கிறோம். மிஷனரிப் பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை யனுப்பிவரும் இந்துக்களுக்குத் தங்கள் மக்கள் கிறிஸ்தவராகிவிட்டதற்காக விசாரமிருக்கக்கூடாது. அப்படியாக வேண்டாமென்றாலும், தங்கள் மதம், ஆசாரம், இவைகளில் பற்றிருப்பது வாஸ்தவமானாலும், நம்மவர்கள் செய்யவேண்டிய காரியம் ஒன்றேதான். பணத்தைப்போட்டுப் பாடசாலைகளை நிர்மாணித்துக்கொண்டு, பிள்ளைகளுக்குத் தங்கள் மனம்போலக் கல்வி புகட்டப் பிரயத்தனப்படவேண்டும். விருதாவில் கூச்சல் போட்டாவது ஒன்றுமில்லை. இதைத்தான் ஐயரவர்களும் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

***

பாம்பு, தேள் முதலிய விஷக்கடிக்குப் பரிகாரமாக ஒருவிதக்கல் இருப்பதாக நமக்குள் அனேகருக்கு நம்பிக்கையுண்டு. இங்கிலீஷ்காரர் இதை நம்புவதில்லை. ஆனால் தேள்கடி விஷயத்தில் தானும் அனுபவப்பட்டு வேறு அனேகருக்கும் நன்மைசெய்திருப்பதாகவும், அது ஒரு விதக்கல் தானென்றும், கடிவாயில் அதை வைத்தால் அது விஷம் முற்றிலும் உறிஞ்சி விடுவதாகவும், அப்படி விஷம் முற்றிலும் வெளிவருமளவும் கல் அதைவிட்டு வருவதில்லையென்றும், பாம்பு விஷயத்தில்தான் அதைப் பரீக்ஷிக்கவில்லையென்றும், 'ஹிந்து'வுக்கு ஒருவர் எழுதுகிறார்.

***

மகாராஜா கிருஷ்ணப்பிரசாத் பஹதூர், என்னும் ஐதராபாத்து ஹிந்து திவான், 'மகாராஜா தோடர்மால்' என்னும் (ஆக்பர் சக்கரவர்த்தியவர்களுடைய சமஸ்தானத்து) சர்வே செட்டில்மெண்டு மந்திரி வமிசத்தவரென்று கேட்டிருக்கிறோம். ஆகவே அவர் தமது குடும்ப வழக்கப்படி ஹிந்து பாரியை யொருவளையும், மகம்மதிய பாரியை யொருவளையும் விவாகஞ் செய்துகொண்டதுமன்றியில், மகம்மதிய பாரியைக்குப் பிறந்த பெண்ணை மகம்மதிய மணமகனொருவனுக்குச் சமீப காலத்தில் விவாகஞ் செய்வித்ததாகவுங் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். ஹிந்து மகம்மதியருடைய க்ஷேமத்தைக் கோரியிருப்பவர்களெரும் இதைக் கவனிப்பாராக.

## கல்விமான்களால் யெழுதப்பட்ட அரிய தமிழ் புத்தகங்கள்

# வித்யா விஹாரிணி

### சந்தாதாரர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்

வித்யா விஹாரிணி சந்தாதாரர்களுக்கு அடியிற் கண்ட புத்தகங்கள் ரூபாய்க்கு இரண்டு அணா குறைத்து கொடுக்கப்படும். சந்தாதாரராக ஆகாதவர்கள் வருஷ சந்தா தொகை ரூ. 5 அனுப்பி, வேண்டிய புஸ்தகங்களுக்கு ஆர்டர் செய்யவும்.

### தேசாபிமானிகள் சரித்திரம்

இந்திய தேசத்திற்காக சுயநலத்தை நாடாது தொண்டு புரியும் பக்த சிகாமணிகளில், பன்னிரு மகான்களின் ஜீவிய சரிதையை, இனிய செந்தமிழில் வரைந்து நல்ல கடிதத்தில் சிறந்த எழுத்தில் பதிப்பித்து, அவர்களின் உருவப்படத்துடன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விலை, அணா 12.

### காமாக்ஷி

பால்ய விவாகத்தால் உண்டாகும் அசௌகரியத்தையும் விதவா விவாகத்தைச் செய்யலாமென்று சாஸ்திர ரீதியாயுள்ள அத்தாக்ஷிகளை விளக்கியும், சிறவர் சிறுமியருக்கு தமது விவாகத்தில் வரனைத் தாங்களே தெரிந்தெடுக்கவேண்டியது அவசியமென்பதையும் விளக்கிக்காட்டும் ஓர் கைம்பெண்ணின் கதியைக் கதாரூபமாக ஸ்ரீமான் பிரணதார்த்திஹரசிவா அவர்களால் எளிய நடையில் வரைந்துளது.

விலை அணா 8.

### ஆநந்தமடம்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| தேசபக்தி புகட்டும் கதை ... ... | 0 | 8 | 0 |

### சந்திரசேகரன்

| | | | |
|---|---|---|---|
| இந்துமாதுகளின் நல்லொழுக்கங்களை விளக்கிக் காட்டும் கதை ... ... ... | 0 | 8 | 0 |

### தமயந்தி

| | | | |
|---|---|---|---|
| ஓர் நவீன நாடகம் ... ... ... | 0 | 9 | 0 |
| பங்கஜாக்ஷி ... ... ... | 0 | 8 | 0 |
| ராஜாம்பாள் ... ... ... | 0 | 12 | 0 |

### ம-ா-ா-ஸ்ரீ பண்டித நடேசசாஸ்திரியாரால் எழுதப்பட்ட அரிய தமிழ் புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| தீனதயாளு (Third Edition) ... | 0 | 8 | 0 |
| மதிகெட்ட மனைவி ... ... ... | 1 | 0 | 0 |
| ஸ்ரீமாமி கொலுவிருக்கை ... ... | 0 | 8 | 0 |
| தலையணை மந்திரோபதேசம் ... ... | 0 | 8 | 0 |
| முத்திரா ராக்ஷஸம் ... ... ... | 0 | 4 | 0 |
| மிருச்சகடி ... ... ... ... | 0 | 4 | 0 |
| வேணி சம்ஹாரம் ... ... ... | 0 | 3 | 0 |
| ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் ... | 0 | 6 | 0 |

### ப. சம்பந்தமுதலியார் இயற்றியநவீனநாடகங்கள்

| | | | |
|---|---|---|---|
| அமலாதித்யன் ... ... ... | 1 | 0 | 0 |
| காதலர்கண்கள் ... ... ... | 0 | 12 | 0 |
| வேதாளவுலகம் ... ... ... | 0 | 8 | 0 |
| சத்ருஜித் ... ... ... | 0 | 12 | 0 |
| யயாதி ... ... ... | 0 | 8 | 0 |
| மனோகரன் ... ... ... | 0 | 12 | 0 |
| சாரங்கதரன் ... ... ... | 0 | 8 | 0 |
| இரண்டுநண்பர்கள் ... ... ... | 0 | 12 | 0 |
| காலவரிஷி ... ... ... | 0 | 8 | 0 |
| லீலாவதிசுலோசனா ... ... ... | 0 | 12 | 0 |
| பேயல்ல பெண்மணியே ... ... | 0 | 8 | 0 |

### அருமையான தமிழ்ப் புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் (16 பக்கங்களுடையது) | 1 | 8 | 0 |
| குணசீலன் ... ... ... ... | 0 | 10 | 0 |
| பரிமளா ... ... ... ... | 0 | 10 | 0 |
| சுகுணசுந்தன் ... ... ... | 0 | 12 | 0 |
| வாஸந்திகா ... ... ... | 0 | 8 | 0 |
| மகாமகம் அதின் மகிமை ... ... | 0 | 4 | 0 |
| ஸுஜாதா ... ... ... ... | 0 | 8 | 0 |
| லலிதாங்கி ... ... ... ... | 0 | 8 | 0 |
| மானிட மர்மசாஸ்திரம் ... ... | 5 | 0 | 0 |

---

**கணேஷ் கம்பெனி, தம்புசெட்டி தெரு, சென்னை.**



ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஜேபம் செய்தல்

REGISTRAR OF BOOKS
16 MAY 1910

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள், முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| புஸ்தகம் I. Vol I. | சௌம்யஸூ பங்குனிமாதம் March 1910 | சஞ்சிகை 7 No. 7 |
|---|---|---|

## பிரபஞ்சவர்த்தமானம்

" பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே."

*புதுச்சட்ட நிரூபணச் சபைப் புகழ்ச்சி.*

சென்றமீ புதுச்சட்ட நிரூபணச்சபை முதன்முதற் கூடி, 'பத்திரிகைகள்' விஷயமாய்ச் சட்டம் ஒன்று பிறப்பித்ததில், அதையொட்டி ராஜப்பிரதிநிதியவர்கள் அச்சபையின் யோக்கியதையை இவ்வாறு வருணித்தார் :—" இந்தச்சட்டம் பிறந்ததற்குக் காரணங்களை முந்தியே மெம்பர்கள் கேட்டிருப்பதால், மறுபடி அவைகளைக்குறித்து நானொன்றும் பேசவரவில்லை. ஆனால் இன்றையதினம் இவ்வளவு சீராக நடந்த நடவடிக்கை எதைக்குறிப்பிடுகிறதென்றுமட்டும் நான் சொல்லவேண்டும். இந்தியாவிலுள்ள மகா ஜனங்களில் எல்லாவருக்கத்தவரையும் பிரதிநிதிகள் மூலமாய் இப்பெருஞ்சபையில் நாம் இம்மாதிரிச்சட்டம் வேண்டுமாவென்று கேட்டதில், அவர்களனைவரும் ஏகோபித்து இந்தச்சட்டம் அவசியமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதனால் பத்திரிகைகளுக்கு நிர்ப்பந்தம் அதிகப்படுகிறதென்று அவர்களுக்குத் தெரியும். என்றாலும் தேசக்ஷேமத்தை யபேக்ஷித்து இம்மாதிரி யொருசட்டமிருக்கத்தான் வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாருக்குக் கண்டதில், இவ்விஷயத்தில் கனம் மெம்பர்களுக்கும் அம்மாதிரியே அபிப்பிராயமிருப்பது மெச்சத்தக்கதே. இதில் ஒற்றுமையிருப்பதனால் இச்சபை விஷயத்தில் நான் மனதிலெண்ணியிருந்தது நிறைவேறிற்று. அதாவது, இந்திய மகா ஜனங்களை இதுவரையிருந்ததைவிட அதிகமாய்ச் சேர்த்து மந்திராலோசனை செய்வதினால், ராஜாங்கத்திற்கு வலுமையதிகமாகுமே தவிரக் குறையாதென்று நான் நினைத்ததாம். ஆதலாலினிமேலும் நடக்கும் காரியங்களில்,தேசத்தில் ஆங்காங்கு ஆகவேண்டியவைகளைக் கிரமமாகக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துத் துரைத்தனம் ஆற்றொழுக்காக நடக்கும்படிப் பிரதிநிதிகள் செய்வார்களென்று நம்புகிறேன். இதுதான் இதுவரை

கவர்ன்மெண்டாருக்கு இல்லாமலிருந்தது. இக்குறைவுக்கு இனியிடமிராதென்று நம்புகிறேன்," என்றார்கள்.

**பார்லிமெண்டு கூடுதல்.**

சென்ற மாசம் 21-தேதி புதுப்பார்லிமெண்டு கூடிற்று. முதன் மந்திரியாகிய கனம் ஆஸ்கித்துரையவர்களுடைய கோட்பாடுகளை விளக்கும் 'ஸ்ரீ முகம்' வழக்கப்படி வாசிக்கப்பட்டது. இந்தியா கவர்ன்மெண்டைப் பொறுத்தமட்டில், சட்டநிரூபணச்சபை கூடியதையும், அதனால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குக் கிடைத்த பலத்தையும், பெருமையையும் அதில் விளக்கியிருந்தது. எதிர்க்கக்ஷியாரில், நமக்கு முன்னொருகாலத்தில் ராஜப்பிரதிநிதியாயிருந்த லான்ஸ்டௌன் பிரபுவும் இவ்விஷயமாய்ப் பேசினார். சட்ட நிரூபணச்சபையைப்பற்றி முதன் மந்திரியவர்கள் சொன்னது தனக்குச் சந்தோஷகரமேயென்றாலும், இந்தியாவில் சமீபகாலத்தில் நடந்துவந்து கொண்டிருக்கும் கொலைகள், ராஜத்துரோகம், கலகங்கள் இவை முற்றும் அடங்கிற்றென்பதைப் பற்றி யொன்றும் சொல்லவில்லை யென்றும், கலகத்தை யடக்கப் பிறந்த சட்டங்கள் சரியான முகூர்த்தத்தில் பிறந்தனவென்றும், ஆனால் அப்படிச் சட்டம் பிறந்த காலத்திலேயே, இதுவரை கோட்டத்திற் கிடத்தியிருந்த சிலரை விடுதலை செய்ததைப் பற்றி இங்கிலாந்தில் அபிப்பிராயபேதம் வலுத்திருக்கிறதென்றும் அவர் சொன்னார். ஆனால் இந்தியா கவர்ன்மெண்டாருக்குச் சகலமும் தெரியுமாதலால், அவ்விஷயத்தில் அவர்கள் செய்ததற்குத் தாம் ஆக்ஷேபமொன்றும் சொல்லுவதில்லை யென்றும் அவர் கூறினார். சர்க்கார் பக்ஷமாக க்ரூ பிரபு இதற்குச் சமாதானம் சொல்லி, இந்தியா கவர்ன்மெண்டார் செய்தது மெத்தவும் சரியென்றும், இவர்களைக் கிடங்கிலடைத்ததற்கும், தற்காலம் மீட்டதற்கும் தக்க காரணங்கள் உண்டென்றும், அவையெல்லாம் இந்தியா கவரன்மெண்டார் தீர்க்கமாக ஆலோசித்துத்தான் செய்ததாகவும் சொன்னார்.

லிபரல் கக்ஷி மறுபடி உத்தியோகம் வகித்ததென்றாலும், பட்ஜெட் விஷயமாகவும், பட்டவர்த்தனர் சபை விமர்சன விஷயமாகவும் தகரார் சுளுவில் தீர்ந்தபாடில்லை. இனியிரண்டு மாதங்களாவதற்குமுன், இந்த ரகசியம் வெளியாகிவிடும்.

**இந்திய மகம்மதீயரைக்குறித்து டைம்ஸ் பத்திரிகை.**

சமீபத்தில் டில்லியில் இந்தியா வெங்குமுள்ள மகம்மதீயருடைய பிரதிநிதிகள் கூடிப் பேசிய வைபவத்தைப்பற்றி இங்கிலாந்தில் டைம்ஸ் பத்திரிகை இவ்வாறு கூறுகிறது. "இந்தியாவில் ஒற்றுமைவேண்டிக் காரியம் முதன் முதல் ஆரம்பித்தவர் ஹிந்துக்களே. வெகு நாள்வரை அதற்கு அவர்கள்மட்டுமே யுழைத்துவந்தார்கள். ஆனால் அது அவர்களுடன் நிற்கவில்லை. இப்பொழுது கொஞ்சகாலமாக மகம்மதீயரும் தங்களுக்குள் ஒற்றுமைவேண்டிப் பாடுபடுகிறார்கள். ஏனெனில் ஹிந்துக்களுக்குள்மட்டும் ஒற்றுமை பலத்துவந்து, தாங்கள் சிதறுண்டுகிடப்பதில், தங்களுக்கு உண்டாகக்கூடிய பலக்குறைவும் க்ஷீணமும் அவர்களுக்கு நன்றாக மனதிற் பதிந்துவிட்டது. ஆகவே டில்லியில் கூடிய மகாநாடு இதற்கு நல்ல சாக்ஷி. இதுவரை இந்திய மகம்மதீயருக்குள் இவ்வளவு ஒற்றுமை யிருந்ததேயில்லை. ஹிந்துக்களும், மகம்மதீயரும், தனித்தனியாகக் கக்ஷிகட்டி யெதிர்த்துவருவது அவர்களுக்கும் க்ஷேமகரமல்ல, இந்தியாவுக்கும் க்ஷேமகரமல்லவென்பது மெய்யே என்றாலும், மகம்மதீயரை எப்படியோ போகட்டுமென்று விட்டு ஒருகக்ஷியார்மட்டும் வலுத்துவருவதென்றால், அதுவும் இந்தியாவுக்கு க்ஷேமகரமல்லவென்பது நிச்சயம். ஆகலால் மகம்மதீயருக்குள் இன்னும் பெருங் குணங்கள் இருப்பதால்,



அவர்களுடைய மதம், ஆசாரம் முதலியன காலத்திற்கேற்க மாறவேண்டுமென்பதும், அதற்காக அவர்கள் ஒன்று சேரவேண்டுமென்பதும் எல்லோரும் ஒப்பக்கூடிய விஷயமாம்.

இச்சபையில் சத்திரபதி ஆகாகான் பஹதூர் அவர்களும், பிரிவீகவுன்சில் ஜட்ஜி மகாகனம் அமீர் அலி பஹதூர் அவர்களும், இவ்விஷயமாய் வெகு அழகாகப் பேசினார்கள். மகம்மதீயமதத்திலும், சதாசாரத்திலும் அவர்களிருவருக்கும் பக்தி வெகு அதிகம். என்றாலும் காலத்தை யனுசரித்து ஆகவேண்டிய காரியங்களை அவர்கள் மறந்தவர்களல்லர். இந்தியா கவர்ன்மெண்டு விமர்சனம் இத்தேசத்திற்கு வெகு க்ஷேமகரமென்றும், அவ்விஷயத்தில் ஹிந்துக்கள் முதலிய இதர இந்தியர்களுடன் மகம்மதீயரும் ஒன்று சேர்ந்து ஒரு முகமாய் உழைப்பது முதற்கடமையென்றும் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் துரைத்தனம் தொடங்கியது முதல் நாளதுவரை நடந்து வந்திருக்கும் நற்காரியங்களெல்லாம் அந்த ராஜாங்கம் க்ஷேமமாயிருந்தால் மட்டுமே இன்னும் தழைத்தோங்கிப் பலப்படுமாதலாலும், அவ்வாறு பலப்பட்டாலொழிய, இந்து மகம்மதீயரிருவருக்கும் க்ஷேமம் குறையுமாதலாலும், இருகக்ஷியவரும் அவ்விஷயத்தில் நன்றி, விசுவாசம்வைத்து நடந்து வரவேண்டுமென்பது இருவருடையவும் கோட்பாடு.

இதை யொழித்து வேறு விஷயங்களைப் பேசியதில், மகம்மதீயருக்குள் தனவான்களும், பிராசுதாரர்களும், வியாச்சியம், வியவகாரம் முதலிய வெறுங்காரியங்களிற் காலத்தையும் திரவியத்தையும் செலவழித்துப் பாபராகி வருவதையும், மகம்மதீயர் முன்னாட்களில், வியாபாரம், கைத்தொழில், முதலியவற்றில் தேறியிருந்தமாதிரி இப்போதில்லாமல், வர வர க்ஷீணித்து வருவதையும், வித்தை யென்பது மகம்மதீயருக்குள் பலக்காமலிருப்பதையும், சீக்கிரம் பரிகரிக்க வேண்டுமென்று, இவர்களிருவரும் வற்புறுத்தினார்கள். ஆகவே மகம்மதீயத் தனவான்களும், விவேகிகளும் இந்த லக்ஷியங்களை முன்னிட்டு உழைக்கவேண்டுமென்றும் இவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நாமும் அதை மனப்பூர்வமாய் ஆமோதிக்கிறோம்."

**இருபதாம் நூற்றாண்டு தமிழகராதி.**

பிரபலத் தமிழ்வித்துவானாகிய பி. ராமநாதன் அவர்களால் இயற்றப்பட்ட இவ்வகராதியைப் பார்த்தவர்கள் மெச்சக்கேட்டுச் சந்தோஷிக்கிறோம். சென்றமீ மகாபாரதத்தைக் குறித்துப் பேசுகையில், "தமிழிலாவது, சம்ஸ்கிருதத்திலாவது இனியாகவேண்டிய பெருங்காரியங்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமே ஆகவேண்டி வந்துவிட்டன," வென்று நாம் எழுதினோமல்லவா? அதற்கு அத்தாக்ஷியாகக் காலஞ்சென்ற டாக்டர்போப் 'ஐயரவர்கள்,' இரண்டுவருஷத்திற்கு முன் பெரிய தமிழகராதி யொன்று ஆகவேண்டுமென்று ஆலோசித்ததில், அது இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் தான் நடக்கக் கூடுமென்றும், அதற்காகத்தான் பாடுபட்டுச் சேகரித்த சரக்கெல்லாம் அவ்விடத்தில் தானிருப்பதாகவும், சொல்லி மதிராசு கவரன்மெண்டைத் திரவியசகாயம் வேண்டினார். அப்படியே சகாயமும் கிடைத்தது. ஆதலால் அது விஷயமாய்ப் பிரயத்தனம் நடந்து கொண்டுதானிருப்பதாக நமக்கு ஞாபகம்.

சங்கதி இப்படியிருப்பதில், இத்தருணத்தில் தமிழர் ஒருவர் இப்பெரியகாரியத்தை யெடுத்து முடித்து விட்டாரென்று கேட்டு நமக்கு மெத்தவும் சந்தோஷம். எல்லா விஷயங்களும் இதிலடங்கி யிருக்கின்றன. எல்லாப் பதங்களுக்கும் பொருள் தக்க சாக்ஷியத்துடன் விளக்கியிருக்கிறது. இதுவரை அகராதி,

திகண்டு இவைகளிற்கண்ட விஷயங்களல்லாமல் நூதனமாக 10,000 பதங்கள் சேர்ந்திருக்கின்றனவாம். இங்கிலீஷில், ‘வெப்ஸ்டர்’ எப்படியோ, சம்ஸ்கிருதத்தில், ‘வாசஸ்பத்தியம்’ எப்படியோ, அதுபோலவே இப்பேரகராதி தமிழுக்குமெனக் கேள்விப்படுகிறோம். முகவுரையில் மதிராசு கவர்ன்மெண்டு பாதிரியார் எழுதுகிறார், “இந்தியர்கள் மேனாட்டுக் கல்விகற்றுத் தேறியதுமட்டும் போதாது. கற்றதைத் தத்தம் தேசபாஷைகளில் தெளிவுறப்பேசவும், எழுதவும் தெரிந்துகொண்டால், அப்போதுதான் அக்கல்வியினால் அவர்களுக்கு நற்பயனுண்டானதாகச் சொல்லவேண்டும்,” என்று. இதற்கு இவ்வகராதிபோன்ற ‘இலக்கணக்கிரந்தங்கள்’ முக்கிய சாதனமாதலால், இதையொட்டி ‘அபிதான விளக்கங்களும்,’ மற்றும் வேண்டிய சாதனங்களும் சீக்கிரம் கிட்டுமென்று நாம் நம்புகிறோம்.

கிராமக்கோர்ட்டுகள்.

மதுரை ஜில்லாவில் தற்காலம் கலெக்டராக இருக்கும் ஸ்ரீமான்-பட்டர்வொர்த்து துரையவர்கள், அவ்விடத்திலுள்ள சில கிராமங்களை ஒரு வட்டமாக்கி, அதற்கு ஒரு கிராமக்கோர்ட்டு ஏற்பாடு செய்திருப்பதாகவும் அது ஜனங்களுக்குத் திருப்திகரமாயிருப்பதாகவும், மற்ற ஜில்லாக்களிலும் கலெக்டர்கள் அம்மாதிரி செய்தால் நலமென்றும் நமது விருத்ததிவான் பஹதூர் அவர்கள் எழுதுகிறார்கள். முந்தியொருமுறை இதைக் குறித்து நாமெழுதியதில், இக்கோர்ட்டுகள் விமரிசையாய் நடப்பதில்லையென்று கலெக்டர்கள் ரிபோர்ட்டு செய்வதாகச் சொன்னோம். அதைத் தீரவிசாரித்ததில், இக்கோர்ட்டு நடத்தும் கிராம முன்சீபுகளை ‘வில்லைபோட்டவன்’ எவனும் அதிகாரம் செய்யும்படியிருக்கும்வரை கோர்ட்டுகள் சீராக நடப்பது கிரமமென்று கண்டோம்.

ஆதலால் இக்கோர்ட்டுகள் கிரமமாக நடந்து ஜனங்களுக்குச் சுகமுண்டாக்கவேண்டுமானால், முதலாவது ‘வி. மேக்கள்’ சுதாவில் யோக்கியதையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அதாவது அவர்களுக்கு ஏதோ மரியாதையாய் ஜீவிக்கவேண்டிய வளவிற்குப் பூமி காணியோ, வேறு மூலியமோ இருக்கவேண்டும். சட்டம், உலக நடவடிக்கை, இவ்விஷயங்களில் வேண்டிய ஞானமிருக்கவேண்டும். அவர்களைச் சர்கியூட் செய்யும் ரிவினியூ முதலிய டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர் மரியாதையுடன் நடத்தவேண்டும்.

இப்படியெல்லாம் இன்ன இடத்தில் நடக்குமென்று கலெக்டர்கள் எப்படியறிவது? ஜோசியம் கேட்பதா வென்று கேட்கலாம். ஒரு சில்லரைவிஷயம் ஞாசனைகாட்டுமென்று நமதபிப்பிராயம். ‘கோஆப்பரேஷன்’ முறையில் பாங்குகள் எங்கெந்த வட்டத்தில் வேரூன்றிச் செழிக்கின்றனவோ, அவைகளிலெல்லாம், கிராமக்கோர்ட்டுகள், கிராமப்போலீஸ், கிராமச் சுகசாதனங்கள், கிராமப் பள்ளிக்கூடங்கள், ஆகிய இவையனைத்தும் செழிக்குமென்பது நமக்கு நிச்சயம். ஆதலால் கோஆபரேடிவ் ரிஜிஸ்திரார் அவர்களைக்கேட்டுக் கலெக்டர்கள் பரீக்ஷைக்கோர்ட்டுகள் வைத்துப் பார்க்கவேண்டும். கலெக்டர்களுக்கும், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட ரிவினியூ உத்தியோகஸ்தருக்கும் தெரியாத அனேக கிராமரகசியங்கள் ஷையாருக்குத் தெரியுமென்பது நமக்கு நம்பிக்கை. காரணம் பிரசித்தம்.

சூரியகிரணத்தை மடக்குதல்.

சுமார் 150௵-ங்களுக்குமுன் இங்கிலாந்தில் இருந்த கிரந்த கர்த்தா ஒருவர் தமாஷுக்காக ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில் ஏதோ ஓரிடத்திலுள்ள புத்திமான்கள், தங்களுடைய யுக்தி விசேஷத்தினால் உலகத்திற்குப் பலவித நன்மைகளை யுத்தேசித்து ஏதேதோ பரீக்ஷைகள் செய்துவருவதாகச் சொல்லியிருக்கிறார்.



சிலர் மலத்தை மறுபடி உணவாக்கவேண்டி ரசாயன முறைப்படி பரீக்ஷித்து வந்தாராம். சிலர் சூரிய கிரணங்களைப் பிடித்துப் புட்டிகளிலடைத்து உஷ்ணம் போகாமற்படி முத்திரை வைப்பதற்காக முயன்றாராம். இப்படி யடைத்து வைப்பதி லென்னபிரயோஜன மென்றதற்கு அவர், அவைகளைக் குளிர்ப் பிரதேசங்களுக்குக் கொண்டுபோய்த் திறந்துவிட்டு, வெள்ளரி முதலிய உஷ்ணதேசத்துச் சாமான்கள் விளைவிப்பதற்கு, என்றாராம்!

இப்படித் தமாஷ்செய்ததெல்லாம் போய்த் தற்காலம் இந்தியாவில் ஆல்மோராவில் பண்டித ஸ்ரீ கிருஷ்ண ஜோசியவர்கள், ‘பானுதபம்’ என்னும் யந்திரமொன்றை நிருமித்திருக்கிறார்கள். இதில் சில கண்ணாடிகளும், கயிறுகளும் சேர்ந்து, கடிகாரத்தில் காணுவனவாகிய சக்கரங்கள்போன்ற சக்கரங்களால் தாமாகவே சுற்றி எப்பொழுதும் சூரியனுடைய கதியை யனுசரித்து நிற்பதால், சூரிய கிரணங்களின் உஷ்ணமெல்லாம் வேண்டிய இடத்திலொருங்கு சேர்ந்து பெருந்தீயின் பலனைக் கொடுக்கின்றன. இத்தீயைக்கொண்டு சமையல் முதலிய காரியங்கள் மட்டுமேயன்றி, இரும்பு வகையரா லோகங்களையும் உருக்கியோ, நீராவியுண்டாக்கி அதன் மூலமாய் யந்திரங்களை இயக்கியோ, வேலை செய்யலாம். கண்ணாடிகளைப் பெருக்கினால் உஷ்ணமதிகரிக்கும்.

இந்தியாவில் இது வெகு உபகாரமாயிருக்கும் என்பதில் தடையில்லை. விறகு விலையதிகரித்துக்கொண்டே வருகிறது. சூரியனோ அனேகமாய் வருஷத்தில் எக்காலத்திலும் நம்மேல் பூரண திருஷ்டிவைத்தே வருகிறார். விறகுவாங்கிக் காரியம் செய்து வரக்கூடியவர்கள் இனிச் சிறிது சிறிதாகக் குறைந்தே வருவதால், சூரியகிரணத்தை உபயோகித்துச்சமையல் முதலியகாரியங்களை நடத்துவது வெகு நல்லயோசனை. பண்டிதர் தீர்க்காயுசாக விருந்து தாமாரம்பித்த தருமகாரியத்தைப் பக்குவப்படுத்தி உலகத்திற் கெல்லாம் உபகாரியாகப் புகழ்ச்சி யடையவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

ஜால விளக்குகளும் வித்தியாப்பியாசமும்.

சென்ற மாசம் மதுரைவக்கீல் ஸ்ரீமான்-நாரணையரவர்கள் மதிராசில் ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு ஜாலவிளக்கும்படங்களும் வைத்துக் குழந்தைகளுக்கு உபயோகமாகும்படி அனேக விஷயங்களை விளக்கிப் பிரசங்கம் செய்தார். தவிர முடிவில் இம்மாதிரிப் பிரசங்கங்கள் ஆயிரக்கணக்காகவும், எல்லா இடங்களிலும் நடக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினார். இதை நாம் வெகு சந்தோஷத்துடன் ஆமோதிக்கிறோம். கோயம்முத்தூரிலும், வேறு பிரதான பட்டணங்களிலும் நாலு வருஷங்களுக்கு முன் ஜப்பான் தேசத்தையும், ஜப்பானியரையும் பற்றி ஸ்ரீமான்-ஷார்ப் துரை இம்மாதிரிப் படங்கள் கொண்டு விளக்கியதில் எவ்வளவு ஜனங்கள் கூடினார்களென்றும், எவ்வளவு சிரத்தையாகக் கேட்டும், பார்த்தும் வந்தார்களென்றும், அதனால் எவ்வளவு பிரயோஜன முண்டாயிற்றென்றும் நமக்கு நன்றாய்த்தெரியும்.

ஆனால் இப்போதிருக்கிறபடி இந்த விளக்குகளுக்கு உதவும் படங்கள் மேனாட்டு வைபவங்களைப்பற்றியனவே ஆதலால், கல்வி விசேஷமில்லாத நமது ஸ்திரீ ஜனங்களுக்கும், குடித்தனக்காரர் முதலியோருக்கும் இவைகளால் அதிகமாகப் பிரயோஜனமில்லை. இதைவிட்டு இந்தியாவிலுள்ள மலை, செடி, நதி, புற்பூண்டுகள், பசுபக்ஷிகள், மனிதவர்க்கங்கள், கோயில் கோபுரம், முதலியவற்றைப் படம் பிடித்து, ஏதோ ஒரு கோர்வையாக வைத்துக்கொண்டு, ஆங்காங்குப் பிரசங்கித்துவந்தால் எத்தனையோ அனுகூலமும் புண்ணியமுமுண்டு. தவிரப் பழங்காவியங்களான ராமாயண முதலியவற்றையும், சிந்தாமணி, சிலப்பதிகார முதலியவற்

றையும் சித்திரப்படங்களுதவியைக்கொண்டு சாமான்னியருக்குக் காட்டிவந்தால், எவ்வளவு பலன் கிடைக்குமென்பதை யாரும் அறியலாம். சீதையம்மாள் அசோகவனத்தில் இருக்கையில் ராவணன் வரவைக்கண்டு நடுங்கி ஒன்றுந் தோன்றாமல் தன் உடம்பைக் கைகளால் மறைத்துக்கொண்டு பேசும் சந்தர்ப்பத்தைப் படத்தின் மூலமாய் விளக்கி, வால்மீகி பகவானுடைய வர்ணனையும் சேர்த்துவிட்டால், காவிய ரஸம் எவ்வளவு தூரம் சாமான்னியரைக்கூடத் திருப்தி படுத்துமென்பதை அனுபவத்தினாலறிய வேண்டும். இத்தியாதிகாரியங்களைப் பட்டணங்களில் அனேக இடங்களிலும், கிராமங்களில் அப்போதப்போதும் நடத்தி வருவதற்குச் சௌகரியமென்று கிட்டுமோ, அன்றுதான் நம்மவர்களுக்குக் கலைவாணியருள் பூரணமாகக் கிடைக்கும். இம்மாதிரிப் படங்கள் நமது பொட்டக்கிறுப் கம்பனியார்கள் ஏன் இன்னும் பிடிக்கவில்லையென்பது தான் நமக்கு விளங்கவில்லை. நல்ல காசும் கிடைக்கும், புண்ணியமு முண்டு, யாராகிலும் எடுத்துச் செய்வார்களா?

ஸ்ரீமான் கிருஷ்ண கோபால குப்தர்.

இந்தியா செக்ரடெரியவர்கள் சபையின் மெம்பராகிய இந்தப் பங்காளக் கனவான் சென்றமாசம் கொச்சி சமஸ்தானத்திற்கு விருந்தாகிப் போயிருந்தார். அவ்விடத்தில் சத்திரபதி ராஜாவும், பிரஜைகளும், எல்லோரும் இவருக்கு உபசாரம் செய்து ஆசிகள் வழங்கினார்கள். ராஜா சொன்னார் :— "ஸ்ரீமான் குப்தருக்கு நாம் வீணைகச்சிரமம் கொடுத்தோம். அவர் தென்னிந்தியாவையும் இதர பிரதேசங்களையும் பார்க்கவேண்டுமென்று வந்ததில், சாவகாசம் அதிகமில்லாததுகொண்டு, தேசசஞ்சாரம் அவசரமாகச் செய்துவருகிறார். ஆதலால் இவ்விடத்தில் நமது வேண்டுகோளுக்கிசைந்து வந்ததுபற்றி நமக்குப் பெருமையும் சந்தோஷமும் வெகு அதிகம். இவருடைய குணங்களை வருணிக்க இது சமயமன்று. ஆனால் தற்காலம் நமது செக்ரெடரியாகிய மார்லிப்பிரபு இந்தியாவுக்குச் செய்த அனேக நன்மைகளில், நம்மவராகிய இவரைத்தமது சபைக்கு மெம்பராக்கிக்கொண்டது பெரிய விசேஷமென்று நாமும் இதர இந்திய மகுடவர்த்தனரும் கொண்டாடுகிறோம். ஆதலால் இவர் இந்த ராச்சியங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, மறுபடி க்ஷேமமாக இங்கிலாந்து போய்ச்சேர்ந்து, தாம் வகித்திருக்கும் அலுவலில் இன்னும் பல வருஷங்களிருந்து, இத்தேசத்திற்கு நன்மையையும், தமக்குப் புகழையும் தேடிக்கொள்ளும்படி ஈசுவரன் அனுக்கிரகிக்க வேண்டுமென்பது நமதபிப்பிராயம்," என்றார்.

இதற்குப்பதில் உபசாரஞ் சொல்லுவதற்கெழுந்த ஸ்ரீமான் குப்தர் கூறியது:—"கொச்சிராச்சியத்தில் நேற்று நான் கால் வைத்தது முதல் இந்த க்ஷணம்வரை இச்சமஸ்தானத்துப் பிரஜைகள் செய்த உபசாரங்களையும், இப்போது சத்திரபதி ராஜா அவர்கள் மொழிந்த ஆசீர்வசனத்தையும், இட்டவிருந்தையும் நான் இனி எக்காலத்திலும் மறப்பதற்காகாது. பலவிதத்திலும் மனோகரமான இந்த ராச்சியத்தில் நான் கண்ட காக்ஷிகளையும், இந்தச் சமஸ்தானத்துப் பிரஜைகளாகிய மகாஜனங்களுடைய ரூபம், நற்குணம் இவைகளையும், நான் என்மனதிற்பதியக் கொண்டிருக்கிறேன். மலையாள சீமையில் அனேக வழக்கங்கள் பிராசீனமாயும் விசித்திரமாயுமிருக்கின்றன. ஆனால் இந்தியாவில் ஹிந்து மகாஜனங்களுக்குள் எங்குப்பார்த்தபோதிலும், ஸ்திரீ ஜனங்களாகிய ஸ்ரீமதிகளுக்கு இத்தேசத்தில் கிடைத்திருக்கும் பெருமையும், பதவியும், வேறெங்குமில்லையென்பது நிசம். இந்தக் குப்தமான விஷயத்தை அதிகம் விளக்குவது சரியன்று. ஏனெனில் என்மனதிலுள்ளதையெல்லாம் வெளிப்படையாய்ச்சொல்லி விடுவேனேயாகில், இவ்வளவு சௌபாக்கியம்பெறாத வேறு பிராந்தத்தவராகிய ஸ்ரீமதிகளுக்கு வயிற்றெரிச்சலுண்டாகிவிடும்!



சத்திரபதி அவர்கள் சொல்லியதெல்லாம் எனக்குப் பொருந்துமென நினைப்பேனாகில், நான் பெருத்த முட்டாளாக வேண்டும். என்றாலும், ஏதோ சக்தியானுசாரம் நான் செய்த அற்ப காரியத்தை இவ்வளவு பெரிதாகப் பாவித்து, எனது குறைகளை மறந்து, நான் சென்றவிடமெல்லாம் எனக்கு இவ்வளவு தூரம் சீரும் சிறப்பும் நடப்பதைப் பார்க்குமிடத்து, இந்திய ஜனங்களைப்போல் நன்றியும் விசுவாசமு முள்ளவர்கள் வேறு யாருமில்லையென்பது நிச்சயம். பொதுக் காரியங்களில் உழைப்பவருக்கு, அதனால் மகாஜனங்களெல்லா வகுப்பினருக்கும் உண்டாகும் திருப்தியைவிட மேலான வெகுமானம் இல்லை. ஆதலால் உங்களெல்லோருக்கும் நான் வந்தனம் செய்கிறேன். சத்திரபதியவர்கள் எவ்வகையாய்ப் பார்த்தாலும் தருமதுரையும், பிரபுவுமாதலால், அவரும், அவரது அபூர்வராச்சியமும், எல்லாவளமுங் கூடிப் பல்லாண்டு வாழக்கடவதாக," என்றார்.

இம்மாதிரி நம்மவர்களுக்கு நாம் மரியாதை செய்வது விசேஷமாக நமக்குக் காணுவதாலும், அதனால் இனி நமக்காகக் கூடிய நற்காரியங்கள் பலவாதலாலும், இதை யிஷ்டர் கவனித்தல் வேண்டும்.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள நம்மவர்களுக்கு நற்கதி.

தென் ஆப்பிரிக்காவில் குடியேறி யிருக்கும் நம்மவர்களுக்கு முந்தி யிருந்த தசையையும், இப்போது சில வருஷங்களாகக் காலனி கவர்ன்மெண்டார் அவர்கள் விஷயத்தில் செய்துவரும் அநீதங்களையும் பற்றி முந்தி யொருமாதத்தில் குறிப்பிட்டோம். அதைப் பரிகரிப்பதற்காக இந்தியாவில் காங்கிரஸ் மகா சபையிலும், வேறிடங்களிலும் நடந்துவரும் பிரயத்தனங்களையும் சற்று விவரித்தோம். இவ்விஷயத்தில் சர்க்காருக்கும் நமக்கும் ஒரே கக்ஷியாதலால், புதுச்சட்ட நிரூபணச் சபையில் சென்ற மாசம் கனம் ஸ்ரீமான்-கோகலே அவர்கள் பிரேரேபித்து, வேறு அனேகர் ஆமோதித்துச் சர்க்காரும் ஒப்புக்கொண்டு இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது:-"நெட்டாலுக்கு இந்தியாவிலிருந்து கூலியாட்களைச் சேர்த்து, இதுவரை நடந்து வந்ததுபோல் நிர்ப்பந்தித்து, அனுப்புவது கூடாதென்று தடுக்க ராஜப்பிரதிநிதியவர்களுக்கு அதிகார மிருக்கிறது," என்று. இதையனுசரித்துச் சீக்கிரம் ஒரு சட்டமும் பிறக்குமென்று தெரிவதால், அதைக்கேட்டு நாமெல்லோரும் சந்தோஷிக்க வேண்டும். முந்தி நாம் சொல்லியபடி நெட்டால் முதலிய தேசங்கள் இப்போதடைந் திருக்கும் உன்னத தசைக்கு வருவதற்கு நமது கூலியாட்களே முக்கிய காரணம். அந்த நன்றி சிறிது மில்லாமலும், நாமும் பிரிட்டிஷ் சக்கரவர்த்தியவர்களுடைய தருமப் பிரஜைகளென்பதைக் கவனியாமலும், கால்நடைகளை நடத்துவதுபோல தேகத்தில் சக்தியிருக்கும்வரை வேலை வாங்கிவிட்டுச் சக்திகுறைந்தால் கூலிகளை நமது தேசத்திற்குத் திரும்பவும் அனுப்புவது பெருத்த அனியாயமாதலால், இனியிதற்குப் பரிகாரம் ஒன்றுமில்லாவிட்டால் நம்மவர்கள் அவ்விடம் போக வேண்டியதில்லை யென்பது மெத்தவும் சரியன்றோ. நம்மவர்களுக்கு இந்தியா விஸ்தாரமாயிருப்பதில், இங்கேயே யிருந்துகொண்டு கஷ்டமோ, சுகமோ, படட்டும். நெட்டால் கவர்ன்மெண்டாருக்கும், மற்றுள்ள தென் ஆப்பிரிக்கா கவர்ன்மெண்டுகளுக்கும், நம்மவர்களுதவி யில்லாமலே காரியம் சீராக நடப்பதானால், தாராளமாய்ச் செய்துகொள்ளட்டும். நாம் அவர்களைப் பலவந்தப்படுத்துவதில்லை. இனி நாம் மறுபடி போவதானால் வேண்டிய பந்தோபஸ்து செய்து கொண்டுதான்

போகவேண்டும். சட்டம் பிறப்பதாகச் சங்கதி தெரிந்தால், தானே வழிக்கு வருவார்களென்று நாம் நிச்சயமாயிருக்கலாம். ஏதோ தெய்வகிருபையால், இந்த விஷயத்தில்மட்டும் பிரிட்டிஷ் துரைத்தனத்தாரும், பிரிட்டிஷ் பிரஜைகளும், இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியப் பிரஜைகளிலுள்ள சகல ஜாதியாரும், ஒன்றுசேர்ந்து, எல்லோரும் பிடிவாதமாகக் காலனிகளை நமது வழிக்கு வரும்படிக்கும், பாபபுண்ணியத்திற்குப் பயப்படும்படிக்கும், செய்வதென்று தீர்மானித்திருப்பது ஒரு பெரிய நற்குறியென்பது பிரத்தியக்ஷமாயிருக்கிறது.

இந்து ஸ்திரீகளுக்கு விஹாரஸ்தலம்.

திருவல்லிக்கேணி, பெரிய சாலையிலிருக்கும் ஸ்ரீமான்-ஜெ. எஸ். ராவ் அவர்கள் இவ்விஷயமாய்ப் பின்வருமாறு மெயிலில் எழுதுகிறார்:—ஐம்பது வருஷத்திற்குமுன் நமது ஆசாரங்களை விசாரித்தால் இந்து ஸ்திரீகளுக்குக் கல்வியும், சுவாதந்திரியமும் வெகு குறைச்சலாயிருந்தது விளங்கும். ஸ்திரீகளுக்கு இரண்டாம் கட்டுத்தான் பிரபஞ்சமாயிருந்தது. தவிரத் தம்மைச்சுற்றி நடக்கும் சமாசாரமின்னதென்று தெரியாது. இங்கிலீஷ் முதலியது படிப்பேனென்றாவது, பள்ளிக்கூடம் போவேனென்றாவது சொல்லியவர்களையும், பிரசங்க முதலியன நடக்கும் சபைகளுக்குப் போவேனென்றவரையும், பஹிஷ்காரம் போட்டுவிடுவார்களென்கிற பயம் வலுத்திருந்தது. இது சாஸ்திரமுமல்ல, அனுபவமுமல்ல. துராசாரமேதான். ஏனெனில் நமது சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்கு விலங்கிட்டே வைத்திருக்கும்படிக்கும், அவர்களுக்குக் கல்வி கூடாதென்றும் எங்காவது சொல்லியிருப்பதாகக் காணவில்லை.

ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய் அவர்கள் சொல்லுகிறபடி, பழையநாளில் நமது ஸ்திரீகள் வெகு விவேகிகளாக இருந்ததுமட்டுமேயன்றி, சாஸ்திரம் படித்த பண்டிதருடன் வாதாடிச் சபைகளில் சம்மானம் பெற்றதாகவும் சாக்ஷியங்களிருப்பதனால், இப்படி யிரண்டாங் கட்டைக் காத்துக்கொண்டு, சட்டி சுறண்டியே எல்லோரும் காலத்தைக் கழிக்கவில்லை. இப்பொழுதோ நாம் மேனாட்டுக் கல்வியையும் நாகரிகத்தையும் கைப்பற்றி வந்திருப்பதால், இவ்விஷயத்திலும் ஏதோ நடக்கவேண்டியபடி. செய்வதில் அசாஸ்திரீயமாக வொன்றும் காணவில்லை. பெண்கள் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்கள். சிலர் பெரிய பரீக்ஷைதேறியுமிருக்கிறார்கள். பெரிய சபைகளில், ஆசார விவகாரங்களைக் குறித்து அனேகர் பிரசங்கம் செய்தும் வருகிறார்கள். அனேக இடங்களில் ஸ்திரீகளுக்கென்று சங்கங்களேற்பட்டு நடந்து வருகின்றன. ஆனால், இவை யெல்லாம் ஏதோ கொஞ்சம் பெயருக்குக் கிடைத்திருக்கும் பாக்கியமே தவிர, பெரும்பாலார்க்கில்லை. இப்படியிருப்பது நன்றாகக் காணவில்லையாதலால், பெரும்பாலார்க்குதவும் பொருட்டும், ஏதோ கொஞ்சம் பாக்கியமிருப்பவருக்கு அது பெருகும் பொருட்டும், ஒரு கிளப், என்றால், விஹாரச்சங்கம் ஏற்பட வேண்டிய தவசியம். இதுவரை ஒரே சங்கம் தான் இந்தப்படி யேற்பட்டிருப்பது. அதிலும் மதவிஷயமான பிரஸ்தாபம் மட்டும் நடந்துவருவது. ஆதலால் அது போதாது. நல்ல மாதிரியாக விஹாரச்சங்கமொன்று ஏற்பட்டு, அதில் நமது ஸ்ரீமான்களும், ஸ்ரீமதிகளும் சாயரக்ஷையில் போய், தேகப்பயிற்சி, படிப்பு, வியாசங்கள், இம்மூலியமாய் மனத்தை விருத்திசெய்து, நல்லறிவு, நல்லொழுக்கம், லோக வியவகாரங்கள் இவைகளைக்கற்று முன்னுக்கு வரவேண்டும். நாங்கள் எங்களுக் கிசைந்தவரை செய்வதாக உத்தேசித் திருக்கிறோம்," என்று. இப்படி யெல்லோரும் கலப்பதில் ஸ்ரீமதிகளுக்குத் துர்லக்ஷணங்கள் ஏதாகிலும் பிடிபடலாமென்று அனேகர் பயப்படலாம். பெண்



16 MAY 1910

கல்வி விஷயத்திலும் இப்படித்தான் முட்டாள் ஜனங்கள் ஆக்ஷேபித்தார்கள். இப்பொழுதோ அதை யொருவரும் ஆக்ஷேபிப்பதில்லை. அப்படியே ஒவ்வொரு விஷயத்திலும். ஆனால் இந்த நண்பர் எழுதுகிறபடி, மேனாட்டுச் சம்பிரதாயத்தைத் திடீரென்று கைப்பற்றுவது நல்லதல்ல. இப்பொழுதிருக்கிற ரீதிக்கு, மதிராசு முதலிய பெரிய பட்டணங்களிலும் இம்மாதிரி 'மிசிரவிஹார ஸ்தலங்கள்' ஏற்படுவது சாத்தியமென்று காணவில்லை. ஏனெனில் ராயரவர்கள் சொல்லியதை ஆக்ஷேபித்து ஒரு ஸ்ரீமதி உடனே பதில் எழுதியிருக்கிறார். ஆதலால், ஆரம்பத்தில் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சேருகிறவர்களெல்லோரும் தற்காலம் ஸ்ரீமதிகளாகவே யிருந்து 'கிளப்புக்கு' நற்பெயர் கொண்டுவர வேண்டும். காலக்கிரமத்தில் எல்லா மங்களங்களும் தானே வரும்.

தீண்டாதவர் விஷயம்.

சென்ற மாசம் 17-ம் தேதி தூத்துக்குடியில் பஞ்சமர் விஷயமாய் ஒரு சபை கூடிற்று. அதில் ஸ்ரீமான்-ஜெ. பி. பாண்டியன் என்னும் இஷ்டர், இவ்விஷயமாய் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய இடங்களில் தனக்குக் கிடைத்த மரியாதைகளை விவரித்துப் பிறகு இந்நாட்டிலுள்ளவர்கள் பஞ்சமருக்குச் செய்ய வேண்டிய உபகாரங்களை விளக்கிப் பேசினார். தான் இப்போது பஞ்சமருக்கென்று குடிகிணறுகள் வெட்டுவதில் கண்ணாயிருப்பதால், திருநெல்வேலி ஜில்லாவில் அனேக இடங்களில் கிணறுகள் வெட்டிவருவதாயும் அதற்கு அமெரிக்காவிலிருந்தும், டிஸ்திரிக்ட்டு ஜட்ஜி, கவர்னரவர்கள், ஆகிய இவர்களிடமிருந்தெல்லாம் திரவிய சகாயம் கிடைப்பதாகவும் கூறி, இம்மாதிரியாக வேண்டிய காரியங்களுக்கெல்லாம் நமது நாட்டார் முயலவேண்டுமென்று சொல்லி முடித்தார்.

சபா நாயகராகவிருந்த ஸ்ரீமான்-வி. கே. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் இவ்விஷயத்தில் வேண்டியமட்டில் பேசியும், எழுதியும் இருப்பவராதலால், சமயத்திற்கு வேண்டியதை வெகு அழுத்தமாகவும், திருத்தமாகவும் பேசினார். "நமது பஞ்சமர் விஷயத்தில் செய்ய வேண்டிய காரியங்கள் இப்போது எல்லோருக்கும் தெரியும். அதற்காக ஒரு சங்கம் ஏற்பட்டு வேலையும் நடந்து வருகிறது. மங்களூரில் ஒரு பெரிய சபை கூடிப் பிரசங்கம் நடந்தது. மதிராசிலும், சேலத்திலும் அப்படியே நடந்தன. திருநெல்வேலியில் இன்னும் ஜனங்களுக்கு வேண்டிய மட்டில் உற்சாகம் ஜனிக்கவில்லை. ஆனால் தெய்வாதீனம், இதற்காகவே கங்கணம் கட்டிக்கொண்டு உழைக்கும் இஷ்டராகிய டாக்டர் வி. பி. ராமராயரவர்கள் அவ்விடம் வந்திருப்பதால், சேலத்துப் பதிவுபோல அவர் அவ்விடத்திலும் நடத்துவாரென்பதில் தடையில்லை.

சுமார் 5½ கோடி ஜனங்கள் 'பறந்து பறந்து பாடுபட்டாலும், படுக்கப்பாயில்லை. ஓடியோடிப்பாடுபட்டாலும், உண்ணச்சோறில்லை,' யென்கிற ஸ்திதியிலிருக்கிறார்கள். நமது வேளாண்மை செழிக்க இவர்களே காரணம். ஆனால், "ஆகபோகத்திற்கு அவனாசிலிங்கம், ஆணை சத்தியத்திற்கு, ஆகாசராயன்," *

* இந்தப் பழமொழி கோயமுத்தூருக்கடுத்த அவனாசியென்னும் சிவஸ்தலத்தைப்பற்றியது. அவ்வூரிலும், சுற்றிலுமுள்ள ஜனங்கள் பிரார்த்தனைசெய்துகொண்டு வியாதி முதலிய இடையூறுகள் விலகினால், அதற்கு வேண்டி அவனாசி ஈசுவரனுக்குப் பஞ்சாமிருத அபிஷேகம், மகா நைவேத்தியம் முதலியவைகளைச் சம்பிரமமாக நடத்துவது வெகுநாளைய வழக்கம். அதைவிட்டு யார்பேரிலாகிலும் கோபம் வந்து அவர்கள் நாசமாய்ப் போகவேண்டுமென்றாலோ, அச்சனங்கள் மிளகாயை அரைத்து நீரில் கரைத்துக் கொண்டுபோய், இன்னார் நாசமாய்ப் போகட்டுமென்று சொல்லிக்கொண்டு, கிராமதேவதையாகிய ஆகாசராயனுடைய விக்கிரகத்தின்மேல் அபிஷேகம் செய்துவிடுவதாக வதந்தி! ஆதலால் பஞ்சாமிருதம் முதலியன ஈசுவரனுக்கும், மிளகாய்த்தண்ணீர் மட்டும் ஆகாசராயனுக்கும், மாமூலாகக் கிடைப்பது விசித்திரமென்பதுபற்றி,

என்கிற நியாயப்படி பலன்மட்டும் இவர்களுக்குக் கைவசமில்லை. இவர்களை இந்த ஸ்திதியில் வைத்துக்கொண்டு, திரான்ஸ்வால் முதலிய இடங்களில் நம்மவருக்கு நடக்கும் அநியாயங்களைக் குறித்துப்பேசுவதற்கு நமக்கு என்ன வாயிருக்கிறது? இவர்கள் தலைமுறை தலைமுறையாக இங்கேயேயிருந்தும், இவர்களுக்கு இந்தியா திரான்ஸ்வால்போல் அந்நிய தேசமாகியிருப்பது, 'உயர் குலத்தவர்', குற்றமேயாதலின், இனியாகிலும் அவ்வுயர் குலத்தவர் தமது கடமையை யறிந்து வேண்டியதைச் செய்வாராக,' என்றார். எல்லோரும் இதைக் கவனிததுப் படித்தல் வேண்டும்.

ஒரு டிஸ்டிரிக்ட்டுக்கோர்ட்டு ஜட்ஜி சிவில் வியாச்சியங்களில் தப்பு சாக்ஷியம் சொல்லி வழக்கை ஆபாசஞ் செய்து விடுவதையே விரதமாகக் கொண்ட ஒரு சாக்ஷிக்காரன்மேல் வெகு நாளாகக் கண்ணாயிருந்தார். ஒருகேசில் 'யானைக்கும் அடிச்சறுக்கி,' இந்தச் சாக்ஷிக்காரன் ஏதோ மறந்தாற்போல் ஒரு சங்கதி நடவாததை நடந்ததாகச் சொல்லிவந்தான். இன்றைக்கு இவன் அகப்பட்டானென்று ஜட்ஜி குதூகலத்துடனிருக்கக் கோர்ட்டு உத்தியோகஸ்தரொருவன் அந்தக் குறிப்பையறிந்து, சாக்ஷிக்காரனைப் பார்த்துப் "பல்லைக்கடித்து, நெல்லைக் கொரித்தான்" மகா நிபுணனாகிய அச்சாக்ஷிக்காரன் உடனே இந்த ஜாடையை யறிந்துகொண்டு, தன் கதையை முடித்துவிட்டு, 'இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டார்கள்," என்று பெருமூச்சுவிட்டுச சொன்னானாம். தப்பித்துக்கொண்டதை ஜட்ஜி கண்டதும், கோபத்தை அடக்கமாட்டாமல், "இன்றையதினம் உன்னை ஏழுவருஷத்திற்கு நிச்சயித்திருந்தேன். நழுவிவிட்டாய். ஆனால் இனியொரு முறைமட்டும் இந்தக்கோர்ட்டு வழிவந்தாயோ, பார்த்துக்கொள்ளுகிறேம்," என்றாராம். சாக்ஷிக்காரன் பதறாமல், "துரைகளே, என்மேல் கோபஞ் செய்யக்கூடாது. நானாவரவேண்டுமென்றாசைப்படுகிறேன். அந்தராணிமுத்திரையல்லவா என்னை 'வருத்துகிறது' ஏதோ (தெ.நீ)ததை உள்ளபடி சொல்லுகிறேனே யென்றா அடிக்கடி என்னை இந்த வழக்குக்காரர்கள் கோர்ட்டுக்கு இழுக்கிறார்கள். அவர்களை இனிமேல் என்னைச் சாக்ஷிபோடக்கூடாதென்று துரைகள் உத்தரவளித்து விட்டால் பின்னிட்டு நானேன் வருகிறேன்," என்றானாம்,

## ஸ்ரீ காலடி க்ஷேத்திரவைபவம்

குறிப்பு.—இதில், ஸ்ரீபகவத் பாதசுவாமிகளென்றும், ஸ்ரீபாஷியகார சுவாமிகளென்றும், ஆங்காங்குக் கூறியிருப்பது, ஸ்ரீஜகத் குரு ஆதிசங்கர ஆசாரிய சுவாமிகளை யென்றறிதல் வேண்டும். எடிட்டர்.

'விஹாரிணி' முதல் நெம்பரில், ஸ்ரீபுத்த பகவானைப்பற்றிய கதையில் இவ்வாறு எழுதினேம். "வேத முதலிய இந்துமதக் கிரந்தங்களுக்குக் கர்த்தர்களாயிருந்த மகரிஷிகளுக்காவது, அவர்களை யனுசரித்திருந்த மகாராஜாக்களுக்காவது, பணக்காரரான வேறு ஜனங்களுக்காவது, ஜீவதசைகழிந்த பின், தாங்களிருந்ததற்கடையாளம் ஏதாகிலும் இருக்கவேண்டுமென்று ஆசையிருந்ததுமில்லை. அவர்களிடத்தில் பக்தி வைத்திருந்தவர்கள் அப்படிச் செய்ய வேண்டுமென்று பிரயத்தனப்படவுமில்லை. ஆரிய ஆசாரத்தைப் பழையபடி அனுஷ்டிப்பவர் இக்காலத்திலும் அப்படியே தான் நடத்துவது. உத்தரக்கிரியையும், வார்சுதாராகிய புத்திர பௌத்திராதிகள் நடத்தும் சிராத்தமும் தான் பெரியோர் விஷயத்தில் நமக்குள்ளிருக்கும் ஞாபகக்குறி," என்று. மொத்தத்தில் இது வாஸ்தவம். இது மதவிஷயத்திலும, மதாசாரியர் விஷயத்திலும் மட்டுமேயல்ல. இந்திய ராஜாக்கள், ராஜாங்கங்கள் விஷயத்திலும், இப்படி ஞாபகசின்னங்கள் என்பதேயில்லாமல் தான் போயிருக்கிறது.

ஆதலால் மற்ற மகாத்துமாக்கள் விஷயத்திலெப்படியோ அப்படிப்போலவே, ஜகத்குருவாகிய ஸ்ரீ சங்கரபகவத் பாத சுவாமிகள் விஷயத்திலுமாகிவிட்டது அதிசயமல்ல. சுவாமிகளிருந்ததும், 32 வயதுக்குள், சூத்திரபாஷ்யம் முதலிய கிரந்தங்களையெழுதி வைதிக கருமத்தை உத்தாரஞ் செய்ததும், துர்மதம், துராசாரமிவைகளை யோட்டியதும், மொத்தத்தில் நாளதுவரை பிரத்தியக்ஷ



ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் தேய்வாராதனை செய்தல்

மாயிருப்பதால், அவ்விஷயத்தில் மட்டும் சந்தேகம் ஒருவருக்கும் இல்லை. ஆனால் மகாத்துமாக்களுக்கு ஜீவன சரிதமென்று நடந்தவைகளை நடந்தபடி யெழுதிவைப்பது நமக்குள் பதிவாக இல்லாமற் போகவே, சுவாமிகள் பிறந்த இடம், இருந்த காலம், அக்காலத்தில் மகா ஜனங்களுக்குள் மதவிஷயமாயிருந்த விசேஷ லக்ஷணங்கள், இவைகளைக் குறித்து நமக்கு ஒன்றும் தெரியாதென்றே சொல்லவேண்டும்.

உதாரணமாகச் சுவாமிகள் கி.பி. 700-800-ம் வருஷங்களிலிருந்து உபதேசம் செய்தவரென்று ஒரு கக்ஷியார் வாதிக்கிறார்கள். சுமார் 500-600-ம் வருஷங்களில் தானிருந்திருக்கவேண்டுமென்று வேறு சிலர் சாதிக்கிறார்கள். இன்னும் அனேகர் கி. மு. 100-வருஷம் சுமாரில் தான் சுவாமிகளிருந்திருக்க வேண்டுமென்று பிடிவாதமாயிருக்கிறார்கள். அப்படியே பிறப்பிடமும் சந்தேகாஸ்பதமாகவிருக்கிறது. சிலர் காஞ்சீபுரத்தில் சுவாமிகள் பிறந்ததாகவும், சிலர் சிதம்பரத்திலென்றும், முரட்டுவாதம் செய்கிறார்கள். ஆனால் நம்மவரில் பெரும்பாலார், சுவாமிகள் மலையாள சீமையில், இப்போது திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சார்ந்த 'ஸ்ரீகாலடி' என்னும் கிராமத்தில் பிறந்ததாகவும், சுவாமிகளுடைய தாயார் அதற்குச் சமீபத்திலுள்ள 'பாழூர்ப்பனை யில்லம்' என்னும் நம்பூத்திரிக் குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும் நெடுநாளாக நம்பிவந்திருக்கிறார்கள்.

சுவாமிகளைப் பரமேசுவர அம்சமென்று வெகு காலத்திற்கு முன்னமே அவரது சிஷ்யகோடிகள் தீர்மானித்துவிட்டதால், அவர்களது பிறப்பு, வளர்ப்பு முதலிய சாமான்னிய வியவகாரங்களில் ஒருவருக்கும் சிரத்தையிருந்ததில்லை. ஆதலால் அவர்கள் விஷயத்தில் ஒரு சங்கதியும் நிஷ்கரிஷையாகச் சொல்வதற்கில்லை. என்றாலும் இந்தக்காலடி ஐதிகத்தைத் தவிர்த்து வேறொன்றும் காணவில்லையாதலால், இதையே நிஷ்கரிஷையாக அனேக காலமாய்ப் பக்தர் நம்பி வருகிறார்கள்.

நாம் மேற்கூறியபடி சுவாமிகளுடைய சிஷ்யர்களில் பழைய சம்பிரதாயத்தை மேற்கொண்டவருக்கு, அவரது ஜீவன சரித்திரமும், வேறு அடையாளங்களும் இன்னும் அவசியமில்லையென்றாலும், நவீனமாகிய 'தியாஸபி' முதலிய சங்கங்களில் சேர்ந்தவர்களும், மேனாட்டுக் கல்வியில் தேர்ச்சி அதிகமுள்ளவர்களுமான சில சிஷ்ய ஜனங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக இவ்விஷயத்தில் சிரத்தையதிகரித்து வந்திருக்கிறது. அதற்குப் பலகாரணங்களுண்டு. ஸ்ரீபுத்த பகவானுடைய தந்தங்கள், எலும்புகள், இவைகளை வைத்து அந்த மதஸ்தர்கள் கோயில் கட்டி க்ஷேத்திரங்களாக்கி வருவதையும், இதர மதஸ்தர்களும் அவ்வாறே செய்து வருவதையும் நாம் பார்த்து வந்திருக்கிறோம். பத்திரிகை, ரயில், தந்தி முதலிய சாதனங்களால் போக்கு வரவும், இதர தேசவர்த்தமானங்களும் நமக்குத் தெரிகின்றன. ஆதலால் மற்ற மகான்களுக்கு நடப்பது ஜகத் குருவாகிய ஸ்ரீ பகவத் பாத சுவாமிகளுக்கு மட்டும் இல்லாமல் ஏன் போகவேண்டுமென்கிற எண்ணம் நம்மில் சிலருக்குச் சில வருஷங்களாகப் பலப்பட்டு வந்தது. ஆகவே அவர்களில் மைசூர் சமஸ்தானம் 'ஒண்ணும்' ஜட்ஜியாக விருந்து பென்ஷன் வாங்கிவரும் ஸ்ரீமான்-ஏ. ராமசந்திர அய்யரவர்களும், மைசூர், திருவாங்கூர் இரண்டு சமஸ்தானங்களிலும் திவான்ஜியாக விருந்த ஸ்ரீமான்-வி. பி. மாதவராயரவர்களும், இன்னும் இரண்டொருவரும் ஆலோசித்து, ஸ்ரீ காலடியில் முன்னமே சுவாமிகளுடைய தாயாருக்குப் பிருந்தாவனமிருந்ததால், அவ்விடத்தில் ஒரு க்ஷேத்திரம் பலப்படவேண்டுமென்று தீர்மானித்தார்கள். பிறகு இதை ஸ்ரீ சிருங்ககிரி

மடம் பரம்பரையில் தற்காலம் எழுந்தருளி அந்தப் பீடத்தை அலங்கரித்துவரும் ஸ்ரீ சிவாபிநவ நாசிம்மபாரதீ சுவாமிகளுக்கு விக்ஞாபனம் செய்ததில், அவர்களும் அப்படியே நடக்கலாமென்று ஆமோதித்ததன் பேரில் சில வருஷங்களுக்குமுன் காரியம் ஆரம்பமாயிற்று.

மேற்சொல்லிய ஸ்ரீமான்-மாதவராயர் திருவாங்கூர் திவானாக இருக்கையில், இது விஷயமாய்ப் பிரயத்தனம் நடந்ததில், சத்திரபதி மகாராஜா அவர்களும் வெகு ஆதரவுடன், மேற்சொல்லிய பிருந்தா வனத்தையும், அதற்குச் சேர்ந்த சுமார் 30-ஏகரா பூமியையும், வில்லங்கங்களொழித்து ஸ்ரீ சிருங்ககிரிமடத்திற்கு அதீனமாக்கினார்கள். பிறகு அதில் பழைய நாளில் சுவாமிகள் பிறந்த இல்லம் இன்னவிடத்தில் தானிருந்திருக்க வேண்டுமென்று ஊகித்து, அவ்விடத்தில் இரண்டு சிறு தேவாலயங்களை நிர்மாணம் செய்வதென்று தீர்மானமாயிற்று. ஒன்று ஸ்ரீ பகவத்பாத சுவாமிகளுடைய சன்னிதியாகவும், மற்றொன்று அவருக்கு இஷ்டதேவதையாகிய, ஸ்ரீ சாரதாம்பிகையின் சன்னிதியாகவும் இருக்கவேண்டுமென்று நிச்சயமாயிற்று.

ஒவ்வொரு நம்பூத்திரி இல்லத்திலும் தென்கீழ்புறம் மூலையில் தகன கட்டமும், அதற்கு வடகிழக்கில் பிரசவ அறையுமிருப்பது வெகு நாளைய வழக்கம். 'தகன கட்டம்' என்பது நம்மவருக்கு விளங்காது. ஏனெனில், மலையாளத்தில் பூர்வா பூர்வமாயிருந்துவரும் நம்பூத்திரிப் பிராம்மணரொழிய வேறுவகைப் பிராம்மணர் ஒருவகையாரிலும் இந்த வழக்கமில்லை. ஆதலால் இதைச் சற்று விளக்குவோம். நம்பூத்திரிக் குடும்பம் வாழும் வீட்டிற்கு 'இல்லம்' என்று பெயர். இதில், அந்தக் குடும்பத்தவருக்கும், அதிதியாக வருபவருக்கும் வேண்டிய சகல சௌகரியங்களும் அடங்கும். ஸ்நானம், சௌசம், முதலியவற்றிற்குக் குளங்களும், காய்கறி முதலியவற்றிற்குத் தோட்டமும், சமயல், சாப்பாடு, பூஜை, படுக்கை முதலியவற்றிற்குப் பிரத்தியேகம் அறைகளும் இருக்கும். இவைகளன்றி, அக்குடும்பத்தவரில் இறந்துபோகிறவர்களை அவ்விடத்திலேயே மேற்சொல்லியபடி, தோட்டத்தில் தென்கிழக்கில் ஒரு மூலையில் தகனம் செய்து விடுவதற்கும் இடமிருக்கும். இது பிராம்மணரில் நம்பூத்திரிகள் இல்லத்திற்குமட்டும் உரிய லக்ஷணமாம்.

ஆதலால் ஆசாரிய சுவாமிகளுடைய தாயாரையும் இவ்வாறே, அவரது இல்லத்தின் தென்கிழக்கு மூலையில்தான் தகனம் செய்திருக்க வேண்டுமென்பது நிச்சயம். அந்த இடம் பிருந்தாவன மூலமாய் இப்போது நிஷ்கரிஷையாகத் தெரிவதால், அதற்கு வடகிழக்கு மூலையில் தான் சுவாமிகள் பிறந்த அறையிருந்திருக்க வேண்டுமென்று ஊகித்து, அவ்விடத்தில் சுவாமிகள் கோயிலை நிர்மாணித்திருக்கிறார்கள். ஆதலால் சுவாமிகள் சன்னிதி அவர்கள் அவதாரஞ்செய்த ஸ்தலத்திலேயே யிருப்பதாகக் கட்டியவர்கள் நம்பியிருக்கிறார்கள். ஏதோ சற்றேறக்குறைய இருந்தபோதிலும் தோஷமில்லை.

சுவாமிகளுடைய ஜீவனசரித்திரம் பின்னால் சிறிது சிறிதாக 'விஹாரிணியில்' காணும். அதில் அவர்களுடைய தாயாரது உத்தரக்கிரியை விஷயத்தில் நடந்த சில அதிசயங்கள் விவரமாகும். மொத்தத்தில் இங்கு நாமறியவேண்டியது இது. அந்தச் சந்தர்ப்பத்தில் சுவாமிகளுக்கும், அவர்களுடைய பந்துவர்க்கங்களுககும் விரோதம் முற்றிவிட்டதாலும், வேறு காரணங்களாலும், சுவாமிகள் அதைவிட்டு விலகிவந்த நாள்முதல் நாளது வரை அவருடைய பரம்பரையில் யாரும் மறுபடி கேரளத்தில் விஜயம் செய்யவேயில்லை யென்று ஒரு ஐதிகம். ஆகிலும் இது சரியாகக்



ஸ்ரீ ஆதிசங்கர சுவாமிகளது மாதாவின் தகன ஸ்தலம்

காணவில்லை. இரண்டொருவராவது திருவனந்தபுரம் போயிருப்பதற்குச் சாக்ஷியமுண்டு. ஆனால், மொத்தத்தில் காலடிக் கிராமத்திற்கு யாரும் இதுவரை போகவில்லையென்பது அனேகமாய் நிச்சயந்தான்.

சென்ற இரண்டு வருஷங்களாக மேற்கண்ட கோயில் வேலை நடந்து வந்தது. அதை யனுசரித்து வேறு அனேக காரியங்களும் நடந்து வந்தன. கடைசியாகத் தற்காலம் ஸ்ரீ குருபரம்பரையில் விளங்கும் மேற்கூறிய ஸ்ரீசிவாபிநவ நரசிம்மபாரதீ சுவாமிகளது சந்தோஷத்தையனுசரித்து நாளது சௌமியஹு மாசி௴ 10-தேதிசோமவாரம் கூடிய சுபதினத்தில் ஷைசன்னிதிகளில், ஸ்ரீ பகவத் பாதாசாரிய சுவாமிகளுடைய திவ்ய மங்கள விக்கிரகத்தையும், சாரதாம்பிகையின் விக்கிரகத்தையும் முறையே பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகமும் நடக்கும்படி முகூர்த்தம் ஏற்பாடாகி, அதற்காக இந்தியாவிலுள்ள முக்கிய சிஷ்யர்களுக்கெல்லாம் ஸ்ரீ முகம் போயிற்று. பிறகு சில மாதங்களாக, இம்முகூர்த்தத்திற்கு வரக்கூடியவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களேற்பாடாகி வந்தது.

ஸ்ரீ காலடிக்குப்போகக் கொச்சி சோரனூர் ரயிலில், அங்கமாலி ஸ்டேஷனில் இறங்கவேண்டும். அங்கிருந்து சுமார் $1\frac{1}{2}$-மைல் தூரத்தில் இந்த க்ஷேத்திரம் இருக்கிறது. மலையாளத்தில் அனேக ஸ்தலங்கள் வெகு மனோக்கியமாகவும், ரமணீயமாகவு மிருக்கின்றன. என்றாலும், ஆல்வாய் நதியோரத்திலுள்ள காலடிபோன்ற சில இடங்கள், எவ்விதத்திலும் சிறந்தவைகள். மலை, செடி, நிலம், நீர் முதலிய எவ்வகை லக்ஷணங்களும் வெகு நன்றாயமைந்து, தேகத்திற்கும், மனதிற்கும் ஆரோக்கியத்தைக் கொடுப்பதற்கு இம்மாதிரி ஸ்தலங்களைவிடச் சிறந்தவை எங்குமில்லை யென்னலாம்.

இந்தப்பூமி வெகுகாலமாக ஒரு நம்பூத்திரி வசமிருந்தது. ஆகலால் அதைக் கவர்ன்மெண்டார் மடத்திற்குச் சுவாதீனப்படுத்த வேண்டியாயிற்று. வெகு காலமாகக் கேட்பாரற்றிருந்ததால், பலா, மா, முதலிய மரம், மூங்கில், செடி, செத்தை நிறைந்திருந்தது. இவைகளை வெட்டிச் சீராக்க 15000-ரூபாயும், கும்பாபிஷேகத்திற்காக வரும் ஜனங்களுக்கு விடுதியுண்டாக்க ரூ. 30000-மும் செலவழிந்தது. இவ்விடுதிகள் ஒரே ஒழுங்கமாக இருபுறமுமிருக்க, நடுவில் விசாலமாக ரோட்டுகள் அமைந்து, பார்க்க வெகு நேர்த்தியாகவிருந்தது. தெருக்கள் கோணலின்றியிருந்ததில், புதுச்சேரியைவிட நன்றென்று பார்த்தவர்கள் சொன்னார்கள். இது தவிர ஜமீன்தாரர் முதலியோருக்குப் பிரத்தியேகமாய்ப் பங்களாக்கள் அமைந்திருந்தன. வாஷிங்டன் விளக்குகள் வேண்டியமட்டில் கொளுத்தியதனால் இரவில் அனேக சந்திரர்கள் பிரகாசிப்பதுபோலிருந்தது. குப்பை, செத்தை யொன்றுமில்லாமல், தெருக்களையும், பிறவடை முதலியவைகளையும் வைத்திருந்ததில், அனேகம் முனிசிபாலிட்டிகள் இதைப் பார்த்துத் தொழில் தெரிந்துகொள்ளலாம். ஸ்நானம், சாப்பாடு, வாசம் உறக்கம், முதலிய சகல விஷயங்களிலும் இவ்வாறு சுசியாயிருப்பதற்கு வேண்டியபடி மானேஜர்கள் ஏற்பாடுசெய்திருந்ததால், வந்தவர்களுக்கு வியாதி, பீடையென்பதே விசேஷமாயில்லையென்னலாம். கடைகளும், தபால், தந்தி முதலிய ஆபீசுகளும், ஜனங்களுக்கு எல்லாவிதத்திலும் உபகாரமாகியிருந்தன. கிணறுகள் வேண்டிய இடங்களிலெல்லாம் வெட்டியிருந்தன. அல்லாமல், குளங்கள் கட்டி, இஞ்சின் வைத்து ஆற்றுத் தண்ணீரை அவற்றிற்குக் கொண்டுவந்து நிரப்பியதில், ஜனங்களுக்குத் தண்ணீர் விஷயமாகச் சிரமமேயில்லை. போலீஸ் பந்தோபஸ்தினால் திருட்டு முதலிய அக்கிரமங்

களுக்கு இடமேயில்லை. வந்தவர்களுக்கு ஆகாராதி விஷயங்களில் ஒருகுறைவுமுண்டாகவில்லை. ஆயிரக்கணக்காக வந்து கூடியும், எல்லா ஜனங்களும் திருப்தராகித் திரும்பியது மானேஜர்களுக்கெல்லாம் வெகு சுகிர்தம். இப்படி நடந்ததாகப் பழையநாளில் ராமாயணம், பாரதம், இவைகளில் தான் கேட்டிருக்கிறோம்.

அங்கமாலியிலிருந்து காலடிகொண்டு சேர்க்க ஜட்கா, மோடார், முதலிய சாதனங்களும், வந்தவர்களுக்கு இவ்விஷயத்திலும், வேறு வகையிலும் சகாயம் செய்யத் திருநெல்வேலியிலிருந்து இங்கிலீஷ் படித்துத் தேறிய சில குமாரர்களும், ஏற்பட்டிருந்ததால், யாத்திரிகருக்கு ஒருகுறைவு மிருக்கவில்லை. காலடி போனவுடன் பதார்த்தங்கள் ராசிராசியாகக் குவிந்திருந்ததையும், கேட்டவருக்கு இஷ்டம்போல் விநியோகமானதையும் பார்த்தயாருக்கும் பிரமிப்புண்டாகும். இதை மேற்போட்டுக்கொண்டு இரவும்பகலுமாக உழைத்த ஸ்ரீமான்கள் ஸ்ரீகண்டசாஸ்திரிகள் வகைக்கு எல்லாச் சுகிர்தமு முண்டாகவேண்டும். முகூர்த்தத்திற்கு நாலைந்து தினத்திற்கு முன் ஸ்ரீசிருங்ககிரி சுவாமிகள் வந்து சேர்ந்தார்கள். நாலுதிக்கிலிருந்தும் லௌகிகர்களும், வைதிகர்களும் ஆயிரக்கணக்காக வந்து கூடினார்கள். வேதகோஷங்கள் முழங்கின. தவிரப் பஞ்சாங்க விஷயத்தில் அனேக பேதங்களிருப்பதை ஒழிக்க ஒரு ஜோதிஷ சபையும் இங்குக் கூடிற்று. அதை யனுசரித்துச் சாஸ்திர விசாரமும் நடந்துவருகிறது.

பிரதிஷ்டை விஷயத்தில் சாஸ்திரோக்தமாக எல்லாக்கிரியைகளும் சம்பிரமமாய் எட்டு நாள் நடந்தன. விக்கிரகங்கள் தேவிக்கோட்டையிலிருந்து வார்த்து வந்தவைகள். கோவில்களிரண்டும் மைசூர் ராச்சியத்தில் பழையகாலத்தி லரசாண்ட 'ஹொய்ஸல' ராஜாக்களின் கட்டடலக்ஷணங்கள் பொருந்தியவை யென்று அந்தச் சாஸ்திரந் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இந்த ஆலயங்களில், குறித்த முகூர்த்தத்தில், சிஷ்யகோடிகள் நாலு திக்கிலுமிருந்து வந்து, வெய்யில், மழை பாராமல், கைகூப்பி ஜயகோஷமுழக்க, மேற்கண்ட விக்கிரகங்களிரண்டும் பிரதிஷ்டையாகிக் கும்பாபிஷேகமும் முற்றுப்பெற்றது. பிறகு எல்லாவருக்கந்தவருக்கும் போஜனம் நடந்தது. சாயங்காலம் ஒரு பெரிய சபை கூடிற்று. அதில் ஸ்ரீமதாசாரியசுவாமிகள் அக்கிராசனம் வகித்து எழுந்தருளினார்கள்.

உடனே பல சங்கங்களிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகள், தத்தம்சங்கத்தவருடைய விக்ஞாபனப் பத்திரிகைகளைப் படித்துச் சுவாமிகளுக்கு நமஸ்கரித்தார்கள். அவைகளில், மேல்கோட்டை உபயவேதாந்த சபையில், வடகலை, தென்கலையிரண்டிலும்சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் படித்தது மெத்தவும் சிலாகிக்கத்தக்கது. இதனால் ஸ்ரீவைஷ்ணவருக்கும் ஸ்மார்த்தருக்கும் இதுவரை அனாவசியமாக வர்த்தித்து வந்த பரஸ்பர மாச்சரியங் குறைந்து வருவதும், ஆசாரிய சுவாமிகள் தமது அபூர்வ சுபகுணங்களால், தமது சிஷ்ய ஜனங்களுக்குமட்டுமேயன்றி, இதர மதஸ்தருக்கும் பூஜ்யராகி விளங்குவதும், பிரத்தியக்ஷமாயிற்று. பிறகு தார்வாரிலிருந்தும், திருநெல்வேலியிலிருந்தும் வந்த விக்ஞாபன பத்திரிகைகள் வாசிக்கப்பட்டன. இவைகளன்றி ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலிருந்தும் வேதாந்திகள் அனேகர் அனுப்பிய பத்திரிகைகளும் வாசிக்கப்பட்டன. கடைசியாக இச்சந்தர்ப்பத்திற்கென்று வெகு சிரமப்பட்டு, ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீவிலாஸ அச்சுக்கூடத் தலைவராகிய ஸ்ரீமான்-பாலசுப்பிரமணிய அய்யரவர்கள், ஸ்ரீபகவத்பாத சுவாமிகள் கிருதமான பாஷ்யம் முதலிய சகல கிரந்தங்களையும், ஒருங்கு சேர்த்து, நல்லகாகிதத்தில் தேவநாகரியில் அச்சிட்ட புஸ்தகத் தொகுதி



OF THE REGISTRAR OF BOOKS, RE TERED 18 MAY 1910 S.

கள் 20-ம் தக்க ஆவரணத்துடன் சுவாமிகளுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

பத்திரிகைகள் எல்லாம் படித்தானவுடன் ஸ்ரீமான்-மாதவராயரவர்கள் சபையிலிருந்த மகா ஜனங்களுக்குப் பிரதிநிதியாகச் சுவாமிகளுக்கு இவ்வாறு விக்ஞாபனம் செய்தார்:—

“மஹா சுவாமிகளே, இன்றையதினம் இவ்விடத்தில் ஸ்ரீ பகவத்பாத சுவாமிகளுடைய ஞாபக சின்னமாகச் சுவாமிகள் கையால் நடந்த பிரதிஷ்டையை யனுசரித்து, இந்தச் சுபமுகூர்த்தத்தில், ஹிந்து மகா ஜனங்களுக்குப் பிரதிநிதியாக அடியேன் ஏதோ இரண்டொரு விஷயங்களை விக்ஞாபனம் செய்கிறேன். இந்தப் பிரயத்தனம் ஆரம்பித்தது முதல் நடந்ததையெல்லாம் விவரித்தால் பெருகும். ஆனால் அது அனாவசியம். ஸ்ரீபகவான் பாஷ்யகார சுவாமிகளுடைய பிறப்பிடமாகிய இந்தஸ்தலத்தில் இன்று நிறைவுபெற்று நிற்கும் ஆலயங்களுடைய திவ்ய லக்ஷணங்களும், அவைகளைச் சுற்றிலுமுள்ள நதி, மலை, வனமுதலிய மனோகரமான காக்ஷிகளும், ஆல்வாய் நதிவைபவமும், இந்தச் சுபமுகூர்த்தத்தில் வந்திருந்து தரிசிக்க வேண்டுமென்கிற ஆக்கிரகத்துடன் நாலுதிக்கிலுமிருந்து வந்திருக்கும் புண்ணியவான்களுடையவும், புண்ணியவதிகளுடையவும், சங்கமும், இந்தக் காரியம் சாஸ்திரோக்தமாக நடந்தேறிய சம்பிரமமும், சுவாமிகளுடைய இஷ்டத்தை நன்கு விளக்குகின்றன. ஆனால் இந்தக் காரியத்திற்கு இவ்விடத்தில் இன்று நடந்ததுமட்டுமே முக்கிய பலனல்ல. கலகங்களும், குழப்பங்களும் ஆங்காங்குத் தலையெடுத்து சற்ஜனருக்கு விசாரத்தையுண்டுபண்ணும் இக்காலத்தில், இங்கு எல்லோரும் ஒருங்கு சேர்ந்து, வேற்றுமை சிறிதுமின்றி, இக்காரியத்தை ஒரே மனதாக நடத்தியதைப் பார்க்கையில், இந்தியாவில் பல பிராந்தங்களிலுமுள்ள, நானாவருக்கத்தவரான ஜனங்களுக்குள் நற்குணங்கள் இன்னுமிருக்கின்றன வென்று நிச்சயப்படுகிறது. தவிர, அவர்களுக்குள் அந்நியோந்நிய சகாயம் அதிகரிப்பதற்கும், இதைப் பெரிய சூசனையாகக்கொள்ளலாம்.

இந்தக் கால விசேஷத்தை யோசிக்கும்போது, நமது சனாதன தருமத்திற்கும், ஆசாரத்திற்கும், இதற்கு முந்தி அனேக சந்தர்ப்பங்களில் அபாயம் நேரிட்டதுபோல, இப்பொழுதும் ஒருபெருத்த அபாயம் நேரிட்டிருப்பதாகச் சொல்லலாம். ஏனெனில், புராதனமாகிய நமது வைதிகமார்க்கம் இப்பொழுது பலவாறாகச் சிதறுண்டுபோய், ஜனங்கள் அவரவர் இஷ்டதேவதைகளை இஷ்டம்போல் உபாசிப்பதும், இஷ்டம்போல் ஆசாரங்களை யனுஷ்டிப்பது மாயிருக்கிறார்கள். அதனால் இத்தனை மதபேதங்களுக்கும் வேதமே பிரமாணமாகுமாவென்று கூட நாம் சந்தேகிக்கவேண்டிவருகிறது. முன்னொருக்கால் இப்படிச் சிதறுண்டு, பரஸ்பரவிரோத மதிகரித்து வரும் சமயத்தில், எல்லோருக்கும் மதவிஷயத்தில் மயக்கம் உண்டாகவே, அந்த மயக்கத்தைத் தெளிவித்து ஜனங்களுக்குள் சதாசாரம் பிரபலிக்கும்படி செய்வதற் கென்றே ஸ்ரீ பகவான் பாஷியகார சுவாமிகள் அவதரித்தார். (சைவம், வைஷ்ணவம், முதலிய முக்கிய மதங்களுக்குள் பொதுவாகப் பற்று ஒன்றுமில்லாமலும், காபாலிகம் முதலிய மதபேதங்களுக்குள் துராசாரங்கள் பிரபலித்தும், இருந்ததில், இவற்றிற்கெல்லாம் பொதுவாக) அபேதோபசனை யென்கிற ஓர் சிறிய வேதாந்த ரகசியத்தினால், விரோதத்தைச் சமனப்படுத்தி, துராசாரங்களைக் கண்டித்து, வைதிக தருமத்தைச் சுவாமியவர்கள் நிலைநிறுத்தியதில், அவர்களுடைய வேதாந்த ரகசியம் இக்காலத்தில் இந்துக்களிலுள்ள மதபேதங்களுக்குமட்டுமேயன்றி, உலகத்திலுள்ள சகல மதங்களுக்கும் மூலாதார

மாகலாமென்று நம்ப இடமுண்டாயிருக்கிறது. (ஆதலால் சுவாமியவர்களுக்குத்தான் ஜகத்குருவென்கிற பட்டம் தகும்.)

முந்தி எப்பொழுதெல்லாம் நமது தருமத்திற்கு லோபம் வந்ததோ, அப்பொழுதெல்லாம் மகானுபாவர்கள் மூலமாகப் பரிகாரமும் ஆகியிருப்பதால், தற்காலம் இந்தப் பரதகண்டத்தில் உண்டாகி வருகிற சண்டை சச்சரவுகளுக்கும் பரிகாரமாகியே, இன்றையதினம் இப்பெருங் காரியம், ஸ்ரீ பாஷ்யகார பரம்பரையில் சம்பன்னராகி விளங்கும் சுவாமிகள் முகாமையாக நடந்தேறியது. சில்லரை விஷயங்களில் சச்சரவுகளை யொழித்து, முக்கிய அம்சங்களில் விவேகிகளை ஒருமனப்படுத்தி, பாஸ்பரசிநேகத்தை மகா ஜனங்களுக்குள் பிரபலிக்கச் செய்ததே ஸ்ரீ பாஷ்யகார சுவாமிகளுடைய ஸ்மிருதியாதலால், அது என்றும் நிலைபெறுமென்பதும், தழைத்தோங்குமென்பதும் நிச்சயம்.

இவ்வாறு புகழ்பெற்ற சுவாமிகளுடைய காலத்திற்குப் பிறகும் வைதிகமதம் பலவாறாகப் பிரிந்துதான் போயிருக்கிறது. ஆனால் அவற்றைப்பற்றி நாமிங்கே பேசவேண்டுவதில்லை. மொத்தத்தில் ஆசாரிய சுவாமிகளால் மதவிஷயத்தில் இந்நாட்டு மகாஜனங்களுக்குள் ஏற்பட்ட விசால புத்தி நாளது வரை குன்றாமலிருப்பதுடன், நாளுக்கு நாள் வர்த்தித்தே வருகிறது. அந்தப் பரம்பரையில் இப்பொழுது பிரசன்னராயிருக்கிற சுவாமிகள் போன்ற மகாத்துமாக்கள் இருந்து நமக்குச் சன்மார்க்கத்தையும், குருபக்தியையும் உபதேசித்து வருமளவும் இவ்விஷயத்தில் ஒரு குறைவுமில்லையென்பது நிச்சயம். ஏனெனில் சுவாமிகளுக்கு வித்தை, விநயம் முதலிய சுபலக்ஷணங்களால் விளங்கும், மகத்துவம் மட்டுமேயல்லாது, பலவகைப்பட்ட இதர மதஸ்தரையும் ஒன்று சேர்த்து, அவர்களுக்குள்ள விரோதங்களைத் தணியச் செய்து, சிநேகப்பற்றுகளை அதிகரித்து, பொதுக்காரியங்களில் ஒரு மனத்தவராக்கும் அபூர்வ சக்தியுமிருப்பது கொண்டுதான் இப்பெருங்காரியம் இவ்வளவு சிறாக நடந்தது. பல தேசங்களிலிருந்தும் வந்திருக்கும் இம்மகாஜனங்களெல்லோரும் இவ்விஷயத்தில் ஒன்றுகூடி, ஒரே மனதாக இந்த மகோற்சவத்தை நடத்தியதும், அவரவர் தத்தமக்கேற்ற காரியங்களிலமர்ந்து சிரத்தை, பக்தியுடன் காரியத்தை நிறைவேற்றியதும், சுவாமிகளிடத்தில் அவர்களுக்குள்ள பக்தி விசேஷத்தைப் பொருத்ததென்றே விளங்கும். ஏனெனில் இந்நாட்டிலுள்ள ஜனங்கள் சாமான்னியமாய் எதற்கும் ஒன்று சேருவதில்லை. அப்படிச் சேர்ப்பதும் வெகு பிரயாசம்.

தவிரச் சுவாமிகள் சமீபகாலத்தில் தக்ஷிண தேசத்தில் ஆங்காங்கு விஜயம் செய்து வந்ததில், இந்து மதஸ்தர்களெல்லோரும் சுவாமிகளுக்கு ஒரே விதமாக மரியாதை செய்துவந்ததையும், (இச்சபையில் மைசூர் உபயவேதாந்த சபைப்பிரதிநிதிகள் வந்துகூடி விக்ஞாபனப் பத்திரிகை வாசித்ததையும்,) இதுபோன்ற வேறு சூசனைகளையும் பார்க்குமிடத்து, சுவாமிகளைப்போல், பெரிய மடத்திற்கு அதீனமும், சுதாவில் வித்தை, குணம் முதலிய சுபலக்ஷணங்களும் கூடிய மகான்களிருப்பதனால்தான், நமது ஜனங்களுக்குள் சனாதன தரும விஷயத்தில் பக்தி யதிகரித்து வருகிறதென்பது நிச்சயமாகிறது. ஆதலால் இங்குக் கூடியிருப்பவர்களாகிய மகாஜனங்களுடைய நமஸ்காரத்தையும், சிரமத்தைப் பாராட்டாமல் இக்காரியத்தைச் சுவாமிகள் வகித்துச் சிறாக நடத்தியதற்காக அவர்கள் விஷயத்தில் மகாஜனங்களுக்கிருக்கும் நன்றி விசுவாசத்தையும் நான் விக்ஞாபனம் செய்துவிட்டு உட்காருகிறேன்," என்றார்.

பிறகு சுவாமிகள் இவைகளுக்கெல்லாம் கிரமப்படி பிரதியுபசாரஞ் சொன்னார்கள். சுமார் ஒருமணிநேரம் அவர்கள் வாக்கிலிருந்துதமிழ்ப் பாஷையில் வந்த உபந்நியாசத்தை அனைவரும் சிரத்தையுடன் கேட்டு ஆனந்தித்தார்கள். ஜனங்களுக்குள் ஒற்றுமையும் சிநேகமும் இருக்கவேண்டுமென்பது ஸ்ரீ பகவத்பாத சுவாமிகளுடைய முக்கிய உபதேசமாதலால், அதை அவர்கள் கவனித்து நடக்க வேண்டுமென்றும், ஒவ்வொருவரும் தமது தருமத்தைப் பரிபாலனம் செய்யவேண்டியது பெரிய நியமமாதலால் தம்மாலானவரை தாம் தமக்கேற்பட்ட தருமத்தைப் பரிபாலனம் செய்ய முயன்று வருவதாகவும் சுவாமிகள் பிரசாதித்தார்கள். தவிர, சனாதன தருமத்திற்குப் பழைய நாளில் சில சமயங்களில் இதர துரைத்தனங்களால் இடையூறுகள் உண்டாயிருந்தன வென்றும், இப்பொழுதோ, சர்க்கார் எவ்விதத்திலும் ஜனங்களுடைய க்ஷேமத்தையே கோரி நடந்து வருவதால், அவரவர் அவரவருக்கு ஏற்பட்ட சாஸ்திர சம்மதமான காரியங்களைச் சிரத்தையுடன் செய்து, மகாஜனக்ஷேமத்தை நாடி யுழைத்து, இம்மை மறுமை யிரண்டிலும் சுகமடையும்படி பார்க்க வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்கள்.

பிறகு இக்காரியத்திற்கு முக்கியஸ்தராகிச் சகல பாரத்தையும் வகித்து நடத்திய ஸ்ரீமான் ராமசந்திர அய்யரவர்களுக்கு, ரத்தினங்களிழைத்த ருத்திராக்ஷ கண்டியொன்றை யிட்டு, சால்வைகள் கொடுத்து, 'குரு பக்த கேசரி' யெனப்பட்டப் பெயரும் கொடுத்துக் கௌரவித்தார்கள். வேறு இரண்டொரு முக்கியஸ்தருக்கும் தக்க மரியாதைகள் நடந்தன.

இனிமேல் இந்த ஆலயங்களைப் பரிபாலனம் செய்யவேண்டிய கிரமங்களுக்கும், இவ்விடத்தில் வித்தியாபியாசத்திற்கும், சாஸ்திர அபிவிர்த்திக்கும் தக்க ஏற்பாடுகள் ஏதாகிலும் நடக்கலாமென்று காணுகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே அக்கிரகாரங் கட்டுவதற்கும், பூஜை முதலியன கிரமமாக நடப்பதற்கும், பக்தர்கள் திரவிய சகாயம் செய்துவிட்டார்கள். பாடசாலையும், வருஷந்தோறும் சங்கமும், ஸ்ரீ ஆசாரிய ஜயந்தியும் நடக்கும். திருவாங்கூர் சமஸ்தானத்திய உதவியுமிருக்கும். ஆதலால் மனுஷிய யத்தனத்தில் இந்த ஞாபகசின்னம் வெகு காலத்திற்குச் சிஷ்ய கோடிகளுக்குள் குருபக்தியும், நல்லறிவும், நன்னடக்கையும் அதிகரிப்பதற்குச் சாதனமாக வேண்டுமென்று நாமெல்லோரும் ஸ்ரீபகவத்பாத ஆசாரிய சுவாமிகளைப் பிரார்த்திப்போமாக.

---

ஒரு தம்பிரானுக்கும் அவ்வூர் முனிசீபுக்கும் வெகு நாளாக விரோதம். முன்சீபு அவனை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டுமென்றிருந்தார். கடைசியில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு கேசில் தம்பிரான் சாக்ஷியாக வந்தான். அவனுக்கு இரண்டு கண்ணுங்குருடு. ஆதலால் ஒரு பையன் கோலையொரு தலைப்பில் பிடித்துக்கொண்டு வழிகாட்டிவரத் தம்பிரான் கோர்ட்டுக்குள் வந்தான். உடனே முன்சீபு ஏதோ ஒரு வியாஜியத்தைக்கொண்டு தன் கோர்ட்டு நடக்கவொட்டாமல் சந்தடி செய்வதாகப்புகார் உண்டாக்கிக்கொண்டு தம்பிரானை வாயில்வந்தபடி திட்டினார். சற்றுநேரம் கேட்டுவிட்டுத் தம்பிரான் வழிகாட்டிவந்த பயலைக்கூவி, "அடே முட்டாள் பயலே, அந்தப் பயலே, இந்தப் பயலே, நான் உன்னைக்கோர்ட்டுக்கல்லவா கூட்டிப்போகச் சொன்னேன். அந்தப்படுபாவி பார்ப்பார பயல் பொல்லாத வனுச்சதே. அவனுக்கு இரக்க மென்பது கிடையாதே. சண்டாளன், வேலைக்குப்போகாவிட்டால் பெரிய அமுல் நடத்திவிடுவானே. ஆதலால் சீக்கிரம், போவோம் வா, இங்கெங்கேயோ கடைத்தெருவில் குடிகார பயல்களிருக்கு மிடத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு வேடிக்கை பார்க்கிறாய். உதைப்பேன், சீக்கிரம்வா," என்றான். இதைக்கேட்டதும் முன்சீபு ஒருவர்தவிர மற்றெல்லோருக்கும் முகத்தில் மந்தஹாசம் கண்டது. முன்சீபுக்கு மட்டும் மேல் நடவடிக்கை யொன்றும் தோன்றாமல், முகம் வாடிற்றும்.

## திருக்குறள்—விஷய விமர்சனம்

ஸ்ரீமான் பண்டித வேங்கடரமண அய்யரவர்கள்

சிலமாதங்களுக்கு முன் பத்திராதிபருடைய நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் 'பிள்ளைத் தமிழைக்' குறித்து ஏதோ தெரிந்ததை யெழுதியதில், அதைச்சிலர் ஒருவாறாகக் 'கொள்ளாம்' என்றமையால், மறுபடி அவ்வாறு ஏதாகிலும் எழுதிவரலாமென்று கொண்டு, விஷயமின்னதென்று நிஷ்கரிஷையாக வேண்டி யோசித்தேன். தமிழுக்குச் சிறப்பாயுள்ள இலக்கணங்களையோ, இலக்கியங்களையோ பரிசிலனை செய்வது தான் தற்காலம் ஆகவேண்டிய காரியமென்பது என்னுடைய கருத்து. ஆகவே, தமிழுக்குச் சிறந்துள்ள இலக்கணங்களில், தொல்காப்பியம், பொருளதிகாரம், போன்ற அபூர்வ விஷயங்களையாவது, திருக்குறள்போன்ற இலக்கியரத்தினங்களையாவது எடுத்து, ஏதோ தெரிந்ததைப் பிரஸ்தாபித்து விடுவது நலமென்று கண்டது. எவ்வகையிலும் நற்பயன் சித்திப்பது உறுதியெனக் கொண்டு தான் நானிப் பெருங்காரியம் தொடங்குவது. ஏனெனில், நான் எழுதிவருவதில் தோஷங்காணுபவர்கள், என்னைவிடச் சிறந்த வித்துவான்கள் (தோஷக்ஞர்கள்.) ஆதலாலவர்களுடைய வித்தை எனக்கும் ஒருசமயம் பிரயோஜனப்படும். என்னைவிடத் தாழ்ந்த கல்விமான்களோ இதில் தோஷம் காணமாட்டார்கள். அவர்களுக்கு நான் சொல்லுவது ஏதாகிலும் நற்பயனைக் கொடுத்தாலும் கொடுக்கும். எனக்குச் சமானமானவர்களுக்கோ, நான் சொல்லுவதெல்லாம் சரியெனப்படுமாதலால், அவர்கள் விஷயத்தில் எனக்குச் சிந்தையே இல்லை. இலக்கணநூல்களைவிட இலக்கியநூல்கள் ஆராய்ச்சிக்குச் சுலபமாவனவென்பது பிரத்தியக்ஷம். தவிர மாதாந்தர சஞ்சிகையில் காணும் விஷயங்கள், கேவலம் நாலு வித்துவான்களுக்கு மட்டுமே ரஸிக்கக்கூடிய 'முன்னென்னும் சொல்வழக்கு,' போன்றவையன்று. ஆதலால் வெகு பெரிய இலக்கண ரகசியங்களை விளக்க எனக்குப் போதுமான திறமிருப்பதாக வைத்துக்கொண்டாலும், விசேஷமாக எனது பிரயாசம் வியர்த்தமாகிவிடும் என்று காணுவதால், இலக்கணத்தை யொழித்து, இலக்கியங்களிலேயே சற்று விஹாரணம் செய்யலாமென்பது எனது சங்கற்பம்.

முதன் முதல் எடுத்தது பிள்ளைத்தமிழ். அது சாதாரணமாதலால், நீர் அதையெடுத்தது சரிதான். தெய்வப்புலமை நாயனருடைய திருக்குறளையும் அவ்வாறு நாலு வார்த்தையில் ஒழித்துவிடப் பார்ப்பது உமக்குச் சரியாவென வித்துவான்கள் ஆக்ஷேபிக்கலாம்.

> "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தறித்த குறள்,"

என இடைக்காடர் வருணித்து அதைச் சரியெனப் பின்னிட்டு வந்தவரெல்லோரும் ஒப்பியிருக்க, அதை மறந்து மாதாந்தரச் சஞ்சிகையில் இரண்டொரு பக்கத்தில் குறளைப் பற்றி யறிய வேண்டுவதையெல்லாம் அறிவித்து விடுவேனென்று புகுதல் மதியீனம்தான். ஆனல் திருக்குறளுக்குள்ள முற்காலத் தற்காலத்தசையைச் சற்று விசாரித்தால், நான் எடுத்தது முற்றும் மதியீனமன்றெனத் தெளிவாகுமென்று நம்புகிறேன்.

திருக்குறள் எக்காலத்தில் உண்டாயிற்றென்றுவது, நாயனர் எங்கு வாழ்ந்தவர், எக்காலத்திருந்தவர், என்றுவது இனி நிஷ்கரிஷைப் படுத்துவது அனேகமாய்க் கூடாத காரியமென்றே சொல்லிவிடலாம். திருமயிலைப்பதியின்கணுள்ள சில சாக்ஷியங்களையும், ஐதிகங்களையுங்கொண்டு, அங்கு வாழ்ந்தவரென்னலாமென்றால், அங்கு அக்காலத்தில் கல்வி பெருகிச் சங்க முதலியன சிறந்து நின்றதாக ஒருவாற்றனும் புலப்படவில்லை. ஆதலால் அவ்விஷயத்தில் ஒன்றும் சொல்லத்தோன்றவில்லை.



சரி, இடம் போனதுபோகட்டும், ஜாதி, குலம் முதலிய விஷயமோவென்றால், இன்னும் விபரீதம். முதற்குறளில், கடவுள் வாழ்த்து முறையாக 'ஆதி பகவன்,' என்றது கொண்டு, நாயனருடைய தாய்க்கு 'ஆதி' என்றும், தகப்பனுக்குப் 'பகவன்' என்றும் பெயரிருந்திருக்கலாமென ஒரு வதந்தியுண்டு. இதைக் கொண்டு நாம் பிடிவாதமாகச் சொல்லுவதற்கொன்றுமில்லை. வேறு சாக்ஷியங்களால் இது நிச்சயமாக ஏற்படுமானல், இதையும் சேர்த்துக் கொள்ளலாம். இதைப்பற்றிப் பேசுவோர், நாயனரது மாதாபிதாக்களை பிரு குலத்தவராக்க ஆக்கிரகப்படுபவராம். இது அதிசயமன்று. இந்நாட்டில் மட்டுமேயல்லாது வேறு நாடுகளிலும், பெரியோருடைய வரன்முறைக்கு இவ்வாறு ஒருபுதுமை கற்பிக்காவிட்டால், அப்பெரியோருக்குப் பெருமையில்லை யென்பது ஒரு பாலார் கோட்பாடுபோலும். ஆகவே, ஸ்ரீவியாசபகவானைப் பிராம்மணனுக்கும், வலைச்சிக்கும் பிறந்தவராகவும், வேறு அனேகரைத் தெய்விகமாய் உண்டானவராகவும் பேசிவருதல் சாமான்னியம். ஜனன விஷயத்தில் எப்படியோ அப்படியே மரணவிஷயத்திலும் ஏதேனும் அதிசயம் கற்பிப்பது நமக்குள் சகஜமாகிவந்திருக்கும் லக்ஷணமாம்.

'வள்ளுவர்,' என்ற பெயரைக்கொண்டு நாம் இவரை அச்சாதியவரென்றே ஊகிக்கலாம். இப்போது வள்ளுவரென்று சிலர் ஆங்காங்கிருப்பவருக்கும் ஏதோ ஞானமிருப்பதாலும்,

> "வள்ளுவரைக் கேட்போம், அவர், எடுத்துச்
> சொன்னரின்த விடுத்துச்சொன்னர்......"

என்று [illegible] சரித்திர முதலியவற்றிலுள்ள பிரயோகங்களினலும், இவர் அச்சாதியவ ரெனலாம். அதனல் அவருக்கு ஒருகுறைவுமில்லை. ஏனெனில் அவரது புகழுடம்புக்கு யாராலும் [illegible]. ஆனல் இவர் வள்ளுவராயின், திருக்குறளில் காணும் மனுதருமநூல் முதலிய வடமொழி மேற்கோள் இவருக்கெப்படி முற்றும் கைவசமாயிருக்கக்கூடுமென்பது விளங்குவதில்லை. குறட்பாவில் நிகரற்றுப் பாடிய பெருமையைத் தெய்வப் புலமை யென்று யாருமங்கீகரிப்பார்கள்: என்றலும் திருக்குறளில் காணும் விஷயவிசேஷங்களெல்லாம் யாருக்கும் தானக வருவன வல்லவாதலால், அவை எப்படி நாயனருக்குக் கிட்டியன வென்பதுதான் நமக்கு விளங்காத விஷயம்.

ஆதலால் நாயனருடைய பிறப்பிடம், ஜாதி முதலிய தொன்றும் நமக்குத் தெரியாததுடன்; அவர் கல்வி கற்ற பெருமையும், குறட்பாவில் அவருக்கு முற்பட்டிருந்த அனுபவமும், அவரது நண்பர், அவர்காலத்தில் இக்குறட்பாவைச் சிலாகிக்கவல்ல 'மூப்பர்,' இத்தியாதி விஷயங்களைக்குறித்து நாமொன்றும் அறிவது சாத்தியமன்று. என்றலும் இரண்டு அம்சங்கள் மட்டும் ஏதோ தேவர் வாக்கைக்கொண்டே ஒருவாறு ஊகிக்கலாம். அவையாவன, அவர் நூலியற்றிய காலமும், அவரது மதக்கொள்கையுமாம்.

நூலியற்றிய காலமென்றால், வருஷம், மாசம், தேதியல்ல. அது இனி முடியாத காரியமென்பதில் நமக்குச் சந்தேகம் சிறிதுமில்லை. ஆனல் மொத்தத்தில் இன்னகாரியங்களாகிய பிறகு தான் இவர் 'திருக்குறள்' உண்டாக்கி, அதைப் புலவர் ஏற்குமாறு செய்தது சாத்தியமென்று நாம் அறிந்துகொள்வது சுலபம். இதையறிவதற்குத் தக்க சாக்ஷியங்கள் வேறே தேடுமுண்டாமெனில், விசேஷமே. இல்லையெனக்காணுவதால், அவர் எடுத்துக்கொண்டவிஷயங்களையும், விவரிக்கும் முறையையும் சற்று நிதானித்துப் பார்ப்பதில் ஏதேனும் அவர் காலக்குறிப்பு [illegible] அறிவது சாத்தியமேயென்று நிச்சயிக்கவேண்டும்.

நாயனார் எடுத்து விளக்கிய விஷயங்கள் மூன்று. அவையாவன, தருமம், அர்த்தம், காமம், என்றால், முறையே அறம், பொருள், இன்பம் என்று தமிழர் கூறுவனவாம். இவற்றோடு 'மோக்ஷம்' என்னும் 'வீட்டையும்' சேர்த்துக் கொண்டால், 'புருஷார்த்தம்' என்று வடமொழியில் சாமான்னியமாய் வழங்கும் நான்கு சாதனங்களுமாம். மனிதன் ஜன்மமெடுத்ததற்கு இந்நான்கு புருஷார்த்தங்களையும் அடைவதே முக்கிய லக்ஷியமென்பது முன்னோர் கூற்றல்லாது, நாளதுவரை நாம் செய்துவரும் சங்கற்பங்களிலுங் காணும்.

இவற்றுள் அறமாவது, மனது, வாக்கு, சரீரம் ஆகிய மூன்று கரணங்களாலும் நாம் செய்யவேண்டிய கருமங்கள். உதாரணமாக, 'கடவுள் வாழ்த்து' முதலியன மனத்தினால் விசேஷித்தாகவேண்டிய கருமமாகவும், 'பொய்யாமை' முதலியன வாக்கை விசேஷித்ததாகவும், 'கொல்லாமை' முதலியன சரீரத்தை விசேஷித்ததாகவும் காணும். எக்காலத்தும் இம்மூன்று காணங்களாலேயே மனிதன் மணம் பெறுவதும், நாசமடைவதும் அனுபவமாதலால், அவற்றைக்கொண்டு, இன்னவைகளைச் செய், இன்னவைகளை யகற்று, என்று அறத்துப்பாலில் கூறியிருக்கிறது.

இனியிதிற் கூறிய தருமங்களைக் கிரமப்படி நடத்தவேண்டு மென்றால், அதற்கு முக்கிய சாதனம் 'பொருளே' யானதுபற்றி, அதை அறத்தின் வழிபற்றிக்கூறினார். 'தனத்தின் மூலமாய்த் தருமம், அவ்வழியாய்ச் சுகம்,' என்பது பெரியோர் வாக்கியமாகவும், 'வெறுங்கோணியை நிலை நிறுத்தலரிது,' என மேனாட்டுப் பழமொழியாகவு மிருப்பது கொண்டேனக. சம்பாத்தியம் நல்வழியிலென்பதே நாயனார் துணிவு. எவ்வகையானுஞ் சம்பாதிப்பதே முதல் தருமமென்பது நாகரிகம் வலுத்து முதிர்ந்த பின்னேற்பட்ட நியாயம். இந்நியாயத்தைக் கைப்பற்றிய லௌகிகப் பெரியோருக்கு நாயனார் சொல் ஏற்காது. அவர் ஏதோ ஏட்டுச்சுரைக்காய் நியாயமாக உளறுவதாகத் தோன்றும்.

இம்மாதிரி நன்னெறிப்பற்றிப் பொருளீட்டுதற்குப் பல துணைக்கருவிகள் வேண்டியிருப்பது பிரத்தியக்ஷம். செல்வம் சகடக்கால்போல் வருவது ஒருவாறு நிஜமென்றாலும், செல்வத்திற்குச் சாமான்னியமாய்க் 'கல்வி, ஒழுக்கம்,' முதலிய "அகக்கருவிகளும்," 'அரசு, சட்டம்' முதலிய "புறக்கருவிகளும்," வேண்டியனவாயும், இன்றியமையாதனவாயுமிருப்பது இக்காலத்தில் எல்லோருக்கும் பிரத்தியக்ஷமாகி வருகிறது. பீ. ஏ. பரீக்ஷையில் 'வைசிகம்' என்னும் செல்வநூலைக் கற்போர், 'அரசியல்' பொருளீட்டுதற்கு எத்தனை தூரம் இன்றியமையாச் சாதனமென்பதை நன்கறிவர். ஏனையோரும் இந்த ரகசியத்தை எளிதில் அறியலாம். நமதுடைமை, நமதகம், நமது பெண்டிர், நம்மக்கள், என்று ஒவ்வொருவனுக்கும் நிச்சயமும், நமக்குப்பின் நமது மக்களே நாம் தேடியவற்றைப் பெற்றுச் சுகிப்பவர், என்கிற நியமமுமில்லாவிட்டால், நம்மில் எத்தனை பெயருக்குப் பொருளீட்டுவதிலும், அதற்காகத் திரைகடலோடுவதிலும், உற்சாகமிருக்கும்? ஆப்பிரிக்காவில் நீக்கிரவர் குழந்தைகளை அடிமை வியாபாரிகள் வேட்டையாடிப் பிடிப்பதுபோலவும், வெள்ளாளனுழுது பயிரிடப் பிண்டாரி அதை அறுத்துப் போவதுபோலவும், இருந்தால் நம்மில் யார் உழைக்கப் பிரியப்படுவார்கள்? ஆதலால் செல்வத்திற்கு வேண்டிய துணைக்கருவிகளாகிய கல்வி முதலியவற்றில், அரசியல் முதற்பதவி பெறுவது சித்தம். அது கொண்டே நாயனாரும், பொருட்பாலில் அரசையும், அவ்வரசு சீராக நடக்க வேண்டியதில் ஏற்பட்ட அமைச்சு முதலிய அங்கங்களையும், எக்காலத்திற்கும் ஏற்குமாறு வெகு நேர்த்தியாகக் கூறியிருக்கிறார்.



அறமும், பொருளும் சித்திக்குமிடத்து, 'இன்பம்,' என்றால், அன்புடை மனைவியுடன் இனிது வாழ்ந்திருத்தல் உத்தம பலனாதலின், அதையிதற்குப்பின் அமைக்கப்பெற்றுளோம்.

புருஷார்த்தம் நான்காதலின், நாலாவதாகிய மோக்ஷத்தைக் குறித்து நாயனாரேன் சொல்லவில்லை யென்பதற்குப்பலர் பலவிதமாக நியாயங் கூறுவர். சிலர், இதனால் நாயனார் துறவறத்தை யிகழ்ந்து இல்லறத்தையே மேம்படுத்தினா ரென்றும், சிலர் இன்னொரு நியாயங் கற்பித்தும் பேசுவதுண்டு. ஆனால் இப்படியவரவர் மனோதருமங்களை அன்னியர் கருத்தோடு இயைத்துப் பேசுவது பதராகும். இப்படியே வடமொழியிலும், ஸ்ரீகாளிதாச கவி ரகுவம்சத்தில் பத்தொன்பது சருக்கம் தான் பாடியிருக்கவேண்டு மெனக்கூறியும், வால்மீகி 24000-சுலோகங்கள் தான் செய்திருக்கவேண்டு மெனக்கூறியும், வீண் பேச்சுப் பேசுவதுண்டு. அதை நாம் தள்ளிவிட்டு, 'இருப்பதை யியக்கல் வேண்டும்,' என்னும் நியாயத்திற்கிணங்க, நாயனார் சொல்லியதை மட்டும் கவனிப்போமாக.

இதுவரை சொல்லியதால் 'திருக்குறள்' ஒரு பெரிய தருமசாஸ்திரமென்பது விளங்கும். ஆதலால், இதற்கு முதனூல்களெவை யெனத் தெளிதல்வேண்டும். விஷய அமைப்பு, விவரணம், வருணனை முதலியவற்றை ஆராய்ந்து நோக்குங்கால், வடமொழியில், மனுதரும சாஸ்திரம், சுக்கிரநீதி, வேதங்களில் முக்கியமாக உபநிஷத்து பாகங்கள், ராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள், ஸ்ரீ பாகவதம் முதலிய இரண்டொரு முக்கிய புராணங்கள், இவையனைத்தும் தென்னாட்டிற் பிரபலித்து, வித்துவான்களுக்கும், சாமான்னியருக்கும் செம்மையாகப் பரிசயமான பிற்பட்டுத் தான் உண்டாகிய கிரந்தமென்பது பிரத்தியக்ஷம்.

தவிரப் புத்த, ஜைனமதங்களாகிய வைதிக மதப்பிரிவுகளும் இத்தென்னாட்டில்தழைத்து, ஓங்கிப் பெருகியபின்னரே திருக்குறள் அமைக்கப்பெற்றதென்பதை, எல்லா மதஸ்தரும் தமது, தமது, என்று ஏற்குமாறு அமைந்திருப்பது கொண்டு நன்கறியலாகும். அல்லாமலும், வைதிக விஷயமாகப் பேசியதில் கரும மார்க்கத்தை வெகுவாய்க் கண்டித்து, ஞான மார்க்கத்தையும், பக்திமார்க்கத்தையுமே சிறப்பித்திருப்பது கொண்டும், ஒருவாறு கால நிர்ணயங் கண்டறியலாம். தவிரக் குறள் முற்றுமாராய்ந்ததிலும், ஐந்தாறு புராண விஷயங்கள் சூசனையாகக் காணுவதொழிய வேறு காணமையாலும், முரட்டு வழிகளை முரட்டாட்டமாகக் காண்பிவிக்கும் சமயநூல்களேற்படு முன்னரே தான் நாயனாரிருந்து செழித்திருக்கவேண்டும். "அடியளந்தான்ற அயதெல்லாமொருங்கு," "இந்திரனே சாலுங்கரி," "அன்புடையாரென் புமுரியர் பிறர்க்கு," என்பனபோன்ற சில சூசனைகளால், ராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய முக்கிய நூல்கள் பிரபலித்திருந்ததும், ஏனைய புராணாதிகள் பிரபலிக்காததும் விளங்கும்.

இவ்வாறு நாயனார் எடுத்த விஷயங்கள் வேதசாஸ்திரங்களை யொட்டியவாயினும், அவற்றை விளக்கியிருக்கும் நடையும், குறட்பாவின் மகத்துவமும், வருணனை விசித்திரமும், நாயனாருக்கென்றே யேற்பட்ட அபூர்வ லக்ஷணங்களாம். ஆதலாலவரை 'உத்தமக்கவிகளிலுத்தமர்' என்று வெகு காலமாகப் புலவர் கொண்டாடிவருவதும், பூஜிப்பதும் சரியானதேயாம். தமிழுக்குள்ள சக்தியிவ்வளவென்று இலக்கிய மூலமாய்த் தெளிவாக்கவே இவர் திருவவதாரஞ் செய்தனரெனல் தகும், தகும். சொற்சுருக்கமும், புதைபொருளும் இனிவிசேஷித்து இதினிற் சிறந்து காண்பதரிதரிது. "ஒரு மாத்திரை லகுவானால் அதைப் புத்திரோற்சவத்திற்குச் சமமாக இலக்கண வித்துவான்கள்

கொண்டாடுகிறார்கள்," என்ற நியாயம் இலக்கணச் சூத்திரங்களுக்கு அமைந்தாலும், அமையாவிட்டாலும், திருக்குறளுக்கு வெகு நன்றாயமையும். படாடோபத்திற்காகப் பதங்களை யுபயோகித்தும், கிரோட்டகயமகவந்தாதி பாடியும் வந்திருக்கும் பிற்காலத்திய வித்துவான்களுடைய தமிழ்ப்புலமைக்கும், நாயனார் புலமைக்கும் வெகுதூரம். சிறுபதங்களாகவும், அதிலும் அரும்பதங்களை யுபயோகிக்காமலும், விசேஷமாகச்சந்தி முதலிய இடறுகளில்லாமலும், தமிழைக் கேட்கக்கேட்க ஆனந்தம் பொங்கும் படிக்கும், எல்லா மதஸ்தர்களும், எல்லாநாட்டாரும், நன்று நன்றென்னும்படிக்கும், எழுதிய வள்ளுவரைத் தேவரென்று உச்சிமேற்கொண்டது அதிசயமேயன்று.

(இன்னும்வரும்).

~~~~~~~~~~~~~~~~

ஒரு நாள் ஒரு நதிக்கரையில் இரண்டு காட்டாள்கள் நின்றுகொண்டிருந்தார்கள். நதியில் வெள்ளம் பிரவகித்துப்போய்க் கொண்டிருந்தது. அதிலகப்பட்ட கரடி யொன்று மேலுங்கீழுமாக உருண்டு போய்க்கொண்டிருந்தது. அதை யேதோ கம்பிளி மூட்டையென்றும், அதற்குள் ஏதாகிலும் நல்ல சாமான் இருக்கவேண்டு மென்றும் இவர்கள் எண்ணியபடியால், ஒருவன் உள்ளே குதித்து நீந்திப் போய் அதைப்பிடித்தான். தனக்குப்பற்றேதாகிலும் கிடையாதாவென்று கரடி தபசு பண்ணிக்கொண்டிருந்ததால், ஆள் அகப்பட்டதும் அவனைக்கெட்டியாக இறுக்கிப் பிடித்துக் கட்டிக்கொண்டது. உடனே அவன் அதைத் தப்பித்துக்கொள்ளப் பார்த்து முடியாமல், அதுவும் தானும், மேலுங்கீழுமாய்ப் போராடுவதைக் கரையிலிருப்பவன் கண்டு, 'தம்பீ, கம்பிளிமூட்டை கிடக்கட்டும், நீ கரைவந்து சேர்,' என, அவன், 'அண்ணா கம்பிளிமூட்டையைப நான் விட்டுவிட்டேன். ஆனால் கம்பிளிமூட்டை என்னை விடமாட்டேன் என்கிறது. என்ன செய்வேன்!' என்று சொல்லி இறந்தானாம். நமது பாப மூட்டைகளும் இவ்விதமே நம்மைத்தொடர்ந்து செல்லும்.

## மேனாட்டாரும், கீழ்நாட்டாரும். வித்தியாவிஷயம்

ஸ்ரீமான். கே. ஏ. துரைசாமி அய்யரவர்கள், பி. ஏ. எல். டி.

இந்த விஷயத்தைக்குறித்து முதலெழுதிய வியாஸத்தில் சில சரித்திர சாராம்சமாகிய தத்துவங்கள் கூறியுள்ளனவல்லாமலும், நாம் முயற்சியுடையோராவோமாகில், நாமும் நம் மிருப்பிடமாகிய இந்த ராச்சியமும் க்ஷேமத்தையடையுமென்பது கூறப்பெற்றது.

எக்காலத்திலும் பலிஷ்டர்களாகி யிருப்பவர்களுக்குத் தாழ்ந்தே பலவீனர்கள் நடக்கவேண்டுமென்பது நிர்ப்பந்தமில்லை. ஆனால் அந்த கையபலமோ, தேகபலம், புத்திபலமென இருவகைப்படும். சில காலங்களில் தேகபலத்தாற் சிற்சில ஜனங்கள் முன்னுக்கு வரவும், பின்னும் சில காலங்களில் புத்தி பலத்தால் காரியம் இயலவே, அதுபற்றி முன்னுக்கு வரவும், உலக நடவடிக்கையில் இம்மாதிரி மாறிக்கொண்டே யிருந்திருக்கின்றன. ஆதலால் இவ்விருதன்மையான பலமும் சேர்ந்திருக்கின்றவர்களை உலகத்தில் நிச்சயமாக ஜயமடைவதை நாம் காணுவதில் ஆச்சரியம் யாதொன்றும் காணவில்லை. அவற்றை நாம் அடையாமலிருக்கும்வரை நமக்கு எவ்விதமான நற்பதவியும் சாசுவதமாகக் கிட்டாதென்பது திண்ணம். ஆதலின் இந்த உயர்வு கிடைப்பதற்கு ஆங்காங்குக் காணப்படுகின்ற சாதனங்களையெல்லாம் ஒன்று சேர்த்தெடுத்து, நமது தேசத்திற்குத் தக்கவண்ணம் அவற்றை மாறுபடுத்தி, அவற்றிற்கிணங்க நடந்து, நாம் விருத்தியை யடையவேண்டுமென்று மனதிலுதயமாவது யாவரும் அங்கீகரிக்கத் தக்கதாயுள்ளது.

விஷயமோ அதிகம் பெரியது. எல்லாச் சமாசாரத்தையும் தெரிந்தெடுக்க முடியாதா



தலாற் சிலவற்றை மாத்திரம் இங்குச்சுருக்கிச் சொல்லலாகிறது.

தற்காலத்தில் சாமான்னியமாக மேனாட்டார் எங்கும் வியாபித்துத் தங்களுடைய நாகரீகத்தை ஏனையோர் கொண்டாடும்படியாகவும், தங்களுடைய ராஜதந்திரங்களைக்கற்று, தங்களைப் போலவே நடித்து, மேனாட்டாராக வேண்டுமென்கிற அவாக்கொண்டு அனேகர் நடக்கும்படியாகவும், மேன்மையை அடைந்திருப்பதற்கும், இந்து தேசியராகிய நாம் முன்னிருந்த உன்னதமான பதவியினின்றும் தாழ்வடைந்து, பலவிதக் குறைவுகளும் நம்மிடத்தில் காணப்படுவதற்கும், காரணங்கள் பலவுளவாயினும், அவற்றுள் முக்கியமாகக் காணப்படுவது வித்யாப்பியாசத்திலுள்ள வித்தியாசங்களே என்று தோன்றுகிறது.

காட்டுமிராண்டிகள் நிலைமைக்கு மேலேயிருக்கிற ஒவ்வொரு தேசத்திலும் எழுதப் படிக்கச் சனங்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் அநேகம் பேதகதிகள் காணுகின்றன. இவை அந்தந்தத் தேசாசாரங்களுக்கும் ஜனங்களுடைய மாதிரிகளுக்கும் ஒத்திருக்கின்றனவானாலும், காலக்கிரமத்தில் வரும் வித்தியாசங்களை யனுசரித்து மாறுபடாமல் நிரம்பவும் துர்ப்பலத்தையடைந்திருக்கின்றன. காலத்திற்குத் தகுந்தபடி, வேனிற்காலத்தில் இலேசான பஞ்சுத்துணிகளையும், குளிர்காலத்தில் சிங்காநல்லூர், பல்லாரிக் கம்பளிகளையும், உபயோகப்படுத்துவது எப்படி யுக்தமோ, அப்படியே வித்யா விஷயங்களிலும் மாறுபாடுகள் இதுவரை இல்லாமலிருந்ததால் தான் அநேகம் கெடுதல்கள் சம்பவிக்க இடமுண்டாயிற்று.

நமது ராச்சியத்தில் கல்விச்செல்வமே எல்லாச்செல்வத்திலும் சிறந்தது என்று கொண்டாடப்பட்டு, நம்முன்னோர், 'ஆத்தும ஞானமில்லார் மூடர்,' என்று தீர்மானித்து அதற்கு வேண்டிய சௌகரியங்கள் பலவும் ஏற்படுத்தியிருந்தார்கள். தருமத்திலெல்லாம் இதுவே சிரேஷ்டமான தருமமென்று அவர் புத்திக்குத் தோன்றியதால், அறிவின்மையாகிய அந்தகாரத்தைப்போக்கி, மின்போன்ற நுண்ணறிவை உட்புகட்டி, ஆத்துமகோடிகளெல்லாம் எங்கும் தழைத்து ஓங்கி வளரவேண்டும் என்றும், உண்மையான அறிவு பரவவேண்டுமென்றும் கருத்துக் கொண்டார்கள். ஆதலால் தான் ஒவ்வொரு குருவும் தம்மாலியன்றமட்டும் சிஷ்யர்களுக்கு அன்னமிட்டுப், பிரதியுபகாரம் எதிர்பாராமல் வித்தையையுதவி, அவர்களைக் கரையேற்றிக்கொண்டு வந்தார். பின்னிட்டு அவர்களுடைய தரித்திரதசையால் அது சாத்தியப்படாமலாகவே, இக்காலத்தில் சில இடத்தில் நாட்டுக் கோட்டைத் தனிகர்களாலும், வேறு சில பிரபுக்களாலும், பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு, தருமத்திற்கு அன்னம் ஆதரவுடன் அளிக்கப்பெற்று, சில வித்தியார்த்திகள் வித்தையைத் தேடிவருகிறார்கள்.

இவ்விதமாய் நமது நாட்டில் அநேககாலமாய் வித்தை ஒரேவழியை அனுசரித்து ஆத்துமஞானத்தையே முக்கிய கருத்தாய்க்கொண்டு, பரம்பொருளைத் தேடும் வழியில் நின்றுவிட்டது. அவ்வழியோ மெத்த கஷ்டமானது. சாதாரண புத்தியுள்ளாருக்கு எட்டாதது. ஆனால் தொன்றுதொட்டு வந்த வழியாதலால், அதையே கைப்பற்றி, அற்ப அறிஞரும் அவ்வழியிற்றானே பயின்று, பூவுடன் நாறும் மணம் பெற்றாற்போல் சருவசம்பன்னரும் தெய்வபாவத்தை யடைந்தவருமான குருக்களிடம் வசித்து, 'காற்குருடன், அரைக்குருடன்,' என்னும் நியாயத்தில் தெரிந்தும் தெரியாமலும் உளறிக்குளறி உண்மையான வித்தையின் யோக்கியதையைக் குறைத்துவிட்டார்கள். இப்பொழுதோ, கழுதைக்குத்
~~~~~~~~~~~~~~~~

தெரியுமா கற்பூரவாசனை?, என்று யாரும் இகழும்படியாகச் சிலர் தாம்படித்ததொன்றும், அறிந்ததொன்றும், சொல்வது வேறொன்றுமாய், உண்மையை யறியாமலும், தாறுமாறுமாய்ப்பிதற்றி அவ்விஷயத்தில் உற்சாகமிருப்பவருக்குங்கூட, "இவர் வெகுதூரம் படித்தவர் என்பதாகப் பேர்வாங்கி இருக்கிறார். இவரைக் கேட்டால் ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழிக்கிறாரே," என்று நினைத்துத் தயங்கும்படியான நிலைமையா யிருக்கிறது. நாளுக்குநாள் தகுந்த குருக்கள் இல்லாமையாலும், சிரத்தைக் குறைவாலும், வித்தையின் மகிமை குறைந்துவருகிறது. ஸ்கூல் மாணாக்கர்களில் சிலர் இதுவரை சம்ஸ்கிருதத்தில் நல்ல அபிப்பிராயம் கொண்டு, அதை எடுத்துப் படித்து, அவர் மூலியமாய்க் கொஞ்சம் க்ஷேமத்தை அடைந்துகொண்டுவந்த ஞான மார்க்கம், புதிதாய்ப் படிப்பு விஷயங்களில் வந்திருக்கிற சீர்திருத்தங்களால் சம்ஸ்கிருதமும் கைவிடப்படவே, இருந்தஇடமும் தெரியாமற் போய்விடுமோ என்று பயப்படும்படியா யிருக்கிறது. ஆகையால் அறிஞர்கள்சேர்ந்து இம்மார்க்கம் மாக்ஷிமை குன்றாது தழைத்தோங்கும் வண்ணம் உழைக்கவேண்டியது அத்தியாவசியம்.

ஆகாராதிகளில் வைத்தியர்கள் பலவிதமானவற்றை உட்கொள்வது தேகத்திற்கு ஆரோக்கியம் என்று கூறுகின்றார்கள். சர்க்கரைப் பதார்த்தங்களும், நெய் முதலிய கொழுப்புப் பதார்த்தங்களும், பருப்பு முதலிய 'நைட்ரோஜன்' என்னும் வாயு அதிகரித்துள்ள பதார்த்தங்களும், எல்லாம் கொஞ்சங்கொஞ்சம் சரீரத்திற்கு வேண்டியிருப்பதுபோல, நமது ஜனங்கள் க்ஷேமத்தை யடைவதற்கு நாம் அநேகவித வித்தைகளையும் சம்பாதிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். இதுவரை சொல்லிவந்த ஞானவித்தை அவற்றில் ஒன்று என்பதை மறந்துவிட்டுத்தான் இப்பொழுது தவிக்கிறோமென்று தோன்றுகிறது. இது சில குணங்களிற் சிறந்தவருக்கு மாத்திரமே உபயோகப்படுமேயல்லாது, எல்லாருக்கும் எட்டாததலால், அநேகர் 'கிட்டாதாயின் வெட்டென'மறந்துவிடுகிறார்கள்: ஆதலால் உலக நடவடிக்கைகளுக்கு வேண்டிய எல்லாவிதத் தொழில்களுக்கும் பாடசாலைகள் ஏற்படுத்தி, ஓரொன்றிலும் மாணாக்கர் பயின்று தேர்ந்து, ஜீவனோபாயத்தைத் தேடக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்கள்.

ஐரோப்பாவிலும் சுமார் 500-வருஷங்களுக்குமுன் ஜனங்களுக்குள் படிப்பு இவ்வாறே நிரம்பவும் குறைவடைந்தேதானிருந்தது. அக்காலத்தில் பிரபுக்களுடைய பிள்ளைகள் என்ன சொல்லுவது வழக்கமாயிருந்ததென்றால், "கோவில் பூசாரியும், மத உபதேசிகளும்தான் படிக்கவேண்டும். குமாஸ்தாக்களுக்குத்தான் எழுதத் தெரியவேண்டும். நமக்குக் குதிரை சவாரி செய்யவும், யுத்தப்பயிற்சிகளில் உற்சாகமுள்ளவரா யிருப்பது மல்லவோ, முக்கியம்" என்று. அங்ஙனமிருந்தவர் தாம் இப்பொழுது உலகமெங்கும் கொண்டாடும்படியாகப பிரகாசத்தை யடைந்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்களுக்கு இது லகுவாய்க் கிடைத்துவிட்டதென்று நாம் நினைக்கத்தகாது. அவர்களும் போகவழி தெரியாமல் தத்தளித்துத் தள்ளாடி, அநேககாலம் சாமான்னியமாக உபயோகத்திலில்லாத லாடின், கிரீக் பாஷைகளைப் படிப்பதிலும், அவற்றில் செய்யுட்களுண்டாக்குவதிலும், வியாஸங்களை எழுதுவதிலும், பாலியத்தைச் செலவுசெய்து உலகப் பிரயோசனத்திற்கு வேண்டிய தொழில்களில் பிரயத்தனமின்றி யிருந்தார்கள். 'ஆக்ஸ்போர்ட்' யூநிவர்ஸிடி சுமார் 800-வருஷத்திற்குமுன் னேற்பட்டது. என்றாலும் மேற்சொல்லிய ஏற்பாடுதான் அங்கேமுக்கியமாய் வெகுகாலமாக நடந்துகொண்டுவந்தது. (நமது சம்ஸ்கிருதப் பள்



ளிக்கூடங்களில் இன்றைக்கும் இம்மாதிரி வழக்கமாயிருப்பது நாமறிந்த விஷயமே). இப்பொழுதுதான் கொஞ்சநாளாய் அவர்கள் விழித்துக்கொண்டார்கள்போலும், தற்காலத்திற்கு வேண்டிய'ஸைன்ஸ்' படிப்புகளும், அந்நியதேசபாஷைகளாயிருந்தபோதிலும் அடிக்கடி உபயோகப்படுவதான ப்ரெஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளும் இக்காலத்தில் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கப் படுகின்றன. ஆதலால் மேனாட்டிலும், தட்டுக்கெட்டுத்தான் 'ததிகணதோம்' அவர்களுக்குக் கிட்டியது.

கைத்தொழில்கள் விசேஷமாய் நடந்துகொண்டிருக்குமிடங்களில் அதற்கனுகூலமான படிப்புகளை அபிவிருத்தி செய்வதற்காகத் தற்கால அவசியப் படிப்புகளடங்கின சில யூநிவர்ஸிடிகள் (மான்செஸ்டர், பர்மிங்ஹாம் முதலிய பட்டணங்களில்) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தவிரவும் படிப்புகளில் அநேகம் பிரிவுகள் விளங்குகின்றன. அவை யெல்லாவற்றிற்கும் தமிழில் பதங்கள் கண்டுபிடிப்பது கஷ்டமாதலாலும், தவிரவும் இங்கிலீஷ் பெயர்களே உபயோகத்தில் வந்து கொண்டிருக்கின்றனவாதலாலும், அவற்றின் சிலவற்றைமாத்திரம் தாழே கூறுவாம். பாஷைகள் (அநேகவிதம்), சரித்திரம் (பூர்வீகம், மத்தியகாலம், தற்காலம்), தத்துவசாஸ்திரம், வானசாஸ்திரம், சமுத்திரயான சாஸ்திரம், அநேகவித ஸையன்ஸுகள், கைத்தொழில்கள் (அச்சிடுதல், பயிண்டு செய்தல், தட்டான், கொல்லன், தச்சன், முதலியவருடைய தொழில்கள்), வைத்தியம், வியவஸாயம். சிற்பித்தொழில், படங்கள் எழுதும் தொழில், நீராவி யந்திரங்கள், மின்சாரயந்திரங்கள், இன்னும் இதுபோன்ற அநேக வித்தைகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஆதலால்,அவனவன் புத்திக்குத் தகுந்தபடி ஏதேனுமொன்றைத் தெரிந்தெடுத்து, ஒரேதொழிலில் எல்லாரும் சென்று, 'உன்னைவிடத் தாழ்ந்த சம்பளத்திற்கு நான் போகிறேன்' என்று போட்டி போட்டுக்கொள்ளாமலும், மரியாதைக் குறைவில்லாமலும், சொந்தத்தில் வேலை செய்தோ, ஒரு யஜமானன் கீழோ, சுலபமாய்ச் 'சரீரயாத்திரை'க்கு வேண்டிய பொருளைத் தேடிக்கொள்ளலாம்.

இவ்விதம் மேற்கூறிய அநேக வித்தைகளும் மேன்மேலும் அபிவிருத்தியை யடையவேண்டிய உபாயங்கள் அநேகம் மேனாட்டார் செய்திருக்கிறார்கள். மனிதனுக்குச் சுபாவமாய்த் தன்னை மற்றவர் கெட்டிக்காரன் என்று நினைக்கிறார்கள் என்றால், அதில் ஒரு விசேஷ பிரியமுண்டாகிறது. இம்மாதிரி உற்சாகப்படுத்திவிட்டால் தலைகால் தெரியாமல் வேலை செய்துவிடுவான். அதை அனுசரித்தே அந்தந்த வித்தைகளுக்குச் சங்கங்கள் ஏற்படுத்தி, காரியநிர்வாகிகளெல்லாம் தெரிந்தெடுத்து, சமர்த்தர்களைச் சங்கத்திற்கு மெம்பர்களாக எடுத்தும், அவர்களுக்குச் சம்மானங்கள், சர்டிபிகேட்டுகள்,பட்டம் முதலியன கொடுத்தும்,உன்னதஸ்திதியை நாடிக்கொண்டிருக்கிறார்கள். பொதுநன்மைக்காகப் பாடுபடும் தயாளுக்களுக்குக் கவர்ன்மெண்டார் 'ராவ்பஹதூர்', 'ராவ்ஸாஹிப்' முதலிய பட்டங்கள் கொடுப்பதைக் காண்க. மைசூர், திருவாங்கூர், பரோடா முதலிய ஸமஸ்தானங்களில் வேதம், சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம், வேதாந்தம் முதலியவற்றில் தேர்ந்த பண்டிதர்களுக்குப் பரிசு அளிக்கிறார்களல்லவா?

தவிரவும், நம்மவரில் அன்னவஸ்திரத்திற்கிருப்பவர் நல்ல பாண்டித்தியத்தை யடைந்து, பிற்பாடும் வேறே தொழில்கள் அதிகமாய் வைத்துக் சொள்ளாமல், தாங்கள் படித்தவித்தைகளை மேன்மேலும் விருத்திக்குக்கொண்டு வருகிறார்களல்லவா? தங்கீழ் சிஷ்யவர்க்கங்களை வைத்துக்கொண்டும், அவர்களுக்குக்

தாம் உழைத்துப் பாடுபட்டும், வித்தைகளை நிலைநிறுத்திவருகிறார்களல்லவா? அதேமாதிரியாக, ஐரோப்பா, அமெரிக்காக்களிலும், பிரபுக்களாகிய சிலர் ராஜாங்கக் காரியங்களிலுழன்று சிரமத்தையடைந்து, விடாய் தீர்த்துக் கொள்ளுவதற்காக, தம் வேலைச்சாலைக்கோ, ஸையன்ஸ் லாபொரேடரிக்கோ, தோட்டத்திற்கோ சென்று, அங்கே வேறொருவிதமான தொழிலில் குதூகலித்து, பூர்வசிரமத்தை மறக்கிறார்கள். யூநிவர்ஸிடிகளிலேயே சில வித்துவான்களுக்கு, நம்மாணாக்கருள் வழங்குகிற 'உபகாரச்சம்பளம்' போன்ற, பெல்லோஷிப், என்னும் சம்பளத்தைக்கொடுத்து, வயிற்றுப் பிழைப்புக்குப் பணம் சம்பாதிக்கவேண்டுமே என்னும் ஏக்கம் தோன்றாமற் பாதுகாத்து, வித்தையை முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய வழியைத் தேடுகிறார்கள். இவர் போலியருடைய சிரமங்களால் தான் அநேக சாஸ்திரங்களிலும் 'புதுசு புதுசாய்' அநேக சங்கதிகள் கண்டுபிடிக்கப்பட்டுப் பற்பல நன்மைகள் கைகூடுகின்றன. அங்ஙனம் நம் ராச்சியத்திலும் சிரமமெடுத்துக் கொள்ளும் சிலருக்கு ஆதரவுகள் ஏற்படுமேயானால், நம் வழக்கங்களுக்கொப்ப, நமது சாஸ்திரங்களிலும் முயற்சியேற்பட்டு. இப்பொழுது மங்கிக்கிடக்கிற அநேக வித்தைகளும் முன்னிற்கும். சமீபத்தில் நமது யூனிவர்ஸிட்டியிலும், பெங்களூரில் 'தாதா' மண்டபத்திலும், இதையுத்தேசித்தே ஏற்பாடுகள் நடக்கின்றன.

இதுவரை வரைந்ததினின்றும் வித்தியாசமான அபிப்பிராயம் ஏற்பட யாதொரு இடையுமில்லாதிருத்தற் பொருட்டுக் கூறுவதியாதெனின், யாருக்கும் மற்றவரிடத்திலிருந்து கிரகிக்கத்தக்க விஷயங்களிருக்கலாம். மேனாட்டார் இவ்வுலக போகமே வீடென்றும், அதை எங்கும், எவ்விதத்தாலும் தேடுவதே ஜன்மப் பிரயோஜனமென்றும் கருதாமல், ஆத்துமாவொன்றுண்டென்றும், பலனை அபேக்ஷிக்காமல் கர்மங்களைச் செய்யவேண்டுமென்றும், தெய்வமொன்றுண்டென்றும் திடமாய் நம்பி, விஷயங்களிலிருக்கும் மனதைச்சற்று மேனோக்கிச் செலுத்தல் தகுதியாகும். நாம் அவரிடத்திலறிய வேண்டியனவோ, ஊக்கமும், ஐகமத்தியமும், உடும்பு போலப்பிடித்த பிடியைவிடாமல் காரியங்களை முடிக்கும் சுபாவமும், இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய பலவித மார்க்கங்களில் முயற்சி செய்வதுமாவன. இம்மாதிரிப் பிரயத்தனம் செய்வதில் நம்மான்றோர் கைக்கொண்டிருக்கும் உண்மையான தருமங்களினின்றும் வழுவாமல், "எனக்குச் சத்தியமே மாதா; ஞானமே பிதா; தருமமே சகோதரன்; தயையே சிநேகிதன்; சாந்தகுணமே பத்தினி; பொறுமையே பிள்ளை; ஆகவே இந்த ஆறுகுணங்கள் தாம் என்னுடைய (முக்கிய) பந்துக்கள்," என்று கூறியுள்ள குணங்களெல்லாம் நம்மிடம் குடிகொண்டிருக்கும்படி நாம் நடந்து கொள்ளவேண்டுமென்றல்லவோ நம்மறிவினரெதிர்பார்ப்பது?

ஒரு ஊரில் ஓர் அரைப்பயித்தியகாரன் இருந்தான். அவனை யார் எது கேட்டாலும், "உனக்கில்லையென்று வயிற்றெரிச்சலோ?" என்பான். ஒருநாள் அவன் வெகு நேர்த்தியாக க்ஷவரம் செய்துகொண்டு ஸ்நானத்திற்குப் போகையில், எதிரே ஒரு நல்ல சுமங்கலி ஸ்நானம் செய்துவிட்டுப் பளபளவென்று மஞ்சளும் குங்குமமுமாய் வந்துகொண்டிருந்தாள். மூர்த்தி எப்போது பார்த்தாலும் அவன் இவனையேதாகிலும் கேட்பதுண்டு. அவன் ஏதாகிலும் பயித்தியகார ஜவாபு சொல்லுவான். சிரித்துக்கொண்டு போவது வழக்கம். அப்படியே அச்சந்தர்ப்பத்திலும் "ஏதடா, இன்றைக்குப் பட்டாபிஷேகம் வெகு சம்பிரமமாயிருக்கிறது?" என்றான். "உனக்கில்லையென்று வயிற்றெரிச்சலாக்கும்," என்று அவன் பதிவுபோல் ஜவாபு சொல்லிப் போனான். சுமங்கலிக்குமட்டும் சிரிப்பு வரவில்லை,



## ஸ்ரீ நானகதேவர்

எடிட்டர்

முந்தியொருமாதம் ஸ்ரீ கபீர்தாஸ சுவாமிகளைப்பற்றிப் பேசுங்கால், அவருடைய சித்தாந்தத்தையும்பற்றிக் கொஞ்சம் சொன்னோம். அதாவது, இந்து மகம்மதியர்களுக்குள் மதவிஷயமாக நடந்த சண்டை சச்சரவுகளைக்கண்டு மனம்புழுங்கி, 'ஐயோ, இப்படி அனாவசியமாகப் பகவான்பேரில் பழிபோட்டு மூடர்கள் அடித்துக் கொள்ளுகிறார்களே!' என்று வருந்தி, இருதிறத்தாருக்கும் ஒற்றுமையுண்டாவதற்கு உபாயம் தேடியவர்களில், கபீர்சுவாமிகள் முக்கியஸ்தர், என்று.

இப்படியிவரும், வேறு அனேக இந்து மகம்மதிய பக்தர்களும் உழைத்துவந்ததற்கு நல்ல பலன் காலக்கிரமத்தில் கிடைக்காமற் போகவில்லை. கோதாவரிக்கு வடக்கிலும் இமாசலத்திற்குத் தெற்கிலுமுள்ள, இந்துஸ்தான், மகாராஷ்டிரமென்னும் தேசங்களில், வைஷ்ணவரென்னும் மதஸ்தர்களில் பெரும்பாலார் நாளதுவரை அனேகமாய்க் கபீர் சுவாமிகளுடைய உபதேசத்தையே மேற்கொண்டு கடவுளை வழிபட்டுவருகிறார்கள். தவிர இந்து மகம்மதியர்களுக்குள் ஒற்றுமை, வேண்டுமளவிற்குக் கிட்டாமற்போனாலும், விரோதம் வெகுவாய்க் குறைந்துபோயிற்று. கபீர்சுவாமிகளுக்குப் பின்னிட்டுவந்த பக்தரனைவரும் அவர் அனுசரித்த மார்க்கத்தையே சரியெனக்கொண்டு, நாமசங்கீர்த்தனம் செய்து, ஜாதி முதலிய பந்தங்களால் உண்டாகும் உபத்திரவங்களைக் கூடியமட்டில் குறைத்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். ஆனால் இவர்களில் இந்து மகம்மதியரை ஒன்றாக்கவேண்டுமென்று கபீரைப்போலவே ஆக்கிரகம் வைத்தவர், அந்த சுவாமிகளுக்கு வயதில் சற்றுக்குறைந்தவராயும், அவர் காலத்திலேயே பஞ்சாப் தேசத்தில் உபதேசம் விசேஷமாகச் செய்து வந்தவருமான ஸ்ரீ நானக பாவா என்னும் பாகவத சிரோமணியாம்.

நானகபாவாவின் பெயர்கூடத் தமிழ் நாட்டில் அனேகருக்குந் தெரியாது. ஆனால் அவருடைய சிஷ்ய ஜனங்களாகிய 'சீக்கர்' என்பவரைப் பற்றி ஏதாகிலும் சில சங்கதிகள் சிலருக்குத் தெரிந்திருக்கலாம். யமுனைக்கு மேற்கிலும், ராஜஸ்தானத்திற்கு வடக்கிலும், காஸ்மீரத்திற்குத் தெற்கிலும், ஆப்கன் மலைகளுக்குக் கிழக்கிலுமுள்ள பிரதேசம்தான் சீக்கருக்கு முக்கிய இருப்பிடம். இந்தப் பிரதேசத்தில் சிந்துநதியும், அதன் உபநதிகளும் பாய்ந்துவந்தபோதிலும், இதை மொத்தத்தில் வளநாடு என்பதற்காகாது. ஜனங்கள் இடுப்பொடியக் கஷ்டப்பட்டால்தான் ஏதோ வேண்டிய தான்னியம் கிடைக்கும். இப்பொழுது நதிகளில் சிலவிடங்களில் வாய்க்கால்கள் எடுத்துப் பாசனமாகி வருகின்றன. ஆனால் எக்காலத்திலும் இப்படியே யிருக்கவில்லை.

இந்தப் பிரதேசத்தில் குடியேறியிருப்பவர், ராஜபுத்திரர், இதர இந்துக்கள், சீக்கர், மகம்மதியர், ஆகிய நான்கு வகுப்பினராம். இவர்களுள், ராஜபுத்திரரும், இதர இந்துக்களும் மதவிஷயத்தி லொற்றுமைகொண்டவர். எக்காலத்திலும் அப்படியேதானிருந்து வந்திருக்கிறார்கள். ராஜபுத்திரருக்குக் குலப்பெருமை வெகு அதிகமாதலால், வேறு வகுப்பினருடன் கொண்டு கொடுத்து விசேஷமாகக் குலாவுதல் இல்லை. சூரியவமிசத்தவர், அவ்வமிசத்தவருடனும், சந்திரவமிசத்தவர் அவ்வமிசத்தவருடனுமே சம்பந்தம் செய்துகொண்டு வருகிறார்கள். அதனால் அவர்களுக்குள்ளிருக்கும் உபத்திரவம் வெகு அதிகம்.

மகம்மதியர், அனேகமாய்த் தேசீய ஜாதியாராகவிருந்து பிறகு மகம்மது மதத்தைக் கைப்பற்றியவராம். அனேகர், ஆப்கானியரிலும், பார்சியாக்காரரிலும், அரேபியாக்காரரிலும் முற்காலத்தில் வந்து குடியேறினவருடைய வமிசத்தவர். அவர்களுக்குள்ளும் குடும்பப் பெருமை அதிகம்.

சீக்கர் என்பவருக்கு அந்தப்பெயர் நானக பாவா உபதேசத்தை அவர்கள் பெற்றபின்புதான் கிடைத்தது. அது 'சிஷ்யர்' என்னும் வடமொழிப்பதத்தின் திரிபு. நானக பாவாவும் அவருக்குப்பின் அந்தப் பரம்பரையில் வந்த பத்துப் பெயரும், குருக்களாதலால், அவர்களுடைய மதத்தை யனுசரிப்பவர்களெவரும் சீக்கர் எனப்படுவார். ஆதலால் மதத்தைப்பற்றி இவர்களுக்கு இந்தப் பெயர் கிடைத்தது. குலத்தையும் மரபையும் பற்றிப் பேசுங்கால், இவர்களுக்கு மொத்தத்தில் "நற்குடியிற்பிறந்தோர்" என்று பொருள்படும் "ஜாத்துகள்," எனப் பெயர் வழங்கும்.

'ஜாதீயராகிய' இந்தச் சனங்கள் இந்துக்களாகவே நெடுநாளிருந்தார்கள். விசேஷமாக விவசாயம்தான் இவர்களுக்குத் தொழில். ஆனால் இவர்களிருந்த ராச்சியம் எப்போதும் கலகமும், சத்துருபயமும் கூடியது. பூர்வ காலந் தொடங்கி, ஆரியர், சித்தியர், பாரசிகர், கிரேக்கர், முதலியோர் ஒவ்வொருவரும் இப்பிரதேசத்தை ஆக்கிரமித்துத்தான் இந்தியாவில் வந்தது. ஆகவே பலவகைப்பட்ட சத்துருக்களுடன் போராடிப்போராடி யிவர்களுக்குக் கைதேர்ந்திருக்கிறது. இவர்களுக்குள் ஆண், பெண் இருதிறத்தாருக்கும் தைரியம் வெகு அதிகம். 'ஜாத்னி'ப் பெண்ணுக்குத் திரௌபதியின் மனோதருமம் உறைந்திருப்பதாகச் சொல்லலாம். எப்படித்தன் தந்தையைத் தேர்க்காலில் கட்டியடித்த அருச்சுனனைத் திரௌபதி சுயம்வரஞ் செய்து கொண்டாளோ, அது போலவே தமது பெற்றோரையும், தம்முடற் பிறந்தாரையும் யுத்தத்தில் வென்ற வீரனைத்தான் 'ஜாத்னி' வெகு சந்தோஷத்துடன் மணப்பது.

இப்படி வெகுகாலமாகத் தேகபலத்திற்கும், மனோதைரியத்திற்கும் ஒரு குறைவுமில்லாமல் வளர்ந்துவரும் ஜாதீயருக்கு மதவிஷயத்தில் மட்டும் ஒரு பெருங்குறைவு இருந்தது. 'ஞானமார்க்கம்' என்னும் இந்துமதப்பிரிவு அவர்களுக்குள் பிரபலித்ததேயில்லை. கரும மார்க்கத்திற்கோ அவர்களை யாரும் அதிகாரிகளாக்கவேயில்லை. சூரியவமிச முதலிய குலப்பெருமை தங்கிய ராஜபுத்திரர் செய்யும் யாகாதிகளுக்கு 'இவ்விழி குலத்தாரை'யும் சேர்த்துக்கொள்ள அவர்களுக்கு ஒருக்காலும் மனம் வரவில்லை.

ஆனால் அந்த நியாயத்தினால் இந்துக்களிலனேகர் செய்ததுபோல, இவர்களும் மகம்மதீயராகிப் போகவில்லை. மகம்மதீய மதம் தழைத்ததில் ஒரு அனுகூலமட்டும் எல்லாருக்கும் கிடைத்தது. அதாவது பக்திமார்க்கம் பிரபலித்ததாம். இதை யினியொருமாசம் நன்கு விளக்குவோம். இச்சமயத்திற்கு வேண்டியதெல்லாம் இரண்டு அம்சங்களே. ஜாதீயருக்கும், ஜாத்னிகளுக்கும், சௌரிய தைரிய முதலிய நற்குணங்கள் இருந்தும், குலப்பெருமை பேசிக்கொள்வதற்கு ஒன்றும் இல்லாமல், மனக்குறையிருந்தது ஒன்று. மதவிஷயத்தில் ஒருவிதப் பிடிப்பும் இல்லாமல், ஹிந்துவுமல்ல, மகம்மதீயனுமல்லவென்று, சுவற்றின் மேல் பூனையாகவிருந்ததொன்று. இவ்வாறாகச் சுமார் 5-ம் நூற்றாண்டு முதல், 15-ம் நூற்றாண்டுவரை கழிந்து வந்தது.

இந்த மத்தியில் ஆப்கானி மகம்மதீயர் இந்தியாவில் வெகுகாலமாக ராச்சியபாரம் தாங்கிவந்து, சளைத்துப்போய்ப் பிறகு மொகலாயர் பட்டம் வகித்து விட்டார்கள். அவர்களுள் முதல்வரான பேபர்சக்கிரவர்த்தியாகியரசாண்டகாலத்திலும், அதற்குச்சற்றுமுன்னும் ஜாதீயருக்கு நற்காலமுண்டாகியது. ஏனெனில் அவர்களுக்குச் சற்குரு அக்காலத்தில் தான் அவதரித்து, வளர்ந்து, உபதேசஞ்செய்து வந்தார். அவர் பெயர் ஸ்ரீ நானகதேவர் அல்லது, பாவா நானக், என்பது.



இந்தப் பெரிய பாகவத சிரோமணி, 'க்ஷத்திரி' என்னும் பதத்தின் திரிபாகிய, 'கத்திரி' என்னும் வகுப்பிற் சேர்ந்தவர். இவர் பிறந்தவிடம், பஞ்சாபில் ராவி நதிக்கரையிலுள்ள தலவந்தி யென்னும் ஊர். இவர் தகப்பன் காலு என்னும் ஓர் சாமான்னிய மிராசுதாரர். இவருக்கும் இவரது தருமபத்தினிக்கும் அருமைப் பிள்ளையாக 1469-ம் வருஷத்தில் நானக பாவா பிறந்தார். பிறந்தவுடன் தேவதுந்துபி முழங்கிப் புஷ்பமாரியும் பெய்தது. ஏனெனில், உலகத்தில் பல ஜனங்களுக்கு உபகாரியாக யார் பிறந்தாலும் இப்படிச் சுபசகுனங்கள் காணுவது பதிவாதலால்தான்.

ஆறு அல்லது எட்டுப் பிராயமாகும் வரையொன்றும் விசேஷங் காணவில்லை. காலுவென்பவர், விவசாயத்திலேயே கருத்தாயிருந்தபடியால் குமாரனைப்பற்றி அதிகமாக விசாரணை வைத்துக்கொள்ளவில்லை. நமது நாட்டில், இக்காலத்தில் அவரைவிடச் சாவகாசமும், கல்வியும் உள்ளவர்களே தமது மக்கள்விஷயத்தில் வித்தியாப்பியாசம் எப்படி நடக்கிறதென்பதை விசாரிப்பதில்லையென்றால், அவருக்குக் கேட்பானேன்? ஒருமுறை மட்டும், நானகபாவாவை யவர் தகப்பனார் மாடு கன்றுகளைப் பார்த்துக்கொள்ளும்படி சொன்னதாகவும், அவைகளைக் காட்டில் மேயவிட்டு, வெய்யில் பொறுக்கமாட்டாமல் ஒரு மரத்தடியில் இந்தப் 'பாலகோபாலன்' தூங்கிவிட, அப்போது அவர்மேல் படிந்திருந்த நிழல் சூரியன் வெகுதூரம் இடைமாறிப்போயும், நீங்காமலும், பாகவதர்மேல் வெய்யில் படாமலும், இருந்ததைப் பார்த்ததாகப் பின்னிட்டு வதந்தியுண்டாயிற்று. புத்தன் முதலிய மற்றனேகருக்கும் இப்படியுபசாரம் நடந்ததாகச் சொல்லிக்கொள்ளுவதுண்டு.

பிறகு அவர் ஜாதிமுறைப்படி எழுத்தும், கணக்கும் கற்றாரென்றாலும், கல்வியிலாவது, காரியத்திலாவது சிரத்தையில்லாமல், 'யாரோ செத்தார், எவரோ அழுதார்,' என்றபடி, ஏதோ எண்ணமிட்டுக்கொண்டே யிருந்தார். ஆனால், இவருடைய ரூபத்தையும், சாந்த குணத்தையும், மனோதருமத்தையும் நன்குணர்ந்த மகம்மதீய சந்நியாசி, சையத்ஹுஸேன் என்பவர், இவரை அப்போதப்போது வரவழைத்து மகம்மதீய மதக்கிரந்தமாகிய குரான், அதைச்சேர்ந்த வேறு சில கிரந்தங்கள், ஆகிய இவற்றை நன்றாகப் பாடம் சொல்லிவந்தாராம். அதனால் இவருக்குத் தெய்வ பக்தி யதிகரித்து அவ்வழியாக இந்து மகம்மதீய மதக்கிரந்தங்களில் அனேகம் இவருக்குப் பரிசயமாயிற்று. இவ்வாறு பலவருஷங்கள் கழிந்தன.

பின்னிட்டு விவாகசமயம் வந்தவுடன், 'கிளிமொழிச்சி' யெனப்பொருள்படும் பெண்ணொருத்தியை இவருக்கு விவாகம் செய்துவைத்தார்கள். அவளுக்குக் காலக்கிரமத்தில், லக்ஷ்மிதாஸ், ஸ்ரீசந்தன், என்னும் இரண்டு புத்திருண்டானார்கள். இப்படி யில்லறம் கூடிப் பிள்ளைகள் பெற்றுச் சமுசார வாழ்க்கையிலிருந்தும் பழையபடியே வேலையின்பேரிலும், சம்பாத்திய விஷயத்திலும் திருஷ்டியில்லாமல் வீண்காலம் கழிப்பதைக்கண்டு, கடைசியாக அவர் தகப்பனுக்குப் பொறுக்க முடியாத கோபம் வந்து ஒருநாள் இவரைக்கண்டபடி பேசிக்கோபித்துக்கொண்டார். ஆனால் அப்படிச் செய்ததிலும் காரியமில்லாமற் போனதுடன், குமாரனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்ததால், காலு வென்பவர் மனைவியுடன் யோசித்து, நானகபாவாவைச் சுலுத்தான் பூரில் தண்டு சரபாயிவேலையிலிருந்த தன் மைத்துனன் ஜெயராமனிடம் அனுப்பினார். பாவாஜீயும் அவ்விடம்சென்று அலுவலிலமர்ந்து பகற்பொழுதில் உத்தியோக விஷயமாய் உழைத்துவிட்டு, ராத்திரிசாப்பாடான பிறகு அவ்வூரில்

அக்காலத்தில் பிரபலித்திருந்த பஜனை கோஷ்டியில் சேர்ந்து ஹரிநாமசங்கீர்த்தனம் செய்துவந்தார்.

இந்தப் பஜனைக்கூட்டத்தில் எல்லா ஜாதியாரும் சேருவதுண்டு. அதில் நாளதுவரை வெகுவாகத் தாழ்ந்தகுலமாகிய 'தோம்' (என்றால், தொம்பராக இருக்கலாமா ?) என்னும் குலத்தவனாகிய மர்த்தனன் என்பவன் இவருக்குச் சங்கீதை ஜதையாகப் பின்பாட்டோ, தாளமோ வேண்டியபடி உதவிவந்தான். இவன்தான் இவருக்கு முதற் சிஷ்யன்.

இவ்வாறு கொஞ்சகாலம் கழிந்து வந்தது. அலுவலை ஜாக்கிரதையாய்ப் பார்த்துவந்ததால், பணமும் ஏதோ சுமாராகச் சேர்ந்து வந்தது. நானகபாவாவும் இனிக் கிரகஸ்தனாகிவிடுவான், என்று காலு எண்ணினார். ஜெயராமன் முதலியோரும் சந்தோஷப் பட்டுக்கொண்டு, பஜனைப்பைத்தியம் சற்று அதிகமென்று கண்டாலும், தரக்கேடில்லை யென்று கொண்டு, காலக்கிரமத்தில் எல்லாம் சரியாய்ப் போகுமென்றிருந்தார்கள்.

இப்படி யிருக்கையில் ஒருநாள் நானகபாவா நதிக்குச் சென்று அனுஷ்டானத்தை யுத்தேசித்து ஸ்நானத்திற்காக நதியிலிறங்கியவருக்கு, ஏதோ சடுதியில் கால்தவறி விழுந்து, நீரில் முழுகி அப்போதே முடிவுவந்து விடும்போலாயிற்று. பிறகு ஏதோ தெய்வாதீனம், தப்பிக் கரையேறினார். ஏறினவுடன், 'அடடா இதென்ன வாழ்க்கை ? அரைநொடியில் நமதுகாரியம் முடிவாயிருக்குமே, இதற்குத்தானா இவ்வளவு முயன்று, சமுசாரம், பெண்டுபிள்ளை, தனம், தான்னியம், வீடுவாசல்களைத் தேடுவது. சீ, இது கெட்டது. நாம் இனி இந்த முட்டாள்காரியங்களைவிட்டு, பத்துபெயருக்கு உபகாரமாக ஹரிநாமத்தை எங்கும் பரவச்செய்வோம். அதற்கு நமக்கிப்போது யோக்கியதை போதாமலிருப்பதால், பெரியோரிருக்குமிடங்களெல்லாம் யாத்திரைசெய்து, ரகசியங்களையறிந்து கொள்வோம்', என்று தீர்மானித்துப் பக்கிரியாகித் தனக்குள்ளதெல்லாம் ஏழைகளுக்குத் தருமஞ் செய்துவிட்டு யாத்திரை புறப்பட்டார்.

இப்படி யாத்திரை செய்ததில், இந்தியாமுழுதும் போனார் என்றும், இலங்கையிலும் போய்ப் பார்த்தார், என்றும் சீக்கர் சொல்வார்கள். தென்னிந்தியாவுக்கு அவர் வந்தது பொய்யோ, நிசமோ, அறியோம். மஹாராஷ்டிரம்வரை வந்தது நிசம். பிறகு மெக்காவுக்கு யாத்திரைபோய் 'ஹஜீயாகி' வந்ததும் நிசம். இந்த யாத்திரையில் வெகுகாலம் கழிந்திருக்கவேண்டும். போனவிடங்களிலெல்லாம் இவர் பெருமை ஏதோ ஒரு விதமாக விளங்கி வந்தது.

ஓரிடத்தில் சாயங்காலம் பிராம்மணர் சந்திகழித்துக் கையால் நீரை யள்ளி அர்க்கியம் விட்டுக்கொண்டிருந்தார்கள். பாவாவும் அவ்விடஞ் சென்று குனிந்து நீரை யள்ளி, அவர்களுக்கெதிர்முகமாக நின்று இறைத்துக்கொண்டிருந்தார். அவர்கள் அதிசயித்து, 'ஓய், நீரென்ன பைத்தியக்காரனாயிருக்கிறீர் ? ஏனிப்படி நீரை அர்த்தமில்லாமல் இறைக்கிறீர்?' என, பாவா, 'ஓ பிராம்மணர்களே, 60-மைலுக்கப்பால், சுலுத்தான்பூரில் என்னுடைய தோட்டத்திலுள்ள மரங்களுக்காக இறைக்கிறேன், நீங்கள் ஏன் நீரைக் கையாலெடுத்து விடுகிறீர்கள்?' என்றார். அவர்கள் நகைத்து, 'ஓய், இதென்ன முட்டாள்தனம்? 60-மைலுக்கபபுறமுள்ள மரங்களுக்கு இந்த நீர் எப்படிப்போய்ப் பாயும்? நாங்கள் தேவதைகளுக்காக வேண்டிச்செய்கிறோம்,'' என்றார்கள். அதற்கு அவர், ''ஓ முட்டாள்களே, நீங்கள் இறைக்கும் நீர் தேவலோகம்வரை போவது நிசமானால், என் மரங்களுக்கு நீர் பாய்வது நிச்சயம்,' என்று சொல்லி நகைத்து, அதன் மேலவர்களுக்கு ஹரிபக்தியைப் புகட்டிப்போனாராம்.



மற்றொருநாள் ஒரு மசீதியில் ஆயிரக்கணக்காக ஜனங்கள் கூடியிருக்க, ஒருகாஜி நமாசு படித்துக்கொண்டிருக்கையில், எல்லோரும் மகம்மதீய சம்பிரதாயப்படி முழந்தாளிட்டுக் கண்ணை மூடிக்கொண்டிருக்க, இவர் மட்டும் காலை நீட்டி மரியாதையற்றிருந்தார். காஜி இவரைக்கூவி, இப்படிச் செய்தல் தகுமாவென, அவர் நகைத்து, உமது ஆசையும் நேசமும் உமது வீட்டில் இப்போது தான் குட்டி போட்டிருக்கும் குதிரையின் பேரிலும், குட்டி யெங்கே கிணற்றில் விழுந்து விடுமோவென்று அதன் பேரிலுமிருக்க, நீர் பேசலும், பிதற்றலுமட்டும் இங்கே நடக்கிறது. இதற்கும் மரியாதை வேண்டுமோ வென, அதுவாஸ்தவமானதால் காஜி அதிசயித்து இவர் ஏதோ மகாபுருஷனென்று உபசரித்தனுப்பினாராம்.

மற்றொருமுறை பேபருக்கு முன் டில்லிச் சக்கிரவர்த்தியாயிருந்த இப்ராஹீம் லோதியின் யானைகளிலொன்று நடுத்தெருவில் வந்து கொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் விழுந்து இறந்துவிட, அதன்பாகன் பட்டபரிதாபத்தைச் சகியாமல், அவ்வழிபோய்க் கொண்டிருந்த பாவா அதைத்தொட்டு எழுந்திருக்கும்படி சொல்ல, அப்படியே அதுவும் எழுந்து போயிற்றாம். கண்டவரெல்லாம் இவரை வியந்து கொண்டாடினார்கள்.

'சுந்தேயனி' என்னும் ஊரில் இவர் போயிய காலத்தில், அவ்வூரிலிருந்தவர்கள், தானதருமபுத்தியே இல்லாதவராயிருந்தது கொண்டு, பாவா வெகுண்டு, ''உங்களுக்கு விநாசகாலம் சமீபித்துவிட்டது,'' என்று சொல்லிப் போக, அப்படியே சில வருஷங்களுக்கெல்லாம், பேபர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து, இவ்வூரை முற்றுகையிட்டுப் பிடித்து நிர்மூலஞ் செய்துவிட்டார்.

மெக்காவுக்குப் போனதும் இவர் 'காபா' என்னும் பெரிய கோவிலுட்சென்று, அவ்விடத்திலுள்ள ஓர் தாழ்வாரத்தில், 'கெப்ளா' என்னும் புண்ணிய அறைக்கு நேராகக் காலை நீட்டிப் படுத்திருக்க, கோவிலதிகாரியாகிய காஜி ருக்குன்தீன் என்பவர், அவ்வழியாகப் போய், இவரைப்பார்த்துக் கோபித்து, ''ஓ முட்டாளே, இப்படி அக்கிரமம் ஏன் செய்கிறாய், இந்தத் திக்கில் 'கெப்ளா' இருப்பது தெரிந்தும், காலை நீட்டி நிமிர்ந்து படுத்துறங்குகிறாயா? எருமைக்குள்ள புத்தியாகிலும் வேண்டாமா ?'' என, பாவாவும் படுத்திருந்தபடியே காலையசைக்காமல், கண்ணையும் திறவாமல், 'ஓ புண்ணியாத்துமாவாகிய காஜியே, கோபிக்கவேண்டாம். தெரியாமல் செய்துவிட்டேன். 'கெப்ளா' இல்லாததிக்கில் என் காலைப்பிடித்து இழுத்தெறி,' எனக் காஜியும் வெகுண்டு, அவ்வாறே காலைப்பிடித்துச் சுற்றி வேறு முகமாக அவரை இழுத்தாராம். இழுக்கையில், எந்த முகமாக அவர் காலைக்கொண்டு போனாலும், அம்முகமாகவே கெப்ளாவும் சுற்றி வந்ததாம்! அதைக்கண்டு, ருக்கும்தீன் பயந்து, இவர் யாரோ பெரிய பக்தனென்றும், அல்லாவுக்கு வேண்டியவரென்றும், தெரிந்து கொண்டு சலாம்வைத்து உபசரித்து உபதேசம் பெற்றுப்போனாராம்.

இமாசலத்தில் சித்தர்களென்று ஒரு கூட்டம் பைராகிகள், செப்பிடுவித்தைகள் செய்து கொண்டு, சிலர் விசித்திர ஆசனங்களிட்டும், சிலர் பூமியைத்தொடாமல் கிருஷ்ணாஜினத்துடன் நாலுமுழ உயரத்தில் அந்தரத்திலிருந்தும், தங்கள் தங்கள் யோகசக்தியைக் காண்பிக்க, அதைப்பார்த்துப் பாவா நகைத்து, 'ஓ மூடர்களே, இதனால் உங்களுக்கென்ன சித்திக்கும்? செப்பிடுவித்தை வயிறு வளர்க்கத்

கூட உதவாதகாரியமாதலால், இதையெல்லாம் விட்டுக்கிரகஸ்த மார்க்கமாய் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து நற்கதியடையுங்கள்,' என்று சொல்லி அவர்களுக்கு ஜபம் செய்து கடைத்தேறுவதற்காக ஜபமந்திரம் ஒன்று பஞ்சாபிபாஷையில் கோர்த்துக் கொடுத்தாராம். அதுவே நாளதுவரை சீக்கருக்குள் ஜபத்திற்கு உபயோகமாகி வருகிறது.

இன்னும் பலவிடங்களில், சமுத்திரத்தைத் தாண்டிப்போயும், கூடவிருந்த மர்த்தனனுக்கு அன்னம் கிட்டாதவிடத்தில், அன்னம் வரவழைத்துப் பசியாற்றியும், எதிர்ப்பட்ட பக்கிரிகள், சன்னியாசிகளுடன் தர்க்கம் செய்து, அவர்களைப் பாகவதர்களாக்கியும் வந்து, கடைசியாகத் திரும்பித் தமது தேசத்தில் வந்ததும், தமது மதத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார்.

இவர் உபதேசத்தில் முக்கிய அம்சம் இது :—“ஹிந்துவும் இல்லை, மகம்மதீயனுமில்லை. எல்லோரும் சற்குருவை வழிபட்டு, அவரைப் பூர்ணபக்தியுடன் நம்பி, உலகம் யாவையும் உளவாக்கிய பரம புருஷனை வணங்கித் துதித்து நற்கதியடையவேண்டும்” என்பதுதான்.

பக்கிரிகளுக்கும் சந்நியாசிகளுக்கும் அக்காலத்தில் எங்குச் சென்றாலும் உபசாரம் நடக்கும். ஏனெனில் அக்காலத்திய மகம்மதீயரொருவர் இவ்வாறெழுதுகிறார் :—“கடவுளிடத்தில் பக்கிரிகளுக்குப் பக்தியதிகம். கடவுளும் பக்த பராதீனனாதலால், பக்கிரிகளுடைய வேண்டுகோளின்படியே அவர் நடக்கிறார். அவர்களுடைய பிரார்த்தனையை எப்போதும் அவர் கவனிக்கிறார். அவர்கள் மனத்தில் எண்ணியபடியெல்லாம் அவருடைய சங்கற்பமுமிருக்கிறது. ஏனெனில் பக்கிரிகள் எல்லோருக்கும் நிரபராதிகளான பந்துக்கள். அவர்களுக்கு ஆசை வெகு சொற்பம். யாரையும் அவர் வெறுப்பதில்லை. கடிந்துகொள்வதுமில்லை. அவர்கள் இந்திரியங்களை அடக்கி ஆளுபவர்கள். நாலுவருணத்திலும் யார் காஷாயம் பூண்டுகொள்ளுகிறார்களோ, அவர்கள் இந்துவாகிலும், மகம்மதீயராகிலும், கிரகஸ்தனாகிலும், திருடனாகிலும், தட்டுவாணியாகிலும், யாராகிலும் நமக்கு அவர்கள் பூர்வோத்தரத்தைக் கொண்டாகவேண்டியது ஒன்றுமில்லை. நமது வீடு தேடிவந்தால், வந்தவருக்கு மரியாதைசெய்து அனுப்புவதுதான் நமது கடமை” யென்று. ஆதலால் நானகபாவா போனவிடமெல்லாம் மரியாதைபெற்று, ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து, சிஷ்யர்களைச்சேர்த்து உபதேசம் செய்துவந்தார். ஆனால் தனிகர்கள் எக்காலத்திலும் கருவமதிகரித்தவராதலால், பாவாவை முதன்முதல் நம்பி வழிபட்டவர்கள் அனேகமாய் இந்துக்களிலும், மகம்மதீயரிலும், ஏழைகளாயுள்ளவர்களே. சேர்ந்தவர்களெல்லாருக்கும் பக்தி யதிகரித்துப் பஜனைசெய்வது பிரபலமாகி, ஸ்ரீ நானகபாவாவின் கீர்த்தனைகளும் எங்கும் பரவிவந்தன. 1538-ம் ௵வரை இது இடையறாது நடந்து வந்தது.

ஒருநாள் சாயரக்ஷை வேளையில் ஒரு கிழவி செத்துப்போனவளை எடுத்துக்கொண்டு ஊர்த்தெருவழியாகப் போனார்கள். அவள் மகன் நெருப்புச்சட்டியை வழக்கப்படி எருமுட்டைபோட்டுப் புகையப் புகையக் கொண்டுபோனான். காற்று எதிர்முகமாக வீசியதால், புகை அவன் முகத்திலடித்தது. அடிக்கவே அவன் கண்களை மூடிக்கொண்டும், பல்லையிளித்துக்கொண்டும் போவதை அங்கு ஓர் வீட்டில் நின்று பார்த்துக்கொண்டிருந்த ஆறுவயதுப் பெண்குழந்தை அருகிலிருந்த தன் தகப்பனைப் பார்த்து, ‘அப்பா, நெருப்புக் கொண்டுபோகிறவன் ஏன் சிரிக்கிறான் ?' என்ன, தகப்பனும், ‘அம்மா, அவனுக்குத் தாயார் போய்விட்டாள். இனி ஒருவருஷத்திற்கு அப்பம் வடைக்குக் குறைச்சலில்லை யென்று சிரிக்கிறான்,' என்றார்.



## தென்னிந்தியப் பிராணிவர்க்கம்

பூச்சிப்புலவர்

நாம் முந்தி யெழுதியபடி, தென்னிந்தியாவில் நம்முடன் வாசஞ்செய்யும் பிராணிவர்க்கங்களைக் குறித்து மொத்தத்திலும், நாட்டிலும் காட்டிலும் நாம் செய்துவருங் காரியங்களுக்கு அனுகூலமாகவோ, பிரதிகூலமாகவோ, இருந்துவரும் பிராணிவர்க்கங்களைக் குறித்து விசேஷித்தும், சொல்லவேண்டு மென்பது நமது அபிப்பிராயம். ஆனால் இப்படிச் சொல்லுவதற்கு எது சரியான ஆரம்பமென்பதை முதலில் நிச்சயிக்கவேண்டும். ஒரு கிரமும் இல்லாமல், இந்த மாசம் தேளைப்பற்றியும், அடுத்தமுறை சிங்கத்தைப்பற்றியும், பேசுவதில் பிரயோஜனம் சிறிதுமில்லையாதலால், இந்தப் பிரஸ்தாபத்திற்குச் சரியான ஆரம்பம் இன்னதென்பதை விசாரித்தறிதல் வேண்டும்.

இதுதான் சரியான மார்க்கம். ஏனெனில், குழந்தைகள் செய்வதைக் கவனித்தாலும் இப்படித்தான் அவர்கள் விஷயங்களை அறிந்துகொள்ளுகிறார்களென்று விளங்கும். ஒரு குழந்தை சாமான்னியத் ‘தேள்' இன்னதென்பதையறிந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். ஏதோ சந்தர்ப்பத்தில் அது ‘எருமைத்தேள்' அல்லது ‘நண்டுவாய்க்கிளி' யைக்காண்கிறது. உடனே அது ஓடி வந்து, ‘அம்மா, வந்துபார், ஏதோ ஒன்று தேளைப்போல் ஊர்ந்து போகிறது!' என்கிறது.

இப்படித்தான் பெரியவர்களும். ஏதாகிலும் ஒரு பூச்சியையோ, பக்ஷிமிருகாதிகளையோ முதன் முதற் கண்டால், ‘இது என்ன வாயிருக்கலாம்? எந்தவர்க்கத்தில் சேர்ந்தது? என்று சங்கிப்பதும், ஒருகாயைக் கண்டால், இது பச்சையாயிருக்கிறது, பாவற்காயுமல்ல; பக்கமெல்லாம் முள்ளிருக்கிறது, பலாக்காயுமல்ல; உள்ளே வெளுத்திருக்கிறது, தேங்காயுமல்ல; உருக்கினால் நெய்வடிகிறது, நெய்யுமல்ல,” என்றிப்படிப் பலவிதமாகத் தர்க்கித்துக் கடைசியாக ‘ஆமணக்கு' என்று நிஷ்கரிஷை செய்வதும்தான் நமக்கு சகஜம், அல்லவா? இப்படிப்போலவே எல்லா விஷயத்திலுமென்றறியவேண்டும்!



பிராணிகளைக் காணுந்தோறும் இப்படியே பல நாட்டிலும் ஜனங்கள் சுவபாவமாகத்தொகுத்தும், பகுத்தும் வந்திருப்பதனால், பக்ஷி, மிருகம், மீன், பூச்சி, புழு என்று சாமான்னிய வர்க்கங்களும், ‘ஜராயுஜம்' முதலிய சாஸ்திர சம்மதமான வர்க்கங்களும் நமக்குள் வெகு காலமாக ஏற்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறு பகுத்து அறிவதனால்தான் நமக்கு அறிவு சுலபத்தில் விசாலமாகிறது. சேனையென்றிருந்தால், அதை ரதம், கஜம், துரகம், பதாதியெனப்பகுத்தும், வீரர்களைப் படையாட்களென்றும், அதிரதர், மகாரதர் என்றும், ‘சேனை முதலியார்' என்றும், உபசேனாதிபதிகள், என்றும் எப்படி வகுத்து அவ்வவற்றின் போக்கை அறிகிறோமோ, அதுபோலவே, மிருகங்களையும் வகுத்துத் தாரதம்மிய மறிந்து பேசுவது நல்லது. ஆனால் இது சுலபமன்று. பழையகாலத்தில் பிராணிகளைப் பரீக்ஷித்த புத்திமான்கள், ஏதோ மேல்பூச்சாகப் பார்த்து, இதைப் பசுவர்க்கத்திலும், அதைப் பக்ஷிவர்க்கத்திலும் சேர்த்துவிட்டார்கள். அப்படிச் செய்ததில் சாஸ்திரத்திற்கு அது ஒத்துவராமல், பலவிதமான தப்பெண்ணத்திற்கும், தப்புப் பேச்சுக்கும் இடமுண்டாயிற்று. வெளுத்ததெல்லாம் பாலென்பது மதியீனமல்லவா?

இப்படி யேற்பட்ட தப்புப் பகுப்புகளினால் அனேக உபத்திரவங்களுண்டாகவே, பலகாலம் சிரமப்பட்டுக் கடைசியாகச் சமீபத்தில் வித்துவான்கள் சரியான பகுப்பு லக்ஷணங்களை யேற்படுத்தினார்கள். ஆகவே, முன் நடந்தபடி

மேல்வடிவத்தையாவது, சிலங்களையாவது லக்ஷியம்வைத்துப் பகுப்பது தப்பென்றும், பிராணிகளுடைய தேகங்களுக்கு மூலாதாரமாயுள்ள எலும்புக்கூடு முதலியவற்றை லக்ஷியம்வைத்தே அவற்றைப் பகுக்கவேண்டு மென்றும் விதியேற்பட்டு நடந்துவருகிறது.

ஒரு உதாரணம் இதை நன்கு விளக்கும். 'திமிங்கலம்' என்னும் பெரிய நீர் வாழும் பிராணியை மச்சவர்க்கத்திலேயே வெகு காலமாகச் சேர்த்துப் பேசி வந்தோம். நம்மவர்களுள் இன்னும் அதற்கு 'மகாமச்சம்' என்றே பெயர் வழங்குகிறது. இதற்கென்ன காரணமென்று விசாரிக்குமிடத்து ரகசியம் வெளியாகிறது. 'அதுவும் நீரிலேயே வாழ்கிறது. மீனுக்குள்ள லக்ஷணங்களெல்லாம் அதற்கும் இருக்கிறது,' என்று வாய்ச்சுளுவாகப் பேச்சுப் புறப்படுகிறது.

ஆனால் காலக்கிரமத்தில் இந்த ஜந்துவின் பிறப்பு, உயிர்வாழ்க்கை முதலியவற்றைக் கவனித்ததில், மீன்களைப்போல் எப்போதும் இது நீருக்குள்ளிருந்தே வாழ்வதில்லையென்றும், மீன்களைப்போல் முட்டையிடுவதில்லை யென்றும், ஆடுமாடுகளைப் போல குட்டிபோட்டு அவற்றிற்கு முலை கொடுத்து வளர்க்கிறதென்றும் வெளியாயிற்று. ஆதலால் இனி அதை 'மச்சம்' என்பது பிசகு. எலும்புக்கூட்டைப் பரிசோதித்தாலும் மச்சங்களுக்கும் 'மகா மச்சத்திற்கும்' உள்ள வேற்றுமை வெளியாகும். இப்படி இன்ன இனத்திற்குச் சேர்ந்ததென்பதையே முதலில் நிஷ்கரிஷை செய்துகொள்ளாமல் பிராணி வர்க்கங்களையெடுத்துப் பேசுவது உபயோகமற்றதென்று இப்போது நன்கு விளங்கும்.

மொத்தத்தில் பிராணிப் பிரபஞ்சத்தைக் குறித்துப் பேசுவோமானால், பிராணிகளெல்லாம் இருவகைப்படு மென்னலாம். அவையாவன, முதுகெலும்பு கூடியன, அது கூடாதன வென்பனவேயாம்.

இப்படி யிருப்பதனால் இனி நாம் ஏதோகிரமத்தில் ஆரம்பிக்கலாம். 'ஜந்துக்களுக்குள் நர ஜன்மம்' என்கிற நியாயத்தை யனுசரித்து உத்தம பக்ஷத்தையோ, அல்லது கீழிருந்து படிப்படியாக ஏறியோ வரலாம். அனேகமாய் மனிதனைப் பிராணியென்றும், ஜந்துவென்றும் சொல்லுவது இகழ்ச்சியேயாதலால், மனிதனொழிய மற்றுள்ள ஜந்துக்களைத்தான் நாம் விசாரிக்கவேண்டிய அவசரம். ஆகவே அடுத்தமுறை 'விசாரிப்பு'க் கிரமத்தை யின்னதென்று விளக்கி, 'விசாரத்தையும்' ஆரம்பஞ் செய்கிறோம்.

- பிராணிவர்க்கம்
  - முதுகெலும்பு கூடியன
    - மீன்கள்
    - தவளைகள்
    - ஊர்வன (பாம்புகள்)
    - பக்ஷிகள்
    - முலை கொடுப்பவை
  - முதுகெலும்பு கூடாதன
    - பரமாணுப் பூச்சிகள்
    - பவழப் பூச்சி
    - புழுக்கள்
    - நண்டு, சிங்கி, தேள் } முதலியன.



## ககோளதத்துவம்—பாலபாடம்

ஸ்ரீமதி ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள்

### 2-ம் அத்தியாயம்

#### பூமி சுழல்வது

சென்ற மார்கழி மாதத்து சஞ்சிகையில் சொல்லிவந்த எட்டு சாட்சியங்களினாலும் இந்தப் பூமியானது உருண்டை யாயிருக்கிறதென்பது தெளிவாகும். ஆனால் அது முற்றிலும் பந்துபோல் இல்லாமல் மணிலாக் கிச்சிலிப்பழம் போல மேலும் கீழும் அமுங்கி வயிறு பெருத்து இருக்கிறது. அதாவது ஒரு ரப்பர்பந்தை நமது உள்ளங்கையில் வைத்து மற்றொரு உள்ளங்கையினால் அமுக்கினால் அது எப்படி ஆகுமோ அது போன்ற உருவமுள்ளது. இதற்குக் காரணம், ஒரு காலத்தில் இந்தப் பூமியானது நிலம், நீர், வாயுவென்கிற ரூப பேதமில்லாமல் உருகின கற்குழம்பாக இருந்ததாகவும், அது தன்னையே தான் பம்பரம்போல் சுற்றிக்கொள்வதனால், குயவன் திகிரிமேல் பந்துபோல் திரட்டிய ஒரு ஈரமான மண் மொத்தையை வைத்துச் சுழற்றினால், அது எப்படித்தலை அமுங்கி உடல் ஒரு சற்றுப் பெருத்துக்கொள்ளுமோ, அதுபோல இந்த உருவத்தை யடைந்ததாகவும், பிறகு மேற்புறம் குளிர்ந்ததனால் நிலம், நீர், வாயுக்கள் உண்டானதாகவும் ஊகிக்கப்படுகிறது.

ஆகவே பூமியானது ஒரேவிதமாய்ச் சுழல்கிறதென்பது ஏற்படுகிறது. கிச்சிலிப்பழத்தை எடுத்து, ஒரு நீள ஊசியை அதன் காம்பினிடம் சொருகி, காம்பிற்கு எதிர்ப்புறமாகிய நுனி வழியாய் அதை வெளிவரும்படி செய்து, ஊசியைப் பிடித்துக்கொண்டு திருகினால் பழம் எப்படிச் சுற்றுமோ அதுபோலவே, ஊசியைப்போன்ற ஒரு இருசு பூமிக்கு வாஸ்தவத்தில் இல்லாவிட்டாலும், இருந்தால் எப்படியோ, அப்படியே பூமியும் சுழல்கிறது. இருசின் இரண்டு முனைகளும் உத்தர முனையென்றும் தக்ஷிண முனையென்றும் சொல்லப்படும். இந்த இரண்டு முனைகளிலிருந்தும் சமதூரத்தில் பூமியைச் சுற்றி ஒருகோடு வரைந்தால், எலுமிச்சம் பழத்தை இருதுண்டாக்கிப் பிறகுசேர்க்கும்போது வெட்டுவாயில் எப்படிப் பழத்தைச் சுற்றி ஒருகோடு போலிருக்குமோ அப்படி யிருக்குமல்லவா? அப்படிப்பட்ட பூமியின் கோட்டிற்கு ஈக்வேடர் என்று பெயர். இருசின் நீளம் $7899\frac{1}{2}$-மைல் என்றும் ஈக்வேடரின் குறுக்களவு $7926\frac{1}{2}$-மைலென்றும் கணிதமூலமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது பூமியின் குறுக்கு அளவைவிட இருசு 27-மைல் குறைந்தது. ஆனால் இப்படி 27 மைல் குறைந்திருப்பதனால் பூமியானது கிச்சிலிப்பழம்போல் அவ்வளவு தலை அமுங்கினதாய்க் காணுவதில்லை. 8-அடி குறுக்களவுள்ள ஒரு பந்தின் மேலுங் கீழுமாய்ச் சேர்த்துக் காலே வீசம் அங்குலம் கனம் எடுத்துவிட்டால் அந்தப்பந்தின் உருவம் எப்படியாகுமோ அப்படியிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். ஆதலால் மொத்தத்திற்குப் பூமியானது சுமார் 8000 மைல் குறுக்களவுள்ள ஒரு பெரிய பந்துபோன்றது என்று சொல்லிவிடலாம். ஈக்வேடர் வழியாய் ஒரு ரோட் போடப்பட்டிருந்தால் மணிக்கு 3-மைல் ஓயாமல் நடக்கும் மனிதன் பூமியைச் சுற்றிவர ஒரு வருஷத்திற்கு மேலாகும்.

சூரியன் அஸ்தமித்ததும் நக்ஷத்திரங்கள் உதயமாவதையும், பிறகு கிரமமாக உச்சமாய், மறுபடி அஸ்தமனமாவதையும் கவனித்துப் பார்ப்போம். வடக்குமுதல் கிழக்கு வழியாய்த் தெற்குவரையில் உள்ள வெளியை கிழக்கு என்றும், தெற்குமுதல் மேற்குவழியாய் வடக்குவரையில் உள்ள வெளியை மேற்கு என்றும் வைத்துக்கொள்வோம். வடக்கில் பூமியும் வானமும் சேருமிடத்திற்குக் கொஞ்சம் மேலாக, அதாவது தலையைச் சற்று நிமிர்ந்து பார்க்கும்படியான உயரத்தில் துருவ

னென்னும் நக்ஷத்திரம் காணப்படும். அது அதிக பிரகாசமானதல்ல. தெரிந்தவர்களைக் கேட்டுக் காட்டச்சொல்லி இதை அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்கப்புறம் சப்தரிஷிகள் என்னும் பிரகாசமுள்ள ஏழு நக்ஷத்திரங்கள் கூடிய ஒரு கூட்டமும் இருப்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்தக் கூட்டத்தின் தலைப்புறம் முனை இரண்டு நக்ஷத்திரங்களையும் சேர்த்து ஒரு கோடுகிழித்தால் அந்தக்கோடு துருவ நக்ஷத்திரத்திற்கு வெகு சமீபத்தில் போகும். துருவனை இந்த மாதிரியாகத் தெரிந்துகொள்வது வெகு சுலபம். இதற்காகவே அந்த இரண்டு நக்ஷத்திரங்களுக்கும் துருவதரிசிகள் (துருவனைக் காட்டுகிறவை) என்றுபெயர்.

இரவில் எப்பொழுது எழுந்துவந்து பார்த்தாலும் துருவன் அனேகமாய் ஒரே நிலையிலிருக்கும். மற்ற நக்ஷத்திரங்கள் துருவனை மையமாய் வைத்துக்கொண்டு எப்பொழுதும் அதற்கு ஒரே தூரத்திலிருந்து கிழக்கில் பலவிடங்களில் உதயமாகிப் பிறகு அதற்குச் சரியாய் மேற்கில் அஸ்தமிக்கின்றதைக் காணலாம். வடகிழக்கில் உதயமாகிறவை சாய்வாய்க் கிளம்பி உச்சமாகும் சமயத்தில் கிழக்கு மேற்காய்ச் சென்று வடமேற்கில் சாய்வாய் அஸ்தமிக்கின்றன. கிழக்கில் உதயமாகிறவை கூடியமட்டும் கிழக்கு மேற்காகவே நகர்ந்து மேற்கில் அஸ்தமிக்கின்றன. துருவனைக் காட்டும்படியாய்ச் சாய்வாக ஒரு கொம்பைப் பூமியில் நட்டு அந்தக் கொம்பிலிருந்து ஒவ்வொரு நக்ஷத்திரங்களின் தூரங்களையும் அவைகளின் உதயமுதல் அஸ்தமனம் வரையில் கவனித்துக்கொண்டிருந்தால் இதனுண்மை தெளிவாகும். இதனால் ஒரு பெரிய ஓட்டின் உட்புறத்தில் நக்ஷத்திரங்கள் பதிக்கப்பட்டு அந்த ஓடு போன்ற அண்டத்தைத் துருவன் வழியாய் நுழைத்து ஒரு இருகைப் பிடித்துத் திருமினால் எப்படி அந்த ஓடுபுரளுமோ, அம்மாதிரியே நக்ஷத்திரங்கள் நகருவதைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு நக்ஷத்திரத்திலிருந்து மற்றொன்றின் தூரம் ஒருக்காலும் வித்தியாசப்படுகிறதில்லை, ஆனால் நக்ஷத்திரங்கள் போலிருக்கும் கிரகங்களை இங்கு கவனிக்கக்கூடாது. துருவன் வழியாய் நுழையும் இருசு தெற்கில் அதற்கு எதிரில் நுழையுமிடம் நமக்குக்காணாது. ஏனெனில் எப்படி துருவனை நிமிர்ந்து பார்க்கவேண்டிவருகிறதோ அதுபோல் அதற்கு நேரெதிரிருப்பதை நாம் குனிந்து பார்க்கவேண்டி வருகிற நியாயத்தால், அது நமது கண்ணிற்குத் தெரியாதென்று அறிந்துகொள்ளவும்.

நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் பிரம்மாண்டமான வைகளென்றும், கணக்கிலடங்காத தூரங்களிருக்கின்றன வென்றும் முந்திச் சொன்னோம். ஆதலால் இவைகள் உதயமாவது, அஸ்தமனமாவது, என்றால், ஒன்று, இப்படிப்பட்ட நக்ஷத்திரங்கள் பூமியைச் சுற்றிவரவேணும். அல்லது இந்தப்பூமி தன்னையே தான் நாளுக் கொருதரம் சுற்றிக்கொள்ளவேணும். இவ்விரண்டில் எது சாத்தியமென்பதை யோசிப்போமானால் பூமியே தன்னிருசில் சுழலவேண்டியதென்றும், அந்த இருசின் உத்தரமுனைக்கு நேராக துருவனிருக்க வேணுமென்றும் புலப்படும். பூமியானது கிழக்குமுகமாய்ச் சுழல்வதால், நக்ஷத்திரங்கள் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி நகருவதுபோல் தோற்ற முண்டாகிறது. ஆனால் பூமிதான் சுழல்கிறது என்பதை நம்புவது வெகு கஷ்டமானதுதான். நாம் ரயில்பிரயாணம் செய்யும்பொழுது ரயில் மேற்கு நோக்கி ஓடினால், பக்கத்திலுள்ள செடிகள், மரங்கள் முதலியன கிழக்கு நோக்கி ஓடுவதுபோல் தோற்றமுண்டாகிற தல்லவா? சில சமயங்களில் பக்கத்துத் தாண்டவாளங்களில் ஒரு



வண்டித்தொடர் நகர்ந்தால், நாமிருக்கும் தொடர் நகருகிறதா அல்லது மற்றது நகருகிறதாவென்று வேறு ஆதாரமில்லாமல் சொல்லவே முடியாது. கப்பலிலாவது படகிலாவது போகும்பொழுது ரயிலிலுள்ள சப்தமும் குலுக்கலும் இல்லாததால், இம்மாதிரித் தோற்றங்களை விசேஷமாய்க் காணலாம். நாமிருக்கும் படகு ஓடுகையில் நிற்கும் மற்றொன்று ஓடுவதுபோலவே தோன்றும். கப்பலின் உட்புறம் இருக்கிறவனுக்குக் கப்பல் ஓடுகிறதா நிற்கிறதாவென்று சொல்லமுடியாது.

நமது பூமியானது குலுங்காமலும் சப்திக்காமலும் சுழல்வதானால், அது நமக்குத் தெரியாமலிருப்பது ஆச்சரியமல்லவா? அப்படிச்சுழல்வதால் பூமியின் சுற்றளவு சுமார் 25000-மைலாகவே, நாமிருக்குமிடம் ஒருமணிக்குள் 1000-மைலுக்குமேல் ஓடவேண்டும். அப்படி ஓடும் பொழுது, போர்வைபோல் பூமியைச் சுற்றி வியாபித்துக்கொண்டிருக்கும் வாயுவைவிட்டுப் பூமி மாத்திரம் சுழல்வதனால், ஒரு மணிக்கு 1000-மைல் ஓடக்கூடிய ஒரு பேய்க் காற்று ஆரம்பித்து, அது நம்மையெல்லாம் வாரிக் கொண்டுபோய் எங்கேயோ எறிந்துவிடும். ஒரு கல்லை மேலே எறிந்தால் அது கீழே விழ ஒரு நிமிஷமானாலும் அதற்குள் பூமி கால் மைலுக்குமேல் ஓடிவிடுமாகையால் எறியப்பட்ட கல் கால் மைல் மேற்கிலல்லவோ விழவேண்டும். அப்படி விழுவதில்லையே. ஆதலால் பூமியோடு வாயுவும் கூடவே சுழல்வது நிச்சயம். ஓடுகிற ரயிலுக்குள்ளிருக்கும் வாயுவுமல்லவா ரயிலோடு ஓடுகிறது. இல்லாவிட்டால் ஓடுகிற ரயிலுக்குள் உட்கார்ந்து அம்மானையாட முடியுமா? அல்லது ஒருவன்மேலிருக்கும் ஈயானது அவனைவிட்டுச் சாவகாசமாய்ப் பறந்து மற்றொருவன்மேல் வந்துட்கார முடியுமா? அதே ஈயானது ரயிலை விட்டு வெளியில் வந்துவிட்டால் ரயிலுடன் ஓடமுடியாது. பின் தங்கிவிடும்.

ஏதேனும் ஓர் வஸ்து வேகமாயோடினால், அதன்மேலிருக்கும் ஒவ்வொரு வஸ்துவுக்கும் அந்த ஓட்டம் வந்துவிடுகின்றது. வேகமாய் ஓடுகிற ரயிலினுள்ளிருந்து ஒரு பழத்தோலையோ, விதையையோ நாம் வெளியே எறிந்தால், அது கொஞ்சதூரம் ரயிலோடும் மார்க்கம்போய்த்தான் பிறகு கீழேவிழும்.

பூமி சுழல்வதானாலும் அதை நாமுணராமலிருப்பது சாத்தியமென்பதை நாம் இதுவரையில் விளக்கினோம். நிஜமாய்ச் சுழல்கிறதென்பதற்குச் சாக்ஷியங்களுண்டா வென்பதை இனி விசாரிப்போம்.

1. சூரியனைச் சுற்றிவரும் மற்ற கிரகங்கள் எல்லாம் சுழல்கின்றனவாதலால், இந்தப் பூமியாகிய கிரகமும் சுழலுகிறதென்று ஊகிக்கவேண்டும்

2. ஒரு செங்குத்தான கோபுரத்தின்மேலிருந்து ஒரு கனத்த கல்லைக் கீழே போட்டால், அது விழவேண்டிய நேருக்குக் கொஞ்சம் கிழக்காய் விழுகிறது. இதை வேண்டுவோர் பரிசோதித்துப் பார்க்கலாம். ஒரு வண்டிச் சக்கரம் சுழலும்பொழுது, அதன் கும்பத்தினருகிலிருக்கும் நீர்த்துளியை விட வட்டையினருகிலிருக்கும் நீர்த்துளிக்கு ஓட்டமதிகமாகையால், அது பறந்துபோவதைப் பார்த்திருக்கிறோம். அதுபோலவே பூமி சுழல்வதானால் கோபுரத்தின் அடியைவிட தலைக்கு அதிக வேகமிருக்கவேண்டும். கிழக்கு முகமாக அதிக வேகத்தை அடைந்திருக்கும் ஒரு கல் கீழே விழும்பொழுது பின்னும் கிழக்கில் விழுவது நியாயம்.

3. எல்லா சாக்ஷியங்களையும்விட பின் சொல்லப்போவது சருவ சிலாக்கியமானது. அதை நன்றாய்ப்பார்க்க வேணுமானால் பூமியின் உத்தரமுனைக்குப் போகவேண்டும். நாமெல்லாரும் அங்கு இருப்பதாக நினைத்துக் கொள்வோம். துருவநக்ஷத்திரம்போல உத்தரமுனை அசைவற்றது அந்த முனைக்கு எழு

அடி தூரத்திலிருக்கும் ஒருவஸ்து, 243-மணியில் 22-அடி தான் ஓடும். ஈக்வேடரிலிருப்பதோ அதேகாலத்தில் 25000-மைல் ஓடுமென்று மேலே நாம் விளக்கியிருக்கிறோம். உற்சவகாலத்தில் ஜனங்களை உட்காரவைத்துச் சுற்றும் ஒரு ராட்டணத்தின் மேலிருக்கும் இரண்டு பொம்மைகள் மெள்ளச் சுழல்வதையும், உள்ளே தொட்டில்களிலிருப்பவர்கள் அதைவிடக் கொஞ்சம் வேகமாய்ச் சுழல்வதையும் குதிரைகளிலிருப்பவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் பறப்பதையும் நாம் யோசித்துப்பார்த்தால் இது வெகு நன்றாய் விளங்கும். அந்த இடத்தில் இரண்டு கொம்புகளை நட்டுக் குறுக்காக மேலே ஒருகொம்பைக்கட்டி அதன்நடுவில் ஒரு தூக்குக் குண்டைக்கட்டித் தொங்கவிட்டு, ஒரு கொம்பினிடமிருந்து மற்றொன்றினிடம் போகும்படியாய் அதை இழுத்துவிடுவதாய் நினைத்துக்கொள்வோம். இப்படியாடும் தூக்குக் குண்டுக்குப் பேண்டுலம் என்று பெயர். ஒரு சன்னமான கயிற்றின் நுனியில் பந்துபோன்ற இரும்பு குண்டு ஒன்றைக்கட்டித் தொங்கவிட்டு அதை ஆட்டிவிட்டால் ஒருமணிக்குக் குறையாமல் ஆடிக்கொண்டிருக்கும். நட்ட கொம்புகள் தெற்கு வடக்கா யிருப்பதாக நினைத்துக்கொள்வோம். ஆனால் உத்தரமுனையிலிருந்து பார்த்தால் எப்படிப் பார்த்தாலும் தெற்குத்தான். ஆறுமணிகாலம் அந்தப் பெண்டுலம் ஆடிக்கொண்டே யிருந்தால் தெற்கு வடக்காய் ஆட்டிவிடப்பட்டது கொஞ்சங் கொஞ்சமாய்த் திசை மாறி ஆறுமணி முடிவில் மேற்கு கிழக்காயாடும்!

இதன் காரணம் பூமி சுழல்வதால் நம்முடைய தெற்கு வடக்கானது நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிக்கொண்டிருக்கிறது. அதனால் தெற்கு வடக்காய்க் காணப்பட்ட கொம்புகள் 6-மணிக்கெல்லாம் தெற்கு வடக்கு மாறிவிடுகிறது. பெண்டுலமோ பழையபடியே ஆடிக்கொண்டிருக்கிறது. இந்தப் பரிக்ஷையை நாமிருக்குமிடத்திலும் செய்து பார்க்கலாம். நாமிருக்கும் அறையின் கீழண்டைச்சுவரில் ஒரு ஆணி அடித்து அதில் சுமார் ஆறு அடி நீளமுள்ள ஒரு பெண்டுலத்தை, ஆட்டும்பொழுது சுவற்றில்படாமலிருக்கும்படியான தூரத்தில் கட்டி ஜாக்கிரதையாய் ஆட்டிவிடுவோம். சுமார் கால்மணிநேரம் பார்த்துக்கொண்டிருந்தால், சுவற்றிலிருந்து சமதூரத்தில் ஆட ஆரம்பித்த பெண்டுலமானது, வடபுறம் சுவற்றை நெருங்கிக்கொண்டும், தென்புறம் சுவற்றிலிருந்து விலகிக்கொண்டும் வந்து கடைசியில் வடபுறம் போகும்போது சுவற்றில் மோதும். ஆதலால் இந்தக்ஷணத்தில் நாம் தெற்கு வடக்கு என்று சொல்லும் திக்கானது ஆறு மணிக்குப் பிறகு பூமியில் கால்பகுதி சுழன்று மேற்கு கிழக்காய்விடுகிறது. அதாவது ஆறுமணிக்கெல்லாம் நாம் கிழக்கேபோய் முந்திய வடக்கைக் கிழக்கென்கிறோம். பூமிக்குச் சம்பந்தப்படாமல் அதற்கு வெளியில் ஒருவன் நிற்கக்கூடுமானால், முதலில் நாம் பெண்டுலத்தைத் தெற்கு வடக்காயாட்டி விடுவதையும், அது அந்தத் திக்கிலேயே சத்தியமாயாட நாம் கிழக்காய்ப் பெண்டுலம் கோணுகிற தென்று விழிப்பதையும் பார்க்கலாம். பெண்டுலம் கட்டப்பட்டிருக்கும் ஆணியும்கூட 6-மணியில் கால வரிசை சுழலவில்லையோ வென்றால், அதனால் பெண்டுலத்தின் திக்கு மாறாது. ஏனென்றால் பெண்டுலத்தின் கயிற்றை இருவிரல்களில் பிடித்திறுக்கிப் பார்த்தாலும் அது திக்கு மாறாது. இதனுண்மையைப் பின்வருமாறு செய்துபார்க்கலாம். ஒரு பலகையில் இரண்டு துவாரங்கள் செய்து, அல்லது எப்படியாவது இரண்டு சிறு கொம்புகளை நட்டு அந்தக் கொம்புகளின் முனைகளை வேறொரு கொம்பு சேர்த்துக்கட்டி, அந்தக் குறுக்குக்கொம்பின் மத்தியில் ஒரு பெண்டுலத்தைக்கட்டிக் கொம்புக்குக் கொம்பு ஆடும்படியாய் ஆட்டிவிடுவோம். அது ஆடிக்கொண்டிருக்கும்பொழுதே மெதுவாய்ப் பலகையை ஒருதிக்கு (அதாவது முழுச் சுழலிற் காற்பங்கு) சுழற்றினால் கொம்புக்குக் கொம்பு ஆடிக்கொண்டிருந்த பெண்டுலம் குறுக்காக ஆடும். எந்த விஷயத்தையும் கண்ணால் பார்த்தால், நம்பலாமாகையால் இந்தப் பெண்டுல நியாயத்தை எல்லாரும் செய்துபார்த்துப் பூமியானது கிழக்கு முகமாய் மேற்குறித்தபடி வேகத்துடன் சுழல்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளுதல் சாத்தியம்.

(இன்னும் வரும்).





ராட்டண தூலி

# புஸ்தக விமர்சனம்

தெய்வபக்தி விவேக விளக்கம்.—ஸ்ரீமான்-தங்கச்சாமி சாகிபு அவர்களாலியற்றப்பட்டது. சுதேசாபிமானி அச்சுக்கூடம், சேலம்.

இச்சிறு புஸ்தகத்தைப் பார்வைக்கனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். பல தேசங்களிலும், பல காலங்களிலும் விவேகிகள் மதவிஷயமாயும், ஆசார விஷயமாயும், சொல்லிவந்திருக்கும் அரிய ரகசியங்களை இவ்வளவு மட்டில் சுருக்கி யெழுதியது அற்புதமே. எழுதியவர் மகம்மதீயராகிலும், இதரவகுப்பினருடைய மதம், ஆசாரமுதலியவற்றைச் சமரசமாகப் பாவித்தது வெகுதூரம் மெச்சத்தக்கது. தமிழ்நடை வெகுசிறம். வெகுசாய்ச் செய்யுளானலும், பழைய சதகங்கள் போன்று, யாரும் பொருள் எளிதிலுணருமாறு, அரும்பதங்களை யொழித்து, நடை ஆற்றொழுக்காகவே போயிருக்கிறது. இக்காலத்தில் பள்ளியில் கொஞ்சம் கற்றவருக்குள்ள துரபிமானங்களையும், அதற்குப் பரிகாரமாக விவேகிகளுடைய கோட்பாடுகளையும், நன்கு விளக்கியிருப்பதால், ஐஸ்கூல் பிள்ளைகள் இதையும், இனிவரும் இரண்டாம் பாகத்தையும் படித்துத் தமிழ் வசனநடையை அப்பியசித்துக்கொள்ள நல்ல துணைக்கருவியாக இதைக் கொள்ளலாம். நூலாசிரியர்மட்டும் 'பிதாகோராஸ்,' 'புத்தன்,' முதலியோரைப்பற்றிப் பேசுவதில் ஏகவசனத்தை யொழித்துவிடுவது நலமென்பது நமது கோட்பாடு. எச்சாதியாராகிலும், 'சிரியரை' மரியாதை வைத்துப் பேசுதல் நன்றென நமக்குக் காணும்.

2. ஞானரதம்.—ஸ்ரீமான்-ஸி. சுப்பிரமணிய பாரதி அவர்களாலியற்றியது.

பாரதியார் தமிழ்ப்பத்திரிகை படிப்பவருக்கு நன்றாய்த் தெரிந்தவராகவே, அவரைக்குறித்து நாம் எதும் எழுதவேண்டியதாகக் காணவில்லை. இச்சிறு புஸ்தகம் இங்கிலீஷ் சம்பிரதாயத்தில் 'கனவு' என்று பொருள்படும் ஒருமுறையை அனுசரித்தெழுதியதாகக் காணுகிறது.

முக்கியக்கருத்து, இக்காலத்தில் நமது தேசத்திற்கு வந்திருக்கும் துர்த்தசையையும், நமது நாட்டிலுள்ள ஸ்ரீமான்களுடைய சில துர்லக்ஷணங்களையும் விளக்கிப் படிப்பவர் தாமாகவே பரிகாரம் தேடிக்கொள்ளும்படி விட்டதாகவும் காணுகிறது, கனவாதலால் அதற்கு இதுதான் போக்கு, என்கிற நியமமில்லையாயிற்று. சிருங்கார ரஸமாகக் கந்தருவ லோகமும், கந்தருவ யுவதியும், வந்து சேருகிறார்கள். வேறு ரஸங்களும் காணுகின்றன. சாஸ்திரம், அனுபவம், சுருதி, யுக்தி, சிரிப்பு, அழுகை, எல்லாம் சேர்ந்து, 'ராஜஸமான' நடையில் எழுதியிருப்பதால் படிக்க வெகு காரசாரமாகவேயிருக்கிறது. பாரதியாரவர்கள் உட்கருத்தை யறிவது எல்லோருக்கும் எளிதன்றாயினும் ருசியுடன் படிப்பது யாராலும் ஆகக்கூடிய காரியமேயாம்.

### பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரப் பத்திரிகைகள்.—பிழைக்கும் வழி, விவேகபோதினி, சக்ரவர்த்தினி, வித்தியாபானு, பிரபஞ்சம், ஹிதகாரிணி, ரஞ்சித போதினி.

மாதம் இருமுறை பதிப்புகள்.—இந்து சாதனம், உதயதாரகை.

வாரப் பதிப்புகள்.—திராவிட தீபம், நீலலோசினி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, சந்திரிகை, பாண்டியன், திராவிடாபிமானி, சிலாங்கூர் வித்யபாஸ்கரன்.

வாரம் இருமுறைப் பதிப்புகள்.—மைசூர் டைம்ஸ்.

# சமாசாரக் குறிப்புகள்

'சாரதா' என்னும் மாதாந்தர மலையாளப் பத்திரிகையை நடத்திவரும் ஸ்ரீமதி-கல்லியாணி அம்மாள், இங்கிலாந்தில் 'ராயல் ஆசியா சொஸைட்டி'க்கு மெம்பராகியிருப்பதாகக் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். இந்த அம்மாள் குழந்தைகளுக்காகச் சிறு புஸ்தகங்கள் அனேகம் எழுதியிருப்பதுடன், 'மகாராணிவிக்டோரியா'வின் ஜீவனசரிதமொன்று வெகு நேர்த்தியாக எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறே தமிழுக்கும் நல்ல தசையுண்டாகவேண்டுமென்பது நமது கோரிக்கை. ஆண்மக்கள் வல்லினமாதலால், 'மெல்லினமாக' எழுதிக் குழந்தைகளுக்கும், சாமான்னியருக்கும் ருசியுண்டாக்குவது தாய்மாருக்கே சிறந்துள்ள சாமர்த்தியம். 'தாய்ப்பாஷை' யன்றோ நாம் காரிய விஷயத்திலெல்லாம் பேசுவது. தமிழ் கற்றவர்களில் இரண்டொரு 'ஸ்ரீமதிகள்' வல்லினமாகப் பேசுவதையும், எழுதுவதையும் நாம் கேட்டும்,



பார்த்துமிருக்கிறோமென்பது மெய்யே. என்றாலும் மொத்தத்தில் நாம் சொல்வது நிசம். தெறிதப்பும் இரண்டொருவரும் தெரியாத்தனத்தினாலேயே அங்ஙனம் செய்கிறார்களல்லது, வேண்டுமென்றல்ல.

"வாஸ்தவத்தில் இந்தியா ஈசுவரனுக்குச் சர்வசிரேஷ்டமான உடைமை. ஈசுவரன் விசேஷித்துப்பிரசன்னராயிருக்கும் இடம். அதினின்றும் விக்ஞானபானு மறைவதேயில்லை," என்று 'தியாஸபி இந்தியாவில்' கூறுகிறது. நமக்கும் இம்மாதிரிச் சொல்லிக் கொள்ளுவதில் சந்தோஷம் தான். ஆனால் பிரத்தியக்ஷமாக நடக்கும் காரியங்கள் அனேகங்களைப் பார்க்கும்போதும், அவைகளைப்பற்றிச் சிந்திக்கும் போதும், நமக்குப் பலவாறு சந்தேகமுண்டாகிறது. "தம்மினுங் கற்றாரைநோக்கிக் கருத்தழிக," என்பது கல்வி, ஒழுக்கம், முதலியவற்றிற்கெல்லாம் பொருந்தும். ஆதலால் நமது ஒழுக்கங்களிலுள்ள குறைகளையே நாம் கவனித்து, குணங்களை வேண்டுமானால், பிறர்பார்த்து மெச்சும்படி விட்டு விடுவது நமக்கு உத்தமமாகக் காணுகிறது.

⁂

'கடையைக்கட்டுவது நலமா, விரிப்பது நலமா,' என்பதை ஒருபெரியவர் விசாரித்து, 'கட்டுவது நலமன்று,' எனத் தீர்மானிக்கிறார். ஏனெனில் 'கடையைக்கட்டு,' என்றால் 'நீ ஏதோ உனக்குத் தெரிந்ததாகப் பேசுகிறாயே அதை நிறுத்து,' என்று தாற்பரியம். இது அன்னியாயம். அவனவன் தான் தெரிந்ததையோ, அல்லது தெரிந்ததாக எண்ணியிருப்பதையோ பற்றிப் பேசுவது தான் அழகே யல்லது, முற்றும் தெரியாத விஷயத்தைப் பற்றிப் பேசுவது அழகன்று. பிறர் கேட்கவு மாட்டார்கள். ஆனால் ஒவ்வொருவரும் தத்தம் 'கடையைவிரிக்கும்படி,' நாம் அனுமதிகொடுத்தால் அவர் பேசும் விபரீதங்களும் நமக்கு அறிவையோ, சந்தோஷத்தையோ, அதிகரிக்கச் செய்யும். ஆதலால் அதற்குக் கட்டைபோடுவது சரியன்று.

⁂

நமக்குச் சில வருஷங்களுக்குமுன் கவர்னராகவிருந்த ஆம்டில் பிரபு சென்ற வாரத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியா கவர்ன்மெண்டுக்குக் கொடி விருதொன்று பிரத்தியேகம் வேண்டுமென்று பிரஸ்தாபம் செய்திருந்தார். அதையொட்டி நமது நண்பரொருவர் சமீபகாலத்தில் ஒரு பத்திரிகையிலெழுதி, 'இந்திரவஜ்ர' மென்னும் பழைய சித்திரத்தை அதிற் சித்திரிக்கவேண்டுமென்று கூறி, அதற்குப் பிரமாணமாக மகாபாரதம் முதலிய பழைய கிரந்தங்களிலிருந்து வச்சிரத்தினுடைய பெருமையை விளக்கி யெழுதுகிறார்.

⁂

இந்திய வர்த்தக மகா சங்கங்களைக் குறித்து முன்னொருக்கால் நாம் பேசினோமல்லவா? இதுவரை ஐரோப்பியச் சங்கங்களுக்கும், நமது சங்கங்களுக்கும் விசேஷ பரிசயமிருக்கவில்லை. ஏனெனில் நம்முடைய வர்த்தக நோக்கம் வேறாகவும், அவர்களுடையது வேறாகவுமிருந்ததுகொண்டு, வாஸ்தவத்தில் ஒற்றுமையிருப்பது அசாத்தியம். என்றாலும் சமீபகாலத்தில் இத்தேசத்தில் நடக்கும் கலகங்களாலும் 'வெடிகுண்டு' வகையரா உபத்திரவங்களாலும், உண்டாகக்கூடிய நஷ்டம் எல்லோருக்கும் ஒரேவகைத்தாதலால், கல்கத்தாவிலுள்ள சுதேசிய, விதேசிய வர்த்தக சங்கங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து கலகத்தை யடக்க வகை தேடுவதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

⁂

மதிராசுக் கண்ணாடிப் பாத்திரத் தொழிற்சாலைக்குச் சென்றமீ நமது கவர்னரவர்கள் போய்ப் பார்த்தார். வேலை ஆரம்பமாகி நன்றாய் நடந்துவருவதாகக் கேட்டு நமக்கு மெத்தவும் சந்தோஷம். சோடாபுட்டிகள் மேனாட்டுச் சரக்கைவிடத் திடமென்றும், கண்ணாடி ஓடு முதலிய சாமான்கள் நேர்த்தியாகச் செய்கிறார்களென்றும் தெரிகிறது. நமக்குள் நாகரிகம் பிரபலிக்குமளவிற்குக் கண்ணாடிப் பாத்திரங்களும், ஏனங்களும் வேண்டிவருவது நிச்சயம். இதற்குப் பத்தாயிரமயில் தூரத்திலிருந்து சரக்குத் தருவிப்பது எப்போதும் நல்லதல்ல. ஆதலால் இப்போது ஆரம்பித்தது கிரமமாய் நடந்து பெருகுமென்றும், வேறு நடக்கக்கூடிய இடங்களில் ஷாப்புகள் ஏற்படுமென்றும் நம்புகிறோம்.

⁂

இங்கிலாந்துக்கு வெகுகாலம் முதன் மந்திரியாகவிருந்து புகழ்பெற்ற கிளாட்ஸ்டன் துரையவர்கள், எத்தனையோ சாமான்னியரைப் பிரபுக்களாக்கியும், தனக்குமட்டும் அந்தப்பதவி வேண்டாமென்றும், தான் கடைசிவரை சாமான்னியர்களான மகாஜனங்களில் ஒருவராகவேயிருந்து போகவேண்டுமென்றும் சொல்லிவந்து, அப்படியே முடிவுபோக நடத்தியும் செய்தார். அவர் மகன் ஸ்ரீமான்-ஹெர்பர்ட்டு கிளாட்ஸ்டன், தென் ஆப்பிரிக்கா ஐக்கிய மாகாணங்களுக்குக் கவர்னர் ஜனரலாகப்போகிறார். அவருக்கு ஏதோபட்டம் கிடைத்திருப்பதாகவும், அவரும் அதை ஒப்புக்கொண்டிருப்பதாகவும் வதந்தி. இதையவரவர் தத்தம் மனோதரும்பபடி யோசிப்பார். பட்டகர்த்தனரிடத்தில் நமக்கு விசே

ஷபக்தியில்லையென்றுதான் இக்காலத்தில் அனேக விவேகிகள் சொல்லிவருவது.

இங்கி யில்லாமல் அச்சிடுவதற்கு ஒரு யுக்தி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக 'சேம்பர்ஸ்' பத்திரிகையால் அறிகிறோம். அணிமாதி அஷ்டசித்திகளும் நமது நாளில் 'வைத்தியுதம்' என்னும் மின்சாரத்தினால் கிடைப்பதனால், இது ஒரு அதிசயமல்ல. இத்தனைநாள் இது உண்டாகாமலிருந்தது தான் அதிசயம். மின்சாரக் கம்பிகளைப் பாரத்துடன் சேர்த்து, ஒரு நொடியில் கறுப்பிலோ, வேறு வர்ணத்திலோ வேண்டியபடி அச்சிட்டுவிடலாம். செலவும், சிரமமும் சுருங்கும். வருணங்கள் பல சேர்ந்து ஒரேபக்கத்தில் அச்சிடுவது இப்போது வெகு கஷ்டசாத்தியம். அதுவிஷயத்தில் தான் இந்த உபாயம் வெகு உபகாரமாக விருக்கும்.

ஆஸ்திரியத் தலைமைப்பட்டணமாகிய வியென்னாவில் கோ ஆபரேடிவ் முறையில் ரொட்டிக்கிடங்கு ஏற்பட்டு வெகு சீராக நடந்துவருகிறதாம். 50000-முழுரொட்டிகள் அதில் தினசரி தயாராகிறதாம். அதில் 70000-பெயருக்கு மேலேயே மெம்பர்களிருக்கிறார்கள். யந்திரக்கருவிகள், சரக்குகள், எல்லாம் முதல்தரமானவைகள். முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அந்த யந்திரச்சாலையிலுழைக்கும் வேலைக்காரருடைய தசை. சாமான்னியமாய் முதலாளிகள் பணம்போட்டுக் கூட்டு வியாபாரம் அல்லது தொழில் நடத்துவதில், கூலிக்காரருக்கு லாபத்தில் ஒருகாசு கிடையாததுடன், வேலை சரியாக வாங்கிவிடுகிறார்கள். இதிலோ, கூலிக்காரரே முதலாளிகளுமாதலால், வேலை, தேகசௌக்கியம், கூலி, முதலிய எல்லா விஷயங்களும் அவர்களுடைய க்ஷேமத்தைக் கோரியே ஏற்படுகின்றன. ஓ நண்பர்களே, இதைக்கவனியுங்கள், சுகமடையுங்கள்.

'விஹாரிணி' முதல் நெம்பரில் சொல்லிய ஸ்ரீபுத்த பகவானுடைய எலும்புகளைப் பர்மாவுக்கு அனுப்பிக்கொடுக்கும்படி அவ்விடத்திய பக்தர்கள் கேட்டதாகவும், அதற்கு இந்தியாகவர்ன்மெண்டார் சம்மதித்ததாகவும் முந்தியே தெரிந்திருந்ததில், சமீபத்தில் அவ்விடமிருந்து ஒரு புத்தகோஷ்டி கல்கத்தாவுக்குப் போனதாகவும், அவர்களிடம் மேற்கண்ட எலும்புகளைச் சம்புடத்துடன் ராஜப்பிரதிநிதியவர்கள் ஒப்புவித்ததாகவும் கேள்விப்படுகிறோம். இந்தியாவில் புத்தர்களையும், புத்தமதத்தையும், புத்தபகவானுடைய எலும்புவகைராக்களையும் கவனிப்பாரில்லாமையால், இவைகள் மந்தலேக்குப்போவதில் யாரும் ஆக்ஷேபிப்பாரில்லை. சட்டப்படி நடக்கவேண்டிய சடங்குகள் நடந்தாகிவிட்டன.

பம்பாய் யூனிவர்ஸிட்டிப் பரீக்ஷையில் தேறிய குமாரர்களுக்குப் பதிவுபோல் ஆசீர்வாதம் செய்கையில், கவர்னரவர்கள் சொல்லியது :—"ஓ குமாரர்களே, நீங்கள் அவசரப்படாதேயுங்கள். இந்தியாவைக் கட்டியாளுவது எவ்வளவு சிரமமென்பது உங்களுக்குத் தெரியாது. சுற்றிலுமுள்ள ராச்சியங்களில் என்ன நடக்கிறது, அவைகளால் உங்கள் ராச்சியத்திற்குக் கிடைக்கக்கூடிய லாப நஷ்டங்கள் என்ன, என்பதைக் கவனியுங்கள். தவிர இந்நாட்டிலேயே வேலிகள் பயிரைத்தின்பது சாத்தியம். அதையும் கவனியுங்கள்," என்கிறார். இது சரியே. ஆதலால்தான் நம்மவர்களில் விவேகிகள், "ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு துரைத்தனம் நடத்தினால், அதிலுள்ள கஷ்டநிஷ்டூரங்கள் ஜனங்களுக்கு நன்றாயுறைக்கும். வாய்ச்சளுவாகப் பேச்சுப்புறப்படாது," என்று வாதாடி வந்திருக்கிறார்கள்.

மதிராஸில் வியாபாரம் முதலியவற்றில் தேர்ந்து கைவலுத்திருப்பவர்கள், தரும புத்தியுடன் கூலிக்காரர் விஷயத்திலும் அவர் மக்கள் விஷயத்திலும் சிரத்தை வைத்து உழைத்து வருவதைக் கண்டு சந்தோஷிக்கிறோம். பிப்ரவரி 14-தேதி இவர்கள் ஒரு மகாநாடு கூடி ஸ்ரீமான்-ரங்கைய கவுண்டர் சபா நாயகராகவிருந்து நடவடிக்கை நடத்தினார்கள். ஸ்ரீமான்-எம். மாசிலாமணி முதலியார் கூலிக்காரருடையவும், சம்பளம் குறை[illegible]யாட்களுடையவும், தசையை வருணித்து, இத்தன்மையோருடைய மக்களுக்குக்கல்வி, தொழிற்பயிற்சி முதலியவற்றிற்குத் தற்காலம் ஒருசவுகரியமுமில்லாமலிருப்பதாலும், அதனால் இம்மக்கள் கெட்டுத்துஷ்டராகி நமக்குக் கீழ்வயிற்றுக் கழலைகளாகிவிடுவதாலும், இவர்களுக்கு எலிமெண்டரி தரபுவரை இலவசமாகப் படிப்பும், ஏதாவது தொழிலும் கற்பிக்கவேண்டி நடக்கும் பிரயத்தனத்தை விவரித்தார். இந்தச் சபைக்கு ஐரோப்பிய வியாபாரிகளும் வந்திருந்து ஆமோதித்தது ஒரு விசேஷம்.

கொல்லத்திலிருந்து திருவனந்தபுரம் சமார் 40 மைல். இந்த 40-மைல் போவதற்கு இப்போதிருக்கிறபடி சமார் 20-மணி நேரமாகிறது. இது பெரிய உபத்திரவமென்பதில் சந்தேகமில்லை. இதற்கு ஒரே பரிகாரந்தான் உள்ளது. அதாவது கொல்லம்வரை வந்த ரயிலை மீதியுள்ள 40-மைலுக்கும் கொண்டு போவதாம். ஆகவே இந்தக்காரியத்தை இப்போது தொடங்கியிருப்பதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம.

சமீபகாலத்தில் காணும் ஹாலிதூமகேதுவைக் குறித்து இலங்கையிலுள்ள பலருக்கு, "அதிக அச்சமும், வருங்கால ஸ்திதியைப்பற்றிச் சில அங்கலாய்ப்பான எண்ணங்களும் உண்டாயிருக்கின்றன. முன்பு ஒரு முறை வால்வெள்ளி தோற்றியகாலத்தில் மீன்கள் புழுத்தனவாகையால், இம்முறையும் அவ்வாறேயாகும் என்பது அவர்களுக்குண்டாயிருக்கும் பொதுவான எண்ணம். அதனால் அவர்கள் மீன்கள் இறைச்சிகளை இப்போதே தள்ளி மரக்கறிகளைப் பாவிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள்."



Photo by Carnatic Studio.]

பாபா பிரேமானந்த பாரதி சுவாமிகள்

REGISTERED 13 JUN 1910 MADRAS.

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள், முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| | | |
|---|---|---|
| புஸ்தகம் I.<br>Vol I. | சாதாரணஹு சித்திரைமாதம்<br>April 1910 | சஞ்சிகை 8<br>No. 8 |

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினனே."

### சைதாப்பேட்டையில்போதனைமுறைகற்கும்

மதிராசு கவர்ன்மெண்டு பாதிரியாரும் மத விஷயமாகப் படிப்பும்.

உபாத்திமாருக்கு உதவும்படி, சென்றமீ கவர்ன்மெண்டு பாதிரியாராகிய ஸ்ரீமான்-வைட்ஹெட் பட்டவர்த்தனர் ஒரு உபந்யாசம் செய்தார். இந்தியப்பள்ளிக்கூடங்களில் மதம், குணம், ஆசாரம் இவ்விஷயமாய்ப் படிப்பு வேண்டுமென்கிற பிரஸ்தாபம் சுமார் பதினைந்து வருஷ காலமாக அப்போதப்போது இருந்துகொண்டேதான் வந்திருக்கிறது. என்றாலும் அதைப்பற்றி இந்தவழிதான் போகவேண்டுமென்று தெளிவாக விதித்தவர் யாருமில்லை. இந்தியாகவர்ன்மெண்டுக்குக் கொஞ்சநாளைக்குமுன் பெரிய பாதிரியாராகவிருந்த டாக்டர் வெல்டன் என்பவர் கிறிஸ்துமதக் கிரந்தங்களைக் கூசாமல் எல்லோருக்கும் படிப்பிக்கவேண்டுமென்று பகிரங்கமாய்ச் சொன்னார். ஆனால் அதையொருவரும் காதிற் போட்டுக்கொள்ளவில்லை. வேறு சிலர் இந்துக்களுக்கு வேத முதலியவற்றையும், மகம்மதியர்களுக்குக் குரானையும், கிறிஸ்தவர்களுக்குப் பைபிலையும்கற்பிக்கவேண்டுமென்றும், நன்னெறிகளை எல்லோருக்கும் பொதுவாகக் கற்பிக்கவேண்டுமென்றும், சொல்லி வாதாடி வந்தார்கள். அதுவும் பேச்சு மாத்திரந்தான் நடந்தது. பத்துவருஷம் வாதாடியதில், இந்துஸ்தானத்தில் இரண்டொரு ஹிந்துக் காலேஜ்களிலும், அலிகர் முதலிய இரண்டொரு மஹம்மதியக் காலேஜ்களிலும், ஏதோ ஒரு விதமாக மதபோதனை நடந்து வருகிறது.

தென்னிந்தியாவில் ஒன்றும் நடப்பது சாத்தியமாகக்காணுவதில்லை. ஏனெனில் இவ்விடத்தில் பரஸ்பரபேதங்கள் வெகுதூரம் முற்றியிருக்கின்றன. வருணம், ஜாதி, இவைகளிலுள்ள பேதங்கள் மட்டுமேயன்றிப் பாஷை விஷயத்திலும் பேதம் வெகுவாக முற்றியிருப்பதால், ஒருகாரியமும் நடக்குமென்று காணுவதில்லை. ஸ்ரீமாந்-வைட்ஹெட் துரை பத்து

வருஷத்திற்கு முந்தி ஒருமுறை இவ்விஷயமாய்ப் பேசியபொழுது, இப்படித் தான் சொன்னார். அதாவது, இந்தியாவில் இப்பொழுதிருக்கிற ரீதிக்கு இந்து மதவிஷயமாகச் சமரசமாய்ப் போதிப்பது சுலபமன்று, என்று. அதற்குச் சிலர் அக்காலத்தில் அர்த்தம் செய்தார்கள். இந்துமதம் உதவாதென்றால், கிறிஸ்துமதம்தான் உதவலாமாக அவர் எண்ணியதுபோலும், என்று.

பத்து வருஷமானபிறகு மறுபடி ஷியார் பேசியதைக் கேட்கும்போது, அப்படியொன்றும் அவர் முஷ்கரமாக எண்ணவில்லையென்பது தெளிவாகிறது. இப்பொழுது அவருடைய வாதம் இது. மதவிஷயத்தில் படிப்பு அவசியம் வேண்டும். சர்க்காரோ கிறிஸ்தவர்கள். ஆதலால் அவர்கள் வேறொரு மதத்தைச்சிரத்தையுடன் படிப்பிப்பது கூடாத காரியம். ஆனால் கிறிஸ்துமதத்தை இந்து மகம்மதியருக்குக் கற்பிப்பதும் கூடாத காரியம். ஏனெனில் இந்துக்களுக்கும், மகம்மதியருக்கும் அது மதமன்று. தவிரச் சர்க்கார் தாம் பிரஜைகளுடைய மதவிஷயத்தில் எவ்விதத்திலும் பிரவேசிப்பதில்லையென்று பிரமாணம் செய்திருக்கிறார்கள். ஆதலால், இந்தியாவில் மதவிஷயமாய்ப் பள்ளிக்கூடங்களில் படிப்பு நடக்கவேண்டுமானால், டிபார்ட்மெண்டுப் பள்ளிக்கூடங்கள் எல்லாம், சர்க்கார் அதீனம் நீங்கி, மகா ஜனங்கள் அதீனமாகிவிடவேண்டும். இந்து, மகம்மதிய, கிறிஸ்தவம் ஆகிய மூன்று மதங்களே இந்தியாவின் முக்கிய மதங்களாதலால், அந்தந்த மகா ஜனங்கள் தத்தமக்கு வேண்டியமட்டில், பள்ளிக்கூடங்களை ஆங்காங்கு அமைத்துக்கொண்டு மதம், ஆசாரம் இவற்றைப் போதித்துப் பரிபாலனம் செய்வதுதான் சாத்தியமாகக் காணுகிறது, என்கிறார்.

ஆனால், இதுதற்காலம் நடப்புக்கும் இனிப் பள்ளிக்கூடங்களுக்குக் காணும் தசைக்கும் நேர் விரோதமாகக் காணுகிறது. ஏனெனில் இப்பொழுது சில வருஷங்களாக நடப்பதைப் பார்க்குமிடத்துப் படிப்பு விஷயத்தில் சர்க்காருடையவும், டிபார்ட்மெண்டாருடையவும், வியாபாரம் அதிகரித்து வருவதேயன்றிக் குறைவதாகக் காணுவதில்லை. இனிப்பிரைமெரி பாடசாலைகள் எங்கும் ஏற்பாடாகிக் குழந்தைகளுக்குச் சம்பளமில்லாமல் பாடம் சொல்லவேண்டுமென்றும் ஏற்படுவதில், அவர்களுடைய அதிகாரம் பின்னும் அதிகமாகவே வியாபிக்கும். செகண்டரி, காலேஜ் தரபுகளிலும், 'மாதிரிப் பள்ளிக்கூடங்கள்' வேண்டுமென்று சர்க்கார் மூலமாய்ப் பிரயத்தனம் நடந்துவருகிறது. இன்ஸ்பெக்டர் வகைரா உத்தியோகஸ்தருடைய சங்கியையும் அதிகரித்துவருகிறது.

ஆதலால் நமது பாதிரியவர்கள் சொல்லும் சங்கதி தென்னாட்டிற்குச் சமீபகாலத்தில் ஏலாததென்றே நாம் சொல்லவேண்டி வருகிறது. ஏனெனில் மதவிஷயத்திற்காகச் சர்க்கார் தமது உத்தேசங்களை நிறுத்திவிடுவது நடவாத காரியம்.

**லாகோர் பண்டக்காக்ஷி.**

மதிராசு கவர்ன்மெண்டுக்குத் தொழில் விஷயத்தில் டைரெக்டராகிய ஸ்ரீமான்-காட்டன் துரையவர்கள் லாகோரில் சென்ற டிசம்பர்மீ த்தில் கூடிய பண்டக்காக்ஷியைப்பற்றிச் சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார்கள். இவருக்கு உத்தியோக தருமத்தினாலும், வேறு பல காரணங்களாலும் இவ்விஷயத்தைப்பற்றிப் பேச யோக்கியதை சித்தித்திருப்பதால், இவர் சொல்வதை அப்பண்டமாற்றுக்குரியவர் கவனிக்க வேண்டும். தேசியத்தொழில்கள் முன்னுக்கு வரவேண்டுமானால், நம்மிடத்தில் காணும் குறைவுகளை யெடுத்துக்காட்டும்படிசற்ஜனரை நாம் வேண்டிக்கொள்வது நல்லதாதலாலும், இம்மாதிரிக் காக்ஷிகளால் அது சாத்தியமாகி, அதனால் நாம் முன்னுக்கு வருவது நிச்சயமாதலாலும், இதுபோன்ற காக்ஷிகள் இந்தியாவெங்கும் இருந்துவருவது நல்லதென்று இவர் வாதிக்கிறார். அது சரியென்றே நாமெல்லோரும் ஆமோதிக்கலாம்.



லாகோருக்கு வந்த சரக்குகளைப் பற்றிப் பேசுமிடத்து, மதிராசிலிருந்து இரண்டு தறிகள் பரீக்ஷைக்காகப் போயின. வேறு தறிகளும் வந்திருந்தன. அவற்றில் 'சர்ச்சில்' தறியென்பது நன்றாகக்கூடுமென்று மதிராசு கவர்ன்மெண்டுக்குக் கண்டதால், அதில் ஒன்று வாங்கிச்சேலம் சர்க்கார் நெசவுப்பள்ளிக்கூடத்தில் பரீக்ஷிக்கப் போகிறார்கள். பங்காளத்திலிருந்து 'கெமிகல்,' என்றால், ஔஷதம், கைத்தொழில் முதலியவற்றிற் குதவும் சரக்குகள் ஏராளமாய் வந்திருந்தன. அவ்விடத்தில் இந்தச் சாஸ்திரத்தில் நிபுணரான டாக்டர் பி. ஸி. ராய் என்னும் கனவான் இதை ஆரம்பித்தது. சரக்குகள் முதல்தரம். நயத்திற்கும் குறைவில்லை. இந்தியாவில் விளையும் ரோஜா, மல்லிகை, முதலிய நல்ல வாசனை வீசும் புஷ்பங்களிலிருந்து சிரேஷ்டமானதும்; கிருத்திரமமில்லாததுமான அத்தர் முதலிய திராவக சத்துகளை யிறக்குவதற்காக இந்தக் கம்பெனியார் ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால் புண்ணியம், புருஷார்த்தம் இரண்டும் உண்டு. சவர்க்காரம் அதிகமாகவே தயாராகிவருகிறது. என்றாலும், சவர்க்காரங்களில் வாசனையதிகமே தவிர,யோக்கியதை அதிகரிக்கவில்லை. மெழுகுவர்த்திகளில், குஜராத்து கம்பெனியென்று பம்பாயில் விர்த்தியாகி வரும் கம்பெனியாருடையது சிரேஷ்ட மென்றும், மதிராசிலாகிவரும் பாரதவர்த்திகள் அவ்வளவு சிரேஷ்டமாகக்காணவில்லையென்றும் இவர் சொல்லுகிறார். பாரதவர்த்தி உடைமைக்காரர் இதைக் கவனித்துச் சீக்கிரம் அதிற்காணும் குறைவுகளைப் பரிகரிக்கவேண்டும். தேசியத் தீப்பெட்டிகளும், தீக்குச்சிகளும் இன்னும் நன்றாய்த் தீர்மானமாக வேண்டும். விவசாயவகையில் அநேகம் கருவிகள் வந்திருந்தன. அவற்றில் ஜனங்களுக்கு அக்கரை அதிகமாகக் கண்டதாம். இது நற்குறியென்றே காணுகிறது. 'பிக்கானீர்' ராச்சியத்திலிருந்து வந்த களிமண்ணைக்கொண்டு ஆக்கிய சட்டிபானை வகைகள் வெகு திறமென்றும், ஆனால் 'சீனமண்' மாதிரியான முதல்தரம் மண் இந்தியாவிலெங்கும் காணுவதாயிருக்க, குயவன் தொழில் மட்டும் எவ்வளவு சிறக்கலாமோ அவ்வளவில்லையென்றும் காணுகிறது. இதைக் குயவர்கள் கவனிக்கவேண்டும். கண்ணாடி சாமான்களும், யந்திரங்களும், இப்போது இறப்படையாவிட்டாலும் சீக்கிரம் அடையுமென்று காணுகிறதாம்.

பட்டுவிஷயத்தில் காஸ்மீரம் முதலிய இடங்களில் வேலை பழையபடி திறமாகவே நடந்து வருகின்றன. பங்களூரில் 'தாதா' பட்டுப் பரீக்ஷைத் தோட்டத்தைச் 'சால்வேஷன் சேனை' யென்கிற கிறிஸ்தவவர்க்கம் வாங்கித் தங்கள் முயற்சியால் முன்னுக்குக் கொண்டுவரப் பார்க்கிறார்களாம்.

லாகோர் காக்ஷியை மொத்தத்தில் பார்க்குமிடத்துச் சந்தோஷகரமே யென்றாலும், மதிராசைப் பொறுத்தமட்டில் நடக்கவேண்டிய காரியம் ஏராளமாயிருக்கிறது. நாணயம் அதிகரித்து, ஜனங்கள் ஒருவரையொருவர் நம்பி, 'மொந்தைகளிலுள்ள' பணமெல்லாம் வெளிவந்து ஒன்றுசேர்ந்து 'குட்டிபோடவேண்டும்.' புத்திமான்கள் தொழில் ரகசியங்களை நன்றாய்க் கற்று, வைத்தியகாரக் வியாபாரம் செய்யாமல், எங்கு எந்தத்தொழில் சிறக்குமென்பதை அறிந்து பணத்தைப் போட்டு வேலையாரம்பிக்க வேண்டும். சர்க்காரோ இவ்விஷயத்தில் வேண்டிய பரீக்ஷைகளைச் செய்வதற்கும், சிறிய ஆரம்பங்களைச் செய்துபார்ப்

பதற்கும், விவேகிகளாயுள்ளவருக்குத் திரவிய சகாயஞ்செய்து, வேறு தேசங்களுக்கு அனுப்பித் தொழில் கற்றுக்கொடுப்பதற்கும், தயாராயிருக்கிறார்கள். ஆனால் மொத்தத்தில் இது ஜனங்களாலாகவேண்டிய காரியமென்பதைப் புத்திமான்கள் அறியவேண்டுமென்று இவருடைய உபதேசம்.

**பாபா பாரதி அவர்களுக்கு வழியனுப்பு.**

சென்றமீ மதிராசில் பாபா பிரேமாநந்த பாரதி சுவாமிகளும், அவருடைய அமெரிக்க சிஷ்ய ஜனங்களும் வந்து சில நாளிருந்ததில், சுவாமிகளுடைய உபந்நியாசம் பல இடங்களில் நடந்தது. பாபா சுவாமிகள் இன்னாரென்று தெரியாதவர்களுக்கு உபயோகமாக இரண்டொரு சங்கதிகள்மட்டும் சொல்லிவிடுவோம். இவர் பங்காளத்தில் ஹைகோர்ட்டு ஜட்ஜி முதலிய பெரிய உத்தியோகங்கள் வகித்து, கல்வி, ஒழுக்கம் இவற்றுட் சிறந்தோங்கிவரும் ஒருசத்வமிசத்தி லுதித்தவர். வெகு சிறுவயதிலேயே மதவிஷயமாக மனதைத் திருப்பி யுழைத்தவர். இந்துஸ்தான வைஷ்ணவரில், பங்காளிகள் ஸ்ரீ கிருஷ்ண சைதன்னிய சுவாமிகளுடைய சம்பிரதாயப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவானை ராதாவல்லபனாகவும், கோபிகாரமணனாகவும், உபாசித்து வருவதில், அதை உறுதியாகக்கொண்டு, ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பக்தியதிகரித்து, அந்தப் பக்திரஸத்தை மற்றவரும் அறிந்து ஆனந்தப்பட்டு மோக்ஷமடைய வேண்டி அதற்கென்ன செய்வதென்று யோசித்தார். அமெரிக்காவுக்கு நல்ல காலமாதலால், அவ்விடத்தில் போய் அவ்விடத்தில் இந்த ரகசியத்தை வெளியிடவேண்டுமென்று அவருக்குப்புத்தி யுண்டாயிற்று.

அமெரிக்கா ஜனங்கள் வெகு விசித்திர சுபாவமுடையவர். அந்த நாட்டில் செல்வச் செருக்கு வெகு அதிகம். ஆதலால் 'சருவசக்தானபகவான்' என்று நாம் சொல்லுவதை மாற்றி, அத்தேசத்தவர் 'சருவசக்தரான வெள்ளியப்பன்,' என்று வழங்குவதுண்டு. பழையநாளில் இரணியாக்ஷன் தன்னையே தெய்வமாகப்பாவித்திருந்தபடியே, இவர்களுள் கோடீசுவரர்கள் தங்களைச் சர்வேசுவரராகப் பாவித்திருப்பதாகச் சமாசாரம். தவிர வெள்ளைக்காரர், கறுப்பு மனிதர், தாமிர நிறத்தவர், ஆகிய மூன்றுவகைஜனங்கள் இந்தநாட்டிலிருப்பதில், வெள்ளைக்காரர் மற்றிருவகையாரையும் தங்களிஷ்டம் போல் நடத்திப் பலவிதமாகவும் இம்சைசெய்து வருவதாகவும் கேள்வி.

“செல்வம் வந்துற்றகாலைத் தெய்வமும் சிறிதுபேணார், சொல்வனவறிந்து சொல்லார், சுற்றமும் புறமுநோக்கார்,” என்பது நமக்குள் வெகு நாளைய அனுபவம். நம்மவர்களே இப்படியானால், வேற்றாரார் ஒரு இந்திய சந்நியாசிக்கு மரியாதை வைத்து, அவர் சொல்லுவதைக் கேட்பார்களாவென்று நமக்குக் காணுவது சகஜம். அதிலும் செல்வச் செருக்கினால் கண் புரை மூடி, நெஞ்சம் கல்லாகி, பணத்தைப் பிரத்தியக்ஷ தெய்வமாகக் கொண்டிருக்கும் வேற்றாரிடம் போய், அவர்கேட்டிராத மத விஷயமாகப் போதனைசெய்து, அவர் மனதைத் திருப்புவதென்பது, கேவலம் பைத்திய குணமென்றே யாரும் சொல்லிவிடலாம்.

என்றாலும் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் சுவாமிகளுக்குள்ள பக்திக்கு அளவில்லையாகவே, அவர் இதையெல்லாம் கணக்கிடாமலும், லாபநஷ்டம் விசாரியாமலும், ஸ்ரீபகவானையே நம்பிப் புறப்பட்டுப்போனார். அவருடைய கிருபாபலத்தினாலும், தமது பக்தி விசேஷத்தினாலும், போய்ச் சில வருஷங்களுக்குள்ளாக அமெரிக்காவிலுள்ள வெள்ளைக்காரர்களில் பணக்காரரும், கல்வியிற் சிறந்தோரும், அநேகர் சுவாமிகளுடைய மதத்தைக் கைப்பற்றி ஸ்ரீ கிருஷ்ணபக்தராகி யிருக்கிறார்கள். இப்பொழுது ஒரு கிருஷ்ணன் கோயிலும் அவ்விடத்திலாகி யிருக்கிறது. சுமார் 9000-பெயர் பொ



றுக்கி யெடுத்தவராகி சுவாமிகளுக்குச் சிஷ்யராக விளங்குகிறார்கள். இவர்களில் சில ஸ்ரீமதிகள் இங்கு வந்திருந்தார்கள்.

சுவாமிகளுக்கு அமெரிக்காவில் ஸ்ரீ கிருஷ்ணனையும், கீதையையும் பிரபலப்படுத்த வேண்டுமென்பது மட்டும் ஆசையல்ல. அவ்விடத்திலுள்ளவருடைய செல்வச்செருக்கை யகற்றி, எல்லா ஜாதியாரும் அந்நியோந்நியமாய் வாழச் செய்ய வேண்டுமென்பது பெரிய ஆசைதான். ஆனால் அத்துடன் நில்லாமல் அவ்வாறு தமக்கு வசப்படும் அமெரிக்க ஸ்ரீமதிகளில், கல்வி, ஒழுக்கம் முதலிய நற்குணங்கள் நிறைந்தவர்களாக நூறுபெயரையோ, அதிகப்பட்டவரையோ, மறுபடி இந்தியாவுக்கு அழைத்து வந்து, இந்தியாவில் இக்காலத்தில், கிரகசார வசத்தினால் பலவிதத்திலும் மங்கிக் கிடக்கும் இந்திய ஸ்திரீகளுக்கு அவர்கள் மூலமாய் வித்தை, லௌகிகயுக்தி, வைதிகபுத்தி இவற்றைப் புகட்டவேண்டுமென்பதும் அவருக்குப் பேரவா. ஆதலால் அதற்கென்றே இப்பொழுது அவர் போவதால், மதிராசிலுள்ள மகா ஜனங்கள் சுவாமிகளுக்கு உபசாரம் சொல்லி, போகும் காரியம் கைகூடவேண்டுமென்றும், விபரீதமதங்களும் ஆசாரங்களும் எந்நாட்டிலும் பிரபலிக்காமற்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் சங்கற்பிக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். நாமெல்லோரும் இதைச் சந்தோஷமாக ஆமோதிக்கவேண்டியவர்கள்.

அமெரிக்காவில் சுவாமிகளுடையவும், அவரைப்போன்ற வேறு இந்தியர்களுடையவும், உபதேசம் வீண்போகவில்லை யென்பதற்குச் சமீபத்தில் ஒரு சாக்ஷியம் போதும். அமெரிக்கக் கோடீசுவரர்களிலெல்லாம் கைவலுத்தவர் ஜான் ரோக்பெல்லர் என்பவர். அவர் இப்பொழுது தமது ஆஸ்தியில் 60-கோடி பவுன் பெறுமானத்தைத் தருமார்த்தமாக விட்டிருக்கிறார். அதைக்கொண்டு அமெரிக்காவிலும், பூமண்டலத்திலுள்ள வேறு எந்நாட்டிலுமுள்ள மகாஜனங்களுக்குள், துக்க நிவாரணமும், சுகப்பெருக்கும் உண்டாவதற்குச் சாதனமான கல்வியோ, வேறெந்த உபாயமோ, செய்து வரவேண்டுமென்றும், சமஸ்தமான ஜனங்களுடையவும் க்ஷேமார்த்தமாக அது உபயோகப்படவேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். இந்தப் புத்தி கீதை கேட்காதவனுக்குத் தோன்றாது. ஏனெனில் கிறிஸ்தவமதம் இவ்வளவுநாள் அமெரிக்காவிலிருந்தும், சமஸ்தமான ஜனங்களுடையவிசாரணை அம்மதஸ்தருள் மட்டாகவேயிருந்து வந்திருக்கிறது பிரத்தியக்ஷம். அந்த விஷயத்திலும் சுவாமிகள் உழைத்துக்கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கு அவர்களுடைய வேத புஸ்தகத்திற்குச் சரியாகப் பொருள் சொல்லி, அவர்களுக்கும் கண் திறக்கும்படி செய்திருக்கிறார். இவ்வாறு இந்தத் தேசத்திற்கும், இதர தேசங்களுக்கும், நன்மையையே நாடிச் சந்நியாசி விரதம் பூண்டு, பரோபகாரத்தையே தனக்காக வேண்டிய காரியமாக வகித்திருக்கும், சுவாமிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூரணஆயுள், தேகபலம், மனோதைரியம் முதலியவற்றை மேலுமேலு மருளித் தமது சங்கற்பத்தை நிறைவேற்றுவாராக. சுவாமிகள் தமது மதவிஷயமா யெழுதிய புஸ்தகங்கள் வெகு நேர்த்தியாதலால், சில விஷயங்களை அவற்றினின்றும் திரட்டி, ஒழிந்தபோது அபிமானிகளுக்கு விநியோகம் செய்வோம்.

**காலடிப் பிரதிஷ்டையும், யூனைட்டட் இந்தியாவும்.**

ஸ்ரீகாலடி க்ஷேத்திரத்தில் நடந்த பிரதிஷ்டை விஷயத்தில், யூனைட்டட் இந்தியாவிற்கு ஒரு அம்சம் வினோதமாகக் காணுகிறதாம். அதாவது, அத்துவைதமத ஸ்தாபகராகிய ஸ்ரீ ஜகத்குருவுக்கு இம்மாதிரிக் கேவல துவைதமாக ஓர் ஞாபகக்குறி வேண்டுமென்று சிலர் நினைத்ததும், அதுவும் சரியென்று அந்தக் குருபரம்பரையில் வந்து

விளங்கும் ஸ்ரீசிருங்ககிரி சுவாமிகள் ஒப்புக்கொண்டதுமே. ஆனால் இதில் ஆச்சரியமொன்றும் நாம் காணுவதில்லை. பரகாயப் பிரவேச முதலிய மகிமைகளை ஆரோபித்து மகான்களுடைய பெயரை இகழ்ச்சிக்கு இடமாக்குவதைவிட இம்மாதிரிப் பூஜித்துவருதல் பலவினும் நன்றென்னல் தகும். தவிர இந்த ஞாபகக்குறிகள் சாரித்திர ரீதியாக வெகு உபகாரஞ் செய்யக்கூடியவைகள். அத்துவைத சித்தாந்தத்திற்கும் இதற்கும் எப்படி யொப்புமென்றால், ஒவ்வாதுதான். ஆனால் உலகம் எங்கும் முட்டாள்மயமாகி யிருப்பதால், அந்த முட்டாள்களெல்லோரும் விவேகிகளாகி வரும்வரை இம்மாதிரிப் பைத்தியக்கார காரியங்கள் நடக்கத்தான் செய்யும். அவரவர் கருமத்தையும், கருமபலனையும் அவரவரே தபசுமூலமாய் நசிக்கச் செய்யவேண்டுமென்று உபதேசித்து வந்த ஸ்ரீ புத்தபகவானுக்கு விக்கிரகங்களும், அவருடைய எலும்பு முதலியவைகளுக்குப் பூஜையும், விக்கிரகமென்கிற வாசனையே கூடாதென்று அதஞ்செய்து வந்த முகம்மதுநபிக்கு, அவரது ஜூப்பா, தாடிரோமம, முதலியவற்றை வைத்துப் பூஜையும், அப்படியே கிறிஸ்தவர்களில் சிலுவை முதலியவற்றிற்குப் பூஜையும், நடக்கும்வரை இதுவும் நடக்கலாமாகவே காணுகிறது. நம்மைப்போன்ற விவேகிகளுக்கோ இதெல்லாம் அனுவசியம். சாஸ்திரமும், "துவிஜருக்கு அக்னி தெய்வமாகவும், முனிகளுக்கு இருதயத்தில் தெய்வமாகவும், முட்டாள்களுக்கு விக்கிரகத்தில் தெய்வமாகவும், வேதாந்திகளுக்கு எங்கே பார்த்தாலும் தெய்வமாகவும் இருக்கிறது," என்று முறையிடுவதால், யாருக்காவது இம்மாதிரிக் காரியங்கள் பைத்தியமென்று கண்டால், அவர்கள் முனிகளோ, வேதாந்திகளோ, ஆய்விட்டது பிரத்தியக்ஷம். ஆனால் எல்லோருக்கும் அந்தப்பாக்கியம் இல்லையாதலால், அவரவர் மனோதருமத்தின்படி செய்வதில் தோஷமொன்றும் நாம் காணவில்லை. குடி, களவு, காமம், வெகுளி முதலிய துராசாரங்கள் அணுகாமலிருக்கும்வரை, நாம் இம்மாதிரிக் காரியங்களைத் தூஷிப்பது அனுவசியமென்பது நமது மதம். தவிர ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களிலிருந்தும், சிலர் இதை அங்கீகரித்ததாகக் காட்டியிருப்பதில், அவர்களனைவரையும் முட்டாள்கள் என்பதற்கு ஏனோ மனம் வருகிறதில்லை.

**கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபால்**

கும்பகோணம் என்னும் பட்டணம் பழையநாளில் கல்வி விஷயமாக வெகு தூரம் பேர் பெற்று விளங்கியது. அதிலுள்ள கவர்ன்மெண்டு காலேஜில் படித்தவர்கள் தென்னிந்தியாவிலும், அதற்கப்பாலும் போய்ப் பொறுமையான பெரும்பதவியை வகித்துச் சீராகக் காரியம் நடத்திப் பெருமையும் கீர்த்தியும் பெற்றவர்கள். அவ்விடத்தில் முந்திப்பிரின்ஸிபால்களாயிருந்த ஸ்ரீமான் போர்டர் துரையவர்கள், ஸ்ரீமான்-கோபாலராயரவர்கள், இவர்களுடைய வித்தை, விநயம் முதலியவற்றைச் சிறப்பித்து எத்தனையோ கதைகள் சொல்வதுண்டு. அவர்களுடைய சிஷ்யகோடிகளுக்குள் காணும் குருபக்திக்கு அளவேயில்லை. ஒருவர் இப்போது 60-வது வயதாகியும், தான் திவானாக உத்தியோகம் செய்தும், ராயரவர்களுடைய படத்தைப்பார்த்தால் தனக்கு இன்னும் அச்சம் உண்டாகிறதென்று சொல்லக்கேட்டிருக்கிறோம்.

இப்படி விளங்கிய காலேஜுக்கு இப்பொழுது சுமார் 20-வருஷங்களுக்கு மேலாகவே பெரிய துர்த்தசையென்னல் தகும். 80-96-ம் ௵ங்களில் தென்னிந்தியாவில் வித்தை விஷயமாகப் பெருங்குழப்பம். சர்க்கார் மானேஜ்மெண்டிலிருந்த காலேஜ்களை யெல்லாம் கேட்பவருக்குக் கொடுத்துவிடுவதாகப் பிரஸ்தாபம் பலமாயிருந்தது. கும்பகோணம் காலேஜுக்கும் தசைமாறும் போலிருந்தது. ஆனால் 96-ம் ௵த்திற்குப்பின் பல காரணங்களால் சர்க்காருடைய மனோதருமம் மாறித் தங்கள் மாரிபத்தாகவே முன்னிருந்த பாடசாலைகளை வைத்துக்கொள்ளுவதுடன், வேறு பிரைவேட் மானேஜ்மெண்டிலிருப்பவைகளிலும் சிலவற்றைத் தாம் ஒப்புக்கொண்டு நடத்துவதாக இப்பொழுது சில காலமாகப் பிரயத்தனம் நடந்து வருகிறது.

ஆதலால் கும்பகோணம் காலேஜ் பழையபடி மகத்துவம் அடைய இடமுண்டென்று நாம் நம்பியிருக்கிறோம். அப்படியிருக்க இப்போது சுமார் மூன்று வருஷங்களுக்கு மேலாகவே பிரின்ஸிபாலாக இருக்கும் ஸ்ரீமான்-ஹாட்ஜஸ் துரையவர்கள்மேல் அடிக்கடிப் பல தினுசுகளாகப் புகார் கேட்டு வருகிறது. இப்படி அடிக்கடிக் கேட்டுவந்தும், காரியத்தில் ஒருபலனுங் காணுமலிருப்பதுதான் இதில் வேடிக்கை. ஒவ்வொரு முறையும் ஏதோ ஒரு விநோத நடவடிக்கை இவர் மூலமாய் நடந்ததாகவும், இப்படி நடந்தால் பிள்ளைகளுக்கு வித்தை, விநயம் இரண்டும் மோசமாய்ப் போய்விடுமென்றும், யாராகிலும் எழுதி வருகிறார்கள். ஒன்றோ இரண்டோ கடிதங்கள் வருகின்றன. பிறகு சிறிதுகாலம் ஒன்றும் கேட்பதில்லை.

சமீபத்தில் ஒருவிசேஷம் நடந்தது. சென்ற வருஷத்திய மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் முக்காலே மூன்றுவீசம் மாணுக்கரும் வெட்டுண்டதினிமித்தம் நம்மைப்போல் பலரும் அங்கலாய்த்ததில், மதுரையில் எல்லாயோக்கியதையும் கூடிய உபாத்திமார் அனேகர் சேர்ந்துள்ள சங்கமொன்றில் இதை நன்றாக விசாரித்து, ஏதோஇரண்டொருவகையாகப்பரிகாரம்தேடி, அதை வேறு இடங்களிலுள்ள உபாத்தியாயர்களும் அறியும்படிக்கும், அவர்களுக்கு அவைகளைவிடச் சிரேஷ்டமான பரிகாரம் தோன்றுமானால் அதைத் தங்களுக்கு அறிவிக்கும்படிக்கும், கடிதங்கள் அனுப்பி[illegible]. வேறிடங்களுக்கு அனுப்பியபடியே பத்திலொன்றாகக் கும்பகோணம் காலேஜில் ஸ்ரீமான் ஹாட்ஜஸ் துரைக்கும் ஒருகடிதம் வந்தது. இந்தக்கடிதத்தை அவர் என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாம். சில பெரியோருடைய மாமூல்படி, கடிதத்தைக்கிழித்துப் பறக்கவிட்டிருக்கலாம். அல்லது வாங்கி யொருபுறம் செல்லரிக்க விட்டிருக்கலாம். அல்லது அதற்குப்பதில் தான் எழுதுவதற்கு ஒன்றுமில்லையென்றெழுதி யிருக்கலாம். வாஸ்தவத்தில் நல்ல பரிகாரம் தெரிந்திருந்தால், அதையெழுதி மதுரைக்காரருக்கு அறிவு புகட்டி யிருக்கலாம்.

ஆனால் இந்த ஸ்ரீமானுக்கு இதொன்றும் சரியென்று காணுமல், அந்தக்கடிதம் வந்தவுடன், அதற்குப்பதில் மறு தபாலிலேயே இவ்வாறு எழுதவேண்டுமென்று கண்டு எழுதிவிட்டார். "மதுரை உபாத்தியாயர் சங்கத்தவர் வரவிடுத்த கடிதம் ஸ்ரீமான்-ஹாட்ஜஸ் துரை கையில் கிடைத்தது. அதற்குப்பதிலாக அவர் வரைவது:—

1. மதுரைச் சங்கப் புலவர்கள் அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டு போக வேண்டும்.

2. தங்களுக்குப் பரிகாரமாகக் கா[illegible]தைக் கதையில் குரங்கு பலாக்கொட்டையை எதிற் போட்டதோ, அதில் போட்டுவிட வேண்டும். (என்றால், அந்தப் பரிகாரத்தை விவரித்திருக்கும் கடுதாசியை நெருப்பில் போட்டு எரித்துவிடவேண்டும்!)"

இந்தக் கடிதத்தைப் பார்த்ததும், மதுரைக்காரருக்கு ரோஷம் பொங்கி, உடனே அவருக்கு நோட்டீசு கொடுத்தார்கள். அவரும் யோசித்துத்தான் செய்தது சிறுபிள்ளைத்தனமென்று கண்டு, அபசாரக்ஷமை கேட்டுக்கொண்டார். அத்துடன் இந்தக்கதை முடிகிறது.

இந்தச்சங்கதி பகிரங்கமானது முதல், [illegible]

பலவிதமாக எழுதலானார்கள். ஒரு பத்திராதிபர் இவருக்குக் குரங்குகளுடன் பழக்கம் அதிகமே தவிர, மனிதருடன் இல்லையென்று காணுவதாகவும், ஆதலால் இவர், கிஷ்கிந்தை மகாஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் காலேஜுக்கு அதிபதியா யிருக்கவேண்டியது நியாயமாக, கும்பகோணம் மகாஜனங்களுக்குக்கல்வி கற்பிப்பேனென்று வந்தது பிசகென்றும் எழுதுகிறார்.

நாம் கேட்பது இது. இப்படி அடிக்கடிப் புகாருக்கு இவர் இடங் கொடுப்பது வாஸ்தவமானால், அதற்குத்தக்க பரிகாரம் ஏன் இன்னும் கும்பகோணம் மகாஜனங்கள் தேடவில்லை? துரையவர்கள் செய்துவருவது மொத்தத்தில் சரியாயிருந்தால்,

ஒருவனறிவானுமெல்லாம்
* * * *
குணனடங்கக்குற்றமுளானும்......
கணனடங்கக்கற்றானுமில்,

என்னும் நியாயத்தை யனுசரித்து, ஏதோ சிறு பிழைகளைப் பார்த்தும் பாராமல் விட்டுப் போகவேண்டும். அல்லது அவர் மூலமாகக் குழந்தைகளுக்கு நற்குணம் விருத்தியாகாதென்று கண்டால் மகாஜனங்கள் ஒருங்கு சேர்ந்து, தங்கள் அபிப்பிராயத்தைத் தக்க சாக்ஷியங்களுடன் நியாயமா யுள்ளபடி டிபார்ட்மெண்டாருக்கோ, வேறு அதிகாரிகளுக்கோ, தெரிவித்துத் தங்கள் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். இரண்டையும் விட்டு, எப்போதாவது உரத்த குரலாகக் கூவிவிட்டு அவரவர் வேலையை அவரவர் பார்த்துப் போவதில் ஒரு குணமும் காணாதது நிச்சயம்.

மற்ற விஷயங்களி லெப்படிப் போனாலும், இந்தக்கடிதம் விபரீதக் கடிதமென்றுதான் நமக்குக் காணுகிறது. 'திருவிளையாடல்' வேண்டுமென்றால் காலதேசவர்த்தமானங்களை மறவாமலே செய்தல் தான் பெரும்பதவி வகித்துள்ளவர்க்கு லக்ஷணம். யாவருக்கும் பதவியொன்றிருப்பதால் அதற்குள்ள மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதை முதற்கடமை யாக்கிக்கொள்ள வேண்டும். அதிலும் உபாத்திமாருக்கு இது இன்றியமையாத லக்ஷணமாம்.

**மதிராசு பால பரிபாலன சங்கம்.**

மார்ச்சுமீ 1-தேதி 'மதிராசு பால பரிபாலன சங்கம்' என்னும் தருமகாரிய சபையின் வருஷவாரி ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது. இந்தியாவில் எத்தனையோ ஆயிரவருஷங்களாக விவாகமென்பது காம்மியமாகமட்டும் அல்ல, தருமப்பிரஜைகளுடைய அபிவிருத்திக்காக வென்று வேதமும், சாஸ்திரமும் முறையிட்டு வந்திருக்கிறது. அனுஷ்டானத்திலும், 'மரியாதை மனிதர்' எல்லோரும் இதைக் கூடியமட்டில் பரிபாலித்துத்தான் வந்திருக்கிறார்கள். தவிர மக்களில்லாதவர், விரதமும், தவமும் செய்து, யாத்திரைபோய், தானதருமங்களை ஏராளமாகச் செய்து வருகிறார்கள். ஆகவே இப்படிச் செய்யும் காரியத்தின் முக்கிய பலனாகிய குழந்தைகளைப் பெற்றோர்கள் எவ்வளவோ பிரியமாக வளர்த்து வருவதுதான் சகஜம். அப்படியே தான் அனேகமாய் நடந்து வருவதாகவும் கொள்ளலாம்.

ஆனால் பழைய தருமங்கள் இக்காலத்தில் மங்கிப்போயிருக்கின்றன. ஜீவனம் செய்வதில் முன்னிலும் சிரமம் அதிகரித்தே வருகிறது. பழையஜாதி நியாயங்களும், நிர்ப்பந்தங்களும் முன்போல் ஜனங்களைக் கட்டுப்படுத்துவதில்லை. ஜனங்களும் அதிககூலிமுதலிய காரணங்களினால் இருந்த இடம்விட்டு வேறூர்களுக்கும், வேறு நாடுகளுக்கும் போய்விடுகிறார்கள். வித்தை, நாகரிகம், முதலியன நமது நாட்டில் பெரும்பாலார்க்கு இல்லை. தெய்வபக்தியும் பழையபடி ஜனங்கள் மனதிலுறைப்பாக இல்லை.

இக்காரணங்களால் பெற்றோர்களுக்குக் குழ

REGISTRAR OF ... REGISTERED 13 JUN 1910 MADRAS.

ந்தைகளுடைய க்ஷேமவிஷயத்தில் கவனம் குறைந்து வருவதாகச் சிலகாலமாய் நம்மில் சில விவேகிகளுக்குக் காணவே, போனவருஷம் மதிராசிலும், அதற்குமுந்தி வேறிடங்களிலும் 'பால பரிபாலன சபைகள்', ஏற்பட்டு வேலை நடந்து வருகிறது. வருஷவாரி ரிபோர்ட்டினுலும், சபையில் சிலர் பேசியதினுலும் இரண்டொரு பெரிய ரகசியங்கள் வெளியாகின்றன. கல்கத்தாவில்மட்டும் சுமார் 800-பெண்குழந்தைகள் பதினைந்து வயதுக்குட்பட்டனவாக விபசாரத் தொழிலுக்கென்று பழக்கப் படுகின்றனவாம். பொட்டுக்கட்டுவது இன்னும் சாமான்னியமாக இந்நாட்டில் காணும் வழக்கம். திக்கற்றகுழந்தைகள் அனேகம் நிராதாவாகத்திரிகின்றன. இவைகளுக்குச் சத்திரங்கள் ஏற்படவேண்டும். சங்கத்தார் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் அம்மாதிரி அவர்கள் அதீனமாகி வரும் குழந்தைகளுக்கு ஜீவனத்திற்கு உபாயம் ஏதாகிலும் கற்றுக்கொடுக்க வேண்டிவரும். தெரியாத்தனத்தினுல் குழந்தைகளைத் தப்புவழியிலாவது, கருணையற்றுவது நடத்தும் பெற்றோர்களுக்கு நயத்திலோ, பயத்திலோ, நல்வழி போதித்துத் திருப்ப வேண்டும். காலக்கிரமத்தில் தக்க சட்டங்கள் வேண்டுமென்று ஜனங்களே அபிலாஷைப்படும்படி பேசியும், எழுதியும் வரவேண்டும். இப்போது 43 குழந்தைகளை அவ்வாறு சன்மார்க்கத்திற்குத் திருப்பி யிருக்கிறது. அந்தக் குழந்தைகளுடைய கதைகளைக் கேட்பவர் நெஞ்சம் கல்லானுலும் உருகிவிடும். பெரிய பட்டணங்களில் தான் இந்த அனியாயம் பலத்து வருகிறது. அனேக கேசுகள் ஒருவருக்கும் தாக்கலாவதில்லை. சட்டம் சில விஷயங்களில் விசித்திரமாக இருக்கிறது.

இந்தத் தருமகாரியத்திற்கு ஜாதி, மதம், முதலிய இடையூறுகள் இல்லை. ஏனெனில், ஏந்தச் சாதியாகிலும், எந்த மதஸ்தராகிலும், குழந்தைகள் விஷயத்தில் க்ஷேமத்தை நாடி உழைப்பதற்கும், பொருள் உதவுவதற்கும், ஆக்ஷேபமேயில்லை. அவரவர் கருமத்தின்படி போகட்டுமென்று விடுவது சாஸ்திரமுமல்ல, அனுபவமுமல்ல. ஆதலால் பெரிய பட்டணங்களிலெல்லாம் இதற்குக் கிளைச்சங்கங்கள் ஏற்பட்டு நடந்துவருமென்று நம்புகிறோம். சிரத்தைமட்டும் இருந்தால், ஒருவராகவே வெகுதூரம் காரியம் நடத்திவிடலாமென்பதற்கு நமது கவர்னரவர்கள் டாக்டர் ஸ்ரீமான் வி. பி. ராமராயரைப்பற்றிக் கூறியதே சாக்ஷி. ஆதலால் ஒவ்வோரூரிலும்கனவான்கள் ஒன்று சேர்ந்து, ஜாதி மத முதலிய பேதங்களைவிட்டு ஒருமனதாக உழைத்துக் குழந்தைகள் முன்னுக்கு வருவதற்காகப் பிரயாசைப்படவேண்டும். ஏனெனில், இன்று குழந்தையாயிருப்பவர் தாம் நாளைக்குப் பிரஜைகளாகி ஊருக்கு நன்மைக்கோ, தீமைக்கோ காரணமாவது.

இந்து ஸ்திரீகளுக் கிருக்கும் பதவி

சென்ற பிப்ரவரிமீ 10உ இங்கிலாந்தில் நமது பங்காள நண்பர் 'சரத் குமார கோஷர்,' இந்து ஸ்திரீகளுக்குள்ள யோக்கியதையை விளக்கி யொரு பிரசங்கம் செய்தார். இங்கிலாந்தில் 'வோட்டு' வேண்டி மன்றுடும் ஸ்திரீகளிலொரு சீமாட்டி நமது நாட்டுக்கு வந்து பார்த்துவிட்டுப் போய் இவ்விஷயமாக எழுதியதை அடுத்தமுறை பதிப்பிக்கிறோம். இரண்டையும் படித்து அவரவருக்குள்ள மனோதருமம்போல் யோசித்துக்கொள்ளல்வேண்டும். கோஷர் சொல்லுவது இந்து ஸ்திரீகளுடைய பதவியேயன்றி மகம்மதீயர்களைக் குறித்ததல்ல.

"இந்துஸ்திரீகளைக்குறித்து இங்கிலீஷ்காரர்களுக்கு அனேக விஷயங்கள் தெரியவேண்டியது இப்பொழுது வெகு அவசியம். ஏனெனில், இந்தியாவில் அனேகமாய் எவ்விடத்திலும் 'நாயகத்துவம்' அவளுடையதாயிருக்கிறது. யோசிக்குமிடத்து, இந்து ஸ்திரீ

களுக்குத் தமது நாட்டுப் புருஷரைவிடப் பதவி யுயர்ந்துள்ளது. வேறு எந்த ராச்சியத்திலும் ஸ்திரீகளுக்கு இவ்வளவு உன்னத பதவியில்லை யென்னலாம். வேதங்களில் அனேக பாகங்கள் ஸ்திரீகளுண்டாக்கிய மந்திரங்களாம். இந்தியாவில் இக்காலத்தில் சுயம்வரம் இல்லை. பெற்றோர்களேதான் கல்யாணம் நடப்பிப்பது. என்றாலும், அனேக தேசங்களில் சுயம்வரத்தாலுண்டாகும் தோஷங்கள் இங்கே காணுவதில்லை. ஏனெனில் தருமப்பிரஜைகள் இடையறாது வரவேண்டுமென்கிற சாஸ்திரத்தை யனுசரித்து இவ்விடத்தில் குடும்பவாழ்க்கை யேற்பட்டிருக்கிறது. புருஷனுக்குக் காலையில் ஔபாசனமாகவேண்டுமானாலும், வேறு புண்ணியகருமமாக வேண்டுமானாலும், பத்தினி யனுமதியின்றி ஒன்றும் நடவாது. அவன் தன் கருமத்தை யனுஷ்டிக்கையில், பத்தினி பக்கத்திலிருக்கவேண்டும். இந்தக்காரியம் கூடாதென்று அவள் மனதில் நினைத்தாலும் காரியம் வீணாகிவிடும். ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒரு ஸ்திரீ பாக்கியலக்ஷ்மிக்கு வேண்டியவளென்று சாமான்னியமாய் நம்பிக்கையுண்டு. ஆனால் அவள் இன்னாளென்று விளங்குவதில்லையாதலால், குடும்பத்திலுள்ள ஸ்திரீகளையெல்லாம் மரியாதைவைத்து நடத்துவது அவசியமாகியிருக்கிறது. குடும்பத்தில் பெண் குழந்தைகள் பிறந்தால் அழுகையென்று இங்கிலாந்தில் அனேகர் நம்பியிருப்பது பிசகு. அளவிற்குமிஞ்சிப் பெண் குழந்தைகளிருந்தால், எந்தக் குடும்பத்திற்கும் சிரமந்தான். ஆனால் இதனால் பெண்குழந்தைகளுக்கிருக்கும் மரியாதை விளங்குகிறதே தவிர வேறொன்று மன்று. இந்துக்கள் பல பெண் சாதிகள் வேண்டுவதாக ஒரு தப்பெண்ணமும் மேனாட்டில் உண்டு. சந்ததியில்லாவிட்டால், இரண்டாவது கல்யாணம் செய்துகொள்ளலாமென்பது சாஸ்திரம். ஆனால் அனுபவத்தில் அப்படி யனுஷ்டிப்பாரில்லை யென்றே சொல்லிவிடலாம். அதற்கும் மூத்தவளுடைய அனுமதிவேண்டும். படுதாவுக்குட்படுதல், சமையல் செய்தல், முதலியன சாஸ்திர சம்மதமாதலால், அதைக்குறைவாக நினைக்க இடமில்லை. சமையல் அன்னியர் செய்தால் அது நைவேத்தியம் ஆகாது. பிள்ளையில்லாத கைம்பெண்களுக்குக் கொஞ்சம் சிரமமிருந்தாலும், பிள்ளையுடையோர்க்கு ஒரு குறைவுமில்லை. 'சதி' என்னும் சடங்கு லக்ஷத்திலொருவர் கூடச் செய்வதில்லை. செய்தவரோ தெய்வங்களாகவும், புருஷனுக்கு மோக்ஷம் கொடுக்கும் புண்ணியவதிகளாகவும், பாவிக்கப்படுகிறார்கள். இதனாலும் இந்துக்களுக்குள் பெண்களுக்கிருக்கும் உன்னதபதவி வெளியாகிறது. ஸ்திரீயினுடைய தயவில்லாமல் புருஷனுக்குக் கதிமோக்ஷமேயில்லை. ஆதலால் இவைகளைக் கவனிப்பவருக்கு இந்து ஸ்திரீகளைக்குறித்து வாய்ச்சுளுவாய்ப் பேசமனம் வராது."

**தீண்டாதவர் விஷயம்**

சென்றமாதத்தில் மூன்று சந்தர்ப்பங்களில் இவ்விஷயமாக நம்மில் வெகு பெரிய பதவிபெற்ற ஸ்ரீமான்கள் வெகு உறைப்பாக பேசியதையும், அதைக் கேட்டோர் மனப்பூர்வமாய் ஆமோதித்ததையும் அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். சேலத்தில் கோஆபரேஷன் விஷயமாகப் போயிருந்த கனம் ஜட்ஜி ஸ்ரீமான் வி. கிருஷ்ணசுவாமி அய்யரவர்கள் 'தியாஸபி' மண்டபத்தில் இது விஷயமாக வெகு தெளிவாகப் பேசினார். மதிராசில் பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ணசுவாமிகள் ஆராதனதினத்தில், ஸ்ரீமான்கள் சிவசுவாமி அய்யர். சேஷகிரி அய்யராகிய இருவரும் பேசினார்கள், எல்லோரும் ஒரே ரீதியாகப்பேசி, நமது வேத சாஸ்திரங்களில், ஈசுவர சிருஷ்டியிலுள்ள யாரையாகிலும் இகழ்ந்தோ, 'தீண்டாமல்' வைத்தோ, வருவது மகாபாபமென்று முறையிடுவதை விளக்கினார்கள். சாஸ்திர சம்மதமாகப் பார்த்தால் இந்தியாவில் தான் ஜனங்கள் தாரதம்மியம் சிறிதுங்காணாமல், எல்லோரும் சமானஸ்கந்தராக இருந்துவாழவேண்டும். ஆனால் அனுஷ்டானம் எக்காலத்திலும் வேறுபட்டேநின்றதால், மகாத்துமாக்கள் அப்போதப்போது அவதரித்து, உபதேசம், நடவடிக்கை, இருவகையாலும் சாஸ்திரத்தை ஊர்ஜிதப்படுத்தி வந்திருக்கிறார்கள். ஸ்ரீபுத்தபகவான் முதல் ஸ்ரீராமகிருஷ்ணசுவாமிகளீறாக, எத்தனையோ மகாத்துமாக்கள் இது விஷயத்திலுழைத்தும், நாளது தேதியில் $5\frac{1}{2}$ கோடி ஜனங்கள் கால் நடைகளுக்கும் தாழ்ந்த ஸ்திதியிலிருப்பது பெரியதோஷம். இவர்களை யிப்படி வைத்துக்கொண்டு, திரான்ஸ்வால் முதலிய இடங்களில் நாம் சமதைவேண்டுவது அக்கிரமம். ஆதலால் வித்தை, குணம், குலம், சீலம், முதலியவை யாரிடத்திலிருப்பதாகச் சொல்லுகிறோமோ, 'அவ்வுயர் குலத்தோராகிய' அனைவரும், இனிக்காலதாமதமின்றி, 'இவ்விழிகுலத்தவருக்கு' உண்ணச்சோறும், உடுக்கவஸ்திரமும், தங்கநிழலும், சம்பாதிப்பதற்கு வேண்டிய அறிவைப்புகட்டி, குடிமுதலிய துராசாரங்களைவிலக்கி, மதமுதலிய விஷயங்களில் நன்னெறி கைப்பற்றி யொழுகும்படி செய்து, இந்துமதம், இந்து ஆசாரம், இந்து தருமசிந்தை, இவற்றை வெகுகாலமாகப் பீடிக்கும் கிரகணங்களை யொழிக்கப் பிரயத்தனப்படவேண்டும்.

பேச்சை நிறுத்திக் காரியத்தைத் தொடங்க வேண்டுவதுதான் நல்லதென்று அனேகருக்குக் காணும். என்றாலும் பேச்சு அதிகமாகவும், அடிக்கடியும் இருக்கத்தான்வேண்டும். அதை நிறுத்துவதில் பிரயோஜனமில்லை. மனதில் நினைப்பதை வாயாற் சொல்லித்தான் அது காரியத்திற் காணவேண்டிய முறை. சுவரோடாகிலும் சொல்லியழ வேண்டியது பழைய அனுபவமாதலால், பத்து இடங்களில், விவேகிகள் கேட்பவர் ஏற்குமாறு சொல்லிக் கலகம் பிறப்பித்தால் நியாயமும் தன்னிச்சையாகப் பிறக்கும். [illegible]மாக ஆரம்பிப்பதென்பதுதான் தற்சமயம் நிஷ்கரிஷிக்க வேண்டியவிஷயம். ஆரம்பிக்கவேண்டுமென்பதை யாரும் ஆக்ஷேபிப்பதில்லை.

**அசைபோடுதல்**

"யார் யாருக்கு 'அரிசி பருப்புச்செலவு' குறைந்து சுகப்படவேண்டுமோ, அவர்கள் தின்பதையெல்லாம் நன்றாக மென்று தின்னவேண்டும். யாருக்குச் சிரஜீவித்துவம் வேண்டுமோ அவர்கள் சளையாமல் அசைபோட்டுண்ணல்வேண்டும்," என்று ஒரு மேனாட்டுப் பெரிய அம்மாள் எழுதுகிறாள். இப்படிச் செய்து வந்ததால் தன் புருஷனுக்குச் சாமான்னியர் சாப்பிடுவதில் மூன்றிலொருபங்குதான் சாப்பிடுவதற்கு அகத்தியமிருந்ததென்றும், என்றாலும் தேகபுஷ்டி, பலம், வெய்யில், மழை முதலியன பொறுப்பதற்கு வேண்டிய மனோதிடம், இவற்றிலொரு குறைவுங் காணவில்லை யென்றும், அவள் கூறுகிறாள், தவிரத் தானும் அவ்வாறே செய்துவந்ததில், தீனி குறைந்ததென்றும், மாமிசம் முதலியன தேவையிருக்கவில்லையென்றும், தங்களிருவருக்கும் சாப்பாட்டுச் செலவில் தினம் 12-அணா விழுக்காடு செலவு குறைந்ததென்றும், எழுதியிருக்கிறாள். ஆதலால், நமது நாட்டிலுள்ளவர்கள் அனேகருக்கு வயிறு நிறையச் சாப்பாடு கிட்டுவதில்லையென்பது கொண்டு, கிட்டுவதை அதிகமாக்கி வயிற்றை நிரப்பச் சுலபமான வழியொன்றேற்பட்டதற்காகச் சந்தோஷிக்கிறோம். அவர்களுக்கெல்லாம் நாம் சொல்லுவது, "ஓ இஷ்டர்களே, சாப்பிடும்போதும், சிற்றுண்டி தின்னும்போதும், அசை போடுங்கள், அசை போடுங்கள், அசை போடுங்கள்!! தனிகர்களானால் அவர்கள் இன்னும் மிச்சம் பிடிக்க வழியுண்டாகிறது. ஏழைகளானால் அரை வயிறுகாண்பதைக்கொண்டு வயிற்றை நிரப்ப

லாம்,'' என்பதே. இந்தியர்களுக்கோ மொத்தத்தில் பல் வெகு நேர்த்தியென்பதும், வலுவென்பதும் உலகமறிந்த விஷயம். ஆதலால் வயிறு நிறைய அசை போடலாம்.

**மைசூர் சமஸ்தானத்தில் தேவ தாசிகள் விஷயமாய் உத்திரவு**

'முளபாகல்' ஸ்தலத்தில் ஸ்ரீ ஆஞ்சநேய சன்னிதி யொன்றிருக்கிறது. அதில் அவ்விடத்திலுள்ள தேவதாசிகள் யாருக்காவது புதிதாகப் 'பொட்டுக்கட்ட வேண்டிய' காலத்தில் அந்தப் பெண்ணைக் கூட்டிப் போய் 'செச்சை பூஜை,' என்றால் தாசிகளுக்குக் கூத்துக்கு முக்கிய அங்கமாகிய 'சதங்கைப் பூஜை' யென்று ஒரு சடங்கு நடத்துவது வழக்கம். சமீபகாலத்தில் ஒரு பெண்ணுக்கு இந்தக்கோலம் கொண்டு நடத்தப்பிரயத்தனமானதில், அவ்விடத்திய மகாஜனங்கள் அதை யாக்ஷேபித்துத் தடைசெய்யப் போனார்கள். தாசிகள் அமில்தாருக்கு மனு கொடுத்தார்கள். அவருக்கும் கலகமாகுமென்று கண்டதால், இந்தச் சடங்கு கூடாதென்று உத்தரவு செய்தார்.

அஸிஸ்டாண்டு கமிஷனருக்குத் தாசிகள் அப்பீல் செய்ததில், அவர் செச்சைபூஜைக்கும், ஜாதி நியாயத்திற்கும் சம்பந்தமில்லையென்றும், மனுதாரர்கள் பிரார்த்தனை செய்துகொண்டிருப்பதாலும், இந்தப் பூஜை வெகுகாலமாய் நடந்து வருவதாலும், பதிவு போல நடப்பதில் ஆக்ஷேபங்காணவில்லை யென்றும்விதித்தார். ஆனால் இந்தக்கோவில் சர்க்கார் விசாரணைக் குட்பட்டிருப்பதால், டிப்டி கமிஷனர் இவ்விஷயத்தில் என்ன செய்வதென்று சர்க்காரைக் கேட்டார்.

சர்க்கார் இவ்விஷயத்தைக் கவனித்துப்பார்த்ததில், இந்தச்சடங்கின் ரகசியத்தை எந்தப் பெயர்கொண்டு மறைத்தபோதிலும், 'செச்சைபூஜை' யென்பது, பூஜைசெய்யும் பெண்ணைத் தாசித்தொழிலுக்குக் கங்கணம் கட்டிவிடுவதென்பது பிரசித்தமாகத் தெரிந்த விஷயம். ஆதலால் சர்க்கார் அதீனமான கோவில்களில் இந்த அக்கிரமம் நடப்பதைச் சும்மாவிருந்து பார்த்திருக்கச் சர்க்காருக்கு மனமில்லை. இந்தச் சடங்கு கோவில்களில் நடவாததால் யாருக்கும் விசேஷ நஷ்டமில்லையொன்று, மனுதார் வாக்குமூலமாகவும், சர்க்கார் ஆகம சாஸ்திரி யெழுதிவைத்திருப்பது மூலமாகவும், சர்க்காருக்குத் தெரிவதால், மைசூர் சமஸ்தானத்தில் முஜரா டிபார்ட்மெண்டு பார்வையிலுள்ள யாதொரு ஆலயத்திலும் செச்சைபூஜையாவது அதுபோன்ற வேறு யாதொருசடங்குமாவது நடக்கக்கூடாதென்று உத்தரவுசெய்கிறார்கள். இதர தேவஸ்தானங்களுக்கு வழிபிறக்குமா?

ஒரு கனவான் வீட்டுத்திண்ணையில் அனேக இஷ்டர்கள் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். வீட்டுக்காரருடைய மகன், ஐந்துவயதுக் குழந்தையும் அவ்விடத்திலுட்கார்ந்திருந்தான். ஏதோ பேச்சுமேல் பேச்சாகவரும்போது ஒரு கனவான், இந்தக் குழந்தையின் சாதுரியத்தை மெச்சினார். மற்றொருவர் அதற்கு உத்தரமாக, 'நான் அனேகம் குழந்தைகளைப்பார்த்திருக்கிறேன். அனேகமாய்ச் சிறுவயதில் புத்திசாலிகளாகவும், உற்பாதப்பேச்சுகள் பேசியும் இருப்பவர்களெல்லாம், வயதாக ஆகக் குரங்குகளாகவும், எருமைகளாகவும் ஆகிவிடுகிறார்கள்,'' என்றார். இதுவரை சும்மாயிருந்த அக்குழந்தை இதைக்கேட்டதும், 'ஐயா, ஆனால் தாங்கள் குழந்தைப்பருவத்தில் வெகு உற்பாதமாயிருந்தீர்களோ?'' வென்று மட்டும் கேட்டது. அச்சபையில் ஒருவரொழிய மற்றெல்லோரும் வெடித்த சிரிப்பாகச் சிரித்தார்கள்.



நம்பூதிரி

# நம்பூதிரிமார்

ஸ்ரீமான் ஈ. எஸ். சுப்பிரமணியப்பாட்டம்
ஆளி அவர்கள், பி. ஏ., பி. எல்.

பரசுராம க்ஷேத்திரமென்கிற கேரளதேசமானது இந்தியாவின் தென்மேற்குக்கோடியில் இருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. மேற்குத்தொடர்ச்சி மலையின் இருபக்கங்களின் காட்சிகள் நிரம்பவும் விசேஷமாயிருக்கும். மேல்புறத்திய சமுத்திரத்தில் விசேஷத் துறைமுகங்களில் ஒன்றான கொச்சித்துறைமுகம் கேரளத்திற்கு ஒரு விசேஷபெருமையைக் கொடுக்கிறது. கேரள பூர்வவிருத்தாந்தத்தை விளக்கும் கிரந்தத்தில், இந்தப் பூமியைச் சமுத்திரத்திலிருந்து மீட்டு எடுத்து ஸ்ரீ பரசுராமன் தான் க்ஷத்திரியர்களைக் கொலை செய்த பாபத்திற்காகப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நாட்டிலிருக்கும் சுதேசிகளுக்குள் பிரத்தியேக ஆசார நடவடிக்கைகள் காண்கின்றன. ஆதலாலவர்களில் முக்கிய ஜாதியாருடையவும், அங்கு வெகு நாளைக்கு முன் குடியேறி அவர்களுடன் வெகுவாய்க் கலந்துவிட்ட இரண்டொரு ஜாதியாருடையவும், நடை, உடை, பாவனைகளைச் சுருக்கி யுரைப்பது நலமென்று காணுகிறது. முதன் முதல் நம்பூதிரிகளைப் பற்றிப் பேசுவோம். கேரளநாட்டிலிருக்கும் பழைய பிராம்மணர்களுக்கு நம்பூதிரிகள் என்று பெயர். இந்தப் பதம், 'ஐயர், ' 'அய்யங்கார்,' என்பவைபோன்று, மரியாதையைக் குறிப்பிடுவது. 'சுவாமிஜீ' என்பதுபோல வென்க.

நம்பூதிரிகள் சுமார் 1000-வருஷத்திற்கு முன் கேரளத்திற்கு வந்ததாகத் தெரியவருகிறது. அவர்களுக்குப் பூர்வீகஸ்தலம் காவேரி, நர்மதை, கிருஷ்ணா இந்த நதிகளின் ஓரமென்று சிலபேர் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்பொழுது பம்பாய்க்கு வடக்கே புரோஸ் என்னுமிடத்தில் பார்க்கவப் பிராமணர்கள் என்று ஒரு ஜாதிக்காரர் இருப்பதாகத் தெரியவருகிறது. பார்க்கவர் என்பது பரசுராமனுக்கு உபயோகப்படும் வேறு பெயர். ஏனெனில் அவர் பிருகு மகரிஷி வமிசத்தவர். அவர்கள் கொஞ்சம் தாழ்ந்த பிராமணர்களாக நினைக்கப்படுகிறார்கள். க்ஷத்திரிய வமிசத்தை வேரறுக்கயத்தனித்த பரசுராமனைப் பாபியாகவும், ஆதலால் அவருடைய பரிவாரங்களான பரசுராமப் பிராம்மணர்களைத் தாழ்ந்தவர்களாகவும் ஜனங்கள் காலக்கிரமத்தில் எண்ணியிருந்தாலுமிருக்கலாம். ஆகவே ஒருக்கால் நம்பூதிரிகள் அவ்விடத்திலிருந்து வந்தாலும் வந்திருக்கலாம்.

கேரளத்தில் இவர்கள் வந்தபொழுது பாம்பு முதலிய விஷ ஜந்துக்களாலும், இன்னும் அனேக உபத்திரவங்களாலும், முதல் வந்தவர்கள் ஓடிப்போய்விட்டதால், கேரளத்திற்கு வந்த பிராமணர்களை அங்கேயே ஸ்திரமாக இருக்கும்படி செய்ய அவர்களுடைய சிகைகளை அத்தேச ஆசாரப்படி முன்னுக்கு வைத்தும், பிராம்மணர்களிலில்லாத அநேக அனுசாரங்களை இவர்களுக்காகக் கூட்டியும், ஸ்ரீபரசுராமன் ஏற்பாடு செய்து இருப்பதாகச் சொல்லும் கதையானது வாஸ்தவமாயிருக்கலாமென்று அவ்விடமிருக்கும் ஜனங்களைப் பார்க்கும்பொழுதே தெரியவருகிறது.

இப்பொழுது உள்ளபடி நம்பூதிரிகள் நான்கு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். முதல் வகுப்பினர், தம்பிராக்கள், ஆட்டியன்மார், என்று இரண்டு கிளைகளாகப் பிரிந்திருக்கிறார்கள். இவர்களை ஏனையோர் நம்பூதிரிபாடு என்று மரியாதையாகச் சொல்வார்கள். மற்ற வகுப்பினர்களை நம்பூதிரிகள் என்றுமட்டும் சொல்லுவார்கள். இவர்கள் மதவிஷயத்தில் யாகம் முதலிய கருமங்கள் செய்யும் பதவியைவிட உயர்ந்த பதவி அடைந்து இருப்பதாகத் தெரிகிறது. அதனால்

அவர்கள் யாகம் முதலியன தங்களுக்கு வேண்டியதில்லை என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தந்திரிகளாகிக் கருமத்தில் வரும் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய ஏற்பட்டவர்கள்.

இரண்டாவது வகுப்பினர் விசிஷ்டநம்பூதிரிகள். இந்த வகுப்பிலும், அக்கினிஹோத்திரிகள், பட்டத்திரிகள், என்று இரண்டு பிரிவுகள் உண்டு. அக்கினிஹோத்திரிகள் பெரிய யாகம் முதலியவற்றைச் செய்கிறவர். பட்டத்திரிகளுக்கு யாகங்கிடையாது. அவர்கள் தர்க்கம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களைப் படித்து 'வாத்தியான்' நம்பூதிரிகளாக இருக்கிறார்கள். மூன்றாவது பிரிவினர் சாமான்னிய நம்பூதிரிகள். இவர்களுக்கு வேதங்களைப்படிப்பதற்கு மட்டும் அதிகாரமே அல்லாமல் யாகங்கள் செய்ய அதிகாரமில்லை. இவர்கள் சாதாரணமாய்க் கோயில்களில் பூஜைவகையறாக்களைச் செய்யப்பட்டவர்கள். நான்காவது பிரிவினர் கேரளத்தில் பிரசித்தியான அஷ்டவைத்தியர்களாகிய ஜாதிமாத்திரக்காரர் என்பவர். இந்த வகுப்பினர் அத்தியயனத்திற்கு அதிகாரமில்லாதவர்கள். அதாவது, அவர்களுக்கு வேதஞ்சொல்ல அதிகாரம் இல்லை.

நம்பூதிரிகள் சாதாரணமாய்ப் பெரிய தோட்டங்களின் நடுவில் வாசஞ் செய்கிறார்கள். கேரளத்தில் அனேகமாய் எல்லா இடங்களிலும் காண்பதுபோலவே தனித்தனியாய் வீடுகள் கட்டி. இவர்களும் வசித்து வருகிறார்கள். இவர்கள் இருப்பிடங்களுக்குச் சாதாரணமாக இல்லம் என்றும், பெரிய நம்பூதிரிகள் இருப்பிடத்திற்கு மனை யென்றும் பெயர். சூத்திரர்கள் சாதாரணமாக அவர்கள் இருப்பிடங்களை மனையென்றே சொல்வார்கள். நம்பூதிரிகளுடைய மனைகளைச் சுற்றியிருக்கும் தோட்டக்காக்ஷிகள் நிரம்பவும் அதிசயிக்கத்தக்கனவாயிருக்கும். சாதாரணமாகப் புளி, மா, பலா, தெங்கு, பாக்கு, முதலிய மரங்களும், சேனை' சேம்பு முதலிய கிழங்குகளும், எல்லா விதமான வாழைகளும், நானாவிதமான புஷ்பச்செடிகளும் ஆகிய இவைகள் தோட்டத்தைக் குளிர்ச்சியாகச் செய்கின்றன. தோட்டங்களின் வடமேற்குப் பாகத்தில் ஒரு 'பாம்புக்காவு' இருக்கும். அவ்விடத்தில் சாதாரணமாக உயிருள்ள பாம்புகளும் காணும். ஒவ்வொரு இல்லத்திலும் தென்கிழக்கு மூலையில் அந்த இல்லத்திற்குச் சுடுகாடு காணும். இல்லங்கள் அநேகம் 'பிறை'களுடன் அதிகவிலை பிடிக்கும்படியான மரக்கூடுகளாக இருக்கும். இல்லங்களின் வடகிழக்குப் பாகத்தில் கோசாலை அல்லது மாட்டுக்கொட்டம் இருக்கும். இப்படித் தனிவீடுகளாயிருப்பது சுகாதார விஷயத்தைக் குறித்தமட்டில் நிரம்பவும் நன்மையுடையதாயிருக்கிறது. அதாவது நம்பூதிரிகளிடமிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியவைகளில் இது ஒன்று.

நம்பூதிரிகள் வீடுகளில் மேஜை நாற்காலிகள் கிடையாது. ஆமைவடிவு போன்ற பலகைகளும், பாய்களும்தான் அவர்களுடைய ஆசனங்கள். சாப்பிட உட்காருவது பலகையில் தான். பலகையில்லாமல் சாப்பிட உட்காருவதே கிடையாது.

கொங்க தேசத்தார்களைப்போல் கேரளியர்களுக்குள் பாகஞ்செய்துகொள்வது அபூர்வம். குடும்பத்தில் வயதில் பெரியவர் சொத்துக்களைப் பாதுகாத்துக் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற ஜனங்களுக்குச் சாப்பாடு வகைராக்கள் கொடுத்து ரக்ஷித்து வருவது வழக்கம். நம்பூதிரிகளுக்குள் குடும்ப விருத்திக்காக அவரவர் குடும்பத்தில் மூத்தமகனுக்குமட்டும் கல்லியாணம் செய்துவைப்பது வழக்கம். வயதில் மூத்தவன் மூன்றுகல்லியாணம்வரையிலும் செய்தும், குடும்பத்திற்குச் சந்ததியில்லாவிட்டால் அவனுக்கு இளையவன் கல்லியாணஞ் செய்து

கொள்வான். அந்தக் குடும்பத்தைச்சேர்ந்த மற்ற புருஷர்கள் சூத்திர ஸ்திரீகளுடன் சம்பந்தம் செய்துகொள்வது வழக்கம். சுவயம் கேரளீயவாசிகளாகிய நாயர்ஸ்திரீகள் நம்பூதிரி முதலிய பிராம்மணர்களைத் திருப்தி செய்யும் பொருட்டுத் தங்களுடைய பாதிவிரத்நியத்தையும், மார்பை மூடிக்கொள்ளும் துணியையும் விட்டுவிடும்படியாக ஸ்ரீ பரசுராமர் உத்தரவு செய்திருக்கிறாரென்று கேரளத்தில் ஒரு ஐதிகம். இப்பொழுது நாகரீகம் ஜாஸ்தியாகிவருவதால், இந்த விதிக்குச் சற்றுப்பலக்குறைவு கண்டு வருவதாகச்சொல்லலாம். இந்த ஆசாரத்திற்குக் காரணம் என்னவாயிருந்தாலும், இப்படி நடப்பு இருப்பதற்குச் சந்தேகமே இல்லை. நாயர்தரவாடுகளில் மருமக்கதாயம் சம்பிரதாயமாயிருப்பதால், இந்தப்படி நடப்பது அவர்களுக்குச் சகஜம். மருமக்கதாயப்படி ஒரு ம்னிதனுடைய சொத்துக்கள் அவனுக்குப் பிற்காலம் அவன் மக்களைச் சேராமல், அவன் மருமக்களுக்கு (சகோதரி குழந்தைகளுக்குச்) சேரும். நம்பூதிரிகளுக்குள் இந்த மருமக்கதாய ஆசாரம் விசேஷமாய்க் கிடையாது. பையனூர் கிராமத்தில் இருக்கும் நம்பூதிரிகள் மட்டும் இந்தச் சம்பிரதாயத்தை அனுசரிக்கிறார்கள். ஆனாலும் அவ்விடத்திலும் சொந்த மக்கள்தான் தாய் தகப்பனார்களுக்கு உத்தரகிரியை செய்யவேண்டியது.

நம்பூதிரிகள் கல்லியாணம் செய்துகொள்வதற்கு முன்னாடி ஜாதகப் பொருத்தங்களை விசேஷமாய்க் கவனித்துப் பார்ப்பார்கள். நம்பூதிரிகளில் மூத்தமகன் மட்டும் கல்லியாணஞ் செய்துகொள்வது வழக்கமாதலால், அவர்களுக்குள் இருக்கும் எல்லாப் பெண்களுக்கும் செலவில்லை. ஆதலால் நம்பூதிரிகள் பெண்களைக் கல்லியாணம் செய்துகொள்வதற்கு முன்னமே அந்தப்பெண்களுக்குள்ள ஸ்திரீதனம் நிச்சயப்படுத்துவது முக்கியமாய் இருக்கத்தானே வேண்டியது. சட்டப்படி எல்லா நம்பூதிரிகளும் கல்லியாணம் செய்துகொள்வதில் தப்பிதமில்லையென்று சென்னை ஹைகோர்ட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தீர்மானப்படி நடவடிக்கை கொஞ்சம் மட்டுத்தான். இந்த ஸ்திதியில் பெண்கள் அதிகரித்தே வருவதால், வரதக்ஷிணை ஜாஸ்தியாய் இருப்பது ஆச்சரியமல்ல. தகுந்த தொகை கொடுக்கச் சக்தி இல்லாத இல்லங்களில் கல்லியாணமாகாத பெண்கள் எந்த வயதிலும் நாலு அல்லது ஐந்து இருப்பதுண்டு. ஆனால் இதை மற்றவர்கள் இகழ நியாயமில்லை. வரதக்ஷிணையை நினைந்து, மனமுருகிப் பைத்தியம் பிடிப்பவரும், பெண் குழந்தைகளைக் கொன்றுவிடும் ராஜபுத்திரரும், நம்பூதிரிகளைப் பார்த்து இவ்விஷயத்தில் நன்றாகப்படித்துக் கொள்ளலாம். 'எட்டு வருஷமானால் கன்னிகை,' என்கிற தப்பு ஸ்மிருதியைக் கட்டிக்கொண்டழுபவரெல்லாம் இவர்களுடைய சம்பிரதாயத்தை அனுஷ்டித்தால் கஷ்டம் விடியும். இது நிற்க.

ஒரு நம்பூதிரி இரண்டு மூன்று கல்லியாணங்கள் செய்திருந்தபோதிலும் எந்தக் கல்லியாணத்திலாவது முதலில் பிறக்கும் மகன்தான் கல்லியாணஞ்செய்து குடும்பவிருத்தி செய்யப் போகிறவன்.

கல்லியாணத்திற்காக மாப்பிள்ளை வகையறாக்கள் பெண்வீட்டுக்குப் புறப்படும் தருணத்தில் பெண்ணினுடைய தகப்பன் செலவில் மாப்பிள்ளை வீட்டில் ஒரு பெரிய சமாராதனை நடக்கும். அதற்குப் பிறகு மாப்பிள்ளை தன் தாயாரிடமிருந்து கொஞ்சம் பொரியும், ஒரு அப்பமும், மாலையும் பெற்றுக்கொண்டு பெண்வீட்டுக்குப் போவான். அவன் கையில் கங்கணங்கட்டிப் பெண்ணுக்குள்ள தாலியும், அதிர்ஷ்ட சூசகமான ஒரு கண்ணாடியும், கல்லியாணப் பெண்ணுக்கு துஷ்ட தேவதைகள் உபத்திரவத்தை நீக்கும் பொருட்டு ஒரு அம்

பும், இரண்டுஜோடி வஸ்திரங்களும், பதினாறு கணுக்களுள்ள ஒரு மூங்கில் தடியும் கொண்டு அவன்கூட வருவார்கள். மாப்பிள்ளைக்கு முந்தி சில நாயர் வேலைக்காரர்கள் வாள் வீசிக் கொண்டு போவார்கள். இது நம்பூதிரிகளுக்கு ஒருகாலத்தில் கேரளத்தில் ராச்சியாதிகாரம் இருந்ததைக் காட்டுவதாய் இருக்கலாம். பெண் வீட்டுக்கு இவர்கள் போனதும் நம்பூதிரி ஸ்திரீகள் வெளியில் வரக்கூடாதவர்களாதலால் அவர்களுக்குப் பதிலாகச் சில நாயர் ஸ்திரீகள் இவர்களை அழைத்துப் போவார்கள். மாப்பிள்ளை தன் வலதுகாலை அந்த வீட்டுக்குள் வைத்து உள்ளே போனதும், பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளையை நோக்கி, நீர் ஸ்நானஞ்செய்து கல்லியாணத்திற்கு வரவேண்டுமென்று சொல்லுவார்! நந்திமுக முதலிய கருமங்களைச் செய்தபின் இச்சுபகாரியத்திற்காக இல்லத்தைச் சுத்தி செய்து பெண்ணின் தகப்பன் தீபத்தின்முன் கிழக்கு நோக்கி உட்காருவான். அந்த வீட்டுநாயர் வேலைக்காரன் ஒரு மண்கலத்தைத் தகப்பனுக்கு முன் வைத்து ஒரு பூமாலையைக் கையில் கொடுப்பான். கன்னிகாதானம் செய்யத் தயாராயிருக்கும் தகப்பன் மாப்பிள்ளைக்குத் தக்க உபசாரங்கள் செய்ய, மாப்பிள்ளை அந்தப் பெண்ணினுடைய தகப்பன் தலையைத் தொடுவான். அதற்குப்பின் பெண்ணினுடைய தகப்பன் ஓமகுண்டத்திற்கு முன் சில கருமங்களைச் செய்வதுண்டு. ஒரு சுபமுகூர்த்தத்தில் மாப்பிள்ளைகொண்டு வந்திருக்கும் தாலியைக் கல்லியாணப் பெண்சழுத்தில் அந்தப் பெண்ணினுடைய தகப்பனே கட்டி விடுவான்! மாப்பிள்ளை கட்டுவதில்லை. பிறகு ஒரு நாயர் ஸ்திரீ ஒரு தட்டத்தில் எண்ணெயில் எரிந்து கொண்டிருக்கிற அநேகம் திரியும் கொண்டு, இப்பொழுது முகம்மூடி வெளியில் வந்திருக்கும் மணப்பெண்ணின் முன் ஆரத்தி எடுப்பாள். இதற்குப்பிறகு மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் வேதகோஷங்கள் நடந்துகொண்டிருக்கையில் முகதரிசனம் நடக்கும். பெண்ணின் தகப்பன் "இரண்டு பேர்களும் சேர்ந்து தருமத்தை அனுஷ்டிக்கவும்" என்று மூன்று தடவை சொல்லி, மாப்பிள்ளை கையில் தன் பெண் கை மேலும் மாப்பிள்ளை கை கீழுமாக இருக்கச்செய்து தாரை வார்ப்பார். இதற்குப்பின் பாணிக்கிரகணமும் பிராமணர்களுடைய ஆசீர்வாதமும் நடந்தேறும். பிறகு லாஜஹோமம், அக்கினி பிரதக்ஷிணம், அம்மி மிதித்தல், முதலியவைகள் கிரமமாய் நடக்கும். இதில் அந்தப்பெண்ணை அந்தக்கல்போன்ற ஸ்திரமான கற்புடன் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பிறகு ஸப்தபதி நடக்கும். இதரப்பிராமணருக்குள் ஸப்தபதி நடந்தால் தான் கல்லியாணம் நிறைவேறுகிறதாக அபிப்பிராயம். கேரளத்திலோ பாணிக்கிரகணத்திற்கு விசேஷம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கருமங்கள் முடிந்தவுடன் மணப்பெண் தன் புருஷன் வீட்டுக்கு ஔபாசன அக்கினியுடன் போய் அவ்விடத்தில் அடுத்த மூன்று நாள் கிருகஸ்த கருமங்கள் செய்யவேண்டும். கல்லியாணம் ஆரம்பித்த முதல்நாள் முதல் மூன்றுநாள் வரையில் அவர்கள் படுக்கை முதலியன உபயோகப்படுத்தக் கூடாது. அக்காலங்களில் மணப்பெண்ணும் மணவாளனும் உப்புச் சேர்த்துச் சாப்பிடவுங் கூடாது. நான்காம் நாள் சாயந்திரம் இரண்டு பேர்களும் எண்ணெய்தேய்த்துஸ்நானஞ்செய்து, ஹோம கருமங்கள் முடிந்தவுடன், சயன அறைக்குள் புதுவார்கள். அடுத்த பௌர்ணமிக்கு மறுநாள் ஸ்தாலீபாகம் செய்வதுடன் சடங்குகள் முடிவுபெறும். சில யஜுர்வேத நம்பூதிரிகள் இந்தக் கருமங்களுடன் மீன் பிடிப்பதாக ஒரு சடங்கு நடத்துவதும் உண்டு. ஆனால் இது நம்பூதிரிகளுக்கு மட்டுமே விசேஷித்த சடங்



கல்ல. ஏனெனில் போதாயனர்களான இதரப்பிராம்மணர்களுக்குள்ளும் இந்த வழக்கம் உண்டு ஆதலால் இது வெகு புராதனமாகவே காணுகிறது. இதுதான் சாதாரணமான கல்லியாண விபரம்.

இதைத்தவிர சருவஸ்வதானம் என்றுவேறு ஒரு கல்லியாணமும் உண்டு. ஒரு நம்பூதிரி இல்லத்தில் ஒருவர் இறந்து, ஆண் சந்ததி இல்லாமல் ஒரு பெண்மட்டிலும் கல்லியாணம் செய்து கொடுக்கவேண்டியிருந்தால், விதவையான அந்தப்பெண்ணின் தாய் ஒரு நம்பூதிரியை அழைப்பித்து, இறந்து போன தன் புருஷனுடைய கருமாதிகளைச் செய்வித்து, தன் பெண் உள்பட தனக்கு உள்ள சருவ சொத்தையும் அந்த நம்பூதிரிக்குத் தானம் பண்ணிவிடலாம். இறந்த நம்பூதிரிக்குக் கருமங்கள் செய்யத் தாயாதிகள் இருந்தால், அவர்களில் யாராகிலும் கருமங்களைச் செய்து தங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு, மீதி சொத்தையும் பெண்ணையும் வேறு ஒரு நம்பூதிரிக்குக் கொடுத்துவிடுவார். இந்தச் சருவஸ்வதானக் கல்லியாணத்தில் உண்டாகும் சந்ததிகளுக்கு அவர்களுடைய தகப்பனுடைய இல்லத்துச் சொத்துக்குப் பாத்தியதை இல்லை. இந்தத் தகப்பன் குடும்பத்திலும் ஆண்சந்ததி இல்லாவிட்டால் இந்தச் சருவஸ்வதானம் சந்ததிகளில் ஒன்றைத்தன் தகப்பன் குடும்பத்திற்கு வார்சாக ஏற்படுத்தலாம். எந்தக் குடும்பத்திலும் மூத்த மகன் சருவஸ்வதானக் கல்லியாணம் செய்து கொள்ளக் கூடாது.

கல்லியாணத்தில் சந்ததிகள் இல்லாவிட்டால் தத்து எடுத்துக் கொள்வதுண்டு. சாஸ்திரப்படிக்குச் சாதாரணமாய் நடக்கக்கூடிய தத்துக்குப் பத்துக்கைதத்து என்று பெயர். இதில் ஐந்துபேர்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டியதென்று அந்த வார்த்தையினாலேயே தெரியவருகிறது. தத்து மகனுக்குச் சொந்தத்தாய் தகப்பனும், தத்துவாங்கிக் கொள்ளும் தாயும் தகப்பனும் தத்துமகனுமாக ஐந்துபேர்கள். இவர்கள் ஒரேகோத்திரத்தைச்சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். இந்தப்படி தத்து எடுக்கப்பட்ட பையனுக்குத் தன் சொந்தத் தாய் தகப்பனுடைய உத்தரகிரியையும் செய்ய வேண்டும். இந்தப்பையனுக்கு உபநயனம் முதலியன சொந்தத் தாய் தகப்பன் வேண்டுமானால் செய்யலாம். இதைத் தவிரத் தர்ப்பை, ஸமித்து, முதலியவைகளால் ஹோமம்செய்து தத்து எடுப்பதும், ஒரு குடும்பத்திற்குச் சந்ததி யில்லாவிட்டால் ஒரு நம்பூதிரியைக் குடும்பத்தில் ஒருவராகச் சேர்த்துக் கருமங்கள் ஒன்றுமில்லாமலே தத்து எடுத்துக்கொள்வதுமுண்டு.

நம்பூதிரி ஸ்திரீகளுக்கு 'அந்தர்ஜனம்' அல்லது அம்மைமார் என்று பெயர். ஒரு குடும்பத்திற்குப் பத்துநாள் தாயாதிகளாவது, மூன்றுநாள் தீட்டுக்காரர்களாவது இல்லாதவரையில், அக்குடும்பச் சொத்துக்குப் பாத்தியஸ்தனாக ஒரு நம்பூதிரியை ஏற்பாடு செய்ய இந்த அந்தர்ஜனத்துக்குப் பாத்தியமுண்டு. நமக்குள் நடப்பில்லாத இன்னொரு வழக்கமும் நம்பூதிரிகளுக்குள் உண்டு. அந்தர்ஜனம் இஷ்டப்பட்டு ஏதாவது ஒரு நம்பூதிரியைத் தன்னுடைய இல்லத்திற்குச் சந்ததிக்காகக் கல்லியாணஞ் செய்துகொள்ளச் செய்து, அதில் உண்டாகும் குழந்தையைத் தன்னில்லத்திற்குப் பாத்தியஸ்தனாகச் செய்து கொள்ளலாம். தத்து எடுத்துக்கொள்ளுகிற பையனுக்கு நிபந்தனையில்லை. நம்மைப்போல ஒரு காலத்தில் ஒருவனைத்தான் தத்து எடுத்துக் கொள்ளலாமென்கிற நிபந்தனையுங்கிடையாது.

(இன்னும் வரும்)

# இந்திய பிராசீன சுவயம்வரம்

ஸ்ரீமதி-மீனாக்ஷியம்மாள்

இக்காலத்தில் இந்தியர்களில் கல்வி கேள்விமிகுந்தவர்களுக்குள் நமது விவாக முறையைப்பற்றித் திருப்தியேயில்லை. இப்பொழுது நடப்பதெல்லாம் பழையநாளில் நடந்த நெறிகோணி உண்டாகிய தென்றும், ராச்சியத்தில் ஜனங்களுக்குச் சுவாதந்திரியம் போய், உயிர், உடைமை யெல்லாவற்றிற்கும் பயம் வெகுவாயதிகரித்த மத்திய காலத்தில் வந்த தென்றும் அவர்கள் வாதாடுகிறார்கள். ஆகலால் இப்பொழுது நமக்கு அதிர்ஷ்டவசத்தினால் மறுபடி சுவாதீனம் கிடைத்திருப்பது கொண்டு, அதற்கனுசாரமாக இந்த வேண்டா விலங்குகளையும் தறித்தெறிந்து விட்டுப் பழையபடி நேர்வழியில் போகவேண்டுமென்பது அவர்கள் கோரிக்கை. ஆகவே, விவாகம் பழையபடி தம்பதிகளுடைய இஷ்டத்தைக் கொஞ்சம் அனுசரிக்கவேண்டு மென்பதும், இப்பொழுது வெகு காலமாய் நடந்து வருகிற மாதிரி ஜீவகளையற்று, இதரர் இஷ்டம் போலவே நடக்கக்கூடாதென்பதும் அவர்கள் கக்ஷி. தவிர வதூவரர்களுடைய பரஸ்பர சம்மதம் அவசியமாகிவருமளவிற்குக் கன்னியா சுல்கம், வரதக்ஷிணை, இரண்டுங் குறைவது சாத்தியம்.

இது நடக்கவேண்டுமானால், தம்பதிகளுக்கு விவாகம் குழந்தைப் பருவத்தில் நடப்பது நிற்கவேண்டும். ஆணும் பெண்ணும், குழந்தைப் பருவம் நீங்கி யௌவனம் வந்தபின்பே விவாகத்தைப்பற்றி யோசிக்கவேண்டும். ஏதோ ஒரு முறையில் இருவர் தம்பதிகளாவதற்கு முன், இவர்களுக்குப்பரிசயமுண்டாகி, ஒருவருடைய குணம், சுபாவம் முதலியவை மற்றொருவருக்கும்ஹிதமாகமனதிற் படவேண்டும். பின்னரேஇவர்கள் தம்பதிகளாகவேண்டும். இது நமக்குள் புதிதன்று. வேதம், இதிகாசங்கள் இவைகளைப் பரிசோதித்தால், வேண்டிய சாக்ஷியங்களகப்படும். இப்படிச் சுவயம்வர பூர்வகமாய் ஆகிய விவாகங்களினால் தான் தம்பதிகள் தமக்குள் அனுகூலமாக நடந்து, அதனால் நல்ல சந்ததியும் பெருகிற்றென்பது நிச்சயம். ஆதலால், அக்காலத்தில் நமக்கிருந்த சௌகரியங்களெல்லாம் மறுபடி நமக்குக் கிடைத்திருப்பதுகொண்டு அக்காலத்தில் விவாக முறையிலிருந்த இரண்டொரு நன்னெறிகளையாவது நாம் மறுபடி யேன் கைப்பற்றக்கூடாது? சர்க்காரோ நமது ஜோலிக்கு வருவதில்லை. சாஸ்திரமும் முறையிடுகிறது. அனுபவமோ பிரத்தியக்ஷம். பழைய சுவயம்வரத்தில், மேனாட்டில் காணும் சில துர்லக்ஷணங்கள் இல்லவேயில்லை. ஏனெனில், மேனாட்டாருக்குப்பொன் புடவை, முதலிய இகபோகங்களில் ஆசை வெகு அதிகம். நமது நாட்டிலோ, ராஜாக்கள் முதலிய 'பெருத்த' ஜனங்களும் சாஸ்திரத்தை வெகுமானித்து, "விவாகமென்பது கேவலம் காம்மியத்தைப் பொறுத்ததல்ல, தரும பிரஜையை அபிவிர்த்தி செய்யும் பொருட்டு," என்னும் விதியை அனுஷ்டித்து வந்தவர்கள். ஆகலால், 'சீரும் சிறப்புமாக' இருக்க வேண்டிய ஆசையிருந்த போதிலும், அதையே மோக்ஷமாக எண்ணாமல், மறுமையில் நற்கதியடைய வேண்டியதையே நமது ஜனங்கள் முக்கிய விரதமாகக் கொண்டவர்கள். ஆதலால் வெகு மோசமான கொடுங்கோன் மன்னரும் இவ்விஷயத்தில் தருமத்திற்குக் கட்டுப்பட்டே நடந்தார்கள். ராவணன் சீதையைச் சிறைப்பிடித்துப் போனானே யொழிய துராகிருதம் செய்தவனன்று. ராக்ஷதனானாலும் சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டவனாகவே யிருந்தான். இப்பொழுதும் இந்தத் தருமத்தை நாம் மறவாமலிருக்கும்வரை நமது மகாஜனங்களுக்குக் குறைவு ஒன்றுமில்லை.

பண்டிதர்களைக் கேட்டால், அக்காலம்வேறு,



இக்காலம் வேறு என்கிறார்கள், அப்படியே யிருக்கட்டும். எக்காலத்திலும் நன்னெறி பற்றி நடப்பதைத் தப்பென்று யார் சொல்லுவது? அக்காலத்திய வழக்கங்களை யெல்லாம் நாம் புராணத்தில் படிக்குமாறு இப்பொழுது ஒரே முழுக்கில் உயிர்ப்பிக்க வேண்டுமென்று நாம் சொல்லவரவில்லை. வேண்டியதை மட்டும் உயிர்ப்பிக்கத் துணிவது பிசகல்லவென்று நமது வாதம். காலம், காலமென்றால், காலம் என்ன செய்யும். அது அசேதனமாதலால், அதன்மேல் வீண்பழி போடுவதை விட்டு, நாம் புத்தியை உபயோகித்துத் தெய்வத்திற்குப் பயந்து, வேண்டியதைச் செய்து கொள்வோமாக.

நாம் பக்தி, சிரத்தையுடன் ஒரு காரியத்தில் புத்தியைச் செலுத்தி உழைத்தால், காலம், தேசம், வர்த்தமானம் எல்லாம் கிரமமாக நமக்கு வசப்பட்டுத் தானாகவேண்டுமென்பது நிச்சயம். பொம்மைக் கலியாணமும், வரதக்ஷிணையும், வதூதக்ஷிணையும், விருத்தர்களுக்குக் குழந்தைகளைப் பலியிடுவதும், கலியாணத்திற்காக வீடுவாசல் எல்லாம் தோற்று ஓட்டாண்டியாவதும், ஆகிய இந்தத் துக்கங்களெல்லாம் நாமாக வரவழைத்துக்கொண்டனவேயன்றி, வேறொருவருடைய நிர்ப்பந்தத்தின் மூலமா யுண்டாகியவை யன்று. நாம் முட்டாள்களாகியதன்றி, அப்படியே யிருப்பதாகப் பிடிவாதமும் கொண்டால் அதற்குப் பிறரை நொந்துகொள்வதில் என்ன பயன்?

இந்தியாவில் பூர்வகாலத்தில் ஆணும் பெண்ணும் தங்களபீஷ்டம்போல் வரித்துக் கலியாணம் செய்துகொண்டது நமக்குப் பலசாக்ஷியங்களால் வெளியாகிறது. பெண்கள் இப்பொழுதிருக்கிறபடி முழுமோசமாக வீட்டைவிட்டு வெளியே போவதற்குத் துணைதேடியவரல்லர். என்றாலும், அதனால் இப்போது மேனாட்டில் உண்டாவதாக நாம் கேட்கிற அனர்த்தங்கள் விளைந்ததாகக் காணவில்லை.

சுவயம்வர மூலமாய்ப் புருஷன் தன் மனதிற்கிசைந்தவனென்றும், அவனைக் கலியாணஞ் செய்துகொண்டால், தங்களுக்குச் சமதையானவோ, அல்லது தங்களைவிடச் சிறந்தானவோ, சந்ததி நிச்சயமென்றும் கண்டபின்தான், விவாகம் நடக்கும். இப்பொழுதோ, இதெல்லாம் விபரீதமாக நடக்கிறது. முதன்முதல் யாரோ இரண்டு குழந்தைகளைப் பிடித்துப் பெற்றோர் தங்களுக்குள்ள மனோரதத்தை நிறைவேற்றவேண்டிப் பணத்திற்காகவோ, வேறு நியாயத்தினாலோ அவசரப்பட்டு முடிபோட்டு விடுகிறார்கள். பிறகு அவர்கள் பெரியவர்களாகி யொருவருடனொருவர் பழகி மனதொத்துப்போக வேண்டி வருகிறது. ஆனால் நமக்குள் இன்னும் பழைய வாசனை நம்மைப் பூராவாக விடவில்லை யாதலால், மொத்தத்தில் இம்மாதிரிக் கலியாணங்களால் பேரனர்த்தம் ஒன்றும் விளைவதில்லை. சந்ததிமட்டும் க்ஷீணித்துப்போகிறது. அது ஒருநாளில் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடியதல்ல. ஆதலால் நம்மில் பெரும்பாலார்க்கு எல்லாம் சரியாகத்தான் நடப்பதாகக் காணுகிறது.

ஆனால் பழைய நாளில் நமது மகரிஷிகளுக்குள் நைமித்திகக் கலியாணமென்றொரு வழக்கமுண்டு. ஆரண்ணியங்களிலும், நதிதீரங்களிலும் ஏகாகிகளாக வசித்திருந்த அனேக தபசிகள் ஏதோஒருகாரணத்திற்காகக் கொஞ்சகாலம் ஒரு ஸ்திரீயை மணம்புரிந்து வைத்துக்கொண்டிருந்து, பிறகு தமது மனோரதமானவுடன் பிரிந்து விடுவது வழக்கம். இது முற்றிலும் தருமத்தை யனுசரித்ததன்று. இரண்டொரு கேசுகளில்மட்டும் இம்மாதிரி நடந்தது நல்ல பிரஜையுண்டாக வேண்டுமென்ற அபிலாஷையாலென்று தெரிகிறது. ஐரோப்பா முதலிய நாகரிகம் தேர்ந்த இடங்களிலும் இக்காரணம்பற்றி இம்மாதிரி விவாகம் இருக்

வேண்டுமென்று அனேகருக்கு அபிப்பிராயம். ஆனால் பெரும்பாலார் இதை இன்னும் ஒப்புவதில்லை.

விசுவாவசுவும் மேனகியும் சுவயம்வரஞ் செய்து கொண்டதில் நல்ல ரூபவதியான புதல்வியொருவள் பிறந்தாள். இவரிருவரும் கந்தருவராதலால், குழந்தையை ஸ்தூலகேசியென்னும் ரிஷியாசிரமத்தில் விட்டுப்போனார்கள். ரிஷியும் இக்குழந்தையின் ரூபலாவண்ணியத்தைக்கண்டு அதிசயித்து, எடுத்துப்போய் வளர்த்தார். சுற்றிலுமுள்ள ரிஷிப்பெண்களுக்கெல்லாம் இவள்மேல் பிரியமுண்டாகி, எல்லோரும் இவளை ரிஷிமகளென்றே நினைத்திருந்தார்கள். வளரவளர இவளுடைய ரூபமும், குணமும் வெகுதூரம் புகழ்ச்சிக்குக் காரணமாயின.

இவள் தருணியாகிச் சுவயம்வரமாக வேண்டிய காலத்தில், அந்த ஆசிரமத்திற்கு அப்போதப்போது வித்தைவிஷயமாய் வந்து கொண்டிருந்த பிருகு மகரிஷியின் மகன் ருரு வென்பவன் இவளைக்கண்டு ஆசையுற்றுத் தன்னை மணம்புரியவேண்டுமென்று அவளைக் கெஞ்ச, அவளும் சம்மதித்தாள். உடனே அவன் தகப்பனாகிய பிருகுவை அனுப்பி ஸ்தூலகேசியைக்கேட்டுவரும்படிசொன்னான். இதுபழைய காலைய வழக்கம். பிருகுவும் போய்க்கேட்க, ஸ்தூலகேசி சந்தோஷத்துடன் சம்மதங்கொடுத்தார். முகூர்த்தம் நிச்சயமாயிற்று.

ஆனால் முகூர்த்தம் இரண்டொரு நாளிருக்கையில், இந்தப்பெண் தன் கூட்டாளிகளோடு ஆசிரமத்தில் எங்கோ ஒரு புதருகில்விளையாடிக்கொண்டிருக்கையில், தெரியாமல் ஒரு சர்ப்பத்தை மிதிக்க, அதுவும் சீறி இவளை வெடுக்கென்று பிடுங்கி விட்டது. இவள் மூர்ச்சையாய் விழுந்துபார்ப்பவருக்கெல்லாம் பிராணனை யிழந்தவளாகவே கிடந்தாள். ஸ்தூலகேசியும், சுற்றியிருந்த ஆசிரமவாசிகளாகிய பாரத்துவாசர், கௌதமர் முதலியோரும் சங்கதி கேட்டு வந்து புரண்டு அழுது கொண்டிருந்தார்கள்.

ருருவுக்கு இந்தச் சங்கதி தெரிந்ததும், மனதைத் திடப்படுத்திக்கொண்டு, ஓர் தனியிடத்திற்குப் போய்ச் சாஸ்திரப்படி நமஸ்கரித்துத் தபசுசெய்து, தனக்குப்பிராணபதமான சகியை உயிர்ப்பிக்க வேண்டுமென்று இந்திரனை வேண்ட, அவனும் தூதனை யனுப்பினான். தூதன் வந்து, "ஓ ரிஷி குமாரனே, மாண்டவர் மறுபடி பிழைப்பதுண்டா? ஏன் வீணாகத் துக்கிக்கிறாய்?" என்றான். ருரு, "ஐயா, நான் இந்த ஜன்மத்தில் இப்படித் துக்கமனுபவிக்கும்படி யொருபாபமும் செய்யவில்லையே. ஆதலால் எப்படியாவது எனதுயிர்க்காதலியையுயிர்ப்பிக்க வேண்டும்," என்றார். "உனது ஆயுளில் பாதியவளுக்குக் கொடுத்தால் அவள் மறுபடி பிழைத்து அவ்வளவு காலம் உன்னோடிருப்பாள்," என்று தூதன் சொல்ல, ருரு வெகு சந்தோஷத்துடன், "இதோ தானஞ் செய்கிறேன். பிழைத்தால் போதும்," என்றான். பிறகு இந்திரனருளால் பெண்பிழைக்க, எல்லோரும் சந்தோஷித்துக் கலியாணம் வெகு சம்பிரமமாய் நடந்தது. தம்பதிகள் வெகு நேர்த்தியாகவும் அன்னியோன்னியமாகவும் காலம் கழித்துவந்தார்கள்.

ஜரத்காரு ரிஷியின் விவாகம் இதற்கு நேரெதிரிடையாக விருந்தது. இவர் பிரும்மசாரியாய் உலக ஆசையற்றுத் திரிந்துகொண்டிருந்தார். இவருடைய சகோதரர் ஆறுபெயரும் இப்படியே சமாதி யடைந்துவிட்டதால், வமிசம் அற்றுப்போகுமென்று பிதுருக்கள் புலம்பினார்கள். அந்த அழுகைக்குரல் இவருக்குக் கேட்க, இவர் விசாரித்தறிந்து கொண்டு, "ஓ பிதுருக்களே, உங்கள் நிமித்தம் நான் விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமே யொழிய, எனக்கு அவசரமில்லை. ஆதலால் ஒரு



பிள்ளையாகும்வரை வேண்டுமானால் நான் கிருகஸ்தனாகிறேன்," என்று சொல்லிப்போனார். பிறகு, பிரும்மசரிய விதிப்படி தினமும் பிக்ஷைவாங்கி உண்டு வருவதில், போனவிடத்திலெல்லாம், "அன்னபிக்ஷை வேண்டும், அம்மாளே," என்று கூப்பிடுவதுடன், "பெண்சாதி பிக்ஷை வேண்டும். யாராவது போடுவீர்களா?" என்றும், கூப்பிடுவார். எல்லோரும் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் நாகலோகத்தில் சர்ப்பங்களுக்குள் பிளேக் உண்டாகி, எல்லாம் அற்றுப்போகும்போலிருந்ததில், பிரமதேவனை வாசுகி வணங்கிப் பரிகாரம் கேட்க, அவரும் ஒரு நாக கன்னிகையைப் பிக்ஷையாக இட்டு அந்த வமிசத்தில் பிறக்கும் பிள்ளை மூலமாக க்ஷேமமடையலாமென்று சொன்னார். வாசுகியெல்லோரையும் எச்சரித்திருக்க, ஒருநாள் ஜரத்காரு அத்தேசம் போய் வழக்கப்படி, "பிக்ஷைக்காரனுக்குப் பெண் கொடுப்பாருண்டா?" என்று கூவினார். வாசுகி சங்கதி தெரிந்து இவரை வெகு மரியாதையுடனழைத்துப்போய்த் தன் தங்கையை விவாகம் செய்வித்தான். ஆனால், விவாகத்திற்குமுன் ஜரத்காரு அந்தப் பெண்ணைப் பார்த்து, 'ஓ பெண்ணே, நீ ராஜகுமாரி, நானோ பிக்ஷைக்காரன். இப்பொழுது ஏதோ காரணம்பற்றிக் கலியாணம் செய்துகொள்ளுகிறேன், என்கிறாய். ஒரு காரியம்மட்டும் உறுதியாயிருக்கட்டும். எனக்கு மனைவியானபிறகு எனது மனம் சிறிதும் கோணாமல் நடந்துவரவேண்டும். என்றைக்கு என்மனம் கோணுமோ அன்று நான் நடந்துவிடுவேன்," என்றார். அதற்கு ஒப்புக்கொண்டபிறகுதான் கலியாணம் நடந்தது. இக்காலத்தில் இப்படி நடக்குமா?

கலியாணமாகியபிறகு சிறிதுகாலம் எல்லாம் சரியாகத்தான் நடந்து வந்தது. ஆனால், ஒருநாள் சாயங்காலம் சூரியாஸ்தமனமாகையில் ஜரத்காரு தன்மனைவி மடியில் தலைவைத்துப்படுத்து உறங்கினார். சந்திவேளையாகிவிட்டதால் எழுப்பாமலிருந்தாலும் குற்றம், எழுப்பினாலுங்குற்றம், என்னசெய்கிறதென்று நாககன்னிகை மயங்கி, வெகுதூரம் ஆலோசித்துக் கடைசியாக எழுந்திருக்கும்படி மெதுவாக அசைக்க, உடனே அந்தப்பிராம்மணன் வெகு ரோஷத்தோடு எழுந்து, நான் சொன்னபடி செய்வேனென்று போனார். நாகக்கன்னிகை அவரை நமஸ்கரித்துச் சங்கதியை விளக்கியும், அவர் சிறிதும் இரங்காமல், நான் சொன்னபடி தான் செய்வேனென்று உறுதியாய்ச் சொல்லிவிட்டு, அவளுக்கு வரமாக ஒருபுத்திரன் பிறப்பானென்றும் அவனால் நாக குலத்திற்கு மோக்ஷமுண்டென்றும் சொல்லிப் போய்விட்டார். இந்த விவாகத்தில் கிருகஸ்த தருமம் மட்டும் மிலிடெரியாகக் கண்டிப்பாய் நடந்ததே தவிர, பரஸ்பர சிநேகமென்பதில்லை. இப்போது நடக்கும் கலியாணங்களில் எத்தனை கேசுகள் இப்படிப்பட்டனவென்று அனுபோகஸ்தர் சொல்லவேண்டும்.

மூன்றாவதாக நாம் சத்தியவதி பராசர சுவயம்வரத்தைச் சொல்லலாம். பராசரர் அத்தியயனஞ்செய்து பெரியரிஷியாகிய பின், ஒருநாள் யமுனையைத் தாண்டிப்போகவேண்டிவந்தார். அங்கே பரசல் துறையில் செம்படவன் இல்லை. அவனுக்குப் பிரதியாக அவனுடைய மகள் சத்தியவதி கோலையூன்றி நின்றாள். இவள் வலைச்சியல்ல. அவ்வூர் அரசனுக்குப் பிறந்தவளென்றும், இவளுடன் இரட்டையாய்ப்பிறந்த பிள்ளையை மட்டும் அரசன் சுவீகரித்துக் கொண்டு, இவளைச் செம்படவனுக்கு வளர்க்கக் கொடுத்துவிட்டானென்றும் ஒரு வதந்தியிருந்தது. ஆனால் செம்படவன் மட்டும் வெகு ஆதரவுடன் இப்பெண்ணை வளர்த்து வந்ததில், இவள் ரூபலாவண்ணியத்தில் நிகரற்று வளர்ந்து, அத்துடன் ஜாதித்தொழிலும் கற்று; தகப்பனில்லாத காலத்தில் ஜனங்களை

அக்கரை சேர்த்து வருவது வழக்கமாகியிருந்தது. ஆதலால் வழக்கப்படி இவள் பரசலில் நின்று வருபவரை யெதிர்பார்த்திருக்க, முனி வரும் வேகமாய் வந்து இவளுடைய வடிவழகையும் நின்றிருக்கும் சம்பிரமத்தையுங்கண்டு மோகித்தார். பிறகு ஒரு நிமிஷம் ஒன்றும் சொல்லத்தோன்றாமல் நின்றுவிட்டு, பெண்ணைப்பார்த்து, 'பெண்ணே, படகுக்காரன் எங்கே?' என, அவளும், 'ஐயா, நான்தான் படகுக்காரன். என் தகப்பனுக்கு நான் ஒரேமகள். ஆதலால், அவருக்கு ஒழிவில்லாத நேரத்தில் நானே பரசல் ஓட்டுகிறேன்,' என்றாள். 'ஆனால், நான் அவசரமாய்ப் போகவேண்டும். ஏதோ என்னை அக்கரைகொண்டு சேர், பார்ப்போம்,' என்று முனிவர் சொன்னார். அதற்கு அவள், 'ஐயா அது என்னாலாகாது,' என்றாள். ஏன் என, அவள்,' 'படகுக்கு ஆயிரம்பெயர் வேண்டும்,' என்றாள். 'நான் ஐந்நூறு பெயருக்குச் சமதை. என் கைக்கமண்டலம் ஐந்நூறு பெயருக்குச்சமதை. ஆகலால், ஏதோ விடு, பார்ப்போம்,' என்று சொல்லிப் படகில் முனிவர் குதித்தார். உடனே சத்தியவதியும் படகைத் தள்ளிப்போனாள். ஆனால் முனிவர் அவளை விடாமல் உற்றுப்பார்த்து வரவே, நட்டாறு போகையில் அவள் துடுப்பை யெறிந்துவிட்டு, 'ஐயா முனிவரே, இப்படி யென்னை விடாமலுற்றுப் பார்த்தால், என்னால் படகு தள்ளுவதற்காகாது,' என்றாள். 'ஏன், வசுராஜன் மகளே, உனக்கென்ன, கோபமா?' என்று முனிவர் கேட்க, அவளும் அதைக் கேட்டுப் பிரமித்துப் பிறகு முனிவர் மூலமாகத் தன் வரலாற்றை யறிந்து, அவர் வேண்டுகோளுக்கிசைந்து, அவருக்குச்சதியாகி அந்தச் சம்பந்தத்தில் ஸ்ரீ வியாசபகவானைப் பெற்றுப் பெருமை யடைந்தாள்.

இக்காலத்தில் பண்டிதரொருவரும் இம்மாதிரிக் கலியாணத்தை ஒப்புவதில்லை. ஆனால் மேனாட்டில் நாளதுவரை பெரிய கிருகஸ்த குடும்பங்களிலும் சத்தியவதி கலியாணம் போன்ற கலியாணம் சாதாரணமாக நடந்து வருகிறது. ஆதலால் மேனாட்டின் அனுஷ்டானமும், இந்தியாவின் ஸ்மிருதியும் பல விஷயங்களில் ஒத்திருக்கின்றன. இந்தியாவின் அனுஷ்டானமோ, பழைய வழக்கங்களையும், ஸ்மிருதியையும் ஒட்டி நடப்பதாகப் பேச்சு மாத்திரம் இருப்பதன்றி வாஸ்தவமாகப் பார்க்குமிடத்து, இந்திய ஸ்மிருதியுமல்லாமல், மேனாட்டு ஸ்மிருதியுமல்லாமல், பழையதுமல்லாமல், புதியதுமல்லாமல், ஓராதரவுமற்று நிற்கிறது. ஆதலால் இதற்கு வழி வெகு சீக்கிரம் பிறக்கத்தான் வேண்டும்.

ஸ்டாண்டர்டு மாகஸின்.

---

மகம்மதீயருக்குள் கல்வி அபிவிர்த்தியாகவேண்டி வட இந்தியாவில் பலத்த முயற்சிகள் நடப்பதுடன், பெரிய காலேஜுகளு மிருக்கின்றன. 'அலிகர் காலேஜ்' என்பது வெகு நாளாகப் பிரசித்திபெற்று நடந்து வருகிறது. நமது நாட்டில் மகம்மதீயர் இவ்வாறு பெருத்த காரியங்களைத் தொடங்கச் சக்தியமற்று, அதன் பலனையும் நன்றாயறியாமலிருக்கிறார்கள். ஆகையால் இத்தருணத்தில் வாணியம்பாடியில் வியாபார முதலியவற்றில் கைதேர்ந்தும், கைவலுத்துமுள்ள சில மகம்மதீயக் கனவான்கள் கல்விபிவிர்த்தி சங்கமொன்று ஏற்படுத்தி, அதன் மூலமாய்ப் பாடசாலைகளை முன்னுக்குக்கொண்டு வருவது மெத்தவும் சந்தோஷிக்கத் தக்கது. வாணியம்பாடிப் பள்ளிக்கூடம் இப்பொழுது செகண்டரி தரபுவரை உயர்ந்திருக்கிறது. அதற்கென்று நல்ல கட்டிடமும் நிர்மாணமாகி வருகிறது. ஸ்ரீமான் மகம்மது இப்ராஹீம்குரைஷி என்னும் பி. ஏ., எல். டி., பட்டதாரி தலைமை உபாத்தியாயராகவும், வேறு தக்க உபாத்தியாயர்கள் அவருக்கு உதவியாகவும் இருந்து உழைத்துவருகிறார்கள். பள்ளிக்கூடத்தில் சாமான்னியமாக லௌகிகக் கல்விமட்டுமேயன்றி, மகம்மதீய மதம், ஆசாரம் முதலியவற்றையும் கற்பிக்க ஏற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இதையெல்லாம் வேறுசகாயமின்றி வாணியம்பாடி மகம்மதீயக் கனவான்களே நடத்திவருவது அவர்களுக்கும், காரியங்கள் இவ்வளவு சீராக நடப்பது தருமகர்த்தர்களுக்கும் மெத்தவும் பெருமையை உண்டு செய்வதன்றிப் புண்ணியகரமாகவும் ஆகிறது.



## காங்கேயர்

ஸ்ரீமான் சி. து. நாராயணசாமி முதலியாரவர்கள்

இப்பெரியபுலவர்,

'தென்னாடு முடைத்துத் தெண்ணீர் வயற்றொ [ண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து''

என ஆன்றோராற் புகழ்ந்தோதப்பட்ட தொண்டை நாட்டின் கண்ணுள்ள "செங்கற்பேட்டை" (செங்கற்பட்டு) என்னுந் தலத்துத் தந்துவாயர் செந்துந்தரென்று கூறப்படுகிற கைக்கோளர் மரபிற் பிறந்தவரென்ப. இக்கைக்கோள மரபினர் ஸ்காந்தம் கூறுகிற வீரவாகு முதலாம் ஒன்பதின்மர் வம்சத்தார் எனப்படுவர். இப்புலவர் இன்னகாலத்திற்றான் தமிழகம் புகழ வாழ்ந்திருந்தாரென்பதை வரையறுத்துக் கூறவும், இவர் ஜனனமாதிய விசேட வரலாறுகளொன்றும் நாம் அறிந்து மகிழ்தற்கும் ஏதுவில்லாமலிருக்கிறது. "பாவலர் சரித்திர தீபகத்தால்" இப்புலவர், இல்லறத்திச்சையற்றுத் துறவறமடைந்த ஞானியாரென்பதுணரப்படும். இப்பெருந்தகையார் ஏகாந்தத்தினிமையுணர்ந்து தத்துவங்கடந்த வித்தகப்பொருளாம் தலைவனைக் காணும் பேரின்ப நாட்டங்கொண்டிருந்தாலும், தமது கல்வி நலத்தைப் பொய்யுலக வாழ்வினர்க்குப் புகட்ட மறந்தாரில்லை. இவரியற்றிய நூல்கள் பலவுண்டென்று கருதினும் அவையெல்லாம் கட்புலனுக்கு மறைந்து பிரசித்தியாய் நிற்பது "உரிச்சொல் நிகண்டொன்றேயாம்." பதப்பொருள் அறிதற்கும் தமிழ் மொழியுணர்ச்சிக்கும், ஏற்ற கருவியாக நம் பூர்வீகர் கையாண்டுவந்த திவாகரம், பிங்கலம், சூடாமணி, கயாகரம், அகராதி, ஆசிரியம் என்றாதிய நிகண்டு வரிசைகள்போல் இவ்வுரிச்சொல் நிகண்டையும் கொண்டாரென்றறிதலோடு, வடமொழியிலுள்ள அமரசிஹ்மம், அமரதத்தம், விசுவம், விஷாமிர்தம், சப்தார்ணவம், சரஸ்வதிவிலாசம் முதலாகவுள்ள நிகண்டுகளையும் கையாண்டு வந்திருப்பதாக அறியப்படுகின்றன. தற்காலம் நமக்குப் பாஷாஞான விற்பனத்திற்கு மிகுந்த உபயோகமாகிவருகின்ற தமிழ் அகராதிகள்போல், முற்காலத்தில் இந்நிகண்டு வரிசைகள் நம் முன்னோர்க்குப் பேருபகாரிகளாக இருந்து வந்தன போலும். திவாகரம், பிங்கலம், சூடாமணி, ஆகிய இம்மூன்று நிகண்டுகட்கும் பிற்பட்டதே உரிச்சோல் நிகண்டெனக் கொள்ளவேண்டும். இவ்வுரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டுக்கு முந்தியதென்பது தொண்டைமண்டல சதகமுடையார் கொள்கை.

"பண்டை நிகண்டு திவாகரம்
பிங்கலம் பன்னுரிச்சொ
லெண்டிசையின் வடமொழிச்
செய்யுளெல்லா முணர்ந்தே
தண்டமிழ் கொண்டு நிகண்டு
சூடாமணி தானுரைத்த
மண்டலவன்குடி கொண்டது
தொண்ட மண்டலமே."

என்பதனாற் காண்க.

உரிச்சொல் நிகண்டு பிற்காலத்ததெனக் கொள்வதற்கு "ஆசிரிய நிகண்டுடையார்" நமக்கு ஒருவழி காட்டியுள்ளார். அந்நிகண்டு பாயிரத்திலே,

"முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்து காங்கய னுரிச் சொல்
முறைபெறு கயாகரம் பகருமகராதியிவை
முற்று மொன்றாத் திரட்டி."

என, நிகண்டுவரிசை கூறப்பட்ட அடிகள் வருகின்றன. இம்முறைப்படியேசூடாமணியையடுத்து உரிச்சொனிகண்டைப் பிற்காலத்ததென்று கொள்வதற்குச்சிறந்த காரணமொன்றும் உண்டு. வணங்கற்பொருளில் "சலாஞ்செய்தல்" என்னும் சொல்வழக்கம், நம் நாட்டில் வழங்கத்தொடங்கியது துருக்கராட்சிக்குப் பிந்தியகாலத்தே என்பது யாவர்க்குந்

தோன்றத் தக்கது. இச்சொல்வழக்கு பிங்கலந்தை, சூடாமணி நிகண்டுகளில் காணக்கிடையாதாயினும், உரிச்சொனிகண்டில்,

* "வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாஞ் செய்தல்"

என வணக்கப் பொருளில் எடுத்தாளப்படுகிறது. இதனல், இந்நிகண்டுடையார்க்குப் பழமை கூறுதல் சிறிதும் பொருந்தாமை காண்க. இதே சொல்வழக்கை, துருக்கராட்சிக் காலத்து விளங்கிய ஸ்ரீ குமரகுருபர முனிவர் தமதுமீனாட்சியம்மைபிள்ளைத்தமிழில்"குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு, குமாரனை முத்துக்குமாரனைப் போற்றுதும்" என்னுந்தொடரில் எடுத்தாண்டனர். ஆகவே, உரிச்சொல் நிகண்டும், அம்முனிவர் காலத்தை யடுத்துச் சிறிது முன்னே பின்னே இயற்றப்பட்டிருத்தல் வேண்டு மென்று கருதலே பொருத்தமாகும்.

இனி, இந்நிகண்டியற்றிய காங்கேயரைப் பற்றிய விசேடமொன்றும் அறிதல் கூடவில்லை. இவர்க்கு வழங்கிய "காங்கேயர்" என்னும் பெயராலும், "இம்முடி" என்று கூறப்படுகிற பட்ட மொன்று இவர்க்குளதாலும், இவர் கங்காவம்சத்தாரென்று கருதலாம். அவ்வாறு கொள்வதற்குத் தக்க மேற்கோளாகிய பிரமாணங்களின்மையால், அது கூடாமையாயிற்று.

காஞ்சி முத்தமிழ்ச்சூரி வீரபத்திர தேசிகரென்பாரியற்றிய "செங்குந்தசிலாக்கியர்மாலையினது" திருவிருத்த மொன்றில்,

"மடம்பெறு மாந்தர் மருடர
மண்டல மாண்புருட
னிடம்பெற வோங்கு முரிச்சொ
னிகண்டை யினி துரைத்துக்
குடம்பெறு மாமுனி யொப்பத்
தமிழைக் குவலயத்திற்
றிடம்பெற வைத்த திறலோர்
செங்குந்த சிலாக்கியரே"

என்வருதலானும், "பாவலர் சரித்திரதீபக" ஆசிரியரும், "உதயதாரகைப்" பத்திராதிபருமாகிய யாழ்ப்பாணம் வித்வான் ஸ்ரீமத் அ. சதாசிவம்பிள்ளையவர்கள் அபிப்பிராயமும் இதுவேயாக நிற்றலானும், இப்புலவர் பெருமான் செங்குந்தர் மரபிற்றோன்றிய பெரியாரென்பது பெறப்பட்டது.

இவரே உரிச்சொனிகண்டைப் பாடினராவர். வெண்பாவிற் பாடப்பட்ட இவ்வுரிச்சொல் 1840வூ புதுச்சேரியில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

"உரிச்சொல் இருநூறு முதவு" என்று விநாயகர் காப்புச் செய்யுளில் சொல்லப்பட்டிருப்பினும், அப்போது பதிப்பிக்கப்பட்ட பிரதியில் (220) செய்யுள்களும், 1858வூ யாழ்ப்பாணம் மானிப்பாய் அச்சுயந்திரசாலையிற் பதிப்பித்த பிரதியில், (330-ம்) விக்ருதிவூ ஆவணிமாதம் சென்னை ஆங்கிலாதிக்ஷி அச்சுக் கூடத்தில் வித்வான் ஸ்ரீமத்-சிவன்பிள்ளை அவர்கள் பதிப்பித்த பிரதியில் (286) செய்யுள்களும் காணுவது கொண்டு உள் காலாந்தரத்தில் அவை பிறராற் பாடப்பட்டுச் சேர்க்தனபோலும்.

இவ்வளவே இப்புலவர் வரலாறாகத் தெரிந்தவை. இத்துறவியார் வாழ்ந்திருந்த காலத்தை நிர்ணயித்துரைத்தல் சாத்தியமன்று. உத்தேசமாகச் சொல்வதென்றால் கி. பி. 1509 முதல் 1530-வரை விஜயநகரத்தை அரசுபுரிந்த கிருஷ்ணதேவராயர் காலத்திருந்த சூடாமணி நிகண்டின் ஆக்கியோராகும் மண்டல புருடர்க்குப் பிற்பட்டிருந்தவ ரென்றறிவதே பொருத்த முடைத்தாம். சுபம்.

* ஒன்பதாவது செயல்பற்றிய பெயர்த் தொகுதி பாட்டு 2.



எகிப்திய அரசன் யுத்தத்திற்குச் செல்லுதல்



எகிப்திய வைதீகர்கள்



எகிப்தியர் இழவுகொண்டாடுதல்



## பிராசீன ஜாதியாரின் நாகரீகம்
## எகிப்தியர்

பூர்வ விருத்தாந்தி

(227-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

நமது நவீன நாகரீக முறையை உரைகல்லாகக்கொண்டு நோக்கின், எகிப்தியரின் பழக்கவழக்கங்கள் வெகு விசித்திரமானவையென்று தோன்றும்; ஆயினும் அவற்றுள் விந்தை ஒன்றுமே இல்லையென்பது ஆழ்ந்து நோக்கும் ஒவ்வொரு விவேகிக்கும் நன்ருய் விளங்கும். உலகத்துள்ள மற்றைச் சாதியாருக்கும் எகிப்தியருக்கும் பழக்கவழக்கங்களில் அதிகமான மாறுபாடுகள் இல்லையாகிலும், எகிப்தியர் கீழ்நாட்டைச்சேர்ந்தவர் என்பதற்கு நல்ல அடையாளங்கள் அவரது நடையுடைபாவனைகளில் காணப்படும்.

எகிப்தியருடைய ஜாதீய ஆசாரங்களையும் பழக்கவழக்கங்களையும் தெரிந்துகொள்வதற்கு ஏற்ற சாதனங்கள் நான்குள்ளன; அவை, கோயிற் சுவர்களிலும் ஜயகோபுரங்களிலும் எழுதப்பட்டுள்ள சிலா லிகிதங்கள், அரசர்களை யடக்கஞ் செய்திருக்கும் கல்லறைகள், தேசகாவியம் முதலியவை எழுதப்பட்டுள்ள மரவுரிச் சுருள்கள், கடிதங்கள், சாதனங்கள், காரிய விஷயங்கள் முதலியவை எழுதப்பட்டுள்ள மற்றை மரவுரிச் சுருள்கள் ஆகியவை. முதலாவதான சிலா லிகிதத்தினுல் நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. அதில், கோயில்களில் செய்யப்பட்ட பூஜை முறையையும்,தெய்வப்பிரார்த்தனையையும், அரசர்களின் உதாரத்துவத்தையும் பற்றியே அதிசயோக்தியாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதான பிணவறையிலிருந்து பலவகை ஆயுதங்கள், கருவிகள், தட்டுமுட்டு சாமான்கள், பொன் வெள்ளி நகைகள் முதலியன கண்டெடுக்கப்பட்டிருப்பதால், பழைய காலத்தில் அந்நாட்டு ஜனங்களால் உபயோகிக்கப்பட்ட பொருள்கள் இன்னின்னவெனத்தெரிகின்றது. மூன்ருவதான மரவுரிச்சுருளும் நமக்கு அதிக பயனைக் கொடுப்பதில்லை. விசேஷமாக, அச்சுருள்களில் மதவிஷயங்களும் மாந்திரிக முறைகளுமே கூறப்பட்டிருப்பதால், அவை தத்துவ ஞானிக்கு அதிகபயனைக்கொடுக்குமேயொழிய, எகிப்தியரின் வாழ்வைக்குறித்த விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பும் நமக்குப் பயன்படா. நான்காவதான சுருள்களே தாம் நமக்கு விசேஷமான பயனைக்கொடுக்கின்றன. வாழ்வில் நடந்த பல விஷயங்களையும் குறித்தே இச்சுருள்கள் பேசுகின்றனவாதலால், இவைகளினின்று தான் நமக்கு அரிய பலவிஷயங்கள் தெரிகின்றன. இவைகளும், இவைகளிற் கூறப்படும் விஷயங்களைச் சித்திரங்களின் மூலமாக உதகரிப்பதாக விருக்கும் உருவப்படங்களுமே நமக்கு ஆதார சாதனங்களாக விருக்கின்றன. இப்படங்கள் எகிப்தியருடைய நடையுடைபாவனைகளைக் கண்டது கண்டபடி தெரிவிக்கின்றனவாதலால், இவைகளின் உபயோகம் இவ்வளவவ்வள வென்று கூறவொண்ணுது.

### 3. அரசனுக்குள்ள பதவி.

கீழ் நாடாகிய ஆசியாகண்டத்தவரிடத்தில் சிறந்து தோன்றும் குணங்களில் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் குணம் விசேஷமானதாகும். அராஜகமான நாட்டைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. உண்மையைக் கூறுங்கால் அரசனே நாட்டுக்குப் பிரத்தியக்ஷ தெய்வம் என்னும் கருத்து எகிப்தியரின் மனதுள் வெகுவாய் ஊன்றிப்போயிருந்தபடியால், யதேச்சையாய் அதிகாரம் செலுத்தும் அரசனில்லாமல் ஒரு ராச்சியமும் நிலை பெறுதென்பது அவரது ஆழ்ந்த கொள்கையாம். எகிப்தியர், தமது அரசரைத்தெய்வமாகவே கொண்டாடினர். ஆனல் இக்கொண்டாட்டம் எப்போதும் அனுஷ்டானத்திலிருக்கவில்லை. ஏனெ

னில் வாஸ்தவத்தில் அரசர்களும் பணிந்து நடக்கவேண்டிய அதிகாரம் ஒன்று சகலத்திற்கும் ஆதாரமாக இருந்தது. "மகாராஜாதிராஜ" முதலிய விருது கூறுவதை யனுசரித்துப் பார்க்குமிடத்து, அரசனுக்கு மேற்பட்ட அதிகாரியில்லை. அவர் வைத்ததுதான் சட்டம்; பிரஜைகளுடைய உயிரும் உடைமையும் அவருடையனவே. ஆனால் அதன் ரகசியத்தை நோக்கும்போது, இதற்கு முற்றிலும் மாறான அநேக அற்புதங்கள் தென்படுகின்றன. அரசனுடைய பிதாவின் காலத்திலிருந்த பழைய ஆலோசனைக்காரர்கள் எப்போதும் உடனிருப்பார்கள். அவர்களிடம் குற்றேவல்களை உத்தியோகஸ்தர்கள் செய்து தீரவேண்டும். பூர்வமுதற்கொண்டே வரும் செல்வாக்குள்ள குடும்பத்தவரையும் அரசன் அநுசரிக்கவேண்டியிருந்தது. சேனாபதிகளின் கையில் விசேஷ செல்வாக்கிருந்தபடியால் அவர்களையும் அரசன் தட்டிக்கொடுத்தே கவனிக்க வேண்டியிருந்தது. இவர்கள் எல்லோரையும் காட்டிலும் மேலாக, குருக்கள்மார் அரசாதிகாரத்துக்குப் பெருந்துணையாகவும் சர்வாதிகாரத்திற்குத் தடையாகவும் நின்று கொண்டிருந்தனர். இன்னும் ராஜபதவியைப் பெற முயற்சி செய்யும் தாயாதிகளும், அரண்மனை யந்தப்புரத்தில் இயற்கையாகவே பொறாமையோடு கூடிய கைகேசிகளும் அரசனுக்குத்தீராத கவலையைக் கொடுப்பதுண்டு. இவ்வாறு அரசனுடைய அதிகாரத்துக்குச்சிற்சில நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், குடிகள் அரசனை வேண்டாமென்று தள்ளிவிட்டுப் பிரஜாதிபத்தியத்தை ஸ்தாபிக்க இஷ்டப்படவில்லை. பிரஜாதிபத்தியம் என்னும் வித்து ஐரோப்பிய பூமியில் தான் வேரூன்றிப் பலனைக் கொடுத்தது.

அரசன் தெய்வத்தின் பிரதிநிதியாவான். அவனது அதிகாரம் நேராகவே தெய்வத்தினிடமிருந்து பெறப்பட்டதாம். ராச்சியத்துக்கும் ராச்சியத்திலுள்ள மதக்கொள்கைக்கும் அவரே அதிகாரி; நியாயம் தீர்ப்பவனும் தருமசாஸ்திரத்தைப் பாலிப்பவனும் அவனே சேனாநாயகராக விருந்து படைகளை யுத்தத்துக்கு நடத்திக்கொண்டு போவதும் அவரே தான். கோயில் முதலிய இடங்களில் பூஜை, பலி போடுவதும் அவாகையால்தான். தெய்வங்களுக்கு ஆகுதி கொடுப்பதற்கும் அவரே யஜமானன். அவரிருக்குமிடங்களில் நடக்கும் வைதீக காரியங்களைச் செய்வதற்கு அவரே ஆசாரிய புருஷனாக முன்னிற்பார்.

ராச்சியாதிகாரம் பரம்பரையாக வரும்முறையையுடையது. நேரானசந்ததியில்லாவிடத்து, நெருங்கின உறவினரிலேனும், கல்யாண சம்பந்தம் செய்துகொண்ட இடத்திலேனும் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதுண்டு. ஸ்திரீகளும் பட்டத்துக்கு வரக்கூடியவர்கள் தாம். இவ்வழக்கம் கி. மு. 4000-வாக்கிலிருந்த பாயன்னிதர் என்னும் அரசனால் ஏற்படுத்தப்பட்டதாம். எப்போதும் அரசன் பிர்ம்மரிஷியாகவாவது, ராஜரிஷியாகவாவது தான் இருக்கவேண்டும். இராஜ குமாரர்களும் அவ்வாறே இவ்விரு வகுப்புகளில் ஏதேனுமொன்றைச் சேர்ந்தவராக இருப்பார்கள். இந்தியாவிலும் வைதிகம் பிரபலித்திருந்த பூர்வகாலத்தில் இப்படி யிருந்ததை அபிமானிகள் அறிவர்.

அரசன் உயிரோடிருக்கும்போது எவ்வளவு மரியாதை செய்யப்படுமோ அவ்வளவும் அவரிறந்த பிறகும் செய்யப்படும். * எகிப்தியரின் முதலரசனான மீனிஸ் என்பவர் இறந்தபிறகு நெடுங்காலம் வரையில் தெய்வமாகக் கொண்டாடப்பட்டாரென்று தெரிகின்றது. ஒரு அரசன் ராச்சியபாரம் புரியும்போது தனக்குப் பின் பட்டத்துக்கு வரக்கூடிய இளவரசனை ராச்சியாதிகாரத்தில் சேர்த்துக்கொள்வதுமுண்டு. இவ்வழக்கம் அமனம்ஹாத் என்னுமர

* அரசன் இறந்ததும் பிரஜைகள் விசனக்குறிகொண்டு தலையில் மண்ணைவாரிப் போட்டுக்கொள்வதைப் படத்தில் காண்க.



சனால் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டதாம். மற்றைய தேசங்களிலும் இவ்வழக்கமிருந்ததுண்டு. இதை யநுசரித்தே தசரதன் ஸ்ரீராமனை இளவரசாக்க முயன்றது. இதனால் பின்னிட்டுப் பட்டத்திற்கு வருவோர்க்கு ராச்சிய முறையில் அநுபவம் உண்டாகி வந்ததென்பதற்கையமில்லை. மாகாணங்களில் ராச்சியாதிகாரம் செம்மையாக நடந்தேறி வருவதற்காக அங்கங்கே கவர்னர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். சாமந்த அரசர்கள் பேரோவா (எகிப்து சக்கரவர்த்தி)க்குக் கப்பங்கட்டுவார்கள். இரண்டாம் அமென்ஹோதெப் என்பவர் ஆசியாக்கண்டத்திலிருந்த தனது சிற்றரசர்களுக்குள் உண்டான கலகத்தை யடக்கச் சென்றிருந்ததாகத் தெரிவதால், எகிப்திய ஸார்வபௌமம் வெகுதூரம் வரையில் பரவியிருந்ததென்பதற்கு இடமுண்டு.

மந்திரிகளும் மற்றைய பெரிய உத்தியோகஸ்தர்களும் முதல் இரண்டு வகுப்புக்களினின்று மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர். மந்திரிகளின் ஆலோசனையின் படியே அரசன் நடந்து வருபவனாதலால், ராச்சியத்தில் நடக்கும் குற்றங்களுக்கும், பிழைகளுக்கும் அரசன் உத்தரவாதியாக வேண்டியதில்லையென்றும், மந்திரிமார்களே எல்லாப் பொறுப்பையும் வகிக்க வேண்டியவர்களென்றும் ராஜகீயக் கொள்கையுண்டு.

தேசத்தின் இயற்கை யமைப்பினாலேயே எகிப்தியருக்கு எதிரிகளால் முதலில் அதிகமான துன்பமுண்டாகாதபடியால், அவர்கள் சிறந்த போர் வீரர்களானதில்லை; ஆயினும் அவர்களுக்குப் போர்த்தொழில் தெரியாதென்றில்லை. ஒரு காலத்தில் அவர்கள் தேசங்களை ஜெயிப்பதிலேயே கருத்தூன்றியிருந்தனரென்பதற்கும் சாக்ஷியம் பலவுள்ளன. அதனால் ஸைனை, நூபியா, முதலிய தேசங்கள் எகிப்துக்கு அடங்கிக் கப்பங் கட்டிவந்தன. என்றாலும் எகிப்தியருடைய யுத்தமுறையில் விசேஷம் ஒன்றுங் காணவில்லை. காலாட்படை வீரர்க்கு முக்கிய ஆயுதங்கள் வில்லும், வேலுமே; குதிரைகள் பூட்டிய தேர்ப்படையொன்றுண்டு. இத்தேர்ப்படையை அரசனே நேரில் நடாத்துவார். கோட்டைகளை முற்றுகைபோடும்போது ஏணிகளும், மதிலிடிக்கும் யந்திரங்களும் உபயோகத்திலிருந்தன. போர்வீரர்கள், தற்கால முறைப்படியே, ரணகளவோசையின்படி ஒழுங்கு தவறாமல் நடந்து வந்தனரென்று சித்திரங்களாலறிகிறோம்.

சாதாரணமாகப் போர்வீரர்கள் இண்டாவது வகுப்பிலிருந்து வருவார்கள். எகிப்து தேசத்திலுள்ள பூமியில் மூன்றிலொரு பங்கு போர்வீரர்களுக்கென்று விடப்பட்டிருந்தது. ஒவ்வொரு போர்வீரனுக்கும், அவன் போர்த்தொழிலைப் பயின்றாலும் பயிலாவிட்டாலும், சுமார் எட்டுஏகரா நிலம் மான்னியம் விடப்பட்டிருந்தது. எகிப்திய போர்வீரர்களுக்கிருந்த இன்னொரு அருமையான சுதந்திரம் என்னவெனில், கடனுக்காக அவர்கள் சிறைச்சாலையில் அடைபடக்கூடாதென்பதாம். ராச்சியத்துக்குக் காவலாகவுள்ளவர்களை, அவர்களுக்கு ஏற்பட்ட தொழிலினின்றும் விலக்கி வைக்கக்கூடாதென்பது எகிப்தியரின் கொள்கை. போர்வீரர்கள் பாலியம் முதற்கொண்டே போர்த்தொழில் பயிலுவர். அதற்கென்றே ஒரு போர்த்தொழில் கலாசாலை யிருந்ததாகத் தெரிகின்றது. எகிப்தியரின் சேனையில் வில்வீரருடைய பலமே மேலானதாக மதிக்கப்பட்டது. அவர்கள் கீழ் நின்றுகொண்டேனும் ரதத்தின் மீதிருந்தேனும் போர்புரிவர். வில்வீரர் படை வியூகத்தின் இரு சிறையிலுமிருப்பார். காலாட்படை பலவணிகளாக வகுக்கப்பட்டு மத்தியில் நிறுத்தப்பட்டிருக்கும். குதிரைப்படை பின்னால் நின்று உதவி செய்யும். ஒவ்வொரு போர்வீரனும் தானே ஆயு

தங்களைச் சேகரித்துக்கொண்டு, கூப்பிட்டவுடன் போர்க்களத்துக்குப் போகும்படியாக சர்வ ஜாக்கிரதையோடும் ஆயத்தமாகவிருக்க வேண்டும். எகிப்து நாட்டிலிருந்த போர்வீரரின் தொகை 4,10,000-ஆகும். இவர்களில் பிரதிவருஷமும் 1,000-பேர் ராஜகிருகத்தில் மெய்காப்பாளராக விருப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு போர்வீரனுக்கும், அவன் போர் புரிந்துகொண்டிருக்கையில், நாள் ஒவ்வொன்றுக்கும் உணவுக்காகப் பத்தா பணம் கொடுக்கப்படும்.

இவ்வாறிருந்த சுதேச போர்வீரர்களைத் தவிர, எகிப்து தேசத்தில் அந்நிய போர்வீரர்களுமிருந்தனர். இவர்களுக்கு நிலமான்னியம் கிடையாது. வேலைசெய்த நாள்களுக்குக் கூலிமட்டுந்தானுண்டு. எகிப்தியரால் ஜெயிக்கப்பட்ட நாடுகளிலிருந்தும், எகிப்தியருடன் சிநேக சம்மந்தஞ் செய்துகொண்ட நாடுகளிலிருந்தும், இவ்வந்நிய போர்வீரர்கள் வருவார்கள்.

## 4. யுத்தாயுதங்கள்

எகிப்தியர்கள் சண்டை செய்வதற்காகத் தரித்துக்கொண்டிருந்த ஆயுதங்களாவன:—வில், ஈட்டி, இருவகைவேல், கவண், பலவகைக் கத்திகள், கோடரி, குறுந்தடி, வளைதடி முதலியனவாம். அவர்களுக்கிருந்த ரக்ஷண ஆயுதங்கள், உலோகத்தாற் செய்த முகமூடி, யுத்த அங்கி, பெரிய கவசம் இவைகளேயாம். கேடயம் போர்வீரனிற் பாதியுயரமாயும், அவனைக்காட்டிலும் இருமடங்கு அகலமாயும், காளைமாட்டின் தோலால் செய்யப்பட்டதாயுமிருக்கும். உலோகத்தால் செய்யப்பட்டவிளிம்புகளும் ஆணிகளும் அதில் அறையப்பட்டிருக்கும். அதன் உட்புறம் மரத்தினால் ஆனது. வில், ஐந்துமுதல் ஐந்தரைவரை அடி நீளமுள்ளதாயும், இருகோடிகளும் கூர்மையானவையாயும், உருண்ட மரத்தண்டினால் செய்யப்பட்டதாயுமிருக்கும். அம்புகள், இருபத்திரண்டு முதல் இருபத்துநான்குவரை அங்குல நீளமுள்ளனவாம். அவற்றுள் சில மரத்தினாலும், சில நாணல் தட்டையினாலும் செய்யப்பட்டிருக்கும். சாதாரணமாக ஏதேனுமொரு உலோகத்திற்செய்த முனையொன்று அம்பின் முகத்தில் சொருகப்பட்டிருக்கும். மூன்று இறகுகள் அம்பின் பிடிப்பக்கத்தில் ஒட்டப்பட்டிருக்கும். ஈட்டி, ஐந்து அல்லது ஆறடி நீளமாயும், மரப்பிடியுள்ளதாயும், உலோக முனை பெற்றதாயுமிருக்கும். வேலும் இதைப்போலவே யிருக்குமாயினும், அதன் முனை நீளமாயும் வெகு கூர்மையாயுமிருக்கும். கவண் என்பது தோலினாலாவது, திரித்த கயிற்றினாலாவது செய்யப்பட்டிருக்கும். இப்போது நமது நாட்டில் வழங்கிவரும் கவணுக்கும் எகிப்திய கவணுக்கும் அதிக வித்தியாசமில்லை. அக்கவணிலிருந்து எறியப்படும் கற்கள் வெகு வேகத்துடன் நெடுந்தூரம்வரையில் போகக்கூடியனவாம். எகிப்தியருடைய கத்திகள் குறுகினவையாயும் குத்துவதற்குமட்டும் நேரானவையாயுமிருக்கும். வெட்டுவதற்கும் அவை உபயோகிக்கப்பட்டன. பரசு என்ற கோடரி இரண்டு அல்லது இரண்டரை அடி நீளத்தில் ஒற்றை முகமுள்ளதாயும் இரும்பினாலாவது வெண்கலத்தினாலாவது செய்யப்பட்ட முகத்தில் மரப்பிடி கோர்க்கப்பட்டதாயுமிருக்கும். குறுந்தடியும் வளைதடியும் மரத்தினால் செய்யப்பட்டு வெண்கல வளையங்களைப் பெற்றிருக்கும். அவைகள் கைச்சண்டை போடும்போது மட்டுமே உபயோகிக்கப்படும். முகமூடி, தோலினாலாவது வெண்கலத்தினாலாவது செய்யப்பட்டதாக விருக்கும். அவைகளில் சில கழுத்தளவு வரும்; சில காதளவு வரும். பச்சை, செகப்பு, கருப்புநிறங்கள் இம்முக மூடிகளில் தீட்டப்பட்டிருக்கும். யுத்த அங்கி, குறுக்காகவைத்து அமைக்கப்பட்ட



வெண்கலத் தகடுகளாலானதாம். அதில் பல வகைகளிருந்தன. பல அளவுகளிலுமிருந்தன. குதிரைப்படைதான் எகிப்தியருடைய சேனையின் முதன்மையான பாகம். ஒவ்வொரு ரதத்திலும் சாதாரணமாக இருவர் இருப்பர்; மூவரும் சிற்சில சமயங்களில் இருப்பதுண்டு; அவர்களுள் ஒருவன் சாரதியாக இருப்பான்.

## 5. யுத்த முறைகள்.

அந்நிய நாட்டின் மீது படையெடுத்துப் போவதென நிச்சயமானால், எகிப்திலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் போர்வீரர்கள் வருவார்கள். சாதாரணமாக, அரசனே நேரில் வந்து சேனையை நடத்துவார். சிற்சில வேளைகளில் சேனாபதிகள் நியமிக்கப்பட்டுச் சண்டையை நடத்துவார்கள். குறிப்பிட்டவிடத்தில் எல்லோரும்வந்துசேர்ந்ததும், சேனாநாயகன் யுத்தத்துக்குப் புறப்படவேண்டிய முயற்சியைச் செய்வான். முதன்முதலில் போரில் வெற்றியை விரும்பி தெய்வப் பிரார்த்தனை செய்து பலியிடுவார்கள். அரவானைக் களப்பலியாக்கிய கதை பாரதம் படிப்பவருக்கெல்லாம் தெரியுமல்லவா? பின்னர் போர்வீரர்கள் புறப்படுவார்கள். முதலில் தேர்ப்படை வழிகாட்டிக் கொண்டு போகும். தேரின்மீதேறிவரும் அரசன் மத்தியில் செல்வார்; அவருக்கு முன்னும் பின்னும் வில், வேல், முதலிய ஆயுதங்களைத் தரித்த காலாட் படைகள் செல்லும். யுத்தம் ஆரம்பமாகுமுன்னர், ரணகாளம் ஒலிக்கும். உடனே முன்னணியில் நிற்கும் வில்வீரர்கள் எதிரியின் முன்னணியின்மேல் அம்புகளைப் பிரயோகிப்பார்கள். இதனால் எதிரியின் படைவகுப்பில் அமளி உண்டாகும் போது எகிப்தியரின் தேர்ப்படையும் காலாட்படையும் பின்னும் நெருங்கிக் கடும்போர் புரியும். எகிப்தியர் கேவலம் காட்டு மிராண்டிகளைப் போலச் சண்டை செய்தவரல்லர். சரணமடைந்தவரை இவர்கள் கொல்வதில்லை. மூன்றும் ராம்ஸேஸ் காலத்தில் நடந்த கப்பற் சண்டையொன்றில் எகிப்தியர், கடலில் விழுந்துவிட்ட சத்துருக்களின் உயிரைத் தப்பவைத்தனர். போர்செய்ய இயலாது ஆயுதங்களை எறிந்துவிட்டுச் சரணமடைந்தவர்களைக் கட்டி யுத்தகளத்துக்குப் புறம்பே கொண்டுபோய் விடுவார்கள். சத்துருக்களில் எவ்வளவு பேர் இறந்தனர் என்றறிவதற்காக, இறந்தோருடைய கைகளை வெட்டிக்கொண்டுபோய் அரசன்முன் குவித்து எண்ணுவார்கள். சிலவேளைகளில் இறந்தோருடைய நாவும் மற்றைய உறுப்பும் இம்மாதிரி அரசன்முன்னர்க் குவியலாவதுண்டு. யுத்தகளத்தில் கிடைத்த ஆயுதங்கள், குதிரைகள், ரதங்கள், மற்றையபொருள்கள் எல்லாம் கணக்கிடப்பட்டு அரசன் முன்னர் சேர்க்கப்படும். அவையெல்லாம் அரசனைச்சேர்ந்தவையாம்.

எகிப்தியரது கோட்டைகள் நாற்கோண வடிவ மமைந்தவை. சுவர்கள் பதினைந்தடி கனமும் ஐம்பதடி உயரமுமாக விருந்தனவாம். ஒவ்வொரு பக்கத்திலும் இடையிடையே கோபுரங்கள் கட்டியிருந்தன. பிற்காலத்தில் யாது காரணத்தினாலோ இவ்வாறு கோட்டைகள் கட்டுவது நின்றுபோய் விட்டது. அதற்குப் பதிலாக, எகிப்தியர்கள், கோவில்களில் மண்டபங்களைக் கட்டி அவைகளிலிருந்தே தங்களை எதிரிகளின் படைகளினின்றும் காப்பாற்றிக் கொண்டனரென்று தெரிகின்றது. இவ்வாறு ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொரு அரணாகமாறிற்று.

சயின்னியங்கள் தங்கும் பாசறையும் நாற்கோண வடிவமாகவே இருக்கும். அதற்கு வாயில் ஏதேனுமொரு புறத்திலிருக்கும். பாசறையின் நடுவில் சேனாபதியின் கூடாரமும், முக்கிய உத்தியோகஸ்தரின் கூடாரமும் அமைக்கப்பட்டிருக்கும். அங்குத் தான் பலி

பீடங்களும், வைதீக காரியங்களுக்கு வேண்டிய பொருள்களும், ரணகளப் பணப்பெட்டியும் வைக்கப்பட்டிருக்கும். காவற்காரர்கள் வெளியில் படுத்துறங்குவார்கள்.

கோட்டையைத் தாக்குவதில் வில் வீரருடைய உதவியைக்கொண்டே போவார்கள். கோட்டைமதிற்புறம் சென்றதும், ஏணிகளைச் சார்த்தி மேலேறுவார்கள்; அல்லது இடியந்திரங்களைக்கொண்டு மதில்களைத் தகர்க்கத் தொடங்குவார்கள். இவ்விரண்டு உபாயமும் பயனற்றவையாக முடியுமானால், மதிலின் கீழே குடைந்து அதைத் தள்ளிவிட முயலுவார்கள்.

தோற்ற அரசர்கள் எகிப்திய அரசனுக்குக் கப்பங் கட்டவேண்டும். அமெனம்ஹாத் அரசனால் ஜெயிக்கப்பட்ட ஒரு அரசன், அவரைத் தெய்வம் போலக்கொண்டாடி வணங்கினதாக ஒரு சித்திரம் காணுகின்றது. எகிப்தியர்கள் தருமயுத்தம் புரிந்தவரென்று தெரிகின்றது. எதிரியைச் சந்தித்தால் ஒரு ரதவீரன் தனது ரதத்தை விட்டிறங்கி,வேல், பரசு, முதலியவற்றுடன் எதிரியுடன் முதலில் சண்டைக்குப் போவான். போரில் பிடிபட்டவர்கள் அரசனுடைய பணியாளராவார்கள். வேறு நாடுகளில் காணுமாறு உயிருடனிருக்கும் போதே தோலையுரித்தல், கழுவேற்றல் முதலிய சித்திரவதையான குரூரச் செய்கைகள் எகிப்தியருக்குத் தெரியாத விஷயங்களாம். அவர்கள் வேண்டுமென்றே ஒருவரையும் இம்சிப்பதில்லை. எகிப்தியர் கொலை செய்வதற்காகவுள்ள சில சித்திரங்களெல்லாம், சண்டைமுனையில் தம்மை மறந்துசெய்யும் காரியங்களென்றே கருதப்படுகின்றன.

### 6. ஜாதீய ஆசாரங்கள்.

இந்தியாவிலிருப்பதைப் போலவே, எகிப்திலும் வருணாசிரம தருமம் பரவி வந்ததுண்டு. முதன்மையாக, வைதீக வகுப்பார் விசேஷ செல்வாக்குடன் இருந்தனர். இவரை எகிப்திய பிராம்மணர் என்னலாம். இரண்டாவது வகுப்பார் போர்வீரராவார். இவர் இந்திய க்ஷத்திரியரைப் போன்றவர். இவர்களுக்கடுத்த சாதாரண ஜனங்கள் பல வகுப்புக்களாகப் பிரிக்கப் பட்டிருந்தனர். கூலிவேலை செய்வோர்கள், கைத்தொழில் செய்வோர்கள், வியாபாரிகள், இடையர்கள், இவர்கள் தனித்தனி வகுப்பாக விருந்தனர். கடைசியான மாடு மேய்க்கும் இடையரும், மீன் பிடிக்கும் வலைஞரும் தாழ்ந்த ஜாதியாராவர். இவர்கள் தாம் எகிப்தியருக்குட் பறையர் போலும்.

இந்தியாவில் இப்போது பல நூற்றாண்டுகளாக ஒரு வருணத்தில் பிறந்தவன் வேறொரு வருணத்துக்கு ஏற்றதொழிலை மேற்கொள்வது அபூர்வம். இவ்விதமான நிபந்தனை எகிப்தில் இருந்ததில்லை. வைதீக வகுப்பான் போர்த்தொழிலை மேற்கொள்வதும், போர்வீரவகுப்பினன் வைதீகத்தொழிலை மேற்கொள்வதும் எகிப்தில் சர்வசாதாரணம். மாகாபாரதவீரர்களாய் இப்படியே துரோணர் முதலியோரும் இடைச்சாதி, வலைச்சாதியைத் தவிர, மற்றைச் சாதியோர், ஒருவருக்கொருவர் கொள்வனகொடுப்பன செய்து சம்பந்தஞ் செய்வதுண்டு. விலக்கப்பட்ட ஜாதியார் தங்கள் தங்களுக்குள் மட்டுமே கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்.

அந்தஸ்தை விரும்புவோரெல்லோரும் போர்த்தொழிலையேனும் வைதீகத்தொழிலையேனும் மேற்கொள்வதுண்டு. எகிப்திய கப்பற் படைவீரர்கள், கரைப்படைவீரரிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வைதீகர்கள் சட்டநிர்மாணஞ் செய்வதில் விசேஷ அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். இவர்களும் போர்வீரவகுப்பினருமே ராச்சியாதிகாரங்களை வகிப்பார்களாதலால், மந்திரிமார் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் இவ்விரு வகுப்பினரிலிருந்தே வந்தனர் என்று தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. வைதீகர்களில் பல வகுப்பினருண்டு.பிரதமகுருக்கள், நியாயாதிபதிகள், சுவாமியாடுவோர், சாஸனமெழுதுவோர், பலிமிருகசோதகர், பரிசுத்த ஆடை வைத்திருப்



போர், கொடி முதலிய வைதீக சின்னங்களை வைத்திருப்போர், என வைதீகர் பலவகையாவர். பிரேதபதனஞ் செய்பவர்கள், * பரிசுத்தப் பிராணி போஷகர்கள், திருவிழாக் காரியதரிசிகள், இவர்களும் வைதீக கோஷ்டியனர் தாம். ஸ்திரீகளும் வைதீக கோஷ்டியில் சேர்ந்து காரியங்கள் நடத்துவதுண்டு. கோயில்களில் பூஜை நடத்தியவர்களுள்ளும், வைதீக காரியங்களைச் செய்தவர்களுள்ளும், அரண்மனைக் குருக்கள்மாருக்குள்ளும், ஸ்திரீகள் இருந்தனர்.

இரண்டாவது வகுப்பினரான போர்வீரரைப்பற்றி முன்னரே கூறப்பட்டது. இவ்விரு வகுப்பினருக்கும் வரி விதிக்கப்படவில்லை. தேசத்திலுள்ள விளை நிலங்களில் பெரும்பாகம் இவ்விரு வகுப்பினர் வசமே இருந்தது. இவர்கள் இந்நிலத்தைக் குடியானவர்களிடம் குத்தகைக்கு விட்டுவிடுவார்கள். இவர்களுக்கு விடப்பட்ட நிலத்தைத் தவிர பாக்கியுள்ளதெல்லாம் அரசனுடையதாம். ஆகவே மற்றைய வகுப்பினர் வேலைசெய்தே பிழைக்க வேண்டியிருந்ததென்று புலப்படும்.

எகிப்தியர் சாதாரணமாகவே சாமர்த்திய சாலிகள். தேகாரோக்கியத்தைக் காப்பாற்றுவதற்காக மாதந்தோறும் மூன்றுநாள் மருந்து சாப்பிட்டுப் பத்தியமிருப்பார்களாம். மலையாளத்தில் இப்பொழுதும் வருஷத்தில் ஒருமாசம் இப்படிச் செய்வது சாதாரணம். தினையினால் செய்யப்பட்ட ஒருவித அடையே அவர்களுக்குப் பிரதான ஆகாரம். பானத்துக்காக வாற்கோதுமையிலிருந்து ஒருவிதச் சாராயம் இறக்கி உபயோகித்தனர். உப்பிட்டு வெயிலில் உலர்த்திய மீன்களும், வாத்து முதலிய பறவைகளும் அவர்களுடைய ஆகாரப் பொருள்களைச் சேர்ந்தவையாம்.

சாதாரணமாக, எகிப்தியரின் ஆடைகள் நூலினாற் செய்யப்பட்டனவாக விருக்கும். அதற்குமேல் வெண்மையான மயிர்க்கம்பளமொன்றைப் போட்டுக் கொள்வதுமுண்டு. ஆயினும் இவ்விதக் கம்பளங்களோடு வைதீக காரியங்கள் ஒன்றையும் செய்யக்கூடாது. வைதிகர்கள் சிறுத்தைத்தோலைப் போர்த்துக்கொண்டால் தான் 'மடி' ஆவார்கள்.

எகிப்தியருடைய வீடுகள், சாதாரணமாக, சுடுகல்லால் கட்டப்பட்டு, பலவித வர்ணங்கள் தீட்டப் பெற்றிருக்கும். ஏழைகளுடைய வீடுகள் நான்கு சுவர்களையும், அச்சுவர்களின்மீது போடப்பட்ட பனந்துண்டுகளாகிய உத்திரங்களின்மேல் பரப்பிய பாய்களின்மீது பூசப்படும் கனமான மண்மெழுக்கையுடைய கூரையையும் உடையனவாம். மழை பெய்வது வெகு அபூர்வமாதலால், இம்மண் மெழுக்குக் கரைந்துவிடும் என்ற பயமே இல்லை. இப்படிப்பட்ட வீடுகளில் ஒரு கதவும், இரண்டு அல்லது மூன்று சிறியபலகணிகளுமட்டுமே இருக்கும். செல்வவான்கள் அழகிய மெத்தை வீடுகள் கட்டி வசித்து வந்தனர்.

எகிப்தியர்கள் பாதரக்ஷையுபயோகிப்பதுண்டு. வெயில் கனகடுமையாக எரிப்பதினால், இவர்கள் ஏதேனுமொரு பாதரக்ஷணத்தை உபயோகிக்கவேண்டியது அவசியமாகும். ஆந்திலா என்னும் நகரத்தின் வருமானம் முழுவதும் எகிப்து நாட்டையாளும் அரசனின் மனைவிக்குப் பாதரக்ஷைகள் செய்யப்படுவதற்காகவே உபயோகிக்கப்பட்டதாம். நைதோகிரிஸ் என்பவளுடைய மெருகிட்ட பாதரக்ஷைகளில் ஒன்றை ஒரு கழுகு தூக்கிக்கொண்டு வந்து அரசனது மடிமீது போட, அவ்வளவு அழகான பாதரக்ஷையைத் தரிப்பவளை மனைவியாக்கிக்கொள்ள விரும்பி, அவ்வரசன் அவளைத் தேடிப்பிடித்து அரசியாக்கிக் கொண்டனென்று ஒரு கதை யுண்டு.

* இவர்களையும் இவர் தொழிலையும் பின்னிட்டு ஒரு முறை விளக்குவோம்.

விவாக விஷயத்தைப்பற்றிய விபரங்கள் செம்மையாகத் தெரியவில்லை. புருஷன் தன்னைக் காட்டிலும் வயதில் மூத்த ஒரு ஸ்திரீயைக் கல்யாணம் செய்து கொள்வதுண்டு. சுவகோத்திரத்தில் கலியாணம் செய்யக்கூடாதென்று இந்தியர்களுக்குள் வழங்கும் தர்மம் எகிப்தியர்களுக்குள் இருந்ததில்லை. அமென்ஹோதெப் என்னுமரசன் தன் சொந்த சகோதரியையே மணந்து கொண்டனனும்; இம்மாதிரி ‘பகினீ’ விவாகம் இந்தியாவுக்கு மேற்கில் பர்சியா முதலிய பலதேசங்களில் காணும். ஆதலால் இதில் அதிசயமொன்று மில்லை. அவனது மகளை, அவன் வைப்புஸ்திரீயின் மகன் கலியாணம் செய்துகொண்டான். தமயன் அந்தப்புரத்திலிருந்த ஸ்திரீ தம்பிக்கும் உரியவளாம். பொதுப்படக் கூறுமிடத்து, விவாக விஷயம் நாம் அங்கீகரிக்கத்தக்க வண்ணம் ஒழுங்கானதாக இருந்ததில்லை. இவ்விஷயத்தில் மட்டும் அவர்கள் பிராசீனர்களாக விருந்தது ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

இனி எகிப்தியரின் இழவு கொண்டாட்டத்தைப்பற்றிப் பேசுவாம். அந்தஸ்துள்ள ஒரு மனிதன் இறந்து விட்டால், அவன் வீட்டு ஸ்திரீகள் அனைவரும் தலையிலும் முகத்திலும் அழுக்கைப் பூசிக்கொண்டு, பிணத்தை வீட்டிலேயே போட்டுவிட்டு, அலங்கோலமான உடைகளோடும், திறந்த மார்புகளோடும், வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, உறவினர் பின்றொடரத் தெருவீதி வழியே ஓடுவார்கள். ஆடவர்களும் அம்மாதிரியே செய்வார்கள். அதன் பின் பிணம் சுகந்த திரவியங்கள் போடப்பட்டுப் பதனம் செய்யப் பெறுவதற்காகக்கொண்டு போகப்படும். எகிப்தியனேனும், அந்நியனில் யாவனேனும் முதலையினாலாவது நீரில் வீழ்ந்தாவது இறந்திருந்தால், அவனிறந்த இடத்துக்குச் சமீபத்திலுள்ள நகரத்தார் அப்பிணத்தை எடுத்து மரியாதையோடு புதைப்பார்கள். அநாதைப் பிரேத சம்ஸ்காரம் எகிப்தியரிடத்து ஓர் பெரிய தருமம்போலும்.

சாதாரணமாக எகிப்தியர் ஏகபத்னி விரதமுடையவர். ஸ்திரீகளுக்கு விசேஷ சுதந்தரங்களுண்டு. இந்தியாவில் ஆரியவரசர்களுடைய வம்சாவளியில் ஸ்திரீகளின் பெயரைக்கூடக் குறிப்பதில்லை. எகிப்திலோ, ஸ்திரீகள் பட்டத்துக்கும் வருவதற்கு அருகராவார். ஆகவே அவர்களுக்கு விசேஷமான செல்வாக்கும் அதிகாரமும் இருந்தன வென்பது சொல்லாமலே அமையும். ஸ்திரீகள் மிகுந்த மரியாதையுடன் கவுரவமாகப் பாராட்டப் பட்டனர். ஐரோப்பிய நாடுகளில் இப்போது ஸ்திரீகளுக்குள்ள சுதந்தரமும் கண்ணியமும் எகிப்திய ஸ்திரீகளுக்கு வெகு காலத்துக்கு முன்னமேயே இருந்தது.

செல்வான்கள் வீட்டில் நடக்கும் விருந்தில், விருந்தினர்கள் எழுந்து போவதற்குச் சற்று முன்னால், ஒரு சிறிய பிணப்பெட்டி அவர்கள் முன்னர் கொண்டுவரப்படும். அப்பெட்டிக்குள் இறந்தவனுடைய உருவம் போன்ற பிரதிமை யொன்று வைக்கப்பட்டிருக்கும். அதைத் தூக்கிக்கொண்டு போகிறவன், விருந்தினருக்கு அதைக்காட்டி, “இந்த உருவத்தைப் பாருங்கள்; நீங்களும் இறந்த பிறகு இதனைப்போன்றுவீர். ஆதலால், இருக்கும்வரையில் குடித்துச் சந்தோஷமாக விருங்கள்” என்று கூறிக்கொண்டு செல்வான்.

எகிப்து தேசம் மரியாதைக்குப் பிறப்பிடமென்று சொல்லவேண்டும். ஒருவன் தன்னைக் காட்டிலும் வயதில் மூத்தவன் ஒருவனை வழியில் சந்தித்தால், அவன் செல்வதற்காகச் சற்று ஒதுங்கி நிற்பான். வயதில் முதிர்ந்தவன் ஒருவன் ஓரிடத்துக்கு வந்தால், அங்குள்ள இளையோரெல்லோரும் தங்கள் தங்கள் ஆசனங்களை விட்டெழுந்திருந்து நிற்பார்கள். இத்துடன் அபிமானிகள் நம்பூதிரி ஆசாரத்தை ஒப்பிடவேண்டும். எகிப்தியர்களுள், ஒருவரையொருவர் சந்திக்கும்போது, அவர்கள் பேசுவதில்லை. மிகுந்தபணிவாக முழந்தாள்வரையில் கையைக்கொண்டுபோய் வணங்கிச் செல்வார்கள். வீட்டுக்கு விருந்தினனாக வரும் ஒருவனுக்கு, அவ்வீட்டு வேலையாள் தாமரைப் பூக்களைக்கொடுத்து மரியாதையோடு உபசரிப்பானும்.

வைத்தியத்தொழில் இவ்வாறு பரவிவந்தது. ஒவ்வொரு வியாதிக்கும் ஒவ்வொரு பிரத்தியேக வைத்தியனுண்டு. கண் வைத்தியம்மட்டும் சிலர் செய்வார்கள்; சிலர் தலைக்கு வரும் வியாதியைமட்டும் குணப்படுத்துவார்கள்; வேறு சிலர் பல் வைத்தியம் செய்வார்கள்; இன்னுஞ் சிலர் குடலைப்பற்றிய நோய்களுக்குச் சிகித்ஸை செய்வார்கள். அற்பமான நோய்களைத் தீர்க்க அநேக வைத்தியர்கள் இருந்தனர். (இன்னும் வரும்).

---

## தூக்கம்; அதை எப்படி அடைவது?

ஸ்ரீமான்-என். ராமபத்திர தீக்ஷிதர் அவர்கள்

நாம் தூக்கத்தை உலகவாழ்க்கையின் இரகசியங்களிலொன்றாக மதிக்கலாம். நித்திரை நமக்கு மிகவும் சகஜமாயிருந்தபோதிலும், அதைப்பற்றி யாலோசிக்கும் பக்ஷத்தில் அறியக்கூடாத ரகசியங்களிலொன்றாக ஆகிவிடுகிறது. நம்முடைய வாழ்நாளின் மூன்றிலொருபாகத்தை ஏன் தூக்கத்தில் செலுத்திவிடுகிறோம்? நாமிடைவிடாமல் சுவாசம் விட்டுக் கொண்டிருக்கிறோம்; நம்முடைய தேகத்தில் இரத்தம் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிறது; நம்முடைய இருதயம் நிமிஷம் தவறாமல் வேலை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், இடைவிடாமல் பகுத்தறியும் சக்தியுள்ள மேது மூளைக்கு அமைதி அவசியம் வேண்டும்.

‘தூக்கமென்றா லென்ன?’ என்னும் கேள்விக்கு மனிதர்கள் கோடிக்கணக்கான பதிலுரைக்கிறார்கள். ஆயிரக்கணக்கான புஸ்தகங்கள் தூக்கத்தைப்பற்றி விவரிக்கின்றன. என்றாலும் அதன் ரகசியங்கள் இன்னும் ரகசியங்களாகவேயிருக்கின்றன. அங்க அமைப்பின் அதிசயங்களைச் சோதிக்கிற சில மகான்கள் மூளையில் இரத்தோட்ட வித்தியாசங்களால் நித்திரை வருகிறதென்று கூறுகிறார்கள். சிலர் உதராதிகரணத்தால் தூக்கமுண்டாகிறதென்கிறார்கள். சிலர் மூளைக்கலக்கங்களா லுண்டாகிறதென்று வாதிக்கிறார்கள். மற்றும் சிலர் இரத்த ஓட்டங்களிலுண்டாகும் களைப்பே தூக்கத்திற்குக் காரணமென்கிறார்கள். வேறு சிலர் முக்கிய ஸ்தானங்களிலுள்ள நரம்புகளின் குறுகுதலும் நீளுதலும் காரணமென்று சொல்லுகிறார்கள். தத்துவசாஸ்திரிகள் மூளையின் ஓய்வால் நித்திரை யுண்டாகிறதென்றும், சரீர ஓய்வினால் மூளையின் ஓய்வுண்டாகிறதென்றும் சொல்லுகிறார்கள்.

யார் எவ்விதம் உரைப்பினும் நமக்கு ஒரு விஷயம் நன்றாகத் தெரியும். அது என்னவென்றால்:—நம்முடைய சரீரம், மூளை, முதலிய அங்கங்களின் சுகத்திற்கு நித்திரை அத்தியாவசியம். டாக்டர் மெனகெயின் என்பவர் சில ஜீவஜெந்துக்களைப் பரீக்ஷித்து, ஆகாரம் நமக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நித்திரையுமென்று சொல்லுகிறார். நாம் தூக்கம் வராத இரவுகளின் கொடுமைகளை நன்றாக அறிந்திருக்கிறோம். தூக்கம் கெட்டால் களைப்பு அதிகமாகிவிடுகிறது. எவ்வளவு சமயங்களில் நாம் படுக்கையில் படுத்தபிறகு தூக்கம் வராமல் அங்குமிங்கும் புரண்டும், கண்களை விழித்துக்கொண்டும், மூடிக்கொண்டும், எழுந்திருந்து உட்கார்ந்து கொண்டு மிருந்திருக்கிறோம்? தூக்கம் வாராத சரீரத்தின் அவஸ்தையே அவஸ்தை. தூக்கமடையாமல் கஷ்டப்படும் காலங்களிலுண்டாகும் சின்னங்களைச்சற்றுக் கவனிப்போம். மூளை கலங்கிச் சரியான ஸ்திதியி

ருக்காது. முகம் வேறுபட்டுச் சந்தோஷம், புன்னகை, முதலியன அற்றுப்போயிருக்கும். பேசுவது கடினமாயிருக்கும். பேசவேண்டுமென்று பிரயத்தனப்பட்டால் மிகவும் கஷ்டமாயிருக்கும். சாந்தமுள்ள ஒருமணித் தூக்கத்தை விரும்பினபோதிலும் வாராது.

தூக்கம் வராமையைக்கண்டு சிலர் பயந்து சில கெடுதலான காரியங்களைச் செய்து விடுகிறார்கள். உறக்கத்தை யுண்டாக்கச் சிலர் கஞ்சா உபயோகிக்கிறார்கள். (கஞ்சாவென்ற பதத்தையே விஷமென்று நாம் நினைக்கவேண்டும்.) கஞ்சா முதலிய பதார்த்தங்களை யுபயோகிப்பதால் மூளை கெட்டுப் போய்விடும். கஞ்சாவினால் உலக வெறுப்பும், துக்கமும், தற்கொலையும், இன்னுமனேக கொடிய பாதகங்களும் சம்பவிக்கின்றன.

'உனக்குத் தூக்கத்தின் காலமும், அளவும் எப்பொழுதாவது குறைந்து போய்விட்டதென்று தோன்றுகிறதா? அப்படியானால், உன்னுடைய எல்லாக் கவலைகளையும் ஒழித்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு கடவுளைத் தியானம் செய்' என்று ஓர் வித்தியார்த்தி சொல்லுகிறார். நித்திரை வராவிட்டால் முதலில் என்ன காரணத்தால் வரவில்லையென்று ஆலோசிக்கவேண்டும். அனேகமாய் எமர்ஸன் என்பவர் சொல்லுவதுபோல் "வாழ்நாளின் நடத்தை"களே காரணமாகப்புலப்படும். அனேகர் தங்களுக்கு வந்திருக்கும் வியாதிகளைக் கவனிக்காமலே பெரும்வியாதிகளை வரவழைத்துக்கொள்ளுகிறார்கள். சில வியாதிகளின் காரணங்களை யூகித்தால் மிகவும் சுலபமாயிருக்கும். ஆனால் வியாதிகளைப்பற்றிச் சொல்ல இது சமயமில்லாததனால் நம்முடைய விஷயத்திற்குப் போவோம். நாள் முழுவதும் கஷ்டப்பட்டு வேலைசெய்யும் ஸ்திரீகள் கவலையுடனும், அதிக சிரமத்துடனும் நித்திரை செய்யப்போவதால் அவர்களுக்குத் தூக்கம் எளிதில் வருவதில்லை. இந்தியாவில், புருஷனுடைய கொடுமைகளால் ஸ்திரீகள் நிரம்பக் கஷ்டமடைகிறார்கள். ஓர் வாலிபப் பெண் கணவனுடைய அஜாக்கிரதையினாலும், முட்டாள்தனத்தாலும், புத்தியின்மையாலும் குடும்ப பாரத்தையும், கவலையையும் அனுவசியமாகப் பொறுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அவளுக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கையில்லாமற் போயிற்று. இரவில் கவலைகள் அவளுடைய தூக்கத்தைக் கெடுத்துவிட்டன. இத்தூக்கமின்மையே வியாதியாகி விட்டது. யோசனைக்குறிப்பு, சித்தசக்தி, இவைகளிற் பயின்ற ஓர் வைத்தியர் அம்மாதுக்குத் தைரியத்தை யுண்டுபண்ணி, கடவுளின் மகிமையைக் காட்டி, அவளுடைய துக்கத்தைப் பரிகாரம் பண்ணும் வழிகளைக் கற்பித்துக்கொடுத்துச் சொஸ்தமாக்கினார். பிறகு, அவள் பலமும் வீரியமுள்ளவளாகி குடும்பத்தைச் சகித்து வந்தாள். துக்கத்தினாலுண்டான தூக்கமின்மையும் ஒழிந்தது.

"இன்றிரவு நான் தூங்குவேனா?" என்னும் கேள்விக்குப் பதில் "நான் இப்பகலை எவ்விதம் கழித்தேன்" என்பதுதான். நாள் முழுவதும் பயத்துடனும், கோபத்துடனும் அருவருப்புடனும், துக்கத்துடனுமிருந்தால் இரவில் எப்படி நித்திரைவரும்? நாம் செய்யவேண்டுவதென்னவென்றால், பயம் வந்த சமயத்தில் தைரியப்படுத்திக்கொள்ளவேண்டும்; கோபகாலத்தில் சாந்தமுள்ள மனதைக் கொண்டுவரவேண்டும்; துக்ககாலங்களில் சந்தோஷமாயிருக்கவேண்டும். வெகு அழகுதான்—இல்லாத காரியத்தைக் கொண்டுவர முடியுமா?—அவ்வளவு சக்தியில்லாவிட்டால் புருஷத்தன்மையின் அழகென்ன? இவ்வளவும் மனது சம்பந்தப்பட்டவரையில், தேகசௌக்கியத்திற்கு ஜீரணம் முக்கியமான விஷயம். அஜீரணத்தால் நரம்பு நாடிகள் கலைந்து



மூளையைத் தாக்கித் தூக்கத்தைக் கெடுத்துவிடும். இராப்போஜனம் எப்பொழுதும் லேசாகவிருக்கவேண்டும். கனத்த ஆகாரம் உதவாது. காபித்தண்ணீர், தேத்தண்ணீர் முதலிய நாகரீகக்குடிகளை இரவில் நிறுத்தி விடவேண்டும். இரவில் சாப்பிடத் தகுந்த பதார்த்தங்களை வைத்தியர்களுடைய உதவியினாலுபயோகிக்கவேண்டும்.

இனிமேல், தூக்கத்திற்கு மனது செய்யக்கூடிய உதவியைப் பார்ப்போம். தூக்கத்தின் பரமரகசியமென்னவென்றால் தூங்கவேண்டுமென்று நினைப்பது. ஆகையால், மனதில் எவ்விதக் கவலையும் வரவொட்டாமல் தடுக்கவேண்டும். பள்ளிக்கூடப் பிள்ளைகள் உபாத்தியாயருடைய ரஸமற்ற பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே தூங்கிவிடுவார்கள்; பிரசங்கம் முடிந்தவுடன் எழுந்திருப்பார்கள். நம்முடைய ஸ்திரீகள் இயந்திரத்தில் மாவரைக்கும் பொழுதுண்டாகும் சத்தத்தைக் கேட்டுக்கொண்டேயிருந்தோமானால் எளிதில் நித்திரை வந்துவிடும். சத்தம் நின்றவுடன் விழிப்புக் கொடுக்கும்.

நித்திரையை யுண்டுபண்ணிக்கொள்ள ஆத்மயோசனைக்குறிப்பு செய்து கொள்ளவேண்டும். நாம் திடீரென்று தூங்குவது வழக்கமில்லை. நாம் தூங்கவேண்டுமென்று தீர்மானம் செய்து கொள்ளுகிறோம். சரியான படுக்கையில் படுத்துக்கொண்டு தூக்கத்தைக் கூப்பிடுகிறோம். தூக்கம் வரப்போகிறதென்று நினைக்கிறோம்—தூக்கமும் வந்து விடுகிறது. தூங்கவேண்டுமே யென்கிற பயமே தூக்கத்தைக்கெடுக்கும். இப்பயம் நீங்கினவுடன் நாம் தூங்குகிறோம். ஆகையால், தூக்கமின்மையென்கிற வியாதியைப் போக்க ஆத்மயோசனைக் குறிப்புகள் செய்துகொள்ளவேண்டும். பின்வரும் மந்திரங்களை யடிக்கடி யுச்சரிக்கவேண்டும்:—

"நான் நன்றாய்த் தூங்கவேண்டும்; என்னால் தூங்கமுடியாவிட்டால் நான் அமைதியாகவாவதிருக்கவேண்டும். என் மனது கலங்கக்கூடாது. நான் தூங்கிவிடுவேன்" என்பவை. சுருக்கிச் சொல்லின், நம்முடைய தூக்கம் நம் மனதிலிருக்கிறது. "ஏன் நான் தூங்காமலிருக்கக்கூடாது? ஆகையால், நான் தூங்குவேன். என் மனது சாந்தமாயிருக்கிறது. நான் தூங்கப் போகிறேன். நான் தூங்குவேன். நான் தூங்கிவிட்டேன்." இவ்விதம் மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு இம்மந்திரங்களையுச்சரித்துத் தூக்கமின்மையைச் சொஸ்தப் படுத்திக்கொண்ட ஓர் மாது பின்வருமாறு எழுதுகிறாள். "குழந்தைப் பருவமுதல் நான் நன்றாகத் தூங்கினது கிடையாது. இரவில் எவ்வளவு மெதுவான சத்தமும் என்னை யெழுப்பிவிடும். ஒரு தடவை விழித்துக்கொண்டால் மறுபடியும் நான் தூங்குவதரிது. நான் என்னுடைய சங்கீதத் தொழிலை யாரம்பித்தது முதல் இவ்வியாதியைத் தீர்த்த முயன்றேன். நான் அனேக முறை தூங்க யத்தனித்தபொழுது, உருவல்லாத சொப்பனங்களும், பயங்கரமான காட்சிகளும், என்னைத் தொந்திரவு செய்தன. சில நாட்களில் நான் தூங்கினதே கிடையாது. எப்பொழுதாவது தூங்கினால், விழித்துக்கொண்டவுடன் எனக்குக் களைப்பாயிருக்கும். பிறகு, என் மனதை யுறுதிப்படுத்திக் கொண்டேன். ஆத்மயோசனைகள் கொடுத்துக்கொள்ள ஆரம்பித்தேன். இப்பொழுது, சகஜம்போல் இரவில் எட்டுமணி தூங்குகிறேன்."

தூக்கத்தை வரவழைத்துக்கொள்ள இன்னுமொருவிதமிருக்கிறது. அதாவது, கவிகள், பாகவதர்கள்,* முதலியவர்களுடைய பாட்டுக்களைத் தூங்கும் சமயத்தில் ஒப்பிக்கவேண்டும்.

கடைசியாக, பின்வரும் குறிப்புகள் மிகவும் உதவியுள்ளதாக விருக்கும்:—

1. நாள்முழுவதும் சுகசரீரியாயும், சாந்த

முள்ள மனதுள்ளவனுகவு மிருக்கவேண்டும். அதிக ஆசை உதவாது. எப்பொழுதும் சுத்த ஆகாயமுள்ள விடத்திலிருக்கவேண்டும். குறித்த காலங்களைத் தவிர மற்றகாலங்களில் தூங்கக்கூடாது. இரவே தூங்குவதற்குச் சரியான காலம். பகலில் ஒருபொழுதும் தூங்கக் கூடாது.

2. சாயங்காலத்தில் சிரிப்புள்ள முகத்துடனிருக்க வேண்டும். பண்டித நடேச சாஸ்திரியார் முதலான கனவான்கள் எழுதியிருக்கும் தமிழ் நாவல்களையும், ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகளையும் வாசிப்பது நலம்.

3. பெரிய பட்டணங்களில் அமைதியுள்ள இடங்களகப்படாததால், சத்தமுள்ள விடங்களிலிருந்து பழகவேண்டும்.

4. மருந்துகள் உபயோகித்துத் தூக்கத்தை வரவழைத்துக் கொள்ளும் வழக்கத்தை நிறுத்த வேண்டும்.

5. இவ்வளவு பிரயாசைப்பட்டும் தூக்கம் வராவிட்டால், தூக்க மின்மையிலுங்கூட சந்தோஷமாக விருக்கலாம். "தூக்கம் ஓர் புருவுக்குச் சமானம். அதைப் பின்தொடர்ந்தால் உன்னை விட்டுப் பறந்தோடும். அமைதியாயிரு; புறுவை யிஷ்டப்படி விட்டுவிடு; அது உன்னிடத்தில் வரும்" என்று டியூபோ சொல்லியிருக்கிறார்.

---

நாம் முந்திக் குறிப்பிட்டபடி சென்றமாசம் ராஜப்பிரதிநிதியவர்களிடமிருந்து பர்மியப் புத்தர்களுடைய பிரதிநிதிகள் ஸ்ரீ புத்தபகவானுடைய எலும்புகளைச் சம்புடத்துடன் பெற்றுக்கொண்டார்கள். அக்காலத்தில் அதைக் கண்டுபிடித்தவராகிய பூர்வ விருத்தாந்தி ஸ்ரீமான் மார்ஷல் துரையவர்கள் இது வெளிவந்த புராணத்தை நன்கு விளக்கி, முந்தி அசோகவர்த்தன சக்கிரவர்த்தியவர்கள் எந்த நியாயங்கொண்டு இந்தப் புத்த சின்னங்களை ஆங்காங்கு ஏற்பித்தாரோ, அதே நியாயத்தினுல் இப்பொழுது இந்தச் சம்புடம் பர்மாவில் போய்த் தங்குவது பொருந்தும் என்றார். தக்க மரியாதையுடன் இந்தச் சடங்கு நிறைவேறிற்று.

## வாகன வகைகள்

II. (74-ம் பக்கத்திலிருந்து)

ஸ்ரீமான்-டி. எஸ். வெங்கிடரமணையர், பி.ஏ., எல்.டி.

அற்பசிமீ விஹாரிணியில் தரைமேல் நமக்கு உதவிவருகிற வாகன வகைகளின் பரம்பரையைவிசாரித்தோம். அதினின்றும் இப்பொழுது வாயுவேகமாய்ப் போகிற மோட்டார், ரயில், முதலிய வண்டிகளுக்கு மூதாதைகளாய் முரட்டு வண்டிகளும், முரட்டுச் [illegible]ளும், முரட்டு வழிகளும் இருந்து, ஒவ்வொன்றும் காலக்கிரமத்தில் புத்திமான்கள் சிரமப்பட்டு சீராக்கியதென்றும், இனியும் அவற்றிலுள்ள தோஷங்களை நமது சந்ததியார் நோக்கிக் கொள்ளவேண்டுமென்றும் கண்டோம். இப்பொழுது கடல், நதி முதலிய நீர் வழிகளிலும் அவ்வாறே படிப்படியாய் நாம் அனுகூலமடைந்து வந்திருப்பதை விசாரிப்போம்.

தண்ணீர்மேல் [illegible]சரிசெய்வதென்றும், சாமான்களைக் கொண்டுபோவதென்றும், அது வெகு அபாயகரமான விஷயமென்று நம்மில் சாமான்னியமாய் எல்லோருக்கும், விசேஷமாய் நீந்தத் தெரியாதவர்களுக்கும், தெரியும். ஆகலால், இந்தக்கலையை அபிவிருத்திக்குக்கொண்டுவருவதற்குத் தரைக்குரியவாகனங்களை ஏற்படுத்துவதில் இருந்ததைவிடச் சௌகரியங்கள் அதிகம் வேண்டும்.

முதலாவது நாம் இருக்குமிடம் சமுத்திரம், அல்லது நதி, குளங்கள் முதலியன சேர்ந்தயிருக்கவேண்டும். இதனுல் தான் நமது கவிகளிலொருவர் "கான்யாற் றடைகரை யூரினிது" என்று கொண்டாடுகிறார் போலும். காவேரி போன்ற நதியருகில் ஜனங்களிருந்தால் அவ்விவில் நூற்றுக்கு எத்தனைபேர் நீந்தத் தெரியாமலிருப்பார்கள்? [illegible]ப் [illegible]ன்று குடிப்பதற்குக்கூட நீர் [illegible]



கட்டு மரம்



பழைய பாய்க்கப்பல்



"டிரெட்நாட்" என்னும் பெரிய சப்பல்

மில்லாமல், கைகால்களை மணலால் சுத்தி செய்து கொள்ளவேண்டிய இடங்களில் ஜனங்கள் குடியேறியிருந்தால், அவர்களில் நூற்றுக்கு எத்தனைபேர் நீச்சந் தெரிந்தவர்களாயிருப்பது சாத்தியம்? இந்தக் கேள்விகளுக்குக் குழந்தைகளும் "ரெடி"யாய்ப் பதில் சொல்லி விடுவார்கள்.

இப்பொழுது, காவேரி தீரத்தில் பவானி போன்ற ஓர் ஸ்தலத்தில் ஜனங்கள் இருக்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். குடகுமலையில் பெரிய மழை பெய்கிறது. காவேரி உடனே பெருவாரியாய்ப் பிரவகிக்கிறது. இருகரையிலுமுள்ள செடி, மரம், மிருகாதிகள் எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு வருகிறது. பவானியிலுள்ளவர்கள் காவேரிப் பாலத்தின்மேல் நின்றுகொண்டு வேடிக்கை பார்க்கிறார்கள். ஏதோ ஒரு செல்லரித்த பெரிய மரத்துண்டு மிதந்துபோகிறது. ஒருவன் சொல்லுகிறான், "அடே, இதைப்பிடித்து இழுத்துக்கொண்டுவந்தால், பத்து நாளைக்கு விறகுக்கு ஆக்ஷேபமில்லை"யென்று. உடனே, கைபிடிச்சுவற்றின் மேலேறித்திடீரென்று குதித்துக் கட்டையைப் பிடித்து இழுத்துப் போகிறான். ஆனால் நீரோட்ட மதிகமாதலால் அவனிழுக்க, அதிழுக்க, இந்தத் தகராரில் அவனுக்குச் சீக்கிரம் கைசலித்துப்போய், கரைசேரலாமென்று பார்த்தால் அதுவும் சுலப சாத்தியமில்லாமல், கிருஷ்ணார்ப்பண மாகிவிடும் போலிருக்கிறது. உடனே அவன், கட்டையின்னும் மிதப்பதைக்கண்டு ஏதோ ஆனபடியாகட்டுமென்று அதை யிறுகக்கட்டிக் கொள்ளுகிறான். பிறகு சற்று நேரம் கழித்து நீரலைப்பினால் அவன் மேலும், கட்டை கீழுமாகப் போகிறது. உடனே அவன் குதிரைக்கால்போட்டுக் கட்டைமேல் உட்கார்ந்து கொண்டு, நீர் போகும்வழியே கொஞ்சதூரம் போய், சிறிது சிறிதாகக் கட்டையைக் கையாற் பிடித்துத் தள்ளி அதிர்ஷ்டவசத்தினால் கரைவந்து சேருகிறான். வந்தவுடன் தனக்குப் பிராணாபத்து வந்ததை ஒருவருடன் சொல்லுவது அவமானகரமென்று எண்ணியோ, அல்லது மூக்கறையன் கதையாக இனி யிரண்டொருவர் அவ்வாறே தத்தளித்தால் தான் அவர்களுக்கு யுக்தி சொல்லிக்கொடுக்கலாமென்கிற ஜம்பத்தினாலோ, அவன் ஊருக்குப் போய், இஷ்டர்களுடன், "அடடா, இன்றைய தினம் எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம், காவேரியில் என்னவாகச் சவாரி செய்தேன், அம்மாதிரி உங்களுக்கெல்லாம் கிடைக்குமா?" என்கிறான். அதைக்கேட்டு அடுத்த பிரவாகத்தில் நாலைந்துபேர் இவ்வாறே செய்து தங்களுடைய யுக்தி பலத்தினாலோ, அல்லது முந்தியவனது அனுபவத்தினாலோ தப்பித்துக்கொள்ளுகிறார்கள். இப்படியானதும், நீர்வழி போவதற்குப் படகு ஏற்பட்டுவிட்டதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இப்படி, ஒரு தேசமல்லாமல், கடற்கரை, நதிக்கரையை அடுத்துள்ள பலதேசங்களிலும், ஜனங்கள் அகஸ்மாத்தாகத்தான் இந்த வித்தையைக் கற்றிருக்கவேண்டும். ஒரு மரத்துண்டை நம்புவதைவிட, இரண்டு மூன்றைச் சேர்த்துக் கட்டிவிடுவது நலமென்பது அதற்கு அடுத்தபடியாகத் தோன்றக்கூடிய விஷயம். இதிலும், மீன் முதலியவைகளைப் பார்த்தோ, வேறுவிதமான அனுபவத்தினாலோ, இரண்டு தலையும் குறுகியிருக்கச் செய்துவிடுவது இன்னும் சுலபம். இதற்குக் கட்டுமரம் என்று பெயர். இதைப் படத்தில் காணலாம். பிறகு, உரித்த தேங்காய்மட்டை, மட்குடம், உலர்ந்த சுரைக்காய், முதலியன வெகு நேர்த்தியாக மிதந்துபோவதைக் கண்டோ, அல்லது வேறு யுக்தியினாலோ, இப்படிச் சேர்த்துக் கட்டிய மரங்களைவயிறு தாழ்ந்திருக்கும்படி செய்திருக்கவேண்டும். இதற்குப் பலமுறைகளுண்டு.

உளி முதலிய ஆயுதங்களில்லாதகாலத்தில் கூரிய கற்களைக் கருவிகளாக்கி மரங்களை ஒருபுறம் சதைத்துப் பள்ளமாக்குவதுண்டு. இதைவிட, அமெரிக்கா முதலிய இடங்களில் பழைய நாளிலிருந்தபடி பெரிய மரத்துண்டுகளுக்கு ஒருபுறம் தீவைத்தெரித்து, கரியைச் சுரண்டிப் பள்ளமாக்குவதுமுண்டு. இவ்வாறு செய்து எழுபது, எண்பது பேர்வரையில் இருந்து போகும்படியான பெரும் படகுகளைக் கொலம்பஸ் தான் கண்டதாக எழுதியிருக்கிறார்.

மரமில்லாத இடங்களில், சிறு கொம்புகளையோ, மூங்கில் முதலியவற்றையோ வளைத்துக் கட்டி, அதற்குத் தோல்களைப்போர்த்து அவற்றைப் படகுகளாக்குவதும் சாமான்னியமாய் எங்குங் காணக்கூடியதாம். காவேரி முதலிய நதிப்பிரதேசங்களில் இவைகள் மூலமாய்ச் சாமான்களைக் கொண்டுபோவதும், ஜனங்கள் நதியைத் தாண்டுவதும் நாளதுவரை நடந்து வருகிற விஷயம்.

ஒரேமரத்தை மேற்சொல்லியவாறு பெரிய படகாக்குவதைவிட்டு, பல சிறு பலகைகளை ஒரு முதுகு மரத்திற்கு இருபுறத்திலுஞ் சேர்த்துக்கட்டி, குறுக்காகவும் கொம்புகள் சேர்த்துப் பிகிந்து விடுவதுதான் வெகு நாள் வரை கப்பலென்று வழங்கிவந்த யந்திரம். ஆனால் இது எளிதாகப் போவதற்காக இதற்கு வேறு துணைக்கருவிகள் காலக்கிரமத்தில் சேர்ந்து வந்தன. அவற்றைநாம் சுருக்கி இங்கு விவரிப்போம்.

நாம் மேற்கூறிய சிறு படகுகளையும் நமக்கு வேண்டியபடி போகச் செய்யவேண்டுமானால், அதற்கு ஏதாகிலும் கருவிவேண்டியிருப்பது பிரத்தியக்ஷம். உதாரணமாக, கையை வீசிக்கொண்டு ஓடுவதற்கும், கைகளைக் கட்டிக்கொண்டு ஓடுவதற்கும் வித்தியாசம் உண்டா வென்று குழந்தைகளைக்கேட்போம். உடனே சொல்லிவிடுவார்கள். இரண்டு கைகளையும் வீசிக்கொண்டு ஓடுவது தான் சுலபமென்று. அதுபோலவே, மேலே நாம் அதிர்ஷ்டவசத்தால் காவேரிக்கு அர்ப்பணமாகாமற் தப்பின ஒருவனைப்பற்றிப் பேசினோமல்லவா? அவன் ஆற்றொழுக்கோடு போய்க்கொண்டிருக்கையில் கரையடுத்து வருவதைக்கண்டு, சீக்கிரம் கரையடுக்க வேண்டுமென்று காலாலும் கையாலும் தண்ணீரைத் தள்ளிவிட்டு மரத்திற்குப் போகும் வழி காட்டி இருப்பானாகில், துடுப்பு என்னும் துணைக்கருவி ஏற்பட்டதாகச் சொல்லிவிடலாம். இப்படியே, ஆப்பிரிக்காவில் நீல நதியிலும் மீன்பிடிப்பவன் கட்டைமேல் குதிரைக்காலிட்டு உட்கார்ந்துகொண்டு, வலையை வீசிக்கொண்டே கால்களால் மரக்கட்டையையும் வேண்டியபடி தள்ளிப் போவதுண்டு. இப்பொழுது தையல் யந்திரம் வைத்துக்கொண்டிருப்பவர்கள், தைக்குந் துணியை வேண்டியபடி தள்ளிக்கொண்டே, இரண்டு பாதங்களினாலும் யந்திரத்தைக் கடகடவென்று இயக்கிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோமன்றோ, அதுபோல வென்றறிக. ஆனால் கைகால்களைக்கொண்டே படகுகளை ஓட்ட வேண்டுமானால், அது பெருங்காரியங்களுக்கானதல்ல. ஆதலால் 'மரக்கைகள்' என்று நாம் தாராளமாய்ச் சொல்லக்கூடிய துடுப்புகளென்பவைகளை உண்டாக்கியும், அவை வேண்டாதவிடத்து மூங்கில் முதலிய ஓடக்கோல்களின் உதவியினாலும் படகுகள் வெகுகாலம் ஓடின.

இவ்வாறு படகை ஓட்டுபவர்கள், நனைந்த துணியை ஓடக்கோலின் நுனியில் மாட்டி அதைக் காற்றுக்கு உலரும்படி விட்டதில், அதனால் காற்று அனுகூலமாயிருக்கையில் தங்களுக்குச்சிரமங் குறைந்ததைக் கண்டோ, அல்லது இதுபோன்ற வேறு அனுபவத்தினாலோ, பாயும், பாய்மரமும் உபயோகத்திற்கு



வந்தன. இவ்வளவானபின் மரக்கலங்களைத் திருப்புவதற்கு மீன்களுக்கு வாற்புறத்திலுள்ளபடி "மீகான்" அமைந்தது வெகு சுலபம். அதில் அதிசயமொன்றுமில்லை.

இம்மாதிரி கப்பல்களில் தான் வெகுகாலமாகத் திரைகடலோடி ஜனங்கள் திரவியந் தேடியது. ஆனால், இப்படிப் போய்க்கொண்டிருப்பதில் அனேகருக்கு அனுபவக்குறைவினால் திசைகெட்டு வழிதப்பிப் பாறைகளின் மேல் கப்பல்கள் மோதியும், வேறுவிதத்திலும் பெருத்த நஷ்டமுண்டாகிக்கொண்டே வந்தது. ஆதலால்தான் நாளதுவரை மிகவும் விசனமாயிருக்கிற ஒருவனைக் கண்டால், "என்ன, கப்பல் முழுகிப்போயிற்றா?" என்று கேட்பதும், "கப்பலோடிப்பட்ட கடன் கொட்டைநூற்றுக் கட்டுமா?" என்றும், நம்மவர்களிற் சொல்லிவருவதுண்டு. தவிர, மேனாட்டாரிலும், "கப்பலென்றாலென்ன, வெறும் பலகைகள்தானே; மாலுமிகளென்றாலென்ன, சாமான்னிய மனிதர்தானே," என்றும் வழங்குகிறது.

ஆதலால், கடலில் போகிறவர்களுக்கு ரஸ்தா ஒன்றுமில்லாததுகொண்டு திசையறிவதற்குஓர் கருவி ஏற்படும்வரை அவர்கள் பிழைப்பு வெகு அபாயகரமாகவேதானிருந்தது. இந்தக் கருவியைச் சுமார் 2000-வருஷங்களுக்கு முன் நமது அயலவர்களாகிய சீனர்களும், சுமார் 600-வருஷத்திற்கு முன் மேனாட்டவர்களும், வெவ்வேறு அனுபவத்தைக் கொண்டு கண்டுபிடித்தார்கள். இரும்பைக் காந்தமிழுப்பது வெகு பழைய அனுபவம். காந்த ஊசி தெற்கு வடக்குத் திக்குகளைக் காட்டத்தக்கதென்று உங்களில் பலருக்குத் தெரிந்த விஷயம். இதுவே மாலுமிகளுக்குத் திசையறி கருவியாக ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், காந்த ஊசியினால் வடக்கு நமக்கு நிஷ்கரிஷையாய்த் தெரிந்துவிட்டால் மற்ற திக்குகள் நிஷ்கரிஷையாகி விடுகின்றன. ஆதலால் காற்றின்வழியாகக் கப்பலோடுகையில் நமக்கு வேண்டிய திக்கில் போகிறதா, அல்லது விபரீததிக்கில் போகிறதா வென்பதைக் கண்டறியலாம். இதுவும் நாலுதிக்குகளை மட்டும் காட்டிக்கொண்டிருக்கும்வரை நமக்குப் போகும்வழி நியமமாக ஏற்படாது. ஆதலால், நாலு திக்குகளையும் சில்லரையாகச் சரிபாகங்களாக்கி, 32-திசைகளாக வகுத்திருக்கிறார்கள். ஆதலால், ஒரு கப்பல் போனவழியே மற்ற கப்பல்களும் விசேஷப் பிசகில்லாமல் செல்லுவதற்குச் சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நன்றாய்த்தேர்ந்த மாலுமிக்கும், நன்றாகப் பழகிய வண்டிக்காரனுக்கும் விசேஷ வித்தியாசமேயில்லை. வண்டிக்காரன் எப்படிச் சர்க்கார் போட்டிருக்கும் ரோட்டிலேயே ஓரடி வித்தியாச மில்லாமல் ஓட்டிப்போகிறானோ, அதுபோலவே, மாலுமியும் சமுத்திர முதலிய நீர்ப்பரப்பின் மேல் தவறுதலின்றி ஓட்டிப்போகிறான்.

இவ்வாறு துடுப்புகள் உதவியாலும், காற்றின் உதவியாலும் எத்தனையோ நூற்றாண்டுகளாக வியாபாரமும், கடற்சண்டையும், கடற்கொள்ளையும், நடந்து வந்தன. இம்மாதிரியான கப்பலொன்று கட்டுமரத்திற்கு அடுத்துக்காணுகிறது. என்றாலும், மொத்தத்தில் கடல் யாத்திரை செய்வதென்றால், அது சாமான்னிய ஜனங்களுக்கு வெகு பெருங்காரியமாகவே யிருந்தது. ஏனெனில், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரவேண்டுமென்றால் பழைய நாளில் மூன்று மாதமோ, நான்கு மாதமோ, ஆறு மாதமோ, செல்லும். ஆனால், 19-ம் நூற்றாண்டில் நீராவி யந்திரம் ஏற்பட்டு, அதன் மூலமாய் வண்டிகளை யோட்டலாமென்பது ருசுவாகவே, அம்மூலியமாகக் கப்பல்களையும் ஏன் துரத்தக்கூடாதென்று விவேகிகள் ஆலோசிக்கலானார்கள். பிறகு,

சிறிது சிறிதாக, அம்மாதிரியே செய்யத்தொடங்கி, காலக்கிரமத்தில் மணிக்கு இருபது மைல் வீதம் கப்பல் ஓடுவது சாத்தியமாகியிருக்கிறது. நீராவியைக் கப்பலுக்கு உபயோகிக்கும்படி ஆகவே, பழைய மரக்கலங்கள் அதற்கு உதவாதனவாகி, இருப்புத் தகடுகளால் கப்பல்கள் நிர்மாணிக்கப்பெற்றன.

போர்க் கப்பல்களும் அவ்வாறே இருப்புத் தகடுகளாலாக்கி, பீரங்கி முதலிய சகல யுத்தக் கருவிகளையும் நன்றாயமைக்கப்பெற்று வரவரப் பெரிதாகி வருகின்றன. இப்பொழுது உள்ள பெரிய கப்பல்களுக்கு "டிரெட்நாட்" என்றால் "நிர்ப்பயன்" என்று பெயர். அவை ஒவ்வொன்றும் நிர்மாணிப்பதற்கு எத்தனையோ கோடி ரூபாய்கள் வேண்டும். ஏனெனில், அவைகளுக்குக் கப்பல் என்ற பெயர் உபசாரமேயொழிய, அவை ஒவ்வொன்றும் தண்ணீரில் தெப்பமாடுகிற ஒரு சிறு நகரமென்றே சொல்லவேண்டும். அதிற்போகும் ஜனங்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் அதில் நன்றாயமைந்திருக்கின்றன. அதை விவரித்தால் பெருகும். படத்தில் ஒன்று காட்டியிருப்பதைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

எப்படித் தரையில் வண்டிகள் சிறிது சிறிதாகப் பிரபலமாகி, ரோட்டுகளும் நன்றாயமைந்ததினால் தூர தேசத்திலுள்ள இடங்களுக்குப் போய் வருவதும், சாமான்களை மாற்றிக்கொள்வதும் சுலபமாயிற்றோ, அதுபோல, "கடலைச் சவாரிசெய்ய" வகைகள் ஏற்படுமளவிற்குத் தூரதேசங்களும் ஒன்றையொன்று நெருங்கிவிடுகின்றன. தூரதேச விளை பொருள்களும் கண்காணாத தூரம்போய் மடிகின்றன. ஆதலால், பூப்பிரதக்ஷிணம் செய்வதற்கு இவ்விரு வகைக் கருவிகளும் கூடித்தான் இதுவரையில் உதவி வந்திருக்கின்றன. ஆனால் இனி வருங் காலத்தில் இம்மாதிரிக் காரியங்களுக்கு இவ்விரண்டு சாதனங்களையும்விடச் சிறந்ததாகிய ஒரு சாதனம் இப்பொழுதுதான் நிர்மாணமாகி வருகிறது. வெகுசாய், நமது காலத்திலேயே நமது நாட்டுச் சாமான்னியர்களும் அதைப் பரிசயஞ் செய்துகொள்ள வகை யேற்படும் போலிருப்பதால், அதைக்குறித்து மேலொரு மாதத்தில் விவரிப்போம்.

ஸ்ரீசிருங்ககிரி ஜகத்குரு சுவாமிகள் எட்டடி பாய்ந்தால், ஸ்ரீ ஹம்பி ஜகத்குரு சுவாமிகள் பதினாறடி பாய்வார்போலிருக்கிறது. இப்பொழுது நமது ராச்சியத்திற்கு வடக்கிலுள்ள திபெத் ராச்சியத்தின் அதிபதியாகியும், அவ்விடத்திலுள்ள பௌத்தர்களுக்கெல்லாம் பிரத்தியக்ஷ புத்தனுமாகிய தாலைலாமாவென்பவர் தமக்கு மேலதிகாரியாகிய சீனா சர்க்காருக்கு ஏதோ விரோதமாக நடந்து, அதனாலவர்கள் தூரத்த இந்தியாவில் தஞ்சமாக வந்திருக்கிறார். ஹம்பி சுவாமிகள் நமது ராஜப்பிரதிநிதியவர்களுக்குத் தந்தி மூலமாய்ச் சங்கதி தெரிவித்து, தானும் லாமாவும் கலந்து பேசவேண்டுமென்றும், அதனால் இந்து மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் வெகுநாளாயிருந்துவரும் மூக்கச்சார்பு இல்லாமல் போகவேண்டிய உபாயம் ஏற்படவேண்டுமென்றும், அதற்கு ராஜப்பிரதிநிதியவர்கள் சகாயிக்கவேண்டுமென்றும் கேட்கிறார். அம்மட்டேயல்லாமல், புனாவில் கூடியிருக்கும் மகம்மதியருக்கும் அவர்களுக்கு நாயகரான சத்திரபதி ஆகாகான்பஹதூர் அவர்களுக்கும் ஆசிகள் வழங்கி, அவர்களெடுத்த காரியம் இனிது முடியவேண்டுமென்று தமது பிரார்த்தனை யிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். இதை யெல்லாம் பார்க்கையில் ஏதோ பெரிய உற்பாதம் சமீபித்திருப்பதாகவே காணுகிறது. ஆச்சரியம்! ஆச்சரியம்!!



# புஸ்தகவிமர்சனம்

இரட்டைப்புலவர் சரித்திரம். 'செந்தமிழ்' மறு பதிப்பு. சி. கு. நாராயணசாமி முதலியார். நீஞ்சவைப் பொக்கிஷம். இலக்கம். 3.

இதைப் பார்வைக்கு அனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நோக்கத்தையும், வேறு சிறந்துள்ள லக்ஷணங்களையும் முந்தியே நாம் குறிப்பிட்டிருக்கிறோமாதலால், மறுபடியவைகளை யிங்கு கூறவேண்டுவது அனாவசியம். 'பொய்யா மொழிப்புலவர்' சரித்திரம் போலவே, இதுவும் பதர்ப்பேச்சை வெறுத்து, லக்ஷியத்தைக் கைவிடாது நன்னெறிபற்றிப் போகிறது. கடுதாசி, அச்சுமுதலிய விஷயங்களும் நன்றாயமைந்திருக்கின்றன. ஆனால் இக்காலச்சபைக்கு ஆகாத இரண்டொரு சங்கதிகளைமட்டும் முதலியாரவர்கள் ஒழித்துவிடவேண்டும்.

### பத்திரிகைகளின் வரவு

**மாதாந்தரப் பத்திரிகைகள்.**—பிழைக்கும் வழி, விவேகபோதினி, சக்ரவர்த்தினி, வித்தியாபானு, பிரபஞ்சம், ஹிதகாரிணி, ரஞ்சிதபோதினி, மங்களோதயம்.

**மாதம் இருமுறை பதிப்புகள்.**—இந்து சாதனம் உதயதாரகை.

**வாரப் பதிப்புகள்.**—திராவிட தீபம், நீலலோசினி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, சந்திரிகை, பாண்டியன், திராவிடாபிமானி, சிலாங்கூர் வித்யாபாஸ்கரன்.

**வாரம் இருமுறைப் பதிப்புகள்.**—மைசூர் டைம்ஸ்

# சமாசாரக் குறிப்புகள்

இந்திய ஜனங்களுக்கு ராஜாங்கத்தாரோடு கலந்து தேசக்ஷேமத்திற்காக உழைத்து வருவதற்கு யோக்கியதை வரவில்லை யென்று வாதாடுவது சில ஜனங்களுடையவும், சிலபேர்களுடையவும் விரதம். இவர்களை யுத்தேசித்துக் கனம் ஸ்ரீமான் திவான்பஹதூர் ரகுநாதராயரவர்கள் எழுதுகிறார் :—"ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு மந்திராலோசனை செய்வது நலமென்றும், அதனால் ராஜா பிரஜை இருகக்ஷிக்கும் அனுகூலமே தவிர வேறாகாதென்றும் நாம் நெடுநாளாக வாதித்து வந்தது தற்காலம் வியக்தமானதற்காக எனக்கு வெகு சந்தோஷம். இந்தியா கவர்ன்மெண்டு புதியசட்டநிரூபண சபையையும், அதில் முதன் முதல் நடந்த நடவடிக்கையையும், எல்லோரும் புகழ்கிறார்களே தவிர ஒருவராவது இகழவில்லை. இது என் மனதுக்கு வெகு திருப்தி. ஆதலால் இனியாகிலும் இந்தியர்களைப் பற்றிப் பேசுபவர்கள் வீண்வாதம் செய்யாமலும், வாய்ச்சளுவாக எதை வேண்டுமானாலும் பேசாமலும், பிரிடிஷ் துரைத்தன பக்தியும் அம்மூலமாக இந்தியர்களடையக் கூடிய சித்தியும், அவர்களில் 100-ல் 90-பெயருக்கதிகமாகவே நன்றாக அறிந்திருக்கிறார்களென்றும் நிச்சயம் செய்துகொண்டு பேசவும், எழுதவும் செய்வார்களென்று நம்புகிறேன்" என்று.

***

'கோ ஆபரேஷன்' முறையில் கைத்தொழில்களும் வியாபாரமும், பாங்குகளும் பெருகவேண்டுமென்று நாம் பேசியும், நடத்தியும் வருவதில், அவசரப்பட்டுக் காரியங்களை யாரம்பித்துத் தக்க மனிதர் கிடையாத இடங்களில் சொஸைட்டிகளை உண்டாக்கி "மூன்றேமுக்கால் நாழிகை முத்துமாரியாக"ச் செய்வது நன்றன்று. ஒரு சொஸைட்டி நேராக நடக்கமாட்டாமல் 'தீபாவளி' யாவதில், நூறு சொஸைட்டிகள் தழைப்பதனாலுண்டாகும் நற்பயன் விருதாவாகி விடுகிறது. ஏனெனில், சாமான்னிய ஜனங்களுக்கு நம்பிக்கை வருவதற்கு ஒரே உபாயம்தான். அதாவது காரியக்கேடு வாராமற் பார்த்துப் பிரயத்தனப்படுவதேயாம். 'கேடு' என்றால் அவர்களுக்கு நடுக்கம் பலமாக உண்டாகிறது.

***

கல்கத்தாவில் ஒரு அங்கிலேயச் சிறுபெண் தனக்குவேண்டிய ஒரு குமாரனைக் கல்லியாணம் செய்துகொண்டு சுகமாக வாழ்வதற்கு ஆக்கிரகப்பட்டதில், இருவருக்கும் ஜவேஜு கம்மியாயிருந்ததால், வெறுப்படைந்து, விஷம் வாங்கிக்கொண்டு இறந்துபோவதென்று இருவரும் தீர்மானித்தார்களாம். ஆகவே அவன் அவளுக்கு விஷம் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தான். அதையவள் குடித்து மயக்கமாய்ப் படுத்திருக்க, அடுத்திருந்தவர்கள் சமுசயித்து, அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போய்ச் சௌக்கியப் படுத்தினார்கள். மணமகன் ஒன்றும்

குடிக்கவில்லைபோல் காணுகிறது. ‘தற்கொலை’ என்னும் குற்றத்திற்காக இருவரையும் போலீஸார் சார்ஜு செய்ததில், விஷம் கொண்டுவந்து கொடுத்தவனுக்கு ஒருமாதம் காவல் கிடைத்தது. சுயம்வர பலன் கைமேல் கிடைத்ததுபோலும்.

***

பம்பாயில் ஸ்ரீமான் கரீம்பாய் என்னும் தனவான் 4½-லக்ஷம் ரூபாய் கவரன்மெண்டு அதீனத்தில் விட்டு, தொழிற் பயிற்சிக்கு உதவும்படியான சாஸ்திரங்களை அப்பியசிக்கும் மகம்மதீய மாணுக்கருக்கு உதவும்படியாகவும், மொத்தத்தில் சாஸ்திரப்பயிற்சி விர்த்தியாகவேண்டியும் தன்னுடைய மனோபீஷ்டத்தை விளக்கியிருக்கிறார். கவர்னரவர்களும், அதை வெகு சந்தோஷத்துடன் அங்கீகரித்து, இதற்குச் சமதையான தருமமில்லை யென்றும், இப்படியின்னும் சிலர் செய்வாராகில், பம்பாய் நகரம் சாஸ்திரப்பயிற்சி விஷயத்தில் முதற்பதவியடைந்து விடுமென்றும், உறுதிகூறிச் சர்க்காருடைய திருப்தியை வெளியாக்கினர். இம்மாதிரி இந்த ராஜதானிக்குச் சொல்லிக் கொள்ளக்கூடியது ஏதேனுமுண்டா வென்று யோசிக்கிறோம்.

***

சென்றமீ பம்பாயில் கடைத்தெருவில் அகஸ்மாத்தாகத் தீப்பிடித்து, எத்தனையோ லக்ஷம் விலை பெற்ற சரக்குகளும், வீடுவாசல்களும் வெந்து போயினவாம். நெருப்பை யணைக்க அனேகர் முயன்றும் மூன்று மணி நேரத்திற்கு மேலானதால் நஷ்டம் அதிகமாயிற்றாம்.

***

நமது செகர்டெரியவர்கள் சபையில் சென்ற 1½-வருஷமாக மெம்பராகியிருந்தமகம்மதீய ஸ்ரீமான் சையத் ஹுஸேன் பில்கிராமியவர்கள் தேக அசௌக்கியத்தினுல் விலக நேரிட்டதில், அவருக்குப் பிரதியாக, ஐஸுைகாட் ராச்சியத்தில் திவானுகிய ஸ்ரீமான் மீர்ஜா அப்பாஸ் அலிபைக் என்பவரை நியமித்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இவர் ஷியா மகம்மதீயராகிலும், மகம்மதீயருக்கு இது விஷயத்தில் திருப்திகரமாகவே யிருக்குமென்று நம்புகிறோம். மொத்தத்தில் மார்லிபிரபுவுக்கு இந்து ஒருவரும் மகம்மதீய ரொருவரும் தமது சபையிலிருக்கவேண்டுமென்றே மனமிருப்பதாக இதனுல் வெளியாகிறது.

மதிராசு கண்ணுடிவேலைச் சங்கத்திற்கு உதவியாக மாக்ஷிமை தங்கிய கவர்னரவர்கள் விறகுதானம் செய்திருக்கிறார்களென்பதைக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். இப்பொழுது தான் இவ்விடத்தில் உப்புக்கல்லைப் போல் இரண்டொரு தொழில்கள் ஆரம்பமாயிருப்பதில், வேண்டிய சரக்கில்லாமலும், தொழில் தெரிந்த மனுஷிய சகாயமில்லாமலும், அவைகள் தத்தளிக்கின்றன. இந்தக் கம்பெனியாருக்குத்தக்க மனுஷியரில்லாமல், ஐரோப்பிய தொழிலாளிகளை வருத்தியிருப்பதில் பணச்செலவதிகமாகிறது. அதற்குப் பிரதியாக ஏதோ கொஞ்சம் உதவட்டுமென்று சர்க்கார் 2-ஞ்ருத்திற்குச் செல்லும் விறகில் சுமார் பாதி கட்பை பாரஸ்டுகளில் வெட்டிக்கொள்ள அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இதற்காக நாமெல்லோரும் சந்தோஷப்பட வேண்டியவர்கள்.

***

நமது ஜனங்களுக்கு எப்பொழுதுதான் சுபுத்தியுண்டாகுமோ தெரியவில்லை. ரசவாதிகளென்று பெயர் வைத்துக்கொண்டு தாமிரத்தைத் தங்கமாக்குவதாகப் பிதற்றிப் பேதைகளை யேமாற்றுவோர் ஒரு கூட்டம். இக்காலத்தில் பிருமஞானம் சித்திக்கச் சுலப வழி காட்டுவதாக வெகு புத்திசாலிகளையும் ஏமாற்றி வருபவர் ஒரு கூட்டம். ஸ்ரீ ஜகத்குரு ஆசாரிய சுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள், ‘சடையனும், மொட்டையனும், அப்பளாக் குடுமிக்காரனும், காவித் துணிக்காரனும் ஆகிய பலவித வேஷதாரிகள் வயிறு வளர்ப்பதற்காகத் திரிவதைக் கண்டும் மூடர் அந்தரகசியத்தை அறிகிறதில்லை,’ என்று.

***

இது எக்காலத்திலும் நிஜம் என்று காணுகிறது. சமீபத்தில், திருவனந்தபுரம், கொல்லம் இவ்விடங்களில் யாரோ வேஷதாரி ‘பிருமசுவரூபணீ’ என்று ஒரு சங்கமும், அதற்கு நிஷ்டையும் ஏற்படுத்தியதில்கொல்லத்தில் ஒரு திருட்டுக்கேசில் அகப்பட்டு, அதில் பெரிய உத்தியோகஸ்தரும் சாக்ஷிகளாகி, ஜனங்களுக்கெல்லாம் சிரிப்புக்கிடமாக நடந்துவருவதாக வதந்தி.

சங்கதி தெரியவேண்டும்,



நமது சக்கரவர்த்தினி



நமது சக்கரவர்த்தி

MADRAS

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| புஸ்தகம் I. Vol I. | சாதாரணஹு வைகாசிமாதம் May 1910 | சஞ்சிகை 9 No. 9 |
|---|---|---|

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே."

### மகாராஜச் சக்கரவர்த்தி ஏழாம் எட்வேர்டு அவர்களுடைய மரணம்

1910ஹு மேமீ 7உ காலை 7-மணி 20-நிமிஷத்திற்கெல்லாம் பிரிட்டான்னிய சார்வபௌமத்திற்கு மகாராஜாவாகியும், இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியாகியும் விளங்கிய சத்திரபதி ஏழாம் எட்வேர்ட் அவர்கள் தெய்வகதியடைந்ததாகிய மகத்தான துக்க சமாசாரத்தை அபிமானிகளுக்கு இதனால் அறிக்கையிடவேண்டியாகிறது. பகவத் சங்கற்பத்திற்கு மாறாக யாதொன்றுமில்லையாதலால், இதையும் மற்ற சம்பவங்களைப்போலவே, பிரசாதமாக வாங்கிக்கொள்ளவேண்டியது நமது கடமையென்பதில் ஐயம் சிறிதுமில்லை. என்றாலும், மனுஷ்ய யத்தனத்தில் இவ்வளவு சீக்கிரம் இது நடந்தேறிவிடுமென்று நாமொருவரும் நினைக்கவேயில்லை. சக்கரவர்த்தியவர்களுக்குத் தேக ஸ்திதி கொஞ்சநாளாக நன்றாயில்லையென்று அப்போதைப்போது பிரஸ்தாபமிருந்தது வாஸ்தவமே. ஆயினும் இப்படித் திடீரென்று முடிவு வந்துவிடுமென்று நாம் யாரும் சங்கிக்கவில்லையென்பதும் வாஸ்தவமேயாம். ஆதலால் இந்தச் சங்கதியைச் சாமான்னியமாய்க் கேட்டவரொருவரும் நம்பவேயில்லை. பத்திரிகை மூலமாகவும், சர்க்கார் உத்தியோகஸ்தர் மூலமாகவும் தெரிந்தபின்தான் அனேகர் நம்பினார்கள்.

பெரிய உற்பாதங்கள் தோன்றினால், வெறுமனே போவதில்லையென்று நம்மவருள் பலத்த நம்பிக்கை. ஆகவே ஹாலிதூமகேது இப்பொழுது கொஞ்சநாளாகக் கண்டு வருவதற்குச்சரியானபலன் கிடைத்துவிட்டதென்று அனேகர் வருத்தப்படுவது நமது காதில் விழுந்து வருகிறது. ஆனால் நமக்குமட்டும் இது காரண காரியங்களைச் சம்பந்தித்துப் பேசும் பேச்சாகக் காணவில்லை.

எப்படியான போதிலும் இத்தருணத்தில் சக்கரவர்த்தியவர்களுக்கு முடிவுவந்தது மெத்தவும் துக்கிக்கவேண்டிய விஷயம். பிரிட்டானிய ராச்சிய நியமங்களில் வெகு முக்கியமான இரண்டொரு அம்சங்கள் இப்போது தர்க்கத்திலிருக்கின்றன. கக்ஷி வலுத்து வருகிறது. இத்தருணத்தில் வயது, ஞானம், அனுபவம் ஆகிய முக்குணங்களிலும் சிறந்து விளங்கிய மகாராஜச் சக்கரவர்த்தியவர்கள் ஒருவர் தாம் கக்ஷிகளைச் சமாதானப்படுத்தி, நடுநிலை கோணாமல், எல்லோருக்கும் திருப்தியுண்டாக்கக் கூடியவர்கள். ஆகவே இப்படித் திடீரென்று உண்டான சம்பவம் எல்லாக் கக்ஷியாருக்கும் நஷ்டமென்பதில் சந்தேகமில்லை.

எட்வேர்ட் சக்கரவர்த்தியவர்கள் 1841 ஷூ நவம்பர்மீ 9-தேதி பிறந்தவர்கள். பிறகு காலக்கிரமத்தில் தனது பதவிக்குரிய வித்தைகள் அனேகம் கற்று, தேசாந்தரங்களில் யாத்திரை செய்து, லோக விவகாரங்களை அனுபவத்திலறிந்து, பலவகை உத்தியோகங்களிலமர்ந்து, ராச்சியபரிபாலனக் கிரமங்களை வேண்டியமட்டில் கற்றார்கள். 1863-ம் ஷூத்தில் இவர்களுக்கு விவாகம் ஆகி, 1864-ம் ஷூத்தில் கொஞ்ச காலத்திற்கு முன் இந்தியாவுக்கும், இதர தேசங்களுக்கும் விஜயஞ்செய்து, பிறகு அகாலமரணம் அடைந்த பிரின்ஸ் ஆல்பர்ட் விக்டர் என்ற மூத்த குமாரனும், 1865-ம் ஷூத்தில் அவருக்கு அடுத்து, இப்போது ராச்சியபாரம் வகிக்க வேண்டியவராகிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியும், பிறகு வேறு ஸ்திரீப்பிரஜைகளும் பிறந்தார்கள்.

விக்டோரியா சக்கரவர்த்தினியவர்களுக்குப் பர்த்தாவினுடைய வியோகம் நேரிட்ட பிறகு, தினசரி நடக்கவேண்டிய அனேக காரியங்களுக்கு நமது சக்கரவர்த்தியவர்களும், அவருடைய ராணியுமே முகாமையாக நின்றார்கள். அது முதல், அவர்களுக்கு ராஜகாரியங்கள் இருந்துகொண்டே வந்தன. 1877-ம் ஷூத்தில் அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்ததில், நமது தேசத்திய பட்டவர்த்தனர்களும், மகா ஜனங்களும் எவ்வளவிற்கு அவரை உபசரித்தார்களென்பது இப்போது 45-வயது மேற்பட்ட எல்லோருக்கும் தெரியும். கடைசியாக மகாராணியவர்களுக்கு 1901 ஷூத்தில் மரணம் சம்பவிக்கவே, அந்த ராச்சியபாரம் பூராவும் சக்கரவர்த்தியவர்கள் வகித்து இப்பொழுது ஒன்பதுஷூ மூன்று மாதம் பதினன்கு நாளாகிறது.

ராச்சியபாரம் வகிக்குமுன்னமே எல்லாக் காரியங்களிலும் அனுபவம் வேண்டியமட்டிலிருந்ததால், சக்கரவர்த்தியவர்களுக்கு இந்த ஒன்பது சில்லரை வருஷங்களில் வேண்டாததைச் செய்துவிட்டோமே யென்கிற பச்சாத்தாபம் உண்டாவதற்கு இடமேயில்லை. ஐரோப்பா கண்டத்திலும், அமெரிக்காமுதலிய கண்டங்களிலும், இப்போது அதிகாரம் செலுத்துபவரனைவரையும் அவர்களுக்கு நேரில் பரிசயம் இருந்தபடியால், அந்தச் செல்வாக்கைக்கொண்டு அனேக சண்டை சச்சரவுகளை விலக்கி எங்கும் சமாதானம் பிரபலிக்கச் செய்வது இவர் தமக்கு முக்கியமாகக் கொண்ட விரதம். தமது மகுடாபிஷேகமாவதற்கு முன் டிரான்ஸ்வால் யுத்தம் நின்றுவிடவேண்டுமென்றும், தமது சார்வபௌமத்தில் அக்காலத்தில் எங்கும் பிரஜைகள் தத்தம் அலுவலிலிருந்து க்ஷேமம் விருத்தியாகப் பார்க்கவேண்டுமென்றும் இவர்கள் கோரியதாகத் தெரியும்.

ஆங்கிலேய அரசர்கள் நியமத்திற்கும் ஸ்மிருதிகளுக்கும் கட்டுப்பட்டு ஆளுபவர்கள். அந்தப்படி ஏற்பட்டுள்ள சாஸ்திரங்களுக்கு விரோதமின்றி நடக்கவேண்டிய சகலகாரியங்களிலும் சக்கரவர்த்தியவர்கள் இராப்பகல் ஜாக்கிரதையாகவிருந்து உழைத்து வந்தது யாருமறிந்தவிஷயம். ஆதலால் பழைய காலத்தில் தசரத மகாராஜா சொல்லியபடி, "நாமும் நமது வமிசத்தவர்களுடைய ஸ்மிருதிகளை யனுசரித்துப் பிரதிதினமும், தூங்காமல் சக்தியானுசாரம் பிரஜைகளைப் பாலிப்பதிலேயே கண்ணுயிருந்து வந்திருக்கிறோம்," என்று எட்வேர்ட் சக்கரவர்த்தியவர்களும் தாராளமாய்ச் சொல்லலாம்.



ஒருவிஷயம் நம்மவர்களுக்கு விநோதமாகக் கண்டாலும், இந்த ரகசியத்தை அது நன்கு விளக்கும். அதாவது, சக்கரவர்த்தியவர்கள் இப்போது வெகு வருஷங்களாக க்ஷவரம் செய்துகொண்டதில்லை. மேனாட்டுச் சம்பிரதாயத்தில் தினமும் க்ஷவரம்செய்துகொள்ள வேண்டிவருவதால், அதை நிறுத்திவிட்டு, அம்மூலமாகத் தினம் 10-நிமிஷம்போல் ராஜகாரியங்களுக்காக மீத்துக் கொண்டார்களென்று முன்னொருமுறை நாம் படித்திருக்கிறோம். ஆதலால் ராஜகாரியத்தைத் தம்மாலியன்றமட்டில் நடத்தி வருவதாகத் தீக்ஷைவகித்தார்கள் போலும்!

பலபேச்சுகளால் பிரயோஜனமில்லை. முடிவோ வந்துவிட்டது. மேல் நடக்கவேண்டியதைத் தான் யோசிக்கவேண்டும். அலெக்ஸாண்ட்ரா மகாராணி விசனத்தில் மூழ்கியிருப்பதாகவும், யார் சமாதானம் சொல்லியும் கேட்காமல் கதறுவதாகவும் சமாசாரம். அந்த அம்மைக்கும், இப்போது சக்கரவர்த்தியாகிற மகாராஜா ஐந்தாவது ஜார்ஜ் அவர்களுக்கும், மற்றுள்ள குடும்பத்தவருக்கும் இந்தியாவிலுள்ள நம்மவர்களுடைய அனுதாபத்தை நாம் அறிவிப்பதுடன், நேரிட்ட விபத்தைப் பொறுக்கும்படியான சக்தியைப் பகவானருள்வாரென்றும் நம்புகிறோம்.

நமது புதிய மகாராஜச் சக்கரவர்த்திக்கு இப்போது 45-வயதாகிறது. இராச்சிய தந்திரங்களெல்லாம் கற்றுமிருக்கிறார். ஆதலால் இப்போது நடக்கவேண்டிய பெருங் காரியங்களை அழகாக நடத்துவதுடன், இனி வருங்காலத்திலும் பிரிட்டானியா சார்வபௌமம் செழிக்குமாறு வேண்டிய காரியங்களைக் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து, மகாஜன க்ஷேமத்தையே நாடி, நடத்தும்படியான சக்தியையும், புத்தியையும் ஈசுவரன் நமது புதிய சக்கரவர்த்தியவர்களுக்கு அனுக்கிரகிக்க வேண்டுமென்றும், அவர்களை நீடூழி வாழும்படி பிரசாதிக்கவேண்டுமென்றும் நாம் பிரார்த்திக்கிறோம்.

சாமான்னிய ஜனங்களுக்குள் தாய் தந்தையர் முதலிய பெரியோர் இறந்தால் துக்கங் கொண்டாடுவது முதற்கடமை. அதற்காக நித்திய விதிகள், நைமித்திகங்கள் முதலிய யாவும் நின்றுவிடும். ஆனால் ராஜாக்களுக்கு இது சாத்தியமல்ல. "சிநேகம், தயை, சௌக்கியம் முதலியவைகளையும், வேண்டி வந்தால் இதோ எனக்குப் பிராணபதமாயிருக்கும் சீதையையும், நமது பிரஜைகளுடைய திருப்திக்காகத் தள்ளிவிடச் சித்தமாயிருக்கிறேன். ஆதலால் (க்ஷத்திரிய தருமத்தை முதன்மையாகக் கொண்ட) எனக்கு விசனமேது?" என்று ஸ்ரீராமன் முந்தியொரு காலத்தில் சொல்லியதே இவர்களுக்கு ஏற்ற தருமமாம். ஆதலால் இந்த முறைப்படி மகாராஜச் சக்கரவர்த்தியவர்கள் இறந்ததும், அவர் மகனும், இப்பொழுது நமக்கு மகாராஜச் சக்கரவர்த்தியுமான ஐந்தாம் ஜார்ஜ் அவர்கள் தமது துக்கத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்து, 'பிரிவீ கவுன்சிலர்கள்' என்னும் முதல் வகுப்புப் பிரபுக்களை வரவழைத்து, நடந்துபோனதை அவர்களுக்குத் தெரிவித்து, அது காரணத்தினால் அந்த அதிகாரத்தைத் தாம் வகித்து ராச்சியபாரத்தை நடத்திவரவேண்டியிருப்பதைத் தெரிவித்தார்கள். அம்மட்டேயன்றி, தாம் தமது முன்னோர்கள் ஒப்புக்கொண்ட சகல நியமங்களையும் ஒப்புக்

கொள்வதாகவும், சட்டங்களெல்லாம் கிரமப்படி ஜாரியிலிருக்கவேண்டு மென்றும் பிரசாதித்தார்கள்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் அவர்கள் கிருபைகூர்ந்தருளியது நம்மவர்களுக் கெல்லாம் கேட்க வெகு சந்தோஷகரமானதேயாம். அது வருமாறு:—"நமது தகப்பனாராகிய மாஜிமகாராஜச் சக்கரவர்த்தியவர்களுக்கு இந்தியாவின் க்ஷேமவிஷயத்தில் இவ்வளவு அக்கரையிருந்ததென்று அளவிடுவதற்கில்லை. நாம் அவ்விடம் விஜயம் செய்ததில், நம்முடைய அனுபவத்திலும் இந்திய மகா ஜனங்களுக்குள்ள ராஜபக்தி தெளிவாகி யிருக்கிறது...... ஆதலால் நமது இந்திய சார்வபௌமம் தழைத்தோங்க வேண்டுமென்னும் ஆக்கிரகம் நமக்கு எப்போதும் மேலிட்டிருப்பதுடன், அது விஷயத்தில் மேற்சொல்லிய மாஜிசக்கரவர்த்தியவர்களுக்கும், அவருக்கு முந்தியிருந்த விக்டோரியா சக்கரவர்த்தினியவர்களுக்கும் எப்படி அக்கரையிருந்ததோ, அப்படியே நமக்கும் இருக்குமென்பதை இந்திய மகா ஜனங்கள் அறிய வேண்டுகிறோம்," என்றருளி யிருக்கிறார்கள்.

இதுமட்டுமன்றி நமது சக்கரவர்த்தியவர்கள் முந்தி பிரின்ஸ் ஆப்வேல்ஸ் தரமில் இந்தியாவுக்கு வந்து, திரும்பி இங்கிலாந்து போய்ச் சேர்ந்தபின் பேசியதை இப்போது எல்லோரும் கவனிக்கவேண்டும். அவர் அக்காலத்தில் சொல்லியது:—"இந்திய மகா ஜனங்களுக்கிருக்கும் பொறுமையும், சத்துவகுணமும், ராஜபக்தியும், தெய்வபக்தியும் எனக்கு நன்றாகப் புலப்பட்டிருக்கிறது. நமது ராஜாங்கம் கோல் கோணமல் நடக்குமென்பது அவர்களுக்கு நிஷ்களங்கையாய்த் தெரியுமென்றும் நான் அறிவேன். ஆனாலும், நான் கண்டதையும் கேட்டதையும் கவனிக்குமிடத்து, இந்த ராஜாங்கத்தில் அவர்கள் விஷயத்தில் கருணை யின்னும் கொஞ்சம் அதிகரிக்குமாகில், துரைத்தனம் இன்னும் எத்தனையோ சுலபமாகி விடுமென்று தான் நான் சொல்லவேண்டி வருகிறது. எவ்வளவிற்கு நாம் மகா ஜனங்களுடைய சுகதுக்கங்களுக்குப் பாத்தியப்படுகிறோமோ, அவ்வளவிற்கு அவர்களும் ஒன்று பத்து, நூறாக நம்முடைய சுக துக்கங்களுக்குப் பாத்தியப்படுவார்களென்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். துரைத்தனத்தை நடத்துவதில் அவர்களை யின்னும் கொஞ்சம் நெருங்கவிட்டு, அவர்களுடைய நாணயத்தில் நம்பிக்கைவைத்து, தேச க்ஷேமத்திற்கு வேண்டிய காரியங்களில், அவர்களுக்கும் பொறுப்பு அதிகரிக்கச் செய்வதில், எல்லாக்கக்ஷியாருக்கும் க்ஷேமமல்லவா?" என்றார்.

இதை யனுசரித்துச் சென்ற இரண்டு வருஷகாலமாக நடக்கும் துரைத்தன விமர்சனங்களை எல்லோரு மறிவார்கள். ஆகவே இப்பொழுது தொழில் தெரிந்த அரசன் பட்டத்திற்கு வந்திருப்பதால், இந்தியாவுக்கு ஒரு குறைவுமில்லை யென்று நம்பலாம். நமது சக்கரவர்த்தியவர்களுக்கு இப்பொழுது வயது 45-ஆதலால் இனி வெகுகாலம் அவரையும், அவருடைய ராணியையும், பகவான் அனுக்கிரகித்து, தேசக்ஷேமத்தை முன்னிட்டு உழைக்கவேண்டியதற்கு உதவியான தேகபலம், புத்திபலம் முதலியவற்றை யருளவேண்டி நாம் மனப்பூர்வமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் மாஜி மகாராணியாகிய அலெக்ஸாண்ட்ரா சக்கரவர்த்தினியவர்களுடைய துக்கத்தைப்பற்றிச் சற்று விசாரிப்பது அவசியமாம். நமது மாஜிச்சக்கரவர்த்திக்கு இவர் மனைவியாகி சுமார் 47 வருஷமாகிறது. இவ்வளவுகாலம் 'மருவிய



காதன் மனையாளாகிப்' பிள்ளை பெண்களைப் பெற்று, சுக துக்கங்களை யனுபவித்தவருக்குத் திடீரென்று விபத்துவந்தால் சகிப்பது அரிதென்று சொல்லவும் வேண்டுமா? ஆகவே அவர் அளவற்ற துக்கத்தில் மூழ்கியவராகி, ஆகாராதிகள் வேண்டாமல், வெகு தூரம் அங்கலாய்த்து வருவதாக முதல் சமாசாரம் வந்தது. என்றாலும், அவர் அனுபவசாலியும், வெகு புத்திசாலியுமாதலால், பேச்சுக்கிடங்கொடாமலும், தமது பதவியை மறவாமலும், ஜனங்கள் தமது விஷயத்தில் படும் அனுதாபத்தை யறிந்து இவ்வாறு அதற்குப்பதில் வரைந்திருக்கிறார்:—"எமது அருமைப் பிரஜைகள் எல்லோரும் எமக்கு நேரிட்டவிபத்தைத் தங்களுடையதாகப் பாவித்து இவ்வளவு தூரம் எம்மைத்தேற்ற முயன்றதற்குப் பிரதியாக, எமக்கு மகத்தான துக்கமிருந்தபோதிலும், அதை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, எமக்குள்ள நன்றியை அவர்கள் அறிய வேண்டுகிறோம். எமக்குள்ள பிரபஞ்சமெல்லாம் பிராணபதமான எமது பர்த்தாவுடன் ஒழிந்து போய்விட்டதன்றி, இந்த ராச்சியத்திலுள்ள மகா ஜனங்களுக்கும், உற்றோரிற் சிறந்த பிதாவுக்குச் சமதையான மகாராஜா சடுதியிலிறந்ததனால் பெருத்த நஷ்டம் உண்டாகியிருக்கிறது. இந்தப் போபத்தைப் பொறுத்து நடந்து கொள்ளவேண்டிய பலத்தை நமக்குப் பகவான் அனுக்கிரகிக்க வேண்டும். இப்படிப்பட்ட விபத்தை நாமடைய வேண்டுமென்பது அவருடைய சங்கற்பமாதலால், அது நிறைவேறத்தான்வேண்டும். இனி எமக்குள்ள தசையில் நான் அனுபவிக்கவேண்டிய துக்கங்களைச் சாந்தமாக அனுபவிக்கவேண்டி, அதற்கு அனுகூலமான மனோதிடத்தைப் பகவான் அருளவேண்டுமென்று நீங்களெல்லோரும் பிரார்த்திக்கக் கோருகிறோம். எமதருமை மகனை உங்கள் அதீனமாக்கியிருக்கிறோம். அவருக்குவேண்டியபடி உதவிசெய்து வருவது உங்கள் பாரம். அவரோ தமது அருமைத் தகப்பனாருடைய வழியையே அனுசரிப்பாரென்பதில் சந்தேகமில்லை. ஆதலால் அவர் தகப்பனாரிடத்தில் உங்களுக்கிருந்த பக்திக்குக் குறைவில்லாமல் அவரிடத்திலும் இருக்கவேண்டுமென்று நாம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். எமதருமை மகனும், எமது மருமகளுமே, இந்த மரியாதையை வகித்து இதைத் தக்க வைத்துக்கொள்ள எக்காலத்திலும் அக்கரையுடன் உழைத்து வருவார்களென்று எனக்குத் தெரியும்," என்கிறார்.

இது ஒரு மகாராணி யளிக்கும் உத்தரவல்லவென்றும், கல்வி, விவேகம் முதிர்ந்த பழைய காலத்திய இந்திய தேவிமார்களில் ஒரு பெரிய அம்மை, தம்மைப்போல் ஆணைப்பெண்ணைப் பெற்று, ஆணுடன் பெண்ணுடன் பிறந்து, சுகதுக்கங்களை யனுபவித்திருக்கும் மற்ற குடும்பங்களிலுள்ள பெரியோரிடம் தமது துக்கத்தை விவரித்துப் பிரஸ்தாபிப்பது போலவே அபிமானிகளுக்குக் காணுமென்றும் நம்புகிறோம். ஆதலால் இத்தகைய பெருந்தேவிக்கு நமது சம்பிரதாயப்படி காலக்கிரமத்தில் அக்ஷயமான புண்ணியலோகமும், இங்கு உள்ளளவும் சாந்தமும் கிடைக்கும்படி சருவேசுவரனைப் பிரார்த்திக்கிறோம்.

**மதிராசு சட்ட நிருபண சபை**

சென்ற எப்பிரல்மீ 5உ இந்தச்சபை கூடியதில், வழக்கப்படி கனம் மெம்பர்கள் அநேகம் கேள்விகள் கேட்டுப் பதில் வேண்டினார்கள். இரண்டொன்று மட்டும் நமக்கு விசேஷித்துக் காணுவதைச்

சுருக்கி யுரைக்கிறோம். கும்பகோணம் காலேஜ் விஷயமாக ஒரு கேள்வியிருந்தது. கேட்டவருடைய தாற்பரியம், அந்தக்காலேஜ் பல வருஷங்களாக நல்ல ஸ்திதியில் இல்லையென்றும், அதை முன்னுக்குக் கொண்டுவரப் பிரயத்தனம் நடக்கவேண்டுமென்றும், இருந்ததாகக் காணுகிறது. சர்க்கார் ஒருவகையாக ஜவாபு செய்தார்கள். அதுவும் சரியென்றே காணுகிறது. ஏனெனில், படிக்கும் பிள்ளைகளுடைய சங்கியையில் விசேஷக்குறைவு காணவில்லை. காலேஜ்சிப்பந்தியும் கிரமமாகவே யிருந்து வந்திருக்கிறது. ஆதலால் குற்றங் கூறுவதற்கு இடமில்லையென்பதே.

மற்றொரு கேள்வி கோயமுத்தூரில் நடந்து வரும்செட்டில்மெண்டைப் பற்றியது. சென்ற முப்பது வருஷங்களாக அந்த ஜில்லாவில் நடந்த சமாசாரங்களையும், குடியானவருடைய நயநஷ்டங்களையும், விசாரித்துச்சர்க்கார் இந்த செட்டில்மெண்டு வகையில், நன்செய்க்கு 100-க்கு 15-வீதமும், புன்செய்க்கு 100-க்கு $12\frac{1}{2}$-வீதமும், தீர்வை உயர்த்தலாமென்று அபிப்பிராயப்பட்டதில், கோயமுத்தூர் வட்டத்திற்குக் கனம் மெம்பராக வந்திருப்பவர், இந்த விகிதம் ஏற்பட்டதற்கு விவரம் தெரிய வேண்டுமென்றும், நன்செய் புன்செய் இரண்டிற்கும் ஒரே ரீதியாகத் தீர்வை உயரலாமென்றும் அறிவித்தார். அவருடைய கருத்து இந்த இருவகைப் பூமிக்கும் $12\frac{1}{2}$-வீதம் உயர்வது போதுமென்பதுபோலும். சர்க்கார் இதற்குப் பதிலாக, அகவிலையைச் சுட்டிக் காட்டி, அது 78-ம் வருஷத்திலிருந்ததைவிட 100-க்கு 33-வீதம் நன்செயிலும், 65-வீதம் புன்செயிலுமிருப்பதால், இரண்டிற்கும் 15-வீதம் உயர்த்துவது நியாயமென்றும், ஆனால் புன்செய்க்கு அனாவிருஷ்ட்டி முதலிய உபத்திரவமிருப்பதால், அதற்குக் கொஞ்சம் தாராளமாக விடுவது நலமென்றும் உத்தேசித்துச் செய்ததாகப் பதில் கூறினார்கள்.

வெகு காலமாக மகா ஜனங்களுடைய பக்ஷமாகப் பேசிவரும் நம்மவருக்கும், சர்க்கார் பக்ஷம் பேசிவருபவருக்கும், செட்டில்மெண்டு என்கிற இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஒற்றுமையென்பதே யில்லாமலிருந்து வந்திருப்பது ஒருபெரிய விசேஷம். இதுவரையில் இதற்கு என்ன நியாயமிருந்தாலும், சட்ட நிரூபணசபை விமர்சனமாகிப் பிரதி நிதிகள் பெருத்திருப்பதால், இனியாவது இம்மாதிரி விஷயங்களில் ஒற்றுமை காணுமாறு ஏதாகிலும் சாதனை மேற்பட வேண்டுமென்பது நமது கோரிக்கை.

ஆப்காரி விஷயமாகப் பேசியதில், சர்க்கார் மெம்பராகிய கனம் ஆட்கின்ஸன் துரையவர்கள் இரண்டொரு பெரிய ரகசியங்களை வெளியிட்டார்கள். ஜனங்களுக்குள் குடி அதிகரிக்காமலிருப்பதற்காக ஆப்காரி டிபார்ட்மெண்டார் செய்துவரும் பிரயத்தனங்களை விளக்கிவிட்டு அவர் சொன்னார். "ஒரு சங்கதி பிரத்தியக்ஷம். சுமார் 2000 கள்ளுக்கடைகளும், சாராயக்கடைகளும் இப்போது மூடிக்கிடக்கின்றன. ஆதலால் இவ்வளவிற்குக்கள்ளும், சாராயமும், மட்டுப்பட்டிருக்கின்றன. சர்க்காருக்கும் ரிவினியூ குறையும். என்றாலும், மகா ஜனங்களுக்குள் குடி மட்டுப்படவேண்டு மென்பது நமது ஆக்கிரகமாதலால், கடைகளைச் சுருக்கியே வருகிறோம். ஆனால் 'குடி' யென்னும் துர்வழக்கத்தைச் சட்டமூலமாகத் திடீரென்று நிறுத்துவது யாராலுமுடியாது. இப்போது நாம் செய்து வருகிறபடி குடிப்பவர்களுக்குச் சௌகரியங்களைக் குறைப்பதனால், ஏதாகிலும் நற்பயனுண்டாகுமோ வென்பது காலக்கிரமத்திலறியவேண்டிய விஷயம். ஒரு தோஷம் மட்டும் வளருமென்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதாவது, திருட்டு வியாபாரமாம்," என்று.

திருட்டுத்தனம் அதிகரிக்குமோ, குறையுமோ, நமக்குத் தெரியாது. ஆனால் கள்ளும், சாராயமும், வேண்டிய விடங்களிலெல்லாம், எக்காலத்திலும், எவ்வளவாகிலும், கிடைக்கக்கூடிய அவஸ்தைக்கும், இவ்விஷயங்களிலெல்லாம் நிர்ப்பந்தம் அதிகரித்து வரும் அவஸ்தைக்கும், வித்தியாசம் வெகுவாய்த்தானிருக்கவேண்டுமென்பது நமது பூர்வீகருடைய அனுபவம். பொன், மது, பெண், முதலிய காம்மிய வஸ்துக்கள் கிட்டாமலிருப்பதே விரக்திக்கு முக்கியகாரணமென்பதும் பழைய சித்தாந்தமாம்.



இந்த விஷயமாய்ச் சமீப காலத்தில் பலர் நெல் 'ஒற்றை நாத்து' நடவு பலவிதமாக எழுதிவந்திருக்கிறார்கள். என்றாலும் மதிராசு விவசாய டிபார்ட்மெண்டு கவர்ன்மெண்டு டிப்டி டைரெக்டர் ஸ்ரீமான் ஸாம்ஸன் துரை சமீப காலத்தில் எழுதியதை இங்கு பிரசுரிப்பது யுக்தமாகக் காணுவதால்அப்படியே செய்கிறோம்:—"யாருக்கு நஞ்சை பூமிகளிருக்கின்றனவோ, யார் நெல்லை 'நாத்து' நடுகிறார்களோ, அவர்களெல்லோரும் தயவுசெய்து 'நாத்தை'ப் பிடி பிடியாக நடாமல், ஒவ்வொன்றாக நட்டுப் பார்க்க வேண்டும். கிருஷ்ணா ஜில்லாவில் இது சாதாரணம். அந்த ஜில்லாவில் நெல் விளைவதுபோல் வேறெங்கும் காணுவதில்லை. தஞ்சாவூர், திருநெல்வேலி ஜில்லாக்களிலும் இப்போது அனேகம் பெயர்கள் இவ்வாறு செய்து நற்பயனடைகிறார்கள். சம்பான், பிஷாணம் இந்த வர்க்கங்களிலுள்ள எல்லாத் தினுசுகளும் ஒற்றையாக நட்டால் நல்ல விளைச்சலுண்டாகும். தவிர விதை முதலும், நடவுகூலியும் குறைகிறது. களை, பாசி முதலியன உண்டாகாமல் பார்த்துக்கொள்ளுவதற்கும், ஜலம் தாராளமாகப் பாய்வதற்கும், சௌகரியமுண்டு. விதைப்பாத்தியில் விதை 'விலாசமாக'த் தெளிப்பதால், முளைப்பயிர்கள் வலுத்து வருவதற்கிடமுண்டு. தண்ணீர் தட்டினால் ஒற்றைப்பயிர் கொஞ்சகாலம் கூடியே தாங்கும். பயிருக்கு நோய்விழுவதில்லை. நெல்மணி உறைப்பாகவும், கனம், நீரோட்டம் முதலிய குணங்கள் அதிகரித்தும் காணும். ஆதலால் பதரும், உமிகனமும் குறையும். ஏழு பட்டணம்படி விதையை ஏழு செண்டு பூமியில் விதைத்து, ஒரு ஏகரா நடவு நடலாம். விதை இம்மாதிரி விளைச்சலிலிருந்தே எடுத்து விதைப்பது திறம். 'நாத்துகள்' முற்றிப்போகாமற் பார்த்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக ஐந்து மாதத்தில் விளையும் தினுசை விதைத்து ஐந்து வாரத்திற்குள் நட்டாகவேண்டும். பூமியின் தரம் உயர, உயர, இடையதிகரிக்க வேண்டும். முதல் தரமான பூமிகளில் சுமார் ஒருசாண், அல்லது அதிகமாகவே பயிர் இடைவிட்டிருப்பது நல்லது. முதன் முதல் இந்த முறைப்படி நட்டவர்களைப் பக்கத்திலுள்ளவர் பழிப்பது சகஜம். நட்டவுடன் வயலைப்பார்த்தால் கண்ணுக்குத் திருப்தியாயிராது. என்றாலும் இதனால் குடியானவன் மலைக்கக் கூடாது. பயிர் நன்றாக உறைத்துத் தூறுகட்டியபின் வயலைப்பார்க்க வேண்டும். வெகு திருப்திகரமாக இருக்கும்," என்றார்.

இதற்கு ஓராக்ஷேபமட்டும் நாம் கேட்டிருக்கிறோம். நெல் இந்த முறைப்படி நல்ல விளைச்சல் ஆனாலும், புல் அவ்வளவாகக் கால்நடைகளுக்கு ருசிப்பதில்லை யென்கிறார்கள். ஆனால் நெல்லை நோக்கிப் புல்லையும் கவனிப்பதன்றி, நேர்விரோதமன்று. ஆதலால் இதை எல்லோரும் பரீக்ஷிக்கவேண்டியதுதான். கோயமுத்தூர் அக்ரிகாலேஜில் இவ்விதமாகப் பயிரிட்டதில், நீரோடும் வாய்க்காலில் நட்ட நாற்றொன்று இருநூறு தூறுக்குமேல் விட்டு வளர்ந்துவந்ததில், அதைப் பொட்டகிறுப் பிடித்தார்கள். அதை யிங்கு ஒரு சுமாராகக் காணலாம். அம்மாதிரியே ஒவ்வொரு பயிரும்



நெல் ஒற்றை நாத்துப் பயிர் 200-க்கு மேல் தூறு கட்டியது



தூறு கட்டினால் ஒவ்வொரு பூமியிலும் விளைச்சல் இருபது பங்கு ஆகிவிடும். ஆனால் அது பேராசை. மொத்தத்தில் நெல் மணி நன்றாக ஊறுவதற்கு இதனால் இடமுண்டாவதும், வைக்கோல் தடித்துக் கால்நடைகளுக்குக் கொஞ்சம் மட்டத்தரமான தீனியாவதும் வாஸ்தவம்.

**சேலம் கோஆபரேடிவ் பாங்குகளுக்கு ஆண்டு நிறைவு**

சென்ற மார்ச்சு௴ 19, 20-தேதிகளில் சேலம் கஸ்பாவில் ஒரு பெரிய கோஆபரேடிவ் மீட்டிங்கு நடந்தது. அந்த ஜில்லாவில் கிராமப்பாங்குகள் ஒரு வருஷத்திற்குள் வெகு துருசாகப் பெருகி, இப்பொழுது 82-பாங்குகள் செழித்து வருகின்றன. இவைகளுக்குதவியாகவும், டவுனில் ஏழைகளுக்கு உதவுவதற்காகவும், அர்பன் பாங்கு ஒன்று பெரிதாகிக் கஸ்பாவில் சீராக நடந்துவருகிறது. இவைகளெல்லாம் சென்ற வருஷம் செய்த காரியங்களைப் பரஸ்பரமறிவிக்கும் பொருட்டும், அதனால் பரஸ்பரம் தெரிந்துகொள்ள வேண்டியவைகளைத் தெரிந்து கொண்டு, தோஷங்களை நீக்கி, குணங்களைக் கிரகித்து, நன்மையடையும் பொருட்டும், இவைகளெல்லாவற்றிலுமிருந்து சுமார் 150-பிரதிநிதிகள் வந்து கூடினார்கள். இவர்களில் வழிச்செலவிற்குவகை குறைந்தவர்களுக்கு அந்தந்தக் கிராமப்பாங்குகள், 'செல்லம் வகை'யிலிருந்து பணங்கொடுத்தனுப்பினார்கள். இது மெத்தவும் அங்கீகரிக்கத்தக்கதாம். தருமத்திற்காகவே எல்லாரையும், எல்லா வேலைகளையும் செய்யச்சொன்னால் அது நீடித்து வராதாகையால் 'மாடித்த கூலி மடிமேல்,' என்றநியாயமே இம்மாதிரிக்காரியங்களுக்கெல்லாம் நன்றாய்ப் பொருந்தும்.

இது முதன் முதல் கூடும் பெருங்கூட்டமாதலால், பிரதிநிதிகள் மட்டும் போதாதென்று, வேறு இடங்களிலிருந்தும் இதுவிஷயத்தில் சிரத்தையுள்ள ஸ்ரீமான்களை வரவழைத்திருந்தார்கள். பெங்களூரிலிருந்து மைசூர் சர்க்கார் ரிஜிஸ்திராரவர்களும், சென்னப்பட்டணத்திலிருந்து கனவான்களும், செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயமுத்தூர் முதலிய இடங்களிலிருந்து சிலரும் வந்து கூடினார்கள். கனம் ஜட்ஜி வி. கிருஷ்ண சுவாமி அய்யரவர்கள் சபாநாயகராக இருந்து, இரண்டுமணிநேரம் இந்தியாவில் கோஆபரேஷன் வரன்முறையையும், அதனால் கிராமத்தவர், நகரத்தவர், வியாபாரிகள், குடித்தனக்காரர், தொழிலாளிகள், ஏழைகள் முதலிய சகலருக்கும் உண்டாகிவரும் நன்மையையும், உண்டாகக்கூடிய நன்மைகளையும், விளக்கி இங்கிலீஷிலும் தமிழிலும் பிரசங்கித்தார். இவரன்றி வந்தவர்களில் 14-பெயர் ஓரோரம்சத்தை விவரித்துப் பேசினார்கள். அனேகமாய் இந்தச் சபையில் தமிழே வழங்கி வந்தது ஒருபெரிய விசேஷம்.

சேலம் ஜில்லாவில் இரண்டொரு வருஷத்திற்குள் இந்த முறையில் காரியம் இவ்வளவு தூரம் பிரபலித்ததையும், அதற்குக்காரணராகி அல்லும் பகலும் உழைத்துவரும் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியாருடைய தரும சிந்தையையும் எல்லோரும் புகழ்ந்தார்கள். வந்தவர்களை யெல்லாம் வேண்டியபடியுபசரித்து அனுப்புவதற்காக ஏற்பட்ட கம்மிட்டியார்களும், அவர்களுக்கு அக்கிராசனாதிபதியான, ஸ்ரீமான்-நரசிம்ம அய்யரவர்களும், தங்களைப் பொறுத்தமட்டில் குறைவொன்றுமில்லாமல் நடத்தியதற்காக, எல்லோரும் வந்தனமளித்தார்கள்.

முக்கியமாக இந்த விஷயத்தில் ஒருவருக்காவது சுய நன்மை விசேஷமில்லாததுபற்றி இது ஏழைகளை உத்தாரஞ் செய்வதற்கென்றே ஏற்பட்டதோர் சாதனமாம். இதில் தேசப்பிரயாசை, பணச்செலவு, இவைகளைக் கவனியாமல், இவ்வளவுதூரம் எல்லோரும் ஏகோபித்துக்காரியம் நடத்தியது இந்த ஸ்ரீமான்களு

க்கு எவ்வளவோ புண்ணியகரமென்பதுடன், தேசத்திற்கும் நற்குறியென்று நாம் தைரியமாகச்சொல்லலாம். இவ்விஷயம் நன்ருய் விளங்க வேண்டியே 'மார்னிங்கு போஸ்டு' என்னும் பத்திரிகையிலிருந்து ஒரு வியாஸத்தைச் சுருக்கிக் கீழே யெழுதியிருக்கிறோம். இனியும் வரும்.

எட்டி பழுத்தது

'விஹாரிணி' இரண்டு, மூன்ருவது நெம்பர்களில், 'எட்டிக்கொட்டை' அவர்கள் நமது தேசியச் சரக்குகளை வைத்தியத்திற்கு உதவும்படி இத்தேசத்திலேயே பக்குவப் படுத்த வேண்டுமென்று தக்க யுக்திகளுடன் நிரூபித்தார்களென்பது அபிமானிகளுக்கு ஞாபகமிருக்கலாம். அவர் இதை எழுதி நாலுமாசந்தான் ஆகிறது. இதற்குள் வெகு நாளாகத் தூங்கிக் கொண்டிருந்த இந்த விஷயம் ஜாரிக்கு வந்திருப்பதாகக் கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். 'பிரிட்டிஷ் வைத்திய ரத்னகரம்' என்னும் கிரந்தத்தின் 1900-ஸு த்திய பதிப்புக்கு அனுபந்தமாக 'இந்திய வைத்தியக் கொத்து' ஒன்று சேர்க்கப்பட்டதில், அதில் காணும் யோசனைகளை அனுசரித்து, இனிமேல், குப்பைமேனி, ஆடாதோடை, நிலவேம்பு, மரமஞ்சள், சீந்தில், மிளகரணை, ஓமம், ஏழிலைப்பாகல், வேம்பு, எருக்கு முதலிய தேசியப் பச்சிலைகளிலிருந்து 'புளி' சத்துகள் இறக்குவதற்கு, ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் சௌகரியம் செய்யப்போவதாகவும், அந்தச்சத்துக்களை ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர் மூலமாகவே கிரமப்படி தயார் செய்து உபயோகப்படுத்தப் போவதாகவும் சமாசாரம்.

இதைக்கேட்கவே நமக்கு வெகு சந்தோஷமுண்டாகிறது. சுமார் ஐம்பது வருஷகாலமாக அப்போதைப்போது பேச்சுமாத்திரமிருந்து வந்தும், காரியத்தில் ஒன்றும் காணுமலிருந்த இந்தப் பெரிய விஷயம் இப்போது செய்கைக்கு ஏதோ ஒரு வகையாக வந்திருப்பதைக்கேட்க யாருக்குத்தான் களிப்பு இராது? இந்தமுறை இங்குப் பலத்தால் அதனல் இத்தேசத்திற்கும், இதர தேசங்களுக்கும் கிடைக்கக்கூடிய பலன்களை முன்னமே அபிமானிகள் அறிந்திருப்பதால், அவைகளை மறுபடி பேச வேண்டியதில்லை. மொத்தத்தில் கவர்ன்மெண்டு முறையாக ஆரம்பமானது நமக்குச் சந்தோஷமென்ருலும், அது அத்துடன் நில்லாமல், 'எட்டிக்கொட்டை' யவர்கள் இஷ்டப்படி, நம்மில் யோக்கியதையும், திரவியசகாயமும் இருப்பவர்களில் சிலர் இதைத்தொழிலாக ஆரம்பித்துத் தங்களுக்கும் இதரருக்கும் நன்மையை நாடுவாராக. 'எட்டிக்கொட்டை' அவர்கள் டாக்டர் ஸ்ரீமான் நஞ்சுண்டராயரை உதகரித்துப் பேசினர். அந்த மகானும் ஏதோகாரணம் பற்றி வேலையை ராஜிவைத்து விட்டிருப்பதால், இது நல்ல முகூர்த்தமென்று காணுகிறது. அவரே இதை ஆரம்பிக்கலாம். ஈசுவரானுக்கிரகமும் பூரணமாயிருக்கு மென்றே நம்புகிறோம்.

பள்ளிக்கூடச் சம்பள விகிதம்

சென்றமீ மதிராசு ஹிந்து ஐஸ்கூலில் மாணுக்கருக்குப் பரிசளிக்கும் சந்தர்ப்பத்தில் சபா நாயகராக இருந்த கனம் ஜட்ஜி வி. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் நமது இங்கிலீஷ் பாடசாலைகளில் பிரைமெரி தரபு ஒழிய மற்றுள்ள உயர்ந்த தரபுகளிலெல்லாம் மாணுக்கர் கொடுக்கும் சம்பள விகிதங்களை உயர்த்தவேண்டுமென்று இப்போது டிபார்ட்மெண்டார் யோசித்திருப்பதைக் குறித்துப் பேசியது நமக்கும் சம்மதமாதலால் இங்கு விவரிக்கிறோம். இப்பொழுதிருக்கிறபடி 'சகண்டரி தரபில் ஆகும் செலவிற்கு நூற்றில் அறுபத்தெட்டுவீதம் மாணுக்கர் தரும் சம்பளத்திஞல் கட்டி வருகிறது. மீதிதான் சர்க்கார் வகையில் வரவேண்டும். அதாவது, சர்க்கார் மூன்றிலொருபங்கு உதவ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2- JUL 1910 MADRAS.



அன்னி பிஜாண்டு அம்மாள்



REGISTERED 2 JUL 1910 MADRAS

வேண்டும். இது சரியென்றே நமக்குக் காணுகிறது. தவிர, இப்போது நமூனாவில் காணும் ரேட்டுகளே பூராவாக வசூல் ஆவதில்லை. 100-க்கு 85-வீதமே வசூலாவது. ஆதலால் சம்பளத்தை உயர்த்துவதற்கு இது நன்முகூர்த்தமன்று. இருக்கிற ரேட்டுப்படி பூராவும் சலீசாக வசூலாகுமானால், இன்னும் அதிகமாக்குவதைப் பற்றி யோசிப்பது திறம். சர்க்காருடைய அவசரம் பலவிதமிருக்கலாம். சர்க்காருக்குப் பிரைமெரிதரபில் செலவு வெகு அதிகமாகப் பெருகும். அதற்குப்பணம் வேண்டும். வேறு அனேகபாபத்துக்களில் பணம் வேண்டியிருக்கலாம். அதெல்லாம் வாஸ்தவம். ஆனால் செகண்டரி தரபுக்குப் பணம் குறைப்பதனால் உண்டாகக்கூடிய லாபநஷ்டங்களையும் அவர்கள் கவனிக்க வேண்டும். இருக்கிற ரேட்டுப்படி வசூலாகாததற்கு ஜனங்களுடைய வறுமை காரணமென்று சர்க்காரே ஒப்புக்கொண்டு, உடனே அந்த ரேட்டுகளை உயர்த்துவது சரியன்று. சர்க்காருக்கோ மகா ஜனங்களுக்குள் எல்லா தரபிலும் வித்தை பிரபலிக்க வேண்டுமென்று ஆக்கிரகமேயொழியக்குறைய வேண்டுமென்றில்லை. ஸ்கூல்கள், காலேஜுகள், இவைகளைச் சீர்திருத்தி, நல்ல கட்டிடங்கள், நல்ல தட்டுமுட்டுகள், நல்ல உபாத்தியாயர், இவைகளைத் தேடிவருவதனால், டிபார்ட்மெண்டாருக்கு மகாஜனக் கல்வி விஷயத்திலுள்ள சிரத்தை பிரத்தியக்ஷம். ஆதலால், சம்பளவிஷயத்தில் இவர்களுக்கும் மற்ற கக்ஷியாருக்கும் அபிப்பிராயம் பேதித்தால், சங்கதியைத் தீரவிசாரித்தறியப் பிரயத்தனம் நடக்க வேண்டுமென்பது வியக்தமாகிறது. சட்ட நிரூபணசபையில் இந்தச்சமாசாரம் வியவகரிக்கவேண்டி வருகையில், மேற்சொல்லிய விஷயங்களையும், செகண்டரி தரபில் மாணாக்கர் ங்கியை அதிகரிக்காமலிருப்பதையும், நன்றாக யோசித்துப் பிறகு யுக்தம்போல் செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்றார். இவ்வாறு இவரும், பிற்பட்டுச் சட்ட நிரூபண சபை மீட்டிங்கில் வேறு அனேக கனவான்களும், பேசினார்கள் என்றாலும், சர்க்கார் இது விஷயத்தில் பிடிவாதமாகவே யிருப்பதாகத் தெரிகிறது.

**ஓட்டு வேண்டும் ஆங்கிலேய ஸ்திரீயும் இந்தியாவும்**

‘விஹாரிணியில்’ இரண்டொருமுறை நாம் இந்த ஸ்திரீகளுடைய லக்ஷியத்தையும் அதை யடைவதற்காக அவர்கள் செய்துவருங் காரியங்களையும் குறிப்பிட்டிருக்கிறோமல்லவா? இப்போது சென்ற மாதம் “மாடர்ன் ரிவியூ” சஞ்சிகையில், இவர்களில் ஒரு ஸ்ரீமதி இந்தியாவுக்கு வந்து இவ்விடத்திய ஸ்ரீமதிகளையும், அவர்களுடைய நடவடிக்கைகளையும் பார்த்துவிட்டு ஏதோ தன் மனதிற்பட்டதை யெழுதுகிறாள். இந்தியாவில் சேது முதல் ஹிமாசலம்வரை போய்ப்பார்த்ததில், தன் மனதில் எண்ணியிருந்தப்படியே தான் எல்லாம் அற்புதமாக இந்த அம்மாளுக்குக் கண்டது. மலைகளும், நதிகளும், பிரம்மாண்டமாகக் கண்டது. கோயில் குளங்களும்அப்படியே. கல்தச்சர், தட்டார் முதலிய சிற்பிகளும், அவர்களுடைய வேலைத்திறமும் இன்னும் விசேஷமாக நசித்துப்போகாமலே யிருக்கின்றன. இந்த அம்மாளுக்கு இந்தியரனேகரை இங்கிலாந்திலேயே பார்த்துப் பழக்கமாதலால், இங்கு வந்ததில், அவர்களுடைய குடும்பத்தவரையும் பார்த்துப் பேசி, அவர்களுடனிருக்கச் சௌகரியமுண்டாயிற்று. இந்தியர் நடவடிக்கைகளைத் தானே பார்த்தறிவதற்கு நல்ல சந்தர்ப்பமும் ஏற்பட்டது. ஆதலால் ஸ்ரீமதி சொல்லுவதை நாம் நன்றாய்க் கேட்கவேண்டும். இவர் சொல்லுவதில் நாலைந்து முக்கிய அம்சங்கள் நமது ஸ்திரீகளுக்கு வினோதமாகக் காணும். இந்தியாவென்பது புருஷருடைய நாடு. ஸ்திரீகளுக்கு

வீட்டைவிட்டு வெளியில் வரவேண்டிய காரியமே இல்லை போலும். கடைத்தெருவில், கடைக்காரர், தட்டார், கன்னார், முதலிய சகலரும், அவரவர் வேலைகளையும் செய்துகொண்டு, போகிறவர் வருபவருடன் சம்பாஷணையும் செய்துகொண்டு உல்லாசமாயிருக்கிறார்கள். அதெல்லாம் சரிதான். ஆனால் பெண்டுகளெங்கே? அவர்களுக்கு இவ்விடத்தில் ஒரு காரியமுமில்லையாவென்று கேட்கவேண்டி வருகிறதாம். பெரிய பட்டணங்களில் போனால், வித்தியாசாலைகள் அனேகம் காணுகின்றன. மலைமலையாகக்கட்டடம், அனேகம் உபாத்தியாயர்கள்' உயர்தரப் படிப்பேறிய மாணாக்கர், இவர்கள் வேண்டுமட்டு மிருந்தாலும், இவையெல்லாம் ஆண்பிள்ளைகளுக்கே தவிர ஸ்திரீகளுக்கு ஒன்றுமில்லையென்று தோன்றுகிறதாம். இவ்விடத்திலுள்ளவர்கள், பெண்களுக்கும் புத்தியுண்டென்பதை மறந்து விட்டதாகக் காணுகிறதாம். அது மட்டுமேயல்ல, அவர்களுக்குத் தேகப்பயிற்சி, நல்லகாற்று முதலியவைகளும் அனுவசியமாகிவிட்டது போலிருக்கிறது. ஆதலால், அவர்களுக்குப் புத்திமட்டுமே யன்றி, தேகமும் இல்லையென்று புருஷர் எண்ணி விட்டதாகக் காணுகிறதாம். அவர்களுக்கு மாத்திரம் அன்று, அவர்களுடைய குழந்தைகளுக்கும் அப்படியேதான். ஊரைவிட்டு வெளியே ஏதோ உற்சவம் நடக்கிறது. அதற்குப் போய் வருபவரும் புருஷரே. வீட்டில் வேலைக்காரரும் புருஷரே. இங்கிலாந்தில், எலிமெண்டரி தரபுவரையும் அதிகமாகவும் பாடம் சொல்லுவது, ராஜாங்க விஷயத்தில் உழைப்பது, தருமகர்த்தர்களாகித் தருமகாரியங்களைப் பரிபாலனம் செய்துவருவது, ஆசாரங்களை விமரிசையாக்குவது, முதலிய காரியங்களுக்கெல்லாம் ஸ்திரீகளே முகாமையாயிருப்பதைப் பார்த்த கண்ணுக்கு, இத்தேசத்தில் ஸ்திரீயென்பவள் இவ்விஷயங்களிலுழைக்க 'மருந்துக்குக்' கூட அகப்படுவதில்லை யென்பது பெருத்த அநியாயமாகக் காணுகிறதாம். விசாரித்ததில், இந்தியாவில் ஆண்மக்கள் பிரபஞ்சம் வேறு, ஸ்திரீகளுடைய பிரபஞ்சம் வேறு, என்றும், ஆண்மக்கள், எவ்வளவு நாகரீகமடைந்திருந்தாலும், தமது தாய்மார், சகோதரிகள், பெண்டுகள், ஆகிய இவர்களைச் சமான ஸ்கந்தமாக வைத்து நடத்துவதில்லையென்றும், தெரிந்ததாம். இந்த அநியாயம் இங்கிலாந்து சென்று பரிக்ஷையில் நன்றாகத் தேறி வந்திருக்கும் சமர்த்தருடைய பெண்டுகள் விஷயத்திலும் நடப்பதால், வேறு ஜனங்களுக்குக் கேட்கவேண்டியதில்லை. 'தியாஸபி' வர்க்கத்தில், ஸ்ரீமதிகள் பிளாவட்ஸ்கி அம்மாள், அன்னிபிஜாண்டு அம்மாள் இருவரும் பெண்டுகளென்று, அவ்வருக்கத்தாருக்குத் தெரியும். என்றாலும், காசிப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண்களும் கொஞ்சம். அவர்களையும் வெளியில் காண்பது அரிதாம். இந்த ஸ்ரீமதிக்கு எல்லாவற்றிலும் அதிசயமாகக் காணுவது எதுவென்றால், ஸ்திரீகளுக்குக் கல்வி முதலிய அவசிய சாதனங்கள் இருக்கத்தான் வேண்டுமென்றும், படுதா முதலிய உபத்திரவங்கள் போகத்தான் வேண்டுமென்றும், அவையொன்றும் சாஸ்திரமல்லவென்றும், எல்லாப் புருஷர்களும் ஒத்துக்கொண்டாலும், காரியத்தில் ஒன்றும் காணுவதில்லை யென்பதாம். இப்படிப் பெண்டுகள் விஷயத்தில் ஒன்றும் செய்யாமலிருக்கும் புருஷர்கள், தங்கள் ராஜாங்கத்தைச் சீர்ப்படுத்துவதற்காகவும், அதில் உன்னத பதவி பெறுவதற்காகவும், ஆசாரங்களைச் சீர்படுத்துவதற்காகவும், பேசுவது வியர்த்தமென்று இப்பெருமாட்டிக்குக் காணுகிறதாம்.

ஸ்திரீகள் பெரிய சபைகளில் வந்து நின்று கல்லெறிந்து விளையாடுவது, முக்கிய மந்திரிகளுடன் ரயில்வே ஸ்டேஷனில் மார்கட்டி யுத்



சத்திரபதி ஆர்காட் நவாப் பஹதூர்



தம் செய்வது, முதலிய விசித்திரங்களைப்பற்றி இந்த அம்மாள் ஒன்றும் சொல்லவில்லையென்று சிலர் நினைக்கலாம். ஆனால் அதைக்கொண்டு பிரகிருதத்திற்கு ஒன்றும் ஆகவேண்டிய தில்லை.

**மகம்மதீயக் கல்வியபிவிர்த்தி சங்கம்.**

தென்னிந்தியா மகம்மதீயருக்குள் கல்வி பரவ வேண்டி யுழைக்கும் இச்சங்கம் சென்ற மாசம் திருச்சிராப்பள்ளியில் கூடி வருஷோற்சவம் கொண்டாடிற்று. சத்திரபதி ஆர்காட் நவாப் பஹதூர் வப் சத்தலைவர் அக்கிராசனாதிபதியாகி விஷயத்தை நன்கு விளக்கி இந்துஸ்தானியில் அழுத்தமாகவும், திருத்தமாகவும் பேசினார். மகம்மதீயர் ராஜதானியெங்கும் சிதறியிருப்பதால் அவர்களுக்குள் கல்விபரவவில்லை யென்றும், ஆங்காங்குச் சிறு பள்ளிக்கூடங்கள் உண்டாகிச் செழிப்பதுடன், வடக்கேயுள்ளபடி இங்கும் பெரிய பாடசாலையொன்று ஏற்படவேண்டு மென்றும், மகம்மதீயமதம், ஆசாரம் இவைகளைக் கற்பிக்கவும், தொழில் விஷயமாகப் படிப்பு அதிகரிக்கவும் சாதனங்களமைய வேண்டுமென்று இவர் வெகுதூரம் வற்புறுத்தினார். இவைகளுக்கெல்லாம் திரவியமும் முயற்சியும் அவசியமாதலாலும், குரானில் கல்வியைப்பரவச் செய்வதைவிடச் சிறந்ததருமமில்லையென்றுஹஜரத்நபி அவர்கள் சொல்லியிருப்பதால் அங்கங்குள்ள மகம்மதீயர்கள் முயன்று, திரவியசகாயமும் செய்து தங்களுடைய வர்க்கத்தவரைப்பிரபலத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றும் சொல்லி முடித்தார். காரியம்சத்தில் திருச்சிராப்பள்ளியிலுள்ள கல்விச் சாலைகள் இரண்டொன்றிற்குத் திரவிய சகாயம் கிடைத்தது. வாணியம்பாடியில் பலமாகப் பிரயத்தனம் நடப்பதை யெல்லோரும் புகழ்ந்தார்கள்.

மகம்மதீயருக்குள்ள குறைவெல்லாம் கல்வியைப் பொறுத்ததாகையால், இம்மாதிரி ஆங்காங்குள்ள கனதனவான்கள் அக்கரைப் பட்டுப் பணத்தைப்போட்டு வேலை யாரம்பித்துவிட்டால், காலக்கிரமத்தில் எல்லாமங்களமும் கிடைக்கும். இதர ஜனங்களுடன் மாச்சரியத்திற்கு இடமில்லாமல் நடக்கும் எக்காரியமும் நற்காரியமென்றே தான் நமக்குக் காணுகிறது. இப்போது கண்டுவரும் துர்லக்ஷணங்களுக்கெல்லாம் அறிவின்மையே மூல காரணமாம்.

**தான்னிய கோளங்கள்**

பஞ்சாபிலும், யூனைடெட் மாகாணங்களிலும் தான்னிய கோளங்கள் என்னும் பாங்கு வகைகள் இருப்பதாக முந்திச் சொன்னோமல்லவா? அவைகள் நன்றாய்த் தழைப்பதில்லையென்றும், ஏதோ கொஞ்சம் உயிரிருப்பவைகள் சீக்கிரத்தில் நாணய பாங்குகளாகிவிடுகின்றனவென்றும் வதந்தி. என்றாலும் மதிராசு கவர்ன்மெண்டார் நமது பிராந்தத்தில் இவ்விஷயத்தில் என்ன ஆகக்கூடுமென்று பார்க்கும்படி ரிஜிஸ்திராரை நியோகித்திருக்கிறார்கள். கிராமங்களில் தான்னியங்களைச் சேகரித்து நிதியாக வைப்பதில் அனேக நன்மைகளுண்டு. நன்றாக விளைந்த காலத்தில் குடியானவர்கள் மீத்துவைத்துக் கொண்டு, சிரமதசையில் தங்களுக்குள் வேண்டுபவருக்குமட்டும் லேவாதேவி செய்தால், சாவுகார் எங்குமற்றுப் போகிறார். சுபிக்ஷ காலத்திலும் மாசூல் கைக்குவருமுன் தான்னியம் வேண்டியவர்கள் சுலபமாகப் பெறுகிறார்கள். வியாதியஸ்தர் முதலியோருக்குப் பழைய தான்னியம் தாராளமாய்க் கிடைக்கிறது. யேனாட்டில் ஸ்பானியா, இத்தாலியா முதலிய இடங்களில் இம்மாதிரிப் பாங்குகள் இருந்து செழித்துவருகின்றன. முன்னாளில் நமது நாட்டிலும், ‘குழிகள்’ யதேஷ்டமாகி யிருந்தன. ‘கம்பங்குழி,’ ‘சோளக்குழி’ முதலியவை இன்னும் சில இடங்களிலிருப்பது மெய்யா

ணூலும், அது பாங்கு சம்பிரதாயத்திலில்லை. அவைகள் தழைக்கு மளவிற்கு க்ஷாம காலத்தில் கவர்ன்மெண்டுக்கும், ஜமீன்தாரருக்கும், சிரமம் குறையும். ஜனங்களுக்கும் பரோபகார சிந்தைவளரும். க்ஷாமகாலத்தில் ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குத் தான்னியம் கொண்டு சேர்க்கவேண்டிய அவசரமும் குறையும். ரிஜிஸ்திரார் என்ன செய்வாரோ பார்க்கவேண்டும்.

**கோல்லம் பிர் மசுவரூபிணி கேஸ்**

இதைப் பற்றி முன்னமே கொஞ்சம் சொன்னேமல்லவா? இப்போது எல்லாம் வெளியாகி விட்டது. சுமுகம் அய்யர் துர்முகம் அய்யராக ஆகிவிட்டார். போஸ்டு மேஸ்டர், சூபரிண்டாண்டு இருவரையும் நெல்லூருக்கு மாற்றிவிட்டார்கள். பிர்மசுவரூபிணீ குருவும், அவர் சிஷ்ய ஜனங்களும் சேர்ந்து சென்ற ஒரு வருஷத்திற் கதிகமாகவே ஆடிய திருவிளையாடல்கள் எல்லாவற்றையும், மாஜிஸ்திரேட்டு வாக்குமூலமாகவும், கடிதமூலமாகவும் விசாரித்துத் தீர்மானம் எழுதுவதில் எடுத்து விவரித்திருக்கிறார். சூபரிண்டாண்டு ஸ்ரீமான் ஸ்ரீனிவாசராயர் வெகு புத்திமான். அவர் இப்படி யேமாந்து, ஒரு முட்டாள் கையிலகப்பட்டுத் தன் சம்பாத்தியத்தையெல்லாம் இழந்து, மானத்தை யுமிழந்தது, ஈசுவர லீலையின் மகிமையென்று தான் சொல்லவேண்டும்.

நடந்த சங்கதி சுருக்கமாக இதுதான். 'சுமுகம்' என்பவர் கிருகஸ்தமார்க்கமாக ஜீவிக்க முடியாமல், கடன் தகாதாவில் அகப்பட்டு வருத்தப்பட்டார். என்ன செய்வதென்று யோசித்ததில், 'அம்பாள்' பிரமசுவரூபிணியாகப் பிரசன்னமாகி அவருக்கு மந்திரோபதேசம் செய்தாள். இப்படி எத்தனையோ முறை இதற்கு முன் நடந்து தானிருக்கிறது. அதைக்கொண்டு யாராகிலும் 'கொழுத்த ஜந்துவை'ப்பிடித்து அவரிடத்தில் உள்ளதைக் கவர யத்தனித்தார். முதன் முதல் பட்டணத்தில் ஸ்ரீமான் லாட்கோவிந்த தாஸ் ஜீ அவர்களை வலைபோட்டுப்பார்த்தார். ஆனால் ஈசுவரகிருபையால் அவர் தப்பித்துக்கொண்டார். பிறகு திருவனந்தபுரம் போய், அவ்விடத்திலும், கொல்லத்திலும் மனுஷ்ய ரூபத்துடன் சஞ்சரிக்கிற சில பசுக்களை, ஆண்பெண் சகிதம் பிடித்தார். இந்தக் குருவுக்குச் சிஷ்யர்களைவிடச் சிஷ்யைகள் விஷயத்தில் தான் சிரத்தை அதிகம். தினப் பிரதி இவர்கள் கூடுவதும், குருகையால் 'ஆனந்தரஸம்' வாங்கிக் குடிப்பதும், பிறகு அந்த ரஸ வேகத்தினால் எல்லோருக்கும் ஏகாக்கிரசித்தம் உண்டாகி, மனதை உட்புறமாகத் திருப்பி, ஆசனமிட்டு உட்கார்ந்து, ததேகத்தியானமாக 'அம்பாளை'க்குறித்துத் தபசு செய்வதும் வழக்கமாம். இச்சமயங்களில் குருமட்டும் சிஷ்யைகள் விஷயத்தில் தனக்கிருந்த விசேஷ கிருபையைப் பலவிதமாக வெளியாக்கி வந்தாரென்று ஒரு சிஷ்யை வாக்குமூலத்தில் சொல்லுகிறாள். கடைசியாக, சிஷ்யைகளில் இருவரைத் துணைகூட்டிக்கொண்டு, மதிராசு போய், மேல் நடக்கவேண்டியதை நடத்தக் குரு சுவாமிகள் புறப்பட்டதில்தான் புகார் உண்டாகி இந்த விசாரணை யேற்பட்டு, குரு சுவாமிகளுக்கு நன்னடக்கை ஜாமீன் விழுந்தது.

ஓ இஷ்டமித்திரர்களே, இந்தக் கதை புதிதல்ல. உலகமாரம்பமானபின் எத்தனையோ பெயர் இவ்வாறு வேஷம் போட்டுச் சிலகாலம் கூத்தாடி மறைந்திருக்கிறார்கள். என்றாலும் ஜனங்களுக்குள் அதிபுத்திசாலிகளிலும் ஏமாளிகள் அனேகர், இருந்தேவருகிறார்கள் ஆனால் இதற்கெல்லாம் மூலகாரணம் தனமேயாம். அதில்லாதவர்களை யாரும் ஏமாற்ற வருவதில்லை.

ஞானமார்க்கமோ, பக்ஷிமார்க்கமோ, கருமமார்க்கமோ, எதாகிலும் சரி, சாமான்னிய தருமத்திற்கு விரோதமின்றி யிருக்கவேண்டும். ரகசியமென்று யார் யார் பேசிவந்திருக்கிறார்களோ, அதெல்லாம் கடைசியில் 'குதிரைமுட்டைக்' கதையாகவே முடிந்திருக்கிறது. ஆதலால், ஓ ஜீவர்களே, நீங்கள் இவ்வுலகிலாகிலும் சரி, மறுவுலகிலாகிலும் சரி, நற்கதி வேண்டுவீர்களானால், ரகசியத்தை வேண்டாது, சற்குருவை வழிபட்டு, சன்மார்க்கம் கடினமாயிருந்தாலும், அதையே யனுசரித்து முன்னுக்கு வாருங்கள். அம்பாளுடைய கிருபை பூரணமாக விருக்கும். சந்தேகமில்லை.

சாமான்னிய தருமமென்பது என்ன? உண்மை பேசுவதும், நன்னெறியில் பொருளீட்டுவதும், அதைச் சற்பாத்திரத்தில் விநியோகம் செய்வதும், ஒருவரையும் உபத்திரவிக்காமல், கூடிய மட்டில் நாலு பெயருக்கு உபகாரமாயிருந்து போவதாம். இதுதான் சமுசார சுவரத்திற்குக் கைகண்ட ஔஷதம். ஆனால் இது 'புரைக்கடைக் கீரையாதலால்,' சில கொழுத்த ஜனங்களுக்கு இது மருந்தாவதில்லை. புது மருந்தும், புதுப்பத்தியமும் வேண்டுகிறார்கள். பசுவைப் பால் கறந்து கைசலித்துப்போகிறது. புதுமைக்காக எருத்தைக் கறக்கப்போகிறார்கள். பலன் கைமேல் கிடைக்கிறது. ஈசுவரமாயை அனுதியாதலால், பிரமையென்னும் சக்கரம் உருண்டுகொண்டே வருகிறது. விளக்கைப் பிடித்துக்கொண்டு, இரண்டு கண்களையும் திறந்துகொண்டே கிணற்றில் விழுகிறார்கள். ஏனெனில் கொழுத்தவர்களுக்கு அதுதான் ரஸமாகக் காணுகிறது.

---



## பரோபகாரம்—ஸ்திரீகளின் கடமை

ஸ்ரீமதி சிவகாமி யம்மாள்

முன்னொரு சஞ்சிகையில் கல்வியினால் புத்தி விசாலமாகிறதென்றும் அந்தப் புத்தி விசாலத்தால் பரோபகாரச் சிந்தை உண்டாகிறதென்றும் விஸ்தரித்திருந்தது. இவ்விதமாகப் பிறர் நன்மைக்காக இந்தியாதேசத்தில் பாடுபடுகிற சில ஸ்ரீமதிகளைப் பற்றி எனக்குத் தெரிந்தமட்டும் கொஞ்சம் இச்சமயத்தில் சொல்லுகிறேன்.

முதலாவது, மிஸ்ஸஸ் அன்னி பெசண்டு என்னும் ஆங்கிலேய மாது சிரோன்மணியைப் பற்றிக் கேட்காதவரில்லை. இந்த அம்மை முதலில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர். அந்த மதத்தில் நம்பிக்கை இல்லாமல் ஏறக்குறைய 20-வருஷகாலம் நாஸ்திகராயிருந்தார். என்றாலும் அக்காலத்திலும் சார்லஸ் பிராட்லா என்பவருடன் சேர்ந்து இங்கிலாண்டில் ஏழைஜனங்களுக்காக அதிகமாக உழைத்து வந்தார். அப்புறம் நாஸ்திக மதத்தினால் மனதுக்குச்சமாதானம் உண்டாகாமல், இந்து மதத்தைக்கற்று அதில் பற்றுண்டாகி சென்னை அடையாரில் ஸ்தாபித்திருக்கும் தியாஸோபிகல் ஸொஸைடியை (பிர்ம்மஞான சபையைச்) சேர்ந்து இந்தியாவின் ஜனங்களுக்காகச் சென்ற சுமார் 20-வருஷங்களாக உழைத்து வருகிறார்.

இந்தியாவில் முதல் முதல் இங்கிலீஷ் கலாசாலைகளில் படித்தவர்களும், முக்கியமாய் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களில் வித்தியாப்பியாசம் பெற்றவர்களும், தங்கள் புராதன ஆரிய மதத்தில் சிரத்தை குறைந்தவர்களாய், ஏறக்குறைய நாஸ்திகர்களாகவே அநேகம் பேர்களிருந்தார்களென்று சொல்லலாம். பிறகு காலக்கிரமத்தில் கர்னல் ஆல்காட், மாடாம் பிளாவெட்ஸ்கி என்னும் பெரியோர்கள் ஸ்தாபித்த தியாஸபிஸௌஸைட்டியில் அநே

கம் இந்துக்கள் மெம்பர்களாகி ஏதோ ஒருவாறாக மதப்பற்றுள்ளவரானார்கள். ஆனால் மிஸஸ் பெசண்ட் அம்மாளுடைய பூர்வ விருத்தாந்தமும், அதிசாதுரியமான பிரசங்கங்களும் கூடி, நாஸ்திகர் ஆகிக்கொண்டும் ஆகக்கூடியவும் இருந்த அநேக இந்துக்களைத்தங்கள் மதத்தைக்கவனிக்கும்படி தூண்டின. இப்பொழுது நம்மவரில் அனேகர் புராதனமான ஆரிய மதத்தில் குருட்டு நம்பிக்கை விலகி ஆங்கிலேயர் சாஸ்திரப்படி ஆராய்ச்சி செய்து திட நம்பிக்கை கொண்டவர்களா யிருக்கிறார்கள்.

இந்த அம்மை இந்தியாவிற்கு வந்து பாடுபட ஆரம்பித்ததின் பிறகு சம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்ட நமது சாஸ்திரங்களை ஆங்கிலம் கற்றவர்கள் கவனமாய்ப் படித்துவருகிறார்கள். இந்த அம்மையினுடைய செல்வாக்கினாலும், சாமர்த்தியத்தினாலும் ஸ்ரீகாசியில் ஒரு ஹிந்துகாலேஜ் ஸ்தாபிக்கப்பட்டு வெகு விமரிசையாய் நடக்கிறது. இதில் பாலர் வகுப்புமுதல் எம். ஏ. பரீக்ஷை வரைக்கும் மற்ற கலாசாலைகளைப் போல் கல்வி கற்றுக்கொடுப்பதுடன், சனாதன தருமத்திற்குரிய மத சம்பந்தமான பாடங்களும் நடக்கின்றன. ஐரோப்பிய மாதாவா யிருந்தாலும் இந்தியர்கள் க்ஷேமத்தைக் கருதி இந்த அம்மாள் பாடு படுகிறவிதமாய் இந்தியர்களில் ஒருவராவது சிரத்தை யெடுத்துக்கொண்டதாக இல்லை. மற்றநாகரீக தேசங்களைப்போல் இந்தியாவும் நல்ல நிலைமைக்கு வரவேண்டுமானால் பெண்கல்வி தான் அதற்கு முக்கியமான சாதனமென்று இவர் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். ஸ்ரீகாசி காலேஜில், கல்யாணம் ஆகியிருக்கும் பையன்களைக் கீழ்வகுப்பில் சேர்ப்பதே இல்லை. மேல் வகுப்புப் பையன்களில் விவாகமானவர்களுக்கு இரட்டைச் சம்பளம் விதித்திருக்கிறது. இதனால் பாலிய விவாஹத்தை நிறுத்த வேண்டுமென்பது அவருடைய முக்கியகருத்து. இந்த அம்மாளை இப்போது இந்தியாவின் க்ஷேமத்திற்காகவும் பரோபகாரத்திற்காகவும் பாடு பட்டுழைக்கும் ஸ்ரீமதிகளில் முதல் பதவி பெற்றவர் என்று சொல்லலாம்.

ஆங்கிலேய ஸ்திரீகளில் கிறிஸ்தவ மிஷினரி ஸ்திரீகள் கிறிஸ்து மதத்தில் நம்பிக்கைகொண்டவர்களாய் கிறிஸ்துவின் பெயரை முன்னிட்டுச் சௌகரியக் குறைவுடன் இந்தியப்பெண்களுக்குப் பள்ளிக்கூடங்களும் வைத்தியசாலைகளும் நியமித்து யாதொரு லாபத்தையும் எதிர்பார்க்காமல் உழைத்து வருகிறார்கள். சென்னையில் ராயபுரம் மிஷனாஸ்பத்திரியிலுள்ள டாக்டர்களையும்,குண்டூர்,வேலூர்,ஜம்மலமடுகு, மதுரை,கோயமுத்தூர்முதலிய ஊர்களிலுள்ள மிஷனாஸ்பத்திரியிலுள்ள லேடி டாக்டர்களைப் பற்றிப்புகழாத ஜனங்கள் இடையாது. பரோபகார சிந்தனைக்காகவே இவர்கள் இப்படிப் பாடுபடுகிறார்கள் என்பது என் எண்ணம். இவர்கள் கிறிஸ்து மதத்தைப் பரவச் செய்வதற்காக இவ்விதம் கஷ்டமெடுத்துக்கொள்கிறார்கள் என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அப்படியிருப்பதாக ஒப்புக் கொண்டாலும் அவர்கள் உழைப்பின் பலனை நாமே அனுபவிக்கிறோம். ஐரோப்பிய, அமெரிக்க மாதர்கள் உன்னதப் பரீக்ஷைகள் கொடுத்துச் சொற்ப சம்பளத்தில் தங்கள் நாட்டைவிட்டு இந்து ஸ்திரீகளுக்காகத் தரும ஆஸ்பத்திரிகள் நடத்துகிறார்களே ஒழிய, இந்து ஸ்திரீகள் தங்கள் சகோதரிகளுக்காக ஆஸ்பத்திரிகளாவது பள்ளிக்கூடங்களாவது ஏற்படுத்தி இருக்கிறார்களா?

இப்பொழுது ஐரோப்பிய மாதர்கள் தங்கள் தேசத்தைவிட்டு அயல் நாட்டில் பாடுபடுகிற விதமாக, தங்கள் இனத்தாருக்காக உழைக்காத நம்மவர்கள் ஆப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்குப்போய் அங்குள்ள



ஜாதியாருக்கு வேலை செய்ய ஒப்புக்கொள்ளுவார்களா? பரோபகாரச் சிந்தை என்பது நம்மிடத்தில் குறைவு என்பதும் கிறிஸ்தவமிஷன் துரைசானிகளிடத்தில் அந்தச் சிந்தை அதிகமென்பதும் நாம் அறியவேண்டியது முக்கியம். நாம் அவர்களுக்கு அநேகவிதமாய்க் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் இந்தியாவில் எக்காலத்திலும் இப்படியேயிருக்கவில்லை. புத்த சன்னியாசிகளும், பரிவிராஜிகைகளும் இவ்வாறே பழைய காலத்தில் தங்கள் கஷ்ட சுகங்களை மறந்து, லங்கை, சீனா முதலிய தேசங்களுக்குப் போய் மனிதர், மிருகம் முதலிய அனைவற்றிற்கும் சுகம் தேடியுழைத்தார்களல்லவா? அந்தத் தருமசிந்தை பிற்காலத்தில் எங்கு போயிற்று? அதை மறுபடி வரவழைப்பது அவசியமா, அனாவசியமா என்று விவேகிகள் சொல்லட்டும்.

சென்னை ராஜதானியில் பிறர் நன்மை என்னும்நோக்கத்துடன் ஸ்திரீகள் ஸ்தாபித்திருக்கும் சாலைகள் கொஞ்சம் தான். அநேகமாய் இல்லை யென்றே சொல்லிவிடலாம். இதர ராஜதானிகளிலோ இவ்விஷயமாய் அநேகம் சபைகள் ஏற்பட்டு, இந்து ஸ்திரீகளுக்கு நன்மை கிடைத்து வருகின்றன. கல்கத்தாவில் பிரும ஸமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீமதிகள் புதிய நாகரீகம் அடைந்தவர்கள். அவர்களால் அநேகம் பெண்கலாசாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் முக்கியமாய் பி. ஏ. வகுப்பு வரைக்கும் கற்றுக்கொடுக்கும் போதன காலேஜு என்று ஒரு கலாசாலை வெகு காலமாய் நடந்து வருகிறது. அதில் உன்னதப் பரீக்ஷைகள் தேறின மாதர்கள் அநேகம் பேர் பரோபகாரமாய் உழைக்கிறார்கள்.

பம்பாயில் புதிதாக ஸேவாஸாதனம் என்று ஒரு சபை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பதத்திற்கு, ‘ஊழியம் செய்கிறவர்கள் வீடு’ என்று அர்த்தம். இதில் வேலை செய்பவர்களுக்கு, (ஸிஸ்டர்ஸ் ஆவ் மெர்ஸீ) ‘கருணையுடன் பாடுபடும் சகோதரிகள்’ என்று பெயர். உன்னதப் பதவியில் ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்த காலஞ்சென்ற மகாதேவ கோவிந்த ரானடே என்பவருடைய மனைவியாகிய ஸ்ரீமதி ராமாபாய் ரானடே என்னும் அம்மாள் இதில் ஒரு சகோதரி. சென்ற வருஷம் திடீரென்று இறந்து போன மிஸ் கிளார்க்கு என்னும் ஐரோப்பிய பால்லியப்பெண் இந்த ஸேவாஸாதனத்தில்உழைத்து வந்தவர். இவர் இப்போது பம்பாய்க் கவர்னராயிருக்கும் கனம் ஸர் ஜார்ஜு கிளார்க்கு என்பவருடைய ஒரே குமாரத்தி. இச்சகோதரிகள் கவனிக்கும் விஷயங்கள் பலவகைப்படுவன.

1. வியாதியினால் பீடிக்கப்பட்ட கோஷா ஸ்திரீகளை எவ்வளவு கீழ்ச்சாதியாக இருந்தாலும் கவனியாமல், அவர்கள் வீடுகளுக்குப் போய் அவ்வீடுகளைச் சுத்தம் செய்து அவர்களுக்கு வைத்தியம் செய்து வருவது ஒரு தருமம்.

2. ஆதரவில்லாமல் புருஷர்களால் கைவிடப்பட்ட பெண்களிற் சிலர், வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்தும், வஞ்சகர்களான சில கொடியவர்களுடைய வலையி லகப்பட்டும், கெட்ட வழியில் இறங்கி நாசமாகிப் போகிறவர்களை, நல்ல வழிக்குத் திருப்பி மீட்பது மேற்படி சகோதரிகளின் மற்றொரு பெரிய தருமம்.

3. மதுபானம் பண்ணித் தன் வயிற்றில் பிறந்த குழந்தைகளைக் கூட லக்ஷியம் பண்ணாமல் தேகம் மறந்து, தெருவில் புரண்டு கிடக்கும் ஆண் பெண் குடியர்களையும், வெறியர்களையும் பாதுகாத்து அவர்களை நல் வழிக்குக் கொண்டு வருவது இன்னொரு தருமம்.

4. திக்கற்ற குழந்தைகளைக்கண்டுபிடித்து, அவர்களுக்கு நல்ல உணவும் உடையும் கொ

டுத்து ரக்ஷித்து, அவர்களுக்குத் தகுந்த கல்வி கற்பித்து வருவது பின்னும் ஒன்று. இவ்வித வேலைகளைச் செய்கிறவர்களில் சிலர் பணக்காரர்களாயும், பலர் ஏழைகளாயும், சிலர் இவ்வேலையுடன் குடும்பத்தை வகிக்க வேண்டியவர்களாயு மிருக்கிறார்கள். இம்மாதிரி நடக்கும் வேலைக்குப் புருஷர்களுடைய திரவிய முதலியஉதவி கொஞ்சமிருந்தாலும், சரீரத்தால் உழைப்பவர்கள் ஸ்திரீகளே. தென்னிந்தியாவில் இவ்விதச்சபை உண்டா? இல்லையென்றால், ஏனில்லை?

புனாவில் பெற்கூசன் காலேஜு என்று ஒரு இந்து வித்தியாசாலை இருக்கின்றது. அதில் கற்பிக்கும் உபாத்தியாயர்களெல்லாம் மகா வித்துவான்கள். ஆனால் அவர்கள் எல்லாருக்கும் சொற்பச்சம்பளம். இப்போது வெகு காலமாய் ராஜப்பிரதிநிதி சபையில் முக்கிய மெம்பராயுள்ள கனம் கோபால கிருஷ்ண கோகலே என்பவர் இந்தக் காலேஜில் ஒரு உபாத்தியாராக இருந்தவர். அதே காலேஜில் (கர்வே) என்று இன்னொரு போதகர் உண்டு. இவரும் இவர் மனைவியுமாகச் சேர்ந்து இந்து விதவாகிரகம் (அநாத பாலிகாசிரமம்) ஒன்று சில வருஷங்களுக்கு முன் ஸ்தாபித்தார்கள். அதில் கற்றுத் தேறினவர்களிற் சில ஸ்ரீமதிகள் இப்போது அந்தக் கலாசாலையை நடத்தி வருகிறார்கள். ஸ்ரீமதி காசிபாய் தேவதார் என்னும் ஒரு அம்மாள் தென்னிந்தியாவில் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் பொதுவாகப் பிரசங்கங்கள் செய்து, இந்தக் கலாசாலைக்குப் பொருள் சேகரித்தது அநேகருக்கு ஞாபகத்தில் வரும். இவ்விதமே ஒருவர்மாற்றி மற்றொருவராக இந்தியா முழுவதும் பரிவிரஜனம் செய்து பொருள் சம்பாதித்துக் கலாசாலையை நடத்துகிறார்கள். சில மாதர்கள், ஆயிரம் பதினாயிரமென்று இக்கலாசாலைக்குப் பரிசு கொடுத்திருக்கிறார்கள். சில கைம்பெண்கள் தங்கள் திரவியத்தை எல்லாம் கலாசாலைக்குத் தானம் செய்துவிட்டுக் கலாசாலையில் தாங்களும் உழைத்து வருகிறார்கள். இங்கே அனேகமாய்க் கைம்பெண்கள் மாத்திரம் படிக்கிறார்கள். சிலருக்கு அவர்களின் உறவினர் மாதமாதம் செலவுக்கு அனுப்புவதுண்டு. அவரவர்களுக்குத் தகுந்தபடி கல்வி கற்பிப்பதுடன், இந்துமத விஷயமாகவும் பாடங்கள் உண்டு. பம்பாய் ராஜதானியிலுள்ள அநேக ஸ்திரீகள் தங்களாலானமட்டும் திரவிய சகாயம் செய்வதுடன், தங்கள் நிலங்களிற் பயிராகும் கோதுமை, பழவர்க்கங்கள், சர்க்கரை முதலிய வஸ்துக்களைப் பரிசாக அனுப்புவதுண்டு. சிலர் புடவை ரவிக்கைகளும் அனுப்புவார்கள். வேறு சிலர் சிற்றுண்டிகள் செய்து தாங்களே கொண்டு வந்து கொடுப்பார்கள்.

தென்னிந்தியாவிலுள்ள பாலிய விதவைகளை இம்மாதிரி கல்வி கற்கும்படி நாம் ஏன் பிரயத்தனம் பண்ணக்கூடாது? பம்பாய் புனாவில் இருப்பவர்களும் இந்தியர்களே. அவர்களால் செய்ய முடிந்தது, சென்னைராஜதானியில்உள்ள நம்மால், முக்கியமாய்த் தமிழ்நாட்டாரால், ஏன் செய்யமுடியவில்லை? நமக்குள் ஒற்றுமை இல்லாமலும், ஜனங்களுக்குள் பரஸ்பரம் நம்பிக்கையில்லாமலுமிருப்பதுதான் நமது கடமையை நாம் நிறைவேற்றக் கூடாமலிருப்பதற்குக் காரணமாகும். இருந்தாலும் இதற்கெல்லாம் மூல காரணம் கல்விப்பயிற்சிக் குறைவேதானென்று இன்னொருதடவை வற்புறுத்திச் சொல்லலாம். அவ்விதக் கல்வி பெண்களுக்கும் புகட்டக்கூடியவர்கள் புருஷர்களாகையால் அவர்களை நாம் வேண்டிக்கொள்ளுகிறதாவது:-

பெண் கல்வியைப்பற்றி யோசித்ததும், பேசினதும், பிரசங்கங்கள் செய்ததும் போதும். அவரவர்களால் ஆனமட்டும் காரியார்த்தமாய் உதவிசெய்ய வேண்டும். பெண்பாடசாலைகள் ஸ்தாபித்தும், மாதர் சங்கங்கள் கூட்டுவித்தும், உபாத்திச்சியை வைத்து வீட்டில் கல்வி கற்பித்தும், இவ்விஷயங்களில் பண உதவி செய்தும், நானாவிதமாய்ப் பெண் கல்வியை விருத்தி செய்யவேண்டும். ஆனால் கற்றறிந்த புருஷனொவ்வொருவனும் தினசரி கால் மணியோ, அரைமணியோ, அல்லது அதிக நேரமோ, பிரபஞ்ச விருத்தாந்தங்களைப் பற்றித் தன் வீட்டு ஸ்திரீகளுடன் சம்பாஷிப்பது தான் இக்கல்வி அபிவிருத்திக்கு முக்கியமான சாதனம் என்று என் எண்ணம்.



# இந்தியாவில் கோஆபரேடிவ் பாங்குகள்

இந்தியா கவான்மெண்டாருடைய முயற்சியினால், சென்ற சில வருஷங்களாக இத்தேசமெங்கும் கோஆபரேடிவ் கிராமப்பாங்குகள் செழித்து வருவதும், அதனால் அனேக ஜில்லாக்களில் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன் விஷயத்தில் வட்டி விகிதம் குறைந்துவிட்டதும் இத்தேசத்தில் அனேகருக்குத் தெரியாது. என்றாலும் அது வாஸ்தவம்.

தலைமுறை தலைமுறையாக இந்தியக் குடித்தனக்காரர்கள், சாவுகார்கையிலகப்பட்டு மீட்சியேயில்லாமல் கிடந்தார்கள். ஆனால்பிரிட்டிஷ் துரைத்தன மேற்படுவதற்குமுன், இதனால் அவர்களுக்கு உபத்திரவம் அதிகமாயிருந்திருக்க நியாயமில்லை. ஏனெனில், அக்காலத்தில் அனேகமாய் ஒவ்வொரு கிராமமும் ஒரு சிறு சுவராச்சியமாயிருந்தது. சாவுகாரன் ஏதாகிலும் அக்கிரமம் மிதமீறிச் செய்தால், கிராமத்தார் ஒருங்குசேர்ந்து அவனுக்குத் தக்கது செய்துவிடுவார்கள். தவிரச் சர்க்கார் தீர்வை அனேகமாய் விளைபொருள்களில் ஓர் அம்சமாக விருந்ததால், ரொக்கமாகப்பணம் குடிகளுக்கு அத்தனை அகத்தியமாகவேண்டியிருக்கவில்லை. பிரிட்டிஷ் ராஜாங்கம் ஏற்பட்டதும், ஜனங்கள் பதிவுபோல் தலைவிரிகோலமாக நடப்பது கட்டோடு நின்றுவிட்டது. தவிரப் போலீஸ், சட்டம், கோர்ட்டு முதலிய அங்கங்கள் ஒவ்வொன்றாக ஏற்பட்டு, அதனால் சாவுகாருக்குப் பலம் வெகுவாய்க் கூடிற்று. சாவுகார் என்ன அக்கிரமம் வேண்டுமானாலும் செய்யவும், குடியானவனுடைய உப்புச்சட்டி, மறவோடு, முதல் சகலத்தையும் கைப்பற்றவும் இடமுண்டாயிற்று. தவிரச் சர்க்கார் தீர்வையும் பணமாகவே செலுத்த வேண்டியாயிற்று.

இந்தியக் குடித்தனக்காரன்போன்ற உழைப்பாளியும், வேளாண்மைத் தொழில் தெரிந்தவனும் வேறெங்கும் கிடையாது. என்றாலும், வெள்ளிப்பணம் ஆடக்கூடிய திருக்கூத்துகளொன்றும் அவனுக்குத் தெரியாது. ஆதலால், பாங்குகளும், அவற்றின் ரகசியங்களும், அவற்றால் பரஸ்பர நாணயமதிகரித்து மகா ஜனங்களுக்குண்டாகக்கூடிய நன்மைகளும், இந்த வகுப்பினருக்கு நாளதுவரை விளங்குவதில்லை. ஆகவே, இவன் சாவுகார்கையில் அகப்பட்டு, அவர்களுக்கிரையாகிப் போய்விட்டான். பணம் அவசரமாக வேண்டியபோதெல்லாம், அடுத்த அறுவடை மகசூலை அடைவுவைத்துக் கடன் வாங்குவதும், அது போதாவிட்டால், நிலத்தை 'அடைத்து' வாங்குவதும், வட்டியும் முதலும் கெடுவில் செலுத்தத் தவறுவதும், ஷாத்து வட்டி கொடுப்பதும், காலக்கிரமத்தில், ஓட்டாண்டியாவதும் பதிவாகிவிட்டது.

சாவுகாரன் பிழைப்போ வெகு கோலாகலமாகிவிட்டது. தானியங்களை அறுவடை காலத்தில் வெகு சலீசாக வாங்கிப் பின்னடி விலை நன்றாயேறியபிறகு விற்று, விதைக்காகக் குடித்தனக்காரனுக்கும் அதே விலைக்குக் கொடுத்து, லாபத்தை இருகையாலும் வாரிப் போட்டுக்கொள்ளலானான். வட்டியோ, நூற்றுக்கு எழுபத்தைந்தும், சில சமயங்களில் 'சரிக்குச்சரியாகவும்' இருந்துகொண்டு, அனேகமாய் ஒருமுறை கடன்வாங்கியவனுக்குப் பூமி காணி முதலிய சகல சொத்தையும் தோற்றுவிட்டுப் போவதையொழித்து வேறு வகை காணமற் போய்விட்டது. ஆகவே குடியானவன் இச்சாவுகாரனுக்கு வார சாகுபடி செய்யும் ஆளாகி, அற்றைக் கூலிகாரனுக்கும் தனக்கும் பேதமற்று, க்ஷாமமோ, வேறு கஷ்டமோ வந்தால், அக்காலத்திலுதவக் களஞ்சியமென்பதும் அற்றுப்போய்க் கஷ்டப்பட ஆரம்பித்தான்.

சர்க்காருக்கு இது விசதமாகியதும் பரிகாரந் தேடலானார்கள். முதன்முதல் ஏதேதோ சிகிச்சைகள் செய்தும், அவைகள் ஒன்றும்

பலிக்காமல், நோயொருபுறமும், கூடொருபுறமுமாக, வியர்த்தமாயிற்று. ஆகவே அவர்கள் போட்டவிடத்திற் தேடுவது நலமென்று கண்டு, கோஆபரேடிவ் என்றால், அன்னியோன்னிய சகாயமுறையில் பாங்குகள் ஏற்படவேண்டிய பிரயத்தினம் செய்யலானார்கள். 1892-ம் ௵த்தில் மதிராசு கவரன்மெண்டார் ஸ்ரீமான்-சர். எப். நிக்கல்ஸன் துரையவர்களை இது விஷயமாய் விசாரித்து ரிபோர்ட்டு செய்யும்படி நியமித்தார்கள். அவரும், ஜர்மனி முதலிய தேசங்களில் நடக்கும் முறைகளையும், மதிராசில் ஆங்காங்கு நடந்துவரும் நிதிகளையும், அவற்றின் குணதோஷங்களையும் பரீக்ஷித்து, ஜர்மனியில் குடித்தனக்காரருக் கிருப்பதுபோலவே இவ்விடத்திலும் கிராமபாங்குகள் ஏற்படவேண்டு மென்றார். இதற்குள், பஞ்சாபில் இரண்டு உத்தியோகஸ்தர், ‘ தான்னிய கோளங்கள் ’ என்னும் தான்னியப் பாங்குகளை ஆரம்பித்து நடத்தினார்கள். அந்த முறைப்படி, ஒரு கிராமத்திலுள்ள குடிகளில், சுமாராகச் சக்தியுள்ளவர் ஒன்றுகூடி, விளைச்சல் தருணத்தில் தான்னியத்தைக் களஞ்சியங்களில் சேகரித்து, விலையுயர்ந்ததும் அதைவிற்று, வந்த முதலை மெம்பர்களுக்குச் சலீசு வட்டிக்குக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இவை யொன்றும் காரியத்திற்குதவவில்லை.

கடைசியாக யூனைடெட் மாகாணத்தில் ஒரு சிவில் உத்தியோகஸ்தரான ஸ்ரீமான் பேர்னேக்ஸ்துரை இவ்விஷயத்தை நன்காராய்ந்து ஒரு சிறு புஸ்தகம் எழுதினார். அதில் அவர் ஜர்மானிய முறையை இந்தியாவுக்கு அமைக்கக்கூடிய வகையைச் செம்மையாய் விளக்கிக் காட்டினார். இந்தியாவில் கிராமமென்பது எத்தனையோகாலமாய்ச் சுவதந்திரம் வகித்து வந்திருப்பதையும், அதனால் அந்நியோந்நிய சகாயம் தொன்றுதொட்டு வலுத்திருப்பதையும், கிராமவாசிகள், அனேக இடங்களில் சாகுபடி பூமியைப் பொதுவில் வைத்துக்கொண்டு, சர்க்கார் தீர்வையையும் தாங்களே வசூல்செய்து கொடுத்து வருவதையும், கிராமத்தில் ஆகவேண்டிய சகல காரியங்களுக்கும், பஞ்சாயத்தோ, வேறு ரூபமான சபையோ ஏற்பட்டு நடந்து வருவதையும், அவர் விவரித்துக் காட்டினார். பிரிட்டிஷ் துரைத்தன ரீதியில், இம்மாதிரிப் பஞ்சாயத்து முதலியவற்றிற்கு இதுவரை வலிமை குறைந்து வந்தாலும், இவை இன்னும் உயிருடனிருந்தால் இவற்றைக்கொண்டு அனேக நன்மைகளைக் குடிகளுக்கு விளைவிப்பது சாத்தியமென்று அவர் ருசுப்படுத்தினார். ஆகவே இவற்றினுதவியால் பாங்குகள் ஜர்மனி முறையில் இந்தியாவிலும் ஏற்படுவதும் தழைப்பதும் சாத்தியமென்று விளங்கிற்று.

ஜர்மானியப் பாங்குகள் தழைப்பதற்கு ரகசியம் ஒன்றேதான். கிராமங்களிலுள்ள யோக்கியர்களும், கிருகஸ்தர்களும் ஒன்றுசேர்ந்து தங்களுடைய நாணய பலத்தின் உதவிகொண்டு பெரிய பாங்குகளிலிருந்து வேண்டியவளவிற்கு ஆவசியகம்போல் பணம் சலீசு வட்டிக்கு வாங்கி வருகிறார்கள். ஒரு நாணயஸ்தனைவிடப் பத்துப்பெயர் சேரும்போது பணம் சலீசாய்ப் பெயருகிறது. இதை கிராமவாசிகளாகிய மெம்பர்களுக்கு மட்டுமே கொடுப்பது. தாங்கள் பெரிய பங்குக்காரருக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட வட்டிவீதத்தைவிடக் கால்ரூபா அரைரூபா அதிகம் வைத்துவிடுவதால், செலவு கட்டுவதுடன் லாபமும் தேறுகிறது. பாங்குக்காரருக்கு ஆள் தராதரம் நன்றாய்த் தெரியுமாதலாலும், கடன்வாங்குவதற்குக் காரணமும் விளங்குமாதலாலும் துர்விநியோகத்திற்குப் பணம் அகப்படுவது பிரயாசம். இது கொண்டும், வேறு நிபந்தனைகள் பலவிருப்பது கொண்டும், ஆயிரக்கணக்கான பாங்குகளில், “ திவாளியாக”ப் போவதென்பது வெகு அபூர்வம். ஆகவே



THE REGISTRAR OF BOOKS REGISTERED 2 - JUL 1910 MADRAS.

இப்படி யேற்பட்ட பிறகு ஜர்மானியக் குடித்தனக்காரருக்குச் “சாவுகாரக் கிரகணம்” நீங்கி இப்போது வெகு சம்பிரமமாகப் பிழைத்து வருகிறார்கள்.

ஆதலால் இம்மாதிரிக் கிராமப்பாங்குகள் இந்தியாவிலும் ஏற்படவேண்டு மென்றும், அவற்றிற்கு முதலுதவுவதற்குப் பெரிய பட்டணங்களில் பெரும்பாடியாகப் பாங்குகள் ஏற்படவேண்டு மென்றும், இவ்வழியாகத் தேசமெங்கும்பாங்குவடங்களேற்பட்டுப்பட்டணங்களிலிருந்து கிராமங்களுக்கும், கிராமங்களிலிருந்து பட்டணங்களுக்கும் பணம் நடமாடிக் கொண்டிருந்தால், குடியானவர் கஷ்டம் விடியுமென்றும், துரையவர்கள் சொன்னார்கள். உடனே இதையனுசரித்து நடவடிக்கை நடத்தும்படி அவரையே யூனைடெட் மாகாணச் சர்க்கார் நியமிக்க, அவரும் அப்படியே. பாங்குகளை அனேக கிராமங்களில் ஸ்தாபித்து அவற்றில் வேலை ஜரூராக நடந்து வந்தது. ஜர்மானிய சம்பிரதாயப்படியே அந்தந்தக் கிராமத்தார், அவரவர் பாங்குகளைச் சீராக நடத்திவந்தார்கள். இந்தப் பாங்குகளில் தங்களுக்கு விசுவாசமிருப்பதற் கடையாளமாகத் தாங்கள் மிகுத்து வைக்கக்கூடிய ரூபாய்களையும் சில்லரைகளையும் இதில் டிபாசிட்டு வைக்கலானார்கள். இப்படி யேதோ நடந்தவரை க்ஷேமமென்று காணவே, அக்காலத்தில் ராஜப்பிரதிநிதியாயிருந்த கர்ஜன் பிரபு இதற்கென்று சட்டமொன்று ஏற்படுத்தினார்.

இது ஆரம்பமாகி எட்டு வருஷமும், சட்டம் பிறந்து சுமார் ஐந்து வருஷமும் தானாகிறது. என்றாலும், இதற்குள் இம்மாதிரிப் பாங்குகள் இந்தியாவில் எங்கும் பரவி அற்புதமாக வேலை நடந்துவருகிறது. 1908-ம்௵த்தில் 1201 பாங்குகளும், 55,500-மெம்பர்களுமிருந்தன. நிதி மொத்தம் 44-லக்ஷம். இதில் சர்க்கார் சகாயம் விசேஷமாயில்லை. எல்லாம் மெம்பர்களே செய்துவருகிறார்கள். தெரியாதவர்களுக்கு இதன்சக்தியை விளக்கியும், பாங்குகளுக்குச் செலவில்லாமல் தணிக்கை செய்துவர ஆசாமிகளை யேற்படுத்தியும் செய்வதைத் தவிர்த்துச் சர்க்கார் செய்யவேண்டிய காரிய மொன்றுமில்லை. 1908-ம் ௵த்திய ரிபோர்ட்டு இன்னும் அற்புதம். முதல் இரட்டித்துவிட்டது. சர்க்கார் சகாயம் வெகு சொற்பம். ஆதலால் இப்பாங்குகள் ஜனங்களுக்குச் சம்மதமாகி விட்டனவென்றும், அவர்களுக்கு வேண்டியவளவிற்குக் கடன் முதல் தேறுமென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இந்தியக் குடியானவனுக்கு வெகுநாளாகத் தெரிந்த பாங்கு ‘மொந்தை யொன்றேதான். அதாவது ஏதோ மீத்துவைக்கக்கூடிய வெள்ளிப்பணத்தை மொந்தையில் போட்டுப் புதைத்து வைப்பதும்,இல்லாவிட்டால் வெள்ளிவளைகளாக்கிப் பெண்டிர் கையில் போடுவதும் தான் இவனுக்குத் தெரிந்த லேவாதேவி. ஆகையால் இப்படி யொருவரையும் நம்பாமல் தலைமுறை தலைமுறையாக வைப்பது பதிவாகி வந்திருக்க, இப்பொழுது திடீரென்று தங்கள் சில்லரைகளைப் பாங்கில் போட்டு, வேண்டும்போது கடன் வாங்கிப், பாங்குகள் விஷயத்தில் இவ்வளவு விசுவாசம் வந்திருப்பது அவனுக்கு நல்ல அதிர்ஷ்டம் தான். எங்கெல்லாம் இம்மாதிரிப் பாங்குகள் செழிக்கின்றனவோ, அவ்விடத்திலெல்லாம் இப்போது வெள்ளிப் பணத்தைப் புதைப்பதுமில்லை. உருக்கி வளைகளாக்குவது மில்லை. ஆனால் ‘கெண்டையைப் போட்டு வராலையிழுப்பது,’ என்கிற நியாயப்படி வர்த்தகம் விருத்தியாவதற்கும், ஜனங்களுக்குள் செல்வம் அதிகரிப்பதற்கும் சாஸ்திரப்படி அது நற்சாதனமாகிறது. இப்போதுள்ளவரை இவற்றை விதைப்புக்காலமென்னலாம். இனிக் காலக்கிர

மத்தில் அறுவடையாகும்போது விளைச்சல் பெருவாரியாகி, எல்லோருக்கும் திருப்திகரமாகவே யிருக்கும். இந்தியாவில் எல்லாவிடத்திலும் இதுவரை மொத்தைபோய்ச் சேரும் பணம், இனியப்படித் தருவேறுமல், ஜனங்களுக்குள் நடமாடி வேளாளருக்கும், தொழிலாளிகளுக்கு முதவுமானல், அதனல் இந்திய மகாஜனங்களுக்குண்டாகும் நன்மையிவ்வளவென்று யாரால் நிதானிக்கமுடியும்? அதனலுண்டாகக்கூடிய நன்மைகளை நினைக்க உடம்பு புளகாங்கிதமாகிறது.

மெம்பர்களும், முதலும் வெகு சீக்கிரத்தில் கோடிக்கணக்காகி விடும் போலிருக்கிறது. அப்படியாவதில், இந்தியாவை அடிக்கடிக் கொள்ளைகொள்ளும்படியான க்ஷாமங்களும்நீங்கிப் போம். அது மூலமாகச் சர்க்காரைத்தூறுகிறவர்கள் வாயும் அடைபடும். அனேகர் எண்ணுகிறார்கள், இந்தப்பாங்குகள் ராஜத்துரோகிகள் கையில் ஓர் ஆயுதமாகத் தீர்ந்து விடுமென்று. இது தப்பு. ஏனெனில் எவனுவது ஒருவனை நாடோடியாக வொட்டாமலும், ராஜபக்தியின் அருமை தெரியும்படிக் தம் செய்யவேண்டுமானல், அதற்கு அவனுக்குக் கொஞ்சம் பசையுண்டாக்குவதைவிட வேறு உபாயம் இல்லை. லாபம், நஷ்டம், என்கிற விவகாரம் எவனுக்கிருக்கிறதோ அவனே கிருகஸ்தனகக் கூடியவனல்லது, வெறும் நாடோடியும், ஒட்டாண்டியுமல்ல. நாடோடிப் பயல்களுக்கு இவ்விதமாக வேதாகிலும் ஓர் 'கால்கட்டு கட்டிவிட்டால், தன்னிச்சையாகவே அவர்கள் பிதற்றுவதைவிட்டு நேர்வழி நடந்து முன்னுக்கு வருகிறார்கள். ஆதலால் இதுவரை இந்தியா கவர்ன்மெண்டார் செய்துவந்திருக்கிறபடி நேர்வழியிலேயே நடந்து, இந்தப்பாங்குகளைச் செழிக்கச் செய்து, அதிகமாக நிஷேதர் ஒன்றும் செய்யாமல், அந்தந்தப் பிரதேசங்களுக்குள்ள லக்ஷணங்களை யனுசரித்தே வேலை நடத்திவருவாரென்றால், காலக்கிரமத்தில் கிருகஸ்த மார்க்கம் பிரபலித்து, ஜனங்களுக்கு விவேகமும் தொழிற்றிறமையும் விருத்தியாகி, சாவுகார் முதலிய விஷப்பூண்டுகள் நசித்து, மகாஜனங்கள் க்ஷேமமடைவார்களென்பது நிச்சயம்.

(மார்ணிங்கு போஸ்டு)

## தென்னிந்தியாக் கால்நடைகள்

ஸ்ரீமான் தாமக்கிரந்தி அவர்கள்

இந்தியாவில் பசுமாடு, காளைமாடு, எருமைமாடு, முதலிய கால்நடைகள் விஷயத்தில் ஜனங்களுக்குப் பக்தி எவ்வளவு காலமாயிருந்து வருகிறதென்றும், எவ்வளவிற்கு வேரூன்றியிருக்கிறதென்றும் நாம் சொல்லவேண்டியதில்லை. பசுமாடு ஒன்றுமட்டும் நன்றாயிருந்தால் நமக்குவேண்டியதெல்லாம் குறைவறக் கிடைக்குமென்பதை உட்கருத்தாகக்கொண்டு தான் தேவலோகத்திலும் நாம் காமதேனுவைச் சிலாகிக்கிறோம். இவ்வுலகத்திலோ பசுமாடுகளுக்கு நாம் பூஜை செய்கிறோம். பசுவின் பாலை அமிர்தமாக உயர்த்திவைத்திருக்கிறோம். அமிருதத்தைவிடப் பரிசுத்தமானதென்று பாலை, கவியாகிய காளிதாஸனும் வருணித்திருக்கிறார். இந்தியாவில் 'உயர் குலத்தார் என்னப்படுவோர் அனைவரும், மாமிசம், மீன் முதலியவற்றை விலக்கியவரல்லர். பங்காள முதலிய பல இடங்களில் அவ்வகையோரில் அனேகர் மீன் தின்பவர்கள். ராஜ புத்திரர் முதலிய க்ஷத்திரிய குலத்தவருக்குச் சாமான்னியமாய்ப் பக்ஷிமிருகங்களும், மீனும், உணவிற்கேற்றவைதாம்.

ஆனல் சேது முதல் இமாசலம்வரையில் இந்துக்களென்னப்படுவர் யாரும் பசுமாடு, காளைமாடு, இவற்றை உணவிற்காகக் கொல்லுவதென்பதைச் சொப்பனத்திலும் கொள்ளார். ஆதலால் இந்துவென்பவனுக்கும், இதானுக்கும் பேதமென்ன வென்றால், பசுவிற்கேற்பட்டமரியாதை யென்று தாராளமாகச் சொல்லலாம். அதுகொண்டே, தற்காலம் சண்டாளரென்று ஒதுக்கிவைத்திருக்கும் அனேகருக்கும், மற்றுள்ளோருக்கும், ஏற்பட்டிருக்கும் முக்கிய பேதமும் இதுவே என்னல் தகும். மாடுகளைக் கொல்பவரும், தின்பவரும் சண்டாளர்கள். அவர்களைப் பக்கத்திலும் சேர்க்க



மைசூர் தினுசு பசுமாடு



ஓங்கோல் தினுசு பசுமாடு

வொண்ணாது. அவர்கள் 'தீண்டாதவராகியே' யிருக்கவேண்டும். பலவிதமாகப் பேசுவது அனாவசியம். மொத்தத்தில் கோவதத்தி (பசுவைக் கொல்லுதல்)யை விடப் பாபமும் இல்லை, கோதானத்திற்கு மிஞ்சின தானமும் இல்லை.

இந்துக்களை இகழ்ந்து பேசுபவர்கள் முன்னொருகாலத்தில் இவர்களும் பசுக்களைக் கொன்று யாகம் செய்து இறைச்சியைத் தின்றதாகவும், ஆதலால் இப்போது போடும் வேஷத்திற்கு அர்த்தமில்லையெனவும் சொல்லுவதுண்டு. அப்படியிருந்ததாகவே வைத்துக் கொள்ளுவோம். அதனால் என்ன ருசுவாகிறது. 'மூலம்' கண்டுபிடிக்கப் புறப்பட்டால், எல்லார் பிழைப்பும் அம்பலந்தான், என்பது ருசுவாகிறது. சில ஜாதியாரில் வயது கூடிய வர்களைக் கொன்று ஒருநாள் விருந்திடுவது வழக்கமென்று கண்டால், அதற்காக அவர்கள் நாகரீகமுதிர்ந்து, நற்குணங்கள் பெருகிய பின்னும் அதையே சுட்டிக் காட்டுவதற்கு என்ன நியாயமோ, அதுதான் இதற்கும். இந்தப் பதர்ப்பேச்சு சாதுக்கள் ஒப்பக்கூடியதன்று.

மொத்தத்தில் இப்போது வெகு நூற்றாண்டுகளாக இந்தியாவில் பசுவைப் பூஜிப்பதும், பரிபாலிப்பதும், தானம் செய்வதும் ஆசாரமே தவிர, உணவிற்காகக் கொல்லுவதன்று, என்பது வாஸ்தவம். எருமையை மட்டும் இரண்டாம் தரமாகக் கொண்டிருக்கிறோம். சில இடங்களில் அது தூர்க்கைக்குப் பலியாகிறது. நீலகிரி மலையிலுள்ள தொழுவர்களுக்கு மட்டும் அது பிதிர்ப்பலியாகிறது. அந்த ஜாதியார் எருமைப்பாலையே விசேஷ உணவாக உபயோகித்து வருவதால், மாண்டவர்களுக்கு மறு உலகத்தில் உபயோகமாகும்படி அத்தருணத்திலோ, அல்லது வருஷமுடிவிலோ, ஒன்று அல்லது அதிகப்பட்ட எருமைகளைக் கொல்லுகிறார்கள். நம் போலியர் போய் ஆக்ஷேபித்தால் பூஜாரி சொல்லுகிறான் "ஐயா, மனிதனுக்கு பெற்றோரும் கூடவருவதில்லை, உடற்பிறந்தோருமில்லை, வயற்றிற் பிறந்தோருமில்லை. எருமையொன்று மட்டுமே தான் கூடவருவது" என்று. நாகரீகமுதிர்ந்தோர் தருமம் மட்டும் கூடவருகிறது என்கிறார்கள்.

ஆதலால் நாம் மேற்கூறியபடி பசுமாடு முதலிய கால்நடைகளை வதைப்பவர் இந்தியரன்று. அவற்றினிடத்தில் பக்தி எவ்வளவென்பதும், அவற்றை எவ்வளவு விசுவாசமாய்ப் போஷித்து வருகிறார்களென்றும், அன்னிய நாட்டார் பார்த்தவரெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

என்றாலும் பசுக்களைப்பற்றிய சாஸ்திரம் ஒன்றும் நாளதுவரை நம்மில் காணுவதில்லையென்றே சொல்லிவிடலாம். மற்ற விஷயங்களில் நடப்பது போலவே, மாமூலாக நடவடிக்கைகள் சில ஏற்பட்டு நடந்து வருகின்றன. அதைத்தொழில் தெரிந்த சிலர் அனுபவத்தில் கற்றுப்பரிபாலனம் செய்துவருகிறார்கள். பெரும்பாலார் பழையபடி குருட்டுத்தனமாகவே காலங்கழித்து வருகிறார்கள். ஓட்டைச் சட்டியென்றாலும், கொழுக்கட்டை வெந்தால் சரி. ஏதோ பசுமாடு ஒன்று இருக்கவேண்டும், பால் கறக்கவேண்டும். நன்றாய்க் கறந்தால் நம்முடைய அதிர்ஷ்டம். இல்லாவிட்டால், கறந்ததைக்கொண்டு எப்படியோ காரியம் நடக்கவேண்டும், என்பதே பெரும்பாலாருடைய மனோதருமமாகியிருக்கிறது.

ஆனால் இதுவரை இப்படியிருந்து காலக்ஷேபஞ் செய்துவந்தபடி, இனியெக்காலத்திலும் நடந்தேறி வருவது பிரயாசம். ஆதலால் மற்ற விஷயங்களில் எப்படிச் சாஸ்திரப் பயிற்சி அதிகரித்து அதனால் நற்பயனுஞ் சித்திக்கிறதோ, அவ்வாறே பசு விஷயத்திலும் சித்திக்கும்படி பார்க்கவேண்டுவது அறிவுடையோர் லக்ஷணமாம்.

உதாரணமாக வாழையென்றால், எல்லாம் ஒரு போக்கல்லவென்று யாருக்கும் தெரியும். பழத்திற்காகச் சில தினுசுகளும், இலைக்காக வேறுவகைகளும், காய்க்காக மற்றுஞ் சிலவர்க்கங்களும் பயிரிடுகிறோம். பூசாரத்தை வேண்டியபடி எரு முதலியன சேர்த்து மாற்றுகிறோம். மாமரத்தைக் 'கட்டு' மூலமாக வேண்டியபடி காய்க்கச் செய்கிறோம்.

இதுபோலவே பசு வர்க்கங்களிலும் சில உபாயங்கள் செய்கிறோம். பால் அதிகம் வேண்டுமானால், பசும்புல், பருத்திக்கொட்டை, முதலிய உணவுகளை அதிகமாய்க் கூட்டுகிறோம். கன்று கொழுக்க வேண்டுமானால் அதற்கு வேண்டியதைச் செய்கிறோம். ஆனால் இவையெல்லாம் குருட்டுச் சாஸ்திரமாகக் காணுகிறதே யொழிய, எல்லாருடையவும் யுக்திக்கு ஒப்பியதாயில்லை. ஏனெனில் ஓரோர் பிரதேசத்தில் ஓரோர் ஐதிகம் வேரூன்றியிருக்கிறது. அதில் நல்லது அனேகமிருக்கலாம். ஆனால் அது இதரர்களுக்குத் தெரியும் வகையில்லை, அவ்வாறே வேற்றார்களிலுள்ள நலங்கள் இவருக்குப்பயன் படுவதற்கும் இடமில்லை.

முக்கியமாக இந்தக்குறைவு வர்க்கபேதத்தில் காணும். இரண்டாவதாகத் தீனிவிஷயத்திலும் வைத்தியவிஷயத்திலும் சொல்லலாம்.

ஏனெனில் பசுக்களைப் பலன் படுத்துவதற்குப் பழைய சம்பிரதாயமாகக் கோவில் மாடுகள் தான் உபயோகப்படுவது. கோவில்மாடுகள் தகுந்த மாப்பிள்ளைகள் தான். ஆக்ஷேபமில்லை. ஆனால் இன்ன தினுசைத்தான் கோவிலுக்கு விடுவது, என்கிற நியமம் நம்முள் இல்லை. ஆதலால் வர்க்கம் போதிக்காமல் செழித்து வருவதற்கு நாம் ஒரு ஏற்பாடும் செய்யவில்லை.

இப்படியே தீனி விஷயத்திலும், கொழுக்கட்டைப்புல் என்கிற தினுசு கோயமுத்தூர் ஜில்லா காங்கய நாட்டில் விசேஷித்துக் காணுவது. இதற்கு எத்தனையோ மகிமை யிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இது வாஸ்தவமாகில் இந்தப் புல்லை வேறு பல இடங்களிலும் விர்த்தியாகச் செய்துகால்நடைகளுக்கு ஏன் உபகாரம் செய்வதில்லை? இப்படியே வெள் வேலங்காய் முதலிய சரக்குகளிலுமென்க.

இப்படி வெகு நாளாக ஒவ்வொரு சிறு பிரதேசத்திலும் சில மாமூல்களேற்பட்டு, மாமூல் பிசகாமல் நடத்திவருவதில் இனி நமக்கு வலுத்த காரியமொன்றும் கைகூடாதென்று நாம்மேலே குறிப்பிட்டபடியால், இந்தத் தோஷத்தைப் பரிகரித்துக் கால்நடைகளை எங்கு பார்த்தாலும் வேண்டியபடி இருக்கும்படி செய்வது தேச க்ஷேமத்தை நாடும் ஒவ்வொருவருக்கும் தருமமாம். இம்மாதிரி விஷயங்களிலெல்லாம் மேனாட்டாரே நமக்கு மார்க்கதரிசிகளாயிருக்கிறார்கள். யாராகிலும் நமக்கு இதம் சொன்னால் அதைக் கேட்பதே விவேகத்திற்கு அடையாளமாம். சமீபத்தில் மதிராசு கவர்ன்மெண்டு கால்நடை வைத்தியத்தில் அமர்ந்து அனுபோக முதிர்ந்த டாக்டர் ஸ்ரீமான் கன்துரையவர்கள் தென்னிந்தியாவில் காணும் கால்நடை தினுசுகளையும், அவற்றின் குணதோஷங்களையும் விவரித்து ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அது இங்கிலீஷிலிருப்பதில், இந்நாட்டில் பெரும்பாலார்க்கு உபயோகமில்லையாதலால், அதில் சாரமாயுள்ளதைமட்டும் ஒழியும்போது எடுத்து 'விஹாரிணி' அபிமானிகளுக்கு விநியோகம் செய்கிறோம். விவசாயத்தில் அக்கரையுள்ளவர்களுக்கெல்லாம் இது அரிய பெரிய விஷயம் என்பது சொல்லாமலே விளங்கும். புஸ்தகம், பிரசங்கம், காக்ஷி என்னும் மூவகைச் சாதனங்கள் இவ்விஷயத்தில் ஜனங்களுடைய அறிவைப் பெருக்க ஏற்றவைகள். இவை மூன்றும் கிட்டாமலிருப்பவர்களுக்கு ஏதோ ஒருவிதம் உபயோகப்பட்டு ருசி யுண்டாக்குவதற்காகவேண்டி இம்மாதிரிச் சிறுவியாசங்களும், உருவப்படங்களும் ஒருசமயம் உதவலாமென்பது நமக்கு நம்பிக்கை.



தென்னிந்தியாவில் முக்கியக் கால்நடை வர்க்கங்கள் 'மைசூர்' தினுசு ஒன்றும், 'ஒங்கோல்' அல்லது 'நெல்லூர்' தினுசு ஒன்றுமாம். மைசூர் தினுசுதான் சாமான்னியமாய் மதுரை, திருச்சிராப்பள்ளி வகையரா தென் தேசத்திலெங்கும் விசேஷித்துக் காணுவது. சளையாமல் பெரும்பாரந் தாங்கிப் போக வேண்டுமானால் நெல்லூர்தினுசு வெகு திறம். சவாரி விஷயத்திற்கும், ரோஷத்தோடு ரோட்டுகளில் வேகமாய் நடப்பதற்கும் மைசூர் தினுசுதான் ஏற்றதாம். நெல்லூர் உருப்படி பெருத்தது. மைசூர் கால் குளம்பு இறுகியது.

ஆனால் இவையிரண்டும் மொத்தத்தில் வேறுபட்டுக் காணுவதாயினும், ஒவ்வொரு தினுசிலும் பல உட்பிரிவுகள் காணுவது சகஜம். பூசாரம், உணவு, காலபேதம் முதலிய காரணங்களை அனுசரித்து மனிதருடைய ரூபம், குணம் முதலியன எப்படி மாறுகின்றனவோ, அப்படியே கால்நடைகளுடையவும் ரூபமும், குணமும் மாறுகின்றன. சாமான்னியமாய் இந்தியக் குடியானவன் 'ராகிக்களியும் கீரைக்கறியும்' போதுமென்று எப்படிக் காலந்தள்ளி வருகிறானோ, அப்படியே இவ்விடத்திய கால்நடைகளும் "புழுதியில் மறைந்து கிடக்கிற அருகங்கட்டையைக்கடித்துக்கொண்டு," ஏதோ காலந்தள்ளி வருகின்றன. தெலுங்கு தேசத்தில் பலவிடங்களில் கால்நடைகள் மலத்தைத் தின்று வருகின்றன. மலையாளத்தில் அனேக இடங்களில் புல் முதலிய உணவை விலைக்கு வாங்கிப்போடுவது அபூர்வம். எல்லா இடங்களிலும் தான்னியம் மனிதனுக்கும், புல் 'பண்டத்திற்கும்' என்பது தான் மாமூல்.

மதிராசு ராஜதானி யெங்கும் கால்நடை அபிவிர்த்தியாகியேதான் வந்திருக்கிறது. என்றாலும் நாம் மேற்கூறியபடி வர்க்கத்தைக் கவனித்து ஜாதிகெடாமல் யாரும் அக்கரையாய் பாடுபடுவதில்லை. ஆதலால் சாமான்னியமாய்ப் பூமியைக் கீறுவதற்கும் உதவாத அனேகம் 'பண்டங்கள்' வாலும் தோலுமாய் எங்கும் காணுகின்றன. இவைகள் இப்படிப் பெருகி அலைவதால், வேலைக்குதவும் நல்ல உருப்படிகளுக்குக் கிடைக்கவேண்டிய தீனியை இவைகள் தின்று, நல்லது, பொல்லாதது, இருவகைப் பண்டமும் கஷ்டப்படுகின்றன.

மேனாட்டில் இதற்குப் பரிகாரம் சுலபம். 'உதவாக்கட்டைகளை' ஒழித்து, அவற்றின் தோலையும், மாமிசத்தையும் உபயோகப்படுத்திக்கொண்டு, மற்றவைகளைக் கொழுக்கவைப்பதுதான் அவ்விடத்திய மாமூல். இங்கு அது சாத்தியமில்லையென்று நாம் மேற் கூறியிருப்பதால், அதைமறுபடி விவரிக்க வேண்டுவதில்லை.

இதைப்பற்றிப் பேசுவதில் ஸ்ரீமான் கன்துரை இவ்வாறெழுதுகிறார்:—"பசு, எருது முதலியவற்றைக் கொல்லுவதென்றால், இந்துவானவன் அதை மகா பாபமாகப் பாவிக்கிறான்; அவற்றின் மாமிசத்தைத் தின்பதென்றால், அதனால் சண்டாளத்துவம் வந்துவிடுவதாகப் பயப்படுகிறான். என்றாலும் பசுவின் பாலையோவென்றால் வேண்டியமட்டில் குடிக்கிறான்," என்று. இதில் என்ன யுக்திவாத மேற்பட்டதென்று நம்மால் சொல்லமுடியவில்லை. ஜைனர்களில் சிலரும், பாதிரிமார்களில் சிலரும், மதியீனத்தினால் வாதிக்கிறபடி ஸ்ரீமான் கன்துரையும் வாதித்து, பாலைக்கறந்து குடிப்பதற்கும், மடியையறுத்துத் தின்பதற்கும் விசேஷ வித்தியாசமில்லையென்று கூறுகிறார்போலும்! நிற்க. நமது நாட்டில் நூற்றுக்கு 90-பெயர் விவசாயிகளாகவும், அவர்களுக்குள் எத்தனையோ காரியங்களுக்குக் கால்நடை வேண்டியனவாக

வும் இருப்பதால், அவற்றிற்கு விலைவாசிகூடி யே வந்திருக்கிறது. பூமி சாகுபடி விஷயத்தில் ஆதியோடந்தமாக எல்லாக்காரியங்களும் மாடு கன்றுகளில்லாமல் முடியாது. எத்தனை ஏர்ப்பண்ணயமென்று தான் சாதாரணமாய்க் குடியானவனுடைய அந்தஸ்தைக் கேட்டறிவது. மேற்கூறியபடி கிருகக்கிருத்தியத்திற்கும், ஆனுஷி காரியங்களுக்கும் பசுவைவிடச் சிறந்த 'வஸ்து' கிடையாது.

இப்படி யெல்லா மிருப்பதால் இனி ஒவ்வொன்றாக இந்த இரண்டு தினுசுகளையும், இவற்றிலிருந்து பேதப்பட்டுக்காணுகிற வேறு தினுசுகளையும் விவரிப்போம். இப்படிச் செய்வதில் நமக்குண்டாகக்கூடிய முக்கிய பலன் இன்னதென்று முன்னமே கூறியிருக்கிறோம். பழைய சம்பிரதாயம் குருட்டுத்தன மென்பது சுலபத்தில் விளங்கும். என்றாலும் அந்தச் சம்பிரதாயமாவது கெடாமலிருந்தால் தேசத்திற்குக் கொஞ்சம் க்ஷேமம் கூடும். ஆனால் அதுவும் இப்பொழுது சொல்லிக்கொள்ளுவதற்கில்லை. கோவில்காளைகள் இப்போது முன்னிருந்தமாதிரி பிரபலமில்லை. மலையாளத்தில் மட்டும் 'கூற்றன் மூரிகள்' சுமாராகக் காணுகின்றன. மேய்ச்சலுக்கு முன்மாதிரிச் சௌகரியங்கள் இல்லையென்பது எல்லோருமறிந்த விஷயம். 'சூலம்' முதலியன போட்டுவிடும் கன்றுகள், வேலைக்குதவாததலால், எங்கேயோ போய்க்கடைசியில் கசாப்புக்கடைக்கு உதவுகின்றன. புதிதாக நோய் கண்டால் வைத்தியம் தெரியாமல் அநேகம் 'பண்டங்கள்' நஷ்டமாகின்றன.

நமக்கிருப்பதை விவரமாகத் தெரிந்துகொண்டால் மேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கு அனுகூலமுண்டென்பது சித்தமாதலால் அந்த லக்ஷ்யத்தை முன்னிட்டே நாம் இதை யெழுதலானோம். மைசூர் தினுசைப் பற்றி, ஒரு சந்தர்ப்பத்தில் பேசுவோம்.

## பெருவாழ்வு

(ஸ்ரீமான் டேனன்ஸ் என்பவருடைய
ஆங்கிலக்கவி மொழிபெயர்ப்பு)

ஸ்ரீமான் எஸ். திசைவிநாயகம் பிள்ளையவர்கள்
(தூரன் வெண்செந்துறை)

கருத்திலெழுமரியவுருக்
    கவின்கொளநற்சிலையிற்
கண்காணத் தெரிப்பமிகக்
    கைவருந்திறிதமும்
அருத்தியொடுமெய்த்தளர்வும்
    அகத்தளர்வும்பாரா
தாமளவுமுயன்றிடுவர்
    தோமறுசிற்பியரே. (1)

அருமையிலும்பெருமையிலும்
    அழகியதன்மையிலும்
அற்புதக்களுக்கண்டிங்
    கிலமகங்களிப்பான்
உரிமைபெறுமோவியங்க
    ளுருவாக்கவல்லார்
உறதுயரும்படும்பாடும்
    உலகிலெவரறியார்? (2)

பெருமைபெறுதிருக்கோயில்
    பெட்புறவேயமைக்கும்
பேராளனத்தளியின்
    பெரியசினகரங்கள்
ஒருமைகொளவுயர்வானம்
    உறமளவுமெழவே
உயிர்வாழும்நாள்முழுதும்
    உதவிடினும்வருந்தான். (3)

இமையவரினுலகதனில்
    இருந்துவருமருந்தாய்
இதயமதிலெழுமினிய
    இறும்பூதுகொண்டே
அமையவொருகவிபாட,
    அரியபெரும்புலவர்
அடைவருத்தம்செல்காலம்
    அணுவேனும்மதியார். (4)



கல்லுருவும்பொடியும்நிறம்
    காண்படமும்மங்கும்;
கண்களிக்குந்திருத்தளியும்
    மண்குளிக்குந்திண்ணம்;
சொல்லிலொருநூறாண்டு
    சொல்லுவதுமரிதாம்
சொந்தமெனப்புலவர்தரு
    சந்த முறகவியே. (5)

ஜீவிதத்தை விதியதனைத்
    திருத்தமுறத்திருத்தும்
திவ்வியநற்சீவாத்ம
    சிற்பியரும்யாமே
மூவுலகிலெக்காலும்
    முடியாதபொருளில்
முயற்சியொடுபணிகாணும்
    மொய்ம்புடையோர்யாமே. (6)

ஆதலினெத்தனைபொறுமை
    அமைந்திடுதாற்பரியம்
அன்புநிறைதோத்திரத்தோ
    டகம்நிறையுமெண்ணம்
மேதகுவிடாமுயற்சி
    யாதியொடுநாளும்
வீடாதபெரும்பொருளை
    மேற்படுத்தவேண்டும்! (7)

எங்குபார்த்தாலும் சங்கங்களும், சபைகளும் மலிந்துவருகின்றன. ஆதலால் இந்நாட்டில் ஜனங்களுக்குள் ஜீவகளை அதிகரித்துக்காணுகிற தென்பதில் தடையில்லை. பரஸ்பரமாச்சரிய மட்டும் இல்லாமலிருக்கும்வரை, மைசூர் ஒக்கிலியர் சங்கம், கவரை வடுகர் சங்கம், கம்மவார் வடுகர் சங்கம், தொண்டைமண்டலம் வேளாளர் சங்கம், தஞ்சாவூர் மராட்டியர் சங்கம், மைசூர் சுவேதாம்பரஜைன சங்கம், இப்படிப்போல் இனி எத்தனை ஆயிரம் சங்கங்களிருந்து செழித்தாலும், நாட்டிற்கு நலமே தவிர வேறு குணமில்லை. ஒவ்வொரு சங்கமும் கவனிக்கவேண்டியது இது—நாம் முதன் முதல் இந்தியர்கள். பிறகு மற்றவகையோர்கள் என்பதேயாம்.

---

தளி = கோயில்

இறும்பூது = அதிசயம்; ஆச்சரியம்.

## நிறப் பதார்த்தங்கள்

(ஆயுர்வேத பூஷண, பண்டித ஸ்ரீமான்
எம். துரைஸ்வாமி அய்யங்கார், திருச்சினாப்பள்ளி.)

இப்பொழுது நம் தேசத்தில் நடைபெறும் பற்பல தொழில்களில் முக்கியமாய் நெசவுத் தொழிலில் பலவகையான சாயங்களின் நிமித்தம் தொழிலாளிகள் நிறப்பதார்த்தங்களின் விஷயங்களைப் பெரும்பாலும் ஏதோ முனைப்புல் மேய்வதுபோல் அறிந்தும், இவ்விஷயங்களைச் சாஸ்திரப்படி படித்தறியாமற் காரியங்களைச் செய்யப் புகுவதும், இவர்களது காரியங்களிற் பலவற்றைப் பயனற்றவைகளாகவும், வேறுசிலதைச் சிறிதளவு உபயோகமுள்ளவையாகவும், மற்றும் சிலவற்றைத் தற்செயலாய் மேன்மையானவையாகவும் செய்யக் காரணமாகுமென்பதை நம் நேயர்களிற் பெரும்பான்மையோர் அறியாமலிருக்கவில்லை. ஆனது பற்றி ஆங்கிலமறியா நம் தொழிலாளிகளிற் பலர் (தமிழ் படிக்குந் திறமையுடையோர்) இதை யறியட்டுமென நினைத்து, இவ்விஷயம் பௌதிக சாஸ்திரப்படி (இச்சாஸ்திரமுறைப்படி விஷயம் அனைவருக்கும் எளிதில் அறிவது வருத்தமாகத் தோற்றினும்) கூடியமட்டும் அனைவரும் அறியுமாறு இங்குத் தமிழில் யாம் வெகு சுருக்கமாக எழுதப்புகுந்தனம்.

கொச்சினீல் என்கிற பூச்சியின் சிவப்பு நிறத்தைத் தவிர சேதன நிறப் பதார்த்தங்கள் எல்லாம் தாவரங்களி (செடி கொடி முதலியவைகள்) லிருந்தே வரும். இவைப் பௌதிக சாஸ்திர ரீதியாக லக்ஷணம் அல்லது தன்மைகளில் ஒன்றையொன்று ஒத்தவைகளல்ல. ஆயினும் ஒரே தொழிலில் வழங்கப்படுமாதலால் இங்கு தொடுத்துச் சொல்லப்படும். இயல்பிலில்லாத அநேகம் உத்தமமான நிறங்கள் தகுந்த பௌதிகச் செயலால் தாவர பதார்த்தங்களிலிருந்து தோற்றுவிக்கப்படும்.

புஷ்பம் முதலிய தாவரப் பகுதிகளிலே இயல்பாயுள்ள சிறப்பான நிறங்கள் நிலையற்றவைகளாம். எடுக்க முயலும்பொழுதில் அவை பெரும்பாலும் அழியும். அல்லாமல் தாவரத்தில் அவை இருக்கும் பிரமாணம் மிகவும் அற்பம். வெளிச்சம் அற்பமாய்ப்படும் பகுதிகளாகிய பட்டை, சிராய் முதலிய தாவரப் பகுதியில் எடுக்கும் நிறப்பதார்த்தங்கள் இந்நிறங்களினும் துலக்கம் குறைவுபடுமானாலும் மிக்க நிலையானவைகள்.

சாயமிடல்.—நிறப்பதார்த்தங்களைச் சீலை முதலியவைகளின் நெசவுகளுள் நிறம் சீக்கிரம் அழியாதபடி செறியப்பண்ணுவதே, அதாவது நுண்ணிழைகள்தோறும் நன்கு ஊடுருவிப் பரவுமாறு செய்வதே, 'சாயம் இடல்' எனப்படும். இது நிறப்பதார்த்தத்தைச் சாயமிடும் நெசவு பொருளில்பற்றி நன்கு நாட்டங்கொள்ளப்பண்ணுவதாலாகும். அந்தந்தப்பதார்த்தத்தில் நெய்யப்படும் சீலை அந்தந்த நிறப்பதார்த்தங்களுக்குரிய நாட்டங்கொண்டிருக்கும். எல்லாவற்றிலும் இந்நாட்டம் கம்பளத்துக்குக் கதிப்பு; இரண்டாவதாகப் பட்டுக்கும், மூன்றாவதாகப் பருத்திக்கும், கடைசியாகச் சணலுக்கும் அதிகம். ஆகையால் கம்பளம், பட்டுகளுக்குச் சாயம்போடுவது எளிதானாலும் மற்றவைகளுக்கு இடைத்துணையின்றிச் சாயமேற்றுவது சுலபமானதல்ல.

சுயசாயம், உபசாயம்.—சாயமிடுவதில் வழங்கும் நிறப்பதார்த்தங்கள் 'சுயசாயம்' 'உபசாயம்' என இரண்டாய் வகுக்கப்படும். வேறு பொருளின் துணையின்றி தானாய் நெசவில் பிடிக்கும் நிறப்பொருள் 'சுயசாயம்' எனப்படும். 'உபசாயமோ' நிறப்பதார்த்தம், நெசவு இரண்டிலும் நாட்டம். அதாவது பற்றுடைய வேறு பொருளின் துணையால்தான் பிடிக்கும். மிகுதியான சாயங்கள் உபசாயம் என்கிற வகுப்பைச் சேர்ந்தவை. நீலத்தைத்தவிர வழமையான சாயங்கள் வேறு வேறு பொருளின் துணையின்றி தன் நிறம் கொடுப்பதரிது. பெரும்பான்மையானவைகள் தானாய்ப்பருத்திக்கு நிலையான நிறங்கொடுக்கக்கூடிய நாட்டமுள்ளவைகளல்ல.

சாயத்துணைப்பொருள்.—சீலையில் சாயம் பிடிப்பதற்கு துணையாகும் பொருள் 'சாயத்துணைப்பொருள்' அல்லது 'மார்டெண்டு' எனப்படும். சாயமரச்சிராயால் பருத்திச்சீலையில் கறுப்புச் சாயமிடுவதைக்கொண்டு ஓர் சாயத்துணைப்பொருளின் செயலையறிந்து கொள்ளலாம். இந்த சிராய் அவித்த தண்ணீர் கருமையானாலும் நிலையான நிறமாய் பருத்தியிற் பிடியாது. சீலையை முதல் அன்னபேதித் தண்ணீரில் தோய்த்துப் பிழிந்து பின்பு சாயமரச்சிராய்த் தண்ணீரில் தோய்க்க, அதன் நிறப்பதார்த்தம் அன்னபேதியிலுள்ள அயச்சிந்தூரத்துக்கு அதிக நாட்டமுடையதாதலால் அத்துடன் சேர்ந்து சீலையின் நெசவுகளுள் கறுப்புச்சாயமாக அடைந்து பிடிக்கும். இப்படியுண்டாகும் சாயம் சீலையின் நெசவின் வெளிப்பகுதியில் மாத்திரமிராமல் அதன் நெசவினுட்சென்று இழைமயிர்களிற் செறிந்து சீலை கெட்டாலன்றி கழலாதாதலால் நிலையான சாயம் எனப்படும். மார்டெண்டுகளை (சாயத்துணைப் பொருள்கள்) வழங்குவதால் வரும் நயம் இது மாத்திரமல்ல, ஒரே வேர்ப்பட்டையின் நிறப்பதார்த்தம் அந்தந்த மார்டெண்டு சேருவதற்குத் தகுந்தவாறு வித்தியாஸமான நிறத்தைக் கொடுக்கும். உதாரணமாக, சாயமரத்துச்சிராய் அயச்சிந்தூரத்துடன் சேர்வதால் கறுப்பும், வங்கச்சிந்தூரத்துடன் சேர்வதால் செந்நீலமும், மற்றும் மார்டெண்டுகளுடன் சேர்வதால் அததற்குத் தகுந்தவாறு கருநீலம், மஞ்சள், வெள்ளை முதலிய நிறங்களும் உண்டாகும்.

சீலையில் சாயம் அச்சடித்தல்.—சீலையை முதலில் நன்கு வெளுத்து அச்சை சாயத்துணைப் பொருளால் தடவி அதில் அணைப்பார்கள். பின்பு சீலையை, சாயத்தில் போட, சாயம் மார்டெண்டு பட்ட பகுதிகளில் நன்றாய்ப் பிடிக்கும். பிற்பாடு தண்ணீரில் அலசும்பொழுது மற்றும் பகுதிசாயம் கழண்டுபோவதால் அச்சின் வடிவம் துலக்கமாய் நிற்கும்.



சாயமிடலில் முக்கியமாக வழங்கப்படும் நிறப்பதார்த்தங்கள் பின்வருமாறு.

சிவப்பு அல்லது செந்நீலச் சாயம்.—மஞ்சிட்டைவேர் மற்றெந்த வஸ்துவிலும் சாயமிடலில் அதிகமாய்வழங்கப்படுவதுண்டு. கறன்சின் எனப்படும் இதன் அதிகசிறப்பான நிறப்பதார்த்தம் இயல்பிலுள்ளதல்ல கந்தகாம்லத்தின் செயலால் உண்டாகும். கந்தகாம்லம் வேரின் நிறப்பதார்த்தத்துடன் பற்றுமல் அதில்படுவதால் மாத்திரம் அது மாற 'கறன்சின்' உண்டாகும். இவ்வாறு ஒரு பொருள் கூறு வடிவத்தில் யாதொருமாறுதலும் அடையாமல் வேறு இருபொருள்களை ஒன்றுடனொன்று சேர்க்கத்தக்க அல்லது மாற்றத் தக்கபற்றுடையதாயிருந்தால் அது 'யோகவாஹி' அல்லது 'கதாலிஸிஸ்' எனப்படுகிறது. இவ்வகையான செயல் சற்று நூதனமானது. இதைவிளக்கிக்காட்டுவதும் சிறிது பிரயாஸம். (சீனிகரைந்த கனமான தண்ணீரில் ஈஸ்டு என்னும் நொதிப்பொருள் மிகவும் அற்பந்தானும்சேர, அது முழுதும் நொதிப்பது இதற்கு நல்ல உதாரணமாகும்). மஞ்ஜிட்டை தன்னுடன் சேரும் அந்தந்த சாயத்துணைப் பொருளுக்குத் தகுந்தவாறு துலக்கமும் நிலையானதுமான சிவப்பு, மஞ்சள், செந்நீலம், கபிலம் என்கிற நிறங்களைக் கொடுக்கும். சிவப்புச் சாயங்களுள் மஞ்ஜிட்டை வேரல்லாமல் ஸம்பங்கிச் சிராய், சாயவேர், செஞ்சந்தனச்சிராய், செந்துருக்கம்பூ, கொச்சீனில் பூச்சி என்பவை முக்கியமானவைகளாம்.

நீலம் அல்லது வெண்ணீலச் சாயம்.—நீலநிறப்பதார்த்தங்களுள் நீலியெனப்படும் அவுரியே பிரதானமானது. அவுரிப்பூண்டின் இலைகளை இளஞ்சூட்டுத் தண்ணீரில் காய்ச்சி ஊறவைத்து கொதிக்கவிடுவதால் மஞ்சள் நிறப்பதார்த்தம் உண்டாகும். காற்றுப்படுவதால் இது சிறிது சிறிதாக நீல நிறமாக மாறி சற்றுக் கனமாய் அடையும். இந்த அடையலை தண்ணீரில் கலக்கி தெளியச்செய்து காயவைப்பதால் வியாபாரத்துக்கு வரும் ஸாதாரண நிலமாகும். நீலமானது சரிபங்கு அன்னிய பதார்த்தத்துடன் கள்ளத்தனமாய் கலக்கப்பட்டிருப்பது வழக்கம். சுத்த நீலம் புகையும் கந்தகாம்லத்தில் மாத்திரம் கரைவதுண்டு. இத்துடன் சேர்ந்து 'கந்தகநீலி காம்லம்' எனப்படும் ஓர் புளிப்புத் திரவியம் பிறக்கும். இது தண்ணீரில் தாராளமாய்க் கரையும். நீலியானது தன்னிடமிருக்கும் பிராணவாயுவை பிரிக்குந் திறமையுடைய பொருளோடும் தண்ணீரோடும் கலந்தால் 'அவுரிவெள்ளை' எனப்படும் நிறமற்றதும் தண்ணீரில் கரையக்கூடியதுமான பதார்த்தமாக மாறுகின்றது. இது காற்றுப்படுவதால் ஆகாயத்திலிருந்துப் பிராணவாயுவை உறிஞ்சி மறுபடி நீலநிறங்கொள்ளும். நீலச்சாயமேற்றும் முறை இக்குணத்திற்கு இணங்கியவாறே தானிருக்கும். மாவாக்கிய நீலியானது ஸுதாந்த்ரிதம் என்கிற பொருளுடனும், அன்னபேதியுடனும் கலந்து தண்ணீரில் மெதுவாகக் காய்ச்சப்படும். இதில் அன்னபேதியென்கிற இரும்பின் உப்பிலுள்ள கந்தகாம்லத்தை சுண்ணம் (இதுதான் ஸுதாயெனப்படும்) பிரிப்பதனால் ஆயஸாம்லஜகாயிதம் என்னும் பொருளுண்டாகும். இதில் இருக்கும் ப்ரோடாக்ஸைட் என்பது நீலியிலுள்ளப் பிராணவாயுவை வாங்கிவிட, நீரின் நீலநிறம் அற்று மஞ்சள் நிறமாகும். இந்த நீரில் காய்ச்சும் சீலைகளை கந்தக

நீலிகாம்லநீரில் காய்ச்சவேண்டும். ‘லேகென்’ என்கிற மரப்பாசிகளிலிருந்து லிட்மஸ் ஆர்கில் கட்பேர் எனப்படும் நீலநிறப்பதார்த் தங்கள் க்ஷாரங்களின் செயலால் எடுக்கப்படும். (அம்லம் அதாவது புளிப்பு இனங்களுக்கு எதிரிடையான தன்மை செய்கையையுடையவை க்ஷாரங்கள் அல்லது ஆல்கலிகள் எனப்படும். இவை காரமான ருசியையும் வழவழப்புமுடையவைகள். அம்லங்கள் பட்டு செந்நிறமடைந்த தாவரபதார்த் தங்களை இவை நீல நிறமாக்கும்.) இயல்பில் தானே இம்மரப்பாசிகளில் நிறமில்லை. லிட்மஸ் நீலக்கட்டியும், ஆர்கில் கருமையான செந்நில நிறமுள்ள பாணியும், கட்பேர் கருஞ்சிவப்புத்திதளும் ஆகும்.

**மஞ்சட் சாயம்.**—மஞ்ச நிறப்பதார்த்தங்களுள் பஸ்திக்கு சிராயும் அமெரிக்காவில் உற்பத்தியாகும் காரோக்கு பட்டையிலிருந்தெடுக்கப்படும் க்வேர்ஸிட்ரனும் ரமணச்செடியின் சிறு பழங்களும், மஞ்சளும், தென் அமெரிக்காவில் உண்டாகும் ஒருவகையான வித்தின் சதையிலிருந்து எடுக்கப்படும் அன்னட்டோ என்பதுமே மிகுதியாக வழங்கப்படும் மஞ்சட் சாயங்களாம்.

இலைமுதலியவைகளிலுள்ள நிறப்பதார்த்தம், மரங்களின் இலைமுதலியவைகளில் செரிந்திருக்கும் இந்த ‘க்ளோரோபைல்’ என்னும் நிறப்பதார்த்தம் அவைகளில் மிகவும் அற்பமாய் அகப்படும். சுத்தமாயெடுப்பது பிரயாஸம். தாவர நெசவுகளில் மெழுகுபோன்ற பதார்த்தத்துடன் சேர்ந்ததுபோலிருக்கும். இது தண்ணீரில் கரையாமல் சாராயச்சத்து, ஈதர், இவைகளில் கரையும். ஆனது பற்றி பசுமையான இலைக் காம்புகளில் செய்த பாவநத்திரவங்கள் யாவும் பச்சைநிறமாகும். வெளிச்சம்படும் தாவரப்பகுதியில் மாத்திரம் க்ளோரோபைல் என்பதுண்டாகுமாதலால் இதற்கு அதன் செயல் அவசியம் தேவையென்று எண்ணவேண்டும். இருட்டில் வளரும் பயிர் வெளிறியிருக்கும். வெயில் பட்டால் சுறுக்கிப் பச்சை நிறங்கொள்ளும். கூதிர்காலம் கிட்ட இலைகளின் பச்சை நிறங்கெட்டு சிவப்பு மஞ்சள் நிறமாகிறது. இப்படியாவது அவைகளிலுள்ள ‘க்ளோரோபைல்’ என்னும் பொருள் பௌதிகரீதியாய்ப் பிராணவாயுவுடன் சேர்ந்தெரிந்து கூறுபட்டு அம்லக்கலவையுண்டாவதால் என்று எண்ணப்படுகிறது. ஆயினும் இதைப்பற்றி முடிவுகட்ட இன்னும் ஆராயவேண்டியது.

சாயமிடலில் வழங்கும் மிகுதியான பச்சை நிறப்பதார்த்தங்கள் ஆகரிகளிலிருந்தே வரும். இவைகளில் க்ரோமியம் செம்பு என்பவைகளின் உப்புகளே முக்கியமானவை.

கலப்பற்ற கறுப்பான சுயசாயம் தாவரங்களிலிருந்து எடுக்கப் படுவதாய் இன்னுங் காணவில்லை.

~~~~~~~~~~

என்றுந் தருணனாக எப்படியிருப்பது? ஒரு அமெரிக்கப் பெரியவர், உபவாச மூலமாக நமக்குள்ள வியாதி பீடைகளைப் பரிகரித்துக்கொண்டு, என்றும் கௌமார வயதிற்குரிய திடத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று சாதிக்கிறார். இவர் தன் விஷயத்திலேயே இவ்வாறு பரீக்ஷை செய்து பார்த்துவிட்டு இதை யெழுதுவதால், அநேகர் இதை நம்புவார்கள். ‘லங்கனம்’ என்பது ஔஷதங்களிலெல்லாம் உத்தமமானது, என்பது இந்த நாட்டில் வெகு காலமாக அனுபவத்தில் காணுவது. மலையாளத்தவர் இவ்விஷயத்தில் சில வைத்தியர்கள் நடத்துவதை விவரிக்கப்புகுந்தால் பெருகும். அது வெகுதூரம் போய்விட்டதாகச் சொன்னாலும், மொத்தத்தில் உபவாசம் மிதமாக இருப்பது நல்லதென்றும், அதுவும் ஈசுவரப்பிரீதியாயிருப்பது சிரேஷ்டமென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம்.



## விவசாயத்தோட்டம், பின்லே காலேஜ்

சேஷாத்திரி அய்யங்கார்

நமக்கு ஒருவர் நல்ல விஷயத்தைப் போதிக்கும்போது நல்லதென்று தோன்றினால் கேட்டதை விட்டுவிடாமல் செய்கைகளால் காண்பிக்கவேண்டுமென்கிற உறுதி மொழியைக் கடைப்பிடித்து, கனம் டேவி துரையவர்கள், 1908-வருஷக் கடைசியில், மிஸ்டர் எஸ். கே. நாயரவர்கள், வியாபார விவசாய விஷயங்களைப்பற்றிக் காலேஜில் உபன்னியாசஞ் செய்ததின்பேரில் காலேஜிலேயே ஒரு தோட்டமும் அதைச் சார்ந்து ஒரு சங்கமும் ஏற்படுத்தி, பையன்களுக்கு விவசாயஞ் செய்யக் கற்றுக் கொடுக்க, வாரத்தில் ¾-மணிநேரம் விவசாயக் கிளாஸொன்று உண்டாக்கி, ஒரு உபாயத்தியாயரும் நியமிக்க வேண்டுமென்றெண்ணிக் கருத்தை வெளியிட்டதின்பேரில், அநேகம் இந்து கனவான்கள் உதவிபுரிய வந்தனர். ஸ்ரீமத் ராவ்பகதூர் ஸ்ரீனிவாச பிள்ளையவர்கள்தான் வாரத்துக்கு ஒருதடவை வந்து சொல்லிக்கொடுப்பதாகச் சொல்லி விவசாயப் புத்தகங்கள் வாங்க ரூ. 50. கொடுப்பதாக வாக்களித்தனர். மற்றொரு இந்து கனவான் பள்ளிக்கூடத்துக் கருகாமையிலுள்ள தன் தோட்டத்தைப் பையன்களுக்கு வேலை செய்யக் கொடுத்தனர். விவசாயச் சங்கம் ஏற்படுத்தியவுடன் சுமார் 40-மெம்பர்கள் சேர்ந்தார்கள். சங்கத்தின் அங்கத்தவர்களாவதற்கு 6-மாதத்திற்கு அணா 4 கொடுக்கவேண்டும். இம்மெம்பர்கள் சில உபாத்தியாயர்களை அதிகாரிகளாக நியமித்துக் கொடுக்கப்பட்ட நிலத்தை 15-அடிச் சதுரம் சதுரமாகத் துண்டுபோட்டு தலைக்கு ஒன்று எடுத்துக் கொண்டு மிச்சமுள்ள நிலத்தைப் பிரைமரி பையன்களுக்கென்று விட்டு விட்டார்கள். அவ்விடத்தில், ஏற்கனவே யிருந்த கிணற்றைக் கட்டிப் பூட்டை போட்டு தண்ணீரிறைக்கும் நிலைக்குக் கொணர்ந்தனர். தண்ணீர் மதுரமாயிருந்தமையால் சுற்றுள்ள ஜனங்கள் அங்கேயே தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர்.

விவசாயத்துக்கு வேண்டிய மண்வெட்டி, வாளி, தண்ணீர்பாய்ச்சத் தகரச்சட்டி முதலியவைகள் வாங்கிக்கொடுக்கப் பையன்கள் வேலை செய்ய ஆரம்பித்தனர். இச்செலவுக்கு துரையவர்கள் கொஞ்சம் பணம் கையிலிருந்து போட்டார். பையன்கள் தங்கள் நிலத்தைக் கொத்தித் தண்ணீர்பாய்ச்சி விதைபோடுவதற்குத் தயாராக்கின தருணத்தில், அவர்களுக்கு விதைகள் வரவழைத்துக் கொடுக்கப்பட்டது. உபாத்தியாயர்களும், புரபசர்களும், உடுப்புகளைக் கழற்றிவிட்டு, மண்வெட்டி பிடித்து, பையன்களோடு சேர்ந்து நிலத்தைக் கொத்தி வேலை செய்கிறதானது, மாணாக்கருக்கும் உபாத்தியாயருக்குமுள்ள நட்பை நன்கு விளக்குகிறது.

.தோட்டத்திற்கு மாதம் ரூ. 4 கொடுத்து ஒரு காவற்காரன் நியமிக்கப்பட்டு அவன் தோட்டத்தில் ஆடு மாடுகள் வாராமலும், பையன்கள் லீவ்காலத்தில் ஊர்களுக்குப்போகிறபடியால், தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சும்படியாகவும், காய்கறிகளை ஒருவரும் திருடிச் செல்லாமலும் காக்கும்படி ஏற்படுத்தப்பட்டான். பையன்களும் உபாத்தியாயர்களும் வீட்டிலும் தெருவிலுமுள்ள ஆட்டு மாட்டு எருமுதலியவைகளைச் சேர்த்து அவரவர் நிலத்தில் போட்டு உரப்படுத்தினார்கள்.

இப்படியாக கத்தரி, சீமைத் தக்காளி சோளம், அவரை, புடல், மிளகாய், மஞ்சள், வெங்காயம், வெள்ளரி, வெண்டை, வாழை முதலியவைகள் போடப்பட்டு மிகவும் செழிப்பாக வளர்ந்திருக்கிறது. விளையும்
~~~~~~~~~~

பதார்த்தங்கள் யார் நிலத்திலிருந்தாலும் பறித்து ஏலத்தில் விடப்படுகிறது. இப்படி இதுவரையில் 7, 8, ரூபாய் சேர்ந்ததின்பேரில் செழுமையாக நிலத்தை வைத்துக்கொண்டதற்காக இரண்டு பையன்களுக்கு விவசாயத்திலுள்ள பூச்சிகளைப்பற்றி எழுதிய 2-ரூபாய் விலையுள்ள புஸ்தகங்கள் பரிசு அளிக்கப்பட்டது.

தவிர, பிரைமரிப் பையன்களுக்கு விவசாயம் சொல்லிக்கொடுப்பதற்காக வைத்துள்ள நிலத்தைத் துண்டுகளாகப்போட்டு ஒவ்வொரு பையன்களுக்கும் கொடுக்கப்பட்டது. பிரைமரிப் பையன்கள், மெம்பர்களாவதற்குப் பணம் கொடுக்கவேண்டியதில்லை. அவர்களுக்கென்று, சிறு நோட்டுகள் இனாமாகக் கொடுக்கப்பட்டு, அவர்கள் உபாத்தியாயர்கள் நிலங்களை விதைத்துப் பையன்களைக் கவனிக்கும்படி செய்து, தினந்தோறும் அவரவர்கள் நிலத்தில் தண்ணீர் பாய்வதையும் விதைகள் முளைத்திருப்பதையும்பற்றி எழுதும்படி செய்யப்படுகிறது. இப்படியாக $1\frac{1}{2}$-வருஷகாலமாக நடந்துவருகிறபடியால், பையன்களுக்கு விவசாயத்திலுள்ள விஷயங்கள் பல தெரிந்திருக்கிறது. இதேமாதிரி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுப் பையன்களுக்கு ஒருவித ஆவலுண்டாக்கப்படுமாயின் நமது விவசாயம் ஒருவாறு நன்னிலைமைக்கு வருமென நம்புகிறோம்.

ஹாலி தூமகேது கொஞ்சநாளாகக் கண்ணுக்குக் கண்டு வருகிறது. சென்ற ஏப்ரல் மீ 18-தேதி தான் அது வெகு தீவியமாய்க் கண்டிருக்கவேண்டும். ஆனால் கணிதமப்படியானாலும், அனுபவப்படி அதற்குப் பிறகுதான் அது வெளிச்ச மதிகரித்துக் கண்டு வருகிறது. விசேஷமாக ஒன்றும் நேரிடவில்லை.

## என்னுடைய ஜன்ம பூமிக்கு நான் எப்படி உபகாரியாயிருப்பது?

ஸ்ரீமான் பாதிரியார் ஸி. எப். ஆந்திரூஸ், எம், ஏ., அவர்கள்

[‘யூனைடெட் இந்தியா’ பத்திரிகைக்காக மேற்கண்ட மகுடத்துடன் ஷை பாதிரி நண்பர் தொடராகச் சில வியாசங்கள் எழுதிவந்திருக்கிறார். அதில் இது முதலாவது. இந்த வியாசத்தில் காணும் ஒவ்வொரு வார்த்தையும் நமக்கு அபிமதமாயிருப்பதுபற்றி, ‘விஹாரிணி’ அபிமானிகளுக்கு இதைச் சந்தோஷத்துடன் சேர்ப்பித்திருக்கிறோம் —எடி.]

பள்ளிக்கூடங்களில் படித்துவரும் மாணாக்கரும், எனக்குக் கடிதம் எழுதிவரும் வேறு அனேகரும் என்னை அடிக்கடிக் கேட்கிறார்கள், ‘ஐயா, என் ஜன்ம பூமிக்கு நான் எப்படி நற்காரியம் செய்து திருப்திபடுவது?’ என்று. இக்காலத்தில் அனேகமாய் ஜனங்களெல்லோருக்கும் இந்த எண்ணம் அதிகமாகியே வருகிறது. அதிலும் குமாரர்களாயிருப்பவருக்கு இவ்விஷயத்தில் ஆக்கிரகம் வெகு அதிகம். ஆனால் இவர்களனைவருக்கும் எண்ணியபடி நடப்பதுதான் பிரயாசமாயிருக்கிறது.

இந்த வியாசத்தில் இனிக்காணுவதெல்லாம் சிலருக்கு வெகுசாமான்னியமென்றே படும். அப்படித்தானிருப்பதாக நானும் ஆலசியமின்றிச் சொல்லிவிடவேண்டும். இதில் அதிசயமாகவொன்றும் தெரிவிக்க வரவில்லையென்றே நான் சொல்லிவிடுகிறேன். லௌகிக காரியங்களெல்லாம் அனேகமாயிப்படித்தானிருக்கின்றன. அவைகளில் ரகசியமுமில்லை, விந்தையாகவும் ஏதாவது இருப்பதாகக் காணவில்லை. ஆனால் இக்காரணங்கொண்டு அவைகளைக் குப்பையென்று ஒதுக்கி வைப்பதற்கில்லை.



தவிர என்னைக் கேட்பவருக்கு ஏதாகிலும் உதவட்டுமென்று எழுதுவதில், ‘நான் என்ன செய்யவேண்டும்?’ என்று கேட்பவர் அனேகமாய் நடுத்தரமான புத்தியும், யுக்தியும், கல்வியுமுடையவரென்று எனக்குக் காணுவதால் அவர்களுக்காகவே நான் இதையெழுதுவது. புத்தியும், யுக்தியும் அபாரமாய் நிறைந்திருக்கும் ‘அபூர்வ வஸ்துக்களுக்கு’ எழுதியுபதேசிப்பதில் விசேஷ பிரயோஜனம் இல்லை. ஏனெனில் அவர்கள் தமக்கு வேண்டும் நெறியைத் தாமாகவே கண்டுகொள்வார்கள். ஆதலாலவர்களுக்கு மார்க்கதரிசியாக ஒன்றும் வேண்டியது இல்லை. ஆகவே நான் எழுதுவது சாமான்னியருக்காக வேண்டியே தான். அவர்களில் அனேகமாய் எல்லோரும் வயிறு வளர்ப்பதற்காக மெத்தவும் பாடுபட்டு உழைப்பவர்கள். ஏதோ கொஞ்சம் ஒழிவுகிடைத்த காலத்தில், ஜன்மபூமிக்கு ஏதாகிலும் உபகாரம் செய்யவேண்டுமென்று அவர்களுக்குக் காணுகிறது. அந்த ஒழிவை எப்படி நன்றாயுபயோகிப்பது? இதற்குத்தான் அவர்கள் வகைதேடுவது.

இம்மாதிரி ஜனங்களுக்கு நான் முதற் சொல்லுவது இது. ‘முதன் முதல் இந்தியாவைப்பற்றி உமக்கு வேண்டியதைத் தெரிந்துகொள்ளும். அதுதான் சரியான ஆரம்பம். இந்தியாவின் தற்காலஸ்திதியென்னவென்று கண்டுகொள்ளவேண்டும். ‘அமைச்சனது ஆண்டுநூல்’ * போன்ற புஸ்தகம் இரண்டொன்றையெடுத்து, அதில் உலகத்திலுள்ள பல தேசங்களையும்பற்றி யெழுதியிருப்பதை ஜாக்கிரதையாகப் படிக்கவேண்டும். இப்படிப் படித்து, அந்தந்தத் தேசத்தின் ஜனத்தொகை, மதம், ஆசாரம், துரைத்தனம், வியாபாரம், கல்வி, முதலியவற்றிலுள்ள வர்த்தமான தசையை விசாரிக்கும்பொழுது, பல விஷயங்களைப்பற்றித் துக்கப்படவேண்டித்தானிருக்கும். இருந்தாலும் சில விஷயங்களில் உற்சாகமும் சந்தோஷமுமடையக் காரணமுங் காணும். இப்படி ஜாக்கிரதையாய்ப் படித்துவருவதில், இந்தியர்களுக்கு இனி வருங்காலத்தில் என்னவாகுமோ என்கிற பிரமை சற்று மாறும். அது மாறிக் காலக்கிரமத்தில் எல்லா நன்மையும் அடையலாமென்கிற உற்சாகமும் உண்டானால், அதனால் இத்தேசத்திற்கு இவ்வளவு நன்மைதானுண்டாகுமென்று வரையறுக்க யாராலு முடியாது. வாஸ்தவமின்னதென்று செம்மையாய்த் தெரியுமிடத்து, மனதிலுள்ள தப்பெண்ணம் ஓடும். இருக்கும்ஸ்திதி விளங்கினால், மேல் நடக்கவேண்டிய காரியமும் அவர்களுக்குக் கிரமமாகப் புலப்படும்.

தற்கால ஸ்திதியை அறிந்து வரும்பொழுதே, முற்கால ஸ்திதியையும் நன்றாயறிந்து வரவேண்டும். இதை வேண்டுவோர் இந்தியாவின் மூன்று பிராசீன தசைகளைக் குறித்து வாசித்தல் தகும். அவையாவன, ‘பிராசீன ஆரியாவர்த்தம்,’ ஒன்று, இந்தியாவில் புத்த மதம் பிரபலித்திருந்ததையொன்று, பிறகு மகம்மதீயர் ராச்சியபாரம் செய்ததையொன்று. இவ்வாறாக இம்மூன்றையும் பற்றி நாம் வேண்டியதையறிந்து கொண்டால், பழைய காலத்தில் இந்தியா இப்படியிருந்தது, அப்படியிருந்தது, என்று வீண்பேச்சைப் பேசி, அர்த்தமில்லாமல் எழுதி, வருவதை விட்டு, இந்தியாவிற்கு உள்ள பெருமையை உள்ளபடியறிந்துகொண்டுமேல்நடக்கவேண்டுவதை யோசிக்கலாம்.

பழையகதையை நன்றாயறிந்துகொண்டால், வாஸ்தவமாக நடந்ததின்னதென்றும், வெறுங்கதையின்னதென்றும் விவேகபூர்வமாய்த் தெளியலாம். இங்கிலாந்திலும் இப்படித்தான் எங்கள் கதைகளை நாங்கள் பகுத்தறியவேண்டியிருந்தது. சென்ற நூறுவருஷங்களாக நாங்கள் சிரமப்பட்டு, ஐரோபாவில் முன்னாட்களில் பிரபலமாயிருந்த கிரேக்கர், ரோமர், ஆங்கிலேயர் முத

* Statesman's Year Book.

லிய சகலருடையவும் சரித்திரங்களை யுக்தியுக்தமாகத் தெரிந்து எழுதிக்கொண்டோம். இந்தியாவிலும் இக்காரியம் ஆகித் தீரவேண்டும். செய்துவந்தால், காலக்கிரமத்தில் நயமே யொழிய நஷ்டமில்லை. இந்தியாவின் பழைய தசைகளெல்லாம் நமக்குத் தெளிவாகி, ஜனங்களுக்கிருந்த கஷ்டநிஷ்டூரங்கள் எப்போதும் ஒருவகைத்தென்பது விளங்கி, எல்லாம் மானுஷ்யமென்று காணும். அப்படிக் காணுமிடத்து, ராக்ஷசர்களையும், தேவதைகளையும பற்றிப் பதர்ப்பேச்சுகிற்கும்மகாஜனங்களுக் குப்பொதுவாயுள்ள கஷ்டநிஷ்டூரங்களை நாம் கவனித்துத் தாரதம்மியங் காணலாம்.

இப்படி நடந்ததையும், நடப்பதையும் நன்ருயறிந்தவருக்கு, இந்தியர்களுடைய ஆசாரம், குணம், புத்திவிபவம், இவைகள் வெளியாகிவிடுவதால், இருவகையிலும் நன்மை கிடைக்கும். ஒன்று, இந்தியாவிலுள்ளதை யெல்லாம் இகழ்ந்து, மேனாட்டாருடைய நடை, உடை, பாவனை, மதம், ஆசாரம் முதலிய யாவற்றையும் புகழ்ந்து, நாமும் அவ்வாறு எல்லா விஷயத்திலும் மேனாட்டு வேஷமே போட்டுத் தீரவேண்டுமென்று குதிப்பதும் நின்றுவிடும். மற்றொருபுறம் அனேகர் நின்றுகொண்டு, வெளியிலிருந்து வருவதெல்லாம் அனர்த்தகரமென்று பயந்தும், பயமுறுத்தியும், ஜனங்களை முன்னுக்கு வரவொட்டாமலும், கைகாலாடவொட்டாமலும், அடித்து வெருட்டுவதும் நின்றுவிடும். இவ்விரண்டு முரட்டு வழிகளிலும் ஜனங்கள் போவதில்லையானல், இந்தியாவில் நலமாயுள்ள ஆசாரங்களையும், மதங்களையும் திடப்படுத்திக் கைக்கொண்டு, வேண்டாதவைகளை நீக்கி, எந்நாட்டுக்குரியனவாயினும், நன்மை பயப்பனவாகிய வழிகளைப்பற்றி மகாஜனங்கள் முன்னுக்கு வர ஏது உண்டாகும். 'கருவிட்டாற்றுவார், புண்வைத்து மூடார் பொதிந்து' என்று பெரியோர் சொல்லியது வாஸ்தவமாம்.

சென்ற ஐம்பது வருஷகாலமாக இந்திய மகாஜனங்களுக்கு அவர்களுடைய பெரிய தனக்காரராலேயே வெகு உபத்திரவமுண்டாகி வந்திருக்கிறது. ஏனெனில் இப்பெரிய தனக்காரரில் அனேகர் பெரிய தனத்திற்கு வேண்டியனவாக நாம் மேற்கூறிய யோக்கியதையைச் சம்பாதிக்காமற் பிரவேசித்ததால் தான். முதல்தரம் பெரிய தனக்காரராகிய ராஞடே, வித்தியாசாகரர், முதலியோரைக் குறித்தல்ல நாமிப்போது பேசுவது. சாமான்னியப் பெரிய தனக்காரரைக் குறித்தென்றறிதல் வேண்டும். இவர்களில் அனேகமாய் எல்லோரும் புலியைப்பார்த்து நரி சூடிட்டுக்கொண்ட கதையாக, எவ்விஷயத்திலும் ஐரோப்பிய வேஷந்தரித்து, இருவகையாருக்கும் ஆகாதவராகிப் பற்றுவிட்டுப் பாழாய்ப் போயிருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில், இந்தியர்களுக்குள் ஒருவிதமான 'ஐரோப்பிய சுரம்' பிடிபட்டு அவர்களை ஆட்டிவிட்டதில், மறுபடி சுரம் தெளிந்தபின், கைகால்களுக்கு வலிமை குறைந்து தேகம் மெலிந்த தொன்று தவிர வேறுபயன் அதனால் உண்டாகவில்லை. 'தில்லை கோவிந்தன்,' என்னும் புஸ்தகத்தைப் படிப்பவருக்கு இது விளங்கும். இப்படி யாவதினால், மேனாட்டில் நலமென்று காணும் ஆசாரங்கள்கூட இவ்விடத்தில் வந்து வேரூன்றுவது பிரயாசமாகிவிட்டது.

இப்படி நடப்பதற்கு மாறாக, ஒவ்வொரு இந்தியனும், தனது தேசசரித்திரத்தை நன்றாகப்படித்தறிந்திருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இந்தியாவின் தற்கால ஸ்திதியையும், மற்றதேசங்களுக்கும் அதற்குமுள்ள தாரதம்மியங்களையும் அறிந்திருப்பதாகவும் வைத்துக்கொள்ளுவோம். இப்படி யாகும்போது, அவனுக்குத் தன் ஜன்ம பூமிக்குப் பழைய நாளில் இருந்த நல்லதசைகளைப்பற்றி வேண்டியவளவிற்குப் பெருமைப் படுவதற்கும்,



அதற்கு வாஸ்தவத்தில் உள்ள மகிமையைப் பகுத்தறிவதற்கும், இடமுண்டாகும். அதனால் மேனாட்டுச் சம்பிரதாயங்கள் இங்கு வரும்போதெல்லாம், அவன் அவைகளுக்குஉடன்பட்டுச் சும்மா இருக்கமாட்டான். அவற்றில் வேண்டாதனவற்றை வரவொட்டாமல் தடுக்க முயல்வான். நல்லது வந்தாலோ, அதைச் சந்தோஷமாய் உபசாரத்துடன் வரவழைப்பான். இப்படித்தான் எல்லோரும் நடக்க வேண்டும்.

இதற்கு உதாரணமாகச் சில விஷயங்களை அடுத்தமுறை விசாரிப்போம்.

---

இந்த வருஷம் மலையாளி நாயர்குலத்திலுதித்த ஸ்ரீமதி பாருகுட்டி அம்மாள் பி. ஏ. பரீக்ஷையில் தேறி பரிசுகளும் பெற்றது வெகு விசேஷமாம். இந்த அம்மாள்தான் முதல் நாயர்ஸ்திரீ பி. ஏ. இவர் திருவாங்கூர் சமஸ்தானத்திய காலேஜில் படித்துத் தேறியவர். ஆதலால் திருவாங்கூரில் புத்தியும், உழைப்புமுள்ளவர்கள் படித்துச் சீருஞ் சிறப்புமாயிருக்க வகையேற்படுத்திய சத்திரபதி மகாராஜாவுடைய உபயமும் அம்மூலியமாக முன்னுக்குவரும் ஸ்திரீ வித்தியார்த்திகளும், மேலுமேலும் சிறப்படைந்து, தமது நாட்டாரைக் குறித்து இதரர் கூறும் குற்றங்களைக் குறைத்து, குணங்களைக்கூட்டி, எல்லோருமெச்ச வாழவேண்டுமென்பது நமது கோரிக்கை. மலையாள ஸ்திரீகளுடைய ஆமோதனமிருக்குமாகில் மருமக்கதாயமும் அதன் துர்லக்ஷணங்களும் இத்தனை காலம் செழித்திருக்குமா?

ஹாலி தூமகேது முதன்முதல் கலியுகம் பிறந்தவுடன் தோன்றியதாகவும், இன்றையவரை 66-முறை தோன்றி யிருப்பதாகவும் இலங்கையில் ஒரு ஜோஸ்யசாஸ்திரி உபந்நியாசம் செய்தாராம். தூமகேதுக்கள் வந்தால் ஏதாகிலும் உற்பாதங் காண வேண்டுமென்று நமது ஜனங்கள் வெகு நாளாக எண்ணிவந்திருப்பதில், சென்ற 65-முறைகளில் நடந்த உற்பாதங்கள் இன்னவையென்று நமக்குத் தெரியாது. பிரகிருதத்தில்மட்டும் ஒருவகை யுற்பாதங் காணுகிறோம். ஹம்பி ஜகத்குருதலாய் லாமாவுக்கு முகமன்கூறி மதவிரோதத்தைத் தொலைப்பதாகக் கூறியதும், ரோமன் போப்பு அமேரிக்கக் கோட்டீசுவரரனேகர் பிராடெஸ்டாண்டு கிறிஸ்தவராயினும் நீடூழி வாழவேண்டுமென்றும் நற்கதி யடையவேண்டுமென்றும் ஆசிர்வதித்ததுமேயாம். ஆனல் இவ்வுற்பாதங்களால் நன்மையே தானுண்டாகவேண்டுமாகக் காணுகிறது.

## திருக்குறள் விஷய விமர்சனம்

ஸ்ரீமான் பண்டிதர், எஸ்.
வெங்கடரமணய்யர்.

(270-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விஷயத்தை யபேக்ஷித்துப் பார்க்குங்கால், இந்நூலுக்குச் சமதையாகக் கூறுவதற்கு இந்தியாவில் வேறு பாஷைகளில் நூலில்லையென்றே தாராளமாய்ச் சொல்லலாம். வடமொழியில் மட்டும், இதர விஷயங்களில் பர்த்ருஹரி நீதி சதகத்தையும், மதவிஷயத்தில் ஸ்ரீபகவத் கீதையையும் சொல்லலாம். என்றாலும் நடைவிஷயத்தில் நீதி சதகத்திற்கும், குறளுக்கும் வெகுபேதம். பர்த்ருஹரி நடைகேட்க வெகு இனிப்பென்பதற்குத் தடையேயில்லை. ஆகிலும் 'கடுகைத்துளைத்ததாகிய' பெருங்காரியம் குறளுக்கு மட்டுமே சிறந்துள்ள லக்ஷணமாம். சொற்சுருக்கம் இனி இதிற்காணுவதைவிட விசேஷித்துக்காணுதல் அரிது. தவிர மற்றோர் விஷயத்தில் பர்த்ருஹரிக்கும் நாயனருக்கும் வேற்றுமைகாணும். தன்னுடைய மதத்தைப்பற்றிப் பேசுகையில் வடமொழிப்புலவர் இவ்வாறு கூறியிருக்கிறார்:— "இவ்வுலகங்களுக் கெல்லாம் அதிபதியான மகேசுவரன் விஷயத்திலும், இவற்றிற்கு அந்தராத்துமாவாகிய ஜனார்த்தனன் விஷயத்திலும், எனக்கு வாஸ்தவத்தில் பேதமென்பது காணுவதில்லை. என்றாலும் எனக்குச் சந்திரசேகரனிடத்தில் தான் பக்தி பெருகுகிறது," என்று.

நாயனரோ இவ்விஷயத்தில் யாராலும் அசைபடாவண்ணம் எழுதிவிட்டு வேடிக்கை பார்க்கிறார். கடவுள் வாழ்த்தையெடுத்துவியவகரித்தால், அவரவர் மனோதருமத்தையனுசரித்து சைவ, வைஷ்ணவ, புத்த, ஜைன, கிறிஸ்தவ, மகம்மதீய மதஸ்தர் யார் வேண்டுமென்றாலும் நாயனரைத் தமதுமதஸ்தராக்கிவிடலாம். அப்

படியேதான் இவ்விஷயத்தில் வழக்குத்தொடர்ந்தும் வந்திருக்கிறது. ஜைனர்கள், 'மலர்மிசையேகினான்,' என்பதுகொண்டு குறளைத் தமது நூலாக்கியுள்ளர். அப்படியே ஏனையோரும். ஆனால் நாம் மேற்குறித்தபடி சமரசமாகக் குறளில் காணும் விஷயங்களைப் பெரும்படியாக விசாரிக்குமிடத்து, நாயனார் வேத சாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்டு, உபநிஷத்து மார்க்கத்தைக் கைகொண்டவரென்று மட்டும் கூறுதல் சாத்தியம்.

உதாரணமாகக் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்திலடங்கிய பத்துக்குறளையும், பரிமேலழகர் தந்திருக்கும் உரையினது உதவியைக்கொண்டு சுருங்க விசாரிப்போம். எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து," என்பதை முதனூல் காணாது ஆராயுமிடத்து, எந்த மதஸ்தர் வேண்டுமானாலும் தமதாகக்கொள்வது சாத்தியம். ஆனால் முன் பின் வருவனவற்றை யொட்டிபார்க்குமிடத்தோ, இக்குறளில் முதற் பகுதியைப் பகவத்கீதையிலும், மற்றதை வேதாந்த சூத்திரம், என்றால், தைத்தரீய முதலிய உபநிஷத்துக்களிலும் தெளிவாகக் காணலாம். அப்படியே இரண்டாவது குறளைப்புத்தமதநிராகரணமாகவும், மற்றவைகளைப் பக்திமார்க்கத்தை நன்கு விளக்கி, சுவர்க்க முதலிய காமியங்களைக் கண்டித்து, பரமபுருஷனைப்பஜித்து, அம்மூலமாக அமிருதத்துவம்பெற்று, சமுசாரசக்ரப்பிரமையை யொழித்து விடுவதற்கு ஏற்றனவாகவும் கொள்ளல் வேண்டும். 'மலர்மிசையேகினான்,' என்பதும், அவ்வாறே ஸ்ரீ நாராயண உபநிஷத்துபோன்ற இடங்களில், 'ஹிருதயமாகிய புண்டரீகம்' என்று வருணிக்கப் பட்டிருப்பதை விளக்க வந்ததென்று உரையாசிரியர் கொண்டது வெகு சரியென்பது விளங்கும். "அன்பானினைவாராது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின்," என்றதனால், ஸ்ரீ பகவத் கீதையில், "எந்தெந்த ரூபமாகப் பக்தன் என்னைச் சிரத்தையுடன் அர்ச்சிக்க விரும்புகிறானோ" என்று ஆரம்பிக்கும் சுலோகத்தை விளக்கியதாயிற்று. அப்படியே 'அவிச்சையை இருள்' என்றதற்கு, 'இன்னதன்மைத் தென ஒருவராலுங் கூறப்படாமையின்,' என்றதால் கீதையில், 'என்னுடைய மாயை இத்தன்மைத்தென யாருஞ் சொல்ல முடியாதது' என்று ஸ்ரீகிருஷ்ணன் சொன்னதை மொழிபெயர்த்ததாயிற்று. 'எண்குணத்தான்' என்பதைச் சைவர், ஜைனர் முதலியோரும், 'அஷ்டாக்ஷர மூர்த்தி' என ஸ்ரீவைஷ்ணவரும் தமது உபாசன மூர்த்தியாகப் பாவிக்கலாம். ஆனால் முந்திப்போகியதையும், பிந்தி வருவதையும், ஆராயுமிடத்து, முரட்டுவாதத்திற்குத் தேவரிடங் கொடுப்பதில்லை யென்பது நன்குவிளங்கும்.

இவ்வாறு திருக்குறளில் காணும் ஒவ்வொரு முக்கியக்கருத்தும் மேற்கோளின்றி யமைவதல்லவென்று மூலத்தினாலும், அதற்கு 'உச்சி மேற்புலவர் கொள்ளும்,' அழகர் உரையினாலும், ஏற்படுவதால், ஒருவிஷயம் பிரசித்தமாகிறது. அதாவது நாயனார் கருத்தை நன்கறியவேண்டுவோர், அவரது கிருதியைமட்டும் படித்துவிட்டுப் பிறகு தமது யுக்தியையும், பிடிவாதத்தையுமே பிரமாணமாகக் கொண்டு கக்ஷிபேசுதல் பெரிய அனர்த்தத்திற்குக்காரணமாவதன்றிப் பயன்றருவதல்லவென்பது. ஆதலால், ஓ விவேகிகளே, தமிழில் சிரேஷ்டமாகக் கொள்ளும் திருக்குறள் மட்டுமேயன்றிப் பழங்காவியங்களையும் நன்கறியவேண்டுவோர், அந்தந்தக்கிரந்த கருத்தருந்திருந்த யோக்கியதையில் ஏகதேசமாவது பெற்றுத்தான் பலனடையவேண்டும். அவ்வாறு செய்யாதநிமித்தமே கணக்கிறந்த கக்ஷிகளுக்கும், வீண்வாதங்களுக்கும், பதர்ப் பேச்சுக்கும் இடமுண்டாகிறது. இம்மாதிரி



யனர்த்தங்களுக்குச் 'சுத்தத்தமிழர்'காரணம். 'சுத்தத்தமிழ்' நூல்களிருக்குமாகில், அவற்றிற்கு இந்த நியாயமில்லை. ஆனாலப்படிபட்ட நூல்களில்லை யென்றே நிச்சயமாயக்காணுவதால், இருப்பவைகளை நேராயறிவதற்கு 'வட மொழிப் பொறாமையை, விட்டு, ஒவ்வொருவரும் வடமொழி சிறிது கற்று நற்பயனடைவதே விவேகமென்று தாராளமாய்ச் சொல்லலாம். அப்படியில்லாதவரை குறள் முதலிய கிரந்தங்களுக்குப் பொருளுரைப் போருங் கேட்போரும் யானைகண்ட குருடரைப்போல வாதாடி வீண்கால க்ஷேபஞ் செய்வது பிரத்தியக்ஷம்.

இது நிற்க, இவ்வளவு பெருமை வாய்ந்துள்ள இந்நூலை நாம் இக்காலத்தில் என்ன செய்கிறோம்? பண்டிதராயுள்ளோர் ஒவ்வொரு குறளும் 'எழுகடலை யடக்கிக்கொண்டிருப்பதாக' எப்போதாகிலும் சொல்லிவிட்டு, குறளுரைக்கும் கருத்திற்கும் வேண்டாப் பேச்சை வேண்டியமட்டில் பேசி வருகிறார்கள். பி. ஏ. பரீக்ஷை மாணாக்கர் சிலர் மட்டும் வருஷத்திற்கு நூறுகுறள், ப-அ. உரையுடன் ஏதோ ஒருவாறுப் படித்துவிட்டுக்கூடிய சீக்கிரத்தில் மறந்து விடுகிறார்கள். 'விஹாரிணியில்' ரஸப்பிரகரணத்தைப் பற்றிப் பேசியவிடத்து ஸ்ரீமான் தேசிகாசாரிய சுவாமிகள், இதர காவியங்களுக்குச் சொல்லிய 'சுபலக்ஷணங்கள்' இதற்கும் நன்றாய்ப் பொருந்தும். மொத்தத்தில் கிரந்தத்தைப் பற்றி மாணாக்கருக்கேதாகிலும் தெரிதல் நலமென்கிற எண்ணமே கற்பிப்போருக்கில்லை யென்றால், மாணாக்கருக்குக் கிரந்தவிஷயத்தில் ருசியற்றிருப்பது அதிசயமில்லவே. இதை மற்ற காவியவிஷயத்தில் எப்படியோ போகட்டுமென்று விட்டாலும் விடலாம் ஏனெனில், காவியங்களைப் படித்து அவற்றிலுள்ளதை யுள்ளபடி யறிந்து ரஸமநுபவிப்பது, உலக வாழ்க்கையில் பல விரத்திலும் அடிபட்டு அனுபவமுதிர்ந்த பெரியோர் தாமாகப் படித்து, ஆராய்ந்து, மனனம் செய்வதாலேயே உண்டாவதன்றி ஒருவர்புகட்ட வருவதன்று. அவ்வாறு அனுபவிக்கத் துணைக்கருவிகளான வியாகாணம், நிகண்டு முதலியவற்றையும், தர்க்கம் முதலிய சாஸ்திரங்களையும் மட்டுமே நாம் பிறர்மூலமாகக் கற்றறியவேண்டுவது அவசியமாம். இவைகளைக்கற்று லௌகிகத்தில் அநுபவம் முதிருமளவிற்குக் காவிய விஷயத்திலடையக்கூடிய இன்பம் தானாகவே வரவேண்டுவதே யாதலின், அது பிறர், 'இதோ சொற்சுவை,' 'இதோ பொருட்சுவை, 'அதோ சோகம்,' 'அதோ வீரம்,' என்று கூவுவதால் உண்டாவதன்று.

ஆகையால் திருக்குறள் சாஸ்திரமாதல்பற்றி அதைக்கற்றவர் மூலமாகக் கேட்டுத்தான் அதன் பெருமையறிதல் சாத்தியம். கேட்பவரோ இக்காலத்தில், குருநலவாசஞ் செய்து, "செவி வாயாக, நெஞ்சு களனாகச் சித்திரப் பாவையினத்த கவடங்கி," க்கற்கும் மாணாக்கரல்ல. பாடம் சொல்லுவோரும் அனேகமாய்ப் பூரணபண்டிதரன்று. ஆகவே குறளுக்குத் துர்த்தசை யிருவாறும் மேலிட்டு வந்திருக்கிறது.

போனபடி எக்கேடோ கெட்டுமென்று விடலாமென்றால், நாயனார்கூறும் விஷயங்கள் அனேகமாய்ப்பண்டிதர், பாமரர் எல்லோருக்கும் சுகிர்தஞ் செய்யக்கூடியவை. 'பாலொடு தேன் கலந்தற்றே' முதலிய காமத்துப் பாற்குறளைச் சாமான்னியருக்கானவையன்றென்று தள்ளிவிட்டாலும், அறம், பொருள், இவ்விரண்டு விஷயங்களைப் பற்றி நாயனார் கூறியிருப்பதைத் தமிழ் படித்தாகச் சொல்லிகொள்ளும் ஒவ்வொருவருமறிதல் வெகு நலம். அதிலும் இக்காலத்தில் 'அரசு'விஷயத்தைப்பற்றிப்பலர் பலவிதமாகப்பேசி வருவதில் அவ்விஷயத்தில் இத்தமிழ் முதல்வர் என்னசொல்லுகிறாரென்

பதை நம்மில் பெரியோர், சிறியோராகிய நல்லோர் யாவரும் அறிதல் வெகு அவசியம், 'அறம்' என்பது, இந்து, மகமதீயன், கிறிஸ்தவன், ஆசியாக்காரன், ஐரோப்பியன் முதலிய சகலருக்கும் பொதுவாகச் சிறந்து நிற்றலின், விவேகிகளனைவருக்கும், எக்காலத்திலும் சிரமேற் கொள்ளவேண்டிய விஷயம்.

ஆதலால் திருக்குறள், பண்டிதருக்கு மட்டும் புதைபொருள் கண்டுபிடித்து ஆனந்திக்க வேற்பட்ட ரகசியக் கிரந்தமன்று. பண்டிதர், பாமரர், எல்லோருக்கும் உதவவேண்டிய பேருடைமை. அப்படியாயின் அதை யெல்லோருக்கும் எப்படிச் சேர்ப்பிப்பது? மேற் கூறியபடி கற்போர்தாமாக வருந்திக் குருவிடத்திற் பாடம் கேட்கப் போவதுமில்லை. அங்ஙனம் வழிப்பட்டுப் பிரயோஜனமடையக்கூடிய குருக்கள் மாரும் அனேகமாயில்லையாக, வேறுள்ள மார்க்கம்யாது? பத்திரிகை வாயிலாக ஏதோ சிறிது சிறிதாக எழுதியும் பேசவல்லோர் ஆங்காங்கு பிரசங்கித்தும் வருவதுதான் நமக்குக்கைவசமாயுள்ள சாதனங்கள்.

சமீபத்தில் ஸ்ரீமான் பு. து. ரத்தினம் பிள்ளையவர்கள் இதை யுத்தேசித்துப் பரிமேலழகர் உரையைச் சாமான்னியத் தமிழில் பொழிப்பாக எழுதிப் பிரசுரஞ்செய்திருக்கிறார். அவர் செய்தவரை காரியம் நல்லதுதான். ஆனால் இங்கிலீஷில் இம்மாதிரிப் புஸ்தகம் எழுதுவோர் செய்கிற படி, நாயனருடைய இடம், காலம், குலம் முதலியவற்றைச் சற்று ஆராய்ந்தும், குறளின் விஷயத்தை பெரும் போக்காக விமர்சனம் செய்தும் வந்திருப்பாராயின் இன்னும் உபகாரமாக விருந்திருக்கும். நாளதுவரை பொருவரும் இதைச் செய்யவில்லை யென்பது கொண்டே நாம் இதில் பிரவேசித்தோம். இனிச் சாவகாசமுள்ள போதெல்லாம் ஒவ்வொரு தலைப்பில் 'அறம்,' 'பொருள்' ஆகிய இருபாலையும் உதாரணத்துடன் விமர்சனம் செய்து வருவோமாக.

# புஸ்தக விமர்சனம்

1. சந்நியாசி கீதமும், பாரத ஜாதிய கீதமும். ம. கோபாலகிருஷ்ண அய்யர் மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர். விவேகபாநு அச்சுக்கூடம். விலை அணா 2.

இவை ஸ்ரீமான் காலஞ்சென்ற விவேகானந்த சுவாமிகளும் ஸ்ரீ மதி ஆர்தன் அம்மையும் முறையே ஆங்கிலத்தில் செய்த கீதங்களின் மொழிபெயர்ப்பாம். அவற்றின் ஸாரத்தைத் தமிழில் கூடியமட்டில் வருவித்துச் சாமான்னியரும் படித்து ஆனந்தப்படும்படி பண்டிதர் முயன்றிருக்கிறார். ஆதலால் அவர் மனோபீஷ்டம் முடிவு பெறுமென்று நம்புகிறோம்.

2. இந்து ஆக்க சிகிச்சா சாஸ்திரத்துடன், ஸ்ரீ சுப்பிரமணியர் ஸர்வரோக நிவாரண மாந்திரீகம். சு. இராமசுவாமி அய்யர். விலை ரூபா 1-8-0.

"மந்திரமில்லாமல் அக்ஷரமில்லை. மருந்தாகாத மூலிகையில்லை," என்பது பழைய வாக்கியம். அதையனுசரித்து இந்தத் தேசத்திலும், வேறு தேசங்களிலும் பல முறைகளேற்பட்டுச் சிலகாலம் தழைத்தும், வேறு சமயங்களில் வாடியும் வந்திருக்கின்றன. நமக்கு விஷயம் தெரியாதாதலால் புஸ்தகத்தின் யோக்கியதையைக் குறித்துப் பேசுவது அழகல்ல. மொத்தத்தில் மந்திரங்களைக் குருமுகமாய் உபதேசம் பெற்று, உருவேற்றிப் பலன் பெற வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இக்கால தருமத்தை அனுசரித்துப் புஸ்தகமூலமாயும் பலனடையலாமானால், அதற்கு இது ஏற்ற கருவியாகலாம். முக்கியமாய் இது சிகிச்சையைப் பற்றியதாதலால், இந்த முறையில் பக்தியுள்ள இஷ்டர்கள் இதைக் கைபாண்டு நயாஷ்டங்களை வெளியாக்குவாராக.

3. ஸ்ரீமத் பாகவத வினாவிடை. முதல்பாகம். ஸ்ரீமான் ஆ. ஸீ. கஸ்தூரிரங்க அய்யரவர்களியற்றியது. விலை ரூ 1. ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர்.

இதில் ஸ்ரீமத் பாகவதம் முதலிய ஒன்பது ஸ்கந்தங்களின் ஸாரத்தை அய்யரவர்கள் திரட்டிச் சேர்த்திருக்கிறார். சில சித்திரப்படங்களும், பழைய சம்பிரதாயம், புதுச்சம்பிரதாயம் இரண்டும் கலந்து காணுகின்றன. நடை, விஷயம் இரண்டும் குறைவற்றே யிருக்கின்றன. 'வினாவிடை' விஷயத்தில் மட்டும் நாம் முன் எழுதியது பிசகென்று காணவில்லை. அய்யரவர்களுக்கும் தமது மதம் உறுதியாகப் பிடிபட்டிருப்பதுபோலும்.



பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரம்.—பிழைக்கும்வழி, விவேகபோதினி, சக்கரவர்த்தினி, வித்தியாபானு, ஹிதகாரிணி, ரஞ்சிதபோதினி, மாதர் மனோரஞ்சனி, மங்களோதயம் (மலையாளம்), இருஷிகன், பிரபஞ்சம்.

பக்ஷாந்தரம்.—இந்து சாதனம், உதயதாரகை.

வாராந்தரம்.—நீலலோசனி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, திராவிடாபிமானி, வித்யாபாஸ்கரன், பாண்டியன், விஜயா, நாகர் கோவில் டைம்ஸ்.

வாரம் இருமுறை.—மைசூர் டைம்ஸ்.

# சமாசாரக் குறிப்புகள்

ஸ்ரீமான் வி. வ. கோபாலகிருஷ்ணய்யரை 'விஹாரிணி' அபிமானிகள் அறிவார்கள். 'வாமதேவன்' என்ற கதை தொடர்ச்சியாய் 3-நெம்பருக் கதிகமாகவே வந்திருக்கிறது. இன்னும் வருமென்றே நாம் நம்பியிருந்தோம். அப்படியிருக்க ஈசுவர சங்கற்பம் வேறாகி, அவர் சென்ற பங்குனிமீ 1உ தெய்வகதியடைந்து விட்டதாகக் கேட்டு மெத்தவும் விசனிக்கிறோம். தமிழ் அபிவிர்த்தி விஷயத்தில் அவருக்கு இருந்த ஆக்கிரகம் இவ்வளவென்று ரூபிக்க நம்மிடத்தில் அவருடைய கடிதங்களும், இரண்டொரு வியாஸங்களுமிருக்கின்றன. 'குணசீலன்' என்னும் நாவலொன்று மட்டும் பூராவாக வெளிவந்திருக்கிறது. இவர் மனைவிக்கு 17-வயதுதானென்று கேட்டு மெத்தவும் வியாகூலமடைகிறோம். ஈசுவரன்தான் அந்த அம்மாளுக்கு வேண்டிய தைரியத்தை அருளவேண்டும்.

***

எத்னா எரிமலை புகைந்து கற்குழம்பு பெருகி அனேக சங்கடங்கள் முதலில் விளைந்த போதிலும், முற்காலத்தில் இரண்டொருமுறை நடந்த மாதிரி வெடித்துப் பெரிய அனர்த்தமொன்றும் இதுவரை காணோம். இனியும் அப்படி யாகாமலிருக்கும்படி ஈசுவரனைப் பிரார்த்திக்கிறோம்.

***

"மீசையைச் சிரைத்து விடுதலே சுகாதாரமார்க்கமாம். இல்லாவிட்டால் பலவித நோய்களுக்கு இடமுண்டாம். நாம் சுவாசத்தை வெளிவிடும்போது அந்தச் சுவாசத்தில் நம் தேகத்துள் இருக்கும் அசுத்தங்களின் அணுக்களெல்லாம் கலப்புண்டிருப்பதால் அவைகள் வெளிப்படும்போது காற்றுமட்டும் ஆகாயத்தில் கலந்துவிட, கனமான அணுக்கள் மீசையின் அடிப்பக்கங்களில் ஒட்டிக்கொண்டு விடுகின்றனவாம். இவைகள் வேர்வை முதலிய பலவற்றால் நாளடைவில் அழுகி நம் சுவாசம் உட்கொள்ளும்போது அதனுடன் இந்த விஷ அணுக்கள் தேகத்திற்குள் சென்று வியாதிகளை உண்டாக்குகின்றனவாம். ஆகவே மீசையைச் சிரைத்துவிடுவதே சிலாக்கியமென்று சொல்லப்படுகிறது. பிழைக்கும்வழி.

***

சுகாதார முறைப்படியும், அனுபவப்படியும் இது சரியாகவே யிருக்கலாம். ஆனால்உலகத்தில் ஒவ்வொரு ஜாதியாரிலும், ஒவ்வொரு குலத்தாரிலும் சில வழக்கங்கள் சம்பிரதாயமாகி வந்திருக்கின்றன. அந்த முறையையும் நாம் அலக்ஷியஞ் செய்வதற்கில்லை. தவிர ஆண்பிள்ளை முகத்திற்கு மீசையும் தாடியும் நன்றாக வளர்ந்திருப்பதுதான் அழகென்று ஒரு வைத்தியரோ எழுதியிருக்கிறார். தென்னிந்தியாவில் கீழ்மேல் கடலோரங்களில் சில ஜாதியாரைத் தவிர மற்றெல்லோரும் மீசை வளர்ப்பவர்களே.

***

வடபெண்ணை நதியோரத்தில் கோரிபிதினூர் தாலூக்காவில் 'விதுர அசுவத்தம்' என்னும் வெகு நாளைய அரசமரம் ஒன்று இருப்பதாகவும், ஔஷதங்களால் சொஸ்தமடையாத அனேகம் வியாதிஸ்தர்கள் அங்குவந்து ஸ்நானம்செய்து அதைப் பிரதக்ஷிணஞ் செய்துவந்து சௌக்கியப்படுகிறார்களென்றும் ஒருவர் எழுதுகிறார். மற்றொருவர் கூடலூர் ஜில்லா ஸ்ரீமுஷ்ணம் என்னும் ஸ்தலத்தில் இவ்வாறே யொரு பெரிய அரசமரம் இருந்து அனேகருக்கு உபகாரியாயிருப்பதாக எழுதுகிறார். இந்த யுகத்திலும் அனேக அற்புதங்கள் நமது கண்ணெதிரே நடந்துதான் வருகின்றன. தெய்வகதி விசித்திரமாகவே யிருக்கின்றது.

***

ஆரிய சமாஜக் கிளையாகிய 'சுத்தி சமாஜத்தாருடைய' யுக்திபலத்தினால் நாளதுவரை சுமார் 2000-பெயர் மகம்மதீய மதத்தையும், கிறிஸ்து மதத்தையும்விட்டு மறுபடி ஹிந்துக்களாகி வைதிக மதத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம். இதனால் நாமறியக்கூடியது இது. வைதிகமதம் காலதேசவர்த்தமானங்களை யனுசரித்து ஜனங்களுக்கு நன்மையைக்கொடுத்துத் தானும் அழியாப்புகழ் பெறுமென்பதேயாம். இதரமதங்கள் புகழ் குன்றவேண்டுமென்பதாவது, நசிக்கவேண்டுமென்பதாவது, நமது அபிப்பிராயமல்ல. வைதிகமதம் தழைக்க வேண்டுமென்பதே. உலகம் இவையனைவற்றிற்கும் விஸ்தாரமாகத்தானிருப்பதாக நமக்கு நம்பிக்கை.

## "விளையாட்டு"

குழந்தைகள் விளையாடும் பித்தளைப் பாத்திரம் இது உறுதியும் அழகும் பளபளப்பு முள்ளது. விளக்கு தவலை, செம்பு போன்ற 32 சாமான்களடங்கியது. மத்திரம் சயிஸ் ரூபா 2-0-0 பெரிய சயிஸ் ரூபா 3-8-0

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டுப் பீதாம்பர வர்த்தகம்,
ஸ்ரீ காசி.
Benares City.

## "பட்டுப் பீதாம்பரங்கள்"

சகல விதமான பட்டுப் புடவைகள். சால்வைகள், ரவிக்கைகள், பஸ்க்காலுக்கள், வேஞ்சிகள், உருத்திராக்ஷம், பால்காயம், கஸ்தூரி, முதலிய தினுசுகள் சகாய விலைக்கு விற்பனை செய்து வருகிறோம். 64 பக்கமுள்ள ஜெனரல் கேட்லாக் இனாமாக அனுப்புவோம்,

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டுப் பீதாம்பர வர்த்தகம்,
ஸ்ரீ காசி,
Benares City.

---

# LODHRA

### ஸ்திரிகளுக்கு ஓர் வரப்பிரஸாதினி

## "லோத்திர"

ஸ்திரீகள் மாதவிடாய் ஆகும்போதும் அதற்கு முன்னும், பிறகும் பொறுக்க முடியாத வயிற்று
வலி, (முட்டுநோய்) சூலையில் மிகவும் வருத்தப்படுகிறார்களென்பது, எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.
"லோத்திரா" மருந்தினால் மேற்சொன்ன முட்டுநோய் சவுக்கியமாகிறதுமல்லாமல் குசுமரோகம், காலத்
தில் மாதவிடாய் ஆகாமலிருப்பது, மாதவிடாய் ஆகாமலிருப்பதும் மூர்ச்சை கீல்நோய்கள் தலைநோய், மல
பந்தம், வெளுமை இன்னும் அனேக ரோகங்களும் சந்தேகமில்லாமல் சவுக்கியமாகின்றன. இம்மருந்தை
உபயோகித்தால், முகத்திற்கு தேஜஸும், சரீரத்திற்கு பதத்தையும் உண்டாக்கி இப்பிரபஞ்ச சுகங்களை
நன்றாய் அனுபவிக்கும்படி செய்கிறது.

அநேக ஸ்திரீகள் சந்தானமில்லாமல் அரசமரப்பிரதக்ஷிணம், அனுமான் பிரதக்ஷிணம், நாகப்பிரதிஷ்டை முதலியவைகளைச்செய்து, அநேக புண்ணிய க்ஷேத்திரங்களைச் சேவித்தவர்களாகி, அவைகளின் பலனை அடையமாட்டாமல், கடைசியாக, எங்களுடைய "லோத்திரா" என்னும் அவுஷதத்தை உபயோகித்து புத்திரன் புத்திரி என்னும் ரத்தினங்களையடைந்து சுகமாக இருக்கிறார்கள்.

இதன் விலை 12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 3 ; 6-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1-10-0.

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,
பந்தர் வீதி, சென்னை.


N1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 2 - ... 1910 MADRAS.



எம். கே. கந்தி அவர்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
2-JUL 1910
MADRAS.


# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| | | |
|---|---|---|
| புஸ்தகம் I<br>Vol. I | சாதாரணஹூ ஆனிமாதம்<br>June 1910 | சஞ்சிகை, 10<br>No. 10 |


## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினனே."

நமது புதிய மகாராஜச் சக்கரவர்த்தியவர்கள் அருளியதிருவாக்கு.

நமது புதிய மகாராஜச் சக்கரவர்த்தியவர்களைப்பற்றி இரண்டொரு விசேஷங்கள் சென்றமீ விஹாரிணியில் பிரசுரித்தோம். தமது தகப்பனர் தெய்வகதியடைந்ததில், இத்தேசத்திய பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மகாஜனங்கள், எல்லோரும் தங்களுடைய துக்கத்தைப் பலவகையாகத் தெரிவித்ததற்குப் பிரதியாக அவர்கள் இவ்வாறு பதில் அருளியிருக்கிறார்கள் :—

"நமது அருமைத் தகப்பனர் திடீரென்று காலஞ்சென்று அதனல் நம்மெல்லோருக்கும் பெருத்த துக்கமுண்டாகியதில், நாம் இப்போது அவருடைய அதிகாரத்தை வகிக்க வேண்டி வந்திருக்கிறது. ஆகலால், புராதனமானதும், கீர்த்தி கூடியதுமான இந்த ராஜவம்சத்தில் நாம் உதித்து, இதற்குள்ள உரிமைகளையெல்லாம் பெற்றிருப்பதுகொண்டு, (இந்தியாவிற்கும்) மகாராஜாவாகவும், சக்கரவர்த்தியாகவும் (ஆகியிருப்பதை நீங்கள் அறிதல் வேண்டும்.) ஆகவே நமது இந்திய மகாராச்சியத்தில் அரசுசெலுத்தி வாழும் மகுடவர்த்தனருக்கும், சாமான்னிய மகாஜனங்களுக்கு இம்மூலமாக நாம் முகமன் கூறுகிறோம். இந்த மரண சம்பவத்தை முன்னிட்டு, இந்தியாவிலுள்ள பல வர்க்கத்தவரும், பல குலத்தவரும், பல மதஸ்தரும் தமக்குண்டாகிய துக்கத்தை இவ்வாறு மனதை யுருக்கும்படியாகப் பலவகையாலும், ஏராளமாகக் கொண்டாடியதில், சார்வபௌமராகிய சக்கரவர்த்தியினுடைய பதவி விஷயத்தில், மகா ஜனங்களுக்குக் காணும் பக்தியும், அந்தப் பதவியை வகித்து வருபவர் விஷயத்தில் அவர்களுக்குக் காணும் அன்பும், நமக்குப் பிரத்தியக்ஷமாகியிருக்கிறது. அதற்காக நாம் அவர்களெல்லோருக்கும் நமக்குள்ள நன்றியை மனப்பூர்வமாய்த் தெரிவிக்க வேண்டுகிறோம்.

விக்டோரியா மகாராணியவர்களை எப்போ

தும் பயபக்தியுடன் நினைக்கவேண்டும். அவர்கள் 1858-ம் வருஷத்தில் இந்தியாவை ரூபரூபில் ஆளுவதென்று வந்ததில், அத்தருணத்தில் தம்முடைய இந்திய மகாப் பிரஜைகளையும், தமது குடைக்கீழ் அரசாண்டு வரும் சாமந்தர்களையும் வரித்துத் (தமது ராச்சிய முறைகளை விளக்கினார்கள்). பிறகு ஐம்பது வருஷங் கழிந்தபின் அதே பெரிய விஷயத்தைக் குறிப்பிட்டு, இப்போது நாமெல்லோரும் பூஜிக்கவேண்டியவரும், அன்புபாராட்டவேண்டியவருமான, நமது தகப்பனாராகியும் மேற்கண்ட மகாராணி அவர்கள் திருக்குமாரருமாகிய சக்கரவர்த்தியவர்களும், அவ்வாறே செய்தார்கள். இவ்வாறு அவர்கள் தயை கூர்ந்தருளிய மகாசாஸனங்கள், இந்த (அங்கிலேய) சார்வபௌமத்தின் பெருமையையும், பேருபகார குணத்தையும் நன்றாக விளக்குகின்றன. ஆதலால், நாமும் இனிவரும் நமது துரைத்தன ரீதியிலெல்லாம் அதே குணத்தை லக்ஷியமாகக் கொண்டு,மாஜிமகாராஜா அவர்களுடைய இஷ்டத்தையும் அனுசரித்து, பழைய முறை சிறிதும் கோணாமல் நடக்கவேண்டு மென்பது நமது சந்தோஷமாயிருக்கிறது.

மேற்செல்லியசக்கரவர்த்தியவர்கள்செய்தது சரியென்று நாமும் அதையனுசரித்து, நமது மாக்ஷிமை தங்கிய ராணியவர்களுடன் ஐந்து வருஷத்திற்கு முன் இந்தியாவிற்கு விஜயம் செய்தோம். அக்காலத்தில், சரித்திரமூலமாகப் பிரசித்திபெற்ற அவ்விடத்திய பெரிய ராச்சியங்களையும், நமது பூர்வீகரைவிட வெகு காலத்திற்கு முன் முதிர்ந்து விளங்கிய உங்களுடைய நாகரிகத்திற்குச் சாக்ஷியமாகி நிற்கும்பழையமுத்திரைகளையும், உங்கள் சனாதன தருமங்களையும், ஜீவன முறைகளையும், தேசியராஜாக்கள், மகாஜனங்கள், நகரங்கள், பட்டணங்கள், கிராமங்கள் முதலிய அம்மகா ராச்சியத்திற் காணும் விநோதங்கள் அனைவற்றையும் நாம் ரூபரூபில் கண்டுகளித்தோம், அக்காலத்தில், அந்த விசித்திர யாத்திரையில் கண்ட காக்ஷிகள் எல்லாம் நமது மனதில் நன்றாகப் பதிந்துபோயிருக்கின்றன. நமக்கு அத்தேசத்தவர் காட்டிய அன்பும் வெகு அதிகம். இவைகள் இனியொருக்காலும் நமது மனதை விட்டு அகலவாவது, குறையவாவது, செய்யாவாம்.

இனி நமது துரைத்தனத்தில் ஆகவேண்டிய காரியங்கள் வெகு பெரியனவாயும், கஷ்டசாத்தியமானவையாயும் இருப்பதில், நீங்கள் உங்கள் தருமங்களையறிந்து நமக்குச் சகாயமாய் உழைக்க விரைந்து வருவீர்களென்று நாம் உறுதியாய் நம்புகிறோம். இந்தியாவை நாம் ஆண்டுவருவதில், அத்தேசத்திய க்ஷேமமும், அவ்விடத்திய மகாஜனங்களுடைய சந்துஷ்டியுமே, நமக்கு இனி எக்காலத்திலும் (அடைய வேண்டிய பலன் ஆதலால்), அதை அடைய வேண்டி நமது உள்ளத்திற் பதிந்துகாணும் பேராவலை அனுசரித்து, நீங்களும் நமக்கு வேண்டிய சகாயம்செய்யத் தயாராயிருப்பீர்களென்று நாம் உறுதியா யெண்ணியிருக்கிறோம்.''

முன் மாதங்களில் நாம் பிரசுரித்த மகா சாஸனங்களைப் படித்த அபிமானிகளுக்கு, இதுவும் அவைகளுக்கு எவ்விஷயத்திலும் குறைந்ததல்ல வென்பது நன்கு விளங்கும். ஆதலால் நமது புதிய மகாராஜச் சக்கரவர்த்தியவர்கள் ஆரம்பம் சுபமென்பதற் கையமில்லை. இனி நடப்பதிலெல்லாம் இந்த ராச்சியத்தின் க்ஷேமமே மேனு மேனு மதிகரித்து வரும்படி ராச்சியகாரியங்கள் நடக்கவேண்டிப் பகவானனுக்கிரகிக்கவேண்டு மென்றும், சக்கரவர்த்தியவர்களுக்குத் தீர்க்காயுள், தேகபலம், மனோபலம் எல்லாம் பெருகிவரவேண்டுமென்றும் நாம் பிரார்த்திக்கிறோம்.

*ஸ்ரீமான் எம். கே. கந்தி அவர்கள்.*

தென் ஆப்பிரிக்காவில் நம்முடைய ஜனங்களுக்கு வந்திருக்கும் தூர்த்தசையை விலக்குவதற்கென்று கங்கணம் கட்டிக்கொண்டு பலவருஷங்களாகப் போராடி



வருகிற இந்த மகானுடைய பெயரை அபிமானிகளிலனேகமாய் எல்லோரும் கேட்டிருப்பார்கள். இப்பொழுது அதே காரியமாக உழைத்து வருகிற ஸ்ரீமான் போலக்கு துரையவர்கள் சென்ற ஏப்பிரல் மீ 28உ மதிராசில் இவருடைய பூர்வோத்தரத்தை வருணித்து ஒரு பிரசங்கம் செய்தார். இவர் தகப்பனார் 'கதையாவர' சமஸ்தானத்தில் திவான்ஜீயாக இருந்தவர். ஸ்ரீமான் கந்திக்கு இப்பொழுது 40-வயது போலாகிறது. ஆதலால் இன்னும் சிறுவயதென்றே சொல்லவேண்டும். பாலிய முதல் இவருக்குப்பரோபகாரமே பெரிய தருமமாகி வந்திருக்கிறது. கிறிஸ்தவ வேதத்தில் 'குன்றப்பிரசங்கம்' என்னும் பாகமும், இந்து சாஸ்திரத்தில்ஸ்ரீபகவத்கீதையும்,இவருக்குமுக்கிய மார்க்கதரிசிகள். பம்பாயில்இவர் கொஞ்சநாள்பாரிஸ்டாராகஇருக்கையில்,தென் ஆப்பிரிக்காவில் நம்மவர்படும் கஷ்டம் இவருக்கு விசதமாகியது. உடனே அவ்விடம்போய், அன்றுமுதல், நாளதுவரை, நம்மில் சிற்றறிவினர் சொல்லுமாறு, 'ஊர்ப்பாடகமெல்லாம் காற்பாடகமாக்கிக்கொண்டு' உழைத்துவருகிறார். தருமார்த்தமாக உழைப்பதையே விருதாகக் கொண்டவர். பணம் சேர்ப்பதில்லையென்று பிரதிக்ஞைசெய்து, வந்ததையெல்லாம் தருமத்திற்காகவே விநியோகஞ் செய்து வருகிறார். கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கு மென்பது திரான்ஸ்வாலில் வியக்தமானதும், துணிந்து, ஜெயிலுக்குப்போய், மண்சுமந்து, பலவிதக்கஷ்டமும் அனுபவித்திருக்கிறார். "கருமத்தைச் செய்வதற்கு மட்டுமே உனக்கதிகாரமொழிய, அதன் பலனைப்பற்றி நீ சிந்திக்கவேண்டியதே இல்லை" என்று பகவான் சொல்லியதைச் சிரமேற்கொண்டு நாளதுவரை சளையாது காரியங்களை நடத்திவருபவர். ஒருமுறை ராஜகாரியமாய்ப் பிரயத்தனப் பட்டுக்கொண்டிருக்கையில், இவருடைய மகன் மரணவஸ்தையி லிருப்பதாக யாரோ வந்து சொல்ல, அதனால் அவர் சிறிதும் மனம் கலங்காமலும், எடுத்த காரியத்தைவிடாமலும், "சரி, ஈசுவரசங்கற்பம் நிறைவேற வேண்டுவதுதான். எனக்கோ 'தருமம்' என்பது நான் பெண்டு, பிள்ளை, பந்து அனைவரும். ஆதலால் எடுத்தகாரியத்தை முடிப்பது தான் நான் இப்போது செய்யப்புகுவது," என்றாராம். இனி இதைவிட அதிகம் சொல்ல வேண்டியதுமில்லை, வேறு உதாரணம் வேண்டியதுமில்லை. ஆதலால், மகாத்துமாவாகிய இவருக்கு ஆயுசும், தேகபலமும், மனோதைரியமும், இனிநெடுங்காலம் கூடிவரவேண்டுமென்றும், அவர் எடுத்த காரியம் நன்றாக முடிவுபெறுவதை அவரே பார்த்துக் களிகூற வேண்டுமென்றும் நாம் எல்லாம் வல்ல கடவுளைப்பிரார்த்திக்கிறோம்.

*பெண்களுக்கு ருதுவான பின் விவாகம்.*

ஸ்ரீ காசியில் நடந்த ஆசார விமர்சன சபையில் மாதோஸ்ரீ அன்னி பிஜாண்டு அம்மாள் மதிராசைக் குறித்து இவ்வாறு பேசினாராம். "மதிராசு தியாஸபி சங்கத்தின் முயற்சி வைபவத்தினால், அவ்விடத்திலுள்ள ஸ்ரீமான்களில் அனேகர் தங்களுடைய பிள்ளைகளையும் பெண்டுகளையும் சங்கத்தவர் ஒப்புக்கொண்ட வயதுக்குக் கீழ்ப்பட்டு விவாகம் செய்துவைக்க ஒருக்காலும் சம்மதப்படுவதில்லையென்று பிரமாணம் செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்படிக் கட்டுப்படுத்திக்கொண்ட நூற்றுக் கணக்கான தகப்பன்மார்களில் ஒருவராவது பின் வாங்கவில்லை. பதினைந்து, பதினாறு வருஷத்திற்குமுன் இவ்வாறு நிர்ப்பந்தப்படுத்திக்கொண்ட ஸ்ரீமான்களுடைய பெண்களுக்கு இனித்தான் விவாகமாகப்போகிறது," என்று. இதை யனுசரித்து ஒரு பிராம்மணர் எழுதிக் கேட்கிறார். "எனக்குச் சில பெண்கள் கல்யாணத்திற்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு 15, 16 வயதுவரை விவாகம் கூடாதென்றே நான்

அபிப்பிராயப்படுகிறேன். பிஜாண்டு அம்மை சொல்லுவது என் போலியரை உத்தேசித்தென்றே தான் நினைக்கிறேன். ஆதலால் இந்தப் பெரியாகசியம் எனக்கு அடக்க முடியாத சந்தோஷத்தைத் தருகிறது. என்னுடைய ஆப்தர்களும் பந்துக்களும் என்னைப் பயமுறுத்திப் பைத்தியகாரக் காரியம் செய்ய வேண்டாமென்கிறார்கள். ஆனால் எனக்கோ 'நூற்றுக்கணக்காகப் பிரமாணம் செய்து அதைப் பரிபாலனம் செய்யும்' நல்லோருடன் கலந்து எல்லா நன்மையையும் பெறவேண்டுமென்கிற ஆக்கிரகம் வலுத்திருக்கிறது. என் குழந்தைகள் எனக்கு வெகு அருமை. அவர்களுடைய க்ஷேமலாபத்திற்குக் குறைவு வரும்படி நான் பார்த்துச் சகிப்பதற்காகாது. ஆனால் என்போல் பிள்ளை, பெண் பெற்றிருக்கும் ஐந்நூறு கிரகஸ்தர்களாவது இம்மாதிரிப் பிரமாணத்திற்குடன்பட்டு, எனக்குச் சகாயமாக நிற்பாராகில், நானும் துணிந்து இந்த மட்டில் ஆசாரவிமர்சனஞ் செய்துவிடச் சித்தமாயிருக்கிறேன். எனக்கு நூற்றுக்கணக்கான சகாயம் அனுவசியம். ஆதலால் எனக்கு வேண்டிய ஐந்நூறு பெயர் தயவுசெய்து எனக்கு எழுதியோ, அல்லது வேறு யாராகிலும் புண்ணியவான்கள் இவர்களுடைய பெயரையும் விலாசத்தையும் தெரிவித்தோ, செய்வாராகில் அவர்களுக்கு எல்லாச் சுகிர்தமுமுண்டு,'' என்று.

இதன் மொத்தத் தாற்பரியம் பிஜாண்டு அம்மை சொல்லியது ஏதோ சந்தேகத்திற்கிடமென்று எழுதியவர் நினைப்பது போலும். ஆதலால் மற்றைய கக்ஷியார் இவருக்குச் சமாதானம் சொல்லித் தான் தீரவேண்டும். அப்படியே சீக்கிரம் செய்வாரென்று நம்புகிறோம். ஏனெனில் இந்த விமர்சன விஷயத்தில் எத்தனையோ லக்ஷம் பெயருக்கு அகத்தியம் இருக்கிறது.

கள்ளர் நாட்டில் ஜெடில் குத்துவதாகிய

ஜெடில் குத்தல் வழக்கத்தைக் குறித்து முன்னொருமுறை நாமெழுதியதில், அந்த வழக்கம் இப்போது எங்கும் காணுவதில்லை யென்றும், சர்க்கார் அதைக் குற்றமாக்கித் தொலைத்துவிட்டார்களென்றும் நம்பியிருந்தோம். என்றாலும் இப்போது சமீபகாலத்தில் இந்தூர் ராச்சியத்திலிருந்து ஒருவர் எழுதுவதைப் பார்க்குமிடத்து சங்கதி வேறாகக் காணுகிறது. இந்தூர் மகாராஜாவுக்கு வேனிற் காலத்திலுதவும்படி கட்டியிருக்கும் 'மாணிக்கத் தோட்டம்' என்னும் அரண்மனைக்கருகில், 'மார்த்தாண்டன்' என்னும் 'சூரியமூர்த்திக்கு' ஒருசன்னிதியிருக்கிறதாம். அந்தத் தெய்வத்திற்குச் சில வருக்கத்தார் பிரார்த்தனை செய்துகொண்டு, அடிக்கடி வந்து செலுத்துகிறார்களாம். அனேகமாய் இவர்கள் ஸ்திரீகளாம்! குறித்த தினத்தில், பிரார்த்தனை செலுத்தும் ஸ்ரீமதி தன் பந்துவர்க்கங்கள் சூழ, மேளதாளத்துடன் வந்து, சன்னிதியில் நின்று பூஜை முதலிய அங்கங்கள் முடிந்தவுடன், கையிற் கொண்டுவந்த நாமம்போன்ற இருப்பாணியைப் பூசாரியிடம் கொடுத்துவிடுகிறாள். அவரும் அதை வாங்கி, இருகோடியும் கூர்ச்செறிந்திருப்பதால், அதை இந்த அம்மையுடைய முதுகில் சொருகி வளைத்துவிடுகிறார். பிறகு இதற்குக் கயிறுபோட்டுக் கோவிலுக்கு எதிரிலிருக்கும் ராட்டணதாலி போன்ற ஒரு யந்திரத்திற்கு [illegible]யில் இவளைச்சேர்த்துப் பிகிந்துவிடுகிறார்கள். மற்றொரு தலைப்பிற்குத் 'தடையமாக' இந்த அம்மைக்கு உடற்பிறந்தவனோ, அல்லது வேறு பந்துவோ, ஆசனமிட்டு உட்கார்ந்துகொள்ளுகிறான். அப்பொழுது இவள் சுமார் 10-அடி உயரத்தில் தொங்குகிறாள். உடனே தாலியைச் சுற்றுகிறார்கள். பிரார்த்தனைக் கிரமப்படி 10, 20, 30, சுற்றுவரையில் நடக்கிறது. அக்காலத்தில் அந்த அம்மை கையிலுள்ள மஞ்சட்கொம்பும், பொடியும் சுற்றிலும் இறைபடுகின்றன.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2-JUL 1910 MADRAS.



மிஸ்டர் ரூஸ்வெல்ட் துரை



MADRAS

கணக்கு முடிந்ததும் நிறுத்தி, மறுபடி கீழே இறக்கிக் கொக்கியை வாங்கி விடுகிறார்கள்.

காயத்திற்கு மருந்தொன்று மில்லாமலே ஆறிப்போய் விடுகிறது. பக்தி விசேஷத்தினால், அக்காலத்தில் இந்த ஸ்ரீமதிகளுக்கு நோய் என்பது சிறிதும் தெரிவதில்லையென்று வதந்தி. இந்தச் சங்கதி யெழுதியவர் பார்த்த கேஸில், அந்த ஸ்தீரீ சுமார் ½ மணிநேரம் அந்தரத்தில் தொங்கியபோதிலும், ஒருமுறையாவது முகத்தைச் சுளித்தோ, வேறு வகையாகவோ, தனக்குச் சிறிதாகிலும் நோயிருந்ததாகக் காட்டவில்லையென்று அவர்எழுதுகிறார். பக்தியினால் பரவசராகி யிருப்பவருக்கு இது பெரிதல்லவென்பதில் சந்தேகமேயில்லை. என்றாலும் பக்தி இந்த ரூபமாக இனிப்பிரபலிப்பதில் காரியமில்லை யென்று முன்னமே நாம் எழுதியிருக்கிறோமல்லவா? ஆதலால் சத்திரபதி ஹோல்கார் மகாராஜா அவர்களும் நல்ல வார்த்தையினால் இம்மாதிரி வேண்டாக்காரியங்களைச் சீக்கிரம் திருத்திவிடவேணுமென்று நாம் மனப்பூர்வமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**ஸ்ரீமான் ரூஸ்வெல்ட் துரையும் தேசக்ஷேமமும்.**

அமெரிக்கப் பிரசிடெண்டாகியிருந்து, இப்போது யாத்திரிகராகிச் சென்றுகொண்டிருக்கும் ஸ்ரீமான் ரூஸ்வெல்ட் துரை சென்றமீ பாரிஸ் நகரத்திற்குப் போய் பிராஞ்சுக்காரரால் உபசாரம் பெற்றார். அவரும் அதற்குப் பிரதியுபசாரம் சொல்லவேண்டி வந்ததில் தேசக்ஷேமத்திற்கு எது முக்கிய காரணமென்பதை விசாரித்துப் பேசினார். மகாஜனங்களில் ஒவ்வொருவரும் நற்குணம், நன்னெறி யிவைகளில் பக்தி வெகு அதிகமாயிருக்கும்படி பார்க்கவேண்டும். ஒவ்வொரு தேசத்திலும் அதிபுத்திமான்களிருப்பது அவசியம் தான். என்றாலும் பிரஜைகளில் சிலருக்குள்ள புத்தி வைபவத்தினால்மட்டுமே தேசம் க்ஷேமமடையாது. மகாஜனங்களில் பெரும்பாலார் குணவான்களா யிருந்தால்மட்டுமே தேசம் தழைக்கும். குணங்களென்பவை ஏதோ அபூர்வவஸ்துக்களன்று. சாமான்னியமாய் எல்லாருக்கும் தெரிந்தவைகளேயாம். சத்தியம், சௌசம், தருமம் போன்றவைகளேயல்லது புதியன வொன்றுமில்லை. இதெல்லாம் நாம் லக்ஷம் தடவை கேட்டுக்கழித்தது தான் என்று சாமான்னியர் அலக்ஷியஞ்செய்யலாம். ஆனால் தேசத்திற்கு அனர்த்தம் வருவதற்கு மூலகாரணம், ஜனங்களுக்கு இந்தச் சாமான்னிய குணங்கள் விஷயத்திலுண்டாகும் பக்திக்குறைவேயாம். ஜனங்கள் உழைப்பதற்குப் பின்வாங்கக்கூடாது. இடையூறுகள் சம்பவித்தால் போராடவும் பின்னிடையக்கூடாது, என்றார்.

இவற்றுள் அதிசயமொன்றும் இல்லை யெனச் சிலர் நினைக்கலாம். அப்படி நினைப்பவர் சென்றமாதத்திய ‘பிரம சுவரூபிணீ’ கேஸைக் கவனிக்கவேண்டும். சாமான்னிய முறைகள் பிரம சாக்ஷாத்காரத்திற்குப் போதாதென்றல்லவா சில கொழுத்த சிஷ்யர்கள் ‘புதிதாகப் பண்ணயம் வைத்ததும்’’ ‘எருத்தைக் கறக்க,’ முயன்றதும். ஆதலால், ஓ சற்ஜனர்களே, இதை நன்கு கவனியுங்கள். உங்களுக்கு எல்லாச் சுகிர்தமுமுண்டு. பரத்தில் நன்மை வேண்டுவோர் இகத்தில் கிரகஸ்தமார்க்கமாய் நடக்கவேண்டியது முதல் தருமம். அதில் ரஸமொன்றுமில்லாமல் யாருக்குப் புளிப்புக்காணுகிறதோ, அவர்களுக்கு இகமுமில்லை, பரமுமில்லை யென்பதை நிச்சயமாய் நம்புங்கள்.

ரூஸ்வெல்ட் துரை கடைசியாக, இன்னொரு சங்கதியைக் குறித்து வெகு அழுத்தமாய்ப் பேசினார். அதாவது மகாஜனங்களில் கிரகஸ்த குடும்பம் ஒவ்வொன்றிலும் குழந்தைகள் யதேஷ்டமாயிருக்க வேண்டுமென்றும், மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய சாபங்களிலெல்லாம் மலடாவதை விடக் கொடியது வேறில்லை யென்றும் வற்புறுத்தியதேயாம். இது பிராஞ்சுக்

காரரையும், அமெரிக்கரையும் உத்தேசித்துப் பேசியது. பிராஞ்சுக்காரரில் அனேகர் கொஞ்சகாலமாய்க் கலியாணஞ்செய்து கொள்வதில்லை. ஏனெனில், குடும்பத்திய ஆஸ்தி அதிற்பிறக்கும் ஆண், பெண் அனைவருக்கும் சமபாகமாகப் பிரிந்து, சீக்கிரத்தில் அழிந்து போகிறது. ஆதலால், பிராஞ்சுதேசத்தில் சில வருஷங்களாக ஜனத்தொகை குறைந்து வருகிறது. இப்படியிருப்பது பிசகென்பதைச் சுட்டித்தான் துரையவர்கள் மலடாயிருப்பதைப்போலக் கொடிய சாபமில்லையென்று வற்புறுத்தி, "கல கலெனப் பொல பொலெனப் புதல்வர்களைப் பெறுவீர்," என்று ஆசீர்வதித்தார்.

அமெரிக்காவிலோ நிலவளமும், நீர்வளமும் வேண்டியதற்கு வெகு அதிகமாயிருப்பதால், இப்போதிருக்கிற ஜனசங்கியை பத்துமடங்கு அதிகரித்தாலும், ஜனங்கள் தாராளமாக உண்டுடுத்துச் சுகித்திருக்கலாம். ஆதலால் அமெரிக்கர்கள் முன்னாளில் கங்காதீரத்தில் நமது ஆரிய முன்னோரிருந்த சுபஸ்திதியில் இப்போது இருக்கிறார்கள். அதுகொண்டு விவாகம் நடக்கும்போதெல்லாம், "ஓ இந்திரனே, இந்தப் பெண்வயிற்றில் பத்துப் பிள்ளைகள் பிறக்கும்படி அனுக்கிரகம் செய்யவேண்டும்," என்று பிரார்த்திக்கும்படியான தசை அவர்களுக்குப் பூரணமாயிருக்கிறது. இப்போது நம்மவர்களில் நடக்கும் விவாகங்களிலும் இந்த ஆசீர்வாதம் விடாமல் செய்வதுண்டு. ஆனால் அதற்கு அர்த்தமில்லை.

மருமக்கதாயத்திற்கு பரிகாரம்

மலையாளத்திற்கு முக்கியஸ்தராகிய நாயர் ஜாதியாரில் மருமக்கதாயம், என்றால், சகோதரிகளின் மக்கள் சொத்துக்குப் பாத்தியஸ்தராகும் முறையினால் பல அனர்த்தங்கள் விளைந்திருக்கின்றன. இவைகளைக் கூடியமட்டில் பரிகரிக்கவேண்டி அவர்களில் புத்திமான்களான அனேகர் பல வருஷங்களாகப் பிரயாசைப்பட்டு வருகிறார்கள். கனம் ஜட்ஜி சங்கரன் நாயர் வெகு வருஷங்களுக்கு முன் 'மலையாள விவாகச் சட்ட'மொன்று உண்டாக்கினார். ஆனால் அது நாளதுவரை விசேஷ பிரயோஜன மில்லாமலிருப்பதாகவே அனேகருக்கு அபிப்பிராயம். இப்பொழுது கனம் கிருஷ்ணன் நாயரும், கனம் ராஜா வாஸுதேவ ராஜாவும், இரண்டு துண்டுச் சட்டங்கள் வேண்டுமென்று போராடுகிறார்கள். அவைக ளிரண்டினாலும் கிடைக்கக் கூடிய பலன் இது. சுவார்ஜித சொத்தை மக்கள் அனுபவிக்கவேண்டுமல்லது, மருமக்கள் கூடாது, என்பதாம். இது வெகு நாளையப்புண். ஆதலால் சுலபத்தில் ஆறாது. என்றாலும் இம்மாதிரி சில்லரையாக வைத்தியம் செய்துதான் இதை ஆற்றவேண்டும். இது என்று 'சுமாராகுமோ' அன்றுதான் மலையாளிகளுக்குள்ள பெருந்துக்கம் நீங்கும். அவர்களுக்குள் முன்னுக்கு வருவதற்கு வேண்டிய புத்தி, யுக்தி, எல்லாமிருக்கிறது. பூப்பிரதக்ஷிணஞ் செய்வதற்கு ஒரு ஆக்ஷேபமுமில்லை. எந்தத்தொழிலுக்கும் முன்னிற்கலாம். ஆகலால், இந்த உபத்திரவம் சீக்கிரத்தில் நீங்கவேண்டுமென்றும், அவர்கள் மேன்மையும், சுகமுமடையவேண்டுமென்றும் நாம் பிரார்த்திக்கிறோம்.

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களும், கொலைக்கேசுகளும்

முன்னொரு மீத்தில் அமெரிக்கர்களுடைய செல்வச் செருக்கைப்பற்றிப் பேசினோம். மேனாட்டுப் பத்திரிகைகளில் வேறொரு விசித்திரம் இன்னாட்டைக் குறித்து வெளியாகிறது. 'நாகரீகம்' முதிர்ந்துள்ள பூமண்டலத்திய தேசங்களிலெல்லாம், அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் வெகுதூரம் தேர்ந்திருப்பவையென்றும், லௌகிக காரியங்களில் முதற்பதவி பெற்றிருப்பவையென்றும், நமது காதுகளில் இடைவிடாமல் தமுக்கு அடிபட்டு வந்திருப்பதில், நாம் அத்தேசத்தவரை மெத்தவும் வெகுமானித்து வந்திருக்கிறோம். இப்படியிருக்க, இப்பொழுது விசாரிக்கையில், கொலைக்குற்றத்தி



லும் இத்தேசத்தவருடைய நாகரிகம் வெகுவாய் முற்றியிருப்பதாகக் கேட்டு வெகுதூரம் 'விசாரிக்கிறோம்.' ஐரோப்பாவிலுள்ள தேசங்களிலெல்லாம் பெல்ஜியம் தான் கொலைபாதகர் நிறைந்துகாணுவதென்று நினைத்திருந்ததில், இப்போது ஜன மொத்தத்திற்குக் கொலைபாதகரை வீதித்துப் பார்க்குமிடத்து, அமெரிக்க ஐக்கியமாகாணங்கள் பெல்ஜியத்தைவிட எட்டு மடங்கு ஓங்கி நிற்பதாகத் தெரிகிறது! 1890-ம் ௵த்தில் 1500 கொலைகள். 1909-ம் ௵த்திலோ, 8000-கேசுகள்! இந்த ராச்சியத்திற்கு அயல்வீடாகக் கன்னடா மாகாண மிருக்கிறது. அதில் குடியேறியிருப்பவரும் இதே வருக்கத்தவர்தாம். என்றாலும் அந்த ராச்சியத்தில் இதில் நடப்பதில் நாற்பதி லொருபங்குகூடக் காணுவதில்லை. இதற்கென்ன காரணம்? அமெரிக்கா விவேகிகளிலொருவர் இதைப் பரீக்ஷித்துப் பார்த்ததில், தமது தேசத்திய மகா ஜனங்களுக்குக் கொலை முதலிய குற்றவாளிகள் விஷயத்தில் வாஞ்சை யதிகமாயிருப்பதாகவும், கொலை செய்கிறவர்களுக்கு மாணதண்டனை விசேஷித்துக் கிட்டுவதில்லை யென்றும், அதனாலேயே கொலை அதிகரித்து வருவதாகவும் சொல்லுகிறார்.

ஆஸ்திரேலிய உருளைக்கிழங்கு

நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்கு ஜர்லாந்து முதலிய இடங்களிலிருந்து வந்ததில் அவ்விடத்திய நோயுங்கொண்டு வந்ததால், நீலகிரியில் நல்ல விளைச்சலாவதில்லை. இதற்குப்பரிகாரமாகச் சர்க்கார் ஆஸ்திரேலியாவிலிருந்து நல்ல விதைக்கிழங்கு தருவித்துப் பயிரிட்டுப் பரீக்ஷைப் பார்த்ததில், கலெக்டர் துரையவர்கள் இவ்வாறெழுதுகிறார்:—"மாசூல் கிழங்குக்கு நோய் முதலிய குறைவு ஒன்றுமில்லை. பூமி நடுத்தரமாகவும், மழை போதாமலும் போனதன்றி, விதை தேசம்விட்டுத் தேசம் வந்ததினாலும், ஆதாயம் தான் வேண்டியபடி யாகவில்லை. ஆனால் அடுத்த வருஷம் இவ்விஷயம் திருப்திகரமாகலாம். ஏனெனில் விதைக்கும் இத்தேசத்திய பூசாரத்திற்கும் ஒற்றுமை யதிகரிக்கும்.

ஆன மாசூலை விதைக்காகக் குடித்தனக்காரருக்கு மணு 1-க்கு 2 ரூபா வீதம் விற்றால், சர்க்காருக்கு இதனாலான செலவு கட்டிப்போகும். ஸ்ரீமான் ஒக்ஸ் துரை இதைச் சாகுபடி செய்ததில், அவர் பங்குக்குள்ள கிழங்கையும் விதைக்காக விற்று விடுவதாயிருக்கிறார். மிகுதியுள்ளதை மறுபடி தானும் பயிரிட்டு விதையதிகமாகும்படி செய்வதாக உத்தேசிக்கிறார். சர்க்கார் தோட்டத்திலும் இதைச்சாகுபடி செய்து வருவதால், மறு வருஷம் வேண்டியவர்களுக்கு விதை அதிகமாகக் கிடைக்கும். இப்போதிருப்பதைக் குடியானவர்களில் புத்திசாலிகளாகப் பார்த்து, அவர்களுக்குக் கொடுப்பதாகவும், அவர்களை, நோய்விழுந்த பூமியில் இதை விதைக்காமலும், மாசூலை ராவுத்தர்களுக்கு வியாபாரத்திற்குக் கொடாமலுமிருக்கும்படி கேட்டுக்கொண்டு, அம்மூலமாய் விதைக்கிழங்கு வேண்டியமட்டில் கிடைக்கும்படி செய்வதாகவும் யோசனை. ஒவ்வொரு குடியானவனுக்கும் விதைகொடுக்கும்போது, தமிழில் அதைச் சாகுபடி செய்வதில் கவனிக்கவேண்டிய விஷயங்களை விவரித்து, ஒரு துண்டுக் கடிதமும் கொடுத்து வருவதால், கிழங்குக்கு ஜர்லாந்து நோய் விழாதென்று நம்பலாம். நாம் செய்த பரீக்ஷை விஷயத்தில் இந்த ஜில்லாவிலுள்ள அனேகருக்கு அக்கரை யிருப்பதாகத் தெரிவதாலும், விதைவேண்டுமென்று அனேகர் பிரியப்படுவதாலும், செய்த-காரியம் நல்லதென்றே நம்புகிறோம்," என்று.

இப்படியே ஆங்காங்கு விதைவிஷயமாயும், மற்றுள்ள விஷயமாயும், சிறிது சிறிதாகப் பரீக்ஷை நடந்து, அம்மூலமாய் விவசாயிகளுக்கும் தங்கள் தொழில் பெருகவேண்டுமென்கிற அக்கரை யதிகரிக்குமாகில், தேசத்திற்

கும் ஜனங்களுக்கும், எவ்வளவு க்ஷேமமுண்டாகுமென்று சொல்லவேண்டுமோ? தஞ்சாவூர் ஜில்லாவில் நெல் விஷயமாயும், திருச்சினாப்பள்ளியில் வாழை விஷயமாயும், மலையாளத்தில் மிளகு விஷயமாயும், தென்னை விஷயமாயும் பரீக்ஷை நடந்து வருவதுதான் முதல்தரம். அதுவும் குடியானவர் மூலமாக நடத்துவதானால் இன்னும் விசேஷமே.

~~~~~~~~~~

## அவதூதர்

காவேரி தீரத்தில் ஓர் அக்கிரகாரத்தருகில், ஒரு காலத்தில் ஓர் அவதூதர் வந்து சேர்ந்தார். 'அவதூதர்' என்றால், வேதாந்த முறையை அனுபவத்தில் சித்தியாக்கிக் கொள்ள முயன்று வருபவரென்னலாம். அந்தப் பதத்திற்கு உடையற்றவரென்ற பொருள். "சூரிய கிரணம் குளிர்ந்திருந்தாலும், சந்திரன் உக்கிரமாக வொளித்தாலும், அக்கினி தலை கீழாக வெரிந்தாலும், இதெல்லாம் மாயையென்றெண்ணி, விவேகமுற்றி, ஜீவன் முக்தனானவன் ஆச்சரிய மற்றவனாகிறான்," என்று சொல்லிய லக்ஷணப்படி யிருப்பவர்.

இவ்வாறு அதிசய லக்ஷணங்களுடன் கூடிய மேற்கண்ட அவதூதஸ்வாமிகள், நதியோரம் வந்து நீர் அக்கரையோரத்தில் மட்டும் போய்க் கொண்டிருந்ததால், இக்கரையோரத்தில் மணலிற் படுத்து அங்கே கிடந்த அடுப்புக் கட்டியை யிழுத்துத் தலைக்குடமாக வைத்துக் கொண்டு வெய்யிலை லக்ஷியஞ் செய்யாமலிருக்கையில், அவ்வழியாய்த் தண்ணீர் கொண்டு வரச்செல்லும் பெண்களி லொருத்தி யிவரைப் பார்த்துக் கூடச் செல்பவரிடம், "இச்சந்நியாசிக்கட்டைக்கு என்ன கேடடி? வெய்யில்மழையை லக்ஷ்யம் செய்வதில்லை யென்பவனுக்குத் தலையணையில்லாமல் எங்கே குறைந்திருக்கிறது?" என்று சொல்லிக் கொண்டு போக, அதுகாதில் விழவே, அப்பெண் சொல்லியது சரிதானென்று அவர் அந்தக்கட்டியை யெடுத்தெறிந்து விட்டுப் படுத்திருந்தார். மறுபடியவள் ஜலமெடுத்து அவ்வழியாய் வருகையில் சந்நியாசி கட்டியை யகற்றிவிட்டதை பார்த்துச் சிரித்து, "இச்சந்நியாசிக் கட்டைக்குக் கோபத்தைப் பாரடி! நாம் சொல்லிக் கொண்டு போனதைக் கேட்டுக் கோபந்தாளாமல் அடுப்புக் கல்லை வீசி யெறிந்துவிட்டுக் கிடக்கிறது!" என்றாளாம். அதைக் கேட்டவுடன் அவர் வெட்கியுடனே யெழுந்து வந்து அப்பெண்ணை நமஸ்கரித்து, "அம்மா, நீ தான் எனக்குப் பரம குரு. கோபதாபாதிகள் அடங்குமுன் நான் வேஷந் தரித்தது தப்பென்று நீ யிவ்வாறுபதேசித்ததை நான் வேதமாகக்கொண்டு இதோ போகிறேன். இந்த நன்றியை நான் எக்காலமு மறவேன் என்று சொல்லிப் போனாராம்."

## நம்பூதிரிமார் (தொடர்ச்சி)

ஸ்ரீமான் ஈ. எஸ். சுப்பிரமணிய பாட்டம் ஆளி அவர்கள், பி. ஏ., பி. எல்.

மேற்சொன்ன கல்யாண விவரங்களைக் கொண்டு நம்பூதிரிப் பெண்களுக்கு ருதுவாவதற்கு முன்னமே கல்யாண நிர்ப்பந்தம் இல்லையென்று தெரிகிறது. இந்தியாவில் மற்றுள்ள 'உயர்குலப்' பெண்களைப்போல் ஏழாவது வயதிலும் அதற்கு முன்னும் கல்யாணம்செய்து,பெண் பெரிய மனுஷியாகிறவரையில் அனேக மனக்கவலைகளுக்கு இடமுண்டாக்குவதைவிட, இது சிரேஷ்டமென்று புத்திமான்களெல்லா ஜனங்களுக்கும் தெரியவரும். அவர்கள் தனித்தனி இல்லங்கள்கட்டிக் குடியிருப்பதுபோல், நாமும் அனுஷ்டிப்பது நலமென்று மேலே சொன்னோமல்லவா? இந்தவிஷயத்தையும் அதுபோலவே நாம் சந்தேகமில்லாமல் அறிந்துகொண்டு, புத்தியுண்டானால் அனுஷ்டித்தும் வரலாம். இந்த ஆசாரத்திற்குச் சுருதிஸ்மிருதிகளில் கணக்கில்லாத பிரமாணங்கள் இருக்கின்றன. நம்பூதிரிகள் நமது சாஸ்திரங்களை வெகு கண்டிப்பாக அனுஷ்டிப்பவர்கள். நம்முடையவர்களுக்கும் நம்பூதிரிகளுக்கும் சுருதிஸ்மிருதி ஒன்றுதான்.

கல்யாணத்திற்குப் பிற்பட்டு முக்கிய கருமம் (பும்ஸவனம்) சீமந்தம். இது அவர்களில் சாதாரணமாய் நான்காவது மாதத்தில் நடத்தப்படும். குழந்தை பிறந்தபிறகு முதல் நடப்பது ஜாதகருமம். குழந்தை பிறந்ததும் தாயையும் குழந்தையையும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்துவைப்பார்கள்! பிறகு நம்மைப் போலவே பன்னிரண்டாவது தினத்தில் நாமகரணம் நடத்தப்படும். நான்காவது மாதத்தில் நிஷ்கிரமணம் என்ற ஒரு கருமம். அதில் முதல் முதல் குழந்தையை வீட்டிற்கு வெளியில் கொண்டுவந்து, தகப்பன் குழந்தையை எடுத்து ஒரு தென்னமரத்தை மூன்று தரம் சுற்றுவான். ஆறாவது மாசத்தில் அன்னப்பிராசன கருமம். மூன்றாவது வருஷத்தில் காதுகுத்துக் கல்யாணம் நடக்கும். ஐந்தாவது வருஷத்தில் சௌளமும் வித்தியாப்பியாசமும் செய்யப்படும். எட்டாவது வயதில், உபநயனம் நடத்துவார்கள். அது நடந்த நான்காவது தினம் வேதாப்பியாசமும் செய்விப்பார்கள். அதுமுதல் சமாவர்த்தனம் (பிரமசரிய விரதத்தை முடித்தல்) ஆகும் வரையில் கிருஷ்ணாஜினம் வகையராக்களைத் தரித்துக்கொண்டு, குருசுசுரூஷை செய்து குருகுலத்திலேயே பிரமசரியவிரதம் சரிவர அனுஷ்டித்து வருவது நம்பூதிரிகளில் மட்டும் காணும் விசேஷம். பதினாறு வயதுவரை மேற்சொல்லியபடி கிருஷ்ணாஜினம் வகையராக்களைத் தரித்துக்கொண்டே இருந்து, பிறகு சாதாரணமாய் அந்தக்காலத்தில் ஒரு முகூர்த்தத்தில் பையன் ஸ்நானம் செய்து, உபநயனசமயத்தில் கொடுத்த தண்டையும் கிருஷ்ணாஜினத்தையும் ஜலத்தில் போட்டுவிட்டு, சந்தனம் வகையராக்களும் ஆபரணங்களும் தரித்து, தன் வஸ்திரத்தைக் குருவுக்குக்கொடுத்துவிட்டு நாலு நாள் கழிந்த பிறகு கல்யாணம் செய்துகொள்ளத் தக்கவனாவான்.



உபநயனத்திற்குப் பிந்தி, கல்யாணம் செய்துகொள்வதற்குப் பதிலாக (சாதாரணமாய் முதல் மகன் தான் கல்யாணம் செய்துகொள்வது என்று மேலே குறித்திருக்கிறோமே,) சூத்திர ஸ்திரீ சம்பந்தமும், கேரளமுழுவதும் இஷ்டப்படி சஞ்சாரமும் தான் நம்பூதிரிப் பிள்ளைகளில் பெரும்பாலார்க்கு வேலை. வியாபாரம், கைத்தொழில் முதலிய தொழிலில் பிரவேசிப்பது அவர்களுக்குக் கௌரவக் குறைவு. கேரளத்தில் எவ்விடத்திற்குப்போனாலும் நம்பூதிரிகளுக்குச் சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லாததால், அவர்களுக்குக்கைத்தொழில் முதலிய உபத்திரவம் அவசியமில்லை.

ஒரு நம்பூதிரிக்கு மரணகாலம் சமீபித்துவிட்டால், அவன் படுக்கைக்குப் பக்கத்தில் நிலத்தைச் சுத்திசெய்து, நம்பூதிரியை அதில் படுக்கப் போட்டுவிடுவார்கள். பிராணன் போகையில் வலது காதில் கர்ண மந்திரம் வகையராக்கள் ஜபிப்பதுண்டு. இறந்த நம்பூதிரிகளைச் சுடுவதுதான் வழக்கம். வாந்திபேதி, வைசூரி, இதுகளில் இறந்தவர்களைமட்டும் புதைத்துவிடுவார்கள். இதற்குக் காரணம் நம்பூதிரிகள் இவ்வியாதிகளைக் கண்டால் வெகுதூரம் பயப்படுவதுகொண்டென்க. ஏனெனில், இந்த வியாதிகளில் இறந்தவர் பக்கத்தில் சமீபபந்துக்கள்கூட வரமாட்டார்கள். இம்மாதிரிக் கேசுகளொழிய மற்றபடி ஒரு நம்பூதிரி யிறந்ததும் அவனைச் சேர்ந்தவர்கள் ஸ்நானஞ் செய்து அந்தப் பிணத்திற்குக் கால் புறத்திலும் தலைப்புறத்திலும் இரண்டு வாழைமரத்துண்டுகளை வைத்து, தலையிலும் முகத்திலும் கொஞ்சம் க்ஷவரம் செய்துவிட்டு, அந்தப் பிணத்திற்கு ஸ்நானம் செய்துவைத்து, வாழை இலையால் மூடிவைப்பார்கள். அந்தப் பிணத்துக்கு ஒரு கௌபீனம்மட்டிலும் கட்டி, குடுமியை யவிழ்த்துவிட்டு, பூணூலைத் தாழ்வடம் போட்டு முன்புறமாய்த் தொங்கவிட்டுப் பிணத்தைப் பாடையில் வைத்து, அடுத்த பந்துக்கள் நான்குபேர்கள் சேர்ந்து அதை எடுத்துக் கொண்டு இல்லத்துத் தோட்டத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ள ஒரு மாமரத்தை வெட்டி, அந்தப் பிணத்தைச் சுடுவதற்காக அந்த மரம் வெட்டின இடத்தில் ஒரு தகனக் குழி தோண்டி, அதிலந்தப் பிணத்தை எரிப்பார்கள்.

நம்பூதிரிகளுடைய உத்தரகிரியை விவரம் சொல்வதற்குமுன், கேரளீயர்களுக்குப் பிரத்தியேக ஆசாரங்களான அறுபத்துநான்கு "அனாசாரங்களை" சற்று விவரிப்பது அவசியம். இவைகள் கேரளத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் சேர்ந்து ஏற்பட்டதால், நம்பூதிரிகளைக் குறித்த விசேஷ அனாசாரங்களை மட்டும் இங்கே சொல்லுகிறோம்.
~~~~~~~~~~

1. முன் குடுமி வைத்துக்கொள்ள வேண்டும்.

2. கல்லியாணம் செய்துகொண்ட பிராமணர்களும் ஒரே பூணூல்தான் உபயோகப்படுத்தவேண்டும்.

3. நம்பூதிரிகள் பரஸ்பரம் நமஸ்காரமாவது, ஆசீர்வாதமாவது செய்துகொள்ளக் கூடாது! (இது ஸ்ரீவைஷ்ணவ ஆசாரத்திற்கு நேர் விரோதம். வயசு காரணமின்றி இரண்டு வைஷ்ணவர் சந்தித்தால் இருவரும் நமஸ்கரிப்பது அவர்களுக்குள் பதிவு.)

4. நம்பூதிரிகள் சாப்பாட்டுக்குப் பிந்தியும் க்ஷவரம்செய்துகொள்வதில் ஆக்ஷேபணையில்லை. (ஆகலால் இது ஸோஷல் ரிபார்மர்களுக்குச் சம்மதமானது.)

5. சூரியோதயத்திற்கு முந்தி ஸ்நானம் கூடாது. (சோம்பேறிகளுக்கு ஏற்றவிதி.)

6. நம்பூதிரிகள் தம்முடைய ஆடைகளைத் துவைக்கக் கூடாது. நம்பூதிரிகள் உடுக்கும் முண்டுகளுடன் குளிக்கக் கூடாது.

7. அசுத்தமாயிருக்கும்பொழுது தாம்பூலம் போட்டுக்கொள்ளக்கூடாது.

8. மூத்த மகன் மட்டிலும் கல்லியாணம் செய்துகொள்ளலாம், மற்றவர்கள் சமாவர்த்தனத்திற்குப் பிந்தி பிரமசரிய ஆசிரமத்தை விட்டுவிடலாம்.

9. மார்க்கம் தப்பியவர் ஜாதியைவிட்டு விலக்கப்படுகிறார்கள்.

10. ஸ்திரீகள் வெளுத்தவஸ்திரம் மட்டிலும் தரித்துக்கொண்டு, மிதமான நகைகளை உபயோகிக்கலாம். மூக்குக் குத்திக்கொள்ளக் கூடாது. இதர பிராம்மண ஸ்திரீகள், அதிலும் தக்ஷிண தேசத்தவர், இதை ஒப்புக்கொள்ளவேமாட்டார்கள். ஒப்புக்கொண்டால் காஞ்சீபுரம் முதலிய புடவை நெனுசுகளுக்கு என்ன கதி?

11. ருதுவானபின்னிட்டும் பெண்களைக் கல்லியாணம் செய்துகொடுக்கலாம். (வெகு உத்தமமான மார்க்கம்.)

12. விதவைகள் தலையைச் சிரைத்துக் கொள்ளாமலும், உடன்கட்டை யேருமலும் இருக்கவேண்டும். (வெகு சிரேஷ்டமான விதி. நாமெல்லோரும் அநுஷ்டிக்கவேண்டியது.)

13. பதிவ்ரதையான ஸ்திரீகள் ஒதுங்கியிருக்கவேண்டியது அவசியமில்லை.

14. நம்பூதிரி ஸ்திரீகள் பரபுருஷர் முகத்தைப் பார்க்கக்கூடாது. அவர்கள் வெளியில் போகும்போது ஒரு வேலைக்காரி எப்பொழுதும் கூடப் போகவேண்டும்.

15. பிணத்தை அவரவர்களின் இல்லத்தின் தோட்டங்களிலேயே எரிக்கவேண்டும்.

16. இறந்தவர்களுக்குச் சபிண்டீகரணம் முதல் வருஷம் முடிவில்தான் செய்ய வேண்டியது.

17. சிராத்தம் செய்வது நக்ஷத்திரத்தையனுசரித்தே தவிர, திதியை யனுசரித்தல்ல.

18. தாயார் தகப்பனார், இருவழிகளிலும் பாட்டன் பாட்டி, இவர்களுக்குச் சிராத்தம் செய்யவேண்டியது.

19. தாய் தந்தைகள் இறந்தால் ஒருவருஷத்திற்கு க்ஷவரம் செய்துகொள்ளாமல் தீக்ஷை ஆதரிக்கவேண்டும்.

20. கர்ப்பிணியானாலும் அந்தர்ஜனத்திற்கு ஆகாரம் கொடுப்பது சூத்திர ஸ்திரீகள்தான்.

21. தத்துப்போன பையன் தன்னைப் பெற்ற தாய் தந்தையர்களுடைய சிராத்தங்களையும் செய்யக் கடமைப்பட்டவன்.

22. விபசார தோஷம் சந்தேகமானாலும் ஸ்திரீயை ஜாதிக்கூட்டத்தார் விசாரித்து முடிவு செய்கிறார்கள்.

23. தச்சன், கொல்லன் முதலியபேர்கள் சமீபம் நெருங்கிவிட்டால் முழுகி ஸ்நானம் செய்தால்தான் தீட்டுப்போம், என்று நம்பூ



திரிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

இவைகளில் சில ஆசாரங்கள் நமது தேசங்களில் சாதாரணமாக எங்கும் இல்லாவிட்டாலும், சில இடங்களில் காண்கிறோம். முன் குடுமி சிதம்பரம் தீக்ஷிதர்களும், சோழியர்களும் வைத்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. விதவைகள் க்ஷவரம் செய்துகொள்ளாமல் கூந்தல் வைத்துக்கொண்டிருப்பது தென்கலை வைஷ்ணவர்களுக்குச் சகஜம். 18-வது அனுசாரத்திற்குப் பதிலாக நாம் பிரதி மாசமும் அமாவாசைதினத்தில் தர்ப்பணம் செய்கிறோம். நம்மைப்போன்ற தர்ப்பணம் நம்பூதிரிகளுக்குக் கிடையாது. தத்து மகன் சொந்தத் தாய் தகப்பன்மாருடைய உத்தரகிரியைகள் செய்வது பம்பாய் ராஜதானியில் சில இடங்களிலும், நமது ராஜதானியில் சில தேவாங்கசெட்டிகளிலும், அனுஷ்டானத்தில் இருக்கிறதாகத்தெரியவருகிறது. பெரியமனுஷியானபிறகு பெண்களுக்குக் கல்லியாணம் செய்வது மகம்மதியர் இந்தியாவில் அரசாட்சி ஆரம்பித்ததற்குப் பின்புதான் நின்றுவிட்டதாகச் சில பெரிய மனுஷியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். சாப்பாட்டுக்குப் பிந்தியும் க்ஷவரம் செய்துகொள்ளும் சம்பிரதாயம், நம்மவர்களில் செளளம், உபநயனம் ஆகிய கருமங்கள் நடக்கும் தினங்களில், குமாரபோஜனத்திற்குப் பிந்திக் குழந்தைகளுக்கு க்ஷவரம் செய்துவைப்பதில் காணலாம். மேற்கூறிய 7, 19 முதலிய அனுசாரங்கள் சாஸ்திரமனுசரித்துப் பார்க்குமிடத்து, ஆசாரமாகவே இருக்கிறது. ஆகையால் கேரள நடவடிக்கை முழுவதும் அனுசாரங்கள் என்று சொல்வது அவ்வளவு சரியாயில்லாவிட்டாலும் அனுசாரங்களென்றே அவைகளுக்குப் பெயர் மொத்தத்தில் வழங்கி வருகின்றன.

22-வது அனுசாரமான விபசார ஸ்திரீகளுடைய சங்கதியை விசாரித்தல், அவர்களுக்குள் மட்டும் விசேஷித்துக்காணுவது. ஆதலால் அந்த விஷயம் கொஞ்சம் விவரமாய்ச்சொல்ல வேண்டியது. ஒரு இல்லத்தில் ஏதாவது ஒரு ஸ்திரீக்கு விபசாரக் குற்றம் வந்துவிட்டால், அந்த இல்லத்திற்குக் காரணவனை (மானேஜ்மெண்ட் செய்துவருப்படியான) வன் தன்னுடைய சமீபபந்துக்களான சுவஜாதிக்காரர்களுக்கும், அவர்களுடைய வைதீகனுக்கும் உடனே சமாசாரம் தெரியப்படுத்தவேண்டியது. உடனே அந்த அந்தர்ஜனத்தை இல்லத்திற்கு வெளியில் ஐந்தாம் பிறை என்னும் ஒரு வெளிக் கட்டடத்தில் பந்தோபஸ்துடன் வைத்து, இராஜாவுக்குச் சமாசாரம் தெரியப்படுத்துவார்கள். கொச்சி, அனந்தசயனம், இந்த ராச்சியங்களில், அத்தேசத்தரசருக்கும், மலையாளத்தில் கள்ளிக்கோட்டையிலிருக்கும் சாமரீனுக்கும், தெரியப்படுத்துவார்கள். வடமலையாளத்தில் சில சில்லரை ராஜாக்களுக்கும் இந்த அதிகாரம் இருக்கிறது. உடனே ஜாதிக்கூட்டத்திற்குத் தலைவனாக விசிஷ்ட நம்பூதிரியில் ஸ்மார்த்தன் என்னும் பெயரையுடைய ஒருவனும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மீமாம்ஸகர்களும், ஊருக்குப் பெரிய மனுஷியனை அகக்கோய்மா என்பவனும், இராஜப்பிரதிநிதியாகி அமரிக்கைசெய்யும் புறக்கோய்மா என்பவனும், சேர்ந்து அந்த அந்தர்ஜனம் குற்றவாளியா, இல்லையா என்ற விஷயத்தைத் தீர்மானிக்க எத்தனிப்பார்கள்.

இந்தப்படி சந்தேகப்பட்ட ஸ்திரீயை ஸாதனம் என்று சொல்லுவார்கள். ஸ்மார்த்தனை முன்னிட்டு இந்தச் சாதனத்தை விசாரம் செய்வதால், இந்த விசாரணைக்கு ஸ்மார்த்த விசாரம் என்று பெயர்.

முதல் முதல் அரசனுடைய உத்தரவு கிடைத்ததும் ஸ்மார்த்தன் தகுந்த மீமாம்ஸகர்களைத் தெரிந்து எடுத்துக்கொள்வான். வழக்கமாகச் சந்தேகப்பட்ட சாதனம் இருந்த இல்லத்திற்கு அடுத்த கோயிலில்தான் பஞ்சாயத்துக் கூட்டம் கூடுவது. வழக்கமாய்

நம்பூதிரி ஸ்திரீகளுக்கு ஒரு சூத்திர ஸ்திரீ எப்பொழுதும் கூட இருக்கிற விஷயத்தை முன்னமே சொல்லியிருக்கிறோம். ஐந்தாம் பிறையில் சாதனத்தை வைத்தபொழுதும் சூத்திர ஸ்திரீ கூடவே யிருப்பாள்.

முதல்தினத்தில் ஸ்மார்த்தன் ஐந்தாம் பிறைக்குள் ஒன்றும் தெரியாதவனைப்போல் போகத் தொடங்கினால், தான் உள்ளே இருப்பதாகவும் உள்ளே போகக்கூடாதென்றும் அந்தர்ஜனம் சொல்வாள். உடனே அவன் ஒன்றுந்தெரியாதவனைப்போல், இதென்ன சங்கதி? அந்தர்ஜனம் ஐந்தாம் பிறைக்குள் வரவேண்டிய சங்கதி என்ன? என்று கேட்க, சாதனத்தைச் சந்தேகத்தின்பேரில் இங்கே வைத்திருக்கிறார்கள், என்று தாசி மறுமொழிகூறக் கேட்டுத் தன் கூட இருக்கும் மீமாம்ஸகர்களுக்குச் சங்கதியைத் தெரியப்படுத்துவான். இதுதான் ஸ்மார்த்த விசாரத்திற்கு ஆரம்பம்.

மறுநாள் பஞ்சாயத்தார் எல்லாரும் சாதனம் இருக்கும் ஐந்தாம் பிறைக்கு வந்து, சாதனத்தை ஒரு திரைக்குப்பின் நிறுத்தி, சூத்திர ஸ்திரீயை என்ன சங்கதி என்று கேட்டு, அவளால் தன் எஜமானிக்குத்தப்பிதம் உள்ள சங்கதி தெரிந்ததன்மேல், தாசிமூலமாகவே இந்தச் சாதனத்தையும் விசாரணை செய்வார்கள். அந்தச் சாதனம் தன் தப்பிதத்தை ஒப்புக்கொள்ளும் வரையில் பிரதிநாளும் ஸ்மார்த்தன் அனேக விதமாகச் சாதனத்தைக் கேள்வி கேட்பான். கேட்டும் சாதனம் ஒப்புக்கொள்ளாதவரையில், சில நிர்ப்பந்தங்கள் மூலமாயாவது ஒப்புக்கொள்ளும்படி செய்யப் பிரயத்தனப்படுவார்கள்.

முன்காலங்களில் இந்தச் சாதனத்தை வைத்திருக்கும் அறைக்குள் எலி, பாம்பு, வங்கையர்க்களைவிட்டுத் தொந்திரவு செய்து கொண்டிருந்ததாகக் கேள்வி. இப்பொழுது அப்படியெல்லாம் நடப்பதாகத் தெரியவில்லை. ஸ்மார்த்த விசாரம் முடியும்வரையில், அதை உத்தேசித்து வந்திருக்கும் நம்பூதிரிகளுக்குச் சாப்பாடு முதலான செலவுகள் சாதனத்தின் இல்லத்தார்களே கொடுக்கவேண்டியது. சில சமயம் இந்தஸ்மார்த்த விசாரம் வருஷக்கணக்காயும் நீடிப்பதுண்டு! அதனால் அந்தச் சாதனத்தின் புருஷனும், அவனைச் சேர்ந்தவர்களும், அந்தச்சாதனிடத்தில் போய், "நீ ஒப்புக்கொள், சங்கடங்கள் வராமல் பாதுகாத்துக்கொள்ளுகிறோம்," என்று இவ்விதமாய் ஆசைவார்த்தைகள் சொல்லி, அவளை ஒப்புக்கொள்ளச் செய்வார்கள். அந்தச்சாதனம் தன் தப்பிதத்தை ஒப்புக்கொண்டால், உடனே அவளை வெளியில் கொண்டுவந்து அவளுடன் அநீதியாய்ச் சம்பந்தப்பட்டபேர்களை யெல்லாம் சொல்வதற்காகத் திரும்பவும் விசாரிப்பார்கள்.

இது ஆரம்பித்த அநேக நாள் வரையில், மேற்கூறிய விஷயத்தில் இன்னும் யாராவது உண்டா என்று விசாரிப்பார்கள். அந்தச் சாதனம் யார் பேரையாவது சொன்னால் அதை நம்பும்படியான முகாந்தரங்களும் விவரமாய்க் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது. அப்படிக் குற்றத்தை ஒப்புக்கொண்டு, தன்னுடன் சேர்ந்து தப்பிதம் செய்தவர்களையும் சொன்னதும், அந்தச் சாதனத்தின் முகம் மறைப்புக்காக வைத்திருந்த குடை முதலியவைகளைப் பிடுங்கி எறிந்து, அவளுக்கு அப்பொழுதே உத்தரகிரியைகளெல்லாம் செய்து விடுவார்கள்.

சாதனத்தை வீட்டைவிட்டுத் துரத்திய பிறகு அவளுக்கு அவளுடைய இல்லத்தில் இருந்தே செலவு கொடுத்து வருவதுமுண்டு. சாமான்னியமாகத் தன்னுடன் சேர்ந்து தப்பிதம் செய்தவர்கள் யாரையாவது அழைத்துக்கொண்டு போவதுதான் சகஜம். இப்படிப்பட்ட அந்தர்ஜனங்களை ஸம்ரக்ஷணை செய்வதற்காக வடமலையாளத்தில் சிறைக்கல் என்னும் ஒரு ஸ்தலம் இருக்கிறது அவ்விடம் போகப்பட்டவர்களுமுண்டு.



இந்தப்படி சாதனத்தைத் துரத்திவிட்ட பிறகு, அவளைச்சேர்ந்த இல்லத்தார்களுக்குப் பிராயச்சித்தம் செய்து சதாபோஜனம் என்னும் பெரியவிருந்து ஏற்பாடுசெய்து, அந்த இல்லத்தார்களுடன் இருந்து ஸ்மார்த்தன் முதலியோர்கள் சாப்பிடுவார்கள். அந்தச் சாதனத்திற்கு முதல் முதல் கெடுதல் ஏற்பட்டதற்குப் பின்பிறந்த குழந்தைகளையும் அந்தச் சாதனத்துடன் அக்கிரமமாகச் சம்பந்த பட்டவர்களையும் ஜாதிப்பிரஷ்டம் செய்து விடுவார்கள். அவர்கள் கோயில்களுக்குப் போகவாவது, கிணறு, குளம் முதலியவைகளைத் தொடவாவது அதிகாரமில்லை. இந்தக்கிரமத்தில் ஸ்மார்த்த விசார மூலமாகத் தீர்மானிக்கப்பட்டபடி, அந்தந்த ஊர் அரசர்கள் நிறைவேற்றி வைப்பார்கள் இப்படி ஒரு கேஸ் விசாரணைசெய்து முடிவதற்கு முன் 12000-முதல் 15000-ரூபாய் வரையில் செலவாகிறதாகக் கேள்வி.

சாதனத்தின்பேரில் தப்பிதம் ஒன்றும் ஏற்படாவிட்டால், இந்தப்படி அவளைச் சந்தேகித்த தப்பிதத்திற்காக, பஞ்சாயத்தார்கள் எல்லாரும் அவளுக்குச் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து, இந்த அபராதத்தைப் பொறுத்துக் கொள்ளும்படியாய்ப் பிரார்த்திப்பார்கள். இப்பொழுது சென்ற இரண்டு வருஷத்திற்கு முன் கொச்சி இராச்சியத்தில் நடந்த ஸ்மார்த்த விசாரத்தில் எழுபது ஜனங்கள் வரையிலும் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டார்கள்.

(இன்னும் வரும்.)

---

கல்கத்தாவிலிருக்கும் ஒருசாது பத்துநாளைக்கு முன் மாஜிஸ்திரேட்டினிடம் போய், துமகேது முதலிய உற்பாதங்களும், க்ஷாமம் முதலிய துக்கங்களும், இவ்விராச்சியத்தில் மேலிடுவதால், தான் தன்னுடைய பாழுந்தேகத்தை வைத்துக் கொண்டு வாணாளை வீணாக்குவதை விட அதைப் பகிரங்கமாய் அக்கினிக்கு ஆகுதிசெய்து தேச க்ஷேமத்தை நாடுவதற்கு உத்தரவு வேண்டினாராம். மாஜிஸ்திரேட்டு அவருக்கு நல்வார்த்தை சொல்லி, வீட்டிற்குப் போகும் படிக்கும், தேச க்ஷேமத்தை நாட சார்வகாலமும் ஈஸ்பரனைப் பஜிக்கும் படிக்கும், சொல்லியனுப்பினாராம்.

## புகழேந்திப்புலவர் நளவெண்பாப் பாடிய வரலாற்றின் ஆராய்ச்சி

ஸ்ரீமான் ஸி. கே. நாராயணசாமி முதலியார்.

எமக்குச் சிறிது காலமாகத் தமிழ்ப் புலவர்களின் சரிதங்களைப் படித்து வரவேண்டுமென்பதில் நிரம்பக் கவலை தோன்றி அவற்றில் கவனஞ் செலுத்தி வந்தோம். நமது பார்வைக்கெட்டியன வெல்லாம் "விநோதரசமஞ்சரி," "புலவர் புராணம்," "பாவலர் சரித்திர தீபகம்," "அபிதானகோசம்" முதலியவைகளே. நாமறிந்தமட்டிலும் இவைகளிற் காணப்படும் வரலாறுகள் வெறுங் கற்பனையாக விளங்குகின்றனவேயன்றிப் படிப்பவர் மனத்திற்குத் திருப்தியுண்டாக்குந் தன்மையனவாகத் தோன்றவில்லை. ஒரு நூலின் முன்னர்,

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை"

எனவரூஉம் பாயிரம் இருப்பினும்,

(நன்னூல் சிறப்புப்பாயிரம் பொதுவிதி. க)

காலங் களனே காரண மென்றிம்
மூவகை * * * *

(ஷை. ஷை. உ)

எனக்கூறும் தமிழ்நூல் விதியை அது செவ்வனே கூறப்படாமையால் சரிதம் கிரமப்படி அறிதல் அருமையாயிற்று. பாவலர் சரித்திர தீபகம், அபிதானகோசம், புலவர் புராணம், முதலிய நூல்கள் புலவர்களின் சரிதங்களை யெடுத்து விளக்கப்போந்தும், ஒன்றோடொன்று முரணியும், விரிவிற்கூறி விளக்கவேண்டுவனவற்றை விளக்காதும், ஒருவாறு சென்றன. புலவர் சரிதங்களை யிதற்குமுன் அச்சிடுவித்தார் பலராயிருந்தும் அவர் தாமும் இவ்விஷயத்தைக் கவனித்தாரல்லர். ஆகலின் யாமும் அவ்வாறு ஒழித்தனலம் அன்றென்று கேள்வியானும், சாதனங்களாலும் தெரிந்தவற்றை யெழுதி வைப்பிற் பின்னோர்க்குப் பேருபகாரமாமென்பதைப் முன்னிட்டு முதன்முதல், மதுரைச் செந்தமிழ்ச்சங்கத்து மாதப் பத்திரிகையின் சென்ற தொகுதியில் "படிக்காசுப்புலவர்," "இரட்டையர்," "திம்ம

"சுவாமிகள்" முதலிய புலவர் சரிதங்களை வெளியிட்டும், நடைபெறும் ஜெ பத்திரிகையின் 1, 2-பகுதிகளில் "ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய" வரலாற்றை விளக்கியும், பின் சென்னையில் பிரசுரிக்கப்பெறுகிற இவ் "வித்யா விஹாரிணி" மாதப்பத்திரிகையின் 5, 6-நெம்பர்களில் "கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றிய வரலாற்றின் ஆராய்ச்சியை" எழுதியும், இப்பொழுது "புகழேந்திப்புலவர் நளவெண்பாப் பாடிய வரலாற்றின் ஆராச்சியை"யும், வரையத் தொடங்கியுளேமாகலின், பெரியோர் குறைகூறுரெனக.

வரையாது கொடுக்குந் தன்மையால் வள்ளலெனப் பெயர்வாய்ந்து உலகம் புகழத்திகழ்ந்த குமணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, "நளன்," நிருதி எனக்கூறப்படுகிற முதலெழு வள்ளல்களில் நளனும் ஒருவன். இவன் *நிடத நாட்டிலுள்ள மாவிந்த நகரைப் பல்லாற்றானுஞ் சிறப்படைய ஆட்சி புரிந்து "சக்கரவர்த்தி" யென்னும் பெரும் பெயர் புனைந்தவன். இம்மன்னனின் பெருவண்மையும், பலகுணாதிசயங்களையும்பற்றித் தமிழ்க்கவியினால் நவரசாலங்காரஞ் செறிந்திலங்க நானூற்றுச் சில்லரை வெண்பாக்களால் வருணித்துப் பாடியவர் தொண்டைநாட்டிற் செங்கற்பட்டிற் கருகிலுள்ள (பொன்விளைந்த)†களத்தூரிற் பிறந்திருந்த புகழேந்திப்புலவராவர். இவர் வெண்பாப்பாடுதலிற் பாரதம் பாடிய பெருந்தேவனாரை ஒருபுடையா னொப்பரென்பது கொள்ளத் தகும். புலவோர்க்கு நல்விருந்தாக வமைந்த இப்பிரபந்தம் ஆழ்ந்த கருத்தமைந்து படிப்பதற்கினிமை பயக்குஞ் சொல்லலங்காரத்தோடு கற்பனையாதிய கட்டுரைகளில் விசேடச் சிறப்புவாய்ந்ததென்பது அதனை ஓர்ந்துணர்ந்து மகிழ்ந்த நல்லறிஞர்கள் மறுக்கக்கூடாத விஷயம். இந்நூற்கு வழிநூல் வடமொழியிலுள்ள நளச்சரித்திரமேயாம். "நளவெண்பா" உறையூர்ப்புறத்து மள்ளுவநாட்டின்கணுள்ள முரணை என்னும் நகரத்து "சந்திரன் சுவர்க்கி" என்னும் சிற்றரசனொருவன் வேண்டுகோளாற் பாடப்பட்டதென்பது, அந்நூலிலாங்காங்குக் காணப்படுஞ் செய்யுட்களான் அறியப்படும்.

"மாமனுநூல் வாழவரு சந்திரன் சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான்."
"மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டு
தாமத்தரிச்சந்திரன் சுவர்க்கி—நாமத்தார் [ளைக்கும்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே"

எனவருவதாம்.

இப்புலவரை அவ்வரசன் பெரிதும் ஆதரித்துக் காத்து வந்தானென்பதும், அந்நன்றிபாராட்டிக், கம்பர் தமது இராமாயணத்திற் "சடையப்பவள்ளலையும்," ஔவையார் "பந்தனையும்," பெருந்தேவனார் "பல்லவராயனையும்," மண்டலபுருஷன் "கிருஷ்ணதேவராயனையும்" வில்லிப்புத்தூரர் "வரபதியாட்கொண்டானையும்," தத்தம் நூலிற் சிறப்பித்துக் கூறியது போல் புகழேந்திப்புலவரும் தமது நளவெண்பாவில் "சந்திரன் சுவர்க்கியை?" உபகாரஸ்மிருதியாகப் புகழ்ந்து கூறியுள்ளார். அது,

"தாருவெனப் பார்மேல்தரு சந்திரன் சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல்"
"சங்கநிதிபோல் தரு சந்திரன் சுவர்க்கி
வெங்கலிநாய் நின்றுலக மீட்டாற்போல்" [மான்
"வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோ
தண்டார்புனை சந்திரன் சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே"

எனவரும் செய்யுட்களான் உணரப்படும்.

இவர் நளசரித்ததை வெண்பாவாற் பாடினாரென்பதற்கு,

"பாரார் நிடதபதி நளன்சீர் வெண்பாவாற்
பேரார் புகழேந்தி பேசினான்—தாரார்
செழியனையுஞ் சென்னியையுஞ் சேரத் திறைகொள்
மொழியின் சுவையே முதிர்ந்து"
(நளவெண்பாப்பாயிரம்)

என்பதனானும், இதற்கு எடுத்துக் காட்டியாகவுள்ள,

"நளனைப் புகழ்கின்ற வெண்பாவைப் பாடி
நன் றெட்கவிதை
கழகத்தின் மிக்க புகழேந்தியாங்
கவிராசன் தன்னைத்
தளவப்பெரு நகைமாதொடு
தென்னவன் தான் மணஞ்செய்
வளவற்குச் சீதனமீந்தது
பாண்டியன் மண்டலமே"
(பாண்டிமண்டல சதகம்)

என்றபாடலானும் இனிது தெளியப்படும்.

படிக்காசுப் புலவர் பாடிய தொண்டைமண்டல சதகத்து,

"காரார் களந்தைப் புகழேந்தி
சொன்ன கலம்பகத்தி
னேராது நையும் படியென்ற
பாடலி னேரியர்கோன்
சீராகச் செப்பிய நற்பாடல்
கொண்டவன் செஞ்சியர்கோன்
மாராபி ராமனங் கொற்றந்தை
யூர்தொண்டை மண்டலமே"
(தொண்டைமண்டல சதகம்)

எனவரும் செய்யுளான் இவர் செஞ்சியர்கோன் கொற்றையைப் புகழ்ந்து "கலம்பக" நூலொன்று பாடினாரென்பதும் புலனாகின்றது. ஒட்டக்கூத்தர் "விக்கிரமசோழனுலா"வின் கண், அச்சோழன்படைத்தலைவர், அமைச்சர், மண்டலிகர் எனப்பலர் இருமருங்கும் மொய்த்தீண்டத் திருவுலாப்போந்தான் எனக் கூறுமிடத்து, அப்படைத்தலைவர் முதலியோரை வரிசைப்பட வைத்துரைக்கின்றனர். அவர் கலிங்கம் வென்ற *தொண்டைமான் முனையர் கோன், சோழன் கோன், மறையோன், கண்ணன், வாணன், காலிங்கர்கோன், செஞ்சியர்கோன், காடவன், வேணாடர், வேந்து, அனந்தபாலன், வத்தவன், சேதிநாடன், ஆனைகாவலன், அதிகன், வல்லவன், திரிகர்த்தன், மல்லவன், கோசலன், மாகதன், மாளுவன், வில்லவன், கோளன், மீனவன், பல்லவன் என இவராவர். இவருட் புகழேந்தியாரால் கலம்பகம் பாடப்பெற்றோன் செஞ்சியர்கோன் காடவன் என்பானவன். இதில் நம்புலவரும், செஞ்சியர்கோனும், விக்கிரம சோழனும் ஒரு காலத்தவராதல் ஆய்ந்தறியத்தகும்.

*    *    *    * "கடியரணச்"
"செம்பொற்பதணச் செறிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும்." (கண்ணி 80)

என அவ்வுலாவிற் கூறப்படுதலால் இவன் செஞ்சிக் கண்ணே உயர்ந்த வலிய அரணொன்றமைத்து வாழ்ந்தோனென்பதும், காடவர் குடியினன் என்பதும் அறியப்படுவன. காடவர் என்பது பல்லவர் வகுப்பினர்க்கு ஒரு குடிச் சிறப்புப்பெயர். "கோற்றந்தை" யென்பது அவன் இயற்பெயர்போலும். புகழேந்தியார் அக்கலம்பகத்து,

"நையும் படியே நாங்கொற்ற
நங்கோன் செஞ்சி வரைமீதே
யையம் பெறநுண் ணிடைமடவா
யகிலின் றூப முகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று
பிரசத் துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டாரே" (63)

எனப்பாடுதலாற் செஞ்சியர் கோனுக்குக் கொற்றன் என்பதும் பெயராமெனத் தெரிகின்றது. விக்கிரமசோழன் அரசாட்சிக்காலம் கி. பி. 1118-முதல், கி. பி. 1132-வரை எனக் கொள்க. *

இனி, இவரியற்றிய நளவெண்பாவின்கணுள்ள சில பாடல்களைக் குறித்து ஒட்டக்கூத்தர் மாச்சரியத்தாற் சில வாதம் நிகழ்த்தினரென

---

*ஐம்பத்தாறுதேசங்களிலொன்று. இக்காலத்தப்பூகோளநூற்கிணங்க மத்திய இந்தியாவிலுள்ளது. (Modern *Berar* in the Central Provinces of India.)

† "மாலார்களந்தைப்புகழேந்தியுந் தொண்டைமண்டலமே" "ஐயன்களந்தைப்புகழேந்தியாண்டான்" "காரார் களந்தைப்புகழேந்தி" எனவரும் தொண்டைமண்டல சதகத்தா லுணர்க.

* இவன் முதலிய சிலர் விக்கிரமசோழன் தந்தை காலத்தும், பெருஞ்சிறப்பெய்தியோராவர். செந்தமிழ்த் தொகுதி 2. பகுதி 12.

* செந்தமிழ்த்தொகுதி 2. பகுதி 12. பக்கம் 395.

விநோதரசமஞ்சரியிற் காணப்படுகிறது. இப் புலவர்கள் அறிஞர்க்கு இன்பம் பயக்கும் அரியபெரியவாதம் நிகழ்த்தினரென்பதல்லது, தங்கள் பெருமைக்கு ஒவ்வாத இழிதக்க வாதம் நிகழ்த்தினர் எனக்கூறுதல் இயையாததாம். இவர் இயற்றிய நளவெண்பா மிக்கச் சிறப்புடைத்தென்பது "சந்தம் படிக்காசலாதொருவர் பகரோணுதே" என்று புகழப்பட்ட "படிக்காசுப்புலவர்" தமது "தொண்டைமண்லசதக" த்து,

> கேட்டாலு மின்பங் கிடைக்குங் கண்டீர்
> கொண்ட கீர்த்தியொடு
> பாட்டாலுயர்ந்த புகழேந்தி சொன்னபடி (17)

எனக்கூறியதே போதிய சான்றும். இது நிற்க.

சென்னைத் துரைத்தனக் கல்விச்சாலைத் தமிழ்ப்புலமை அஷ்டாவதானம் ஸ்ரீவீராசாமி செட்டியாரவர்கள் 1858ஹு இயற்றி வெளியிட்ட "விநோதரசமஞ்சரி" என்னும் நூலின்கண், "புகழேந்தி நளவெண்பாப் பாடியது" என்னுந் தலைப்பிற் காணப்படுகிற வரலாற்றைச் சிறிது கவனிப்போமானால் அது சுத்த அசம்பாவிதமாய்க், கற்பனைக்கு வைப்பு நிதியாய், முன்னுக்குப் பின் முரண்படுவதாய், அறிஞர்கள் ஒப்புடனேற்று மகிழ்தற்கிடமின்றி அறுவெறுக்கத்தக்க விதமாய் அமைந்து கிடக்கின்றதென்பதைக் காணலாம். இங்ஙனம் சரித்திரத்திற்கே ஓராதாரமின்றிப் பொது நோக்கற்று விளங்குமிதனை வெளியிட்டபெரித்த ஆசிரியர் கருத்தின்னதென்பதை நாமறியோம்.

அன்றியும், நளவெண்பாப்பாடிய வரலாற்றில் புகழேந்திப் புலவரைப் பெரிதும் சிறப்பிக்க முன்னெழுந்த ஆசிரியர் அம்மட்டோடு நில்லாது, தமிழகம் புகழ வீற்றிருந்து கூர்த்த அறிவிற் சீர்த்த கல்வியாளராகிய "ஒட்டக்கூத்தரை" சிறிதும் மதித்தலின்றிக் கர்வியென்றும், அகங்காரியென்றும், கல்வி நிறையில்லா வீண்புலமை பாராட்டுபவரென்றும், வரம்பிகந்து வீணே தூஷித்து மகிழ்ந்துள்ளார். இது எம்மட்டும் ஞாயமோ வென்பது நமக்குப் புலப்படவில்லை.

கூத்தரின் அருமை பெருமைகளையும், அவரியற்றிய "அரும்பைத்தொள்ளாயிரம்," "நாலாயிரக்கோவை," "தக்கயாகப்பரணி," "அண்டத்துப்பரணி," "குலோத்துங்கன் கோவை," "மூவருலா," முதலிய பிரபந்தங்களையும், அவற்றில் பொலிவுற்று விளங்கும் இனிய சந்தம், மனத்தைக்கவர்ந்து வியக்கச் செய்யும் கற்பனை விசேடம், அழகுபெற வமைந்த சொல்லமைதி, ஆதிய விஷயங்களைச் சிறிதேனும் கவனித்திருப்பரேல்ஒருக்காலும்இங்ஙனம்தூஷிக்க முற்பட்டிருக்கமாட்டாரென்றே நம்புகிறோம்.

ஒட்டக் கூத்தர் வீண்புலமை பாராட்டுபவராயிருந்தால் உலகுபுரக்கும் சக்கரவர்த்தியும், கல்வியறிவிற் சிறந்தவனும், உபயகுலோத்தமனென விளங்கியிருந்த அபயன் பேரனும், விக்கிரமசோழன் மகனுமாகிய "குமாரகுலோத்துங்கன்"

* * * * "நித்தகவம்"

> "பாடுங் கவிப்பெரு மானொட்டக்
> கூத்தன் பதாம்புயத்தைச்
> சூடுங் குலோத்துங்க சோழனென்றே
> யென்னைச் சொல்லுவரே"
>
> (தமிழ் நாவலர் சரிதை)

என்று துதித்து மகிழ்வரா? இதனையேனும் நமது செட்டியாரவர்கள் சிந்தித்திருப்பின் இவ்வாராய்ச்சிக்கு இடந்தேடியிரார்.

ஒருவர் ஒருசரிதத்தை வெளியிடுமுன் அதிற் சம்பந்தப்படும் ஆசிரியர்களின் குணகுணங்களையும், மற்றும் பல விசேடச் செய்திகளையும் நுணுகிஆராய்ந்து, உள்ளபடியே புகழ்தற்குரியதாக விருந்தால் புகழ்ந்தும், இகழ்தற்குரியதாக விருந்தால் இகழ்ந்தும் நூல்களில் வெளியிடுதல் உத்தமக்கல்வியாளரின் சன்மார்க்க வழியாகும். அங்ஙனமின்றி நினைத்தபடி ஒருவரை வேண்டுமென்றே தூஷிக்கமுற்படுவது நடுநிலைமை குன்றும் பழிகாரர் செயலாமென்று உலகம் வசைகூற முற்படுமன்றோ?



இதனை விநோதரசமஞ்சரியின் ஆசிரியர் கவனியாதொழிந்தமைக்கு மிக வருந்துகிறோம்.

நமது காருண்ய கவர்ன்மெண்டார் சில வருடங்களாக நமது பூர்வீக வித்வான்கள், ஆசிரியர்கள், மஹாத்மாக்கள், ஆலயங்கள், தேசசரித்திரங்கள், செப்பேடு, சிலாசாஸனங்கள் முதலியவற்றைத் தேடிச் சேகரிக்கவும், சேகரித்தவைகளைத் திருத்தமாகச் சோதித்துக் கிடைக்கப் பெறும் வரலாறுகளைப் பத்திரிகைகள் மூலமாகவும், புத்தக மூலமாகவும் வெளியிட்டுவரவும் தேர்ந்த பண்டிதர்களை நியமித்து நடத்திவருமிக்காலத்தில், விநோத ரஸமஞ்சரியிற் கூறப்படுகிற "கம்பர்சரித்திரத்தின் ஒருபகுதி" "கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றியது" "ஒட்டக்கூத்தர் ஈட்டி யெழுபது பாடியது" "ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண் பேசிய சரித்திரம்" ஆதிய காலநிர்ணயமற்றதும், முன்னுக்குப் பின் முரண்படுவதும், மேற்கோளில்லாததுமாகிய இவ்வரலாறுகளை மதிநுட்பமிக்குடைய அறிஞர்கள் நம்பத்தகுதியுடையனவாவென்பது ஈண்டு யோசிக்கத்தக்கது.

இவ்வுண்மை இங்ஙனமிருக்க, சென்னையூனிவர்ஸிடி டெக்ஸ்டு புக் கமிட்டியார் வெளியிட்டுவரும் மெட்டிரிகுலேஷன் தமிழ் டெக்ஸ்டுகளின் உரைப்புத்தகங்களிலும், விநோத ரஸமஞ்சரியிலும் காணப்படுகிற புலவர் வரலாறுகளில் என்ன நம்பிக்கைகொண்டு அதனை உயர்தரமானவர்கட்குப் பாடமாக ஏற்படுத்தி வருகின்றனரோ வென்பது அறியக்கூடவில்லை. ஒருக்கால் அவ்வித்யார்த்திகள் விநோதரஸமஞ்சரியின் ஆசிரியர்பால் வைத்த பிரேமையோ? அல்லது அதனைஅப்போது அச்சிட உத்தரவளித்த திராவிடாந்தர பாஷாபோதகராயிருந்த "பேர்ஸிவல் துரையவர்கள்" மீதெழுந்த பேரபிமானமோ? மற்றெக்காரணமோ நாமறியோம். எங்ஙனமாயினுமாகுக. நாம் புகழேந்திப்புலவர் நளவெண்பாப்பாடியவரலாற்றின்உண்மையிதுவெனக்கண்டறியும்நோக்கங்கொண்டுள்ளதால் அதனைமட்டும்ஈண்டுவிசாரிக்கத்தொடங்குவாம்.

விநோதரஸ மஞ்சரியிலும், தமிழ் டெக்ஸ்டுகளின் உரைப்புத்தகங்களிலும் காணப்படுகிற புகழேந்திப்புலவர் நளவெண்பாப் பாடிய வரலாறுகளை அதிலுள்ளபடி இங்கு சங்கிரகமாகக் கூறிப் பின் அவற்றில் காணப்படுகிற குற்றங்களை ஒவ்வொன்றாய் விளக்கிக் காட்டுவோமாக.

புகழேந்திப்புலவர் நளவெண்பாப் பாடிய வரலாறு வருமாறு:—

உறையூரிலிருந்து சோழநாட்டை ஆண்டு வந்த * குலோத்துங்கச் சோழனுக்குப் பெண் கொள்ளும் பொருட்டு அவனுக்குப் போதகாசிரியரும், சமஸ்தான வித்வானுமாகிய ஒட்டக்கூத்தர் பாண்டியனிடஞ் சேர்ந்து கலியாணத்தைப்பற்றிச் சம்பாஷியா நிற்கையில், பாண்டியன் "எமது குலத்துப் பெண்ணைச் சோழன் கோள்ளத்தக்க சிறப்புடையவனோ?" எனப் பரிகாசமாகச் சொல்ல, அதற்கு ஒட்டக்கூத்தர் "நம் அரசனினும் சோழன் பல்வகையினும் சிறந்தவனே" என அவனது குதிரை, நதி, மாலை, குலம், பராக்கிரமம், கொடி, நகரம், நாடு முதலியவற்றைப் புகழ்ந்துபாட, அது கேட்டு அருகிருந்த புகழேந்திப் புலவர் அவற்றை மறுத்துத் தமது அரசனுடைய மலை, நதி முதலியவற்றைச் சிறப்பித்துப்பாடினவளவில், அது காரணமாக ஒட்டக்கூத்தர் புகழேந்தியிடத்துப் பகை கொண்டனர். பிறகு, தாம் முடிக்கக் கருதிய விவாகத்தைப் பாண்டியனிடம் பேசி, நிச்சயித்துச் சோழனுக்குக் கலியாணத்தை முடித்தார். பாண்டியன் தன் மகளுக்குக் கொடுத்த பல சீதனவரிசையுடன் புகழேந்திப்புலவரையும் அனுப்ப, முன்னமே பகைகொண்ட ஒட்டக்கூத்தரால் அவர் சிறைப்பட்டு வருந்திப் பல கஷ்டங்களனுபவித்து வருவதைச் சோழனது பட்டமகிஷி புணர்

* இவன் அபயகுலோத்துங்கன். செந்தமிழ்த்தொகுதி 2. பகுதி 12. பக்கம் 395.

ந்து, தனது சீதனப் பொருளாக வந்த புலவரை விடுவிக்கக் கருதிச் சோழனிடத்து ஊடல்கொண்டு பள்ளியறையைத் தாளிட்டிருக்க, அரசன் தன் நாயகி ஊடல்கொண்டாளென்றெண்ணி, ஒட்டக்கூத்தரை யனுப்பிச் சமாதானம் செய்யச்சொல்ல, அவரும் அங்ஙனமே சென்று,

* "நானே யினியுன்னை வேண்டுவ
தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்திடுவாய்
திறவா விடிலோ
வானே றனைய விரவிகு லாதிபன்
வாசல் வந்தால்
தானே திறக்குநின் கையித
ழாகிய தாமரையே"

என்றுபாட இராணி "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்று மற்றொரு தாளையுமிட்டிருக்க, வேந்தன் இவ்வனர்த்தமெல்லாம் புகழேந்தியாரைச் சிறையிட்டமையாலே நேர்ந்தன வென்றறிந்து உடனே புகழேந்திப்புலவரைச் சிறைமீட்டுத் தன் காதலியின் கோபந்தணியுமாறு * பாடும்படி வேண்ட அவருஞ் சென்று,

† "இழையொன் றிரண்டு வகிர்செய்த
நுண்ணிடை யேந்தியபொற்
குழையொன் றிரண்டு விழியணங்கே
கொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டு கைம்மான
பரணனின் வாசல்வந்தாற்
பிழையொன் றிரண்டு பொருமோ
குடியிற் பிறந்தவரே"

என்று பாடினவளவில் அவள் மனமகிழ்ந்து கதவு திறந்து காதலன்மேற்கொண்ட கடுஞ்சின மாறினள். அன்றுதொட்டு சோழன் புகழேந்தியாரை நன்குமதித்து அன்புபாராட்டிவந்தனன். இங்ஙனமிருக்குமளவிற் குலோத்துங்க சோழனும், மற்றுஞ் சில பிரபுக்களும் அவர் மகாசாதுரியமுள்ள வித்வசிரோமணியாயிருப்பதனால் அவரைக்கொண்டு வடமொழியிலுள்ள நளசரித்தைத் தமிழிற் சுருக்கிப் பாடச் செய்விக்கவேண்டுமென்று கருதிப் புகழேந்திப் புலவருக்கறிவிக்கப் புலவரும், அரசன் முதலியோரின் கருத்தின்படி அச்சரித்தை "நளவெண்பா" வென்னும் பேருடன் நானூறு செய்யுட்களாற் பாடிவந்து இராஜசபையில் அரங்கேற்றுகையில் "கம்பர்" "ஔவையார்" இவர்கள் முன்பே "ஒட்டக்கூத்தர்"

"மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது"

என்று பிரசங்கித்த வெண்பாவிற் குற்றங் கண்டு ஆட்சேபித்தனர். அதற்குப் புகழேந்தியார் ஒருவாறு சமாதானங்கூற, அதுமுதல் கூத்தரிடத்து விசேட பகைமை கொண்டு, அவரை எவ்விதத்திலும் கொன்று விடுவதே தீர்மானமென்று கருதிப் புகழேந்தி சமயம் பார்த்திருக்கையில், ஒருநாளிராத்திரி யவர் படுக்கை வீட்டில் ஒருவருக்குந் தெரியாமல் ஓர் பெரிய கருங்கல்லைச் சுமந்து கொண்டு வந்தொளித்திருக்கப், பின்னரங்கே கூத்தருக்கு மவர் மனைவிக்கும் போசன விஷயத்தில் நேர்ந்த சம்பாஷணையால் தாமவரை விரோதமின்றிக் கலந்து கொண்டனரென்பதுமே.

இனி இவற்றினின்றும் சில உண்மை விஷயங்களை ஆராய்வாம்.

1. சிறைக்கூடத்தினின்றும் நீங்கிய புகழேந்தியார் அரசர்க்கு ஒட்டக்கூத்தர்பாலுள்ள அன்பும், மதிப்பும் தம்மிடத்திலில்லாமைக்கு மிகவருந்தி, அங்கிருக்க மனமின்றி மள்ளுவ

* இது தமிழ் நாவலர் சரிதையில், புகழேந்தி பாடியதாகக் காணப்படுகிறது. ஒட்டக்கூத்தர் பாடிய பாடல் வேறு, 'வேண்டுவதென்கொல்' 'கவாடம், கைத்தலமாகிய எனவும் பாடம்.

* ராஜஸ்திரீகளுக்கு ஊடல் நிகழும்போது அதை அரசர்கள் புலவர்களைக் கொண்டு தணிப்பித்தல் மரபு.

† பாடபேதம் நிரம்பவுள.



நாட்டின்கணுள்ள முரணை நகர்சென்று "சந்திரன் சுவர்க்கி" என்னும் அரசனை அடுத்து அவன் வேண்டுகோளால் நளவெண்பாப் பாடினரென்பது; நளவெண்பாவிற் பலவிடங்களிற் கூறப்படுகிற சில பாடல்களான் தெள்ளிதினறியக்கிடக்க, குலோத்துங்க சோழனும், சில பிரபுக்களும் பாடும்படி வேண்டிய காரணத்தால் புலவர் பாடியதாகக் கதை கூறுவது யாங்ஙனம்? அன்றியும், கி. பி. 1118-முதல் கி. பி. 1132-வரை அரசுபுரிந்த விக்கிரமன் காலத்து நடந்த இவ்வரலாற்றை கி. பி. 900-முதல்-940-வரை அரசாண்ட குலோத்துங்கன் காலத்து நடந்ததாகவுங் கற்பித்திருக்கின்றனர். இதனால் இவ்வரலாற்றின் உண்மை என்னவென்பது அறிஞர்களே ஆராய்ந்தறியவேண்டும்.

2. தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது ஒட்டக்கூத்தர்,

"காத்துஞ் சிரத்துங் களிக்குங்
களிற்றுடைக் கண்டன்வந்தா
னிரத்துங் கபாட மினித்திறப்
பாய்பண்டிவன னங்கே
யுரத்துஞ் சிரத்துங் கபாடந்
திறந்திட்ட துண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங்
கல்யாண புரத்தினுமே"

(தமிழ் நாவலர் சரிதை.)

* "நூலார் கலைவல்ல செம்பியன்
கேட்க நொடித்துவித்வ
கோலா கலனொட்டக் கூத்தனை
யன்றுதற் கோலி யென்று
மேலார் கவிசொல்லி செய்த்தானத்
தேசென்று மேவிக்கொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தியுந்
தொண்டை மண்டலமே." (35

'வென்றுகொண்ட' எனவும் பாடம்.

(தொண்டைமண்டல சதகம்)

என்று பாடியதை என்ன காரணத்தினாலோ நீக்கிவிட்டுப் புகழேந்தி பாடிய "நானே யினி" எனுஞ் செய்யுளைக் கூத்தர் பாடியதாக வமைத்துங் கூறப்பட்டிருக்கிறது. இது யாது பற்றியோ?

"தூபங் கமழும்பைங் கோதையன்
விக்ரமசோ ழன்மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின்
றானின் றிருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப்
பத்தலைசாய்த்து நின்ற
கோபந் தணியன்ன மேயெளி
தோநங் குடிப்பிறப்பே."

(தமிழ்நாவலர் சரிதை)

"இழையொன் றிரண்டு வகிர்செய்த
வற்றொன் றினையுமிடை
குழையொன் றிரண்டுகட் கொம்பனை
யாய்கொண்ட கோபந்தவிர்
மழையொன் றிரண் டுகைம் மான
பரன்கண்டன் வாயில்வந்தாற்
பிழையொன் றிரண்டு பொறுப்பதன்
றோகடன் பேதையர்க்கே."

(தமிழ்நாவலர் சரிதை)

"நானே யினிச் சொல்லி வேண்டுவ
தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்துவிடாய்
செம்பொன் மாரிபொழி
மானே ரபய னிரவி
குலோத்துங்கன் வாயில்வந்தாற்
றானே திறக்குநின் கைம்மல
ராகிய தாமரையே."

(தமிழ்நாவலர் சரிதை)

என்று புகழேந்தியார் பாடிய மூன்றுபாடல்களில் முதற்பாடலை முற்றும் நீக்கியும், மூன்றுவது பாடலை நிரம்பப் பாடபேதமாக்கியும், ஒட்டக்கூத்தர் பாடியதாக மாற்றியுங் காணப்படுகிறது. இது எந்த ஆதாரம் பற்றியோ?

4. "மல்லிகையே வெண்சங்கா வண்டூத" என்னும் நளவெண்பாப் பாடலை வாதத்திற்கிடனாகக் கொண்டது புகழேந்திபால் கூத்தர் அழுக்காறு கொண்டன்று. இவர்கட்குள் கல்வியானய * வீரம் பற்றிய பகைமையுளதா னெழுந்ததென்க.

* பெருமிதம்—வீரம்.

"கல்வி தறுக ணிசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமித நான்கே"
(மெய்ப்பாட்டியல் 9)

"எல்லியம்போ திருஞ்சிறைவன்
எம்பெருமான் குணம்பாடி
மல்லிகைவெண் சங்கூது
மதிலரங்க மென்பதுவே"
(திருமொழி-8-8)

எனப் பெரியாழ்வார் அருளிச்செயலினும்,

"மல்லிகைப் போதில் வெண்
சங்கம்வண்டே"

எனத் திருவாதவூரடிகள் திருவாக்கானும் பயின்ற (திருச்சிற்றம்பலக்கோவை (364) தாதல் கண்டுகொள்க.

(5) வித்துவான்களாயினோர் ஒருவரையொருவர் வெல்லவேனும் அல்லது கொல்லவேனும் வேண்டில் தங்கள் வித்துவ சாமர்த்தியத்தாலேனும், தெய்வபலத்தாலேனும், வேறெவ்வித மந்திரதந்திரங்களாலேனும் அவற்றை முடிக்கின், அவர்க்குக் கனமுங் கீர்த்தியுமுண்டாம். இங்ஙனம் பெருங்கள்வரைப்போலப் படுக்கையறையிற் போயொளித்துக் கொண்டிருந்து, நித்திரை வேளையிற் றலையிலோர் பெருங்கல்லைப் போட்டுக் கொல்வதினாலுண்டாகுங் கனமுங் கீர்த்தியும் எத்தகையவோ வறிகிலம். இத்தகைய கதையினைக் கற்பனையாக எழுதப்புகுந்தது புகழேந்தியாரது கனத்தைக் குறைக்குமென வறிந்திலர்போலும். இவர்க்கு அப்புலவர்பாலுள்ள அபிமானம் வெகு நேர்த்தி!

உலகாளும் அரசனோடு சமானமானதானத்திலிருந்து சகலமந்திராலோசனைகளையுங் கலைக்கியானப் பிரசங்கங்களையும் விளக்கிச் சிவிகை முதலிய பல சின்னங்களோடு வருவதும் போவதுமாயுள்ள ஓர் சமஸ்தான வித்வானுடைய காரமானது சுகந்த புஷ்பங்களையுஞ், சிறந்த சாத்திரங்களையும், நவரத்தினக் கற்கள் பதித்த கணையாழி பௌத்திர முதலிய மோதிரங்களையுஞ் சுமப்பதல்லது பெரும் பாரமானதும், ஒருவன் றலையை யுடைத்துயிர் போக்குவதுமான கடுங்கருங்கல்லையுஞ்சுமக்கத்தகுவதோ? அன்றியும், புவிச்சக்கரவர்த்தியைப் போன்று கவிச்சக்கரவர்த்தியாயுள்ள கூத்தரது அரண்மனைவாயில் தோறும் எத்தனை காவலாளரிருப்பர்? அதிலவர் படுக்கையறையிலுள்ள அந்தப்புரத்திலே ஸ்திரீஜனமன்றிப் புருடர் நுழையக் கூடுவதோ? அல்லதிவ ரொருவரே தனித்துக் காலம் பார்த்து ஒருவருக்குந் தெரியாதபடி இராப்போதிற் சென்றொளித்தன ரெனினும், ஒருபெருங்கல்லைச்சுமந்துகொண்டுபல காவல்களையுங் கடந்துசெல்லத் திருட்டுப்புன்மாக்கட்கும் அசாத்தியமாயின், கல்வியினும், செல்வத்தினும், நாகரீகத்தினும், பிரபுத்துவத்தினும், ஜீவகாருண்யத்தினும், ஈச்சுர பத்தியினும், மற்றுமுண்டானவெல்லா மாட்சிமைகளினு மிக்காராயுள்ள இப்புலவரேறுக்குச் சாத்தியமாமா? இத்தகைய பெருந்தகைமையர் அத்தகைய புன்றொழிலைச்செய்ய உள்ளத்திலும்நினைப்பரோ? ஓ அறிஞர்களே! அவ்வாறு நினைத்துளரேல், அவரென்ன கண்டகரா? கயவரா? மூசுடரா? மூர்க்கரா? நீசரா? நெறியிலரா? மற்றெத்தகையரென நினைத்து இத்தகைய கட்டுக்கதையினை அவர் பொருட்டு மிக வபிமானத்தோடுங் கற்பித்து அவரைக்கொலை செய்யத் துணியு மாபாவியாக்கினர்?

ஒட்டக்கூத்தர் புகழேந்தியின் பாடலிற் கொண்டுள்ள வியப்பைப் புறத்திற்காட்டாவிடினும், அகத்தின்கண் மதிப்புற்றிருந்தன ரென்பதும், இவரைதபுணர்ந்து வியந்தனரென்னும் உண்மையும் வேறொன்றாயிருக்க, அதனை ஓர்ந்தறியாது வீணே அபசாரப்பட்டனர்.



இனியேனும் இதுபோன்ற பெரியார் சரிதங்களில் பிழைநேரும்படியான பொய்க்கதையினையும், கற்பனைகளையும் புகுத்தாது, நன்னெறிகளி லொழுகி நலம் பெறுவாராகவும். இதனைக்கண்ணுறும் அறிஞரும், இத்தகைய ஆபாச வரலாறுகளில் கவனஞ் செலுத்தாமலும், தமது பிள்ளைகட்குப் போதிக்க முற்படாமலும் இருப்பார்களென்றே பெரிதும் நம்புகின்றோம்.

நாமிதுகாறும் கூறிப்போந்த சில நியாயங்களால் புகழேந்திப் புலவர் நளவெண்பாப் பாடியதைப் பற்றிய உண்மை வரலாறுகள் இன்னவை யென்பது நடுநிலையுடையார்க்கெல்லாம் விளங்காமற் போகாது. எமதபிப்பிராயமும் விநோத ரஸமஞ்சரியின் ஆசிரியரைத் தூஷிக்க வேண்டுமென்பதல்ல. உண்மை வரலாறுகளை வெளியிடுவதில் கவனமும், கவலையுமன்றிப் பிறிதன்று. சுபம்!

### அந்த பரம்பரை

ஒரு கிராமத்தில் ஒரு குருடன் இருந்தான். அவன் ஒருநாள் அடுத்த கிராமத்திலுள்ள தன் பந்து வீட்டுக்குப் போகவேண்டி ஊரைவிட்டு வெளியே வந்தான். கொஞ்சதூரம் போனவுடன் வழி தப்பிப் போய்விட்டதாக நினைத்துக்கொண்டு அங்குமிங்கும் அல்லாடுகையில், அவ்வழியாய்ப் போகும் துஷ்டனொருவன், "அண்ணா, ஏனிப்படித் தத்தளிக்கிறீர்?" எனக் குருடனும், தன் காரியத்தைச் சொன்னான். துஷ்டன், "அண்ணா, அப்படியாகில், இதோ அந்தக்கிராமத்திற்கே போகிற இஷ்டனொருவனிருக்கிறான். அவனைத் துணை சேர்த்துக்கொண்டு சுகமாய்ப் போய்ச் சேரும். இந்தக் கழியைமட்டும் என்ன செய்தும் விட்டுவிடாதீர்," என்று சொல்லி அங்கு நின்றவோர் சேங்கன்றைப் பிடித்து, அதன் வாலைக் குருடன் கையிற் கொடுத்துக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும்படி சொல்லி விட்டு விட்டான். பிறகு தான் சற்று விலகி நிற்கக் குருடனை அச்சேங்கன்று நாலுதிக்கிலுமிழுத்து, மேட்டிலும், பள்ளத்திலு மலைத்து அதனால் அவனுக்குப் பல வுபத்திரவங்களுண்டாகியும், துஷ்டன் பேச்சை நம்பி வாலைப்பிடித்த பிடி விடாமல் அலைவதைக் கண்டு துஷ்டன் சந்தோஷித்துப்போனான். இவ்வாறு குருட்டுத்தனமாக அனேகர் துஷ்டருபதேசத்தால் மயங்கிப் பிறகு எத்தனை கஷ்டப்பட்டாலும் புத்தி வராமல் அனேக விஷயங்களில் உபத்திரவப்படுவது பிரத்தியக்ஷம்.

## ககோளதத்துவம்—பாலபாடம்

ஸ்ரீமதி-ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள்

### அத்தியாயம் 3.

பூமி சுழல்வதால் இரவும் பகலும் உண்டாகிறது.

பூமி உருட்சையா யிருப்பதினால் சூரியனை நோக்கியிருக்கும் அதன் ஒரு பாதி பகலையும் மற்றையபாதி இரவையும் அடைகின்றன. சூரியன் அசைவற்று ஒரே இடத்தில் நிற்க, பூமியானது பம்பரம்போல் சுழல்வதினால் பகலும் இரவும் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே தன்னை ஒருதரம் சுற்றிக்கொள்ள பூமிக்கு ஒருநாள் ஆகிறது.

இதைத் தெளிவாயறியும்பொருட்டுப் பின் சொல்லியமாதிரி செய்து பார்க்கலாம்.

ஒரு இருட்டறையில் ஒரே விளக்கை யேற்றி வைத்து அதன்முன் கொஞ்சதூரத்தில் ஒரு கட்டையிற் பதித்த நீண்ட ஊசியில் அல்லது கம்பியில் ஒரு கிச்சிலிப்பழத்தைச் சொருகி வைப்போம். விளக்கைச் சூரியனென்றும், பழத்தைப் பூமியென்றும் பாவித்துக்கொள்ளுவோம். கம்பியின் மேல் முனையைப் பூமியினது இருசின் உத்தரமுனையாகவும், கீழ்முனையைத் தக்ஷிணமுனையாகவும் வைத்து, இவ்விரு முனைகளுக்கும் சமதூரத்தில் பழத்தின் நடுவயிற்றில் குறுக்காய் ஈக்வேடருக்காக ஒரு கோடு கிழிப்போம். விளக்குக்கு நேராகவும் ஈக்வேடராகிய கோட்டிற்குச் சற்று மேலாகவும் ஒரு குண்டூசியை அழுந்தச் சொருகி அதன் தலை பூமியில் இருக்கும் ஒருமனிதன் தலையென்று எண்ணிக்கொள்ளுவோம். ஊசியாகிய மனிதனுக்கு இப்பொழுது தலைக்குமேல் விளக்காகிய சூரியனிருப்பதால் நடு உச்சி அல்லது மத்தியானம் 12-மணி.

இனிப்பழத்தை, அதாவது, அதன் அடிக்கட்டையை மெதுவாக அப்பிரதக்ஷிணமாய்ச் சுற்றுவோம். கால் சுற்று ஆனவுடன் [illegible]

சம் தாங்கிய பகுதியின் மத்தியிலிருந்த குண்டூசியானது வெளிச்ச பாகத்தின் ஓரத்திற்கு வந்து விடும். இன்னும் கொஞ்சம் சுற்றினால் குண்டூசியின் தலைப்பில் வெளிச்சமேயில்லை. ஆகவே குண்டூசிக்கு விளக்கு அஸ்தமித்துவிட்டதுபோலும். மறுபடியும் கால் சுற்றுக்கு இருட்டுப் பாதியின் மத்தியில் வந்து, அதாவது நடுநிசியையடைந்து, இன்னுமொருகால் சுற்றுக்கு விளக்கை உதயமாகக் கண்டு மற்றுமொருகால் சுற்றுக்கு முன்னிருந்தவிடத்திற்கே வந்து நடுப்பகலையடையும். பழத்தைச் சுழற்றுவதனால் மாத்திரம் விளக்கானது குண்டூசிக்குத் தலைக்கு நேராயிருந்தது அஸ்தமித்து, பிறகு உதயமாகி, மறுபடியும் முன்போலவே தலைக்கு நேராய் வந்துவிட்டதல்லவா? அதுமாதிரி பூமியும் சுழல்கிறது. பகலும் இரவும் இப்படி அது சுழல்வதினால் உண்டாகிறது. மேலும் சூரியன் இருந்த இடத்திற்கே மறுபடியும் வர 24-மணி நேரத்தில் தன்னை ஒருதரம் சுற்றிக் கொள்ளுகிறதென்று ஏற்படுகிறது. பூமி அசைவற்று நின்றுவிட்டால் அதன் ஒரு பாதி சூரிய வெளிச்சத்திலும், மற்றொரு பாதி இருட்டிலும் எப்பொழுதும் சாசுவதமாக இருக்கவேண்டிவரும். அப்படிக்கல்லாது பூமி சுழல்வதால், அதன்மேலுள்ள ஒவ்வொரு இடமும் மாறி மாறி வெளிச்சத்திலும் இருட்டிலும் வந்து கொண்டிருக்கிறது. பழத்திற்குக்கம்பியிருந்ததுபோல பூமிக்கு ஒரு இருசு இல்லாவிட்டாலும் இருப்பதுபோலவே ஒரே மாதிரியாய் சுழன்றுகொண்டிருக்கிறது. நிஜமாகவே ஒரு இருசு இருந்தால் அதன் வடக்கு முனை எங்கு தெரியவேண்டுமோ அந்த இடம் பூமியில் உத்தர முனையென்றும், தெற்கு தக்ஷிண முனையென்றும் சொல்லப்படுகிறது, என்று முன்னமே கேட்டிருக்கிறோம்.

சூரியனானது கிழக்கில் உதயமாய் மேற்கில் அஸ்தமிக்கும் தோற்றத்தினால் பூமியானது கிழக்குமுகமாய்ச் சுழல்கிறதென்று தெளிவாயறியலாம்.

காலையில் சூரியவெளிச்சத்தைக் காணுகிறோம். கொஞ்சங் கொஞ்சமாய் சூரியன்மேலே கிளம்புவதுபோல் தோற்றமுண்டாகிறது. பிறகு சூரியன் உச்சமாவதுபோலவும், அஸ்தமிப்பதுபோலவும் தோன்றி, அதன் பிறகு கடைசியாகப் பின்புறமாகிய இருட்டில் நுழைந்து விடுகிறோம்.

இரவிலும் பூமி சுழல்கிறதை நக்ஷத்திரங்கள் உதயமாய்உச்சமாகி, முடிவில்அஸ்தமிப்பதைக் கொண்டு அறிந்துகொள்ளலாம், என்று முன்னமே சொன்னோமல்லவா? சூரியாஸ்தமன காலத்தில் எந்த நக்ஷத்திரம் உதயமாகிறதோ அந்த நக்ஷத்திரத்தின் இருப்பிடங்களைக்கொண்டு, இரவில் சுமாராய் நாழிகையறியலாம். மேற்கூறிய உதாரணத்தில் பழத்தின்வெளிச்ச எல்லையைக் கவனித்துப் பார்த்தால், இருட்டு உடனே ஆரம்பிக்காமல், கொஞ்சதூரத்திற்கு வெளிச்சம் குறைந்துகொண்டு வருவது காணும். அதேமாதிரி பூமியிலுள்ள நமக்கும் சூரியாஸ்தமனமாகிக் கொஞ்சநாழிகைக்குப் பிந்தியும், சூரியோதயத்திற்குக் கொஞ்ச நாழிகை முந்தியும் அருணோதயம் என்று சொல்லப்படும் வெளிச்சம் உண்டாகிறது. இது பூமியைச்சுற்றி நமது தலைக்கு வெகுதூரம் வரையில் வியாபித்திருக்கும் வாயுவிலுள்ள அணுக்களின் மேல் சூரிய வெளிச்சம் முதலில் பட்டு அவைகளின் பிரதிபலிப்பினால்உண்டாகிறது. ஒரு அறையிலுள்ள விளக்கு வெளிச்சமானது அதன் சுவற்றில் தாக்கி அந்தச் சுவற்றிற்கு நேராயுள்ள மற்றொரு அறைக்குள் ஒருவிதமாக அரைவெளிச்சம்,கால்வெளிச்சம் உண்டாவதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அதுபோலவே அருணோதயமும், அருணாஸ்தமனமும் (இது புதுவார்த்தை) உண்டாகிறதென்று அறிந்துகொள்ள வேண்டியது.

பூமியைச் சுற்றியிருக்கும் வாயுவினால் மற்றொருவித அதிசயமுண்டாகிறது. அதாவது நிஜமாய்ச் சூரியோதயமாவதற்குச் சற்று முந்தியே சூரியன் நமது கண்ணுக்குப் புலப்படுகிறது. அதேமாதிரி சூரியாஸ்தமனத்திற்குப் பிறகும் சில நிமஷங்களுக்குச் சூரியன் தெரிந்துகொண்டிருக்கும். ஒருபாத்திரத்திற்குள் ஒரு ரூபாயை வைத்துப் பாத்திரத்தின் விழும்பு அந்த ரூபாயை மறைக்கும்படியான தூரத்தில் மாத்திரம் நமது கண்களை வைத்துக்கொண்டு, அந்தப் பாத்திரத்திற்குள் தண்ணீரை ஊற்றினால் முன் தெரியாதிருந்த ரூபாயானது உடனே புலப்படுவதோடு சற்றுப் பெரிதாகவும் காணும். இது தண்ணீராகிய ஒரு வஸ்துவின் வழியாய் ஒரு பதார்த்தத்தைச் சாய்வாய் பார்ப்பதால் உண்டாகிற தோற்றம். அதேமாதிரி வாயுவின் வழியாய் சூரிய கிரணங்கள் சாய்வாய் வருதலால், மறைவாயிருக்க வேண்டிய காலத்திலும் சூரியன் தெரிவதோடு, சற்றுப் பெரிதாகவும் காணுகிறது. உதயகாலத்தில் சூரியனைப் பார்ப்பவருக்கும், மத்தியான காலத்தில் பார்ப்பவருக்கும் காணுகிற வித்தியாசத்திற்கு இப்பொழுது காரணம் புலப்படும்.

## 4-ம் அத்தியாயம்.

## பூமி சூரியனைச் சுற்றி ஓடிவருகிறது.

முந்திய மூன்று அத்தியாயங்களைப் படித்தவர்களுக்குப் பூமியின் உருவம் சுமார் 25,000 மைல் சுற்றளவுள்ள ஒரு பெரிய பந்துபோன்றதென்றும், அந்தப் பூமியானது ஓராதாரவுமில்லாமல் நடுவெளியில்மிதப்பதோடு,24-மணிக்கு ஒரு தரம் தன்னிருசில் சுற்றிக்கொள்ளுகிறதென்றும், அப்படிச் சுற்றிக்கொள்ளுவதால் இரவும் பகலும் உண்டாகின்றனவென்றும், தெளிவாய்ப் புலப்படக்கூடும்.

சூரியன் தன்னிடம்விட்டு நகராமல் பூமியும் ஒரே இடத்திலிருந்து பம்பரம்போல் சுழன்றுகொண்டு மாத்திரமிருந்தால், சூரியமண்டலத்திற்கு வெகுதூரம் அப்பாலிருக்கும் நக்ஷத்திரங்கள் பிரதிதினமும் நமது கண்களுக்கு அந்தந்த இடங்களிலேயே காணப்படவேண்டும். அதாவது, அஸ்தமன காலத்தில் என்றைக்கும் ஒரே நக்ஷத்திரம் உச்சமாயிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் சித்திரைமீ முதலில் சூரியாஸ்தமனத்திற்குப் பூசம் உச்சமாயிருக்க, ஆவணிமீ முதலில் அனுஷமும், மார்கழிமீ முதலில் உத்திரட்டாதியும், வந்துவிடுகின்றன. இதன் காரணம் பூமியானது பம்பரம்போல் தன்னையே நாளுக்கொருதரம் சுற்றிக்கொள்ளுவதோடு, சூரியனைச்சுற்றி ஓடிக்கொண்டே ஒரு வருஷத்தில் அதைச் சுற்றிவருகிறது. ஆகையால், மறு சித்திரைமீ முதலில் முன்போல சூரியாஸ்தமனத்திற்குப் பூசம் உச்சமாகிறது.

முந்திய அத்தியாயத்திற் சொல்லியபடி இருட்டறையொன்றில் ஒரு விளக்கை யேற்றி அதன்முன் ஒரு ஊசியில் ஒரு கிச்சிலிப்பழத்தை நிறுத்துவோம். நான்கு சுவர்களிலும் 27-படங்களைத் தொங்கவிட்டு அப்படங்களுக்கு அசுவனி, பரணி, கார்த்திகை....................

எனப் பெயர் கொடுப்போம். (அறை நான்கு மூலையாயில்லாமல் வட்டமாயிருந்தால் பின்னும் சிலாக்கியமே.) பழத்தை இப்பொழுது எத்தனைதரம் சுற்றினாலும் அதில் ஈக்வேடருக்குச் சமீபத்தில் பதித்திருக்கிற குண்டூசிக்கு ஒவ்வொரு இரவிலும் நடுநிசியில் ஒரே நக்ஷத்திரம் (படம்) உச்சமாய்க் கொண்டிருக்கும். அறையின் மத்தியில் விளக்கு இருந்து அந்த விளக்கிற்குக் கீழ்ப்புறம் பழமிருந்தால், கீழ்ப்புறச் சுவற்றின் நடுவிலிருக்கும் படமே பிரதிதினமும் குண்டூசியின் தலைக்கு மேலிருக்கும்.

பழம் சுழலும் திக்கிலேயே, அதாவது அப்பிரதக்ஷிணமாகவே, கொஞ்சங் கொஞ்சமாய்ப் பழத்தை நகற்றி விளக்கிற்கு வடபுறம் வைப்போம். இப்பொழுது வடபுறச் சுவற்றின் நடுப்படம் குண்டூசியின் தலைக்கு நேராக

நடுநிசியில் வரும். இந்தப்படியே மேல்புறமும் தென்புறமும் வைத்துப் பிறகு பழைய படியே முன்னிருந்த கீழ்ப்புறம் வைத்தால் ஆரம்பத்தில் நடுநிசியிற் தெரிந்தபடமே இப்பொழுதும் தெரியும்.

சித்திரைமீ முதல்தேதி யன்று சூரியாஸ்தமன காலத்தில் உச்சமான நக்ஷத்திரம் கொஞ்சங் கொஞ்சமாய் மேற்கு நோக்கி நகர்ந்து, மறு சித்திரை முதல் தேதியன்று முன்போல் சூரியாஸ்தமன காலத்தில் உச்சமாகிறது. ஆகவே பூமியானது சூரியனை ஒரு வருஷத்தில் சுற்றிவருகிறதென்று ஏற்படுகிறது. இந்த ஒரு வருஷத்திற்குள் வெயில், பனி, மழை முதலான கால வித்தியாசங்களை யடைந்து, மறுபடியும் பழைய அவஸ்தைக்கு வந்துவிடுகிறது.

ஒரு பம்பரத்தைச் சாட்டைகொண்டு எறிந்தால், அது எப்படி உருண்டுகொண்டே வளைய வருமோ, அதுபோலவே பூமியும் தன்னிருசில் சுழன்றுகொண்டே சூரியனைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படி ஓடுவதில் ஒருநாளைக்குச் சுமார் 16-லக்ஷம் மைல் ஓடினலொழிய, ஒரு வருஷத்தில் சூரியனைச் சுற்றி வர முடியாது. அதாவது கண்ணிமைப்பொழுதில் 18½ மையில் பறக்கவேண்டியது. சுழலும் வேகத்தைவிட (24மணிக்கு 25000-மைல்) ஓடும் வேகம் 64-மடங்கு அதிகமாகிறது.

ஆகையால் வெகு வேகமா யெறியப்பட்ட ஒரு பம்பரம் பூமியின்மேல் பட்டுக்கொண்டே உருளாமல் ஒருதரம் பட்டவுடன் துள்ளி ஓடினல் எப்படி ஓடும்பொழுதே மெதுவாய்ச் சுழலுமோ, அப்படிச் சுழன்றுகொண்டே ஓடுகிறது இப்பூமியும்.

சூரியன் நடுவில் நிற்கப் பூமியானது அதைச் சுற்றிப் படத்திற் காட்டியதுபோல் ஓடுவதாக நினைத்துக்கொண்டால், ஒரு மாசத்திற்குள் 1 என்னும் கோட்டிலிருந்து 2-என்னும் கோட்டியிடம்போய்ச் சேரும். இதற்குள் தினத்திற்கொருதரம் தன்னிருசில்சுழலுகிறது. சித்திரைமீ 1-ம்தேதியன்று பூமியானது 1-என்னும் கோட்டிலிருப்பதாகநினைத்துக்கொள்ளுவோம் அன்றிரவு சூரியாஸ்தமன காலத்தில் சூரியன் அசுவநி என்னும் நக்ஷத்திரத்தை மறைப்பது போல் தோன்றும். பிறகு 1-கோட்டிலிருந்து பூமியானது 2-கோட்டிற்குப் போகும் காலத்தில் நமது கண்களுக்குச் சூரியன் 'க' என்னும் கோட்டிலிருந்து 'உ' என்னும் கோட்டிற்குப் போவதுபோல தோற்றமுண்டாகும். அதாவது சித்திரைமீத்தில் சூரியன் அசுவநி, பரணி, கார்த்திகையில் கால்பாகமாகிய இந்த 2¼-நக்ஷத்திரங்களைத் தாண்டுவதாகக் காணப்படுகிறது. மாசம் ஒன்றுக்கு 2¼-நக்ஷத்திரங்களாக 12-மாஸத்திற்குள் 27-நக்ஷத்திரங்களையும் ஊடுருவிச்சென்று, மறுசித்திரை முதலில் "க" என்னும் கோட்டிற்கு மறுபடி சூரியன் வந்துசேர்ந்துவிட்டதுபோலிருக்கும். இதனல் மேஷமீ என்றால் மேஷத்தில் (அதாவது அசுவநி, பரணி, கார்த்திகையில் கால் பகுதி) சூரியன் சஞ்சரிப்பதுபோல் தோன்றும் காலம் என்றேற்படுகிறது.

27-நக்ஷத்திரங்களையும், சூரியன் ஒரு வருஷத்தில் தாண்டி வருவதுபோல் தோன்றுவதால், அவைகளை ஆகாசமாகிய ரோட்டில், 27-பிரம்மாண்டமான மைல்கள் என்னலாம்.

சித்திரை முதல் தேதியன்று சூரியாஸ்தமனத்திற்குப் பூச நக்ஷத்திரம் உச்சமாயிருக்குமென்று முந்தி சொன்னேம். இரவில் நாழிகையாக ஆக, அதாவது பூமி சுழலச்சுழல, சூரியோதயத்திற்குள் ஒவ்வொன்றாய் 13½-நக்ஷத்திரங்கள் உச்சமாகவேணும். ஆகையால் பூசம் நகர்ந்து ஆயில்யம் உச்சமானல் 2¼-நாழிகையென்றும், மகம் ஆனல் 4½-நாழிகையென்றும், அதேமாதிரி பூசம் முதல் உச்சமாயிருக்கும் நக்ஷத்திரம் வரையிலெண்ணி அந்த எண்ணை 2¼-ஆல் பெருக்க இரவில் கழிந்த நாழிகை ஏற்படும்.



சூரியனைச்சுற்றி பூமி ஓடுதல்

மேலும் பூமி ஓடிக்கொண்டே யிருப்பதால் ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு நாளுக்கு 4-நிமிஷம் (1-மணிக்கு 60-நிமிஷம்) முந்தி உச்சமாகிறது. அதனால் வைகாசி முதலில் சூரியாஸ்தமனத்தின் போது பூசம் உச்சமாய் $30 \times 4 = 120$-நிமிஷம் அல்லது இரண்டு மணி ஆகியிருக்கும். அன்றிரவு நக்ஷத்திரம் உச்சம் பார்த்து நாழிகை யறிவதென்றால் முன்போலவே பூசம் முதல் எண்ணிவந்த எண்ணை $2\frac{1}{4}$-ஆல் பெருக்கி, பெருக்கி வந்த எண்ணிலிருந்து 2-மணி அதாவது 5-நாழிகையைக் கழித்துவிடவேண்டியது. ஒரு மாசத்திற்கு 5-நாழிகையானால், 6-நாளுக்கு ஒரு நாழிகையாகும்.

ஆகாசத்தைப் பார்த்து இன்னது இன்ன நக்ஷத்திரமென்று சொல்லத் தெரிந்தவர்களுக்கு நாழிகை யறிந்து சொல்வது சுலபம். ஆனால் அனேக நக்ஷத்திரங்கள், பல சேர்ந்து ஒரு நக்ஷத்திரப் பெயர் கொள்வதாலும், ஒரு சுவற்றை ஒட்டிப்பார்த்தாலொழிய இன்னது தான் உச்சமென்று சொல்வது கஷ்டமாதலாலும், இம்மூலமாய்க் கண்டுபிடிக்கும் நாழிகை கடியார மணிபோல் அவ்வளவு சரியாயிருக்க மாட்டாது. பின்வரும் வெண்பா மிகவும் உபயோகமானது.

"சித்திரைக்குப் பூசமுதல் சிரா வணிக்கனுஷம்
மார்கழிக் குத்திரட் டாதியாம்—நித்தநித்தம்
ஏதுச்ச மானாலும் இரண்டோகா வில்பெருக்கி
மாதமைந்து தள்ளி மதி."

~~~~~~~~~~~~~~~~~~~~

நமது மகாராஜ சக்ரவர்த்தி ராச்சியத்திலுள்ளவருக்குத் தமது நன்றியை விளக்கி யெழுதிய கடிதத்திற்கு நகல்கள் அப்படியே யந்திரசகாயத்திலெடுத்து, அந்த நகல்களை விலைக்குவிற்று வரும்படியைத் தருமச்செலவிற்கு உபயோகப் படுத்தும்படி உத்தரவளித் திருக்கிறார். இம்மாதிரி தருமம் புதிதல்ல நமது நாட்டில் முன்னொரு மகமதீயச் சக்ரவர்த்தி குரானைத்தன் கைபடஎழுதிவிற்று அந்தத்தொகையைக் கொண்டே ஜீவித்து வந்ததாக அனேகர் படித்திருக்கலாம் இவ்விரண்டு கேசுகளிலும் தினுசுசற்று வேறாகிலும், அந்தரங்கம் ஒன்றேயாம்.



## ஸாக்ரடீஸ்

ஸ்ரீமான் எஸ். ராமசுவாமி சாஸ்திரியார் அவர்கள்

(184-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இம்மஹானது சம்பாஷணைகள், சித்தாந்தங்கள் முதலியவைகளைப் பற்றித்தெரிந்துகொள்வதற்கு அவரே யெழுதிய கிரந்தங்கள் ஒன்றுமில்லாவிடினும் அவருடைய சிஷ்யர்களில் முக்யரான ஜெனபனும், பிளேடோவும் வெகு சிரத்தையுடன் அவரைக் குறித்து விவரமாயெழுதியுள்ள நூல்களிலிருந்து நன்குதெரிந்து கொள்ளக்கூடும். இச்சிஷ்யர்களுடைய நூல்களில் கூறப்பெற்ற விஷயங்களிற் பல வாஸ்தவமாய் நடந்தனவல்லவென்றும், தங்களுடைய கோட்பாடுகள் முதலியவற்றையே தமது வினயத்தாலும், குருவினிடத்துள்ள கௌரவத்தினாலும், அவரதாகவே வெளியிட்டார்களென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இவ்விஷயத்தைப்பற்றி நாம் இங்கு விஸ்தரிக்க வேண்டுவதில்லை.

2. 'கூடுங்கள், பேசுங்கள், ஒருவருக்கொருவர் மனதையறியுங்கள்' என்று நமது ருக்வேத ருஷிகள் சொல்லியதை யனுசரித்துத் தத்துவ ஆராய்ச்சி செய்த மேனாட்டுப் பெரியோர்களில் ஸாக்ரடீஸ் முக்கியமானவர். அவர் அக்காலத்திய அதேனியர்கள் விபரீத ஞானத்தால் கல்விச்செருக்கடைந்திருந்ததைக் கண்டு, அவ்விறுமாப்பை யடக்கி, அவரவர் தத்தம் அவிவேகத்தை யறியும்படி செய்து, அதன் மூலமாய் உண்மையை வெளிப்படுத்துவது தான் தன்னைக் கடவுள் படைத்ததற்குப் பலனென்று திடமாய்க் கைக்கொண்டார். அவ்வுத்தேசத்தை முன்னிட்டே தனக்கெதிர்ப்படுமொவ்வொருவருடனுங் கலந்து சம்பாஷிப்பதிலேயே தன் காலத்தைப் பெரும்பாலும் உபயோகித்தார். பாலர்களானாலும், கிழவர்களானாலும், படித்தவர்களானாலும், படிப்பற்றவர்களானாலும், அவரவருக்குத் தக்கபடி தெளிவாய்ப்பேசி அவரவரிடம் தான் கிரகித்துக்
~~~~~~~~~~~~~~~~~~~~

கொள்ளக்கூடிய விஷயங்களைக்கிரகித்துக் கொண்டு அவர்களையும் தன்னாலியன்றமட்டும் சீர்திருத்தமுயல்வார். ஆனாலும் விசேஷமாய்ப் புத்திசாலிப் பையன்களிடத்தில் அவருக்குப்பிரியமென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். அவர்களையேதன்னிடம் மிகுந்த ஆதரவுடன்சேர்த்துக்கொள்வார். ஜெனபனைத் தன்னிடம் முதலில் சேர்த்துக்கொண்டதைப்பற்றியுள்ள ஒரு சிறுகதை இவ்விடத்தில் சொல்லத்தகும். அது எவ்வாறெனில் ஒரு நாள் அவர் தெருவழியாய்ப்போய்க்கொண்டிருக்கையில்வாலிபனான ஜெனபனைச் சந்தித்து. அவனது அழகையும் அடக்கத்தையுங் கண்ணுற்று, அவனுடன்பேசவேணுமென்றஉத்தேசத்தோடுஅவனைத்தட்டியழைத்துச் சாமான்களெங்கே அகப்படுமெப்பாவென்று வினவினார். அவன் அதற்குச் சரியான பதில்கொடுத்ததும், மனிதர்கள் எங்கே பெருந்தன்மையும் நல்லொழுக்கமு முடையவர்களாகச் செய்யப்படுகிறார்களென்று கேட்டார். பையன் பதில் சொல்ல முடியாமல் திகைத்து நின்றதைப் பார்த்து, தெரியாவிடில் என்னுடன் வந்து தெரிந்துகொள் என்று சொல்லித் தன்னோடு கூட்டிக்கொண்டுபோய்த் தனது சிஷ்யனாக ஏற்படுத்திக்கொண்டாராம்.

3. அவர் சாதாரணமாய்ச் சம்பாஷணை செய்யும் விஷயங்கள் மனிதர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றினவையாகவே யிருக்கும். பக்தியென்றால் என்ன, கண்ணியமான நடத்தை யெப்பேர்ச்கொற்றது, இழிவான காரியங்கள் எவை, நியாயமென்பது எத்தன்மையது, தைரியத்தின் லக்ஷணமென்ன, மிதமாவது யாது, இவையும் இவைபோன்ற விஷயங்களுமே அவர் எடுத்துப் பேசுவது. அவருடன் சம்பாஷித்தவர்களுக்கு நன்னடக்கையில் முன்னிருந்ததைக் காட்டிலும் விசேஷப் பற்றுதலாவது, கொண்டிருந்த பிழையான அபிப்பிராயங்களுடைய சீர் திருத்தமாவது, ஆலோசனையற்று ஆரம்பிக்கத் துணிந்த காரியங்களில் தீர்க்காலோசனை செய்ய ஆஸ்திக்யாவது, சாமர்த்தியமிருந்தும் நாஸாத்தினால் கைவிடப்பட்ட அலுவல்களில் பிரவிர்த்தியாவது, உண்டாகுமென்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை. சிலர் அவரது தருமோபதேசங்களைக் கேட்டுக் கோபாக்கிராந்தர்களாய் அவரை மரியாதையின்றித் தூற்றியும், சில வேளை அடித்தும் விடுவார்கள். அச்சமயங்களில் அவருக்கிருந்த பொறுமை வியக்கத்தக்கதே. ஒருவன் அவரைக்காலாலுதைத்ததைக்கண்ட ஒரு சிநேகிதர் விசனமுற்றதைக் கண்டு 'ஒரு கழுதை என்னை உதைத்தால் நான் கோபிப்பதா?' என்றாராம். இன்னும் ஒருவர் 'அந்தப்பயல் உங்களைத் திட்டி அவமதித்தானல்லவா?' வென்று வினவியதற்கு அவர், 'இல்லையே; அவன் பேசினதெல்லாம் என்னைக் குறித்தல்லவே' என்று சாந்தமாய் மறுமொழியளித்தாராம். இவ்விதம் ஒரு கன்னத்திலடித்தால் மற்றொரு கன்னத்தையுங் காண்பி என்னும் கிறிஸ்தவ வசனத்திற்கிணங்கிய நடத்தையால் தன்னிடத்தில் சினங்கொண்டோரையும் சாந்தப்படுத்துவார்.

4. அவருடைய போதனமுறையில் முக்கியமாய் கவனிக்கத் தகுந்த விஷயங்கள் இரண்டு.

(a) மிகவும் சாமார்த்தியமாய்க் கேழ்க்கப்பட்ட பல சுலபமான கேள்விகளால் தன்னுடன் பேசுவோர்களை அவர்கள் முதலில்கொண்ட அபிப்பிராயத்திற்கு எதிரிடையான சித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்வது தான் அவரிடத்தில் விசேஷம். இப்படிச் செய்வதிலும் எதிராளிக்குக் கோபம் வராமலிருக்கும்படியான ஒருவித தமாஷான பரிகாசமும் கலந்திருக்கும்.

(b) பல பொருள்களிலிருந்து அவற்றிற்குப் பொதுவாயுள்ள ஒரு குணத்தை நிர்ணயித்து அதற்குச்சரியான லக்ஷணங்களை நிஷ்கரிஷிப்பதே எல்லாவித ஆராய்ச்சிக்கும்



ஜீவாதாரமென்று அவர் முதல் முதல் கைக்கொண்டதை அவரது சம்பாஷணைகள் நன்கு விளக்கும். நியாயம், அநியாயம், தர்மம், அதர்மம், இம்மாதிரியான சாதாரணப் பண்புச்சொற்களுடைய அர்த்தத்தைக் கொஞ்சமேனும் விசாரிக்காமல், அவைகளைச் சம்பாஷணையில் நெடுநாள் மாமூலையொட்டி உபயோகித்துவருவதே அக்காலத்திய அதேனியர்களுடைய வழக்கமாயிருந்தது பற்றி (இப்பொழுதும் நம்மில் அநேகர் அப்படியே செய்கிறோம்!) அதனால் வாஸ்தவ ஞானமுண்டாக இடமில்லையென்றே தான் அதைச் சீர்திருத்த ஆரம்பித்தார்.

இவ்விரண்டு விஷயங்களை நன்றாய் எடுத்துக்காட்டும் சம்பாஷணைகள் அநேகமிருந்தபோதிலும் நாம் அவைகளில் ஒன்றைக்கூட இங்கு அவகாசமில்லாததால் முழுதும் எழுதக்கூடவில்லை. ஆயினும் உதாரணத்திற்காக ஒரு சம்பாஷணையின் ஒரு பாகத்தை எடுத்துச் சொல்வோம்.

**ஸாக்ரடீஸுக்கு** யுதீப்ரன் என்று சிநேகிதன் ஒருவனுண்டு. அவன் தான் தர்மவிசாரத்தில் தேர்ந்தவனென்று கர்வங்கொண்டிருந்தான். ஒருநாள் அவருடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, அவன் தன் தகப்பன் தனது வேலைக்காரனைக் கொன்ற ஒரு கொலையாளியைக் கையையுங் காலையுங் கட்டி ஒரு அகழில் போட்டுவிட்டு, அதற்குமேல் நடவடிக்கை நடத்த ஆலோசனை செய்து வருவதற்காகப் போனதாகவும், திரும்பிவருவதற்குள் அந்தக் கொலையாளி பசியினால் மரித்ததாகவும், அப்படி மரிக்கச் செய்ததற்காகத்தான் தன் தகப்பனைத் தண்டனைக்குள்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறதாகவும், அதைப்பற்றிப் புண்ணியமெது பாபமெது என்று தெரியாத தன்னிஷ்டமித்திரர்கள் தன்னைக் கண்டிப்பதாகவும் சொன்னான். அதன்பேரில் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

ஸா.—அப்படியானால் உங்களுக்குப்புண்ணிய பாபஞானம் பூரணமாயுண்டோ?

யூ.—அதற்குக்கூட ஆக்ஷேபமா? அதில்லாவிட்டால் எனக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

ஸா.—எனக்கு அவ்விஷயத்தை தயவு செய்து உபதேசிக்கவேணும். புண்ணியம் என்றால் என்ன, பாபமென்றால் என்ன?

யூ.—புண்ணியமென்றால் கொலை முதலிய பாதகஞ் செய்வோர்களைச் சிக்ஷைக்குட் படுத்தல். அப்படிச் செய்யாததே பாபமாகும். ஸீயஸ் தேவதைகூட தன் தகப்பனாரைச் சிக்ஷித்ததாகச் சொல்லியிருக்கிறதே. நான்மட்டு மப்படிச் செய்யக்கூடாதா என்ன?

ஸா.—தேவதைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற அம்மாதிரியான வியவகாரங்களும், சச்சரவுகளும் வாஸ்தவமாய் நடந்தனவென்று நம்புகிறீர்களா?

யூ.—பூரணமாய் நம்புகிறேன்.

ஸா.—அது இருக்கட்டும். புண்ணியம், பாபம் இவைகளின் சொரூபம் கேட்டால் நீங்கள் செய்த ஒரு காரியத்தையே சொல்லுகிறீர்களே. புண்ணியகரம் என்று பெயர் வருவதற்கு எந்தக்குணம் இன்றியமையாததோ அதையல்லவோ சொல்லவேணும்.

யூ.—சரி, தேவதைகளுக்கு எது பிரியமோ அதே புண்ணியம்; எது அப்பிரியமோ அதே பாபம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஸா.—நீங்கள் ஏற்கெனவே தேவதைகளுக்குள் சச்சரவுகளுண்டென்று சொன்னீர்களே. சச்சரவுகள் எப்பொழுதுண்டாகும்? தர்மாதர்ம நியாயாந்நியாய விசாரணைகளிற்றானே. ஏனெனில் சங்கியை, பருமன்முதலியவற்றைக் குறித்த வியவகாரங்கள் எண்ணிக்கை அளவு போன்ற வகைகளினால் நிஷ்கரிஷிக்கப் படுமல்லவா?

யூ.—ஆமாம்.

ஸா.—அப்படியானால் ஒரே காரியம் சில

தேவதைகளுக்குப் பிரியமாயும், மற்றவர்களுக்கு அப்பிரியமாயுமிருக்கலாமல்லவா?

யூ.—ஆமாம்.

ஸா.—அதாவது ஒரேகாரியம் புண்ணியமாயும் பாபமாயுமிருக்கலாமென்று ஏற்படுகிறது.

யூ.—அப்படித்தான் தோன்றுகிறது.

* * * *

6. ஆதென்ஸில் அக்காலத்திய தத்துவ சாஸ்திரிகள் காலதேசங்களை யனுசரித்து, ஜனங்களுக்கு எது பிரியமோ அதே தர்மமென்றும் அதற்கு மாறுபாடானதே அதர்மமென்றும், அபிப்பிராயப்பட்டு அதற்கு அனுகுணமான விசாரணைகளைச் செய்து வந்தார்கள். ஸாக்ரடீஸோ அநேக விஷயங்களில் உண்மையான தத்துவமும் அக்காலத்து ஜனங்களுடைய அனுபவமும் வேறுபடலாமென்பதை யறிந்து, ஸ்வதந்திரமாகவே தத்துவத்தைக் கண்டுபிடிக்க முயன்றார். அவருடைய விசாரணைகளில் முக்கியமாகக் கவனிக்கத் தகுந்த கோட்பாடுகள் பின்வரும் விஷயங்களி லடங்கி யிருப்பனவாகக் கொள்ளலாம்.

1. "ஆத்மா நித்தியமானது."

2. "ஞானம் தர்மம்."

3. "தன்னைத் தானே யறிந்து கொள்"

இவைகளைப் பற்றிச் சற்று இங்கு விவரிப்போம்.

7. ஆத்மா நித்தியமானது. இவ்விஷயத்தைப் பற்றி ஸாக்ரடீஸ் தன் மரணத்திற்கு முதல் நாள் சிநேகிதர்களிடம் சம்வாதித்தார். இதை ஸ்தாபிக்க அப்பொழுது அவர் சொன்ன யுக்திகளைச் சில குறிப்புகளுடன் கூறுவோம்:—

(i) தூக்கமும் விழிப்பும் ஒன்றன் பின்னொன்று தொடர்ந்துண்டாவதைப் பார்த்திருக்கிறோம். அதில் விழிப்பிலிருந்து தூக்கமும், தூக்கத்திலிருந்து விழிப்புமுண்டாகிறதென்று ஒப்புக்கொள்ளாமல், விழிப்பிலிருந்து தூக்கமுண்டாவதை மட்டும் ஒப்புக்கொண்டு, விழிப்புக்கு வேறொரு காரணத்தைச் சொல்லுதல் நித்தியத் தூக்கத்திலேயே முடியுமல்லவா? அவ்வாறே, ஜன்மத்திலிருந்து மரணமும் (ஆத்மா பிராணனுடன் சம்பந்தப்படுவதே ஜன்மம், அவற்றின் பிரிவினையே மரணமாகும்,) மரணத்திலிருந்து ஜன்மமுமுண்டாகின்றனவென்று அங்கீகரிக்காமல், ஜன்மத்திலிருந்து மரணமுண்டாவதை மட்டுமே ஒப்புக்கொண்டு, ஜன்மத்திற்கு மற்றொரு காரணத்தைக் கூறுதல் சூன்னிய வாதத்திலேயே முடியும். ஆகையால், மேற்சொன்ன தூக்கம் விழிப்புப்போன்ற எதிரிடையாயுள்ள பொருள்கள் ஒன்றற்கொன்று காரணமாயிருக்கின்றன. இதுவிஷயத்தில் தத்துவத்தை ஆராயும்பொழுது, மரணமென்பது சாசுவதமான அழிவல்ல, மறு ஜன்மத்திற்கு அனுகூலமான முன்னுள்ளதாகிய நிலைமையே என்று ஏற்படுகிறது. இது "காரியத்திற்குப்பிராக்பாவம்காரண" மென்று இந்தியதத்துவஞானிகள் கூறும் விஷயத்தை ஞாபகம்வைத்துக்கொண்டால்நன்குவிளங்கும்.

(ii) இந்த ஜன்மத்தில் நமக்கு ஏற்படும் ஞானமெல்லாம் முன்னுள்ள அனுபவத்தினாலேற்பட்ட வாஸனைகளின் பலனே. இதையொத்தயுக்தியினால் முன் ஜன்மத்தை ஸ்தாபிக்கும் பிரகாரணங்களில், பிறந்த மறு நிமிஷமே குழந்தை யழுவதையும், தாய்ப்பால் குடிக்கப் பிரவிர்த்திப்பதையும், முக்கிய உதாரணமாக நம் முன்னோர்களெடுத்திருக்கிறார்கள்.

(iii) மாறுதலடையாத நிலைமையே ஆத்மாவின் சுபாவம். முடிவாய் அழிவடைதலென்ற விகாரம் இதற்கு விபரீதமான தன்மை. இரண்டு விபரீத குணங்கள் ஒரே வஸ்துவினிடத்தில் சுபாவத்திலே யிருப்பது ஒவ்வாது. ஆகையால் விகாரமில்லா நிலைமையைச் சுபாவமாகக் கொண்ட ஆத்மாவானது இயற்கையிலேயே நாசமென்ற விகாரத்தை யடைய முடியாது.

8. ஞானம்தான்தர்மம். தெளிவாகத் தர்மத்தின் சுரூபத்தைத் தெரிந்துகொண்டால் தர்மத்திலேயே பிரவிர்த்தி யுண்டாகுமென்பது இதன் தாற்பரியம். தற்காலத்திய மேனாட்டுத் தத்துவசாஸ்திரிகளிற் சிலர் மாசற்ற விவேகத்தினாலேயே மனிதனுடைய நடவடிக்கைகள் எப்பொழுதும் ஏற்பட்டாலொழிய இது பூரணமாய் உண்மையாகாது என்று சொல்லுகின்றனர். ஆகிலும் தன்னைத்தானே அறிவதுதான் அறிவின் பெருமையென்று சொல்லிய ஸாக்ரடீஸின் நோக்கத்தையும், ஆத்மஞானத்தையே பரம தர்மமாகவும் தர்மவிசாரத்தின் முடிவாக ஆத்மவிசாரத்தையும், கைக்கொண்ட யாக்ஞியவல்கியர், ஆபஸ்தம்பர், மனு முதலிய நம்முன்னோர்களுடைய நோக்கத்தையும் சம்பந்தப்படுத்திப்பார்த்தால், ஒருவாறு ஸாக்ரடீஸின் அபிப்பிராயமும் இவ்விஷயத்தில் குற்றங் கூறத்தக்கதல்லவென்று எண்ணலாம்.

9. தன்னைத் தானே அறிந்துகோள்.—பிரீதி வைக்கும்படியான பொருள்களுக்குள் ஆத்மாவே சிறந்தது என்பது அனுபவத்தால் விளங்கும். ஆகையால் அறியவேண்டிய பொருள்களுக்குள் ஆத்மாவே முக்கியமானது. ஆத்ம விஷயத்தில் ஏற்படும் அறியாமையே எவ்வித அவிவேகத்திற்கும் மூலமென்று முறையிடும் நமது உபநிஷத்துக்களின் தாற்பரியமே இச்சிறு வாக்கியத்தி லடங்கியிருப்பதாகக் கூறலாம்.

10. தத்துவசாஸ்திர ஆராய்ச்சியில் ஏற்படுங் கோட்பாடுகள் அவைகளைக் கைப்பற்றுஞ் ஜனங்களின் அனுபவத்தில் ஏற்படும் பேதங்களை யறிந்தாலொழிய அறியப்பட்டனவாகக் கொள்ளக்கூடாதென்பது 'பலமுகவாதிகளின்' சித்தாந்தம். இது நம்முன்னோர்களா லனுசரிக்கப்பட்ட பிரசித்தமான விஷயங்களுக்குள் ஒன்றென்று, "பலசுருதியில்லாமல் வேதத்தில்விதி சுருதியில்லை" என்ற விஷயத்தாலும், வியாஸர் ஜைமினி, இவர்களால் ஏற்படுத்தப்பட்ட அதிகரணங்களில் பலபேத விசாரத்திலுள்ள சிரத்தையாலும் விளங்கும். பலமுகவாதிகளின் சித்தாந்தத்தை யனுசரித்தே ஸாக்ரடீஸும் ஆத்மஞானம், ஆத்மநித்யத்வம், தர்மசொரூபம் இவைகளின் விஷயமாய்க் கைப்பற்றிய நிர்ணயங்களை, அனுபவத்தில் பிரயோசன பேதத்தின் மூலமாகவே நிரூபித்தார் என்பது யுத்தக்களத்தில் அவருக்கிருந்த அசாதாரணமான தைரியத்தையும், பெரியவிபத்துக்காலங்களிற்கூட தர்மநிலையிலிருந்து வழுவாத அவரதுமனோநிலைமையையும், அவரதுமேற்கோள்களையு மொன்று சேர்த்துப்பார்த்தால் வெளியாகும்.



# தமிழ் இலவச லைப்ரெரி

ஸ்ரீமான் பண்டித ஜீ. ஜகந்நாதய்யர்

[பண்டித ஸ்ரீமான் வியாஸத்தில் யாரையோ பூர்வபக்ஷம் செய்து வெகுதூரம் எழுதியிருக்கிறார். ஆனால் அதை யின்னும் சற்று வெளிப்படையாக்கி, 'இன்னார் இச்சந்தர்ப்பத்தில் சொல்லியதை நாம் பூர்வபக்ஷஞ் செய்திருக்கிறோம்,' என்று சுட்டியிருப்பாராகில் அனுகூலமுண்டு. அவ்வாறு செய்யாதவரை 'காற்றைக்குத்திக் கையை நோகச் செய்துகொள்ளும்' நியாயத்தை அனுசரிக்கும். எடி.]

தற்காலம்தமிழ்ப்பாஷையை அதற்கு வந்திருக்கும் க்ஷீணதசையிலிருந்து உத்தாரம் செய்ய எண்ணங்கொண்ட பெரியோர்களாகிய அபிமானிகளே, நீங்கள் கொண்ட எண்ணம் சரியானதென்று ஒப்புக்கொள்ள யாதோராக்ஷேபமும் பெரும்பாலுமிராது. ஆனால் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குஅனுப்பப்பட்டமாணவர்களில் 40-க்கு 4-விழுக்காடுதேறி, ரிசல்டை எதிர்பார்த்து, வாயங்காந்து, பிரமையடைந்து நிற்குமிக்காலத்தில், எடுத்த இவ்விஷயத்தை விவரிப்பதினால் இதில் ஏதேனும் சற்றுப் பலன் உண்டாகுமென்று எதிர்பார்க்கிறோம். காவியம், சாஸ்திரம், நாடக முதலானவைகளைத் தமிழில் தற்காலம் உணர்ந்து, உயர்ச்சிபெறுவது நடவாதகாரியம் என்பது சில பெரியோர்களின் கொள்கையாயிருக்கிறது. அவ்வாறு அவர்கள் கொள்கைக்குக் காரணம், தற்காலம் இந்தப் பாஷையிலுள்ள கலைகளில் மிகுந்த தேர்ச்சியுற்ற புலவர்களில்லாததோ, தகுந்த புத்தகங்களில்லாததோ, அல்லது வேறு எவ்வகைக்குறைவோ, தெரியவில்லை. அது எப்படியாகிலும் இருக்கட்டும். எமக்குத்தோன்றியவாறு தற்காலம் தமிழ் நூற்கற்ற தண்புலவர் தம்மளவிற் குறைந்தாரில்லை. சிறிதளவு குறைவுற்றோ, பெரும்பான்மை குறைவுற்றோ, இருக்கிறார்கள் என்றே வைத்துக்கொண்டு கருதுவோம்,

சிறு பான்மை குறைந்திருப்பின், குறைந்தது போக மீந்திருக்கும் பெரும்பான்மையைக் கொண்டே பூரணமாக்கிவிடலாம். பெரும்பான்மை குறைந்திருப்பின், நாம் விரும்பிய வளவிற்குப் போதாதென்று கொள்வதாயிருந்தால், அம்மீந்திருக்கும் சிறுபான்மை யளவிலும் போற்ருமையைக் காரணமாகக்கொண்டு, நாளடைவில் இந்தப் பரம்பரைக்கு க்ஷயமேற்பட்டு, முற்றிலும் நசித்துப் போகுமென்பதற்கையமில்லை.

ஆனுல் தமிழ்ப்பாஷையை விருத்தி செய்வதே அப்பெரியோர்களின் கருத்தாகக் காட்டுகிருர்கள். என்ருலும் வசன நடையைப்பற்றித் தான் சம்பாஷணை நிகழ்கின்றது. ஆகிலும் வசனநடையைப்பற்றி யாதும் மறித்துக் கூறிற்றிலேம். இக்காலத்திருக்கும் வித்துவான்களின் தொகையை யுயர்த்துவதற்குத்தகுந்த வழிமாத்திரமே எம்மால் கூறச் சாத்தியமாயிற்று. அஃதெங்ஙனமெனில், சிறிதளவோ, பெரிதளவோ, வித்துவான்களும், நூல்களுமுள்ள இக்காலத்திலேயே அவர்களையும் அவைகளையும் பாதுகாக்காமல் விட்டுவிட்டால், நமக்கு வேண்டிய மற்ருெரு காலத்தில் அச்சாதனங்கள் கொஞ்சமேனும் கிடைப்பது எளிதென்பது என்ன நிச்சயம்? நாம் மேலே கூறியவண்ணம் வித்துவான்களின் தொகையை யுயர்த்துவதென்பது பெயர்மாத்திரத்தால் அன்றென்பதைப்பெரியோர்கள் நிச்சயிக்கலாம். முயற்சி வீணுகா தென்பது யாருக்குமொத்த விஷயம். ஆகையால் ஒவ்வொருவரும் துணிவாய்த் தாங்கள் செய்யப் புகுங் காரியங்களி லிறங்கிவிடவேண்டும். இக்காரியம் தெரியாது, முடியாதென்று நினைத்துக்கொண்டு சும்மாயிருத்தல் கூடாது. எழுதத் தெரியாத ஒருவருக்கு எழுதத் தெரிய வேண்டுமானுல், முதலில் காகிதமும் பேனுவும் கூசாமல் கையிலெடுத்துத்தான் ஆகவேண்டும். அதற்கப்பால் எழுதிப் பழகப்பழக எழுத்தினது உருவத்தின் தன்மை தன் கண்ணுக்கு அழகாய்க் காணப்பட்டுத் தன்மனம் ஒப்பியபின், நாளடைவில் நல்லெழுத்துக் காரனுகிருன். காகிதம் பேனுங் கையிலெடுக்கும் போதே தைரியமில்லாமல் இது நம்மால் முடியப்போகிற தல்லவென்று விட்டு விட்டால் எழுதிப் பழகுவதுதானெப்படி? ஒவ்வொரு காரியத்திற்கும் இப்படியே முயற்சி திருவினையாக்குவதாயிருக்கத் தமிழ்ப் படிப்புக்குமட்டும் பூரண பாண்டித்தியம் இக்காலத்தில் உண்டாவது யாவருக்கும் நடவாத காரியம் எனத்திடமென வெண்ணங்கொள்வதாயிருந்தால், அதற்குச் சமாதானம் எந்த விதமாய்ச் சொல்லுதல் சாத்தியம்?

இன்னுமிக்காலத்தில், தமிழ்ப் பாஷையினுல் விஷயஉணர்ச்சிக்கும், ஜீவனேபாயத்திற்கும் தகுந்த வழிகளில்லை யாதலால், அப்பாஷையிலுள்ள காவிய முதலியவற்றில் ஆசை வைப்பது நடவாத காரியம் என்று அப்பெரியோர் கொள்வதாயிருந்தால், அப்பாஷை யபிவிருத்தியாகவேண்டுமென்ற வெறும் பேச்சு மாத்திரத்தால் என்ன பயன் கிடைத்து விடப்போகிறது? பாஷாபிவிருத்தியை நாடியபெரியோர்க்கு அதனிடத்து அவநம்பிக்கை ஜனிப்பதேன்? தான் புகுங்கருமத்தில் அவநம்பிக்கை பிறந்தால் இடையூறில்லாமல் எங்ஙனம் ஒருவன் துணிந்துமுடிப்பான்? ஒருவன் தன்னிடத்துள்ள தோஷங் கூடிய ஒரு பொருளை, அதாவது, சுழிகேடுள்ள ஒரு பசுவை, விலைக்குக் கொள்வாருண்டோவென்று கூவியழைத்தால், இவனது பசுவை வாங்க யார்தான் சம்மதிப்பார்கள்? அதனிடத்துள்ள குற்றத்தைப் பரிகரித்துக் கௌரவப்படுத்தினுலன்ருே நல்ல லாபம் பெறக்கூடும்? அதைவிட்டுத் தனது பசுவின் லக்ஷணத்தில் தானே குறை கூறுவதாயிருந்தால் மற்றையோர்க்கு அஃது எவ்வாறு கூடுதல் கூடும்? இங்ஙனமாகவே, தமிழில் பூரணமாய்த் தேர்ச்சியடைவது இக்காலத்து நட-



வாதகாரியம் என்ற கொள்கையோடொத்த வாசகத்தினுல் உண்டாகும் பயன் பின்வருமாறு: முதலில் அவ்வாசக கர்த்தாவின் தமிழாராய்ச்சியைக் காட்டுவதொன்று. அதாவது,நம்போல் பிரயாசைகொண்டு யாரும் ஆராய்ச்சி செய்திரார்கள் என்னுங் கருத்துட்கொண்டு, தாம் அடைந்ததே சுகதுக்கம், ஏனையோர் யாரும் அதற்கு ஈடுகொடுக்க முடியாதென்னும் தமது அகப்பாவக்கொள்கை தோன்றக் கூறியதாகும். இரண்டாவது, இவ்வாசக கர்த்தாவை நன்கு மதித்த கனவான்கள் இவரது சொல்லையும் உண்மையென்று நம்பி, நம்மாலெல்லாம் இவ்வளவு நன்கு மதிக்கப்பெற்ற இவர்க்கே இவ்விஷயம் சாத்தியமில்லையெனில், நமக்கெவ்வாருகுமோவென்று அஞ்சி, அவ்வார்த்தைக்கே அயர்ந்து தாம் இனிச் செய்யப்போகும் முயற்சியைக் கைவிடுதல். மூன்ருவது, ஏதோ துணிந்து அங்ஙனமாராயுங்கால் அதற்கு அநேக இடையூறுகளும், சகிக்கவொண்ணுத் துன்பங்களும் உள்ளனவெனச் சொல்லியதாகவும் பயன் கொடுக்கிறது.

இதுஎவ்வாருயினும் ஆகுக. பொதுவாகஇப்பெரியோரை நன்கு மதிக்கப்பட்ட ஒரு சாரார்க்கு மாத்திரம், அவ்வவர்கள் செய்யும் முயற்சியைத் தடுக்கத் தகுந்த ஆதாரமிடமாகிறதனுல், தமிழபிவிருத்தியைக் கெடுக்க முயன்றவியர்க்கை யுடையவர்க்கு இது முக்கிய குருவாக்கியமாக ஏற்படுகிறது. என்ருலும் தமிழ்ச் சம்பந்தமே யில்லாமலிருக்கும் வமிசத்தார் கூடச் சில வித்துவான்கள் இதைக் கற்றுத் தமிழ்ப்பாஷையில் ஏதோ ஒருவித காரணத்தால் நல்ல அபிப்பிராயங் கொண்டிருப்பவர்களை யாரும் எந்த விதத்திலும் தடுக்கமுடியாததாகும். தவிரவும் தமிழ்ச் சம்பந்தமில்லாத் தேசத்திற் பிறந்து இத்தமிழ் நாட்டிற்குவந்த பின் சிலசாரார் ஜீ பாலிண்டு துரையைப்போலத்தமிழ் லேப்ரெரி தேடுவார்களானுல் அவர்கள் தமிழ்கற்பது நடவாதகாரியமென்று சிந்திக்கவுஞ் செய்வார்களா? ஆனுல், அவர் கொள்கையோடு கூடிய இந்தவுரையை நாம் மறுத்துக்கூறி, அதனுல் மறுத்துக் கூறுவதிற் சமர்த்தன் எனப் பெயர்வாங்கிச் சந்தோஷிக்கலாம் என்ற எண்ணம் நமக்கில்லை. நம்முடைய நோக்கமனைத்தும் உள்ளதைக்கொண்டே விருத்தியடைவித்து நலம்பெற வேண்டுமென்பதே. அந்த நோக்கத்தை எந்தவிடத்தில் காண்பித்தால் ஈடேறுமென்று வெகுநாளாய்ச் சிந்தித்திருந்ததில், தற்காலம், இந்த வித்யா விஹாரிணி என்னும்நண்பனை யவனது தலைவர் மூலமாய் நட்புப்பூண்டு, அவன் தமிழ் நாடெங்கும் நிறைந்த தமிழபிமானிகளிடத்திற் செல்கின்றவனும், இனி மேற்சொல்லவேண்டியவனுமாகின்ருன். ஆதலால் பிறரது கொள்கைக்கெதிரான வெமது தமிழபிவிருத்திக்கேற்ற சொந்த வபிப்பிராயங் கூறியதேயன்றி மற்றெவரையும் எந்தக் காரணத்தாலும் தூஷிக்க முன் வரவில்லை. தூஷணுதி வியவகாரத்தினுல் மத்தியில் நின்று காண்போர்களின் காக்ஷிக்குங்கூட விநோத மேற்பட்டு, நல்ல அறிவாளிகளாயிருந்தாலும் தங்களது முயற்சியைத் துறந்து, புத்தியையும் அவ்வியவகார மார்க்கத்திலேயே செலுத்திக் காலத்தை வீணுகக் கழிக்கிருர்கள்.

ஆனுலும் அப்பெரியோரின் அபிப்பிராயமும் ஒரு விதமாய் ஒப்புக்கொள்ள விடமுங் கொடுக்கிறது. மேலும் அவர் சாமான்னியரென்று நாம் எண்ணியிருந்தால் மாத்திரம் அவரது சொல்லும் நமக்குச் சாமான்னியமாகக் காணும் என்பது நிச்சயம். அவரது கருத்து ஒரு நல்ல பொருளைக்கொண்டு அந்த வாசகத்திலாழ்ந்து கிடக்கிறது என்பதற்கு அணுவளவும் சந்தேகமில்லையென்பது நமது துணிபு. அஃதெவ்வாறெனில், இந்த எளியவராயுள்ள அபிமானிகள் தங்கள் தங்கள் ஜீவனேபாயத்தையும் குடும்ப வியவகாரங்களையும் பார்த்தமைப்பதே பெருஞ்சிரமமாயிருக்க,

இதிலும் தலையிட்டுக்கொண்டால் இதற்கிதுவும், அதற்கதுவு முடித்துக்கொள்ளும் வகையில்லாமல் வீண் பிரயாசையால் சரீர பலத்தையும், மனோபலத்தையும் போக்கிக்கொண்டு அகாலமரணத்துக்கு உள்ளாகிறார்கள் என்பது ஒன்று. இரண்டாவது, மிகுந்த பணக்காரர்களிற் பெரும்பாலார் தங்கள் செல்வச் செருக்கினாலும், அதை யனுசரித்து இன்னகாலத்தில் இன்னின்ன உணவு உண்ணவேண்டும் என்றும், இன்னவேளைகளில் இவ்விவ்விதமான உடை உடுக்கவேண்டுமென்றும், நல்ல வாகனாதிகளில் உலாக்கொள்ள வேண்டுமென்றும், பற்பலவிதமாயெண்ணி யெண்ணி, அப்படி யெண்ணியதாலுண்டான சோகத்தினால் அவ்வெண்ணிய காரியங்களைச் செய்ய முற்றிலும் மறந்துவிட்டுச் சோம்பலினாலும் தங்கள் ஆயுளை வீணாக்கிக் கொள்வதாம். மூன்றாவது, மேற்கண்டவர்களிற் சிறு பாலார் தனவந்தராயிருப்பினும், எடுத்துக்கொண்ட விஷய அபிவிருத்தியில் மிகுந்த அபிமானிகளாயிருப்பினும், இவர்கள் தம்மளவிற் சிறுபான்மையராய் இருத்தலினால், இவர்களது கருமமும் முயற்சியும் யார்க்கென்றுதான் உபயோகப்படுத்த முடியும்? தங்களைத் தாங்கள்தான் கவனிக்கச்சாத்தியப்படும். ஆதலின், இந்நிலைமையிலுள்ள இவர்களை முற்கூறிய ஏழைகள் பாற் படுத்துதல் அமையுமென்பதுமேயாம். ஆகிய இத்தியாதி விஷயங்களை மனதிற்கொண்டே வெளிக்குச் சுருக்கமாக இது நடவாத காரியமென்று அப்பெரியோர் கூறியதாகும் என்று முக்காலுங் கூறுவோம்.

ஆகையால்நாம்முன்பாகத்தில்விரித்தெழுதிய விஷயம் அவர் சொல்லைக் குறைகூறியதல்லவென்று இதைவாசிக்கும் கனவான்கள் ஒவ்வொருவருக்கும் இனிது விளங்கும். இப்படி விரித்தெழுதியதனால் பயன் பிரத்தியேகமாய்க் காணலாம். இல்லாவிடில், ஒருவர்க்கொருவர் அபிப்பிராய பேதப்பட்டு வீண்வியவகாரத்தில் கொஞ்சம் காலம் விரயமாகும். இன்னமிதைப் பற்றிச் சொல்ல வேண்டியவை எவ்வளவோ யிருந்தாலும், தமிழ் இலவச லைப்ரெரி என்று தலைக்குறிப்பிட்டுத் தமிழபிவிருத்தியின் பொருட்டு, நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைத் தொடங்கவேண்டி யிருக்கிறது. அது எதற்கெனில், இதுகாறும் எழுதிவந்த விஷயமாகிய தமிழ் வளர்ச்சியின் பொருட்டே என்பது இனிது விளங்கும்.

ஆனால் தமிழ் இலவசலைப்ரெரி என்றால், புஸ்தகசாலையை இனாமாக நாம் கொடுப்பதல்லவென்றும், பலர் சேர்ந்து புஸ்தகசாலை யேற்படுத்திப் புஸ்தகங்களை வாசிப்பவர்களுக்குக் கொடுத்து உதவி புரிவதாமென்றும், இதிற் படிக்கும் கனவான்கள் ஒவ்வொருவரும் நன்குணர்வாராக. நாமே லைப்ரெரி வைத்துக் கொண்டிருக்கிறோம், என்றே கருதிக் கொள்வோம். அதனால் எத்தனைபேர் படிக்க முடியும்? நம்முடைய லைப்ரெரி ஒன்றையேவைத்துக்கொண்டு இவ்விந்தியாவிலிருக்கும் எல்லாத் தமிழபிமானிகளும் கற்பதானால், ஒரு மனிதன் தனக்கு நிழற்றரவும், மழைக்கு ஆதாரமாகவும் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறு குடையைக் கொண்டு இந்தியாவிலுள்ள மலைத்தொடர்களின்மேல் வெய்யிலும், மழையும் படாமற் பாதுகாக்க முயல்வது போலாகும். மேலும் தமிழில் வசன நடையைக் கற்பதுடன் கலாசாலைகளில் ஆங்கிலம் தெரியாத மாணாக்கர்களுக்கு அப்பாஷை கற்றுக் கொடுக்கும்போது, உபாத்தியாயர்கள் இங்கிலீஷில் பிள்ளைகளைச் சிறு கேள்விகேட்டும், அவர்களுக்கு ஆங்கில அரிச்சுவடிகூடத் தெரியாமலிருக்கும்போது அக்கேள்விக்குச் சிறு விடை சொல்வித்தும், கற்றுக்கொடுப்பது போலவே, செய்யுள் நடைகளையும் பண்டித நடைகளையும் பல குறிப்புகளுடன் தொடர்ச்சியாகவும் கற்றல் நன்று. இங்ஙனம் கற்பிக்கவும், மேற்கூறிய லைப்ரெரியின் மகிமையை உணரவும் வல்ல தமிழ்ப்புலவரின்றியமையாததே. அவர்களாற்றான் இப்பாஷை செழித்தோங்கி வளரவேண்டும். அவர்களும் அன்பு முதலிய பெருங்குணங்கள் இயற்கையில் வாய்ந்த கனவான்களாலேயே சுகஜீவிகளாக வேண்டும்.

(இன்னும்வரும்)



பெஞ்சமின் பிரான்கிலின்



## சிறுபிள்ளைகள்செய்த வீரச்செயல்கள்.

### 1. பெஞ்சமின் பிரான்கிலின்

ஸ்ரீமான் ஆர். கே. குப்புசாமி அய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.

உலகில் மிகத்தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும், தமது விடாமுயற்சியாலும், உழைப்பாலும், புத்தி நுட்பத்தாலும், தமக்கு என்றும் அழியாப்புகழை நிலைநாட்டிக்கொண்ட பிரசித்திபெற்ற மகான்கள், தமது இளம் பிராயத்தைப்பயனுண்டாகும்படி எவ்வாறு கழித்தனர் என்பதைப்பற்றி ஒவ்வொரு மாதமும் சிறிது சிறிதாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறோம்.

இன்று நாம்பேசுவதாய் எடுத்துக்கொண்ட பெஞ்சமின் பிரான்கிலின் என்னும் இப்பெரியவர் 18-வது நூற்றாண்டின் முதலில் (1707-ம் வருஷம்), அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற **போஸ்டன்** நகரில் பிறந்தவர். இவருடைய தகப்பனார் மிகவும் ஏழை. மெழுகுவர்த்திசெய்து அவற்றை விற்று ஜீவனம் செய்துவந்தார். ஆகையால் பெஞ்சமின் சிறுவயது முதற்கொண்டே தன் தகப்பனாரோடு சேர்ந்து வேலை செய்யவேண்டியிருந்தது. இம்மகானுடைய சிறுவயதைப்பற்றியே முக்கியமாய் இச்சந்தர்ப்பத்தில் பேசப்போகிறபடியால் ஏக வசனத்திலேயே பேசுகிறோம். காலையில் படுக்கைவிட்டு எழுந்தது முதல் மாலைவரையில் பெஞ்சமினுக்கு வேலை சரியாய் இருக்கும். பத்துவயது முதற்கொண்டே அவன், மெழுகுவர்த்திக்குத் திரி வெட்டுவதென்ன, அச்சில் உருகின மெழுகை வார்ப்பதென்ன, ஆறியபின் அச்சினின்று எடுத்துவரிசையாய்க்கட்டுவதென்ன — ஆகிய இவ்வகையான வேலைகளைச்சதா செய்துவருவான். இவ்வித வேலை பெஞ்சமினுக்குப் பிடிக்கவில்லை என்றாலும், செய்தே தீரவேண்டியிருந்தது. சிறந்த புத்திநுட்பமும், களங்கமற்ற மனோபாவமும் உடைய எந்தச் சிறுவனும், தனக்கேற்பட்ட வேலை எவ்வளவு அருவருப்பாக இருந்தபோதிலும் அந்த வேலையைத் தவறாமல் தினந்தோறும் செய்துதான் வருவான்.

இவ்வேலைகளோடு ஏதோ கொஞ்சம் கல்வி கற்றுக்கொள்ளட்டுமென்று அவன் தகப்பனார் பெஞ்சமினை அவ்விடமுள்ள சிறு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார். அனுப்பினதும் அவன் வெகு சுளுவாய் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டான். அது முதல் புஸ்தகங்களைப் படிப்பது என்றால் போதும், அவனுக்கு 'அன்னம் ஆகாரம்' கூட வேண்டாம். அதேவேலையாய் இரவெல்லாம் படிப்பான். அவன் தகப்பனாரும் புத்திசாலியானபடியால் சில புஸ்தகங்களை வீட்டில் சேர்த்துவைத்து இருந்தார். அவற்றுள் ஒன்றேனும் பாக்கியில்லாமல், பெஞ்சமின் எல்லாவற்றையும் "கரைத்துக் குடித்துவிட்டான்." அவற்றுள் 'கீர்த்திபெற்ற கிரேக்கர்களின் சரித்திரம்' என்று ஒரு புஸ்தகம் இருந்தது. அதைப்படிப்பதில் சிறுவனுக்கு மிகப்பிரியம். அதைப்படித்தபின் பெஞ்சமின் தனியாய் ஓர் இடத்திலாவது, சமுத்திரக் கரையிலாவது போய் உட்கார்ந்துகொண்டு, தான் படித்ததைப்பற்றிச் சிந்திப்பதும், மனதில் கற்பனை செய்து கொண்டிருப்பதும், அவன் ஆசையோடு செய்யும் காரியங்களில் ஒன்று.

வீட்டில் வேலை முடித்துக்கொண்டு, சாயங்காலம் ஒழிந்த வேளைகளில், போஸ்டன் நகரத்துத் துறைமுகத்தில் போய் நீந்துவதும், அவ்விடத்தில் யாராவது விட்டுப் போயிருக்கும் சிறுபடகில் ஏறிக்கொண்டு, அதைச் சமுத்திரத்தில் செலுத்திக்கொண்டு போவதும், பெஞ்சமினது வழக்கம். அவ்வேளைகளிலெல்லாம் அழுக்குப்படிந்த துணியைக் கட்டிக்கொண்டு பிச்சைக்காரப் பிள்ளையைப்போல் இருந்தாலும், அவனுடைய நீண்டுருண்ட தேகமும், சிரித்த முகமும், உள்ளறிவை விளக்கும் கண்களும், எல்லாருடைய கண்ணையும் கவர்ந்தன. தற்செயலாய் அவனைக் கண்டெடுத்துப்

பார்த்த ஒருவர் மறுபடியும் அவனை இரண்டாம்தரம் உற்றுப் பாராது தன் வழியே போதல் அரிது. ஆகையால் துறைமுகத்தில் வந்துசேரும் ஒவ்வொரு மாலுமிக்கும் பெஞ்சமினை நன்றாய்த் தெரியும். படகுகளும், கப்பல்களும் நெருங்கி நிற்கும் அப்போஸ்டன் துறைமுகத்தில், அந்தக் கப்பல்களுக்கும் படகுகளுக்கும் இடையில் உள்ள சிறு சந்துகளில், வெகு சாதுரியமாய்த் தன் சிறு படகைத் தள்ளிக்கொண்டு போகும்போது, வயது சென்ற மாலுமிகள் எத்தனைபேர் அவனைக்கவனித்துப் பார்த்த வண்ணமாய் நிற்பார்கள்!! எத்தனை பேர் அவன் பேரைச் சொல்லி அழைத்து, அவனை உற்சாகப்படுத்துவார்கள்!! நீந்துவதும், படகோட்டுவதுமே அவனுக்கு தினந்தோறும் கிடைக்கும் தேகப்பயிற்சி.

கடற்கரையிலிருந்து வெகுதூரம் படகைச் செலுத்திக் கொண்டு போனபிறகு ஏகாந்தமாய், ஆகாயம் மேலும், கீழே சமுத்திரமுமாயிருக்க அவ்வியற்கைக் காட்சியைப் பார்த்துப் பார்த்து அவனுக்கு ஆனந்தம் பொங்கும். அவ்வானந்த மிகுதியால்தானே ஏதோ வாயில் வந்தபடி பேசுவான், பிதற்றுவான். 'இதுநாளும் என் வீட்டில் சிறைபட்டிருந்தேனே! இப்பொழுதன்றோ சந்தோஷப் படுகின்றேன்' என்பான். சிலவேளைகளில் வயிறுநிறையச் சமுத்திரக்காற்றை நிரம்ப உட்கொள்வான்! சிலவேளைகளில் மெய்மறந்து குதித்து ஆடுவான். இவ்விளையாட்டுகள் சிறுவனுக்குப்பலம் கொடுத்ததுமன்றி அவன் மனதைத் தேற்றின. கெட்ட நாற்றம் வீசும் கொழுப்பைக் காய்ச்சி அச்சில் ஊற்றுவதும், அந்த நாற்றத்தையே நுகர்வதும், அக்கொழுப்பைக்கையில் தொடுவதும், அது தேகத்திலும் ஆடையிலும் படுவதும்—ஆகிய இவ்வெறுப்புள்ளகாரியங்கள் ஒருமனிதனுக்கு ஒழிந்தால், அவன் மனதாரச்சந்தோஷப்படுவது ஓரதிசயமா? வயதுகூடிய மனிதர்களுக்கே சந்தோஷமாய் இருந்தால், சதாவிளையாட்டையே விரும்பும் சுபாவமுள்ள ஒரு சிறுவனுக்கு எப்படி இருக்கும் என்று நீங்களே எண்ணிக்கொள்ளலாம்! சில சமயங்களில் துறைமுகத்துக்கப்பால் சிறிதுதூரத்தில் சமுத்திரமட்டத்துக்குமேல் கிளம்பிநிற்கும் ஒருபாறைக்குத் தன் படகை ஓட்டிக்கொண்டு போவான். அங்கே நன்றாய் நீந்திவிட்டு, ஆடைகளையெல்லாம் வெயிலில் உலர்த்திவிட்டு, உல்லாசமாய்க் 'காற்றாட' உட்கார்ந்துகொண்டு, சமுத்திரத்தின் அழகையும், கடற்கரையின் பெருமையையும், துறைமுகத்தின் அமைப்பையும், தன் முன்னே தோன்றும் விசாலமான பட்டணத்தின் காக்ஷியையும், பின்னே அளவுக்கெட்டாது அகன்று கிடக்கும் வெள்ளக்கடலையும் உற்றுப் பார்த்துக்கொண்டு அசேதனமாய் அசைவற்று உட்கார்ந்து இருப்பான். சூரியன் அஸ்தமித்ததும் சுத்தமான ஆடைகளை அணிந்துகொண்டு படகைச் செலுத்திவந்து ஜாக்கிரதையாய் முன் இருந்த இடத்திலேயே பிசகாமல் கொண்டுவந்து நிறுத்திவிட்டு வீட்டுக்குப்போவான்.

இவ்விதமாய் இனிமையான ஏகாந்தத்தில் சிலமணிநேரம் கழித்தபிறகு வீட்டிற்குச் சந்தோஷத்தோடும் சுறுசுறுப்போடும் திரும்புவான். சாயங்காலம் சாப்பாடு முடித்துக்கொண்டு, எல்லாரோடும் கடவுளை ஆராதித்துவிட்டு, தான் வழக்கமாய்த் தூங்கும் சிறியதோர் அறைக்குச்செல்வான். அவ்விடத்தில் தனக்குப் பிரியமாயிருக்கும் புஸ்தகங்களைப் படித்து விட்டு, பல விஷயங்களைப்பற்றி இரவில் நெடுநேரம்வரையில் எழுதிக்கொண்டிருப்பான். இவ்வாறு பயிற்சி செய்வதில் அவனுக்கு அதிக சந்தோஷம். படுத்துக்கொள்ள நெடுநேரமானாலும் பொழுதுவிடியு முன்னே எழுந்து, தன் தகப்பனாருக்குச் செய்யவேண்டிய வேலையை ஒழுங்காய்ச் செய்யும் பொருட்டு, சரியான காலத்தில் தொழில் சாலைக்கு வேகமாய்ச் செல்வான். வாஸ்தவத்தில்



பெஞ்சமினுக்கு மெழுகுவர்த்தி செய்வதில் பிரியமேயில்லையென்று முன்னமே சொன்னோம். ஆனாலும் தன் வெறுப்பை வெளிக்காட்டினால் தன் தகப்பனாருக்கு மனவருத்தம் உண்டாகுமென்று அவரைத் திருப்திசெய்ய மனங்கோணாமல் வேலைசெய்வான்.

அவன் தகப்பனார் அவனுடைய பொறுமையையும், வணக்கத்தையும், ஊக்கத்தையும் பார்த்துச் சந்தோஷப்பட்டு, பிள்ளைக்குப்படிப்பில் உள்ள சிரத்தையைநோக்கி, அவன் படிப்பை விருத்திசெய்யவேண்டுமென்று எண்ணினார். ஆகவே ஒருநாள் தன் மகனிடம், "அப்பா, எனக்காக நீ இத்தொழிலைப்பொறுமையோடு இதுவரையிலும் செய்து வந்தபோதிலும், நீ இதை நீடித்து அனுசரித்து வரமாட்டாய் என்று எனக்கு விளங்குகிறது. உன் தம்பியும் பெரியவனாய்விட்டான். இனி அவன் உதவி எனக்குப்போதும்; ஆகையால் நீ உன் தமையனுடன்சேர்ந்து அவனுடைய அச்சுக்கூடத்தில் வேலைக்கு அமரலாம். படிப்பில் உனக்கு உள்ள ஆசைக்கு அவ்வேலையே தகுதியானது. அவ்விடத்தில் தான் போஸ்டனில் உள்ள சகலவிதமான புஸ்தகங்களும் உனக்கு லகுவாய்க் கிடைக்கும். நான் சொல்லும் ஏற்பாடு உன்மனதிற்குச் சம்மதமாய் இருக்குமென்று நம்புகிறேன்." என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் சிறுவனுடைய மனதில் சந்தோஷமிகுந்தது. பலநாளாகவே தன் தமயனுடன் வேலை செய்யவேண்டுமென்ற எண்ணம் பெஞ்சமினுக்கு இருந்துகொண்டே இருந்தது. ஆனால் தன்மனதுக்கு ஏற்ற இத்தகைய அனுகூலமான உத்தரவைத்தன் தகப்பனிடமிருந்து எதிர்பார்க்கவேயில்லை.

நமது நாட்டில் இக்காலத்தில் எத்தனையோ பெயர் ஜீவகாலமுழுவதும் அச்சுக்கோர்த்தே கழிக்கிறார்கள். என்றாலும் அவர்களுக்குப் புத்தி விசாலமாவதே இல்லை. மூழை கறிச்சுவையறியாதது போலவே இவர்கள் காலமும் கழிகிறது. என்றாலும், கவிகளுக்கும், வித்துவான்களுக்கும், தத்துவ சாஸ்திரிகளுக்கும் அச்சுக்கூடத்தில் வேலைசெய்வது ஒருபொழுதும் கஷ்டமாய்த்தோன்றாது. அச்சுக் கோர்க்கும்போதே மிகச்சிறந்த விஷயங்களைப்படித்து ஆனந்தப்படுவான். தான் இந்நாள்வரையில் வேலைசெய்யவேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்த அச்சியந்திரசாலையில் ஒவ்வொரு வஸ்துவும் அவனுக்கு இன்பத்தைக் கொடுப்பது போல் தோன்றிற்று. மெழுகுவர்த்தி செய்யும்பொழுது அக்கொழுப்பிலிருந்து வரும் துர்நாற்றத்தைவிட அச்சியந்திரசாலையில் குவிந்துகிடக்கும் காகிதங்களின் வாசனை ஆயிரம்பங்கு மேலாகத் தோன்றிற்று. ஆகையால் தான் வேலைசெய்யும் இடத்தை "சொர்க்கலோகம்" போலவே பாவித்தான். இத்தொழில் ஆசை மிகுதியால் தனக்குப் பிரதிகூலமான பல நிபந்தனைகளைத் தன் தமயன் ஏற்படுத்திய போதிலும், அவை எல்லாவற்றிற்கும் அவன் உடன்பட்டு வேலைசெய்யச் சம்மதித்தான்.

தமயன் பெயர் ஜேம்ஸ்; அவனுடைய குணங்கள் பெஞ்சமின் குணங்களுக்கு முற்றிலும் மாறாகி இருந்தன. பணத்தில் அவனுக்கு அதிக கருத்துண்டு; மிகவும் பிடிவாதமுள்ளவன். உலகமறியாத குழந்தை பெஞ்சமினுக்கோ இத்துர்க்குணங்கள் அவ்வளவிற்குக் குறைவாய் இருந்தன. பெஞ்சமினுக்கு 21-வயது முடிகிறவரையில் யாதொரு கூலியும் கேட்காமல் சாதாரண வேலைக்காரன்போன்று வேலை செய்வதாயிருந்தால், அவனைத் தன்வீட்டில் வைத்துக்கொண்டு வேலை கற்றுக் கொடுப்பதாய் ஜேம்ஸ் சொன்னான். பெஞ்சமினுக்கு எப்படியானாலும் சரி, தன்னை வேலைக்கு எடுத்துக்கொண்டால் போதும் என்றிருந்தது. தனக்குவேண்டிய புஸ்தகங்களைப் படிக்கச் சாவகாசம் கிடைக்குமே, அதுவேபோதும், அதுவே தக்க லாபமென்று எண்ணினான்.

இவ்வாறு அடிமைபோன்று தமயனிடத்தில் வேலைசெய்துக்கொண்டிருக்கும் காலத்தில், பெஞ்சமினுக்குப் படிப்பிற்சிறந்த பணக்காரனை ஒரு ஆங்கிலேய வர்த்தகனுடைய சிநேகம் வாய்த்தது. இவ்வர்த்தகன் அடிக்கடி அச்சாபீஸுக்கு வருவதுண்டு. வருங்காலத்திலெல்லாம் வேலைகற்றுக்கொள்ளும் பெஞ்சமினைப்பார்த்துச் சந்தோஷப் படுவார். அவன் புத்திநுட்ப முடையவனென்று அவர் அறிந்தார். ஆகையால் அவனைத்தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனதுமன்றித் தனது பெரிய புஸ்தகசாலையில் எந்தப் புஸ்தகத்தை எப்பொழுது வேண்டுமென்றாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று உத்தரவு கொடுத்துவிட்டார். அம்மட்டுமா? அவரே படிப்பில் கெட்டிக்காரர். ஆனதுபற்றிப் பெஞ்சமினுக்குப் பலவிஷயங்களைக் கற்றுக் கொடுத்தார். நாளடைவில் ஷேக்ஸ்பியர், மில்டன், ஆகிய இக்கவிகள் இயற்றிய நூல்களைப்படித்து அவற்றின் ரஸத்தை அநுபவிக்கச் சக்தி ஏற்பட்டது. கவிகள் எழுதிய செய்யுள்களைப் படிக்கப் படிக்கத் தானும் அம்மாதிரி செய்யுள் எழுத முடியுமோ, என்று எண்ணுவான்.

சிலநாள் கழிந்ததும் கூடியமட்டில் கவிகளின் விதிகளை அனுசரித்து, சிலசெய்யுட்களை எழுதத்தொடங்கினான். அவற்றின் அமைப்பு நன்றாயிருக்கிறதென்று தோன்றினால் அவற்றைத்தானே பாடிப் பார்ப்பான். இவ்வாறு பாடிய பலவற்றுள் "மாலுமிகளின் வீரச்செயல்களை"ப்பற்றி வர்ணித்துப் பாடிய பாட்டுகள் சில. அவற்றைத்தன் சிநேகிதர்களான மாலுமிகளுக்கும், மாலுமிச் சிறுவர்களுக்கும் வாசித்துக் காட்டினான். அவர்கள் அச்செய்யுள்களின் அழகைப்பார்த்துச் சிலாக்கியமாய்ப்பேசினார்கள். சிலர் சந்தோஷத்தோடு பெஞ்சமின்கூடவே பாடத் தொடங்கினார்கள். இதைக் கண்டதும் தன் செய்யுள்களை ஜனங்கள் விரும்புவார்களென்ற தைரியம் சிறுவனுக்கு உண்டாயிற்று. அவன் தமயனோ, ஜனங்கள் விரும்பும்—முக்கியமாய் மாலுமிகள் ஆசையோடு ஏற்றுக்கொள்ளும்—இப்பாக்களை அச்சிட்டால், தனக்கு மிகலாபம் உண்டு என்று கண்டு, உடனே அவற்றைப் பதித்து சிறுவனையே கொண்டுபோய்த் தெருத்தெருவாய் விற்று வரும்படி அனுப்பினான்!

பெஞ்சமின் ஒரு சிறு கைவண்டி நிறைய அப்பொழுதுதான் அச்சிட்டு எடுத்த ஈரமுலராத செய்யுட் காகிதங்களைப் போட்டுக் கொண்டு, வண்டியை இழுத்துக்கொண்டு தெருத்தெருவாய்ப் புறப்பட்டான். மேலும் வழியில் போவோர் எல்லாம் இதை அறியும்படி அப்பாட்டுகளைப் பலமாய்ப் பாடிக்கொண்டே போனான். பாட்டுக் காகிதங்களைப் பலர் அதிக ஆவலோடு வாங்கினார்கள் என்று சொல்லவும் வேண்டுமா! முக்கியமாய்த் துறை முகத்தில் வயது சென்ற மாலுமி முதல் கயிறு இழுக்கும் சிறுவன் வரையில் ஒவ்வொருவரும் தம் சிநேகிதனான பெஞ்சமினுடைய கவிகளைப் படிக்க விரும்பி அநேகம் பிரதிகளை விலைக்கு வாங்கிக்கொண்டனர். பெஞ்சமினுக்கு இப்பாக்களை எழுதின பெருமை ஒன்று தவிர வேறு ஒன்றும் இல்லை. இவற்றை விற்றதினால் கிடைத்த ஒவ்வொரு பைசாவையும் தன் தமயனிடம் கொண்டுபோய்க் கொடுத்தான்.

ஆனால் அவன் தகப்பனார் பென் செய்த காரியத்தைச் சிறிதும் அங்கீகரிக்கவில்லை. ஏனெனில் அவர் வெகு புத்திசாலி. தமயனுடைய பணத்தாசையும், அவ்வாசையால், தம்பியைக் காரணமாகக்கொண்டு பணம் சம்பாதிக்க எண்ணியதும், சிறுவனுக்கு நாளுக்கு நாள் தானறியாமல் விருத்தியாய் வந்த கர்வமும், தகப்பனாருக்கு நன்றாய்ப் புலப்பட்டன. ஆகையால் ஒருநாள் அவர் தன் மகனைக் கூவி "பின்



ளாய்! நீ தெருத்தெருவாய்ச் சென்று உன் கவிகளை விற்றல் தப்பு; நீ பெருமைவாய்ந்த கவிகளில் ஒருவன் என்று எண்ணுகிறாய்; அது பொய்யான எண்ணம்; உன் கவிகள் மிகவும் உபயோகமற்றவை; இவற்றை எழுதினதினாலேயே பெருமையடைந்ததாக எண்ணணியாயமில்லை. விஷயங்களைப்பற்றி எளிய வசன நடையில் தெளிவாய் எழுதக் கற்றுக்கொள்ளவேண்டும். இதுவே நீ முதலில் செய்யவேண்டிய வேலை. உன் தொழிலை முதலில் சரியாய்ச் செய்யக் கற்றுக்கொண்டபிறகல்லவா உலகத்தாருக்கு உன் சாமர்த்தியத்தைக்காட்டப் போகவேண்டும். சிலர்மட்டும் உன்னைப் புகழ்ந்தால் போதுமென்ற அற்ப ஆசைப்படாதே; அதனால் சிறிதும் பயனில்லை. கீர்த்தியே தானாய் உன்னைத்தேடிவரும் வரையில், நீ பொறுமையுடன் மனப்பூர்த்தியாய் வேலை செய்யவேண்டும். நிலைபெற்று நிற்கக்கூடிய பெருமையும், சம்பத்தும் ஒருவனுக்கு மெதுவாகத்தான்வரும்; இவ்வுண்மையை நீயறிதல்வேண்டும்" என்றார்.

பெஞ்சமினுக்குப் பல நற்குணங்களும் பொருந்தியிருந்தனவாகையால் அவன் தன் தகப்பனார் சொன்ன புத்திமதியை அதிக வணக்கத்தோடு ஏற்றுக்கொண்டான். அவன் தனதாயுள் முழுவதிலும் ஒரு சமயத்திலாவது தன் தகப்பன் அன்றுசொன்ன உண்மைச் சொற்களை மறக்கவேயில்லை. அவர்சொற்படி அன்று முதல் பல விஷயங்களைப் பற்றி வசன நடையில் வியாசங்கள் எழுதப் பயின்றான். தான் விருத்தியடையும் பொருட்டு இங்கிலீஷ் பாஷையில் சிறந்த நூலாசிரியர்கள் எழுதியவற்றைப் படித்து அம்மாதிரி தானும் எழுதத் தொடங்கினான். அக்காலத்தில் இங்கிலாந்தில் "ஸ்பெக்டேடர்" என்று ஓர் பத்திரிகை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அதைக் கிரமமாய்ப் படித்ததுமன்றி அம்மாதிரி எழுதுவதே அவனுக்குச் சிறப்பென்று தோன்றிற்று.

(இன்னும் வரும்)

## காலஞ்சென்ற நமது எட்வேர்ட் மஹா சக்கரவர்த்தியின் சரித்திரம்

ஸ்ரீமான் கே. வேங்கடராம அய்யரவர்கள், பி. ஏ., எல். டி.

"வானோக்கிவாழு முலகெல்லாம், மன்னவன் கோனோக்கி வாழுங்குடி" என்றும், "குடிதழீஇக் கோலோச்சுமாநில மன்னன் அடிதழீஇ நிற்குமுலகு" என்றும் திருவள்ளுவர் வாக்குக்குப் பொருந்த அரசு செலுத்தி, 1901ஆு ஜனவரிமீ 22உயில் பரலோகப் பிராப்தி யடைந்த நமது சக்கரவர்த்தினியாகிய விக்டோரியா என்னுஞ் சீமாட்டி "ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்" என்று புலவர் கூறியபடி "எட்வேர்ட்" என்னும் தன்னருமைக் குமாரருடைய இராச்சிய பரிபாலனச் சீரையும் சிறப்பையும், கேட்டு மனங்களிக்கப் பிராப்தியடைவில்லை. மகாராணியார் தேகவியோகமடைந்தபோது 82-வயதானவர். அறுபத்துநாலு வருஷம் இராச்சியபாரத்தை வகித்துப் புத்தியிலும் தர்ம சிந்தையிலும் தமக்கு நிகர் புருஷர்களிலும் ஒருவருங் கிடையாதென்கிற மஹா பிரதாபத்தை யடைந்து "சூரியாஸ்தமனமறியாத" தமது இராச்சியங்களிலுள்ள பிரஜைகளால் மெச்சப்பட்டுத் தேகத்தைத்துறந்தனர். அவருக்கு ஜரை என்பது வரவில்லை போலும். காலஞ்சென்ற நமது சக்கரவர்த்தி எட்வேர்ட் 1841ஆு நவம்பர்மீ 9உ பிறந்தார். இவர் மாதாவுக்கு முன்னாண்ட அரசிருவருக்கும் புருஷசந்ததி கிடையாது. விக்டோரியா மஹாராணி அவர்களுக்கும் முதற் குழந்தை பெண். இராச்சியத்திலிருந்த எல்லோரும் புருஷப்பிரஜை மஹாராணி அவர்களுக்கு ஜனிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தபடி "எட்வேர்ட்" பிறந்தமையால், நாடெங்கும் களிப்படைந்தது. இவர் பிதாவுக்கு "பிரின்ஸ் ஆல்பெர்ட்" என்று பெயர். பிதா

வின் உத்தமகுணங்களை இங்கு கூறுவது அனு
வசியம். "தந்தை மகற்காற்று முதவி அவை
யத்து முந்தியிருப்பச்செயல்," என்றபடி இரா
ஜரீகத்துக்குக் கல்வி இன்றியமையாத கருவி
என்றுணர்ந்து இவருக்கு நான்காவது பருவத்
திலேயே உபாத்திமார் நியமிக்கப்பட்டுக் கல்வி
ப்பயிற்சி தொடங்கப்பட்டது. "நல்லொழுக்க
மும் ஆசகில தருமமும்" இடையறுது நடக்கப்
பெறுங்கல்வியைத் தன் மகனுக்குப் புகட்டவே
ண்டுமென்பது பிதாவின்கருத்து. அவரும் அந்
தக் கீற்றினின்று வழுவாமலே கல்வி பயின்று
வந்தார். ஐந்தாவது பிராயத்தில் கப்பல் யாத்
திரைப்பழக்கம் உண்டாயிற்று. அக்காலத்தில்
காண்டெர்பரி அத்தியக்ஷராயிருந்த பென்ஸன்
நமது அரசரைப்பற்றிச் சொன்னது உண்மை
யாகவேயிருந்தது. "நுட்பபுத்தியும் ஆலோ
சனை நிறைந்தமுகமும் இளவரசருக்கு அமைந்து
ள்ளன" என்று 1846-ம் வருஷத்தில் சொல்ல
ப்பட்டது. "எட்டுச் சுரைக்காய் கறிக்குதவா"
தாகையால் இளவரசரின் பிதா தன் மக்களுக்
குக் கைத்தொழிற் பயிற்சியும் செய்துவைத்து,
அவரவர் தினந்தோறும்செய்து முடித்தவேலைக்
குத் தக்கபடி கூலியும் கொடுத்து வந்தாராம்.
இது புதுமையாகத் தோற்றவில்லையா? அரசரா
ய்ப் பிறப்பின் உண்டுறங்குவதைத் தவிர்த்து
வேறு வியாபாரம் ஒன்றுமில்லையென்று அறி
யாதவர்கள் சொல்லித் திரிவார்கள். பதினைன்
காவதுவயதில் வேஷமாறி ஆங்கிலேய தேசத்
தின் மேற்குப் பாகங்களையெல்லாம் சில தோழ
ர்களோடு போய்ப் பார்த்து வந்தார். குதிரை
யேற்றம் முதலாகிய ராஜவித்தைகளை நன்றாய்
அப்பியசித்துவருகையில் இராணுவங்களை நட
த்தும் வகைகளையும் கர்னெல் புரூஸ் என்பவ
ரிடத்திற் கற்றுவந்தார். 859-௵ நவம்பர்மீ
9உயில் பதினெட்டு வயதானமையால் யுவ
ராஜா ஆயினர். ஐரோப்பா கண்டத்திலுள்ள
பற்பல தேசங்களுக்கும் மாறு பேர் பூண்டு
போய்வந்தார். எடின்பரோ, ஆக்ஸ்போர்டு,
கேம்பிரிட்ஜ் என்ற மூன்று ஸர்வ கலாசாலை
களிலும் சேர்ந்து கல்வி பயின்றனர். பிரகிருதி
தத்துவங்களில் எட்வேர்ட் மஹா ராஜாவுக்கு
மிகவும் பிரியமாம். புத்தகங்களினின்றும்,
உபந்நியாசங்களினின்றும் கைத்தொழிற் சாலை
களைப் போய்ப் பார்த்ததினின்றுமே மஹா
ராஜாவுக்கு ஞானம் அதிகரித்த தென்னல் ஒவ்
வாது. "அரியவற்று ளெல்லா மரிதே பெரி
யாரைப் பேணித் தமராக் கொளல்" என்று நா
யனர் கூறியபடியே கல்வி, கேள்வி, ஒழுக்கம்
ஞானம் முதலியவற்றில் முதன்மை பெற்
றிருந்தவர்களுடைய நட்பை யடைந்த பாக்கி
யத்தாலே, இளவரசர் உயர்வான அறி
வைப் பெற்றாரெனல் வேண்டும். நல்ல மந்
திரிகளைத் துணையாகக் கொண்டு, அரசா
ளும் அரசரைக் கெடுக்கும் பகைவர்களின்
மைபால், நமது இளவரசர் காலக்கிரமத்தில்
லோகானுபவம், வித்தை புத்தி முதலிய உத்தம
குணங்களில் நாளொருமேனியும் பொழுதொரு
வண்ணமுமாகத் தேர்ந்துவந்தார். பிரசித்த
யுத்தவீரர்கள், ராச்சிய நிர்வாகிகள், கப்பற்
படைத்தலைவர், இராச்சிய தந்திரிகள், கவிவா
ணர்கள், சாஸ்திரக்ஞர்கள் —எப்போதும் நம்
மரசரைச் சூழ்ந்துகொண்டு ஸம்பாஷித்துக்
கொண்டிருந்தார். "கற்றலின் கேட்டலே நன்
றெ" ன்னும் பழமொழி நமதிளவரசர் விஷய
த்தில் முற்றும் சரியானதென்னலாம். அமெரிக்
காகண்டத்தில்செய்த யாத்திரையில் கானடா,
ஐக்கியநாடு முதலானவிடங்கட்கெல்லாம்போய்
ஆங்குள்ள பிரஜைகள் மனங்களிக்கவும், அவர்
களுடைய இராஜபக்தி பெருகவும் செய்தார்.
ஐக்கிய நாட்டிற்கு முதல் முதலில் அக்கிரா
ஸனாதிபதியாயிருந்த ஜார்ஜ்வாஷிங்டன் என்ப
வருடைய ஞாபகக் கட்டிடத்திற்கு இளவரசர்
தாமே போய் மரியாதை செய்தார். ஐக்கிய
நாட்டாருக்கு இந்த மரியாதையால் வந்த ஸந்
தோஷத்தை அளவிடல் முடியாது. 1862-ம்
வருஷத்தில் புண்ணிய பூமியாகிய பலஸ்தினு



வுக்கு ஸ்டான்லி என்னும் சாஸ்திரியுடன்
சென்றார். கிறிஸ்தவர்களுக்குப் பலஸ்தினுவில்
அநேக ஸ்தலங்களுண்டு. துருக்கர் தேசாதி
பதி விக்டோரியா மஹாராணி அவர்கள் குமா
ரன் வந்திருக்கிறதை அறிந்து,மற்றெந்தக்கிறிஸ்
தவ அரசர்க்குஞ்செய்திராத மரியாதைகளைச்
செய்தார். 1863-ம் வருஷம் மார்ச்சு மாதம்
10உயில் இளவரசர் டென்மார்க்கு தேசத்தின்
அரசருடைய சுந்தரஇளங்குமரியாகிய அலெக்
ஸாண்டிரா என்னும் பெண்ணை மணம் புரிந்து
இல்லறம் நடத்தத் தொடங்கினர். சுகுண
சுந்தரி என்கிற நாமம் இப்பெருமாட்டிக்கே
தகும். நமதிளவரசருடைய உயர்ந்த பதவி
க்கு ஏற்ற இல்லறக்கிழத்தி அலெக்ஸாண்டி
ராவே. "தற்காத்துத் தற்கொண்டாற் பே
ணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்வி
லாள் பெண்" எனத் திருவள்ளுவர் சொன்ன
படி, கற்பினின்றும் வழுவாமல் தன்னைக்காத்
துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முத
லியவற்றாற் பேணி, இருவர் மாட்டும் நன்மை
யமைந்த புகழ் நீங்காமற் காத்து, நற்குண நற்
செய்கைகளிலும் கடைப்பிடித்தவள் இந்தச்
சீமாட்டி. அறிந்தோர், மனையவளது நற்குண
நற்செய்கைகளை யொருவனுக்கு நன்மையென்
றும், நல்ல புத்திரரைப் பெறுதலை அவற்றிற்
காபரணமென்றுஞ் சொல்வார். அனஸூயை
முதலிய புராணங்களாற் புகழப்பெற்ற பெண்
களைப்பற்றிப் படித்தும் கேட்டுமிருக்கிறோமே
யல்லது பார்த்ததில்லை. அலெக்ஸாண்டிரா
என்னும் அரசி ஓர் அவதார ஸ்திரீ என்ன
லாம். இளவரசருடைய புண்ணியத்தினுற்றான்
உத்தம ஸ்திரீ மனையாட்டியாக அமைந்தனள்.
சிங்காதனம் கைக்கெட்டினதாயினும் நம்மிள
வரசர் பிரஜையாய் மாத்திரம் வெகுகாலமிருக்
கும்படி நேரிட்டிருந்தது. இவர் மாதா பட்ட
த்தை வகித்து ஆண்டு வருகையில் இவருக்கு
அதிகாரலேசமும் கிடையாது. மாதாவும்
தானுள்ளமட்டில் அரசாளும் முறைமை
யில் எந்தப் பகுதியையும் தன் அருமை
மகனுக்கு அளித்தாளில்லை. மாதாவின் பிரதி
நிதியாகமட்டும் சிற்சில விடங்களுக்கு இளவர
சர் போய்வந்தார். பொறுப்பான வேலை
புருஷர்களுக்கு அமராவிட்டால் தீய வழியி
லல்லவோ அனேகருக்குப் புத்தி செல்லும்.
இளவரசரோ காலத்தை அவ்வாறு கழிக்க
வில்லை. இவருக்குச் சொந்தமாக ஸாண்டிரிங்
ஹாம் என்னும் ஊரில் பூஸ்திதி மிகுதியாக
இருந்ததைப் பண்படுத்தி, மிராசுதார்களுக்கு
வேளாண்மைத் தொழிலையும் குடியானவர்
களை நடத்துமுறைகளையுங் கற்பித்து வந்தார்.
"தொழுதூண்சுவையின் உழுதூணினி"தென்
னும் முதுமொழியின் யதார்த்தத்தை இள
வரசே பிரஜைகளுக்கு விளக்கிக் காட்டினர்.
இவர் தொழுவத்திலுள்ள பசுக்களைப்போல்
புஷ்டியாயும் பால் தாத்தக்கதாவுமுள்ள
கோக்கள் எங்குங் கிடையாவென்னும் கீர்த்தி
பரவி எவரும் ஸாண்டிரிங்காமுக்கு வந்து
கிருஷி முறை தெரிந்துகொண்டு போயினராம்.
இளவரசர், செய்வனவற்றைத் திருந்தச் செய்
தல் என்னும் கோட்பாட்டை யனுசரித்தவர்.
1865-ம் வருஷத்தில் ஐர்லாண்டிற்குப் போயி
ருந்த காலத்தில் மெய் காவலாளிகளில்லாமலே
டப்ளின் நகரவீதிகள் வழியாய்ச் சென்றார்.
பிரஜைகளுடைய க்ஷேமத்தையே எப்போதும்
கருத்தில் வைத்தவரானபடியால் வெளியிற்
போவதிற் பயமேயில்லை. 1871-ம் வருஷத்
தில் இளவரசர் கபவாத ஜுரங்கண்டு செத்
துப் பிழைத்தனர். அக்காலத்தில் நாட்டி
லுள்ள ஸகல ஜனங்களும் இளவரசருக்குத்
தீங்கு வராதென்று கோயில்களிலெல்
லாம் பிரார்த்தனை செய்தார்கள். 1875-ம்
ஆண்டில் இந்துதேச யாத்திரை செய்தனர்.
அக்காலத்திலுள்ள இந்துதேச அரசர்களும்
பிரஜைகளும் அவருக்குப் பலவிதமான மரி
யாதைகள் செய்ததைக் கண்ணுற்றுக் களி
த்து, இந்துக்களுடைய அந்தரங்கமான ராஜ

பக்தியைப் பற்றித் தம்முடைய மாதாவுக்கு அநேக நிருபங்கள் எழுதி, அங்கிலேயருக்கு இந்துக்களிடத்திலும் இந்துக்களுக்கு அங்கிலேயரிடத்திலும் பரஸ்பர விசுவாசம் பெருகுவதற்கு வேண்டியவற்றைச் செய்தார். 1887-ம் வருஷத்தில் மஹாராணீயவர்களுடைய ஐம்பதாவது வருஷோற்சவத்தைச் செவ்வையாக நடத்திப் புகழ்பெற்றார். பிதாவிறந்த பிறகு வேறு துக்க மொன்றையு மறியாத இளவரசர் 1892-ம் ஆண்டில் தமது ஸ்ரீமந்த புத்திரனாகிய ஆல்பெர்ட் விக்டர் மரணத்தை யடையவே புத்திரசோகம் என்னும் பெருந்துக்கமுற்றார். 1897-வருஷத்தில் அறுபதாவது வருஷோற்சவமாகிய டயமண்டு ஜூபிலியையும் நடத்தினார். 1900-ம் வருஷம் பெல்ஜிய ராச்சியத்தின் வழியாகப் புகை வண்டியிற் போகையில், ஸிபிடோ என்னும் ராஜத்ரோகி துப்பாக்கியினால் அவரைக் கொல்லப் பார்த்தான். தெய்வகடாக்ஷத்தால் இளவரசர்மேல் குண்டு படாமல் வண்டிக் கண்ணாடி மாத்திரம் உடைந்து போயிற்று. அரசர் தெய்வாம்சம் என்பதற்கு வேறு சாக்ஷியம் வேண்டுமோ? இந்த வியாஸத்தின் தலைப்பில் சொன்னபடி எட்வேர்ட் சக்கரவர்த்தி 1901-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-தேதியில் மகுடாபிஷேகம் பெற்றார். அக்காலத்தில் அவருக்கு வயது அறுபது. அங்கிலேய தேசத்தைப்போல் ஏகதேச ஏகாதிபத்திய நாடுகளில், ஜனப்பிரதிநிதிகளுக்குத்தான் சகல அதிகாரமுமுண்டேயன்றி அரசருக்கு ஒரு அதிகாரமும் கிடையாதென்பாருமுண்டு. மன்னன் குடிகளைத் தழுவிச் செங்கோல் நடத்துவது பெருமையே யன்றிக் குடிகளுடைய இஷ்டத்துக்கு விரோதமாக நடத்தல் செங்கோலல்ல. அரசருக்கு எக்காலத்துமுள்ள அதிகாரம் எந்த நாட்டிலும் போகாது. அங்கிலேய நாட்டிலும் அவ்வாறே தான். அங்கிலேய நாட்டில் அரசனுக்கு மற்ற உத்தியோகஸ்தர்கள்போலவே வருஷ சம்பளம் உண்டு. எட்வேர்ட் சக்கரவர்த்திக்கு வருஷம் ஒன்றுக்கு நான்கு லக்ஷம் சவரன் சம்பளமாம். மந்திரிமார்கள் ஒவ்வொருவரும் அரசரிடத்தில் காரியங்களைச் சொல்லி அவர் அனுமதி பெற்றுத் தான் எல்லாவற்றையும் நடத்தி வருகிறார்கள். மந்திரிமாருக்குச் சுவேச்சை கிடையாது. அரசன் பிரியப்படாத மந்திரி வேலையிலிருத்தலுமில்லை. இத்தகைய நாட்டில் அரசருக்கு அதிகாரமொன்று மில்லை யெனலாமோ? எட்வேர்ட் சக்கரவர்த்தி ஒன்பது வருஷகால மாண்டார். அவர் செய்த பெரிய நன்மையாதெனின்:—புலியும் பசுவும் ஓர் துறையில் நீர் குடிக்கச் செய்தது தான். பிரான்சியரும் ஆங்கிலேயரும் ஜன்ம விரோதிகள். ஆயிரம் வருஷங்களாகப்பகைமைபாராட்டி வந்தபிரான்சியரைச் சமாதானஞ் செய்து ஐரோப்பாகண்டத்தில் ஓரரசர் மற்றோரரசரோடு யுத்தஞ்செய்யா வண்ணம் காத்து வந்தார். இது சாமான்னிய மனிதரால் முடிகின்ற காரியமன்று. நமது இந்து தேசத்திற்கு வரிகளைக் குறைத்து ஜனப்பிரதிநிதி சபை ஏற்படுத்தினவரும் அந்த மஹா புருஷரே. நீடூழிகாலம் நம்மை இவர் ஆண்டுவரப் பாக்கியம்பெற்றிலேம். ஜலதோஷம் சிறிது கண்டு நம்மருமைச்சக்கரவர்த்தி தேகந் துறப்பாரென் றெண்ணத் துணிந்தோமோ? எல்லாங் கடவுள் செயல். 1910-ம் வருஷம் மே௴ 6௳ எட்வேர்ட் சக்கரவர்த்தி பரமபத மடைந்தார். அவருடைய குமாரர் ஐந்தாவது ஜார்ஜ் மகுடாபிஷேகஞ் செய்யப்பெற்று நமது சக்கரவர்த்தியாய்விட்டார். ஜார்ஜ் சக்கரவர்த்தி வாழி. ஆங்கிலேய அரசாக்ஷி வாழி.



## காலஞ்சென்ற இந்திய சக்கரவர்த்தி 7-வது எட்வர்டு அரசன்மேல் எழுதிய சரமகவிகள்

ஸ்ரீமான் என். ஸேதுராம அய்யரவர்கள்

நேரிசை வெண்பா

பண்டைமனு நிற்குவமை பார்காப்பி லாவான்
கொல், கொண்பே ரெட்வர்டெங் கோமானே—
விண்டுரைத்தால், நின்னீதி யாவர்க்கும் நேராகும்
அன்னவன்றன், தன்னீதி வேற்றுமையே தான். (க)

மன்னாவென் றுரை மகிதலத்தி லேயதைப்போம்
பன்னாடும் போற்றப் பரிந்துவந்து—சொன்னாடும்,
தன்னுலகம் நீத்துத் தரணியுளோர் துன்புறநீ, பொ
ன்னுலகம் சென்ற பொழுது. (உ)

அன்னையிடம் பெற்ற வரசுரிமை கைக்கொண்டு,
சொன்னமொழி பொய்க்காது தொல்லுலகை—தன்
னைநிகர், முப்போது மில்லையெனா மொய்ப்புடனான்
மன்னவனை, எப்போது காண்போ மினி. (ங)

மண்ணரசை ஜார்ஜ் மகற்களித்துப் பண்புடனே,
விண்ணரசு செய்தற்கோ விக்டோர்யா—பெண்ண
ரசி, மாதாவைக் கண்டு மகிழ்தற்கோ சென்றாய்
கொல், தாதாரும் பூந்தாராய் சாற்று. (ச)

பத்தொன்பான் நூறுடன்சேர் பத்தாண்டின் மே
மதியில், வித்தம்சேர் ஆறிலவிர் வெள்ளியதாம்—
முத்தித், திருவமிகும் எட்வர்டெம் சீமான்மன்
ஈசன், திருவடியிற் சேர்ந்த தினம். (ரு)

## புஸ்தக விமர்சனம்

1. படிக்காசுப்புலவர் சரித்திரம்—செந்தமிழ் மறுபதிப்பு. வி. கே. நாராயணசாமி முதலியார்.

இம்மாதிரியில் முதலியாரவர்கள் 'தொகுத்திருப்பதை' முந்தி யிருமுறை நாம் விமர்சனம் செய்திருப்பதால் இதற்கு அதிகமாகச் சொல்லத்தக்கதில்லை. 'இரட்டையர்' சரிதத்தில் முதலியார் வெளியிட்ட சில சங்கதிகளுக்கு நாம் ஆக்ஷேபங் கொண்டதுபோல், இதில் ஒன்றுமில்லையெனச் சந்தோஷிக்கிறோம்.

2. உலகவாழ்க்கை, கெ. என். சிவராஜன், பி. ஏ. திருவனந்தபுரம்.

நூலாசிரியருடைய மொத்தக் கருத்து சிலாக்கியமே. 'பூதங்களனைவற்றிலும் தன்னையும், தன்னில் பூதங்களனைவற்றையும் யார் பார்க்கிறானோ, அவன்தான் உண்மையை யறிந்தவனாகிறான்,' என்கிற கீதைவாக்கியத்தை விளக்கி, வியவகாரத்தில் நாம் இந்த உண்மையை அறியுமாறு, மேனாட்டு முறையையும் ஒட்டியெழுதியிருக்கிறார். செய்யுள் நடையென்றாலும், சுலபமானதே.

3. மங்களோதயம்.—மலையாள மாதாந்தர சஞ்சிகை—தேசமங்கலம் அச்சுக்கூடம்—சாதாரண௵ வைகாசி௴. இதைப் பார்வைக்கு அனுப்பிவரும் ஸ்ரீமான் நம்பூதிரிப்பாடு அவர்களுக்கு வந்தனம். முதல் விஷயம் ஸ்ரீ சிருங்கிரி ஜகத்குரு ஸ்வாமிகளைப் பற்றியது. ஸ்ரீபகவத்பாத சுவாமிகள் நம்பூதிரி வம்சமாதலால், அவ்வருக்கத்தவர் நெடுநாளாக அவர்கள் மேலிருந்த விரோதத்தை ஒழித்து, மறுபடி அந்தக் குரு பரம்பரையைப்பற்றிச் சிலாகித்து எழுதுவது நற்கால சூசனை யென்னல்வேண்டும். வேறு பல விஷயங்கள், பலவகைப்பட்டு, எல்லாம் நல்ல தெளிந்த நடையில், எழுதப்பட்டுள்ளன. ஸ்ரீ ஜகத்குருவின் படமும் சேர்ந்திருக்கிறது. படிப்பதற்கு ருசி யென்பதில் ஐயமில்லை.

## சமாசாரக் குறிப்புகள்

கடல் மனிதர்.—மனிதரைப் போன்ற சீவபிராணிகள் கடலிற் காணப்படுகின்றன. டெலகோவா கடலில் மனித அடையாளங்களுடைய ஓர்வித மச்சம் பிடிக்கப்பட்டதாம். இதன் முகம் ஏறக்குறைய மனிதரின் முகம்போலிருந்ததாம். மார்பில் பெண்களுக்குள்ளவை போல ஸ்தனங்களிருந்தனவாம். இச்சிருஷ்டி காணப்பட்ட இடத்திற்குச் சிறிது தூரத்தி லிதுபோன்ற வேறோர் சிருஷ்டி காணப்பட்டதாம். இது ஆண் சிருஷ்டியாம். இவைகளின் மர்மஸ்தானங்கள் மனிதரின் மர்ம ஸ்தானங்கள் போலிருந்தனவாம். இருபக்கங்களிலு மிவைகட்கு மீன்களின் சிறகுகள் போன்ற பெரிய செட்டைகளுண்டாம். இவைகளை யசசிருஷ்டி

கள் கைகள்போலப் பாவிக்கின்றனவாம். இவர்கள் நமது புராணங்களிற் கூறப்பட்டிருக்கும் நீரமகளிரின் வருணத்தார் போலும்.—இந்து சாதனம்.

***

இது வாஸ்தவமாகில் ஐரோப்பிய ஜீவராசி சாஸ்திரிகள் கொஞ்சம் கண்விழித்துப் பார்க்கவேண்டும். இதுவரை மனிதனுக்கு மூதாதை குரங்கென்று சொல்லிவந்தார்கள். அது அவ்வளவாக அங்கீகரிக்கக் கூடாதென்று இதனால் விளங்குகிறது. சிருஷ்டியின் அற்புதங்களுக்கு எல்லையே இல்லை போலும்.

***

இந்து மகம்மதீயர் ஒற்றுமை யதிகரிக்கவேண்டி லாஹோரில் இருகக்ஷியிலும் முகாமையாயிருப்பவர் 'வனபோஜனம்' செய்வித்து, எல்லோரும் கலந்து உறவாடி வருவதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். தென்னிந்தியாவில் இதுமாதிரி சாத்தியமோவென்று யோசிக்கிறோம். ஒரு இடையூறு எக்காலத்தும் வலுத்திருக்கிறது. அதாவது பாஷை வேறுபாடாம். இந்துக்களில் படித்தவரெல்லோரும் இந்துஸ்தானி பேசத் தெரிந்துகொள்வதுதான் இதற்கு ஏற்ற பரிகாரம். ஆதலால் இதற்குச் சாதனமாகப் பெரிய பட்டணங்களிலெல்லாம் சிறு சங்கங்களேற்பட்டு வரவேண்டுமென்றும், நமது குமாரர்களுடைய வித்தை பூர்த்தியாவதற்கு இதொன்று முக்கிய அம்சமாக வேண்டுமென்றும் நமக்கு ஆக்கிரகம்.

***

மன்னார்குடி விஷயமாக முன்னிரண்டொருமுறை யெழுதினோமல்லவா? இப்பொழுது தஞ்சாவூர் ஜில்லா நியாச பிரசங்கம் அங்கு கூடிய பல பிரசங்கங்கள் நடந்ததில், இந்து மதஸ்தர் கிறிஸ்தவராகிப் போவதில் நடக்கும் பல ஆக்ஷேபகரமான விஷயங்களை விளக்கி கனம் ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யர் முதலிய பிரபல புருஷர்கள் பேசியதாகவும், அதனால் அவ்விடத்திய குமாரர்களிலனேகர் 'இந்திய குமாரர் சங்கம்' என்னும் தியாஸபி சம்பந்தப்பட்ட ஒரு ஸொஸைட்டியில் சேர வேண்டி ஆக்கிரகப்படுவதாகவும், கேள்விப்படுகிறோம். இது சரிதான். ஆனால் முந்தி நாம் சொல்லியபடி 'மயான வைராக்கியமாக' மட்டும் நடப்பது நமக்கழகேயல்ல. இவ்விஷயத்தில் மதிராசு கவர்ன்மெண்டு பாதிரியாருடையவும் நம்முடையவும் மதம் ஒன்றே. இந்துக்களுக்கு மதபக்தி வாஸ்தவமானால் இந்து பாடசாலைகள் விர்த்தியாகவேண்டும். அப்போதுதான் க்ஷேமம் நிலைக்கும். 'போலீஸ்காரன்' என்றால் இத்தேசத்தில் யாருக்கும் ஏதோ ஒருவிதமாக நடுக்கம் உண்டாகிறது. அவர்களும் அதற்குத் தக்கபடியே சிலசமயங்களில் பயங்கரமான நடவடிக்கை நடத்திவிடுவது பகிரங்கமாயிருக்கிறது. ஆதலால் போலீஸ்காரருக்கும் மகாஜனங்களுக்கும் சிநேகம் வர்த்திக்கும்படி என்ன உபாயம் செய்யலாமென்று ஆலோசித்து ஒருவர் யுக்தி சொல்லுகிறார்:—இங்கிலாந்தில் போலீஸ்காரர்கள் ப்ரைடன் நகரத்தில் செய்து வருவதுபோல, ஏழைகளையும், அநாதைகளையும் ஆதரிப்பதாகிய தருமகாரியத்தை இந்தியாவிலும் செய்வார்களாகில் அவர்களுக்குப் புண்ணியம், புருஷார்த்தம் இரண்டும் உண்டு. உத்தியோக விஷயமாயும் லாபம் உண்டு என்கிறார். இந்தியக் கான்ஸ்டேபிலுக்கு இதற்கு வேண்டிய யோக்கியதை யுண்டா?

***

அநேக காரியங்களுக்கு இந்தியா உதவாதென்று சொல்லிவந்தவர்களெல்லாம் இப்பொழுது கண்ணை விழித்துக் கொள்ளுகிறார்கள்போலும். 'தீப்பெட்டி' விஷயத்தில் இப்படிப் பல வருஷங்களாகப் பேச்சிருந்தது. இப்பொழுதோ சர்க்கார் தரபில் ஒரு பாரஸ்டு உத்தியோகஸ்தர் இது வெகு நன்றாய் நடக்கக்கூடிய விஷயமென்று கண்டு ஒரு புஸ்தகமெழுதியிருப்பதுடன், லாஹோரில் ஒரு கம்பெனி இதற்காக ஏற்பட்டுப் பெரியவேலை செய்யப்போகிறதாம். அப்படியே இந்தியப் பருத்தி விஷயத்திலும். இதுவரை 60-க்கு மேற்பட்ட லெம்பர் நூல்களுக்கு இந்தச் சரக்கு உதவாதென்றவர்கள் இப்பொழுது இதை அதிக பிரியப்பட்டு வாங்குவதாகக் கேள்வி. 'உயிருடனிருந்தால் எல்லா மங்களமும் காணலாம்,' என்று ஸ்ரீராமனுதன் சொல்லியது பல விஷயங்களில் வாஸ்தவமாகி வருகிறது.

***

மகாகனம் பொருந்திய ஸ்ரீமான் அமீர் ஆலிபஹதூர் சொல்லுகிறார்:—"மகம்மதீயர் இந்தியாவை ஆண்டநாளில், குடித்தனக்காரர் பூமியைக் கிரயவிக்கிரயம் சுலபமாகச் செய்வதற்காகாது. ஆதலால் அவர்கள் கடன்படும் விஷயத்தில் உஷாராகஇருந்தார்கள். இப்பொழுதோ,கந்தாயம் செலுத்தாவிட்டால் பூமி ஏலமாகி விடுகிறது. அப்படிச்செய்வதில் சர்க்காருக்கும் பலசமயங்களில் நஷ்டமுண்டாகிறது. குடியானவனும் கூலிக்காரனாகி விடுகிறான். இதில் பல்வித உபத்திரவ மிருப்பதாகக்கண்டு பஞ்சாபுக்கு மட்டும் இந்திய துரைத்தனத்தார் ஒரு பரிகாரச சட்டம் ஜாரிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தியாவெங்கும் பழைய மகம்மதீய சம்பிரதாயம் மாறாமலிருந்தால் வெகுநலமா யிருந்திருக்கும்."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
17 SEP 1910
MADRAS.



சர் சார்லஸ் ஹார்டிங்கு
நமது புதிய ராஜப்பிரதிநிதியவர்கள்

REGISTRAR OF BOOKS MADRAS


# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

**ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை**

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி., பத்திராதிபர்.

| புஸ்தகம் I<br>**Vol. I** | சாதாரண௵ ஆடிமாதம்<br>**July 1910** | சஞ்சிகை, 11<br>**No. 11** |
|---|---|---|


## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே."

நமது புதிய ராஜப்பிரதிநிதியவர்கள்.

தற்காலம் நமது ராஜப்பிரதிநிதியாகிய மிண்டோ பட்டவர்த்தனர் இவ்வருஷக் கடைசியில் திரும்பச் சீமைக்குப்போகவேண்டியிருப்பதால், அவருக்குப் பின் யார் வருகிறாரென்று கொஞ்சநாளாகக் கேள்வி பலப்பட்டு வந்தது. இவர் வரலாம், அவர் வரலாமென்று பலபெயர் பதவிதமாகத் தர்க்கித்தார்கள். கடைசியில் சர் சார்லஸ் ஹார்டிங்கு துரையவர்கள்தான் வருவதாக நிஷ்கரிக்கப்பட்டிருக்கிறது.

மிண்டோ பட்டவர்த்தனரைப்போலவே சர் ஹார்டிங்கும் இந்தியாவில் அலுவல்பெற்று உழைக்க பிராசுபாக்கியம் பெற்றவர். ஏனெனில் இவர் பாட்டனார் ஹார்டிங்கு இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்து, 1844-ம்௵ முதல் 1848-ம்௵வரை உழைத்து வந்தவர். அவர் காலத்தில் பஞ்சாபில் சீக்கர்யுத்தம் நடந்ததும், அதில் அவராகவே சேனை நாயகராக ஏற்பட்டு, அந்த யுத்தம் நேர்த்தியாக நடந்து நிறைவேறியதும், அபிமானிகளுக்குத் தெரிந்திருக்க வேண்டிய விஷயம். ஆதலால், வருபவர் நமக்குப் பழைய பந்து தான். இவர் 1858-ம் வருஷத்தில் மேற்சொல்லிய கவர்னர் ஜெனராலுடைய மூத்த மகனுக்கு இரண்டாவது குமாரராகப் பிறந்தவர். 1881-ம்௵ முதல் இவர் அங்கிலேய ஸ்தானாதிபதியாகவோ, அந்த ஹோதாவில் வேறு அம்சங்களிலோ, விடாமல் உழைத்து வந்திருக்கிறார். துருக்கி, ஜர்மானியா, பிரான்சு, பர்சியா, ருஷியா, அமெரிக்கா முதலிய எல்லா இடங்களிலும் இவர் உழைத்துப் பழகியிருப்பதால் அனுபவம் முற்றியவரென்பதில் சந்தேகமில்லை. ஆசியாவில் அனுபவம் கூடியும், காலஞ்சென்ற சக்கரவர்த்தியவர்களுடைய சௌம்மிய நடவடிக்கைகளில் வெகுவாய் சம்பந்தப்பட்டுமிருப்பதால், இவர் இந்தியாவிலும் எல்லா வகுப்பாரையும் வசியஞ் செய்துகொண்டு துரைத்தனத்தை ஆற்றொழுக்காக நடத்துவாரென்பதில்

ஐயங் காணவில்லை. சுமார் 30-ஞூ காலம் சர்க்கார் தரப்பில் பெரிய பதவிகளிலிருந்து உழைத்தவர் யாருக்கும் விரோதிகளில்லாமலிருப்பது அசாத்தியம். ஆனால் நமது ராஜப்பிரதிநிதியாக வருபவருக்கு விரோதஞ் சொல்லுபவரொருவரும் காணவில்லையாதலால், அதைப்பெரிய நற்குறியாகக்கொள்ளவேண்டும். இந்திய துரைத்தனத்தில் பெரிய விமர்சனங்களாகி வருகின்றன. அவற்றின் பலனைக் காலதருமத்தையனுசரித்துக் கொடுப்பிப்பவர் ராஜப்பிரதிநிதியாதலால், இவ்விஷயத்தில் சர் ஹார்டிங்கு துரை சத்தியத்தையும், தருமத்தையுமனுசரித்து, இந்நாட்டிலுள்ள பல வகுப்பாருக்கும் இதம்செய்து வருவாரென்றே நம்புகின்றோம்.

பழைய காலத்தில் கிரேக்க நீதிமானொருவர், "யாவனொருவன் எந்தக்காரணம் பற்றியாவது ஜனங்கள்வாயில் விழாமலிருக்கின்றனோ, அவனைத்தான் வாஸ்தவத்தில் நல்லவனென்னல் தகும்," என்கிறார். அந்தப்படி விசாரிப்போமாகில், நமது புதிய ராஜப்பிரதிநிதியை வாஸ்தவத்தில் நல்லவரென்னல் தகும். ஆக்ஷேபமேயில்லை. ஏனெனில் மேற்சொல்லியபடி இவர் இதுவரை ஜனங்கள் 'வாயில் விழவே' யில்லை.

சர்க்கார் உத்தியோகஸ்தரும் ராஜத்துரோகமும்.

முன்னொரு மாதம் தேசிய பாஷைகளை ஐரோப்பிய உத்தியோகஸ்தர் கற்றுத் தீரவேண்டுமென்று விஹாரிணியில் நாம் வாதித்தது அபிமானிகளுக்கு ஞாபகமிருக்கலாம். அது முதற்கடமையென்றும், அதைப்பழைய காலத்துத் துரைமார்கள்போல இக்காலத்தவரும் அக்கரையுடன் கற்று, ஜனங்களுடன் பழகி வந்தால், அனேக மங்களங்களுண்டாகுமென்றும், நாம் வற்புறுத்தினோம்.

இதை யனுசரித்துச் சமீபகாலத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு பெரிய சர்க்கியுலர் அனுப்பியிருக்கின்றார்கள். அது சர்க்கார் உத்தியோகஸ்தருக்கென்று பிறந்திருப்பது வாஸ்தவம். ஆயினும் அது மகாஜனங்களையும் இவ்விஷயத்தில் உழைக்கவேண்டுவதால், அதிலுள்ள முக்கிய அம்சங்களை இங்கு சுருங்க உரைக்கின்றோம்.

இப்பொழுது சில வருஷங்களாக இந்நாட்டில் ராஜத்துரோகம் பிரபலித்து வருவது கொண்டு, அதை எவ்விதத்திலும் அடக்கவேண்டியது ராஜாங்கத்தாரின் முதற்கடமையாகிவிட்டது. ஆதலால், கொஞ்சகாலமாக அதற்கு வேண்டிய தண்டோபாயங்களைச் சர்க்கார் தேடவேண்டி வந்திருப்பதும், அவ்வாறு தேடியவைகளில் சிலவற்றைக்கைப்பற்றியிருப்பதும் அபிமானிகள் அறிவார்கள். ஆனால் இப்பெருங் காரியத்தில் அடிப்பது மட்டும் போதாதென்பது நிச்சயம். ஒரு கை அடித்தால் மற்றது ஆதரிப்பது தான் தருமதுரைத்தன லக்ஷணம். ஆகவே இந்தியா கவர்ன்மெண்டார் தங்கள் சிப்பந்திகள் மூலமாய் மகாஜனங்களை ஆதரிக்க விரும்பி, இவ்வாறு ஆக்ஞாபிக்கின்றார்கள்.

"ராஜத்துரோகமென்பது மகாஜனங்களுக்குள் பெரும்பாலார் நாளதுவரை அறியாத விஷயம். படித்தவர்களாகியும், பணங்காசு அதிகமில்லாதவராகியும் உள்ள சிலபெயர் தான் இதில் இதுவரை சம்பந்தப்பட்டிருப்பவர்கள். இவர்களுக்கும் இம்மாதிரி ராஜாங்கத்திற்கு விரோதமாகப் பேசுவதற்குத்தக்க நியாயம் ஒன்றுமில்லை. வைதிகமுறையில் காணும் இரண்டொரு சில்லரைத் தோஷங்களைப் பெரியனவாக்கி, பூனைபோனதைப் புலிபோனதாக வருணித்து வருகின்றார்கள். இவர்களில் ஒருவகுப்பார் ராஜாங்கத்திற்கு நேர்விரோதமொன்றும் செய்வதில்லை. ஆனால் அதற்குச்சமயங்களில் உதவாமலும், தெரிந்தோ, தெரியாமலோ, ராஜபக்தியைக்குறைத்தும் வருகின்றார்கள். மற்றைய வகுப்பார் யோக்கியரான மகாஜனங்களையும், உத்தியோகஸ்தரையும் வெடிகுண்டு முதலியவற்றால் வெருட்டி வருகின்றார்கள். இவர்கள் அநேகமாய்ப் பள்ளிப்பிள்ளைகள். மொத்தத்தில் இவ்விருகட்சியாரும் ஒருவருக்கொருவர் சகாயம் செய்துவருவதாகவே காணுகிறது.



இப்படிக்கிளம்பி, எங்கும் குழப்பமுண்டாகும்படி இந்தவகுப்பார் செய்துவருவதற்கு மூலகாரணம் ஒன்றுதானென்று இந்தியாகவர்ன்மெண்டாருக்கு நிச்சயம். அதாவது, அங்கிலேய ராஜாங்கதருமத்தை மகாஜனங்களுக்குள் பெரும்பாலார் அறியாமலிருப்பதாம். அரைகுறையாகப் படித்துவிட்டு, நமதுநாட்டில் அன்னியர் இருக்கவே கூடாதென்று குருட்டுத்தனமாய்ப் பேசிவரும் சில துஷ்டருடைய சப்தம்தான் இதுவரையில் மகா ஜனங்கள் காதில் விழுந்து வந்தது. ஆனால் அங்கிலேய ராஜாங்க முறையை நன்றாயறிந்தவர்கள் யாரென்றால், அந்தராஜாங்கத்தில் அலுவல்களிலமர்ந்து அனுபவமடைந்தவர்களேயல்லது இவர்களல்லர்.

இப்படியிருப்பதால் இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய துரைத்தனத்தை நிர்வகித்துவரும் உத்தியோகஸ்தராகிய 'நம்பிமுதல் திருவலகுவரை' உள்ள சமஸ்தமான பெயரையும் இதனால் எச்சரித்து, இவ்விஷயத்தில்அவர்கள் செய்யவேண்டியது இன்னதென்று அறிய விரும்புகின்றார்கள். வெறுநாளாகச் சர்க்கார் உத்தியோகஸ்தர், வந்த கடுதாசிகளுக்குப் பதில் எழுதிவிட்டால், அல்லது கணக்குகளைப் பார்த்துப் பைசல் செய்துவிட்டால், தங்கள் வேலை முடிந்துவிட்டதென்று எண்ணிவந்திருக்கின்றார்கள். இது பெரிய பிசகு. இந்த வேலைகள் ஆகியே தீரவேண்டியவைதாம். சந்தேகமில்லை. ஆனால் இதையே தங்களுக்காக வேண்டிய காரியமாகவும், வேறொன்றுமில்லையென்றும் தீர்மானிப்பது பிசகு. காலவகையை யனுசரித்து, சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரும், தத்தமக்கியன்றமட்டில், மகா ஜனங்களுக்கு விவேகமதிகரிக்கச் செய்யவேண்டும். அங்கிலேய துரைத்தன தருமங்களையும், அதனாலுண்டாகியிருக்கும் நற்பயன்களையும் அவர்களுக்கெடுத்துக்காட்டி, துர்மந்திரிகளுடைய ஆலோசனைகளெல்லாம் வீண்காரியங்களென்று விளக்கிவரவேண்டும்.

எல்லா டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தரும் இக்காரியத்தைப் பொறுப்பாகக்கொண்டு நடத்தவேண்டியதுதான் கிரமம். ஆனால் மகாஜனங்களுக்குள் கல்வியைப் பரவச்செய்வதையே முக்கிய விரதமாகக்கொண்டிருப்பவர் எட்யூகேஷன் டிபார்ட் மெண்டாராதலால், அதிலுள்ள எல்லாவகையான உபாத்திமார்களும் இவ்விஷயத்தில் நன்றாக உழைக்கவேண்டுமென்பது சர்க்காருடைய சந்தோஷம். பள்ளிப் பிள்ளைகளுக்குச் சரித்திரம், வைதிகம் முதலிய கலைகளைச் சொல்லிக்கொடுப்பவர் மனம் போனபடி பேசியும், நடந்த காரியங்களை உள்ளபடி யுரைக்காமலுமிருப்பதால் தான் அனர்த்தங்கள் விளைகின்றன. உபாத்திமார்களுக்கே இவ்விஷயங்கள் நன்றாகத் தெரியாதாகையால், போதனைமுறைப் பாடசாலைகளில் இதற்குப் பரிகாரங்கள் தேடவேண்டும்.

ஜில்லா கலெக்டர்கள் தங்கள் சரகத்தில் நடக்கும் சகல காரியங்களையும் கவனித்து, சமயத்திற்குத் தக்க பரிகாரம் தேடவேண்டும். இதுவரையில் இவர்களிருந்தமாதிரி யிருப்பதில் இனிப் பிரயோஜனமில்லை. துஷ்டர்கள் யாராகிலும் துராலோசனைகளைப் பிரபலிக்கச் செய்தால், அதைக் கண்டிக்கவேண்டும். முக்கியமாக ஜனங்களில் யோக்கியர், அயோக்கியர், இரு திறத்தாரையும் உத்தியோகஸ்தர் நன்றாகப் பழக்கஞ்செய்துகொண்டு, நற்புத்தி சொல்லியோ, கண்டித்தோ, வரவேண்டும்.

இந்திய மகா ஜனங்களில் சாமான்னியமாய் எல்லாரையும், செல்வாக்குள்ளவர்களை விசேஷமாகவும், அனுதாரணை செய்து வருவதாக, பிரிட்டிஷ்துரைத்தன உத்தியோகஸ்தர் மீது பிரியாதுகேட்டு வருகிறது. ஆதலால் புதிதாகவரு

ம் உத்தியோகஸ்தரைப் பழையகாலத்திய அனுபோகஸ்தர் தக்கவழியில் போகும்படி வற்புறுத்துவதன்றி, சர்க்கியூட் போகிறவர்கள் அங்கங்கே செல்வாக்குள்ள பெரிய தனக்காரர்களைப் பார்த்துப்பேசி, அவர்களுடைய சுகதுக்கங்களையறிந்து, தக்கபடி சமாதானப்படுத்திப்போவது அவசியமாம்."

இவ்வாறு இந்தியாகவர்ன்மெண்டார் சொல்லிய விஷயங்கள் உத்தியோகஸ்தருக்குமட்டுமே யன்றி, மகாஜனங்களுக்கும் பொருந்தியவைகளாதலால், அவர்களும் இந்த லக்ஷியத்தை நன்குமதித்து, உத்தியோகஸ்தரை மரியாதையுடன் நடத்தி, மகா ஜனங்களுடைய கஷ்டநிஷ்டூரங்களைப் பயப்படாமலும், கூசாமலும், ஒளிமறைவில்லாமலும், உள்ளபடியுரைத்துத் துரைத்தனம் தருமமார்க்கத்திலே செல்லுமாறு உதவிபுரிவார்களென்று மனப்பூர்வமாய் நம்புகிறோம்.

கர்நூல் புரோவின்ஷியல் கான்பெரன்ஸ்.

மதிராசு ராஜதானியின் க்ஷேமலாபங்களை விசாரிக்கவேண்டி வருஷவாரியாகக்கூடும் இம்மகா நாடு இந்த வருஷம் கர்நூலில் கூடிற்று. சென்ற ஜூன்மீ 9-தேதி முதல் மூன்றுநாள் மகாஜனப்பிரதிநிதிகள் ஒருங்கு கூடி, நமக்குவேண்டிய காரியங்களை முறையே விசாரித்துத் தீர்மானித்தார்கள். ஸ்ரீமான். பி. ஆர். சுந்தர அய்யரவர்கள் சபாநாயகராகி, நடக்கவேண்டியவைகளைச் சுருக்கி உரைத்தார். அவற்றுள் முக்கியமானவை (1) தென் ஆபிரிக்காவில் நம்மவர்கள் படும் கஷ்டங்களை அங்கிருந்து வெளி யேற்றப்பட்ட சில தனவான்களும், ஸ்ரீமான் போலக்கு துரையும், விவரித்து, அந்தக் கஷ்ட நிவாரணத்திற்காகச் செய்யும் பிரயத்தனங்களுக்கு உதவியாகப் பணம் சேகரிக்கப் பட்டது. (2) நமது கோயில்கள், மடங்கள் முதலிய பொதுச் சொத்துகளும், அவற்றின் தஸ்திக்குகளும் கண்டவர்தின்று, கேட்பாரற்றுக் கிடைப்பதை மாற்ற வேண்டுமென்று நாம் பலவருஷங்களாகப் போராடி வருவது அபிமானிகளுக்குத் தெரியும். அதற்குப் பரிகாரம் சீக்கிரமாக வேண்டுமென்று இந்தச்சபையார் ஏகோபித்து ஒப்புக்கொண்டார்கள். (3) வித்தியாப்பியாச விஷயமாகச் சர்க்கார் சமீபகாலத்தில் செய்து வரும் காரியங்கள் க்ஷேமகரமல்லவென்றும், பள்ளிக்கூடங்களில் சம்பளங்களை உயர்த்தியும், பிரைவெட் கலாசாலைகளைப்பலவிதமாக நிர்ப்பந்தித்தும் வருவது நல்லதல்லவென்றும், மகாஜனங்களுடைய க்ஷேமத்தைக்கோரி சர்க்கார்தொழிற்சாலைமுதலிய என்ன உபாயங்களெடுத்தாலும், அவர்களில் பெரும்பாலருக்குச் சாமான்னியமாய் எழுதப்படிக்கத் தெரியாதவரை, இவையொன்றும் பயன்படாவென்றும், இந்தச் சபையார் ஒப்புக்கொண்டார்கள். (4) மற்றபடி இதற்குமுன் இச்சங்கங்களில் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்ட விஷயங்களெல்லாம் மறுபடியொப்புக்கொள்ளப்பட்டன.

இந்தச்சபைக்கு அனுபந்தமாக 'ஆசார விமர்சன சபையும்' வருஷவாரியாகப் பதிவுபோல் கூடிற்று. ஸ்ரீமான் கே. நடராஜ அய்யரவர்கள் அக்கிராசனாதிபதியாகி, நமக்குள் காணும் துராசாரங்களை வருணித்துப் பரிகாரமும் காட்டினார். 'உயர்குலத்தவராகிய' இந்தியர்களுக்குள் காணும் துராசாரங்களில் முக்கியமானவை அனேகமாய் எல்லோருக்கும் தெரியும். பதுமைக்கல்லியாணம், பெண்களுக்குள் கல்வியின்மை, கலியாணச்செலவுகள், வரதக்ஷிணை, பரியம், கணக்கிலடங்காத ஜாதிபேதம், 'இழிகுலத்தவருடைய' கஷ்டநிஷ்டூரங்கள், ஆகிய இவைகளைப்பற்றிக் கேளாதவர் இக்காலத்தில் அனேகமாயில்லை யென்னலாம். ஆதலால் இவையெல்லாம் சீக்கிரம் தொலையவேண்டுமென்று எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். இவ்வருஷம் புதிதாக ஒரு விஷயம் மட்டும் கூடிற்று. தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்கு, நமது நாட்டுக் கூலிகள், ஆணும் பெண்ணும் அப்பாவிகளாகவிருப்



பவர், முறியெழுதிக் கொடுத்துப்போவதும், அவ்வாறு போவதற்குச் சர்க்கார் சம்மதிப்பதும் அதருமமென்றும், அக்கிரமமென்றும் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

வியவசாயச் சங்கங்கள்.

இவ்விஷயமாக நமது நண்பர் ஸ்ரீமான் தாம்ஸன் பாதிரியார் எழுதுகிறார்:—"மகாஜன க்ஷேமத்தை நாடிப் பல காரியங்களாகி வருகின்றன. அவைகளில் "வியவசாயச் சங்கங்கள்" வெகு முக்கியமானவை. ஆனால் இவைகள் இந்தியாவில் இன்னும் வேரூன்றவில்லை. ஏனெனில், இவைகள் செழிக்கவேண்டுமானால், குடியானவர்களே இவைகளை நிர்வகித்து வரவேண்டும். குடியானவர்களுடைய க்ஷேமத்தையே இவைகள் கோரவேண்டும். குடியானவர்களே இவற்றிற்கு மெம்பர்களாகவேண்டும். இந்தியாவிலோ இப்படியொன்றுமில்லை. வியவசாயச் சங்கங்களை ஜமீன்தார்களும், சாவுகாரர்களும், வக்கீல்களும், வர்த்தகர்களுமே விசேஷித்து நடத்திவந்தால், அவைகள் செழிப்பதெப்படி?

அமெரிக்காவில் விசாரித்தால் சங்கதியே வேறாகிக் காணுகிறது. அவ்விடத்திய வியவசாயச்சங்கங்களுக்கு அபாரசக்தியுண்டு. பிரசிடெண்டுமுதல் குமஸ்தாவரை எல்லா உத்தியோகஸ்தரும், பூமியுழுது பயிரிடும் குடியானவருக்கு மரியாதை வைத்து அவர் சொல்லுவதை வெகுமானித்து நடக்கிறார்கள். அவ்விடத்தில் நடமாடும் பணவகைகளிலெல்லாம் குடியானவர் மீது வைக்கும் பணமே அதிகமாக நடமாடி வட்டி விகிதத்தைக் குறைக்கவோ, கூட்டவோ செய்கிறது.

இந்தியாவிலோ, "குடியானவன் வீட்டு அம்மியை அதிகாரி வீட்டுக் கோழி முட்டை உடைத்து விடுகிறது." இதை மாற்ற வேண்டுமானால் ஒரே உபாயம்தான் உள்ளது. இந்தியக் குடியானவர் எல்லா வருக்கத்தவரையும் ஒன்று சேர்த்து, வியவசாய சங்கங்களைப் பலப்படுத்தவேண்டும். ஓங்கோல் பண்டகாக்ஷி வருஷாவருஷம் நடந்துவரும் அழகைப் பார்ப்பவருக்கு இது அசாத்தியமாகக் காணுவதில்லை. இவர்கள் ஒன்று சேர்ந்தால், 'பண்டங்களை'ப் பெருக்கி, வேண்டியவர்களுக்கு நெல்லூர் தினுசுமாடுகளையோ, காளைகளையோ விற்று, பெருத்த லாபமடையலாம்.

கிருஷிகர்கள் மெம்பராகாமலிருப்பது தோஷம்தான். அல்லாமலும், இச்சங்கங்களில் வியாபார முதலில்லாமலிருப்பது மற்றொரு பெரிய தோஷம். மேனாட்டு வியவசாயச் சங்கங்களில் பணம் வேண்டியமட்டிலிருப்பதால், பாலடைக்கட்டி, வெண்ணெய்,முதலிய சரக்குகளை இவைகள் மூலமாகப் பெரும்படியாகத் தயார் செய்து விற்றுவருகிறார்கள். அதனால் முந்தியிருந்த மாதிரி பெண்கள் தயிர்கடைந்து கடைந்து கை சோர்ந்துபோகிற கஷ்டம் இப்பொழுதில்லை. எல்லாம் யந்திரசகாயத்தால் நடக்கிறது. கறவைமாடுகள் நன்றாய்த்தின்று கொழுத்து, பாலும் சாஸ்திர சம்மதமாகக் கொடுக்கின்றன. முன்னாளில் ஆண்பிள்ளைகளுக்குப் பகல் முழுதும் வேலை. பெண் பிள்ளைகளுக்கோ இரவும் பகலும் வேலை. அதெல்லாம் இப்பொழுது மாறி, அநேகமாய் எல்லோருக்கும் எழுதப்படிக்க அவகாசமுண்டாகி யிருக்கிறது. பழைய நாளில் பால், வெண்ணெய், முதலிய சரக்குகள், சாப்பிடுவோருக்குத் தோஷச்சுரம்,க்ஷயம் முதலிய வியாதிகளுக்கிடங்கொடுத்துக் கொன்று வந்தன. இப்பொழுதோ, அந்தச் சப்தமே கேட்பதில்லை.

பழைய நாளில் நகரத்துச்செட்டிகளுடைய பணத்தைக்கொண்டே கிருஷி நடந்ததில், குடியானவர் இவர்களுடைய அதீனமாகிப் பிராணன் போகாமற் கஞ்சிமட்டும் குடித்து வந்தார்கள். இப்பொழுதோகுடியானவர்களுடைய பணம் தான் ரயில்ரோடு போடுவதற்கும், வாய்க்கால் வெட்டுவதற்கும், ஏரி கட்டுவதற்கும் உபயோகப்படுகிறது. இந்தியாவிலும் இப்படி நடப்பது நலமா, அல்லவா, விவேகிகள் சொல்லட்டும்.

இந்தியாவில் வியவசாயச் சங்கங்கள் மாடுகன்றுகளை விருத்திசெய்ய ஆரம்பித்தால், அதனால் இந்திய நகரங்களுக்கு எவ்வளவு உபகாரமென்று நான் சொல்லவே வேண்டியதில்லை. இப்பொழுது நீலகிரியில் உதகமண்டலத்தில் 'பால்' என்று ஒருவஸ்து விற்கிறது. வெளுத்ததெல்லாம் பாலானால், இதுவும் பால்தான். ஆனால் அதில் தண்ணீர் எவ்வளவு, அது எந்தத் தண்ணீர், என்று விசாரித்தால், கெட்ட வேலையாகிவிடும். யாராகிலும் சில விவேகிகள் ஒன்று சேர்ந்து, இவ்விடத்தில் ஒருசங்கம் ஏற்படுத்தி, மாடுகன்றுகளை வாங்கி, முறைப்படி காரியம் நடத்திவந்தால், எல்லாருக்கும் மங்களம் கிடைக்கும். யார்செய்கிறார்கள் ?

தவிர வியவசாயத்தில் பெருங்காரியங்கள் பலர் சேர்ந்துதானாகவேண்டும். அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாகாணத்தில் பூமிக்குள் ஒரு பெரிய ஏரி இருப்பதாகத் தெரிந்தது. ஆனால் அந்த ஜலத்தைக் குழாய்கள் மூலமாய் வெளிப்படுத்துவதென்றால், ஒருவராலாகக்கூடியதல்ல. ஆகவே சங்கங்கள் பலசேர்ந்து, பூமியை மெம்பர்களுக்கு 100 ஏகராவிழுக்காடு சம்பாதித்துக்கொடுத்து, வேண்டியபணமும் உதவிக்காரியமாரம்பிக்கவே, இப்பொழுது அவ்விடமெல்லாம் நெல்விளைந்து, பொன்பொலிகிறது. ஆதலால் இத்தேசத்தவரும் தூக்கத்தைவிட்டு எழுந்து, ஒன்றுசேர்ந்து, கோஆபரேஷன் முறையில் வியவசாயத்தைப் பிரபலப்படுத்தினால், காலக்கிரமத்தில், மற்றையதேசத்துக் குடியானவரைப்போல் இவர்கள் சுகப்படுவதன்றி, அவர்களுக்கும் வேண்டியபடி யுக்தி சொல்லிக்கொடுக்கலாம்.''

இதை விஹாரிணி அபிமானிகள் அனைவரும், விசேஷமாகக் குடித்தனத்தில் அக்கரையுள்ளவர்களும், கவனிக்கவேண்டும். மொத்தத்தில் நமது பாதிரிநண்பர் சொல்லியதை நன்கு மதித்து, அவருடைய லக்ஷியத்தை நன்குணர்ந்தால், அவர் வக்கீல்கள், வியாபாரிகள் முதலியவர்களைக்குறித்துச் சொல்லியது காரமாகாதென்று நாம் உறுதியாய் நம்புகிறோம்.

**மைசூர் யுவராஜாவின் திருமணம்.**

மைசூர் சத்திரபதி மகாராஜாவின் தம்பியாகிய சத்திரபதி கண்டீரவ நரசராஜ அரசு பஹதூர் அவர்களுக்குச் சென்ற ஜூன்மீ 17-தேதி வெள்ளிக்கிழமைதினம் நடந்த கல்லியாண மகோற்சவத்தை அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். அன்றையதினமும் அடுத்த நாலைந்து தினங்களிலும், மைசூரில்கண்ட சம்பிரயங்களை வருணிப்பதற்கு விஹாரிணியில் இடம் முதலிய சௌகரியமில்லாதது 'விசாரிக்கத்' தக்கதுதான். என்றாலும் இரண்டொரு விசேஷங்களை மட்டும் நாம் குறிப்பிடாமலிருக்கவொண்ணாது. முதலாவது, இந்தக்கல்லியாண மகோற்சவத்தைக் குறித்து இந்தியாவெங்கும் பேசியும் எழுதியும் வருகிற அதிசயம். இதனால் மைசூர் ராஜ வமிசத்தினுடைய க்ஷேமாதிசயங்களை இந்தியாவிலுள்ள முக்கியஸ்தரெல்லோரும் தமதாகவே பாவித்து, அந்த வமிசம் மேலுமேலும் தழைக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக ஆசீர்வதித்து வருவது வெளியாகும். இரண்டாவது, இந்தியப்பிரபுக்கள், மகாஜனங்கள் அனைவருடையவும் பிரதிநிதிகளை மகாராஜா அவர்கள் வரவழைத்து உபசரித்துவந்த அதிசயம். அவ்வாறு சென்றவிருந்தினருள் திவான் பஹதூர் ஸ்ரீமான் ரகுநாதராயரவர்கள் ஒருவர். இவ்வளவு விமரிசையாக இதுவரை பாரதவருஷத்திய முக்கியஸ்தரையெல்லாம் வரவழைத்துக் கல்லியாணம் எந்தச் சமஸ்தானத்திலும் நடக்கவில்லையென்னல் சத்தியம்.

யுவராஜா அவர்களுக்குப் பாரியையாகிய சௌபாக்கியவதி கெம்பு செலுவராஜம்மணியவர்கள், 600-வருஷங்களுக் கதிகமாகவே மைசூர் சமஸ்தானத்திற்கு முதன் மந்திரிகளாகவும், சேனாதிபதிகளாகவுமிருந்து வந்த

REGISTRAR OF BOOKS REGISTERED 1910 MADRAS



மைசூர் யுவராஜாவின் திருமணம்



தோர் பெரியதும், புராதனமானதுமான அரச குடும்பத்தவர். மகோற்சவம் வெகு சம்பிரமாக நடந்தேறியதாகமட்டும் சொல்லி நிறுத்தவேண்டியிருக்கிறது.

கல்யாணத்திற்கு முதல்நாள் யுவராஜாவுக்குக் குடும்ப வழக்கப்படி உபநயனம் நடந்தது. மறுநாள் குறித்த முகூர்த்தத்தில் விவாஹமும், அத்துடன் சேர்ந்த காரியாத்திரை முதலிய சடங்குகளும் நடந்தன. பிறகு உருட்டாணி (நலங்கு) முதலியன நடந்து கடைசியாக நாகவல்லியும் அதையனுசரித்து யானைமேல் ஊர்கோலமும் நடந்தன. இதன் பிறகு, வந்தவர்களுக்கெல்லாம் முகமன்கூறி, சால்வை முதலிய மரியாதைகள் செய்து வழியனுப்பினார்கள்.

கல்யாணச் சடங்குகளைப் பார்க்குமிடத்து, சாமான்னிய இந்துக்களுள் காணும் சடங்குகள்தான் மகாராஜாக்களும் அனுஷ்டிப்பவையென்று காணும். ஆனால் ஒவ்வொரு சடங்கும் நடப்பது வெகுதூரம் வித்தியாசப்பட்டுக் காணுவது சகஜம். முக்கியமாக யானைமேல் ஊர்கோலமென்பது வெகு பெரிய உற்சவம். அதைப் பார்க்க வந்திருந்தவர் கணக்கிடமுடியாதவரென்னலாம். சத்திரபதி யுவராஜாவும் அவர் ராணியும், மக்கட்பேறு பிரபலித்து, நீடூழி வாழவேண்டுமென்பது நமது மனப்பூர்வமான பிரார்த்தனை.

**தீக்குச்சி செய்தல்.** இந்தியா கவர்ன்மெண்டு பாரஸ்டு இலாகா உத்தியோகஸ்தர் ஒருவர் இந்தக் கைத்தொழில் இந்தியாவில் பிரபலிக்கவேண்டி ஆலோசித்ததில், இந்தியாவில் பலபிராந்தங்களிலும் கானல்களில் வளரும் மரவகைகளைக் குச்சியாகவேண்டியயோக்கியதை யுண்டாவென்று பரிக்ஷித்து, இன்ன இடங்களில் இவையகப்படுகின்றன வென்றும், ஆகையால், இன்ன இடங்களில் வேலையாரம்பிக்கலாமென்றும் கண்டு ஒரு ஜாப்தா தயார் செய்திருக்கிறார். அவைகளில், கோயம்புத்தூர் ஜில்லாவில் உடுமல்பேட்டையும் ஒன்றாகக் காணுவதைக் கண்டு சந்தோஷிக்கிறோம். தீக்குச்சி நல்ல சரக்காக மட்டுமிருந்தால், இந்த ராஜதானியில் மட்டுமே எத்தனையோ லக்ஷம் ரூபாய்க்குச் செலவுண்டு. ஆதலால் காலதாமதமின்றி, உடுமல்பேட்டை மகா ஜனங்களும், சுற்றுப் பக்கங்களில் பிழைக்கும் வழி யறிந்தவர்களும், சீக்கிரத்தில் இது விஷயமாக முயன்று ஆரம்பம் செய்வார்களென்று நம்புகிறோம். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவதற்கு இதுவரை என்ன நியாயமிருந்தாலும், இனிமேல் இராதென்பது நிச்சயம்.

சமீபகாலத்தில் லாகோரில் ஒருபெரிய கம்பெனி உண்டாகிறதென்றும், அதில் தினமொன்றுக்கு 700-குரோஸ் பெட்டிகள் உண்டாகுமென்றும் கேட்டோம். ஆனால் அது யாரோ ஜர்மானிய புத்திமான் ஒருவர் முயற்சியென்று தெரிகிறது. அதனால் நமக்குப் பூராவாகப் பிரயோஜனமில்லை யாதலால், நம்மவர்கள் எப்படியாவது முயன்று, தொழில் கற்றவர்களை வரவழைத்து, வெகு அவசியமான இந்தச் சரக்கை இந்தத் தேசத்தில் எங்கெல்லாம் கூடுமோ, அவ்விடங்களில் உற்பத்தியாக்குவார்களென்று நம்புகிறோம்.

**ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு சுவாமிகள்.** ஸ்ரீ சிருங்ககிரி குருபீடத்தைத் தற்காலம் அலங்கரித்து, வித்தை, விநயம் முதலிய குணங்களில் வெகுதூரம் சிறந்து, கீர்த்தி பெற்றுவிளங்கும்இந்தச்சுவாமிகள் காலடிப்பிரதிஷ்டை கழிந்தபின், கோளத்தில் அங்கங்கே தங்கி மரியாதை பெற்றுக் கடைசியாய்ச் சென்ற ஜூன்மீ ஆரம்பத்தில் கோயமுத்தூர் வந்து ஒருபக்ஷம் தங்கிச் சிஷ்ய ஜனங்களால் அவரவர் சக்தியை யனுசரித்துப் பாதபூஜை முதலிய மரியாதைகள் பெற்றுப் போனார்கள்.

இதில் விசேஷ மொன்றுமில்லை யென்னலாம். ஏனெனில் மடாதிபதிகளுக்கு ஊரூராக விஜயம் செய்வதும், சிஷ்ய ஜனங்களிட

மிருந்து பலவகையானும் பணத்தைப் பறிப்பதும், வெகு நாளைய தருமமாகி வந்திருக்கிறது. இவ்விஷயத்தில் இந்த மடத்திற்கு விசேஷ அபக்கியாதி இல்லை யென்றாலும், கேரளத்தில் அனேகருக்குச் சுவாமிகளுடைய பரிவாரங்களால் சிரமமுண்டானதாகக் கேட்டு விசாரிக்கிறோம். நிற்க.

சுவாமிகள் விஷயத்தில் நாம் மேற்சொல்லியபடி வித்தை, விநயம் முதலிய பலசுபகுணங்கள் நிறைந்திருப்பதால், போனவிடங்களிலெல்லாம் வேண்டியபடி மரியாதை நடப்பது அதிசயமல்ல. முன்னொருமுறை நாம் இவ்விஷயமாய் எழுதியதில், சுவமதஸ்தர் மட்டுமேயன்றி விசிஷ்டாத்துவைத முதலிய பரமதஸ்தரும், சுவாமிகள் விஷயத்தில் ஒரேமாதிரி பக்தி வைத்திருப்பதாகச் சொன்னோம். அதுவும் அதிசயமாகக் காணவில்லை. ஸ்ரீ பகவத்பாத ஆசாரிய சுவாமிகள் அத்வைத மதஸ்தாபன விஷயமாய்ப் பிரவசனஞ்செய்தும், பாஷியாதிகளைப் பிரசுரித்தும் வந்தபின், அந்தப்பரம்பரையில் மடத்துக்கணக்குப்படி நாளதுவரை 33 ஆசாரிய புருஷரிருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தச் சங்கியையில் தற்காலமுள்ள சுவாமிகளைப்போல வித்தை, ஆசாரம், விநயம் முதலிய குணங்கள் கூடிப்பெருமை பெற்றவரெத்தனை பெயரென்றால், ஐந்து அல்லது ஆறு பெயர்கூடத் தேறாதென்று காணுகிறது. இந்தமடம் மட்டுமேயன்றி வேறெந்த மடங்களில் விசாரித்தாலும், அவ்விடத்தில் ரூபாய், அணா, பைசாவை யொழித்து வேறு பிரஸ்தாபம் விசேஷமாய்க்கேட்பதில்லை. ஆதலால், சுவாமிகள் பணவிஷயமான பேச்சைக் கட்டுடன் ஒழித்து, வாஸ்தவமான அர்த்தவிசாரத்திலும், கேட்பவருக்கு ஹிதத்தை உபதேசிப்பதிலும், காலத்தைக் கழித்து வருவது ஒரு பேருபகாரமென்பதில் ஐயமேயில்லை. ஏனெனில் சாமான்னிய தருமங்களையும், நம்போலியர் சொல்வதைவிட, பலவித மகிமைகளும் நன்கு வாய்ந்த குருபீடாதிபதிகள் உபந்நியசிப்பதில் பலன் எத்தனையோ மடங்கு அதிகமென்பது பிரத்தியக்ஷம்.

ஆதலால் இவ்வாறு தாம் போகுமிடங்களிலெல்லாம், சாமான்னியருக்குச் சாமான்னிய தருமங்களை உபதேசித்து வருவதில் சுவாமிகளுக்கும், கேட்போருக்கும், திருப்திகரமென்றே நாம் நம்பியிருக்கிறோம்.

ஆனால் பிரவசன விஷயங்களை யோசிக்குமிடத்துக் கொஞ்சம்போல அபிப்பிராயபேதத்திற்கு இடங்கொடுப்பதைச் சுவாமிகள் மன்னிக்கவேண்டும். மதம், ஆசாரம் இவைகளைப் பற்றித்தான் சுவாமிகள் பேசிவரவேண்டும். என்றாலும், இவ்விரண்டு வகையில் உள்ள அம்சங்களைச் சுருதிபூர்வகமாய் உதகரிப்பது அவர்களுடைய முக்கிய தர்மமென்பது வாஸ்தவமாகிலும், யுக்தி, அனுபவமாகிய இரண்டும் காலதேசவர்த்தமானங்களையனுசரித்தே போவது நலம். ஆதலால், தற்காலம் ஆகவேண்டியவைகளான வித்தியாப்பியாசம், அன்னிய தேசயாத்திரை, விவாகவிஷயம், பெண்கல்வி, ஒரேஜாதியில் காணும் பரஸ்பரபேதங்கள், முதலியவைகளைக் குறித்துச் சுவாமிகள் கோயமுத்தூரில் பேசியபடி பேசி வருவதில் அதிகமாகப் பிரயோஜனமிராதென்றே நம்மில் படிப்பும், அனுபவமுமுள்ள பெரியோர் அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். அதுநியாயமென்றே நமக்கும் காணுகிறது. சுவாமிகளுட்பட, மானுஷியமாயுள்ள யாருக்கும் சர்வக்ஞத்துவம் கிடையாதாதலால், எந்த விஷயத்தில் அவரவர் பரிசிரமப்பட்டிருக்கிறார்களோ, அதைப்பற்றியே பிரவசனஞ் செய்வது உத்தமம். சுவாமிகளுடைய ஸ்தானத்திலிருந்து ஸ்ரீ பகவத் பாத சுவாமிகளுடைய சித்தாந்தத்தை யனுசரித்து, சாமான்னியமாய்ப் புகட்டக்கூடிய தர்மங்கள் அபாரமாயிருப்பதாலும், நிராகேக்ஷபகரமாயிருப்பதாலும், அவற்றை விஸ்தரிப்பதும், இம்மாதிரி கேவலம் லௌகிகமாயிருக்கும் விஷயங்களை, சாஸ்திரம் படித்து, லௌகிகத்[illegible]

THE REGISTRAR OF BOOKS
REGISTERED
17 SEP 1910
MADRAS.



ஸ்ரீமான் சாரத்குமார் மல்லிக்



அனுசரித்து வந்திருக்கும் கிரகஸ்த சிஷ்யருக்கு ஒப்புவித்துவிடுவதும், யுக்தமென்று நமக்குக் காணுகிறது. சுவாமிகளுக்கும் அது சம்மதமாகக் காணுமென்றே நம்புகிறோம்.

தவிர இதுவும், இதுபோன்ற வேறிரண்டொரு மூல தோஷங்களும் பரிகாரமாக வேண்டுமானால், அவைகளைத் தீர விசாரித்துப் பழைய அனுபவம், ஐதிகம் முதலியவற்றை யனுசரித்து மடவிஷயமாகச் சிலதிருத்தங்கள் ஆகவேண்டும். அதற்கு இம்மாதிரி சற்குண சம்பன்னராகிய மகான் அனுகூலமாகவேயிருப்பாரென்று நமக்கு நிச்சயமிருப்பதால், கூடிய சீக்கிரத்தில் வேறொரு சந்தர்ப்பத்தில், அதை விவரிப்பதாக யோசித்திருக்கிறோம். முக்கியமாக அவைகள் மடத்துக்காரியங்களை விசாரிப்பதிலும், பாம்பரை கிரமமாக நடப்பதிலும் ஆகவேண்டிய விமர்சனங்களாம். இவை இந்த ஒரு மடத்தில் காணுமாகில், வேறு மடங்களுக்கும் காலக்கிரமத்தில் வழி பிறப்பது நிச்சயம். அவ்வாறு விமரிசையாகி நடப்பதில் கிடைக்கக்கூடிய பலனைப்பற்றியோ நாம் பேசவேண்டியதேயில்லை.

கல்கத்தா தேசீய ஆயுர் வேதவித்தியா சாலை.

இப்பொழுது கொஞ்ச காலத்திற்குள் ஏற்பட்டிருக்கும் இந்தக் கலாசாலையையும், அதை யேற்படுத்தி நடத்தி வருபவருக்கிருக்கும் லக்ஷியத்தையும், நமது ஜனங்கள் அறிய வேண்டுகிறோம். பங்காளத்தில் தான் அற்புதங்களெல்லாம் காணுவது போலும். ஒருபக்கத்தில் வெடிகுண்டு போன்ற வேண்டாக்காரியங்கள் கண்டாலும், மற்ற பக்கத்தில் இம்மாதிரியான உத்தம காரியங்களும் அங்கேதான் நடந்துவரக்கூடுமென்று காணுகிறது.

ஏனெனில் இந்த வைத்திய சாலையில் மேனாட்டு முறையில் கைதேர்ந்து, வெகுவருஷங்களாய் சர்க்கார் தரபில் உயர்ந்த பதவியிலுழைத்துக் கீர்த்திபெற்ற பங்காள வைத்திய சிரோன்மணிகள் தருமார்த்தமாகப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதா யேற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதென்றால் சாத்தியப்படாத காரியம். இப்படியிருந்தும், கட்டிடம், கருவிகள் முதலியவற்றிற்கு எத்தனையோ லக்ஷம் வேண்டிவந்ததில், அந்தத்தொகை சிரமமில்லாமல் வசூலாகிக் காரியமு மாரம்பமாகிவிட்டது. டாக்டர் ஸ்ரீமான் சாரத்மல்லிகர் அத்தியக்ஷராகி நடத்தி வருகிறார். மேனாட்டு ரணவைத்தியமும், தேசீய சிகிச்சையும் இரண்டும் ஒட்டி வருவதால், இதில் படித்துத்தேறி வரும் வைத்தியர்களுக்கு இனி வெகு நல்ல காலமிருப்பதாக நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம். நமது பிராந்தத்திலிருந்தும் சில குமாரர்கள் போயிருப்பது நற்குறியாம்.

இந்துஸ்தானத்தில் இவ்வாறு வைத்தியம், கலைகள் முதலிய பலவகை வித்தைகளும், தொழில்களும், பிரபலிக்க வேண்டிப் பொருளுதவியும், தேகப்பிரயாசையும் வேண்டிய போது, வேண்டியமட்டில் கிடைக்கவும், இந்தக்கர்ம பூமி சங்கதி எப்படியிருக்கிறது? நாலுபெயரும் சொன்னப்படிதான். அம்மாதிரிப்பெரிய கைகளுமில்லை. சுமாராயிருப்பவருக்கு இப்படிப்பட்ட தரும சிந்தையுமில்லை. கனம் ஜட்ஜி ஸ்ரீமான் வி. கிருஷ்ணசுவாமி அய்யர் ஒருவர்தாம் நாளதுவரை உப்புக்கல் போல் தப்பித் தன்னாலியன்றவரை தருமம் இவ்வழியில் செய்திருப்பவர். அவருடைய காற்று இன்னும் யாருக்கும் அடிக்கவில்லை. கல்கத்தாவை ஒட்டியாவது ஏதாகிலும் சில்லரைப் பிரபத்தனம் நடந்தால் நலம். அதற்குத் திரவியமும், ஜன சகாயமும் வேண்டும். எங்கே போகிறது? தெரியவில்லை. பங்காளத்திலிருப்பவர்போல் ஜமீன்தார்களில்லையென்பது வாஸ்தவந்தான். ஆனால் இருப்பவர் தங்களாலியன்றதையெல்லாம் செய்தாகிவிட்டதாவென்பதை நாம் ஆலோசிக்கவேண்டும். அல்லாமல், மேனாட்டு முறையில் கைதேர்ந்த டாக்

டர்களில், இங்கிருப்பவர் எத்தனை பெயர் டாக்டர் ஸ்ரீமான் சரத்மல்லிகர்போல தருமத்திற்கு உழைக்கத்தயாரென்பது நமக்குத் தெரிந்தபாடில்லை. நற்காலம் எப்போது வருமோ அறியோம்.

**மற்றொரு பிரும்ம சுவருபிணி கேஸ்.**

கோயமுத்தூர் ஜில்லா கரூர் தாலூகாவில் மாஜிஸ்திரேட்டாக இருந்த வியாசராவ் என்னும் பிராமணரொருவருக்கு லஞ்சம் வாங்கியது முதலிய குற்றங்களேற்பட்டு 18-மாசம் தண்டனையாகிவிட்டது. உத்தியோக தருமத்தை மறந்து, சத்தியம் முதலிய குணங்களையும் கைவிட்டுத் தப்புவழியில் அனேகர் பிரவேசிப்பது நிசமாகையாலும், அவரனைவரும் அகப்படுவதில்லையாதலாலும், அகப்பட்டவர்களை சிக்ஷிப்பது கிரமம்தான். ஆனால் இந்தக்கேசில் வேறு சில விசேஷங்களிருப்பதால், அவைகளை அபிமானிகள் அறியவேண்டுகிறோம்.

தண்டனையடைந்த வியாசராவ் என்பவர் நல்ல குலத்திலுதித்தவர். அவருடன் பிறந்தவர்களும், அவருடைய தகப்பனார், பாட்டனார் முதலியோரும் சர்க்கார் தரபிலோ, வேறு வகையிலோ நல்ல பதவிகளைப்பெற்று, மரியாதையாகவும், வாகினியாகவும் ஜீவித்துவந்தவர்கள். வியாசராயரும் சுமார் 1900-ம்ஹு வரை பழைய சம்பிரதாயப்படியே யிருந்து, ஸ்நானம், நித்தியவிதிகள் முதலிய காரியங்களில் சிரத்தையுடனும், தமையன் முதலிய பெரியோர்களிடத்தில் பக்தியுடனும், நல்ல மாதிரியாகவே காலங்கழித்து, சர்க்கார் ஊழியத்திலும் வெகு நாணயமாக நடந்துவந்தவர்.

பிறகு மேற்சொல்லிய வருஷத்திலோ, அல்லது ஏறக்குறைய அந்தக் காலத்திலோ, வியாசராயருக்குக் கிரகணம் பிடித்தது. அதாவது கோயமுத்தூருக்குச் சுமார் 8-மைல் தூரத்தில் 'விளாங்குரிச்சி' யென்கிற கிராமத்தில், சென்ற 30-ஹு காலமாக வேதாந்திவேஷம் பூண்டு, யோகம் முதலிய செப்பிடு வித்தைகள் மூலமாய்ச் சில புத்திமான்களையும், பல மூடர்களையும் கைவசமாக்கிக்கொண்டு, எல்லாரையும் காணிக்கை சமர்ப்பிக்கச் செய்து, வரவுசெலவு விஷயத்தில் வெகு சிரத்தையாக இருந்துவரும் தட்டானொருவனுடைய வலையில் இவரும் அகப்பட்டார். அது முதல் குருபக்தி வெகுவாய் முற்றி, சம்பாத்தியத்தில் ஒரு பகுதியைக் கெடுத்தவறாமல் மணியார்டர் செய்து, சமயம் கிடைத்தபோதெல்லாம் சுவாமியார் சன்னிதிக்கு ஓடியும், உற்றார், உறவினர், சுற்றம், பந்து, பிள்ளை, பெண் முதலிய யாரையும் பக்கத்தில் அணுகவொட்டாமலும், அவர்களுடைய க்ஷேமலாபத்தைக் கவனியாமலும், வந்தவர்களை வெருட்டியும், பெரியாரை யிகழ்ந்தும், நித்தியவிதிகளை மறந்தும், வந்து கடைசியில் உத்தியோகதருமத்தையும் கைவிட்டு இந்தக் கதியானார். வேறு அனேக உத்தியோகஸ்தரும் இவ்வாறு போஸ்து (அபின் செடிக்கொழுந்து) தின்று, புத்தியை யிழந்து, பல அனர்த்தங்களுக்கு இடமுண்டாக்கிக்கொண்டு திரிகிறார்கள்.

அனேகம் மோசங்களை நிறுத்தச் சட்டமேற்பட்டிருந்தும், சுமுகம் அய்யர், இந்தத் தட்டான், முதலிய பெருமோசக்காரரைக் கண்டிக்கச் சட்டமொன்றும் காணவில்லையே யென்பது சாதுக்கள் சங்கடப்படவேண்டிய விஷயம். ஆனால் விளக்கைப் பிடித்துக்கொண்டே கிணற்றில் விழுபவரைத் தடுக்க யாரால் முடியும்? ஓ விவேகிகளே, இனியாகிலும் புத்தியாய்ப் பிழையுங்கள்.



## கிராமப் பாங்குகளுக்குள்ள தசை

எடிட்டர்

வைகாசி மாதத்திய விஹாரிணியில் இவ்விஷயமாய் ஒரு வியாசம் மொழி பெயர்த்தோம். அதில் கிராமங்களுக்கு முன்னிருந்த தசையும், இனிவரக் கூடிய தசையும் ஏதோ ஒருவாறு கண்டிருந்த போதிலும், சாமான்னியருக்கு அனேக அம்சங்கள் தெரியாதது கொண்டு, அதை யனுசரித்தே கொஞ்சம் விரிவாக நாம் இந்தச் சஞ்சிகையிலும், வேண்டுமானால் அடுத்த சஞ்சிகைகளிலும், எழுதுவதாக உத்தேசித்திருக்கிறோம். பிரிட்டிஷ் ராஜாங்கம் ஏற்படு முன்னும், அது ஏற்பட்டு வந்த 19-ம் நூற்றாண்டு ஆரம்பத்திலு முண்டாகிய மாறுதல்களை முதன் முதல் விளக்குவோம்.

புராதனமாக, அனேகமாயிரம் வருஷங்களாய், இந்தியாவில் பொதுக்காரியங்கள் எப்படி நடந்து வந்திருக்கின்றன, என்று விசாரித்தால், கிராமத்தை மூலாதாரமாகக் கொண்டு தான் என்று தைரியமாய்ச் சொல்லலாம். இந்தியா படத்தை விரித்துப்பார்த்தால், இக்காலத்திலும் அப்படியேதான் எங்கும் கிராமமயமாகக் காணுகிறது. ஆனால் பழையநாளில் தலைமுறை தலைமுறையாகக் கிராமங்களில் எத்தனையோ ஆயிரம் வருஷம் விசேஷமாறுதலில்லாமல் நடந்துவந்த மரியாதைகள் எல்லாம், சென்ற நூறுவருஷத்திற்குள் மாறிப்போயினவென்பது கொஞ்சம் யோசிப்பவர்களுக்குக் காணும். அப்படி மாறுவதற்குச் சில விஷயங்களில் சர்க்காரும், சிலஅம்சங்களில் நாமும் காரணம். இருதிறத்தாரும் வேண்டுமென்று ஒரு கெடுதலும் செய்தவர்களல்லர். நலத்தை யெண்ணியேதான் ஒவ்வொரு காரியமும் நடந்தது. ஆனால் அநேக காரியங்களுக்குப் பலன் இன்னவையென்பது முன்னடிச் சொல்லக் கூடாமலிருப்பதால், கிராமங்கள் விஷயத்திலும் அப்படியேயாயின. இரண்டொரு உதாரணம் இதை விளக்கும்.

முன்னாட்களில், கிராமத்திற்குரிய சகல காரியங்களும் கிராமப் பஞ்சாயத்திலும், கிராமச்சாவடியிலோ, மரத்தடியிலோ கூடும் மகா ஜனசபைகளிலும், பேசித் தீர்மானமாகும். சர்க்கார் தீர்வையைக் கிராமத்தார் தங்களுடைய சிப்பந்திகளைக்கொண்டே வசூல் செய்து மொத்தமாகக் கஜானாவில் செலுத்துவார்கள். கிராமத்தில் ரிவினியூ விஷயமாகவும், தாயபாகம் முதலிய விஷயமாகவும் நடக்கும் விவகாரங்களெல்லாம் பெரியதனக்காரருடைய தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும். கிராமப் போலீஸூம் அப்படியே.

இவ்வாறு முக்கிய காரியங்களெல்லாம் கிராமத்தாரைப் பொறுத்தேயாகி வந்ததில், ஒருவருக்கொருவர் தாக்ஷிண்ணியப்படவேண்டியதும், ஒருவரையொருவர் அனுசரிக்கவேண்டியதும் நியமமாயிற்று. எல்லோரும் ஒருமித்தேயிருந்து தீரவேண்டியதுகொண்டு, கக்ஷிகள் வலுக்க நியாயமின்றி யிருந்தது. அப்படியேதாகிலும் வலுப்பதானாலும், வேற்றார் உபத்திரவித்தாலும், அதற்குச் சர்க்கார் உதவி வேண்டுவதுண்டு. ஆனாலிது வெகு அபூர்வம்.

பிரிட்டிஷ் துரைத்தனமேற்பட்டது முதல் விசாரித்தாலோ, சுமார் நூறு வருஷமாக இந்தியாவெங்கும் ஒரே விதமான மாறுதல் கிராமங்களிலுண்டாகிவந்தது. மேற்கண்ட விஷயங்களிலெல்லாம் ஒவ்வொன்றாகச் சர்க்கார் உத்தியோகஸ்தர் பிரவேசித்து நடத்தத் தலைப்பட்டார்கள். ஆகவே, கிராமத்தாருக்கும், கிராமப் பஞ்சாயத்திற்கும், கிராமச்சாவடிக்கும் மகிமை குறைந்தது. இவைகளைக்கெடுக்கவேண்டுமென்பதுசர்க்காருடைய எண்ணமல்லவென்று முன்னமே நாம் பேசியிருக்கிறோம். அக்காலத்திய உத்தியோகஸ்தர் தங்களுக்கு நலமென்று கண்டதை யெல்லாம் ஊர்ஜிதப்படுத்தி வந்ததில், அவற்றின் துர் லக்ஷணங்கள் இப்பொழுது கொஞ்சகாலமாகத்தான் நன்றாகக் கண்டு

வருகின்றன. சர்க்காருடைய சக்தி அபாரமாதலாலும், சட்டம் முதலியன தரும மார்க்கமாயிருந்ததாலும், துரைத்தனஞ் செய்பவரெல்லாம் புத்திமான்களும்,யோக்கியருமாதலாலும், இந்த மூலமாய் நடக்கும் காரியங்களுக்குக் குறைவும் இருப்பது சாத்தியமென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. ஆகவே கிராமத்தாருடைய அதிகாரம் சிறிது சிறிதாக எங்குமில்லாமற் போய்விட்டது.

ஜனங்கள் இதை வேண்டியதற்கோ ஒருகாரணம் முக்கியம். தொன்றுதொட்டு வந்திருந்த கிராமப்பஞ்சாயத்து முதலிய சாதனங்களுக்கு, அவைகளை அடக்கியாளும் தருமதுரைத்தனம் வலுத்திருந்தவரை குறைவொன்றுமிருக்கவில்லை. சேர சோழ பாண்டியரோ, பல்லவர்களோ, நாயக்கன்மாரோ, மகம்மதிய நவாப்புகளோ, யாராகிலும ஓர் கைவலுத்த அதிகாரியிருந்து இவைகளை யடக்கியாளும் வரை, இவை நேர் வழியிலேயே போயின. பிறகு, பதினெட்டாவது நூற்றாண்டில், தேசமெங்கும் குழப்ப முண்டாகி, அதிகார மின்னவிடத்தில் தான் நிலைபெறுமென்று சொல்லுவதற்கில்லாமற் போகவே, தடியெடுத்தவனெல்லாம் தண்டற்காரனாகிவிட்டான். ஊரில் கக்ஷிகளதிகரித்துப் பெரியதனக்காரருடைய வழக்குகள் முற்றிப்போயின. பஞ்சாயத்துகள் தத்தளித்து, கைவலுத்தவன் காணியாக நியாயங்களைப் பைசலாக்கி வந்தன. ஆகவே இந்த அநியாயம் எப்போது தொலையுமென்றும், தருமதுரை யெப்போது வருவாரென்றும், கிராமத்தவர் காத்திருந்தார்கள். இப்படி யெங்கே பார்த்தாலும்,

> கொடுங்கோல் வேந்தன் குடிகள்போலப்
> படுங்கதிரமயம் பார்த்திருந்தோர்க்குப்
> பன் மீன்றனையொடு பாற்கதிர் பரப்பித்,
> தென்னவன் குலமுதற் செல்வன்றோன்றி,

யென்றபடி பிரிட்டிஷ் துரைத்தனமும், அத்துடன் மகா ஜனங்களுக்குக் கலகமுதலிய இடைகள் நீங்கி அதனாலுண்டாகும் நற்பயனும் கிடைத்தன. 1858-ம் ௵த்திய மகா சாஸனம்போன்ற துரைத்தன நீதியைப் படிப்பவருக்கும், கேட்பவருக்கும், ஆனந்தமுண்டாவதற்குக் கேட்பானேன். ஆதலால் ஜனங்களெல்லாருக்கும் இம்மாதிரிச் சர்க்கார் கிடைத்ததற்காகக் கடவுளை வாழ்த்தவும், அவர்கள் நியமனப்படி நடக்கவும் உற்சாகமுண்டாயிற்று. ஆகவே பழைய வழக்கங்களெல்லாம் சிறிது சிறிதாக மாறிப்போயின. ரிவினியூ தகாரர்களெல்லாம் கலெக்டர் முதலியவரிடத்திலும், அடிதடி வழக்குகள் மாஜிஸ்டிரேட்டுகளிடத்திலும், சிவில் வியாச்சியங்கள் முன்சிபு முதலிய பெரிய கோர்ட்டுகளிலும், பைசலாகி வந்தன. வக்கீல்களும் சட்டங்களும் பலத்துவர, கக்ஷிகளும் பலத்து வந்ததில், ஊரில் பெரியதனமென்பது இல்லாமலே போய்விட்டது. ஏரி, வாய்க்கால், குளம், முதலியவற்றின் மராமத்துகளும், பாசன முறைகளும், ஒரு டிபார்ட்மெண்டுக்கு அதீனமாகிச் சாஸ்திர ரகசியந் தெரிந்த சிலர் கையுளடங்கிப்போக, அவ்விஷயத்திலும் கிராமக்கட்டுப் பிரிந்தது.

ஆனால் இவைகளையெல்லாங்கொண்டு இந்தப் பிரகிருதத்திற்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லையென்னலாம். என்றாலும் இவற்றையனுசரித்தே பத்திலொன்றாக நமது விஷயமும் அடங்குவதுகொண்டு இவற்றைச்சுட்டிப் பேசநேரிட்டது. அதாவது கிராமவாசிகளாகிய குடித்தனக்காரருள் வறுமையும், கடனும் அதிகரித்து வந்ததாகிய துர்லக்ஷணமாம்.

கிஸ்து பழையகால முறைப்படி மகசூலில் ஏதோ ஒரு பகுதியிருக்கும்வரை குடியானவனுக்கு வெள்ளிப்பணம் விசேஷமாகவேண்டியிருக்கவில்லை. குடும்பச் செலவிற்காகவோ, விவசாய முட்டுவழிக்காகவோ,பணம் வேண்டியிருந்தால், 'செல்லுஞ் செல்லாத்திற்குச்செட்டியார்' இருந்தார். அவரிடத்தில் கடன் வாங்குபவரும், கொடுப்பவரும், பரஸ்பரம் நன்றா



கத் தெரிந்தவர்களாதல் கொண்டு லேவாதேவி மாமூலை யனுசரித்தே நடந்து வந்தது. வட்டி யதிகம் வேண்டுமென்றாலும், வேறு ஏதாகிலும் புதுமைசொன்னாலும், அதற்குப்பதிவுண்டோவென்று கேட்பார்கள். பதிவுக்கு விரோதமாக நடப்பதால் செட்டியாருக்கு இருவகை பயமுண்டு. குடித்தனக்காரர் ஓட்டாண்டிகளாவதில், காலக்கிரமத்தில் தன் தொழிலுக்கு லோபம் வந்துவிடுமென்னும் பயமொரு புறத்திலும், அப்படி யெல்லோரும் ஓட்டாண்டியானால் தன்மேல் அவர்களுக்கு க்ஷாத்திரமுண்டாகி, அதனால் தனக்கு ஏதாகிலும் பிராயச்சித்தமுண்டாகிவிடுமென்னும் பயம் ஒரு புறத்திலுமிருந்து வந்ததால், அவர் மிதமீறிப்போவதில்லை.

பிரிட்டிஷ்துரைத்தனமேற்பட்டபின் கிஸ்து வெள்ளிப்பணமாகவே செலுத்தவேண்டி வந்ததன்றிச் சாவுகாருக்குப் பழைய பயமும் விட்டுப்போயிற்று. ஏனெனில் புதுச்சட்டங்களுக்கும், கோர்ட்டுகளுக்கும், வக்கீல்களுக்கும் பிராபல்லியமதிகரிக்க அதிகரிக்க, மாமூலுக்கு வலிமை குறைந்து வந்து, எந்த அக்கிரமம் நடந்தாலும் அதற்குப்பழையபடி பிராயச்சித்தம் நடப்பதுகூடாமற்போயிற்று. ஒருசில்லரை விஷயம் இதைநன்கு விளக்கும். குடியானவனுக்கு மகசூல் ஒரு மாசத்திற்குள்ளாக வீடு வந்து சேரலாம். என்றாலும் கிஸ்துக்காகவோ, வேறு அவசர நிமித்தமாகவோ பணம் அந்த க்ஷணமே வேண்டும். சாவுகார் தவிர வேறு யாரும் பணம் படைத்தவரில்லை. ஆதலால் அவர்கேட்பதைக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் தான் பணம் பெயரும். திம்மனுக்கு இருபது கண்டகம் ராகி இன்னும் ஒரு மாதத்தில் கிடைக்கும். அப்போது ராகி விலை கண்டகம் 6-ரூபாய்க்கு விற்கலாம். ஆனால் இப்போது திம்மனுக்கு 15-ரூபா வெகு அவசரம். சாவுகாரைக் கேட்டால், அறுவடையானவுடன் தலையுதிராக 5-கண்டகம் அளப்பதானால் கொடுப்பதாகச் சொல்லுகிறார். கொடுத்துத் தொலைக்கவேணும். நிவிருத்தியில்லை. இப்படிச் சிறு தொகை வாங்குவதை விட்டுப் பெருந்தொகையாக ஏதாகிலும் வாங்கிவிட்டாலோ, காலக்கிரமத்தில் பூமி காணி முதலிய சகல சொத்தையும் தோற்றுவிட்டுக் கோவணாண்டியாய்ப்போவது அனேகமாய் நிஷ்கரிஷைதான். இப்படியாகவே, இந்தியா தேசமெங்கும் மொத்தத்திலும், தக்ஷிணமேட்டுப் பிராந்தமாகிய பம்பாய் முதலிய சில பிரதேசங்களில் விசேஷித்தும், சாவுகார் கைவலுத்துக் குடியானவர் க்ஷீணித்து வந்தார்கள். இதுதான் பூர்வகதை சங்கிரகம்.

இது சர்க்காருக்கு விசதமானவுடன் பரிகாரம் தேட வேண்டியது அவசியமாயிற்று. மூன்று விதமாக இதற்கு உபாயம் விசாரிக்கப்பட்டது. முதலாவது பூமியைக் கிரய விக்கிரயம் செய்வதில் ஏற்படக்கூடிய நிர்ப்பந்தம். இப்பொழுது நம்மில் கிரயம் முதலியவற்றிற்கு சாசனம் பிறப்பதானால், அதில் இம்மாதிரி வாசகங் காணுவது சகஜம். அதாவது, இன்ன உடைமையை வாங்கிக் கொள்பவர், "தானாதி விக்கிரயங்களுக்கு யோக்கியமாய், புத்திர பௌத்திர பாரம்பரியமாய், ஆசந்திரார்க்கம்" அனுபவித்துக்கொள்ள வேண்டுமென்பது. இதைக் கொஞ்சம் நிர்ப்பந்தித்து, கிரயவிக்கிரய மென்பது உடைமைக்காரர் இஷ்டம் போலிருக்கக் கூடாதென்றும், அப்படியேதாவது பூமியைக் கொடுப்பதும் வாங்குவதும் அவசியமானால், குடித்தனக்காரருக்குள்ளாகவே அந்த வியாபாரம் நடக்க வேண்டுமல்லது சாவுகார், வக்கீல் முதலியோருக்கு விற்கக்கூடாதென்றும், சட்டம் ஏற்படுவது நலமென்று ஒரு கக்ஷியாருடைய வாதம்.

காரணம் சுலபமாய் விளங்கும். வாங்குபவர் குறைந்துவந்தால் பூமிக்குக் கிராக்கி குறையும். குறைந்தால் விற்க எண்ணமுள்ளவர்கள் அவ்வளவாகத் தீவிரப்படமாட்

டார்கள். பூமியை அடைவுவைத்துப் பணம் வாங்குவதும் மட்டுப்படும். இப்பொழுதிருக்கிறபடி, குடியானவருக்குப் பூமியை அடைத்துக் கடன்படுவதும், பிறகு விற்றுவிடுவதும், சுலபமாயிருக்கிறபடியாலும், சாமான்னியமாய் அவர்களுக்கு முன்யோசனை யென்பது விசேஷமாயில்லாததாலும், ஒரு குடியில் ஒரு பூமி இரண்டு தலைமுறை தாங்குவதுகூட சிரமமாகக்காணுகிறது. தவிர இந்தச்சாதியில், எதையாவது மீத்துவைப்பதும், வியாதி, மூப்பு முதலிய காலத்தில், உதவும்படி சேர்த்துவைப்பதும், எக்காலத்தும் இல்லை. இந்த வருஷம் நன்றாக விளைந்தால், அதைக்கொண்டு மக்களுக்குக் கலியாணம் நடத்திவிடுவது. பிறகு இவர்களில் ஒவ்வொருவரும் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வது. இந்தச்சமயத்தில் எப்போதாகிலும் ஒருமுறை மழை பெய்யாவிட்டால், எல்லோரும் பிழைக்க வகையில்லாமல், பெருவாரியாகக் கூண்டுடன் கைலாசம்போவது. இப்படி மொத்தத்தில் பதிவாகிவிட்டதால், இவர்களைக் கலியாணத்திற்கு வகையில்லாமல் செய்துவிடவேண்டுமென்பது இந்தக் கக்ஷியாருடைய முக்கிய மதம். கலியாணத்தின் இழவுபேரிழவாயிருப்பதால்காளைகளுக்கு நடக்கிறமாதிரி செய்துவிடக்கூடுமானால் மெத்தவும் நலம்தான்! அது சாத்தியமில்லையாதலால், அதற்கிரண்டாவதாகப் பூஸ்திதியில் அவர்களுக்கிருக்கும் உரிமையைச் சற்று மட்டம் தட்டிவிடுவது நல்லதென்று இவர்கள் மதம். பம்பாயிலும், பஞ்சாபிலும், இம்மாதிரி யேதோ இரண்டொரு சட்டம் பிறந்ததாக ஞாபகம். ஆனாலதனால் விசேஷப் பிரயோஜனமில்லையென்பது அனுபவ சித்தமாயிருக்கிறது. ஆதலால் இது தேசமெங்கும் பிரபலிக்கவில்லை. தவிர இந்தியக் குடியானவர், இந்தியாவிலுள்ள வேறு சில வர்க்கத்தவரைப்போல்,ம்க்கட்பேறினால் விசேஷமாக உபத்திரவப்படுவதில்லை யென்றும், பிறந்தமக்கள் ஆண் பெண்ணனைவரும் உழைத்துத்தான் ஜீவனம் செய்கிறார்களென்றும், அவர்கள் கஷ்டப்படுவது வாஸ்தவமென்றாலும், அதற்குக் காரணம் வேறென்றும்,விவேகிகளில் அனேகர் எதிர்வாதம் சொல்லிவந்ததால்,அதையும் நம்பத்தான்வேண்டியாயிற்று.

இரண்டாவது, குடியானவருக்குப் பூமி திரஸ்துகளுக்காகவும், எருது முதலியன வாங்குவதற்காகவும், கிணறு முதலியன வெட்டுவதற்காகவும், சகாயம் கவர்ன்மெண்டாரே செய்து வருவதற்கு எடுத்த உபாயமாம். இது இந்தியாவெங்கும் நடக்கவேண்டுமென்பது சர்க்காருடைய எண்ணமாதலால், இதற்காகச் சட்டங்கள் அனேகமா யெங்கும் பிறந்து அனேக வருஷங்களாக வேலை நடந்துவருவதாகவே சொல்லலாம். ஆனால் இந்த உபாயம் முற்றும் பலிக்கவில்லை யென்பதே வருஷாவருஷம் நாம் கேட்கும் பல்லவம். இதற்கு இருதிறத்தாரும் காரணமென்னல் தகும். சர்க்கார் மூலமாகப் பணம் வாங்குவது சுலபமல்ல. சுவாமி வரங்கொடுத்தாலும், பூசாரி கொடுப்பதில்லை யென்பது எல்லோருமறிந்த ரகசியம். ஆனால் சர்க்காரென்ன செய்யலாம்? உத்தியோகஸ்தர் மூலமாகத்தான் நடவடிக்கை நடத்தவேண்டும். உத்தியோகஸ்தரும் ஒரேமாதிரியாயிருப்பதில்லை. தவிரக் கடன் வாங்கும் குடிகளும் பொறுப்பில்லாமல் காரியம் செய்து விடுகிறார்கள். கிணறுவெட்ட வாங்கிய பணம் பூதபலியாகிவிடுகிறது. இப்படியிரு வகைக்காரணங்களாலும், மொத்தத்தில் காரியம் கைகூடவில்லையென்பது நிச்சயமாயிற்று.

ஆகவே இதற்கென்ன செய்வதென்று ஆங்காங்கு உத்தியோகஸ்தர் விசாரித்ததில், நமது ராஜதானியில் 1892-ம் ௵த்தில் சர். எப். நிக்கல்ஸன் துரை இதைக்குறித்து இரண்டு பகுதிகளாகப் பெரிய புஸ்தகமொன்று எழுதினார். அவர் அதில் சொல்லியது இது. இந்த ராஜதானியில் பாங்குகள் செழித்து வந்திருப்பதா



லும், ஜனங்களுக்குள் அதற்கு வேண்டிய யோக்கியதை யிருப்பதாலும், ஜர்மானிய சம்பிரதாயப்படிக் கிராமப் பாங்குகள் கோஆபரேஷன் முறையிலேற்படவேண்டுமென்பதேயாம்.

ஆனால் அக்காலத்திய ரிவினியூ போர்டார் இது நடவாத காரியமென்று கட்டை போட்டுவிட்டதால் இங்கு ஒன்றுமாகவில்லை. கங்கை யமுனை பாயும் யூனைடெட் மாகாணங்களில் பழைய கிராம வழக்கங்கள் இன்னும் பூராவாகப் போகவில்லை. ஆதலால் அவ்விடத்திய உத்தியோகஸ்தராகிய ஸ்ரீமான் ட்யூபர்னெக்ஸ் என்பவர் இந்தக் கோ ஆபரேஷன் முறையில் பாங்கு நடப்பதற்கு அவ்விடத்தில் விசேஷ சௌகரிய மிருப்பதாக எழுதிப் பரீக்ஷையும் காண்பிவிக்க, அதன்மேல் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் திருப்தியுண்டாகிச் சட்டமும் 1904-ம் ௵த்தில் பிறந்தது.

இப்படி வந்திருப்பதில் கோ ஆபரேஷன் முறையாக இனிக்காரியங்கள் சம்பிரமமாக நடக்குமென்றும், நடக்கவேண்டுமென்றும், நாமெல்லோரும் சம்மதிப்பதால், அவ்வாறு நடப்பதில் எந்தெந்தத் தொழில் முன்னுக்கு வரக்கூடுமென்பதும், எங்கெங்கே, எவ்வெவ்விதமாக இம்முறையில் காரியம் நடப்பது சாத்தியமென்றும், அவ்வாறு எங்கும் நடந்துவரும் காலத்தில் நமக்குக் கிடைப்பதாகிய பலன் இன்னதென்றும், நாம் செம்மையாயறிந்து கொள்வதற்கிது நல்ல தருணமாம்.

சட்டப்படிப் பார்க்குமிடத்து இந்த முறையில் கிராமநாணய மென்றும், நகரநாணய மென்றும் இருவகைப்படுத்தி யிருக்கிறது. இது நல்லமுறை தான். கிராமங்களிலிருப்பவருடைப் கஷ்ட நிஷ்டூரங்கள் வேறு, பட்டணங்களிலுள்ளவருடைய கஷ்டநிஷ்டூரங்கள் வேறு தான். நாம் மேற்கூறியபடி கிராமவாசிகளுக்கு வருஷத்தில் சில காலங்களில் தான் பணம் அவசரமாக வேண்டும். அக்காலத்தில் சாவுகாரை நம்பினால், அவர் 'வேகிற வீட்டில் பிடுங்கினது லாபம்' என்கிற நியாயத்தை யனுசரித்து வியாபாரம் செய்கிறார். அது ஒழிந்தால் வேறுவகையில்லை. ஆதலால், இப்பொழுது சேலம் ஜில்லாவிலிருக்கிற மாதிரிக் கஸ்பாவில் பெரிய பாங்கும், அதையனுசரித்துச் சங்கிலித்தொடர் போன்று, ஜில்லாவிலுள்ள முக்கியக் கிராமங்களனைவற்றிலும் சில்லரைப் பாங்குகளுமிருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். சர்க்கார் பொருளுதவி விசேஷமாயில்லாமல், ஜனங்களே இதற்கு வேண்டிய முதல் போட்டு, டிபாசிட்டுகள் முதலியன அதிகரித்து வருவதில், வேலை கிரமமாக நடக்கிறது. எந்தக் கிராமத்திலும் பாங்கில் கடன்யாராவது கேட்டால்,பாங்கு டைரெக்டர்களுக்கு அவனைப்பற்றி யறியவேண்டிய முக்கிய விஷயம் தெரியுமாதலால், பணம் திரும்ப வருவதற்கு வேண்டிய நிஷ்கரிஷை செய்துகொண்டு கொடுக்கிறார்கள். ஆதலால் அவன் வீட்டில் கல்லியாணமா அல்லது வேறு விதமா, அவன் கிணறு வெட்டுகிறானா, பூதபலியிடுகிறானா, அல்லது பெண்சாதிக்குத் தோள்வளையிடுகிறானா வென்கிற விசாரணை ஒழிந்து போகிறது. வாங்குபவனுக்கும் பணத்தை மறுபடி கொடாமல் சால்ஜாப் செய்வதற்கு வகையில்லையென்று தெரியும்வரை, கண்மூடித்தனமாக வாங்க மாட்டானென்பது நிச்சயம். தவிர, கால், அரை, ஏதாவது சில்லரை மீத்து வைப்பதென்றால், அதற்கு வெகு நாளாக மொந்தைதான் குடித்தனக்காரனுக்குப் பாங்காக இருந்து வருகிறது. மொந்தையில் 5-ரூபாயை எத்தனைநாள் போட்டிருந்தாலும் அது குட்டி போடாது. கிராமபாங்கில் போட்டு, ரசீதை வாங்கிவைத்துக்கொண்டால் ஒவ்வொருமாதமும் அது ஈனும். பிறகு வேண்டியகாலத்தில் அசலும் வட்டியுமாக வாங்கலாம். தவிரப் பணம் வாங்குவதற்கு முன் சர்க்கார் தரபில் காணும் பூசாரிகள் இங்கு இல்லை. கோ ஆபரேடிவ் பாங்கு செகரெடரிகளும், குமாஸ்தாக்களும், சுவாமி வரமல்லது

வேறு தாங்களாக வரங்கொடுக்கத்தக்கவருமல்லர்.

இப்படிப் பாங்குகள் எங்கெங்கெல்லாம் செழிக்குமோ, அவ்விடங்களில் வேறு நற்காரியங்களும் ஒவ்வொன்றாக வந்து பிரபலிப்பதில் தடையில்லை. வயல்கள், தோட்டங்கள் முதலியவற்றைச் சாகுபடி செய்வதில், இனி யந்திர முதலிய சகாயங்கள் வேண்டும். தானியத்தை விற்பனைசெய்வதில், இப்போது நடக்கிறபடி சந்தையிலும், வேறுஎப்போதாகிலும் வரும் வியாபாரிமூலமாயும், காரியம் நடத்துவதைவிட, பெரும்படியாக விலையுயரும் சமயமறிந்து விற்று, அம்மூலமாகவும் லாபமடைவது நலம். முக்கியமாகக் கையிலிருக்கும் முதலைத் தலைகீழ் விலைக்கு விற்கவேண்டிய அவசரமேயில்லை. ஏனெனில் பாங்கிலே பணமிருக்கிறது. நாணயஸ்தர் எப்போது வருவாரென்று செகர்டெரிகளும் காத்திருக்கிறார்கள்.

ஆதலால் கிராமப்பாங்குகள் இனித்தழைப்பதில் சிறிதும் சந்தேகமில்லை. முதன்முதல் ஏற்படுவதுமட்டும் ஜாக்கிரதையாக ஏற்பட்டுவிட்டால், ஜனங்களுக்குள் நாளுக்குநாள் அவற்றின் உபயோகம் நன்குவிளங்கிப் பிறகு காலக்கிரமத்தில், கரும்புதின்னக் கூலி வேண்டாது, எல்லோரும் அவைகளை அபிமானித்தும், ஆதரித்தும் வருவார்கள். இதுவிஷயத்தில் என்போன்ற சிலருக்குச் சந்தேகம் சிறிதுமில்லை.

பாங்குகள் எங்கு செழிக்கின்றனவோ, அங்கே வேறு பொதுக் காரியங்களும் செழிக்க இடமுண்டாகும். இட்டேறிகள் இப்போதிருக்கிறபடி மைலுக்கு மூன்றிடங்களில் வண்டிகள் குடைசாயும்படியே எப்போதுமிருக்கவேண்டியது என்று எந்த ஸ்மிருதியிலுமேற்படவில்லை. பத்துக் கிராமங்களிலிருந்தும் பிட்டிஷன் போய், இட்டேறிகளை நோக்க வகையுமேற்பட்டால், அது எவ்வளவு பெரியஉபகாரமென்பது சொல்லவும் வேண்டுமோ? தவிரக் கிராமப் பள்ளிக்கூடங்கள், கிராமச் சுகசாதனங்கள், கிராமக்கோர்ட்டுகள், கிராமபந்தோபஸ்துகள், முதலிய எல்லாம் காலக்கிரமத்தில் சாத்தியமாகிவிடுமென்பது நமக்கு நிச்சயம். சாகுபடி விஷயத்தில் ஒற்றுமையும், வியாபார முதலிய விஷயங்களில் பெரும்படியும், தினசரி விஷயத்தில் மேற்கூறிய பல சில்லரை நலங்களும் கைகூடிற்றென்றால், கிராமவாசிகளுக்கு என்ன தசை யென்பதை வருணிக்கவும் வேண்டுமா?

ஆனால் இதுகளெல்லாம் நாம் விசாரிப்பது போல் ஆகவேண்டுமானால், மேற்கூறியபடி ஆரம்பத்தில் நடப்பது வெகு ஜாக்கிரதையாக நடக்கவேண்டும். தூரதிருஷ்டி யென்பது மகாஜனங்களுக்குள் அநேகமாயில்லை யென்னலாம். அதற்குத் திருஷ்டாந்தம் வேண்டுமானால், மரணபண்டுகளைப் பார்க்கவேண்டும். அதாவது அவைகளில் நேராய் நடப்பவைகளையே நாம் குறிப்பிடுவது. மகா ஜனங்களுக்குள் ஆஸ்திக்காரரையும், படிப்பாளிகளையும் நீக்கிப் பார்த்தால், இந்தியாவில் ஏதோ ஒருவிதமாகக் காலக்ஷேபஞ்செய்து வருபவர் எத்தனைகோடி பெயர்? அதில் இன்ஷூர் செய்திருப்பவர் எத்தனை பெயர்? இதை விசாரிக்கையில் தீர்க்க திருஷ்டி யெத்தனை பெயரிருக்கிறதென்பது விளங்குகிறதல்லவா? கையில் ஒரு ஜிலேபித் துண்டைவைத்துக் கொண்டு குழந்தையைக் கூப்பிட்டு, இதோ இருப்பதுவேண்டுமா, சாயரக்ஷை 1-சேர் மிட்டாய் வேண்டுமாவென்றால், குழந்தைக்கெதுவேண்டும்? அதைப்பார்த்து நாம் சிரிக்கிறோம். என்றாலும் நமக்கு முக்கியமாயாகவேண்டிய சில அம்சங்களில் நம்மில் முக்காலே மூன்று வீசமும் குழந்தைகளாகத்தானிருக்கிறோம். ஆதலால் பாங்குகள் இம்மாதிரிக் குழந்தைகளே நிறைந்திருக்குமிடங்களிலாரம்பமாகக் கூடாது. அவர்களுக்குத் தீர்க்க திருஷ்டி யுண்டாவதற்குச் சாதனங்களாகிய, கல்வி கேள்வி முதலியவை அவர்களுக்குள் பலத்த பிறகுதான் ஆரம்பிக்கவேண்டும். ஆதலால்தான் ஐக்கியநாணய ரிஜிஸ்திராரவர்களிடம் நூற்றுக்கணக்காகப் பிட்டிஷன்கள் வந்தபோதிலும், அவர் அவசரப்படாமல், வந்ததொவ்வொன்றையும் நிதானித்து, யோசித்து, கிராமத்தில் பித்த வாத சிலேஷ்மங்கள் எல்லாம் இருக்கவேண்டியபடியிருக்கின்றனவா வென்றும், பித்தம் கொஞ்சம் உபரியானால், அதற்குத் தக்க சூடுபோட்டுப் பரிகரிப்பது சாத்தியமா வென்றும், யோசித்தே காரியம் நடத்திவருகிறார். இப்படியே இன்னும் நடந்து வருமளவும் கிராமப்பாங்குகளுக்கும், அவற்றினாலுண்டாகும் இதர நன்மைகளுக்கும், நல்ல தசையிருப்பதாகவே நமக்குக் காணுகிறது. குடியானவர்களாகிய மகாஜனங்களும் இதன் அருமையை அறியவேண்டியபடி யறிந்து, குழந்தைத் தனத்தை விட்டுப் பொறுப்பாக வேலைசெய்து தாங்களும் நற்பயனை யடைந்து, தேசத்திற்கும் க்ஷேமத்தை விளைவிப்பார்களென்பது நிச்சயம். ஏனெனில் இம்மாதிரிப்பாங்குகளால் கிடைக்கும் பலன் பிரத்தியக்ஷம். தவிர மற்றைய தருமகர்த்தர்களுக்குத் தெய்வம் நின்று கூலிகொடுக்குமாதலால், அந்தத் தெய்வங்களுடைய சக்தி தமக்குத் தெரியுமென்று துணிந்தே தருமகர்த்தாக்கள் கோயிற் சொத்தைத் 'தமது போலப்பாவித்து' நடத்தி வருகிறார்கள். கோஆபரேஷன் பாங்கு விஷயத்திலோ, நயம், நஷ்டம் இரண்டும் கைமேல் கிடைக்கும். ரிஜிஸ்திரார் தெய்வம் பிரத்தியக்ஷ தெய்வம். அது நெறிப்படி நடப்பவருக்கு எல்லா மங்களமும், நெறிதப்பியவருக்குத் தக்க பிராயச்சித்தமும், நிர்தாக்ஷிண்ணியமாகக் கைமேல் கொடுக்கும் பெரும் பிடாரிதேவதையாதலால், நாமெல்லோரும் பயந்து நடக்கவேண்டும். அதுவரை நமக்கு ஒரு குறைவுமில்லை. 'பலவின் மிக்கவர் தேவரிற் பார்த்திலர்,' என்று பெரியோர் சொல்லியது வீண் பேச்சல்ல.





## ஜப்பானிய ஸ்திரீகள்.—
## I சில குறிப்புகள்

ஸ்ரீமதி மங்களாம்பிகா பாய் அவர்கள்

ஜப்பான் தேசம் பலவகையிலும் விநோதமானதென்று பார்த்தவர்களெல்லோரும் சொல்லிவருகிறார்கள். ஆனால் அத்தேசத்திய விசேஷங்களிலெல்லாம் விசேஷமானது அவ்விடத்திய ஸ்திரீஜாதியாம். ஏனெனில், அவர்களைப் பார்த்தவர்களுக்கெல்லாம் அவர்களிடத்தில் ஒருவிதமான அன்பும், மரியாதையும் தானாக உண்டாகிறது. அழகுமட்டும் இதற்குக் காரணமாகாது. ஜப்பானிய ஸ்திரீகள் அநேகமாய் எல்லோரும் சுந்தரிகள்தான். என்றாலும் அவர்களுக்கு ரூபத்தைவிடக் குணமே பெருத்த பூஷணம். நாணம், மடம் முதலிய பெண்மைக்குரிய விசேஷ குணங்கள் இவர்களுக்குள் எங்கும் காணுவது. அதுதான் இந்த மரியாதைக்கும், அன்புக்கும் காரணமாவதென்று தெரிகிறது.

ஜப்பானிய ஸ்திரீகள், நமது தேசத்து உத்தமஜாதி ஸ்திரீகளைப்போலவே 'அடக்கம்' என்பதை முதல் தருமமாகக் கொண்டவர்கள். சிறு பெண்ணானால் தகப்பனுக்கும், பெண்சாதியானால் புருஷனுக்கும், விதவையானால் மூத்தமகனுக்கும், அவர்கள் அடங்கி நடக்கவேண்டியவர்கள். மனுஸ்மிருதி படித்தவர்களுக்கு இந்தத் தருமம் சாமான்னியமாய்த் தெரியும். "ஆட்டுக்குட்டியுமல்லவா, தாய் முலையுண்ணும்பொழுது (மரியாதையுடன்) கால்மடித்து ஊட்டுகிறது!" என்று ஜப்பானியருக்குள் ஒருவசனம். ஆகவே பெற்றோரிஷ்டப்படி அவர்கள் யாரை வேண்டுமானாலும் கல்யாணம் செய்துகொண்டோ, அல்லது 'பொட்டுக் கட்டிக்கொண்டோ,' காலங்கழிக்கிறார்கள். எழுதப் படிக்கவும், வீணைமுதலிய வாத்தியங்கள் வாசிக்கவும், கூத்தாடவும், கொஞ்சம் காவியம் வாசிக்கவும்,

அவர்களில் அனேகமாய் எல்லோரும் கற்றுக் கொள்ளுவது வழக்கம்.

கல்யாணம் பெற்றோருடைய மனம்போல் நடப்பதால், மேனாட்டாருடைய சுவயம்வர லக்ஷணங்களும், பர்த்தாவும், பாரியையும் இஷ்டம்போல் காகிதப்பத்திரங்கள் எழுதிக்கொள்ளுவதும், ஒருவரையொருவர் நினைத்தோ, நினைப்பதாகப் பாசாங்குசெய்தோ, பிதற்றுவதும், மற்றபடி பேய்க்கூத்தாடுவதும், ஜப்பானியருள் காணுவதில்லை.

பழையநாளில் ஜப்பானியஸ்திரீகள் கல்யாணத்தன்மைக்குத் தங்கள் பற்களைக் கறுப்புச்சாயம் போட்டுக் கரேலென்று செய்து கொள்ளுவார்கள். 'தலைச்சன்' பிறந்ததும் புருவங்களைச் சிறைத்து விடுவார்கள். இம்மாதிரி வழக்கங்கள் இக்காலத்தில் அனேகமாய் இல்லையென்றே சொல்லிவிடலாம். ஆனால் குலஸ்திரீ யென்பவள் புருஷன் வீடுவந்து சேர்ந்தால்,வீடேதான் அவளுக்குக்கதி. அதை விட்டு நகருவதற்கிடமில்லை. புருஷன் எங்கு வேண்டுமானாலும் போகிறான். எல்லாருடனும் கலந்து களிக்கிறான். பெண்சாதிக்கு இம்மாதிரிப் பிரபஞ்சமே கிடையாது. புருஷனுக்குப் பல நாட்டாருடைய பழக்கத்தினாலும், படிப்பு, கேள்வி முதலிய சாதனங்களாலும், தொழில் வைபவத்தினாலும், உலகம் பல வகைத்தென்பது தெரிகிறது. பெண்சாதிக்கோ, உண்டு, உடுத்துச் சுகிப்பதும், மக்கட் பேறும் தவிர வேறு அனுபவமில்லை. ஆதலால் இம்மாதிரித் தம்பதிகளுக்குள் மேனாட்டுத் தம்பதிகளுக்கிருக்கும் லக்ஷணங்கள் காணுவது அபூர்வம். "இஷ்டமித்திரர் சந்தித்த சமயத்தில் தான் அந்த இஷ்டமித்திரருக்குப் பிரதியாகவும், ஆகவேண்டிய காரியங்களுக்கு யுக்தி யுக்தமாக உபாயம் சொல்லும் தகப்பன் போன்ற மந்திரியாகவும், நோய் முதலிய உபத்திரவகாலங்களில் பெற்ற தாய்போன்றவளாகவும்,இந்தச் சமுசாரமாகிற பாலைவனத்தில் ஓர் இளைப்பாற்று மண்டபமாகவும்," என்று மேனாட்டார் தமது மனைவிமார்களைச் சிலாகிப்பது போல் ஜப்பானியர் சொல்லிக்கொள்ளுவதற்காகாது.

ஜப்பானியருள் கல்யாணமென்பது கிரயவிக்கிரயம் போன்றதோர் வியாபாரமல்லது, இந்தியாவிலும் வேறு நாட்டிலுமுள்ளபடி 'சம்ஸ்காரமன்று.' சம்பிரமம் அதிகம் தான். ஆனால் அது சம்பந்திகளுக்கும் அவர் இஷ்டமித்திரருக்கும் சேர்ந்தொழிய மற்ற யாருக்கும் ஒன்றுமாக வேண்டியதில்லை. இப்படி விவாகம் நடந்ததற்கு ரிஜிஸ்திரார் ஆபீசில் பதிவாவதுதான் சாக்ஷி. அக்கினி, பிராம்மணர் முதலிய சாக்ஷிகள் இல்லை. இப்படி யிருப்பதால், இல்வாழ்க்கை வேண்டாமென்றால் ஒழிந்துவிடலாமென்று அனேகர் நினைக்கலாம். ஆனால் வாஸ்தவத்தில், இருகக்ஷியாருடைய பந்துக்களும், குடும்பத்தவரும் சேர்ந்து, அநியாயம் நடக்கவொட்டாமல் பார்த்துக் கொள்ளுவதுதான் சாதாரணமாக நடப்பில் காணுவது. பிரிவதென்றால், இந்தியாவில் காணுவதுபோலப் புருஷன்மட்டும் பிரிவதென்றில்லை. பெண்சாதியும் தக்க நியாயங்கொண்டு வேண்டுமானால் பிரிந்து, மறுபடி கல்யாணம் செய்து கொள்ளலாம்.

'பல பெண்சாதிகள்' ஜப்பானியருள் கிடையாது. சட்டப்படியும் ஒரே பத்தினிதான் பாரியையென்று சித்தாந்தம். ஆனால் இந்துக்களில் பழைய நாளில் சொகுசுக்காரர் பலர் செய்துவந்தபடி விலைமாதர் அனேகம் கிரகஸ்த குடும்பங்களிற் காணுவார்கள். என்றாலும், இப்பொழுது நமது நாட்டில் இது எப்படிக் குறைந்து வருகிறதோ, அப்படியே ஜப்பானியரிலும், பெரிய மனிதர்களுக்குள் இந்தத் துர்லக்ஷணம் குறைந்தே வருகிறது.

இப்படி யெல்லாமிருந்தாலும், ஜப்பானிய ஸ்திரீக்கு மரியாதைக்கொன்றும் குறைவில்லை. அவளைப்பற்றிப் பேசுபவரெல்லாம் 'யஜமானி



அம்மாள்,' என்றே வழங்குவார்கள். அவளுக்கு எல்லாவகை மரியாதையும் வைப்பார்கள். அவளும் தன் மரியாதையைக் குறைத்துக்கொள்ளாமல், மகா பதிவிரதையாய்ப் புருஷனுக்கு அடங்கியேதான் நடப்பாள். இப்போதிருக்கிற ரீதிக்கு, மேனாட்டுமுறையென்பது முக்கியமந்திரிகள் முதலிய வெகு பெரிய மனுஷரிடம் மட்டுமே காணுவது. ஆனால் நாகரிகம் வெகுதுரிதமாக முற்றுவதால், இப்போது குழந்தைகளாயிருப்பவர் பெரியவர்களாகும்போது, மேனாட்டு முறையும் அதிகமாய்ப் பிரபலிக்கும். அக்காலத்தில் அவர்களுக்குள் மேனாட்டு முறையின்படி காணும் உத்தம லக்ஷணங்களும், கோர லக்ஷணங்களும், இரண்டும் பிரபலிக்கும்.

ஜப்பானிய ஸ்திரீகளுக்குள் இப்போது வெகு தூரம் விசாரணையாகிவருவது 'உடை' விஷயமாம். பழையபடியே யிருந்து உடம்புக்கு உபத்திரவ மொன்றுமில்லாமல், பாவாடை, ரவிக்கை, தாவணி முதலியவை போதுமென்றிருப்பதா, அல்லது, மேனாட்டவர்போல் திமிங்கல எலும்பு முதலியவைகளை வைத்து இறுக்கிக்கொண்டு, தேகத்தையும் கெடுத்துக்கொண்டு, செலவையும் அதிகரித்துக் கொள்ளுவதா, என்று அவர்களுக்குள் தர்க்கம் வெகுதூரம் வளர்ந்துவருகிறது. மகாராணி மேனாட்டு முறையையே அனுசரிப்பதன்றி, தன்னெதிரே வரும் ஸ்திரீகளெல்லாம் அப்படித்தான் உடுக்க வேண்டுமென்று உத்தரவு கொடுத்திருக்கிறார். புருஷர்களில் அனேகர் தம் பெண்டுகள் மேனாட்டு முறைப்படியே பழகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். மற்ற பக்ஷத்திலோ, ஜப்பானிய ஸ்திரீகளுக்குத் தங்கள் முறையே அழகென்றும், செலவு குறைச்சலென்றும், தெரியும். தவிர அமெரிக்க துரைசானிகள் முதலிய அனேகர் மேனாட்டு முறையிலுள்ள அவலக்ஷணங்களை விளக்கி, அந்த முறைவேண்டாமென்று [illegible] வருகிறார்கள்.

"ஜப்பானியர், நாம் செய்துகொள்ளுவதுபோல் காது, மூக்கு முதலியவைகளைத் துளைத்துக் கண்டதையெல்லாம் தொங்கவிட்டுக்கொண்டு உபத்திரவப்படுவதில்லை. கையில் வளை முதலியவைகளையும்,விரல்களில் கணக்கற்ற மோதிரங்களையும் போட்டுக்கொண்டு இம்சைப்படுவதுமில்லை. மேனாட்டாரைப்போல் மார்புக்கு எலும்புகளினாலோ, இரும்புத் தகடுகளினாலோ [illegible]க்கிய கவசம் தரித்தும், கால்களுக்குப் [illegible]த மோஜாக்களைத் தரித்தும், உடம்பைக் கோணலாக்கிக் கொள்ளுவதில்லை. தலையில் பெருங்கூடைகளைக் கவிழ்த்துக்கொண்டு, அதில் உலகிலுள்ள பக்ஷிகளின் இறகுகளையெல்லாம் சொருகிக் கொள்ளுவதுமில்லை," என்று ஒரு இஷ்டர் எழுதுகிறார்.

இது வாஸ்தவம். ஜப்பானிய ஸ்திரீகளின் உடையும், ஆபரணங்களும் வெகு விநோதமானவை. அவைகளால் அவற்றைத் தரிப்பவருக்கு ஒரு உபத்திரவமுமில்லை. ஆனால், இப்போது மேனாட்டாருடன் அவர்கள் ராஜரீக விஷயமாய்ப் பழகவேண்டியிருப்பதால், அதற்காக அனேகர் மேனாட்டு வேஷந்தரிக்கவேண்டியிருக்கிறது.

ஜப்பானிய ஸ்திரீ ஜாதிகளுக்குள் வேறு நாட்டில் காணாத ஒரு சம்பிரதாயம் காணுகிறது. பெற்றோர் தமது பெண்களை விற்பது என்னாட்டிலும் காணுவதென்றே வைத்துக் கொள்ளலாம். நமது நாட்டில் இக்காலத்திலும் பெற்றோர் பணத்திற்காகப் பெண்களை விற்பதும், (இப்பொழுது பிள்ளைகளை விற்பதும்,) பொட்டுக்கட்டிவிடுவதும், சாதாரணமாகக் காணக்கூடிய லக்ஷணங்களேயாம்.

ஆனால் ஜப்பான் தேசத்தில் பெற்றோர் தமது பெண்களை விற்று ஜீவிக்கவேண்டினால் அவர்களைக் கேஷாக்கள் ஆக்கலாம். இப்படிச் செய்பவர்கள், தமது பெண்களை யாரோ ஒருவருக்கு பதினான்கு—அல்லது பதினைந்து வயதாகும்போது, சுமார் 150-அல்லது 200-

ரூபாய்க்குக் கொடுத்துவிடுகிறார்கள். வாங்கியவர் அவளுக்குப் பாட்டு, கூத்து முதலிய வித்தைகள் சொல்லுவித்து, நல்ல ஆடையாபரணங்களிட்டு, ஆதரித்து வருகிறார். நாட்டியம் தெரிந்ததும், இவர்களுக்குப் புதுப்பெயர்கள் பிரபலித்து வழங்குகின்றன. 'வஸந்தமல்லிகை' 'சந்திரவதனை' யென்பவை போன்ற பெயர்கள் பிரபலிக்கும். இவர்கள் 'சாயைக்கிளப்புகள்' 'கச்சேரிகள்' இவைபோன்றஇடங்களுக்குப் போய் அவ்விடம், பொழுது போக்க வருபவர்களுக்குப் பாட்டுமுதலிய சாதனங்களால் உபகரித்து, மணிக்கு இவ்வளவென்று சம்பளம்பெற்று வயிறு வளர்க்கிறார்கள். வரும்படியில் முக்கால்வரிசையும் இவர்களை வளர்த்தவர் எடுத்துக்கொள்ளுவது வழக்கம். நல்ல ரூபமும், சாதுரியமும், வித்தையுமுள்ளவர்களுடைய பெயர் எங்கும் பிரபலிக்கும். வரும்படி அதிகரிக்கும். இப்படிப்பல வருஷங்களாகையில், ஒருநாள் இருந்தாற்போலிருந்து அவர்களில் இரண்டொருவர் காணுவதில்லை. எங்கு விசாரித்தாலும் சங்கதி தெரிவதில்லை. எங்கேபோனார்கள்? யாரோ ஒருதனிகன் இவர்களில்யார் பேரிலோ பிரியப்பட்டு, அவளைவளர்த்தவனுக்குப் பரிசு ஏராளமாகக் கொடுத்து, அவளைத்தனக்கு மனைவியாகவாங்கிவிட்டானென்று தெரிகிறது. 'அவள் போய்விட்டாள்.' ஆனால் இந்தப்படி கோஷாவாகக் காலங்கழித்தவர்களுக்குக்குலஸ்திரீயினுடைய தருமம் ருசிப்பது வெகு அபூர்வம்.

என்றாலும் 'ஜப்பானியருடைய நாகரிகம் முற்ற முற்ற இந்த கேஷா சம்பிரதாயமும் மாறிவிடும்' என்று தெரிந்தவரெல்லாம் எழுதி வருகிறார்கள். நமது நாட்டிலும், பழையபடி 'கச்சேரிகள்,' (பாட்டு, கூத்து முதலியன) குறைந்தே காணுகின்றன. இவ்வளவிற்கு அதை நல்லதாகவே சொல்லலாம்.

---

## ஜப்பானிய ஸ்திரீகளின் தேசாபிமானம்

ஸ்ரீமான் ஏ. வி. சேயளம் அவர்கள்

உலகத்தே வசிக்கும் எச்சாதியாராயினும் அன்னார் நாகரீக வழிகளில் விருத்தியடைந்து பேரும் பிரபலமும் பெறவேண்டுமானால் அதற்கு இன்றியமையாத சாதனங்கள் சிலவுண்டு. அவைகளுள் பெண்பாலார் கல்வித்திறம் பெற்றிருக்கவேண்டுமென்பது முக்கியமானதாகும். பெண்கள் அறிவற்றவர்களாயிருப்பின் ஆடவருக்குத் துணையின்றித் துக்கமே யேற்படக் காரணமாகும். பெண்கள் அறிவற்றவர்களாயிருப்பின் ஆடவர் பற்பல துன்பங்களால் தளர்வடைந்து மனஞ்சோர்ந்து துன்புறுங்காலத்து, அன்னார்க்குச் சந்தோஷத்தையும் தைரியத்தையும் உண்டுபண்ணும் ஆற்றலுடையார் பெண்டிரேயன்றி வேறல்லர். ஓயாத ஊக்கமும் உழைப்பும் மேலிட்டு, ஆடவர் வேலை செய்து ஊதியம் பெறுவதற்கும், எத்துன்பங்கள் தாக்கினும் சலியாது நிற்பதற்கும், நல்ல வழிகளில் ஒழுகி, கியாதியும் சிறப்பும் பெறமுயல்வதற்கும், ஏற்படக்கூடிய பலகாரணங்களில் பெண்பாலரிடத்துப் பொருந்திய காதலுமொன்றாகும். அதனை மறுப்பார் ஒருவருமிலரெனக. இதற்கு நாம் எவ்வளவோ திருஷ்டாந்தங்களை எடுத்துக் காட்டலாம். சுமார் 7-8-வருஷங்களுக்கு முன்பு பிரிட்டிஷாரும் போவர்களும் எதிர்த்து ஒருவரோடொருவர் உலகப்புரளியான கலகம் செய்தபொழுது, இருதிறத்துள்ள போர்வீரர்களில் அநேகர் தங்கள் நாட்டுப் பிராபல்லியத்தை நினைத்து, அதனை நினைக்குந்தோறும் ஊக்கமும் உற்சாகமும் கொண்டு, யுத்தத்தில் தோல்வியடைந்தால் நாட்டின் பேரும் சிறப்பும் குன்றி மங்கிப்போகுமேயென ஏக்கங்கொண்டு, உடலிடத்தேயுள்ள வலிமையெல்லாம் காட்டி மிக உக்கிரமாகச் சண்டை செய்தார்கள். இப்படிச் சண்டை செய்வதைத்தான் கற்றோர் தேசாபிமானம் என்பார்கள். [illegible]

THE REGISTRAR OF BOOKS, REGISTERED 17 SEP 1910 MADRAS.



ஓர் ஜப்பானிய பெண்



கர் தங்கள் பெண்டு பிள்ளைகளை நினைத்து அதற்காகவும் சண்டைசெய்திருக்கலாம். தன்னைப் பற்றியோரும், தன்னுடையசுற்றத்தாரும், மற்றும் நெருங்கிய பந்துக்களும் புகழவேண்டுமே யென்பதைக் கருதியும் யுத்தக்களத்தில் யுத்த வீரர்கள் அசையாது நின்று சமாடியிருக்கலாம். யுத்தத்தில் தோற்றுப்போனால் பெண்டுகள் நகைப்பார்களே, அந்தக் கேவலம் வரக்கூடாதே யென்பதை நினைத்தும் போர்புரியலாம். திருஷ்டாந்தமாக மகாபாரத யுத்தத்தில் அருச்சுனனுடன் கொடிய யுத்தம்செய்து துரியோதனன் புறங்காட்டி ஓடியபோது, அவனை நோக்கி அருச்சுனன், ஏ! துரியோதனா!

"கார்முகம் கைத்தலத் திருப்பக் கைம்மிகு
போர்முகந் தன்னி னீபுறந் தந்தேகினா
லூர்முகக் களிற்றின் மேலுலாவும் வீதியில்
வார்முகக் கனதன மாதரென் சொலார்"

என்று இகழ்ச்சியாகப் பேசினான். அது போலவே ராமாயண யுத்தத்தில் முதல் நாள் சண்டையில் இராவணன் தோற்றுப்போய்த் தன்னுடைய அரண்மனைக்குத் திரும்பிய போது, தன்னுடைய தோல்வியை நோக்கிக் கேவலம் பெண்ணாகிய சீதையும் சிரிப்பாளே யென மிகவும் வருத்தப்பட்டானும்.

"வானகு மண்ணு மெல்லாம் நகுநெகு
வயிரத் தோளான்
நானகு பகைஞ ரெல்லாம் நகுவரென்
றதற்கு நாணான்
வேனகு நெடுங்கட் செவ்வாய் மெல்லியன்
மிதிலை வந்த
சானகி நகுவ ளென்றே வெட்கத்தாற்
சாம்பு கின்றான்"

எனக் கம்பர் வெகு சாமர்த்தியமாகக் கூறினார். ஆகையினாலே பெண்களின் நல்லெண்ணத்துக்காகவும் அவர்கள் முன் சிறப்படைய வேண்டு மென்பதற்காகவும் போர்புரிந்து உயிரை விடுவோர் பலர். யுத்தகளம் நோக்கிச் செல்லும் ஒருவனை அழகுடைய ஸ்திரீ ஒருவள், நீ யுத்தத்தில் வெற்றி பெற்றாலன்றி மற்றையோர் கௌரவத்திற்கு ஆளாகமாட்டா யெனக்கூறினால், அந்த வீரன் தன்னுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் காட்டிப்போர்புரிவானல்லனோ? இதைப்பற்றி விஸ்தாரமாகப் பேசவேண்டியது அனாவசியம். உலகத்தார் தங்கள் தங்கள் அனுபவத்தால் இதனை யறிந்திருக்கிறார்கள். சுமார் 4, 5-வருடங்களுக்கு முன் ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் போர்நடந்ததல்லவா? இந்த யுத்தத்தால் வெற்றி பெற்றவர்கள் ஜப்பானியர்களென்பது உலகம் பிரசித்தமே. இயற்கையிலேயே ஜப்பானியர்கள் பெரியதேசாபிமானிகள். மலைகலங்கினும்மாதிரங் கலங்கினும், மனங்கலங்காது எதிர்த்து நின்று போர்புரியும் சாமார்த்தியம் பெரிதும் படைத்தவர்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு யுத்தம் செய்யும்படியாக வேறே தூண்டுகோலுமிருந்தால் அப்போது அவர்கள்செய்யும் உக்கிரமான போரைப்பற்றி நாமே சிந்தித்துக் கொள்ளலாம். ஜப்பான் தேசத்து ஸ்திரீகள் யுத்தகளம் நோக்கிச்செல்லும் ஒவ்வொரு ஆடவரையும் உற்சாகப்படுத்தி விடுகிறார்களாம். சிறுமிகள் (சிறுபெண்கள்) கூடத்தங்கள் சகோதரர்களையுந் தகப்பன்மார்களையும்உற்சாகப்படுத்துகின்றார்களாம். திருஷ்டாந்தமாக ஒரு ஜப்பானியச் சிறுபெண் யுத்தகளத்தே போராடிக்கொண்டிருந்த தன்னுடைய சகோதரனுக்கு எழுதியநிருபத்தை மொழிபெயர்த்தெழுதுகின்றோம். இந்தச் சகோதரன் அக்குடும்பத்துக்குத் தலைமகன். அவன் யுத்தத்துக்குப் போய்விடவே குடும்பக் காரியாதிகளைக் கவனிக்கும் கஷ்டம் அவனுடைய சிறிய சகோதரிமேல் விழுந்தது. அந்தச் சிறுமியின் பெயர் "டோனே. அவளுடைய சகோதரன் சுமார் 15 வருஷங்களுக்கு முன்னர் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த யுத்தத்தில் சண்டை செய்து கொண்டிருந்தான். அவனுக்கு இச்சிறுமியெழுதிய கடிதம் யாவர் மனதையும் கரைந்துருகச் செய்யும். காகிதம் பின்வருமாறு:—

“அன்புள்ள சகோதரனே! நீ யுத்தம் நோக்கிச் சென்றநாள் முதல்நம்முடைய குடும்பத்தைத்தாங்கிக் கொண்டிருந்த பெரிய தூண் மறைந்து போனது போலிருக்கின்றது. நாங்கள் உன்னுடைய துணையை யிழந்து விட்டோம். இருந்தபோதிலும் நான்என்னால்கூடிய வரை முயன்று நீயிருந்தால் எப்படிச்செய்திருப்பாயோ, அதேமாதிரி நானும் நம்முடைய பெற்றோர்களுக்கு அதிவிசுவாசத்துடன் ஊழியஞ்செய்து கொண்டு வருகிறேன். ஆகையினாலே நீ குடும்பக் காரியாதிகளைப் பற்றி மனதில் கவலைப்படவேண்டாம். நம்முடைய சேனையானது அநேகவிடங்களில் வெற்றி பெற்றிருப்பதாகவும், எதிரிகளுடைய பீரங்கிகளில் அநேகபீரங்கிகளையும், ஏராளமான கருமருந்தையும் கைப்பற்றிக் கொண்டதாகவும் கேள்விப்படுகிறேன். இதைக் கேள்விப்பட்டு நாங்களெல்லாம் ஊரில் வெகுவாய்ச் சந்தோஷப்படுகிறோம். நம்முடைய சக்கிரவர்த்தியோ, தம்முடைய தரைப்படையும் கப்பல் படையும் செய்த போர்த்திறமையைப்பற்றி வெகுவாய்த் திருப்தியடைந்திருக்கிறார். உன்னைப்போன்ற போர்வீரர்கள் தற்காலம் யுத்தத்தில் கஷ்டஜீவனம் செய்கிறார்களே யென்பதற்காக அளவில்லா அனுதாபங்கொண்டு, தம்முடைய மாளிகையில் சொற்பச்செலவு செய்து ஆடம்பரமில்லாதிருக்கிறாரென்று நான் கேள்விப்படுகிறேன். ஜப்பானானது சீனாவைவிட மூன்றுபங்கு பலங்கொண்டதென்றும், சீனாவினுடைய முழுபலமும் அதனைத்தோற்கடிக்க முடியாதென்றும் இதுவரை கடலிலும் தரையிலும் நடந்த யுத்தங்களால் இந்தரகசியங்கள் விளங்கியிருக்கின்றனவென்றும்நம்நாட்டுபத்திரிகைகள் கூறுகின்றன. எதிரிகளுக்குச்சொந்தமான பியான்யாங் என்ற கோட்டைக் கதவை நீங்கள் திறந்து உள் நுழைந்த சாமர்த்தியத்தைப் பற்றி நாங்களெல்லாம் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். 3, 4-வயது சிறுகுழந்தைகள் கூட இப்போது தெருக்களில் ஆனந்தமாகப் பாட்டுப்பாடிக்கொண்டு, ஜப்பான்வெற்றிபெற்றதற்காகச் சந்தோஷத்துடன் குதித்துக்கொண்டு செல்கிறார்கள். நம்முடைய பெரிய சக்கிரவர்த்தியோ அளவற்ற கருணையுடன் யுத்தகளத்தே யிருக்கும் போர்வீரர்களுடைய குடும்பங்களின் க்ஷேமத்தில் ஏராளமான பிரியங்காட்டி வருகிறார். வாஸ்தவத்தில் நீ எங்களைப்பற்றிச் சற்றேனும் கவலைப்படவேண்டியதில்லை. யுத்தத்தில் தைரியத்துடன் முன்னேறிச்செல். ஜப்பானியர்கள் எவ்வளவு தைரியசாலிகளென்பதை உலகத்தார்கள் பார்த்துப் புகழட்டும். யுத்தகளத்தில் முன்னேறிச் செல்வதில் நீ மற்ற போர்வீரர்களுக்குப் பின்வாங்காதே. நீ இப்படிச் செய்வதே உன்னுடைய பெற்றோர்களைச் சந்தோஷப்படுத்தும் சிறந்த மார்க்கமாகும். நீ உன்னுடைய உயிரைக் காப்பாற்றுவதை மட்டும் கருதுவாயானால், அப்போது நீ நம்முடைய சக்கிரவர்த்திக்கும் நாட்டுக்கும் ஒன்றும் செய்ய முடியாதவனாயிருப்பாய். ஆனால் நீ மரித்தும் போகக் கூடாது. அப்படி மரித்தால், ஏதாவது அருமையான போர்செய்து பிரபலமான சாமார்த்தியம் காட்டி மரிக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட விஷயங்களை நினைத்து நான் இரவும் பகலும் கடவுளைப் பிரார்த்தனை செய்கின்றேன். அருமையான சகோதரனே! நீ எங்களைப்பற்றி யாதொரு கவலையும் படவேண்டாம். இன்னும் நான் உனக்கு எவ்வளவோ சொல்லவேண்டும். ஆனால் அவைகளை யெல்லாம் அடுத்த காகிதத்தில் சொல்லுகின்றேன்.

இப்படிக்கு,
உன்னுடைய பிரியமான தங்கை
டோனே.”

இந்தக் காகிதத்தைப் பெற்றபோர்வீரனுடைய உற்சாகத்தை நாம் கூறவேண்டியதனாவசியம். நாட்டுப் பெண்கள் இப்படி இருந்தாலல்லவோ தேசம் க்ஷேமப்படும். ஜப்பான் இவ்வளவு சிறப்படைந்திருப்பதற்கு இது முக்கியமான காரணமல்லவா?



## கல்லிக்கோட்டை சமரீன்

ஸ்ரீமான் ஏ. எஸ். வைத்தியநாத அய்யரவர்கள்,
எம். ஏ., எல். டி.

சென்ற௵ டிசம்பர்௴த்தில் கல்லிக்கோட்டையிலிருந்தவர்கள் ஒருநாள் காலையில் ஒரு பெரிய அதிசயம் கண்டிருப்பார்கள். யாரோ ஒரு பெரிய மனுஷர் படத்தில் காணுகிறபடியோ, வேறு விதமாகவோ உடைதரித்து, அனேக அலங்காரங்களும் செய்துகொண்டு, ‘மஞ்சல்’ என்னும் பல்லக்கில் ஏறி, மலையாள மகம்மதீயரான மாப்பிள்ளைமார் வாத்திய கோஷம் செய்ய, தெருக்களில் ஊர்கோலம் சென்றார். பிறகு அவ்வூர் அரண்மனையில் பல ஜனங்களும் கூடியிருக்க, கலெக்டர் துரையவர்கள் இவருக்கு முகமன் கூறி, ஏதோ ஒரு சன்னதுகொடுத்துப் பல்லாண்டுகூறினார். பிறகு பிராம்மணருக்குத் தக்ஷிணை, சமாராதனை, முதலியன நடந்தது. கூட்டமும் கலைந்தது.

இந்தப் பெரிய மனுஷர் யார்? இந்தச் சடங்குக்கு என்ன அர்த்தம்? பிராம்மணர்களுக்குச் சாப்பாடு, தக்ஷிணை முதலிய உபசாரங்களொருபுறம் பலமாக நடக்க, மாப்பிள்ளைமார் என்னத்திற்காக வாத்திய முதலிய உபசாரங்கள் நடத்தவேண்டும்? இந்தக் கேள்விகளுக்கு நம்மாலியன்றவரை உத்தரஞ் சொல்ல முயல்வோமாக.

இந்தப் பெரிய மனுஷர் சமரீன் எனப் பட்டப்பெயர் பூண்டவர். இவர் பழைய காலத்தில் மலையாள ராச்சியத்தில் கல்லிக்கோட்டையிலிருந்துகொண்டு ஒரு பெரிய பகுதியைக் கட்டியாண்ட ராஜவம்சத்திலுதித்தவர். இவருக்கு முந்தியிருந்த பெரியவர் கோயமுத்தூர் ஜில்லா பவானியில் இறந்துவிட்டதால், அந்தப் பதவியை இவர் வகிக்கவேண்டி வந்தது. அந்தப்பதவிக்கு இவருக்குள்ள பாத்தியதையைப் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் அங்கீகரிக்கவேண்டியது பதிவாகையால், கலெக்டர் துரையவர்களும் அவ்விடம் வந்து வாழ்த்திப்போனார்கள்.

பள்ளிப்பிள்ளைகளில் இந்துதேச சரித்திரம் படித்தவரனைவர்க்கும் கி. பி. 1498-ம் ௵த்தில் போர்த்துகல் தேசத்துக் கப்பற்றலைவனாகிய வாஸ்கோடிகாமா கல்லிக்கோட்டையில் வந்திறங்கிய கதை நன்றாய்த் தெரியும். அக்காலத்தில் கல்லிக்கோட்டைதான் மலையாளத்தில் வெகு முக்கிய ஸ்தலம். அதுதான் சமரீனுக்கு ராஜதானி. போர்த்துக்கல்காரருடைய ஆசையோ, ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமுள்ள வியாபாரமெல்லாம் தங்கள் மூலமாகவே நடக்கவேண்டுமென்றும், முக்கியமாக இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமுள்ள வர்த்தகம் தங்கள் கையிலகப்படவேண்டுமென்றும், இருந்தது. ஏனெனில், இந்தியாவை அக்காலத்தில் ஐரோப்பியரெல்லோரும் ஒரு பெரிய பொன் விளையும் களமாக எண்ணியிருந்தனர்.

இதில் அதிசயம் ஒன்றுமில்லை. மலையாளத்திய மிளகும், மற்ற சாமான்களும் எத்தனையோ காலமாக ஐரோப்பாவுக்குப் போய்க்கொண்டிருந்தது மெய். ஆனால் அது சுற்றுவழிகளில் போய்க்கொண்டிருந்ததால், 15-வது நூற்றாண்டில் ஆப்பிரிக்காவைச்சுற்றிவரும் நேர்வழியுண்டானது வர்த்தகருக்கு ஒருபெரிய உபகாரமாயிற்று. இது இல்லாமலிருக்கும் பொழுதே கிறிஸ்தவ அப்தத்திற்கு அனேக நூற்றாண்டுகளுக்குமுன் மலையாளக்கரைகளுக்கு மேனாட்டுக் கப்பல்கள் போக்குவரவு செய்து கொண்டிருந்தனவென்பது அனேகருக்கு ஒரு சமயம் தெரியாமலிருக்கலாம். என்றாலும் அது வாஸ்தவம். வெகுகாலத்திற்கு முன்னிருந்த யூதேயா அரசனான சாலோமோனுக்கு மிளகு முதலிய திரவியங்கள் இங்கிருந்து போயினவென்பதற்குச் சாக்ஷியமுண்டு. இது கி. மு. 1000 வருஷம் சுமாரென்று தெரிகிறது. பின்னிட்ட காலங்களில், கிரேக்கர், ரோமர், முதலிய ஜாதி

யவரும் முறையே இந்த வியாபாரத்தை விடாமல் செய்துகொண்டு தான் வந்தார்கள்.

கடைசியாக அரேபியர்கள் இதை ஆக்கிரமித்தார்கள். இவர்கள் முன்னுக்கு வருவதற்குள், மலையாளத்தில் ஒரு பேதம் கண்டது. பழைய நாளில் கொச்சி, கொல்லம், கொடுங்கலூர் முதலிய இடங்களில் தான் கப்பல்கள் தங்குவதும், வியாபாரம் நடப்பதும். அரேபியர் இந்த வியாபாரத்தை ஆக்கிரமித்தபின் மேற்சொல்லிய இடங்களுக்கு மகிமை குறைந்து, கல்லிக்கோட்டை செழிக்க ஆரம்பித்தது. அதே காலத்தில் சமரீன் அரசனுடைய கையும் மேலாகி வந்தது. இந்த மட்டில் நமக்கு உறுதியுண்டு. ஆனால் 'சமரீன்' வம்சம் எப்போது ஆரம்பமாயிற்று? மூலபுருஷன் யார்? எவ்விடமிருந்து அவர் வந்தார்? அந்த வம்சாவளியை இடையறாது விளக்கி, அந்த வம்ச சரித்திரத்தையும் கதையாகச் சொல்லுவது சாத்தியமா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலொன்று தான். இது ஒன்றும் சாத்தியமல்ல. ஏனெனில் ரிகார்டுகள் ஒன்றும் இல்லை. எப்பொழுதாவதிருந்தாலும், அவை வெகுவாய் நசித்துப் போயினவென்றே காணுகிறது. கல்லிக்கோட்டை அரண்மனையில் ஏதாகிலும் இருக்கலாம். கொச்சிப் புஸ்தகசாலையிலும் ஏதாகிலும் இருக்கலாம். ஆனால், அவைகளையாரும் இதுவரை பரிசோதித்து அவற்றில்காணும் ரகசியங்களை வெளியிடவில்லை. ஆகலால் ஸ்ரீவால்மீகி பகவான் இக்ஷ்வாகுவம்ச சரிதத்தை ஆதியோடந்தமாகச் சொல்லி விடுகிறேனென்று ராமாயணத்தில் சங்கற்பித்ததுபோல, சமரீன் வம்ச சரித்திரத்தைச் சொல்ல முயல்வது நமக்கு அசாத்தியம். இருப்பதை ஏதோ ஒருவாறு முடைந்து வைக்கலாம். ஆகவே அப்படியே செய்துவிடுகிறோம்.

கேரளராச்சியம் முன்னொருகாலத்தில் 'பெருமாள்கள்' என்று பெயர் பூண்ட அரசர்களால் ஆளப்பட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்குக் கோடுங்கலூர் ராஜதானியாம். இது சேரராச்சியத்தின் பகுதி. கேரளோற்பத்தி யென்னும் புராணத்தில், மலையாள சீமை முழுவதையும் ஸ்ரீபரசுராமமூர்த்தி நாலு நம்பூதிரி பிராம்மணருக்குத் தானம் செய்து விட்டதாகவும் அவர்களுக்குள் வழக்குகள் உண்டாகித் தகரார் அதிகரிக்கவே, அவர்களையெல்லாம் அடக்கியாளவேண்டி, முதன்முதல் 'பெருமாள்' என்னும் பட்டத்துடன் ஒரு அதிபதி யேற்பட்டதாகவும் காணுகிறது. இது சரியாகவேயிருக்கலாம். சில்லரை அரசர்களுக்குள் எப்போதெல்லாம் இவ்வாறு தர்க்கம் வலுத்து, அதனால் மகாஜனங்களுக்கு உபத்திரவம் அதிகரிக்கிறதோ, அப்போதெல்லாம், அவர்களை அடக்கவேண்டிப் பகவான் ஒரு கைவலுத்த அதிபதியை அனுப்பிவிடுகிறார்.

இவ்வாறு ஏற்பட்ட அதிபதி 12-வருஷத்திற்கொருமுறை மறுபடி நியமனமாக வேண்டுமென்று ஒருவிதி துவக்கத்திலிருந்ததாம். ஆனால் 12-வருஷம் ஒருவன் சர்வாதிகாரம் செலுத்தினால், மறுபடி அவனை அப்புறப்படுத்துவது சுலபமல்ல. அதிலும் அவன் புத்திசாலியாகவும், வீரனாகவுமிருந்தால், அது சாத்தியமே அன்று. இந்த ரகசியம் தெரிந்து தான் கூனி ராமனை 14-வருஷம் வனம்போகச் சொல்லியதும், துரியோதனன் பாண்டவரைத் துரத்தியதும். ஆகவே இந்த 12-வருஷ நியமனம் தானாகவே ரத்தாகி, ஒவ்வொரு பெருமாளும் ஒருமுறை நியமனமானால், அவருடைய ஜீவதசையில் மறுபடி நியமனம் வேண்டியதில்லை யென்று ஒரு ஸ்மிருதி யேற்பட்டது. பிறகு இதுவும் பிராசாகிவிட்டது.

இப்படி யேற்பட்ட பெருமாள்களுடைய அதிகாரம் ஒருகாலத்தில் கன்னியாகுமாரி முதல் கோகர்ணம் வரையுள்ள கோவணம் போன்ற நாடெங்கும் சென்று வந்ததாகத்



தெரிகிறது. இந்த வம்சத்தில் கடைசியாயிருந்தவருக்குச் சேரமான் பெருமாள் எனப் பெயர் வழங்குகிறது.

இவர் 36-வருஷம் ஆண்டுவந்தார். கடைசியாக ஏதோ காரணங்களால் இவருக்கு உலக வாழ்க்கை ருசியற்றுப் போய்விட்டது. அக்காலத்தில் மகம்மதீய மதம் அரேபியாவிலும் வேறிடங்களிலும் பிரபலமாகி வந்தது. அந்த மதத்தில் பெரியவராயிருந்து லங்கையில் தேகவியோகமடைந்து சமாதி பெற்ற ஒருவருடைய கோரியைப் பார்த்துத் தொழுதுவருவதற்காக, ஒருமுறை அரேபியாவிலிருந்து ஒரு கூட்டம் மகம்மதீயர் சென்றார்கள். தங்கள் காரியம் முடிந்தபின் அவர்கள் திரும்ப ஊருக்குப்போய்க் கொண்டிருக்கையில், கொடுங்கலூரில் வந்து கொஞ்சம் தங்க, அவர்களுடைய நித்திய விதிகளையும், பக்தியையும் கண்டு, சேரமான் பெருமாளுக்கு அவர்களிடத்தில் விசுவாசம் அதிகரித்து, அவர்களுடைய மதக் கோட்பாடுகள் தனக்கு வெகு ஹிதமாகக் கண்டதால், தானும் பக்கிரியாகி, அவர்களுடன் சேர்ந்து, மெக்காவுக்குப் போய் அவ்விடத்திலேயே தன் காலத்தை முடித்துவிட்டார். இப்பொழுதும் ஜபார் என்னும் ஊரில் ஒரு கோரியிருப்பதாகவும், அதில் 'அப்துல் ரஹமான் சமிரி' என்னும் பெரியவர் ஹிஜரி 212-ம் வருஷத்தில் அவ்விடம் வந்து, 216-ம் வருஷத்தில் இறந்துபோனதாகக் கல்லில்எழுத்துவெட்டியிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்தப் பெயர் ஒரு சமயம் சேரமான் பெருமாள் மகம்மதீயரானபின் எடுத்துக் கொண்டதாக இருப்பது சாத்தியம் என்று அனேகர் நம்புகிறார்கள். ஆனால் கோரியிருக்கிறதா வென்றுமட்டும் யாரும் போய்ப் பார்த்து நிஷ்கரிஷிப்பதில்லை!

சேரமான் பெருமாள் தான் பக்கிரியாவதற்கு முன் தன்னுடைய ராச்சிய முழுவதையும் பல சில்லரைகளாகப் பிரித்து, கொச்சி ராச்சியத்தைத் தன்வம்சத்தவருக்கும், மற்றவைகளைத் தாயாதிகளுக்கும் கொடுத்துவிட்டாராம். இப்படிச் செய்ததில், அவருக்கு முக்கியசேனாதிபதியாயிருந்து பலபெரிய ஆபத்துகளில் உதவிவந்த 'சமரீன்' என்னும் பெரியவருக்குமட்டும் ஒரு பகுதியும் கிட்டவில்லை. ஆதலால் அவர் பெருமாளுடன் கூடவேபோய், அவர் தருமப் பட்டணம், என்னும் துறையில் மெக்காவுக்குக் கப்பலேற இருக்கையில், தனக்கென்ன கதியென்று கேட்க, பெருமாளும் அவ்விடத்தில்தான் கட்டியிருந்த ஒரு அரண்மனையை இவர்வசம் ஒப்புவித்து, அதையும் அதைச் சுற்றிக் கோழி கூப்பிடு தூரம் எல்லைகட்டி, அந்தப் பிரதேசத்தையும் இவருக்கு அதீனமாக்கினார். இது அவருடைய சௌரிய முதலிய குணங்களுக்குச் சுத்தமாகப் போதாதாகையால், பெருமாள் அவருக்குத் தன்னிடம் மீந்திருந்த கத்தி யொன்றைக்கையில் கொடுத்து, "நீங்கள் செத்தும், கொன்றும் அடக்கியாளுக," என்று ஆசீர்வதித்துச்சென்றாராம். ஆகவே, சமரீனுக்குத் தலைமைப் பட்டணம் 'கோழிக்கூடு' அல்லது கல்லிக்கோட்டை யாகவும், அவருடைய ராச்சியம் அதைச் சுற்றித்தனது பாகுபலம் எட்டிய மட்டிலும் ஆயிற்று. இப்படி யவர் சுற்றியிருக்கும் சிற்றரசர்களை வென்று அவர்களைத் தன் அதீனமாக்கி வரவே, கடைசியில் அவர் ராச்சியம் தெற்கே கொச்சிவரை யெட்டியது. அது முதல் கொச்சி அரசர்களுக்கும், சமரீனுக்கும் நீங்காத கலகத்திற்கு இடமுண்டாகி, ஊர் இரண்டு பட்டு, இருவரும் கைவலுத்தவராதலால், தகரார் சுலபத்தில் பைசலாகாமல், கடைசியாக வாஸ்கோடிகாமாவென்னும் கூத்தாடிக்கு எளிதாயிற்று. நிற்க.

சுமார் கி.பி. 700-வருஷத்திற்கப்புறம் சமரீன்கள் கல்லிக்கோட்டையிலிருந்து கொண்டு அதிகாரம் செலுத்தி வந்தது விசதமாகிறது. ஏனெனில், ஏறக்குறைய அந்தக் காலத்திலிருந்த சமரீன் ஏராள நாட்டிற்கு உடையவர் என்று சிரிய கிரிஸ்தவர், யூதர் முதலிய அன்னிய

தேசத்தவரிடம் காணும் சாசனங்களால் வெளியாகிறது. கல்லிக்கோட்டை அரண்மனை மேற்சொல்லியபடி சமரீன்வசம் வந்ததும், அவர் அதைப்பலப்படுத்தி சமீபத்தில் ஒரு கோட்டைகட்டித் துறைமுகத்தையும் பசந்துபடுத்தினார். தவிர, தம்முடைய நீதி, நியாயம், நாணயம் முதலிய நற்குணங்களால், வியாபாரிகளை அவ்விடம் வந்து தங்கும்படி தூண்டினார். அப்படியே அநேகர் வந்து சேர்ந்து, கல்லிக்கோட்டை வியாபாரம் வலுத்து வந்தது.

இரண்டொருதாரணம் போதுமானது. கீழ்நாட்டு ஜைனவர்த்தகனாகிய அம்பரேசன் செட்டியென்பவன், ஒரு சந்தர்ப்பத்தில் கல்லிக்கோட்டையருகில் தன் கப்பல் காற்றிலே பட்டு முழுகிப்போக இருக்கையில், அவ்விடமிறங்கி, சமரீனைக்கண்டு, தன்னுடைய திரவியத்தை அவருடைய கஜானாவில் வைத்துவைக்கும்படிக்கும், பிறகு தன் சௌகரியம்போல் பெற்றுக்கொள்ளுவதாகவும் கேட்டுக்கொண்டான். அவரும் சம்மதித்து அவனையே பணத்தைக் கட்டிக்கொண்டுபோய் வைக்கும்படி சொன்னார். அப்படியே வைத்துவிட்டுத் தன் காரியமாகப்போய்ச் சிறிது காலம் கழிந்து மறுபடி வந்து பணத்தைக்கேட்டான். அவனையே போய் எடுத்துக்கொள்ளும்படி சொன்னார். போய்ப்பார்க்கையில், எல்லாம் தான் வைத்தபடியே 'ஒரு தூசு விலகாமலிருந்ததால்,' அவனுக்கு வெகு சந்தோஷமாகி, இப்படிப்பட்ட சத்தியசந்தனுடைய ராச்சியத்தில்தான் நாமிருந்து பிழைக்கவேண்டுமென்று அங்கேயே ஸ்திரமாயிருந்துவிட்டானாம். இதுபோலவே, வேறு அநேகரும் வந்து தங்கவே கல்லிக்கோட்டை சிறந்து வந்தது.

இப்படியே மகம்மதீயக்குருவான 'கோயா' என்னும் அரேபியரொருவர், மலையாளத்தில் வந்து, சிற்றரசர் அநேகரிடத்தில், ஊர்காய்ப் பாணிகளுக்குள், அடியில் பொன்னையும், மேலாக ஊர்காயும் வைத்து, அடைக்கலமாக ஒப்புக் கொடுத்துப் பிறகு சிறிதுகாலம் கழிந்து மறுபடி பெற்றுப்போகையில், சமரீன் ஒருவர் மட்டும் பொன்னைத் தொடாமலிருந்ததையும், மற்றைய அரசர் தன்னை மோசஞ்செய்ததையும் கண்டு கல்லிக்கோட்டையிலேயே தங்கி, அன்றுமுதல் அங்கே மகம்மது மதத்தைப் பெருகச் செய்தாராம்.

கல்லிக்கோட்டைக் கருகில் திருநாவாய் என்னும் புராதன ஸ்தலமொன்றுண்டு. இவ்விடத்தில் ஒருபெரிய ஆலமரத்தடியில், ஒவ்வொரு மகாமகத்திலும், (12-வருஷத்திற்கொருமுறை வருவது) ஒரு மலையாள மகா ஜனப்பெருங்கூட்டம் கூடுவதுண்டு. இக்கூட்டத்தில்தான் பழையநாளில் 'பெருமாளை' நியமித்து, அவருக்கு ஆளும் யோக்கியதையைப் பகிரங்கப்படுத்துவது வழக்கம். சேரமான் பெருமாள் ராச்சியத்தைப் பிரித்தபின், அவர் வம்சத்தவராகிய பெருமாள்களுடைய கைவலி குறைந்துபோயிற்று. சமரீன் கைவலியோ மேற்குறித்தபடி மிகுந்து ஓங்கி வந்தது. கல்லிக்கோட்டையைச் சுற்றிலுமுள்ள சிற்றரசரும் ஒவ்வொருவராக இவர் அதீனமாகிவந்தார்கள். ஆதலால் மேற்சொல்லிய 'கோயா' என்னும் மகம்மதீயப் பெரியவர் வந்து, 'மாப்பிள்ளைமாரும்' (மலையாள மகம்மதீயருக்கு இந்தப் பெயர் பொதுவாக வழங்குவது,) பெருகவே, இந்தப் பெரியவருக்கு இடங்கொடுத்த சமரீன் விஷயத்தில் தனக்குள்ள நன்றியைக் காட்டவேண்டி அவர் சமயம் பார்த்திருந்தார். கடைசியாக ஒரு மகா மகத்தில் வழக்கப்படி மகா ஜனங்கள் கூடினார்கள். கோயாவும் அவருடைய சிஷர்களான மாப்பிள்ளைமாரும் இதை ஆக்கிரமித்து, சமரீன் வேண்டுகோளின்படி நயபய மிரண்டையும் கொண்டு, ஜனங்களை வசமாக்கிக் கொச்சிப் பெருமாள்களுக்கு இனி மலையாளத்தில் முதற்பதவிக்கு யோக்கியதையில்லையென்றும், அதற்குப் பதிலாகக் கல்லிக்கோட்டையில் சமரீன்



களுக்குத்தான் அந்த பதவியும் அதிகாரமும் கிடைத்திருக்கிறதென்றும் சொல்லி, அதற்குச் சேரமான் பெருமாளுடைய கத்தியையும், ஆசீர்வாதத்தையும் சாக்ஷியமாக்கினார்கள். அந்தக் கத்தி இன்றுவரை சமரீன் சுவாதீனத்திலிருக்கிறது. ஆனால் அதை அவர்கள் வெகுகாலமாக உறையிற் போட்டுப் பூஜையில் வைத்துவிட்டார்கள்.

இப்படி மகாஜனங்கள் சமரீனை மலையாள சார்வபௌமனாக மனப்பூர்வகமாய் நியமிக்கும்படி கோயாவும் அவருடைய மாப்பிள்ளைகளும் உதவியதால், அன்று முதல் மாப்பிள்ளைகள் சமரீனுக்கு ஆப்தரானார்கள். அவர்களுக்கும் சமரீன் வேண்டிய சகாயமெல்லாம் செய்து மரியாதையாய் நடத்தி வந்தார். அதற்கு அறிகுறியாகத்தான் நாம் முதலில் குறிப்பிட்டபடி நாளதுவரை சமரீனுக்கு மாப்பிள்ளைமார் வாத்திய முதலிய பதிவுகளை விடாமல் நடத்தி வருகிறார்கள். தவிர, கோயாவின் பெயர் நெடுங்காலம் வழங்கவேண்டி, சமரீனுடைய ராஜதானிக்கு 'கோய்க்கோட்டை' அல்லது கல்லிக்கோட்டையென்று பெயர் வந்ததாகவும் ஒரு ஐதிகமுண்டு.

இதன்றிச் சேரமான்பெருமாள் அரேபியா போனபின், மகம்மதீய பக்தி யதிகரித்து, அவ்விடமுள்ள இஷ்டரனேகருக்குச் சிபார்சு காகிதம் கொடுத்து, மலையாளத்திற்கு அனுப்பியதாகவும், அதை வெகுமானித்து அவர்களுக்குப் பள்ளிவாசல் கட்டிக்கொள்ள அனுமதி கிடைத்ததாகவும், அப்படி ஆதரித்தவரிலெல்லாம் சமரீன்கள் முக்கியஸ்தரென்றும் தெரிகிறது.

(இன்னும் வரும்.)

## எகிப்தியர் நாகரிகம்

ஸ்ரீமான் பூர்வ விருத்தாந்தி.

### எகிப்தியர் விருந்திடுவது

இதைப்பற்றி முன்னொருமுறை கொஞ்சம் விவரித்தோம். ஆனால் இவ்விஷயத்தில் நம்முடைய வழக்கங்களுக்கும், அவர்களுடைய வழக்கங்களுக்கும் வித்தியாசங்கள் பலவாகி இருப்பதால், முக்கியாம்சங்களை இங்கு சுருக்கியுரைக்கிறோம்.

சாதாரணமாய் விருந்தினர்கள் சுமார் நடுப்பகலில் போஜனத்திற்குப் போவார்கள். தாரதரம்போல் வண்டிகளிலோ, நடந்தோ போவது வழக்கம். வண்டிகளிலும், பல்லக்குகளிலும் சவாரி செய்பவருக்குக் குடைபிடிப்பது ஓர் பெரிய மரியாதை. இதையனுசரித்தே நமதுநாட்டிலும் "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்," எனவும், "சத்திரபதி" எனவும் அரசர்களுக்குப் பட்டப்பெயருண்டு.

விருந்தினர் வந்ததும் "இலைபோடுவதில்லை." வந்தவர்களுக்குச் சங்கீதம், செப்பிடுவித்தை முதலியவற்றைக்கொண்டு கொஞ்சம் பொழுதுபோக்காக வேண்டியது ஒரு விசேஷ உபசாரம். வந்தவர்களும் போஜன மண்டபத்தைப் புகழ்ந்து, அவ்விடத்திலுள்ள படங்கள் முதலிய அலங்காரங்களை மெச்சிக் காலங்கழிக்க வேண்டும். அதிதிகளில் அந்தஸ்துக்காரர்கள் எக்காலத்திலும் ஒரேமாதிரிதான் நடப்பது போலும். அதாவது குறித்தகாலத்திற்கு இரண்டொரு நிமிஷம் அப்புறப்பட்டே வருவது. மற்றவரெல்லாம் காத்திருப்பது தம்முடைய அந்தஸ்தைக் காட்டுவதோர் முக்கிய குறிப்பென்பது அவர் மதம்!

வந்தவரில் வேண்டிய பெயருக்குக் கைகால் கழுவ ஜலம் கொடுத்து உபசரிப்பதை நம்மவர் நன்றாயறிவார்கள். ஆனால் நம்மவரறியாத உபசாரமொன்று எகிப்தியர், கிரேக்கர், யூதர் முதலியோருக்குள் உண்டு. அதாவது, கைகால்

கழுவியபின் ஒவ்வொருவருக்கும் தலைக்கு வாசனை எண்ணெய் தடவுவதாம். ஆதலால் அக்காலத்தில் 'கேசாஞ்சன தைலம்' முதலியவற்றிற்குச் செலவு வெகு அதிகம்.

இது முடிந்தவுடன் சாப்பாட்டிற்கு எழுந்திருக்கையில் ஒவ்வொரு அதிதிக்கும் ஓர் தாமரை மலர் கிடைக்கும். எகிப்தியருக்குத் தாமரை வெகு சுலபமாய்க் கிடைத்ததால், அதையே சாதாரண மரியாதை யாக்கினர் போலும். இந்தப் பூவை வாங்கியவர் விருந்து முடியும்வரை கையிலே வைத்துக்கொண்டிருப்பது மரியாதை. தவிர தாமரை முதலிய புஷ்பங்களை மாலையாக்கி அதிதிகள் தலைக்குச் சுற்றுவதும் சாமான்னிய மரியாதையாம்.

அதிதிகள் உட்கார்ந்தவுடன் எல்லோருக்கும் சிறு கிண்ணங்களில் திராக்ஷாரசம் குடிக்கக் கொடுப்பார்கள். ஆண், பெண் இருதிறத்தாரும் குடிப்பது வழக்கம். குடித்துவிட்டு யஜமானனுக்கு ஆசிகள் வழங்கிச் சங்கீதம் பாதம் முதலியவற்றை நுகர்ந்து அதிதிகள் ஆனந்தமாயிருக்க, சிறிது சிறிதாக விருந்துப் பண்டங்கள் வெளிவரும். ஸ்திரீ புருஷர்கள் கலந்தும் உட்காருவதுண்டு. வெவ்வேறு அறைகளில் உட்காருவதுமுண்டு. கலந்து உட்காருவதில் ஆக்ஷேபமிருந்ததாகக் காணவில்லை. அதற்கு மாறாகத் தம்பதிகள் சேர்ந்து உட்காருவதே அவர்கள் சிலாக்கியமாகக் கொண்ட விஷயம். விருந்திடுபவர் தம்பதியாக உட்கார்ந்து வந்தவர்களை யுபசரித்து இடங்காட்டுவார்கள். சங்கீதக்காரரும், கூத்துக்காரரும், இவர்களுக்கு எழுந்து மரியாதை செய்வார்கள். தென்னிந்தியாவில் விலைமாதர் கச்சேரி நடக்கையில், வருபவருக்கு மரியாதை செய்வதற்காக ஒரு பெண் 'ரெடி'யாயிருப்பது போல வென்க. யஜமானனுடைய மேஜைக்காலுக்கு ஒரு குரங்கோ, நாயோ, அல்லது வேறு 'செல்லப்பசுவோ' கட்டியிருக்கும்.

பெண்டுகள் கூடியிருக்கும் இடங்களில் பேச்சு வெகு பலமாகக் கேட்கும். இப்பொழுதும் எந்நாட்டிலும் காணுகிறபடியே எகிப்தியரிலும் ஸ்திரீகள் ஆடை ஆபரணங்களைக் குறித்தே வெகுதூரம் பேசுவார்கள். ஜிமிக்கை அழகும், புடவைத்தரமும், தட்டார் வரன்முறையும், சாலியன் பெருமையும் எத்தனை அத்தியாயம் வேண்டுமானாலும் வரையலாம். ஆனால் நமது ஸ்திரீகளுக்கில்லாத ஆபரணம் ஒன்று எகிப்திய ஸ்திரீகளுக்குண்டு. அதாவது கால்களுக்குப் பாதரக்ஷை. இதைப்பற்றி முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். ஆதலால் இச்சமயத்தில் பாதரக்ஷை வருணனை வெகு விசேஷமாக நடக்கும். வந்தவரெல்லோரும் வீட்டின் அழகையும், அதிலுள்ள படங்கள் முதலியவற்றின் அழகையும், பாத்திரங்களுடைய பெருமையையும் புகழ்ந்து, எஜமான், எஜமானி யிவர்களுக்குத் திருப்தியுண்டாக்குவார்கள்.

மதுவைப்போலவே மாமிசாதிகளும் பல வகைப்பட்டன. ஆனால் பசுமாடுமட்டும் எகிப்தியருள் தீனிக்காக வதை படுவதேயில்லை. காளைகளும், கன்றுகளுமோ வென்றால், தாராளமாய்க் கொல்லப்படும். கறிவகைகளும், மச்சவகைகளும், மாமிசவகைகளும், திராக்ஷாரசமும் வேண்டியமட்டில் பரிமாறுவார்கள்.

அதிதிகள் கீழேயாவது அல்லது நாற்காலியின் மேலாவது உட்காருவார்கள். மேனாட்டாரைப் போல கத்தி, முள் முதலிய ஆயுதங்கள் இவர்களுக்குள் இல்லை. ஆகலால் வலதுகையைக் கொண்டே சாப்பாட்டுக் காரியம் ஆகும். சாப்பிட்டவுடன் கைகழுவுவது சாதாரண வழக்கம். நம்மவரில் தேசஸ்தப் பிராம்மணருக்குள் கைகழுவச் சர்க்கரை உபயோகிப்பதுண்டு. அதுபோல எகிப்தியருள்ளும் ஏதோ ஒரு பொடியை உபயோகிப்பார்கள்.

சாப்பாட்டுக்கு உட்காரும்போது ஈசுவரனுக்கு நமஸ்காரம் சொல்லாமல் எகிப்தியர் சாப்பிடுவதே யில்லை. இந்தியாவில் எல்லா



வருணத்தாரும் இதை யனுஷ்டிப்பது ஓர் பெரிய சனாதன தருமம். சாப்பிடும் போதோ, அல்லது சாப்பிட்டான பிறகோ, ஆஸிரிஸ் தேவதையின் உருவத்தை ஒரு க்ஷேமித்த பிரேதம் போல அதிதியொவ்வொருவருக்கும் காட்டுவதுண்டு. தேகம் அநித்தியமாதலால், ஒருவரை யொருவர் விசுவசித்து, நன்றாய்த் தின்று, ஈசுவரனை மறவாமல் காலங்கழிக்க வேண்டுமென்பது இதன் உட்கருத்து. சாப்பாடு முடிந்தவுடன் மறுபடி சங்கீதமோ, நாட்டியமோ, செரடி வித்தையோ, நடக்கும். பிறகு விருந்து முடிவுபெறும்.

## 7. எகிப்தியரின் மதம்.

எகிப்து நாட்டில் ஒரு மனிதனைக் காண்பதைக் காட்டிலும் ஒரு தெய்வத்தைக் காண்பது எளிது என்று ஒருவர் கூறுகின்றார். உண்மையாகவே எகிப்தியர் வணங்கிவந்த தெய்வங்கள் பலவாம். ரா, ஹோரஸ், ஆஸிரிஸ், ஐஸிஸ், தமு, ஆனே, ஸேத் முதலிய பல கடவுளர்கள் அவர்களால் வணங்கப்பட்டனர். ஒவ்வொரு கடவுளின் தாரதரமும் பதவியும் இன்னவென்பது கூறமுடியாததாகும். எகிப்தியருக்குக்கூட அவ்விஷயங்கள் தெரியாமலேயிருந்ததுண்டு. இவ்வாறு பல தெய்வங்கள் கொண்டாடப் படுவதற்குக் காரணம், எகிப்தியர் தனித்தனி ஸமூகங்களாகஇருந்தபோது போற்றிவந்த தெய்வங்களையே, அவர்கள் ஓரரசன் கீழமர்ந்தபோதும்விடாமல் கொண்டாடிவந்தனர், என்பதாம். இவ்வாறு வெளித்தோற்றத்துக்கு எகிப்தியர் பலகடவுளைத் தொழுபவர் என்று தோன்றின போதிலும், உண்மையில் அவர்கள் அனைவரும் ஒரே கடவுளைத்தொழும் வகுப்பினரென்பது ஊன்றிநோக்கின் தெரியவரும். ஸர்வஜகத் காரண பூதமான தெய்வம் "ரா" என்பதாம். "ஹோரஸ்" என்பது சூரியமூர்த்தி. சிலவேளைகளில் "ரா" வும் "ஹோரஸு" ம் ஒன்றாக மதிக்கப்பட்டதுண்டு. என்றாலும் ஆங்காங்கு வாழ்பவர் தங்கள் தங்களுக்கேற்ற தெய்வத்தையே முதற் கடவுளாகப் பாவித்து வந்தனர். இதனால்தான் ஒவ்வொரு தாழ்ந்த தேவதையும் உயர்ந்த தேவதையாயிற்று. நான்காம் அமென்ஹோதப்என்னுமரசன் சூரியதெய்வத்தையே பரம்பொருளாகக் கொண்டாட வேண்டி சட்டமிட்டானென்றும், அவனுடைய முயற்சி பயன் பெறவில்லை யென்றும் முன்னமேயே கூறியுள்ளோம். இவ்விஷயம் நமது இந்தியாவில் ஆக்பர் சக்கரவர்த்தி ஏற்படுத்திய ஒரு கொள்கையை ஞாபகப்படுத்துகின்றது. நவீன துவேஷிகளான எகிப்தியர் அக்கொள்கையை அங்கீகரிக்கவில்லை. பழையகொள்கை முன்னிலும் பன்மடங்கு அதிகமான மும்முரத்துடன் அனுசரிக்கப்படத் தொடங்கிற்று. அதுமுதல் எகிப்தியருடைய மதம் மாறுபாடடையவில்லை. எகிப்தியரது கொள்கைக்கும் மற்றைய மதத்தினர் கொள்கைக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆத்மா நித்தியம் என்பது எகிப்தியரது அபிப்பிராயம். அவர்களுடைய போதனைகள் எல்லாம் மாந்தர் நன்னெறியில் நடந்தொழுக வேண்டுமென்று வற்புறுத்துகின்றன.

அவர்கள் வணங்கிவந்த தெய்வங்களைப்பற்றி இரண்டொருவார்த்தை சொல்லுவாம். "ஆமென்" என்பது எகிப்து தேசத்தின் வடபாரிசத்தில் அரசுசெலுத்திய எதியோபியரின் முக்கியகடவுளாம். சண்டைசெய்யும்போது அவர்கள் அத்தெய்வத்தின் பெயரையே கூவிக்கொண்டு போவார்கள். அத்தெய்வம், அவர்களுக்கு அசரீரியாய் நின்று வர்த்தமானங்களை வெளியிடுவதுண்டாம். எதியோபியா அரசர்களை அத்தெய்வமே தேர்ந்தெடுக்குமாம்.

"அனுபிஸ்" என்பது எகிப்தியருடைய வேட்டைத்தெய்வம். அது நாய்த்தலையையுடையது. வேட்டையாடுவதில் நாய் மிகுந்த உதவிசெய்வதினால், வேட்டைக்கு அதிதெய்வமான 'அனுபிஸ்' என்னும் தேவதைக்கு நாய்த்தலையை யமைத்தனர் போலும்!

இவ்வனுபிஸ் ஆஸிரிஸ் என்னும் தெய்வத்தின் மகனும்.

“ஆபிஸ்” என்பது எகிப்தியருடைய நந்தியங்கடவுள் எனப்படும். காகெள என்னும் அரசனால் இத்தெய்வத்தின் வழிபாடு ஏற்படுத்தப்பட்டது. ஒரு பசுவின் வயிற்றினின்றும், மின்னலினால் கருத்தரிக்கப்பட்டு, இந்நந்தி தோன்றுகின்றதென்பது எகிப்தியரின் அபிப்பிராயம். இவ்விருஷபத்தின் நிறம் கருமை. முகத்தில் நாற்கோண வடிவுள்ள ஒரு வெள்ளைச்சதுரம் இருக்கும். அதன் முதுகில் ஒரு கழுகின் உருவமும், நாக்கில் ஒருவித வண்டின் உருவமும் இருக்கும். வால் மயிர் இரட்டையாக விருக்குமாம். இவ்வித அடையாளங்களுடைய காளையைத் தேர்ந்தெடுத்து, அதற்கென்று ஏற்பட்ட கோயிலில் கொண்டு போய்விட்டு அதைத் தொழுவார்கள். இந்நந்தியைக் குறித்துக்கொண்டாடப்படும் திருவிழா ஏழுநாள் நடைபெறும். திரள் திரளான ஜனங்கள் விழவு நடக்கும் ‘மெம்பிஸ்’ நகரத்துக்குச் செல்வார்கள். இந்நந்தி ஆஸிரிஸ் என்னும் தெய்வத்தின் அவதாரமென்று எகிப்தியர் எண்ணியிருந்தபடியால், ஜனங்கள் அதனிடம் ஆரூடம் கேட்க வருவார்கள். கொடுக்கப்படும் உணவை அது ஏற்றுக்கொள்ளுமானால் நற்சகுனமென்றும், ஏற்றுக் கொள்ளாமற்போனால் தீய சகுனமென்றும் கருதப்பட்டது. நமது நாட்டில் பிண்டத்தைக் காக்கை எடுத்துத் தின்னாமலிருந்தால், சிராத்தம் பலிப்பதில்லையென்று எண்ணுவதுபோல வென்க. தீபதூபங்களால் அந்நந்தியை ஆராதித்துவிட்டு அதன் காதருகில் சென்று ஆரூடம் கேட்க விரும்புவோர்கள் பலவிதக் கேள்விகளைக் கேட்பார்கள். கேட்டபிறகு ஜனங்கள் தங்கள் இரு காதுகளையும் பொத்திக்கொண்டு வெளியில் வந்து கைகளைச் செவித்துளையினின்றும் எடுப்பார்கள். அப்போது முதன்முதல் செவியில் விழும் வார்த்தையையே தாங்கள்கேட்ட ஆரூடத்தின் விடையென்று கருதுவார்களாம். ஒரு விருஷபம் இறந்துவிட்டால், அதைப்போன்ற ஏற்ற லக்ஷணங்கள் பொருந்திய வேறொரு விருஷபத்தைக் கண்டுபிடிக்கும் வரையில் ஜனங்கள் துக்கத்தில் ஆழ்ந்திருப்பார்கள். புதிதாக நந்தி கிடைத்ததும் அதைச் சகல மரியாதையுடனும் மெம்பிஸ் நகரத்துக் கோவிலில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்.

“ஆமென்” என்பது சூரியதெய்வம். அதனைத்தான் நான்காம் அமென்ஹோதப் என்னுமரசன் முதற்கடவுளாக்க முயன்றான்.

“ஹோரஸ்” என்பதும் சூரியமூர்த்தி. ஒவ்வொரு நாளும் மனிதகோடிகளின் நன்மைக்காக ‘ஸேத்’ அல்லது ‘ஸுதேக்’ என்னும் அசுரனுடன் சண்டைசெய்வது இந்த ‘ஹோரஸ்’ என்னும் தெய்வமாம். இவ்வசுரன் ஒவ்வொரு ராத்திரியிலும் தோற்றோடிப் போய், மற்றும் நாட்காலையில் முன்போலச் சண்டைக்கு வருவானும். இவ்விஷயத்தில் இந்தியர்களுக்கும் எகிப்தியர்களுக்குமுள்ள ஒருவித ஒற்றுமை கவனிக்கத்தக்கது.

“ஐஸிஸ்” என்பதன் வணக்கம் எங்கும் வியாபித்திருந்தது; இதற்கென்ற திருவிழா புஸிரிஸ் என்னுமிடத்தில் நடைபெற்றது. தர்மதேவதையெனக் கொண்டாடப்பட்டது இந்த ஐஸிஸ் தேவதையே.

“ஆஸிரிஸ்” என்னும்தேவதை மனிதர்களுக்கு உழவுதொழிலைக்கற்றுக்கொடுத்ததாம். பாட்டு, கூத்து முதலிய கேளிக்கைகளுக்கெல்லாம் இதுதான் அதிதேவதை. உலகமுழுவதிலும் நாகரீகத்தைத் தெரிவிப்பதற்காக இத்தேவதை சஞ்சாரம் செய்ததாம். இதன் தம்பியான ‘தைபூன்’ அண்ணனைக் கொன்று அவன் உடலை இருபத்தாறு கூறுக்கி விட்டானும். ஆஸிரிஸின் மனைவியான மேற்கூறிய ஐஸிஸ் கணவனின் உடற் கூறுகளைச் சேர்த்தெடுத்ததில் அவனுடைய சிறப்பு அவயவத்தைக் காணாமையால், அதைப்போன்ற உருவமொன்றைச் செய்து தெய்வமெனக் கொண்டாடும்படி ஜனங்களுக்குக் கட்டளையிட்டனளாம். அவ்வாறு இலிங்கமாகிய ஆஸிரிஸின் சிறப்பு அவயவம் வணங்கப்படும் பொருள்களில் ஒன்றாக ஏற்பட்டதெனக் கர்ண பரம்பரைச் செய்தியுண்டு. ஆஸிரிஸ் இந்தியாவில் பிறந்ததாக ஒரு சாரார் கூறும் கூற்றுக்கும் மேற்கூறிய இலிங்க வணக்கத்துக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டு.

கோயில்களில் பூஜைசெய்யும் குருக்கள்மார் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டிருப்பார். யாரேனுமொருவன் இறந்துபோனால், நெருங்கிய சுற்றத்தார் தலைக்ஷவரம் செய்துகொள்வதில்லை. மயிரை வளரவிடுவார்கள். எகிப்தியனொருவன் தேச சஞ்சாரம் செய்தால் திரும்பி வரும் வரையில் க்ஷவரம் செய்துகொள்வதில்லை. மகம்மதியர்களைப் போலவே, எகிப்தியரும் தங்கள் சிறுவர்களுக்கு ‘ஸுன்னத்’ பண்ணுவதுண்டு. ஆடவர்கள் இரண்டு வஸ்திரங்கள் உடுத்துக் கொள்வார்கள். ஸ்திரீகளுக்கு ஒரே வஸ்திரந்தானுண்டு. குருக்கள்மார் மூன்று நாள்களுக்கொருமுறை தேக சுத்தத்துக்காகச் சர்வாங்க க்ஷவரம் செய்து கொள்வார்களாம். பிரதிதினமும் அவர்கள் பகலிலும் இரவிலும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் பண்ணுவார்கள். மாமிச போஜனம் அவர்களுக்கு விலக்கப்பட்டிருந்தது. குருத்துவம் பரம்பரை பாத்தியமானது. பானத்திற்கு வெண்கலப் பாத்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. பாத்திரசுத்தியிலும் தேகசுத்தியிலும் எகிப்தியர் முதன்மையானவர். வைதீக கருமங்களை எள்ளளவேனும் பிழைபடாமல் செய்வார்கள்.

காளை மாடுகளை அவர்கள் பலியிடுவதுண்டு. இந்தியர்களைப் போல, எகிப்தியர்களும் பசுவை மட்டும் சர்வ பரிசுத்தமான பிராணியெனக் கொண்டாடுவார்கள். எகிப்தியர்கள் அந்நியருடைய பாத்திரங்களைத் தொடமாட்டார்கள். அந்நியரால் பாகஞ் செய்யப்பட்ட சோற்றை உண்ணார்கள். பலியிடுவதில் ஆடுகள் சிலகோவில்களில் உபயோகிக்கப்பட்டன. பன்றி, எகிப்தியருக்குச் சர்வ நிஷித்தமான பிராணி, எவனாவது பன்றியைத் தொட்டுவிட்டால், உடனே ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். பன்றி மேய்ப்பவர்கள் கோயில்களுக்குள் வரக்கூடாது. அவர்கள் மற்றை வகுப்பாருடன் கல்யாண சம்பந்தம் செய்யவுங்கூடாது. இந்த அசுத்தப்பிராணியும் பாக்கஸ், லூனா, என்னும் தேவதைகளுக்குப் பௌர்ணமி தினங்களில் பலியிடப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது.

அரசனுடைய சர்வாதிகாரத்துக்குத் தடையாயிருந்தவர் குருக்கள்மார் என்று முன்போரிடத்தில் கூறியிருக்கிறோம். அவர்களுக்கு விசேஷ பலமுண்டானது அவர்களுடைய அளவிறந்த செல்வத்தினாலேயே. தர்மசிந்தையுள்ள ஒவ்வொரு அரசனும் கோவில்களுக்குப் பலவிதமாகத் தானங்கள் செய்வான். ஜனங்களும் பிரார்த்தனை செய்து காணிக்கைப்பொருள்களைக் கொடுப்பதுண்டு. பூமிகள், தோப்புகள், கறவைமாடுகள், காளைமாடுகள், பொன் வெள்ளிக்கட்டிகள், நவமணிகள், அடிமைகள் முதலிய எப்பொருள்களும் கோயில்களுக்குக் காணிக்கையாகக் கொடுக்கக் கூடியனவாம். தேவஸ்தானத்தைச் சேர்ந்ததாகவே ஒரு சயின்னியம் இருந்ததென்றால், அதன் செல்வாக்கையும் சிறப்பையும் பற்றித் தனியே கூற வேண்டுமோ?

கீழ்ப் பிராணிகளுக்குள், எகிப்தியரால் கொண்டாடப்பட்ட சில ஜந்துக்கள் இருந்தன. பூனை, கீரி, நாய், கழுகு, ஓநாய், முதலை முத

லியவைகள் அவர்களால் பூஜிக்கப்பட்டு வந்தன. இவைகள், எகிப்தியருக்குத் தீங்கிழைத்து வந்த மற்றைய பிராணிகளுக்கு விரோதிகளாக இருந்தபடியால் பூஜிக்கப்பட்டன போலும். ஆனால் எகிப்தியர் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் கூறுகின்றனர். ஆஸிரிஸ் என்னும் தேவதையின் ஆத்மா ஒரு காளை மாட்டில் புகுந்தபடியால் காளைமாடுகள் பூஜாருகமாயின. பூஜாவிதிகளடங்கிய கிரந்தத்தை ஒரு கழுகு மூக்கினால் தூக்கிக் கொண்டுவந்ததினால், அது பூஜிக்கப் பட்டது. ஓநாய் சண்டைக்குத் துணை செய்தது. மீனிஸ் என்னும் அரசன் நாய்களால் துரத்தப் பட்டபோது மோரிஸ் என்னும் ஏரிக்குப் போய்ச் சேர்ந்து, அங்கு கரைமீதிருந்த முதலையின் மீதேறிக் கொண்டு அக்கரையேறிப் பத்திரமாய்ப் போனபடியால், முதலை கொண்டாடப் படக் கூடியதாயிற்று. இவ்வாறே எகிப்தியர் பூஜிக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு ஐதிகமான காரணமுமுண்டு.

இவைகள் எல்லாவற்றையுங் காட்டிலும் எகிப்தியருள் வெகு ஆச்சரியமான வழக்கமொன்றுண்டு. அஃதென்னவெனில், அவர்கள் பிரேதங்களைப் பதனஞ் செய்ததுவாம். பிரேதங்களைச் சுகந்த பரிமள வஸ்துக்களால் பதனப் படுத்துவதற்காகச் சில உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பிரேதத்தினுடைய மூளையையும் குடலையும் ஆயுதங்களினாலும் மருந்தினாலும் வெளியே எடுத்து, அவைகளைப் பனங்கள்ளினால் கழுவி, பரிமளப் பொடிகளால் நிரப்புவார்கள். உடலுக்குள்ளும் சுகந்த வஸ்துக்களை நிரப்பி, அதை மறுபடியும் நன்றாகத் தைத்து, அதன் மீது ஒருவித திராவகத்தைத் தடவிச் சிலகாலம் வைத்திருப்பார்கள். பின்னர் மறுபடியும் அப்பிரேதத்தைக் கழுவி, ஒருவித பசையில் நனைக்கப்பட்ட பஞ்சுத்துணியால் சுற்றி உறவினரிடம் கொடுத்து விடுவார்கள். இவ்வாறு செய்வதற்கு அதிகச்செலவு பிடிக்குமாகையால், ஏழைச் சனங்கள், குடர் முதலியவற்றை வெளியே எடுக்காமல் உடலுக்குள் செல்லும்படி ஒருவித திராவகத்தை ஊற்றிச் சிலகாலம் வைத்திருந்து, சுகந்தப் பொடிகளால் பிரேதத்தைப் பதனம் செய்வார்கள். அழகாலும், அந்தஸ்தாலும் மேம்பட்டோருடைய பிரேதம் நாலைந்துநாள் வீட்டிலேயே யிருந்த பிறகு தான் பதனஞ் செய்வதற்கு அனுப்பப்படும். உறவினர்கள் அவ்வாறு சுகந்தமூட்டப்பட்ட பிரேதத்தைத் தகுந்த அளவுள்ளதோர் பெட்டியில் அடக்கஞ்செய்து பிரேத அறையில் சுவற்றின்மீது சார்த்தி விடுவார்கள். இவ்வாறு பதனம் செய்யப்பட்ட பிரேதங்கள் நெடுங்காலம் கெடாமலிருக்கும். நாலாயிரம் வருஷங்களுக்கப்பால் கண்டெடுக்கப்பட்ட பிரேதங்கள் இன்னும் ஆச்சரியப்படத்தக்க நல்லநிலைமையில் இருப்பனவற்றை ஐரோப்பியக்கண்காட்சிசாலைகளில் காணலாம்.

இவ்விதமான பிரேதங்கள் உறவினரால் நன்கு மதிக்கப்பட்டு வந்தன. இவைகள் கடனுக்கு ஈடாக வைக்கப்படுவது முண்டு. அவ்வாறு வைத்த பிரேதங்களை மீட்காமல் போனவர்கள் இறந்தால், அவர்களுக்குச் சரியான சரம கிரியைகள் செய்யப்படாவாம். கடன் கொடுத்தவர்களை ஏமாற்றப்பார்க்கும் கெட்ட வழக்கத்தைத் தடுப்பதற்காக இந்த விதியை உண்டுபண்ணினர் போலும்!

(இன்னும் வரும்.)

பள்ளிக்கூடங்களில் சம்பளம் உயர்த்துவதற்கு முக்கிய காரணம் கட்டடம் முதலிய துணைக்கருவிகள் நன்றாகவேண்டுமென்பதும், முதற்கருவியாகிய உபாத்தியாயருக்கு வயிறுநிறையச் சாப்பாடு கிடைக்கவேண்டுமென்பதுமாம். ஆனால் முந்தியது வெகு சுலபமாயாகிவிட்டது. உபாத்தியார் பிழைப்புத்தான் பழையப்படியே இருக்கிறது. பிரைவேட் மானேஜர்களுக்கு இவ்விஷயத்தில் அக்கறையே கிடையாது. ஆதலால் இது விஷயத்திலும் சர்க்கார் நிர்ப்பந்தமில்லையேயென்று ஒரு உபாத்தியாயர் பிரலாபிக்கிறார்.



## மேனாட்டாரும் கீழ்நாட்டாரும் வித்யாவிஷயம்

(தொடர்ச்சி)

ஸ்ரீமான் கே. ஏ. துரைசாமி அய்யர் அவர்கள் பி.ஏ., எல்.டி.

சென்ற பங்குனிமாதத்துச் சஞ்சிகையில் வித்தியாவிஷயம் கூறிப் போந்ததில், முக்கியமாய் வித்தைகளை அபிவிருத்திசெய்யும் கிரமங்களும், அதற்கு வேண்டிய உபாயங்களும் கூறப்பட்டதுடன், காலத்திற்குத் தகுந்தபடி வித்தைகளை யனுசரித்தும், சற்றே மாறுபடுத்தியும் கொண்டுபோக வேண்டுமென்னும் விஷயம் கூறலாயிற்று.

இந்தச் சஞ்சிகையில் வேறு சில அம்சங்களை ஒருவாறு வரைவதாக உத்தேசித்திருப்பதில், சில சாரார்களுக்கு அபிப்பிராய பேதங்கள் காணப்படுமாதலின் அவர்கள் நொந்துகொள்ளாமல் மன்னிக்கவேண்டுமென்னும் பிரார்த்தனையை முன்னிட்டு எழுதலாகிறது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று கூறியுள்ளது யாவரும் அறிந்த விஷயமே. சகல ஜாதியாரும் இவ்வளவு அருமையான வித்தையைக்கற்றுக்கொள்ளவேண்டுமென்பது அவசியமாய்த் தோன்றுகிறதானாலும், சிலர் இதினின்றும் வித்தியாசமாய் அபிப்பிராயப்படுவார்களென்பது திண்ணம். அவர்கள் அங்ஙனம் எண்ணுவதற்குச் சான்றுகள் சாமான்னிய நடவடிக்கைகளில் சில சமயங்களில் ஏற்படுகின்றன. 'கீழ் ஜாதியார்' என்று கூறப்படுபவர்களுள் சிலர் தத்தம் வித்தியா மகிமையால் உன்னத ஸ்தானங்களை வகிக்கும்படி ஏற்படுகிறதால், சில சமயங்களில் 'உயர்ந்த ஜாதியார்' சற்று உதாசீனமாய் நடத்தப் படலாம். இது வித்தையினுடைய தோஷமா, அல்லது அந்த வித்தையைக் காரியாகாரியங்களில் அனுபவத்திற்குக் கொண்டு வராததா என்பதைக் கூறவும் வேண்டுமா?

"நிறைகுடம் நீர் தளும்பாது" என்னும் நியாயம் நன்றாய்க் கற்றறிந்தவர்களுக்கே அல்லாது, அரைகுறையாய்ப் படித்தவர்களுக்கல்லவல்லவா? ஆதலால் சில சமயங்களில் இம்மாதிரி காணப்படும் தோஷங்களை முன்னிட்டு வித்தை மற்றவர்களுக்கு வேண்டாமென்று கூறுவது அவ்வளவு நியாயமாய்த் தோன்றவில்லை. தர்ம நியாய சாஸ்திரங்களைக் கற்றவர்களிலுஞ் சிலர் மேல் ஜாதியாராகினும், அவற்றைத்தம் நடவடிக்கையில் அனுபவத்திற்குக் கொண்டுவரக் கூடவில்லை யென்பது சாதாரணமாய்க் காணப்படுகின்றது.

தவிர சற்றேனும் எழுதப்படிக்கத் தெரியாதவராயின் அவர் எளிதில் மோசத்திற்கும், தற்குறியார் கையெழுத்துப் போடப்பட்ட பத்திரங்கள் சில சமயங்களில் பிறந்து அவற்றால் உபத்திரவத்திற்கும் ஆளாகிறார்கள். கணக்குவழக்குத் தெரியாதவர் ஆனதினால் உத்தியோகஸ்தர்கள் நியாயங்களை எடுத்துச் சொன்னாலும், சட்டங்களையும் கணக்குகளையும் காண்பித்தாலும், கிரகிக்கும் சக்தியின்றித் தப்பபிப்பிராயங்களுடன் நடக்கிறார்கள். இம்மாதிரியான குறைவுகளை நீக்கவும், வேலையில்லாக் காலங்களில் ஏதாகிலும் சன்மார்க்க போதனைகளடங்கிய புஸ்தகங்களைப் படித்துக் காலத்தைப் போக்கட்டும் என்று உத்தேசித்தும், எவ்விதமான பிழைப்பிற்கும் கல்வி யனுகூலமாயிருப்பதால், மேனாட்டு ராச்சியங்களில், வித்தை சகலமான ஜனங்களுக்கும் அவசியமென்று சட்ட நிரூபண சபைகள் மூலமாக அவர்களுக்கு வித்தை கற்பிக்கும் விஷயமாய்ச் சட்டங்கள் பிறந்திருக்கின்றன.

சாதாரணமாய், ஆறு, ஏழு, வயதுமுதல், 14, 15-வயது வரையில் எல்லாரும் பள்ளிக் கூடங்களுக்குப் போய்த்தான் தீரவேண்டுமென்று நிர்ப்பந்தமுண்டு. ஒவ்வொரு குடியிருப்பிலும்

படிக்கத் தகுந்த குழந்தைகள் எவ்வளவு உள்ளன என்று கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. அக்குழந்தைகளுடைய தாய் தகப்பன்மாரோ அல்லது ரக்ஷகர்களோ, அவர்களைக்கிரமமாய்ப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதினின்றும் தவறுவரேல், அவர்கள் சிக்ஷைக்குப் பாத்திரர் என்று சட்டம் படிக்கிறது.

தாய்தந்தையர்கள் பரம ஏழைகளாயிருந்து குழந்தைகளுக்குச் சம்பளங் கொடுக்கவும், புஸ்தகம் கடிதம் முதலியவை வாங்கிக் கொடுக்கவும் சக்தியற்றவர்களாயிருக்கலாமாதலின், அக்குறையை நிவாரணஞ் செய்யும்பொருட்டு, ஸ்கூல் அதிகாரிகள் அத்தகைய குழந்தைகளைச் சம்பளமில்லாமற் படிப்பிப்பதும் தவிர, அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களையும் சம்பாதித்துக் கொடுக்கிறார்கள். இதுமாத்திரமேயல்ல. 'வீட்டிலே குடிப்பதற்குக் கஞ்சியும் கூழுந்தான்' என்னும் அவஸ்தையில் அநேகர் இருக்கலாமாதலாலும், பசி உபத்திரவம் ஒரு பக்கமிருந்தால் படிப்பில் கவனம் செல்லாதாதலாலும் ஏழையர்களுடைய இக்கஷ்டத்தை நீக்கச் சில ஸ்கூல்களில் 'இடைவேளையுண்டி' உதவி, ஆதரவுடன் குழந்தைகளைப் படிப்பிக்கிறார்கள்.

தவிரவும் கைத்தொழில் செய்து 'அத்தக்கூலி' வாங்கிப்பிழைக்கும் ஜனங்களின் குழந்தைகள் பாலிய பருவத்திலிருந்தபோதிலும் குடும்பத்திற்கு யதாசக்தி திரவியம் சம்பாதித்துக்கொடுக்கிறார்கள். ஆதலின், அந்தச் சகாயத்தைக் கெடுக்காமல் அவர்களுக்கும் ஒரு மாதிரி வித்தியாப்பியாஸம் கிடைக்கும் பொருட்டு 'இராத்திரிப் பள்ளிக்கூடம்' நடத்தி வருகிறார்கள். குடியானப்பிள்ளைகள் உழவு, பயிர்நடுதல், அறுப்பு முதலிய காலங்களில் ஸ்கூலுக்குப்போக அனுகூலமாயிராததால், அவர்களுக்கும் ஏகதேசமாகச்சாகுபடி இல்லாத காலங்களில் ஸ்கூல்கள் நடத்தப்படுகின்றன. குருடு, செவிடு, ஊமை, முதலியோர்க்கும் இவ்வாறே! இம்மாதிரியாக சகல குழந்தைகளும் வித்தையை யடையவேண்டுமென்னும் கருத்துக்கொண்டு, 'கட்டாயப் பிரைமரிப் படிப்பு' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நம் இந்த தேசத்தில், பிள்ளைகள் மாத்திரமே அதிகமாய்ப் பள்ளிக்கூடத்திற்குப் போவதால், மேனாட்டிலும் அப்படியே இருக்கலாமென்று நினைப்பது சகஜமே. ஆனால் அங்கேயோ அப்படியல்ல. பிள்ளைகளுக்குப் படிப்பு எவ்வளவு அவசியமோ அவ்வளவு பெண்களுக்கும் அவசியமென்று தீர்மானிக்கப்பட்டு, அவர்களுக்குத் தனித்தனி ஸ்கூல்கள் வைத்தும், கலந்தும் படிப்பிக்கப் படுகிறார்கள். இது காரணம்பற்றி மேனாட்டு ஸ்திரீகள் தம் புருஷர்களுடைய பாரங்களைத் தாங்களே சற்றுத் தாங்கியும், தம்குழந்தைகளை நேர்வழியில் படிப்பித்தும், இன்னும் அநேக விதமாய் உபகாரம் புரிகிறார்கள். படிப்புஇவ்வளவுதூரம் நிர்ப்பந்தமாயிருப்பதனாற்றான் சாமான்னியமாய் மேனாடுகளில் (ஜப்பானிலுங் கூடத்தான்) படிக்கத் தகுந்த வயதுள்ள 100-குழந்தைகளில் 95-க்குக்குறையாமல் ஆண்பெண்ணடங்கலாய்ப் பள்ளிக்கூடம் போகிறார்கள். தற்குறிகள் துர்லபம். நம் நாட்டிலோ சொல்லவேண்டியதில்லை. நாட்டுப்புறங்களுக்குப் போய்விட்டால் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களைக் காண்பதரிது. "படிப்பு அதிகமாய்ப் பரவாமலிருக்கும்போதே பி. ஏ. பாஸ் செய்துவிட்டு; 15-ரூபாய் உத்தியோகத்திற்குத் தாளம் போடவேண்டி யிருக்கிறதே" என்று சிலர் ஆக்ஷேபிக்கக் கூடும். இங்ஙனம் கூறுவது படிப்பின் பிரயோஜனம் சர்க்கார் உத்தியோகம் ஒன்று தான் என்று நினைப்பதாலல்லவா? அஃதன்று. முக்கியமான தாற்பரியம் என்னவென்றால் அவரவர்படிப்பினால் புத்தி விசாலித்து, தாம் செய்யுங் காரியங்களைப் படிப்பில்லாத தம்முன்னோர் செய்ததினும் சீர்மையாய்ச் செய்யவேண்டுமென்பதல்லவா?



சிலர் சற்று எழுதப்படிக்கத் தெரிந்துவிட்டால் தலை கீழாய் விழுகிறார்கள். அவர் முன்னோர் செய்துவந்த வியவசாயம் நெசவு முதலிய தொழில்கள் இவர்களுடைய கௌரவத்திற்குக் குறைவாகி விடுகின்றன. இங்ஙனம் நினைப்பது என்ன மூடத்தனம்! ஒருகாலத்தில் ஒருவன் பூட்ஸ்களுக்குச் சாயம் பூசிப் பிழைத்து வந்தான். அவன் யோக்கியமாய் வேலைசெய்து வந்தவனாதலால், காலக்கிரமத்தில் அவனுக்கு உயர்ந்த ஸ்திதி வாய்த்தது. அவனைத் தாழ்ந்த நிலைமை முதல் அறிந்த ஒரு கிரகஸ்தன் பொறாமையால் அவமானிக்கக் கருதி, 'நாலுபேரை வச்சிண்டு' "நீ பூட்ஸ்களுக்குச்சாயம் போட்டுக்கொண்டிருக்கவில்லையா?" என்று வினவ அவன் 'மூஞ்சிபிலடிச்சாப் போல்' "ஆம் அது மெய்யே, ஆனாலும் அந்தக்காரியத்தை நான் எல்லோருக்கும் திருப்திகரமாய்ச் செய்துகொண்டு வந்தேனல்லவா?" என்று பதிற் சொல்ல, கிரகஸ்தன் நாணமடைந்து தலைகுனிந்து சென்றான். இதனாலறியவேண்டியது யாதெனின், அவரவர் ஏற்றுக்கொண்ட வேலையைக் குணம்பெறச்செய்யாததுதான் அகௌரவமே யொழிய, வேலையில் கௌரவாகௌரவம் ஒன்றுமில்லை, என்று. ஆகையால் உபதேசகர்களாய் ஏற்படுகிறவர்கள் இம்மாதிரியான துரபிமானங்களை ஆரம்பத்திலேயே வேரோடு பிடுங்கிக் களைதல் வேண்டுமென்பதும் தானே ஏற்படுகிறது.

நம்மிந்தியாவில் பரோடா தேசத்து மகாராஜாவாகிய சத்திரபதி ஸயாஜீராவ் கைக்வார் மாத்திரம் அவர் ராச்சியத்தில் சம்பள மில்லாமல் 'ப்ரைமரிப்படிப்பு' ஏற்படுத்தி யிருக்கிறார். இந்தியா கவர்ன்மெண்டாரும் அத்தகையப் படிப்புக்கொடுக்க வேண்டியது அத்தியாவசிய மென்று தீர்மானித் துள்ளாராயினும், அதற்கு வேண்டிய திரவிய கோடிகளை அவ்வளவு சடுதியிற்காணக் கூடாமையால் அவர்கள் உத்தேசம் நிறைவேறத் தாமதப்பட்டிருக்கிறது.

ஆனால் மற்ற ராச்சியங்களில் எங்ஙனம் சாத்தியமாயிருக்கிறது? எந்தக் காரியமும் தக்க ஏற்பாடுகளிருந்தாற் கைகூடுமல்லவா? என்றால், அங்கங்கே ஜனங்களுடைய அத்தியந்தப் பிரயத்தினமும், ராஜாங்கத்தினுடைய ஒத்தாசையும் சேர்ந்து காரியங்கள் முடிவு பெறுகின்றன. சில ராச்சியங்களில் சர்க்காரே சகல பாரத்தையும் வகித்து நடத்திவருகின்றார்கள். வேறுசில தேசங்களில் ஜனங்களுடைய உற்சாகமே முக்கிய காரணமாயிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் "வித்தைக்கமிட்டி" ஒன்று ஏற்பட்டு இருக்கிறது. அவ்விஷயமாக ஜில்லாவில் ஒரு விசேஷ வரிபோடவும், அதை வசூலிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு. இம்மாதிரி திரவியத்தைச் சம்பாதித்து வேண்டியபடி விநியோகம் செய்யவே சர்க்காராரும் அதற்கு அனுகூலமாக ஒத்தாசை புரிகிறார்கள்.

தவிரவும் வித்தையில் சிரத்தையுள்ள தனிகர்கள் தங்கள் ஜீவதசையிலேயோ, அல்லது, மரணத்தின் முன்போ, தங்கள் சொத்தில் ஒரு அம்சத்தை வித்தைக்கென்று விட்டுவிடுகிறார்கள். அதனால் கம்மிட்டியாருக்குச் செலவிற்குவேண்டிய பணம் தாராளமாய்க் கிடைத்து விடுகிறது. இக்கம்மிட்டியார்கள் மாதாந்தர வருஷாந்தர ரிபோர்ட்டுகள் பிரசுரிக்கிறார்கள். அதன் மூலமாய் என்ன என்ன குறைகள் உண்டாயிருந்தன வென்றும், அவைகளை நீக்க எம்மாதிரி முயற்சிகள் செய்யப்பட்டன வென்றும், ஒருவர் அனுபவங்களை மற்றவரனுபவங்களுடன் ஒத்துப்பார்த்துத் தங்கள் முறைகளைச் சீர்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆகையால் நாளுக்குநாள் பலவகை வித்தைகளும் செழித்து ஓங்கி வளர்கின்றன.

நம்தேசத்திலும் வித்தை இம்மாதிரிவிருத்தியடையவேண்டுமானால், நாமும் அவ்வழிகளை யனுசரித்து நடந்தால்தான் சாத்தியப்படும்.

எல்லாக் காரியங்களுக்கும் "கவர்ன்மெண்ட் ஏன் செய்யக்கூடாது?" என்று கேட்பது அவ்வளவு யுக்தியுக்தமாயிருப்பதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு காரியத்திற்கும் முழுவதும் அன்னிய ஒத்தாசை வேண்டிவந்தால், எக்காலத்தில்தான் நாம் நமது காரியங்களை நோக்கிக் கொள்ளச் சமர்த்தராவது? கவர்ன்மெண்டார் அவர்களாலியன்ற ஒத்தாசை செய்துகொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் ஜனங்கள் அதிக சிரத்தையெடுத்து உழைத்து, அவர்களை வேண்டிக்கொண்டால் இன்னும் அதிக ஒத்தாசை செய்வார் என்பதிற் சற்றும் ஐயமில்லை. ஆகலால் ஒவ்வொரு கிராமத்திலும் வித்யா நிர்வாக சபையொன்று ஏற்பட்டு, அதன் பிரதிநிதிகள் தாலூகா சபைகளுக்கு மெம்பர்களை அனுப்ப, இப்படியே மேன்மேலும் ஜில்லா சபைகள் ராஜதானி சபைகள் ஏற்பாடாகவேண்டும். விருக்ஷம் அடித்தூண் ஒன்றாயிருந்தும், பெருங்கிளைகளும் சிறுகிளைகளுமாய்ப் பிரிந்து, பரஸ்பரம் பலத்தை யடைவது போல, இச்சபைகள் வலுத்து, விஷயங்களை நேராய் ஆராய்ந்து காரியங்களை யாதொரு இடையூறுகளும் நேராமல் நடத்தவேண்டும். இவ்வளவு பொறுப்பை ஏற்றுக்கொள்வது சிரமமானாலும், பாரம் தூக்கத்தூக்கத்தான் அதிக பாரத்தை வகிக்கப் பலமுண்டாகும். ஆகலால் சிறிய காரியத்தை முதலிலாரம்பத்திலும், அது எந்தப் பெரிய காரியத்தின் அம்சமோ அதன் பேரில் திருஷ்டிவைத்துக்கொண்டு நாளடைவில் அந்தப் பெரிய காரியமும் எளிதில் முடியும்படி முயலவேண்டும்.

இவ்விஷயங்களுக்கு ஜன உற்சாகமும் தனபலமும் முக்கியம். வித்தையானது ஒரு மனிதனுக்கு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொடுக்கும் சாதனமாயிருத்தலால், அந்தத் தானத்தைக் காட்டிலும் விசேஷ பலனைக் கொடுக்கக்கூடியது வேறொன்றில்லையென்று தீர்மானித்து, நம்முள் உள்ள தனிகர்கள் ஒத்தாசை செய்ய முன் வருவாரேயானால், காரியம் எளிதில் கைகூடும். பகவான் ராஜாக்களை ஜனங்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தியிருக்கிறார். அவர்கள் பாரமோ எளிதில் தாங்கக் கூடியதன்று. அது போலத் தனிகர்களுக்கும் பெரிய பொறுப்பை வைத்திருக்கிறார். அவர், "தனம் தன்னுடையவும் தன் குடும்பத்தினுடையவும் விசேஷ சுகத்திற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று நினைப்பது ரொம்பவும் தப்பிதம். "ஜனங்களுடைய நன்மைக்காக அவர்கள் தனத்திற்கு ரக்ஷணகர்த்தா" என்று அநேகர் முன் கூறியுள்ளது போல, தற்காலத்தில் ஒருகோடிப் பிரபுவும் தருமச்சிந்தையு முள்ளவருமான ஆண்ட்ரூ கார்னகீ என்பவர் கூறியிருக்கிறார். அவர் இங்ஙனம் கூறியுள்ளார் மாத்திரமன்று. ஸ்காத்லாந்து தேசத்திலுள்ள சிறுவர்கள் யாருக்கும் தரித்திரத்தினால் படிக்க முடியாமல் போனால், அவர்கள் எல்லோருக்கும் யூனிவர்ஸிடி படிப்பு எளிதில் கிடைக்கும் வண்ணம் கொஞ்ச காலத்திற்கு முன் இவர் $7\frac{1}{2}$-கோடிரூபாய் தர்மமாய் விட்டார். அதுபோல நம்தேசத்திலும் தாதா என்னும் பார்ஸீ தனவான் ஸையன்ஸ் விஷயத்தில் விசேஷமான இரகசியங்களைக் கண்டுபிடிக்குமாறு ஒரு வித்யாசாலை யேற்படுத்த 30-லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கிறார். இதுபோலவே வேறு சிலரும் செய்திருக்கிறார்கள். இதுதான் தனமிருப்பதற்கு லக்ஷணம். தனத்தின் பிரயோஜனமும் இதுவே. ஆதலால் யாராரசக்தியுள்ளவர்களோ அவர்கள் எல்லாம் காரியத்தை உபேக்ஷிக்காமல் தம்மாலியன்றவளவு திரவியசகாயம் புரிவரேல் காரியம் கைகூடலாம் என்று தோன்றுகிறது.

இதற்குத் திருஷ்டாந்தமாக நம் நாட்டிலுள்ள சில வித்யாசாலைகள் எம்மாதிரி நடக்கின்றன என்று சற்று ஆலோசிக்கலாம். மிஷனரிகள் என்று ஆங்கிலத்தில் வழங்கும் பாதிரிமார்களையும், அவர்கள் வித்தியா விஷயத்தில் செய்திருக்கும் பிரயத்தனத்தையும் என்னவென்று சொல்லுவது? ஆக ஆயிரமைலுக்கப்புறமிருக்கும் ஜனங்கள் ஒரு காரியத்தில் உற்சாகப்பட்டு அதற்கு வேண்டிய சகாயம் புரிந்து தகுந்த மனிதர்களை யனுப்பி அந்தச் சாலைகளை என்ன நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வந்துவிட்டார்கள்! உதாரணமாக மதிராஸில் 'மில்லர் ஸ்கூல்' என்று வழங்கி வந்து, தற்காலத்தில் 'கிரிஸ்டியன் காலேஜ்,' என்று பிரசித்தியடைந்திருக்கும் வித்தியாசாலையை எடுத்துக்கொள்ளலாம். ஆரம்ப உத்தேசம் வேறு என்று சிலர் கூறுவர். அது பிரகிருதத்திற்கு யோஜிப்பாயில்லை. இதுவரை நாம் அடைந்திருக்கும் நன்மையை நினைப்போமேல் அத்தியாச்சரியமாயிருக்கிறது. அயலார் இவ்வளவு தூரம் நம்தேசத்தில் செய்யலாமென்றால், அவ்வழியை யனுசரித்தால் நாம் எவ்வளவு செய்யக்கூடாது?

இதுகாறும் தத்தம் நாட்டில் தாமே வித்யா விஷயத்தில் என்னென்ன பிரயத்தனங்கள் செய்தால் கல்வி யபிவிருத்தி யடையும் என்பது கூறிப்போந்தது. நம்மிந்தியாவில் முற்காலத்து ரிஷீசுவரர்களும், பிரம்மக்ஞானிகளும் உபயோகித்துவந்த சம்ஸ்கிருத பாஷையிலுள்ள தர்ம்ம சாஸ்திரங்களும் இதரக்கிரந்தங்களும் படிக்கப்படுவதுடன் ராஜபாஷையிலுள்ள அநேகவித சாஸ்திரங்களும் கற்றுக்கொள்ளலாம். ஆனாலும் பின்கூறியவற்றுள் விசேஷதேர்ச்சியை அபிலஷிக்கிறவர்களுக்கு இந்நாட்டில் அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டிய அனுகூலங்கள் போதாததால், வெளிநாடுகளாகிய யூனைடெட் ஸ்டேட்ஸ் மாகாணங்கள், இங்கிலாந்து, ஜர்மனி, ஜப்பான் முதலியதேசங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ளவர்களுடைய வித்தைகளைக் கூடியமட்டிலறிந்து, நம் நாட்டிற்குத் திரும்பிவந்து அவ்வித்தைகளை இங்கே பலருக்கும் கற்றுக்கொடுத்து இவ்விடத்து முக்கிய குறைகளை நீக்கவேண்டும். இந்தியா முக்கியமாய் வியவஸாய ராச்சியமாயிருக்கிறது. பலவிதக் கைத்தொழில்களும் யந்திரத் தொழில்களும் கற்றுவந்து வியவசாயச் சரக்குகள் அனாவசியமாய் ஏற்றுமதி செய்யப்படுவதை நிறுத்தி, இவ்விடத்திய ஆள்களுக்குக்கூலிகிடைக்கும்படியாயும், இவ்விடத்திலுள்ள தனத்தையே உபயோகப்படுத்தி, கம்பெனிகள் ஏற்படுத்தி யாதொரு குறைவுமின்றி அவற்றை நடத்தி முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். இம்மாதிரி செய்யாதவரையிலும் இந்தியா மற்ற ராச்சியங்களுக்குச் சமமாகத் தலை நீட்டமுடியாது.

இதனால் வெளிநாடுகளுக்குப் போகவேண்டியது அவசியமென்றேற்படுகிறது. காலத்தை யனுசரித்துத் தர்மசாஸ்திரங்கள் இடங்கொடாமற் போனாலும், சாஸ்திரம்தெரிந்தவர்கள் பலருங்கூடி ராச்சியக்ஷேமத்தையே கருத்தாகக் கொண்டு இம்மாதிரி காரியங்களுக்கு அனுவாதம்கொடுப்பதும், வெளிப்புறப்படும் சிஷ்யர்கள் அசல் தேசங்களுக்குப்போனாலும், சொந்த மதாசாரங்களுக்கு விரோதமில்லாமல் நடந்துகொள்ளும்படி உபதேசிப்பதும், பெரியோர்கள் கடமையாகும். சமுத்திரயானமும் வேண்டித்தானிருக்கிறது. அது சாஸ்திர விரோதம் என்றுள்ள வாதத்திற்குச் சமாதானங் கூறப்படவில்லை. ஏதாயினும் ஒரு ஸையன்ஸ் சாஸ்திரத்தில் படிப்பு அதிகமா யடைந்திருக்கும் புத்திமான்கள் போனால்தான் இந்தக் காரியம் சித்தியாகும். ஒவ்வொரு ராஜதானியிலிருந்தும் வருஷத்திற்கு 50-பெயருக்குக் குறையாமல் புறப்பட்டுப்போய் வித்தைகளைக் கற்றுவரவேண்டும். இம்மாதிரி சுமார் 20-வருஷம் செய்தால், நமக்கு வேண்டிய அம்சங்களை எல்லாம் கிரகித்துக் கொள்ளலாம். வங்காளத்திலுள்ள நம் நண்பர்கள் இதில் ஜாக்கிரதையாய் இருப்பது ரொம்பவும் சந்தோஷகரம். முற்கூறியுள்ள ஜில்லாசபை, ராஜதானி சபைகளுடைய காரியமாகுமிது. ஆதலால் தனிகர்களும் புத்திமான்களும் இவ்விஷயங்களுக்கு வேண்டிய பிரயத்தனங்களைக் காலதாமதமின்றிச் செய்து ராச்சியத்திற்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவரேல், எல்லாரும் அவர்களுக்குக்கிருதக்ஞர்களாய் இருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

(இன்னும் வரும்)

# நமது மடாதிபதிகளுக்கு அறிக்கை

அந்தந்தச் சமயத்தாருக்கு ஞான குருபீடங்களாக விளங்கும் மடாதிபதிகளே!

*இந்த மகுடத்துடன் 'பூர்ணாந்திரோதயம்' பத்திரிகையில் வெளிவந்திருப்பதை வேண்டிய மட்டில் எடுத்து இங்கு பிரசுரிக்கிறோம். அது எவ்விதமாகிலும் மடாதிபதிகள் காதுக்கு எட்டவேண்டுவதே நமக்கும் அபிமதம். எ.டி.]*

நம் தேசத்தில் உத்தேசம் 20-கோடி ஹிந்துக்கள் இருக்கின்றார்கள். அதில் சென்னை ராஜதானியில் 3-கோடி பெயர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் பெரும்பான்மையாரின், ஞானம், ஆசாரம் முதலியவைகள் சம்பந்தப்பட்ட மட்டில், உங்களின் ஆதீனத்திற் குட்பட்டிருக்கின்றார்கள். அவர்களை நல்வழிப்படுத்தலும், ஞானசம்பத்துப் பெறும்படி செய்தலும் அந்தந்த மடத்தைச் சார்ந்தவர்கள் அந்தந்த மடத்தின் சித்தாந்தமாயுள்ள சமயமுறை சம்பிரதாயமுறைகளை அனுஷ்டிக்கும்படி செய்வித்தலும், அந்தந்த மடாதிபதிகளைப்பொறுத்த கடமையாம்.

உங்கள் சிஷ்யர்களான ஜனங்கள் சீலம் நல்லொழுக்கம் முதலியவைகளில் வழுவாது நடைபெற வேண்டியே, அவர்களைப் பாதுகாத்தற் பொருட்டே, உங்களுடைய மடாலயங்கள் உங்களுடைய பூர்வ ஆசாரியர்களால் ஸ்தாபிக்கப்பெற்று இருக்கின்றன. ஜனங்கள் ஞானமின்மையும் ஆசாரக்குறைவும் உடையராக இருப்பார்களாகில், அந்த ஸ்திதிக்கு மடாதிபதிகளும் உத்தரவாதிகள் ஆவார்கள். மனைவியின் குற்றம் கணவனையும், புதல்வனின் குற்றம் தகப்பனையும், மாணவரின் குற்றம் அண்ணாவியையும், ஜனங்களின் குற்றம் மடாதிபதிகளையும் பொறுத்தன.

இப்போது மடங்களும் மடாதிபதிகளும் நல்ல ஸ்திதியில் இல்லை என்று நீங்களே நன்றாய் அறிவீர்கள். கல்வி, கேள்வி, வரவர, மலினமாகிக்கொண்டு வருகிறது. தர்ம முறையும் நீதி முறையும் வரவரக்குன்றி வருகின்றன. சதாசாரமும் சத்சங்கமும் வரவரப் பொய்த்துப் போகிக்கொண்டிருக்கின்றன. வித்வத்சபை, சாஸ்திர விசாரணை, ஞானப்பயிற்சி, தபஸ் இவை போலிவழியில் நிகழ்கின்றன. இன்னும் மடங்களினுடையவும் மடாதிபதிகளுடையவும், குறைகளையும் நேர்மையின்மையையும் சொல்லப்புகில் பெருகும். அதனால் கேட்போர் மனம் நைந்து உருகும். பிரகிருத ஸ்திதியைத் தாங்கள் ஒவ்வொருவரும் ஏகாந்தம் பெற்றுத் தனியாய் அவர் அவர் மனத்தின்கண் சிந்தனை கொள்ளுவீர்களாகில், உண்மையில் நீங்கள் அனுதாபப்படுவீர்கள்.

மண், பெண், பொன் என்ற உலக ஆசைகளை முற்றும் துறந்தவர்களாக உங்கள் முன்னோர்கள் இருந்தமையால், அவர்களுடைய சுயநயம் பாராட்டாமல் பொது நயம் பாராட்டுவார்கள் எனவும், கர்மயோகிகளாக நடுநிலைமை தவறாமல் நடைபெறுவார்களெனவும் நம்பி, ஜனங்கள் ஏராளமான வருவாய்கள் உண்டாகும் வண்ணம், மானிய நிலங்கள், திரவியங்கள் மடங்களுக்கு நன்கொடையாகக் கொடுத்து வந்திருக்கிறார்கள். இப்போதும் கொடுக்கின்றார்கள்.

அத்திரவியங்கள் மடத்தின் நியாயமான செலவுகளுக்கும், (அதாவது ஆராதனைகள், குருபூஜை, வித்தியார்த்திகள் உணவு, முதலியன) மடாலயங்களின் மராமத்துக்கும்; எஞ்சினவை பாடசாலைகள் முதலிய தர்மத்திற்கு மென்றும் நீங்கள் அறிவீர்கள். வேடிக்கைகள், விளையாட்டுகள், ஆடம்பரமான மற்ற விஷயங்களுக்கு, அத்திரவியங்களை விநியோகிக்கக் கூடாது என்பதும், தங்களுடைய பூர்வ ஆச்சிரமத்திலுள்ள பந்துக்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் அவர்கள் குடும்பக் கிருத்தியங்களுக்கும் அத்திரவியங்கள் உபயோகிக்கக்கூடாது என்பதும், நீங்கள் அறியவேண்டும்.

மேற்படி திரவியங்களும் மற்ற வருவாய்களும், உங்களிடத்தில் மடாலய தர்ம பரிபாலனத்திற்காகவும், அந்தந்த மடத்திற்குரிய சமயமுறையும் ஞானமும், ஜனங்களுக்குள் அபிவிர்த்தியாகிப் பரவச் செய்வதற்காகவும், அடைக்கலமாக ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன, என்பதை தாங்கள் அறியவேண்டும். அப்பொருள்களுக்குத் தாங்கள் அந்நார்கள், டிரஸ்டிகள், தர்மகர்த்தர்கள், ஆவீர்கள். சொந்தக்காரர்களல்லர்; இதுவே நன்கொடை கொடுத்தவர்களின் கருத்து; பொதுஜன அபிப்பிராயமும் இதுவே; சாஸ்திர தாத்பரியமும் இதுவே; இதற்கு மாறாக எள்ளளவேனும் சுயப்பிரயோஜனம் நாடி ஒரு காசும் செலவழிப்பீர்களேயாகில் அது மகா பாபம். பசு மாடு பயிரில் மேய்ந்தால் கண்டுபிடித்து விரட்டி விடுவார்கள், புலித்தோல் போர்த்து மேய்ந்தால் கண்டுபிடித்து விரட்டல் எங்ஙனம்?

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று"—குறள்

அவ்வண்ணம் நடைபெறுவீர்களாகில் துறவிஸ்தானம் என்ற உயர்நலம் அமைந்த பதவியை இழக்கிறதுமன்றி, சிரேயஸ்கரமான பதவியையும் இழப்பீர்கள் என்பதை தாங்கள் நன்கு அறியவேண்டும்.

அந்தந்த மடத்தைச் சார்ந்தவர்களுக்குத் தங்குதடையின்றிச் சாப்பாடு போட்டுவருகிறீர்கள். அதனால் சோம்பலாளிகளைத் தான் உண்டு பண்ணுகிறீர்கள். அவர்கள் நடமாடும் இறைப்பைகளாக இப்போது திரிகின்றார்கள். அன்னமிடுதல் நலமே. ஆனால் அது பிரயோஜனமுள்ளதாக இருத்தல் வேண்டும். அந்நடமாடும் இறைப்பைகளை, கல்வி அறிவு, கேள்விகளால் நடமாடும் கோவில்களாகச் செய்யுங்கள். அதனால் சுகிருதம் உண்டு.

பக்தஜனங்களின் பிரயோஜனத்திற்காக, யாத்திரை செய்கிறதில், வீணான பரிவாரங்களையும், ஆடம்பரங்களையும் தர்வித்தால், யாத்திரை சுலபமாகவும் அதிகப்பிரயோஜனமுள்ளதாகவும் நிகழும்; சத்காலக்ஷேபம் செய்வதற்குச் சாவகாசங்களும் ஏற்படும். சந்நியாசிகள் வாகனங்களில் ஏறக்கூடாது என்றவிதியிருக்கிறது. பிராணிஹிம்சை ஏற்படுவதால் அன்றோ? மனிதவாகனமான சிவிகையில் ஏறுதல் கொடியபாவம். இதைத்தவிர்த்து ஒருவிதமான பாபத்திற்கும் உள்ளாகாமல், ரயில்வண்டி மோட்டார்கார், பைஸிக்கீல் முதலிய நவீன வண்டிகளில், ஆசாரக்குறைவுக்கு இடமில்லாமல் ஏற்பாடு செய்து, யாத்திரை செய்தல் நன்மையாம். உயிர்பாகமான ஞானமுறையை விடாமல் உடல்பாகமான வெளிவிஷயங்களில் காலத்தை அனுசரித்து நடத்தல் அறிவுபற்றியதாம். கிறிஸ்து மதத்தில் உழைக்கின்ற பாதிரிமார்களைப்பாருங்கள்; எங்கே எங்கே எந்த வாகனம் கிடைக்குமோ அதைக் கைக்கொண்டு, காரியத்தின் மேல் கண்ணோக்காய், எத்தனையோ பெரியகாரியங்களைச்செய்துகொண்டு வருகிறார்கள். இவ்விஷயத்தில், அவர்களைப்போல தாங்களும் நடைபெறுவீர்களாகில், மிக லாபகரமாயும் பலனுள்ளதாகவும் முடியும். "பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்ற ஆன்றோர் வாக்கை அனுசரித்து நடத்தல் வேண்டும். ஞானமுறையைத் தவிர, மற்றவெளிப்படையான ஸ்தூலபாகங்களைக் காலத்துக்கு நேர்மையாக மாற்றிக்கொள்ளுதல் தவறன்று. அப்படி நடப்பீர்களாக.

ஊர்கோலமென்றும், பாணகாக்ஷியென்றும், உத்தியோகஸ்தர்விருந்தென்றும், அவர்களுக்குச்சாதராக்கள் போர்த்துதல் என்றும், ஆங்கிலர்களுக்குத் தீனி சாப்பாட்டுக்கென்றும், வியவகாரத்திற்கென்றும், சிறுவிளையாட்டுகளுக்கென்றும், பூர்வ ஆச்ரமத்தினர்களான தாயத்தார், மாமன், தாய்தந்தையர், முதலினோர்க்கு என்றும், இவ்விதமாகப் பலவாறான விநியோகங்கள் செய்தல் தர்மமுறை அன்று. சாஸ்திர விரோதமானவை. ஆங்கிலச் சட்டமும் சம்மதிக்காது.

மடத்தின் சொத்துக்களை ஹீனக்கிரயத்துக்கு விக்கிரயஞ்செய்தலும், பந்துக்கள் முதலாயினருக்கு அவைகளை ஹீனக்குத்தகைக்குக்கொடுத்தலும் ஆகிய இவைபோன்ற விநியோகங்கள் நியாயமல்ல.

இக்காலஸ்திதியைப் பாருங்கள்; பெரும்பாலும் ஜனங்கள் கல்வி கேள்வியில்லாமல் மூடர்களாக இருக்கின்றதைக் கவனியுங்கள், அவர்களுக்குக் கல்விப்பயிர்ச்சி, ஞானப்பயிர்ச்சி செய்வித்தல் உங்கள் கடமையென்றும் அறியுங்கள். நம்மவர்கள் அவரவர்கள் சமயமுறை அறியாமையால், கிறிஸ்து மதத்தில் விளக்குப்பூச்சிபோல் விழுந்து மடிகிறார்கள், என்பதையும் உணருங்கள். நம்முடைய சநாதனதர்மம் ஒப்பு உயர்வு அற்றமதம். இம்மதம்தான் உலகமெங்கும் பரவவேண்டும் என்றும், நாஸ்திகம் அதிகரித்துக்கொண்டுவருகிற மேல் நாட்டாருக்கு முக்கியமாகப் பிராஞ்சுக்காரர்களுக்கு, ஹிந்துமதமும் அதன் தர்சநங்களும் மிகவும் அனுகூலமானவைகளென்றும், அவைகளால் தான் அவர்கள் நாஸ்திகத்தினின்று ஆஸ்திகத்திற்குத் திரும்பிவரக்கூடுமென்றும், அவைகளால் தான் நலம்பெறுவார்கள் என்றும், பிரான்சுதேசத்து வித்வத்சிரோணி பண்டித ஷாலஸ் அம்மையார் ஷை தேசத்து அரசாட்சிமுறையில் விவரமான ரிபோர்ட்டு செய்திருக்கிறார் என்பதை நீங்கள் அறியவேண்டும். இந்நிலையில் நம்மவர்கள், கீழாயினோராக இருந்தாலும் சரி, மேலான குலத்தினோராயிருந்தாலும் சரி, நம்முடைய உயர்நலம் உள்ளமதத்தையும் அதன் ஆசாரங்களையும் விட்டு, கிறிஸ்துமதத்தில் சேர்கின்றது மிகவும் பரிதபிக்கக்கூடிய விஷயமன்றோ? சித்திர குப்தன் கணக்கில் இந்தப்பாப சம்பவத்தின் கர்மபலனில் மடாதிபதிகளுக்கு ஒருபெரிய பகுதி ஏற்படுமென்றும் நீங்கள் அறியவேண்டும். ஆகையால் நமக்கென்ன, என்று தூங்காமல் எழுமின்! விழிமின்! பெரியோர்கள் நீதி முறையை நாடுமின்! அதைத் திரும்பவும் இத்தேசத்தின்கண் நாட்டுமின்! ஜனங்கள், நல்வழி நடத்தும் தலைமையார் இல்லாமல் தபிக்கின்றார்கள். ஒரு ஊரில் கிறிஸ்து மார்க்கத்தில், ஒரு சிறுவன் சேர்க்கப்பட்டால், அச்சமயத்தில் நம்மவர்கள் படும் துன்பமும், துயரமும், பரிதபிப்பும், இத்தன்மையென நீங்கள் அறிவீர்களா? அதற்குக் காரணம் நீங்கள் அல்லவா? உங்களுடைய தர்மத்தை நீங்கள் சரிவர செய்யாமையின் காரணமாக அஃது உண்டானதன்றோ? எங்களுடன் சற்றுநேரம் மனம் ஒப்பி உள் நோக்கிச்சிந்தியுங்கள். அப்போதாவது நீங்கள் மனம்நோவீர்கள். உங்கள் பக்த கோடிகளான ஜனங்களிடம் காருண்ணியமும் வைப்பீர்கள். அவர்களின் பொருட்டு உண்மையாக வேலைசெய்வீர்கள்.

---

கரும்புச் சக்கையைக் கடுதாசி செய்வதற்கு உபயோகப் படுத்தலாமென்று வெகுநாளாக ஜனங்கள் எண்ணி வந்திருக்கிறார்கள். என்றாலும், கரும்பை ஆலையில் கொடுத்து நசுக்கும் பொழுது, அதன் நார் துண்டித்தும், கசங்கியும் போவதால் நாளதுவரை காரியம் பலிக்கவில்லை. சக்கையை அடுப்பெரிக்கத்தான் உபயோகிக்கிறார்கள். சமீபகாலத்தில் ஒருபுதிய யந்திரம் நிர்மாணிக்கப் பட்டிருப்பதாகவும், அந்தச்சகாயத்தைக் கொண்டு, சர்க்கரை இப்பொழுது காணுவதைவிட ஆதாயம்கூடிக்காணும்படி செய்வதுடன், நார் பதம் கெடாமல் எடுத்து, அதன் மூலமாய் உயர்ந்ததரத்தில் கடிதாசிசெய்யவும் இதிலிருந்து கழிக்கப்பட்டதை மட்டத்தரகடிதாசி செய்யவும், உபயோகிக்கப் போகிறதாக அமெரிக்காவிலிருந்து சமாசாரம் தெரிகிறது. கரும்பு சாகுபடி செய்பவர்கள் இதைக்கவனிப்பாராக,

## புஸ்தக விமர்சனம்

*ஸ்ரீராமாயண வினாவிடை. ஸப்தகாண்டங்களும், இராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியது. மூன்றாம்பதிப்பு. ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர் பி. ஏ., எல். டி., ஜனரல் ஸப்ளைஸ்கம்பெனி, மைலாப்பூர். விலை ரூ 1.*

‘மூன்றாம் பதிப்பு’ என்னவே புஸ்தகத்தின் யோக்கியதை விசதமாகும். இம்மாதிரிப் புத்தகங்கள் மூன்று, இதற்கு முன் விஹாரிணியில் விமர்சனமாகியிருப்பதால், அதிகமாக இச்சமயம் எழுதுவது அனாவசியம். விஷயம் அனேகமாய் ஸ்ரீவால்மீகியமாயும், கம்பர் முதலிய வழிநூல்களை யொட்டியும் இருக்கிறது. ‘ரவிவர்மா’ படங்களில் சில சேர்ந்திருப்பது உசிதமே. ஸ்ரீமான் அய்யரவர்களுடைய தமிழ் நடையைக் குறித்து நாம் மெச்சுவது அனாவசியம். நன்றாய்ப் பழகிவிட்டதால், வெகு ரசமாகவே நடையோடுகிறதென்று சொல்லாமலே ஏற்படும். ‘வினாவிடை’ யைப்பற்றி மட்டும் நமக்கிருக்கிற அபிப்பிராயம் மாறவில்லை.

பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரம்.—பிழைக்கும்வழி, விவேகபோதினி, சக்கிரவர்த்தினி, வித்தியாபானு. ஹிதகாரிணி, ரஞ்சிதபோதினி, மாதர் மனோரஞ்சனி, மங்களோதயம் (மலையாளம்), கிருஷிகன், பிரபஞ்சம், பூர்ண சந்திரோதயம்.

பக்ஷாந்தரம்.—இந்து சாதனம், உதயாரகை.

வாராந்தரம்.—நீலலோசனி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, திராவிடாபிமானி, வித்யாபாஸ்கரன், பாண்டியன், நாகர்கோவில் டைம்ஸ்.

வாரம் இருமுறை.—மைசூர் டைம்ஸ்.

## சமாசாரக் குறிப்புகள்

யக்ஞ யாகாதிகளைக்குறித்து, அவைகள்வேதசாஸ்திரங்களுக்குச் சம்மதப்பட்டவையல்ல வென்று கனம் திவான்பஹதூர் ஸ்ரீமான் ரகுநாதராயரும், சம்மதப்பட்டவைதானென்று வேறு இரண்டொருவரும், பத்திரிகைகளில் வாதித்து வருகிறார்கள். இந்த மாதிரி விஷயங்களில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கால தருமம். முந்தி யொருகாலத்தில் யாகாதிகள் வெகுவாய் மலிந்திருந்தது நிச்சயம். அதற்கு ஸ்ரீகாளிதாஸ மகாகவி ‘நேற்றைய’ சாக்ஷி. ‘பிராம்மணங்கள்’ முதலியு பூர்வ மீமாம்சைசாஸ்திரம் பழைய சாக்ஷி. ஆனால் காலக்கிரமத்தில் ஜனங்களுடைய மனோதருமம் மாறிப் ‘பழையன கழிந்து, புதியனபுகுந்து’ நடப்பதும் நிச்சயம். அதற்கு இக்காலத்தில்யாகங்கள்எங்கேயோ மூலைமடக்குகளில் மட்டும் நடப்பதும், அவற்றை ஸ்ரீமான் திவான்பஹதூர் முதலிய ஆரிய சிரேஷ்டர் கண்டிப்பதும் போதுமான சாக்ஷியமாம். ஆதலால் இனி அதைக் குறித்து வாதாடுவது வீண். பேச்சு மாத்திரத்தில் அவற்றிற்கு என்ன மரியாதை யிருந்தபோதிலும், நடவடிக்கையில் அவையினிப் பிரபலிக்கப்போவதில்லை யாதலால், காலக்கிரமத்தில் அவை அற்றுப்போவதில் யாருக்கும் விசாரம் வேண்டியதில்லை. புத்திமான்கள் அதைத் துரிதப்படுத்த முயலவேண்டியது தான் காலதருமம்.

***

இவ்வருஷம் சர்க்காரிடமிருந்து பட்டம் பெற்றுச் சம்மானம் வாங்கியவர்களில், பத்திராதிபர் இரண்டொருவரிருப்பதைக் கண்டு சந்தோஷிக்கிறோம். ‘இந்தியன் பாட்ரியட்’ என்னும் ஆங்கில பத்திராதிபரின் எடிட்டருக்கு ‘திவான் பஹதூர்’ பட்டமும், ‘கூடலூர் தேசாபிமானி’ பத்திராதிபருக்கு ‘ராவ் பஹதூர்’ பட்டமும் கிடைத்தன. இந்தப் பட்டப் பெயர்கள் விஷயத்தில் நமக்கு விசேஷப் பிரமையில்லை. ஆனால், இதனுடைய உட்கருத்தைமட்டும் நாம் கிரமமாயறிய வேண்டியது அவசியமாம். இதுவரை இந்தியாவில் ‘பத்திரிகை’ சம்பந்தப்பட்டவர்களைச் சர்க்கார் ‘பறையனைப் போல்’ அனாதரணை செய்து வந்தது மட்டுமேயன்றி, அவர்களைத் துரைத்தன விரோதிகளாகவும் பாவித்து வந்தார்களென்று நம்மவருக்குள் ஒரு அபிப்பிராயம் பலங்கொண்டிருந்தது. அந்தரங்கம் எப்படியிருந்தபோதிலும், இப்படி யெண்ணுவதற்குக் காரணமும் கொஞ்சம் உண்டென்பதில் தடையில்லை. ஆனால், இப்பொழுது நாம் பேசும் விஷயத்தை நோக்குமிடத்து, சங்கதி வேறாகி வருவது வெளியாகுமென்று நம்புகிறோம். பத்திரிகைகள் சத்தியத்தையும், தருமத்தையும் கைவிடாது, நடக்கும் சங்கதிகளை உள்ளபடி யுரைத்து, நடக்க வேண்டியவைகளையும் நிர்ப்பயமாகவும், அவரவர் புத்திக்கெட்டிய மட்டில் நாணயமாகவும், வெளியிட்டு வந்தால், அதனால் ராஜா, பிரஜை இருதிறத்தாருக்கும் க்ஷேமமேதவிர வேறில்லை என்னும் ரகசியத்தை இருதிறத்தாரும் அறிந்து வருவதற்கு இதை நாம் சாக்ஷியமாகக் கொள்ளுகிறோம்; அம்மட்டில் நமக்குச்சந்தோஷமே தவிரவேறொன்றுமில்லை.

***

ஸ்ரீசங்கர பகவத்பாத ஆசாரிய சுவாமிகளுடைய காலம் இன்றைக்கு எத்தனை ஆயிரம் வருஷத்திற்கு முந்தியிருக்கலா மென்பதில் தர்க்கம் வெகு காலமாக வலுத்துச் சிலர், 2000௵ங்களுக்கு முன் என்றும், சிலர் 1500௵ங்களுக்கு முன் என்றும், மற்றும் சிலர் 1100௵ங்களுக்கு முன்என்றும், வாதாடி வந்திருக்கிறார்கள். இப்பொழுது கொச்சி சமஸ்தான ஜோதிஷர் ஸ்ரீமான் பிச்சுவையரவர்கள் சில ஜோதிஷ ஆதாரங்களையும், கொல்லமாண்டு ரகசியத்தையும் முன்னிட்டு கி. பி. 805-ம்௵, என்றால், இன்றைக்குச் சுமார் 1100௵ங்களுக்கு முன்னாடித்தான் சுவாமிகளிருந்திருக்க வேண்டுமென்று நிஷ்கரிஷிக்கிறார். நாமும் இதைத்தான் வெகுநாளாக நம்பி வருகிறோம்.



எழும்பூர் புதிய ரெயில்வே ஸ்டேஷன்—சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
14 OCT 1910
MADRAS.

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

புஸ்தகம் I Vol. I || சாதாரணஹ ஆவணிமாதம் August 1910 || சஞ்சிகை, 12 No. 12

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினனே."

பார்லிமெண்டில் இந்தியன் பட்ஜெட்டு.

சென்ற ஜுலைமீ 26வ இந்தியன் பட்ஜெட்டு, என்றால், மேல்ஹிந்திய வரவு செலவுகளை விளக்கும் கணக்கை, இந்தியா செகரெடரியவர்களுக்காக ஸ்ரீமான் மான்டேகு துரை பார்லிமெண்டில் விவரித்துப் பேசினார். அக்காலத்தில் தேசக்ஷேமத்தையும் குறித்துப் பேசுவது வழக்கமாதலால், இவரும் அப்படியே செய்தார். இப்படி இவர் சொல்லியதில் இரண்டொரு முக்கிய அம்சங்களைமட்டும் நாம் இவ்விடத்தில் குறிப்பிடுகிறோம். மகாஜன வித்யாவிஷயம் இனிமேல் இந்தியா கவர்ன்மெண்டில் ஒரு தனி மெம்பருடைய அதீனம். அதாவது, இந்தியா கவர்ன்மெண்டு நிர்வாக சபையில், வித்யா விஷயத்தை இதுவரை ஒரு சில்லரை அம்சமாக யாரோ ஒருவர் வேறு வேலைகளுடன் இதையும் பார்த்துவந்தது இனிச் சரிப்படாதென்றும், இதை முக்கியாம்சமாகப் பாவித்து நடத்தவேண்டுமென்றும் செகரெடரியவர்கள் ஒப்புக்கொண்டு, அதற்கென்று ஒரு மெம்பரும் நியமனமாயிற்று. வித்தை விஷயத்திற்கு இம்மாதிரி கௌரவமதிகரித்ததாலும், இனித் தேசமெங்கும் கல்வி பரவவேண்டிய முயற்சிகளை இந்த மெம்பர் தேடுவாராதலாலும், காலக்கிரமத்தில் மகா ஜனங்களுக்குள் விவேகமதிகரிக்குமென்றும், அதிகமாய் வியாபிக்குமென்றும், அவ்வளவிற்கு ராஜத்துரோகச் சட்ட முதலிய வேண்டாச் சட்டங்கள் பிரபலிப்பதற்கு ஏதுவிராதென்றும், அது எல்லோருக்கும் க்ஷேமகரமென்றும், ஸ்ரீமான் மான்டேகு துரை விளக்கிக்காட்டினார்.

"இந்தியாவில் விவசாயம் சீர்ப்பட்டு வருகிறது. ஆனால் பிளேக்கும் 'மலைக்காய்ச்சலும்' அதிகமாகவே உபத்திரவிக்கிறது. என்றாலும் இவைகளுக்குத் தக்க சங்கங்களைக் கொண்டு பரிகாரம் தேடிவருவதால், சீக்கிரத்தில் இவற்றின் கொடுமை குறையத்தான் வேண்டும். அபின் வகையில் வரும்படி குறைந்து

கொண்டே வருகிறது. என்றாலும் சீனர்கள் அபினி தின்னும் துர்வழக்கத்தைக் குறைக்க அக்கரைப்படுவதாலும், நாமும் அதற்கு அனுகூலஞ் செய்தே யாகவேண்டியிருப்பதாலும், இதற்காக விசாரப்படுவதற்கில்லை. வேறு வகைகளில் வரி அதிகமாக்கி யிருப்பது, சாமான்னியர்களுக்கு உபத்திரவகரமே யன்று.

கவர்ன்மெண்டார் யோக்கியதையுள்ள இந்தியர்களை யெல்லாம் ராச்சியபாரந் தாங்க வேண்டி உபசரித்து வரவழைப்பதை யொருபுறம் விரதமாகக் கொண்டு நடத்தியும், மற்ற பக்ஷத்தில் துரோகிகளையும், கலகக்காரரையும் தாக்ஷிண்ணிய மின்றிச் சிக்ஷித்துமே வருகிறார்கள். இதனால் மொத்தத்தில் நன்மையும், சௌம்மியமும் தேசத்திற்கு அதிகரித்து வருவது பிரத்தியக்ஷம்.

மகா ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் சிநேகம் அதிகரிக்கும்படி இந்திய சர்க்காரைப் பொறுத்த மட்டில், சென்ற 2-வருஷங்களாக நடந்த விமர்சனங்களையெல்லாம் சரிவர ஜாரிக்குக் கொண்டுவந்து, இரவும் பகலும் இடைவிடாமலுழைத்ததற்காக ஸ்ரீமான் மின்டோ பட்டவர்த்தனருக்கு எல்லாரும் நன்றியுள்ளவராகவேண்டும். அவருக்குப் பெருஞ்சுமை தாங்கவேண்டி வந்ததில், அவர் அதை வெகு நயமாகவும், நேர்த்தியாகவும் தாங்கி வந்து, இனி வருபவராகிய ஹார்டிங்கு பட்டவர்த்தனருக்கு நல்லநிதி சேர்த்து வைத்திருக்கிறார்.

இந்தியாவில் போலீஸ்காரரைப் பற்றிப் புகார் பலமாகச் சிலர் செய்வது அழகன்று. சிலவிடங்களில் தோஷ மிருந்தாலும் மொத்தத்தில் போலீஸ் பந்தோபஸ்து வெகுதிறமாகவே யிருந்து வந்திருக்கிறது. இனிக்காணும் தோஷங்களையும் பரிகரிக்கப் பிரயத்தனம் துருசாகவே நடந்துவருகிறது,'' என்று சொல்லி முடித்தார்.

கம்பளிப்பூச்சிகள்.

"பயிர்களையும், செடிகளையும் தின்று குடியானவர்களுக்கு வெகுகெடுதியைச் செய்து வரும் இந்தப்பூச்சிவகையை எல்லோருமறிவார்கள். தமிழில் இதற்குக் கம்பளிப்பூச்சியென்று பெயர். மழைபெய்ததும் இவையதிகரித்து, சோளம், கம்பு, நிலக்கடலை, பருப்பு வகைச்செடிகள் இவைகளைச் சேதப்படுத்தி விடுகின்றன.

இவைகள் பயிர்களைத்தின்று கொழுத்து பூமியுட் பிரவேசித்து, பேரீச்சங்கொட்டை போன்ற உருவத்துடன், மறுபடி மழைகாலம்வரை அங்கேயே கிடக்கின்றன. பிறகு மழை வந்து பூமி இளகியதும், இவைகள் பெருஞ்சேனைகளாக இரக்கைகளுடன் வெளிவருவதும், விளக்குக்காணுமிடங்களில் கூட்டமாகச்சேருவதும், அனுபவத்தில் எல்லோரும் காணக்கூடியது. இப்படிவந்தவைகளில் பெண்பூச்சிகள் சீக்கிரம் முட்டையிடும். அம்முட்டைகள் கம்புமுதலியபயிர்களில் தழையின் அடிப்புறத்தில் ஒட்டியிருக்கக்காணலாம். இந்தமுட்டைகள் பக்குவமாகிப் புழுக்கள் வெளிவந்து சீக்கிரத்தில் கம்பளிப்பூச்சிகளாகிவிடும்.

இரக்கைப் பூச்சிகள் தான் சகல கேட்டிற்கும் மாதுரு ஸ்தானம். ஒவ்வொரு பூச்சியும் சுமார் 500-முதல் 1290-வரை முட்டையிடும். ஆதலால் அவற்றில் ஒன்றைக் கொல்லுவது பின்னிட்டு இவ்வளவு கம்பளிப் பூச்சிகளைக் கொன்றதற்குச் சமனாகும். இவைகள் மழை பெய்ததும் பெருஞ்சேனையாகப் புறப்படுவதாலும், இவைகளுக்கு விளக்கைக் கண்டால் ஏதோ பொருத்த சந்தோஷமுண்டாகி அதைச் சுற்றிக் கூடுவதாலும், எவ்விடங்களிலெல்லாம், இந்தப் பூச்சி உபத்திரவமிருக்கிறதோ, அவ்விடங்களில், தக்க காலத்தில், அங்கங்கே விளக்குகளைக் கொளுத்திவைத்து, இரக்கைப் பூச்சிகள் வர வர, அவற்றைச் சம்ஹரிக்கவேண்டும். இந்த வேலை தானாகவே நடப்பதற்கு ஒரு



உபாயமுண்டு. விளக்கைக் கொளுத்திவைத்து அதன்கீழ் ஒரு மடக்கில் தண்ணீரும் மண்ணெண்ணெயும் கலந்து வைத்துவிட்டால், பூச்சிகள்தானாக வந்து அதில் விழுந்து மடிந்து போகின்றன.

சாதாரண ராந்தல் விளக்கில் மண்ணெண்ணெயும், தேங்காயெண்ணெயும் சரிக்குச் சரி கலந்து எரிப்பது நலம். இந்தவிளக்கை 2-அடி சதுரம், 3-அங்குலம் ஆழமுள்ள ஒரு தகரத் தட்டில் தண்ணீரும் மண்ணெண்ணெயும் கலந்து நிரப்பி அதன் மத்தியில் ஒருகல், அல்லது வேறுபீடமிட்டு, அதன் மேல் விளக்கைக் கொளுத்திவிட வேண்டும். தட்டு ஆழமாயிருந்தால் பக்கத்தில் ஒரு மூங்கிலை நட்டு ராந்தலை அதற்குக் கட்டித் தொங்கவிட வேண்டும். பயிர் எவ்வளவோ அதைவிடச் சற்று உயரமாகவே விளக்கு முதலிய கருவிகள் இருக்க வேண்டும். தூரத்திலிருந்து பார்த்தாலும் வெளிச்சம் தெரிவது நலம்.

பண்ணிக்குப்பம் கிராமத்தில் இவ்வாறு யுக்தி செய்து பரீக்ஷித்ததில், இப்போது குடியானவர்களுக்கு அது சரியென்று மனதிற் பட்டிருக்கிறது. அதனால் அவ்விடத்தில் பூச்சியுபத்திரவமே இப்போது கிடையாது.

ஒருகிராமத்தில் இந்த உபத்திரவம் பூராவாக நீங்கவேண்டுமானால், ஒரு குடியானவனோ, இரண்டு மூன்று பெயரோ, இவ்வாறு செய்வது மட்டும் போதாது. கிராமத்தில் எங்கெல்லாம் பூச்சி உபத்திரவமுண்டோ, அங்கெல்லாம் ஒரே காலத்தில் 'வேட்டையாடுவது' நலம். ஜனங்கள் ஒன்று சேர்ந்து நடத்தித்தான் எல்லோருக்கும் சுபம் தேடவேண்டும். இல்லாவிட்டால், இந்த உபாயம் சிரிப்புக்கிடமாகும்.

தவிர விளக்குகளை மழை பெய்தானவுடன் கொளுத்திவிடவேண்டும். பூச்சிகளை முதன் முதல் ராத்திரி பிடிப்பதுபோல, மற்றைய இரவுகளிலில்லை. தவிரப்பூச்சிகள் கருத்தரித்துவிட்டால், விளக்கை அவ்வளவாக நாடுவதில்லை. ஆகலால் தாமதம் செய்வது நல்லதன்று.

இந்த விளக்குச் செலவெல்லாம் வெகு சுலபம். 15-நாள் எரிப்பதில், மொத்தத்தில் ரூ. 2-க்கு மேல் பிடிப்பதில்லை. ஒரு முறை தயாரானது எத்தனைவருஷம் வேண்டுமானாலுமிருக்கும். பூச்சிகளை நாசஞ்செய்வதற்குச் செலவு ரூ. 2-ம். அதனாலுண்டாகும் லாபம் ஏகராவுக்கு ரூ. 20-முதல் 50-வரையுமாயிருந்தால், யார்தான் இதைச் செய்ய ஆலசியப்படுவார்கள்?" விவசாய டைரெக்டர் துரையவர்கள்.

பெருந்துறை ஐக்கிய நாணய மகாநாடு.

சென்ற மார்ச்சு மாதத்தில் சேலம் ஜில்லாவிலுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் மகாநாடு கூடியதையும், அதன் வைபவங்களையும், முன்னொரு மாசம் விவரித்தோம். இப்பவும் சென்ற ஜூலைமீ 30-31 தேதிகளில் பெருந்துறையில் (கோயமுத்தூர் ஜில்லா, ஈரோடுதாலுக்கா) இம்மாதிரியொரு மகாநாடு கூடியது வெகு சந்தோஷகரமே. ஆனால் சேலத்தைப்போல கோயமுத்தூர் இப்போது பெருமைப்படுவதற்கில்லை. சேலத்தில் ஜில்லா அர்பன்பாங்கும் அத்துடன் சம்பந்தப்பட்டு வேலை செய்யச் சுமார் 82-கிராமப்பாங்குகளுமிருந்ததனால், மகா நாடு என்பது பெரிய சங்கதியாகிக்கண்டது. கோயமுத்தூரில் பெருந்துறை பிர்க்காவில் மட்டும் 8-கிராமப்பாங்குகளும், வேறு இடங்களில் 2-ம் ஆகப் பத்து பாங்குகள் மட்டுமே யிருப்பதாலும், ஜில்லாபாங்கு என்பது இப்பொழுதுதான் கர்ப்பவாசத்திலிருப்பதாலும், இந்த மகாநாட்டுக்கு அவ்வளவு வைபவஞ் சொல்வதற்கில்லை. என்றாலும், விஷயத்தை அபேக்ஷித்து இதற்கு மகிமை கொடுக்கவேண்டும்.

இந்தக்கூட்டத்திற்கு அங்கங்குள்ள கிராமப் பாங்குப் பஞ்சாயத்தாரும், மற்றுமுள்ள மெம்பர்களிலனேகரும், அபிமானிகளும் வந்திருந்தார்கள். வெளியூரிலிருந்து வந்தவர்களில்

சேலம் ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் முக்கியஸ்தர். கனம் கோ ஆபரேடிவ் ரிஜிஸ்திரார் அவர்களும், அவர்களுடைய உதவி உத்தியோகஸ்தரும் வந்திருந்தார்கள். பெருந்துறையிலுள்ள சப் ரிஜிஸ்திரார் முதலியோரும் வந்து அபிமானித்தார்கள்.

உபசரணைக் கமிட்டி செயர்மென் ஸ்ரீமான் கே. என். ரங்கய்ய கவுண்டர் அவர்கள்தான் இந்தப் பிர்க்காவில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் இவ்வளவுதூரம் பிரபலிப்பதற்கும், இந்த மகாநாடு கூடுவதற்கும், முக்கியமாய் முயன்றவர். ஆதலால் அவர் வந்தவர்களுக்கு முகமன் கூறி, சென்ற இரண்டு வருஷங்களுக்கதிகமாகவே இவ்விஷயமாய் இந்தப் பிர்க்காவில் நடந்துவரும் பிரயத்தனங்களை விளக்கி, ஐக்கிய நாணயத்தின் உபயோகங்களையும் சுட்டிக்காட்டினார். பிறகு ஸ்ரீமான்கள் நாராயணசாமி பிள்ளையும், ஆதிநாராயண செட்டியாரும், ஐக்கியநாணய விஷயமாயும், டிஸ்டிரிக்ட்டு பாங்கு விஷயமாயும் கொஞ்சம் பேசினார்கள்.

அதன்பின் பெருந்துறை பிர்க்காவிலுள்ள எட்டுச் சங்கங்களின் நிருவாக ரிபோர்ட்டுகள் வாசிக்கப்பட்டன. அவைகளில் கண்ட குண தோஷங்களைப் பஞ்சாயத்தாரும், மெம்பர்களும் அறியவேண்டி, ஸ்ரீமான் டிப்டி ரிஜிஸ்திரார் கே. விஜபராகவாசாரியார் ரிபோர்ட்டு படித்தவர்களைப் பல கேள்விகள் கேட்டுப் பதில் வரவழைத்து, மேல் நடக்கவேண்டிய முறைகளைத் தெரிவித்தார். மறுநாள் காலையில், இதையே உத்தேசமாகக்கொண்டு ஸொஸைட்டிகளின் விசேஷவிதிகளில் சிலவற்றை விளக்கினார். பொழுது 1½-மணியானதனால் மறுபடி 2-மணிக்குக் கூடுவதாகச் சபை கலைந்தது.

ஆனால் கலைந்து அரைமணி நேரத்திற்குள் ஸ்ரீமான் ரங்கைய கவுண்டரவர்களுடைய சமுசாரம்போய்விட்டதாகச் சங்கதி தெரிந்து, அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் கிராமத்திற்குப் போய்விட்டதாக மகாதுக்கசமாசாரம் பரவிற்று. ஆதலால் கனம் ரிஜிஸ்திரார் முதலிய சகலரும் ஏகோபித்து இனி மீட்டிங்கு இல்லையென்று தீர்மானித்து அவரவர்காரியம் பார்க்கலானார்கள். கவுண்டர் அவர்களுக்கு வயது கொஞ்சம். என்றாலும் அவருடைய கல்வி, கேள்வி, குணம் எல்லாம் வெகு சிறந்தது. அந்த வட்டத்தில் அவர் குடும்பம் வெகு செல்வாக்காக இருப்பதில், அதற்கு வேண்டிய எல்லா யோக்கியதையும் இவரிடம் இருப்பது வெகு விசேஷம். முக்கியமாகக் கோ ஆபரேஷன் தழைப்பதற்கு இம்மாதிரி 'அபூர்வ வஸ்துக்கள்' தான் வேண்டும்.

ஆனால் இப்படி எல்லாரும் மெச்சக்கூடிய இவருக்குக் கொஞ்ச காலமாக தேகசௌக்கியமில்லாமல் மருந்து சாப்பிட்டு வருகிறார். அது ஏதோ ஈசுவர கிருபையால் கொஞ்சம் அனுகூலம் கண்டு வருகையில், இப்பொழுது பகவத் சங்கற்பமிப்படியானதில், அவரைத் தெரிந்தவரெல்லோருக்கும் விசனமிவ்வளவென்றில்லை. ஆனால் அவர் வெகு விவேகியாதலால், இனி நடக்கவேண்டிய அநேக பெருங்காரியங்களை உத்தேசித்து, நடந்ததைப் பிரசாதமாகக் கொண்டு, எப்படியாகிலும் மனதைத் தேற்றிக் கொள்ளுவாரென்றும், அவரால் கோ ஆபரேஷனுக்கு இனிப்பலவிதத்திலும் பேருதவியுண்டாகுமென்றும், நாம் நம்பி, அப்படியே சங்கற்பிக்கும்படி பகவானையும் பிரார்த்திக்கிறோம்.

மதிராசு ராஜ குமாரகாலேஜ்.

வடஇந்தியாவில் பழைய ராஜ வமிசத்திலுதித்த குமாரர்கள், ஜமீன்தாரப்பிள்ளைகள் முதலியவர் படித்து முன்னுக்கு வருவதற்காக ராஜஸ்தானம் முதலிய இடங்களில் காலேஜ்கள் பிரத்தியேகமாய் ஏற்பட்டு நடந்து வருகின்றன. அவ்வாறே மதிராசிலும் நடக்க வேண்டுமென்று வெகு நாளாகப் பிரஸ்தாபமிருந்ததில், சமீபத்தில் கனம் பப்பிலி மகாராஜா அவர்கள் முதலிய இரண்டொரு முக்கி



பப்பிலி மகாராஜா



யஸ்தருடைய உதவியால் இந்தக் காரியம் சங்கற்பமாகியிருக்கிறது. இந்த உத்தேசப்படி இதுவரை கோர்ட் ஆப்வார்ட்ஸ் என்னும் அதிகாரிகளுடைய விசாரணைக்குட்பட்டிருந்த ஜமீன்தாரப் பிள்ளைகளும், மற்றுமுள்ள சகல ராஜாக்கள், ஜமீன்தார்கள், பெரிய மிராசுதார்கள் ஆகிய இவர்களுடைய பிள்ளைகள், சுற்றத்தவர்கள் முதலியோரும், இனி இந்தக் காலேஜில் படித்து முன்னுக்கு வரவேண்டும்.

ஜமீன்தாரப் பிள்ளைகளுக்கும் மற்றைய சாமான்னியப் பிள்ளைகளுக்கும் கலாசாலை ஒன்றாகவேயிருப்பது திறமென்றும், அவர்கள் சிறுவயதில் சாமான்னியருடன் கலந்து, அகவிலையும், ஜனங்களுடைய சுகத்துக்கங்களும் இப்படிப்பட்டவையென்று தெரிந்துகொள்ளுவது நலமென்றும், அநேகருடைய அபிப்பிராயம். ஆனால் அதற்கு ஒருபெருத்த ஆக்ஷேபம் காணுவதில் சந்தேகமில்லை. சாமான்னியர்கள் படித்துத் தேறுவது விசேஷமாக வயிற்றுவளர்ப்புக்காகவும், உத்தம பரீக்ஷைகள் வெகுதீக்ஷிண புத்தியுடையவர் முன்னுக்கு வருவதற்காகவும் ஏற்பட்டுள்ளன. ஜமீன்தாரப் பிள்ளைகளுக்கு வயிறு வளர்க்குமுபாயம் அனாவசியம். புத்திதீக்ஷிணம் சிலருக்குமட்டுமே லபிப்பதொழிய எல்லோருக்கு மன்று. ஆனால் எல்லா ஜமீன்தாருக்கும் தங்களுடைய ஆஸ்தியைப் பாலிக்க வேண்டியதும், குடித்தனக்காரருடைய க்ஷேமத்தை நாடியுழைப்பதும் அவசியம். ஆதலால் இந்தப் பள்ளிக்கூடத்தில் அந்தக்காரியத்திற்கு வேண்டிய படிப்பு முக்கியமாய்க்காணும். தவிர ஜமீன்தாரர்கள் அனேகமாய் க்ஷத்திரிய தருமம் வகித்தவராதலால், அவர்களுக்கு அதை யனுசரித்துக் குதிரை யேற்றம் முதலிய பயிற்சிகள் இருப்பது அவசியம்.

ஆகையால் இந்தக் காலேஜ் வேண்டுமென்று சர்க்காரும் ஒப்பித் திரவிய சகாயம் செய்ய சம்மதித்திருக்கிறார்கள். முதன் முதல் ஆகும் செலவிற்கு $6\frac{1}{2}$லக்ஷம் வேண்டும். கனம் பப்பிலி மகாராஜா ஒரு லக்ஷம் கொடுத்துவிட்டார். ஆதலால் காரியம் சீக்கிரம் கைகூடும். தடையில்லை.

க்ஷய ரோக நிவாரணம்.

இது விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் சமீப காலத்தில் ஒரு சர்க்கியுலர் அனுப்பியிருப்பதைக் கொண்டு டாக்டர் ஸ்ரீமான் சரத்குமார மல்லிகர் வெகு சந்தோஷத்துடன் எழுதுகிறார்:--"இதுநாள்வரை நாங்கள் விருதாவில் கூவிக்கொண்டிருந்தோம். எங்கள் கூச்சலைக் கேட்பாரற்றுக் கிடந்தது. க்ஷயம் என்பது வெகு கெட்ட ரோகம். இதனால் இந்நாட்டில் ஜனங்களுக்குண்டாகும் நஷ்டம் இவ்வளவென்றில்லை. இப்படியே விட்டால் காலக்கிரமத்தில் இந்தியர்களை இது எங்குமில்லாமற் செய்துவிடும். இவ்வளவுமட்டில் இது வியாபிப்பதற்குக் காரணம் அறியாமையும், அசிரத்தையுமாம். அதிர்ஷ்டம் என்று நினைத்து நமது நாட்டார் அனேக அனர்த்தங்களைப் பலக்கச் செய்திருக்கிறார்கள். இதுவும் அப்படியே வலுத்து வந்திருக்கிறது. க்ஷயரோகி யென்றால், சரி. பரிகாரமேயில்லையென்று நமது நாட்டார் நம்பி விடுகிறார்கள். ஆனால் டாக்டர்களாகிய நாமும் அப்படியே சொல்லி, க்ஷயரோகிகள் நம்மை நாடிவந்தால், அவர்களைத் தாக்ஷிண்ணியமின்றி, 'எக்கேடோ கெடுங்கள், உங்களுக்கு மீட்சியில்லையென்று சொல்லித் துரத்திவிடலாமா? கூடாதென்பதே என்மதம். மற்ற தேசங்களில், சில பெருவியாதிகளுக்குப் பரிகாரம் தேடவேண்டி தருமிஷ்டரான ஜனங்கள் சங்கஞ்சேர்ந்து, பரீக்ஷித்து அனேக அற்புதங்களைக்கண்டுபிடித்து ஆசரணைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

(இந்தியாவிலோ, இப்படியொன்றுமில்லை.) ஆதலால் இந்திய கவர்ன்மெண்டார் அனுப்பிய சர்க்கியுலர் வெகு சிறந்தது, என்பதற்

கையமில்லை. ஆனால், காரியமாகவேண்டுமே. அது புரோவின்ஷியல் கவர்ன்மெண்டுகளாலல்லவோ ஆகவேண்டும். அவைகள் பலவகைப்பட்டவைகளாதலால், இது உபயோகப்படாது. இதற்கு மாறாக, இந்தியாவிலுள்ள வைத்தியர்களில் க்ஷயத்தை விசேஷமாகக் கவனித்த நிபுணர்களையெல்லாம் சேர்த்து மின்டோ பட்டவர்த்தனர் அக்கிராசனாதிபதியாகி, விஷயத்தைக் கவனிக்கவேண்டும். பிறகு இந்தச் சங்கத்திற்குக் கிளைகள் இந்தியாவெங்கும் பரவி, கிராமங்களிலெல்லாம் வியாபித்து, பிரசங்கங்கள், ஜாலவிளக்குக் காக்ஷிகள், பத்திரிகைத்துண்டுகள், முதலிய பலவகையாலும், ஜனங்களுக்கு இந்த வியாதியின் ரகசியங்களைத் தெரிவித்து, விவேகம் அதிகரிக்கச் செய்து, முதலாவது வியாதியை வரவொட்டாமல் தடுப்பதற்கும், வந்தால் சரிவரப்பரிகரிப்பதற்கும், உபாயங்களை விளக்கவேண்டும். இதுதான் சரியான மார்க்கம். ஒவ்வொருகாரியத்திற்கும் ஓரோர் சுபமுகூர்த்தம் ஏற்படுகிறது. இக்காரியத்திற்கு இதுவே சுபமுகூர்த்தம். ஆரம்பித்தால் பிறகு காலக்கிரமத்தில் எல்லா மங்களமுமுண்டாகும்,'' என்கிறார்.

மதிராசில் விஷயந்தெரிந்தவர்கள் சிலராவது இருப்பாராதலால், அவர்கள் இதைக்கவனிக்க வேண்டுகிறோம்.

பிறப்பும் குணமும்.

மைசூரிலிருந்து பண்டித ஸ்ரீமான் கோவிந்தாசாரியாரவர்கள் சமீபத்தில் நடந்த கல்யாண மகோற்சவத்தைச் சுட்டி எழுதுகிறார்:—"இந்தக் கல்யாண சம்பிரமத்தில் இரண்டொரு விஷயம் எனக்கு விளங்கவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் சத்திரபதி யுவராஜாவையும் அவருடைய ராணியம்மாளையும் ஆசீர்வதிக்கவேண்டி, பிராம்மணர்கள் வரிசை வரிசையாக அக்ஷதையுங் கையுமாகப் போய், அக்ஷதையைப் போட்டு ஆசீர்வதித்துப் போனார்கள். ஆனால், மறுநாள் அதே பிராம்மணர்கள் தக்ஷிணை வாங்கப்போகையில், கைகட்டி, வாய்புதைத்து, அஞ்சலி செய்து போகவேண்டுமென்று விதியேற்பட்டது. சத்திரபதி மகாராஜா இந்தக் கல்யாணத்தில் எல்லாவிதிகளும் பழைய பதிவுபோலவே நடக்கவேண்டுமென்று ஆக்கிரகமிருப்பதாகக் காட்டியதனால், இந்த விஷயத்தில்மட்டும் இந்தப் புதிய ஏற்பாடு ஏனுண்டாயிற்றென்று விளங்கவில்லை.

சமீபத்தில் திவான் பஹதூர் ரகுநாதராவ் அவர்கள் இவ்விடம் வந்தபோது ஒரு உபந்நியாசம் செய்ததில், பிராம்மணன் சர்க்கார் உத்தியோகம் செய்தால் அந்த ஹோதாவில் க்ஷத்திரியனென்றும், பூமி, காணி வைத்து அனுபவித்தால், அந்த மட்டில் வைசியனென்றும், வியவகரித்தார். இது சரிதான். ஆனால் பிறப்பு என்பதைக் கட்டோடு மறந்து பேசுவது அசாஸ்திரீயம். பிறப்புக்கு மகிமையே இல்லையென்பவர் சாஸ்திரங்களைக் கைவிட்டவர். ஆதலால் மகாராஜா செய்த காரியம் சரியன்றென்று காணுகிறது.

தவிர பரோடா, திருவாங்கூர் முதலிய சமஸ்தானங்களில் மகாராஜாக்கள் பிராம்மணரை நின்று உபசரிப்பதே தவிர, உட்கார்ந்தல்ல. பிராம்மணன் அஞ்சலி முதலிய உபசாரங்கள் செய்தால், அது தமக்குக் கேடுவிளைவிப்பதாகக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால், மற்றெல்லாச் சடங்குகளும் பதிவுபோல் நடக்க, இந்த ஒரு அம்சம் மட்டும் ஏனிப்படி நடந்ததென்பது விளங்க வில்லை. ஸ்ரீராமன் முதல் சத்திரபதிகளெல்லோரும் பழைய ஆசாரத்தையும், சனாதன தருமத்தையுமே சிறந்ததாகக் கொண்டிருக்கிறார்கள்,'' என்று.

பண்டித ஸ்ரீமான் மேனாட்டுக் கல்வியும், யுக்தியும், அனுபவமும் கூடியிருப்பதாக அப்போதப்போது அவர் பத்திரிகைகளிலெழுதுவதைக்கொண்டு நாம் நிதானிக்கலாமாதலால்,



அவர் இவ்விஷயமாய் எழுதியது நமக்கு விநோதமாகக்காணுகிறது. 'பரம்பரையாண்டி'களுக்குச் சிலவிஷயங்களில் சிறப்பமைந்திருப்பது பிரத்தியக்ஷம். என்றாலும், அந்தலக்ஷணங்களை நாம் ஜாக்கிரதையாகப் பாலித்து வந்தால் விருத்தியும், அவைகளைச் சரிவரப் பாலியாது வந்தால் க்ஷயமும், உண்டாவதும் பிரத்தியக்ஷமாம். ஆதலால், 'இவ்வுலகத்தில் பாக்கிய தேவதையானவள் அவரவர் யோக்கியதையை யனுசரித்தே சம்மானிக்கிறாள்,' என்று பெரியவரொருவர் சொல்லியிருப்பது வாஸ்தவமாகக்காணுகிறது. முற்காலத்தில் வசிஷ்டர் முதலிய மகாரிஷிகள் ஆசிரம வாசமும், ஆத்ம ஸ்துதி, பர நிந்தை, திரவியாபேக்ஷை முதலிய துர்லக்ஷணங்கள் நீங்கிய நடவடிக்கையும் பொருந்தியவர்களாதலால், அவர்களுக்கு அந்தப் பதவிக்குத் தக்க மரியாதை கிடைத்தது. இப்பொழுதோ, மகாராஜாவிடம் சம்மானம் பெற்ற வைதிகர்களில் யாரும் வசிஷ்டமகாரிஷிக்குச் சமதையாகவோ, அந்த வம்சத்திற்குத் திலகங்களாகவோ, இல்லையென்பது நிச்சயமாதலால், இப்பொழுது கிடைத்துவரும் மரியாதைக்கு அவர்களுக்குள்ள பிறப்பு மட்டுமே காரணம். இனியும் சிறிதுகாலம் இப்படியே நடக்குமாகில், 'பெருங்காயம் வைத்த பானைக்குள்ள' இந்த வீசம் மரியாதையும் குறைந்துபோகவேண்டியதுதான் காலதருமம். ஆதலால் பண்டிதசுவாமிகள் பிறப்பினால் மேம்பட்ட தமது வருக்கத்தவருக்குக் குணத்தினாலும் மேம்படுவதற்கு ஏதாகிலும் உபாயம் தேடுவாராக. எட்டியிருப்பதை ஒப்புவிப்பதில் பிரயோஜனமில்லை. காலதேசவர்த்தமானங்களை அனுசரித்தே உபாயம் தேடவேண்டும்.

ரெயில் பிரயாணத்தில் ஸ்திரீகளுக்கு நேரிடும் அபாயம்.

சமீபத்தில் இந்துஸ்தானத்தில் ஒரு பெரிய பங்காள ஸ்ரீமதி தன் குழந்தைகளுடன் 'ஸ்திரீகளுக்கு மாத்திரம்' ஏற்பட்டிருக்கும் வண்டியில் ராத்திரி போய்க்கொண்டிருந்தாள். ஏதோ ஒரு ஸ்டேஷனில் ஒரு முழுத்திருடன் ஸ்திரீ வேஷம்பூண்டு, இந்துஸ்தானத்து முறைப்படி முகத்தை மூடி வந்து உட்கார்ந்தான். பிறகு சற்றுநேரம் கழித்து ஸ்ரீமதியும் குழந்தைகளும் தூங்கிவிட, திருடன் மெள்ள வந்து அவளுக்கு வாய்க்குத் துணியை அடைத்து, நகைகளை கழட்டினனும். குழந்தைகள் விழித்துக்கொண்டு கூக்குரலிடவே, அவைகளை ஒவ்வொன்றாக எடுத்து, வெளியே எறிந்துவிட்டுப் பிறகு அந்த அம்மாளையும் கழுத்தில் குத்தி நகைகளையெடுத்துக்கொண்டு, அடுத்த ஸ்டேஷனில் வண்டி நிற்குமுன்னமே, இருட்டில் குதித்து வேஷத்தை மாற்றிக்கொண்டிருந்தான். இம்மாதிரிக் கேசுகள் நடப்பதாகத் தெரிந்து ரயில்வே சூப்பரிண்டாண்டு பத்தா கண்டுபிடிக்கவேண்டிச் சிறிது காலமாக வந்துகொண்டிருந்தவர் இவனைப்பார்த்து, யாரங்கே என, இவன் ஓடியதனால், உடனே இறங்கித் தானும், இரண்டு கூலிகளுமாகத் தொடர்ந்து பிடித்தார்களாம். பங்காள ஸ்ரீமதியும், குழந்தைகளும் அனேகமாய்ப் போனவர்கள்தான் போலிருக்கிறது.

இது முதற்தடவையல்ல, இந்நாட்டிலும் ஸ்திரீகள் ஒண்டியாகப் போவதில் அனேக உபத்திரவமிருந்து வருகிறது. முதலாவது அவர்கள் பெண்கள். இரண்டாவது, அவர்கள் நகையில்லாமலிருப்பதில்லை. இந்த அவஸ்தையில் அவர்களைத் தனிமையாக அனுப்புவது பெரிய பிசகு. ரயில்வே அதிகாரிகள் கூடியமட்டில் பந்தோபஸ்து செய்துதான் வருகிறார்கள். என்றாலும், அவர்களிலேயே சிலர் துஷ்டர். மொத்தத்தில் நல்லவர்களென்றாலும், அவர்களுக்குக் கண்கள் இரண்டொழிய, ஆயிரமல்ல. ஆதலால், இனியாகிலும் ஜனங்கள் கொஞ்சம் விவேகத்துடன் காரியங்களைச் செய்வாராக. 'ஸ்திரீகளுக்கு மாத்திரம்' இருக்கும் வண்டிகளில் தமக்கு வேண்டியவர் ஏறினால், அதற்கு அடுத்தவண்டியில் தாமிரு

ந்து, அபாயமென்றால், அதற்கு அறிகுறியேதாகிலும் ஏற்படுத்திக்கொண்டு, ராத்திரியில் விசேஷித்துத் தூங்காமலே போவதுதான் திறம்.

**வெற்றிலைமிருத்தியு.**

பங்காளத்தில் சமீபகாலத்தில் வெற்றிலையில் ஒரு புழுப்பிடித் திருப்பதாகவும், அது வெகு சிறிதாதலால், தெரியாமல் தாம்பூலம் போடுபவர்களனேகர் இறந்து விடுவதாகவும், அதனால் ஜனங்களுக்குள் குழப்பம் அதிகரிப்பதாகவும் கேட்கிறோம். இது மெத்தவும் விசனிக்கவேண்டிய விஷயம். நமது ஜனங்களில் பெரும்பாலார்க்கு வெற்றிலை, பாக்கு இந்த இரண்டுமில்லாம லிருப்பது வெகுபிரயாசை. ஆதலால் அதற்கு மிருத்தியு வந்திருப்பது வெகு துக்ககர மென்பதில் சந்தேகமில்லை. தவிர இந்தக் காரணங்கொண்டு, ஜனங்கள் வெற்றிலை போடுவதை நிறுத்தினால், எத்தனையோ ஆயிரம் பெயர்களுக்குப் பிழைப்புப் போய்விடும். ஆதலால் பூசா விவசாயக்கலைஞர்கள் இதைச் சீக்கிரம் பரீக்ஷித்துப் பரிகாரங் கூறவேண்டும்.

நமது நாட்டிலும் எங்கேயாவது இரண்டொரு சமயத்தில் இந்த வதந்தி கேட்டு வருவதுண்டு. வெற்றிலைப் புழுவினாலுண்டாவதைவிட, பாக்குப் போட்டுக்கொள்வதில், சில சமயங்களில் மார்பு அடைத்துப் பிராணன் போய்விடுவது அதிக சாதாரணம். அதற்காக அனேகர் பாக்கை நெய்விட்டு வறுத்து வைத்துக்கொள்ளுவது பரிகாரமென்று நம்பி, அப்படியே செய்து வருகிறார்கள்.

கள்குடி முதலிய துர்க்குணங்கள் நமது கூலி ஜனங்களுக்குள் அதிகமாய்ப் பரவாமலிருக்கச் செய்வது வெற்றிலைபாக்கும், புகையிலையுமாதலால், வெற்றிலைக்குப் பங்காளத்தில் மிருத்தியு வந்தது நல்லதற்கல்ல. ஆதலால் அதைச் சீக்கிரம் பரிகரிக்கவேண்டிய பிரயத்தனம் நடக்குமென்று நம்புகிறோம்.

இப்பொழுது இரண்டொரு வாரத்திற்குள் ஜனங்களுக்குள் ஆரவாரம் பெருத்ததில், சர்க்கார் தரபில் பூச்சிகளைக் கவனிக்கவேண்டியேற்பட்ட பண்டிதர்கள் இந்த வெற்றிலைப் பூச்சிகளைப் பரிசோதித்து, அவைகள் விஷப் பூச்சிகளல்ல வென்றும், அவைகளால் கேடு ஒன்றும் விளையாதென்றும் உறுதி கூறியிருக்கிறார்கள். அதை யனுசரித்துச் சர்க்காரும் தண்டோரா மூலமாய்ச் சனங்களை யெச்சரித்து, மாமூல்படி வெற்றிலைபோடலாமென்றும், அதனால் தீங்கு ஒன்று மில்லையென்றும் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். இந்தமட்டில் நடந்தது சரியே. என்றாலும் இப்பொழுதுண்டான பயத்திற்குச் சரியான காரணத்தைக் கண்டுபிடித்து, ஜனங்களைச் சமாதானப்படுத்த வேண்டியதும் சமீபத்திலாகவேண்டிய காரியமென்பது நமதபிப்பிராயம்.

**பங்காளத்தில் ஜெடில்.**

சென்றமீ விஹாரிணியில் 'இந்தூர்' சமஸ்தானத்தில் ஜெடில் குத்துவதை விவரித்து, அது நிற்கவேண்டுமென்று ஸ்ரீமார்த்தாண்டமூர்த்தியையும் அவரது பக்தரையும் பிரார்த்தித்தோம். அதைச் சொல்லி நிறுத்துமுன்னமே, பங்காளத்திலிருந்து அதேமாதிரி சங்கதி தெரியவருகிறது. என்ன ஆச்சரியம்! ஆனால், இந்தக் கேசில், நடப்பது இன்னவிதமென்று விவரம் தெரியவில்லை. நடந்ததாகச் சங்கதிமட்டும் தெரிகிறது.

ஒரு ஜமீன்தாருக்கும் அவருடைய கிராமக் குடிகளுக்கும் பொருத்தமில்லாமல், பலகாரணங்களால் கலகமாகிக் கொண்டே வந்ததாம். கடைசியில் கிராமதேவதைக்கு உற்சவம் கொண்டாடுகையில், பதிவுபோல ஜெடில் குத்தவேண்டிய தினம் வந்தது. கிராமத்தவர்தங்களில் சிலரை மாமூல்படி பொறுக்கி, ஸ்நானம் முதலிய விதிகளை முடித்துக் கூட்டி வந்தார்கள். ஜமீன்தார் தமது கூலியவரில் சிலரை அப்படியே தயாராக்கிக்



கொண்டு வந்தார். யாருக்கு இந்த மரியாதை முதன் முதல் நடக்க வேண்டுமென்று வாதம் உண்டாகியதில், பேச்சுவளர்ந்து, கைமீறிவிட்டது. அதைப்பற்றி வியாச்சியம் பிரபலித்து, அசல், அப்பீல் எல்லாம் கிரமப்படி நடந்து, வேண்டிய மட்டில் பணம் இருகக்ஷியிலும் செலவாகி, ஏதோ ஒரு விதமாகக் கடைசியாக முடிந்ததாம்.

ஆனால் இதைக்கொண்டு நமக்காக வேண்டிய தொன்று மில்லை. பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு, அதற்கு வேண்டிய கல்வி, பெருங்குணம் முதலிய அங்கங்களில்லாதவரை, இம்மாதிரிதான் அந்தப்பணம் செலவாக வேண்டும். ஆனால், ஜெடில் விஷயத்தில் பங்காள கவர்ன்மெண்டார் ஏன் இன்னும் சும்மாப் பார்த்திருக்கிறார்களென்பதுதான் நாம் கேட்பது. மதிராசு கவர்ன்மெண்டார் எத்தனையோ வருஷங்களுக்கு முன்னமே அதை நிறுத்திவிட்டார்களே.

**ஸ்திரீகளும் புருஷவேஷமும்**

ஸ்திரீகள் புருஷவேஷம் போட்டு நடவடிக்கைகள் விசித்திரமாக நடத்தியதாக 'பதுமைக்கதை,' 'பிரதாப முதலியார் சரித்திரம்,' முதலியவைகளிற் கேட்டிருக்கிறோம் அல்லது, சாமான்னியமாய் நடந்ததாக அனுபவமில்லை. ஆனால் மேனாட்டில் எத்தனையோ விசித்திரங்கள் நடப்பதில், இதுவும் வெகு பிரபலமாய் நடந்திருப்பதாகச் சமீபத்தில் மெயில் பத்திரிகையில் படித்தோம். அதில் ஒன்றும் கதையல்ல. இரண்டொரு கேசுகளில் காரணம் விளங்குகிறது. மற்றவைகளில் தெரியவில்லை.

19-ம் நூற்றாண்டு முதலில், ஒரு ஸ்திரீ ஆண் வேஷம் பூண்டு டாக்டராக உத்தியோகம் செய்து, தென் ஆப்பிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் முதலிய இடங்களில் வெகுகாலமிருந்து, தென் ஆப்பிரிக்காவில் ஒரு சமயத்தில், தொந்த யுத்தமும் செய்து தன் பௌருஷத்தை ஸ்தாபித்தாளாம். யுத்தத்திற்குக் காரணம் தனக்குப் பௌருஷமில்லை யென்று யாரோ ஒருவர் இகழ்ந்து பேசியதேயாம்! அனேகர் இங்கிலாந்திலும், இத்தலியிலும், அமெரிக்காவிலும், தமது பர்த்தாக்களைத் தொடர்ந்து, அவர்களுடன் ஜதையாக நின்று, யுத்தகளத்தில் போர்புரிந்து, காயம் வாங்கிய பின்னரே தங்களுடைய பெண்மையைத் தெரிவித்துக் கொண்டார்களாம்! யுத்தமட்டுமல்லாமல், சுரங்கங்களில் வேலை செய்தல், வாத்தியங்களைச்சுருதிசேர்த்தல், தலையைக்கத்தரித்து அழகு செய்தல் முதலிய அனேக வேலைகள் இம்மாதிரி வேஷம் பூண்ட ஸ்திரீகள் செய்து வந்ததாகவும் தெரிகிறது. தவிர இம்மாதிரி வேஷம் பூண்டவர்கள், தங்கள் வர்க்கத்தவரையே பிரமிக்கச்செய்து, சிலசமயங்களில் சுவயம் வரப் பிரஸ்தாபமுண்டாகிறவரை வேடிக்கை செய்திருக்கிறார்களாம்!

பர்த்தாக்களுடன் சென்று யுத்தஞ் செய்தவரொழிய, மற்ற கேசுகளுக்கெல்லாம், மொத்தத்தில் பித்தம் காரணமென்னலே தகும். வேறு ஒரு நியாயமும் காணவில்லை.

"வேகிற வீட்டில் பிடுங்கினது லாபம்," என்பது வெகுநாளையப்பழமொழி. என்றாலும் தற்காலம் கல்கத்தாவில் நடந்தது பெரிய அநியாயமாகக் காணுகிறது. பெரும் பட்டணங்களிலெல்லாம் இக்காலத்தில் நெருப்புப் பிடித்தால் அதை உடனே அவிக்க யந்திரமும், அதை இயக்க மனிதரும் இருப்பது அனேகருக்குத் தெரியும். கல்கத்தாவில் சமீபத்தில் உபேந்திரநாதன் என்னும் ஸ்ரீமானுடைய வீடு நெருப்புப் பிடித்ததில், இந்த யந்திரக்காரர் போய் அவரைக் கைகூலி கேட்டு, கொடாவிட்டால் ஜலம் போட்டு நெருப்பை அவிப்பதில்லையென்று பயமுறுத்தி, ஐந்நூறு, ஆயிரக்கணக்காகப் பெற்றார்களென்று அவர்களில் சிலர்மேல் குற்றம் ருசுவாகித் தண்டனை யடைந்திருக்கிறார்கள். ஆகா, என்ன மகாபாபிகள். இனி இப்படியாகாமலிருக்க வேண்டுமானால், ஒவ்வொரு பெரிய தெருவுக்கும் நாலைந்து பெரியதனக்காரர் ஏற்பட்டு யந்திரக்காரர் அவர்களுக்குத் திருப்திகரமாய் வேலை செய்யவேண்டுமென்று ஏற்பாடு உண்டாவது நலமென்று நமக்குக் காணுகிறது. முனிசிபல் கவுன்சிலர்களும் உபகரிக்கத்தான் வேண்டும்.

## ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்

ஸ்ரீமான் எம். வி. மீனாக்ஷிசுந்தர முதலியார், பி.ஏ.

நமது சுவாமிகள் 1862ஹு ஜனவரிமீ 9உ திருஅவதாரம் செய்தருளினார். இவர் காயஸ்த பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவர். இவரது முன்னோர்கள் தெய்வபக்தியிற் சிறந்த சீரியர்கள். நமது சுவாமிகளுக்கு அவரது இளமைப்பருவத்தில் அவர் பெற்றோர்களால் நரேந்திரர் என்று நாமமிடப்பட்டது. இவரது தந்தையாராகிய ஸ்ரீமான் விசுவநாத தத்தர் கல்கத்தா ஹைகோர்ட்டு அட்டர்ணி ஆக இருந்தவர். இவரது பாட்டனார் தமது கடைசிகாலத்தில் சந்நியாசியாகிவிட்டனர். சுவாமிகள் தமது இளமைப்பருவத்திலேயே மிகுந்த தெய்வபக்தியை யுடையவராக விளங்கினார். தாம் பள்ளியிற் பயின்றுவருங்காலத்திலேயே இந்து தத்துவசாஸ்திரங்களை அதிக பிரீதியுடன் படித்துவந்தார். ஹெர்பர்டு ஸ்பென்ஸர் இயற்றிய நூல்களை மிகவும் கவனமாக அடிக்கடி அவர் படிப்பதுண்டு. அப்போதே அவர் அவ்வாசிரியருடைய சில கொள்கைகளைக் கண்டித்து நிருபம் வரைந்தனுப்பியதை அவ்வாசிரியர் கண்டு மிகமகிழ்ந்து சுவாமிகளை அந்த வழியிலேயே உழைத்து உண்மையைக் கண்டுபிடிப்பதில் ஊக்கமூட்டினர். இவர் படித்துவந்த படிப்பின் சுபாவமானது அதிசீக்கிரம் இவரை 'அக்ஞாதம்,' என்றால், ஒன்றிலும் பற்றில்லாத மதத்தை அநுசரிக்கும்படி செய்தது. ஆனால் அம்மதத்தில் அவர் ஊன்றி நிற்காமல் பிரமோ மதத்தைக் கைப்பற்றினார். அதுவும் குறுகிய கொள்கைகளை உடையதென்று கண்டு அதனையும் விட்டு உண்மையை ஆராய்வாராயினர். அப்போதுதான் அவர் பி. ஏ. பரீக்ஷையிற்றேறினார். அவரதுமனதில் சந்தேகமானது வலுவாகக் குடிகொண்டது. ஆத்ம விசாரணையிலேயே முழுவதும் கவனத்தைச் செலுத்தினார்.

மனத்தின் இருளைப்போக்கிப் பதார்த்த நிச்சயம் செய்யவழி காட்டும் குருதரிசனம் எப்போது கிடைக்குமோ என்பதேஅவருக்குச் சார்வகாலமும் சிந்தனையாயிருந்தது.

"வேதமாகமச் சென்னியில் விளைபொருளபேதம்
பேதமாகிய பிணக்கறுத் திருப்பணி யவிழ்த்து
நாதனாகிய தன்னையு மென்னையு நல்கும்
போதனாகிய குருபரன் வருவதெப் பொழுதால்"

திருவிளையாடற்புராணம்.

சுவாமிகளின் நெருங்கிய பந்துஒருவர் பரமஹம்ஸஸ்ரீராமகிருஷ்ணபகவானுடைய சிஷ்யர். ஒருநாள் அவர் நமது சுவாமிகளையும் பரமஹம்ஸரிடம் கூட்டிச்சென்றனர். பரமஹம்ஸரது தரிசனமானது நமதுசுவாமிகளுடைய வாழ்க்கையில் முக்கியமான மாறுதல்களை விளைவித்தது. பரமஹம்ஸருக்கும் நமது சுவாமிகளுக்கும் ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவும் வெகுசீக்கிரத்தில் அதிகப்பட்டது. நமதுசுவாமிகளும் பரமஹம்ஸரிடம் அடிக்கடிச்சென்று வேதாந்த சாஸ்திரத்தை ஐயந்திரிபறக்கற்றுணர்ந்து, அவரது மாணாக்கருள் முதன்மாணாக்கராக விளங்கினார்.

ஸ்ரீ பரமஹம்ஸர் 1866ஹு ஆகஸ்டுமீ 16உ பரமபதமடைந்தனர். பின்னர் அம்மாணாக்கர்கள் எல்லாம் உலகப்பற்றனைத்து மொழித்து, உலகநன்மைக்கும் இந்துமதாபி விருத்திக்கும் உழைப்பதையே தொழிலாகக் கைக்கொண்டார்கள். நமது சுவாமிகளும் வேதாந்தமாகிய உண்மைப் பொருளை உலகத்திற்குபகரிக்கும் பொருட்டு, தம் வாழ்நாள் முழுவதும் உழைப்பதாக உறுதி செய்துகொண்டார். சின்னாள் அவர் தமது சகபாடிகளுடன் காலங்கழித்துப் பின்னர் இமய பர்வதத்துக்குச் சென்று தனிமையாகப் படிப்பிலும் தியானத்திலும் சில காலம் கழித்தனர். பிற்பாடு தீபேத்துக்குச் சென்று பௌத்தமதத்தை ஓதியுணர்ந்தனர். அதன்பின் இந்தியாவின் பலபாகங்களிலும் சென்று வேதாந்தத்தைப்பற்றிப்பிரசங்கமாரி



ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்
(பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்பொழுது எடுத்த படம்)



ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்
(அமெரிக்காவில் பிரசங்கம் செய்கையில் எடுத்த படம்)

பொழிந்து வந்தனர். கத்ரி சமஸ்தானத்தில் அவ்வூர் அரசனைத் தமது கொள்கைகளுக்கு இணங்கும்படி செய்தார். அங்கிருந்து மேற்குக்கடல் கரைமார்க்கமாகவே வந்து திருவனந்தபுரம் சேர்ந்து, சிலநாள் அங்கு தங்கிப் பின் சென்னையிற் சேர்ந்தார். அவர் சென்னை சேர்ந்ததும், அங்கிருந்த பலர் அருமுயற்சி செய்து திரவியம் சேகரித்து, சுவாமிகளுக்குக் கொடுத்து, அவரை அமெரிக்கா கண்டத்திலுள்ள சிக்காகோ என்னுமிடத்தில் நடக்கப்போகும் மத மகாசபைக்குப் போகவேண்டுமென்று பிரார்த்திக்க, சுவாமிகளும் இசைந்து ஜப்பான் மார்க்கமாக அமெரிக்கா தேசத்துக்குப் புறப்பட்டார்.

மதிராசு ஜனங்கள் சேகரித்துத்தந்த சொற்பப் பணம் நமது சுவாமிகளுக்கு வழியிலேயே செலவழிந்துவிட்டபடியால், அவர் அமெரிக்காவுக்குக் கையில் காசில்லாமல் போய்ச் சேர்ந்தார். அந்த நாட்டிலிருந்த ஒரு விர்த்தாப்பிய மாதுக்கு நமது சுவாமிகள் ஒரு ஆச்சரியமான 'வஸ்துவாகத்' தோற்றியபடியால், அவரைத்தன் நண்பர்கட்குக் காட்ட எண்ணங்கொண்டு, அந்நண்பர்கட்காகச்செய்த ஒருவிருந்திற்கு நமது சுவாமிகளையும் வரவழைத்தனள். அந்த விருந்தில் நமது சுவாமிகள் ஒரு ஆச்சரியமான வஸ்துவாகக் கண்டதுமட்டுமேயல்லாமல், தமது அரிய அபார சாமர்த்தியத்தால் அங்கிருந்தவர்களைப் பிரமிக்கும்படியும் செய்தார். சுவாமிகள் இந்து வேதாந்த சாஸ்திரத்தைப்பற்றிப் பேசியபோது அங்கிருந்தவர்கள் அதை அர்த்தம் செய்து கொள்ளச் சக்தியற்றவர்களாக இருந்தார்கள். ஆகையால் அவர்கள் அத்தேசத்துத் தத்துவசாஸ்திரியார் ஒருவரை நமது சுவாமிகளுடன் தர்க்கம் செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். அந்தத்தத்துவசாஸ்திரி நமது சுவாமிகளின் பாண்டித்தியத்தையும் திறமையையும் வியந்து, மத மகாசபையின் அக்கிராசனாதிபதியாகிய டாக்டர் பாரோஸ் என்பவருக்கு அவரை அறிமுகம் செய்வித்தார். அவரும் சுவாமிகளை மத மகாசபையில் இந்து மதத்தைப் பற்றிப் பேசும்படி கேட்டுக்கொண்டார். பூமண்டலமெங்கிருந்தும் வந்து நிறைந்திருந்த அளவற்ற விற்பன்னர்கள் கூடிய அந்தச் சபையில் நமது வேதாந்த சாஸ்திரத்தைப்பற்றிச் சுவாமிகள்செய்த அரியபிரசங்கத்தைச் செவியுற்ற பலரும் அதிவியப்புற்றனர். மேல்நாட்டாரும் கீழ்நாட்டாருடைய தத்துவ சாஸ்திரங்களை வியக்க ஆரம்பித்தனர். இதுவரை உலகத்திற் பிரசித்தியற்றுச் சாமான்னிய சன்னியாசியாயிருந்த நமது சுவாமிகள் அப்போதேமிக்ககீர்த்திமானாகவிளங்கினார். நியூயார்க்கு ஹெரல்ட் முதலிய முதல்தரச் சமாசாரப் பத்திரிகைகள் சுவாமிகளின் திறமை, பாண்டித்தியம் முதலியவைகளைப் பற்றி வியந்தும், அந்தச்சபையில் அவரே எல்லோரினும் மேம்பட்டவர் என்றும், எழுதலாயின. உடனே அமெரிக்கா தேசத்தில் பலபாகங்களிலிருந்தும் சுவாமிகளுக்கு அங்கங்கு வந்து பிரசங்கங்கள் செய்யவேண்டும் என்று கோரிய கடிதங்கள் வந்து குவிந்தன. அவ்வேண்டுகோள்கட்குச் சுவாமிகளும் இசைந்து, பல இடங்களுக்கும்சென்று பிரசங்கமாரிகள் பொழிந்து, உலக இன்பங்களையே உண்மையென்று மதித்து அலையும் தேசங்களில் முதன்மை பெற்ற அந்த அமெரிக்கா தேசத்திலும் வேதாந்த மார்க்கத்தை ஜனங்கள் விரும்பிக் கைப்பற்றும்படி செய்தனர்.

பின் அமெரிக்காவை விட்டுச்சுவாமிகள் இங்கிலாந்து சென்று அங்கு இந்துமதத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்தார். அதன் பலனாகப் பின்னால் சுவாமி கிருபானந்தர் என்ற பெயரை வகித்த ஸ்ரீமான் ஸான்ட்ஸ் பேர்க்கு, சுவாமி அபயானந்தர் என்னும் பெயரை வகித்த ஸ்ரீமதி லூயி அம்மாள், ஞானசகோதரி நிவேதிதை என்னும் ஸ்ரீமதி மார்கரெட்டு நோபில் அம்மாள் முதலிய பல பிரபல ஸ்ரீமான்களும், ஸ்ரீ

மதிகளும், சுவாமிகளுக்கு மாணாக்கர்களாகி அவர் வழியிலேயே உழைத்து வருபவர்களானார்கள்.

1896ஸு டிசம்பர்மீ சுவாமிகள் தமது சொந்த நாடாகிய இந்த நாட்டுக்குத் திரும்பி வந்துசேர்ந்தார். அப்போது அவரைப் புகழாதாரொருவருமில்லை. சுவாமிகள் வேதாந்தத்தைப் பற்றிச் செய்த பிரசங்கங்கள் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நமது சுவாமிகள் பிரசங்கம் செய்வதோடு மட்டும் திருப்தியடையவில்லை. வேதாந்த சாஸ்திரத்தை எல்லாரும் ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்றும், இந்துக்களை மற்ற எல்லா ஜாதியாரிலும் நன்னடக்கை, தெய்வ பக்தி முதலியவற்றில் சிறந்தவர்களாகச்செய்யவேண்டும் என்றும் கருதி, அப்படிச் செய்வதற்கு வேண்டிய அரிய பெரிய முயற்சிகளைச் செய்து வந்தார். ஸ்ரீ பரமஹம்ஸர் செய்து வந்த வேலையை மறுபடியும் ஸ்தாபித்து,வேதாந்தத்தைக்கற்க விரும்பும் இந்து சிறார்கட்குப்போதிக்கவேண்டி,அவர் கல்வி மடங்களைக் கல்கத்தா, இமயமலை முதலிய இடங்களில் ஸ்தாபித்தருளினார். தவிரவும் 1897-ஸு த்தியபஞ்சத்தில் கஷ்டப்பட்ட ஏழைஜனங்களுக்கு உதவக்கூடிய வேலைகள் ஆரம்பித்து அவர்களை ஆதரித்தனர். இப்படிப்பல விதத்திலும் விடாமல் உழைக்கவே அவரது தேகஆரோக்கியம் மிகவும் குறைந்தது. வைத்தியர்களின் அபிப்பிராயப்படி தேகசுகத்தின் பொருட்டு மேல் நாடுகளுக்குச் சென்றனர். இங்கிலாந்தில் சிலநாள் தங்கி, கொஞ்சம்சுகம் அடைந்து,அமெரிக்கா சென்று ஸான் பிரான்ஸிஸ்கோ என்னுமிடத்தில் இப்போது மிகநல்ல நிலைமையிலிருக்கும் "சாந்தி ஆசிரமம்," "வேதாந்த சங்கம்," இவைகளை ஸ்தாபித்தனர். பிறகு பாரிஸ் நகரத்தில் அப்போது நடந்த மத மகாசபையில் இந்துமதத்தைப்பற்றிப் பேசும்படி சுவாமிகளைக் கேட்டுக்கொள்ள, அவரும் இணங்கி அங்குசென்று, பிராஞ்சு பாஷையில் இந்து மதத்தைப்பற்றி அதியற்புதமாகப் பேசினார்!

இக்காரணங்களால் மறுபடியும் தமது ஆரோக்கியத்தைஇழக்கவே, சுவாமிகள் இந்தியாவுக்கு அதை விட்டுப் புறப்படும்போதிருந்ததைவிட அதிக பலவீன ஸ்திதியில் வந்து சேர்ந்தார். என்றாலும் அவர் தமது தேகஸ்திதியைக் கவனியாது, தாம் கைக்கொண்ட கருமத்தையே அதிகமாகப்பாராட்டி, இந்தியச்சிறார்கட்குஒரு பாடசாலையையும், ஏழைகட்கு ஒரு தங்குமடமும் காசிநகரில் ஸ்தாபித்து, இன்னும் வேதாந்த அபிவிர்த்தி விஷயமாக முயன்று வந்தனர். அப்படியிருக்கும் காலத்தில் ஜப்பானிலிருந்து சிலபெரிய மனிதர்கள் வந்து சுவாமிகளை ஜப்பானுக்கு வரும்படியாகவும், அங்குள்ள ஜனங்களின் மனோபாவத்தையும் மதாபிமானத்தையும் அதிகரிக்கும்படி செய்யவேண்டும் என்றும் பிரார்த்திக்க, சுவாமிகள், தமது தேக அசௌக்கியத்தால் அதை அப்போது ஏற்றுக்கொள்ளக்கூடவில்லை.

இனி நாம் அந்தப் பெருந்தன்மை வாய்ந்த முனிசிரேஷ்டரின் அந்திய காலத்தைப்பற்றி சொல்லவேண்டியிருக்கிறது. 1902ஸு ஜூலைமீ த்தில் ஒருநாள் அதிகாலையில் சுவாமிகள் தியானத்தில் அதிக நேரம் கழித்துப்பின் தமது சிஷ்யரில் சிலருக்குச் சமஸ்கிருதபாடம் கற்பித்தார். அன்று சாயங்காலம் மறுபடியும் அதிக நேரம் தியானத்தில் அமர்ந்தனர். அன்று சந்தியாவேளையில் கொஞ்சதூரம் உலாவப் போய்த் திரும்பிவந்து, மீண்டும் பூசையில் உட்கார்ந்து, தன்னையே மறந்து அந்நிலையிலேயே அன்றிரவு 9-மணிக்குப் பரமபதம் அடைந்தார்.

"நாலு காணங் களுமொன்று
நல்ல வறிவு மேற்கொண்டு
காலும் பிரம நாடிவருங்
கருத்துஞ் செலுத்தக் கபாலமுடி
ஏல வேமுன்பயின் றநெறி
யெடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாத
மடைவார் கயிலை முன்னடைந்தார்"

பெரியபுராணம்.

இப்பெரியவருடைய கொள்கைகளைப்பற்றி மற்றொருமுறை ஆராய்வோம்.



## தாலிகட்டுக் கல்லியாணம்

ஸ்ரீமதி பாக்கியலக்ஷ்மி அம்மாள்

சுமார் 25-ஸு த்திற்கு முன் கொங்கநாடு என்னும் தமிழ்ப் பிரதேசத்தில் மலையாளிகளைக் காணுவது அபூர்வம். இப்பொழுதோ, மதிராசு முதல் எந்த ஜில்லாவிலும் மலையாளிகள் காணுவதுடன், சர்க்கார் உத்தியோகம், ரயில்வே, வியாபாரம் முதலிய எவ்வகைத் தொழிலிலும் இவர்கள் பிரபலித்து வருகிறார்கள். என்றாலும், இவர்களுக்குள் கல்லியாணம், தாயபாகம் முதலிய விஷயங்கள் வெகு விசித்திரமாகக் காணுவதால், அவற்றில் ஏதாகிலும் சில முக்கிய அம்சங்களை நமது ஜனங்களுக்குத் தெரிவிப்பது அவசியமென்று காணுகிறது. இந்தப் பிரகிருதத்திற்கு மலையாளிகள் என்று நாம் வழங்குவது அவ்விடத்திய ஜனங்களில் முக்கியஸ்தராகிய நாயர்களைமட்டுமேயாம்.

நாயர்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 'தரவாடு' என்று பெயர். இந்தத் 'தரவாட்டில்' பிறந்த ஆணும் பெண்ணும் சாசுவதமாக இதையே சேர்ந்தவர்கள். நமது பிராந்தத்திலோ, ஒரு குடும்பத்தில் பிறக்கும் பெண்கள் வேறு கோத்திரத்தில் போய்ச் சேர்ந்துவிடுவதும், பிள்ளைகள் மட்டும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதும் எல்லோருமறிந்த விஷயம்.

குடும்பத்தின் ஆஸ்தியெல்லாம் நமது நாட்டில் ஆண்பிள்ளைகளுக்குத்தான் சொந்தம். பெண்களுக்கு ஏதோ தயாவிஷயமாய்க் கிடைப்பது தவிர வேறு பாத்தியம் ஒன்றுமில்லை. அப்படியே ஒவ்வொரு ஆண் பிள்ளையும் சம்பாதிப்பதைத் தன் வயிற்றுக் குழந்தைகளில் ஆண் மக்கள் அனுபவிக்கும்படி விட்டுவிடுவதுதான் நம்மூர் காணும் பதிவு. மலையாளிகளாகிய நாயர்களிலோ, இதெல்லாம் பேதித்துக்காணுகிறது. தரவாட்டில் பிறந்த ஆணும், பெண்ணும் சம்பாதிப்பது தரவாட்டிற்குப் பொதுவான ஆஸ்தியாகும். அதிற் பிறந்த ஆண்மக்கள் சம்பாதிப்பது அவர்கள் வயிற்றுக் குழந்தைகளுக்கில்லை. மேலே நாம் சொல்லியபடி நமதுநாட்டில் எப்படிப் பெண்டுகளுக்குக் கிடைப்பதெல்லாம் தயாவிஷயமோ, அப்படியே மலையாளத்தில், சம்பாத்திய புருஷன் ஒவ்வொருவனுடையவும், சொந்த மக்களுக்குக் கிடைப்பதெல்லாம் தயாவிஷயமாம். சாமான்னியமாய்ஒவ்வொருவனுடையவும் வார்சுகள் அவனுடைய மருமக்கள்மார், என்றால், அவனுடைய தமக்கை,தங்கை பெற்ற பிள்ளைகளேயாதலால், ஆஸ்தி அவர்களுக்குத்தான் சேரும்.

ஆஸ்தி விஷயம் இப்படி யிருப்பதால், கல்லியாண விஷயமும் இதை யனுசரித்தே விசித்திரமாகக்காணும். ஒரு தரவாட்டில் பிறந்த பெண்ணுக்குப் பிறந்த அகமும் அதுதான், புக்ககமும் அதுதான். என்றால், அவள் எப்பொழுதாவது 'மாமியார் வீட்டுக்கு' ப்போவதென்றாவது, அங்கு சென்று மாமியார், நாத்தனார் முதலிய இஷ்ட மித்திரர்களுடன் உறவாடி, அவர்களால் வேண்டிய மட்டில் பூஜை பெறுகிற பாக்கியம் நாயர் ஸ்திரீகளுக்கு இல்லவே யில்லை. கல்லியாண மென்பது அவர்களுக்குள் இருவகைப்படும். அதாவது பதினொன்றாம் ஆண்டுக்கு முன் எப்பொழுதாவது நடக்கிற 'தாலிகட்டு' என்பது ஒன்று. பிறகு 'பெரியவளான' பின்நடக்கும் 'சம்பந்தம்' என்பது ஒன்று. இவ்விரண்டும் நம்மவர்களுக்கு விசித்திர மாகத்தான் காணும். ஆனால் நம்முள் நடக்கும் அனேக காரியங்கள் இதர ஜனங்களுக்கும் அப்படியே தான் காணுமென்பதை நாம் மறக்கக்கூடாது.

நாயர்ப் பெண்களுக்குள் தாலிகட்டுக்கலியாணம் பதினொரு வயதிற்கு முன் ஆகவேண்டியது கிரமம் என்று மேலே சொன்னோம். ஆதலால் மற்றபடி நடப்பதெல்லாம் அக்கிரமம். ஆனால் விவாக விஷயத்தில் எல்லா ஜாதியாரிலும் அக்கிரமம் அதிகமே யொழியக்

கிரமமன்று. ஆதலால் இதில் அதிசயம் ஒன்றுமில்லை.

இந்தத் தாலிகட்டும் சடங்குக்குப் பலபெயர் பலவிதமாக அர்த்தம் கற்பிக்கிறார்கள். பிராம்மணர் முதலிய சில ஜாதியாரில் நடப்பதைப் பார்த்து, வேண்டுமென்று நாயர்கள் இதைச் சேர்த்துக்கொண்டதாகச் சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் இதை ஒரு ஸம்ஸ்காரமென்கிறார்கள். அதாவது, ஆண்மக்களுக்கு எப்படிப் பதினாறுவயதோ, அல்லது சற்றேறக்குறையவோ, ஆனவுடன் அவர்களுக்குப் பிர்மசரிய தீக்ஷையை ஒழித்து, 'சமாவர்த்தனம்,' என்றால், கல்லியாணத்திற்கு யோக்கியதை வரும்படியாக ஒரு சடங்கு நடக்கிறதோ, அதுபோலவே இவர்களுள் பெண்மக்களுக்கும் நடக்கிறது, என்கிறார்கள். இது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். இப்பொழுது அவர்களுக்குள் நடப்பதை மட்டும் நாம் விவரித்துவிட்டால், படிப்பவர்கள் இஷ்டம் போல் அதைப்பாவிக்கலாம்.

திருவாங்கூரில் தென் பாகத்தில் நடைபெறும் வழக்கத்தை நாம் இங்கு விவரிக்கிறோம். வேறு இடங்களில் அனேகம் சில்லறை வித்தியாசங்களிருக்கலாம். ஆனால் மொத்தத்தில் இதுவே எங்கும் காணக்கூடிய தென்பதில் சந்தேகமில்லை. திருவாங்கூரை யெடுத்ததற்கு இப்போது அவ்விடத்தில் சமீபகாலத்தில் மகாராஜாவாகிய "பொன்னுத் தம்பிரானுடைய" மகளுக்கு இந்தக் கல்லியாணம் நடந்த சம்பிரமம் காரணம்.

தாலிகட்டுக் கல்லியாணம் ஒரு பெண்ணுக்கு நடக்க வேண்டுமானால், தரவாட்டின் 'காரணவன்' என்னும் தலைவன் அதற்காக முகூர்த்தம் பார்த்து நிஷ்கரிஷை செய்துகொண்டு, அதைத் தன்னுடைய இஷ்டமித்திரர்களுக்கும், சாமான்னிய பந்துகளுக்கும், 'மச்சம்பிக்காரர்' என்னும் விசேஷ பந்துக்களுக்கும் எழுதித் தெரிவிக்கிறான். மச்சம்பிக்காரர் இவன் வீட்டில் வந்து கூடி 'லக்கின பத்திரிகை' வாங்கிக் கொள்ளுகிறார்கள். பிறகு வீட்டிற்குப் போய்த் தங்கள் கோத்திரத்துப் பிள்ளைகளில் ஒருவனை மணவாளனுக்கு கிறார்கள். கிரமப்படி இந்த வர்க்கத்தைவிட்டு வேறு பிள்ளைகள் யாருக்கும் தாலிகட்டுவதற்குப் பாத்தியமில்லை. இந்தப்பிள்ளையின் நக்ஷத்திரமும் பெண்ணின் நக்ஷத்திரமும் பொருந்தி யிருக்கவேண்டும். பிள்ளைக்குச் சுமார் பன்னிரண்டு வயது இருப்பதுதான் சாதாரணமாக வழக்கம்.

முகூர்த்ததினம் காலையில்பிள்ளைக்குப்பட்டு முதலிய அலங்கார உடையுடுத்து, காப்பு முதலிய ஆபரணங்கள் பூட்டி, மாலை, தலைப்பாகை, முதலியன தரித்து, பிச்சாங்கத்தி, எழுத்தாணி முதலிய அங்கங்களுடன், தயார் செய்வார்கள். பிறகு மேளதாள வரிசைகள் முழங்க அவன் யானைமேல் சவாரிசெய்து, குடைநிழலிருந்து, உருவின கத்தியைக் கைக்கொண்டு, பெண்வீட்டுத்தரவாடுக்கு விஜயம் செய்வான்.

பிறகு பந்தலை வலம் வந்து, உட்புகுந்து பந்தலில் இட்டிருக்கும் மணைமேலுட்காருவான். கல்லியாணத்திற்குச் சாக்ஷியாக விளக்குகள் எரிவதுடன், ஒருகணபதி உருவமும் பூஜைக்காகச் செய்து வைத்திருப்பார்கள். பிறகு இவனுக்கெதிரில் போட்டிருக்கும் மணையில் பெண் வந்து உட்காருவாள். மச்சம்பிக்காரரும், பெண்வீட்டுப் பெரியோர்களும் சுற்றி நிறைந்திருப்பார்கள்.

பெண், பிள்ளை இருவர் கையிலும் சங்கு மோதிரம் கோர்த்தாக்கிய சரம் கங்கணமாகக் கட்டி யிருக்கும். தட்டில் அரிசியிட்டு அதில் திருமங்கிலியத்தைச் சரட்டில் கோர்த்து வைத்து, பெரியோர் ஆசீர்வாதம் வாங்கிப் பிறகு, மணவாளன் கையில் கொடுத்துப் பெண் கழுத்தில் கட்டுவார்கள். பெண்ணினுடைய அத்தைதான் தாலிமுடிவது. அப்பொழுது சகல வாத்திய முழங்கும். பெண்கள் கொலுவை வைப்



பார்கள், என்றால், எல்லோரும் சேர்ந்து ஒரு விதமாக ஒலிப்பார்கள். பிறகு எல்லோரும் 'வதூவரர்களை' ஆசீர்வதித்துத் தாம்பூலம் பெற்றுப் போவார்கள்.

இது முதல் நாலுநாள் கல்லியாணம் சம்பிரமம்தான். சாப்பாடு விசேஷமாக நடக்கும். மாப்பிள்ளையும் பெண்ணும் மணவறையென்கிற அறையிலிருக்க வேண்டுமென்பது பழைய வழக்கம். ஆனால் இப்போது அது நடப்பிலில்லை.

மூன்றாம் நாள் 'மஞ்சள் தேய்ப்பு' என்னும் சடங்கு நடக்கும். அதைத்தான் கன்னடியர் உருட்டாணியென்றும், தமிழர் நலங்கென்றும் கொண்டாடுவது. இது முடிந்ததும், பெண்ணுக்குச் சமீப பந்துவொருவர் வீட்டில் கல்லியாணக்காரருக்கெல்லாம் 'அவல் தீனி' யென்று ஒரு பெரிய விருந்து நடக்கும். நான்காம் நாள் சாயங்காலம் 'தண்ணீரெடுப்பு'ச் சடங்கு நடக்கும். அதாவது, பெண்ணை அலங்கரித்து, குளத்திற்கோ, நதிக்கோ கூட்டிப்போய், குடத்தில் நிறைய நீரெடுத்துவரும்படி செய்வதாம். இந்தக் குடத்தை நீருடன் மணவறையில்வைத்துவிடுவார்கள். பிறகு ஒருத்தி மணவறைக்குட் போய்க்கதவைச்சார்த்தியுட்கார்ந்துவிட, வெளியிலுள்ளவர்கள் 'வாசல் திறக்கும்படி' பாடுவார்கள். அதன்பின் கொண்டுவந்த ஜலத்தைக் கொண்டு 'மாரான்' என்னும் நாயர் வகுப்பான் மணமகன், மணமகள் இருவருக்கும் தெளித்துச் சுத்தி செய்த பிறகு கையில் கட்டியிருந்த சங்கு மோதிரமாலையை அவிழ்த்துவிடுவார்கள். இத்துடன் கல்லியாணமும் கழிந்தது. மணமகனுக்கும் பெண்ணுக்கும் ஏற்பட்ட 'இரண்டுநாளைச் சுற்றமும்' முடிந்தது!

பிறகு 'காரணவன்' மணமகனுக்குக் 'கோடி' கொடுத்து உபசரித்து, அவனையும் மற்ற பந்துக்களையும் அனுப்பிவிடுவான். ஆகவே கல்லியாணத்திற்கு முன் இந்தப் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் என்ன சம்பந்தமோ, அதைவிட அதிகமாவது, குறைச்சலாவது இதற்கப்புறம் இல்லை.

இதுவரை நாம் சொல்லியது பழைய வழக்கம். இக்காலத்தில் கல்லியாணச் சிலவு செய்வது எல்லாருக்கும் சாத்திய மில்லையாதலால்,ஒருதரவாட்டில் தாலிகட்டென்றால், ஒரு வயது முதல் பதினொன்றீராக உள்ள பெண்களுக்கெல்லாம் ஒரே முகூர்த்தத்தில் தாலி கட்டிப் "பலதீட்டுக்கு ஒரு முழுக்குப் போட்டுத்" தொலைப்பது சாதாரணம். ஏனெனில் இந்தக் கல்லியாணத்திற்குச் சிலவு மட்டும் கண்ட பலனல்லது வேறில்லை யாதலால், நாயர்களில் விவேகிகள் இதைச் சுருக்கப்பார்க்கிறார்கள். தவிர, கல்லியாண சம்பிரமமும் குறைந்து ஒரே நாளில் எல்லாம் தீர்ந்து போகிறது.

திருவனந்தபுரம் 'பொன்னுத் தம்பிரானுடைய' மகளுக்கும் இவ்வாறு தான் சமீபத்தில் தாலிகட்டு நடந்தது. மைசூர் முதலிய வேறு எந்த ராச்சியத்திலிருந்தாலும், இந்தப் பெண்ணுக்கு 'ராஜகுமாரிகை' யென்ற பதவியும், சீரும் சிறப்புமுண்டு. மலையாள சம்பிரதாயப்படியோ, இவளுக்கு க்ஷத்திரிய பதவியில்லை. நாயர்குலத்தில் தான் சேரவேண்டும்.

ஆதலால் இந்த முகூர்த்தம் நிச்சயமானதும் அவளுடைய அகமாகிய 'வடசேரி அம்மை வீடு' என்னும் மாளிகைக்கெதிரில் பிரம்மாண்டமான பந்தல்கள் நிர்மாண மாயின. பொன்னுத்தம்பிரானுக்கு மனைவியாகிய இவள் தாய்க்கு 'அம்மச்சி' யென்று பெயர். அந்த அம்மை வீட்டிற்கெதிரில் பந்தல்கள் வெகு நேர்த்தியாகப் போட்டார்கள். வந்தவர்களை உபசரிப்பதற்காகப் போட்டிருந்தது உப்பரிகைகூடிய மாளிகைபோன்று பார்க்க வெகு அலங்கார மாயிருந்தது. நாலுபுறமும் இவ்வாறுபெரிய பந்தல்களிருக்க நடுவில் 'கதிர்மண்

டபம்' என்னும் கல்லியாணப்பந்தல் வெகு அழகாய் அமைந்திருந்தது.

மார்ச்சுமீ 23-தேதி புதன்கிழமை முகூர்த்தம் ஏற்பட்டிருந்தது. அன்று காலேயில் மகாராஜாவின் 'கொட்டாரத்திற்கு' (அரண்மனைக்கு) ச்சம்பந்தப்பட்ட 'லக்ஷ்மீவிலாஸ்' என்னும் மாளிகையிலிருந்து மாப்பிள்ளை புறப்பட்டார். இவருக்குப்பதின்மூன்றுவயதிருக்கலாம். இடுப்பில் மஞ்சள் வஸ்திர முடுத்தியிருந்தது. கையில் உருவின கத்தியுடன் அவர் 'ஆனை' மேலேறினர்.

மேலே நாம் கூறியபடி இவர் பெண் குடும்பத்திற்கு மச்சம்பிக்காராயிருக்க வேண்டும். ஆனல், மலேயாளத்தில் 'அனுலோமவிதி' என்ற சம்பிரதாயம் பிரபுக்களுடைய குடும்பங்களிற் காணும். அந்த முறைப்படி ஒரு தரவாடுக்கு அதைவிட உயர்ந்த குலத்தவரைக் கொண்டு மணஞ் செய்விப்பது பதிவு. ஆகவே இந்த மணமகன் 'திருமல்பாடு' என்னும் க்ஷத்திரிய வமிசத்தவன்.

ஊர்கோலம் வெகு சம்பிரமம். ராஜவிருதுக்களும், யானை, குதிரை முதலிய அங்கங்களும், மேள வாத்தியங்களும், உத்தியோகஸ்தர் கோஷ்டியும் வெகு ஆடம்பரமாகப் போயின. பிறகு அம்மை வீட்டிற்குப் போக 10-மணியாயிற்று. அவ்விடத்தில் 'பொன்னுத் தம்பிரானுடைய' மகன் மணமகனை உபசரித்து நல்வரவு கூறி, ஆசனங்கொடுத்தார். வாத்தியக்காரர் பல திக்கிலிருந்தும் வந்த சமர்த்தர்கள். ஆதலால் வந்தவர்களுக்குச் சங்கீத விருந்து பலமாக நடந்தது. முகூர்த்த சமயத்திற்கு மகாராஜாவும் வந்தார். அவருடன் சமஸ்தான உத்தியோகஸ்தரும் பரிவாரமாக வந்து உட்கார்ந்தார்கள். பிறகு பெண் வந்து மகாராஜாவை நமஸ்கரிக்க அவரும் அவளுக்கு ஆசீர்வாதம் செய்தார். உடனே பெண்ணைக் கதிர்மண்டபத்திற்குக் கூட்டிப் போனர்கள். அவ்விடத்தில் குறித்த முகூர்த்தத்தில் சகல வாத்திய முழங்க அவள் கழுத்தில் 'தாலிவிழுந்தது.' சிப்பாய்கள் அதிர் வெடி முழங்கினர்கள். பிறகு வந்தவர்களுக்கெல்லாம் சந்தன, புஷ்ப தாம்பூலாதிகள் கொடுத்து உபசாரம் நடந்தது. விருந்தும் கிரமப்படி வெகு சம்பிரமமாக நடந்தது. ஏழைகளுக்கும் அன்னம் வேண்டியமட்டில் கிடைத்தது. 'சர்வாணி' யென்னும் தக்ஷிணையும் கொடுக்கப்பட்டது.

அன்று சாயரக்ஷை 'ஓட்டம் துள்ளல்' என்கிற முறைப்படி மலேயாளக் கூத்தும், இரவில் 11-மணி முதல் விடியும்வரை 'கதைக்களி' யென்னும் ஆட்டமும் நடந்தன. மறுநாள் மகாராஜா பெண்ணுக்கு ரூபா 45,000 பெறுமான பூஸ்திதியை ஸ்திரீதனமாகக் கொடுத்தார். இது பழைய பதிவு. மூன்றும் நாள் சாயரக்ஷயில் மஞ்சள் தேய்ப்பு நடந்தது.

ஐந்தாம்நாள் மாலே 7-மணிக்குப் பட்டணப் பிரவேசம் நடந்தது. யானைகளும், குதிரைகளும், சத்திர சாமர முதலிய அங்கங்களும், நாயர் பட்டாளவாத்தியமும், சிப்பாய்க் குதிரைப்படையும், சமஸ்தான உத்தியோகஸ்தர் கூட்டமும், ஆயிரக்கணக்காக ஜனங்கள் கூட்டமும், சேர்ந்து கூடிய வைபவத்தை வருணிப்பது சுலபமன்று. இவைகளையெல்லாம் முன்னிட்டுப் பல்லக்கில் கல்லியாணப்பெண் ஊர்கோலம்வந்தாள். பல்லக்குக்குமுன் மங்கள தீபங்களை யெடுத்துக்கொண்டு அனேக நாயர் பெண்கள் போனர்கள். மாப்பிள்ளை யானை மேல் பழையபடி ஏறி வந்துகொண்டிருந்தார். முக்கியதெருக்களில் பவனி வந்தபின் 'கொட்டாரத்தருகில்' வந்து இருவரும் இறங்கி மாளிகைமேல் சென்று நிற்க, பாணவேடிக்கை நடந்தது. பிறகு மெதுவாய் அம்மைவீடு சென்றார்கள்.

'கங்கண விசர்ச்சனம்' முதலிய சடங்குகளை விவரிப்பது அனவசியம். 'திருமல்பாடு'



தாலிகெட்டு—பட்டணப் பிரவேசம்

ப்பிள்ளைக்கு வெகுமானம் சிறப்பாகத்தான் கிடைத்திருக்க வேண்டும்.

ஆனல் மேலே நாம் சொல்லியபடி இவ்வளவு சம்பிரமத்திற்கும் அர்த்தமேயில்லை யென்னலாம். ஏனெனில், இந்தக் கல்யாணத்திற்கும், இனிப் பெண் பெரியவளாகிய பிறகு நடக்கும் 'சம்பந்த' கல்யாணத்திற்கும் யாதொரு பாந்தவ்வியமுமில்லை. ஆனல், அதையிவ்வளவு சம்பிரமமாக நாயன்மார்கள் கொண்டாடுவதில்லை. அந்தமட்டில் அவர்கள் புத்திசாலிகளென்றே சொல்ல வேண்டும். ஆதலால் தஞ்சாவூர் முதலிய நாகரீகமுற்றிய தேசங்களில் சோபனப்பிரஸ்த சந்தர்ப்பத்தில் சம்பந்திகளுக்குள் காணும் சுபலக்ஷணங்கள் இம்மாதிரிச் 'சம்பந்தங்களில்' காணுவது அசாத்தியம்.

## வாகனவகைகள் III

ஸ்ரீமான் டி. எஸ். வேங்கடரமணய்யர்,
பி. ஏ., எல். டி.

இவ்விஷயமாய் விஹாரிணியில் நாம் எழுதி வருவதற்குக் காரணம் முந்தியே தெரிவித்திருக்கிறேம். அதாவது, சமீபகாலத்தில் மனிதர் ஆகாயத்திற்பறந்து ஓரிடமிருந்து மற்ருேரிடம் வாயு வேகமாகவும், அதற்கும் அதிகமாகவும் செல்லுவதற்கு ஊர்திகள் ஏற்பட்டு வருவதேயாம்.

முதற்பகுதியில் தரைமேல் பிரயாணஞ் செய்வதற்கு நமக்கிப்போதிருக்கும் வாகன வகைகளையும் அவைகளின் புராணங்களையும் கிரமமாக விவரித்தோம். இரண்டாம் பகுதியில், நீர் மேல் யாத்திரை செய்வதற்கு நமக்கு உதவும் சாதனங்களைக் காலக்கிரமமாக வருணித்தோம். ஆகவே இப்பொழுது, ஆகாய மார்க்கத்தில் செல்லுவதற்கு ஏற்பட்டு வரும் கருவிகளைக்கவனிப்போம்.

சீவக சிந்தாமணி படித்தவருக்கு ராணி விஜையை ஒரு யந்திர ஊர்திமேல் ஏறிக் ககன மார்க்கத்தில் போனதும், அப்பொழுது தன் பர்த்தா இறந்த செய்தி காதில்விழவே, தான் பிடித்திருந்த யந்திரத்தை அவள் கைவிட்டு விட்டதும், அதனல் அவ்வூர்தி 'பயப்பய'க் கீழே விழுந்ததும், ஞாபகமிருக்கலாம். இம்மாதிரி ஊர்தி செய்தவனுக்கு அக்காலத்தில் "பொன்னறை" இனமாகக் கிடைத்தது. பிறகு இம்மாதிரி இனம்கொடுப்பார் இல்லாமையாலோ, அல்லது வேறெக்காரணத்தினலோ, இந்தக்கலை நமது நாட்டில் அற்றுப்போய் விட்டது. ஆதலால், பறப்பதென்பது மனிதனல் ஆகாத காரியத்தைக் குறிப்பிட்டே வெகுநாளாய் உபயோகப்பட்டு வருகிறது.

ஆனல் மனிதனுடைய புத்தியும் யுக்தியும் எவ்வளவு தூரம் வேண்டுமானுலும் போகலாமாதலால், ஆகாதென்று நமது முன்னேர் சொல்லி வந்த அனேக காரியங்கள் இப்பொழுது ஆகிவருவது நாம் தினமும் கண்டுவருவது. ஆகவே பறப்பது அசாத்தியமென்று நம்முன்னேர்கள் எண்ணிய போதிலும் இப்பொழுது அது சாத்தியமென்று நாம் காதாற்கேட்பதுடன் வெகு சீக்கிரத்தில் நாமும் அந்த ஆனந்தத்தை அனுபவிப்போமென்பது நிச்சயம்.

பறப்பது என்ருல் என்ன? இதைச்சற்று நன்ருய்க் கவனிக்கவேண்டும். சமுத்திரத்தில் செல்லுங் கப்பலை நீர்மேல் மிதந்து போவதாக நாம் சாமான்னியமாய்ச் சொல்லுகிறேம். பிரத்தியக்ஷத்தில் ஒரு இருப்புக் கட்டியை எடுத்து நீரில் எறிந்தால் அது உடனே முழுகிப்போவதும், அதே இரும்பை மெல்லிய தகடாக அடித்துக் கப்பல் வடிவமாக்கினல் அது மிதப்பதும், நாம் கண்டிருக்கிறேமல்லவா? இதற்குக் காரணம் இரண்டு. முதலாவது தரையைப்போல் கெட்டியாயில்லாமல் நீர் எப்பொழுதும் அலைத்துக் கொண்டிருப்பதும், கப்பல் முதலியவைகள் தண்ணீரைவிடச் சரிக்குச்சரி உருப்படி கனம் குறைந்திருப்பதுமாம்.

ஆகவே, நீர் எப்படியோ, அப்படிப் போலத்தான் நம்மைச் சூழ்ந்திருக்கும் வா

யுவு மென்று நாம் முதல் முதல் அறிந்து கொள்ள வேண்டும். வாயுவானது சாமான்னியமாய்க் கிணற்று நீரைப்போல் அமைவாயிருப்பதும், சில சமயங்களில் பிரவகித்துப் பெருங்காற்றாக அலைத்து, எதிர்ப்பட்ட யாவற்றையும் நிர்த்தூளியாக்குவதும் நமக்குத் தெரியும். தவிர, சமுத்திரங்களில் மீன் முதலிய ஜலசரங்கள் நீருக்கு உள்ளடங்கியே வாழ்வதும், நீரைவிட்டு வெளிவந்தால் சாவதும், நம்மில் யார் வேண்டுமானாலும் பரீக்ஷித்தறியக்கூடிய விஷயம். ஆதலால், மனிதராகிய நாமும் மற்றும் இப்பூமியிலுள்ள பசு, பக்ஷி மிருகாதிகளும் நம்மைச் சுற்றியிருக்கும் வாயுவென்கிற மகா சமுத்திரத்தின் உள்ளடங்கி வாழ்ந்து வருகிறோமென்பதும் நாம் ஊகித்தறிந்துகொள்ளுவது நல்லது. இது காரணமாக, மீன் முதலியவைகளை 'ஜலசரம்' என்று பெயரிட்டிருப்பதுபோல், மனிதர் முதலியோருக்கு 'வாயு சரம்' என்று பெயரிடுவது தகும்.

ஆனால் ஒரு அம்சத்தில் மட்டும் மனிதர், விலங்குகள் முதலிய ஜீவவர்க்கங்களுக்கும், நீர் வாழும் மீன்களுக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. அதாவது நாம் தரையோடு ஒட்டி வாழவேண்டியிருக்க, மீன்கள் சமுத்திரத்தின் அடிமட்ட முதல் மேல்மட்டம் வரை எங்கு வேண்டுமானாலும் இஷ்டம்போல் திரிகின்றன. வாயுவென்னும் சமுத்திரத்தில் வாழும் ஜந்துக்களிலோ, பக்ஷிகளாகிய ஒரு வர்க்கத்துக்குமட்டும் இந்தச் சௌகரியம் இயற்கையாயுண்டு. ஆதலால் அவைகள் நம்மைப்போல் தரையை ஒட்டியிருப்பதுமட்டுமேயன்றி, மீன்களைப்போல் தாம் வாழும் வாயு சமுத்திரத்தில் தரைக்குமேல் சுமார் 4-5-மைல் உயரம் வரை எங்குவேண்டுமானாலும் பறக்கலாம். ஆகவே இப்படி மீன்களுக்கும், பறவைகளுக்கும் ஏற்பட்டிருக்கும் சௌகரியத்தைக்கண்டு, நமக்கும் அவ்வாறில்லையே என்று வயிற்றெரிச்சல் கொண்டு, எப்படியாவது நாமும் அவைகளைப் போல் இறக்கை கட்டிக்கொள்ள வேண்டுமென்று நம்மில் வெகு நாளாகப் பிரயத்தனம் நடந்துவந்திருக்கிறது. அதிர்ஷ்ட வசத்தால் "கண்ணைக் கெடுத்த தெய்வம்" நமக்கு "மதியைக் கொடுத்திருக்கிறது." ஆகவே இயற்கையாக நமக்குப் பறப்பதற்கு வேண்டிய உபகரணங்கள் இல்லாவிட்டாலும், மீன் பக்ஷி முதலியவைகளுக்கு இருக்குங் கருவிகளை ஜாக்கிரதையாகப் பரிசோதித்தும், அவைகள் அவற்றை உபயோகப்படுத்தும் தந்திரங்களைக் கவனித்தும், அவ்வாறே நாமுஞ் செய்துகொள்ளுவதற்காகத்தான் மேனாட்டு மதியூகிகள் இதுவரை உழைத்து வந்திருப்பது.

ஆகாயத்தில் பறப்பதற்காக யோசிக்குமிடத்து மூன்று, நான்கு அம்சங்கள் இன்றியமையாதவை யென்று புத்திமான்கள் கண்டு கொள்ளலாம். முதலாவது நாம் ஏறிப் போகும் வாகனம் சாமான்னிய வாயுவை விட 'சரிக்குச் சரி உருப்படி கனம்' குறைந்திருக்கவேண்டும். அதாவது, சமுத்திரத்தில் கப்பல் எப்படி மிதக்கிறதோ அவ்வாறே தரையை விட்டு எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் கிளம்பி நமது வாயுக்கப்பலும் மிதக்கவேண்டும். இரண்டாவது, அந்தக்கப்பல் வேண்டும்போது உயா எழும்பி, பிறகு நமதிஷ்டம் போல் இறங்கவும் வேண்டும். மூன்றாவது, நாம் எந்தத்திக்கில் போக வேண்டுமோ, அந்தத்திக்கிலெல்லாம் திரும்பி, காற்று முதலிய உபத்திரவங்களையும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு போகவேண்டும். நான்காவது, இது நம்முடைய நித்திய காரியங்களுக்கு உதவவேண்டுமானால், ஒரு ஊர்தியில் இரண்டொருவர் மட்டும் போவது போதாது. நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஜனங்கள் போவது மட்டுமேயன்றி, சாமான்களும், போவதற்குச் சௌகரியம் ஏற்பட வேண்டும்.

இவ்விஷயத்தை முதல் முதல் பரீக்ஷித்து வந்தவர்கள் "பால்லூன்" என்னும் புகைக்

வாயுக்கப்பல்





எயிரோப்ளேன்



எயிரோப்ளேன்



கூடுகளை உபயோகித்துப் பார்த்தார்கள். புகைக் கூடுகளென்பவை சாமான்னிய வாயுவைவிட 'சரிக்குச்சரி உருப்படி கனம்' குறைந்த வேறொரு வாயுவை நிறப்பியதினால் ஜலத்தில் நெட்டி மிதப்பதுபோல் ஆகாயத்தில் மிதந்து போவன. ஆகவே இவைகளைப் பெரிதாக்கி, கீழே தொட்டில் கட்டி, அத்தொட்டிலுள் மனிதர் உட்கார்ந்து மேலே போவது சாத்தியமென்று சிலருக்குக் கண்டது. போனால் மறுபடி வருவதெப்படி யென்று விசாரித்ததில், "பாரசூட்" என்னும் நடுவில் துளையுடன் கூடிய ஒரு குடை போன்ற யந்திர சகாயத்தால் இறங்குவது சாத்தியமாயிற்று. ஆனால், இப்படி ஏறுவதும் இறங்குவதும் எவ்விதமான ராக்ஷஸ காரியமென்று மதிராஸ் முதலிய இடங்களில் இவ்வாறு சிலர் செய்துகாட்டியதைக் கண்ணிற்கண்டவர்களுக்குத்தான் தெரியும்.

தவிர, இவ்வாறு புகைக்கூடுகளில் ஏறிப் போவதில் மறுபடி க்ஷேமமாகக் கீழே இறங்கி வருவது பெரிய பிரம்மப்பிரயத்தனமென்பது மட்டுமல்லாமல், ஆகாயத்திற் போகும்போது நமக்கு வேண்டிய உயரத்தில் நிற்கவாவது, வேண்டிய திக்கில் போகவாவது, நமக்குச் சுவாதீனம் இல்லை. காற்று எம்முகமெல்லாம் அலைக்குமோ அவ்வழியே கூடும் போகித்தான் தீரவேண்டும். சிலசமயங்களில் சமுத்திர தீரத்தில் புகைக்கூடேறினால், ஒருசமயம் கூட்டுடன் கைலாசம்போய்ச் சேரவேண்டி வந்தாலும் வரலாம். ஆதலால் புகைக் கூடுமட்டும் வாயு சமுத்திர யாத்திரைக்குப் போதாது என்பது வெகு சீக்கிரத்தில் விளங்கிற்று.

பிறகு, ஜர்மனியில் சிலபுத்திமான்கள் பெரிய பக்ஷிகளுக்கிருப்பதுபோல் நமக்கும் வேண்டியபோது விரித்து மூடக்கூடிய இறக்கைகள் இருந்தால், நாமும் பறந்து போவது சாத்தியமென்று நெட்டி முதலிய லேசான பதார்த்தங்களை உபயோகித்துப் பிரம்மாண்டமான இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறக்கப்பார்த்தார்கள். ஆனால் ஏதோ காரணத்தினால் அவர்களுடைய உத்தேசம் பலிக்காமல், பரீக்ஷை செய்த சிலருக்குக் "கபாலமோக்ஷம்" மட்டுந்தான் பலனாயிற்று. இதனாலும், ஒவ்வொருவராக இறக்கை அமைத்துக்கொண்டு பறப்பதில் விசேஷ லாபமில்லாததாலும் மேனாட்டில் பல தேசங்களிலுமுள்ள புத்திமான்கள் இந்தப் பரீக்ஷையை ஒழித்து, ஆகாயக்கப்பல்கள் நிர்மாணிக்கலானார்கள்.

சென்ற 4-5-வருஷங்களுக்குள் ஜர்மனியிலும், அமெரிக்காவிலும், இவ்வித ஊர்திகள் பலவகையாக நிர்மாணிக்கப்பட்டதில், எயிரோப்ளேன் என்பதும், வாயுக்கப்பல் என்பதும் முக்கியமானவை. இவ்விரண்டையும் படத்தில் காணலாம். இவைகளிரண்டும் மிதப்பதற்குக் காரணம் நாம் மேற்சொல்லியதேயாம். அதாவது இவைகளுடைய வயிற்றில் புகைக் கூடுகளையோ, அல்லது சாமான்னியவாயுவை விட லேசான வாயுவையோ அடைத்திருப்பதாம். இதனால் இந்தக் கருவிகள் சரிக்குச்சரி சாமான்னிய வாயுவைவிட உருப்படி கனங்குறைந்து விடுகின்றன. ஆகவே, இவைகள் உயரக்கிளம்புவதற்கு இடமுண்டாகிறது. இவைகளைப் பெரிதாக்கப் பெரிதாக்க இந்தச் சக்தி அதிகரிக்கிறது. ஆதலால் இவைகளை அதிக உயரம் போகவொட்டாமற் செய்யவேண்டுமானால், அதற்குத் 'தடையம்' போடவேண்டும். அப்படித் தடையமாக வேண்டித் தொட்டில்களோ, வேறு கருவிகளோ சேர்த்துக் கட்டி, அதில் சாமான்களையும் மனிதர்களையும் ஏற்றிப் போகலாமென்பது இப்பொழுது சாத்தியமாகிவிட்டது.

மேலே கிளம்பினால் வேண்டிய உயரம் போவதற்கும், வேண்டிய உயரத்தில் தங்குவதற்கும், பிறகு வேண்டும்போது கீழே இறங்குவதற்கும், பக்ஷி இறக்கை போன்ற சிலகருவிகள் எயிரோபிளேன்களுக்கு அமைந்திருக்கின்றன. அவைகளை விரித்தால் மேலே

போகலாம். சுமாராக மடக்கினால் அந்தரத்தில் நிற்கலாம். முற்றும் மடக்கினால் மெல்லக் கீழேவந்து விடலாம்.

வாயுக்கப்பல்களுக்கோ இம்மாதிரிக் கருவிகளில்லை. ஆனால் புகைக்கூடுகளைச் சிறியனவாக நூற்றுக்கணக்கில் உள்ளே அடுக்கியிருப்பதால், வேண்டிய உயரம் போனபிறகு, கீழே இறங்கவேண்டிவந்தால் அவைகளில் சிலவற்றிலிருக்கும் வாயுவை வெளிவிட்டும், கப்பலைகீழ்நோக்காக்கி, மோடார் யந்திரத்தை இயக்கியும் இறக்கி விடுகிறார்கள்.

இவ்விரு வாகனவகைகளுக்கும், நமக்கு வேண்டிய திசைகளிற் செல்லுமாறு மீகான் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் அதிசயம் ஒன்றுமில்லை. கப்பல்கள் சமுத்திரங்களில் எவ்வாறு வேண்டியபடி திரும்புகின்றனவோ, அவ்வாறே இவைகளும் திரும்பத்தான் வேண்டும்.

வாயுக்கப்பல்களின் இரகசியம் தெரிந்தவர்கள் இனிப்பத்து வருஷத்திற்குள் ஜனங்கள் சாமான்னியமாய் ககனமார்க்கத்திலேயே போக்குவரவு செய்வார்களென்றும், சரக்குகளும் அவ்வாறே போய் வருமென்றும், உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். இதற்குச் சாக்ஷியாக ஜர்மனியில் இப்பொழுதே "ஜெப்ளின்" வாயுக்கப்பல்கள் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போக ஆரம்பித்து விட்டன.

பழைய காலத்தில் நம்மவர்களுக்குள் கோட்டை கட்டுவது முதலிய பெருங்காரியம் யாதேனுமொன்று ஆரம்பித்தால், அதற்கு நரபலி வேண்டுமென்று நினைத்து அநேக அனர்த்தங்களைச் செய்திருக்கிறார்கள். அம்மாதிரிக் காரியங்களுக்கு நரபலி வேண்டும் வேண்டா மென்பதை இங்கு நாம் விவகரிக்கவேண்டுவதில்லை. பிரகிருதத்தில் நாம் எடுத்த விஷயத்திற்கோ நரபலி வேண்டுமென்றுதான் காணுகிறது. ஏனெனில், இரக்கைகட்டிப் பறந்து போய்க் கபாலமோக்ஷ மடைந்தவர்கள் மட்டுமேயன்றி, சமீபத்தில் எல்லா தேசத்தவர்களிலும், இவ்விஷயத்தில் பரீக்ஷை செய்துவந்த ஜனங்களில் அநேகருக்கு அநியாயமரணங்கிட்டித் தானிருக்கிறது. ஆனால் இதற்கு நிவிருத்தியில்லை. பலர் க்ஷேம மடைவதற்காக சிலர் சிரமப்படுவதும், ஜீவனை யிழப்பதும், வெகுகாலமாக நமக்குள் காணும் அனுபவம். ஆதலால் இம்மாதிரி விபத்துகளுக்கு இடமில்லாமல் இந்த வித்தை சீக்கிரம் பிரபலிக்கவேண்டுமென்றும், அது சகல ஜனங்களுக்கும் நன்மையைக் கொடுக்க வேண்டுமென்றும் நாம் ஈசுவரனைப் பிரார்த்திக்கிறோம். புதிதாக ஆரம்பித்த ஒவ்வொருகாரியத்திலும் விபத்துக்கள் முதல் முதல் அதிகமாக இருந்து வந்துதானிருக்கின்றன. பிறகு காலக்கிரமத்தில் தோஷங்கள் சிறிது சிறிதாகப் பரிகாரமாகி அவைகள் நமக்கு நன்மையைப் பயக்கின்றன. ரெயில் வண்டிகள் முதல் முதல் உண்டான காலத்துக்கும் இக்காலத்துக்கும் வித்தியாசம் இவ்வளவென்று சொல்லவும் வேண்டுமோ? இதுவும் அதுபோலத்தானென்று புத்தியான்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

---

கோயமுத்தூர் ஜில்லாவில் வெகு நாளாய் செஷன் ஜட்ஜியாகவிருந்த ஸ்ரீமான் ப்ராட்பு துரை பென்ஷன் உத்தேசமாய்ரஜா பெற்றுக்கொண்டு சென்றமீ போனவர், ஏதோ மனோவிசாரம் பொறுக்க மாட்டாமல் தன்னைச் சுட்டுக்கொண்டு இறந்ததாகக் கேள்விப்பட்டு விசனிக்கிறோம். தனக்கு ஐகோர்ட்டு ஜட்ஜியாகவில்லை யென்பது இவருக்குப் பெரிய வருத்தமாம். ஆனால் அதற்காகச் சுட்டுக் கொண்டு இறப்பதென்றால் நமக்கு அர்த்தமாவதில்லை. இப்படியே இங்கிருந்துபோன பெரிய துரைகளில் சிலர் நான்று கொண்டும், வேறுவிதமாயும் இறந்துபோவதைக் கேட்டிருக்கிறோம். நல்ல விவேகிகளும், சமர்த்தர்களுமாகிய இவர்களுக்குக் கொஞ்சம் பொறுமையும், வேதாந்த ஞானமுமில்லையே யென்பதுதான் விசனிக்க வேண்டிய விஷயம். உத்தியோகத்தில் மனம்போல் நடவாதது குறையென்றால், அநேகமாய் 100-க்கு 90-பெயருடைய கதி விசித்திரந்தான்.



• ஸ்ரீ சாரதாம்பிகை



[All Rights Reserved]

# ஸ்ரீ காலடிச் சாரதாம்பிகை மாலை

OFFICE OF THE REGISTRAR OF … REGISTERED 14 OCT 1910 MADRAS.

காப்பு

விநாயகர் துதி

சீரு லாந்திருக் காலடிப் பதியினிற் றிகழுஞ்
சார தாம்பிகைத் தாயின்மெய்ச் சரணபங் கயத்திற்
கேரெ லாம்பெறு மியற்றமி ழலங்கலொன் றியற்றத்
தார காசயக் கயமுகன் றாண்மலர் துணையே.

வேறு

ஆர ணப்பொரு ளாகிய வைங்கர
வார ணத்தின் மலர்க்கழல் வாழ்த்துவாம்.

முருகன் துதி

நிலமகட்குத் திலகமெனப் பொலிதருசீர்க் காலடியி னிலவுந் தெய்வக்
குலமகட்குச் சதுமறையோ ரகங்குலவ வெண்சலசங் குலவுஞ் செல்வக்
கலைமகட்குக் கலையுணராத் தலைமகட்குக் கவியணியற் கவினச் சூட்ட
மலைமகட்குச் சிறுமதலை மயிலுகைத்தபெரு முதலை வணக்கஞ் செய்வாம்.

வேறு

ஹரஹர வெனமுனி
வரர் சுரர் பணியுஞ்
சரவண பவனிரு
சரண் சரண் சரணே.

நூல்

கலிநிலைத்துறை

உலகெ லாந்தொழு தேத்திடற் குரியவுத் தமியே
திலக வாணுதற் செல்வியே திகழுமாண் புடைமெய்ப்
புலமை மேவுசீர்க் காலடிப் பதியினிற் பொலியுஞ்
சலச மாமுகத் தையலே சாரதாம் பிகையே. (௧)

அருண லங்கொடுத் தடியரை யாட்கொள வமைந்த
கருணை யங்கட னீயெனக் கண்டுகொண் டுனையித்
தருணம் வந்தடைந் தேன்மலர்த் தாளிணை யதுவே
சரண லாற்கதி வேறிலை சாரதாம் பிகையே. (௨)

பஞ்சின் மெல்லடிப் பாவையே நின்மலர்ப் பதத்தை
நெஞ்சு ளேநினைந் துணர்ந்துநின் னெடும்புகழ்த் திறத்தைச்
செஞ்சொ லாற்றுதித் தருகிடத் தெரிகிலாச் சிறியேற்
கஞ்ச லஞ்சலென் றுண்டருள் சாரதாம் பிகையே. (௩)

ஓமெ னும்மறைக் குட்பொரு ளாகிநின் றொளிருஞ்
சேம நன்னிதித் தெய்வமே திருவெலாஞ் செழிக்குங்
கோம ளத்திரு வடிவுடைக் குமரியே குளிர்வெண்
டாம ரைக்கியற் றலைவியே சாரதாம் பிகையே. (௪)

பொற்பி னுக்குயர் நிலேயெனப் பொலிந்தபூ தரமே
கற்பி னுக்கணி கலனெனக் கவின்செய்கற் பகமே
விற்ப னர்க்கருள் விமரிசை விளங்குகா லடியிற்
தற்ப தத்தனி நிலேபெறுஞ் சாரதாம் பிகையே. (௬)

பாவி யேற்கிதம் புரிந்திடப் பரமகா ருணியத்
தேவி நீயலாற் றிக்குவே றிலேயெனத் தெளிந்து
கூவி னேன்முறை கேட்டருள் கொடுத்திடன் முறையென்
னுவி யேயுயிர்க் கருந்துணேச் சாரதாம் பிகையே. (௭)

மாச கன்றமெய்ஞ் ஞானிகண் மனமெனத் தெளிந்து
மீச னாரு ளெனப்பரந் திருகரை புரண்டுங்
காச லம்புசம் பூரணேக் கரைக்கணம் பதும
வாச னத்தின்மீ தமர்ந்தஸ்ரீ சாரதாம் பிகையே. (௮)

அன்பி னனிறைந் தகங்கசிந் துனேத்தொழு மடியார்
துன்பெ லாங்கெடுத் தருட்சுகங் கொடுக்குமெய்த் துணேயே
இன்ப நாட்டினிற் கிறைவியே யிறைஞ்சுவார் முடிக்குத்
தன்ப தாம்புய முடித்திடுஞ் சாரதாம் பிகையே. (௯)

கந்த நாண்மலர்க் கருங்குழற் காரிகை மயலிற்
சிந்தை நைந்துழன் றுன்கழற் சீர்பெற நினேயா
விந்த நாயினேற் குய்வழி யெவ்வழி யுயிர்க்கு
ளந்தர் யாமியா யிருந்தொளிர் சாரதாம் பிகையே. (௧௦)

கங்குல் போக்குதற் கெழுஞ்செழுங் கதிரெனக் கதித்துப்
பொங்கி யார்த்தெழும் புன்மதப் பொய்யிருள் கடிந்த
துங்க மாதவக் குரிசின்மெய்த் துறவியுள் ளகத்திற்
றங்கி யோங்குமா தங்கியே சாரதாம் பிகையே. (௧௧)

ஞான மூர்த்தியென் றுனேக்கலே யணேத்துமே நவிலற்
கான கீர்த்திநன் கமைந்ததெள் ளமுதவா ரிதியே
தீன ரக்ஷகி யெனவுனேத் தேடிவந் தடைந்தார்க்
கான மானநற் கதிதருஞ் சாரதாம் பிகையே. (௧௨)

பற்றெ லாமொழித் துன்றிருப் பாதபங் கயத்திற்
குற்ற வன்புபூண் டுள்குவா ருள்ளொளி விளக்கே
குற்ற மார்ந்துளேன் குறையுளே னுளக்குறை தவிர்க்கச்
சற்றி ரங்குவை யேதனிச் சாரதாம் பிகையே. (௧௩)

செம்பொ னற்றிகழ் நின்மலர்ச் சேவடித் துணேயை
நம்பி னோர்க்கருள் வழங்குமெய்ஞ் ஞானபூ ரணியென்
றும்பர் யாவருங் கரங்குவித் துன்னருட் கிரக்குஞ்
சம்ப னக்கலே மடந்தையே சாரதாம் பிகையே. (௧௪)

சொற்ப தங்கடந் தருட்சுக வடிமாய்த் துலங்குஞ்
சிற்ப ராபரை யெனவுனேத் தெரிந்தகந் தெளிந்துன்
பொற்ப தந்தொழு தருகுமெய்ப் புனிதமா தவருக்
கற்பு தப்பத நிலேதருஞ் சாரதாம் பிகையே. (௧௫)

தீதெ லாநிறைந் திருள்செறிந் திழிந்தவென் சிந்தைக்
கோதெ லாமறுத் தாட்கொளுங் குணப்பெரு நிதியா



மாதி யெங்குரு சங்கரா சாரிய வமலன்
சாத நற்பதிக் காலடிச் சாரதாம் பிகையே. (௧௬)

புண்ணி யப்பெரு நதிகளிற் சிறந்தபூ ரணேயாங்
கண்ணி யப்பெயர் கொளுநதிக் கரையமர்ந் தடியா
ரெண்ணம் யாவையு மெளிதினின் முடித்திடற் கிசைந்த
தண்ண ளிக்கயத் தடங்கடற் சாரதாம் பிகையே. (௧௭)

தவசி கட்குண்மே தகுநிலேச் சங்கர முனியா
லபச யத்தினே யடைந்துமிங் கவர்திருக் கரத்தா
லுபச ரித்திடற் குரிமைபூண் டொழுகுதே வதையாய்ச்
சபல முற்றமா சனனியே சாரதாம் பிகையே. (௧௮)

பொன்னே யேவிழைந் துன்மணிப் பூங்கழல் விழையா
வென்னே யாள்வதற் குன்றிரு வுள்ளமெப் படியோ
வென்ன வேமிகக் கலங்கின னென்மனக் கலக்கந்
தன்னே மாற்றிடத் தகுங்கொலோ சாரதாம் பிகையே. (௧௯)

சிருங்க மாகிரிக் கொடுமுடிச் சிகரமீ திருந்தங்
கருந்த போநிலே யடைந்தடைந் தவர்க்கரு ளமுத
விருந்த ளித்திடும் பாரதீந் திரமுனி வியக்கத்
தருங்க லாநிதிச் சத்தியே சாரதாம் பிகையே. (௨௦)

மண்ணி லத்தவர் விண்ணவர் யாவரும் வழுத்தும்
ஷண்ம தப்ரதிஷ் டாபனு சாரியன் சனித்துக்
கண்வி ழித்தநற் பதியெனுங் காலடிப் பதிவாழ்
தண்ம திக்கெதிர் மதிமுகச் சாரதாம் பிகையே. (௨௧)

வைய கத்தவர்க் கிதந்தரும் அறநெறி மறந்து
பொய்யி ருட்கடற் படிந்தவிப் புன்மதிப் புலேயே
னுய்யு மாறுநின் கருணேயெற் குதவியாண் டருளெம்
மைய மாமறைக் கரசியே சாரதாம் பிகையே. (௨௨)

பண்டை யூழ்விண சிதைத்துவான் பதந்தரும் பதத்தைக்
கண்ட பேருளங் கருத்துமற் றனேத்தையுங் கவர்ந்து
கொண்டு காண்பருங் கதியவர்க் குதவுசீர்க் குணமே
தண்டு ருப்பெருந் தகைபெறுஞ் சாரதாம் பிகையே. (௨௩)

ஏத மேபுரிந் தவர்க்குமிக் கிதந்தரு நினது
பாத மன்றிவே றிலேயிக பரந்தரு துணேயென்
றோது மாமறை யுரைத்திடு முண்மையொன் றறியா
வாத னுமெனக் காதநீ சாரதாம் பிகையே. (௨௪)

திரும றைப்பெரு வனத்தினிற் றிரிந்துமம் மறைக்குத்
தெரிப டாவரு வுருவமாய்ச் சிறக்குமான் பிணேயே
பிரம நாவினின் றின்னிசை பெருக்குமம் பிகமே
சருவ லோகச ரண்யையே சாரதாம் பிகையே. (௨௫)

பொருவி லாவெழிற் பொலியுமம் புயத்தமர் புனித
வுருவ மூன்றுமோ ருருவமாய்த் தழைத்துள முருகிப்
பரவு வார்விருப் பறிந்தவர்க் குடன்பரி சளிக்குந்
தரும மேம்படு காலடிச் சாரதாம் பிகையே. (௨௬)

பாடு மன்பருக் கற்புதப் பொற்பத மலரைச்
சூடு வான்றருந் தோகையே தொன்மறைத் தொகுதி
யேடு கைக்கொடு பாரதீந் திரகுரு விதயத்
தாடு மாமயிற் பேடையே சாரதாம் பிகையே. (௨௬)

வெண்ணி றக்கலை யணிந்துமின் வெண்பணி யணிந்து
வெண்ணி றக்கம லப்பொகுட் டினிதுவீற் றிருந்து
வெண்ணி றத்தமெய் வெண்ணகை கொண்டுசீர் விளக்கும்
பெண்ணி யற்பெரும் பிரமமே சாரதாம் பிகையே. (௨௭)

ஆயின் வேறில ரென்றுநன் கறிந்துபல் லுயிர்கட்
காயி நீயென வருமறை யாகம மனைத்து
மேய நின்புகழ் விரிக்கமென் மேலுமே விரியுந்
தாயு மன்றிமற் றியாவுநீ சாரதாம் பிகையே. (௨௮)

தென்பெ ருதநீப் பயிர்விளை நிலனெனச் செழிக்கும்
புன்பு லானரம் பென்புதோற் செறிந்தபொய் யுடம்பிற்
கன்பு ருதுமெய்ப் புகழுடம் பளிக்குமா றறிவிற்
பின்ப டாதெனைப் பேணியாள் சாரதாம் பிகையே. (௨௯)

சத்த மாதர்கள் சூழவீற் றிலங்குசௌந் தரிய
நித்ய மங்கள சொரூபியே நிமலையே நிகில
சத்து ருத்துவம் படைத்துயர் காலடிப் பதியிற்
றத்து வப்பொரு ளாய்த்திகழ் சாரதாம் பிகையே. (௩௦)

கன்னி யென்றுனைக் கலையெலாம் வழுத்தினுங் காத்தற்
குன்னை யன்றிவே றின்னுயிர்க் குறுதுணை யறியேன்
என்னை நின்கழற் கடிமையா யேன்றுகொ ளிசைக்கத்
தன்னை யன்றிவே றுவமையிற் சாரதாம் பிகையே. (௩௧)

கால னுருயிர் குடித்திடக் கடுஞ்சினத் திரிக்குங்
கால நீயெதிர் வந்துகை கொடுத்துநின் கழற்சீர்க்
கோல மேவிடப் புரிவையாற் குவலய மதிக்கச்
சால நீடுநின் னெடும்புகழ் சாரதாம் பிகையே. (௩௨)

அண்டம் யாவையும் படைத்தளித் தழிக்குமுத் தொழில்கைக்
கொண்ட பேரருட் கொண்டலே யுள்ளகங் குழைந்து
தொண்டு பூண்டவர் நாவினிற் கவிநலஞ் சுரக்கச்
சண்ட மாருதம் பொழிந்திடுஞ் சாரதாம் பிகையே. (௩௩)

முப்ப தோடொரு பத்துடன் மூன்றெனுங் கோணச்
செப்ப மார்ந்தசக் கரத்தினிற் றிகழ்வுறு மணியே
எய்ப்பி லாத்தவ ரியற்றிடுந் தவப்பய னென்னத்
தப்பு றாதவர் மனத்தமர் சாரதாம் பிகையே. (௩௪)

பாச வேரறுத் துயிர்நலம் பயக்குமா கருணைத்
தேசு லாவிய கலைமுதற் றேவியே திறஞ்சால்
நேச மேசெயா திருந்துமே னிலையடைந் திடும்பே
ராசை மேவினேற் கென்புகல் சாரதாம் பிகையே. (௩௫)

செங்கண் மாலய னரன்முதற் றேவர்செவ் வகத்திற்
பொங்கி யார்த்தெழுந் தருணிலைப் புனிதபூ ரணமாய்த்



தங்கி யார்ந்தடங் காதபூ தலத்திற்கா லடியிற்
சங்க மோங்குமா தரசியே சாரதாம் பிகையே. (௩௬)

நேற்றி ருந்தவ ரின்றிருப் பாரென நினைத்தற்
கேற்ற மொன்றிலாப் பொய்யுல கிச்சைமே லீட்டாற்
கூற்று வன்செயற் கஞ்சுவ னச்சுறு தெனைக்காப்
பாற்றி யாட்கொளற் கபயநீ சாரதாம் பிகையே. (௩௭)

படியில் வேறில ரிவர்க்கிணை யெனப்புவி பழிக்கும்
கடியி ழிந்தவ ராயினும் படிறரே யெனினுங்
படிம லர்ப்பொழில் சூழ்திருக் காலடி யடைந்து
னடிய டைந்திடிற் புனிதரே சாரதாம் பிகையே (௩௮)

ஆற்றொ ணாதபே ரவலமே யாக்குமில் வாழ்க்கைச்
சேற்றை மேவுறுஞ் சிதடனேன் சிறந்தபூ ரணையா
மாற்றி லேபடிந் தகம்படிந் தடியடைந் தரும்பே
றுற்றன் மேவுதற் கருகனோ சாரதாம் பிகையே. (௩௯)

பத்தி யாம்வலைப் பட்டுமெய்ப் பத்திசெய் பவர்க்கு
வித்தை யாவையு மளித்திடும் வித்தக முதலே
சுத்த தத்துவ ஞானிபோற் சுருதிநூற் புகலுந்
தத்தை யங்கையிற் றுங்கிய சாரதாம் பிகையே. (௪௦)

ஆம யக்கடற் பட்டுழன் றேனையுன் னருட்பே
றாம ரக்கலக் குரியவ னாத்தடுத் தாள்வாய்
காம ரங்கள்தே னுண்டுபூங் காவகத் திருந்து
சாம மோதுசீர்க் காலடிச் சாரதாம் பிகையே. (௪௧)

கண்டு தேன்கனி பாலமு தெனக்கருத் துவந்து
புண்ட ரீகமெய்த் தாளையைம் புலன்கொளார் புவிமேற்
கொண்ட பாரமென் றறிந்துமாண் குலவுசீ றடியை
யண்டி னேனிலை யம்மையே சாரதாம் பிகையே. (௪௨)

முடியின் மேற்கரங் குவித்துநின் முண்டக மலர்ச்சீ
ரடியி ணைக்குமெய் யன்புபூண் டகநெகிழ்ந் துருகிக்
கடிகை யாயினுங் கதறிடாக் கசடனே னெனினு
மடிமை யாத்தடுத் தாண்டருள் சாரதாம் பிகையே. (௪௩)

நெஞ்ச மேகலங் காதுநன் னிலைகெடா திருந்து
செஞ்ச ரண்சர ணுயடைந் தாற்றிருக் கருணைப்
புஞ்ச மாயகி லாண்டமும் வியக்கநிற் பரக்கு
மஞ்ச மூர்ந்துவந் தமலையாஞ் சாரதாம் பிகையே. (௪௪)

வணங்கு வாரகத் திருந்தவர் வாயகத் தியற்பா
மணங்க மழ்தர மகிழ்வுறு மாபெருங் கருணை
யணங்கெ லாந்திரண் டுருவமாய்க் காலடி யடைதற்
கணங்கு பூத்தவா ரணங்குசீர்ச் சாரதாம் பிகையே. (௪௫)

அன்பர் நாவிருந் துவட்டுறு தினிக்குநல் லமுதே
அன்ப ருள்ளகத் தூற்றெழு மானந்த நிறைவே
அன்பர் பக்கனின் றகன்றிடா வாருயிர்த் துணையே
அன்பெ னும்பெயர்க் கிலக்கமே சாரதாம் பிகையே. (௪௬)

இடும்பை யாவையும் விளைத்திடர்க் கடலிடை யிருத்துங்
குடும்ப வாழ்க்கையிற் பட்டுழன் றுயர்நிலை குறிப்பான்
திடம்பெ றுமனத் தேனினித் தினந்தினஞ் சிறுமைத்
தடம்பு காதெனைக் காத்தருள் சாரதாம் பிகையே. (௪௭)

பார்த்த பேர்பவப் பிணியினைப் பறிக்குநன் மருந்தாந்
தீர்த்த நல்கிடும் பாரதீந் திரனெனச் சிறக்குந்
தீர்த்த தேசிக னிடையறு தீங்கருச் சித்தற்
கார்த்த தேசிக மமைந்தஸ்ரீ சாரதாம் பிகையே. (௪௮)

அலம ரற்படு வார்தமக் கடைக்கலப் பொருளாய்ப்
பலக லைக்குயர் நிலையமாய்ப் பதிதபா வனனாய்
இலகு மெங்குரு பாரதீந் திரமுனி யிதயச்
சலச மேவுறு மன்னமே சாரதாம் பிகையே. (௪௯)

பொறிக ளைந்தையு மடக்கிநின் பொன்னடிக் கமலத்
தறியி லேமனக் கவியினை யன்பினாற் றளைந்து
பிறிது றுதஃ தாங்குநின் றுன்னருட் பெரும்பே
றறியு மாறெனக் கருளுதி சாரதாம் பிகையே. (௫0)

கலியை யாயிரத் தொருபதி னைன்றெனுங் கணக்கிற்
செலவி றந்தவௌ வியத்தின்மா கத்தினிற் றிங்கட்
குலவு பக்கமுந் துவாதசி யுங்குறித் துயர்பூ
தலத்து வந்துகா லடியமர் சாரதாம் பிகையே. (௫௧)

பரம ஹம்ஸஸ்ரீ நரஸிம்ம பாரதீந் திரனுங்
கருணை வள்ளலாற் றுபித மடைந்துகா லடியை
மருவி மன்னுயிர்க் கருண்மழை வழங்குறூற் சலகந்
தரமெ னப்பொலி தருணியே சாரதாம் பிகையே. (௫௨)

நாரி லாதுபூத் தொடைநயம் படச்செய நயக்குங்
கூரி லாமதி யேனெனக் குரைகழற் கன்பா
நாரி லாமனத் தேன்சொலு மாலைநீ நயக்குந்
தாரெ னக்கொளத் தகுவதோ சாரதாம் பிகையே. (௫௩)

ஓது வார்வினைத் துயரொழித் துயர்கதிக் குய்க்குந்
தீதி லாப்புகழ்ச் சாரதா தேவிபூங் கழற்குக்
காத லாற்செயுங் குமரதா சன்கவித் தெரியற்
கோதெ லாங்குண மாக்கொள லருட்பெருங் குணமே (௫௪)

வாழி பாரிசீர்க் காலடி வாழிநீ டூழி
வாழி வெண்கம லாசனத் தம்மைமா தேவி
வாழி மாமறை வானவர் மறையவர் வழுத்த
வாழி மாதவச் சங்கரன் வண்புகழ் வளர்த்தே. (௫௫)

முற்றுப்பெற்றது.



பட்டுப்பூச்சிக் கூண்டு



## பட்டும், பட்டுப்பூச்சியும்

(152-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீமான் எம். என். வைத்தியநாத சாஸ்திரியார் அவர்கள்

அமரகாவியம் மனிதவர்க்கத்தில் சொல்லியிருக்கிறபடி வஸ்திர உற்பத்திக்குக் காரணங்கள் "துவக்கு, பலம், கிருமி, ரோமம்," ஆகிய நான்கே. இவைகளில் முதல்குறித்த 'துவக்கு' என்பது மரம், செடிகளின் பட்டைகளுக்கும் மிருகங்களின் தோல்களுக்கும் சொல்லலாம்.

இராமலட்சுமண சீதாபிராட்டியார்கள் ஆரணியம் போகும்போது அணிந்ததாகச் சொல்லும் வற்கலையும், பரமசிவன் அணிந்ததாகக் கூறப்படும் யானைத்தோலும், பண்டைக் காலங்களில் சீர்திருத்தமில்லாத காட்டுமனிதர்கள் தரித்ததாகக் கேள்விப்படுகிற மரப்பட்டை, ஆடு மாடு மான்முதலிய மிருகங்களின் தோல் வகைராவும், தற்காலத்தவர்களால் தாழை வாழை சணல் முதலியவைகளிலிருந்து நாகரிகமாகச் செய்யப்படும் பலவித வஸ்திரங்களும், முதல்வகுப்புக்குச் சேர்ந்ததென்றே சொல்லிவிடலாம்.

இரண்டாவதான 'பலம்' என்பது, செடிகளிலிருந்து உண்டாகிற பருத்தி போன்ற பலன்களைக்குறிக்கும். நான்காவதான ரோமம் என்பது, ஆடுமுதலியமிருகங்களின்ரோமங்களிலிருந்து செய்யப்படும் முரட்டுத்தனமான கம்பளி வகைராக்களும், நாகரீகமான பிளானல் வகைராக்களுமே. மூன்றாவதான 'கிருமி' என்பது, புழுவினின்றும் உற்பத்தியாகிற பட்டுஎன்பது. இதனால் செய்யப்படும் வஸ்திரங்கள்மற்ற மூன்றுவகைவஸ்திரங்களைவிட உயர்ந்ததும்நேர்த்தியும், கெட்டியுமானவைகள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இப்பட்டுக்களில் அநேக வகைகள் இருக்கின்றன. ஈரிப்பட்டு விஷயம் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். தவிர சில புழுக்கள் காடுகளில் தங்களுக்கு வேண்டிய ஆகாரங்களைத் தாங்களே தின்று பட்டுக் கூண்டுகளை உற்பத்தி செய்கின்றன. வேறு சில இடங்களில் அதற்கு வேண்டிய ஆகாரங்களை மனிதர்கள் பயிர்செய்து, அச்செடிகளில் சில புழுக்களை விட, அப்புழுக்கள் அதை உண்டு ஜீவித்து, கூண்டுகளை உண்டு பண்ணுகின்றன. அவைகளை மனிதர்கள் சேகரித்துப் பிரித்து நூல் நூற்கிறார்கள். எவ்வகைப்பட்டும், திப்பிலி காவல் இலைகளை மனிதர்கள் நறுக்கிப் போட, அதை உண்டு ஜீவிக்கும் புழுக்கள் உண்டு பண்ணுகிறபட்டை விட நிரம்பமட்டம் என்பதில் சந்தேகமில்லை.

இத்துடன் காட்டியிருக்கும் படத்தில் பருத்திச் சோளைக்குவியல்போலக் காணப்படும் ஒவ்வொரு சோளையிலும் ஒவ்வொரு புழுவுண்டு. ஒரு கூண்டை எடுத்துக் காதுக்குச் சமீபத்தில் பிடித்து ஆட்டினால் பூச்சி ஆடுகிற சப்தம் கேட்கலாம். இக்குவியலில் ஒருகை கொண்ட அளவு எடுத்து வைத்தால் அதிலிருந்து வெளிப்படும் பூச்சிகளில் தற்காலத்து மனிதவர்க்கம் போல் ஸ்திரீப்பிரஜை ஜாஸ்தியாகாமல், சரிபாதி ஆணும் சரிபாதி பெண்ணுமாகவே உற்பத்தியாகின்றன! ஆகையால் இப்புழு வளர்க்கிறவர்கள் வரதக்ஷிணையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

இப்புழு முதலில் சீனதேசமிருந்து மற்றவிடங்களுக்குப் போனதாகச் சிலர் சாதித்தாலும், நமது புராண புஸ்தகங்களில் இதன் பெயர்களிருப்பதால் இத்தேசத்திலும் இது வெகு நாளைக்குமுன் இருந்திருக்க வேணுமென்று சொல்லலாம். இதை வேறு தேசங்களுக்குக் கொண்டுபோக ஒவ்வொருவர் பட்டிருக்கும் பிரயாசத்திற்கு அளவில்லை. முற்காலத்தில் இராஜஸ்திரீகள் மாத்திரம் இப்புழுக்களை ரகசியமாயடைத்துப் பட்டு உண்டுபண்ணிக் கொண்டிருந்தபடியால், அப்படிப்பட்ட ஸ்திரீகளைச்சிறைகொண்டு, அவர்களால் தெரிந்துகொண்டவர்கள் சிலர். ராஜதண்டனைக்குப் பயந்து, புழையுள்ள ஊன்று கோல்களில்

இதன் கூண்டுகளைப்போட்டு மூடித் தெரியாமல், கள்ளத்தனமாய்க் கொண்டுபோய்க் கற்றவர் சிலர். இந்த ரகசியத்தை வெளியாக்கினவர்களுக்கு மரணதண்டனைகூட ஒரு காலத்தில் விதிக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது. அக்காலத்தில் இதை அறிந்தவர்கள் நிரம்ப ரகசியமாய்த்தான் வைத்துக்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் தொழிலாளிகள் எந்தத் தொழிலையும் அதிக ரகசியமாகவே வைத்திருந்தவர்கள். வெளியாக்கினால் தங்கள் பெயரும், லாபமும் போய்விடும் என்று பயந்து, அப்படிச் செய்தார்கள் போலும். அக்காலத்தில் பேடெண்டு ஆக்ட்டு ஜாரியிலில்லை. இக்காலத்திலோ தண்ணீர் காய்ச்சுவதற்கு ஒரு சுலபவழி கண்டுபிடித்தாலும், அதுமாதிரி ஒருவரும் செய்யக்கூடாதென்று சர்க்காரில் ரிஜிஸ்தர் செய்துகொண்டு, சகல லாபங்களையும் கண்டுபிடித்தவரே அடைவதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா?

இப்போது நமது நாட்டில் இத்தொழில் எவ்வளவு விருத்தி அடைந்திருக்கிறதென்று சற்றுப் பார்ப்போம். மற்ற நாடுகளில் உண்டாகும் பட்டைவிட இந்நாட்டுப்பட்டு சிறந்ததென்று அநேகமாய் எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். இதுபோல் மற்ற நாட்டுப்பட்டுகளில் சாயம் பிடித்து நிற்கிறதில்லை. விலையைப் பொறுத்தமட்டில் இவ்விடம் உற்பத்தியாகும் பட்டு கிராக்கி என்றே சொல்லவேணும். சாதாரணமாய்ப் பட்டு இரண்டுமாதங்களில் 'அறுவடை' ஆகிறது. ஆனதால் இவ்விடம் வருஷம் ஆறு தடவை அறுவடை செய்கிறார்கள். மற்ற நாடுகளிலோ, வருஷம் இரண்டொரு தடவைகளுக்கு மேல் அறுவடை செய்வதில்லை. அறுவடை இல்லாத காலங்களில் முட்டைகளை அதற்கு வேண்டிய உஷ்ணமான இடங்களைத் தயார்செய்து, அவ்விடங்களில் ஜாக்கிரதையாயடைத்துப்பாதுகாக்கிறார்கள். இப்படியிருந்தும் வருஷம் ஒருதடவை எடுக்கப்படும் பட்டு வருஷம் ஆறுதடவைகளில் உற்பத்தியாகுமிடங்களில் விலைசரசமாய்க்கொடுக்கப்படுகின்றது! இவ்விதமாகக் கொல்லத் தெருவில் ஊசிவிற்கக்காரணம் என்ன? நாம் பயிர்த் தொழில்களிலும் கைத்தொழில்களிலும் மற்றதேசத்தாரைவிட மிகவும்பின்னிடைந்திருப்பதேயாம். ஒஷி பூச்சிகளுக்கு வேண்டிய ஆகாரம் சரிவரக்கிடைப்பதில்லை என்று சொல்ல ஒண்ணாது. ஏனெனில் அதன் ஆகாரமாகிய திப்பிலி நாவல் எந்தச் சீதோஷ்ண ஸ்திதியிலும், எந்த மண்ணிலும், சாதாரணமாய் உண்டாகின்றது. விட்டுவைத்தால் பெரிய மரமுமாகிறது. ஒரு ஏகரா பூமியில் திப்பிலி நாவல் பயிர்செய்தால் அதிக சிரமமில்லாமல் மற்றஎப்பயிரையும்விடஜாஸ்தி லாபம் உற்பத்திசெய்யலாம்.

ஆனால் பூச்சிவளர்ப்பதில்சிலகஷ்டங்கள்உண்டு. இப்பூச்சிகளுக்குஆபத்துகள் அதிகம். அதிக தீனியினாலும், அல்பதீனியினாலும், இலையின் கெடுதலினாலும், புழுக்கள் கெட்டுப் போம். மனிதர்களுடைய துராசாரத்தினால் பூச்சிகள் கெடுவதுமுண்டு. தவிர எலி, பூனை, பல்லி, பட்சிகள், நாய், ஈ, எறும்பு முதலிய சகல ஜந்துக்களும் இந்தப் பூச்சிகளைத் தின்பதில் அதிக பிரியப்படுகின்றன. முக்கியமாய் எலி, ஈ, இரண்டினாலேயே பிளேக் வியாதி பரவுகிறதென்று கண்டும், அதிலிருந்து நமதுயிரைத் தப்பித்துக்கொள்ள முயலாத நாம் இப்புழுக்களை இத்தனை ஆபத்திலிருந்து ஏன் ரக்ஷிக்க வேண்டும்? அப்படி ரக்ஷித்தாலும் பிறகு கொல்லத்தானே வேணும். அப்படிப்பட்ட பாபகாரியங்களைச் செய்வது நம்முள் உயர் குலத்தோருக்குச் சரியல்ல. ஆனால் நாம் பட்டு மாத்திரம் தரித்துக்கொள்ளலாம். எந்தத் துராசாரம் செய்தாலும், துஷ்காரியம் செய்தாலும், நமது உடைகளை அவிழ்த்து எறிந்துவிட்டு இப்பட்டு வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ள, உடனே நாம் சுத்தியாகிவிடுகிறோம். இதை



உடுத்துக்கொண்டுமந்திரஜபம்செய்தால், மந்திரங்கள் உடனேசித்தியாய்விடுகின்றன. அதற்கு நமது சாஸ்திரங்களில் பிரமாணங்களிருக்கின்றன. பட்டுப்பூச்சியைக் கொல்லக்கூடாது. ஆனால் பட்டுமட்டும்தரிக்கலாம். இதற்கு வேறு திருஷ்டாந்தமுமுண்டு. எள்ளிலிருந்து எண்ணெய் செய்யும் திலகாதகனை மஹாபாபியென்று நமது தர்ம சாஸ்திரங்கள் கோஷிக்கின்றன. ஆனாலும் இத்தேசத்தில், முக்கியமாய்த் தென் இந்தியாவில், நாம் நல்லெண்ணெய் இல்லாமல் கால்நிமிஷம்கூட ஜீவித்திருக்க முடியாது. நாம் வாரம் இருமுறை எண்ணெய் இட்டு ஸ்நானம் செய்யவேணும். நமது வீடுகளில் பிரசவித்த ஸ்திரீகளும், குழந்தைகளும், ஒருநாள் விட்டு ஒருநாள் எண்ணெய் தேய்த்துத் தலைமுழுக வேண்டும். எள்ளினால் சீனி, எள்ளுண்டை, எள்ளுப்பொடி, தில அன்னம், முதலியவைகள் செய்து அந்தணர்களுக்கும், சினேகிதர்களுக்கும் வேண்டியவளவு கொடுத்து, நாமும் புஜிப்பது சாஸ்திர சம்மதமான புண்ணிய கருமம். நசுக்கி எண்ணெய் எடுக்க ஆரம்பித்தால் உடனே பாபம் வந்து தொத்திக்கொண்டு நம்மை விடுகிறதில்லை. இப்படியே பட்டுப் பூச்சி விஷயத்திலும்.

இனியாவது இவ்வாறு மோசமான உபதேசங்களைச் செய்யாமலும், அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வராமலும், நம்மில் விவேகிகளாயுள்ளவர்கள், உயர் குலத்தவராகிலும்—இழி குலத்தவராகிலும், நமது கண்முன் நடப்பதைக் கவனித்துத் தேசக்ஷேமத்தை நாடி நடப்பாராக. கொள்ளே காலத்தில் சுமார் வருஷமொன்றுக்கு 6000-மணுவுக்கு அதிகமாகவே பட்டுநூல் ஏற்றுமதி யாகிறது. அது இத்தேசத்திற்குப் பிதுரார்ஜிதமாதலால், பழையபடி இங்கேயே அதற்குச் சாயம், நெசவு முதலிய சடங்குகள் நடக்கலாம். இன்னும் அதிகமாகவும் நடக்கலாம். நடந்தால் எல்லாக் கக்ஷியாருக்கும் க்ஷேமம். காயத்திரி தேவதை நம்மவர்களுடைய புத்தியை நல்வழியில் செலுத்தட்டும்.

## கடினமாய் வேலைபார்த்த நம்முடைய அரசன், அல்லது, (அவருடைய கடமைகளின் கதை)

ஸ்ரீமான் என். ராமபத்திர தீக்ஷிதர்

[சமீபத்தில் காலஞ்சென்ற, நம்முடைய அரசன், எட்வார்ட் சக்கிரவர்த்தி, ஐரோப்பாவிலுள்ள எல்லா தேசத்தாரோடும் சிநேகமாயிருந்தார். கொடுங்கோல் மன்னவர்களின் காலம் போய்விட்டது மெய்தான். ஆனாலும், அரசர்களுடைய செல்வாக்குத் தற்காலம் மிகவும் அதிகமாயிருக்கிறது அது கொண்டு நம்முடைய அரசர் எவ்விதம் காலத்தைக்கழித்தனர் என்று தெரிவதற்குப் பின்வரும் பக்கங்களைக் கவனமாய் வாசிக்கவேண்டும்.]

இவ்வுலகில் அநேகர் அரசனுடைய வாழ்க்கை மிகவும் சுககரம் என்று நினைக்கிறார்கள். அரசனுக்கென்ன, வருஷ ஆரம்பமுதல்வருஷக் கடைசிவரையில் சுகமாயும், தொந்திரவு அன்றியிலும், காலத்தைக் கழித்து வருகிறானென்று எண்ணுகிறார்கள். மனோராச்சியம் செய்கிறவர்களுடைய முதல் கொள்கை என்னவென்றால், "நான் ஒரு அரசனாயிருந்தால்—" என்று ஆரம்பிப்பதாம். ஆயினும், நாம் ஓர் நல்ல அரசனுடைய தினசரி காரியங்களைக் கவனமாய்ப் பார்ப்போமாயின் அவ்வித எண்ணங்களெல்லாம் பறந்தே போய்விடும். தரும துரையாகிய அரசனுக்கு விடுமுறை நாளென்பது கிடையாது. அரசனுடைய கடமைகள் ஒரு நிமிஷமாவது அவரை விட்டு விலகுவதில்லை.

உதாரணமாக, காலஞ்சென்றநமது அரசனுடைய வாழ்நாளில் ஒரு வருஷத்தை நாம் கவனித்துப்பார்ப்போம். 1.06-ம்வருஷம் ஆகஸ்டு மாதமுதல் 1907-ம் வருஷம் ஆகஸ்ட் மாத வரையில் நம்முடைய எட்வார்ட் சக்கிரவர்த்

தியைப் பின்தொடர்ந்து சென்றால், எப்படி அவ்வளவு காரியங்களை அவர் செய்து முடித்தார் என்று நாம் ஆச்சரியப்படத்தக்கதாகவிருக்கும். ஓர் பெரிய வர்த்தகத்திற்கு எஜமானனாகவிருக்கும் முதலாளிக்குத் தன் வியாபாரத்தின் சகல காரியங்களையும் நேராகப் பார்ப்பது அசாத்தியமாகவிருக்கிறது. சில காரியங்களை அவருடைய வேலைக்காரர்கள் பார்க்கிறார்கள். அரசனுக்கோ, தானே செய்து தீரவேண்டிய பெருங் காரியங்கள் அனேகமிருக்கின்றன. எதிர்பார்க்கமுடியாத அனேக கடினவேலைகள் நிமிஷத்திற்கு நிமிஷம் உற்பத்தியாய்க்கொண்டிருக்கின்றன. அக்கடின காரியங்களை யூகித்துப்பார்ப்பதற்குப்புத்தியும், தைரியமும் அபாரமாய் வேண்டியிருக்கும்.

## ஓர் வருஷ காரியங்கள்

1906-7 வருஷமானது சுறுசுறுப்புள்ள அரசர்களுக்கும் வேண்டியவேலைகளைக்கொடுத்துக் கொண்டிருந்தது. உள்ளூரிலும் வெளியூர்களிலும் அனேக ராஜபேட்டிகள் நடந்தன. எட்வார்ட் அரசன் நிலத்திலும், சமுத்திரத்திலும் ஓயாது பிரயாணம் செய்தனர்.

அவ்வருஷத்தில் ஏழாவது எட்வார்ட் சுமார் பத்து மன்னவர்களைச் சந்தித்தனர். அவர்களாவார்:— (1) ஜெர்மனி தேசத்துக் கெய்ஸர் சக்கிரவர்த்தி. (2) இத்தாலியா தேசத்து மன்னவன். (3) டென்மார்க்குதேசத்தரசன். (4) ஸ்பெயின் தேசத்து மன்னவன். (5) ஆஸ்திரியா சக்கிரவர்த்தி. (6) நார்வே அரசன். (7) பிராஞ்சு தேசத்ததிபதி. (8) ஸியாம் ராஜா. (9) ஓர் அமெரிக்கா இந்தியர்களின் முக்கியஸ்தன். (10) லைபேரியாவின் அதிபதி. அயல் நாட்டிலும், கப்பல்களிலும் 6000-மைல் தூரம் பிரயாணம் செய்திருக்கிறார். ரயில், படகு, மோட்டார் வண்டிகளின் உதவியால் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐர்லாந்து இம்மூன்று இடங்களிலும் 7,500-மைல் பிரயாணம் செய்திருக்கிறார்.

ஒரு வருஷத்தில் அரசன் செய்த காரியங்களாவன:—

43 இடங்களைப் பார்க்கப்போனது (ப்ரிட்டன் தீவில் 28, அயல்தேசங்களில் 15.)
140. மந்திரிகளுக்கும் தூதர்களுக்கும் பேட்டி கொடுத்தது.
8 ப்ரீவி கௌன்சில்.
16 புதுக் கட்டிடங்களைப் பார்க்கப்போனது.
14 இராஜாங்க போஜனங்கள்.
12 இராணுவ பரிசோதனைகள்.
6 காட்சிகளைக் காணப்போனது.
4 இராஜகாரியங்கள்.
3 பேட்டி தினங்கள்.
12 பந்தயச் சபைகளுக்குப்போதல்.
42 நாடக சாலைகளுக்குப் போதல்.
1 பிரத்தியேக டீ பார்ட்டி.
1 பிரத்தியேக கார்டன் பார்ட்டி.
50,000 கடிதங்களும், பத்திரங்களும்.

1906-ம் வருஷத்திய விடுமுறைநாட்களுக்கு சன் கிளம்புமுன் பக்கிங்ஹாம் அரண்மனையில், வட அமெரிக்காவில் வேட்டையாடும் பாத்தியத்தை விரும்பின மூன்று அமெரிக்க இந்திய முக்கியஸ்தர்களுக்குப்பேட்டி கொடுத்தனர். மறுநாள், க்ரான்பர் என்னுமிடத்திற்கு 'விக்டோரியா அண்டு ஆல்பர்ட்' ஸ்டீமரில் பிரயாணம் செய்தார். க்ரான்பரில் ஜெர்மனி தேசத்துச் சக்கிரவர்த்தி உவில்லியமிற்கு பேட்டிகொடுத்து விட்டு, அவருடன் இருபத்து நான்கு மணிநேரம் தங்கினார். மரீன்பாட் என்னுமிடத்தில் இராஜ வைத்தியராகிய டாக்டர் ஆட் என்பவருடன் மூன்றுவாரம் தங்கிவிட்டு லண்டன் மாநகர் போயினர். செப்டம்பர், அக்டோபர், இவ்விரு மாதங்களிலும் சுயதேச இராஜகாரியங்களை நடத்தி வந்தார். நவம்பரில் ஹாகான் அரசனையும், நார்வேதேசத்து இராணியாகிய மாட் என்பவளையும்



பார்த்தார். டிசம்பரில், கிறிஸ்துமஸ் பண்டிகையை ஸாண்ட்ரிங் ஹாமில் நடத்தினதுடன், நான்கு சினேகிதர்கள் வீட்டிற்குப் போயிருந்தார். ஜனவரியில் லண்டனுக்கு வந்தார்.

ஒவ்வொருநாளும் லண்டனில் காரியங்கள் அதிகரித்தன. கடிதங்களெழுதும் வேலைகள் அதிகமாயிருந்தது. பிப்ரவரியில் பாரீஸ் நகரத்தில் ஒருவாரமும், பேட்டிகளில் ஒருவாரமும், சினேகத்தன்மையை விருத்தி செய்வதில் இருவாரங்களும், பிராஞ்சுதேசத்தில் கழிந்தன. பிறகு நீயூபெய்லி கட்டிடத்தைத் தங்கச் சாவியால் திறக்க லண்டனுக்கு வந்தார்.

மார்ச்சு முதல் இரண்டு மாதங்கள் ஓயாமல் அயல் தேசங்களுக்குப் பிரயாணம் செய்தார். 6,000 மைல் பிரயாணம் வயது காலத்தில் யாருக்கும் சிரமம் கொடுக்கக் கூடியதுதான். வெளியில் பிரயாணம் செய்த போதிலும் இராஜகாரியங்களோடு கூடிய அனேக தூதர்களைத் தினம் பார்த்தார்.

முதலில், பாரீஸ் நகரத்தில் எட்வார்ட் அரசன் டியூக் ஆப் லான்காஸ்டர் என்றபெயருடன் பிரயாணம் செய்தார். அச்சமயத்தில் ஒரு நல்ல கதை நடந்தது. இரண்டு அமெரிக்கர்கள் பாடசாலையைப் பார்க்க வரும்பொழுது அரசனையும் அரசனுடைய பரிவாரங்களையும் சந்தித்தார்கள்.

"அதோபோகிறது எட்வார்ட் அரசன்; அப்படியில்லா விட்டால் நான் உனக்கு ஒரு டாலர் கொடுத்துவிடுகிறேன்" என்று ஒருவன் மற்றொருவனுக்குச் சொன்னான்.

"சரி; நீ ரூபித்துவிட்டால் நான் ஒருடாலர் உனக்குக் கொடுக்கிறேன்" என்று மற்றொருவன் பதிலுரைத்தான். அதன்பேரில் அவர்களிருவரும் சமீபத்திலிருந்த ஒருவரை "அவர் யார்?" என்று கேட்டார்கள். "டியூக் ஆப் லான்காஸ்டர்" என்று அவன் பதிலுரைத்தான். உடனே டாலர் பந்தயத்தை அவ்வமெரிக்கன் இழந்து விட்டான். இருந்தாலும் அவன் எட்வார்ட் அரசன் தான் என்ற எண்ணத்தோடு போனான்.

அரசன் பாரீஸிலிருந்து பயாரிட்ஸ் நகரத்திற்குப்போனார். அங்கே மோட்டார் வண்டியில் ஸ்பெயின் தேசம் வரையில் சென்று திரும்பினார். அவ்விடத்திலிருந்து அலக்ஸாண்ட்ரா இராணியுடன் சேரபோர்ன் நகரம் வந்தார். பிறகு, இருவரும் ஸ்பெயின் தேசத்தரசனை ஆல்பான்ஸோவைப் பார்க்கக் கார்த்தஜீனாவிற்குப்போனார். அவ்விடத்திலிருந்து இத்தாலியா தேசத்தரசனையும், அரசியையும் பார்த்துவிட்டு, மால்டா, நேபில்ஸ், பாலர்மோ வழியாய் பாரீஸ் நகரமடைந்து இரண்டு மாதம் பூர்த்தியானவுடன் மே மாதத்தில் லண்டனுக்குப் போனார்.

மே மாதத்தில் ஓய்வு என்பது கிடையாது. ஜப்பானிலிருந்து பிரின்ஸ் பியுஷீமீ என்பவர் வந்திருந்தார். இப்பொழுது, ஆல்டர்ஷாட்டில் இராணுவத்தைக் காணவந்தார். ஜூன் மாதத்திலும் வேலை அதிகமாயிருந்தது. டென்மார்க்கு தேசத்து மன்னவர்களுக்குப் பேட்டி கொடுத்துவிட்டு ஸியாம் அரசனை சுலாலாங்கார்ன் என்பவரை வரவேற்றார். ஜூலையில் வேலை கடுமைதான். ஐர்லாந்துக்கும் உவேல்ஸுக்கும் போனார். ஐந்து பொதுஜனப் பண்டிகைகளுக்குப் போயிருந்தார். ஆகஸ்டு மாதத்தில் படகுப்பந்தய ஓட்டங்களைப் பார்த்துவிட்டு ஜர்மனி சக்கிரவர்த்திக்கும், ஆஸ்டிரியா சக்கிரவர்த்திக்கும் பேட்டி கொடுத்துவிட்டு, டியூக் ஆப் லான்காஸ்டர்என்னும் பெயருடன் மரீன்பாடில் விடுமுறை நாட்களைக் கழிக்கச் சென்றனர்.

## பேட்டிகளும், இராஜரீகங்களும்

லண்டனிலிருக்கும் பொழுது கடினமாக வேலை செய்யும் ஒவ்வொருவரும் அரசனுடைய காரியங்களைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். தினம் ராஜகாரியங்களைத் தானுமே மந்திரிகளுடன் பேசுவார். வருஷத்தில் சுமா

230-தடவைகளில் நேராகக் காரியங்களை நிர்வகிக்க வேண்டியிருக்கிறது. இதைத்தவிர அரசன் செய்த அனேககாரியங்கள் எழுதப்படாமலு மிருக்கிறது.

அரசனுடைய தினசரி காரியங்கள்

அரசனது லிகிதங்கள் ஒரு தினத்திற்கு ஆயிரத்திற்கு மேல்பட்டிருக்கிறது. வரும் கடிதங்களைப் பிரைவேட்டு செகர்டெரி லார்டு நோலிஸ் என்பவர் பார்த்துவிட்டு, முக்கியமான விஷயங்களை அரசனுக்குத் தெரியப் படுத்துகிறார். லண்டனிலிருக்கும் பொழுது தினம் காலையில் கடிதங்களெழுத உட்காருவார். அவர் உடை உடுத்திக் கொள்ளும் பொழுது தினசரி வரும் தந்திகளை ஒருவர் வாசிப்பார். பிறகு தினம் நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றி யோசிப்பார். இராணுவத்தில் நடக்கும் ஒவ்வொரு நுட்பங்களும் அவர் தெரிந்து கொள்ளவேண்டும். உலகத்திலிருக்கும் ஒவ்வொரு மன்னவனுடைய காரியதரிசிகளையும் பார்க்க வேண்டியிருக்கும். தினம் தன்னுடைய தேச மந்திரிகள் காரிய ஆலோசனைகளுக்கு வருவார்கள். இவ்வருஷத்தில் 50-பேர்களுக்குத் தனி பேட்டிகொடுத்ததாகவும், அதில் ஸர் முகம்மதுஷா ஆகாகான் என்பவர் ஒருவரென்றும் வரையப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஒவ்வொரு தினமும், மாதமும், வருஷமும் ராஜகாரியங்கள் பூராகவிருக்கிறது.

அரசனால் திறக்கப்பட்ட புது
கட்டிடங்கள் 1906-07

அரசனால் பார்க்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் ஓர் புதிய உபந்நியாசம் செய்யவேண்டியதாயிருந்தது.

இங்கிலாந்திற்கு நன்மைதரும் சில வசனங்கள்
கிங்ஸ்லின் கிராமர் ஸ்கூல் நவம் 06.

"நமக்குப் பின்வருபவர்களை யுத்தேசித்துச் செலவழிக்கும் பணமானது மிகவும் மேலானது."

உவேல்ஸில், ஜூலை'07. "இங்கிலாந்து மேலான பதவியிலிருப்பதை எப்பொழுதும் சமாதானமே காப்பாற்றும்."

நியூபெய்லி பிப்ர'07. "குற்றங்கள் தண்டிக்கப்படுவது நியாயம்; ஆனால், நாம் குற்றவாளிகளைச் சீர்திருத்த ஏற்பாடு செய்யவேண்டும்."

"கடவுளுடைய கிருபையன்றியில் ஒன்றும் நடவாது."

வெல்லிங்டன் காலேஜ் தலைமைப்பையனுக்கு ஒரு வெகுமானக் கிண்ணம் கொடுக்கும் பொழுது:—

"நீ மயக்கத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு பதார்த்தத்தையும் இந்தக்கோப்பையால் குடிக்கமாட்டாயென்று நான் நம்புகிறேன்." வேறு சமயத்தில்,

"அமெரிக்காவும் இங்கிலாந்தும் சமாதானத்துடன் வேலை செய்யவேண்டும்."

ஒருவரும் அறிந்துகோள்ளக்கூடாத
சில விஷயங்கள்.

தவிரவும், அரசன் செய்த நற்காரியங்களில் ஒருவரும் அறியக்கூடாத சிலகாரியங்களிருக்கின்றன. அதாவது, வறிய ஸ்திதியிலிருக்கும் சில பொதுக்கட்டிடங்களுக்குத் திரவிய உதவி செய்தல் முதலியன.

மால்டாவிற்குப் போயிருந்த பொழுது அவர் சில கைதிகளை விடுதலை செய்ய உத்திரவளித்தோடு ஏழைகளுக்குக்கொடுக்கவேண்டியதற்காக நூறு பவுன் வைத்துவிட்டுப் போனார்.

வெளிப்பிரதேசங்களில், எந்தத்தொழிலிலேயும் உயர்ந்த பதவியையடைந்த மனிதர்களோடு பேசியும் உற்சாகப்படுத்தியிருக்கிறார்.

அரசனாகவரவேண்டுமென்று விரும்பும் ஒவ்வொருவரும்இவ்வாறுஇவ்வருஷத்தில்நடந்தேறியவைகளை யோசித்தால், அரசனுடைய நிலைமை இன்னபடியென்றுகண்டுகொள்ளுவார்கள்.



## சிறுபிள்ளைகள் செய்த வீரச்செயல்கள்

ஸ்ரீமான் ஆர். கே. குப்புசாமி அய்யர்
அவர்கள், பி.ஏ., எல்.டி.

அமெரிக்காவில் தற்காலத்தில் இருப்பது போலவே 18-வது நூற்றுண்டின் முதலிலும் பாஸ்டன் என்பது சிறப்புப் பெற்றதும், வித்தியார்த்திகளும் சாஸ்திரபண்டிதரும் நிரம்பினதுமான பட்டணம்.ஆதலால்அந்நகரில்பலபத்திரிகைகள் பிரசுரமாயின. அவற்றுள் ஒன்றைப் பெஞ்சமினுடைய தமையன் ஜேம்ஸ் வெளியிட்டுவந்தான். அதற்கு 'புது இங்கிலாந்து தூதன்' என்று பெயரிட்டிருந்தான். அப்பத்திரிகைக்கு வித்யாவிஷயமாய் எழுதுவார் அதிகமாய் இல்லை. எழுதிய சில விஷயங்களும் படிக்கத்தக்கனவாய் இல்லை. இவற்றையெல்லாம் பார்த்ததும், அவைகளைவிட எவ்வளவோ மடங்கு சிறந்த வியாஸங்களைத்தான் எழுதலாம் என்று பென்னுக்குத் துணிவு உண்டாயிற்று. இவ்வெண்ணம் உதித்ததும், தன் சாமர்த்தியத்தைப் பரீக்ஷை செய்யவேண்டுமென்ற ஆசை அவன் மனத்தைத் தூண்டிற்று. ஆனால், தான் சாமர்த்தியமாய் சில உருப்படிகளை எழுதினால் அவற்றைப்பார்த்துத் தன் தமையன் பொறாமைப்படுவான் என்று மட்டும் பயந்தான். தன் தமையனது துர்ப்புத்தியும் பொறாமையும் நன்றாய்த் தெரிந்தவனாகையால் தான் எழுதுவதைத் தேவையில்லையென்று தமையன் தள்ளிவிடுவான் என்றும் அவனுக்கு நிச்சயமாயிருந்தது. அதற்காக அரசியல் விஷயமாயும், சாஸ்திர சம்பந்தமாயும் தான் எழுதியுள்ளசிலவற்றை, எழுதியது இன்னாரென்று தெரியாமல், அனாமதேயமாய்ப் பத்திரிகைக்கு அனுப்ப வழியுண்டோ என்று பலநாள் சிந்தித்தான். கடைசியாய்த் தன்னெழுத்தை மாற்றி எழுதி, அவைகளை ஒருவருக்கும் தெரியாமல் பிரதிதினமும் சாயங்கால வேளையில் அச்சுக்கூடம் மூடியபிறகு கதவினது துவாரத்தின் வழியாய் உள்ளே போட்டுவிடவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டான். பென் இவ்வாறு திருட்டுத்தனமாய்த் தன் தமையனிடம் சேர்ப்பித்த ஒவ்வொரு உருப்படியும் 'புதிய இங்கிலாந்து தூத'னில் வெளிவந்தது. சில வாரங்களுக்குள் பாஸ்டன் முழுவதிலும் 'தூதனு'க்கு அனாமதேயமாய் எழுதிவரும் மனிதனது திறமையைப் பற்றிப் பேசாதவர்களே கிடையாது.

இப்படி எல்லாரும் புகழ்ந்ததைப் பார்த்துத் தைரியம் வரவே, அவ்வியாஸங்களை எழுதியது தான் என்று பெஞ்சமின் பகிரங்கப்படுத்திக் கொண்டான். உடனே எல்லாரும் ஒரு சிறுவன் இவ்வளவு கம்பீரமாய் எழுதுகிறானே என்று அவனை வெகுவாய்ப் புகழ்ந்தனர். ஆனால் ஜேம்ஸ் மட்டும் இதைச் சகிக்கவில்லை. அவன் பொறாமை முன்னிலும் பத்துமடங்கு அதிகப்பட்டது. தன்னிலும் மேன்மையாய்த் தன் தம்பி விஷயங்களைப்பற்றி எழுதச் சக்தியுடையவனாய் இருப்பதைப்பற்றி உண்டான அழுக்காறு அவன் மனதைச் சுட்டது. சிறுவன்மேல் உண்டான கோபத்தாலும் பொறாமையாலும் தனக்கு அவனுடைய உதவியால் உண்டாகும் லாபத்தைக் கூட மறந்து அவனைத் தொந்தரவு செய்ய எண்ணினான்.

அதே சமயத்தில் அவனுடைய பத்திரிகையில் எழுதப்பட்ட ஒரு விஷயம் இராஜாங்கத்து அதிகாரிகளின் அபிப்பிராயத்துக்குச் சம்மதமில்லாதிருந்ததால், உடனே ராஜாங்கத்தார் ஜேமஸ் இனி அப்பத்திரிகையைப் பிரசுரிக்கக் கூடாதென்று உத்தரவளித்தார்கள். தனக்கு வெகு லாபத்தைக் கொடுத்துவரும் பத்திரிகையைத் திடீர் என்று நிறுத்திவிட யாருக்குத்தான் மனம்வரும்? அதிலும் ஜேம்ஸோ சொல்லவேண்டியதில்லை! ஆகையால் 'தூதனை'த் தவறாமல் நடத்திவர ஒரு யுக்தி செய்தான். தன் பெயரால் வெளியிட்டால் அல்லவோ சர்க்காரில் ஆக்ஷேபணை செய்வார்

கள். தன் தம்பி பென் இருக்கிறானே! அவன் பெயரால் பத்திரிகையை நடத்திவருவதில் யாதொரு தடையுமில்லையே என்று தீர்மானித்து அவ்விதமே செய்யத் தொடங்கினான். முன்னமேயே பெஞ்சமின் எவ்வித வேலை கொடுத்தாலும் செய்யவேண்டுமென்றல்லவா நிபந்தனை! இப்பொழுது அதை மறுபடியும் நிச்சயம் செய்துகொண்டான். தம்பியும் சொல் தவறாமல் வேலை செய்துகொண்டிருந்தான்.

பென்னுக்கோ தான் எழுதிய உருப்படிகள் பத்திரிகை மூலமாய் வெளிப்பட்டால் போதும். அதற்காக என்ன கஷ்டம் வேண்டுமானாலும் படச்சம்மதித்தான். இப்படி எழுதுவதால் கிடைக்கும் அதிக லாபத்தைப் பார்த்தாவது தன் அண்ணன் மனது இரங்கித் தன்னை அதிகவேலை கொடுத்துக் கொல்லாமல் விடமாட்டானாவென்று எண்ணினான். ஐயோ! பாவம்!! பெஞ்சமின்!!! அவனுக்கு உலகின் இயற்கை சீக்கிரம் தெரிந்தது. இவ்வளவுதான். என்ன நன்மை செய்தாலும் சிறிதும் மனம் இறங்காது, பொறாமையும் அற்ப புத்தியும் குடிகொண்ட கீழ்மக்கள் உலகில் எவ்வளவோ பெயர். அவர்களுக்குள் முதல் தரமானவருள் ஒருவன், ஜேம்ஸ். அறிவு மிக்கு மேன்மையாய் இருப்பவர்களையும், நல்லவர்களையும் கண்டாலே அவர்கள் "கண்ணில் கற்பூரத்தை வைத்துக் கட்டிக் கொள்வார்கள்." தமக்கு வேண்டாதவர்களை அலைக்கழிப்பதும் அவமானப் படுத்துவதுமே அத்தகைய மனிதருக்கு ஓயாதவேலை!! தன்னைவிட பென், ஆயிரம் மடங்கு புத்திசாலி என்று ஜேம்ஸ் நன்றாய் அறிந்தும், அவனைமிகக் கடினமான வேலைகளில் அமிழ்த்தி வைத்துக் கஷ்டப்படுத்துவதில் அவனுக்கு வெகுதிருப்தி என்ன மிருகத்தன்மை பாருங்கள்; அப்படிக் கஷ்டப்படுத்தினால் பெஞ்சமினுடைய கெட்டிக்காரத்தனம் குறைவு படுமென்று எண்ணினான். காலைமுதல் இரவுவரையில் அச்சாபீஸில் வேலை செய்யும்படிக் கட்டாயப்படுத்துவான். அவன் என்ன தொந்தரவு செய்தும் பென் சிறிதும் பின்வாங்காமல், இரவெல்லாம் உட்கார்ந்து பத்திரிகைக்கு வேண்டிய விஷயங்கள் எழுதுவான். காலையில் தூக்கமில்லாததால்தன் தம்பியுடையவெளுத்தமுகத்தையும் இளைத்ததேகத்தையும், தளர்ந்த நடையையும் கண்டு கூட ஜேம்ஸுக்குச்சிறிதும் மனம்இரங்கவேஇல்லை.

இவ்வாறு கஷ்டப்பட்டுக்கொண்டு ஓயாமல் வேலை செய்து கொண்டிருக்குங்கால் ஒரு நாள் தன் கஷ்டம் பொறுக்கமாட்டாமல் தன் அண்ணனிடம் சென்று "அண்ணா, இக்கஷ்டம் என்னால் சகிக்க முடியவில்லை. இன்று முதல் என்னைச் சுயேச்சையாயிருக்கும்படி விடவேண்டும். இனி உம்மிடத்தில் வேலை செய்ய என்னால் மாளாது," என்றான். இதைக் கேட்டதும் ஜேம்ஸுக்குக் கோபம் மூண்டது. பெஞ்சமினைத் துரோகி யென்றும், பொய்யனென்றும், பெரியோர் சொற்படி நடவாத முரடனென்றும், பலவிதமாய்த் திட்டினான். பெஞ்சமினது மனம் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. "அண்ணா, நான் உம்மிடம் ஒத்துக்கொண்டபடி நடக்காமல் சொல் தவறுவது உண்மையே. ஆனால் நீர்மட்டும் கருணை, நியாயம், நல்வழி, தர்மம், இவை ஒன்றுக்கும் கட்டுப்படாமல் எனக்குக் கடுமையான வேலை கொடுத்துக் கொல்வது தகுதியோ?" என்று கேட்டுவிட்டுத்தன் தமையன் வீட்டினின்று உடனே புறப்பட்டான். பிறகு தன் வாழ்நாள் உள்ளளவும் அவ்வாயிலில் நுழையவேயில்லை.

ஜேம்ஸ் ஆற்றாக்கோபத்தோடு தன் தகப்பனிடம் சென்று பெஞ்சமினைப் பலவாறு தூஷித்து அவன்மேல் பல குற்றங்களைச் சாட்டியதுமல்லாமல், பாஸ்டன் நகரிலுள்ள பல அச்சியந்திரசாலைத் தலைவர்களிடத்திலும் சென்று, "பென் மகா கெட்டவன். அவனை ஒரு



வரும் நம்பக்கூடாது," என்று சொல்லிவைத்தான். அதனால் பெஞ்சமினுக்கு எவ்வளவு கஷ்டம் பாருங்கள். அவனுக்குப் பிழைக்கவே வழியில்லாமற் போயிற்று. எந்த அச்சாபீஸுக்குப் போனாலும் இவனை லக்ஷியம் செய்வாரேயில்லை. இச்சமயத்தில்தான் அவனுடைய மனோவன்மையும், தைரியமும் உலகத்தாருக்குப் புலப்பட்டது. வயதுசென்ற பெரியோருக்கும் அருமையான தைரியத்துடன் தன் கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டிருந்தான். போரில் தைரியமாய் எதிரியின்மேற் சென்று உயிரைவிடச் சித்தமாயிருப்பதுமட்டும் தான்வீரச்செயலா? கஷ்டம்வந்த காலத்தில் மனம்கலங்காமல் பொறுத்துக்கொண்டிருப்பதும் அத்தகைய வீரச்செயலேயா? விவேகிகளுக்குத் தெரியும்.

பிழைக்கும்வழி ஒன்றும் தெரியாமல் கையில் இருந்த பணமெல்லாம் செலவழிந்து போய்விட்டபடியால், ஆற்றாத் துயரத்தோடு ஒருநாள் சாயங்காலம் கடற்கரையில்போய் உட்கார்ந்தான். எவ்வளவுநாள் தான் களிப்போடு வந்து விளையாடின இடம் அது! அவற்றையெல்லாம் பார்க்கவே சிறுவனுக்குத் துக்கம் பொங்கிப் பொங்கி வந்தது. அவனையறியாமலே இரண்டு கண்களினின்றும் நீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. வழக்கம்போல் சமுத்திரத்தில் நீந்தவாவது அல்லது படகைத் தள்ளிக்கொண்டு போகவாவது இன்று அவனுக்கு ஆசையே உண்டாகவில்லை. அவற்றைப்பற்றி எண்ணமும் கிடையாது!! இவ்வாறு மனக்கவலையோடு தன் துரதிர்ஷ்டத்தைப் பற்றி எண்ணி அழுதுகொண்டிருக்கும்பொழுது, தனக்குப் பலநாளாய்ச் சிநேகிதனாயிருந்த ஒரு கப்பற்றலைவன் அவ்வழியே வந்தான்.

அவன் சிறுவனைப்பார்த்து, "பெஞ்சமின், நீயென்ன இன்று இப்படிச் சோம்பேரியாயிருக்கிறாய்? என்ன ஆச்சரியம். நீந்தப்போகவில்லையா? உன் செய்யுட்களையாவது பாடக்கூடாதா? என்ன மனக்கவலை வந்தது உனக்கு இன்று!" என்று சொல்லிக்கொண்டே அவன் முதுகைத் தட்டிக்கொடுத்தான். சிறுவன் பேசாமலிருந்ததைப் பார்த்து மறுபடியும், "இன்று உனக்கு ஒரு வேலையுமில்லாவிட்டால் என்னுடன் கப்பலுக்குவா. அங்கே சந்தோஷமாய்ச் சிறிதுபொழுது கழிப்போம். எழுந்துவா, போவோம்," என்றுஅழைத்தான்.

பென், இவ்வளவு உள்ளன்போடு என்னை யாரழைக்கப்போகிறார்கள், என்று எண்ணிக்கொண்டு அவனுடன் புறப்பட்டான். வழியில் அவனோடு நடந்துபோகும்பொழுதே தனக்கு நேரிட்ட கஷ்டத்தையெல்லாம் ஒன்றும் விடாமல் தன்னருமைச் சிநேகிதனிடம் சொல்லிக்கொண்டான். இவ்விருத்தாந்தத்தைக் கேட்டதும் அக்கப்பற்றலைவன் மிகவும் மனமிரங்கி, "என்னருமைச் சிறுவனே, நான் சொல்வதைத் தயவு செய்து கவனித்துக்கேள். நாளைய தினம் நான் நியூயார்க் என்னும் பட்டணத்திற்குப் போகிறேன். நீயுமென்னுடன் புறப்படு. அங்கே எவ்விடத்திலாவது வேலை உனக்குக் கட்டாயம் கிடைக்கும். என் வார்த்தையை ஏற்றுக்கொள். அதற்கு இரண்டு சொல்லாதே. அப்படி உனக்கு நியூயார்க்கில் வேலை கிடையாவிட்டால், நீ அப்பட்டணத்தைவிட்டுப் பிலடெல்பியாவுக்குப் போகலாம். அங்கே எனது பந்து ஒருவர் உண்டு. அவரே ஒரு அச்சியந்திரசாலைத் தலைவர். அவரிடத்தில் நீ வேலைக்கு அமரலாம். உனக்கு நான் சிபார்சு செய்கிறேன். எனது பந்து உன்னைத் தன் மகன்போலவே பார்த்துக்கொள்வார். நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. இந்த அற்ப கஷ்டத்திற்காக நீ மனம் விடலாமா? விசனப்படுவதை நிறுத்து, தம்பீ," என்றான். பெஞ்சமினுக்கு இயற்கையாகவே பல இடங்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை உண்டு. தன் சிநேகிதன் இவ்வாறு சொல்லவே, பழம் நழு

விப்பாலில் விழுந்தது போலாயிற்று. ஆகையால் மறு வார்த்தை பேசாமல் சரி என்று ஒப்புக்கொண்டான்.

இப்பிராந்தங்களில்பெஞ்சமினுக்கு வாய்ந்த சுக துக்கங்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னால் பெருகும். சுருக்கமாய்ச் சிலவற்றைமட்டுமே பேசி முடிப்போம். கப்பல் க்ஷேமமாய் நியூயார்க் வந்து சேர்ந்தது. அங்கே பெஞ்சமினுக்குத் தக்கவேலை ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகையால் தன் சிநேகிதனிடம் ஓர் சிபார்சு கடிதம் பெற்றுக்கொண்டு பிலடல்பியாவுக்குப் புறப்பட்டான். அதைக் கொடுத்துத் தன் சிநேகிதனுடைய பந்துவான ஸ்ரீமான் கீர்மர் என்னும் அச்சாபீஸ் தலைவரைப் போய்ப் பார்த்தான். முன் கப்பற்றலைவன் சொன்னபடியே கீர்மர் சிறுவனை அதிக மரியாதையுடன் ஏற்றுக்கொண்டார். அவர் மகா புத்திசாலி. தன்னிடம் வந்த பையனுடைய புத்தி நுட்பத்தையும், சாமார்த்தியத்தையும் உடனே அறிந்துகொண்டு அவனுக்கு வேலை கொடுத்ததுமன்றி, தன் வீட்டிலேயே தனது மகனைப்போல் பாவித்து அவனை இருக்கும்படி கேட்டுக்கொண்டார். இந்நன்றியைச் சிறுவன் மறவாது, வெகு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும், வேலை செய்து தன் எஜமானனைச் சந்தோஷப் படுத்தினான். ஆனாலும் இந்தத் தாழ்ந்த உத்தியோகத்தைவிட இன்னும் பிரபலமான உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்றும், இராஜாங்க விஷயமாயும், சாஸ்திர சம்பந்தமாயும் அதிகமாய் எழுதவேண்டும் என்றும், பெஞ்சமினுக்கு மேன்மேலும் ஆசை உண்டாயிற்று. இவ்வாசை அவனை எப்பொழுதும் தூண்டிக் கொண்டேயிருந்தபடியால், எப்பொழுதும் உயர்ந்த பதவியைத் தேடுவதற்கு என்னவழியென்று யோசித்த வண்ணமாயிருப்பான். சாயங்கால வேளைகளில் பென் அப்பட்டணத்திற்குப் பக்கத்திலுள்ள கிராமத் தோப்புகளில் உலாவப் போவது வழக்கம். அப்பொழுதெல்லாம் தனியாய் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, தானும் மேற்சொன்ன வழிகளில் விடாமுயற்சியுடன் வேலைசெய்து கீர்த்தி சம்பாதிக்க முடியுமோவென்று எண்ணி எண்ணி ஏங்குவான்.

ஒரு நாள் சாயங்காலம் அந்நகரின் பக்கத்திலுள்ள ஒரு குன்றுக்குப் போனான். அங்கே போய் உட்கார்ந்துகொண்டு இயற்கையழகைப் பார்த்து ஆனந்தம் கொண்டுதன் மனத்தில் நீங்காமல் குடிகொண்டிருக்கும் எண்ணத்தைப் பற்றியே தியானித்துக் கொண்டிருந்தான். பலநிமிஷங்கள் கழிந்தன. சூரியனும் அஸ்தமித்து இருள் பரவிற்று. உடனே அவன்என்றும்காணாதஉக்கிரத்துடன் ஒரு பெரிய புசல் காற்று அடிக்க ஆரம்பித்தது. தான் இருந்த இடத்திற்கு அப்பால் சிறிது தூரத்திலிருந்த ஒரு பெரிய மாளிகையின்மீது இடி விழுந்து அம்மாளிகை தீப் பற்றிக் கொண்டது. அவ்வெளிச்சத்தைக் கண்ணுற்று, உடனே அவ்விடத்திற்கு ஓடினான். அங்கே போய்ப் பார்த்ததும் மாளிகை முழுவதும் எரிந்துகொண்டிருந்தது. அநேகர் இறந்துவிட்டனர். சிறுவனுக்கு அதைப் பார்த்ததும் மனம் புழுங்கிற்று. ஐயோ! பாபம், என்று கதறி அழ ஆரம்பித்தான். பிறகு வீட்டுக்குத் திரும்பிவந்து, துக்கக்கடலில் மூழ்கினவனாய், இரண்டுகைகளையும் தலைமேல் வைத்துக்கொண்டு, இடியால் வரும் இக்கேட்டை விலக்க என்ன செய்வதென்று இரவு முழுவதும் சிந்தித்துக் கொண்டிருந்தான். என்ன வீரச்செயல் பார்த்தீர்களா? எவ்வளவு ஜீவகாருண்ணியம்! தங்களுடைய கஷ்டம் எவ்வளவிருப்பினும், நல்லோர் அவற்றையெல்லாம் கவனியாமல் மற்றவர்களுடைய க்ஷேமத்திற்காக எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள்!! சில நாளைக்கு முன் மின்சார [illegible]திரம் படித்துக் கொண்டிரு[illegible],



[பெ]ஞ்சமின் அச்சாஸ்திர சம்பந்தமான சில [ப]ரிசோதனைகள் செய்து வந்தான். அப்பொழுது, ஊசிபோன்ற கூரிய நுனியையுடைய வஸ்துக்கள் மின்சார சக்தியைக் குறைத்து அச்சக்தியின் வீரியத்தைவேறு வழியில் திருப்பக்கூடியவை என்று சில பரீக்ஷைகளால் கண்டுபிடித்திருந்தான். இடியும் மின்னலும் மின்சார சக்தியின் காரியமா? அப்படியிருப்பின், அவற்றின் வேகத்தையும் கூரிய நுனியுடைய வஸ்துக்களால் குறைக்க முடியுமா? என்று பலவாறாக எண்ணி எண்ணி இரவெல்லாம் கழித்துவிட்டான். இடியும் மின்னலும் மின்சார சக்தியின் காரியமாயிருந்தால் தான் எப்படியாவது பிரயாசைப்பட்டு உலகத்தாருக்கு நன்மை செய்யவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டான். அதற்குள் தன்னுடைய சாஸ்திர பரிசோதனைகளால் கண்டுபிடித்த உண்மைகள் உலகத்தாருக்கு நன்மை செய்ய உபயோகப்படுமோஎன்ற சந்தேகம் உடனே சிறுவனுக்கு வந்துவிடும். கடைசியில் மின்னலும் இடியும் எத்தால் விளைகின்றனவென்று பரீக்ஷைசெய்து, அவற்றால்வரும் கஷ்டங்களை நீக்குவதுமல்லாமல், அவற்றின்வேகத்தை முற்றிலும் குறைத்து எல்லோருக்கும் உபகாரம்செய்ய முயற்சிசெய்தே யாகவேண்டுமென்று, தன்மனதை திடப்படுத்திக்கொண்டான். அதேமாதிரி வெகுதூரம் பரீக்ஷித்து, கடைசியில் இடியும் மின்னலும் மின்சாரத்தின் தொழில் எனப் பலருக்கும் புலப்படுத்தினான். அவற்றையெல்லாம் விஸ்தாரமாய்ச் சொல்லப்புகின் பெருகும். மின்னலின் கொடுமையை முற்றிலும் விலக்க "மின் வாங்கி" என்னும் கருவியைக் கண்டு பிடித்தான். இப்பொழுது ஒவ்வொரு உன்னதமான மாளிகையிலும் மேலே நீட்டி வைத்திருக்கும் கூரிய இரும்புத்தடிகளே மின்வாங்கிகள். அவைகள் அந்தக்கட்டிடத்தை மட்டுமன்றிப் பக்கத்திலுள்ள மற்றக் கட்டிடங்களையும் காப்பாற்றுகின்றன. அந்நாள் இரவில் தியானஞ்செய்து பெஞ்சமின் கண்டுபிடித்த மின்வாங்கியின் உபயோகத்தால் இப்பொழுது உலகத்தில் எவ்வளவு பேர் சௌக்கியப்படுகிறார்கள்!! அன்றுமுதல் இடியும் மின்னலும் பழையநாளில் இந்திரனுக்குக் கட்டுப்பட்டிருந்தது போலவே, நமக்கும் கட்டுப்படத் தொடங்கின.

ஆதலால், சிறுவயதிலேயே மற்றவர்களின் புத்திக்கு எட்டாத உண்மைகளை யறிந்து, ஒரு மனிதனால் செய்யக்கூடாத வீரச்செயல்களைச் செய்துவந்த இச்சிறு பிள்ளையின் பெருமை பிலடல்பியா முழுவதும் பிரகாசித்தது என்பது ஓர் ஆச்சரியமா? அந்த இராஜதானிக்குக் கவர்னராயிருந்த ஸர் வில்லியம் கீத் என்பவர் பெஞ்சமினைப் பார்க்க விரும்பினார். மனப்பூர்த்தியாய் ஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற ஆசையுடன் உழைத்துவரும் இச்சிறு புத்திமான், பிற்காலத்தில் மகா மேதாவியாவான் என்று அவர் அறிந்துகொண்டார். ஆதலின் ப்ரேன்கலின் இங்கிலாந்துக்குப் போய் அவ்விடத்தில் தேர்ச்சியடைவதே நலமென்றெண்ணினார். ஆகவே அவர் பெஞ்சமினை வரவழைத்து, "சிறுவனே, நீ லண்டனுக்குப் போகிறாயா? உன்னைச் சர்க்கார்க் கப்பலில் செலவில்லாமலனுப்புகிறேன். வழிச்செலவெல்லாம் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். அவ்விடத்திலநேக வித்துவான்களும், சாஸ்திர பண்டிதருமிருக்கிறார்கள். அவர்களுடைய சிநேகம் உனக்குக் கிடைத்தால் நல்லதல்லவா? என் அருமை நண்பனே, நீயும் சிலநாளில் அவர்களைப்போல் பெருமை வாய்ந்த புத்தி சாலியாவாய். அப்பொழுது நீ மறுபடியும் பிலடல்பியாவுக்குத் திரும்பிவந்து உன் கல்வி அமிர்தத்தை இவ்வமெரிக்காவிலுள்ள எல்லாருக்கும் ஊட்டலாம்," என்றார். பெஞ்சமின் அப்படியே ஆகட்டுமென்று ஒத்துக்கொண்டான்.

அன்றோடு பெஞ்சமினுக்குச் சேவகத் தொ

யில் நீங்கிற்று. குழந்தைப் பருவம் நீங்கி வாலிபனாய் விட்டான்.

இவ்வியாசத்தின் தலைப்பில் சிறுவர்கள் செய்த வீரச்செயல்களைப்பற்றி மட்டுமே பேசுவதாய் நாம் மேற்கொண்டபடியால், பெஞ்சமின் சரித்திரத்தை இத்துடன் நிறுத்துவோம். அவன் லண்டன் போனதும், அங்கே உழைப்பாலும் படிப்பாலும் தேர்ச்சிபெற்றதும், மறுபடியும் பிலடல்பியாவுக்குத் திரும்பிவந்ததும், அவ்விடத்தில் பெரிய உத்தியோகங்கள் செய்ததும், சாஸ்திர விஷயமாயும் படிப்பு விஷயமாயும் உழைத்து, உலகத்திலுள்ள சிறந்த சாஸ்திர பண்டிதர்களுக்குள் ஒருவனெனப் பேரெடுத்ததும், ஜனங்களுடைய நன்மைக்காகப் பலகலாசாலைகள் ஏற்படுத்தியதும்—ஆகிய இவற்றை எல்லாம் பற்றி இன்னும் ஒரு சமயத்தில் பேசுவோம்.

பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரம்.—பிழைக்கும்வழி, விவேகபோதனி சக்கிரவர்த்தினி, வித்தியாபானு, ஹிதகாரிணி, ரஞ்சிதபோதினி, மாதர் மனோரஞ்சனி, மங்களோதயம் (மலையாளம்), கிருஷிகன், பிரபஞ்சம், பூர்ண சந்திரோதயம்.

பக்ஷாந்தரம்.—இந்து சாதனம், உதயதாரகை, சைவபாலிய சம்போதனி, கோயமுத்தூர் கலாநிதி.

வாராந்தரம்.—நீலலோசனி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, திராவிடாபிமானி, வித்தியாபாஸ்கரன், பாண்டியன், நாகர்கோவில் டைம்ஸ்.

வாரம் இருமுறை.—மைசூர் டைம்ஸ்.

# சமாசாரக் குறிப்புகள்

நம்மில் வெள்ளி, செம்பு முதலியவற்றைப் பொன்னாக்க வேண்டுமென்கிற ஆசை வெகுநாளாக இருந்து வந்திருப்பதும் அதனால் எத்தனையோ பெயர் ஆஸ்திகளை யிழந்ததும், அயோக்கியர் கையிலகப்பட்டு ஏமாந்து, கொலை, களவு முதலிய குற்றங்களைச் செய்து நாசமாய்ப் போனதும், அனேகருக்குத் தெரியும். இந்த ரசவாதம், பொன், வெள்ளி, முதலிய லோகங்கள் மட்டும் நாணயமாக இருந்த காலத்தில் சரியாக இருந்தது. இப்பொழுது நாகரீகம் முற்றி, இவைகளுக்குப் பதிலாக 'நோட்டுகள்' உபயோகப்பட்டு வருவதால், ரசவாதிகளும் அதையனுசரித்துத் தங்கள் வித்தையைப் புதுப்பித்து வருகிறார்கள் போலும். ஏனெனில், சமீபகாலத்தில் பம்பாயில் புருஷோத்தம ஹரி யென்பவரிடம் ஒரு ஹிந்து வந்து தனக்கு "நோட்டுகளை இரட்டிக்கச் செய்யும்" உபாயம் தெரியு மென்றானாம். அவர் உபயோகித்து பேராசைகொண்டு 100-ரூ. நோட்டு ஒன்றை அம்பட்டனிடம் கொடுக்க, அவன் அதை வைத்துப் பூஜை செய்கிற பாவனையாக நடித்து அதை யெடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாக ஏதோ ஒரு கடிதத் துண்டை வைத்துவிட்டு மறுநாள் வந்து பூஜைக்கு இரண்டு நோட்டுகள் எடுத்துக் கொடுப்பதாகப் போனானாம். இனிமேல் வரப்போகிறான். புருஷோத்தம ஹரி போலீஸாருக்குத் தெரிவித்திருக்கிறார். ஓ புருஷோத்தம, உமக்கு எப்பொழுது விவேகம் வரும்? இப்படியேன் பேராசைப்பட்டுப் பெருநஷ்டமடைகிறீர்? இனியாகிலும் உமக்குப் புத்தி வருமா?

இந்திய மெடிகல் (வைத்திய) சர்வீஸில், டாக்டர்களாக நியமனம் பெறுவதற்காகப் பரீக்ஷை சமீபத்தில் நடந்தது. 15-பெயர் வேண்டியது. 29-பெயர் பரீக்ஷைக்கு வந்தார்கள். அவர்களில் 15-பெயரைத் 'தேற்றி' யெடுத்ததில், 3-பெயர் இந்தியரென்று கண்டது. அதிலும் ஸ்ரீமான் பிரோஸ் பருசா என்னும் பம்பாய் சீமைக் குமாரர் மற்றெல்லோரையும் அடக்கித்தான் முதலாகத் தேறிய சங்கதி கேட்டு மெத்தவும் சந்தோஷிக்கிறோம். இனி வருங்காலத்தில் இந்தியாவில் வைத்தியத் தொழில் மேனாட்டு முறையும் கீழ்நாட்டு முறையும் இயைந்து நடக்கவேண்டியிருப்பதால், நமது தேசத்தில் இவர் மாதிரி புத்திமான்கள் தான் இந்தத் தொழிலைக் கற்றுவரப் போகவேண்டும். இந்த ஸ்ரீமானுக்கு எல்லா மங்களமுமுண்டாகுக.

கிராமப்பஞ்சாயத்துகளால் ஆகக்கூடிய உபகாரத்திற்குச் சமீபத்தில் அனந்தப்பூர் ஜில்லாவிலுள்ள கோட்டச்செருவு கிராமத்தில் நடந்தது நல்ல சாக்ஷியாம். அவ்விடத்திலுள்ள கம்மவார்க் குடிகள் கொஞ்சநாளைக்கு முன் ஒருபஞ்சாயத்து ஏற்பாடுசெய்து கொண்டு, அதில் கிராமக்ஷேமத்திற்குரிய பலகாரியங்கள் நடக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவைகளில் போலீஸாருக்கு ஒத்தாசை செய்வதும் ஒன்று. அதை யனுசரித்துச் சமீபகாலத்தில் போலீஸ் கொட்டடியிலிருந்து தப்பியோடின ஒரு கைதியைப் போலீசாரும் ஜில்லா கலெக்டரும் இரண்டு மாதமாகத் தேடிக்கொண்டிருந்ததில், கிராமப்பஞ்சாயத்தாருடைய உதவி வேண்டியதால், அவர்களும் பிரயத்தனப்படவே கைதி சீக்கிரத்தில் பிடிபட்டு விட்டான். ஆனால் பஞ்சாயத்தாரும் அவனைச் சிரமப்பட்டுத்தான் பிடித்தார்கள்.

'டெலிபோன்' என்னும் கருவியை நம்மில் அனேகர் இன்னும் அறியார்கள். அது 'கம்பி மூலமாகப் பேச்சு நடப்பதற்கு' உதவும் கருவியாம். இப்பொழுது அதை உபயோகித்து, அன்றாடக வர்த்தமானங்களைச் சந்தாதார் 'காதில் போடுவதற்காக,' அமெரிக்காவில் ஒரு கம்பெனி உண்டாயிருக்கிற